தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாம் கூட்டத்தொடர்

1978 ஆம் ஆண்டு மார்ச் 11 முதல் 17 ஆம் நாள் வரை.

(தொகுதி XV எண்கள் 1 முதல் 6 வரை)

©
தமிழ் நாடு அரசு
1979

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

[விலை ரூ. 1]

V211,31 N78
N77.15
1Q2117

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1978 ஆம் ஆண்டு மார்ச் 11 முதல் 1978 மார்ச் 17 ஆம் நாள் வரை.

(தொகுதி XV எண்கள் 1 முதல் 6 வரை)

உள்ளடக்கம்

சனிக்கிழமை 1978, மார்ச் 11

	பக்கங்கள்.
தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்	i—iv
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்	v
தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்	vi—xiv
1. இரங்கல் தீர்மானம்—	
முன்னாள் முதலமைச்சர் பொப்பிலி இராஜா திரு. ஆர். எஸ். ஆர். ரங்காராவ் அவர்கள் மறைவு குறித்து ..	1
2. வினாக்கள்—விடைகள்	2—33
3. உரிமைப் பிரச்சினை—	
"தினமலர்" நாளேடு மீது ..	33—38

பக்கங்கள்

சனிக்கிழமை 1978, மார்ச் 11—தொடர்ச்சி.

4. தகவல் கோரல்—

(அ) அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம் பற்றி முதலமைச்சர் அளிக்கவிருக்கும் அறிக்கை குறித்து .. .. 39—41

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்கள் பிரச்சினை குறித்து 45

5. ஒத்திவைப்புத் தீர்மானம்—

பேருந்துகளில் 'டேக்கோ மீட்டர்' என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற அரசு உத்தரவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து. 41—45

6. 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்
(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள் கட்டிடங்கள்
(இ) கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள் பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
(ஈ) கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு
(உ) கோரிக்கை எண் 53—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டிடங்கள்

} 46—156

7. அமைச்சரின் அறிக்கை—

அரசிதழ் பதிவு பெறு அலுவலர்:—தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அளித்த அறிக்கை .. 156—166

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 167

பக்கங்கள்

திங்கட்கிழமை 1978, மார்ச் 13.

1. வினாக்கள்—விடைகள் .. .. 185—216

2. ஒழுங்குப் பிரச்சினை—

ஒரு உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதுபற்றி. 216

3. அமைச்சரின் அறிக்கை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து .. .. 216—218

4. கவன ஈர்ப்பு—

கோவை, பல்லடம், அவினாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து. 218—220

5. அரசினர் தனித் தீர்மானம்—

1977 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (நாற்பத்து நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் .. .. .. 222—270

6. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.
(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

} 270—319

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 319

பக்கங்கள்

செவ்வாய்க்கிழமை 1978, மார்ச் 14.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 373—404

2. தகவல் கோரல்—

(அ) அலுவலகங்கள் மூடியிருப்பதால் உறுப்பினர்கள் சம்பளம் வாங்க முடியாதது குறித்து .. 404

(ஆ) கொடுக்கப்பட்ட வினாக்கள், உரிமைப் பிரச்சினைகள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்து கொள்ளப்படாதது குறித்து .. 405—406

3. கவன ஈர்ப்புகள்—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பிரச்சினை தீர்க்கப் படாததும், அவர்கள் உண்ணா விரதமும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து .. 406—410

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் 'கோமாறி' நோயால் ஆடு, மாடுகள் இறந்தது குறித்தும், நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் .. .. 411—413

4. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக் கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.
(ஆ) கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.
(இ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.
(ஈ) கோரிக்கை எண் 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். } 413—490

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 490

பக்கங்கள்

புதன்கிழமை, 1978 மார்ச் 15.

1. வினாக்கள்—விடைகள் .. .. .. 531—563

2. ஒழுங்குப் பிரச்சினைகள்—

(அ) எஸ். எஸ். எல். சி. தேர்வு வினாத் தாள்கள் மாற்றிக் கொடுக்கப் பட்டது குறித்து .. .. 563—564

(ஆ) ஒரு கொலை வழக்கைப்பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் ஆதா ரங்களை அளித்தல் குறித்து .. 565—566

(இ) ஓர் உறுப்பினர் கூறிய குற்றச் சாட்டின்மீது எந்த விதியின்கீழ், பேரவைத் தலைவரால் விளக்கம் கேட்கப்பட்டது என்பது குறித்து 567

(ஈ) கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் பொது மக்களை ஏற்றிச்சென்றது குறித்து 567

3. தகவல் கோரல்—

(அ) கள்ளக்குறிச்சி பெண்கள் உயர் நிலைப் பள்ளியில் வினாத்தாள்கள் மாற்றப்பட்டது குறித்து .. 564—565

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளாதது குறித்து. 566

(இ) அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம் வாபஸ் ஆன பிறகு அரசு அறிக்கை அளிப்பது குறித்து 568

(ஈ) பேரவையில் உறுப்பினரல்லாத ஒருவர் அமர்ந்திருந்ததாகக் கூறப்படுவது குறித்து .. 645

4. கவன ஈர்ப்பு—

வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்திருப்பதன் விளைவாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து .. .. 569—571

பக்கங்கள்

புதன்கிழமை 1978, மார்ச் 15—தொடர்ச்சி.

5. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—
(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை
(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்பு பணிகள் 574—654

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 654—655

வியாழக்கிழமை, 1978 மார்ச் 16.

1. வினுக்கள்—விடைகள் .. .. 679—712

2. ஒழுங்குப் பிரச்சினை—
பேரவைக்கு ஓர் உறுப்பினர், அன்னியர் ஒருவரை அழைத்து வந்ததாகச் சில நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து .. .. 712—716

3. அறிவிப்பு—
தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு நியமனம் 716

4. தகவல் கோரல்—
அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது பற்றி.. 717—720

5. கவன ஈர்ப்புகள்—
(அ) வடாற்காடு மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் சில கிராமங்களில் வோல்டேஜ் குறைப்பால், பம்ப் செட் மோட்டார் காயில் தீய்ந்து போவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து .. .. .. 720—723
(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து .. .. 723—725

பக்கங்கள்

வியாழக்கிழமை 1978, மார்ச் 16—தொடர்ச்சி.

6. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.
(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை (தொடர்ச்சி)
(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்பு பணிகள் (தொடர்ச்சி) 725—796

7. அமைச்சரின் அறிக்கை—
நடைபெற்று முடிந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம் குறித்து அவை முன்னவர் (நிதி அமைச்சர்) அளித்த அறிக்கை .. 797—799

8. இரங்கல் குறிப்பு—
ஈ. வே. ரா. மணியம்மையார் மறைவு குறித்து 800

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 800

வெள்ளிக்கிழமை, 1978 மார்ச் 17.

1. அரசினர் தீர்மானம்—
விதி 22-ஐத் தளர்த்தல் .. .. 801—303

2. உரிமைப் பிரச்சினைகள்—
(அ) உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மீது .. .. .. 803—808
(ஆ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் பொருள் குறித்து மேலவையில் முதலில் விவரம் அறிவித்தது குறித்து .. 808—810

3. அறிவிப்பு—
கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து .. 810—811

4. ஒழுங்குப் பிரச்சினை—
வானொலியில், எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாகக் கூறியது குறித்து .. .. 811—812

பக்கங்கள்

வெள்ளிக்கிழமை 1978, மார்ச் 17—தொடர்ச்சி.

5. 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக் கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை (தொடர்ச்சி)
(ஆ) கோரிக்கை எண் 16—நீயணைப்பு பணிகள் (தொடர்ச்சி) } 813—911

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 912

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப்பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், ''குழு(க்கள்)'', ''மன்றம்(கள்)'' ''வாரியங்கள்'', ''உள்ளாட்சி(கள்)'' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப்பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப் பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின்கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது:—

அ. .. அறிக்கை
அறிவி. .. அறிவிப்பு
அ.வி. .. அரைமணி விவாதம்

கு.வி.	.. குறுகிய கால விவாதம்
பொ.வி.	.. பொது விவாதம்
ஆ.உ.	.. ஆளுநர் உரை
உ.பி.	.. உரிமைப் பிரச்சினை
ஒ.பி.	.. ஒழுங்குப் பிரச்சினை
க.ஈ.	.. கவன ஈர்ப்பு
க.ஈ.அ.	.. கவன ஈர்ப்பு அறிக்கை
ச.அ.நி.	.. சட்ட முன்வடிவின் அறிமுக நிலை
ச.ஆ.நி.	.. சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை — இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெறும் தீர்மானம். (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம், (3) சுற்றுக்கு அனுப்பப் பெறுவதற்கான திருத்தம், (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கான தீர்மானம், (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.
ச.பிரி.ஆ.	.. சட்ட முன்வடிவு—பிரிவு வாரியாக ஆய்தல்.
ச.பே.	.. சட்டமன்றப் பேரவை
ச.மே.	.. சட்டமன்ற மேலவை
த.கோ.	.. தகவல் கோரல்
த.வி.	.. தன்னிலை விளக்கம்
தீ.	.. தீர்மானம்
உ.தீ.	.. உரிமைத் தீர்மானம்
ஒ.தீ.	.. ஒத்திவைப்புத் தீர்மானம்
த.தீ.	.. தனித் தீர்மானம்
து.மா.கோ.	.. துணை மானியக் கோரிக்கை
மி.மா.கோ.	.. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை.
பே.அ.	.. பேரவையின் அலுவல்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மது விலக்கு, நலவாழ்வு மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில், நிறுவனங்கள், பூமிதானம்- கிராமதானம் முன்னாள் இராணுவத்தினர்; சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் துறை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப்பணி, சிறப்பு சிறு பாசனத் திட்ட வேலை உட்பட சிறு பாசனங்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை சிங்கோனா உட்பட காடுகள், இளைஞர் அணி, விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : செய்தி, விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ் நாடு குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : போக்கு வரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13 மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)— Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan, Ex-servicemen, Mines and Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)— Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)— Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)— Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)— Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Tourism*)— Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees and Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn, Handlooms and Khadi and Village Industries.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்ட மன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஹானர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

எஸ்டேட் அதிகாரி

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும் (1)		தொகுதியின் பெயர். (2)
1 அண்ணாமலை, திரு. எம்.	..	ஹரூர் (செ.வ.).
2 அப்துல் ரஜாக், திரு. கே. எம்.		ஆலந்தூர்.
3 அப்துல் லத்தீப், திரு. கி.	..	கடலூர்.
4 அப்புனு கவுண்டர், திரு. கா.	..	பெண்ணாகரம்.
5 அமிர்த ராஜ், திரு. இரா.	..	திருச்செந்தூர்.
6 அம்பிகாபதி, திரு. மு. ..	..	மன்னார்குடி.
7 அய்யாசாமி, திரு. ரா.	..	தாராபுரம் (செ.வ.).
8 அரங்கசாமி, திரு. க. ..	..	குன்னூர் (செ.வ.).
9 அரங்கநாதன், திரு. அ. க.	..	வேலூர்.
10 அரங்கநாதன், திரு. மு.	..	திருவல்லிக்கேணி.
11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்)	..	கோயம்புத்தூர் (மேற்கு).
12 அருணாசலம் திரு. இரா.	..	நாமக்கல் (செ.வ.).
13 அர்சுனன், திரு. வீ. ..	..	ஆரணி.
14 அழகர்சாமி, திரு. சோ.	..	கோவில்பட்டி.
15 அன்பழகன் திரு. க. ..	..	புரசவாக்கம்.
16 அன்பழகன், திரு. தி. ..	..	நாட்ராம்பள்ளி.
17 ஆண்டி அம்பலம், திரு. மெ.	..	நத்தம்.
18 ஆதிசுவாமி, திரு. இரா.	..	குளச்சல்.
19 ஆறுமுகம், திரு. சி. ..	..	மதுராந்தகம்.
20 ஆறுமுகம், திரு. எச். ஜி.	..	பர்கூர்.
21 ஆறுமுகம், திரு. இல. ..	..	திருநாவலூர்.
22 ஆறுமுகம், திரு. எம். ..	..	சேலம்-2.
23 ஆறுமுகம், திரு. த. ..	..	அரியலூர்.
24 இராசமாணிக்கம், திரு. இரெ.		குத்தாலம்.
25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.		திண்டிவனம்.
26 இராசரத்தினம், திரு. து.	..	பூந்தமல்லி.
27 இராதா, திரு. எஸ். ஆர்.	..	கும்பகோணம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
28	இராமசாமி, திரு. கே.என்.கே. ..	கோபிச்செட்டிபாளையம்
29	இராமசாமி, திரு. எஸ்.ஜே.	சோளிங்கர்.
30	இராமசாமி, திரு. எஸ். வி. ..	பெரம்பலூர் (செ.வ.).
31	இராமசாமி. திரு. டி.	இராமநாதபுரம்.
32	இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	சாத்தூர்.
33	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்)	அருப்புக்கோட்டை.
34	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. ..	செஞ்சி.
35	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) ..	பண்ருட்டி.
36	இராமச்சந்திர ரெட்டி, திரு. என். ..	ஹோசூர்.
37	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்.
38	இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. ..	தல்லி.
39	இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு.
40	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. ..	அம்பாசமுத்திரம்.
41	உக்கிரபாண்டியன், திரு. க. ..	பரமக்குடி (செ.வ.).
42	உச்சி, திரு. கே.	கூடலூர்.
43	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
44	உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டிணம்.
45	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. ..	ஆற்காடு.
46	எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) ..	திருநெல்வேலி.
47	எத்திராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.).
48	ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பேட்.
49	ஐசரி வேலன், திரு.	டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.
50	கணேசன், திரு. இ.	எடப்பாடி.
51	கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதியின் பெயர். (2)
52	கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.)
53	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
54	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
55	கபாலி, திரு. டி. கே. ..	மயிலாப்பூர்.
56	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. ..	திருவாடானை.
57	கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
59	கருணாநிதி, திரு. தாழை. மு.	திருவாரூர் (செ.வ.).
60	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
61	கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62	கலியமூர்த்தி, திரு. துரை ..	சிதம்பரம்.
63	காத்தமுத்து, திரு. கி. பெ. ..	தொட்டியம்.
64	காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) ..	திருப்பரங்குன்றம்.
65	காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
66	காளியப்பன், திரு. இரா. ..	ஏற்காடு (ஆ. வா.)
67	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
68	கிட்டு, திரு. ப. கோ. ..	பல்லடம்.
69	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.).
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. ரா. ..	வாசுதேவநல்லூர் (செ.வ.).
74	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
75	குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
76	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) ..	உடுமலைப்பேட்டை.
77	கோதண்டராமன், திரு. வி. கே. ..	குடியாத்தம்
78	கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. ..	முசிறி.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
79 கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80 கோவிந்தராசன், திரு. சி. ..	நெல்லிக்குப்பம்.
81 கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு.
82 கோவேந்தன், திரு. மு. ரெ. ..	பேராவூரணி.
83 சங்கரய்யா, திரு. என்.	மதுரை கிழக்கு.
84 சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
85 சண்முகம். திரு. ப. உ. ..	திருவண்ணுமலை.
86 சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
87 சண்முகம். திரு. கூத்தகுடி, ச.	திருப்பத்தூர்.
88 சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89 சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90 சந்திரன், திரு. ப.	பெரணமல்லூர்.
91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. ..	தியாகராயநகர், சென்னை.
92 சமரசம், டாக்டர் கே. ..	காவேரிப்பட்டிணம்.
93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) ..	திருமங்கலம்.
94 சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனசம்.
95 சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு, சென்னை.
96 சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97 சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.).
98 சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99 சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100 சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101 சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ. வா.).
102 சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103 சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ. வ.).
104 சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106 சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107 சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
108 சுந்தரராஜன், திரு. மு. ...	விருதுநகர்.
109 சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110 சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111 சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112 சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113 சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
114 சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.
115 சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116 சின்னசேலம் சுப்பிரமணியன், .. திரு. மா.	சின்னசேலம்.
117 சுப்பிரமணியன், திரு. வ. மு. ..	மானாமதுரை (செ. வ.).
118 சுப்பிரவேலு, திரு. கே. ..	சீர்காழி (செ. வ.).
119 சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120 சுப்புலட்சுமி, திருமதி. ..	மொடக்குறிச்சி.
121 சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ. வ.).
122 சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123 செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124 செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125 செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ. வ.).
126 செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127 செல்வராஜ், திரு. சீனி. ..	சமயநல்லூர் (செ. வ.).
128 செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129 சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ. வ.).
130 சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.).
132 சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2.
133 சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி
134 சௌந்திரராஜன், திருச்சி. திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்.
135 ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர் (2)
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
137 தங்கவேலு, திரு. ர. ச. ..	வால்பாறை (செ. வ.).
138 தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.)
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்.) ..	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்க தலைமைக் கொறடா)	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப. ..	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.).
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆ. ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவம், திரு. ஏ. எம். ..	பே ரூர்.
162 பரமசிவம் திரு. மொ. ..	வானூர் (செ. வ.).

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. ந. ..	அவினாசி (செ. வ.).
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ. வ.).
168 பாண்டியன், திரு. பி.எச். ..	சேரன்மாதேவி.
169 பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர் (செ. வ.).
172 பாலாஜி, திரு. க. ..	காஞ்சீபுரம்.
173 பானுசாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ. வ.).
174 புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த. ..	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.).
177 பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. மு.	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என். ..	வரகூர் (செ. வ.).
180 பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181 பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம்.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) ..	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், திரு. கி. மாண்புமிகு (அமைச்சர்) ..	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி. ..	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்..	(நியமன உறுப்பினர்).

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ...	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமிகரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. ஆர். ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ..	வந்தவாசி, (செ.வ.).
200 முனிரத்தினம், திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்)	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214 ராஜ்குமார் விஜய்ரெகுநாத தொண்டைமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜூ, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216 ராஜூ, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ. வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
220 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223 வின்செண்ட், திரு. மி. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. ..	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ.	ஒட்டபிடாரம் (செ. வ.)
230 ஜகதீசன், திரு அனூர் ..	செங்கல்பட்டு
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. ..	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.

3 மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5 திரு. வி.பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

1978 ஆம் ஆண்டு மார்ச் 11 முதல் 1978 மார்ச் 17 ஆம் நாள் வரை,

(தொகுதி XV, எண்கள் 1 முதல் 6 வரை)

அ

	பக்கங்கள்
அகதிகள்—	
பர்மா, திருச்சியிலுள்ளோருக்கு நிலம் ஒதுக்கியுள்ளமை	30—33
அங்காடி(கள்)—	
கொத்தவால் சாவடி (சென்னை), இடமாற்றம் ..	384
மூர் அங்காடி (சென்னை), இடமாற்றம் ..	16
அண்ணுமலை திரு. எம்.—	
அரிசனங்கள், அரசுப் பணிகளில் நியமனம் குறித்த உயர்மட்டக் குழு	705
வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு காவல் துறை தீயணைப்புப் பணிகள்	57[illegible]
அணைகள்—	
பார்க்க-நீர்ப்பாசனம்	
அப்புனுகவுண்டர் திரு. கா.—	
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு காவல் துறை தீயணைப்புப் பணிகள்	614—619

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அம்பிகாபதி திரு. மு.—
- என். ஜி. ஓக்கள் வேலை நிறுத்தம் பற்றி முதலமைச்சர் தரவிருக்கும் அறிக்கை குறித்து (த.கோ.) 40
- ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், எடுத்துக்கொள்ளாதது குறித்து (த கோ.) 566
- ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து (ஒ.பி.) 216
- குடிநீர், கூத்தாநல்லூர் பேரூராட்சி, .. 559
- தொழிலாளர் நல மருத்துவமனை, மன்னார்குடி .. 385
- நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக வருதல் 698
- நியாயவிலைக் கடை, நரசிம்மபுரம் கிராமம் .. 9
- நிலப்பட்டாக்கள் (குடியிருப்பு), எடமேலையூர் .. 680
- பேருந்து நிலையம், அன்னவாசலில் கட்டுதல் .. 701
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - காவல் துறை .. .. ..
  - தீயணைப்புப் பணிகள் .. .. .. } 6.9—635
- மாநில ஆய்வுத் தீர்வை :
  - பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் .. .. 447—452
- வினாக்கள், உரிமைப் பிரச்சினைகள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து (த. கோ) 405
- வேதாரண்யம் காட்டில் மான்வேட்டை .. 6

அமிர்தராஜ் திரு. இரா.—
- வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - காவல் துறை
  - தீயணைப்புப் பணிகள் } 725—728

அரங்கசாமி திரு. க.—
- தமிழாசிரியர்கள், நடுநிலைப் பள்ளிகளில் நியமனம்: 693

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அரங்கசாமி திரு. க.—தொடர்ச்சி
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
  - காவல் துறை
  - தீயணைப்புப் பணிகள் } 627—629

அரங்கநாதன் திரு. அ. க.—
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
  - காவல் துறை
  - தீயணைப்புப் பணிகள் } 769—773

அரங்கநாதன் திரு. மு.—
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
  - பாசனம்
  - பாசனம் குறித்த மூலதனச் செலவு
  - பொதுப் பணிகள்-கட்டடங்கள்
  - பொதுப் பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
  - பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள் 47
- வினாக்கள், உரிமைப் பிரச்சனைகள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப் படாதது குறித்து (த. கோ.) 405, 406

அரங்கநாயகம் திரு. செ.—
- அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல். (தீ) 232, 233
- இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்கள் மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து (அ) .. 216—218
- தமிழாசிரியர்கள் (பணியிறக்கம் செய்யப்பட்டோர்) இராமநாதபுரம் மாவட்டம் (த. கோ.) .. 45
- தேர்வு, எஸ். எஸ். எல். சி., வினாத்தாள்கள் மாற்றம் (ஒ. பி.) 564

அரசு அலுவலர்கள்—
- அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலைநிறுத்தம் வாபஸ் அரசு அறிக்கை குறித்து (த. கோ.) 568
- என். ஜி. ஓ.க்கள், தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து முதலமைச்சரது அறிக்கை (அ) .. .. 156—166

பக்கங்கள்.

அ—தொடர்ச்சி

அரசு அலுவலர்கள்—தொடர்ச்சி

என். ஜி. ஓ. வேலை நிறுத்தம் குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை .. .. .. 797—799

என்.ஜி. ஓ.க்கள் வேலை நிறுத்தம் பற்றி முதலமைச்சர் தரவிருக்கும் அறிக்கை குறித்து (த. கோ.) 39—41

கால்நடை உதவியாளர்கள், பதவி உயர்வு அளித்தல் .. .. 28—30

கிராம மணியக்காரர், முளகிரிப்பட்டு பணம் கையாடல் 681

அரிசனங்கள்—

அரசுப் பணிகளில் நியமனம் குறித்த உயர்மட்டக் குழு .. .. 705—708

கள்ளக்குறிச்சி அருகில் பேரூராட்சிக் கிணற்றில் தண்ணீர் எடுக்கத் தடை .. 704—705

வீட்டு மனை வழங்குதல். .. 391—393

அருணாசலம் திரு. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 643—644, 646, 649—650

அழகர்சாமி திரு. சோ.—

அரசியலமைப்பு நாற்பத்தி நான்காவது (திருத்த) சட்டமுன்வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யச் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) .. .. 251—252

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டிடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் } 77—82

பக்கங்கள்.

அ—தொடர்ச்சி

அறிக்கைகள்—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து .. 216—218

அறிவிப்புகள்—

கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து. .. .. 810—811

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர்கள் நியமனம் 716

அன்பழகன் திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 754

அன்பழகன் திரு. தி.—

தலைமை ஆசிரியர்கள் (துவக்கப் பள்ளிகள்), பணிப் படி அளித்தல் 696

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டிடங்கள் .. ..
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் } 86—90

ஆ

ஆசிரியர்கள்—

தமிழாசிரியர்கள் (பணியிறக்கம் செய்யப்பட்டோர்) இராமநாதபுரம் மாவட்டம் (அ.) .. 54

நகராட்சிப் பள்ளிகள், தலைமை ஆசிரியர்களாக வருதல் .. .. 698—699

நல நிதி, இழப்பு .. .. 549—550

பயிற்சிக் கல்லூரி, இட ஒதுக்கீடு .. .. 12—15

ஆ—தொடர்ச்சி

ஆண்டி அம்பலம் திரு. மெ—
வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
மாநில ஆயத்தீர்வை
பொது விற்பனைவரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்.
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் 415

ஆறுமுகம் திரு. இல—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள் .. .. ..
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் } 113—114

ஆறுமுகம் திரு. மு—
உறுப்பினர் அல்லாத ஒருவர் பேரவையில் அமர்தல் (த. கோ.) 645
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 576, 639, 642
மாநில ஆயத்தீர்வை
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.
முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. 465—468

இ

இரங்கல் குறிப்பு—
பொப்பிலி இராஜா ரங்காராவ் திரு. ஆர்.எஸ்.ஆர் (தீ) 1
மணியம்மையார், திருமதி ஈ. வெ. ரா .. 800

இ—தொடர்ச்சி.

இரயில்வே—
செஸ் திட்டம், தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் .. .. 197—200
மூர் அங்காடி இருக்குமிடத்தை இரயில்வேக்கு கொடுத்தல் .. .. .. 16—19

இராசமாணிக்கம் திரு. இரெ—
அலுவலகங்கள் மூடியிருப்பதால் உறுப்பினர்கள் சம்பளம் வாங்க முடியாதது குறித்து (த.கோ.) 404

இராதா திரு. எஸ். ஆர்—
கொலை வழக்கு, உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஆதாரங்கள் அளித்தல் குறித்து, (ஒ. பி.) .. 565
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை .. 652
தீயணைப்புப் பணிகள் .. .. ..

இராமச்சந்திரன் திரு. எம். ஜி.—
அரசிதழ் பதிவுபெரு அலுவலர் வேலைநிறுத்தம் வாபஸ், அரசு அறிக்கை குறித்து (த.கோ.) .. 568
என். ஜி. ஓ.க்கள், தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து முதலமைச்சரது அறிக்கை (த. கோ.) .. .. .. 165—166
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 574, 575, 577, 586, 587, 588, 539, 631, 632, 637, 639, 644, 645, 739, 740, 848—910

இராமச்சந்திரன் திரு. ச—
கலசப்பாக்கம் தொகுதியில் வோல்டேஜ் குறைப் பால் பம்ப் செட் மோட்டார் காயில் தீய்ந்து போவது குறித்து (க. ஈ. அ) 721, 722, 723

பக்கங்கள்.

இ—தொடர்ச்சி.

இராமச்சந்திரன் திரு. ச—தொடர்ச்சி.
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டிடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் .. ..
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் — 46, 47, 48, 50, 51, 52, 133—153, 154
விதி 22-ஐத் தளர்த்தல் (தீ) 801, 802

இராமச்சந்திரன் திரு. செஞ்சி. ந—
அவியூர் ஏரி, நீர் வரத்துக் கால்வாய் .. 185
பெருமாள் ஏரி, மராமத்து வேலைகள் .. 186
பேருந்து நிலையம், திண்டிவனம் .. 562
மருதையாற்றின் குறுக்கே அணை, உடையார் பாளையம். 375
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 270
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும்—தீர்வைகளும்
நிர்வாகம், முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. 456—459

இராமசாமி திரு. எஸ். வி—
வரவு-செலவுத்-திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 279—282

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

இராமசாமி திரு. எஸ். ஜே—
கிராம மணியக்காரர், முளகிரிப்பட்டு, பணம் கையாடல் 691
சாலைகள், விருந்தவல்லி நெடுஞ்சாலையினை அகலப் படுத்துதல் 27
தண்ணீர், கேரளத்திலிருந்து 539
வரவு—செலவுத் திட்டம், 1978-79. வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 583
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்,
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. 422—425

இராமசாமி திரு. த—
வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. 611—614

இராமசாமி திரு த—
வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள் .. 53—55
பொதுப்பணிகள்— பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்

இராமலிங்கம் திரு. செ—
இரயில்வே செஸ் திட்டம், தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் .. 197

இராஜா முகமது திரு. கே—
திருவில்லிபுத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடத்தல், [க.ஈ.அ.] .. 723—725

பக்கங்கள்.

இ—தொடர்ச்சி.

இளங்கோவன் திரு. கோ—

இணைப்புச்சாலைகள் அமைப்போர்க்கு பஸ் ரூட் வழங்குதல் 710

உ

உச்சி திரு. கே—

அணைக்கட்டுகள், நீலகிரி மாவட்டத்தில். .. 213

உணவு தானியங்கள்—

நியாயவிலைக்கடை, நரசிம்மபுரம் கிராமம் .. 9—10
வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடையும் விவசாயிகளிடையே பதட்ட நிலையும் [க.ஈ.].. 569—574

உத்திராபதி திரு. பொ—

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள் .. .. 296—299
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டிடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் 47
பொதுப்பணிகள் — பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்

உமாநாத் திரு. ரா—

அரசிதழ் பதிவு பெரு அலுவலர் வேலைநிறுத்தம் வாபஸ், அரசு அறிக்கை குறித்து [த.கோ.] .. 568
அரசியலமைப்பு [நாற்பத்தி நான்காவது திருத்த] சட்ட முன்வடிவினுல் [1977-ம் ஆண்டு] செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) .. .. .. 240—247
இறைவைப் பாசனத்திட்டம். வேட்டைக்காரனிருப்பு கிராமம் 687
என். ஜி. ஓ.க்கள், தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து (த.கோ.) .. 164—165
என். ஜி. ஓக்கள் வேலைநிறுத்தம்பற்றி முதலமைச்சர் தரவிருக்கும் அறிக்கை குறித்து (த.கோ.) 40

பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.

உமாநாத் திரு. ரா.—தொடர்ச்சி.

ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு, உறுப்பினர்கள் 559
குளங்கள் (ஊராட்சி ஒன்றியங்கள்), தூர் எடுத்தல்
'தினமலர்' நாளேடு (உ.பி) .. 554, 34, 35, 36, 37, 38
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை .. .. 779—791, 792—795
தீயணைப்புப் பணிகள் 868, 869, 884, 890

உரிமைப் பிரச்னைகள்—

பார்க்க தலைவர் ''தீர்ப்புரைகளும்-குறிப்புகளும்''

உள்ளாட்சிகள்—

ஒன்றிய ஜீப்புகளுக்கு டீசல் இயந்திரங்கள் .. 19—21
கள்ளக்குறிச்சி பேரூராட்சி, சின்னசேலம் பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டம் .. .. 24—25
கள்ளக்குறிச்சி பேரூராட்சி, நகராட்சியாக்குதல்.. 22
கூத்தாநல்லூர் பேரூராட்சி, குடிநீர் .. 559
கோவை நகராட்சி, தினக் கூலித் தொழிலாளர்கள் .. .. 699—700
சிதம்பரம் நகராட்சி, நீர்த்தேக்கத் தொட்டி .. 25—26
சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம் .. 22—24
சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் வாசகசாலைகள் 692
நகராட்சிகள், திரையரங்குகள் நடத்துதல். .. 200—203

ஏ

ஏடுகள்—

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. .. 167, 319, 490, 654—655, 800, 912

பக்கங்கள்

ஒ

ஒத்திவைப்புத் தீர்மானம்—
பேருந்துகளில் 'டெக்கோ-மீட்டர்' கருவியைப் பொருத்த உத்தரவிட்டுள்ளமை .. 41—45

ஒழுங்குப் பிரச்னைகள்—
உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டின்மீது பேரவைத் தலைவரால் விளக்கம் கேட்கப்பட்டது குறித்து.. 567
ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை பேரவைக்கு அழைத்து வந்ததாக நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து .. .. 712—716
ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவு பெரு அலுவலகம் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து 216
கொலை வழக்கு, உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஆதாரங்கள் அளித்தல் குறித்து .. 565—566
கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச்சென்றது குறித்து 567
தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., மாற்றம் .. 563—564
வானொலியில் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறுததைக் கூறியதாக கூறியது குறித்து .. 811—812

க

கட்டிடங்கள்—
உயர்நிலைப் பள்ளி, புலியூர்சாலை, விளவங்கோடு தாலுகா 551

கணேசன் திரு. எஸ்.—
கொத்தவால் சாவடி (சென்னை), இடமாற்றம்... 384
சென்னை மாநகர வளர்ச்சித் திட்டம் .. 22
தொழிலாளர் நலக் கல்வி நிலையம், பணிகள்.. 207
நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. 377
போக்குவரத்துக் கழகம், ஊழியர்களுக்கு விசேஷ பயிற்சி 208
விஞ்ஞான பாடப் புத்தகங்கள். தமிழ்நாட்டுப் பாடப் புத்தகக் கழக வெளியீடு .. 16

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கந்தசாமி திரு. கா.வே—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பொதுப் பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள் .. .. 55—57
மாநில ஆயத்தீர்வை,
பொதுவிற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்
முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. 468—469

கந்தசாமி திரு. கே.—
வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப் பணிகள்—கட்டடங்கள்
பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள்
பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 114—119

கரியமாணிக்கம் அம்பலம் திரு. கரு. ராம—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை, தீயணைப்புப் பணிகள் .. .. 638—639, 641—643

கருணாநிதி திரு. தாழை மு—
கால்நடை உதவியாளர்கள், பதவி உயர்வு அளித்தல் 28

கருணாநிதி திரு. மு—
அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) .. .. 258—266

க—தொடர்ச்சி.

கருணாநிதி திரு. மு—தொடர்ச்சி.

என்.ஜீ.ஓ.க்கள் வேலைநிறுத்தம் பற்றி முதலமைச்சர் தரவிருக்கும் அறிக்கை குறித்து (த.கோ.).. 39,40

கொலை வழக்கு, உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஆதாரங்கள் அளித்தல் குறித்து. (ஓ.பி.) .. 566

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை } .. 584, 760, 792 833—848 861, 862, 884,899, 900,901, 904,
தீயணைப்புப் பணிகள். }

வானொலியில் எதிர்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாக கூறியது குறித்து, (ஓ.பி.) 811—812

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ) .. 802

கருப்பசாமி பாண்டியன் திரு. வீ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை } .. .. 589—595
தீயணைப்புப் பணிகள் }

கல்லூரிகள்—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, இட ஒதுக்கீடு .. 12—15

கலை அரங்கம்—

உதகையில் அமைத்தல் .. .. .. 381—383

கலைக்கூடம்—

பூம்புகார், வசூல் .. .. 545—547

கவன ஈர்ப்புகள்—

கலசப்பாக்கம் தொகுதியில் வோல்டேஜ் குறைபால் பம்ப்செட் மோட்டார் காயில்கள் தீய்ந்து போவது குறித்து .. .. 720—723

க—தொடர்ச்சி.

கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

கோவை, பல்லடம், அவிநாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச்செடியால் மனிதர்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து .. .. 218—221

திருவல்லிபுத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடத்தல் .. .. 723—725

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோய் நிவாரண நடவடிக்கை .. .. .. 411—413

பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் உண்ணாவிரதமும், அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் .. .. 406—410

வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடையும், விவசாயிகளிடையே பதட்ட நிலையும் .. 569—574

கழகங்கள்—

பல்லவன் போக்குவரத்து தொழிலாளர்கள் உண்ணாவிரதமும் அதனால் ஏற்டட்ட பதட்ட நிலையும் (க.ஈ.) .. .. 406—410

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு விசேஷ பயிற்சி 208

போக்குவரத்து, தொழிலாளர்களை பங்குதாரர்களாக்குதல் .. .. 709—710

காடுகள்—

வேதாரண்யம், மான் வேட்டை .. .. 6—9

கால்நடை(கள்)—

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோய், நிவாரண நடவடிக்கை [க.ஈ.] .. .. 411—413

கிட்டப்பா திரு. என்.—

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. இட ஒதுக்கீடு .. 12

உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி வகுப்புகள் .. 190

கேளிக்கை வரி, திரைப்படங்களுக்கு விலக்கு .. 531

கைத்தறித் துணிகள் விற்பனை, சமூக சேவை நிறுவனங்களின் உதவி 395

கொத்தவால்சாவடி (சென்னை), இடமாற்றம் .. 384

பக்கங்கள்

கூ—தொடர்ச்சி.

கிட்டப்பா திரு. என்.—தொடர்ச்சி.

சித்திரை முழு நிலவு நாள் விழா, பூம்புகார் .. 547
தண்ணீர், கேரளத்திலிருந்து 539
திரையரங்குகள், நகராட்சிகள் நடத்துதல் .. 200
நிலபட்டா உரிமைகள், தாழஞ்சேரி, ரத்து செய்யப்பட்டவை 679
பள்ளிகளில் இந்தி வகுப்புகள் நடத்துதல், மத்திய அரசின் குறிப்பு 190
பால்வள நிறுவனம், தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயித்தல் .. .. .. 212—213
பூம்புகார் கலைக்கூடம், வசூல் 545
மின்சார விநியோகம், மைசூருக்கு, கேரளாவின் ஆட்சேபணை 543

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 576

நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 273—278

வள்ளுவர் கோட்டம் கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமை .. [illegible]80

கிருஷ்ணன் திரு. ரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 576, 606—611

வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடையும், விவசாயிகளிடையே பதட்ட நிலையும் (க.ஈ.) 569, 570, 573

குடிநீர்—

கூத்தாநல்லூர் பேரூராட்சி 559
புதுக்கடை நகரப் பஞ்சாயத்துக்கு வழங்குதல் 385—386
பேரூராட்சிக் கிணறு (கள்ளக்குறிச்சி அருகில்), அரிசனங்கள் தண்ணீர் எடுக்கத் தடை .. 704—70[illegible]

பக்கங்கள்

கு—தொடர்ச்சி.

குப்புசாமி திரு. என்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் .. .. 103—105

குருசாமி திரு. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் .. .. 100—101

குழந்தைவேலு திரு. ப.—

அறிவிப்பு கொடுத்த தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாமை (த.கோ.) 719
கோவை, பல்லடம், அவிநாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து (க.ஈ.அ.) .. .. .. 219—220

குழுக்கள்—

ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு, உறுப்பினர்கள் .. .. 559—561
மாவட்ட அபிவிருத்திக் குழு, தீர்மானங்கள் மீது அரசு நடவடிக்கை .. .. 702—704

கூட்டுறவு—

சிங்காரவாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், செயல்படுதல் .. .. 399—401

பக்கங்கள்,

க—தொடர்ச்சி.

கைத்தறி—
திருவில்லிப்புத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடத்தல் (க.ஈ.) .. .. .. 723—725
நெசவாளர்கள்—முதலாளிகள் ஒப்பந்தம், கரூர் .. 402—404
விற்பனை சமூகசேவை நிறுவனங்களின் உதவி .. 395—399

கோதண்டராமன் திரு. வி. கே.—
தண்ணீர், கேரளத்திலிருந்து 539
நிலநீர், வடஆற்காடு மாவட்டம், பாதுகாத்தல் .. 683
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள் } 272

பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 46,49,50,52

மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் 413,416
435—440

ஸ்டாம்பு வெண்டர்கள் கோரிக்கை, திருப்பத்தூர் தாலூகா 537

கோதண்டராமன் என்கிற முசிரிபுத்தன் திரு. பி.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 795,909

கோபாலன் திரு. போ.—
கலை அரங்கம், உதகை 381
படகர் இனம், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல் 386

பக்கங்கள்.

கோ—தொடர்ச்சி.

கோவிந்தராசன், திரு. கி.—
பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் உண்ணாவிரதமும், அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும், [க.ஈ] 406,410

கோழி வளர்ப்பு—
மின் கட்டணம், கோழிப் பண்ணைகளுக்குச் சலுகை அளித்தல் .. .. 689—691

ச

சண்முகம், திரு. ப. உ.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 124—133,
137

சதாசிவம், திரு. செ.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 110—113

சந்திரன், திரு. ப.—
சுப்பு திரு. க. அவர்கள் மீது-[உ.பி.] 804
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. .. 761—763

பக்கங்கள்.

ச—தொடர்ச்சி.

சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ—

பேருந்து சலுகைப் பயணச் சீட்டுகள், இன்ஸ்டிடியூட் ஆப் இன்ஜினியரிங் டெக்னலஜி மாணவர்க்கு அளிக்கப்படாமை .. 708

மின் கட்டணம், கோழிப் பண்ணைகளுக்குச் சலுகை அளித்தல் 689

வரவு-செலவுத் திட்டம், 1978–79 வாக்கெடுப்பு—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் .. } 303—307

சமரசம் டாக்டர், கே.—

அயல்நாடுகளில் வேலைவாய்ப்பு, தகவல் நிறுவனம் அமைத்தல் 551

சமூக நலம்—

'படகர்' இனம், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல் .. .. .. 336—390

முன்னாள் இராணுவ வீரர்கள் வீடுகள் கோவை புதூர் காலனி, வரி விலக்கு 558

சரஸ்வதி செல்வி, பி. டி.—

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோய் நிவாரண நடவடிக்கை (க.ஈ.அ.) .. 411—412, 413

சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.—

கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச் சென்றது குறித்து (ஒ.பி.) 567

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

பாசணம்

பாசனம் குறித்த மூலதனச் செலவு

பொதுப்பணிகள்-கட்டடங்கள்

பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள் .. .. ..

பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும். 49,50,51

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—

உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டின் மீது பேரவைத் தலைவரால் விளக்கம் கேட்கப்பட்டது குறித்து (ஒ.பி.) 567

கைதி இறப்பு, சென்னை மத்திய சிறை .. 188

தண்ணீர், கேரளத்திலிருந்து, ... 539

முன்னாள் இராணுவ வீரர்கள் வீடுகள், 'கோவை புதூர்' காலனி, வரி விலக்கு 558

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

மாநில ஆயத் தீர்வை.

பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம். முத்திரைத் தாள்கள், நிர்வாகம் மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. 414, 469—477

சாலைகள்—

ஆக்கிரமிப்பு, பழனி நெடுஞ்சாலையில் .. 393—394

ஆத்தன்கரை பள்ளிவாசல்-ராதாபுரம் நெடுஞ்சாலை, தூசுபடியாத சாலையாக்குதல் .. 26

இணைப்புச் சாலைகள் அமைப்போர்க்கு பஸ் ரூட் வழங்குதல் .. 710—712

ஒழிந்தியாம்பட்டு—கீழ்புதுப்பட்டு, சீரமைப்பு. .. 557—558

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையினை அகலப் படுத்தல். .. 27—28

சிகாமணி, திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாககெடுப்பு—

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் 310—312

சிவசாமி, திரு. செ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை, தீயணைப்புப் பணிகள் .. 575, 576, 773—779

மாநில ஆயத் தீர்வை பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்; நிர்வாகம், முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. 414,415

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சிறைச்சாலைகள்—

சென்னை மத்திய சிறை, கைதி இறப்பு. .. 188—189

சின்னசாமி, திரு. வி. கோ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
பாசனம்—பொதுப்பணிகள் - கட்டடங்கள்
பொதுப்பணிகள் - பணியாளரும், கருவிகளும்
இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த
மூலதனச் செலவு பொதுப்பணிகள் குறித்த
மூலதனச் செலவு-கட்டடங்கள் .. 74—77

சின்னராசு, திரு. க. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை, தீயணைப்புப் பணிகள் .. 635—637, 638

பாசனம் பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும்
இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த
மூலதனச் செலவு பொதுப்பணிகள் குறித்த
மூலதனச் செலவு—கட்டடங்கள் .. 93—96

சுந்தரம், திரு. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-
பாசனம்
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும்
இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த
மூலதனச் செலவு பொதுப்பணிகள் குறித்த
மூலதனச் செலவு-கட்டடங்கள் .. 101—103

சுந்தரராஜ், திரு. நா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
காவல் துறை தீயணைப்புப் பணிகள் .. 595—601, 640, 813—814, 819

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள். 270

சுப்பிரமணியம், திரு. ஓ.—

மாவட்ட அபிவிருத்திக் குழு தீர்மானங்கள், அரசு நடவடிக்கை 270

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியம், திரு. ஓ.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை தீயணைப்புப் பணிகள் .. 574

மாநில ஆயத் தீர்வை, பொது விற்பனை வரிகளும்; ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. 413

சுப்பிரமணியம், திரு. கே. ஜே.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-
பாசனம்
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள்-ஆய்வாளரும், கருவிகளும்
இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த
மூலதனச் செலவு பொதுப்பணிகள் குறித்த
மூலதனச் செலவு-கட்டடங்கள் .. 82—84

சுப்பிரமணியம், திரு பாக்கூர் சு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு-
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும்
நிர்வாகம், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. 431—435

சுப்பிரமணியன், திரு. சின்னசேலம் மா.—

கள்ளக்குறிச்சி பேரூராட்சி, நகராட்சியாக்குதல்.. 22

குடிநீர்த் திட்டம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் பகுதிகளுக்கு .. 24

வாபஸ், அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம், அரசு அறிக்கை குறித்து (த.கோ.) .. 568

சுப்பு, திரு. க.—

அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன் வடிவினுல் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு—ஏற்பளித்தல். (தி) 224—232

128-119—5.

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பு திரு. க.—தொடர்ச்சி.

அறிவிப்பு கொடுத்த தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாமை (த. கோ) .. 717, 718, 719

ஓர் உறுப்பினர் அந்நியர் ஒருவரை பேரவைக்கு அழைத்து வந்ததாக நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து (ஒ. பி.) .. 714

ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் பொருள் குறித்து மேலவையில் முதலில் விவரம் அறிவித்தது குறித்து. (உ.பி.) .. 808—810

சுப்பு (திரு. க.) அவர்கள் மீது உ. பி. .. 805, 806, 807

தமிழாசிரியர்கள் (பணியிறக்கம் செய்யப் பட்டோர்) இராமநாதபுரம் மாவட்டம் (த. கோ.) .. 45

''தினமலர்'' நாளேடு உ. பி. .. 37, 38

பேருந்துகளில் 'டெக்கோ-மீட்டர்' கருவியைப் பொருத்த உத்தரவிட்டுள்ளமை (ஒ.தீ.) .. 41—42

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காவல் துறை, தியணைப்புப் பணிகள் .. 637, 645, 647, 726, 743—754, 852, 869, 880

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் .. 300, 302, 317

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ) .. 801, 802, 803

வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடையும் விவசாயிகளிடையே பதட்ட நிலையும் (க. ஈ.) .. 571, 57

சுப்புலட்சுமி திருமதி—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-

பாசனம்
பொதுப்பணிகள்-கட்டிடங்கள்
பொதுப்பணிகள் - பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த மூலதனச் செலவு பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் .. 119—122

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்ரவேலு, திரு. கா.—

ஆசிரியர் நல நிதி, இழப்பு .. 549

தொழிலாளர் துறையில் வேலை வாய்ப்பு .. 383

சுவாமிதாஸ், திரு. சு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் .. 272, 294—296

மாநில ஆயத் தீர்வை பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. 414—440, 447

சுற்றுலா—

பூம்புகார் கலைக்கூடம், வசூல், .. 545—547

பூம்புகார், சித்திரை முழு நிலவு நாள் விழா, .. 447—549

செல்லப்பா, திரு. அ.—

அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டா .. 391

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை தீயணைப்புப் பணிகள் .. 574

விவசாயத் தொழிலாளர்கள் கூலி, தஞ்சை மாவட்டம் .. 534

செல்வராசன், திரு. அ.—

இரயில்வே மேம்பாலம், இராயபுரம் .. 700

செல்வராஜ், திரு. மு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-

பாசனம், பொதுப்பணிகள்-கட்டடங்கள் பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் பாசனம் குறித்த மூலதனச் செலவு பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் .. 90—9

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சொக்கலிங்கம், திரு. கெ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:
காவல் துறை நியமனப்புப் பணிகள் .. 650—654

ஞ

ஞானசிகாமணி, திரு. தே.—

கட்டடம் புலியூர் சாலை, உயர்நிலைப் பள்ளி, விளவங்கோடு தாலுகா. 551

த

தகவல் கோரல்.—

அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலை நிறுத்தம் வாபஸ், அரசு அறிக்கை குறுத்து 578

அலுவலகங்கள் மூடியிருப்பதால் உறுப்பினர்கள் சம்பளம் வாங்க முடியாதது குறித்து .. 404

அறிவிப்பு கொடுத்த தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாமை .. .. 717—720

உறுப்பினர் அல்லாத ஒருவர் பேரவையில் அமர்தல். 645

என்.ஜி.ஓ.க்கள், தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து .. .. .. 164—166

என். ஜி. ஓக்கள் வேலை நிறுத்தம்பற்றி முதலமைச்சர் தரவிருக்கும் அறிக்கை குறித்து. 39—41

ஒத்தி வைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், எடுத்துக்கொள்ளாதது குறித்து. 566

தமிழாசிரியர்கள் (பணியிறக்கம்) செய்யப் பட்டோர்), இராமநாதபுரம் மாவட்டம் .. 45

வினுக்கள், உரிமைப் பிரச்சனைகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து .. .. 405—406

வினுத்தாள்கள் மாற்றம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி. .. .. .. 564—565

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்.—

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்.—

அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்.—

" ஆரம்பப்பள்ளி மாணவர்களை ஹெட் மாஸ்டர் அடக்குவது போல் " என்று ஓர் உறுப்பினர் கூறியபோது, " தயவு செய்து அப்படிப் பேசுதல் கூடாது ; மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணிய மாகவே நடத்தப்படுகிறார்கள் " என்று தலைவர் குறிப்புரைத்தார் 115

" சர்வாதிகார ஆட்சியில் " என ஓர் உறுப் பினர் குறிப்பிட்டதற்கு ஆட்சேபம் தெரி விக்கப்பெற்றபோது, " சர்வாதிகார ஆட்சி என்று சொல்வதிலே குற்றமில்லை " என்று தலைவர் குறிப்புரைத்தார். .. 814

" வெளியே வா " என ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரைப் பார்த்து குறிப் பிட்டபோது, " நேருக்கு நேராக உறுப் பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு, ' வெளியே வா ' என்று கூச்சல் போடுவது நல்லதல்ல " என்று தலைவர் கண்டித்தார். 796

" ஜனநாயக விரோதி (இன்னுர்) என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தபோது தலைவர் குறிப்பிட்ட தாவது :-
" அது அன்பார்லிமென்டரி வார்த்தை அல்ல. " 652

உரிமைப் பிரச்சினைகள்.—

ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மான அறி விப்பு கொடுக்கப் பெற்றிருக்கும் ஒரு பொருள்பற்றி மேலவையில் விவரங்களை அளித்தது குறித்து உரிமைப் பிரச்சினை யொன்றை எழுப்பிய உறுப்பினரின் கருத் துக்களைக் கேட்டறிந்த பிறகு, பின்னர் தீர்ப்புரைப்பதாக தலைவர் குறிப்புரைத் தார் * .. .. 808—810

* 1978 மார்ச் 31 ஆம் நாளன்று தீர்ப்புரைக்கப்பெற்றது.

ந—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

சுப்பு, திரு. க. அவர்கள் மீது:

அவையிலே ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது அவரைப் பார்த்து, திரு. சுப்பு குறிப்பிட்ட சில வார்த்தைகள் அவையுரிமை மீறிய செயலாகும் என்று மூன்று உரிமைப் பிரச்சினைகள் 1978 மார்ச் 17 ஆம் தேதி கொண்டுவரப்பெற்றபோது, அவ்வுறுப்பினர்களின் கருத்துக்களையும் திரு. க. சுப்பு அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்த பிறகு தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :-

'' தாம் பேசியதற்கு உறுப்பினர் வருத்தம் தெரிவித்து விட்டார் ; இப்பிரச்சினையைத் தீர விசாரித்து பிறகு தீர்ப்பளிக்கிறேன்.''* 803—808

'' தினமலர் '' நாளிதழ்மீது :

குறிப்பிட்ட ஒரு பிரச்சினைமீது வெளிநடப்பு செய்த கட்சிகளோடு சேர்ந்து வெளிநடப்பு செய்துள்ள ஒரு கட்சியின் பெயர் மட்டும் விடப்பட்டிருப்பது குறித்து '' தினமலர் '' நாளிதழ்மீது ஓர் உறுப்பினர் உரிமைப் பிரச்சினையொன்றை 1978 மார்ச் 11 ஆம் தேதி கொண்டுவந்தார்.

அவ்வுறுப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிந்த பிறகு தலைவர் சம்பந்தப்பட்ட நாளிதழ் ஆசிரியருக்கு எழுதிக்கேட்ட பிறகு தீர்ப்புரைப்பதாகக் குறிப் 34
புரைத்தார். * 38

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

எடுத்துக்கொள்வது குறித்து:

கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து அறையிலே கேட்க வேண்டும் ; அவையிலே கேட்க முடியாது. .. 40,41

* 1978 மார்ச் 30 ஆம் நாளன்று தீர்ப்புரைக்கப்பெற்றது.

ந—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

பேருந்துகளில் ' டெக்கோ மீட்டர் ' வைக்க வேண்டுமென்பதன் விளைவு குறித்து :

போக்குவரத்துத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. 45

ஒழுங்குப் பிரச்சினைகள்—

அவையில் 16–3–1978 ஆம் நாளன்று தாம் கூறாத கருத்தைக் கூறியதாக வானொலியில் செய்தி ஒலிபரப்பப்பெற்றது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியபோது, அதுபற்றி எழுத்து மூலமாகக் கொடுத்தால் விளக்கம் கேட்டுத் தீர்ப்புரைப்பதாகத் தலைவர் குறிப்புரைத்தார் 812

எஸ். எஸ். எல். சி. வினாத்தாள் மாற்றிக் கொடுக்கப் பெற்றது குறித்து:

எஸ். எஸ். எல். சி. வினாத்தாள்கள் மாற்றிக்கொடுக்கப் பெற்றது குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினையை உறுப்பினர் ஒருவர் எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

'' திடீரென்று பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று இந்த பிரச்சினையைக் கிளப்புவது சரியல்ல; முன்பே எழுத்து மூலமாகத் தந்துவிட்டு, எழுப்ப வேண்டிய விஷயம் ; எழுத்து மூலமாகத் தராது எழுப்புவது அவையின் நேரத்தை வீணாக்குவதுபோல இருக்கிறது ''. 564

ஓர் அமைச்சர் இன்னொரு அமைச்சரின் இடத்தில் உட்கார்ந்திருந்தபோது எழுப்பப்பெற்ற ஆட்சேபணைக்கு தலைவர் அளித்த குறிப்புரையாவது :-

'' அமைச்சர்கள், அமைச்சர் வரிசையில் ஏதாவது ஒரு இடத்தில் உட்காரலாம் ''. 19

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்— தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

ஒரு கொலை வழக்கைப்பற்றி உறுப்பினர் ஒருவர் ஆதாரமளிப்பது குறித்து :

ஒரு கொலை வழக்கைப்பற்றி ஆதாரம் அளிப்பதாய்ச் சொன்ன உறுப்பினரிடம் இருந்து அத் தகவலைப் பெற தலைவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன என்பதாக ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப் பப்பெற்றபோது தலைவர் அளித்த குறிப் புரையாவது :—

'' அந்த உறுப்பினருக்கு எழுத்து மூல் மாக அதுபற்றிய ஆதாரங்களை இன்றைக்குள் தர வேண்டுமென்று எழுதியிருக்கிறேன். '' * 566

ஒரு கொலை வழக்கைப் பற்றிஆதார மளிப்பதாகச் சொன்ன ஒரு உறுப் பினருக்கு தலைவர் எந்த விதியின்கீழ் ஆதாரத்தைத் தரவேண்டுமென்று கடி தத்தை எழுதினர் என்று மற்ருேர்உறுப் பினர் வினவியபோது தலைவர் பின்வரு மாறு தீர்ப்புரைத்தார் :-

'' எந்த விதியின்கீழ் உறுப்பினர் பேசினரோ அந்த விதியின்கீழ்தான் ; எந்த விதியின்கீழும் உறுப்பினர் அப்படிப் பேசமுடியாது என்பதையும் நான் நினைவுபடுத்துகிறேன். அவர் பேசியதன் அடிப்படையில் தான் கடி தம் எழுதினேனே தவிர வேறு எந்த விதியின் அடிப்படையிலும் அல்ல. இதைப்பற்றி முடிவு செய்வதற்கு தலைவருக்கு ' டிஸ்க்ரீஷனரி பவர்.' இருக்கிறது. அந்த முறையில்தான் கடிதம் அனுப்பியிருக்கிறேன். '' 567,568

ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஓர் உறுப் பினரை வேறு சில உறுப்பினர்கள் பேச விடாமல் குறுக்கிட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :-

'' அவர் சொன்ன பிறகு அவைத் தலைவர் என்ன சொல்கிருர் என்று தெரிந்துகொள்ளலாம். ஒழுங்குப் பிரச் சினையை அனுமதிக்காமல் இருக்க முடியாது. '' 565

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை பேரவைக்கு அழைத்துவந்ததாக வந்துள்ள செய்தி குறித்து :

முதல்நாள், அன்னியர் ஒருவரைப் பேர வைக்குத் தாம் அழைத்து வந்ததாக பேரவையில் தலைவர் குறிப்பிட்டதாக வந்துள்ள செய்திகுறித்து உறுப்பினர் ஒருவர் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பியபோது தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார் :

'' இப்போது சபையில் நடந்த பிரச்சினை யின்மீது வேண்டுமென்ருல் உடனே உரிமைப் பிரச்சினையைக் கிளப்பலாம். நேற்று நடந்த விஷயத்தின்மீது உரிமைப் பிரச்சினை கிளப்ப வேண்டு மாளுல், எந்த விதியின்கீழ் கிளப்பு கிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டு எழுத்து மூலமாகத் தாருங்கள், அதைப் பரிசீலித்து பிறகு முடிவு சொல்கிறேன்.'' 715,716

'' ஓர் உறுப்பினர் மற்ருெரு உறுப்பினரின் பெயரைக் குறிப்பிடும்போது அவரது சாதி யையும் இணைத்துக் குறிப்பிட்டது சரியா '' என ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தபோது, ' வினா நேரத்தில் கேள்வியை ஒட்டி ஏதாவது ஒழுங்குப் பிரச்சினை இருந்தால் தான் எழுப்பலாம் ' எனத் தலைவர் குறிப் புரைத்தார். 214

கோவை ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் மக்களை ஏற்றிச் சென்றது குறித்து:

இதுபற்றியெல்லாம் மானியக் கோரிக் கையில் பேசிக் கொள்ளலாம். 567

தலைவரின் தீர்ப்புரைக்குப்பின் ஒழுங்குப் பிரச்சினை அனுமதிக்கப்படாது. 649

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அறையிலே வந்து தெளிவுபடுத்திக் கொள்ளலாம், அவையிலே வந்து கேட்டு நேரத்தை வீணாக்கக் கூடாது. 717

என்.ஜி.ஓக்கள் வேலை நிறுத்த வாபஸ்பற்றி அறிக்கை அளிப்பது குறித்து:

அறிக்கை அளிப்பது அமைச்சரின் விருப்பத்தைப் பொறுத்தது. தலைவர் கட்டாயப்படுத்த முடியாது. 568

ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறுவது குறித்து:

முக்கியமாக அவையில் மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெறும் நேரத்தில் என்னென்ன ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும், எதற்கு அனுமதி மறுக்க வேண்டும் என்று முடிவு செய்யக் கூடிய அதிகாரம் தலைவருக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சினைகளைக் குறித்து தலைவரின் அறையிலே வந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். 406

வேறு சந்தர்ப்பங்களில் பேச வாய்ப்பிருக்கின்றது என்ற காரணங்காட்டி ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் கவன ஈர்ப்புகளையும் தள்ளுபடி செய்திருப்பது சரியல்ல என்று ஓர் உறுப்பினர் கருத்துத தெரிவித்தபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :—

" எந்தெந்த விதியின்கீழ் இது சரியல்ல என்று சொன்னால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் எல்லாம் மானியக் கோரிக்கைக்குள் அடங்கியவை. அதில் தாராளமாகப் பேசலாம் " 566

கொடுத்துள்ள அறிவிப்புகள் குறித்து உறுப்பினர்கள் தலைவர் அறையிலே வந்து கேட்க வேண்டும். 405,406

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

தகவல் கோரல்—தொடர்ச்சி.

முன்னறிவிப்பின்றி எழுப்பப்பெறும் ஓர் பிரச்சினையைக் குறித்து:

அமைச்சரை பதில் சொல்ல வேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது .. 565

முன்னறிவிப்பின்றி திடீரென்று எழுந்து எதையும் கேட்கக் கூடாது. 404

பார்வையாளர் மாடம்—

பார்வையாளர் மாடத்திலிருந்து நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுக்கக்கூடாது. .. 201,202

பேரவை வரம்பெல்லை—

நுழைவுரிமை :

லாபியிலே உறுப்பினர்கள் மட்டும் வரலாம் ; அவர்களோடு யாரையும் அழைத்து வர வேண்டாம். .. 647

விவாதம்:

அமைச்சரின் பதிலுரைக்குப் பின்னர் உறுப்பினர்கள் சுருக்கமாக விளக்கம் கேட்கலாமே தவிர உரையாற்றக் கூடாது. 908,909

அவை நடவடிக்கைக்குறிப்பிலிருந்து முன்னதாக நீக்கிய பகுதிகளை திரும்பவும் ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது அதை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிட்டு தலைவர் குறிப்புரைத்ததாவது :—

" முன்னதாக நீக்கிய பகுதிகளை மீண்டும் குறிப்பிடக் கூடாது. " 589,755

அவை முன்னுள்ள பொருள் குறித்தே பேசுதல் வேண்டும்:

பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பற்றிப் பேசத் தேவையில்லை. 824

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

ஆதாரம் கோருவது குறித்து :

ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும் போது மற்றொரு உறுப்பினர் குறுக்கிட்டு அப்படிப் பேசுவதற்கு ஆதாரம்கொடுக்க வேண்டுமென்று கேட்பது மரபு அல்ல. .. 739,740

உரிமைப் பிரச்சினை:

பத்திரிகைக்கு விளக்கம் கேட்டு, அவர்களது பதில் வந்த பிறகுதான் தெரிந்து செய்தார்களா, தெரியாமல் செய்தார்களா என்று முடிவு எடுக்க முடியும் ; அதற்கு முன்னாலேயே அவர்கள் தெரிந்தே செய்திருக்கிறார்கள் என்பதாக ஒரு காரணத்தையும் சொல்லி பேசுதல் கூடாது. 36

உள் நோக்கம் கற்பித்து பேசுதல் கூடாது. 35

கருத்து வெளியிடல்:

மற்ற உறுப்பினர்களை புண்படுத்தக் கூடியவகையில் ஓர் உறுப்பினர் பேசுதல் கூடாது. 115

குற்றச்சாட்டுகள்:

உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைச் சட்டமன்றத்தில் சொல்லும்போது "வெளியே பேசிக்கொள்கிறார்கள்" என்ற முறையில் சொல்லக்கூடாது. 587

குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது குறிப்பாக அரசாங்கப் பதவிகளில் இருப்பவர்களைப்பற்றிச் சொல்லும் போது, அவர்கள் வகிக்கின்ற பதவி, இருக்கிற இடம் பற்றித்தான் இங்கே பேசுவது மரபாக இருந்து வந்திருக்கிறது; அந்த அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடுவது மரபல்ல. 589

குறிப்பிட்ட ஊரில் இருக்கிற ஓர் அதிகாரி செய்யும் காரியம்பற்றி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, இப்படிப்பட்ட பிரச்சினைகளை அதிகாரிகளுக்கோ

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டுகள்—தொடர்ச்சி.

அல்லது அமைச்சர்களுக்கோ எழுத்து மூலம் எழுதிக் கொடுக்கலாமே தவிர இங்கே வந்து பேசுவது நல்லதல்ல என்று குறிப்புரைத்த தலைவர் அப்பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிட்டார். 637

குறுக்கீடு:

விளக்கங்கள் நீண்டதாக போய்க் கொண்டே இருக்கக் கூடாது. 247,640

நீக்கம் குறித்து:

அவையின் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கப் பெற்ற சில வார்த்தைகளை மீண்டும் உரிமை மீறல் பிரச்சினையில் சில உறுப்பினர்கள் கிளப்ப தலைவர் அனுமதிக்கலாமா ? என ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, "அவ்வார்த்தைகள் நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கின்றன ; அப்படியிருக்கும் போது நீக்கப்பெற்றுவிட்டது என்று சொல்வது சரியல்ல ; தலைவரைப்பற்றிச் சொல்லும்போது கொஞ்சம் எச்சரிக்கையாகச் சொல்ல வேண்டும்" என்று தலைவர் குறிப்புரைத்தார். .. 806

பேசும் உறுப்பினர் குறிப்பிட்ட பொருளைப் (வெங்காயத்தை) பற்றி விளக்காமல் பிரச்சினைகளை விளக்க வேண்டும். .. 572

பேசும் முறை:

உட்கார்ந்துகொண்டே — சத்தம் .. போட்டுப்பேசுதல் கூடாது 536,537
712,811

பேரவைத் தலைவரின் அனுமதியின்றி யாரும்எழுந்து பேசுதல் கூடாது .. 37, 717
759, 76

பேசும் மொழி:

அமைச்சர் ஒருவர் ஆங்கிலத்தில் பேசிய போது, தமிழில் பேசினால் அனைவரும் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கு

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.
தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.
விவாதம்—தொடர்ச்சி.
பேசும்மொழி—தொடர்ச்சி.
மென்று ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது தலைவர் பின்வருமாறு குறிப்புரைத்தார் :- "புதிதாகப் பிரச்சினையைக் கிளப்புகிறீர்கள் ; ஏற்கெனவே பேசி முடிவெடுத்த ஒன்று , அவருக்கென்று தனி விதிவிலக்கு." 221
ஆங்கிலத்தில் பேசும் உறுப்பினர்களை தமிழில்தான் பேச வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. .. 279
மேலவையைப்பற்றிப் பேசக்கூடாது:
மேலவையில் நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து ஓர் உறுப்பினர் பேசும்போது, மேலவைபற்றி குறிப்பிட்ட பகுதிகளை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிட்டு, கீழ்கண்டவாறு தலைவர் தீர்ப்புரைத்தார் :— "இந்தச் சபைக்கு எவ்வளவு முக்கியத்துவம், அந்தஸ்து உண்டோ அதே முக்கியத்துவமும் அந்தஸ்தும் மேலவைக்கும் உண்டு." 718,719
வழக்கு மன்றத்தில் இருக்கும் பொருள் குறித்துப் பேசுதல் கூடாது:
வழக்கு மன்றத்தில் இருப்பது குறித்துப் பேசுதல் கூடாது. 644, 645, 648
விளக்கம் கோருதல்:
ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது மற்றவர்கள் ஒவ்வொருவரும் குறுக்கிட்டு விளக்கம் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. 642
வெளியிலே பேசியதைப்பற்றி அவையிலே பேசத் தேவையில்லை. 649

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி
தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.
வினாக்கள்—விடைகள்:
கேள்வி நேரத்தின்போது அதிகாரிகள் அவையில் இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது ; அப்படி கட்டாயமும் இல்லை. 687
மூல வினாவிற்குப் பதில் அதிகமாக இருந்தால் அதை அச்சடித்து மேசைமீது வைத்துவிட வேண்டும். 209,210
துணை வினாக்கள்:
எல்லோருக்கும் கேட்கும் வாய்ப்பு கொடுக்க நேரம் இருக்காது. .. 212
ஒவ்வொரு கட்சிக்கும் சந்தர்ப்பம் தரப் பெறுகிறது. 537
கேள்விக்கு மட்டும் அமைச்சர் பதில் சொன்னால் போதுமானது. .. . 10
கேள்வியை விளக்காமல் சுருக்கமாகக் கேட்க வேண்டும். .. .. .. 20, 204, 399, 686.
சம்பந்தப்பட்ட மாவட்ட உறுப்பினர்கள் கேட்டால் நல்லது. அத்தனை பேர்களும் கேட்பது நியாயமல்ல. .. 685
தகவல்களைத் தெரிந்துகொள்வதற்குத்தான் அமைச்சர்களிடம் கேள்விகளைக் கேட்க வேண்டும். 712
மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத துணைக் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டியதில்லை. 214,215
மூலக் கேள்வியில் வராத துணைக் கேள்வி அனுமதிக்கப்பெறாது. .. 18
மூலக் கேள்வியை ஒட்டியதாகத் துணைக் கேள்வி கேட்க வேண்டும். அதையொட்டிய கேள்விகளுக்குத்தான் அமைச்சர்களிடம் விவரங்கள் இருக்கும் 211, 374, 382, 703,

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தனசேகரன், திரு. ந.—
வரவு செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம், முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் 452—456

தா

தாமரைக்கனி, திரு. இரா.—
கிணறுகள் அபிவிருத்தி, திருவில்லிப்புத்தூர் 2
திருவில்லிப்புத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடத்தல், (க.ஈ.) .. .. 723—724
வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசின் தடையும், விவசாயிகளிடையேபதட்ட நிலையும்(க.ஈ.) 572—573

தாவரம்:
கோவை, பல்லடம், அவிநாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து (க.ஈ.) .. .. 218—221

தி

திருக்குறள்:
ஆராய்ச்சிக் கூடம், வள்ளுவர் கோட்டம். 377—380

திருவேங்கடம், திரு. பொ. சு.
கலசப்பாக்கம் தொகுதியில் வோல்டேஜ் குறைப்பால் பம்ப்செட் மோட்டார் காயில்கள் தீய்ந்து போவது குறித்து (க.ஈ) 720, 722, 723
சிங்காரவாடி நெசவாளர் கூட்டுறவு சங்கம் செயல்படுதல். .. .. 399—400
வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம், முத்திரை தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் — .. .. .. 416 417—422
வள்ளுவர் கோட்டம், கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமை .. 380

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

திரையரங்குகள்:
நகராட்சிகள் நடத்துதல். 200, 203

தீண்டாமை:
குற்றங்கள். பாதிரிவேடு. 390, 391

தீர்மானங்கள்:
அரசியலமைப்பு [நாற்பத்தி நான்காவது திருத்த] சட்ட முன் வடிவினால் [1977-ம் ஆண்டு] செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல். 222, 270
ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்: கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது குறித்து (த. கோ) 566
பார்க்க—ஒத்திவைப்புத் தீர்மானங்கள்
விதி 22-ஐத் தளர்த்தல் 801, 803

துரை கலியமூர்த்தி, திரு.—
திரையரங்குகள் நகராட்சிகள் நடத்துதல். 200
நீர்த் தேக்கத்தொட்டி, சிதம்பரம் நகராட்சி. 25
பம்புசெட்டுகளுக்கு மின்இணைப்பு, சிதம்பரம் வட்டம். 186
வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாக்கெடுப்பு
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்.
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள் 50
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
வெள்ளாற்றுத் தடுப்புச் சுவர் பற்றிய விவரங்கள், சேத்தியாத் தோப்பு 373

துரை முத்துசாமி, திரு..
அரிசனங்கள் தண்ணீர் எடுக்கத் தடை, பேரூராட்சிக் கிணறு கள்ளக்குறிச்சி அருகில் 704
ஊராட்சி ஒன்றியங்கள், ஜீப்புகளுக்கு டீஸல் இயந்திரங்கள் 19

பக்கங்கள்

து—தொடர்ச்சி.

துரை முத்துசாமி, திரு.—தொடர்ச்சி.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாரி நோய், 411
நிவாரண நடவடிக்கை [க.ஈ.] 412, 413

மின்னிணைப்பு, தண்டராம்பட்டு தொகுதி பெருந்துறைப்பட்டு கிராமம். 376

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

காவல் துறை, தீயணைப்புப் பணிகள் 793, 795

மாநில ஆய்வுத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்.
முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. } 425, 431

வினாத்தாள்கள் மாற்றம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி [த.கோ.] 564, 565

துரை முருகன், திரு—

அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலை நிறுத்தம் வாபஸ், அரசு அறிக்கை குறித்து [த. கோ.] 568

அறிவிப்பு கொடுத்த தீர்மானங்களை எடுத்துக் கொள்ளாமை [த. கோ] .. .. — 717, 719

தேர்வு, எஸ். எஸ். எல். சி., வினாத்தாள்கள் மாற்றம் [ஒ.பி.] 563, 564

வரவு-செலவுத் திட்டம்' 1978-79. வாக்கெடுப்பு:

காவல் துறை, ...
தீயணைப்புப் பணிகள் .. .. .. } 639, 648, 649, 853, 855, 863, 880, 881'

தேர்வுகள்:

எஸ். எஸ்.எல். சி., வினாத்தாள்கள் மாற்றம், [ஒ.பி.] 563, 564

வினாத்தாள்கள் மாற்றம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி [த.கோ.] 564, 565

தொழிலாளர்கள்:

ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழு, உறுப்பினர்கள். 559, 561

பக்கங்கள்

து—தொடர்ச்சி

தொழிலாளர்கள்—தொடர்ச்சி

தினக்கூலி, கோவை நகராட்சி. .. .. 699—700
நலக் கல்வி நிலையம், பணிகள் 207
நலநிதி, மேற்கொள்ளப்பட்ட பணிகள் .. 205—207
பால்வள நிறுவனம், ஊதிய விகிதம் நிர்ணயித்தல் 212—213
போக்குவரத்துக் கழகம், விசேஷப் பயிற்சி .. 208

ந

நடராசன், திரு. ஆ—

தொழிலாளர் நலநிதி, மேற்கொள்ளப்பட்ட பணிகள் 205

போக்குவரத்துக் கழகங்கள், தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்கல் 709

நல்லதம்பி, திரு. தீ. சு—

தமிழாசிரியர்கள், நடுநிலைப் பள்ளிகளில் நியமனம் 693

நாச்சிமுத்து, திரு. க—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு-
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டிடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் .. .. 69—72

நாராயணசாமி முதலியார், திரு. கே.—

அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன் வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) .. .. .. 222—224, 229, 266—269, 270

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 270, 271, 272, 312—/—538

ந—தொடர்ச்சி

நிதி அலுவல்கள்—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

காவல் துறை .. .. .. 574—645, 646—654, 725—796, 813—911

சிறைச்சாலைகள் .. .. 270—316

தீயணைப்புப் பணிகள் .. .. 574—645, 646—654, 725—796, 813—911

நீதி நிர்வாகம் .. .. 270—319

பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்,
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்,
பொதுப்பணிகள்-பணியாளரும் கருவிகளும் இயந்திரச் சாதனங்களும். 46—156

பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்.
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்,
மாநில ஆயத் தீர்வை,
முத்திரைத் தாள்கள்-நிர்வாகம், 413—490

நிலங்கள்—

நிலப்பட்டா உரிமைகள், தாழஞ்சேரி, ரத்து செய்யப்பட்டவை 679

நிலப்பட்டாக்கள், குடியிருப்பு, எடமேலையூர் .. 680—681

நிலநீர்—

வடஆற்காடு மாவட்டம், பாதுகாத்தல் .. 683—687

நிறுவனங்கள்—

பால்வளம், தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதம் நிர்ணயித்தல் .. .. 212—213

நினைவுச் சின்னங்கள்—

வள்ளுவர் கோட்டம், கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமை ... 380

வள்ளுவர் கோட்டம், திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் .. .. 377—380

ந—தொடர்ச்சி

நீக்கம்— 115,715, 717,718, 746,754, 760,791, 792,805, 856

நீதிமன்றங்கள்—

இடமாற்றம், திருநெல்வேலி மாவட்டம் .. 188

பெரிய குளத்தில் நிறுவுவது .. .. .. 186—187

நீர்ப்பாசனம்—

அவியூர் ஏரி, நீர்வரத்துக் கால்வாய் 185

இறைவைப் பாசனத் திட்டம், வேட்டைக் காரனிருப்பு கிராமம் .. .. .. 687—689

சாத்தனூர் அணை, பிரதானக் கால்வாயினைப் பழுதுபார்த்தல் .. .. 681—682

கிணறுகள், அபிவிருத்தி, திருவல்லிப்புத்தூர் .. 2—6

குளங்கள் (ஊராட்சி ஒன்றியங்கள்) தூர் எடுத்தல் .. .. 554—557

நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள் .. 213—215

பெருமாள் ஏரி, மராமத்து வேலைகள் .. 186

மருதையாற்றின் குறுக்கே அணை, உடையார் பாளையம், ... 375

வெள்ளாற்றுத் தடுப்புச் சுவர் பற்றிய விவரங்கள் சேத்தியாத்தோப்பு .. .. .. 373—374

நூல்களும் வெளியீடுகளும்—

விஞ்ஞானபாடப் புத்தகங்கள், தமிழ்நாட்டுப் பாடப் புத்தகக் கழக வெளியீடு 16

ப

பத்திரப் பதிவு :

ஸ்டாம்ப் வெண்டர்கள் கோரிக்கை, திருப்பத்தூர் தாலூக்கா .. .. .. 537—538

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

பண்ணை சேதுராம், திரு. கே—
சுப்பு (திரு. சு.) அவர்கள் மீது (உ.பி.) .. 805
நீதி மன்றங்கள், பெரியகுளத்தில் நிறுவுவது .. 186
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 588
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள் } 300—303

பரமசிவம், திரு. மொ—
ஒழிந்தியாம்பட்டு — கீழ்புதுப்பட்டு பாதை சீரமைப்பு .. .. 557—558

பழனிச்சாமி, திரு. எஸ். என்—
கோவை, பல்லடம், அவிநாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும், பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து (க.ஈ.) 218,219

பழனிமுத்து, திரு. சி—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு·
பாசனம்,
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்—கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள்
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 46,48

பழனிவேல், திரு. நா—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 289—293

பள்ளிகள்—
இந்தி வகுப்புகள் நடத்துதல், மத்திய அரசின் குறிப்பு .. .. 190—195
உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் புலியூர்சாலை, விளவங்கோடு தாலூகா. .. .. .. [illegible]
உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி வகுப்புகள் .. 190
தமிழாசிரியர்கள், நடுநிலைப் பள்ளிகளில் நியமனம் 693—696
துவக்கப் பள்ளிகள், தலைமை ஆசிரியர்களுக்கு பணிப்படி அளித்தல் .. .. .. 696—698

பக்கங்கள்

ப—தொடர்ச்சி

பள்ளிகள்—தொடர்ச்சி.
நகராட்சிப்பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களாக வருதல் .. .. 698—699
நடுநிலைப் பள்ளிகளில் கோடை விடுமுறை, குமரி மாவட்டம் .. .. 11—12
மாநகராட்சி,(சென்னை) பள்ளிகளில் வாசகசாலைகள் 692
ஜவஹர் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர், கையாடல் 189—190

பாண்டியன், திரு. பி. எச்—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்புப்பணிகள் } 601—605
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 285—289

பாலங்கள்—
இரயில்வே மேம்பாலம், இராயபுரம் .. 700
இரயில்வே மேம்பாலம், ஒண்டிப்புதூர் (சிங்காநல்லூர்) .. .. 394—395

பாலகிருஷ்ணன், திரு. சோ—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் } 649

பாலன், திரு. சு—
வரவு—செலவுத் திட்டம், 1978-78, வாக்கெடுப்பு:
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் .. ..
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 48
ஜவஹர் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர், கையாடல் 189

பாலுச்சாமி திரு. அ.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் .. ..
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 122—124

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.

பிற்பட்டோர்—
"படகர்" இனம், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல். .. .. 386—390

புருஷோத்தமன், திரு. து.—
கொத்தவால் சாவடி (சென்னை) இடமாற்றம் .. 384
திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம், வள்ளுவர் கோட்டம். 377
மாநகராட்சிப் (சென்னை) பள்ளிகளில் வாசக சாலைகள் 697
மூர் அங்காடி, (சென்னை) இடமாற்றம் (இரயில் நிலைய விரிவுபடுத்தல் திட்டம்) 16

புஷ்பராஜ், திரு. த.—
வரவு-செலவுத் திட்டம், 1978–79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. .. } 576
விரைவுப் பேருந்துகள், புதுக்கோட்டையிலிருந்து, கோவைக்கு, சென்னைக்கு 562

பொன்னையன், திரு. சி.—
பல்லவன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் உண்ணாவிரதமும் அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் (க. ஈ. அ.) .. .. 406—409, 410
பேருந்துகளில் 'டெக்கோ-மீட்டர்' கருவியைப் பொருத்த உத்தரவிட்டுள்ளமை (ஒ. தீ.) .. 43—45
வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடையும் விவசாயிகளிடையே பதட்டநிலையும் (க. ஈ. அ.) 569—570 571—573

போக்குவரத்து—
பேருந்து சலுகைப் பயணச் சீட்டுகள், இன்ஸ்டிடியூட் ஆப் 'இன்ஜினீயரிங் டெக்னலஜி மாணவர்க்கு அளிக்கப்படாமை. .. .. 708—709
பேருந்து நிலையம், அன்னவாசல் 701
பேருந்து நிலையம், திண்டிவனம், ... 562
பேருந்து வழித்தடங்கள், இராமநாதபுரம் மாவட்டம். .. .. 209—212
விரைவுப் பேருந்துகள், புதுக்கோட்டையிலிருந்து, கோவைக்கு, சென்னைக்கு .. .. .. 562—563

பக்கங்கள்

ம

மணிமாறன், திரு. ஆர்.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. .. } 754, 755—759 760

மணிமாறன், திரு. மா.—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
நீதி நிர்வாகம்
சிறைச்சாலைகள் } 271

மருத்துவமனைகள்—
இ. எஸ். ஐ. மருந்துகள் வழங்கல் .. .. 203—205
தொழிலாளர் நலன், மன்னார்குடி 385

மருதாசலம், திரு. க—
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. .. } 619—623

மருந்துகள்—
இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில். .. .. 203—205

மனைகள்—
வீட்டு மனை, அரிசனங்களுக்கு .. .. 391—393

மனோகரன், திரு. கி.—
என். ஜி. ஓ.க்கள், தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து (அறி) .. .. 156—164
என். ஜி. ஓ. வேலை நிறுத்தம் குறித்து (அ) .. 797—799
ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை பேரவைக்கு அழைத்து வந்ததாக நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து 715
வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
மாநில ஆயத் தீர்வை,
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்,
மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. .. 413, 414, 415, 416, 417, 477—488

பக்கங்கள்

ர—தொடர்ச்சி

ரகுமான்கான், திரு. ஏ.—
வரவு-செலவுத் திட்டம் 1978-79 வாக்கெடுப்பு:—
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் .. .. .. 577—588 738, 739 740 759.

ரமணி, திரு. கு.—
குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள், கோவை நகரம் 195
கைத்தறி நெசவாளர்கள்-முதலாளிகள் ஒப்பந்தம், கரூர். 402
தினக்கூலித் தொழிலாளர்கள், கோவை நகராட்சி 699
மத்தியதரக் குடியிருப்புகளுக்கு அதிக விலை, அண்ணாநகர் 384
மருந்துகள், இ. எஸ். ஐ.மருத்துவ மனைகளில். 203
வரவு செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்,
முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் 414

ல

லத்தீப, திரு. எம். ஏ—
அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினல் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) 255—258
ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை பேரவைக்கு அழைத்து வந்ததாக நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து (ஒ. பி.) .. .. .. 712—716
வரவு செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை, ... 575,577,
தீயணைப்புப் பணிகள் .. .. 763—769 907,908, 909
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள் } 271, 272,

பக்கங்கள்

ல—தொடர்ச்சி

லத்தீப், திரு. எம். ஏ.—தொடர்ச்சி
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு 51, 52,
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் 106—109
பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 47, 48,49,
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்,
முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் .. .. 415—416
விளக்கள், உரிமைப் பிரச்சனைகள்,
ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துச் கொள்ளப் படாதது குறித்து. (த.கோ.) 405

வ

வரதராஜன், திரு. என்.—
வரவு செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள். 271

வரிகள்—
கேளிக்கை வரி, திரைப்படங்களுக்கு விலக்கு, 531—533
விலக்கு, முன்னாள் இராணுவ வீரர்கள் வீடுகள், ''கோவைப்புதூர்'' காலனி. 558

வாசன், திரு. [illegible]—
ஆக்கிரமிப்பு, பழனி நெடுஞ்சாலையில் 39[illegible]
பர்மா அகதிகள், திருச்சியிலுள்ளோருக்கு நிலம் ஒதுக்கியுள்ளமை. 30

வாரியம்—
தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர்கள் நியமனம் 717

பக்கங்கள்

வ—தொடர்ச்சி

விவசாயம்—

கலசப்பாக்கம் தொகுதியில் வோல்டேஜ் குறைப்பால் பம்ப்செட் மோட்டார் காயில்கள் தீய்ந்து போவது குறித்து. (க.ஈ.) 720—723

தொழிலாளர்கள் கூலி, தஞ்சை மாவட்டம், 534—537

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, சிதம்பரம் வட்டம். 186

விற்பனைக் கூடங்கள்—

நியாய விலைக்கடை, நரசிம்மபுரம் கிராமம். 9—10

வின்சென்ட், திரு. எம்.—

வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை,
தீயணைப்புப் பணிகள். 736—743

விஜயராகவன், திரு. பொ.—

குடிநீர் வழங்கல், புதுக்கடை நகரப் பஞ்சாயத்து 385

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 575

விட்டு வசதி—

அண்ணநகர் மத்தியதரக் குடியிருப்புகளுக்கு அதிகவிலை. 384—385

கோவை நகர குடிசை மக்களுக்கு வசதிகள் .. 195—196

வீரப்பன், திரு. ஆர். எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்பு பணிகள் 648

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—

இரயில்வே மேம்பாலம், ஒண்டிப்புதூர் (சிங்காநல்லூர்) 394

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள் 63—69
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள்.
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 153

பக்கங்கள்

வ—தொடர்ச்சி

வேணுகோபால், திரு. த.—

சாத்தனூர் அணை, பிரதானக் கால்வாயினை பழுது பார்த்தல் 681

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் 46
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்
மாநில ஆயத் தீர்வை
பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம்,
முத்திரைத் தாள்கள்-நிர்வாகம்
மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் 415

வேலுச்சாமி, திரு. ஓ. சோ.—

அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல். (தீ) 233—240

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:
நீதி நிர்வாகம்,
சிறைச்சாலைகள் } 282—285

வேலைவாய்ப்பு—

அயல்நாடுகளில், தகவல் நிறுவனம் அமைத்தல். 551—554

தொழிலாளர் துறையில் 383

ஐ

ஜெபமணி, திரு. ர.—

நீதிமன்றங்கள் இடமாற்றம், திருநெல்வேலி மாவட்டம். 188

பேருந்து வழித்தடங்கள், இராமநாதபுரம் மாவட்டம். 209

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
காவல் துறை 630
தீயணைப்புப் பணிகள் 728—736

பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி.

ஜெயராமன், திரு. வே. இரா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு;
பாசனம்
பாசனம் குறித்த மூலதனச் செலவு
பொதுப்பணிகள்-கட்டடங்கள்
பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு கட்டடங்கள்
பொதுப்பணிகள்-பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் 60—63

ஜெயவேலு, திரு. எம். ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை
தீயணைப்புப் பணிகள் 623—627
நீதி நிர்வாகம், } 307—310
சிறைச்சாலைகள் }

ஜேம்ஸ், திரு. ஜே.—

அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்ட முன்வடிவினால் (1977-ம் ஆண்டு) செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங்களுக்கு ஏற்பளித்தல் (தீ) 248—251, 266

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
காவல் துறை } 639, 640
தீயணைப்புப் பணிகள் }
647—648, 813—822, 823, 830, 832
நீதி நிர்வாகம், } 271
சிறைச்சாலைகள் }

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1978 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் முதலமைச்சர் பொப்பிலி இராஜா திரு. ஆர். எஸ். ஆர். ரங்காராவ் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த பொப்பிலி இராஜா திரு. ஆர். எஸ். ஆர். ரங்கா ராவ் அவர்கள் 10-3-1978 ஆம் தேதியன்று மறைந்தது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் துக்கத்தையும் தெரிவிக்கிறது.

அவர் நீதிக் கட்சியின் முக்கியத் தலைவராக இருந்தவர். 1932 ஆம் ஆண்டு, நவம்பர் திங்களிலிருந்து 1936 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும், மீண்டும் 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் வரையிலும் ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்தார்.

அவர் அரசியல் நிர்ணய சபையில் உறுப்பினராக இருந்தவர். ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தராக 1931-இல் இருந்து 1936 வரை இருந்தார். 1962-ல் ஆந்திரச் சட்ட மன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்தார்.

அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையிலும் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும் உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது).

[1978 மார்ச் 11

2. வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினுக்கள் 526-ம் 527-ம் ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வினுக்கள் 506, 507, 508 ஆகியவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி தள்ளிவைக்கப் பெறுகின்றன.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் இறவைப்பாசனத் திட்டம்.

*509 வினு—**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில், வரண்டு கிடக்கும் பம்புசெட்டு கிணறுகளை ஆழ்கிணறு, குழாய் இறவைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : திருவில்லிபுத்தூர் தொகுதியில் நிலநீர் சான்று கிடைத்ததும் வரண்ட கிணறுகளை ஆழப்படுத்த நீண்டகாலக் கடன்கள் வழங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : திருவில்லிபுத்தூர் தொகுதியில் வரண்டு கிடக்கும் பம்புசெட் கிணறுகளை, ஆழ்கிணறுகள் குழாய் இறைவைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும். ஆகவே அரசு விரைவிலே அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நிலவளவங்கியின் மூலமாக 28—2—1977 வரையில் 1,226 புதிய கிணறுகளைத் தோண்ட, பம்பு செட்டுகளை அமைக்க 56.52 லட்சம் ரூபாய் நீண்டகாலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனல் அந்தக் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டுமென விவசாயிகள் அணுகியுள்ளார்கள். ஆனல் நிலநீர் சான்றிதழ் இல்லாததால் கடன்கள் வழங்க இயலவில்லை.

1978 மார்ச் 11]

திரு. க. சுப்பு : திருவில்லிப்புத்தூர் கூட்டுறவுக் கடன் வங்கியின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களை வைத்து வெட்டப்பட்ட கிணறுகளில் தண்ணீர் இல்லை, அப்படி தண்ணீர் இல்லாத காரணத்தால் கொடுக்கப்பட்ட கடன்களை ரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் அரசிடம் இப்போது இல்லை.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னலே கடன்கள் வாங்கி வெட்டிய கிணறுகளில் தண்ணீர் இல்லை. அப்படித் தண்ணீர் இல்லாத கிணறுகளைப் பொறுத்தவரையில் வாங்கிய கடன்களை வசூல் செய்யாமல் நிறுத்திவைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வசூலை வேண்டுமென்றுல் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, பொதுப்படையாக இந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்ட கடன்கள் அந்தக் கிணறுகளிலே சரியான முறையிலே தண்ணீர் இல்லாத அளவிலே இருக்குமாளுல் அந்தக் கடன்களைத் தள்ளிவிடுவதற்கு முன்பே அரசு திட்டமிட்டிருந்ததே, அது இப்போது எப்படி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, ஃபெயில்ட் வெல்ஸ் என்ற முறையிலே கிணறுகள் தோண்டி தண்ணீர் இல்லாதுபோனல் அந்தக் கிணறுகளுக்காகக் கொடுக்கப்பட்ட கடன்களை ஒத்திவைக்க வேண்டுமா வேண்டாமா அல்லது ரத்துசெய்ய வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலித்து ரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டுவதற்காக என்று கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனல் கடன்களை வாங்கி கிணறுகளை வெட்டியபிறகு தண்ணீர் இல்லை. அப்படி தண்ணீர் இல்லையென்று தெரிகிறபோது அந்தக்

கடன்களை ரத்துசெய்ய வேண்டுமே தவிர, இப்படி ஒத்தி வைப்பது சரியல்ல. ஆகவே தண்ணீர் இல்லாத கிணறுகளாக இருந்தால் கொடுக்கப்பட்ட கடன்களை ரத்துசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அதனால் கூட்டுறவுத் துறைக்கு ஏராளமான இழப்பு ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள். என்றாலும் மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, 1972 ஆம் ஆண்டு நடந்த விவசாயிகள் போராட்டத்தையொட்டி அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையே நடந்த ஒப்பந்தத்தின்படி, பலன் அளியாத கடன்களை, அதாவது விவசாயிகள் கடன் வாங்கி கிணறு வெட்டி பலன் அளிக்காமல் இருந்தால் அந்தக் கடன்களை ரத்து செய்வது சம்பந்தமாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையிலே தனியாக நிதி ஏற்படுத்தி அந்த நிதி இதற்குப் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது என்பதை அறிவார்களா? 2-11-1971-க்குப் பின்னால் கடன் வாங்கி பலன் அளிக்காவிட்டால் அது ஈடு செய்யப் படலாம் என்று இருப்பதை, அதற்கு முன்னாலே வாங்கியிருந்தாலும் அது பலன் கொடுக்காமல் இருந்தால் ஈடு செய்யலாம் என்று மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட தேதிக்கு முன்னால் தோண்டப்பட்ட 'ஃபெயில்ட் வெல்ஸ்'-க்கு தண்ணீர் இல்லாத கிணறுகளுக்கு வாங்கப்பட்ட கடன்களை ரத்து செய்வதா என்பதைப் பரிசீலித்து, அது தேவையில்லை என்று ஏற்கனவே முடிவெடுத்திருக்கிறது.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, 'ஃபெயில்ட் வெல்ஸ்'-க்கு வாங்கப்பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று, வங்கியின் விதிமுறைகளிலேயே அந்தக் கடன்களை

ரத்து செய்யலாம் என்று இருக்கிறது. அந்த விதிமுறைகளை இந்த அரசாங்கம் எப்பொழுது மாற்றியது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டுக்குப் பிறகு தோண்டப்பட்ட கிணறுகள், அவைகளிலே தண்ணீர் இல்லாமல் இருக்குமேயானால் அவைகளுக்கு ரத்து செய்ய அரசாங்கம் முடிவெடுத்து இருக்கிறது. 1971-க்கு முன்னாலே தோண்டப்பட்ட கிணறுகளுக்கு, தண்ணீர் இல்லாமல் இருந்தால் அவைகளுக்குக் கடனை ரத்து செய்ய வேண்டியதில்லை என்று இந்த அரசு முடிவெடுக்கவில்லை, அந்த அரசு முடிவெடுத்தது.

திரு. வீ. சின்னையா: தலைவரவர்களே, நிலவள வங்கிகளில் வாங்கப்பட்ட கடன்களைக் கொண்டு வெட்டப்பட்ட கிணறு பாறையாகிவிட்டது. அப்படிப் பாறையாகி இருக்கின்ற காரணத்தினால் அதிகாரிகள் பார்வையிட்டு அந்தக் கடன்களை ரத்து செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, எத்தனை அடிகள் வரை தோண்டிய பிறகு தண்ணீர் இல்லை என்றால் 'ஃபெயில்ட் வெல்ஸ்' என்று நிர்ணயிக்கப்படுகிறது? சில கிணறுகளை ஓரளவு ஆழப்படுத்தியவுடன் தண்ணீர் இல்லை என்றாலும், மேலும் கொஞ்சம் ஆழப்படுத்தினால் தண்ணீர் கிடைக்கும் என்றாலும் அதற்கான நிதி வசதி இல்லாமல் விவசாயிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிணறுகளுக்கு அரசு மானியம் கொடுத்து விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, கிணறுகள் தோண்டி அவைகளிலே தண்ணீர் வரவில்லை என்றால் மீண்டும் ஆழப்படுத்தினால் ஒருவேளை தண்ணீர் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்த்து தேவைப்பட்டால் அதற்கு வேண்டுமென்றால் இன்னும் கூடுதலான கடன் கொடுப்பதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

[1978 மார்ச் 11

திரு. வே. இரா. ஜெயராமன்: தலைவரவர்களே, நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் புதிதாகக் கடன் வழங்க 'ஸ்பேசிங் கிரைட்டீரியா'-வை அவர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு 'ஸ்பேசிங் கிரைட்டீரியா'வை ரிலாக்ஸ் செய்ய உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, அது நிலநீர் துறையின் சிபாரிசுளைப் பொறுத்தது.

வேதாரண்யம் காட்டில் மான் வேட்டை.

*510 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வேதாரண்யம் காட்டுப்பகுதியில் மான் வேட்டையை கட்டுப்படுத்த அரசு கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) கடந்த ஆண்டுகளில் இது சம்பந்தமான வழக்குகள் ஏவையேனும் பதிவு ஆகியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: (அ) வேதாரண்யம் காட்டுப் பகுதிகளில் மான்களை வேட்டையாடுவதிலிருந்து காக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வனச் சரகரைத் தவிர, இரண்டு வனப் பணியாளர்களும், இரண்டு வனப் பாதுகாவலர்களும் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

(ஆ) கடந்த ஆண்டுகளில் இரண்டு திருட்டு வேட்டை வழக்குகள் பதிவாகியுள்ளன.

(இ) 1974-75-ல் ஒரு வழக்கில் ஒரு மானை சுட்டதாக கண்டு பிடிக்கப்பட்டது. அந்த வழக்கில் ரூபாய் 1,200 அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது. 1975-76-ல் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு வழக்கில் குற்றவாளியை நீதிமன்றம் விடுவித்தது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற காடுகளில் வேதாரண்யம் காடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. இராவணனை வீழ்த்தச் சென்ற

1978 மார்ச் 11]

இராமன் அந்தக் காட்டு வழியாகச் சென்றதாக அங்கு பாதம் உள்ளது. இவ்வளவு சிறப்புமிக்க, பொன்மானைத் தேடிச் சென்ற இராமன் அந்த வழியாகப் போனதாக கூறப்படும் வரலாறு நிறைந்த அந்தக் காட்டை மேம்படுத்தவும், அதைப் பாதுகாக்கவும், அங்குள்ள மான்களை மேலும் வளர்க்கவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் வரலாறு என்று சொன்னார்கள். அது வரலாறு என்று எனக்குத் தெரியாது, அது புராணக் கதை என்று எல்லோரும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, இராமனுடைய பாதம் இருக்கிறதோ இல்லையோ அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

(முற்பகல் 9-10)

இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல், கோடிக் கரை காட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு பல்வேறு அறிக்கைகளிலே எடுத்துச் சொல்லி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1977-78, 1978-79 ஆம் ஆண்டுகளில் ரூ. 3.5 இலட்சம் செலவில் சில மேம்பாட்டு வேலைகள் மேற்கொள்ள கருதப் பட்டுள்ளது. அதிலே, ஒன்று ரூ. 10,000-க்கு படகு ஒன்று வாங்குவதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. அதைப் போல் ஆராய்ச்சியாளர்கள், மற்றும் ஆராய்ச்சிக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 1,80,000 ஒதுக்குவதற்கான ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதே போல், கோயிலுக்குச் சொந்தமான தனியார் நிலங்களைக் கையகப்படுத்த ஏறத்தாழ ரூ. 1.67 இலட்சம் ஒதுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, மொத்தம், ரூ. 3.57 இலட்சம் ஒதுக்கி, அதை மேலும் மேம்படுத்துவதற்கான திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அம்பிகாபதி அவர்கள் வரலாறு தெரிந்தவர், புத்தகமே எழுதியவர். ஏன், இங்கே அதைக் கேட்டார் என்று தெரியவில்லை.

[1978 மார்ச் 11

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த வேதாரண்யம் காட்டுப்பகுதியில் என்னென்ன வகையான மான்கள் இருக்கின்றன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, புள்ளி மான்கள் இருக்கின்றன, நீர், மான்கள் இருக்கின்றன. அதோடு, நீர்ப் பறவைகளும் ஏராளமாக இருக்கின்றன.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மான்களை வேட்டையாடுவதைத் தடுக்கின்ற சட்டம் எந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகிறது. இது எந்த எந்த மான்களுக்குப் பொருந்தும்? இப்பொழுது நிறைய மான் தோல்களை வெளியே விற்கிறார்களே, அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மான்களை மாத்திர மல்ல, வன விலங்குகளைச் சுடக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் எந்த ஆண்டு முதல் அமுலாக்கப் படுகின்றது என்று எனக்கு நினைவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அந்த ஆண்டைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினால், தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரத் தயாராக இருக்கிறேன். எந்த வன விலங்குகளைச் சுட்டாலும் அது சட்டப்படி குற்றமாகும்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, வேதாரண்யம் டீர்சாங்ச்சுவரி ப்ரொட்டக்டட் ஏரியா என்று பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: அதுபற்றிய குறிப்பு என்னிடம் இப்பொழுது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன். இது பாதுகாக்கப்பட்ட ப்ரொட்டக்டட் ஏரியாவிலே வருகிற—காடாகத்தானிருக்க வேண்டும்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, கோடிக் கரைக் காட்டில் உள்ள மான்களைப் பற்றிப் பேசுகிறோம். மான்கள் அவசியம்தான். அதே நேரத்தில், கோடிக் கரை காட்டில், ஏழை விவசாயிகள் மாடுகளை விடுகிறார்கள். இந்தக் காட்டை

1978 மார்ச் 11]

மாடுகள் வளர்க்க விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். அந்த மாடுகள் புயலால் அதிகமாகச் செத்திருப்பதாகவும் கேள்விப் படுகிறோம். அப்படிச் செய்திருந்தால் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா? அப்படி விடக்கூடிய மாடுகளைப் பாதுகாப்பாக வளர்க்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மான்கள் தாராளமாக வாழ்கின்ற காடுகளில் மாடுகள் இறப்பது என்பது ஆச்சரியமாகத்தானிருக்கிறது. ஏனென்றால், பொதுவாக, மான்கள் மாடுகளை அடிப்பதில்லை.

ராதா நரசிம்மபுரத்தில் நியாயவிலைக் கடை.

*511 வினா—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மன்னார்குடி தாலூக்கா 129/1 ராதா நரசிம்மபுரம் கிராமத்தில் அரிசி மற்றும் இதர அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க நியாய விலைக்கடை ஒன்று திறக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: நியாயவிலைக் கடைகளைத் திறக்கும் திட்டத்தை முதற்கட்டமாக நெல்லை, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களுக்குப் படிப் படியாக விரிவாக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, 16,000 கடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபொழுது, நெல்லை, குமரி என்று அறிவிக்கப்படவில்லை. அனைத்து இடங்களிலும் என்று எதிர்பார்த்தோம். அவசரமாக, தஞ்சை மாவட்டத்திலே துவக்குவதற்கும், அனைத்துக் கிராமங்களிலும் துவக்குவதற்கும் அரசாங்கம் வேகமாக, துரிதமாக, அவசரமாக நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட

இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 16,000 நியாயவிலைக் கடைகள் இருப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்றுதான் சென்ற ஆண்டு நிதி-நிலை அறிக்கையிலே நிதியமைச்சரும், ஆளுநரும் தெரிவித்தார்கள்.

ஏற்கனவே, கூட்டுறவுத் துறை, உணவு வழங்கு துறை மூலமாக 9,000 கடைகள் இந்த மாநிலத்திலே இயங்கி வருகின்றன. அந்தக் கடைகளில், அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மாத்திரம் இப்பொழுது விநியோகம் செய்யப் படுகின்றன. இவைகளையெல்லாம் மாற்றி, அவற்றையே நியாய விலைக் கடைகளாக மாற்றி, பொது விநியோக முறையிலே அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதோடு, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பண்டங்களையும் அங்கே விற்க ஏற்பாடுகளைச் செய்யும் என்ற அடிப்படையில்தான் 16,000 கடைகளை இந்த அரசு கிராமங்களிலே திறக்கும் என்று அறிவித்தது. மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏற்கனவே, கூட்டுறவுத் துறை மூலமாகவும், அதே போல், உணவு வழங்கு துறை மூலமாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு கடைகளின் மூலம் இன்றைய தினம் அத்தியாவசியப் பொருள்களை வழங்குவது, நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதைப் போல், திருநெல்வேலியில் ஏறத்தாழ 300-க்கும் அதிகமான நியாயவிலைக் கடைகள் ஏற்கனவே துவங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்த முயற்சியாக, மதுரை, முகவை, குமரி மாவட்டங்களில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்.

(பல உறுப்பினர்கள் கையை உயர்த்திக் கொண்டிருந்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மன்னார்குடி தாலுக்கா ராதா நரசிம்ம புரத்தில் நியாய விலைக் கடை திறக்க உத்தேசம் உண்டா என்பது கேள்வி. அமைச்சரவர்கள் அதற்கு மட்டும் பதில் சொல்லியிருக்கலாம்.

நடுநிலைப் பள்ளிகளில் கோடை விடுமுறை.

* 512 வினா—**திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகளில் இரண்டு மாத கோடை விடுமுறையாகவும், நெல்லை மற்றும் ஒரு சில மாவட்டங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் 1 மாத கோடை விடுமுறையும் விடப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இவற்றை ஒரே சீராக்கி செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) அனைத்து நடுநிலைப் பள்ளிகளும் கல்வி ஆண்டில் 220 நாட்கள் செயல்பட வேண்டும். பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளின் சூழ்நிலையைப் பொருத்து அந்தந்த பகுதிகளில் இயங்கும் பள்ளி களுக்கு கோடை விடுமுறை உள்ளிட்டு விடுமுறைகள் வசதிக் கேற்ப அனுமதிக்கப்படுகிறது. எனவே இதனை ஒரே சீராக்கி செயல்படுத்த அவசியமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாவட்டங்களை விட குமரி மாவட்டத்தில் எல்லா சட்ட திட்டங்களும் மாறுபட்டிருக்கின்றன. குறிப்பாக கல்வித் துறையை பொறுத்தமட்டில் மற்ற இடங்களில் 30 நாட்கள் விடுமுறை இருக்கிறது. ஆனால் குமரி மாவட்டத்தில் 60 நாட்கள் விடுமுறை விடப்படுகிறது. அதனாலே அந்தப் பகுதி மக்கள் கல்வித்தரம் கெடும் என்ற காரணத்தினால் அதை மாற்றி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, வேலை நாட்கள் 220 இருக்க வேண்டும் என்பது அரசினுடைய ஆணை. அதற்கேற்ப அவர்கள் விடுமுறையை விடும் உரிமையை தந்திருக்கிறோம். இதனால் கல்வி பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராமன் : தலைவர் அவர்களே, கொடைக் கானல், ஊட்டி, ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள ஆங்கிலப் பள்ளிகளில், இங்கிலிஷ் கான்வென்டுகளில் ஜனவரியிலிருந்து

ஜனவரி வரை என்று கல்வி ஆண்டுகள் உள்ளன. அதை மாற்றி ஜூன் முதல் ஜூலை வரை என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதா? அப்படி இருந்தால் எப்போது முதல் அமலுக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மாணவர்கள் ஒரு ஆண்டுக்குத் தேவையான படிப்பு நாட்களில் இடைக்காலத்தில் லீவு எடுக்காமல், ஒழுங்காக 220 நாட்களும் ஆஜராகி விடுவதால் லீவுகள் அதிகமாகி வருகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் நடுநிலைப் பள்ளிகளில் அரையாண்டுத் தேர்வு முடிந்தபிறகும், கிறிஸ்து பிறப்புக்கும் புதுவருட லீவும் சேர்த்து 10 நாட்களுக்குத்தான் லீவு விடுகிறார்கள். அதைக் கூட்டி 20 நாட்களுக்கு லீவு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த உரிமையை நாம் பள்ளிகளுக்குத் தந்திருப்பதன் மூலமாக அங்கேயே அவர்கள் நிறைவு செய்து கொள்ளலாம். 220 நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இட ஒதுக்கீடு.

* 513 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கு பி. டி. பயிற்சியில் இடஒதுக்கீட்டின் சதவீதத்தினை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

* 514 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில், பணிபுரியும் ஆசிரியர் களுக்கென குறுகியகால B.T., பயிற்சி அளிக்கும் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

(முற்பகல் 9-20)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாக பள்ளிக்கூடங்களில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கிற ஆசிரியர்களுக்கு பி. டி. பயிற்சியில் இட ஒதுக்கீட்டின் சதவிகிதத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பள்ளிகளின் தேவைகளைப் பொறுத்து அது பரிசீலிக்கப்படும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்கள் பி. டி. பயிற்சி பெறுவதற்காக ஷார்ட் டர்ம் கோர்ஸ் குறுகியகால பயிற்சி முறை அவர்களுக்கு அனுமதிக்கப் பட்டு இருந்தது. இப்போது அது நீக்கப்பட்டு இருக்கிறது. அதனால் ஆசிரியர்கள் மிகவும் தொல்லைக்குள்ளாக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, அந்தக் குறுகியகால பயிற்சிக்கு தேர்ந் தெடுக்கப்படுகிறவர்களில் இட ஒதுக்கீடு குறைத்தாகிலும், அந்த 6 மாத படிப்பை அவர்கள் பெறுகிற வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்களுக்கு குறுகியகால பயிற்சி வசதி அளிப்பதன் மூலம், அவர்கள் அதை முடித்துவிட்டு வந்தபிறகு, பி. டி. ஆசிரியர் பதவி தரவேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்படக்கூடும். அவர்களில் பெரும்பாலோர், வரலாறு போன்ற பாடங்களை எடுத்து தேறியிருப்பதால், அது போன்ற பாடங்களில் படித்து பட்டம் பெற்ற பி. டி. ஆசிரியர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதால், இது குறித்து பரிசீலிக்க வேண்டிய தேவையில்லை.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஹையர் கிரேடு, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் படிப்படியாக B.A., B.T படித்து தேர்வு பெற்ற பின் முன்பிருந்த அந்நிலையிலேயே பணிபுரிந்து கொண்டு இருந்தால், பி. டி. ஆசிரியர்கள் பதவி காலியாகும்போது, அப்படிப்பட்டவர்களுக்கு முதலிடம் தர அரசு முன்வருமா?

[1978 மார்ச் 11

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரே நிர்வாகத்தில் இப்போது இருக்கின்ற ஆசிரியர்கள் பி.டி. படித்தவர்களாக இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு முதல் இடம் தரப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, பணியில் இருக்கும் ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதால் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய பிரச்னை வருவது இல்லை. குறுகியகால பயிற்சி அவர்களுக்கு இல்லாத காரணத்தால், முன்பு அவர்கள் 6 மாத காலம் லீவ் எடுத்துக்கொண்டு சென்று படித்து வந்தார்கள் என்றால் இப்போது அதிகமான அளவிற்கு லீவ் எடுத்துக்கொண்டு, அதைப் படிக்க வேண்டியிருக்கிறது. அதனால் அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்குக் குறுகிய கால பயிற்சி முறை கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தக் குறுகியகாலப் பயிற்சி ரத்து செய்யப்பட்டு பல நாட்கள் ஆகிவிட்டன. இப்போது தேவை இல்லை என்ற காரணத்தால் மறுபடியும் துவக்க வேண்டிய நிலையில் இல்லை. தேவை இருக்கும் போது அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ரெ. வீ. சவுந்திராஜன் : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் ஏறத்தாழ 8,000 பேருக்குமேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையில் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியை சில காலம் நிறுத்தி வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, என்னுடைய நிலைக்கு அவர்கள் நல்லாதரவு தந்ததற்கு நன்றி.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, பி.டி. படித்தவர்கள் இளநிலை ஆசிரியர்களாகப் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு பி. டி. ஆசிரியர்கள் ஊதியம் அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, செய்கிற வேலைக்குத் தகுந்தாற்போல் சம்பளம் தரப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் படிப்புக்கு ஏற்ற சம்பளம் தர முடியாது.

978 மார்ச் 11]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, பள்ளிக்கூடங் ளில் மாணவர்கள் மட்டும் லேட்டாக வருவது இல்லை. வாத்தியார் ளும் லேட்டாக வருகிறார்கள். ஆகவே, வாத்தியார்களுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கேட்கிற கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

திரு. மி. வின்செண்ட் : தலைவரவர்களே, எத்தனையோ பி. டி. ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். தற்போது 10 பிளஸ் 2 வந்து இருக்கிற காரணத்தால், பி. டி. படித்துவிட்டு இருக்கும் ஆசிரியர்கள் 9—10 வகுப்புக்கு மட்டும் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருப்பதால், இரண்டு ஆண்டுகளுக்குத்தான் அவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலை இருக்கும். ஆகவே, 6-வது வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரை பாடம் சொல்லிக் கொடுக்க பி. டி. ஆசிரியர்களை நியமித்து, அவர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், அந்த வகையில் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது புதிய ஆட்களை வேலைக்கு எடுக்கக்கூடிய நிலைமை அதிகமாக இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. ஆனால் இன்னும் சில நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இல்லாத நிலை இருக்கிறது. பட்டதாரி ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கும் இந்த நேரத்தில், அந்த ஆணையை சரிவர அமல் நடத்தி, நடுநிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது குறித்து தனிக்கேள்வி போடவும்.

[1978 மார்ச் 11

விஞ்ஞான பாடப் புத்தகங்கள்.

*515 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டுப் பாடப் புத்தகக் கழகத்தினால் வெளியிடப் பட்ட விஞ்ஞானப் புத்தகங்கள் எந்தவிதப் பயனின்றி வீணாகக் கிடக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

மூர் அங்காடி இடமாற்றம்.

*516 வினா—திரு. து. புருஷோத்தமன் திரு. என். கிட்டப்பா:—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மூர் அங்காடி இருக்குமிடத்தை இரயில் வேக்குக் கொடுத்துவிட அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மூர் அங்காடி எந்த இடத்திற்கு மாற்றப் படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) சென்னை மத்திய இரயில் நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்கு சென்னை மூர் அங்காடியை அடுத்துள்ள சில நிலங் களையும், அதைத் தவிர மூர் அங்காடி தற்போது இருக்கும் இடமும் தேவைப்படுகிறதென்று தென் பிராந்திய இரயில்வே நிர்வாகம் கேட்டிருக்கிறது. இப்பொருள் அரசின் பரிசீலனை யிலிருந்து வருகிறது.

(ஆ) இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, சென்னை மாநகரிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மூர் அங்காடி இருந்துகொண்டிருக்கிறது. அந்த மூர் அங்காடி இருக்கும் இடத்தை இரயில்வே துறை கேட்பதை இந்த அரசு மறுத்து மூர் அங்காடி அந்த இடத்திலேயே இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

1978 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இரயில்வே நிர்வாகம் கேட்டிருக்கிறது. அதற்கு மாற்று இடம் தேவைப்படு கிறது. மாற்று இடம் எது என்று இன்னும் முடிவு செய்யப் படாமல் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாற்று இடம் எது என்று இன்னும் முடிவு செய்யப்படாமல் இருப்பதாகச் சொன்னார்கள். மாற்று இடங்கள் எவை எவை பரிசீலனையில் இருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, **விவரம் இல்லை.**

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இப்போது மிருகக்காட்சி சாலை இருக்கக்கூடிய இடத்தையும் இரயில்வே இலாகா கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த இடத்தை கிரயமாகக் கொடுப்பதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? அல்லது வேறு இடம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூர் அங்காடி இருக்கும் இடத்திற்கு அருகிலிருக்கும் அசோக் விஹார், எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் ஒரு பகுதி, மிருக காட்சி சாலை இருக்கும் இடம் ஆகியவைகளுக்கு 4 கோடியே 89 ஆயிரம் ரூபாய் அரசு நிர்ணயித்திருக்கிறது. அதைக் கொடுத்துவிட்டு அந்த இடங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு தெரிவித்திருக்கிறது. மூர் அங்காடிக்கு இன்னும் மாற்று இடம் முடிவாகவில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி தவிர அங்கு வரலாற்று சிறப்பு வாய்ந்த 'மை லேடீஸ் கார்டன்', இருக்கிறது; தென்னிந்திய விளையாட்டுக் கழகம் இருக்கிறது; ஆந்திரா சபை இருக்கிறது. இப்பேர்ப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க இடங்களை இரயில்வே இலாகாவினர் கேட்டிருக்கிறார்களே? அவைகளுக்கு மாற்றும் இடம் தர அரசு முடிவு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்ட இடங்களை மட்டும்தான் கேட்கிறார்கள்.

திரு. நீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி பற்றி ஏற்கனவே இரயில்வே இலாகாவுக்கு அதை விட்டுவிட்டு, மாற்று இடத்தை எடுத்துக் கொள்ளும்படி அரசாங்கம் கார்ப்பரேஷனுக்கு ஒரு தாக்கீது அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா? அப்படி இருந்தால் ஏன் இன்னும் மூர் அங்காடி இடத்தைக் கேட்கிறார்கள்? இப்போது பரிசீலனையில் இருப்பது ஏற்கனவே வந்த அறிக்கையா அல்லது புதிதாக வந்த அறிக்கையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூர் அங்காடி இருக்கிற இடத்தைக் கேட்கிறார்கள் என்ற விவரம்தான் இருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, இந்த மூர் அங்காடி மாநகராட்சிக்கு வருவாய் தரக்கூடிய இடம். அதை ஒட்டியுள்ள சுற்றுப்புற பகுதிகளில், நடைபாதைகளில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் நிறைய கடைகள் இருக்கின்றன. அந்த கடைகளில் இருந்து கார்ப்பரேஷனுக்கு வரக்கூடிய வருமானத்தை தனியார் வசூல் செய்கிறார்களா அல்லது மாநகராட்சி குத்தகைக்கு விட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரங்கநாதன், தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள். இது மூலக் கேள்வியில் வராது.

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, மற்ற இடங்களில் கிடைப்பதை விட இந்த மூர் அங்காடியில் குறைந்த விலைக்கு சில பொருள்கள் கிடைக்கின்றன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இது, இரயில்வே நிர்வாகத்தை விரிவுபடுத்துவதற்காக மூர் அங்காடியை கேட்பது பற்றியது.

திரு. ப. சந்திரன்: தலைவரவர்களே, சென்னைக்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் மூர் அங்காடிக்கு வந்து பொருட்களை வாங்குகிறார்கள். ஆகவே, பயணிகள் எளிதாக பொருள்களை வாங்குவதற்கு வசதியாக இந்த மூர் அங்காடியை சென்னை கடற்கரையில் அமைக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதுபற்றி பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் முதல்வர் இருக்கையில் அமர்ந்திருந்தார்.)

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. சட்ட அமைச்சர் எப்போது முதலமைச்சர் ஆனார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி தங்களுக்கு ஏன அவ்வளவு அக்கறை? அமைச்சர் வரிசையில் ஏதாவது ஒரு இடத்தில் உட்காரலாம்.

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIAR: I was having conversation with the Deputy Speaker. Therefore I happened to get situated there.

ஒன்றிய ஜீப்புகளுக்கு டீஸல் இயந்திரங்கள்.

*317 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஜீப் வாகனங்களுக்கு டீஸல் இயந்திரங்கள் அமைத்திடும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஜீப்களுக்கு பெட்ரோல் இந்த அளவுதான், அதாவது மாதம் 150 லிட்டர்தான் போட்டுக்கொள்ள வேண்டுமென்று ... இருப்பதால், அந்த ஜீப்களுக்கு டீஸல் எஞ்சின் பொருத்... ...யாகப்படுத்திக் நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக மலைப் ப...றுப்பினர் முன்னுரிமை அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இ...ான் ஒரு மாதத்தில் ஜீப்களுக்கு டீஸல் இயந்திரங்கள் பொரு...

(முற்பகல் 9-3

[1978 மார்ச் 11

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, இன்று பெட்ரோல் விலை மிக அதிகமாக கூடிவிட்ட காரணத்தால் பெட்ரோல் இவ்வளவு தான் தரப்படும் என்று பி. டி. ஓ.-வுக்கு உத்தரவிட்டுவிட்டார்கள். இவ்வாறு குறைந்த அளவு பெட்ரோல் சப்ளை செய்கின்ற காரணத்தால் அவர்கள் அங்கு இருக்கக்கூடிய பள்ளி போன்ற ஸ்தாபனங்களுக்குச் சென்று சூப்பர்வைஸ் செய்ய முடிவதில்லை. அதன் விளைவாக பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் இவைகளுக்கு டீஸல் என்ஜின் பொருத்த வேண்டுமென்றால் 16,000 ரூபாய்தான் ஆகும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் கூட குறிப்பிட்டார்கள். இதைச் செய்தால் மிக்க நலமாக இருக்கும். ஆரம்ப மூலதனம் கூட அதிகமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஆகவே இதைச் செய்ய அரசு முன்வருமா என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் தயவு செய்து சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஒரு கேள்வி கேட்கிற நேரத்தில், மூன்று கேள்விகள் கேட்டிருக்கலாம். அவர்கள் சுருக்கமாக கேட்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, கேள்வி எண்ணிக்கை எவ்வளவு என்பது முக்கியமல்ல. அதன் கருத்துத்தான் முக்கியம். அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினால்தான் சொல்கிறேன். டீசல் உபயோகிப்பது மிகச் சிக்கனமாக இருக்கும். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் மாண்புமிகு முதலமைச்சருடன் கலந்து ஆலோசித்து இதை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு:·புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதற்கு சுற்றுலாப் நாடுக்கப்பட்ட ஜீப்புகளில் இனிமேல் அந்த டீசல் வாங்குகிறார்கள். பொருத்துவது என்பது இயலாது. ஆனால் வாங்குவதற்கு வசதி ...ரத்து ஓரளவு சரியாக இருக்கும் ஊராட்சி ...க வாகனங்கள் வழங்கப்படக்கூடிய நேரங் கடற்கரையில் அமைக்க ...ன்ஜின் பொருத்தப்பட்ட ஸ்டாண்டர்டு கிறதா? ...ன்று அரசு கருதுகின்றது.

1978 மார்ச் 11]

திரு. சி. ராமநாதன் : தலைவரவர்களே, இப்போது ஓடும் இந்த ஜீப்பிலேயே இந்த டீசல் என்ஜின்களைப் பொருத்தலாம் என்று சொல்கிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால் ஏன் ஆவன செய்யக் கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, உள்ளாட்சித் துறைகளுக்கு இனிமேல் வழங்கும்போது ஸ்டாண்டர்டு 120 வாகனங்கள் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்த வாகனங்கள் விலை 57 ஆயிரம் ரூபாயாக இருக்கிறது. ஆனால் ஏற்கனவே உள்ள ஜீப்புகளுக்குப் புதிதாக டீசல் என்ஜின் பொருத்த வேண்டுமென்றால் 16 ஆயிரம் அல்லது 18 ஆயிரம் ரூபாய்தான் ஆகும். ஆகவே பொருளாதாரத்தைப் பொறுத்து பழைய வண்டிகளிலேயே டீசல் என்ஜினைப் பொருத்துவதற்கு அரசு முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அத்தனை ஜீப்புகளுக்கும் இயந்திரங்களை மாற்றி அமைப்பது என்பது அவ்வளவு சிக்கனமாக இருக்காது. ஓரளவு சாலைப் போக்குவரத்து சரியாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாத்திரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையைப் பெற்று அத்தகைய வான்களை வழங்கலாம் என்று அரசு கருதுகிறது.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிய துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் மொத்தத்தில் அருமையாக பதில் சொல்லிவிட்டார்கள். ஆகவே தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு செ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் எவ்வளவு பெட்ரோல் வேண்டுமானாலும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பது சரியல்ல. இவ்வளவுதான் ஒரு மாதத்தில் உபயோகிக்க வேண்டுமென்ற லிமிட் ...

(விடை இல்லை.)

[1978 மார்ச் 11

கள்ளக்குறிச்சி பேரூராட்சி

*518 வினு—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது குறித்து ஒரு செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்னுல் அந்தப் பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் யார் யார் நகராட்சியில் பணிபுரிய இசைகிருர்கள் என்பது கேட்டு அறியப்படுமா? அவ்வாறு கள்ளக்குறிச்சியில் எந்தெந்த ஆசிரியர்கள் பணிபுரிய விரும்புகிருர்கள் என்று தெரிந்த பிறகு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சியாக மாற்றுவது என்பது இன்னும் முடிந்த முடிவல்ல. அது பரிசீலனையில்தான் இருக்கிறது. அது ஒன்றியம் தரக்கூடிய ஒத்துழைப்பு, பேரூராட்சி தரக்கூடிய ஒத்துழைப்பு, இவைகளினுடைய தீர்மானங்கள் ஆகிய இவற்றை ஒட்டித்தான் அரசு முடிவு செய்யும்.

மாநகர வளர்ச்சித் திட்டம்

*519 வினு—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரப் பகுதியின் பெருந்திட்டம் விரிவான வளர்ச்சித் திட்டங்களாக பல பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

(இ) இதில் இதுவரை அரசு அங்கீகாரம் அளித்துள்ளவையின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

1978 மார்ச் 11]

(ஆ) வளர்ச்சி சீரானதாக அமைய விரிவு வளர்ச்சி திட்டங்களின் துணையோடு முழுமைத் திட்டம் செயல்பட சென்னை நகரம் 99 திட்டக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றிற்கும் தனியான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட இருக்கிறது.

இத்திட்டத்தில் மனைக்கான நிலப்பயன் தவிர, புதிதாக அமைக்கப்பட இருக்கும் தெருக்கள், நேர்பாடு வரம்பு நிர்ணயிக்கப்பட்ட தெருக்கள், அகலப்படுத்தப்பட வேண்டிய தெருக்கள், தொடர் கட்டிடங்கள் அனுமதிக்கப்படக்கூடிய பகுதி, பொருளாதாரப் பின்னடைவு பெற்றோர்க்கான குடியிருப்புகளுக்கான பகுதி மற்றும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் அனுமதிக்கப்படக்கூடிய பகுதிகளையும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

(இ) இதுவரை 38 பகுதிகளுக்கு விரிவு வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் நோக்கத்தை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் வெளியிட்டு, அதில் 22 திட்டங்களைப் பதிப்பிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. 15 திட்டங்கள் பெருநகர் வளர்ச்சி குழும அங்கீகாரம் பெற்று அரசினரின் இறுதி ஒப்புதலைப் பெற இருப்பதால் எந்த ஒரு விரிவு வளர்ச்சித் திட்டமும் இதுவரை அரசின் அங்கீகாரம் பெறவில்லை.

திரு. மு. அரங்கநாதன் : இந்தப் பெருநகர் திட்டத்திற்கு மாநகராட்சியிலிருந்து 180 கோடி ரூபாயில் ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து அரசுக்கு அனுப்பியிருந்தார்களே, அது எந்நிலையில் உள்ளது? இப்போதுள்ள பெருநகர் திட்டத்திற்கு உலக வங்கி எவ்வளவு கடன் கொடுக்கிருர்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்வி, திட்டம் பல பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதைப்பற்றி. பிரிக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : சென்னை நகரில் விரிவடைந்துவரும் மக்கள் தொகையைக் கணக்கில்கொண்டு இந்தத் திட்டத்தோடு மாஸ்கோ, லெனின்க்ராட்-ல் இருப்பதுபோன்று பாதாள ரெயில்வே போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கான முறையில் அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 11

திரு. தி. சு. நல்லதம்பி: இப்பெருநகர் திட்டம் காரணமாக சென்னை நகரில் வசிக்கிற நடுத்தர மக்கள் அல்லது பிற்பட்ட மக்கள் சிறிய வீடுகள் கட்டிக்கொள்ள பல சங்கடங்களும் தொல்லைகளும் ஏற்படுவதாக பொதுவாகப் பேசப்படுகிறதே, அதைப் போக்குவதற்கு அமைச்சரவை ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி, சின்னசேலம் குடிநீர்த் திட்டம்

*520 வினா—**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் :—** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியில் இருந்து குடிநீர் கொண்டுவருவதற்கான திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்தில் சின்னசேலத்தையும் இணைத்து செயல்படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) தற்போது இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : கள்ளக்குறிச்சி பேரூராட்சி மணிமுக்தா நதியிலிருந்தும், சின்னசேலத்திற்கு கோமுகி நதியிலிருந்தும் குடிநீர் வசதி பெற குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து ஆய்வு செய்யப்பட்டதா ? அப்படி ஆய்வு செய்யப்பட்டது என்னவாயிற்று ? சின்னசேலம், கள்ளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் எவ்வளவுதான் புயல், வெள்ளம் ஏற்பட்டாலும் இன்னும் ஆறு மாதத்திற்குள்ளாக அங்கே குடிநீர் பஞ்சம் நிச்சயமாக வரும் என்ற நிலைதான் இருக்கிறது. எனவே எவ்வளவு விரைவில் அத்திட்டம் முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சின்னசேலம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கென விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு நீர் ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்பட்டு, இறுதியில் கோமுகி ஆற்றில் கீழ் அணைக்கருகில் தலைமைப் பீடம் அமைத்து

1978 மார்ச் 11]

நகருக்கு வேண்டிய குடிநீரைப் பெறலாம் என கருதப்பட்டது. எனினும், இவ்விடத்திலிருந்து கிடைக்கப்பெறும் நீரின் அளவு, மற்றும் நீரின் தன்மை, இவற்றை அறியும்பொருட்டு முதல் கட்டமாக நீர் ஆதாரத்தை ஏற்படுத்தி சோதனை செய்வதற்கென ரூ. 1.20 லட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டது.

கள்ளக்குறிச்சி பேரூராட்சிக்கு மணிமுக்தா நதியிலிருந்து குடிநீர் கொண்டுவரும் ஆய்வுத் திட்டத்தில் சின்னசேலம் பேரூராட்சி இணைக்கப்படவில்லை. இருப்பினும், இவ்விரு ஆய்வுத் திட்டங்களின் முடிவுகளை கருத்திற்கொண்டு, தேவையெனில் ஒருங்கிணைந்த திட்டமொன்று அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்படும்.

சிதம்பரம் நகராட்சியில் நீர்தேக்கத் தொட்டி

*521 வினா—**திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகராட்சி, குடிதண்ணீர் பற்றாக்குறையை நீக்க மற்றும் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் அனுமதி கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு **மானியத் தொகை அளிக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?**

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : சிதம்பரம் நகராட்சி குடிநீர் பற்றாக்குறை காரணமாக 20 லட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதாக தகவல் தெரிய வருகிறது. அது அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சிதம்பரம் நகராட்சி குடிநீர் மேம்பாடுக்கான திட்டம் ஒன்றை கொள்ளிடத்தை ஆதாரமாகக் கொண்டு ரூ.64-

லட்சம் மதிப்பீட்டில் தயாரித்தது. இத்திட்டத்தை பராமரிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 2,40,000 செலவாகும் என்று கணக்கிடப் பட்டது. இதற்கு நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் பின்னர் நிறைவேற்றலாம் என நகராட்சி கருத்து தெரிவித்தது. எனவே தற்போதுள்ளதைக் கொண்டு மாற்றுத் திட்டம் ஒன்றை ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது. இதற்கு பராமரிப்பு செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 53,000 ஆகும்.

(முற்பகல் 9-40)

திரு. துரை கலியமூர்த்தி : அந்த மாற்றுத் திட்டம் என்பது போர்வெல் அமைத்து நீர் எற்றுகின்ற திட்டமா அல்லது வேறு ஏதாவது மாற்றுத் திட்டமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்த மாற்றுத் திட்டம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

ராதாபுரம் சாலை

*522 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ராதாபுரம் தொகுதியிலுள்ள ஆத்தன் கரை பள்ளிவாசல்—ராதாபுரம் நெடுஞ்சாலையை தார் படியாத சாலையாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

திரு. யா. சை. மு. யூசுப் : இந்தத் திட்டம் எப்போது மேற் கொள்ளப்படும் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த ராதாபுரம் பள்ளி வாசல் சாலையில் முதல் 10.2 கிலோ மீட்டர் சாலை அரசு சாலை யாகவும், 4 கிலோ மீட்டர் பஞ்சாயத்து யூனியன் சாலையாகவும் இருக்கிறது. இதை 4.3 லட்சம் ரூபாய் செலவில் 10.2 கிலோ மீட்டர் சாலையை அரசு எடுத்து இதற்கான பணியை துவங்கி இருக்கிறது. மற்றொரு பகுதியான திருவெம்பாலாபுரம் பள்ளி வாசல் சாலை—இந்த 4 கிலோ மீட்டர் சாலையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையினை அகலப்படுத்தல்.

*523 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) இந்த ஆண்டில், சென்னை நகரில், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ், பாதையினை அகலப்படுத்துவதற்கென, காம்பவுண்டு சுவர்கள் உள்ள இடங்கள் அரசாங்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன விலை கொடுத்து வாங்கப்பட்டது?

(இ) பாதை அகலப்படுத்தும் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ஒரு கிரவுண்ட் ரூ. 9,500 என வருவாய்த்துறையால் விலை நிர்ணயிக்கப்பட்டு அதற்கான முதல் கட்டத்தில் ரூ. 4.20 இலட்சமும், இரண்டாவது கட்டத்தில் ரூ. 5.90 இலட்சமும் மாவட்ட ஆட்சியாளர் வசம் நெடுஞ்சாலைத் துறையால் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) பாதை அகலப்படுத்துவதற்கான மொத்த செலவு நிலம் கையகப்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 10.15 இலட்சமும், பூவிருந்த வல்லி நெடுஞ்சாலையை தினத்தந்தி அலுவலகத்திலிருந்து ஆர். டி. சாலை வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய ரூ. 21.00 இலட்சமும் ஆகும்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி எல்லையிலுள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை—அண்ணா சாலை—திருவொற்றியூர் நெடுஞ்சாலை—இதுபோன்ற சாலைகளை தேசிய நெடுஞ்சாலைத் துறையிடம் மாற்றியிருப் பதால், சென்னை மாநகராட்சி நிர்வாகத்துக்கும், தேசிய நெடுஞ் சாலைத் துறை நிர்வாகத்துக்கும் இடையே அடிக்கடி தகராறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, மீண்டும் மாநகராட்சியின் பொறுப் பிலேயே இந்த மேற்கண்ட சாலைகளை ஒப்படைக்க அரசு முன் வருமா?

[1978 மார்ச் 11

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகத்துக்கும், நெடுஞ்சாலைத் துறை நிர்வாகத்துக்கும் இடையே தகராறு என்பதே இல்லை. மாநகராட்சியிடமிருந்து இந்த சாலைகள் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது, நெடுஞ்சாலைகள் எல்லாம் செம்மையான முறையில் போடப்பட்டு விபத்துக்கள் நிகழாதவண்ணம் இருக்க வேண்டும் என்றும், நீண்டநாள் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் செம்மையான முறையில் செயல்படுவதற்காகத்தான் நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: மாநகராட்சி நிர்வாகத்துக்கு உட்பட்ட மின் தொடர்புகள்—அதாவது காலையில் கான்ட் கட் செய்யப்படுகிறது. அப்படிப்பட்ட நேரத்தில், மாநகராட்சி நிர்வாகத்தினர் மின்சார சம்பந்தமான வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில், ஏற்படுகின்ற பல்வேறு தொல்லைகளின் காரணமாக—ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட்டு, மாநகராட்சிக்குச் சொந்தமான மெட்டீரியல்களை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையினர் சீஸ் பண்ணிக்கொண்டு, எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். இப்படி தகராறுகள் ஏற்படுவதினால், ஒரே நிர்வாகத்தின் கீழ் இந்தச் சாலைகள் மாற்றப் படுமா என்று கேட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நிரந்தர பலனைப் பெற முயலும்போது, ஆரம்பத்தில் ஏற்படுகின்ற சில சிக்கல்களை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

கால்நடை உதவியாளர்கள்.

*524 வினா—திரு. தாழை மு. கருணாநிதி, திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருக்கடி நிலை அமுலில் உள்ள நேரத்தில், கால்நடை பராமரிப்புத் துறையில் 264 கால்நடை உதவியாளர் நிலை II களுக்கு கால்நடை உதவியாளர் நிலை I பதவி உயர்வு அளிக்கப் பட்டு, ரத்து செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பதவி உயர்வு எப்போது அளிக்கப்படும்?

1978 மார்ச் 11]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) எல்லா கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களையும் கால்நடைப் பராமரிப்புத் துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரவும், மற்றும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு கால்நடை ஆய்வாளர் நிலை I -ஐ நியமிக்க வேண்டுமெனவும் அரசு எடுத்த முடிவுக்கிணங்க 314 கால்நடை ஆய்வாளர் (நிலை I) கள் கால்நடை மருந்தகங்களிலிருந்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டனர்.

கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் 264 கால்நடை ஆய்வாளர் (நிலை II) களுக்கு, கால்நடை ஆய்வாளர் (நிலை I) களாக பதவி உயர்வு அளித்தார். ஆயினும் பின்னர் இது ரத்து செய்யப்பட்டது. அரசு இதுகுறித்து முழுமையாக மறுஆய்வு செய்து 314 கால்நடை ஆய்வாளர் (நிலை II) களை, கால்நடை ஆய்வாளர் (நிலை I) களாக பதவி உயர்வு செய்து மருந்தகங்களில் காலியகாவுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்ய முடிவு செய்துள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், எதற்காக வேண்டி அவர்களுக்கு முன்னே கிரேடு 2-லிருந்து கிரேடு 1 பதவி உயர்வு அளிக்கப்பட்டது? என்ன காரணத்திற்காக வேண்டி மீண்டும் அளிக்கப்பட்டது? என்ன காரணத்திற்காக வேண்டி மீண்டும் கிரேடு 1-லிருந்து கிரேடு 2-க்கு தாழ்த்தப்பட்டது? ஆகவே, மீண்டும் அவர்களை பழையபடி கிரேடு 1-க்கு உடனடியாக மாறுவதற்கான உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது 7 ஆம் தேதியன்று இந்த 314 நிலை 2-லிருந்தவர்களுக்கு நிலை 1-க்கு பதவி உயர்வு கொடுக்கப் பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலே இருந்த ஆய்வாளர்கள் கால்நடைத் துறைக்கு இணைக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்றியங்களோடு அவர்கள் இணைந்திருந்தபோது அவர்கள் நல்ல முறையிலே கிராமங்களிலே செயல்பட்டு வந்தார்கள். ஆனால்

மறுபடியும் ஆணையாளர்கள் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் ஒவ்வொரு யூனியனுக்கும் இப்போது இருக்கின்ற ஸ்டெரெங்த்தை விட அதிகமாக்க, மேலும் அங்கே கால்நடை மருந்தகங்கள் ஏற்படுவதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலித்து ஆய்ந்து அரசு முடிவெடுக்கும்.

Burma Repatriates settled in Tiruchirappalli.

* 325 *Q.*—THIRU C. MANICKAM, THIRU S M. VASAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether the Burma repatriates at Tiruchirappalli have sought lands in Thiruchirappalli to carry on their avocations;

(b) whether a place in the Municipal area has exclusively been allotted to them; and

(c) if so, the steps taken to build shops thereon?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) ஆம்.

(ஆ) ஆம். யானைக்குளம், சிங்காரத்தோப்பு பகுதியில் 33,000 சதுர அடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சியில் ஏற்கனவே இருக்கிற அங்காடி அமைந்திருக்கின்ற டம் வளர்ந்து வருகின்ற பெருநகருக்குப் போதுமான இடமில்லை பதால், ஏற்கனவே அங்குள்ள வெல்ல மண்டிகள் இடமாற்றம் ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. அப்படிப்பட்ட லையில், அகதிகளுக்கு அமைக்கப்படுகின்ற இடத்தை ரு புதிய இடத்தில், இந்த இடத்திலே சந்தைகள்

பெருகுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையிலே, மாற்றியமைப்பதற்கான உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

பேரவைத் தலைவர் அவர்கள் என்னுடைய பெயரைக் குறிப்பிடுகின்றபோது திருச்சி சௌந்திரராஜன் என்று சொல்கிற போது, பொதுவாக மக்கள் குழப்பம் அடைகிறார்கள். தொகுதியின் அடிப்படையிலே பெயரை அழைப்பதாக முதலிலே இருந்தது? அது என்னவாயிற்று? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர். நான் கே. சௌந்திரராஜன் என்று கூப்பிட்டால் உங்களுக்குத் தெரியாதா? கே. சௌந்திரராஜன் வேறு; திருச்சி சௌந்திரராஜன் வேறு.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் பர்மா அகதிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த கடன் நிறுத்தப்பட்டதா? அப்படியென்றால், கடன் உடனடியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, அப்படி கடன் வழங்கும் திட்டம் நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, தற்போது திருச்சியில் பர்மா அகதிகள் தெப்பக்குளம் பகுதியில் கடைகள் நடத்தி வருகிறார்கள். அந்தப் பகுதியில் அவர்கள் வியாபாரம் நடத்தி வருகிறார்கள். அந்தப் பகுதியில் அவர்கள் வியாபாரம் செய்தால்தான், நல்லமுறையில் வியாபாரம் நடத்தி, ஜீவனம் செய்ய வழி ஏற்படும். இப்போது மாற்ற உத்தேசித்திருக்கும் இடத்திலே அவர்கள் வியாபாரத்தை ஆரம்பித்து செம்மையாக நடத்த வழியில்லை. ஆகவே, கொஞ்ச காலத்திற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதோடு, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்

பாதித்தான் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவதால், மற்றதையும் கொடுப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவர் அவர்களே, இப்போது இவர்கள் கடை வைத்திருக்கின்ற இடம் ஆக்கிரமிப்பாக கருதப்படுவதால், இந்த இடத்தை மாற்றுவதாக முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களை அகதிகள் என்று கூறப்படுவதை நான் விரும்பவில்லை. பர்மாவிலிருந்து தாயகத்திற்குத் திரும்பிய தமிழர்கள் அவர்கள். அவர்களின் வசதிக்காக யானைக்குளத் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது, தவணையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு வியாபாரக் கடன் கொடுக்கப்படுகிறது. அதற்கு முதல் தவணைக் கடனாக ரூ. 3,000 கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படும் கடனை அவர்கள் அதற்காகச் செலவழிக்காமல், வேறுவிதமாக செலவழிக்கிறார்கள் என்ற புகார் வருகிறது. அதைப் பரிசீலித்து, அவர்களுக்கு எந்த நோக்கத்தில் கடன் கொடுக்கப்பட்டதோ, அதற்காக அவர்கள் செலவழித்தால், அடுத்தத் தவணை கொடுப்பதிலே எவ்விதத் தயக்கமும் ஏற்படாது என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு வழங்கப்படுகிற கடன் தொகையில் பல தவறுகள் நடைபெறுவதாக சொல்லப்படுகிறது. அதன்மீது என்ன மாற்றம் செய்ய உத்தேசித்திருக்கிறது? தற்சமயம் அவர்களுக்குச் சரியாக பணம் வழங்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: இதுபற்றிய செய்திகள் பல என் காதுகளுக்கு எட்டிய காரணத்தால் காவல் துறை அதிகாரிகளோடு கலந்து விஜிலென்ஸ் செல் ஒன்று அமைக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக பர்மாவிலிருந்து தாயகம் வந்தவர்கள் மத்தியில் இருக்கும் ஒருசில

இடைத்தரகர்களால் இத்தகைய தவறுகள் நடக்கின்றன. அந்த விழிப்புக் குழு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் திருச்சி கொட்டப்பட்டு முகாமை திறந்து வைக்க வந்த மத்திய மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. சிக்கந்தர் பக்த் அவர்களிடம் நேரடியாக நான் எடுத்துக் கூறியபோது அவரும் இதுபற்றித் தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மேலும் பணம் வழங்குவதில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசு பதவி ஏற்பதற்கு முன்னால் பணம் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் முதலில் கலெக்டரிடம் ஆணையைப் பெற்றுக்கொண்டு கருவூலத்திற்குச் செல்ல வேண்டும். அங்கே அவர்களுக்குக் காசோலை கொடுக்கப்படுகிறது. அதை அவர்கள் எடுத்துக்கொண்டு வங்கிகளுக்குப் போகிறபோது இடைத்தரகர்களால் தகராறு ஏற்படுகிறது என்பதை உணர்ந்து, தற்போது அவர்கள் எங்கே வந்து இறங்குகிறார்களோ, மண்டபமாக இருந்தாலும், திருச்சி கொட்டப்பட்டு கிராமமாக இருந்தாலும் அல்லது கும்மிடிப்பூண்டி முகாமுக்கு வந்தாலும் ஆங்காங்கு டிராப்ட் ஆகக் கொடுத்து விடுகிறோம். இதனால் சிக்கல் தீர்ந்துவிட்டது என்பதைச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு இதுவரை எந்தெந்த வகையில் எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது? குறிப்பாக திருச்சியிலுள்ளவர்களுக்கு என்னென்ன வகையில் உதவி செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தனிக்கேள்வி போட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1978 மார்ச் 11

3. உரிமைப் பிரச்சினை.
"தினமலர்" நாளேடு மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184-வது விதியின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் தினமலர் நாளேட்டின் மீது உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டுவர அனுமதி கேட்டிருக்கிறார். அப்பிரச்சினையை எழுப்ப அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, திருச்சியிலிருந்து வெளிவரும் தினமலர் பத்திரிகையின் ஆசிரியர், பிரசுரிப்பாளர் இவர்களுக்கு எதிராகத்தான் இந்த உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேனே தவிர, இந்தப் பத்திரிகையின் நிருபர்களிடம் எந்தவிதமான வருத்தமும் கிடையாது. இந்த மாதம் 8 ஆம் தேதியன்று என். ஜி. ஓ.-க்களுடைய பிரச்சினை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பற்றிப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டபோது எங்களுடைய கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய தோழர் சங்கரய்யா அவர்கள் எழுந்து அரசாங்க நிலை தனக்கு ஒப்புதல் இல்லையென்று சொல்லி அவர் தலைமையில் எங்கள் க்ரூப் வெளிநடப்புச் செய்தது உங்களுக்கும் தெரியும்.

அதோடு இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் வெளிநடப்புச் செய்தார்கள். எல்லாப் பத்திரிகைகளிலும் இந்த முக்கியமான செய்தியை கரூராக, கரெக்டாகப் பிரசுரித்தார்கள். ஆனால் திருச்சியிலிருந்து வெளிவரக்கூடிய தினமலர் பத்திரிகையில் முதலில் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேட்டதைக் குறிப்பிட்டு விட்டு அதிலே கூறியிருப்பதை அப்படியே படிக்கிறேன்—

. . . . அதனை உடனே எடுத்துக்கொள்ளாததை ஆட்சேபித்து இந்திய கம்யூனிஸ்டு கட்சியினரும், ஜனதா, காங்கிரஸ், தி. மு. க. ஆகிய கட்சியினரும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள்.

உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி, முஸ்லிம் லீக், தேசிய பார்வார்டு பிளாக் கட்சியினர் வெளிநடப்புச் செய்யவில்லை. லத்தீப் மார்க்கபந்து ஆகியோர் பேசுகையில் விரைவில் என். ஜி. ஓ.க்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள், என்று பிரசுரித்திருக்கிறார்கள்.

1978 மார்ச் 11] [பேரவைத் தலைவர்]

சி. பி. எம். வெளிநடப்புச் செய்தது என்ற செய்தியை பூரணமாக பிளாக் அவுட் செய்து விட்டார்கள். அந்த செய்தியைப் படிக்கக்கூடியவர்கள் என்ன நினைப்பார்கள்? அப்படிப்பட்ட நேரத்தில் சி. பி. எம். உறுப்பினர்கள் சபையில் இருந்தார்களா அல்லது இல்லாமல் மறைந்துவிட்டார்களா என்ற சந்தேகம்கூட வரக்கூடிய முறையில் ஜனங்கள் மத்தியிலும் என். ஜி. ஓ.-க்கள் மத்தியிலும் எங்களைப் பற்றிக் கெட்ட எண்ணம் உண்டாக்கி விடுகிற நோக்கத்தோடு பிரசுரித்திருக்கிறார்கள். டெலிபரேட் என்பதற்காகச் சொல்கிறேன்—ஏற்கனவே மாலை முரசில் ஒரு செய்தி வெளியிடப்பட்டு, அதைப்பற்றி ஆரம்பத்திலேயே கொண்டு வந்தேன். இந்தமாதிரி சம்பவங்கள் பற்றித் தாங்கள் ஒரு முடிவு செய்திருக்கிறீர்கள். எல்லாப் பத்திரிகைகளுக்கும் கைட் லைன்ஸ் கொடுத்திருக்கிறீர்கள். அது தெரிந்தும் இந்தப் பத்திரிகையினுடைய பொறுப்பாளர்கள் இந்தமாதிரிச் செய்திருக்கிறார்கள், உங்கள் டெஸிஷன் தெரிந்தும்கூட டெலிபரேட்டாக இப்படிச் செய்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் உண்டு. 60 ஏழை பையன்களை இராமநாதபுரத்திலிருந்து கொண்டுவந்து அவர்களுக்கு வெறும் சோறை மட்டும் போட்டு விட்டு வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உமாநாத் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. உள்நோக்கம் கற்பித்துப் பேசக்கூடாது. பத்திரிகை அந்த செய்தியை வெளியிடவில்லை என்று சொல்லிவிட்டு விட்டுவிடுங்கள். எந்தக் காரணத்திற்காக அவர்கள் சி. பி. எம். ஐ வெறுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்ல முனையக்கூடாது. பத்திரிகையில் அந்தச் செய்தியை அவர்கள் வெளியிடவில்லை, இதனால் எங்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்பதோடு விட்டுவிடுங்கள்.

திரு. ரா. உமாநாத்: உள்நோக்கம் கற்பிக்கும் பிரச்சினை கிடையாது. இதிலே இரண்டுவிதமான பிரீச்சஸ் இருக்கின்றன. ஒன்று தெரியாமல் செய்துவிடுவது, இன்னொன்று தெரிந்து செய்வது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தெரிந்து செய்கிறார்களா, தெரியாமல் செய்கிறார்களா என்று நான் விளக்கம் கேட்டபிறகு தான் நீங்கள் அப்படிச் சொல்ல வேண்டும். தெரிந்தும் செய்திருக்கலாம், தெரியாமலும் செய்திருக்கலாம். ஆனால் நான்

விளக்கம் கேட்டபிறகு தான் நீங்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்ல முடியும். நான் விளக்கம் கேட்பதற்கு முன்னாலேயே சொல்வது கூடாது.

திரு. ரா. உமாநாத் : அப்படியானால், நீங்கள் விளக்கம் பின்னாலே கேட்பீர்களானால் அப்போது நான் இதைச் சொல்வதற்கு எனக்கு நீங்கள் சந்தர்ப்பம் கொடுப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுக்கு எழுதி அவர்களுடைய பதில் வந்தபிறகுதான் அதைப்பற்றி முடிவு செய்ய முடியும்.

திரு. ரா. உமாநாத் : பதில் வந்ததற்குப்பிறகு, அவர்கள் செய்தது டெலிபரேட்டா இல்லையா என்று நான் சொல்வதற்கு எனக்கு தாங்கள் சந்தர்ப்பம் கொடுப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் வந்தபிறகு தானே அதைப்பற்றிச் சொல்ல முடியும்.

திரு. ரா. உமாநாத் : ஏனென்றால் இதிலே இரண்டு வகை இருக்கிறது. டெலிபரேட்டாக இருக்கிறது என்றால் அதற்கு ஒரு முடிவு, இல்லையென்றால் இன்னொரு முடிவு, இரண்டு முடிவுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுடைய விளக்கத்திற்குப்பிறகு தெரிந்து செய்தார்களா தெரியாமல் செய்தார்களா என்று முடிவு எடுக்க முடியும். இப்போதே தெரிந்து செய்திருக்கிறார்கள் என்று சொல்லி அதற்கு ஒரு காரணத்தையும் சொல்லி பத்திரிகை மீது அப்படிப் பேசக்கூடாது.

திரு. ரா. உமாநாத் : அவர்களுடைய விளக்கத்திற்குப்பிறகு தெரிந்துதான் செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்வதற்கு—என்னிடம் அதற்கு ஆதாரம் இருக்கிறது.—ஒரு சந்தர்ப்பம் தருகிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைப் பொறுத்தவரை " இந்தப் பத்திரிகை குறிப்பிட்ட கட்சியின் உரிமையை மீறுகிற அளவிற்குச் செய்தியை மறைத்து வெளியிட்டுள்ளது. ஆகவே எங்கள் உரிமை மீறப்பட்டிருக்கிறது " என்று சொல்லிவிட்டு நிறுத்திக் கொள்ளுங்கள். நான் அந்த ஆசிரியரை விளக்கம்

கேட்டு, கிடைக்கிற பதிலைப் பொறுத்து பிறகு விளக்கம் கேட்கலாம். ஆனால் தற்போது அதற்கு உள்ளே புகுந்து என்ன என்ன காரணங்களினால் அப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் பத்திரிகைக்கு அது நல்லதல்ல.

திரு. ரா. உமாநாத் : எனக்கு ப்ரொசீஜர் சம்பந்தமாக ஒரு விளக்கம் வேண்டியிருக்கிறது. பத்திரிகையினுடைய பொறுப்பாளர்கள் தெரிந்து செய்யவில்லை என்று சொல்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆனால் இந்த சபையினுடைய உறுப்பினர் யாருடைய உரிமை மீறப்பட்டிருக்கிறதோ அவர் தெரிந்துதான் செய்திருக்கிறார்கள் என்று சொல்வதற்கு இப்போது சந்தர்ப்பம் இல்லையென்றாலும் கூட பின்னாலே சந்தர்ப்பம் தரப்படுமா என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உமாநாத் அவர்கள் தயவுசெய்து எனக்கு ஒரு விளக்கம் தர வெண்டும். தெரிந்து செய்திருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்வதிலே நான் குறுக்கே நிற்கவில்லை. என்ன காரணத்தினால் என்பது இப்போது வேண்டாம். என்ன காரணத்திற்காக செய்திருக்கிறார்கள் என்று உள்நோக்கம் கற்பிக்காதீர்கள். தெரிந்து செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் போதும். அப்போதுதான் உங்களுடைய உரிமையையும் பாதுகாக்க முடியும், பத்திரிகையினுடைய உரிமையும் பாதுகாக்கப்படும்.

திரு. க. சுப்பு : சார், ஏற்கனவே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் வந்து இருக்கின்றன. மாலை முரசுப் பத்திரிகை முதலமைச்சர் நான் பேசியதை எல்லாம் எடுத்துச் சொல்லி நான் என்ன என்ன பேசவேண்டுமென்று நினைத்தேனோ அதையெல்லாம் சுப்பு பேசி விட்டார் என்று பேச்சை அன்றைக்கு ஆரம்பித்தார்கள், ஆனால் அந்தப் பத்திரிகை என்னுடைய பேச்சைப் போடவில்லை, முதலமைச்சர் பேசியதைப் போட்டார்கள், அதைப் படிக்கிறவர்கள் ஏதோ முதலமைச்சர் பேசியதைத்தான் நான் பேசியிருக்கிறேன் என்று தவறாக நினைக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் என்னுடைய அனுமதியில்லாமல் எழுந்து எந்த அடிப்படையும் இல்லாமல், இதனுடைய விளக்கத்தை நீங்களே தர ஆரம்பிக்கிறீர்கள், எப்படி நான் சபையை நடத்துவது ?

திரு. க. சுப்பு : பொதுவாக தாங்கள் பத்திரிகைக்கு ஒரு டைரக்ஷன் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களுடைய டைரக்ஷனை நான் கேட்கவில்லை. இந்தப் பிரச்சினையில் தாங்கள் எழுந்து பேசியது தேவை அற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. ரா. உமாநாத் : அவர்கள் தெரிந்தே செய்தார்கள் என்று அதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டாமென்று சொல்லி விட்டீர்கள். இருந்தாலும் அதற்கான சரக்கு என்னிடத்தில் இருக்கிறது என்பதைத் தாங்கள் புரிந்து கொள்வீர்கள். அவர்கள் தெரிந்தே செய்தார்கள். நீங்கள் முடிவு செய்யும்பொழுது தெரிந்தே செய்வதற்கும், தெரியாமல் செய்வதற்கும் உள்ள வித்தியாசத்தின் அடிப்படையில் முடிவு சொல்ல வேண்டும். தெரியாமல் செய்தோம் என்று அவர்கள் சொல்லி, அதற்கான வருத்தத்தைப் பெற்றுக்கொண்டு மன்னிப்புக் கொடுக்கப்படுவது உண்டு. தெரிந்தே செய்வது என்று சொன்னால், இப்பொழுது என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், அதை ஸ்டெரெய்ட்டாக கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இல்லையென்றால், அன்றைக்கு நான் சொன்னதைப் போல, லோக்சபாவில் இருக்கும் பிரிசிடென்ட் உங்களுடைய ஆபீசில் கிடைத்திருக்கிறது. லோக் சபாவில் கமிட்டிக்கு அனுப்பவில்லையென்றால், லோக்சபாவில் கொடுத்திருக்கும் முடிவு, நவசக்தியின் மேல் நாங்கள் ரெய்ஸ் பண்ணியதன் முடிவு லைப்ரரிக்குக் கிடைத்திருக்கிறது. அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், மூன்று நாட்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தாங்கள் ஏற்கனவே சொன்னது. எனக்குள்ள பிரச்னை, தெரிந்துதான் செய்தார்கள் என்றால் அதுகுறித்து மோஷன் மூவ் செய்வதற்கான சந்தர்ப்பம் உறுப்பினர்களுக்கு உண்டு. தெரியாமல் செய்தோம் என்று சொல்வார்களேயானால் அதை அவைத் தலைவரின் முடிவுக்கு விடுவது நீண்டகால மரபு.

தினமலர் நாளேட்டின் ஆசிரியருக்கு இதுகுறித்து எழுதிக் கேட்டு பிறகு எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

4. தகவல் கோரல்.

அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலைநிறுத்தம் பற்றி முதலமைச்சர் அளிக்கவிருக்கும் அறிக்கை குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, என். ஜி. ஓ. க்கள் பிரச்னை பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அமைச்சரவையைக் கூட்டுவதாகவும், எடுத்த முடிவுகளை இங்கு அறிக்கை வடிவிலே தருவதாகவும் இந்த அவையிலே அறிவிக்கப் பட்டு ஏடுகளிலேயும் செய்திகள் வந்துள்ளன. ஆனால் கேள்வி நேரம் முடிந்து மானியங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவிருக்கின்ற இந்த நேரம் வரையில் அப்படிப்பட்ட அறிக்கை எதுவும் வரவில்லை. தாங்கள் என்ன பதில் அளிப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். ஒன்றரை மணி வரையில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அறிக்கை சமர்ப்பிக்க விதி இருக்கிறது என்று கூறுவீர்கள். ஆனால் ஒரு மணி நேரமாக கேள்வி நேரத்தில் முதலமைச்சர்வர்கள் இங்கு வந்து இருக்கவும் இல்லை. அறிக்கையை வெளியிடவும் இல்லை. எதிர்கட்சித் தலைவர்கள் ஒன்றரை மணி வரையில் இதேயிடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமென்றால் அது இயலாது என்பது தாங்கள் அறியாதது அல்ல. தாங்களேகூட துணைத் தலைவரையோ, மாற்றுத் தலைவரையோ உங்களுக்குப் பதிலாக உட்கார வைத்துவிட்டு அறைக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை எங்களுக்கும் ஏற்படும். ஆகவே, எத்தனை மணிக்கு அறிவிப்பார்கள் என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டால் எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே இருப்பதற்கு வசயாக இருக்கும். அதையாவது அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுந்து கேட்பதற்கு முன் நானே சொல்வதாகத்தான் இருந்தேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வேறு ஏதாவது கேட்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இதைப்பற்றி நான் முன்பே கேட்டு வைத்திருக்கிறேன். காரணம், அவையிலே பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்து உங்களுக்குப் பதில் தந்தாக வேண்டும். நேற்றிரவு நீண்ட நேரம் ஆனது. இப்பொழுது அறிக்கை தயாரிப்பதில் இருவரும் முனைந்திருப்பதால் இந்த மானியங்கள்

மீது வாக்கெடுப்பு முடிந்தவுடன் அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லியிருக்கிருர்கள். அப்பொழுது அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள், (குறுக்கீடு) ஒன்றரை மணிக்கு மேலே சமர்ப்பிப்பார்கள்.

திரு. மு. அரங்கநாதன்: நான் 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ரா. உமாநாத்: சார், ஒன்றரை மணி என்ருல் அறிக்கை கொடுத்தவுடனே நீங்கள் எழுந்து, இன்றையதினம் இதோடு இந்தக் கூட்டம் முடிந்தது என்று சொன்ருல், நாங்கள் கிளாரிஃபிகேஷன் கேட்க வேண்டுமென்ருல் அதற்குச் சந்தர்ப்பம் வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஸ்டேட்மென்டின்மேல் டிபேட் கிடையாது. சில விளக்கங்கள் கேட்டு பதில் சொல்வது தானே தவிர, அதற்குள்ளாக நான் முடித்து விடுவேன் என்ருல் நான் அவ்வளவு தெரியாதவன் அல்ல. ஆனல் அதை விவாதப் பொருளாக ஆக்க முடியாது.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, சரியாக ஒன்றரை மணிக்கா, ஒன்றே முக்கால் மணிக்கா என்று சொல்லிவிட்டால் நாங்கள் இருப்பதற்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் சரியாக ஒன்றரை மணிக்கு முடிந்து விடுமேயானல் சரியாக ஒன்றரை மணிக்கே வரும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு தலைவரவர்களே, 'மக்கள் குரல்' மற்றும் சில பத்திரிகைகளில், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்துகொண்டு அந்த அறிக்கையை வைக்கப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது. ஆனல் எதிர்க்கட்சித் தலைவர்கள் யாரையும் அழைத்துக் கேட்டதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு அவையிலே கேள்வி கேட்பது சரியல்ல. அவையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதைக் கடைப்

பிடிப்பதுதான் என்னுடைய வேலை. பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இங்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று சொன்னுர்கள். அந்தப் பிரச்னையை விட்டுவிட்டு பத்திரிகையிலே வந்திருப்பதைக் கேட்பது நியாயம் இல்லை. அவையிலே நடப்பதை வைத்துத்தான் சொல்ல முடியும்.

* * *

திரு. ஏ. ரகுமான்கான்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 42-வது விதியின்கீழ் அனுமதிப்பதும் அனுமதிக்காததும் என் இஷ்டம். அதை இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். திரு. ரகுமான்கான் பேசியவை அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

5. ஒத்திவைப்பு தீர்மானம்.

பேருந்துகளில் 'டேக்கோ-மீட்டர்' என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற அரசு உத்தரவினுல் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 'டாகோகிராப்' என்னும் கருவியை எல்லா வாகனங்களிலும் பொருத்த வேண்டும் என்னும் அரசின் உத்தரவினுல் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்தும், என்ன விலை கொடுத்தாலும் அக்கருவி கிடைக்காமல் இருப்பது குறித்தும்" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு அவர்களும், திரு. துரைமுருகன் அவர்களும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, எல்லா மோட்டார் வாகனங்களுக்கும் டாகோகிராப் என்ற கருவியைப் பொருத்த வேண்டுமென்று ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவைத் தற்பொழுது அமுல்படுத்துகிற முறையிலே உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனுல் தகுதிச் சான்றிதழ் வாங்க வருகின்ற

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. க. சுப்பு] [1978 மார்ச் 11

வாகனங்களும், பதிவு செய்ய வருகின்ற வாகனங்களும் எப். சி. ரிஜிஸ்டிரேஷன் எடுக்கப்பட முடியாத நிலையிலே இருக்கின்றன. பல வாகனங்களிலே, டி. வி. எஸ். நிறுவன வாகனங்களிலே கூட இந்தக் கருவிகள் பொருத்தப்படாததால், அவர்களால் கூட வண்டிகளை எடுக்க முடியவில்லையென்று சொல்லப்படுகிறது. இந்த டாகோகிராப் ஒரே ஒரு கம்பெனியிலே செய்யப்படுகிறது.

அதாவது, பெங்களூரிலே இருக்கிற என். கே. எட். கம்பெனியிலே மாத்திரம் ஏகபோகமாகச் செய்யப்படுகிறது. வேறு எங்கும் கிடைக்கவில்லை. அந்தக் கருவிகளை விற்பனை செய்வதற்காக, மத்திய அரசாங்கத்தை அணுகி, எப்படியோ, எல்லா வாகனங்களுக்கும் பொருத்த வேண்டுமென்ற முறையில் அவர்களை ஆணையிட வைத்து, அந்தக் கருவிகளை எடுக்க வைத்திருக்கிறார்கள் என்ற விவரம் வந்திருக்கிறது. இப்படி ஏகபோகக்காரர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கிற காரணத்தால், ரூ. 10-க்கு விற்றுக்கொண்டிருந்த கிராப், இன்று ரூ. 95-க்கு விற்கிறது. இந்தக் கருவியைப் பொருத்துவதற்கே ரூ. 130 கேட்கிறார்கள். இந்தக் கருவியின் விலை ரூ. 1,300-லிருந்து ரூ. 3,000 வரையில் என்று சொல்கிறார்கள். அதுகூட கிடைக்கவில்லை.

மோட்டார் வாகனங்கள், தகுதிச் சான்றிதழ் பெறவும் பதிவு செய்யவும் வரும்போது, அவற்றைப் பொருத்தியிருக்க வேண்டுமென்று சொல்வதால், பெருத்த இன்னல் ஏற்படுகிறதென்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இந்தவிதமான விளைவுகள் ஏற்பட்டுள்ளதால், ஏகபோகக்காரர்களுக்கு ஆதரவு கொடுக்கக்கூடிய இந்தக் கருவியைப் பொருத்தவேண்டிய அவசியமில்லை.

தமிழ் நாட்டிலே, இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கும் போது, டாகோகிராப் கருவியைப் பொருத்த வேண்டுமென்ற திட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை என்பதை இந்த அரசாங்கம் உணர்ந்து, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதற்காகத்தான் அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ஆகவே, இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி பொன்னையன்] [1978 மார்ச் 11

4-2-1975 அன்று நடைபெற்ற போக்குவரத்து ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் மாநகர மற்றும் நகரத் தடங்களில் ஓடும் பேருந்துகளைத் தவிர ஏனைய புதிய பயணிகள் பேருந்துகள் அனைத்திலும் இக்கருவி பொருத்தப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. இக்கருவிகள் தயாரிக்கும் இன்டர்நேஷனல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் என்ற நிறுவனம் ஒன்று ரூ. 1,725 என்ற விலையில் தேவைக்கேற்ப ஆண்டொன்றுக்கு 10,000 கருவிகள் தயாரித்துக் கொடுக்க முடியுமென்று 1976 பிப்ரவரி திங்களில்

(முற்பகல் 10-10)

கூறியது. இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி எண் 325-ஏ என்ற திருத்திய விதியின் வரைவு 5-6-1976 அன்று வெளியிடப்பட்டது. 1975-ஆம் ஆண்டு கேரள அரசு நகர மற்றும் சாதாரண பயணப் பேருந்துகள் நீங்கலாக ஏனைய எல்லா அரசு மற்றும் தனியார் பேருந்துகளிலும் "டேக்கோ மீட்டர்" பொருத்தப்படவேண்டும் என்று ஆணையிட்டு நடைமுறையில் உள்ளது.

சென்ற ஐந்து ஆண்டுகளாக மராட்டிய, கர்நாடக மாநிலங்களில் பேருந்துகளில் "டேக்கோ மீட்டர்கள்" பொருத்தப்பட்டு வருகின்றன. தற்சமயம் டேக்கோ மீட்டர் தயாரித்துக் கொண்டிருக்கும் பெங்களூர் நிறுவனம் தேவைக்கேற்ப எத்தனை கருவிகள் வேண்டுமானாலும் விற்பனைக்குத் தர இயலும் என்று கூறியுள்ளது. ஏற்கனவே தயாரித்துக் கொண்டிருக்கும் நிறுவனத்தின் உற்பத்தித்திறனை விரிவுபடுத்தினால் தேவையைப் பூர்த்தி செய்து விடமுடியும் என்ற கருத்து 1974-ல் தெரிவிக்கப் பட்டது. டெல்லியில் ஒரு நிறுவனம் டேக்கோ மீட்டர் உற்பத்தி செய்கின்றது. ஆனால் டான்சி என்ற அரசு நிறுவனமும் சேரன் பொறியியற் கழகமும் 'டேக்கோ மீட்டர்' தயாரிக்கும் திறன் பெற்றுள்ளன. டான்சி, சேரன் போக்குவரத்துக் கழகம் போன்ற நிறுவனங்களும் டேக்கோ மீட்டர் உற்பத்தியிலே ஈடுபடுவது பற்றிய பரிசீலனையை அரசு மேற்கொண்டது. 1,725 ரூபாய் விலையுள்ள இக்கருவி கட்டாயமாக, உடனடியாகப்பொருத் தப்படுவதற்கு, நியாய விலையில் உடனடியாகக் கிடைப்பதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது உண்மை. எனவே,

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் அதிவேகமாகச் செல்வதைக் கட்டுப்படுத்தவும் பொருள்கள் ஏற்றிச் செல்லும் பேருந்துகளால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடனும் அனைத்து மாநிலங்களின் சாலை போக்குவரத்து வளர்ச்சி மற்றும் திட்டக்குழு 1967-ம் ஆண்டில் பேருந்துகளில் "டேக்கோ மீட்டர்" என்னும் கருவியைப் பொருத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்தது. இக்கருத்தினை ஏற்று 1969-லேயே, தமிழக அரசு உள்துறை ஆணை 2869 மூலம் 13-11-1969 அன்று 1940-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வாகன விதி எண் 325 திருத்தப்பட்டது.

நகரத் தடங்களில் ஓடும் பேருந்துகள் மற்றும் வாடகைக் கார்கள் தவிர ஏனைய போக்குவரத்து வாகனங்களிலும் "டேக்கோ மீட்டர்" பொருத்தப்படவேண்டுமென்று இத்திருத்தத்தின் மூலம் ஆணையிடப்பட்டது. 1971-ம் ஆண்டில் இவ்வாணையைப் பரிசீலனை செய்து குறிப்பிட்ட சில புதிய பேருந்துகளில் முதலில் இக்கருவியைப் பொருத்தலாம் என்றும் மற்ற பேருந்துகளில் பின்னர் சில கட்டங்களில் பொருத்தலாம் என்றும் அரசு முடிவு செய்தது. மேலும் அண்மையில் பதிவு செய்யப்படும் பேருந்துகளை முதலில் வற்புறுத்தலாம் என்றும் இக்கருவிகள் போதிய அளவில் கிடைப்பதைப் பொறுத்து விரைவுப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் முதலியவற்றில் ஒரு கட்டத்திலும் அதன் பிறகு சாதாரண பயணிகள் பேருந்துகளிலும் இக்கருவியைப் பொருத்தச் செய்யலாமென்றும் அரசு கருதியது.

பொதுவாக, சாலை பாதுகாப்புக்காகவும் மிக வேகமாக ஊர்திகளை ஓட்டுவதால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காகவும் பேருந்துகளில் இக்கருவி பொருத்தப்பட வேண்டியது அவசியமென்றும் அதே சமயம் எல்லாவிதமான போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாய் இருந்ததாலும் கருவியைத் தயாரிக்கும் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 6,000 கருவிகள் மட்டுமே என்று குறைவாகயிருந்ததாலும் முதலில் பயணிகள் பேருந்துகளில் மட்டும் இக்கருவியைப் பொருத்தலாம் என்றும் ஆலோசனை கூறப்பட்டது.

இந்த ஆணையைச் செயல்படுத்த வேண்டாம் என்று பலர் கோரிக்கைகள் விடுத்திருப்பதால் டேக்கோ மீட்டர்களும், டேப்புகளும் தாராளமாக கிடைக்கும் வரை இக்கோரிக்கைகளை ஏற்று, திருத்திய 325-எ விதி செயல் படுவதை 30-6-78 வரை ஒத்தி வைக்கலாம்.

எனவே இப்பிரச்சினை குறித்து விவாதிக்க இப்பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்கள் பிரச்னை குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 13 தமிழாசிரியர்கள் பணியிறக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டு அமைச்சர் அவர்கள் அறிக்கை வைப்பதாகச் சொன்னார்கள். துணை சபாநாயகர் அவர்கள்கூட அன்றைக்கு இருந்தார்கள். அந்த அறிக்கையை எப்போது வைப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தத் தீர்மானத்தைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பெயரும் இந்த சட்டமன்றத்திலே சொல்லப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, அது ஒத்திவைப்புத் தீர்மானமாக இங்கே எழுப்பப்பட இருந்தது. ஆனால், ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்த நேரத்திலே, இந்த அவையிலே உறுப்பினர்கள் யாரும் இல்லாததால் அது சொல்லப்படாமல் போய்விட்டது. மறுபடியும் இந்த அவையிலே அறிக்கையை நான் சமர்ப்பிக்கிறேன்.

(6) 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 36—பாசனம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,60,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் நலனைக்கருதி பீம்பாட்டியில் கட்டி வேலை முடிவு பெறுமல் நிற்கும் அணையைக் கட்டி முடிப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,60,93,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. பழனிமுத்து: தலைவர் அவர்களே, ஆத்தூர் பெத்தநாய்க்கன்பாளையம் வசிஷ்ட நதியிலே செட்டி அணை கட்டுவதுபற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,60,93,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, குடியாத்தம், வேலூர், வாணியம்பாடி தாலுக்காக்கள் வறட்சிப் பகுதியாகையால் குடிப்பதற்கும்கூட தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாலும் மோர்தானா டேம், பித்தாபல்லி டேம், புல்லூர் டேம், அரசம்பட்டு டேம் ஆகியவைகளை உடனடியாக கட்டி முடிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,60,93,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, காவேரி வளர்ச்சிப் பணித் திட்டத்தில் உள்ள நியுதொண்டியக்காடு வாய்க்கால் திட்டம் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,60,93,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to get Vellakuttai Kanar Improvement Scheme in Vaniyambadi constituency I move—

"That the ollottment of Rs. 23,60,93,000 under Demand No. 36—Irrigation be reduced by Rs. 100."

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதுகாக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 23,60,93,000-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,99,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, அரசு கட்டடங்களிற்றி பழுதுபார்க்கும் பணிகள் (மெயின்டனன்ஸ் ஒர்க்) கான்ட்ராக் முறையை தவிர்த்து அரசே நேரடியாக செய்யத் தவறியதை கண்டித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,29,06,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. பழனிமுத்து : தலைவரவர்களே, ஆத்தூர் தாலுக்கா மல்லியக்கரை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு புதுக் கட்டிடம் கட்டுவதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,29,06,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the need to construct a Travellers' Bungalow or a P.W.D. building at Alangayam and Ambur in Vaniyambadi Constituency, I move—

"That the allotment of Rs. 3,99,06,000 under Demand No. 37—Public Works—Buildings be reduced by Rs. 100".

(இ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,57,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, கட்டிடப் பணிகள், குறைந்த செலவிலும், விரைந்து முடிய உதவும் நவீன இயந்திர ஏற்பாடுகள் இல்லாக் குறையைச் சுட்டிக் காட்டி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57,01,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு பவர்ரோலர் இருக்கவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57,01,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில், ரோடுகளைப் போட போதுமான அளவிற்கு, ரோடு ரோலர்கள் இல்லாததால் மேலும் 10 வாங்கவேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57.01,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, கட்டிடக் கலைப் பயிற்சிக் கூடங்களைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57.01,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,57,01,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,46,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, சிதம்பரம் வட்டம் வீராணம் ஏரியை ஆழப்படுத்தி கரையை அணைப்படுத்தி உயர்த்தி செயல்படுத்த ரூ. 704 லட்சத்திற்குப் போட்ட எஸ்டிமேட் உடனடியாக நிறைவேற்றுவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,46,,86,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, தஞ்சை ஜில்லாவில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த ஆறுகளின் இரு கரைகளையும் உயர்த்தி அமைப்பது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,46,86,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, குடியாத்தம், வேலூர், வாணியம்பாடி தாலுக்காக்களில் உள்ள ஏரிகளில் தூர் எடுக்காததால் ஏற்பட்டுள்ள தண்ணீர் நெருக்கடியைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,46,86,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்ட மூலதனச் செலவு போதாமை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 29,46,86,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 52—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,46,86,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,19,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. செ. வீ. சவுந்திரராஜன்: தலைவரவர்களே, முக்கிய நகரங்களில் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டடங்கள் கட்டுவது பற்றியும், பலதுறை தொழில்களுக்கு அந்தந்த தொழில்களைச் சார்ந்த கட்டடங்கள் கட்டுவது பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,19,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, பொதுக் கட்டிடம், கால்வாய் முதலியவைகளின் மதிப்பீட்டுச் செலவை குறிப்பதற்கான வழியைக் காண ஆய்வு மேற்கொள்ள வேண்டியதைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,19,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, பொதுமராமத்து கட்டிடங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன செலவீடு பற்றாக்குறை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 53—பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டிடங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,19,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss policy, I move:—

"That the allotment of Rs. 8,19,30,000 under Demand No. 53—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மேல் நான் ஆற்றவேண்டிய உரையினை* அச்சிட்டு, நூல் வடிவில் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தரப்பட்டுள்ளது. அதனை நான் படித்ததாக அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளை வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

* 168 முதல் 184-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்று உள்ளது.

[முற்பகல் 10.20]

* திரு. து. ராமசாமி: பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாகக் கோரப்பட்டு வந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிப்பதற்கு முடிவு எடுத்திருப்பதற்காக முதலிலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்கின்றபோது தாராபுரம் தாலுகா தமிழகத்திலேயே மிகவும் வறட்சியான ஒரு பிரதேசம் என்பதை நினைவுபடுத்துகிறேன். அது வறட்சியான பிரதேசம் மட்டுமல்ல; அங்கே வேறு இன்டஸ்டிரீஸ் கூட எதுவும் இல்லை. தொழில் துறையிலும் பின்தங்கிய பகுதியாக தாராபுரம் தாலுகா இருக்கிறது. பெரிய நகரங்களும் அங்கே கிடையாது. அதனால் அங்குள்ள மக்கள் எந்தவிதமான வேலைவாய்ப்பும் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்கின்றபோது தாராபுரம் தாலுகாவுக்கு அதிகமான ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக மூலனூர் வட்டாரம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கே ஆண்டாண்டுதோறும் குடி தண்ணீர் பிரச்சனை இருந்துகொண்டிருக்கிறது. குடிதண்ணீர் பிரச்சனை மட்டுமல்லாமல், எந்தவிதமான தொழில் நடைபெறு வதற்கும் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, மூலனூர் வட்டாரம் அமராவதி ஆற்றுக்கு அடுத்தபுறத்தில் இருப்பதால், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. அமராவதி ஆற்றுக்கு அடுத்த புறத்தில் இருப்பதால் அதை விட்டு விடக்கூடாது. லோயர் பவானி வாய்க்கால் கூட நொய்யலாற்றைக் கடந்து செல்கிறது. அதைப்போல மேட்டூர் வாய்க்காலும் காவேரியைக் கடந்து செல்லுகிறது. ஆகவே மூலனூர் வட்டாரத்தை இத்திட்டத்தில் அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்கின்றபோது நல்லாறு திட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். என்று முந்தைய சட்டசபை கூட்டத்தில் கோரிக்கை

[திரு. து. ராமசாமி] [1978 மார்ச் 11

விட்டிருக்கிறேன். ஆனால் நல்லார் திட்டத்தைப்பற்றி இப்போது எதுவும் சொல்லப்படவில்லை. அதை நிறைவேற்றினால் இன்னும் சுமார் 12 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதனால் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். இப்போதே நல்லார் திட்டத்தையும் எடுத்துக்கொண்டால், இந்தத் திட்டம் முடிவடையும் போது அந்தத் திட்டமும் முடிவடைந்து விடும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை எடுத்துக்கொள்ளும் போது இப்போது 50 கிலோமீட்டர் தூரத்திற்கு தண்ணீர் சென்று திருமூர்த்தி அணையைச் சேருகிறது. அவ்வளவு தூரத்திற்குச் செல்லும்போது இடையிலே வேஸ்டாகும் தண்ணீரை கூட நல்லார் திட்டத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்தத் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெள்ளக்கோவில் வடமலை ஓடைத் திட்டத்தின்கீழ் நஞ்சையாகும் திட்டத்தை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மாற்றி, புஞ்சையாக மாற்ற வேண்டு மென்று அங்கே இருக்கிற மக்கள் கோரிக்கை விட்டுக்கொண்டிருக் கிறார்கள். அதை புஞ்சையாக மாற்றுவதில் சிக்கல் ஒன்றும் இல்லை என்று எஞ்சினீயர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். புஞ்சையாக மாற்றினால் மேற்கொண்டும் 4,000 ஏக்கர் பயன்படும். அதனால் வெள்ளக்கோவில் வட்டாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகிய புதுப்பை கிராமம் பயன்பெறும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, புஞ்சையாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூலனூரிலே நல்லதங்காள் ஓடை ஸ்கீம் இருக்கிறது. முதலில் ஆறு டாங்க்ஸ் ஸ்கீமாகப் போட்டார்கள். பிறகு ஃபீசிபிலிட்டி இல்லை என்று சொல்லி அணையாக கட்டி, பாசனம் செய்யலாம் என்று பரிசீலனை செய்துகொண்டிருக் கிறார்கள். கடந்த 9 ஆண்டுகாலமாகவே அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த ஆண்டிலாவது இத்திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூலனூர் வட்டாரத்திலே நிறைய குளம் குட்டைகள் கட்ட வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதி மக்களும் அதுபற்றி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ அந்தத் திட்டம் அங்கு நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ...

1978 மார்ச் 11] [திரு. து. ராமசாமி]

வட்டாரம் நல்லமுறையில் முன்னேற்றமடைய, குளம் குட்டைகள் அமைக்கும் திட்டத்தை மூலனூர் வட்டாரத்தில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதி ஆற்றிலே புதிய வாய்க்காலில் 'லைனிங் ஸ்கீம்' என்று ஒரு ஸ்கீம் போட்டார்கள். அதன் மூலம் இன்னும் சுமார் 5,000 ஏக்கர் பாசன வசதி பெறும் என்று முடிவு செய்யப்பட்டு, பல ஆண்டுகளாக அந்தத் திட்டம் முடிவுறாமல் இருக்கிறது. இதுவரை 14 மைல் தூரத்திற்கு தான் 'காங்கிரீட்' போட்டிருக் கிறார்கள். இன்னும் 15 மைல் காங்கிரீட் போடவேண்டியிருக்கிறது. அந்தத் திட்டம் பல ஆண்டுகளாக செயலில் இருப்பதால், இன்னும் முடிவுறாமல் இருப்பதால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் அவதிப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்து, நிறைவேற்றி, மேலும் 5,000 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதியை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக் கின்றபோது இந்த நல்லார் திட்டத்தையும் சேர்த்து நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தில் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு மாமன்றத் தலைவர் அவர்களே, பாசன பொதுப்பணித்துறைக்கான மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் உயர நெல் உயரும் என்பது சான்றோர் வாக்கு. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் நதி நீரை தமிழகத்தின் கோவை மற்றும் தென் மாவட்டங்கள் பாசன வசதி பெற தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு நல்ல சூழ்நிலை உண்டாவதற்கு வழிவகை காண்கிற நிலையை நோக்கும்போது வறண்டு கிடக்கின்ற தமிழகத்தின் கோவை போன்ற பகுதிகள் வளங்கொழிக்கும் நிலம் ஆகும் என்பதில் ஐயமில்லை.

காடம்பாறை திட்டத்தை முந்தைய அரசு ஆட்சி செய்த காலத்தில் சில கோடி ரூபாய்கள் செலவு செய்து பின் அத்திட்டத்தை கைவிட்டுவிட்டது. நமது அரசு அத்திட்டத்தை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது. இது பட்டிதொட்டியில் உள்ள மக்களுக்கு புரட்சித் தலைவர் கொண்டு வந்துள்ள, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் நல்லதொரு திட்டமாகும். முன்பு சிறு பாசனம், பெரும் பாசனம் ஆகியவற்றில் பெரும் பணம் வீணாக்கப் பட்டதை நாம் கண்டிக்கிறோம். மீண்டும் அத்தவறுகள் ஏற்படா வண்ணம் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில், கிணத்துக்கடவு தொகுதியில் மன்றாம்பாளையம், பணப்பட்டி ஐக்கார்பாளையம், சிட்டுசுராம்பாளையம் வடக்கிபாளையம், கோயிந்தன்னூர் புரய பாளையம் ஆகிய இடங்களில் ஏற்கனவே இருக்கும் அணையை சீர்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியாகிய கிணத்துக்கடவு மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கு இரண்டு வாய்க்கால் வெட்ட முன்பு தீர்மானிக்கப்பட்டது. 1975-ல் கோவையில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடந்தபோது அப்பகுதியில் வாய்க்கால் கொண்டு வருவதாகக் கூறி லட்சக் கணக்கில் அங்குள்ள ஏழை எளிய மக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கப்பெற்றது. அங்கு பிறகு ஆரம்ப வேலைகள் நடந்ததோடு அது நின்றுவிட்டது. இந்த அரசு அந்தத் திட்டத்தை, நின்று விட்ட அந்தத் திட்டத்தை வருகின்ற ஏப்ரல், ஜூன் மாதங்களில் அப்பகுதியில் ஏழை எளிய மக்கள் வேலை இல்லாமல் திண்டாடு கின்ற நோக்கில் அப்பகுதியில் உள்ள மக்களின் நல்வாழ்வுக்காக வேலை இல்லாத நேரங்களில் வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தின்படி புளியம்பட்டி, கோட்டாம்பட்டி, ஆச்சிபட்டி, பொன்னைவரம், நல்லிக் கவுண்டம்பாளையம் வழியாக ஒரு வாய்க்காலை வெட்டித்தர அடிக்கல் நாட்டித் தர வேண்டிக் கொள்கிறேன்.

சக்கார்பாளையம், காட்டம்பட்டி, மன்றாம்பாளையம், வடசித்தூர், மந்தி கவுண்டன்புதூர், கோதவாடி வழியாக விடப்பட்ட அந்த வாய்க்காலை வெட்டித்தர இந்த அரசு முன் வந்ததற்கு அப் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் புரட்சித் தலைவரவர்களுக்கு விழாக்கோலம் எடுப்பார்கள்.

அதுமட்டுமல்லாமல் நெகமம் பகுதியில் இருந்து மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆற்றைத் தடுத்து இரண்டு குளம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணத்துக்கடவு தொகுதியில் கப்பளாங்கரை, செட்டிக்கா பாளையம் வழியாக மேற்கு நோக்கி செல்லும் ஆற்றிலும் இரண்டு குளம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்படி திட்டங்களுக்கு எல்லாம் அனுமதி அளித்த புரட்சித் தலைவருக்கும் இந்த அரசுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றிதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தை அதி வேகமாகவும், அதி விரைவாகவும் நிறைவேற்றித்தர, முன்வந்த பொதுப்பணித்துறை அமைச் சருக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரிய குளத்தில் 'சோற்றுப்பாறை' அணை திட்டம் பல ஆண்டுகளாகக் கவனிப்பாரற்று கிடந்தது. அதை நம் அரசு எடுத்து அணைக் கட்டி அந்தப் பகுதி மக்களுக்கு விவசாயத்தைப் பெருக்குவதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

* திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, பாசனம் பொதுப்பணித் துறை தலைப்பின்கீழ் வந்திருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களை வழங்குகின்றேன். பொதுப்பணித் துறையை இரண்டாகப் பிரித்து பாசனம், கட்டடங்கள் என்று பிரித்து அதைச் செயல்படுத்துவதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது ஓரளவிற்கு நல்லதொரு முறையாக இருந்தாலும் நிர்வாகச் செலவு அதிகப்படியாகும்.

அடுத்து டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் விவசாயிகள் கருத்தரங்குகள் அடிக்கடி கூட்டப்பட்டு அங்கு விவசாயிகள் நேரடியாக தங்கள் தங்கள் குறைகளையெல்லாம் எடுத்துக் கூறுவதைக் கேட்டு, வடிகால்கள், வாய்க்கால்கள் போன்ற விஷயங்களில், அவற்றிற்கு உடனடியாக முடிவுகள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு வந்தது. ஆனால் அந்த நிலை இடையில் நிறுத்தப் பட்டிருந்தாலும் மீண்டும் விவசாயிகளின் கருத்தரங்குகள்

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1978 மார்ச் 11

அல்லது மாநாடுகள் கூட்டி அரசு அந்த இடத்திலேயே சில பிரச்சினைகளை தீர்க்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, என் தொகுதி வேதாரண்யம் தொகுதி. அங்கு பெரும்பாலும் வானம் பார்த்த பூமிகளாகத்தான் இருக்கின்றன. அதோடு கடலோரப் பகுதிகளாகவும் இருப்பதால் நிலநீர் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து அந்தப் பகுதிகளில் கீழே இருந்து தண்ணீர் எடுக்கக்கூடாது என்ற வகையில் அந்த இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஒரு அறிக்கை வந்திருக்கிறது. அதனால் அந்தப் பகுதிகளில் கிணறுகள் தோண்டமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோடை காலத்தில் அங்கே ஆடுமாடு களுக்கு, ஏன் மனிதர்களுக்குக் கூட தண்ணீர், கிடைக்க சரியானபடி தண்ணீர் வசதி இல்லை. ஆகவே அந்தப் பகுதியில் இந்த அரசு ஒரு திட்டத்தை வகுத்து, உப்புநீரை கீழேயிருந்து மேலே கொண்டுவருவதைத் தடுப்பதன் மூலமாக, நல்ல தண்ணீரை அந்தப் பகுதியில் செலுத்துவதன்மூலமாக அந்தப் பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் எல்லாம் நல்லமுறையில் காப்பாற்றப் படும்விதத்தில் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மேலே இருக்கிற ஆற்றுநீரைச் செலுத்தி அந்தப் பகுதியில் வாய்க்கால்கள் மூலம் அல்லது வேறு வழியில் செலுத்துவதன் மூலம் அந்த நிலங்கள் நல்லமுறையில் அமையச் செய்யவேண்டும்.

அடுத்து, அடப்பாற்றிலிருந்து அவிரிக்காடு கிராமத்து ஓரமாக வாய்க்கால் வெட்டி வேதாரண்யம் பகுதிக்கு தண்ணீர் கொண்டு போக பல ஆண்டுகளுக்கு முன் ஒரு திட்டம் இருந்ததாகத் தெரிகிறது. அதை இந்த அரசு ஆராய்ந்து பார்த்து தக்க முடிவை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இப்போது இருக்கிற ஏரி, குளங்களை சீர் செய்து மழைக்காலத்தில் தண்ணீரைத் தேக்கிவைத்து பாதுகாத்தால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் சமாளிக்கமுடியும். அதற்கும் இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடிகால் பிரச்னை என்பது அந்தப் பகுதியில் ஒரு நீண்டகாலப் பிரச்னையாக இருந்துகொண்டிருக்கிறது. தலைஞாயிறு, கொத்தங்குடி, தொழுதூர், முத்தரசபுரம், சித்தாமூர், போன்ற

1978 மார்ச் 11] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

இடங்களில் வடிகால் வசதி இல்லாததன் காரணமாக இந்த ஆண்டு விவசாய விளைபொருள்கள் உற்பத்தி செய்தும், அதற்காகப் பணம் செலவு செய்தும் அந்தப் பணம் எல்லாம் வீணாகப் போய்விட்டது என்று அந்தப் பகுதி மக்கள் அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது நிறைய மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றைப் பரிசிலனை செய்து அங்கு வடிகால் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாலைந்து ஆண்டுகளுக்கு முன்னால் சக்கிலியன் வாய்க்கால் என்ற திட்டத்தை ஏற்படுத்தப் போவதாக சொன்னார்கள். அதில் ஓரளவு வேலையும் நடந்தது. இப்போது எந்த வேலையும் இதற்காக செய்யப்பட்டிருப்பதாக தெரியவில்லை. என்ன காரணத்தினாலோ அது விடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை விட்டுவிடாமல் விரைவில் இந்தத் திட்டத்தை முடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைஞாயிறு பகுதிகளைப்பற்றி அந்த இடங்களை எல்லாம் இந்த வருடம் அதிகாரிகள் வந்து நேரில் பார்வையிட்டார்கள். அந்தப் பகுதி முழுவதும் வெள்ளக்காடாக இருக்கின்றது. விவசாயிகள் எல்லாம் மிகவும் தொல்லைகளுக்கு ஆட்பட்டு விவசாயம் செய்த பொருள்களை வீணாக இழந்திருக்கிறார்கள். இதையும் அதிகாரிகள் பார்வையிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளில் வடிகால் பிரச்னைகளை உடனடியாக தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் இறவைப் பாசனத் திட்டங்கள் ஏற்படுத்துவதற்காக கோவில்பத்து, மருதூர், செட்டிக்குளம் இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் எல்லாம் கையெழுத்திட்டு, பத்திரங்கள் எழுதி தலைமை செயலகத்துக்கு வந்தது. ஆனால் இதில் அந்தத் திட்டத்தை காணவில்லை. அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகவே இந்த இறவைப் பாசனத் திட்டங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். அதோடு இப்போது இருக்கின்ற இறவைப்பாசனத் திட்டங்களில், வாய்மேடு, தென்னடார், தகட்டூர் இந்த இடங்களில் எல்லாம் சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கிறது. பல இடங்களில் ரிப்பேர் ஆகியிருக்கிறது. இதை எல்லாம் சீர் செய்து, அங்கிருக்கின்ற மெயின் வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள் இவைகளை எல்லாம் சீர் செய்தால் மிகவும் பயனுள்ளதாக

இருக்கும். அத்துடன் இந்த இறவைப்பாசனத்திட்டங்களில் உள்ள மோட்டார்கள் ரிப்பேர் செய்யப்படவேண்டும். இவற்றிலுள்ள இரண்டு மூன்று மோட்டார்கள் வேலைசெய்கின்றன, பெரும்பாலான மோட்டார்களில் ரிப்பேர் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த மோட்டார்களில் எல்லாம் ரிப்பேர் செய்து கொடுப்பதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.

* திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த பாசன மான்யத்தின் மீது எனது கருத்துரைகளை வைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக விவசாயத்திற்கு அடிப்படையாக இருக்கின்ற நீர்ப்பாசனத்தைப் பொறுத்தமட்டில், உயரிய நோக்கோடு, காகிதத்தில் மட்டும் இனிப்பாக இல்லாமல், நடைமுறையில் செயல்பட இருக்கின்ற பல திட்டங்களை இந்த கோரிக்கையில் அடக்கியிருக்கிறார்கள். இந்த கோரிக்கையைப் பார்க்கும்போது, இதுவரை தீர்க்கப்படாது இருந்த காவேரி நீர்ப் பிரச்னையை தீர்ப்பதற்கு மூன்று மாநிலங்களின் மேல்மட்ட கூட்டத்தை கூட்டுவதற்கு இந்த அரசு மைய அரசை கேட்டுக்கொண்டிருப்பது மிக முக்கியமான அம்சமாகும்.

அடுத்தபடியாக, சென்னை நகரத்திற்கு 15 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள ஒரு திட்டத்தை உருவாக்கி அதற்கான உடன்பாடு செய்துள்ளது உண்மையில் கடந்த ஆண்டு ஏற்படுத்திய மிக முக்கியமான அம்சமாகும்.

அதற்கடுத்தபடியாக, வறண்ட பாலைவனப் பிரதேசமாக இருக்கின்ற முகவை, மதுரை, கோவை மாவட்டங்களில் நீர்ப் பாசன வசதியைப் பெருக்குவதற்காக மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை கிழக்கு நோக்கி திருப்பிவிடுவதற்கான திட்டங்களுக்கு அடிப்படையாக இருக்கின்ற சில உடன்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்திருப்பது, அதாவது மேற்கு நோக்கிப்பாயும் ஆறுகளை திசை திருப்பி விடுவதால் பலன் பெறும் என்ற எண்ணத்தில் செயல்படும் நடவடிக்கையாகும்.

இந்த நோக்கில் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பெரியகுளம், கம்பம், தேனி, ஆண்டிப்பட்டி பகுதிகளுக்கு வாய்ப்பாக இருக்கும் விதத்தில், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளாக இருப்பதில் குறிப்பாக—அப்பர் பெரியாறு திட்டத்தில் இருக்கின்ற இரிகேஷனுக்கு பயன்படுத்துகின்ற ஏரி நீரை—இதில் 230 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. இதில் 10 டி.எம்.சி. தண்ணீரை பெரியாறில் கொண்டு வந்து விட்டு, அங்கிருந்து மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கும் பகுதிகள் பயன்படும் அளவில், ஆண்டிப்பட்டித் தொகுதி, கம்பம் தொகுதி, தேனீ தொகுதி, பெரியகுளம் தொகுதி இப்படிப்பட்ட பாலைவன மாக இருக்கின்ற பகுதிகளில் எல்லாம் 20 ஆயிரம், அல்லது 25 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற அளவில், திட்டம் வகுத்து, கட்டுப்படியாகின்ற அளவில், பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் இதை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அதற்கு அடுத்தபடியாக, இந்தக் கோரிக்கையிலே சிலபல திட்டங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நீர்ப்பாசன கமிட்டிகளை ஏற்படுத்தி, அந்தந்தப் பகுதிகளிலே உள்ள நீர்ப் பாசனக் குறைகளைப் போக்குவதற்காக எம்.எல்.ஏ., எம்.பி., எம்.எல்.சி., இன்னும் விவசாய வல்லுனர்களை உள்ளடக்கிய கமிட்டியை அமைத்து அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பிரச்னையை உடனடியாகத் தீர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, 100 ஏக்கர் ஆயக்கட்டு உள்ள குளங்களை மட்டும் இப்போது பொதுப் பணித் துறையினர் சீரமைக்க எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 100 ஏக்கர் என்பதை 50 ஏக்கராகக் குறைத்து, 50 ஏக்கருக்கும் அதற்கு அதிகப்பட்ட ஆயக்கட்டு உள்ள குளங்களை செப்பனிட்டுப் பராமரிப்பதற்கு பொதுப்பணித் துறையினர் முன்வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குளங்களைப் பராமரிப்பது என்கிற நிலைமை வரும் போது, தமிழகத்திலே ஒரு ஆச்சரியப்படத்தக்க நிலைமை இருந்து வருகிறது. குளங்களின் கரைகள் பொதுப்பணித் துறைக்குச்

சொந்தமாக இருக்கிறது. ஆனால் அதனுடைய நீர்ப்பிடிப்பு பகுதி ரெவின்யூ இலாகாவிற்குச் சொந்தமாக இருக்கிறது. இது ரெவின்யூ இலாகாவிற்குச் சொந்தமாக இருப்பதால், இந்த நிலத்திலே ஆக்கிரமிப்பு ஏற்படுகிறது. அந்த ஆக்கிரமிப்புப் பகுதிகளை காலி செய்வதற்கு பொதுப்பணித் துறையிலே உள்ள உதவி என்ஜினியருக்கோ அல்லது வேறு அலுவலருக்கோ அதிகாரமில்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இதை பொதுப்பணித் துறையினருக்கு ரெவின்யூ இலாக்காவின் பராமரிப்பிலே இருந்து வருகின்ற நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மாற்றி கொடுப்பதற்கு இந்த அரசு புதிய முறையிலே சிந்திக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, திட்டத்தை ஆய்வு செய்யும்போது, பழைய முறைகளை மாற்றி, ஏக்கருக்கு 3,000 என்பதை மாற்றி, புதிய முறையிலே திட்டங்களை செயல்படுத்தவேண்டும். இன்றைக்கு இந்தத் திட்டம் அதிகம் அன்-ரெம்யுனரேடிவ்வாக இருக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக, பல திட்டங்கள் கிடப்பில் போட்ப்பட்டு வருகின்றன. அப்படியெல்லாம் இது அன்-ரெம்யுனரேடிவ்வாக இருக்கிறது என்பதையெல்லாம் பார்க்காமல், விவசாயப் பெருங்குடி மக்களுக்காக செய்யப்படும் திட்டங்களாகக் கருதி, கட்டுப்படியாகிறதா என்பதையெல்லாம் பார்க்காமல் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சிறப்பு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 400 லட்சத்திற்கு திட்டங்கள் கொடுத்திருப்பது பாராட்டுதலுக்குரியது. என்னுடைய தேனித் தொகுதியிலே சண்முகா நதி, கூத்தநாச்சி ஆகிய ஆறுகளில் நீர்த்தேக்கம் அமைத்து, ஓடைப்பட்டி, எரசக்க நாயக்கனூர், அப்பிபட்டி, ஓவுலாபுரம் ஆகிய பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

உடைந்துபோன பழுதுபட்ட வள்ளல் நதி அணையினை திப்பரேவு என்ற மேல்மட்ட நிலையில், பாறை உள்ள இடத்தில் ஏற்படுத்தி, இடதுபக்கக் கால்வாய் வெட்டி, லட்சுமிபுரம், குப்பிநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, நாராணபுரம் ஆகிய வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரவேண்டும்.

அதேபோல், அல்லிநகரம் கிராமத்தில் வீரப்பய்யனூர் ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

அதேபோல், ஊஞ்சாம்பட்டி கிராமத்தில் சிறு ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டுகிறேன்.

அதேபோல், இப்போது நடந்து வருகிற பி.டி.ஆர். கால்வாய்த் திட்டத்தில், காண்டூல், சமமட்டக் கால்வாய்த் திட்டத்தை வேப்பம்பட்டி, தர்மாபுரி, காட்டுநாயக்கன்பட்டி, தப்புகுண்டு, தாடிச்சேரி, சிவலிங்கநாயக்கன்பட்டி, கொடவிலார்பட்டி வரை ஏற்படுத்தி, புஞ்சைப் பகுதிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் சிரமைப்பால் சேமிக்கப்படும் 45,000 ஏக்கர் நிலப் பாசன நீரில் 10,000 ஏக்கருக்கான நீரை தேனிப் பகுதியின் வறட்சிப் பகுதிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு திட்டம். சோத்துப்பாறை, குப்பாம்பாறை, வெளவாத் துறைத் திட்டங்கள் பல ஆண்டுகளாக, பல அரசியல் வாதிகளால், பல அமைச்சர்களால் போடப்பட்டு, கைவிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை பொருளாதார அடிப்படையிலே பார்க்காமல், அது அங்குள்ள மக்களுக்குப் பயன்படுகின்ற ஒரு திட்டம் என்கிற முறையில், என்றைக்கும் அது ஸ்டான்டிங் (Standing) மான்யூமெண்டாக (Monument) இருக்கின்ற வகையிலே செய்தால், பெரியகுளம் பகுதியிலே உள்ள மக்கள் பயனடைகின்ற வகையிலே 3,500 ஏக்கர் புஞ்சை நஞ்சையாகவும், 5,000 ஏக்கர் புஞ்சை ஆயக்கட்டுக்கும் பயன் ஏற்படும். எனவே, இந்தப் பயன்களைக் கருதி, பொருளாதார அடிப்படையை மாற்றி, அதற்கான யார்ட்ஸ்டிக்கை மாற்றி, நல்ல பலன் தரக்கூடிய இந்தத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மான்ய கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப்பணித் துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மேற்கண்ட அறிக்கையிலே, தமிழ்நாட்டில் பாசன வசதி சம்பந்தப்பட்ட அம்சங்களில் எந்த அளவுக்கு நீர் வரத்து வசதியிருக்கிறது. வரக்கூடிய எதிர்காலத்தில் தமிழகத்திற்குப் பாசன

வசதிகள் சீரிய முறையில் இயங்கி, சீராகச் செம்மைப்படுத்தப்பட வேண்டுமென்றால், இப்படிப்பட்ட நடைமுறையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற அம்சங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அப்படிக் கூறப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் குறிப்பாகச் சில அம்சங்களைப் பற்றி, தமிழகத்திலுள்ள யதார்த்தமான நிலைமையைக் கணக்கில் கொண்டு, கிராமப்புற மக்கள், விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய அடிப்படையில் இந்த அரசு சரியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு கீழ்க்கண்ட விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, காவிரி ஆற்று நீர்ப்பாசனம் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கக்கூடிய தஞ்சை காவிரி ஆற்றை நம்பித்தான் இருக்கிறது. அந்த நெற்களஞ்சியம் நிலைத்து நிற்க வேண்டுமென்றால், தஞ்சை விவசாயிகள் உயிர் வாழவேண்டுமென்றால், தமிழக மக்களுக்கு உணவு சரியானபடி காலாகாலத்தில் கொடுக்க வேண்டுமென்றால் காவிரி ஆற்று நீர்ப்பாசனத்தைச் செழுமைப்படுத்தும் அளவுக்குச் சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் எந்த அளவுக்குத் தண்ணீர் கிடைத்து வந்ததோ அந்தத் தண்ணீர் தொடர்ந்து கிடைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே பரவலாக பல்வேறு பகுதிகளிலும் இருக்கக்கூடிய நீரூற்றுகளைக் கண்டு பிடித்து அரசுக்குச் சொந்தமான இடங்களிலும், கோவிலுக்குச் சொந்தமான இடங்களிலும் பொது குழாய்க் கிணறுகள் ஏற்படுத்திப் பரவலாக ஏழை சிறு நில விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த மாவட்டத்தில் நிலத்தடி நீர் எந்தெந்த கிராமங்களில் எவ்வளவு இருக்கிறது என்று கிராமவாரியாகச் சர்வே செய்து நிலத்தடி நீரின் அளவையும் கண்டுபிடிக்க வேண்டும்.

மேற்கு நோக்கிச் செல்லக்கூடிய ஆறுகள் சம்பந்தப்பட்ட வரை எந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்தியாகிவிட்டது. இன்றைக்குத் தமிழகத்தில் எஞ்சி

இருக்கக்கூடிய தண்ணீரை, ஆறுகளில் கிடைக்கக்கூடிய தண்ணீரை முறையாகப் பயன்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா? கேரள மாநில அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி மேற்கு நோக்கிச் செல்லக்கூடிய நதிகளின் எஞ்சிய தண்ணீரை எந்த அளவுக்குப் பெறுவது என்பதோடு கூட, அதே நேரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் நமக்குச் சாத்தியமாக இருக்கக்கூடிய, தண்ணீர் கிடைக்கக்கூடிய பகுதியில் இன்றைக்கு இருக்கக்கூடிய தண்ணீரை முறையாகப் பயன்படுத்த சரியான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் கணக்கிட்டால் கோவை மாவட்டத்தில் குந்தா நீர்ப்பாசனத் திட்டம் ஒரு கேந்திரமான பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையில் எந்தவிதமான பதிலும் சொல்லாமல் அரசு இருக்கிறது. ஏற்கனவே இருந்த மத்திய அரசு இந்தத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதாகச் சொல்லி மத்திய அரசு நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. கே. எல். ராவ் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்—குந்தா நீர்ப்பாசனத் திட்டத்தில் நீலகிரி மலைத் தொடர்ச்சியில் இருக்கும் நீரை முறையாகப் பயன்படுத்திக் கொண்டால் கோவை மாவட்டத்தில் கோவை, அவனாசி, பல்லடம் தாலுகாக்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்று தற்போது இங்கு எம்.எல்.ஏ.-வாகவும், இதற்கு முன்பு எம்.பி.-யாகவும் இருந்த தோழர் ரமணி அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள். டி.ஓ. எண் டி.டபிள்யூ 11910/67, தேதி 7—7—1967. அந்தத் திட்டத்தைப் புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதனுடைய தொடர்ச்சியாக ஏற்கனவே காலம் சென்ற மாண்புமிகு அமரர் அண்ணாதுரை அவர்கள் முதல்வராக இருந்த அன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சரகத்திலிருந்து ரமணிக்கு அனுப்பிய கடிதத்தில் செயலாளர் திரு. எஸ். ரங்கநாதன் கையெழுத்துப் போட்டிருக்கிறார். கடித எண் 3445 எஸ் 2/68-1 என்ற கடிதத்தில் குந்தா நீர்த் தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார். தொடர்ந்து பரிசீலனை நடந்து, ஆய்வுகள் நடந்து நீர்ப்பாசன எஞ்சினியர் காரமடையில் முகாமடித்து சர்வே நடத்தி கற்கள் நட்டப்பட்டு வாய்க்கால்களின் அளவும் எடுக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர்

இருந்தும் அதன் மீது கவனம் செலுத்தாமல் இருப்பது அந்த மாவட்ட விவசாயிகள் மத்தியில் ஒரு மிகப் பெரிய வேதனையை உண்டாக்கி இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நொய்யல் பவானி ஆறுகள் இணைப்புத் திட்டம் இருப்பதாகப் பொதுப்பணித் துறை அதிகாரிகள் மத்தியில் பேசப்படுகிறது. பொதுவாக கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட திட்டத்தை அமலாக்கினால் மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யக்கூடிய மழையின்போது எஞ்சிய தண்ணீர் கோவை மாவட்டத்திற்குப் பயன்பட வாய்க்கால்கள் வெட்டி, குளங்கள் வெட்டித் தண்ணீர் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்தபடியாக சிறு சிறு ஏரிகள், குளங்கள், குட்டைகள் மூலம் நடைபெறும் பாசனம் சம்பந்தப்பட்ட வரைக்கும் எந்த அளவுக்கு முறைப்படுத்தவேண்டுமோ அந்த அளவுக்கு முறைப்படுத்தவேண்டும். ஆறுகளின் போக்கு முறையை சரியாக அமைக்க வேண்டும். அடிக்கடி மணல் மண் தேங்கியிருக்கிறது, அங்கங்கே அதன் காரணத்தால் தண்ணீர் வழிந்து ஓடக்கூடிய நிலைமை இருக்கிறது, வாய்க்கால்கள், குளங்கள், அணைகள் இவைகள் எல்லாம் அடிக்கடி மணல் மேடிட்டு விடுகின்றன, இவைகளை எல்லாம் போக்குகின்ற முறையிலே காலாகாலத்தில் தூர் எடுத்து போதிய அளவிற்கு தண்ணீர் அணைகளிலே இருக்கக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால்தான் அணைகளிலே தண்ணீர் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பு இருக்கும். பாசனவசதிக்கும் சரியான வாய்ப்பு இருக்கும், அதன் மூலம் கிணறு ஊற்று பெருகுவதற்கும் வாய்ப்பு இருக்கும். இப்போதுள்ள நிலையில் இதைத்தவிர வேறு மார்க்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்திலே மன்னார்குடி திருமேனி ஏரி 720 ஏக்கர் பரப்பளவுள்ளது, அது சரியாக பராமரிக்கப்படவில்லை, அது பராமரிக்கப்பட்டால் 3,500 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும். இப்போது அது மண்மேட்டு இருக்கிறது, பாசன வசதிக்கு லாயக்கற்றதாக உள்ளது. அந்த ஏரியை தூர் எடுத்து பாசன வசதிகளை சரியாக அப்பகுதியில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே மன்னார்குடி தொகுதியிலே வடவாறு வாய்க்கால் 35 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி கொடுக்கக் கூடியது. அந்த வாய்க்காலை இப்போது விஸ்தரித்து இருக்கிறார்கள். பாசன வசதியை விஸ்தரித்து இருக்கிறார்கள். ஆனால் அந்த வாய்க்காலில் அதிகமாகத் தண்ணீர் போகக்கூடிய முறையிலே சரியான வாய்க்காலாக மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அதிகமாக தண்ணீர் போக முடியாத காரணத்தால் கடைக்கோடியிலே உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அதையும் நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, பழனியிலே மருதா நதி அணைத்திட்டத்திலே பாப்பான் வாய்க்கால் இருக்கிறது, அது சாதாரண வாய்க்காலாக இருக்கிறது. அதை ஆழப்படுத்தி அதிகத் தண்ணீர் ஓடுமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகரத்தின் மத்தியிலே ஓடிக்கொண்டிருக்கிற சங்கனூர் பள்ளத்தில் வெள்ளக் காலத்தில் தண்ணீர் பெருக்கெடுத்துவிடுகிறது. வெள்ளம் ஏற்படும்போது கோவை சிங்காநல்லூர் நகரத்தை அடித்துச் செல்கிறது. அதன் காரணமாக 2 லட்சம் மக்கள் வாழக் கூடிய இடங்களில் நீர் புகுந்து சேதத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே சங்கனூர் பள்ளத்தைத் தடுத்து, திருப்பி சின்னவேடம்பட்டியிலே ஒரு குளத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஏற்படுத்தினால் ஆயிரம் ஏக்கர் பாசன வசதி கிடைக்கும். நூறு கிராமங்களில் கிணறுகளுக்கு அதன் மூலமாக அடி ஊற்று கிடைக்கும். அது மட்டுமல்ல. அந்தப் பகுதி கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையையும் அது தீர்க்கும் மார்க்கமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கட்டடங்கள் மராமத்துபற்றி சொல்ல வேண்டுமானால் கட்டடங்கள் கட்டப்படுகிறபோது சரியான முறையில் கட்டப்படவேண்டும். அப்படிக் கட்டாத காரணத்தாலே ஒரு வெள்ளம் வந்தால் அடித்துத் தட்டி விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சமீபத்தில் மழையால் செங்காம்பாளையம் அணை, கரையான் பாளையம் அணை இவைகளிலே பல இடங்களிலே உடைந்து இருக்கிறது, அதன் காரணமாக பெரும் சேதமும் போக்குவரத்தும் தடுக்கப்பட்டிருக்கிறது. செங்காம்பாளையம் அணையிலே தண்ணீர் தேங்கினால் ஏர் பைப்பிலே

தண்ணீர் போவது போல் போகிறது, அணை உடைந்துவிட்டால் அங்கேயுள்ள கிராமங்கள் எல்லாம் பாழாகிவிடும், உயிர்கள் இழக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தவேண்டும்.

அடுத்து, விளாங்குறிச்சி கிராமத்திலே ஒரு பாலம் உடைந்திருக்கிறது, சரிப்படுத்தவில்லை. அதையும் சரிப்படுத்த வேண்டும்.

அடுத்து, சித்ராவிற்கு பக்கத்திலே ஒரு பாலம் கட்டவேண்டுமென்பது 15 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய கோரிக்கை ஆகும். அந்த பஞ்சாயத்து யூனியனே அதை சொந்தச் செலவிலே கட்டிக்கொள்கிறோம் என்று சொல்லியும்கூட அனுமதியில்லை. ஆகவே உடன் பாலம் கட்ட நெடுஞ்சாலை இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையில் மருத்துவக் கல்லூரி நகரத்தை விட்டு 5 மைல்களுக்கு அப்பால் என்னுடைய தொகுதிக்குள் இருக்கிறது. ஆனால் ஆஸ்பத்திரி ஐந்து மைலுக்கு அப்பால் நகரத்தில் இருக்கிறது. அந்த மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு ஐந்து மைலுக்கு அப்பால் இருக்கிறது.

அந்த மருத்துவக் கல்லூரிக்கு 600 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டடம் கட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு எல்லாவிதமான முயற்சியும் செய்து அது இன்னும் நடக்கவில்லை.

கோவை நகரில் உள்ள ஆஸ்பத்திரியில், பாவம், இட்டிலி இரண்டு வருஷங்களாக நோயாளிக்குக் கிடைக்கவில்லை. காரணம், இட்டிலிக்கு மாவு ஆட்டும் கல் உடைந்து ரிப்பேராகி விட்டது. அதனால் இரண்டு வருஷங்களாக நோயாளிகளுக்கு இட்டிலி கிடைக்கவில்லை. டாக்டர்களையும், அதிகாரிகளையும் கேட்டால், இது எங்கள் இலாக்கா சம்பந்தப்பட்டது இல்லை, பொதுப்பணித்துறை இலாக்கா சம்பந்தப்பட்டது என்று சொல்கிறார்கள். இப்படி மாவு அரைக்கும் கல்லை மாற்றிக்கொடுக்காத காரணத்தால் அங்கு இரண்டு வருஷங்களாக நோயாளிகளுக்கு இட்லி கிடைப்பதில்லை. அங்கு பல கட்டிடங்களின் மேலே கம்பி

கட்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. கம்பிதான் போடப்பட்டிருக்கிறது. ஒர்க் ஆர்டர் கொடுக்காததால் வேலை துவக்கப்படவில்லை. அதன் காரணமாக நோயாளிகள் தங்குவதற்கு இடவசதியில்லாமல் பெரிய நெருக்கடி சூழ்ந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 800 பெட்தான் இருக்கிறது. ஆனால் அங்கே 1,700 நோயாளிகள் தினசரி அட்மிட் ஆகிறார்கள்.

அதேபோல் அங்கே டாக்டர்களுக்கு தேவையான சாதனங்கள் இல்லை. யாருக்காவது மண்டையில் அடிபட்டு மூளை பாதிக்கப்பட்டிருந்தாலோ, கார் அல்லது மோட்டார் ஆக்சிடெண்ட் ஏற்பட்டாலோ அவர்கள் உயிர் பிழைக்க வேண்டுமென்றால் மதுரைக்குச் செல்ல வேண்டும் அல்லது சென்னைக்கு வர வேண்டும். அதற்குள் வழியிலேயே அவர்கள் செத்து விடக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது.

எனவே ஆக்சிடெண்டுகளைக் கவனிப்பதற்கு பிரத்தியேகமான பிரிவுகளை கோயம்புத்தூரில் ஏற்படுத்த வேண்டும். அதை இன்னும் ஏற்படுத்தாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் என்னுடைய நண்பர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர் கிருஷ்ணசாமி, கிழக்கு தொகுதியில் அமைப்பாளராக இருந்தவர், காரில் அடிபட்டு சீரியஸாக ஆகி போதிய சிகிச்சை அளிக்க முடியாத காரணத்தால் உயிரிழந்தார். அதனால் பொறுப்பான ஒரு தோழரை இழந்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், இதையெல்லாம் கணக்கில் கொண்டு கோவை மருத்துவ மனையில் தேவையான வசதிகளை ஏற்படுத்த எதிர்காலத்தில் தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. க. நாச்சிமுத்து :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, பாசனம் மற்றும் பொதுப்பணிகள்-கட்டடங்கள் மீதான மானியக்கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாசனம்-கட்டடங்கள் மீதான இந்த நிதிநிலை அறிக்கையில் பாசனத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக,

[திரு. க. நாச்சிமுத்து] [1978 மார்ச் 11

கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பல நாட்களாக அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருந்தார்கள். இந்த அரசு குறிப்பாக, முதலமைச்சரவர்களும், நிதியமைச்சரவர்களும், விவசாயத்துறை அமைச்சரவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சரவர்களும் கோவை மாவட்டத்தின் மக்களுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று இந்த பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை இந்த அறிக்கையிலே விஸ்தரிப்பு செய்வதற்காக ஒரு இலட்சத்து இருபதாயிரம் ஏக்கர்கள் பாயும் அளவிற்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்றார்கள். அதைப் பெரிதும் பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் ஏற்கனவே இந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் பாய்கின்ற பகுதிகளில் சிலயிடங்களில் மதகுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று விவசாயிகள் கூறுகிறார்கள். பொதுவாக 50 ஏக்கருக்கு ஒரு மதகு என்றால், அந்தப் பகுதியில் 30 ஏக்கர், 35 ஏக்கருக்கு தண்ணீர் பாயும் அளவிற்கு அந்த மதகுகள் அமைந்திருக்கின்றன. கூடுமானவரையில் அந்த மதகுகளை மாற்றியமைத்து அந்த மதகுகளுக்கு ஏற்றபடி, இருக்கின்ற அத்தனை ஏக்கர்களுக்கும் பாயக்கூடிய அளவிற்கு அந்த மதகுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே அந்த பரம்பிக்குளம்—ஆளியாறு பாயக்கூடிய பகுதிகளில் புஞ்சை விவசாயம்தான் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை பகுதிகளில் இரண்டு மூன்று போகம் நஞ்சை விவசாயம் செய்கிறார்கள். கூடுமானவரையில் இந்த அரசு அதை மாற்றி, பல்லடம், தாராபுரம் தாலுக்காக்களில் உள்ள புஞ்சை விவசாயிகளுக்கு தாராளவுக்கு தண்ணீர் குறைவாக இப்பொழுது வருகிறது—அப்படியில்லாமல் நஞ்சை விவசாயம் செய்யக் கூடியவர்களுக்கும், புஞ்சை விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கும் தண்ணீரைப் பகிர்ந்து கொடுத்து, பல்லடம், தாராபுரம் தாலூக்காக்களுக்கு தண்ணீர் குறையாமல் வரக்கூடிய அளவிற்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. க. நாச்சிமுத்து]

(முற்பகல் 11.00)

இந்த பல்லடம், தாராபுரம் வட்டங்களில் பரம்பிக்குளம்—ஆளியாறு பாயக்கூடிய பகுதிகளில் தண்டத்தீர்வை என்று போடப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு ஏக்கருக்கு 4 பாகம் தண்டத் தீர்வை வசூலிக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருக்கிற விவசாயிகள் அந்தத் தீர்வையை 3, 4 வருஷங்களாகக் கட்டாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இந்தத் தண்டத் தீர்வையை அரசு கண்டிப்பாக ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதை விவசாயிகள் பல நாட்களாகச் சொல்லி வருகிறார்கள். இந்தத் தண்டத் தீர்வையை மட்டும் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்காததால், அதிகமாக, தாராபுரம் பகுதியில் குண்டடம் ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி குண்டடம் ஒன்றியம். அந்தப் பகுதிக்கு விஸ்தரிப்புத் திட்டத்தை அதிக அளவு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் மீண்டும் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பழனி வட்டத்தில் பாப்பான்பட்டி என்ற கிராமத்திற்குப் பக்கத்தில், குதிரையாற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் கட்டுவதாக, ஏற்கனவே நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தது. இந்த அறிக்கையில் அதைப்பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் அந்த குதிரையாற்றின் குறுக்கே ஒரு நீர்த் தேக்கம் கட்டித்தர வேண்டுமென்று நான் இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சிகளிலே இருக்கிற சிறு பாசனங்களை, ஏற்கனவே இருந்த அரசு பல காலமாகப் புறக்கணித்தது. இந்த அரசு, ஊராட்சி ஒன்றிய சிறுபாசனங்களை மேம்படுத்த வேண்டுமென்ற குறிக்கோளில் ஒரு பணிக்குழு அமைத்து, அந்தப் பணிக்குழுவின் திட்டங்கள் செயல்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அப்பொழுது, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கும், சிறு பாசனங்களை நல்லமுறையிலே சீர் செய்யவும் ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. க. நாச்சிமுத்து] [1978 மார்ச் 11

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கோயம்புத்தூர் மாவட்டத்தில், குந்தா திட்டத்தையும் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தையும் நிறைவேற்றவேண்டுமென்று பல காலமாக அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்துகிறார்கள், கண்டிப்பாக, இந்த அரசு பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், குட்டைகள் எல்லாம் பல காலமாக சீர்செய்யப்படாமல் இருக்கின்றன. இந்த அரசு உடனடியாக அந்தக் குட்டைகளை எல்லாம் தூர் வாரி, சீர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே கருத்துக்கள் புரட்சி மிகுந்த அளவில், கிராமப்புற விவசாயிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது. குறிப்பாக, மாணிக்கம் எப்படி பிரகாசமாக அமைந்திருக்கிறதோ, அதுபோல் வறட்சியால் பாதிக்கப்பட்டு பல நாட்களாக இருளால் அவதிப்படுகிற விவசாயிகளுக்கு, இந்த அறிக்கை மாணிக்கத்தைப்போல் பிரகாசமாக அமைந்திருக்கிறது என்று கூறிக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

*** திரு. வி. ரகுராமன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பொதுப்பணித் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியத்தின்மீது எனக்குத் தெரிந்த கருத்துக்களை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுடைய வளர்ச்சிக்காக மிகவும் அக்கறையோடு இருக்கிறது.

எங்கள் சிதம்பரம் தாலுகாவைப் பொறுத்தமட்டில் நீர்ப் பாசனங்கள் பல இடங்களில் தடையாக இருக்கின்றன. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால், கொள்ளிடம், வீராணம், பரவனாறு போன்றவைகளில் கரைகள் பழுதடைந்து அந்தக் கரைகள் சரியான முறையில் செப்பனிடப்படவில்லை. அவைகளை நல்லமுறையில் செப்பனிட்டு, அந்தக் கரைகளை மீண்டும் பலப்

1978 மார்ச் 11] [திரு. வி. ரகுராமன்]

படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், புவனகிரி பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் அங்கு வெள்ளாற்றின் வெள்ளக்காலங்களில் வீணாகிப் போகின்றன. அங்கே வெள்ளத்தடுப்புச் சுவர் கட்டித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் திலைவிடங்கள், கீழ்ச்சாவடி, கிள்ளை போன்ற இடங்களில் உப்பு நீர் அதிகமாகப் பாய்ந்து விடுகின்ற காரணத்தால், அங்கே ஒரு ரெகுலேட்டர் அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் பாயக்கூடிய கான்சா வாய்க்கால் இருக்கிறது. அதற்கு முன் பாசனமாக இருக்கக்கூடிய புளியங்குடி தலைப்பு அடைக்கப்பட்டிருக்கிறது. அதைத் திறந்து புளியங்குடி தலைப்பு வழியாகத் தண்ணீர் விட்டால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று நல்ல முறையில் நவரை சாகுபடி செய்ய வசதியாக இருக்கும்.

மார்ச் 10-ம் தேதி மேட்டூர் மூடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மேட்டூர் தண்ணீரை மார்ச் பூராவும் திறந்து விட்டால் விவசாயிகள் தண்ணீர் பெறுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே மேட்டூர் அணையைத் திறந்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என் தொகுதியில் உள்ள பரங்கிப்பேட்டை, முட்லூர், பூவாலை, சின்னகொமட்டி, மணிகொல்லை, தச்சக்காடு போன்ற கிராமங்களில் உள்ள வாய்க்கால்கள் ஒவ்வொரு ஆண்டும் மண் மேடிட்டுப் போகின்றன. அந்த வாய்க்கால்களைச் செப்பனிட்டு கிராமங்களில் விவசாயம் நடத்த வகை செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் எங்கள் பகுதியில் உள்ள வீராணம் மிகவும் தூர்ந்து போய் இருக்கிறது. அதன் கரைகளைப் பலப்படுத்துவதோடு, வீராணத்தை தூர்வாரி தண்ணீர் கிடைக்க வகை செய்யும்படி இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காரமேடு, கீழ்திருக்கழிப்பாலை போன்ற கிராமங்கள் வெள்ளத்தால் மண்மேடிட்டு இருக்கிற இடமே தெரியவில்லை. பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய விவசாயிகள் அங்கு வாழ்

[திரு. ரகுராமன்] [1978 மார்ச் 11

கிறார்கள். எனவே, உடனடியாக அந்தக் கிராமத்து வாய்க்கால்களைச் சீர்ப்படுத்தி ஏழை விவசாயிகள் விவசாயம் செய்யத்தக்க வகையில் வழிவகை செய்து தரும்படி கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. வி. கோ. சின்னசாமி:** தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான பாசனம், பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இத்துறைக்கு 71,04,45,000 ரூபாயை ஒதுக்கி அதற்கான திட்டங்களை வகுத்திருக்கிற அவர்களைப் பாராட்டி, ஆதரித்து என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுப்பணித் துறையைத் திருத்தி அமைக்கும் வகையில் பாசனம், கட்டடம் ஆகிய இரண்டையும் நிர்வகிக்கும் பலநோக்கு நிர்வாகப் பணியாளர் அமைப்பாக, வடக்குத் தொகுதி, மத்தியத் தொகுதி, தென் தொகுதி என்று மூன்று கூறுகளாகப் பிரித்து தனித்தனியாக தலைமைப் பொறியாளர்கள் நியமிக்க உள்ளார்கள் என்பது, பாசனம் பெருகவும், தமிழ்நாடு வளம் பெறவும் உள்ள திட்டம் என்பதை இந்த நேரத்தில் கூறிகொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசுத் துறைகளில் ஏற்படும் செலவு குறித்து பொதுமக்களின் கண்காணிப்பு இருக்கவேண்டும் என்ற அளவில், கோட்டாட்சித் தலைவர் தலைமையில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்களின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய பணி ஆலோசனைக் குழு அமைத்துள்ளது உண்மையிலேயே ஊழலை ஒழிக்க, நல்ல நிர்வாகம் நடைபெற உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நற்பகல் 11-10.)

ஆற்று நீரை எப்படி கவனமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதைக் குறித்தும், அதுபற்றிய பயிற்சி முறை குறித்தும் திட்டமிட்டு, ஆயக்கட்டு ஆலோசனைக் குழு அமைத்து, அந்தக் குழுவில் ஆயக்கட்டு முறையில் விவரம் தெரிந்தவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாசனம், வருவாய்த் துறை, மின்சாரத் துறை போன்ற பல்வேறு துறைகளில் உள்ளவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைத்து இருப்பது உண்மையிலேயே மிகவும் சிறப்பானதொன்றாகும் என்று கூறிக் கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. வி. கோ. சின்னசாமி]

அதேபோல் பணி ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைப் போட்டுள்ளார்கள் என்பதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ஒரு சில வேலைகளைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த ஒரு ஆண்டிலும் இதுவரையிலே இல்லாத அளவிற்கு கீழ்பவானி அணைக்கட்டில் நீர் தங்கியிருக்கிறது. குறிப்பாக, நானும் அமைச்சர் அவர்களும் அதை நன்றாக அறிவோம். ஆகவே, முறைத்தண்ணீர் விடும்போது கொஞ்சம் முன்னதாகவே திறந்து விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்.பி.பி. கரையின் இருபுறமும் உள்ள கிணறுகள், வாய்க்கால்கள் வெட்டுவதற்கு முன்பே கிணறுகள் பாசனத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வந்ததால் அந்தக் கிணறுகளுக்கு பெறுவ்டி போடாமல் விவசாயிகளுக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாய்க்காலில் எவ்வளவு நீர் வந்தாலும் அவ்வளவும் சுத்தமான தண்ணீராக இருந்தால்தான் குடிநீர் எடுத்துக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும், விவசாயத்திற்கும் நல்லவகையில் பயன்பெறும். ஆகவே, அந்த கிளை வாய்க்கால்களை பராமரிக்க நிதி ஒதுக்கம் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான கோரிக்கைகளை நாங்கள் டி.டி.சி. மீட்டிங்கிலும் வைத்து இருக்கிறோம். கோவை மாவட்ட கலெக்டர் அதை தீர்மானமாக நிறைவேற்றி இங்கே அனுப்பி வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணியை செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. கொ. சின்னசாமி] [1978 மார்ச் 11

அடுத்து, என்னுடைய தொகுதியில் சில வறட்சிப்பகுதிகள் இருக்கின்றன. கோப்பம்பாளையம், நல்லூர் போன்ற இடங்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது குளங்கள் கட்டப் பெற்றன. அவைகள் வெள்ளத்தில் அடித்து பாழ்பட்டுக்கிடக்கின்றன. ஆகவே, அந்தக் குளங்களைச் சீரமைக்க அங்கேயுள்ள நிர்வாக பொறியாளரும், கோவை மேற்பார்வை பொறியாளரும் ஆராய்ந்து, அதைச் செப்பனிட நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இதுவரையில் அந்த நிதி வராததால் அந்த இரண்டு குளங்களும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அந்த இரண்டு குளங்களையும் செப்பனிட்டு கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்.பி.பி. ஏரியாவில் நிலத்தடி நீர் என்ற பிரச்னைக்கு இடம் இல்லை. நிறைய நீர் இருக்கிறது. இந்த நிலத்தடி நீர் சர்ட்டிபிகேட் வேண்டும் என்பதால் பல இடங்களில் மின்சார இணைப்பு செய்யப்படாமல் பம்ப்செட்டுக்கள் இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் சர்ட்டிபிகேட் வாங்குவதை ரத்து செய்யவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். நீர்த் தேக்கப் பகுதிகளிலுள்ள நிலங்களை கடந்த ஆட்சியாளர்கள் பிரித்து கொடுத்ததில் பல ஊழல்கள் ஏற்பட்டிருப்பதாக எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அதைச் சரியான முறையில் பிரித்துக் கொடுக்க ஒரு குழு அமைக்க வேண்டும். ஆர்.டி.ஓ., எக்சிக்யூடிவ் எஞ்சினியர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்த வட்டார மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவாக அதை அமைக்க வேண்டும். அந்தக் குழுவினர் நன்றாக பரிசீலனை செய்து, நிலம் இல்லாமல் உண்மையிலேயே பயிர்செய்து வரும் ஏழை எளிய விவசாயிகள், அரிசனங்கள் ஆகியோருக்கு பிரித்துக்கொடுக்க வேண்டும்.

இப்போது பினாமி முறையிலே 100 ஏக்கர், 50 ஏக்கர் என்று ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த பினாமி முறையை ஒழித்து, அமைக்கப்படும் குழுவின் மூலம் தகுதி படைத்தவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. வி. கொ. சின்னசாமி]

இந்தப் பொதுப்பணித் துறை மேலும் சீரோடும் சிறப்போடும் பணியாற்றும் என்பதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு சான்றாக விளங்குகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த பாசனம் முதலான மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் நீர் வளம் மிகவும் குறைந்திருக்கிறது. மக்கள் தொகை 8 சதவிகிதம் இருக்கிறது; ஆனால் நீர்வளம் 2 சதவிகிதம்தான் இருக்கிறது. அதிலும் குறிப்பாக பாசன வசதியைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டில் 1/5 பகுதி நிலத்திற்குத்தான் பாசன வசதி கிடைத்திருக்கிறது. பெரும்பகுதி மானாவாரியாகத்தான் இருக்கிறது. அங்கெல்லாம் பாசன வசதிகளை ஏற்படுத்த வேண்டுமானால் விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, மழைக்காலங்களில் அதிகமாக தண்ணீர் வீணாகி, சமுத்திரத்தில் போய் கலக்கிறது. அதைத் தடுத்து, பயன்படுத்த வேண்டும். அதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்று யோசனை செய்ய வேண்டும். ஆங்காங்கே ஏரி, குளம், கண்மாய்களை அமைத்து, மழைக்காலங்களில் தண்ணீரை சேகரித்து வைக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களைப் போட்டு செயல்படுத்த வேண்டுமானால் முதலில் பல தடங்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால் முதலில் அது கட்டுப்படியாகும் திட்டம் தானா என்று பார்க்கிறார்கள். அதாவது ஆயிரம் ரூபாய் செலவாகிறது என்றால் அதனால் எவ்வளவு உற்பத்தியாகும், அது செலவிடுகின்ற தொகைக்கு கட்டுப்படியாகக்கூடியதுதானா என்று பார்த்து, கட்டுப்படியாகக் கூடியதாக இருந்தால் செயல்படுத்துகிறார்கள்; இல்லையென்றால் கைவிட்டுவிடுகிறார்கள். மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படும் திட்டமாக இருந்தாலும் கட்டுபடியாகவில்லை என்று சொல்லி கைவிட்டு விடுகிறார்கள். இந்த மாதிரியான காரியங்களில் இந்த முறையைப் பார்க்கக் கூடாது,

[திரு. சோ. அழகர்சாமி] [1978 மார்ச் 11

எந்த வகையிலாவது பாசன வ் சதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியானால்தான் மானாவாரி பகுதிகளில் வாழும் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ முடியும்.

குளம், குட்டை ஏரி, கண்மாய்களை அமைத்து தண்ணீரை தேக்குவதினால் பல பிரயோஜனங்கள் ஏற்படுகின்றன. தண்ணீரை தேக்குவதினால் பூமியில் தண்ணீர் மட்டம் உயருகிறது, கிணறுகளில் தண்ணீர் தாராளமாகக் கிடைக்கிறது, குடிதண்ணீர் பிரச்சனை தீருகிறது. பாசன வசதி பெருகுவதால் உற்பத்தியும் பெருகுகிறது. அதனால் வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. இப்படி பல்வேறு வகைகளில் பயன்படுகின்றன. மேலும் குடி தண்ணீர் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் வேறு வகையில் செலவிடப் படும் பணமும் மிச்சமாகிறது. எனவே, கட்டுப்படியாகவில்லை என்ற ஒரே காரணத்தினால் இப்படிப்பட்ட திட்டங்களை கைவிட்டு விடாமல், அதன் நோக்கத்தை அறிந்து நிறைவேற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் பற்றி சொல்லப்படு கிறது. இது நீண்டகாலமாகவே இருந்துகொண்டிருக்கிறது. மாநில சர்க்கார் இன்னும் கொஞ்சம் அழுத்தமாக மத்திய சர்க்காரை வலியுறுத்தி சீக்கிரத்தில் நிறைவேற்றுவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து மேற்குமுகமாக ஓடி. வீணாகின்ற தண்ணீரை கிழக்கு முகமாகத் திருப்பிவிடுவது பற்றி கேரளத்தோடு பேச்சு வார்த்தை நடந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது ஒரு நல்ல முயற்சி. அப்படி தண்ணீர் திருப்பிவிடப்படுமானால் வறண்ட பகுதிகளான சங்கரன்கோவில், கோவில்பட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தில் சாத்தூர் போன்ற பகுதிகள் நல்லமுறையில் பயனடையும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, நம்முடைய சர்க்கார் கேரள சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமாகப் பேசி, மேற்காகப் போகின்ற தண்ணீரை நமக்கு திருப்பிவிட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கிற குளம், ஏரி, கண் மாய்கள் எல்லாம் மேடிட்டு இருக்கின்றன. ஆண்டுதோறும் சீர் செய்கிறோம் என்று சொன்னாலும் சரியாக செப்பனிடப்பட

1978 மார்ச் 11] [திரு. சோ. அழகர்சாமி]

வில்லை. கரையோரங்களில்தான் ஆழமாக இருக்கிறது. 20 கெஜம் தள்ளிப்போனால் ஒரு அடி அல்லது இரண்டு அடிதான் ஆழம் இருக்கிறது. அதனால் தண்ணீர் தேங்குவதற்கு வசதி யில்லை. ஆகையால் ஏரி, குளம், கண்மாய்களை ஆழப்படுத்த வேண்டும். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி மிகவும் குறை வாகயிருக்கிறது. மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கி, ஆழப்படுத்து வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கூட காவிரி நீர் சரியாகக் கிடைக்காத தால் போன தடவை ஒருபோகம்தான் பயிர் செய்ய முடிந்தது. எந்தக் காலத்திலும் தொடர்ந்து இரண்டு போகம் பயிர் செய்ய தற்கு வேண்டிய ஏற்பாடுகளை அங்கே செய்ய வேண்டும்.

அடுத்து, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி போன்ற பகுதி களில் வடிகால் வசதி சரியாக இல்லை. அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் சரியான முறையில் வடிகால் வசதியை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதேமாதிரி, இன்று கோவில்பட்டி, சங்கரன்கோவில், ஒட்டப் பிடாரம், விளாத்திக்குளம் போன்ற பகுதிகளிலிருந்து புதிய கண் மாய்கள் வேண்டுமென்று கேட்டு மக்கள் மனுக்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனது தொகுதியில் நான்கு, ஐந்து திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று 10, 15 ஆண்டு களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். மக்களும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆனால் திட்டம் எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

(முற்பகல் 11.20)

குறிப்பாக, டி. புதுப்பட்டி என்ற அந்த இடத்திலே கண்மாய் அமைத்தால் அங்கே இருக்கிற ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கும். அங்கு இருக்கக்கூடிய தண்ணீர் உப்புத் தண்ணீரா, நல்ல தண்ணீரா என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. மழை பெய்தால் உப்புத் தண்ணீர்கூட நல்ல தண்ணீ ராக மாறிவிடும். ஆகவே, அவ்வாறு ஆராய்ச்சி செய்துகொண் டிருக்காமல் திட்டத்தை நிறைவேற்[illegible]ற்குரிய நல்ல ஆராய்ச்சி

யினைச் செய்து நிறைவேற்ற வேண்டும். அந்த இரண்டு வட்டாரத்திலும் தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மழைக் காலங்களில் தண்ணீர் வீணாகப் போகின்ற நிலை இருக்கிறது. அதைத் தடுக்க அணைகளைக் கட்டி அவைகளைச் சேர்த்து வைக்கலாம். புதுப்பட்டி திட்டம் தாமதப் படுத்தப்பட்டு வருகிறது. உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சிவந்திபட்டி, கரிசல்குளம், சாத்தூரப்ப நாயக்கன்பட்டி, தபூளபுரம் ஆகிய இடங்களில் புதிய பாசனக் கண்மாய்கள் அமைக்க ப்ரொப்போசல் அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தத் திட்டங்கள் இன்னும் சாங்ஷன் ஆகாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை துரிதமாக நிறைவேற்றித் தரவேண்டும்.

அடுத்தபடியாக, வெள்ளக்குளம் பகுதியில் புதிய கண்மாய் அமைப்பதற்கு திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் வேண்டிக் கொள்கிறேன். இவைகளுக்கு நிதி ஆதாரம் அதிகமாகத் தேவை என்று சொல்லலாம். அந்தத் தொகையைப் பெறுவதற்கு தற்போது அதிகமாக பெரிய பெரிய கட்டடங்கள், பாலங்கள் ஆகிய இவைகளுக்குச் செலவாகும் பணத்தை எல்லாம் குறைத்து சிறிய கால்வாய், இத்தகைய கண்மாய்கள் கட்டுவதிலும், பொது ஏரிகளைச் செப்பனிடுவதிலும், தூர் எடுப்பதிலும் முழுக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, வைப்பாறு அணை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஏற்கனவே போன ஆண்டு ஒரு ப்ரப்போஸல் வந்திருக்கிறது. இந்த ஆண்டு அதைக் கட்டுவது என்ற திட்டம் இருந்தது. அதற்கான குறிப்பு தற்போது எதுவும் கொடுக்கப் படவில்லை.

அதேமாதிரி ஆழ் கிணறுகள் தோண்டுவதற்கு திட்டம் இருந்தால் அது பல ஏக்கர் நிலத்துக்குப் பயன்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓடும் வைப்பாறு திருநெல்வேலி மாவட்டத்திலும் ஓடுகிறது. அதன் இரண்டு பகுதிகளிலும் ட்யூப் வெல்ஸ், ஆழ் கிணறுகள் போட்டால் ஒவ்வொரு ட்யூப் வெல்ஸ் மூலமும் 30, 40

ஏக்கர் பாசன வசதி செய்ய வசதி ஏற்படும். இதனால் அரசாங்கத்திற்கும் நல்ல வருமானம் வரும். இரண்டு கரைகளிலும் ட்யூப் வெல்ஸ் போடுவதற்கு ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

அதேமாதிரியாக இன்றைக்கு வறட்சிப் பகுதிகளில் புதிய கண்மாய்கள், குழாய் கிணறுகளை ஏற்படுத்த ஆராய்ச்சி செய்ய ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். என்னுடைய திருநெல்வேலி பகுதியில் தாமிரபரணி ஆறு ஒரு பக்கத்திலே இருந்தாலும் கூட அதிகமான பிரதேசம் வறட்சிப் பகுதியாக இருக்கிறது. மழைத் தண்ணீர் வரக்கூடிய நேரத்தில் தேக்கி வைக்க வேண்டும். வறட்சி வருகின்ற நேரத்தில் அங்கே குடிதண்ணீருக்குக் கூட மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தண்ணீரைத் தேக்குவதற்கு நல்லபல திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். மழையினால் பெய்கின்ற தண்ணீர் இப்போது கடலிலே சென்று விழுகிறது. அந்தத் தண்ணீரை தேக்கி வாய்ப்புள்ள வகையில் புதிய கண்மாய்களை அதிகமான அளவில் ஏற்படுத்தி பாசன வசதி, குடிதண்ணீர் வசதி ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக தென்னாற்காடு மாவட்டத்தில் செஞ்சி வட்டத்தில் நந்தன் வாய்க்கால் திட்டம் கைவிடப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது. இங்கு இருக்கின்ற கொடுமுடியாறு திட்டத்திற்கென்று போடப்பட்ட ஆபீசையும் எடுத்துவிடப் போவதாகத் தெரிய வருகிறது. அதனால் அங்குள்ள மக்களுக்கு அந்தத் திட்டம் நிறைவேறாதோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தை கைவிடாமல் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்க இருப்பதை வரவேற்கிறேன். இது ஒரு நல்ல திட்டம். இது பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தி சிக்கனமாக தண்ணீரைப் பயன்படுத்த வழிவகை செய்யும். சீரான முறையில் தண்ணீரைச் சேமிக்க [illegible] சிக்கனமாகப் பயன்படுத்த [illegible] உபகாரமான முறையில் செயல்பட இப்போது இருக்கும் கண்மாய்களை [illegible] தண்ணீரைத் தேக்க [illegible] வகை செய்ய வேண்டும்.

[திரு. கே. ஜே. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 11

விவசாயம் நல்ல வருமானம் வரக்கூடிய நல்லதொரு தொழிலாக அமைவதற்கு வழிவகை செய்ய வேண்டும். மின் உற்பத்தி எவ்வளவு அவசியமோ அதைப்போன்றே பாசன வசதியும் தேவை. ஆகவே நீர்ப்பாசன வசதி செய்து தருவதிலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே இன்று நீர்ப்பாசனத்துறை மானியத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் என்னை பேச அழைத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மேற்கொண்டு என் உரையை துவக்குகின்றேன்.

நீர்ப்பாசனத்திற்காக நமது அரசு எடுத்துக்கொண்ட முயற்சி ஏழை எளிய மக்களுக்காக எடுத்த முயற்சியாகும். அதுவும் நாட்டின் முதுகெலும்பு என்று ஏற்றுக்கொண்ட விவசாயிகளுக்கு நமது புரட்சித் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள், மக்கள் ஆட்சித் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு சமதர்ம சமுதாயத்தையே உருவாக்கவேண்டும் என்பதற்காகவே பல நீர்ப் பாசன அணைகளைக் கட்டவும், சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் பலகோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நாம் பாராட்டியே ஆக வேண்டும். இந்தப் பாராட்டு பெறுகின்ற நம் அரசு மிக மிக கவனமாகவும் உன்னிப்பாகவும் கவனிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கவேண்டும்.

நான் இந்தச் சபையிலே வேதனையோடு சொல்கிறேன். அரசு மீது அல்ல. இந்த அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டத்தை என் தொகுதியின் நீண்ட நாள் கோரிக்கை செண்பகத் தோப்பு அணையும் அணைத் திட்டம். 1960-ம் ஆண்டு இந்தத் திட்டம் ஆய்வுக்கு கொண்டுவரப்பட்டது. அணை கட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகு 1973-ல் மாவட்ட தலைநகரான வேலூரில் மேற்படி அணை கட்டுவது சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் உட்பட பல அதிகாரிகளால் கலந்து ஆலோசிக்கப்பட்டு அணை கட்ட ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு அதிகாரிகளால் அரசுக்கு திட்டவட்டமாக அணை கட்டலாம் என்று தகவல் அனுப்பப் பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் முன்பிருந்த அரசு இத்

1978 மார்ச் 11] [திரு. கே. ஜே. சுப்பிரமணியம்]

திட்டத்தின்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே நிறுத்தப்பட்டது. அப்போதிருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் ப.உ.ச. அவர்கள் இந்த அணையைப் பற்றி நன்கு தெரிந்தவர்.

1974-ம் ஆண்டு நேரடியாக அந்த அணை கட்டும் இடத்திற்கு அதிகாரிகளோடு சென்று பார்வையிட்ட அமைச்சர் அவர்கள், அதுவும் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த ப.உ.ச. அவர்கள் இந்த அணை பற்றி சில விளக்கங்கள் கொடுத்து இம்மன்றத்தில் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் இதைப் பற்றி பேச்சும் இல்லை, மூச்சும் இல்லை.

பிறகு 1977-ம் ஆண்டு புரட்சித் தலைவர் ஆட்சிப்பொறுப்பு ஏற்றவுடனே அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு, அதன் முழு விவரத்தையும் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்த பிறகு 1977-78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரம்—1975-76-ம் ஆண்டில் பாசன முதலீடு 11.9 கோடி ரூபாய் என்றிருந்தது; இத்தொகை 1977-78-ல் இரு மடங்கிற்கு மேல், அதாவது ரூ. 24.7 கோடியாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த காலத்தில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே பாசனத் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டன. இதனால் இத்திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கும் காலதாமதமாயிற்று. நடப்பாண்டில் ஏழு புதிய பாசனத் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றினால் புதிதாக 35,000 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும். 77,000 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி உறுதிப்படும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் செண்பகத்தோப்பு என்றுமிடத்தில் கமண்டல ஆற்றுக்குக் குறுக்கே ரூ. 3.55 கோடி செலவில் நீர்த்தேக்கம் ஒன்று அமைப்பது நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். முக்கியமான புதிய திட்டம் என நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்களால் இச்சபையிலே கொடுக்கப்பட்ட புள்ளிவிவரப்படி, அதிகாரிகளால் கொடுக்கப் பட்ட புள்ளிவிவரப்படி, இந்நீர்த்தேக்கத்தால் 1962 ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெறுவதுடன் ஏற்கனவே பாசனம் பெறும் 10,386 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி உறுதிப்படும்.

[1978 மார்ச் 11

இந்த அணை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதை அறிந்து என் தொகுதியில் உள்ள விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். அவர்கள் நமது அரசையும் பாராட்டியுள்ளார்கள். இத்திட்டத்திற்காக, வேலை துவக்க 1977-78-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 25 லட்சமாகும். ஆனால் இதுவரை வேலை துவங்கப்படவில்லை. காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பரிசீலித்து உடனே வேலை துவங்க மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது.) நடப்பாண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு வேலையைத் துவக்கவேண்டும் என்று அரசை கேட்டுக் கொண்டு இந்த நீர்ப்பாசனத் துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* **திரு. சு. முத்துசாமி கரையாளர்:** சபாநாயகர் அவர்களே, இந்த பாசன மானியக் கோரிக்கைமீது எனது கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

கேரள மாநிலத்திலிருந்து அவர்களுக்கு வேண்டாத தண்ணீரை நமக்கு அளிப்பதாக அறிவித்திருப்பதுகண்டு நான் மகிழ்கிறேன்.

அதேசமயத்தில் நமது மாநிலத்தில் எங்கெங்கெல்லாம் தண்ணீர் கிடைக்குமோ அதையெல்லாம் நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

என்னுடைய தொகுதியில் அடவிநயினாறுத் திட்டம் என்று ஒன்று இருந்தது. அதனுடைய நிலைமை என்ன என்பதை ஆராய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் — நான் எப்போதும் சொல்லிக் கொண்டிருக்கும் குண்டாறு அணைக்கட்டுத் திட்டம் வரும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்து எங்கள் பகுதியிலுள்ள மக்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. சு. முத்துசாமி கரையாளர்]

அதேபோன்று நான்குநேரி அருகில் கொடுமுடி ஆறுத் திட்டத்திற்காக இதுவரை 25 லட்சம் ரூபாய் செலவு செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் இப்போதும் ஏன் அதைத் தொடர்ந்து நடத்தக் கூடாது என்பதை இந்த அரசு ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இதுவரையில் அணைக்கட்டு கட்டிய இடத்தில் அதாவது கருப்பா நதியில் அணை கட்டிய பிறகு முன்பு நல்ல முறையில் பாசனம் இருந்து நன்கு விளைந்திருக்கிறது; ஆனால், இப்போது அணை கட்டிய பிறகு அங்கு விளையாத காரணம் என்ன, அதில் ஏற்பட்ட சீர்கேடு என்ன என்பதை அரசு ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று பாபநாசம் மணிமுத்தாறு தேக்கத்தில் கடந்த வருடம் நல்ல மழை பெய்திருந்தும் அந்தப் பகுதியில் கார் மகசூல் நன்றாக விளைய வில்லை. இந்த அவல நிலை ஏன் வந்தது என்பதையும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சேர்வலாறு-கரையாறு திட்டத்தை உடனே செய்து முடித்தால் நன்றாக இருக்கும். இன்னொரு ஆண்டு கழித்து இந்தத் திட்டத்தை செய்து முடிப்பதாக இருந்தால், இன்னும் எத்தனையோ கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகும். ஆகவே, இப்போதே செய்து முடித்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த சேர்வலாறு-கரையாறு திட்டத்தோடு கடனாநதி-ராமாநதி திட்டத்தை சேர்த்து இந்த இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற இயலுமா, அதற்குரிய வாய்ப்பு இருக்கிறதா என்பதை அரசு ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக குளங்கள் இல்லாத கிராமங்களுக்கு எல்லாம் குளங்களை வெட்டிக்கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டும். அதே சமயத்தில் குளங்கள் வெட்டினால் மட்டும் போதாது. அந்த குளத்தினால் பயன்பெறுகின்ற ஏழை விவசாயிகளுக்கு கடன் உதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் திருச்சி மாவட்டத்தில் கொல்லிமலைத்திட்டம் பற்றி ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதுவரை என்னை பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு விடைபெற்றுக்கொள்கிறேன். வணக்கம்.

[1978 மார்ச் 11

* திரு. தி. அன்பழகன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களால் இங்கு வைக்கப்பட்டிருக்கின்ற பாசன-பொதுப்பணி மான்யத்தை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

'நீரின்றி அமையாது உலகு' என்பதற்கொப்ப நாட்டுமக்களின் வாழ்க்கையை உயர்த்துகின்ற அளவில், பாசனத் திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது விவசாயம். விவசாய உற்பத்திக்கு அதிகமாக தேவைப்படுவது நீர்ப்பாசனம்தான்.

அப்படிப்பட்ட அந்த நீர்ப்பாசனம் சிறப்பாக செயல்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் நல்ல முயற்சி எடுத்துக்கொண்டு நல்ல திட்டங்களை நமக்கு கொடுத்திருக்கிறார்கள். பெரிய நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக இந்த நடப்பு ஆண்டில் 24.48 கோடி ரூபாயும், பெரியாறு வைகை பாசன அமைப்புத் திட்டங்களுக்கு 10.94 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் இனிமேல் பெரிய பாசனத் திட்டங்கள் நிறை வேற்றுவதற்கில்லை என்ற காரணத்தால், மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளிலிருந்து உபரி நீரை உபயோகித்துக்கொள்வதற்கான முயற்சியும், கிருஷ்ணா ஆற்றிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்பதும் புரட்சித் தலைவரின் புனிதப் பணிக்கு ஒரு எடுத்துக்காட்டாக இங்கே விளங்குகின்றன. மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்னைகளை நல்லெண்ணத்துடன் பரஸ்பர நல்ல எண்ணத்துடன், தீர்க்கதரிசனமான முறையில் நிறைவேற்ற முன்வரவேண்டும். அது இதற்கு ஒத்தாசை யாகவும் அமையும்.

பொதுப்பணித் துறை பாசனம், கட்டிடம் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதன்மூலம் நிர்வாகம் விரைவாகவும், சுறுசுறுப்புடனும் செயல் படுகின்ற திறமை வெளிப்படும்.

1978 மார்ச் 11] [திரு. தி. அன்பழகன்]

இன்றைக்கு தமிழகத்தில் நிலத்தடி நீர்ப் பிரச்னை ஒரு கேள்விக் குறியாக அமைந்திருக்கிறது. நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில், இன்னும் சில ஆண்டுகளில் தண்ணீர் இல்லாத கெடுதலான சூழ்நிலை ஏற்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் ஓரளவுக்கு காப்பாற்றப்பட வேண்டுமென்றால், அதற்கான வழிவகைகளைக் காண வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, ஆங்காங்கே இருக்கின்ற ஏரி, குளங்களிலும் சிறிய அணைக்கட்டுகள் கட்டியும் நீரைத் தேக்கி, அதன்மூலம் நிலத்தடி நீர்ப் பிரச்னையைத் தீர்க்க வழிவகை காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், காட்டாறுகளுக்கு குறுக்கே சிறிய அணைக் கட்டுகள் கட்டுவதன் மூலம், அவைகளிலே தண்ணீரைத் தேக்கி, பாசனத்திற்குப் பயன்படுத்தினால் அது அதிக பயனுள்ளதாக அமையும். ஆகவே, அப்படி சிறிய அணைக்கட்டுகள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பல இடங்களில் தேவைகளை நிறைவேற்றித் தருகின்ற வகையிலே ஒரு குழுவை அமைத்து, எந்தெந்த இடங்களிலே அதிகப்படியான நீரைத் தேக்க முடியுமோ அந்த இடங்களை ஆராய்ந்து அங்கே அதற்கான வழிவகைகள் செய்துதர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் பல இடங்களில் விளைநிலங்கள் அபிவிருத்தி அடையும்.

அடுத்து, ஏரிப் பகுதிகளில் சிலர் ஆக்கிரமிப்பு செய்துகொண்டு அவைகளிலே பயிர் செய்கிறார்கள். அதன் காரணமாக நீர்ப்பாசன பகுதிகள் மேடிட்டு, விளைநிலங்களாக உருவாக்கப்பட்டிருக் கின்றன. அதன் காரணமாக, நீர்ப் பிடிப்பிலே மழைக் காலங்களில் தண்ணீர் வரக்கூடிய நேரங்களிலே, இந்த ஏரிகளில் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்தத் தண்ணீரை வெளியே அகற்றக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. தங்களுடைய சொந்த நலனைக் கருதி, அவர்கள் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். ஆகவே, இந்த நீர்ப்பாசனப் பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருப்பவர்களை கட்டாயம் அங்கே யிருந்து அகற்ற அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. தி. அன்பழகன்] [1978 மார்ச் 11

பல பெரிய திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு போதுமான நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தால், சிறிய பாசனத் திட்டங்களை அரசு அமைத்துத் தர வேண்டும். இவைகளை மேற்கொள்ள அரசு கவனம் செலுத்தவேண்டும். இதனால் உணவு உற்பத்தி பெருகுவதற்கும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அங்கே உள்ள மக்கள் அனைவரும் பயனடைவதற்கும் வசதியாக இருக்கும். எனவே இத்தகைய சிறிய பாசனத் திட்டங்களை மேற்கொண்டு, அதன் மூலம் பரவலாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபாசனத் திட்டத்திற்காக அரசு 4 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதேநேரத்தில் ஏரி, குளங்களை செப்பனிடுவதற்காக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்ற ஏரி, குளங்களைப் பார்க்கின்றபோது செயல்முறையில் பாசனத்தில் மூன்றில் ஒரு பங்குப் பகுதி இந்த ஏரி, குளங்களை நம்பித்தான் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நூறு ஏக்கருக்கும் அதிகமாகப் பாசனம் தரக்கூடிய நிலையிலே உள்ள ஏரி, குளங்களை மட்டும் பொதுப்பணித் துறை எடுத்துக் கொண்டு, மற்ற ஏரி, குளங்களைச் செப்பனிடும் பணியினை ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் மேற்கொள்ளுகின்ற நிலை இருக்கிறது. பல ஊராட்சி ஒன்றியங்களிலே நிதிப்பற்றாக் குறை இருப்பதன் காரணமாக பல ஏரிகள் இதுவரை செப்பனிடப் படாமல் இருக்கின்றன. எனவே, இந்த நிலைமையைப் போக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பாசன வசதிகளுக்காக ரூ. 75 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி பாசன வசதிக்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் கூடிய ஒன்றாகும். இன்றையதினம் பொதுப்பணித் துறையாலே பல ஏரிகள் பராமரிக்கப்படாமல்; செப்பனிடப்படாமல் இருக்கின்றன. எனவே, எங்கெங்கே நீர்ப் பற்றாக்குறை இருக்கிறதோ, அங்கங்கே எல்லாம் நீர் கிடைக்கக் கூடிய இடங்களிலே இருந்து கால்வாய்கள் மூலம்-நீரைக் கொண்டு வந்து இத்தகைய ஏரிகளிலே நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. தி. அன்பழகன்]

என்னுடைய மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திற்கு சரிநிகராக விளைச்சலில் போட்டியிடக்கூடிய நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கே எந்தவிதமான பெரிய நீர்ப்பாசனத் திட்டமும் செயல்படவில்லை. எங்களுக்கு இருக்கின்ற ஒரே ஆறு பாலாறுதான். இன்று அந்தப் பாலாறு தண்ணீர் இல்லாத காரணத்தால் பாழாறாக இருக்கிறது. அதற்குக் காரணம் கர்நாடக மாநிலத்தில் வேதமங்கலத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டு தண்ணீர் தடுக்கப் பட்டு இருக்கிறது. ஆகவே, அரசு இந்தத் திட்டத்ததில் அவ்வப் போது தேவைப்படுகின்ற நீரை, அந்த அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, இங்கே தேவைப்படுகின்ற தண்ணீரை கொடுக்கும்படி கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியாகிய நாட்றாம்பள்ளி வறட்சிப் பகுதியாகும். இங்கே நீர்ப்பாசன வசதி இதுவரை சரியாக அமையவில்லை. கந்திலி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மண்டலநயனகுண்டாவில் கிட்டத்தட்ட 5.6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தீட்டப்பட்டும் இதுவரை ஒன்றும் நடைபெறவில்லை. எனவே புதிதாக ஒரு திருத்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அது தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அதை மேற்கொள்ள அரசு ஆவன **செய்ய வேண்டும்.**

(முற்பகல் 11-40)

அங்கநாதவலசை பகுதியில் காடைவள்ளி என்ற ஏரியைப் புதுப்பிக்க 1.84 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

பாலாற்றின் குறுக்கே புல்லூர் அணைக்கட்டைக் கட்ட வேண்டுமென்று எற்கனவே இந்த மன்றத்தில் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அது ஆந்திரா மாநிலத்தின் ஓரப் பகுதியில் இருக்கிறது. அதற்கு ஆந்திர அரசு ஒப்புதல் தேவை என்று சொல்லப்படுகிறது. அந்த ஒப்புதலை இந்த அரசு சீக்கிரமாகப் பெற்று இந்த அணையை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில திட்டங்களை செயற்படுத்தும்போது மாவட்ட அளவில் செயற்பொறியாளர், மாநில

[திரு. நி. அன்பழகன்] [1978 மார்ச் 11

அளவில் தலைமைப் பொறியாளர் ஆகியோரிடம் தாமதமாகச் செயல்படுகிற நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்த்து விரைவாக திட்டங்களைச் செயற்படுத்த வழிவகைகளைச் செய்ய வேண்டும், துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. செல்வராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சட்டப் பேரவையில் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறைக்கு அடுத்து அதையொட்டி இருக்கிற மானியமாகும். பாசன வசதியை எந்த அளவுக்கு நாம் பெருக்கு கிறோமோ அந்த அளவுக்கு உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்ற நோக்கத்தோடு செய்கிற நல்ல காரியம் ஆகும். ஆனால் இன்றைக்கு ஒதுக்கியிருக்கும் தொகை எல்லாத் தலைப்புகளையும் பார்த்தால் 33 கோடி ரூபாய் அளவுக்குத்தான் வருகிறது. இது போதாது, இன்னும் இரண்டு பங்கு அளவுக்கு தொகையை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கிற தென்னாற்காடு மாவட்டம் இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திற்குச் சரிசமமாக உணவு உற்பத்தி செய்கிற மாவட்டமாகும். ஆனால் பரவலாக தென்னாற்காடு மாவட்டத்தைப் புறக்கணித்து வந்ததைப் பார்த்திருக்கிறோம். தென்னாற்காடு மாவட்டம் என்றால் நெய்வேலியையும், பண்ருட்டி முந்திரி வெளிநாட்டிற்கு அனுப்பப்படுகிற அயல்நாட்டு வாணிபத்தையுந் தான் நினைக்கிறார்களே தவிர, அந்த விவசாயிகளைப் பற்றி நினைப்பதில்லை. பொதுவாக, தென்னாற்காடு மாவட்ட விவசாயிகள் மிகக் கெட்டிக்காரர்கள், உழைப்பாளிகள் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப் பிரம்மாண்டமான மூன்று ஏரிகள் இருக்கின்றன. ஒன்று வீராணம் ஏரி, அடுத்தது பெருமாள் ஏரி, மூன்றாவது வெல்லிங்டன் ரிசர்வாயர் என்று சொல்லப்படுகிற ஏரி. அந்த மூன்று ஏரிகளின் பராமரிப்புகளும் கடந்த பல்லாண்டுகளாக சரியானமுறையில் செயல்படுத்தப்படவில்லை.

1978 மார்ச் 11] [திரு. மு. செல்வராஜ்]

வீராணம் ஏரியைப் பொறுத்தவரை கொள்ளளவு ஏறத்தாழ 1,450 மிலியன் கன அடியாக இருந்தாலும் கூட, இப்போது 950 மிலியன் கன அடிதான் இருக்கிறது. அதன் கரையை உயர்த்த வேண்டும், மற்ற சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக மூன்றேமுக்கால் கோடி ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப் பெற்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிய வருகிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருமாள் ஏரியும் அதே நிலைமையில்தான் இருக்கிறது.

வெல்லிங்டன் ரிசர்வாயர் கூட தற்போது ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின் காரணமாக கரைகளில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பராமரிக்க ஒரு சிறு தொகை ஒதுக்கி வேலைகள் நடை பெற்று வருகின்றன.

தென்னாற்காடு மாவட்டத்தில் பெரும்பகுதி நிலங்கள் பாசனத் திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. நான் கேட்டுக் கொள்வது —தஞ்சை மாவட்டத்தில் உலக வங்கியின் மூலமாகக் கடன் பெற்று மெயின் வாய்க்கால்களுக்கெல்லாம் சிமெண்ட் பூசி தண்ணீரை வீணாக்காமல் செய்கிற அந்தத் திட்டத்தை, அந்த மாடர்னை சேஷன் ஸ்கீமை இந்த மூன்று ஏரிகளிலும் வரத்து வாய்க்கால் களுக்கும் ஏரியிலிருந்து வெளியே செல்லுகிற வாய்க்கால்களுக்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். பாலாற்றில் வடிகால் அமைத்து கடலில் கலக்கின்ற தண்ணீரைத் தடுத்து நிறுத்த 2 கோடி ரூபாயில் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது)

இது முக்கியமான பிரச்சினை. பலவற்றைப் பேச வேண்டும். பெருமாள் ஏரியின் கீழ்ப் பகுதியில் 150 ஏக்கர் நிலங்கள் நீர்ப் பிடிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

கடந்த காலத்திலே விவசாயிகள் விவசாயம் செய்யமுடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் கவனித்து நட்ட ஈடு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விருத்தாசலம் பகுதியிலே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், கோமங்கலம் ஏரி, ஆலச்சிகுடி ஏரி ஆகிய ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. செல்வராஜ்] [1978 மார்ச் 11

சிதம்பரம் வட்டத்தில் பாளையங்கோட்டை ஏரி, பாண்டியன் ஏரி, சின்னபாண்டியன் ஏரி, காஞூர் ஏரி, நெடுஞ்சேரி ஏரி, குணமங்கலம் ஏரி, வக்கரமாரி ஏரி, கலுங்கான் ஏரி, நகரபாடி ஏரி, நல்லான் ஏரி, எரும்பூர் ஏரி, விளக்கபாடி ஏரி ஆகிய ஏரிகள் இருக்கின்றன. சிதம்பரம் வட்டத்தில் உள்ள இவை போன்ற ஏரிகளை ஆழப்படுத்தவேண்டும். இந்த ஏரிகள் 20 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கக்கூடியவை ஆகும், இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

காட்டுமன்னார் கோயில் தொகுதியில்—என்னிடம் நிறைய எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்—கண்டமங்கலம், குருங்குடி வீரனரிதப்புரம் பகுதிகள் காட்டுவாரி என்ற வடிகால் மூலம் வெள்ளம் வந்து அந்தப் பகுதிகளில் ஆண்டுதோறும் நஷ்டம் ஏற்படுகிறது, காட்டுவாரி என்ற ஓடைக்கு வடிகால் வசதி தேவைப்படுகிறது, இதன்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒர்க்ஷாப்புகளிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் ஒரு வார காலமாக வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து—நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது—இஸ்ரேல் நாட்டிலே அங்கே ஊற்றே இல்லாத நிலைமை, பாலைவனமாக இருந்த நிலைமை மாறி இன்றைக்கு சோலைவனமாக மாற்றியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு எந்த முறையிலே அவர்கள் அப்படிச் செய்தார்கள் என்பதைக் கண்டு அறிந்து வெள்ளக்காலத்திலே ஓடுகின்ற தண்ணீரை பூமிக்கு மீண்டும் ரிசார்ஜ் செய்து அந்தத் தண்ணீரை பம்புசெட்டுகள் மூலம் எடுத்து விவசாயத்திற்குக் கொடுக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

விருத்தாசலத்திலே ஜில்லா முன்சீப் கோர்ட் கட்டடம் 100 ஆண்டு காலமாக இருக்கிறது. அது இடிந்து விழக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற காரணத்தினால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று உயர்நீதி மன்றம் சொல்லி இப்போது வேறு இடத்திலே நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அந்த பழைய கட்டடத்தை இடித்து மீண்டும் புதிதாகக் கட்ட வேண்டுமென்று

1978 மார்ச் 11] [திரு. மு. செல்வராஜ்]

3 ஆண்டுக்காலமாக குறிப்பு இருந்து பொதுப் பணித் துறை அதை அனுப்பி அது சர்க்காரிடத்திலே பென்டிங்காக இருப்பதாகச் சொல்கிறார்கள், அந்தப் புதிய கட்டடத்தைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. க. இரா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பாசனம், கட்டடங்கள் போன்ற நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீர்ப்பாசன மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசுவதற்காக என்னை அழைத்ததற்காக மீண்டும் ஒரு முறை நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பல திட்டங்களை இந்த மானியக் கோரிக்கையிலே நான் படித்துப் பார்த்தேன், சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களிலே இருக்கின்ற நல்ல பல திட்டங்களைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நோக்கிலே நிலநீர் ஆய்வு செய்வதைப்பற்றி இந்த மானியக் கோரிக்கையிலே விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே நிலநீர் எப்படி இருக்கிறது என்பதை ஆராய்வதற்காக ஒரு சிறப்பு பொறியாளர் தலைமையிலே ஆய்வு செய்ய இருப்பதை நான் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மக்களின் சார்பாக புரட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதைப்பற்றி யாரும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திலே நிலநீர் சரியானபடி இல்லையென்று அரசு ஆய்வில் குறிப்பிடுவதாகச் சொல்கிறார்கள். உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த அரசுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சி மாவட்டம். அனைத்திந்திய அளவிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லப்படுகிற ஒரு மாவட்டம் ஆனால் ஒரு பக்கம் ஆந்திர மாநிலத்தையும் இன்னொரு பக்கம் கர்நாடக

[திரு. க. இரா. சின்னராசு] [1978 மார்ச் 11

மாநிலத்தையும் இணைத்துக்கொண்டிருக்கிற மாவட்டம் அது. பெரும் அளவிற்கு மலைப் பிரதேசமாக இருக்கக்கூடிய மாவட்டம் அது. அந்த மலைகளிலிருந்து காட்டாறுகள் நிறைய ஓடுகின்றன. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 400 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே அந்தக் காட்டாறு

(முற்பகல் 11-50)

களிலேயெல்லாம் சிறுசிறு ஏரிகளைக் கட்டி நீரைத் தேக்கினால் நிலத்தடி நீர் எந்தக் காலத்திற்கும் பஞ்சம் இல்லாமல் தர்மபுரி மாவட்டத்திற்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி பல திட்டங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக் கின்றன.

அதே நேரத்தில் உலக வங்கியின் மூலமாகக் கடன் பெற்று 500 ஏக்கருக்கு அதிகமான ஆயக்கட்டுகளைக் கொண்ட 500 ஏரிகளைத் தூர் எடுத்து புதுப்பித்து அதிகமான பாசனம் பெறக் கூடிய ஏரிகள் அனைத்திற்கும் கால்வாய்களைச் சீரமைப்பதற்கான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் பத்து ஆண்டுகளில் செயல்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் மூலம் 50,000 பேர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களைப் பாராட்டு வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகளை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சிலயிடங்களில் அரசுப் பணியாளர்கள் ஏரிகளும், டேம்களும் கட்டுவதற்குத் திட்ட மிட்டிருக்கிறார்கள். அந்தப் பெயர்களை நான் படிக்கிறேன். அமைச்சரவர்கள் அவைகளைக் குறித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பணப்பல்லி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சிங்கரப்பல்லி என்ற இடத்தில் டேம் கட்ட அரசு அலுவலர்கள் சென்ற மாதம் அங்கு வந்து மதிப்பீடுகள் போட்டுக்கொண்டு போய் இருக்கிறார்கள்.

அதேபோல் அலகுந்தாளி ஏரி என்று இருக்கிறது, அது மலைப் பகுதியான இடம். அந்தப் பகுதியிலேயும் ஏரி கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்த்து வந்து இருக்கின்றார்கள். ஆகவே அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 11] [திரு. க. இரா. சின்னராசு]

அடுத்து, வேப்பணப்பல்லி ஒன்றியத்தைச் சேர்ந்த குருவி ஞயனப்பல்லி அருகே இருக்கும் துரை ஏரி என்பது பழைய ஏரி. அது உடைந்து விட்டு இருக்கிறது. அதைப் புதுப்பிப்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவர் வழக்கு தொடர்ந்திருக் கிறார்கள் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து, அந்த ஏரியையும் கட்டித் தர வேண்டுமென்று அமைச்சரவர்களையும், அரசையும் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) தலைவ ரவர்களே, எனக்கு நேரம் கொஞ்சம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி பஞ்சாயத்து யூனியனுக்குள் இருக்கும் இட்டிக்கல் அகரம் அருகே வரும் காட்டாற்றின் குறுக்கே ஏரி கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு அரசு மதிப்பீடு போட்டிருக்கிறது. அதையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிருஷ்ணகிரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பூவத்தி ஏரியையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிருஷ்ணகிரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த வெலகலஹள்ளி ஏரி, துடுகணஹள்ளி பக்கம் கவுண்டன் கொட்டாய் அருகே வரும் காட்டாற்றில் ஏரி ஆகியவைகளையும் கட்டித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த கவுண்டன் கொட்டாய் அருகே வரும் காட்டாற்றில் ஏரி கட்டுவதற்கு மதிப்பீடுகள் போடப்பட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, படேத்தலா ஏரி கிருஷ்ணகிரிக்கு அருகில் இருக்கிற ஆயிரம் ஏக்கர்களுக்குப் பயனளிக்கும் ஒரு ஏரியாகும். அதனைச் சீரமைக்கின்ற திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு படேத்தலா ஏரியின் கால்வாய்களைச் சீரமைத்தால் நீர் விரயம் இல்லாமல் நல்முறையில் இருக்கும். அந்தப் பயனுள்ள திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

படேத்தலா ஏரி நிரம்பி வழியும் நீரை சேதமில்லாமல் பயன் படுத்த, தனியாகப் புதிய கால்வாய்கள் மூலம் பாரையூர் ஏரி, பாப்பன ஏரி, பெத்தனபல்லி ஏரி மற்றும் ஜம்பேரி போன்ற

[திரு. க. இரா. சின்னராசு] [1978 மார்ச் 11

ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு வந்தால், அவைகளுக்கு இணைப்பு கொடுத்தோமேயானால் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும் அதனால் ஆயிரக் கணக்கான கிணறுகளுக்கு நிலத்தடி நீர் கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது என்பதை அரசுக்கு நான் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்தில் ஒரு ஏரி கட்டுவதற்கு இப்பொழுது கொடுக்கப் பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். பாலக்கோடு வட்டத்தில் தும்பால அல்லி அணை கட்டுவதற்கு இங்கே மானியக் கோரிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் இந்த ஆண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

* திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவரவர்களே, நான் பஞ்சாயத்து சட்டத்திலேயிருக்கிற விதி 85-ஐ வலியுறுத்த விரும்புகிறேன். 'Maintenance of Irrigation work and execution of Kudimaramathu etc.'
என்ற தலைப்பிலே,

"Subject to such conditions and control, as may be prescribed, the Government may transfer to any Panchayat or Panchayat Union Council, the Constitution and maintenance of any irrigation works, maintenance of tanks for irrigation or regulation and the distribution of water from any irrigation works to the fields depending upon it."

என்கின்ற அந்த விதியை நான் வற்புறுத்துகிறேன். காரணம், இப்பொழுது இந்த நிலத்தடி நீர் பிரச்சினையைப் பற்றி பரவலாக, அதிகமான அதிருப்தி ஏற்படுகின்றது. இந்த அவையிலே வைக்கப் பட்டிருக்கிற ஒரு குறிப்பிலே, பக்கம் 6-வதிலே 11-வது பாராவில் சொல்லியிருக்கிறார்கள்:

'எனினும், இம்மாநிலத்தில் நிலநீரைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தலுக்கும் சேமித்து வைப்பதற்கும் உடனடி அவசியம் உள்ளது. நிலநீர் குறைந்து வருவது சில ஆண்டுகளாக நமக்குக் கவலையை அளித்துள்ளது. கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, வடாற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்நிலைமை மிகவும் கடுமையாக உள்ளது',

1978 மார்ச் 11] [திரு. ரா. மார்க்கபந்து]

என்ற ஒரு குறிப்பை இங்கே தந்திருக்கிறார்கள். ஆகையினால், நான் கூற விரும்புவது என்னவென்றால், பொதுவாக, ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு 'கம்யூனிட்டி வெல்' என்பதை, அரசாங்கமே ஒரு கம்யூனிட்டி வெல்லை வெட்டி, அதிலேயிருந்து நீரைப்பெற்று பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு இவ்வளவு தொகை என்கின்ற அளவில் தொகையை நிர்ணயித்து, அந்த விவசாய மக்களிடமிருந்து பணத்தை வசூலித்தால், அவர்களுக்குத் தேவையான தண்ணீரும் கொடுக்க முடியும், பணத்தையும் வசூலித்துக் கொள்ளலாம். இதனால், இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க வழிவகை ஏற்படும்.

அதே நேரத்தில், நாம் கிணறுகளை வெட்டும்போது, அந்தக் கிணறுகளை வெட்ட ஆகும் செலவில், குறைந்தபட்சம் 20 சதவீதமாவது வாங்கி, மீதியிருக்கிற 80 சதவீதத்தை மானியமாக அரசாங்கம் கொடுப்பதன் மூலமாக, அங்கே பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு அதிலே அக்கறை ஏற்படக்கூடிய நிலைமைக்கு வழி வகைகள் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி செய்வதன் மூலமாக, தனிப்பட்ட விவசாயி, தான் கிணறு வெட்டுவதற்காகவும் பம்ப் செட்டுகளைப் போடுவதற்காகவும் இருக்கிற சிரமங்களைக் குறைக்க வாய்ப்பு இருக்கும். அதே நேரத்தில், பெருவாரியான நன்மையை அடையக்கூடிய வழி அவர்களுக்கு ஏற்படும்.

இந்த நேரத்திலே, நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே,

Under the heading of Special Minor Irrigation programme under execution costing Rs. 5.00 lakhs and more, the formation of a reservoir across Goddar River near Velkainatham (v) Tirupattur taluk has been included.

வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒரே ஒரு திட்டத்தைச் சேர்த்திருக்கிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை பல உறுப்பினர்கள் எங்களுடைய கருத்துக்களை, எங்கெங்கே நிலநீர் ரிசர்வாயர்களைக் கட்ட வேண்டுமென்ற கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். ஆகையினாலே, அமைச்சரவர்கள் பெரிய மனது வைத்து, வட ஆற்காடு மாவட்டத்திலே தண்ணீர் இல்லாத பிரச்சினை இருக்கிற காரணத்தாலே, நாங்கள் சொல்லியிருக்கிற—அந்த

ரிசர்வாயர் திட்டங்களை மீண்டும் திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன்—திட்டங்களை கருத்திலே கொண்டு, எந்தெந்த இடங்களிலே ரிசர்வாயர்களைக் கட்ட வேண்டுமோ, அங்கங்கே அவைகளைக் கட்டுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி சாத்தியக்கூறு இல்லை, வையபிலிட்டி இல்லை, தண்ணீர் இல்லையென்ற பிரச்னையைக் காட்டி வீணாகத் தண்ணீரைப் போக்க வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன். தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள். 'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டார்கள்' என்று சொல்வார்களே, அதுபோல், One bird in the hand is not equal to thousands of birds in the bush என்று சொல்வார்களே, அதுபோல், இருக்கிற தண்ணீர் கடலிலே போய் சேர வேண்டுமா என்பதைக் கவனித்து, பெறுகிற தண்ணீரை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்று, maximum utility point of view என்ற முறையிலே பயன்படுத்தி, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இரண்டு விதமான கருத்துக்கள், தண்ணீரைப் பயன்படுத்துவதுபற்றி, இங்கே நிலவிக் கொண்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது).

மீண்டும் பொதுக் கட்டிடத்திலே ஒன்று சொல்ல விழைகின்றேன். இந்தத் திட்டங்களில் 3 விதமான இன்ஜினியர்கள் வேலை செய்கிறார்கள். அசிஸ்டென்ட் இன்ஜினியர், அசிஸ்டென்ட் எக்சிக்யூடிவ் இன்ஜினியர், எக்சிக்யூடிவ் இன்ஜினியர் என்று மூன்று வகையான இன்ஜினியர்கள் இருக்கிறார்கள்.

Actually the execution of work and the supervision of work is done by the Assistant Engineer. The Assistant Executive Engineer's post is merely a sleeping post. The work which Assistant Engineers are executing can be reduced and they can give more incentive to do work and with more efficiency work can be extracted from other people.

அந்தப் பதவிகளை எடுப்பதன் மூலமாக, மாதம் ஒன்றுக்கு ரூ. 15 இலட்சத்துக்கு மேல் அரசாங்கத்திற்கு மிச்சப்படும் என்ற நிலைமை இருக்கும்போது, நீங்கள், அதை கீழே வேலை செய்யக் கூடியவர்களுக்கு—மேலும் அதிகமான அசிஸ்டன்ட் இன்ஜினியர்களை நியமித்து—செலவழிக்கலாம். அதே நேரத்திலே . . .

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய பேர்கள் பேசவேண்டியிருக்கிறது. நீங்கள் தினசரி பேசுகிறீர்கள். ஐந்து நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : மத்திய சர்க்கார் நேஷனல் பில்டர்ஸ் ஸ்கீம் என்று ஏற்படுத்தி அரசாங்கத்திலே இருக்கிற இன்ஜினியர்களை வைத்து பெரிய வேலைகளை எல்லாம் அவர்களிடத்திலே கொடுக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையிலே அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் தமிழ் நாட்டிலேயும் நேஷனல் பில்டர்ஸ் என்ற முறையிலே அரசாங்க என்ஜினியர்களை வைத்து ஒரு கழகத்தை அமைத்து, கன்ஸ்ட்ரக்ஷன் ஆப் டாம்ஸ், கன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பிக் பில்டிங்ஸ் என்று சொல்லப்படுகின்றவைகளை அவர்களிடத்திலே ஒப்படைத்து, அதன் மூலமாக அத்தகைய வேலைகளை நாம் செய்ய முடியும்.

இப்போது மேசன்ஸ் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு ஐ. டி.ஐ. பயிற்சி அளிப்பதில்லை. அப்படிப்பட்ட மேசன்ஸ்களுக்கு குறைந்த பட்சம் 6 மாதம் டிரெயினிங் கொடுக்கிற வகையிலே ஐ.டி.ஐ. பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதே நேரத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வீடுகளைக் கட்டுகிறார்கள். கான்ட்ராக்டர்கள் மூலமாகக் கட்டுகிறார்கள். சில நேரங்களில் சரியாக கான்ட்ராக்டர்கள் கட்டுவது கிடையாது. அப்படி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் வாங்கிய கடன்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமையிலே இருக்கிற காரணத்தினாலே அதை அரசாங்கத்தின் கன்ட்ரோலிலே இருக்கிற நிறுவனத்தின் மூலமாக கட்டிக் கொடுப்பதிலே, நாம் எந்தக் காரியத்திற்காக லோன் கொடுக்கிறோமோ அந்தக் காரியத்திற்கு அது பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காங்கி கூலிகள், மஸ்தூர்கள் 5 ஆண்டுகள் வேலை செய்தாலும் அவர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களை வேலையைவிட்டு நீக்குகிற நிலைமை இருக்கிறது. அவர்களை ரெகுலரைஸ் பண்ணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

* **திரு. ப. குருசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது தண்ணீர் என்பதை நம்முடைய முதல்வர் எண்ணி இந்தத் தமிழகத்திலே உள்ள தண்ணீர் பிரச்சினையை முடித்து வைத்திருக்கிறார்கள். அவரை நாள் முழுவதும் பாராட்டிக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்திலே மிகவும் வறட்சியான தொகுதி அந்தியூர் தொகுதிதான். அந்தத் தொகுதியில் 2 அணைகளைக் கட்டினால் நிச்சயமாக அந்தத் தொகுதி ஓரளவுக்கு வளமுள்ள தொகுதியாக ஆகலாம். அங்கே கரும்பாறுத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அங்கேயுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள், ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வாழ்வார்கள் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வழுக்குப்பாறு திட்டம். அதை நிறைவேற்றினால் அங்கேயுள்ள சிறு அரிசன விவசாயிகளும் மற்றுமுள்ள விவசாயிகளும் பலனடைவார்கள்.

அடுத்தபடியாக, அந்தியூர் தொகுதியில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. மாணவர்களும் மாணவிகளும் சேர்ந்து படிக்கின்ற பள்ளியாகும். ஆகவே, அந்தப் பள்ளியை இரண்டாகப் பிரித்து மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் தனித்தனியாக பள்ளிகளை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அந்தியூரிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் பர்கூர் என்ற இடம் இருக்கிறது. அங்கே மலைவாசி மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான பொருள்களை வாங்க வேண்டும் என்றால் அவர்கள் அந்தியூருக்குத்தான் வந்து வாங்க

வேண்டிய நிலை இருக்கிறது. ஆனால் அவர்கள் வருவதற்கு சாலை வசதிகள் இல்லை. அதை அமைத்துக் கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அந்தியூர் பகுதியில் கருங்கற்கள் நிரம்ப இருக்கின்றன. அந்தக் கருங்கற்களை எடுத்துச் சென்று, பல வெளி நாடுகளுக்கு எடுத்துச் சென்று, பல பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். அந்தியூரிலே படித்த பட்டதாரி மக்கள் நிறைய பேர்கள் இருப்பதால் அங்கே ஒரு கருங்கற் தொழிற்சாலையை உருவாக்கினால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, பேசுவதற்காக வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ப. சுந்தரம்** : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பளித் தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உணவு உற்பத்தி செய்வதிலே மிக முன்னேடியாக உள்ள வட்டம் குறிப்பாக என் தொகுதியாகிய திருப்பத்தூர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே நெல்லும், கரும்பும் மிகப் பெரிய அளவில் பயிரிடுவதால் அந்த விவசாயிகளுக்கு எந்த விதமான உதவியையும் இந்த அரசு செய்து தரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆண்டியப்பனூர் என்ற இடத்தில் ஒரு டாம் கட்டவேண்டும் என்று எஸ்டிமேட் போட்டு, அது பொறியாளரால் பார்வை செய்யப்பட்டபின்பும் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக் கிறது. ஆகவே, அந்த டாமை கட்டித்தர, இந்தப் புதிய அரசு மறுபரிசீலனை செய்து, உடனடியாக அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் குறைகளை தீர்ப்பதற்கு தயாராக உள்ளது இந்த அரசு என்று கூறிக்கொண்டிருக்கிற நேரத்தில், திருப்பத்தூரில் இருக்கும் சர்க்கரை ஆலையில் ரூ. 134.50 கரும்புக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி வாக்குறுதி கொடுத்து விட்டு, கடைசி நேரத்தில் ரூ. 127 தான் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீங்கள் மறுபரிசீலனை செய்து

அதற்கான நடவடிக்கைகளை எடுத்து, அந்த விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

ஜருக்காம்பாறை என்ற இடத்தில் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி இருந்த காலத்தில்; எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஒரு சிறிய ஏரி கட்டவேண்டும் என்று சொல்லி அடிக்கல் கூட நாட்டப்பெற்றது. அதற்கான தொகை கூட ஒதுக்கப்பெற்றது. ஆனால் அது இன்று வரையில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆனால், இப்போது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நிதி இல்லாத காரணத்தால் நிறைவேற்றுவதற்கு இல்லை என்று. அதையும் மறுபரிசீலனை செய்து உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜருக்காம்பாறைக்கு அங்கே வாய்க்கால்கள் சரியானபடி இல்லாத காரணத்தால், வடவாளம் ஏரி மூலம் வரும் தண்ணீர் இதுபோன்ற கால்வாய் சீரமைப்பு இல்லாமல் இருப்பதால், அங்கேயுள்ள 100 குடிசைகளை மூழ்கடித்து விட்டது. ஆகவே, அந்த ஜருக்காம்பாறையில் சிறிய ஏரியையும் ஏரியின் கால்வாய்களையும் சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏலகிரி ஏரியில் தண்ணீர் நிறைந்து இருந்தால், அந்த ஏரியில் பயிர் செய்கிறவர்கள், மதகை ஓட்டை போட்டு விட்டு, தண்ணீரை வெளியேற்றி விடுகிறார்கள். அதன்பிறகு அவர்கள் அதிலே விவசாயம் செய்கிறார்கள். இதனால் அந்த ஏரி மூலம் பாசனம் பெறும் விவசாயிகள் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த நிலைமையைத் தடுக்க தகுந்த நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், நாட்றம்பள்ளியில் ஒரு பொதுப்பணித் துறைக் கட்டிடம் திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆனால் அதற்கான சேர், மற்றும் இதர சாமான்கள் இரண்டு வருஷமாகியும் சப்ளை செய்யப்படவில்லை. ஆகவே அவற்றை

சப்ளை செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூரில் அரசாங்க மருத்துவ மனையில் ரூ. 40,000 எஸ்டிமேட்டில் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அரசாங்க மருத்துவ மனையில் தண்ணீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தயவுசெய்து பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அந்த அரசாங்க மருத்துவ மனைக்கு தண்ணீர் வழங்க உடனடியாக தண்ணீர் வழங்கும் திட்டத்தைப் போட்டு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏரிகள் எங்கள் பகுதியில் பல சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நல்ல முறையில் சீரமைத்துத் தரவேண்டும் என்று கேட்டு, என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

* **திரு. என். குப்புசாமி :** தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு ஒருசில கருத்துக்களைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாண்டு ஒரு கணிசமான தொகை பொதுப்பணித் துறை மானியங்களுக்கு ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் பாசனத்தின் மூலமாக விவசாயத்திற்கு பாசன வசதி செய்து தருவது மட்டுமல்லாமல் அந்தத் திட்டக் காலங்களில் கிராமங்களில் இருக்கிற கூலி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாக கிடைக்கும் சூழ்நிலை இருப்பதால், இந்தத் துறையின் பணிகள் கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு அடிப்படையாக அமைகிறது என்பதால், இந்தத் துறைக்கு வரும் நிதியாண்டுகளில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தத் துறையானது இனி வரும் காலங்களில் சிக்கலான பிரச்சனைகளை எதிர்நோக்கி இருப்பதால், நிலநீரை முறையாகப் பயன்படுத்தும் சூழ்நிலை உருவாகியிருப்பதால் எதிர்

காலத்தில் இந்தச் சிக்கல் மேலும் வலுப்பெறும் என்பதால், நிலநீரைப் பயன்படுத்துவதில் ஒரு முறையான விதிமுறைகளை வகுத்துக்கொண்டு, கட்டுப்படுத்தி ஆகவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலநீரைப் பயன்படுத்தும்போது வரும் நிதி ஆண்டுகளில் நிலநீரை எந்த அளவுக்கு சேகரித்து வைத்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு சேகரித்து வைக்கவும், அதே நேரத்தில் இன்னும் நிலநீரை அதிகப்படுத்துகின்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும் நாம் முறையான திட்டங்களை வகுத்தாக வேண்டும். இந்தக் கருத்துக்களை மனதிலே வைத்து, நமது அரசு சில முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதிலும் குறிப்பாக, தர்மபுரி போன்ற வறண்ட மாவட்டங்களில் இந்த நிலநீரை முறையாகப் பயன்படுத்துவது மிக மிக அவசியமாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம் மலையும் மலையினைச் சார்ந்த பகுதியாக இருப்பதால் அங்கு மேடு பள்ளம் அதிகமாக இருக்கிறது. அதனால் காட்டாறுகள் அதிகமாக ஓடுகின்ற காரணத்தால் மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, மழை நீர் வீணாகும் காரணத்தால் அந்த பகுதி மிகவும் வறட்சியாக இருக்கிறது. காரணம், நீர் கசிவு ஏற்படாமல் இருப்பதால் அங்கு வறட்சி அதிகம். எனவே, எங்கெங்கே அந்த நீரைத் தேக்கி வைக்க வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நீரைத் தேக்கி வைத்து, கசிவு ஏற்படச் செய்துக் வறட்சியைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் முள்ளிக்காடு என்ற இடத்தில் வாணியாற்றுக்கு குறுக்கே அணைக்கட்டும் திட்டம் கூறப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் உலக வங்கி நிதி உதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது; உலக வங்கி நிதி உதவியுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது பல்லாண்டு காலமாக மக்களால் வலியுறுத்தப்பட்டு வருகிற ஒரு திட்டம். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்த அணைக்கட்டும் திட்டம் 1909-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்த இடத்திலே அடிக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. அந்த குறிப்பு அங்கே இருக்கிறது.

1909-ஆம் ஆண்டு என்று சொல்லும்போது அந்த ஆண்டின் முக்கியத்துவத்தை நமது அமைச்சரவர்கள் உணர்வார்கள் என்று கருதுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த அந்த ஆண்டில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அன்றைய வெள்ளையர் அரசு திட்டம் தீட்டி இருக்கிறது. ஆனால், இதுவரை அந்தப் பகுதி மக்களால் பல்வேறு ஆண்டுகளிலே பல்வேறு அரசுகளை வலியுறுத்தியும், நிறைவேற்றப்படாமல் இருப்பது உண்மையிலேயே வேதனைப்படக்கூடிய ஒன்று. எனவே, இந்த நிதியாண்டிலாவது உலக வங்கி நிதி உதவி கிடைக்காவிட்டாலும் நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஆவனச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, 1974-75 ஆம் ஆண்டில் வறட்சிப் பணியாக அச்சம்பட்டி கிராமத்தில் ஒரு ஏரி கட்டுவதற்கு மதிப்பீடு தயாரித்து, நிதி இல்லை என்ற காரணத்தால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டிலாவது அந்த ஏரியைக் கட்டுவதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து, எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது.)

கடத்தூருக்கு அருகில் நபினிநாய்க்கனஹள்ளி கிராமத்தில் 12 லட்சம் ரூபாயில் மதிப்பீடு தயாரித்து ஒரு ஏரியை கட்டும் திட்டம் உருவாக்கப்பட்டது. இன்னும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அந்த ஏரியை கட்டி முடித்தால் கிட்டத்தட்ட இருபது கிராமங்கள் பயனடையும். கிணறுகளில் நீர் ஊற்று ஏற்பட்டு, அங்கு இருக்கிற மக்களுக்கு குடிதண்ணீர் பிரச்சனையும் தீரக்கூடிய ஒரு அரிய வாய்ப்பாக இருக்கும். அதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தகையத் திட்டங்களை எல்லாம் வருகின்ற நிதியாண்டில் எடுத்துக் கொண்டு, நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

[1978 மார்ச் 11

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, பாசனம், மற்றும் பொதுப்பணியின் தொடர்பான இந்த மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

பாசனத்தை நம்முடைய இந்த மானியக் கோரிக்கையில் கோரப்பட்டிருக்கிற வகையில் எடுத்துக்கொண்டால் இன்னும் முழுமையான, செம்மையான பாசன வசதிகளைப் பெறுவதற்கு காலம் ஆகும் என்ற ஒரு ஐயப்பாடு ஏற்படுவதாக அமைந்திருக்கிறது.

பாசன திட்டங்களை வகுக்கும்போது நாம் மேற்கொள்கின்ற அடிப்படையான கொள்கைகளிலே ஏதோ சில தவறுகள் இருக்கின்றதோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, நாட்டிலே நிதர்சனமான சூழ்நிலைகளை நாம் கவனத்தில் வைத்துக்கொண்டு, இதனால் என்ன நன்மை கிடைக்கும் என்ற எண்ணத்தைக் கொண்டு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது என்று மேத்தமேட்டிக்கல் கேல்குலேஷன் என்ற முறையிலே நாம் கணக்கிட்டுப் பார்க்காமல் ஒட்டு மொத்தமாக இதனால் சமுதாயத்திற்கு என்ன நன்மை ஏற்பட வேண்டும். அதே நேரத்தில் டெவலப்மென்ட் அன்ட் வெல்ஃபேர் கன்சிடரேஷன் இதிலே என்ன இருக்கிறது என்ற அடிப்படையிலேதான் திட்டங்களைத் தீட்ட வேண்டுமே தவிர கணக்குகளை வைத்துக்கொண்டு இதிலே பெனிஃபிட் காஸ்ட் என்ன என்ற வகையில் திட்டங்களைத் தீட்டுவது நம்முடைய நாட்டினுடைய நிலைமைக்கு பொருத்தமாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் தெரியும். நம்முடைய பேராறுகள், அந்த ஆறுகளிலே அணைக்கட்டுக்கள் கட்டி விட்டோம். அதிலே பாசன வசதி எவ்வளவு பெற வேண்டுமோ பெற்று விட்டோம். நடுத்தர பாசனத் திட்டங்களை வகுத்து அதையும் நிறைவேற்றி விட்டோம். இப்போது நம்மிடத்தில் இருக்கக்கூடிய வாய்ப்பு நீர் ஆதாரங்களைப் பெறுவது என்று சொன்னால் மழைத் தண்ணீரை எப்படி தேக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் திட்டங்களைத் தீட்டவேண்டியவர்களாக இருக்கிறோம்.

1978 மார்ச் 11] [திரு. எம். ஏ. லத்தீப்]

அப்படிப் பார்க்கும்போது பெனிஃபிட் காஸ்ட்டின் அடிப்படையிலேதான் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நாம் இன்னும் வலியுறுத்திக்கொண்டிருப்போமேயானால் நிச்சயமாக நம்முடைய நாட்டினுடைய பல்வேறு பகுதி வறட்சிப் பகுதிகளுக்கு நாம் பாசன வசதிகளை அளிக்க முடியாது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக ஒரு இடத்திலே, ஒரு வறட்சிப் பகுதியிலே ஒரு நீர் தேக்கத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் அந்த நீர் தேக்கத்தின் வாயிலாக எவ்வளவு காலத்திற்கு பாசனம் கிடைக்கிறது என்பதைக் கணக்கிட்டு எவ்வளவு கன அடி தண்ணீர் அந்தப் பாசனத்திற்கு தேவைப்படுகிறது என்று கணக்கிட்டு கிடைக்கின்ற அந்த நீர்த் தேக்கத்தில் மொத்தத் தேவையான அந்த நீரிலே சுமார் 70 சதவீதம் தேக்கம் ஏற்படுகிறதா என்று கணக்கிட்டுத்தான் அது ஃபீசிபிளா, இல்லையா என்று துறையினர் மதிப்பிடுகிறார்களே தவிர ஏதோ ஓரளவு பாசன வசதி வறட்சிப் பகுதிகளுக்கு கிடைக்கும் என்ற வகையில் செய்யாமல் விட்டுவிடுவது நாட் ஃபீசிபிள் என்று சொல்லுவது நம்முடைய நாட்டினுடைய நிலைமைக்கு ஒத்துவராத ஒன்று என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களிலே உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோமேயானால் கர்நாடக மாநிலத்திலே 50 சதவீதம் வருவதாக இருந்தால்கூட அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். 70 சதவீதம் தான் வரவேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பது, ஒரு இடத்திலே 65 சதவீதம் இருந்தாலும் அதைத் தள்ளிவிடுவது, 60 சதவீதம் இருந்தாலும் தள்ளிவிடுவது என்ற நிலைமைக்கு நீடித்துக் கொண்டிருக்குமேயானால் அது நிச்சயமாக இன்று இருக்கின்ற நிலைமைக்கு உதவாது. அதில் அடிப்படையான ஒரு மாறுதல் கொள்கையை அரசு வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வது இந்த நேரத்தில் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அதே நேரத்தில் சில இடங்களில் பெனிஃபிட் காஸ்டைப் பார்க்கிறார்கள். எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று பார்க்கிறார்கள். அதுவும் அவ்வளவு ஒத்துவராது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். வருமானம் கிடைக்கவில்லை என்றால் வாட்டர் செஸ் அதிகமாகப் போடுங்கள். 15 ரூபாய்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 11

போடக்கூடிய இடத்தில் 100 ரூபாய் என்று செய்யுங்கள். நீர் வசதியே இல்லாமல் இருந்தால் என்ன செய்வார்கள்? நீர்ப் பாசனம் அவர்களுக்குக் கிடைக்கிற காரணத்தினுலேதான் வருமானம் வருகிறது. நீர்ப்பாசனம் இல்லை என்றால் கிணறு தோண்ட வேண்டும். பம்ப் செட்டுகள் அமைக்க வேண்டும்.

(பிற்பகல் 12.20)

கிணறு வெட்டினுல் பம்ப் செட் வைக்கவேண்டும். அதைப் பார்க்க ஓர் ஆள் வைக்கவேண்டும். அதில் மின்சாரம் பொருத்தி அதற்காக மின்சாரக் கட்டணம் கொடுக்கவேண்டும். நீர் ஆதாரம் இல்லாவிட்டால் இவ்வளவு செலவுகளையும் அவர்கள் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு நிரந்தர நீர்ப் பாசனம் செய்து தந்தால் ஏதோ ரூ. 15 வாட்டர் செஸ் என்பதை விட்டு ரூ. 100 என்று போட்டால்கூட அதனுல் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படப்போவதில்லை. அதனுல் அவர்களுக்கும் வருமானம் கிடைக்கும். அதோடுகூட 'ஓவர் ஆல் டெவலப் மென்ட்'டும் இருக்கும். எனவே அந்த முறையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூவம் பற்றி அமைச்சர் அவர்கள் மிக அழகாகச் சொல்லியிருக்கிருர்கள். அங்கு ஏதேதோ இருப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல் இருக்கிற நிலை அப்படியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மீதிப் பேர்கள் ஒத்துழைக்கிற முறையில் நீங்கள் ஒத்துழைக்க மாட்டேன் என்று சொல்கிறீர்கள். ஆறு நிமிடங்கள் ஆகின்றன. இப்போது புது ஸ்ப்ஜெட்டுக்கு வருகிறீர்கள். நீங்கள் உங்கள் எண்ணங்களை தினசரி தெரிவிக்க விரும்புவதை நான் ஆதரித்திருக்கிறேன். தயவுசெய்து ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : உங்களோடு நான் வாக்குவாதம் செய்ய தயாராயில்லை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் முடித்துக்கொள்ளுங்கள். ஒருநிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

1978 மார்ச் 11]

திரு. எம். ஏ. லத்தீப் : நான் என் தொகுதிபற்றி மட்டும் சொல்லவில்லை. நாட்டுக்குத் தேவையானதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு தரவேண்டும் அல்லவா?

திரு. எம். ஏ. லத்தீப் : அமைச்சர் அவர்கள் அங்கு ஏதேதோ இருப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள். ஆனுல் அங்கிருக்கிற நிலை அப்படியில்லை. ஏதோ, 'ஸான்ட பம்ப்', தடுப்பு மதில் என்றெல்லாம் சொல்கிருர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதைப் பற்றி கவனிக்க வேண்டும்.

அடுத்து என் தொகுதியைப் பொறுத்தவரையில், ஆண்டியப்பனூர் திட்டம், வெள்ளக்கல் திட்டம், புல்லூர் திட்டம், அரசம்பட்டு திட்டம், மோர்தானு திட்டம் இப்படி வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இவை நிறைவேற்றப்படவில்லை.

வட ஆர்க்காடு மாவட்டம் ஏதோ ஒரு அனுதைப் பிள்ளையைப் போல் ஆகிவிட்டது. வட ஆர்க்காடு மாவட்டத்தின் உறுப்பினர்கள் சார்பாக கடுமையான ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஷண்முகா நதித்திட்டம் என்று ஒரு திட்டம் போட்டோம். ஷண்முகா நதித் திட்டம், சேத்தியார்த்தோப்பு அணைக்கட்டு திட்டம் ஒன்றையும் காணேம். பெரிய ஏரி ஆலங்காயத் திட்டத்தையும் காணேம். எல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனுல் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்குவார்கள் என்று நினைக்கிறேன். நாங்கள் இங்கே திரும்பத் திரும்பச் சொல்வதற்கு ஒரு மரியாதை-வேண்டாமா? இந்த அவை உறுப்பினர் பேசுவதற்கு ஒரு மரியாதை வேண்டாமா? என்ன செய்கிருர்கள் இந்தத் துறையினர்? இதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்க வேண்டும். எந்தவித சரியான பதிலும் வருவதில்லை அமைச்சர்களிடமிருந்து. மழுப்பல் என்று சொல்லமாட்டேன். தயவுசெய்து அதை ஒரு தந்திரமாக வைத்துக் கொண்டிருக்காது இன்று பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. செ. சதாசிவம்: சபாநாயகர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய பாசன, நில நீர் மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நீர்ப்பாசனம் என்பதன் அடிப்படையில் 1978-79-ம் ஆண்டிற்காக 53 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். பெரிய நடுத்தர நீர்ப்பாசனம் என்றும், ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்றும் எக்ஸ் ஜமீன் நிலங்கள் என்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் இரண்டாவதாகச் சொன்ன ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் திட்டத்தின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள மூன்றில் ஒரு பகுதி நிலங்கள் பாசனவசதி பெறுகிறது. அதற்காக இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 4.76 கோடி என்று இருப்பது மிக மிகக் குறைவான தொகை. இதை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இத்திட்டத்தின் அடிப்படையில் இருக்கக்கூடிய ஏரிகளை எடுத்துக்கொண்டால் 37,000 ஏரிகள் அதில் அடங்கியிருக்கின்றன. இந்த ஏரிகளை மராமத்து செய்வதோடு, வறண்ட பகுதிகளில், எங்கள் பகுதியைப் போன்ற வறண்ட பகுதிகளில், பிற்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதற்காக பல திட்டங்களை நாங்கள் கொடுத்திருக்கிறோம். அத்திட்டங்கள்பற்றி சொல்ல நேரமில்லாது போனாலும் திருச்சிஜில்லாவிலுள்ள கரூர் தாலூகாவில் உள்ள என் தொகுதியிலுள்ள மிக வறண்ட பகுதிகளில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதில் வரவேற்கக் கூடிய திட்டமாக இருப்பது, மேற்கு செல்லக்கூடிய நதிகளிலுள்ள தண்ணீரை நமது மாநிலத்திற்கு திருப்பிவிடலாம் என்றும், அதற்கான — அது சம்பந்தமாக இரு மாநில முதலமைச்சர்களும் பிரதம அமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேசிய பேச்சு வார்த்தைகள் எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கிறது. நமது மாநிலத்தின் அண்டை மாநிலமாக இருக்கின்ற கேரள நாட்டுடன் சகோதர உணர்ச்சியோடு பேசி இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதனால் பயன்பெறும் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, இராமனாதபுரம் போன்ற மாவட்டங்களை சொல்லும்போது, இந்த ஜில்லாக்களோடு எப்போதும் ஒதுக்கப்பட்டு வரும் எங்கள் திருச்சி ஜில்லாவையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், மற்ற ஜில்லாக்களுக்கு எல்லாம் தேவை என்ற அடிப்படையில் பல திட்டங்களை அமைத்திருக்கிறீர்கள். அப்படி அமைக்கப்படுகின்ற நேரத்தில் எங்கள் திருச்சி ஜில்லாவை ஒதுக்கி விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்வியின் அடிப்படையில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் அதிகமாக தண்ணீர் வருகின்ற நேரத்தில் திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலூகாவுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்ட நேரத்தில், அப்போது பரம்பிக்குளம் ஆளியாறு திட்டமிட்டபோது 32 டி. எம். சி. தண்ணீர் மட்டுமே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருப்பதாகவும், இந்த அளவுக்கு குறைவாக இருப்பதாகவும் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது, குறிப்பிட்ட அளவுக்கு நமக்கு தண்ணீரைப் பெறுவதற்கு நாம் வாதாடி அதிகமாக பெற வேண்டும்.

முதலில் கரூர் தாலூகாவுக்கு தண்ணீர் தரப்படுகிறது என்று காமராஜ் காலத்தில் சொல்லப்பட்டது. மற்ற தாலூகாக்களுக்கு கிடைப்பதைப் போலவே கரூர் தாலூகாவுக்கும் பகிர்ந்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம், லோயர் பவானித் திட்டம் என்றும், வட்டமலையாறு, வடக்கன் குளம், குண்டப்பள்ளம், உப்பாறு அணைத் திட்டம் போன்ற பல திட்டங்கள் அமைந்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் 20 ஆண்டு காலமாக நாங்கள் வற்புறுத்தி வருகின்ற நொய்யல் திட்டம் இப்போது எந்த இடத்தில் இருக்கிறது என்றே தெரியவில்லை. 1957-லிருந்து இந்த மாமன்றத்தில் அந்தத் திட்டத்தை வற்புறுத்திக்கொண்டே இருக்கிறோம். ஆரம்ப காலத்தில் இதற்காக பல்வேறு சர்வேக்கள் நடைபெற்ற

[திரு. செ. சதாசிவம்] [1978 மார்ச் 11

(பிற்பகல் 12-30)

காலத்தில் இது மிக சிறந்த திட்டம் என்றும், இது மலை மேல் அமைக்கப்படுமானால், ரோடுவசதி . போன்ற திட்டங்களுக்கு ஆகும் செலவிலேயே, இப்போது அமைந்துள்ள இடத்தில் செய்து முடிக்க முடியும் என்றும், இதன் மூலம் 20 ஆயிரம் ஏக்கர் பலன் பெறும் என்றும் சொல்லப்பட்டது இப்போது அதைப்பற்றி ஒன்றும் காணவில்லை. ஆகவே மீண்டும் இதைப் பற்றி பரிசீலனை செய்து இந்த நொய்யல் திட்டத்தை இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், குடகனாறு திட்டத்தைப் பொறுத்த அளவில் மதுரை மாவட்டத்து மக்கள் இந்தத் திட்டத்தின் பயன் திருச்சி மாவட்ட மக்களுக்கு போய்விட்டது என்று சொல்லிக்கொள்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே அன்றையதினம் சொன்னார்கள். அதனால் திருச்சி ஜில்லா எல்லாவகையிலும் புறக்கணிக்கப்படுகிறது. எப்போதும் எங்கள் ஜில்லாவிலுள்ள என் தொகுதி வறண்ட பகுதியாக இருக்கிறது. அங்கு 18 அங்குல மழை பெய்யக்கூடிய பகுதி தான் பெரும்பாலும் இருக்கிறது.

அதே போன்று தான் அங்கு அமராவதி ஆற்றிலிருந்து ரீமாடலிங் சப் டிவிஷன் போட்டு புதிய பாசன வசதி செய்து கொடுத்ததின் மூலம் அதிக பாசன வசதி பெறவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் பம்பு செட்டு வைத்திருக்கக்கூடியவர்கள் 1962-க்குப் பிறகு அனுமதி பெற முடியாத காரணத்தால் 20 சத வீதம் வரை பெனலிடி போடக்கூடிய நிலைமை இருக்கிறது மேற்படித் திட்டத்தின் மூலம் உபரியாகவுள்ள தண்ணீரைக் கொண்டு 62-க்கு பிறகு வைத்த பம்பு செட்டுகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். அத்துடன் அமராவதி ஆற்றின் கடைக்கோடியில் உள்ள கரூரில் ஒரு அசிஸ்டன்ட் என்ஜினியர் ஆபீஸ் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

கடைசியாக, ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஸ்பிரிங்க்லர்ஸ் திட்டத்தை கரூர் பகுதியிலிருந்து எடுத்து, நேரடிப் பாசனத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் வெள்ள நிவாரண வேலையில்

1978 மார்ச் 11] [திரு. செ. சதாசிவம்]

மணலை அப்புறப்படுத்துகின்ற வேலை செய்யும் நோத்தில் பரிபூரணமாக அப்புறப்படுத்த முடியாது என்று சில இடங்களில் சொல்லிவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. சில இடங்களில் கிணறுகள் தூர்ந்துவிடுகின்றன, இப்படிப்பட்ட இடத்திற்கும், மணல் அடித்துச் சென்று விடுகின்ற இடத்திற்கும் நிவாரணப் பணி செய்து கொடுக்க ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்காள்கிறேன்.

* **திரு. இல. ஆறுமுகம்:** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை மானியத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய திருநாவலூர் தொகுதியிலுள்ள சாத்தனூர் அணையின் நீர் பெரிய பாசன வசதியினை அளிக்கக்கூடிய நிலைமையிலே இருக்கின்ற காரணத்தினால், அதன் நீரை என்னுடைய தொகுதியிலுள்ள சித்தலிங்கமடம், ஆமூர் கிராமத்திற்கு பாசன வசதிக்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள அருங்குறிக்கையில் அணைகட்ட ரூபாய் 125 லட்சத்திற்கு திட்டம் அறிவிக்கப்பட்டது. அது செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், களமருதூர் ஏரிக்கு சேஷ நதி நீர் வருவதற்கு அங்கே ஒரு கால்வாய் வெட்டவேண்டும். இதனால் 15 கிராமங்களுக்கு மேல் பலனடையும்.

அடுத்தப்படி, கருவேப்பிலைபாளையம், இராமசாமிதாங்கல் ஏரி வரத்து வாய்காலை தூர் எடுத்து, ஏரியையும் தூர் செய்து, மதகுகளையும் சீர்செய்தால் 200 ஏக்கருக்குமேல் பாசனம் பெறும்.

அதேபோல், திருக்கோயிலூர் அணைக்கட்டிலிருந்து பிரியும் ராகவன்வாய்க்கால் கிழக்கு மருதூர்வரைச் செல்கிறது. அதில் பிரியும் கிளை வாய்க்கால்களையும், தூர் எடுத்து அகலப்படுத்தி, ஏரிகளையும் மராமத்து செய்து, மதகு, கலுங்குகளையும் சீர்செய்தால் பின்தங்கியுள்ள என் தொகுதி பாசனம் பெற்று விவசாயத் தொழிலை விரிவுபடுத்த ஏதுவாக இருக்கும். இதனால் அங்குள்ள ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பலனடைவார்கள்.

[திரு. இல. ஆறுமுகம்] [1978 மார்ச் 11

இருபோக சாகுபடித் திட்டத்தின் கீழ் இருந்ததை, செவலை, சிறுத்தனூர், மேட்டத்தூர், மடப்பட்டு, ஆமூர், கொளத்தூர், கனாகம், சிருலாப்பட்டு, திருநாவலூர், கொரட்டூர், பெரியப்பட்டு, கிழக்கு மருதூர், காந்தலவாடி, சோமாசிப்பாளையம், சித்தர் ஞங்கூர், மாமந்தூர், அரசூர், இருவேல்பட்டு ஆகிய ஏரிகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியிலே பாய்ந்தோடி வீணாகக் கடலில் கலக்கும் கெடில நதியில் பிள்ளையார் குப்பத்திற்கு மேற்கே அணையைக் கட்டினால், திருநாவலூர் தொகுதி, உளுந்தூர் பேட்டை தாலுகா முழுவதும் பாசன வசதியால் நன்மை பெறும்.

என்னுடைய தொகுதியில் 9 அரசு உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவைகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் உணவு விடுதிக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் மணக்குப்பம், ஆனத்தூர் இவ்விரண்டு ஊர்களிலுமுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பெங்களூர்—பாண்டிச்சேரி சாலையும்—திருச்சி—சென்னை சாலையும் சந்திக்கும் மைய இடமான மடப்பட்டில் பொதுப்பணித் துறை பயணர் விடுதிக் கட்டித் தருமாறு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சபையில் வைத்திருக்கக்கூடிய பாசன, பொதுப்பணித் துறை மான்யத்தை வரவேற்று இந்திய தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சுருக்கிச் சொல்ல முயலுகிறேன்.

என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆரம்பித்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே பேரவைத் தலைவர் அவர்கள் மணியடித்து, ஆரம்பப் பள்ளி மாணவர்களை ஹெட்மாஸ்டர் அடக்குவதுபோல் மணியடிப்பதால் பயம் வந்து விடுகிறது. எனவே, அருள்கூர்ந்து கொஞ்சம் பிரச்னைகளை எடுத்துவைக்க. . .

1978 மார்ச் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து என்னைப் பார்த்துப் பேசுங்கள். பள்ளிமாணவர்களை ஹெட்மாஸ்டர் நடத்துவது போல் நடத்தவில்லை. கண்ணியமான உறுப்பினர்களை பேரவைத் தலைவர் நடத்துவதுபோல்தான் நடத்துகிறேன். காரணம், இங்கே இருக்கின்ற பெரும்பாலான உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. நீங்கள் 3 பேரும் அதிர்ஷ்டசாலிகள். தினமும் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள். இனி ஒரு நாள் விட்டு ஒரு நாள் பேச அழைக்கக்கூடிய நிலைமை வந்தாலும் வந்துவிடும்.

திரு. கே. கந்தசாமி : நான் ஒரு வாரத்திற்கு ஒருநாள்கூட பேசத் தயாராக இருக்கிறேன். பேசுவதிலே எனக்கு அதிக அக்கறையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி : மாணவர்கள்போல் பயத்திற்கு உள்ளாகிறேன் என்று சொன்னேனே தவிர, உங்களை அவமதிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கொஞ்சமும் இல்லை. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அப்படிப் பேசாதீர்கள்.

திரு. என். கிட்டப்பா : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * என்று குறிப்பிட்டார்கள். மற்ற உறுப்பினர்களை அது புண்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்று என்னைப் பொறுத்த வரையில் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லக் கூடாது. மற்ற உறுப்பினர்களை புண்படுத்தக் கூடிய வகையில் உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசிய அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன். கண்ணியமாகப் பேசுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. கே. கந்தசாமி: நான் அந்த நோக்கத்திற்கே போக வில்லை. என்னுடைய நோக்கம் நாட்டுக்கு உரிய பொதுக் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்பதுதான். மாண்புமிகு உறுப்பினர்கள் யாருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நோக்கம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் மிக முக்கியமானது. வான் பொய்ப்பினும் பொன்னி பொய்க்கா வளநாடு என்ற அந்த மொழி பொய்த்து விட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் நாட்டுக்கு முக்கியமான தொழில். அண்டர் கிரவுண்ட் வாட்டர்சைப் பெற முடியாது என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஜாயின்ட் செலக்ட் கமிட்டியில் பேசுகிறபோது கூட

Our state has been declared as over-extracted state

என்ற விவரத்தைத் தெரிவித்தார்கள். இந்தியாவிலுள்ள அத்தனை மாநிலங்களிலும் அண்டர் கிரவுண்ட் வாட்டர்சை அதிகமாகப் பயன்படுத்திய மாநிலம் நம்முடைய மாநிலம்தான். ஆகவே, அண்டர் கிரவுண்ட் வாட்டர்ஸ் பூமியில் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எஞ்சினியர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இனி எதை வைத்து ஜீவனம் செய்யப் போகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வான் மழையைத்தான் நம்ப வேண்டும். வான் மழை பருவக் காற்றைப் பொறுத்திருக்கிறது. காடுகள் அழிக்கப்பட்டு விட்டமையால் மழையின்மை, வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் கேரளத்தில் மேற்கே கடலில் சென்று கலக்கின்ற ஆறுகளின் தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குத் திருப்ப வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதற்காக தமிழக மக்களின் சார்பாக பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனை கட்சி சார்பற்ற முறையில் அத்தனை மக்களும் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு பிரதம அமைச்சர் மொரார்ஜி தலைமையில் கேரள முதல்வரோடு நம்முடைய முதல்வர் பேச்சு வார்த்தை நடத்தி சுமுகமாக முடிவடையும் என்று தெரிகிறது. சில நிபந்தனைகள் இருக்கின்றன. பொதுவாக இருவரும் ஒருவருக்கொரு

வர் விட்டுக் கொடுத்து பிரச்சினை தீர வழி வகுக்க வேண்டும். இது நிறைவேறுவதன் மூலம் உற்பத்தி பெருக்கும், விவசாயிகள் கூட்டுறவுக் கடன், மற்றக் கடன்களிலிருந்து விடுபட முடியும். வட்டிக்கு வட்டி போடுகின்ற கூட்டுறவுக் கடன்களை வாங்காத நிலை ஏற்படும். ஆகவே, அதற்கான முயற்சிகளைத் துரிதமாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியாறு மாடர்னைசேஷன் பற்றியும், வைகை பூர்திருத்தம் பற்றியும் சொல்லப்பட்டது கடந்த ஐந்தாண்டு காலமாக அது பற்றிப் பேசப்பட்டு வருகிறது Historical back ground, original intention திருமங்கலம், உசிலம்பட்டி பகுதியில்

due to modernisation of Periyar and Vaigai

45,000 ஏக்கர் பாசன வசதி கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தத் தண்ணீரை அந்த இரண்டு தாலுகாக்களுக்கும் விட வேண்டும். அதைப் பற்றிய டிடெய்ல்ஸ் பேச நேரமில்லை.

வைகை டாம் மண் மேடிட்டு விட்டது. 40 அடி அளவுக்கு குன்னூர் பாலம் உயர்ந்து மேடாகிவிட்டது. தண்ணீர் கெபாசிடி குறைந்து விட்டது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். அங்கு தூர் எடுக்கவேண்டும். அதற்கு இரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்று சொல்லுகிறார்கள். வீடு எரிகிறது என்றால் கிணறு வெட்ட ஆள் அனுப்பியிருக்கிறேன் என்று சொல்வது போல் இருக்கிறது. ரொம்ப துர்பாக்கியமானது. நிபுணர்களை வெளி நாட்டுக்கு அனுப்பி முறையை அறிந்து வரச் செய்து இப்படிப் பட்ட காரியங்களை விரைவாகச் செய்யவேண்டும்.

லட்சுமிபுரம் கண்மாய், திப்பம்பட்டி கண்மாய். ஆண்டிப்பட்டி தொகுதியில் இருக்கிறது. ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அன்-எகனமிக் என்று சொல்லக் கூடாது. ஒரு ஏக்கருக்குத் தண்ணீர் பாய வேண்டுமென்றால் 3,000 ரூபாய் செலவு செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கு 4,000 ரூபாய் செலவு செய்தால் கூடப் பரவாயில்லை. அந்த வரம்பைத் தளர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும். மேதமாடிசல் கால்குலேஷனை எஞ்சினியர்கள் சொல்வார்கள். உங்களுக்குத் தெரியும், பிற்பட்ட பகுதி மக்கள், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தெரியும்—

It is the foremost duly of a welfare Governmentஆக, அப்படிப்

[திரு. கே. கந்தசாமி] [1978 மார்ச் 11

பட்ட மக்களை மேன்மைப்படுத்த வேண்டும். அன்னகருமிக் என்ற அயர்ன் ராடு குறுக்கே நிற்கக்கூடாது. மக்களின் நலனைக் கவனித்து செயல்படுத்த வேண்டும்.

சோத்துப்பாறை, கும்பம்பாறை நான்கு தொகுதிகள் கொண்டது. வெகு காலமாக இருக்கிறது. பண்ணை சேதுராமன், ஜெயராமன், கைத்தறி அமைச்சர் தொகுதிகளைச் சார்ந்து இருக்கிறது. அவ்வளவு பேரும் என்னிடம் அதுபற்றிப் பேசச் சொன்னார்கள். நேரம் இல்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். 'ட்வாட்' போர்டு தண்ணீர் டிவைனர் வைத்திருக்கிறார்கள். 90 சதவிகிதம் அக்யுரசி காட்டுவதாகச் சொன்னார்கள். விவசாய மக்கள் 250 ரூபாய் கட்டினால் கொடுப்பதாகச் சொன்னார்கள்—

That may be made available to the public and the rights என்ற அளவில் பணத்தைக் குறைத்து விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இதனால் விவசாயிகள் செலவு செய்யக்கூடிய பணமும் குறையும். விரயமும் குறையும்.

(மணி அடிக்கப்பட்டது.)

(பிற்பகல் 12-40)

அடுத்தபடியாக பிளட் பற்றி அதிகமாகப் பல பிரச்சினைகள் எழுந்தாலும் அப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமை வந்தாலும் நல்ல ஒரு பொறியாளரைப் போட்டிருக்கிறார்கள், அவர் நல்ல முறையிலே செயல்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வள்ளல் நதி அணை கட்ட 17 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆனால் அது சரியாக நடைபெறவில்லை என்ற புகார் இருக்கிறது. அதை மேடான இடத்தில் கட்டவேண்டுமென்ற புரப்போஸல் இருக்கிறது, அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிரவுண்ட் வாட்டர் அனுமதி கொடுக்கும்போது கொஞ்ச தூரம் தள்ளியிருந்தாலும், பீல்ட் பக்கத்திலே இருந்தாலும் அதே சர்வே நம்பரில் இடம் இருந்தாலும் 10 எட்டுக்கள்தான் தள்ளியிருக்கிறது என்றாலும் கொடுக்க மறுக்கிறார்கள், அது சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால் நடைமுறையிலே அதிகாரிகள்

1978 மார்ச் 11] [திரு. கே. கந்தசாமி]

கொஞ்சம் தாராளமாக அதைப் பார்த்து ஜெனரல் டிரிட்மெண்ட் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஸ்ட்ரிக்ட்டாக இருப்பதால் ஏழை விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். கடனை வாங்கி கிணறு தோண்ட முடியாத நிலைமையில் நிலத்தை ஏலத்திற்கு விடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள், அதையும் ரிலாக்ஸ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது).

*திருமதி சுப்புலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற சமயத்திலே ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக விரிவான கருத்தைக் கூறியிருக்கிறார்கள். ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் உண்மையிலேயே விரைவிலே அமைக்கப்பட்டு இந்தக் குழுக்களுடைய கருத்துக்கள் அரசுக்கு வருகின்ற சமயத்திலே எத்தனையோ விவசாயப் பிரச்சினைகள் தீருவதற்கு வழியிருக்கிறது.

என் தொகுதியில் 4 தீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுகின்றன. அவற்றுள் காளிங்கராயன் பாசனத் திட்டம், கீழ் பவானி பாசனத் திட்டம், குரங்கன்பள்ளம் திட்டம், பெரும்பள்ளம் திட்டம் ஆகியவற்றிலே மேஜர் போர்ஷனிலே வருவது கீழ் பவானி பாசனத் திட்டமும், காளிங்கராயன் பாசனத் திட்டமும் ஆகும். கீழ்பவானித் திட்டத்திலே எக்ஸ்டன்ஷன் செய்து அதிகமான ஆயக்கட்டுகளைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த கீழ்பவானி வாய்க்காலை லைனிங் செய்தால் இன்னும் எத்தனையோ ஏக்கர் நிலம் அதிகமாகப் பாசனத்திற்கு வருவதற்கு வசதி இருக்கிறது. ஆகவே, அரசு அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

கீழ்பவானி திட்டம் வருவதற்கு முன்பு வெட்டப்பட்ட கிணறுகளுக்கு அதிகப்படியான ஆயத் தீர்வை விதிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கிணறுகளுக்கு கீழ்பவானி வாய்க்காலினுடைய

[திருமதி சுப்புலட்சுமி] [1978 மார்ச் 11

ஆரம்பத்திலிருந்து கடைசி பகுதிவரை இருக்கிற கிணறுகளை வகைப்படுத்தி அந்தப் பகுதியிலே உள்ள கிணறுகளுக்கு எல்லாம் குறிப்பிட்ட ஆயத் தீர்வையை விதித்தால் அதனுல் அரசாங்கத் திற்கும் வருமானம் அதிகமாகக் கிடைக்கும். ஆனுல் இன்றைய தினம் சில பகுதிகளிலே அங்கே உள்ள கணக்குப்பிள்ளையும் மற்ற அதிகாரிகளும் அந்த கிணறுகளுக்கு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொண்டு அந்தக் கிணறுகளை ஆயக் கட்டிலே சேர்க்காமல் இருப்பதுபற்றி விவசாயிகள் குறை கூறுகிறார்கள். ஒரு சில விவசாயிகளுக்கு அந்தக் கணக்குப் பிள்ளையும் மற்ற அதிகாரிகளும் சரி செய்யப்படாத நிலையிலே அதிகமான ஆயத்தீர்வை விதிக்கிற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு ஒரு சில விவசாயிகளைப் பொறுத்தவரையில் ஜப்தி செய்யப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த நிலையை நீக்குவதற்கு அந்த கிணறுகளை யெல்லாம் வகைப்படுத்தி எல்லா கிணறுகளுக்குமே ஒரு குறிப் பிட்ட தொகையைத் தீர்வையாக விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சர்வே எண்ணில் உள்ள தோட்டத்திற்குள் வாய்க்கால் செல்லும்போது தோட்டம் இரண்டு பாகமாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு பகுதிக்குத் தண்ணீர் செல்லுகிறபோது இன்னொரு பகுதிக்கு கிணற்று நீர் எடுத்துக் கொள்வதற்குத் தடை இருக்கிறது. அதை மாற்றி இரண்டு பகுதிகளுக்கும் சரியான முறையிலே வாய்க் காலைக் கடந்து கிணற்று நீரைக் கொண்டு செல்ல அனுமதிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காளிங்கராயன் பாசனத் திட்டம் 380 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. அது 50 மைல் நீளமுள்ள வாய்க்கால் ஆகும். அந்த வாய்க்காலின் கடைப் பகுதியில் என்னுடைய தொகுதியின் சில பகுதிகள் வருகின்றன. அந்தப் பகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. கடைப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் போதுமான அளவில் கிடைக்காமல் அவர்கள் பாதிக்கப் படுகிறார்கள்.

Irrigation in Coimbatore—Kalingarayan channel—Proposals—Modernisation—Draft estimate for Rs. 60 lakhs—Sanctioned.

1978 மார்ச் 11] [திருமதி சுப்புலட்சுமி]

1974 ஆம் ஆண்டிலே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு ரீமாடலிங் செய்யும்போது அதிகாரிகளினுடைய கவனக்குறைவால் .50 லட்சம் ரூபாய் எந்தவித முன்னேற்றத் திட்டமும் ஏற்படாமல் அந்த காளிங்கராயன் வாய்க்காலில் கரைத்து விட்டதைப் போல் இன்றைக்கு அந்த ரீமாடலிங் ஒர்க் தடைபட்டிருக்கிறது. இதற்கு இ.இ. அவர்கள் காரணமாக இருந்தார்கள் என்று அங் குள்ள விவசாயிகள் நினைக்கிறார்கள். அந்த இ.இ.க்குப் பிறகு வந்த மற்றொரு இ.இ., விவசாயிகளின் மூன்று கூட்டங்களைக் கூட்டினார்கள். அந்த விவசாயிகள் இந்த ரீ-மாடலிங் பற்றித் திருப்தியடையவில்லை, அதிருப்திதான் தெரிவித்திருக்கிறார்கள். 1974-இல் நடந்த அந்த ரீ-மாடலிங் வேலையைப்பற்றி தனி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அறுபது இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அந்த ரீ-மாடலிங் ஒர்க் முடிந்திருந்தால் இன்னும் சுமார் 5,200 ஏக்கர் கள் அதிகப்படியாகப் பாசனம் பெற்றிருக்கும் என்பதில் ஐய மில்லை.

அடுத்தபடியாக, குரங்கன்பள்ளம் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கீழ் பவானிப் பாசனத் திட்டம் அமலுக்கு வரும் நேரத்தில் அறியாமையின் காரணமாகக் குறிப் பிட்ட கிராமங்களுக்கு வாய்க்கால் பாசனம் தேவையில்லை என்று எழுதிக் கொடுத்துவிட்டார்கள். அதனுல் அந்தக் கிராமம் பாசன வசதி கிடைக்காத நிலையில் இருக்கிறது. கழிவு நீரைத் தேக்கி வைத்து குரங்கன்பள்ளத் திட்டத்திலிருந்து பாசனத்திற்குப் பெறுகிறார்கள். இந்தக் குரங்கன்பள்ளம் திட்டத்திலிருந்து ஆயக்கட்டுகளுக்கு எல்.பி.பி. முதல் டர்ன் முதல் போகத்திற்கும், இரண்டாவது டர்ன் இரண்டாவது போகத்திற்கும் திறந்து விடப் படுகிறது. கழிவு நீர் அதிகம் இல்லாதபொழுது எல்.பி.பியி லிருந்து குரங்கன்பள்ளத் திட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று ஜி.ஓ. இருந்தும்கூட அதிகாரி கள் அந்த அரசு ஆணையை சரியாக அமுல்படுத்தாத நிலையில் இரண்டாவது போகத்திற்குக் குரங்கன் பள்ளத்தில் கழிவு நீர் இல்லாத சமயத்தில் விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு அங்கிருந்து ஐம்பது விவசாயி கள் தலைமைப் பொறியாளரையும் பார்த்து, இங்கு வந்து அமைச் சரிடம் நேரடியாகவும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே,

இந்த அரசு ஆணையை அதிகாரிகள் நல்லமுறையில் பயன்படுத்தி இரண்டு போகங்களுக்கும் தண்ணீர் சரிவரக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குரங்கன் பள்ளம் திட்டம் அமலுக்கு வந்து 11 ஆண்டுகள் ஆகியும்கூட அந்த விவசாயிகளுக்குப் பாசன பர்மிட் கொடுக்கப்படவில்லை. எந்தெந்த மதகுகளை எந்தெந்த விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென்ற வரைமுறையில்லாததன் காரணமாக அங்கே உள்ள விவசாயிகளிடம் ஏகப்பட்ட பிரச்னைகள் ஏற்படுவதாகத் தகவல் தெரிகிறது. எனவே அதுகுறித்தும் அரசு விரைவில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் அக்னியாற்றின்மூலம், கொள்ளுக்காரன் வயல், ஆண்டி வயல், மருதங்காவயல், புதுப்பட்டினம் ஆகிய கிராமங்களில், 700 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி பெறுகிறது. கொள்ளுக்காரன் வயல் இறைவை நீர்ப்பாசனத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலேயே நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்காக் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்துள்ள 1978-79 ஆம் ஆண்டுக்கான பாசன, பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கைகளின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டில் நமது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அரசை அமைத்தவுடன், மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்ற கொள்கையின் அடிப்படையில் தாம் போடும் திட்டங்கள் நலிந்த நிலையில் வாழும் ஏழை எளிய மக்களுக்காகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். அந்த அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆட்சி நடத்தும் நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் உழைப்பவனே உயர்ந்தவன் என்ற தத்துவத்தின் அடிப்படையில் திட்டங்களைத் தீட்டுகிறார்கள். உழைப்பவர்கள் உயரவும், ஏழை எளிய மக்கள் தங்கள்

வாழ்க்கையில் ஏற்றம் காணவும் அவர்கள் தீட்டிய திட்டங்களை இன்றைக்கு மக்கள் போற்றி வரவேற்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ் சிறுசிறு மேம்பாட்டுத் திட்டங்களை அமைத்து இன்றைக்கு நல்ல பல திட்டங்களைத் தமிழகத்திற்குக் கொடுத்திருப்பதைப் பார்த்து விவசாய மக்கள் அனைவரும் போற்றுகிறார்கள். அதேநேரத்தில் மனிதனுக்கு எவ்வாறு இதயம் முக்கியமானதோ அதுபோன்று விவசாயத்தை நம்பி வாழும் தமிழகம் நீர்ப்பாசனத்தை நம்பியிருக்கிறது. நம்பியிருக்கிற கார

(பிற்பகல் 12-50)

ணத்தால், இன்று வைகை சீரமைப்புத் திட்டம் என்ற ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் நிலக்கோட்டை அருகாமையில் ஒரு அணை இருக்கிறது. அந்த அணைப்பட்டிப் பகுதியில், பேரணை என்ற ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணையினால் போக்குவரத்து வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வைகை நதிக்குத் தென்புலத்தில் உள்ள மக்களும், வைகை நதிக்கு வடபுலத்தில் உள்ள மக்களும் போக்குவரத்து வசதியின்றி மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தின்கீழ் அணையை எடுத்து, நீரைப் பகிர்ந்து ஒதுக்கத் திட்டம் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, நீரை ஒதுக்கித் தரும் திட்டத்தில் பாலம் கட்ட இருக்கிறது. அந்தப் பாலத்தைப் போக்குவரவு வசதிக்குத் தகுந்தாற்போன்று ஏற்படுத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில், மருதுவா நதி ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த நதியில் மழைக் காலங்களில், தண்ணீர் பெருகி, வீணாகும் தண்ணீர் ஆற்றில் போய் விழுகிறது. அந்தத் தண்ணீரை செங்கோட்டான்பட்டி என்ற ஊருக்குப் பக்கத்தில் ஒரு மதகு கட்டி, நிலக்கோட்டைக் கண்மாயில் பாய வைத்தால் அதற்குக் கீழே உள்ள கண்மாய்களுக்குப் பெருகி விவசாயம் பெருகுவதற்கு ஏதுவாக இருக்கும். பல புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்களால் கொண்டு வரப்பட்ட கொடைரோடு பக்கத்தில் சிறுமலை நீர்த் திட்டம் இப்பொழுது செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை மேலும் மறுபரிசீலனை செய்து, செயல்படுத்தி வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது நிலக்கோட்டை தொகுதியில் தூர் வாரி எடுத்து கண்மாய்களில், அங்கங்கே ஒருசில—நிலம் படைத்தவர்கள் ஆக்கிரமிப்பு செய்து, தண்ணீரைத் தங்களுக்குப் பெருக்கிக் கொண்டிருப்பதால், பாசன வசதியை சீர் குலைக்கும் அளவுக்கு இருக்கிறது. அவைகளையெல்லாம் வெளியேற்றி, கண்மாய்களை தூர் வாரிக் கொடுக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒட்டுப்பாட்டி என்ற கிராமத்திற்குப் பக்கத்தில், அம்மன் ஊத்து என்ற ஊத்து அமைப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு அத்திட்டங்கள் இன்று செயல்படுத்தப்படாமலிருக்கின்றன. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலக்கோட்டை ஒரு தாலுகா தலைநகரமாக இருக்கிற காரணத்தால், அங்கு தங்குவதற்கு வசதியற்ற நிலைமையிருக்கிறது. ஆகையால், அங்கு ஒரு பயணியர் விடுதி கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கண்மாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாலே, நம. பொதுப் பணித்துறையின் மூலமாக அவைகளை காலி செய்து கொடுத்தால் தான், அந்தக் கண்மாய்களில் நீர்ப்பாசனம் விவசாயம் செய்வதற்கு வசதி இருக்கும். ஆகையினால், இந்த நல்ல காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

* திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் ஒப்புதலுக்காக, பொதுப்பணித்துறை, கட்டடங்கள் ஆகிய தலைப்பின்கீழ் அமைச்சர் அவர்கள் மானியம் கோரியிருக்கிறார்கள். அவர்கள் மொத்தம் கொடுத்திருக்கின்ற மானியக் கோரிக்கையினுடைய அளவை நான் கூட்டிப்பார்த்தபோது 70,83,16,000

ரூபாய்கள் தான் 3, 4 மானியங்களையும் சேர்த்துக் கோரியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்களுடைய உரைப் புத்தகத்தை நான் படிக்கும்போது, என்ன காரணம் என்றே புரியவில்லை, 70,83,16,000 ரூபாய்கள் கோரிவிட்டு, 1978-79 ஆம் ஆண்டு செலவு செய்ய அனுமதித்துள்ள தொகை ரூபாய் 71,04,45,000 என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். எந்தப் புள்ளிவிவரம் சரி என்று எனக்குப் புரியவில்லை. மானியக் கோரிக்கையிலே கோரியிருப்பதுதான் சரியாக இருக்க முடியும். இந்த மன்றம் அனுமதிக்கின்ற பணத்தைத்தான் செலவு செய்ய முடியும். அனுமதிக்காத பணத்தைச் செலவு செய்ய முடியாது. எனவே, இந்தப் புள்ளி விவரத்தில் ஏற்பட்ட தவறுக்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொடுக்கப்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களை நான் பார்க்கிறபோது, இந்த இலாகவில் 1977-78-லே மொத்தம் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை, பரம்பிக்குளம் ஆழியாறையும் சேர்த்து கொடுக்கப்பட்டிருப்பது 9546 என்று. ஆனால் 1978-79-லே இந்த இலாகாவில் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை, பரம்பிக்குளம் ஆழியாறு நீங்கலாக 6189 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிற்கும் இந்த ஆண்டிற்கும் 3357 பேர்கள் வித்தியாசம் இருக்கிறது. 3357 பேர்கள் குறைவாக இருக்கிறார்கள். பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் 3357 பேர்கள் இருக்க மாட்டார்கள் என்று உறுதியாக எனக்குத் தெரியும். எனவே இந்தத் துறையில் ஆள்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. யாரையும் வேலை நீக்கம் செய்யவில்லை, என்றாலும் இடங்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன என்பதை என்னால் உணர முடிகிறது தெரியமுடிகிறது. பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் 500 பேர்களை விட்டாலும் கூட, ஏறக்குறைய 2500 பேர்களைச் சென்ற ஆண்டிற்கும் இந்த ஆண்டிற்கும் இடையிலே இந்த இலாகாவிலே ஆள்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை.

அமைச்சர் அவர்களுடைய உரையிலே ஒன்றை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். கட்டடங்களைத் தனிப் பிரிவாக கொண்டு வந்து, தமிழக அரசின் பல்வேறு கட்டடப்

[திரு. ப. உ. சண்முகம்] [1978 மார்ச் 11

பிரிவுகளைப் பொதுப்பணித் துறையின் கீழே கொண்டு வரவேண்டும் என்று நீண்ட நாட்களாக முயற்சி செய்து, அப்போது கொண்டு வரமுடியாமல் போய்விட்டது. அதன் காரணமும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த முயற்சியை மீண்டும் செய்து வெற்றி பெற்றதற்காக நான் பாராட்டுகிறேன், வாழ்த்து கூறுகிறேன். அதுதான் சிறந்த முறையும் கூட, கட்டடத்திற்கென்று ஒரு சீஃப் இன்ஜினியர் இருந்து கொண்டு, பிறகு இலாகாக்களில் தனித்தனியாக இன்ஜியர்கள் வைத்திருப்பார்களேயானல் அங்கே இருக்கிற தலைமைப் பொறியாளருக்கு வேலையில்லாமல் போய் விடும். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து கொண்டுவந்ததற்காக அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

இதிலே குறிப்பிட்டிருக்கிற ஒன்று ஆதாயம் தராத திட்டம் ஆதாயும் தரும் திட்டம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நண்பர் லத்திப் அவர்கள் பேசும்போது கூட குறிப்பிட்டார்கள். ஆதாயம் தரும் திட்டம் என்று ஏன் வந்தது என்று நான் கூறுகிறேன். சரியாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு தான் சொல்கிறேன்.

திட்டங்களை எடுத்துக்கொள்ளும்போது, முன்னுரிமை எந்தத் திட்டத்திற்குக் கொடுப்பது என்று எண்ணி, இருக்கிற பணத்திற்கேற்பத்தான் திட்டங்களை ஆதாயம் தரும் திட்டம், ஆதாயம் தராத திட்டம் என்று ஒவ்வொரு திட்டத்திற்கும் வரம்பு வைக்கிறோம். ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றுகிற நேரத்தில் உதாரணமாக உணவு உற்பத்திக்குச் செலவு செய்கிற பணம், ஒரு டன் உணவு உற்பத்திக்கு எவ்வளவு ஆகிறது என்று கணக்கெடுத்து—3000 ரூபாய் என்று கருதுகிறேன்—சரியாக இருக்கும் என்று நம்புகிறேன். 3000 ரூபாய்க்குக் கீழ் இருக்குமானல் அது ஆதாயம் தரும் திட்டம் என்றும், 3,000 ரூபாய்க்கு மேல் ஆகுமென்றால், ஆதாயம் தராத திட்டம் என்றும் சொல்லி ஒதுக்கி வைக்கிறோம். ஆனல் இப்போது எல்லா திட்டங்களையும் நிறைவேற்றுகிற நேரத்தில் ஆதாயம் தராத திட்டமாகத்தான் போகும்.

இராமநாதபுரத்தில் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நான் குறை கூறவில்லை. நிறைவேற்ற வேண்டும் என்று நல்லெண்ணத்தோடு தான் சொல்கிறேன். புள்ளி விவர

1978 மார்ச் 11] [திரு. ப. உ. சண்முகம்]

கணக்கைப் பார்த்தால் ஒரு டன்னுக்கு 6,000 ரூபாய் செலவாகிறது. 6,000 செலவானாலும் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். முன்பிருந்த அரசு கூட, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது இப்படிப்பட்ட திட்டம் ஆதாயம் தராத திட்டம் என்பதைக் கவனத்தில் கொண்டு அந்தப் பகுதிக்குத் தேவையா இல்லையா என்பதைக் கவனித்துத்தான் முடிவெடுக்கவேண்டும் என்று செய்தது. எனவே, அப்படி முடிவெடுக்கும்போது இந்த நல்ல முடிவை ஏற்பதற்கேற்ப ஒரு விளக்கம் கூட தந்திருக்கிறார்கள். "இந்நாளில் நிலவுகின்ற விலைவாசி நிலவரத்திற்கு ஏற்ப இருக்குமாறு பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்க நிலை பற்றி குறிப்பிடப்பட்ட அடிப்படை அலகுகள் யாவும் திருத்தப் பட்டு உயர்த்தப்பட்டுள்ளன". விலைவாசிகள் நிலவரத்திற்கேற்ப தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதைவிட, நான் கேட்டுக் கொளுகிறேன், அந்தப் பகுதியினுடைய தேவையைக் கருதி அந்த வரம்புக்கு விலக்களிக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும், என்றால் இராமநாதபுரம் மாவட்டத்தைப்போல தர்மபுரி மாவட்டமும் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதி, அங்கு செலவு அதிகமாகவும் உற்பத்திக் குறைவாகவும் இருக்கும். ஆனல் திட்டம் தேவையாக இருக்கும். எனவே, இதுபோன்ற பகுதிகளில் இந்த வரம்பைக் கொஞ்சம் தளர்த்தவேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

அமைச்சருடைய குறிப்புப் பத்தகத்தில் நான் படித்த ஒன்று. நிலத்தடி நீரைப் பற்றி 6-வது பக்கத்திலே 11-வது பாராவிலே அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். "நில நீர் குறைந்து வருவது சில ஆண்டுகளாக நமக்குக் கவலையை அளித்துள்ளது கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, வடார்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்த நிலைமை மிகவும் கடுமையாக உள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 7-வது பக்கம் வரும்போது, 13-வது பாராவிலே "பெரும்பாலும் மாநிலம் முழுவதும் நில நீர் மட்டம் பெருமளவிற்கு உயர்ந்திருக்கின்றது. இதனல் கோயம்புத்தூர், வடார்க்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கோடைக்காலப் பயிர் நல்ல விளைச்சலை அளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

ஆறாவது பக்கத்திலே வரும்போது நிலத்தடி நீர் குறைந்து வருகிறது என்று சொல்லிவிட்டு, பிறகு 7-வது பக்கம் வரும்போது கோயம்புத்தூர், வடஆற்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெருமளவிற்கு உயர்ந்துள்ளது என்று சொல்லி யிருப்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நான் கூட ஏற்கனவே அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தேன். நிலத்தடி நீரைப் பற்றி இப்போது கணக்கு எடுக்கிறீர்கள். வரும் கோடை காலத்தில் இந்தக்கணக்கு எடுக்கவேண்டும். ஏற்கனவே 4-5 ஆண்டுக் காலம் வறட்சி இருந்த காரணத்தால், நிலநீர் கீழே போய்விட்டது. அதனால் அந்தப் பம்ப்செட் போடுகிறவர்களுக்கு கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் கிடைக்காமல் கஷ்டப்படும் நிலை இருக்கிறது. இப்போது மழை ஆங்காங்கு பெய்துள்ளதால் நீரின் மட்டம் மேலே வந்து இருக்கிறது. ஆகவே, வரும் கோடை காலத்தில் அந்த நில நீர் குறித்து சர்வே செய்து எங்கே அதிகரித்து இருக்கிறதோ அங்கே அதைத் தளர்த்துவதற்கு அரசுக்கு உதவியாக இருக்கும் என்பதால் இதைத் தெரிவிக்கிறேன்.

குடகனாற்றைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இரண்டு நாளைக்கு முன்பு கூட கேட்ட கேள்விக்கு விசாரணை நடந்து கொண்டு இருக்கிறது, அறிக்கை விரைவில் வர இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதிலே தவறு நடந்து இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஏற்கனவே, புயல்-வெள்ள நிவாரண அறிக்கையில் நான் பேசியபோது அது குறித்து விளக்கமாகப் பேசியிருக்கிறேன்.

அமைச்சர் அவர்கள் குடகனாற்றைப் பற்றி இங்கே கொடுக்கப் பட்டுள்ள "சாதனைத் திட்டம் 1978-79—பாசனம் அண்ட் நிலநீர்" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். 23-வது பக்கத்தில் விரிவாக அது குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். "மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், அழகாபுரி கிராமம், குடகனாற்றுக்குக் குறுக்கே 434 மில்லியன் கன அடி கொள்ளள வுள்ள நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இடது பக்கம் 9,39 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரு கால்வாயும், வலது பக்கம் 48 கிலோமீட்டருக்கு ஒரு கால்வாயும், வெட்டப்படும். இரண்டு கால்வாய்களுக்கும் கரை யமைக்கப்படும்.

இத்திட்டத்தினால், மதுரை மாவட்டத்தில் 2,230 ஏக்கர் பரப்பளவுக்குப் பாசன வசதி கிடைக்கும். திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டத்தில் 346 ஏக்கர்களுக்குப் புதிதாக பாசன வசதி, 819 ஏக்கர்களுக்கு இடையறாத பாசன வசதி ஆகியவை அளிப்பது தவிர, புதிய ஆயக்கட்டுக்கு 2,910 ஏக்கர் பரப்பளவுக்கு பாசன வசதி கிடைக்கும். இத்திட்டத்தின் மூலம் நான்கு ஏரிகள் பயனடையும். இத்திட்டத்தின் இறுதியான செலவு மதிப்பீடு ரூ. 499 இலட்சமாகும்." என்று அழகாகப் போட்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அமைச்சர் அவர் களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திட்டம் நிறை வேற்றுவது நல்லது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே 3-வது பாராவிலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உண்மையை இந்த அரசாங்கம் ஒப்புக்கொண்டதற்காக நான் மீண்டும் இந்த அரசைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 3-வது பாராவிலே "1977-ம் ஆண்டு நவம்பரில் வீசிய புயல் காற்றினால் குடகனாற்றின் கிளை நதியாகிய வரட்டாற்றில் இதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவிற்கு வெள்ளம் ஏற்பட்டது. நீர் நிலை மட்டம் வெகு வேகமாக உயரத் தொடங்கியது. மண் அணையின் மேலே அதிக அளவிற்கு நீர் வழிந் தோடியது. இதனால் மண் அணையில் உடைப்பு ஏற்பட்டது." மண் அணை உடைப்பு ஏற்பட்டதற்கான காரணத்தை ஒப்புக் கொண்டார்கள். உண்மையை ஒப்புக்கொண்டதற்காக நான் மீண்டும் நன்றி தெரிவிக்கிறேன்.

அதேபோல், இன்னொன்றையும் நான் தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன். புயல்-வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கைக்கும், அமைச்சரின் அறிக்கைக்கும் பெரிய வேறுபாடு ஒன்று கண்டேன். எனக்கு அந்த வேறுபாட்டிற்கான காரணம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த தகவல்கள் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கை என்ற—அவையில் வைத்த—புத்தகத்தில் 12-வது பக்கத்தில் 16-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது. "நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு ஏற்பட்ட சேதம் ரூ. 18.08 கோடி என மதிப்பிடப்படுகிறது. இதில் ரூ. 14.23 கோடி அரசுப் பாசன வாயில் களுக்கும், ரூ. 3.85 கோடி ஊராட்சி ஒன்றிய பாசன ஏரிகளுக்கும் ஆகும்". அதிலே 18 கோடி ரூபாய் அளவிற்குச் சேதம் என்று

குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் அமைச்சரின் உரைப் புத்தகத்தில் நான் பார்த்தேன்—பக்கம் 13—பாரா 25—"பாசனவாயில்களுக்கு வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதம் சுமார் 7.40 கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். வெள்ளநிவாரண வெள்ளை அறிக்கையில் 18 கோடி என்று குறிப்பிட்டு விட்டு, இதிலே 7.40 கோடி என்று போட்டு இருப்பது பெருத்த வேறுபாடாக இருக்கிறது. நாளைக்கு அதிகாரிகள் யாராவது படித்துப்பார்த்தால் கூட, ஏன் இத்தகைய பெருத்த வேறுபாடு என்று எண்ணக்கூடும். அப்படிப்பட்ட சந்தேகம் வரக்கூடும். ஆகவே, அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூறவேண்டும். இந்த மாறுபாடு இருப்பதில் நியாயம் இல்லை. இருக்கக்கூடாது. அப்படியேதேனும் புள்ளி விவரங்கள் இருக்குமானால் அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலதான் சென்ற ஆண்டு ஒரு திட்டத்தைப்பற்றி இந்த அவையிலே விவாதித்துச் சொல்லப்பட்டது. ஆளும் கட்சி உறுப்பினர்களும் குறிப்பாக திரு. லத்தீப் அவர்களும் அதைப் பெருமையோடு வரவேற்றார்கள். அது சண்முகாநதித் திட்டம் என்று சொன்னார்கள். அது சண்முகாநதித் திட்டம் அல்ல; அது பழனியில் இருக்கிறது. வடார்காடு மாவட்டத்தில் இருப்பது செண்பகத்தோட்டத் திட்டம். அந்தத் திட்டம் என்னவாயிற்று என்பதுபற்றி இந்தக் குறிப்புகளில் ஒன்றும் சொல்லவில்லை. இருக்கின்ற திட்டங்களை எல்லாம் நானும் தேடி தேடிப் பார்த்தேன்; எனக்குக் கிடைக்கவில்லை. ஒருவேளை வேலை நடந்து கொண்டிருக்கிறது; நான் புத்தகத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் வரவேற்கிறேன். வேலை நிறைவேற்றப்படாமல் இருந்தால் அதற்குக் காரணம் கேட்க விரும்புகிறேன். அதோடு உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாத்தனூர் இடதுபுற வாய்க்கால் திட்டம். அது ஆய்வில் இருக்கிறது என்று கேள்வி நேரத்தின்போதுகூட சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு சீக்கிரம் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் பற்றி வெகுவாக விவாதிக்கப் பட்டது. ஏற்கெனவே இருந்த அரசு 1,25,000 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாக பாசன வசதி அளிக்கத் திட்டமிட்டு, அதற்கு எந்தெந்த

இடங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று ஆலோசனை செய்து, அறிக்கையும் வெளியிட்டது. இடையிலே வந்த குடியரசுத் தலைவர் ஆட்சி அந்த உத்தரவை ரத்து செய்து, வேறு இடங்களை தெரிந்தெடுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு ஒரு குழுவைப் போட்டது. அந்தக் குழு போட்ட உத்தரவை அல்லது அறிக்கையை இந்த அரசு ரத்து செய்துவிட்டது. இப்போது எங்கே பாசன வசதி செய்யவேண்டுமென்று முடிவு செய்யாமல், ஆனால் வாய்க்கால் வெட்டும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. மலையைக் குடைந்து மூன்று மைல் தூரத்திற்குக் குகை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பாசனப் பகுதியை முடிவு செய்யாமல் இவ்வளவு கஷ்டப்பட்டு வாய்க்கால் வெட்டி, அது பயன்படாமல் போய்விடக்கூடாது. வாய்க்கால் வெட்டுவது என்பது ஒரு வருடத்தில் செய்யக்கூடியதல்ல. மூன்று, நான்கு ஆண்டுகள் ஆகும். எனவே, எந்த இடத்திற்குத் தண்ணீர் கொடுக்கப் போகிறோம் என்ற திட்டத்தை அரசாங்கம் உடனடியாக முடிவு செய்தாக வேண்டும். அப்படியானால் 3 மைல் தூரம் மலையைக் குடைந்து வரும் தண்ணீர் தமிழ்நாட்டுக்குப் பயன்படும். அதற்கு அரசு சீக்கிரம் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவிரி நீர் பற்றி நான் ஏற்கெனவே பலமுறை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் நிறையச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அதை ஒரு பிரச்சனையாக்க விரும்பவில்லை. தமிழ்நாட்டு மக்களின் ஜீவாதாரப் பிரச்சனையாக இதைக் கருத வேண்டும். இதில் கருத்து வேறுபாடு இல்லை. அண்டை மாநிலமான கர்நாடகத்தோடு மோத வேண்டும், தகராறு வைத்துக் கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதவில்லை. இப்போது மட்டுமல்ல; ஆட்சியில் இருந்தபோதும் இந்த முடிவுதான். மீண்டும் தெளிவாகச் சொல்கிறேன். இந்த அரசு கர்நாடகத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சுமுகமான ஒரு முடிவு சீக்கிரம் வரவேண்டுமென்ற கருத்தில்தான் இதை வலியுறுத்துகிறேன். தகராறு வரவேண்டும் என்பதற்காக அல்ல.

தமிழ்நாட்டுக்கு வேண்டியது காவிரி ஆற்றுப் பாசனத்தால் பயன்பட்டுவந்த 28 லட்சம் ஏக்கருக்கு பாதகம் இல்லாமல் இருக்க வேண்டும். அதற்கு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

இப்போது வறட்சிக் காலத்தில் அவர்கள் கொடுக்கவில்லை. புயல், வெள்ளம் வரும்போது அவர்கள் தயவு இல்லாமலே தண்ணீர் வரும். நான்கு ஆண்டு காலக் கணக்கை—இப்போதைய கணக்கைப் பார்க்கக்கூடாது. முப்பது, முப்பத்தைந்து ஆண்டு கால கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்கை வைத்துக்கொண்டு, பொறியாளர்களைக் கலந்துபேசி, நமக்குக் கிடைக்கவேண்டிய காவிரி ஆற்றுத் தண்ணீருக்கு குந்தகம் விளையாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்கே போகும் தண்ணீரைக் கிழக்கே திருப்பிவிடுவது பற்றிச் சொன்னார்கள். அதற்கு கேரளத்தில்-திருவனந்தபுரத்தில் பிரதமர் முன்னால் இரண்டு மாநில முதலமைச்சர்களும் பேசினார்கள் என்று பொதுப்பணித் துறை அமைச்சர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன் ஆனால், பேச்சுவார்த்தையின் பலன் என்ன ? அதைப்பற்றி ஒன்றும் இல்லை. மேற்கு நோக்கிச் செல்லும் தண்ணீரைக் கிழக்குப் பக்கம் திருப்பி விடுவதுபற்றிய பிரச்சனையை ஏற்கெனவே தேசிய வளர்ச்சிக் குழு (என்.டி.சி.) கூட்டத்தில் அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கிளப்பினார்கள். அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு, மேற்குத் தொடர்ச்சி மலை நீர்வளம் பற்றி ஆராய ஒரு குழு போட்டார்கள். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்தக் குழு நாங்கள் எழுப்பிய பிரச்சனையை விட்டுவிட்டு, மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கின்ற மலைவாழ் மக்களின் வாழ்க்கைப் பிரச்னையை எப்படி உயர்த்துவது என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டது. நாம் செய்த துர்ப்பாக்கியம் அது.

(பிற்பகல் 1-10)

ஆனால், இப்போது கூட மேற்கே போய் அரபிக் கடலிலே விழுகிற தண்ணீரைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இது குறித்து அப்போது நாம் கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம். அவ்வாறு நடத்துகிறபோது 'கேரள அரசு எங்களுக்குச் சொன்னார்கள்—'இந்த நதி வெள்ளம் அதிகமாக போய்க் கடலிலே விழுந்து கடல் அரிப்பு இல்லாமல் தடுக்கிறது, ஆகவே கடல் அரிப்பு தடுக்கப்பட வேண்டுமென்றால் இந்த வேகத்தோடு ஆற்று நீர் விழ வேண்டியது தேவை' என்று வலியுறுத்தினார்கள்.

அப்போது நமது அரசு தரப்பிலே சொல்லப்பட்டது என்னவென்றால் அப்படிக் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு சுவர் கட்டுவதாக இருந்தாலும், அந்த சுவர் கட்டுவதற்காகும் மொத்தச் செலவையும் தமிழ்நாடு அரசாங்கம் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னோம்.

கேரள அரசுக்கும் நமக்கும் எப்போதும் தகராறு என்பது கிடையாது. சுமுகமான உறவு இருந்த காரணத்தினால்தான் சிறுவாணித் திட்டம் அப்போது முறையாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டு கோரம்புத்தூருக்குக் நடத்தப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டு கோயம்புத்தூருக்குக் அச்சுதமேனன் அவர்களும் அன்றையதினம் தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களும் அந்த ஒப்பந்தத்திற்கு அடையாளமாக ஒரு மாநாட்டிலேகூட சிறுவாணித் திட்டத்தைக் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டு அறிவித்தார்கள். அப்போது சிறுவாணித்திட்டம் கோயம்புத்தூருக்குக் கிடைக்கும் என்று நாம் நம்பினோம். அணை கட்டுவது சீக்கிரத்தில் முடித்து விடப்படும் என்று நம்புகிறேன். காலதாமதத்தைத் தவிர்ப்பது தான் நமது அரசினுடைய கடமை. அணை கட்டுவதற்கு ஆகும் முழுப் பணத்தையும் நாம் ஏற்றுக்கொள்கிற காரணத்தால் அந்த வேலைகள் எல்லாம் சீக்கிரத்தில் செய்து முடிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனவே மேற்கே ஓடுகின்ற ஆற்றை கிழக்கே திருப்பி விட்டால் ராமநாதபுரம் மாவட்டம் பயன் அடையும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் வறண்டு கிடக்கின்ற தாலூகாக்கள் பயன் அடையும். இதை இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை சம்பந்தமான பல்வேறு மானியங்கள் குறித்த விவாதத்தில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களும் தங்களது நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். முதற்கண் அவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாகவே பொதுப்பணித்துறை என்றால் அவ்வளவு சரியாக இயங்காததுறை,

நிர்வாகச் சீர்கேடுகளுக்கு இடம் அளிக்கக்கூடிய துறை என்ற ஒரு அவப் பெயர் இன்று நேற்றல்ல இராஜாஜி அவர்கள் காலத்திலிருந்தே அதற்கு உண்டு.

ஆனால் இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய போது இந்த நிர்வாகத்தைப் பற்றி எந்தவிதமான குறைகளையும் எடுத்துச் சொல்லாத காரணத்தினால் இந்த விவாதத்திலே கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களும் சட்டமன்றப் பேரவையும் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ஒரு மன நிறைவோடு இருக்கிறார்கள் என்று நான் எடுத்துக்கொள்வதில் தவறு இல்லையெனக் கருதுகிறேன்.

நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் திட்டங்கள் தீட்டப்பட்டாலும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்தாலும் அவை சரியாகச் செல்ல வேண்டிய இடங்களுக்குச் சென்று அடைகின்றனவா என்று பார்க்க வேண்டியது இன்றியமையாத கடமையாக ஆகிறது. இன்றையதினம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். பொதுக்கூட்டங்களிலே பேசியபோதும் மற்ற இடங்களிலே பேசியபோதும் திட்டங்களைத் தீட்டி விட்டோம் என்று நாம் பெருமைப்பட்டாலும் அந்தத் திட்டங்கள் மக்களுக்குச் சென்று அடைகின்றனவா என்பது ஐயத்திற்கு இடமாக இருக்கிறது என்று எடுத்துச்சொன்னார்கள்.

இந்தக் கருத்தை மையமாக வைத்துக்கொண்டு, அந்த அடிப்படையில்தான் இவற்றை ஆய்வு செய்வது என்று கருதிய காரணத்தினாலே தான் ஒவ்வொரு தாலுக்கா மட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப் பேரவை மேலவை பிரதிநிதிகளிலே இருந்து இரண்டு பேரும் அதேபோல் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பொது மக்களின் பிரதிநிதிகள் இரண்டு பேரும் இந்தத் துறை சம்பந்தப்பட்ட பொறியாளர்களும் ஆக இவர்கள் அடங்கிய ஒரு குழுவினை ஏற்படச் செய்வது என்றும் அந்தக் குழு ஆர்.டி.ஓ. தலைமையில் இயங்க வேண்டுமென்றும், இங்கே ஒதுக்கப்பட்ட நிதி பல்வேறு பகுதிகளிலும் ஒழுங்காகச் சென்று சேருகின்றனவா என்பதைக் கண்காணிக்கவேண்டுமென்றும் அத்தகைய குழுக்களை அமைத்திருக்கிறார்கள். அரசு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது அத்தகைய குழுக்களில் இடம் பெறுகிறபோது எந்த நோக்கத்தோடு இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில் கண்காணிப்புப் பணி இருக்குமேயானால் இந்த நிர்வாகம் மேலும் சீரடைவதற்கு வசதியாக இருக்கும் என்பதோடுகூட இன்னும் நல்லமுறையில் இயங்குவதற்கும் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் குழுக்கள் விரைவில் அமைய இருக்கின்றன. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் அதில் வாய்ப்பு கிட்டும் என்பதை நான் முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரையில் அந்த நிர்வாகம் திறமையாக இயங்குவதற்கு இன்னொன்றும் தேவைப்படுகிறது. எதிர்க் கட்சி சார்பில் பேசிய முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், இந்நாள் எதிர்க்கட்சி உறுப்பினருமாகிய திரு. ப.உ.ச. அவர்கள் அதை இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள்.

பொதுப்பணித் துறை என்று சொல்கிறபோது கட்டடங்கள் கட்டும் பிரிவும், நீர்ப்பாசனம் இருக்கிற பிரிவும் ஒன்றாகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீர்ப்பாசனத் துறையில் பணியாற்றுகிற ஒரு பொறியாளர் அந்தப் பொறுப்பு முடிந்தவுடனே கட்டடத் துறைக்கு மாற்றப்படுகிறார். கட்டடத் துறையில் பணியாற்றுகிறவர் நீர்ப்பாசனத் துறைக்கு மாற்றப்படுகிறார். இதைத் தனித்தனியாகப் பிரிக்கவேண்டும் என்ற கருத்து இருந்துவந்தது. ஆனால் என்ன காரணத்தினாலோ இன்னும் பொறியாளர்களைப் பொறுத்தவரையில் ஓரளவு சந்தேகம் இருந்துகொண்டிருக்கிறது. கட்டடத் துறை என்று தனியாகப் பிரிக்கப்படுமானால் கட்டடத் துறையில் பணியாற்றுகிற பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு போதுமான அளவு இருக்குமா என்கிற ஒரு சந்தேகம் பொறியாளர்களிடத்திலே இருந்துவருகிறது.

என்னைப் பொறுத்தவரையிலே நான் பொறியாளர்களைக் கேட்டுக்கொள்வது, இந்தக் கருத்து, பொதுமக்கள் நன்மையைக் கருதி நடைபெறவேண்டுமா வேண்டாமா ? நடைபெற வேண்டுமென்று நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதற்கு அடுத்து

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 11

இரண்டாவதாக அப்படி நடைபெறுகிறபோது ஏற்கனவே பணியாற்றிக்கொண்டிருக்கிற பொறியாளர்களின் பதவி வாய்ப்புகள் அல்லது பதவி உயர்வு வாய்ப்புகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதற்கு பொறியாளர்கள் சங்கம் என்ன ஆலோசனைகள் சொன்னாலும் அல்லது அரசாங்கம் எடுத்து வைத்தாலும் பேசித் தீர்த்து ஒரு முடிவிற்கு வரலாம். ஏனென்றால் எப்போதோ செய்திருக்கவேண்டிய அந்தச் சீர்திருத்தம் எப்படியோ அப்போது நிறைவேற்றப்படவில்லை என்று நண்பர் ப.உ.ச. அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் நம்முடைய முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் அது நிறைவேற்றப் படவேண்டும் என்று தெளிவாக உத்தரவே தந்திருக்கிறார்கள். ஆகையினால் அப்படி நாம் தனித்தனியாகப் பிரித்து அமைத்து விடுவோமானால் நீர்ப்பாசனத்திற்கு நல்லது. அதோடு மட்டுமல்ல. நீர்ப்பாசனத்துறையில் இன்னும் திறமை அதிகரிக்க வேண்டும் என்பதையும், இருக்கிற நீர் நல்லமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் அதேநேரத்தில் எந்தெந்தப் பகுதிகளில் அந்தப் பாசன வசதிகள் இருக்கின்றனவோ அந்தப் பகுதிகளுக்கு இன்னும் பாசனத்திட்டங்களை அதிகப்படுத்துவதற்காகவும்—'பேஸின் வைஸ்', நீர்வழி நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்வாகத்தை மாற்றியமைப்பதற்கும் திட்டமிட்டிருக்கிறோம்.

இப்போது உதாரணத்திற்கு இங்கே குடகனாறு பற்றிச் சொன்னார்கள். குடகனாறு என்பது மதுரை மாவட்டத்தின் எல்லையில் அமைந்திருக்கிறது. குடகனாற்றில் வெள்ளம்வந்து அணை உடைந்து அது கரூர் வழி திருச்சிக்கு வந்து ஸ்ரீரங்கத்திற்குள்ளே புகுகிறது. ஆனால் மதுரை மாவட்டத்தில் ஒரு தனி சூப்பரின்டென்டிங் என்ஜினியர் இருக்கிறார். திருச்சி மாவட்டத்தில் ஒரு தனி சூப்பரின்டென்டிங் என்ஜினியர் இருக்கிறார். குடகனாற்றில் வருகிற வெள்ளம் திருச்சியில் இருக்கிற சூப்பரின்டென்டிங் என்ஜினியருக்குத் தெரியாது. அந்த வெள்ளம் வருகிறபோது தான் அவர் அதைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆகையால் ஒவ்வொரு ஆற்றுப்படுகையையும் அடிப்படையாகக் கொண்டு அதில் எந்தெந்த சிற்றாறுகள் வந்து கலக்கின்றன, அதில் எந்தெந்த ஏரிகளிலிருந்து தண்ணீர் வந்து பாய்கிறது, எந்த ஏரிகளில் சிற்றாறுகளில் எப்போது மலைகளில் மழை பெய்தால்

1978 மார்ச் 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

வந்து சேருகிறது என்ற அந்த தொழில்நுட்ப அடிப்படையில் நிர்வாக சீர்திருத்தம் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறது. அதற்கான ஆலோசனையும் சர்க்காரிடம் இப்போது நடைமுறையில் இருந்துவருகிறது. விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் காவிரிப்பாசனத் திட்டத்திற்கு ஒரு

(பிற்பகல் 1-20)

தலைமைப் பொறியாளர். பெரியாறு-வைகை பாசனத்திட்டத்திற்கும் தாமிரபரணி பாசனத்திட்டத்திற்கும் தனியாக ஒரு தலைமைப் பொறியாளர், பெண்ணாறு, பாலாறு பகுதிகளுக்கென ஒரு தனி தலைமைப் பொறியாளர் ஒன்று என தலைமைப் பொறியாளர்களை தனியாகப் போட்டு மாற்றி அமைக்கின்ற பொழுது, அவர்கள் தங்கள் தங்கள் பகுதியிலுள்ள ஆறுகள், அவைகளின் வரலாறு பற்றி அறிந்து கொள்வதற்கும், அதில் வந்து சேருகின்ற சிற்றாறுகளைப்பற்றியும், இவற்றில் எப்படியெல்லாம் மேம்பாடு செய்யலாம் என்பது பற்றியும் அறிந்து கொள்வதற்கும் இது சம்பந்தமான விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் வழி ஏற்படும் என்கின்ற வகையில் ஒரு நிர்வாகச் சீர்திருத்தத்தை மேற்கொள்வதாக இருக்கிறோம். மாண்புமிகு ப.உ.ச. அவர்கள் இதைப்பற்றி தங்கள் கருத்தைத் தெரிவிப்பார்கள் என்று எதிர் பார்த்தேன், ஆனால் அவர்கள் கணக்கு வழக்குக்குள் சென்று விட்டார்கள், அவர்களுடைய கருத்தை கேட்க முடியாததால் நான் ஏமாற்றமும் அடைந்தேன்.

திரு. ப. உ. சண்முகம் : இதில் கருத்து வேறுபாடேயில்லை, அதனால் தான் சொல்லவில்லை. இதில் எனக்கு பூரண திருப்தி, வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சொல்லாமலே பெரியர் என்ற அடிப்படையில் எதுவும் சொல்லாமல் இருந்தார் போலும். எனினும் பெருந்தன்மையோடு இதை வரவேற்றதற்காக என்னுடைய் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும், திட்டங்கள் வகுப்பதைப்பற்றிப் பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஒரு திட்டம் போடும் போது, அது ஆதாயமுள்ள திட்டம் தானா, அல்லவா என்றும், ஒரு டன் உணவு உற்பத்திக்கு எவ்வளவு என்று

கணக்குப் பார்த்து திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சர்க்கார் பல வகையான சட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துச்சொன்னார்கள். நான் அந்த முறையை மாற்ற வேண்டுமென்ற கருத்தை என்னுடைய முதல் பேச்சில் சொல்லியிருக்கிறேன்.

ஒவ்வொரு பாசனத் திட்டப் பகுதியிலும், இப்படிப்பட்ட திட்டங்களைப் போடவேண்டுமென்றால், அந்த இடங்களுக்கு அதிகாரிகள் போகிறார்கள். திட்டம் வேண்டுமா வேண்டாமா என்று முதல் ஆய்வு—இன்வெஸ்டிகேஷன்—செய்கிறார்கள். பின்னால் இதன் ரிப்போர்ட் சர்க்காருக்கு வருகிறது, அப்படி வரும்போது, இதில் இவ்வளவு காஸ்ட் பெனிபிட் இருக்கிறது, இதை எடுத்துக் கொள்ளவேண்டுமா வேண்டாமா என்று நிர்ணயிக்கவேண்டிய நிலைமை வருகிறது. இப்படி வருகின்ற நேரத்தில் ஒவ்வொரு பாசனப் பகுதிக்கும் ஒரு ஆலோசனைக் குழு போடுவதாக இருக்கிறோம். அந்த ஆலோசனைக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் உண்டு. அதே போல் அந்தப் பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கும் இடம் உண்டு. இப்படி காவிரி ஆற்றுப்பாசனப் பகுதி, அல்லது பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனப் பகுதி, பெரியாறு-வைகைப் பாசனப் பகுதி இப்படி பல பகுதிகளுக்கு தனித்தனியாக ஆலோசனைக் குழு அமைக்கப்படும். அதில் என்சினியர்களும் இருப்பார்கள்.

அப்படியிருக்கும்போது, புதிதாக ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தாலும் சரி, மேம்பாடு செய்வதாக இருந்தாலும் சரி, எந்த அளவுக்குத் தண்ணீரை மிச்சப்படுத்த முடியும் என்று பார்ப்பதானாலும் சரி. எவ்வளவு பாசன வசதியை அதிகப்படுத்துவதென்றாலும் சரி. அவர்களுக்குள்ளாகவே ஆலோசனைக்குழுவில் இதைப் பற்றி விவாதித்து அரசுக்குப் பரிந்துரைகளை அனுப்புவதற்கு வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் இக்குழுக்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது எதற்கென்றால் சாதாரணமாக மக்களிடமிருந்து ஒரு அணைக்கட்டுத் திட்டமோ அல்லது சாதாரண ஒரு பாசனத் திட்டமோ வேண்டும் என்று மக்களிடமிருந்து கோரிக்கை வரும் போது அதை பொறியாளர்களிடம் ஆய்வு செய்யச்சொல்லி, அதற்கான கருத்துக்களையெல்லாம் கேட்கும்போது, ஐந்து கோடி அல்லது ஆறு கோடி இதற்குச் செலவு ஏற்படும் என்று வரும்

போது அதைப் பொதுமக்களிடத்தில், அல்லது பொதுமக்களின் பிரதிநிதிகளிடத்தில் சொல்லும்போது அவர்கள் ஆச்சரியப் படுகிறார்கள். இதைக்கேட்டு வாயைப் பிளக்கக்கூடிய ஒரு சூழ் நிலை ஏற்படுகிறது. அப்படியில்லாமல் எந்த அடிப்படையில், சிக்கனமாகவும், திறமையாகவும் செயல்படுத்துகின்ற முறையில், அதே நேரத்தில் பொது மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலும் திட்டங்களைக் கொண்டுவருவதற்கு வசதியாக இப்படிப்பட்ட ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் போடப்படும் என்பதை செல்வதின் மூலம், இதன் மூலம் மேலும் நல்ல செய்திகளை பொதுமக்கள் பெறுவதற்கும் அதன் மூலம் நல்ல திட்டங்களை உருவாக்குவதற்கும் முடியும்.

இங்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், சற்றேறக்குறைய பாசனத்தின் மூலம் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு பாசனம் பெறுகிறது. கிணற்றுப்பாசனத்தின் மூலம் மேலும் மூன்றில் ஒரு பங்கு பாசன வசதி பெறுகிறது.

ஏரிகளை எல்லாம் செப்பனிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏரிகளைச் செப்பனிடுவதில் ஒரு சிரமம் இருக்கிறது. இதுவரை இருந்த நடைமுறை அது ஏரிகளை அணையை உயர்த்துவது அல்லது அணையை ரிப்பேர் பண்ணுவது போன்றவை பொதுப்பணித் துறை மூலம் செய்யப் படுகிறது. அதே நேரத்தில் நீர்ப் பரப்பு இருப்பது, தண்ணீர் வருகின்ற வாய்க்கால்கள், தண்ணீர் வடிகின்ற வாய்க்கால்கள் இவைகள் இப்போது ரெவின்யூ டிபார்ட்மெண்டில் இருக்கிறது.

அதன் விளைவாக என்ன நிலை ஏற்பட்டு விடுகிறது என்றால், ரெவின்யூ டிபார்ட்மெண்டு என்று சொல்கிறபோது, கிராம அதிகாரி கையிலே அது வந்து விடுகிறது. ஆகவே, ஏரியினுடைய நீர்ப் பிடிப்புப் பகுதியிலே அடிக்கடி என்ன நிலைமை ஏற்படுகிறதென்றால், என்குரோச்மெண்டு வந்து விடுகிறது. என்குரோச்மெண்டு வந்தவுடன், சரி நீங்கள் பயிரிடுங்கள், பிறகு பட்டா வாங்கிக் கொள்ளலாம் என்று அங்கேயிருக்கிறவர் தூண்டுதல் வந்துவிடுகிறது. இந்த நிலைமையின் காரணமாக அவர்கள் பயிரிட ஆரம்பித்து விடுகிறார்கள். அதற்குப் பின்னாலே அவர்களுடைய என்குரோச்மென்டை அகற்றுவது கஷ்டமாக இருக்கிறது. அதைப் போக்குவதற்கு இப்போது ஒரு முறையைக்

[திரு. த. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 11

கையாள்கிறார்கள். கருவேல மரத்தை நட்டு, அத்தகைய என்குரோச்மெண்டைத் தடுக்கிறார்கள். இது நடைமுறையில் கொண்டு வரப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஆனால் அதே நேரத்தில், இந்த நீர்ப் பிடிப்புப் பகுதிகள் முழுவதும் பொதுப்பணித் துறையின் கையிலே இருக்குமானால், இந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகளையும் பராமரிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மேற்கொண்டு என்குரோச்மெண்ட் ஆக்கிரமிப்பு ஏற்படாமல் இருப்பதற்காக, அத்தகைய பகுதிகளை பொதுப்பணித் துறை மேற்கொள்வது என்ற தீர்மானம் இருக்கிறது. அது ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே இருந்து பொதுப்பணித் துறையின் நேரடி கவனத்திற்கு வரயிருக்கிறது.

அப்படி வருகிறபோது, இந்த ஏரிகளிலே ஆக்கிரமிப்பு போன்ற இந்தக் காரியங்கள் நடைபெறாது. அதைப்போல கரைகளை அணைகளை எப்படி பராமரிக்கிறார்களோ, அதைப்போல நீர்ப் பிடிப்புப் பகுதிகளையும் பராமரிக்க நம்மாலே இயலும். இந்தத் திட்டத்தை நாம் கொண்டுவர இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் செண்பகத்தோப்பு திட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். நானே சொல்வதாக இருந்தேன். நல்லவேளை அவர்களே எடுத்துச் சொன்னார்கள். 1975 ஆம் ஆண்டில் 15 திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த 15 திட்டங்களில் இந்த செண்பகத்தோப்புத் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டங்கள் கொள்கை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

The schemes have been programmed to be taken up and it has been agreed in principle.

என்று போட்டிருக்கிறார்கள். ஆக, கொள்கை அடிப்படையிலே ஒத்துக்கொண்டு, நிறைவேற்றப் போகிறோம் என்று 15 திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பதினைந்து திட்டங்களுக்கும் எஸ்டிமேட் போட்டுப் பார்த்தார்களா என்றால் இல்லை. இதைப் பற்றி டீடெய்ல்ட் இன்வெஸ்டிகேஷன் நடத்தவில்லை. ஒருவேளை ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு திட்டம் எடுக்க வேண்டுமென்று, அன்றையதினம் அமைச்சராக இருந்த ப. உ. சண்முகம் அவர்கள் அந்த லிஸ்ட்டைப் போட்டிருக்கிறார்களோ, என்னமோ. எனக்குத் தெரியாது. அவர்கள்தான் விளக்கவேண்டும். இப்போது அதைப்பற்றி எஸ்டிமேட் போடுகிறபோது, மதிப்பீடு போடுகிற

1978 மார்ச் 11] [திரு. த. இராமச்சந்திரன்]

போது ஒவ்வொரு திட்டமும் 'அன்-ரெமியூனரேடிவ்'-வாக இருக்கின்றது என்று வந்து கொண்டிருக்கின்றது. அதிலே தான் செண்பகத்தோப்புத் திட்டமும் ஒன்று.

(1) அடவிநயினார்கோவில் ரிசர்வாயர் ஸ்கீம், செங்கோட்டை.

(2) கொடுமுடியார் ரிசர்வாயர் ஸ்கீம்.

(3) பச்சையார் ரிசர்வாயர் ஸ்கீம்.

(4) குதிரையார் ரிசர்வாயர் ஸ்கீம்.

(5) வழுக்கப்பாறை ரிசர்வாயர் ஸ்கீம்.

(6) கெலவரப்பள்ளி ரிசர்வாயர் ஸ்கீம்.

(7) தொட்டஹல்லா ரிசர்வாயர் ஸ்கீம்.

(8) கௌந்தின்யாநதி ரிசர்வாயர் ஸ்கீம்.

(9) பொய்கை அணைக்கட்டு ஸ்கீம்.

(10) அப்பர் ரிசர்வாயர் ஸ்கீம்.

(11) சித்தமல்லி ரிசர்வாயர் ஸ்கீம்.

(12) இம்ப்ரூவ்மெண்ட்ஸ் டு வீராணம் டாங்க் அண்டு வடவார் சேனல்.

(13) செண்பகத்தோப்பு ரிசர்வாயர் ஸ்கீம்.

(14) சோத்துப்பாறை ரிசர்வாயர் ஸ்கீம்.

(15) பி. டி. ராஜன் சேனல் ஸ்கீம்.

இந்தத் திட்டங்கள் எல்லாம் மிகவும் அட்ராக்டிவ்வாக இருக்கின்றன. ஆனால், இந்தத் திட்டங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கின்றபோது வருவாய்த் துறை வாரியத்திலிருந்தும், அதேபோல் நிதித் துறையும், இதைப் பார்க்கும்போது இவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறதே, அதன்மூலம் அதிகமான வருமானம் இல்லையே என்ற குறிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக தொழில்நுட்ப வல்லுநர்களிடையே இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன.

உதாரணத்திற்கு, செண்பகத்தோப்பை எடுத்துக்கொண்டால், இந்தத் திட்டத்தின் மூலம் புதிதாக நிலம் பாசனம் பெறுமா என்ற கேள்வி வருகிறபோது, அவ்வளவாக வராது. இது ஒரு வகையான கருத்து.

இந்த ஆற்றில் காமண்டலநாக நதியில் வேறு எந்த இடத்திலும் ஒரு அணைக்கட்டுகூடக் கிடையாது. சாதாரணமாக, அணைக்கட்டி பக்கத்திலே உள்ள ஏரிகளுக்குத் தண்ணீரைத் திருப்புகிறார்கள். ஆகவே, இந்த ஆற்றுப் பாசனப் பாதையில் ஒரு நல்ல அணை எதுவும் இல்லை. நல்ல இடமாகப் பார்த்து ஒரு அணையைக் கட்டி வைத்தால், அந்த அணையில் தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ள முடியும். எப்பொழுது தேவையோ, அப்போது மற்ற ஏரிகளுக்கு அதன்மூலம் தண்ணீரை விடுவதற்கு முடியும் என்பது அதற்கு எதிராக இருக்கின்ற மற்றொரு கருத்து.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரத்தை நீட்டிகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதற்கு எதிர்ப்பாக இருக்கிற கருத்து என்னவென்றால் ஒரு ஆற்றில் ஆண்டுதோறும் எவ்வளவு தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது என்று கணக்கிட்டாக வேண்டும் அல்லது இருக்கிற ஏரிகளில் எவ்வளவு நாட்களில் அல்லது எத்தனை ஆண்டுகளில் அந்தக் கரை வழிந்திருக்கிறது; அல்லது தண்ணீர் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதைப் பரிசீலித்த பிறகுதான் அணைக்கட்டுவதற்கான சமாதானமே கிடைக்கும். தண்ணீர் இருக்கின்ற ஏரிகளுக்கு கிடைக்காதபோது மூன்று கோடி ரூபாய், நான்கு கோடி ரூபாய், ஐந்து கோடி ரூபாய் என்று திட்டம் போட்டு நாம் ஆறுகளில் அணை கட்டி வைத்தால் அதனால் என்ன பலன் என்று பார்க்க வேண்டும் என்ற கருத்து இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். கருப்பா நதித் திட்டத்தைப் பற்றித் தெரிவிக்க விரும்புகிறேன். அது கட்டப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேறியவுடன் கருப்பா நதித் தண்ணீரைத் தேக்கினார்கள். அதனுடைய விளைவு கீழே இருக்கின்ற ஏரிகளில் தண்ணீர் நிரம்பவில்லை. கீழே இருந்த விவசாயிகள் எல்லாம் சேர்ந்து 'அணை கட்டித் தண்ணீரைத் தேக்கிக் கொண்டீர்கள்; எங்களுடைய ஏரிக்குச் சாதாரணமாக வரக்கூடிய தண்ணீர் வரவில்லை' என்று கூறி அவர்கள் எல்லாம் ஒரு கிளர்ச்சி செய்தார்கள் அதற்குப் பிறகு அந்த அந்த அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. தண்ணீர் திறந்து விடப்பட்டு எல்லா ஏரிகளும்

நிரம்பின. அந்த அணையில் ஏதாவது தண்ணீர் அந்த ஆண்டில் மிச்சம் இருந்ததா என்றால் இல்லை. அணை கட்டியதே தவறு என்ற கேள்வி வந்தது. எப்போதாவது வெள்ளம் ஏற்படுகிறபோது மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் ஆற்றில் வருகிறபோது அந்த நேரத்தில் பயன்படும். ஆகவே, மழை பெய்கிறபோது தண்ணீரைத் தேக்கிக் கொள்ள வேண்டுமென்று அணைகளைக் கட்டும்போது எப்போதாவது நாலைந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை வெள்ளம் வருகிறபோது தான் பயன்படுகிறதே தவிர, எப்போதும் பயன்படுவதில்லை.

ஐந்தாறு கோடி ரூபாய் செலவு செய்து அந்த மாதிரி அணைகளைக் கட்டுகிறபோது ஆண்டு தோறும் பயன்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. ஆனால் அதே நேரத்தில் நாம் 50 சதவிகிதம் டிபென்டபிலிட்டி என்ற வகையில் வெள்ளம் வருகிறபோது நீரைத் தேக்க அணை இருந்தால் போதும் என்று தீர்மானித்தால் அது லாபகரமாக இருப்பதில்லை. இதுதான் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை ஆகும். அதனால்தான் ஏராளமாகச் செலவு செய்து ஒவ்வொரு திட்டத்தையும் நன்றாகத் தெரிந்து கொண்டு ஆதாயம் இல்லை என்றாலும் கூட நிறைவேற்றுவதா இல்லையா என்பதைப் பற்றி அரசு நன்றாக யோசித்துத்தான் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. செண்பகத்தோப்பும் அந்த வகையில் ஒரு திட்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஆதாயமற்ற திட்டம் என்று விட்டு விடக்கூடாது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள். அதே கருத்திலேதான் இந்தத் திட்டங்களை அவர்கள் சேர்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இதைப் பொறுத்தவரை அவ்வளவு அதிகத் தொகை செலவு செய்து நிறைவேற்ற வேண்டுமா என்று ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இந்தத் திட்டங்களை எல்லாம் எடுக்காமல் விட்டு விட்டோம் என்பதல்ல. அதை எடுப்பதற்கு முன் இத்தகைய திட்டங்களையும் நாம் நிறைவேற்றலாமா என்று ஆலோசனை செய்கிறோம். எப்போதோ ஒரு காலத்தில் வெள்ளம் வருமானால்

வெள்ளத் தண்ணீரைத் தேக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் இவ்வளவு ரூபாய் செலவழித்து—ஆதாய மற்றது தெரிந்தே மேற்கொள்ளலாமா என்பதைப் பற்றி அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குடகனூறு திட்டத்தைப் பற்றி மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே படித்துக் காட்டினூர்கள். அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது; எப்படி வெள்ளம் வந்தது, அந்த அணை வன் உடைந்தது என்பது பற்றியெல்லாம் சொன்னூர்கள். அவர்களுக்கு நன்ருகத் தெரியும். ஒரு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கிறபோது அதிலே ப்ரொவிஷன் போட்டாக வேண்டும். தாம் அதைப் பற்றி ஆராய ஒரு கமிட்டி போட்டிருக் கிருேம். அந்தக் கமிட்டி அதே இடத்தில் அந்த அணையைக் கட்டுங்கள் அல்லது அதே முறையில் கட்டுங்கள், தண்ணீர் தேக்கியது தவறல்ல என்று தீர்ப்புக் கொடுக்கிருர்கள் என்ருல் அப்போது அதற்காக புதிதாக கிராண்டுக்கு வாக்கூடாது. ஆனூல் கமிட்டி என்ன அறிக்கையைத் தருகிருர்கள், தரப் போகிருர்கள், அதற்காக நாம் அவசரப்பட வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லை. இந்த மாதக் கடைசியில் அல்லது வருகிற மாதத்தில் நன்ருக ஆராய்ந்து சொல்லப்போகிருர்கள். அதிலே டிசைன் செய்தது தப்பா அல்லது எக்சிக்யூஷன் தப்பா அல்லது எதிர்பாராத வெள்ளத்தால் எற்பட்ட விபத்தா அல்லது அங்கிருந்த அதிகாரிகளுடைய கவனக் குறைவால் ஏற்பட்ட நஷ்டமா என்பதைப் பற்றி அவர்கள் சொல்ல இருக்கிருர்கள். பட்ஜட்டில் செய்திருப்பது ஒரு ப்ரொவிஷன் என்ற வகையில் செய்திருப்பது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக ப.உ. சண்முகம் அவர்கள் இங்கே பேசு கிறபோது இராமநாதபுரம் மாவட்டத்திலே போடப்பட்டிருக்கிற திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ட்யூப் வெல்களின் மூலம் எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்பட்டது என்பதைப் பற்றிக் குறிப் பிட்டார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சென்ட்ரல் கிரவுண்ட் வாட்டர் போர்ட் இராமநாதபுரம் மாவட்டத்திலே எவ் வளவு நிலத்தடி நீர் கீழே இருக்கிறது, அதை எவ்வளவு பெரிய

குழாய்க் கிணறுகள் மூலம் பாசன வசதிக்குப் பயன்படுத்தலாம் என்பதை 'இன்வெஸ்டிகேஷன்' முதல் ஆய்வு தான் இப்போது செய்கிருர்கள், ஆகையினூலே அந்தத் திட்டம் எந்த அளவிற்கு வரும், எந்த எந்தப் பகுதிக்கு வரும் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது. சிவகங்கை தாலுகாவில் திருப்புவனம் ஒன்றியம், சிவகங்கை ஒன்றியம், பரமக்குடி தாலுகாவில்; பரமக்குடி, இளையான்குடி, முதுகளத்தூர் தாலுகாவில் முதுகளத்தூர், கமுதி; அருப்புக்கோட்டை, நரிக்குடி, திருச்சுழி, காரைப்பட்டி; பிரிலிமினரி இன்வெஸ்டிகேஷன் செய்திருக்கிருர்கள். அந்த இன்வெஸ்டிகேஷன் முடிந்தபிறகு—டியூப் வெல்ஸ் போட்டுத் தண்ணீர் தருவது எந்த அளவிற்குப் பயன்பெறும் என்பது விரிவான அறிக்கை முடிவானதற்கு பிறகு தான் தெரியவரும். நம்மைப் பொறுத்தவரையிலே எஸ்.எம்.ஐ.பி.யின்கீழ் நிறைவேற்று வதற்காக ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்கள், நீங்கள் கேட்கின்ற தொகை குறைவாக இருக்கிறது, ஆனூல் திட்டமிட்டு இருக்கிற தொகை அதிகமாக இருக்கிறது, ஆகவே நீங்கள் கேட் கிற தொகையைக் கொடுத்தால் போதுமா என்று கேட்டார்கள். நான் எதிர்பார்த்தேன், சார்ஜ்ட் எக்ஸ்பெண்டிச்சர், அதிலே சேர்ந் திருக்கும் என்று. அது தான் உண்மை. இது வோட்டட் எக்ஸ் பெண்டிச்சர், இன்னுென்று சார்ஜ்ட் எக்ஸ்பெண்டிச்சர் என்பதை மட்டும் அவர்களுக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னுென்றையும் எடுத்துச் சொன்னூர்கள். அண்டை மாநிலங் களோடு உள்ள நதிநீர் ஆற்று நீர்ப் பிரச்சினைகள் பற்றி இங்கே எடுத்துச் சொன்னூர்கள். முதலிலேயே ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். மூன்று பிரச்சினைகள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இருக்கின்றன. ஒன்று காவிரி நதி நீர்ப் பங்கீடு, இன்னுென்று, கிருஷ்ணு நதியிலிருந்து குடிநீர் பெறுவது, மூன்ருவது மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளைக் கிழக்கு நோக்கித் திருப்பிவிட கேரளாவுடன் பேசி தமிழகத்திற்கு பயன்பெறுவது.

இந்த மூன்று காரியங்களும் முக்கியமான காரியங்கள் என்று இந்த அரசு கருதுகிறது. இதற்கு முதலிடம் கொடுத்து மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி மற்ற மாநிலங்களின்

முதலமைச்சர்களைச் சந்திக்கவும், பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களோடு தொடர்பு கொள்ளவும் ஏற்பாடு செய்து மூன்று காரியங்களும் நிறைவேற வேண்டும் என்பதிலே மிகுந்த கவனத்தையும் அக்கறையும் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வேகமாக அதற்கான காரியங்கள் நடைபெறுகின்றன.

இதன் மூலம் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் பெறுகின்ற ஒப்பந்தம் கையெழுத்தாகியது, அந்த அளவிற்கு ஒரு காரியம் முடிந்தது என்று எடுத்துக் கொள்ளலாம். அதைப்பற்றி ஆந்திர முதலமைச்சர் அவர்களோடு விவரங்கள் பேசுவதாக இருந்தது. செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் இரு மாநிலங்களும் புயலாலும் வெள்ளதாலும் பாதிக்கப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு கடிதம் எழுதினார். ஆந்திர முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சருக்குக் கடிதம் எழுதி குறிப்பிட்ட தேதியைச் சொல்லியிருந்தார்கள். ஆனால் நம் மாநிலத்திலேயும் ஆந்திர மாநிலத்திலேயும் புயல், வெள்ளம் வந்தது, அதனால் பேச முடியவில்லை. அதற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையில் தேர்தல் சூழ்நிலை வந்தது. ஆகவே தேர்தல் முடியட்டும் என்ற நிலைமை இருந்தது. இப்போது தேர்தல் முடிந்திருக்கிறது. ஆகவே கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை சென்னைக்குப் பெற்றுத் தருகிற காரியம் பற்றிப் பேச முடியும். ஆந்திர முதலமைச்சரோடு தொடர்பு கொண்டு அதை நிறைவேற்ற தமிழக அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அதுவும் அதே நிலைமை தான். கர்நாடக மாநிலத்திலே பல அரசியல் சூழ்நிலைகள் ஏற்பட்டு பேச்சுவார்த்தை தொடர முடியாமல் இருந்தது. பேச்சுவார்த்தையின் மூலம் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென்பது நம்முடைய அரசினுடைய நிலைமை. நம்முடைய பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களிடமும் நாம் வற்புறுத்தியிருக்கிறோம்.

(பிற்பகல் 1-40)

கேரளத்திற்கு அவர்கள் வந்தபொழுது, கேரள முதல்வரையும், தமிழக முதல்வரையும் வைத்து கேரள நதி நீர்ப் பிரச்னை சம்பந்தமாகப் பேசினார்கள். அப்பொழுது, காவிரி சம்பந்தமாக

மூன்று மாநில முதல்வர்களையும் அழைத்துப் பேசுவதாகத் தெரிவித்தார். நாம் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினோம். அதற்கிடையில் கர்நாடகத்தில் தேர்தல் வந்துவிட்டது. மீண்டும் நம்முடைய அரசின் சார்பிலே பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு இந்தக் கருத்தைச் சொல்லி மூன்று முதலமைச்சர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக நாங்கள் இருக்கிறோம்.

காவிரியைப் பொறுத்தவரையில் சரியாகவோ, தவறாகவோ, அடிப்படையிலே ஒரு கருத்து வேற்றுமை எதிர்க்கட்சிகளிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. காவிரியைப் பொறுத்தவரையில் முதலிலேயிருந்த பல அரசுகள் மேற்கொண்ட நிலையையொட்டி எந்தெந்தக் கட்டத்திலே எந்தெந்த வகையான நிலைமைகளை எடுத்தார்களோ அந்த நிலைமைகளையொட்டித்தான் இந்த அரசு செயல்பட வேண்டியிருக்கிறது என்பதை முதலில் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் முதலிலிருந்து நான் அந்த வரலாற்றைப் பார்த்த வரையில், அது திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும் சரி அல்லது அதற்குப்பிறகு ஏற்பட்ட பிரசிடென்ட் ரூல்—ஜனாதிபதி ஆட்சியாக இருந்தாலும் சரி முதலிலே எடுக்கப்பட்டிருக்கிற நிலைமைகள், தமிழகத்திலே இருக்கின்ற பாசன வசதி பெறுகின்ற பகுதிகள் எந்தவிதத்திலேயும் பாதிக்கப்படக் கூடாது, தமிழகத்திற்கு இருக்கின்ற ஏற்கனவே அனுபவித்து வருகின்ற உரிமைகள், நன்மைகள் போய்விடக்கூடாது என்பதிலே முதலிலேயிருந்து ஒரு நிலையை எடுத்து வருகிறோம். ஆனால் அதற்கிடையிலே அதைச் செய்வதற்குப் பல வழிகள் இருக்கின்றன.

1924 அக்ரிமெண்ட்—அதாவது 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் அதைச் செய்து கொள்ள முடியும். அல்லது பேச்சு வார்த்தைகளின் மூலம் ஏற்படும் உடன்பாட்டின் மூலம் அதைச் செய்து கொள்ள முடியும். இல்லையென்றால் நீதிமன்றத்திற்குச் சென்று அதைச் செய்து கொள்ள முடியும். அல்லது மூன்று பேருக்கும் சேர்ந்து 'காவிரி வேலி அதாரிட்டி' என்று செய்து கொள்ள முடியும். இப்படிப் பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன.

ஆனால் அடிப்படையிலே முதலிலேயிருந்து கையாளும் நிலைமைகள் என்னவென்றால், அடிப்படை நோக்கம் என்னவென்றால் ஏற்கனவே பாசன வசதி பெறுகின்ற பகுதிகள், ஏற்கனவே தமிழகத்திற்குக் கிடைக்கின்ற நன்மைகள் எந்த விதத்திலேயும் பாதிக்கப்படக் கூடாது என்கிற நிலைமைதான் என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அது முடிவு. அதற்குப் பல முறைகள் இருக்கின்றன. அதனாலேயே, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை விட்டு விட்டோமா அல்லது மற்றக் காரியங்களைச் செய்யத் தவறி விட்டோமா என்று பார்த்தால் நாம் எந்த அடிப்படை நோக்கத்தை மையமாக வைத்திருக்கிறோமோ அந்த அடிப்படை நோக்கத்திற்கு அது மாறுபாடாக இருக்கும் என்பதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அடிப்படையிலே காவிரிப் பிரச்னையை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கர்நாடகத்தில் இருப்பவர்கள் கேட்கிறார்கள், தமிழகத்தில் நவீன மயமாக ஆக்கி, சிக்கனப்படுத்துகின்ற தண்ணீர் தங்களுக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். எவ்வளவு தண்ணீரை சிக்கனப்படுத்துவது என்ற முறையிலே சிக்கல் இருக்கிறது. அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டால் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்பதை எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் அறிவார்கள், நாங்களும் உணர்ந்திருக்கிறோம். ஆக இப்படிப் பல்வேறு பிரச்னைகள் இதில் இருக்கின்றன.

அடுத்து, இன்னும் ஒன்றை யோசிக்க வேண்டும். எப்படி கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளில் வீணைகத் தண்ணீர் கடலிலே கலக்கிறதோ அதைப்போல காவிரியையொட்டி மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலேயும்கூட அங்கேயுள்ள சில ஆறுகள் மேற்கு நோக்கி ஓடி அரபிக் கடலிலே வீணாகிறது. ஆகையால் காவிரி ஒரு பற்றாக்குறை நீர்வழி நிலைகளையுடையதாக இருக்கிறது; காவிரியில் இருக்கும் தண்ணீரை முழுவதும் பயன்படுத்தியாகி விட்டது. எனினும் இன்னும் அதிகமாக வேண்டுமென்று கர்நாடகம் கேட்கிறது. கர்நாடகம் நினைக்குமேயானால் அதுவொன்றும் கஷ்டமான காரியம் அல்ல. கர்நாடகத்தில் காவிரியையொட்டிய பகுதி, ஹேமாவதி போன்ற ஆறுகளின் பகுதி, மேற்கு நோக்கி ஓடும் ஆறுகள் இவற்றிலேயிருந்து வீணாகக் கடலில் கலக்கின்றன. இத் தண்ணீரைக் கிழக்கே திருப்பினால்

கர்நாடகத்தினுடைய தேவையையும் நிறைவு செய்யலாம், தமிழ் நாட்டினுடைய தேவையையும் நிறைவு செய்யலாம் என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எப்படிக் கேரளத்தோடு நாம் இப்பொழுது பேசிக்கொண்டு வருகிறோமோ அதைப்போல கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் அதுபற்றி நன்றாகச் சிந்தித்து இங்கேயிருக்கின்ற தண்ணீரை இழுத்துப் பிடிப்பதற்குப் பதிலாகக் கடலிலே சென்று வீணாகக் கலக்கும் தண்ணீரை அவர்களும் திருப்பி காவிரியாற்றுப் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் குறைந்தபட்சம் இரண்டு மாநிலங்களுக்கும் ஒரு நல்ல சூழ்நிலை நிச்சயமாக ஏற்படும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேரளத்தோடு நாம் பேசுகின்ற அந்த கமிட்டியிலே கர்நாடக அரசும் இருக்கிறது. பிரதமர் அவர்கள் திருவனந்தபுரத்திலே கேரள முதலமைச்சருடனும் தமிழக முதலமைச்சருடனும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அந்தப் பேச்சு வார்த்தையிலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தமானது, ஏற்கனவே ஒப்பந்தம் ஆகாத ஆறுகள்; அவைகளிலே இருக்கிற தண்ணீர்; அந்தத் தண்ணீரில் எவ்வளவு தண்ணீர் தமிழகத்திற்குத் திருப்பி விடலாம் என்ற உண்மையை ஆராய்வதற்கு ஒரு தொழில் நுட்பக் குழு போடுவது என்றும் அந்தத் தொழில் நுட்பக் குழு அதை ஆராய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தத் தொழில் நுட்பக் குழு விரைவிலே கூட வேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசின் சார்பிலே வலியுறுத்தியிருக்கிறோம். விரைவில் அந்தத் தொழில் நுட்பக் குழு கேரளத்திற்குச் சென்று அந்த விவரங்களைத் தயாரித்து எவ்வளவு தண்ணீர் தமிழ்நாட்டிற்குத் தரமுடியும் என்ற தீர்மானத்தைத் தருவார்கள் என்று நான் கருதுகிறேன். அதன் மூலம் மிகவும் வறண்ட பகுதிகளான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டப் பகுதிகள் பயன்படுவதற்கு நிரம்ப வாய்ப்புகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

கோவை மாவட்டம் என்று சொல்கிறார்கள். அது ஒப்பந்த மான ஆறுகள் பலன் தருகிற பகுதி. பரம்பிக்குளம்-ஆழியாறு பகுதி. அங்கேயும் வருகிற நிலைமை இருக்குமானால் அதை

வரவேற்க நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே, அந்த டெக்னிக்கல் கமிட்டி சீக்கிரத்திலே கூட மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலேயும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, ஏற்கனவே பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் நம்முடைய நாட்டிலேயிருக்கிற தண்ணீர் வளம் மிகவும் குறைவு. அண்டை மாநிலங்களிலே இருக்கிற அளவுக்குக் கூட இல்லை, பாதி அளவுதானிருக்கும். ஆகவே, அண்டை மாநிலங்கள் எந்த அளவு நீர் வசதி, அவர்களுக்குத் தேவை போக, மீதி எந்த அளவுக்கு நீர் வசதி தருகிறார்களோ அந்த அளவு நல்லது, சிறந்தது. அந்த அடிப்படையிலேதான் அண்டை மாநிலங்களோடு நல்ல உறவை வளர்த்துக்கொண்டு அதே நேரத்தில் எந்த அளவு நம்முடைய தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியுமோ அதைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், ஒரு ஆறு அல்லது மலைப்பகுதி என்று எடுத்துக்கொண்டால் அதிலேயிருக்கிற நீரையும் பயன் படுத்தலாம். அந்த நீர் மிக உயரத்திலேயிருந்து கீழே விழுகிற தன்மையைப் பயன்படுத்தி மின்சாரமும் எடுக்கலாம். கேரள அரசாங்கத்தோடு பேசுகிறபொழுது முதலமைச்சரும் நானும் மேற்கு தொடர்ச்சி மலையிலே எந்த அளவு மின் உற்பத்தி திட்டங்களிலே இரண்டு மாநிலங்களும் பங்குபெறலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதை உதாசீனப் படுத்தாமல் வரவேற்கும் நிலையில்தானிருக்கிறார்கள்.

அதே போல், காவிரியைப் பொறுத்த வரையிலும் கூட ஹொகேனக்கல் திட்டம் இருக்கிறது. அதில் 800 மெகாவாட் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இப்பொழுது, கர்நாடகப் பகுதியிலே ஒரு திட்டமும் தமிழக பகுதியிலே ஒரு திட்டமும் தயாரிக்கப்பட்டு, இரண்டு திட்டங்களும் ஏற்கப் படாமல் இருக்கின்றன. இதற்கும் நமது முதலமைச்சரவர்கள் கர்நாடக மாநிலத்தில் பேசுகிறபொழுது இரண்டுபேரும் சேர்ந்த ஒரு கம்பெனி மாதிரி, நிர்வாகம் ஏற்படுத்தி, அமைப்பு ஏற்படுத்தி,

முதலிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வோம். கர்நாடக அரசும் பணம் போடட்டும், தமிழக அரசும் பணம் போடட்டும், மத்திய அரசு உதவி தரட்டும். ஓடுகிற நீர் கடலிலே கலப்பதைவிட, முதலிலே அதைக் கொண்டு மின்சாரம் பெறலாம். பிறகு அதிலே பெறுகிற மின்சாரத்தை எப்படிப் பங்கிடுவது என்று பேசிக் கொள்ளலாம்.

ஆகவே, Joint Sector Project என்று சொல்கிற, இரண்டுபேரும் சேர்ந்து எடுக்கிற திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய சூழ்நிலை உருவாகும் என்று கருதுகிறேன். ஏனென்றால், அண்டை மாநிலங்களோடு சேர்ந்து, நீரைப் பங்கிட்டுக் கொள்வதாக இருந்தாலும் சரி, மின்சாரத்தைப் பெறுவதாக இருந்தாலும சரி, இயற்கை அமைப்பினால் ஒன்றாக இருக்கிற காரணத்தாலே, மாநிலங்கள் மொழிவாரியாக இருந்தாலும், அந்த இயற்கை வளத்தைப் பயன்படுத்துவோமானால் பெரும்பாலான பிரச்னைகள், அதுவும் தென்னாட்டைப் பொறுத்தவரையிலே தீர்க்கப்படும் என்பதை இந்த அரசு உறுதியாக நம்புகிறது. ஆகவே, அந்தத் திசையிலே நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொள்ளும்.

மேலும், இங்கே இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்கள் அனைத்தும் துறையினாலே சேகரிக்கப்படும். சேகரிக்கப்பட்டு, இந்த ஆண்டு அவைகளிலே, எவை, எவைகள் நிறைவேற்றப்பட்டன, எவை, எவைகளை நிறைவேற்ற முடிய வில்லை? அதற்கு என்ன காரணங்கள்? ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் நம்முடைய அமைச்சர் வட ஆர்காடு மாவட்டத்தை அனாதைக் குழந்தையாக விட்டுவிட்டார் என்று குறிப்பிட்டார். எல்லோரும் பாரதத்தாயின் குழந்தைகளாக இருக்கும்போது எப்படி அனாதையாக முடியும்? நிச்சயமாக அதை நாங்கள் செய்ய மாட்டோம். இங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்கள், திட்டங்கள், முறையாகத் தொகுக்கப்பட்டு, அவைகள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதைப் பற்றிய குறிப்பு ஒரு நூல் வடிவில் அடுத்த பட்ஜெட்டில், இதேபோல் பேசுகிறபொழுது, அது வைக்கப்படும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 11

(பிற்பகல் 1-50)

ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறார்கள். அதோடு பிரச்னை முடிந்து விடுகிறது. அதற்குப் பிறகு துறையினர் நடவடிக்கை எடுப்பதில்லை என்று அதிருப்தி ஏற்படுவது இயல்பு. அதைப் போக்குகிற வகையில் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுகிறபோது இந்தத் துறை நன்றாக ஆராய்ந்து முடிவெடுக்கும். நிறைவேற்றுகிற காரியங்களை நிறைவேற்றும். நிறைவேற்ற முடியாத காரியங்களை இன்னின்ன காரணங்களுக்காக நிறைவேற்ற முடியவில்லை என்று எடுத்துச் சொல்வோம், மீண்டும் கூடுகிற பட்ஜெட் கூட்டத்திலே.

Action taken on the suggestions made by the Hon. Members in the Legislature

என்கிற வகையிலே நூல் வடிவிலே வரும். மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லவும் வாய்ப்பு இருக்கும். அதே நேரத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கும் வலிவு கிடைக்கும்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தமட்டில் பல்வேறு உறுப்பினர்கள் நிறைய பேசவேண்டுமென்று கேட்டார்கள். இன்றைக்கு நேரம் போதவில்லை. அதைச் சரிக்கட்டுவதற்காக இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்று அமைச்சர் மட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். இங்கே பேசுவதற்கு நேரம் இல்லை என்றாலும் கூட, அல்லது வாய்ப்பு இல்லாமல் இருந்தாலும் கூட, தொடர்ந்து இந்தப் பிரச்சினை சம்பந்தமாகக் கூடிப் பேசுவதற்கு கன்சல்டேடிவ் கவுன்சில் ஒன்று இந்தத் துறையின் சார்பிலே விரைவிலே அமைக்கப்படவிருக்கிறது. இங்கே பேச வாய்ப்பு கிடைக்காத உறுப்பினர்கள், வாய்ப்புக் கிடைத்தும் பேசுவதற்கு நேரமில்லாத உறுப்பினர்கள் இனிமேல் நிச்சயமாகக் கவலைப் படத் தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் இங்கே பணியாற்றுகிற பொறியாளர்களுக்கு, அவர்களுக்கு நல்ல சர்வீஸ் கண்டிஷன் அமையவில்லை. இன்ஜினியர்களாக முதலிலே சேர்ந்து அடுத்த பதவி உயர்வு வருவதற்கு 15 ஆண்டுகள் ஆகின்றன. அடுத்த பதவி உயர்வை கனவிலே கூட காண முடியவில்லை. இது ஓரளவுக்கு நிர்வாகத்திலே மந்த நிலையை உருவாக்குகிறது. அதை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றியும் நாங்கள் சிந்தித்து வருகிறோம்.

1978 மார்ச் 11] [திரு. ச. இராமச்சந்திரன்]

'பெஸ்ட் டேலன்ட்ஸ்' உள்ள, காலேஜிலே இருந்து நேராக வருகிற, நல்ல என்ஜினியர்கள் இந்தத் துறைக்கு வருவதற்கும் இந்தத் துறையை நிருவகிப்பதற்கும் என்னென்ன செய்ய வேண்டும், அத்தகைய ஊக்கமான நிலையை உருவாக்குவது எப்படி என்பது பற்றி அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இப்போது நன்றாகப் படித்தவர்கள், திறமையாகப் படித்தவர்கள், தனியார் நிறுவனங்களுக்குப் போய்விடுகிறார்கள். அத்தகையவர்கள் அரசுத் துறைக்கு வருவதில்லை, வர முடிவதில்லை. ஏனென்றால், அந்த அளவுக்கு இங்கே பணி நிலைமை இருக்கிறது; பொதுத் தொண்டு செய்யத்தான் திறமையானவர்கள் வேண்டும். அத்தகைய திறமையானவர்களை ஈர்க்கின்ற வகையில் எப்படி மாற்றம் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு சிந்தித்து வருகிறது. விரைவில் அதற்கொரு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று நான் தெரிவித்து, இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் இது ஒரு சாவல் டிப்பார்ட்மென்டு ஆகையால் இந்தத் துறையின் நிலைமைகள், இதன் நிர்வாகத் திறமையைப் பொறுத்தும், அந்த நிர்வாகத் திறமையின் மூலம் என்ன நன்மைகள் கிடைக்கும் என்பதைப் பொறுத்துத்தான் கணக்கிடவேண்டுமே யல்லாமல் வேறு அடிப்படையிலே அல்ல. ஒரு சிறந்த நிர்வாகம் உருவாவதற்கு, எங்களாலான முழுப் பணியினையும் மேற்கொள்வோம் என்று எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஆதரித்தே பேசியிருக்கிறார்கள் என்ற காரணத்தாலே வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு மானியக் கோரிக்கை ஏகமனதாக நிறைவேற ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் இந்த சபைக்கு பதில் சொல்லவில்லை. பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தின் மூலம் நீர் பெற சாத்தியம் இல்லை என்று சொன்னார். ஏன் என்றால் ஏற்கனவே கூடுதல் செலவாகிவிட்டது என்று சொன்னார். ஆனைக் குந்தா திட்டத்தை எடுத்துக் கொள்வது பற்றி—கோவை தாலுகாவில் வரட்சி காரணமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்டேன். அதற்கு எந்த விதமான பதிலும் சொல்லவில்லை. அதற்குப் பதில் சொன்னால் உதவியாக இருக்கும்.

[1978 மார்ச் 11

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சினைகளை அதேபோல் சட்டமன்ற உறுப்பினர் வெங்கிடுவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொன்றையும் எடுத்துப் பேச நேரம் அதிகமாக ஆகிவிடும். நான் பேசாததாலேயே அவைகள் நிராகரிக்கப்பட்டதாக ஆகாது. அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. மானியக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

திரு. த. வேணுகோபால், திரு. சி. பழனிமுத்து ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை 36-க்கான அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றன.

திரு. வி. கே. கோதண்டராமன், திரு. பொ. உத்திராபதி, திரு. ரா. மார்க்கபந்து, திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக்கோரிக்கை எண் 36-பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,60,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன், திரு. சி. பழனிமுத்து, திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் மானியக்கோரிக்கை எண் 37-க்குக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "மானியக்கோரிக்கை எண். 37-பொதுப்பணிகள்-கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,99,06,000-க்குமேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

1978 மார்ச் 11] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக்கோரிக்கை எண் 38-க்கு திருவாளர்கள் சு. பாலன், ரெ. வி. சவுந்திரராஜன், வி. கே. கோதண்டராமன், ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக்கோரிக்கை எண். 38-பொதுப்பணிகள், பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,57,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மானியக்கோரிக்கை எண் 52-க்கு திருவாளர்கள் துரை கலியமூர்த்தி, ரெ. வி. சவுந்திரராஜன், வி. கே. கோதண்டராமன், ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண். 52-பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,46,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானிய கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மானியக்கோரிக்கை எண் 53-க்கு திருவாளர்கள் ரெ. வி. சவுந்திரராஜன், வி. கே. கோதண்டராமன், ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக்கோரிக்கை எண். 53-- பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,10,30,000-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் அமைச்சரவையில் கூடி எடுக்கப்பெற்ற முடிவுகளைப்பற்றி பேரவை விதி 82-ன் கீழ் பேரவை முன்னவர் ஓர் அறிக்கை வைப்பார்கள்.

(பிற்பகல் 2-00)

(7) அமைச்சரின் அறிக்கை.

அரசிதழ் பதிவுபெறு அலுவலர் தலைமைச் செயலக அலுவலர் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே! முதலமைச்சரின் அறிக்கையை உங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

சென்ற மாதம் 20-ம் நாள் நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் தாக்கல்செய்வதற்கு முன்பே அரசு இதழ் பதிவு பெறு அலுவலர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள கிளர்ச்சி முறைகளில் ஈடுபட்டு வந்தனர் என்பதை இந்தப் பேரவையின் அங்கத்தினர்கள் நினைவுகூர்வார்கள். ஏற்கனவே, அமைக்கப்பட்டுள்ள ஊதியக் குழு இவர்களது கோரிக்கைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கும்போது அரசு எந்த விதமான அறிவிப்புகளையும் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் இல்லை என்பதையும் நீங்கள் உணர்வீர்கள். எனினும் கூட, இந்த அரசின் நல்லெண்ணத்தின் அறிகுறியாக நிதிநிலை அறிக்கையில் மார்ச் மாதத்திற்கு மட்டும் மொத்த நிவாரணமாக ரூ. 25, ரூ. 15 என அறிவித்து ஊதியக் குழுவின் பரிந்துரைகள் ஏற்கப்படும் போது ஏப்ரல் மாதத்திலிருந்து அமுலுக்குக் கொண்டு வரப்படும்

என்றும் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக இந்த அறிவிப்பைத் தவறாக எடுத்துக்கொண்டு, அரசின் நல்லெண்ணத்தைச் சந்தேகிக்கும் வகையில் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

(2) அரசிதழ் பதிவுறு அலுவலர்கள் நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு கூட்டங்கள் போடவும் தர்ணா நடத்தவும் கோட்டைக்கும் சட்டப்பேரவைக்கும் ஊர்வலங்கள் நடத்திச் செல்லவும் முடிவு செய்தனர். அந்த நடவடிக்கைகள் தற்போது அமுலில் இருக்கும் சட்ட விதி முறைகளுக்கு விரோதமாக அமைந்தபடியால் 22-2-1978-ல் சட்டத்தை மீறி ஊர்வலத்தில் ஈடுபட்ட ஊழியர்களில் சிலரை கைது செய்யவேண்டிய நிலைமைக்கு இவ்வரசு கொண்டு வரப்பட்டது. அதே விதமாக அடுத்த இரண்டு தினங்களிலும் தொடர்ந்து ஊர்வலங்களில் ஈடுபட்ட சிலரைக் கைது செய்ய வேண்டியதாயிற்று.

(3) 25-2-78-ல் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் தந்தை
வேண்டுகோளுக்கு இணங்கவும் இவ்வரசு தொடர்ந்து ... கொண்டு
நல்லெண்ணத்தின் அறிகுறியாகவும் கைது செய் ... விடுவிக்கப்
அலுவலர்களையும் அன்று மாலையிலேயே விடு...
உத்தரவிடப்பட்டு அவ்வாறே அவர்கள் ...
பட்டனர்.

(4) 27-2-78 மாலை திரு. சிவக்கை...
சங்கத் தோழர்களையும் என் ...
ல்வாதித்தேன். இதே பிரிவு ...
...நாதம் போன்ற தலை...
சில அரசு பணியாளர் ...
சந்திப்பதற்காக காத்திருந்து ...
பிறகு மிக முக்கியமான ...
வைத்துப் பரிசிலனை ...
தால், வெகு விரைவில் பரிசீல...
யில் அறிவிக்கிறேன் என்று சொல்ல...
தொடர வேண்டாம் என்று நான் கேட்டின...
என்ன காரணத்தினாலோ திரு சிற்போதைய ...
சங்கத் தோழர்களும் என்னிடமிருங்களுக்குள் அமுல நடத்த
...து.

நான் அவருடைய
... பற்றி சந்தித்து
...மையில் திரு. பரதன்,
பிரதிநிதிகள் இயங்கும் ...
...ர்களையும் கலந்து என்னை
...டுக்கப்பட அமைச்சரவையில் பேசிய
... எடுத்து வேண்டிய இருந்த
மேற்கொண்டு சட்டப் பேரவை
...ட்டுக்கொண்டு கிளர்ச்சியைத்
... இளங்கோவும் ஆனால்,
பிரிந்து சென்ற அவருடைய
அரை

...தும்.
...முதல்
...தங்கள்
தங்கள்
...குழுவின்

மணி நேரத்திற்குள்ளாகவே 'பேச்சுக்கள் முறிந்துவிட்டன' என்றும் கிளர்ச்சியைத் தீவிரமாக்க வேண்டும் என்றும் அறிக்கை விடுத்தனர்.

(5) 28-2-78 அன்று திரு. சிவ இளங்கோவும் அவரது சங்கத் தோழர்களும் சேப்பாக்கம் பகுதியில் கூடினர். குறைந்த அளவே கூட்டம் இருந்தது. சில எதிர்க்கட்சித் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் பேசினர். இரண்டாம் தேதிவரை கிளர்ச்சியை நிறுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்கள் இரண்டாம் தேதிவரை கிளர்ச்சியை நிறுத்தி வைத்தனர். ஆனால் மூன்றும் தேதி அவர்கள் மீண்டும் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

(6) 3—3—1978-ல் சிவ இளங்கோவின் தலைமையில் 5,000 பேர்கள் ஊர்வலமாகத் திரண்டு வந்து அமுலில் இருக்கும் தடை உத்தரவை மீறி கோட்டைக்கும் சட்டப் பேரவைக்கும் வந்து சேரவேண்டுமென்று தீவிரமாக முயற்சி செய்தனர். காவல் துறை அதிகாரிகள் சட்டத்தை மீறி அவ்வாறு செய்ய வேண்டாமென்று பலமுறை வற்புறுத்திச் சொல்லியும் அவர்கள் கலையவில்லை.

கியாக காவல் துறை தன் கடமையைச் செய்யவேண்டி
என்று கூறி சிவப்புக் கொடியை உயர்த்திய பிறகு,
மா ர் அடைந்து பல்கலைக்கழகத்தின் எதிரிலேயே உடனே
முதலமைச ல் ஈடுபடுவதாகக் கூறி கிளர்ச்சியைத் தீவிரப்
கிறேன். சய்தனர். இந்த நிகழ்ச்சிகளில் முன்னோடிகளாக
சென்ற மாதள் காவல் துறையினரால் கைது செய்யப்
நிதி அமைச்சர் அன்று மாலையே விடுதலை செய்யப்பட்டனர்.
பெரு அலுவலர்க
கொள்ள கிளர்ச்சி (3—1978 மாலை சட்டப் பேரவையிலுள்ள
பேரவையின் அங்கத் தலைவர்களை தலைமைச் செயலகத்தில்
அமைக்கப்பட்டுள்ள ஊ விரிவாக நான் நிலைமையைக் குறித்து
பரிசீலித்துக் கொண்டி ட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து
அறிவிப்புகளையும் செய் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்
தையும் நீங்கள் உணர்வி ய தாங்கள் அக்கறைகொள்ளவேண்டாம்,
நல்லெண்ணத்தின் அறி ம் போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபட
மாதத்திற்கு மட்டும் வ யும், இதற்குப் பிறகும் எங்களது
என் அறிவித்து ஊதியக் அவர்கள் வேலைநிறுத்தத்தில்
போது ஏப்ரல் மாதத்தில் தனர். இருந்தாலும், அரசின் நிதி

நிலை ஆதாரத்திற்கேற்ப முடிந்த வரை அனுதாபத்துடன் பரிசீலனை செய்து முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்றும் கருத்து தெரிவித்தனர்.

(8) நிலைமை இப்படி இருக்க, அரசு இதழ் பதிவு பெரு அலுவலர்கள் சிறிதும் பொறுமை காட்டாது, அமைச்சரவையின் முடிவைக் கூட எதிர்பாராமல் மேலும் கிளர்ச்சியைத் தீவிரமாக்கி வெவ்வேறு அலுவலகங்களில் வேலைக்கு வர விரும்புகிறவர்களையும் வேலைக்கு வந்து பணியாற்றியவர்களையும் பயமுறுத்தல், தடுத்தல், இழிவுபடுத்திப் பேசுதல் போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டனர். எந்த ஒரு பொறுப்புள்ள அரசும் இந்தச் சூழ்நிலையில் சட்டவிரோதமாகவும் காரணமின்றியும் உண்டாக்கப்படும் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து பொது மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதை இந்த அவை நன்கறியும். ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு வேண்டிய வசதிகளைக்கூட மாற்று ஏற்பாடுகள் மூலம் செய்து தர அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளை, கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்கள், பல மருத்துவ மனைகளில் வன்முறை மூலம் தடுத்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வளவு சம்பவங்களுக்குப் பிறகும் அரசு, தான் குறிப்பிட்டபடி நேற்றைய தினம் அமைச்சரவையைக் கூட்டி ஊழியர்களின் கோரிக்கையை தீவிர அக்கறையுடனும் விரிவாகவும் பரிசீலித்தது. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் கீழ் வருமாறு :—

அரசிதழ் பதிவு பெரு அலுவலர் சங்கத்தின் கோரிக்கைகள்.

(1) ஊதியக் குழுவின் அறிக்கையை 1—7—1977 முதல் அமுல் நடத்தவேண்டும்.

இதை ஏற்றுக்கொள்வதென்றால் ரூ. 22.5 கோடி செலவாகும். முன்பே அறிவித்தபடி இந்த அறிக்கை 1—4—1978 முதல் அமுலாக்கப்படும். முதல் ஊதியக் குழுவின் அறிக்கை 16 மாதங்கள் கழித்தும் இரண்டாவது ஊதியக் குழுவின் அறிக்கை 13 மாதங்கள் கழித்தும் அமுலாக்கப்பட்டது. தற்போதைய ஊதியக் குழுவின் அறிக்கையை இவ்வரசு 8 மாதங்களுக்குள் அமுல் நடத்த முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(2) இடைக்கால நிவாரணமாக ரூ. 50 வழங்கப்பட வேண்டும்.

ஏற்கனவே இரு தவணைகள் நிவாரணத் தொகை அறிவிக்கப் பட்டுள்ளன. 1—7—1977 முதல் மாதம் ரூ. 200-க்குக் கீழ் ஊதியம் பெறுவோருக்கு ரூ. 10-ம் மற்றவர்களுக்கு ரூ. 20-ம் இடைக்கால நிவாரணமாக அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மார்ச்சு மாதம் ஒரு முறை மொத்த நிவாரணமாக ரூ. 200-க்குக் கீழ் ஊதியம் பெறுவோருக்கு ரூ. 25-ம் மற்றவர்களுக்கு ரூ. 15-ம் அளிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதைத் தவிர 1—4—1978 முதல் இடைக்கால நிவாரணமாக மாதம் ரூ. 200-க்குக் கீழ் ஊதியம் பெறுவோர்க்கு ரூ. 10-ம் மற்றவர்களுக்கு ரூ. 15-ம் மாதாமாதம் இடைக்கால நிவாரணம வழங்குவதென அரசு இப்பொழுது முடிவு செய்திருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 11.66 கோடி அதிகச் செலவாகும். இம்மாதிரி மாதாமாதம் அளிக்கப்படும் இடைக்கால நிவாரணங்கள் ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் மீது அரசு எடுக்கும் முடிவுகளின்படி கிடைக்கும் ஊதிய உயர்வுகளில் சரிக்கட்டப்படும்.

(3) 1—7—1977 முதல் மாதம் ரூ. 200-க்குக் குறைவாக ஊதியம் பெறுவோருக்கு அதிகப்படி இடைக்கால நிவாரணமாக ரூ. 10 அளிக்கவேண்டும்.

மாதம் ரூ. 200-க்குக் கீழ் ஊதியம் பெறுவோர்கள் மத்திய அகவிலைப்படிக்கு அதிகமாகவே வாங்குகின்றார்கள். இப்போது அறிவிக்கப்படும் இடைக்கால நிவாரணத்தைத் தவிர மேலும் அவர்களுக்கு மாதம் ரூ. 10 வழங்குவது இயலாததாகும்.

(4) அரசு அலுவலர் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு ரூ. 10,000 வழங்கவேண்டும்.

இதை அப்படியே ஏற்றுக் கொள்வதென்றால் ஆண்டொன்றுக்கு ரூ. 25 கோடி வரை அதிகச் செலவாகும். அலுவலர் செலுத்திய தொகை எவ்வளவு குறைவாக இருந்தாலும் அவருடைய பணிக் காலம் எவ்வளவு குறுகியதாக இருந்தாலும்கூட எல்லோருக்கும் ஒரேமாதிரியாக ரூ. 10,000 அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துவது நியாயமற்றது. சென்ற வரவு செலவுத் திட்டத்தில்

ஒரு அலுவலர் சேமிப்புத் திட்டத்தை அறிவித்தோம். அதையோ அல்லது அரசும் அலுவலரும் பங்கு செலுத்தி அவரவர் பணிக் காலத்திற்கும் பங்குத் தொகைக்கும் ஏற்ப ஒரு தொகை திரும்பப் பெறும் மாற்றுத் திட்டங்களையோ பரிசீலிக்க அரசு தயாராக உள்ளது.

(பிற்பகல் 2-10)

(5) கட்டாய ஓய்வுத் திட்டத்தை ரத்து செய்யவேண்டும்.

திரு. கே. சந்தானம் அவர்கள் தலைமையில் அமைந்த லஞ்ச ஒழிப்பு விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின்மேல் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. கட்டாய ஓய்வு ஆணைகள் அரசு வகுத்த விதி முறைகளுக்குட்பட்டு 3 அதிகாரிகள் கொண்ட குழுக் களினால் பரிந்துரைக்கப்பட்டு அரசினரால் பிறப்பிக்கப்படு கின்றன. பாதிக்கப்பட்ட அதிகாரிகள் ஒரு உயர்மட்டக் குழுவிற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம். இக்குழு இதுவரை 42 அதிகாரிகளை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பரிந்துரைத்துள்ளது. இப்போது மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் மூன்றாவது கட்டமாக முதலமைச்சரே மேல் முறையீடுகளை மறுஆய்வு செய்யவும் வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை உயர்நீதி மன்றமும் எல்லா கட்டாய ஓய்வு ஆணைகளையும் ஏற்றுத் தீர்ப்பளித்துள்ளது. எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் பெருந்தவறுகள் நிகழ்ந்த தாகத் தோன்றவில்லை. ஆயினும் அரசியல் அல்லது சொந்தக் காரணங்களுக்காகப் பழிவாங்கும் நோக்கத்துடன் இத் திட்டத்தை செயல்படுத்தக் கூடாது என்பதில் இந்த அரசு விழிப்பாக இருக்கும். நிர்வாக ஊழலை ஒழிப்பதில் முக்கியப் பங்கேற்கும் இத்திட்டத்தை இப்போது கைவிடுவதற்கில்லை.

(6) அரசு அலுவலர்களுக்கு போனசு வழங்கவேண்டும்.

இக் கோரிக்கையை அரசு ஏற்பதற்கில்லை.

(7) ஓய்வு பெறும் வயதை 58-க்கு உயர்த்த வேண்டும்.

படித்து பட்டம் பெற்ற இலட்சக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கித் திண்டாடும் தற்போதுள்ள பின்னணியில் இக்கோரிக்கையையும் ஏற்பதற்கில்லை.

(8) கூடுதல் அகவிலைப்படி முழுவதையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

கூடுதல் அகவிலைப்படி மத்திய அரசின் சட்டத்தின்கீழ் முடக்கப்பட்டுள்ளது. இத்தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவிட மாநில அரசுக்கு உரிமை இல்லை. எனினும் அலுவலரது இந்தக் கோரிக்கையை மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரைக்கும்.

(9) மத்திய அரசு விகிதத்தில் அகவிலைப்படி வழங்க வேண்டும்.

இக்கோரிக்கையை ஏற்பதென்றால் ஆண்டொன்றுக்கு ரூ. 25 கோடி அதிகச் செலவாகும். எனவே இதை உடனடியாக ஏற்பதற்கில்லை. ஆனால் மத்திய அரசு விகிதத்தில் அகவிலைப்படி அளிப்பதற்கு மத்திய அரசின் நிதி உதவியைக் கோரியுள்ளோம். மேலும் நிதிக் குழு Finance Commission வின் முன்னும் இதற்கான உதவி வேண்டுமென வற்புறுத்தியுள்ளோம். இதற்காகக் கிடைக்கின்ற நிதி உதவிக்கேற்ப இவ்விகிதங்கள் நிர்ணயிக்கப்படும்.

(10) மூன்றாண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்க வேண்டும்.

இக்கோரிக்கையைப் பற்றி உடனடியான ஒரு முடிவு எடுக்க இயலாது. தமிழக அரசு அலுவலர் ஆணைக் குழுவைக் (Public Service Commission) கலந்தாலோசித்து மனிதாபிமான அடிப்படையில் இப் பிரச்னைக்குத் தீர்வு காண இவ்வரசு தீவிர முயற்சி செய்யும்.

(11) இலஞ்ச ஒழிப்புக் குழுக்களை நீக்க வேண்டும்.

நிர்வாகத்தில் உள்ள ஊழல்களைக் களைவதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ள இத்தருணத்தில் இலஞ்ச ஒழிப்புப் பணிகளை பலவீனப்படுத்த இயலாது. ஆயினும் நாணயமான அரசு அலுவலருக்கு அனாவசியத் தொல்லைகள் அளிப்பதும் கூடாது. குறிப்பான புகார்கள் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கம்போல நடவடிக்கை எடுக்கும்.

(12) வருங்கால வைப்பு நிதி சம்பந்தமான அரசு ஆணை 1330-ஐ ரத்து செய்யவேண்டும்.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இந்த ஆணையை ரத்து செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

(13) சங்க நிர்வாகிகளை மாற்றிய உத்திரவுகளை ரத்து செய்ய வேண்டும்.

மாறுதல் செய்யப்பட்டவர்களை அவர்கள் பணிபுரிந்த பழைய மாவட்டங்களுக்கு திரும்பவும் மாற்றம் செய்யுமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. பழி வாங்கும் அல்லது அச்சுறுத்தும் நோக்கத்துடன் இவ்வரசு சங்க நிர்வாகிகளை மாற்றாது. ஆனால் விதிமுறைகளுக்குட்பட்டு நிர்வாகக் காரணங்களுக்காக தவிர்க்க முடியாத மாறுதல்களை ஏற்க அவர்களும் தயாராக இருக்கவேண்டும்.

(14) தனிக்குறிப்பு (Personal file) முறையை ரத்து செய்ய வேண்டும்.

இரகசியக் குறிப்பு முறை இப்போது அமுலில் இல்லை. தனிக் குறிப்பில் எழுதப்படுபவை சம்பந்தப்பட்ட அலுவலரிடம் காண்பிக்கப்படுகின்றன. அக்குறிப்புகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை அவருக்கு உண்டு. வேலையில் காணப்படும் குறைகள் மட்டுமன்றி அவர் திறம்பட வேலை செய்ததற்கான பாராட்டுரைகளும் இவைகளில் இடம் பெறும். அலுவலர்கள் தங்கள் பணியைப்பற்றி தாங்களே எழுதும் அறிக்கை (Self Assessment Report) யையும் தனிக் குறிப்புக் கட்டுகளில் சேர்க்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளோம். எனவே, அலுவலர் நலன் கருதியே இம்முறையை ரத்து செய்ய வேண்டியதில்லை.

(15) அரசு அலுவலகங்களின் வேலை நேரங்களை மாற்றி அமைக்க வேண்டும்.

இதை அரசு ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளது. போக்குவரத்துத் துறையினரையும் கல்வி நிறுவனங்களையும் கலந்து ஆலோசித்த பிறகு விரைவிலேயே இதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

இவைகளைத் தவிர தலைமைச் செயலகச் சங்கத்தின் கோரிக்கைகளையும் இந்த அரசு அனுதாபத்துடன் பரிசீலித்து அவைகளின் மேல் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வருமாறு :—

(1) தலைமைச் செயலகத்தினருக்குத் தனியான சம்பள விகிதங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

இது ஊதியக் குழு தீர்மானிக்க வேண்டியதாகும். எனவே இக்கோரிக்கை அக்குழுவிற்கு அனுப்பப்படும்.

(2) அகவிலைப்படியின் உச்ச வரம்புகளை நீக்க வேண்டும்.

இது தலைமைச் செயலகத்திற்கு மட்டும் உள்ள தனிப்பிரச்சினை அல்ல. அரசு அலுவலர் எல்லோருக்கும் பொருந்தும், பொதுப் பிரச்சினையாக உள்ளது. அரசிதழ் பதிவு பெறு ஊழியர் சங்கத்தின் 9-வது கோரிக்கையும் இதுவே. இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அரசுக்கு ரூ. 25 கோடி அதிகச் செலவாகும். ஏற்கனவே நான் குறிப்பிட்டபடி இதற்காகக் கிடைக்கும் மத்திய அரசின் உதவிக்கு ஏற்ப இந்த அரசு முடிவு எடுக்கும்.

(3) 50 இளநிலை உதவியாளர் பதவிகளை மேல்நிலை உதவியாளர் பதவிகளாக உயர்த்த வேண்டும்.

தேக்க நிலையைத் தவிர்ப்பதற்காக 25 இளநிலை உதவியாளர் பதவிகளை மேல்நிலை உதவியாளர் பதவிகளாக உயர்த்த முடிவு செய்துள்ளோம்.

(4) 17. உதவிச் செயலர் பதவிகளை ஏற்படுத்த வேண்டும்.

பிரிவு அலுவலர்களிடையே தேக்க நிலையைத் தவிர்ப்பதற்காக 7 உதவிச் செயலர் பதவிகளை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம்.

தற்போதுள்ள சூழ்நிலையையும் அரசின் நிதி ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு ஆராயும் போது மேற்கூறிய முடிவுகள் அரசின் நல்லெண்ணத்தையும் நியாய உணர்வையும் காட்டுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களும் பொது மக்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த முடிவுகளை ஏற்றுக் கொண்டு பல்வேறு நிலைகளில் உள்ள அரசு ஊழியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்புவார்கள் என்று எதிர் பார்க்கின்றேன்.

திரு. ரா. உமாநாத்: கிளாரிபிகேஷன், தலைவர் அவர்களே, அரசாங்கம் அறிவித்திருக்கிற முடிவுகள் பற்றி இந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கின்ற சங்கங்கள் ஜெனரல் பாடியைக் கூட்டி முடிவெடுப்பார்கள். நான் கேட்க விரும்புவது என்னவென்றால், இந்தக் கிளர்ச்சியினால் இப்போது சஸ்பென்ட், சார்ஜ் ஷீட், கேஸ்கள் இம்மாதிரியெல்லாம் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் ஒரு சுமுகமான முடிவை அவர்களைப் பொறுத்த வரையில் எடுக்க வேண்டும். அப்போது, இந்த நடவடிக்கைகளை

அனைத்தையும் ரத்து செய்வதாக அன்னவுன்ஸ் பண்ணலாம். அந்தச் சங்கங்களைக் கூப்பிட்டு அப்படி முடிவெடுப்பது உதவியாக இருக்கும். இது ஒரு கிளாரிபிகேஷன்.

இன்னொன்று இந்த நடவடிக்கைகளை எல்லாம் ரத்து செய்து விட்டு, கேஸ்கள் வித்-டிரா உள்பட அன்னவுன்ஸ் பண்ணவேண்டும். இது ஒன்று. இரண்டாவது, அரசாங்கத்திற்கும், அரசாங்க ஊழியர்களுக்குமிடையே நிரந்தரமாகவே சுமுகமான நிலைமை இருக்கவேண்டும். They have to live together இத்தோடு முடியப் போவதில்லை. இந்தமாதிரி செய்யவேண்டுமென்று சொன்னால். இப்போது நீங்கள் இந்தச் சபையிலே அறிவித்த முடிவுகள் அத்தனையும் அவர்களுடைய கோரிக்கையின் பேரில்.

நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், அவர்கள் கோரிக்கையின் பேரில் நீங்கள் எடுத்திருக்கிற முடிவுகளை, இந்த சம்பந்தப்பட்ட சங்கங்கள் உங்களுக்குத் தெரியும், அவர்களை அழைத்து இந்த முடிவுகளை அவர்களிடம் சொன்னால், அவர்கள் அதற்கான கிளாரிபிகேஷன் கேட்டுத் தெரிந்துகொள்வதற்கு மேலும் உதவியாக இருக்கும். நான் சொல்வது, To come together என்பதற்காகத்தான்.

நல்லவேளை முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல காரியம் செய்தார்கள். பாய்லர் பிளாண்ட் பப்ளிக் செக்டாரிலே ஒரு ஜெனரல் ஸ்டிரைக் ஏற்பட்டபோது, ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களோடு பேசி, நண்பர் ராகவானந்தம் அவர்களும் தலையிட்டு, இரண்டு பேர்களையும் ஒருமைப்படுத்தினார்கள். மற்றவர்களை ஒருமைப்படுத்தும்போது, தங்களுடைய ஊழியர்களை ஒருமைப் படுத்த, அவர்களைக் கூப்பிட்டு இப்படிப்பட்ட முடிவுகளைச் சொல்லி சுமுகமாக முடிக்கிறது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இதுவரை தமிழகத்தில் முன்னால் பதவியேற்று பணியாற்றிய அமைச்சரவை இதுபோன்ற நிலையில் எந்த முடிவுகளைக் கையாண்டதோ, அதைப்போல் இந்த அமைச்சரவையும் நிச்சயமாக அதே வழியில் கூடுமான வரையில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பழிவாங்கும் உணர்வோடு செயலாற்றாது என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சம்பந்தப்பட்ட சங்கத் தலைவர்களை, நிர்வாகிகளை அழைத்து நேரில் சொல்வது சுமுகமான உறவை ஏற்படுத்த உதவி செய்யாதா என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் தெரிவித்தார்கள். நான் ஒன்றை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் சிவ. இளங்கோ அவர்கள் என்னிடம் வந்து பேசினார்கள். செயலகத்திலே இருக்கிற தலைமைச் செயலாளர், நிதித் துறை செயலர், இன்னும் இவர்கள் போன்ற பொறுப்புள்ள அதிகாரிகள் அருகில் இருந்தார்கள். ஆனால், வெளியே போனவுடனே இவைகளை எல்லாம் மறந்துவிட்டு, எந்த விதமான ஆதாரமும் இன்றி அறிக்கை வெளியிட்டார்கள். இந்த நிலையில் தான் அமைச்சர் அவையின் முடிவை இந்த மாமன்றத்திலே வைத்துச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டது.

தமிழகம் முழுவதற்கும், ஏன் இந்தியத் துணைக் கண்டத்திற்குமே கூட இந்த அவையிலே சொல்கிற முடிவு மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய முடிவாகக் கருதப்படும். அதிலும், இங்கே சொல்கிற வார்த்தைகளின் முடிவுகள் அனைத்தும் பொறுப்போடு தரப்பட வேண்டிய அளவுக்கு, உத்தரவாதம் தரவேண்டிய வகையில் இங்கே வெளியிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, இந்தச் சங்கத்தைச் சேர்ந்த நண்பர்கள் சந்திக்க விரும்பினால், இந்த அமைச்சரவை அதை மறுக்காது. ஆனால், இங்கு சொல்லிவிட்ட பிறகு, அவர்களை அழைத்துச் சொல்வது இந்த மாமன்றத்தை அவமதிப்பதாகும் என்று நான் உண்மையிலேயே கருதுகிறேன். ஆகவே, இதுவே போதும் என்பதுதான் என்னுடைய கருத்து. இதைப்பற்றி அவர்கள் ஏதாவது கருத்து தெரிவிக்க, அவர்களுடைய சங்கத்திலே பொதுக் குழுவிலே தீர்மானம் எடுத்து, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்பினால், நாங்கள் விளக்கம் கூறத் தயங்க மாட்டோம். சந்திக்க மறுக்க மாட்டோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. 13—3—1978 அன்று காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-20 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

302. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கடன் கொடுப்போர் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 1—2—1977 ஆம் தேதியிடப்பெற்ற 58 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு கடன் கொடுப்போர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

303. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 31—1—1978 ஆம் தேதியிடப்பெற்ற 143 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

% 116. கோரிக்கை எண் 34—நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

% 117. பாசன-பொதுப்பணித் துறைக்கான 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் உரை. (ஆங்கிலம், தமிழ்.)

% 118. தமிழ்நாட்டில் கட்டிட அமைப்புத் திட்டங்கள் பற்றிய ஆய்வுரை—1977-78 (ஆங்கிலம், தமிழ்.)

% 119. பொதுப்பணித் துறையின் (கட்டிடங்கள்) 1978-79 ஆம் ஆண்டின் செயல் விளக்க நிதி அறிக்கை. (ஆங்கிலம், தமிழ்.)

% 120. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்.)

% 121. கோரிக்கை எண் 14—சிறைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்.)

% 122. சீர்திருத்தப் பணித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்.)

% 9—3—1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றுள்ளன.

இணைப்பு

[52-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

பாசனங்கள்-கட்டிடங்கள் மீதான மானியக் கோரிக்கைகள்.

1978-79.

மாண்புமிகு, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் பேரில் இவ்வரசுக்கு, கோரிக்கை 36—பாசனம் என்பதன் கீழ் ரூ. 23,60,93,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 52—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ் ரூ. 29,46,86,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்பதன் கீழ் ரூ. 4,00,52,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 38—பொதுப் பணிகள் பணியாளர்கள் அமைப்பும், கருவிகளும், தளவாடங்களும் என்பதன் கீழ் ரூ. 5,57,01,000-க்கு மேற்படாமலும், கோரிக்கை 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ் ரூ. 8,39,13,000-க்கு மேற்படாமலும் தொகை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2. தற்போதுள்ள பாசன அமைப்புகளை விரிவாக்குவதற்கும், சீரமைப்பதற்கும் செம்மையாக இருக்கும் வகையில் அவற்றை இயல்பாகப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவும், வெள்ளம், புயல், காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும் கோரிக்கை 36—பாசனம் என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

தற்போது நடைபெற்று வருபவையும் அடுத்த வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட விருப்பவையுமான புதிய பாசனத் திட்டங்கள், தொழிற் சாலைகளுக்கு நிலத்தடி நீர் வழங்கும் திட்டங்கள் ஆகியவற்றின் செலவில் பெரும் பகுதி கோரிக்கை 52-பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும்.

கட்டிடங்கள், பலவகைப் பணிகள் போன்ற மூலப்பணிகளுக்கும் கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள கட்டிடங்களின் இயல்பான பராமரிப்பு ஆகியவை போன்ற செப்பனீட்டுப் பணிகளுக்கும் செய்யப்படும் நிதி ஒதுக்கீடு கோரிக்கை 37-ன்கீழ் வருகிறது.

பொதுப் பணித்துறைப் பணியாளர் அமைப்பின் மொத்தச் செலவு கோரிக்கை 38-ன் கீழ் வருகிறது.

புதிய கட்டிடப் பணிகளுக்கு, தனித்தனியே ஆகும் செலவு ரூபாய் ஒரு லட்சத்துக்கு மேற்படுமாயின் அல்லது தனித்தனியே இந்த அளவுக்குக் குறைவாகச் செலவு ஏற்படுவதாயினும், திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்து ரூபாய் 5 லட்சத்துக்கு மேல் செல்வாகுமாயின் அப்பணிகள் மீதான செலவு கோரிக்கை 53 என்பதன் கீழ் பெறும் மானியத்திலிருந்து செலவு செய்யப்படும்.

3. ஆகவே 1978-79 ஆம் ஆண்டில் பாசனம் கட்டிடங்கள் மீது செலவு செய்யக் கருதி அனுமதித்துள்ள மொத்தத் தொகை ரூபாய் 71,04,45,000.

பெரிய, நடுத்தரப் பாசனம்.

4. பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள், வெள்ளக் கட்டுப்பாடு திட்டம் ஆகியவற்றுக்கு 1978-79-ல் 24.48 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். 1977-78-ல் மூன்று பெரிய பாசனத் திட்டங்களும், 12 நடுத்தரப் பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப் பட்டு வந்தன. கீழ் நீராறு அணை கட்டும் பணியும் பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியும் விரைவாக நடந்தேறி வருகின்றன. இவை 1979-ல் முடிக்கப் பெறும். வைகைக் கால்வாய்களை நவீனப்படுத்தும் பணி முடியும் தருவாயில் இருக்கிறது. உலக வங்கி நிதியுதவி செய்யும் பெரும் திட்டமான பெரியாறு மேம்பாட்டுத் திட்டம் புதிய வேகம் பெற்றுள்ளது. இந்த ஆண்டு இத் திட்டத்திற்காக ரூபாய் 10.94 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக எல்லா நிலைகளிலும் போதுமான பணியாளர்களுடன் தலைமைப் பொறியாளர் ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளார். நீரியல், தரக் கட்டுப்பாடு, கண்காணிப்பு இவற்றிற்குத் தனி கோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

5. ஏழு நடுத்தரப் பாசனத் திட்டங்கள் முடியும் நிலையில் உள்ளன. இத் திட்டங்களின் மூலம் 32,000 ஏக்கர் புதிதாகப் பாசனம் பெறும். ஏற்கெனவே பாசனம் பெறும், 1,20,000 ஏக்கர் நிலம் இத் திட்டங்களின் மூலம் இடையறாப் பாசனம் பெறும். புதிய திட்டங்கள் பொருளாதார வகையில் ஆதாயம்

தரத்தக்கதா என்பதை நன்கு அறிந்து கொள்ள அவைபற்றி ஆழ்ந்து ஆய்வு செய்த பின்னரே அவற்றிற்கு அனுமதி வழங்கப் பெறும். புதிய திட்டங்கள் பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்கதா என்பதை நன்கு அறிந்து கொள்ள அவைப்பற்றி ஆழ்ந்து ஆய்வு செய்த பின்னரே அவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறது. தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், கெலவரபள்ளியில் பெண்ணையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் கட்டுவதற்கு சமீபத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ரூ. 551.50 இலட்சம் செலவாகும். ஒசூரில் உள்ள 'சிப்காட்' நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு தண்ணீர் வழங்குவதைத் தவிர, இத் திட்டத்தினால் 9,100 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். 1978-79-ல், புதிய திட்டங்களுக்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்ணையாறு வடிநிலப் பகுதியில் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஹரூர் வட்டத்தில் வானியாற்றின் குறுக்கேயும் பாலக்கோடு வட்டத்தில் உள்ள தும்பல ஹல்லியிலும் நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் குல்லூர்சந்தையில் வைப்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றும் அதே வடிநிலப் பகுதியில் வேம்பக் கோட்டையில் மற்றொரு திட்டமும் கட்டுவது குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டங்களை ஆய்வு செய்யும் பணி பெரும்பகுதி முடிந்துள்ளது. இவை பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்கவையாக இருப்பின், நடப்பாண்டில் நிறைவேற்றப்படுவதற்காக எடுத்துக் கொள்ளப்படலாம். நீர்நிலை வாயில்கள் முழுவதையும் பயன்படுத்திக் கொள்வதற்காகப் பொருளாதார வகையில் ஆதாயம் தரத் தக்க திட்டங்கள் அனைத்தையும் சேர்த்து இவ்விரண்டு வடிநிலப் பகுதிக்கான பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தின் மிகவும் வறட்சிப்பாங்கான இவ்விரு பகுதிகள் பயனடைய ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டு திட்டமாக இப் பெருந் திட்டங்களை உலக வங்கிக்கு அனுப்பி நிதியுதவி பெறக் கருதப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டம்.

6. சிறுபாசனத் திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில், சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 400 இலட்சம் ரூபாயும், ஏரிகளில், தூர் வாருதல் பண்படுத்தல் பணிகளுக்காக 20 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. சிறப்பு சிறுபாசனத் திட்டத்தைச் சீரமைப்பதற்காக அரசால் நியமிக்கப்பட்ட பணிக் குழுவினது பரிவுரைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. நடைபெற்றுவரும் திட்டங்களை விரைவில் முடிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்நாளில் நிலவுகின்றன விலைவாசி நிலவரத்திற்கு ஏற்ப இருக்குமாறு பொருளாதார வகையில் ஆதாயம் தரத்தக்க நிலை பற்றி குறிப்பிடப்பட்ட அடிப்படை அலகுகள் யாவும் திருத்தப்பட்டு உயர்த்தப் பட்டுள்ளன. நடப்பாண்டில், சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் 200 பணிகளையும், ஏரிகளில் தூர் வாருதல் பண்படுத்துதல் திட்டத்தின்கீழ் 10 பணிகளையும் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தலைமைப் பொறியாளர் (பாசனம்) புதியத் திட்டங்கள் குறித்து தொகுக்கப்பட்ட பட்டியல் ஒன்றைத் தயாரிக்கக் கருதியுள்ளார். வரும் ஆண்டில் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 4.76 கோடி ரூபாய் செலவாகும். புதிய திட்டங்கள், தொழில் நுட்ப வகையிலும் பொருளாதார வகையிலும் ஆதாயம் தரத் தக்கவையென விரிவான ஆய்வுகள் மூலம் தெளிவாகத் தெரிய வந்த பின்னரே, அவற்றிற்கு அனுமதி வழங்கப்படும்.

7. இம்மாநிலத்தில் பாசனம் பெறும் மொத்த நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பகுதி ஏரிகளின் மூலம் பாசனம் பெறுகின்றது. அந்த ஏரிகளின் எண்ணிக்கை 37,000-க்கும் கூடுதலாகும். இந்த ஏரிகளை நவீனப்படுத்தவும் அவற்றின் நீரை சிக்கன முறையில் பயன் படுத்தவும், இவற்றின் ஆயக்கட்டுகளில் நவீன வேளாண்மை நடைமுறைகளை பின்பற்றுவதற்கான பெருந் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியுதவிக்காக இத் திட்டம் உலக வங்கிக்கு அனுப்பப்பட வேண்டியுள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் முதல் கட்டத்தில் ரூ. 111 கோடி செலவிடப்படும்; இதன்கீழ் ஒவ்வொன்றும் 500 ஏக்கரும் அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டுகளைக் கொண்ட 500 ஏரிகளைக் குறித்த பணிகள் மேற்கொள்ளப்படும்; இதன் மூலம் மொத்தம் 6 லட்சம் ஏக்கர் நிலம் பயன் பெறும். இத்

திட்டத்தின்கீழ்ச் செய்யப்படும் பணிகளாவன: ஏரிகள் புதுப்பிக்கப்பட்டு அவற்றின்தர நிலைக்குக் கொண்டு வருதல்; தொடர்புடைய ஏனைய பணிகளை நிறைவேற்றுதல்; ஆயக்கட்டில் உள்ள நீர் வழங்கு ஏற்பாடுகளை நவீனப்படுத்துதல்; சேதமாகாமல் நீரைச் சேமிக்கும் மேம்பாட்டுப் பணிகள், வயலுக்கு நீர் கொண்டு செல்லும் வாய்க்கால்களை அமைத்தல்; மேம்படுத்தப்பட்ட பயிர் நடைமுறைகளையும் வேளாண்மை குறித்த அறிவியல் முறைகளையும் பின்பற்றுதல் முதலியன. இத்திட்டத்தின் முதல் கட்டத்தை நிறைவேற்றுவதற்கு எட்டு ஆண்டுகள் ஆகும். இதன் மூலம், 1,35,000 ஏக்கர் பரப்பு கூடுதலாகப் பாசனம் பெறும். மேலும், தற்போது பாசனம் பெறுகின்ற 5,40,000 ஏக்கர் பரப்புக்குப் பாசன வசதி நிலைப்படுத்தப்படும். பயிர்த்தொழில் நடைபெறாத காலங்களின்போது எட்டாண்டு கட்டுமான காலத்தில் இத்திட்டம் நாளொன்றுக்கு ஏறத்தாழ 50,000 ஆட்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

8. விரைவுப் படுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டத்தின்கீழ், சிறுபாசன வாயில்களைப் பேணுவதற்காக ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ்ச் செய்யப்படும் பணிகளில் பின்வருவன அடங்கும்:—

பழைய பாசன வாயில்கள் புதுப்பிக்கப்பட்டுத் தரநிலைக்குக் கொண்டு வருதல்; உபரி நீர் குறித்த ஏற்பாட்டுப் பணிகளைச் செய்தல்; அவசியமான இடங்களில் மதகுகள் அமைத்தல்; நீர் வழங்கு கால்வாய்கள் வெட்டுதல் போன்ற நிலையான மேம்பாட்டு பணிகளைச் செய்தல். பின் வருகின்ற மூன்று வகைப்பட்ட பாசன வாயில்களுக்குப் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன: (1) 100 ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுகளைக் கொண்ட பொதுப்பணித்துறையைச் சேர்ந்த பாசன வாயில்கள்; (2) தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள 100 ஏக்கர்களுக்குக் குறைவான ஆயக்கட்டுகளைக் கொண்ட ஏரிகள்; (3) முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்கள்.

9. 1978-79ஆம் ஆண்டில், பொதுப் பணித்துறையைச் சேர்ந்த பாசன வாயில்களுக்கு ரூ. 75 இலட்சமும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள பாசன வாயில்களுக்கு ரூ. 50 இலட்சமும், முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்

களுக்கு ரூ. 10 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டுகளைக் கொண்டுள்ளவையும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ளவையுமான சிறு பாசன வாயில்களும், முன்னாள் ஜமீன்களைச் சேர்ந்த பாசன வாயில்களும் முதற்கண் பொதுப்பணித் துறையில் தர நிலைக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படும்.

நிலநீர்:

10. மேற்கொண்டும் நீரைப் பயன்படுத்துவதற்காக இருக்கின்ற மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் போதுமானவையாக இல்லாதிருப்பதால் நில நீர் கிடைக்கும் இடத்தில் அதை முறையாகப் பயன்படுத்துவதும், நில நீரையும், மேற்பரப்பு நீரையும் சேர்த்துப் பயன்படுத்துவதும் அவசியமாகும். எனவே, இம்மாநிலத்தில் நில நீர் ஆய்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தினைக் கவனிப்பதற்காக வென்றே கூடுதலாக ஒரு கோட்டத்தை ஏற்படுத்தி இத்துறைக்கான பணியாளரமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கிரிதமால், வைப்பாறு வடிநிலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கான வாய்ப்பு குறித்து மத்திய நில நீர் வாரியம் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆதாரங்களைப் பெரிய அளவில் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இந்த மாவட்டத்தின் கிரிதமால் வடிநிலத்தில் சுமார் 10 ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்ட பகுதியில் சுமார் 100 ஆழ் கிணறுகளையும், நடுத்தரப் பொதுக் குழாய்க் கிணறுகளையும் வெட்டுவதற்கான திட்டத்தை சிறுபாசனச் சிறப்பு திட்டத்தின் கீழ் நிறைவேற்றக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் ஒரு கோடி செலவாகும். ஆண்டொன்றில் மூன்று பாசனப் பயிர்களை விளைவிக்க, ஒவ்வொரு கிணறும் சுமார் 30 முதல் 40 ஏக்கர்கள் பரப்பளவிற்குப் பாசன வசதி அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

11. எனினும், இம்மாநிலத்தில் நில நீரைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தலுக்கும் சேமித்து வைப்பதற்கும் உடனடி அவசியம் உள்ளது. நில நீர் குறைந்து வருவது சில ஆண்டு

களாக நமக்கு கவலையை அளித்துள்ளது. கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, வடாற்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் இந்த நிலைமை மிகவும் கடுமையாக உள்ளது. இம்மாநிலத்தின் நலனைக் கருத்தில் கொண்டு நில நீரை வெளிக் கொண்டு வருவதையும் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்த அரசு சட்ட வரைவு ஒன்றை கொண்டு வந்துள்ளது. இம் மாசோதா ஆய்வுக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

12. நீர் ஆதாரங்களைப் பற்றிய அறிவியல் அடிப்படையிலான திட்டம், நிர்வாகம் ஆகியவற்றில் உதவும் ஆராய்ச்சி, வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவும் சிறப்புப் பொறியியல் அதிகாரி ஒருவரின் பொறுப்பின்கீழ் நீர் ஆய்வு பற்றிய நிலையம் ஒன்று (Institute of Water Studies) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தை இந்நாட்டிலேயே முதன்மையான ஆராய்ச்சி நிலையமாக மேம்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

1977 78-ல் பாசனம்:

13. தென் மேற்கு பருவ மழை வழக்கமான அளவிற்கு பெய்யாத போதிலும் 1977-78 பாசனப் பருவம் மொத்தத்தில் நன்றாகவே அமைந்தது. பெரும்பாலும் எல்லா பாசன ஏற்பாட்டிலும் முறையான ஆயக்கட்டுகளுக்கு வழக்கமாக விடப்படும் தண்ணீர் முறையாக விடப்பட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக மாநிலத்திலுள்ள எல்லா நீர்த் தேக்கங்களும் அநேகமாக நிரம்பி வழிந்துள்ளன. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தைச் சேர்ந்த நீர்த் தேக்கங்களில் தண்ணீர் வரவு திருப்திகரமாக இருந்தது. பவானி, அமராவதி ஏற்பாட்டில் பருவமழை திருப்திகரமாக இருந்தது. தென் மேற்கு பருவ மழை வழக்கத்திற்குக் குறைவாகப் பெய்ததால் பெண்ணையாறு, தாமிரவருணி வடிநிலங்கள் பாதிக்கப்பட்டன. பின்னர் வடகிழக்கு பருவ மழையின் போது, தண்ணீர் வரவு அதிகரித்தது. மொத்தத்தில் இவ்விரண்டு வடி நிலங்களிலும் பாசன நிலை திருப்திகரமாக உள்ளது. இம்மாநிலத்தில் உள்ள ஏரிப்பாசனம் நல்ல திருப்திகரமான நிலையில் இருந்தது. வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் பெரும்பாலான ஏரிகள் நிரம்பின. பெரும்பாலும் மாநிலம் முழுவதும் நிலநீர் மட்டம் பெருமளவிற்கு உயர்ந்திருக்கின்றது. இதனால் கோயம்புத்தூர், வட ஆற்காடு,

சேலம், மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கோடைக்காலப் பயிர் நல்ல விளைச்சலை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

14. மேட்டூர் நீர் தேக்கம், பாசனத்திற்காக 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் நாளிலிருந்து விடப்பட்டது. அதன் பின்னர் கயவாய்ப் பகுதிக்குப் போதுமான தண்ணீர் வழங்கப் பட்டது. இதனால் காவிரியின் கீழுள்ள எல்லாக் கால்வாய் **களையும் இந்த** ஆண்டு திறக்க முடிந்தது. வட **கிழக்குப்** பருவ மழைக் காலத்தில் நீர்த்தேக்கம் நல்ல நீர் வரவினைப் பெற்று 1977 அக்டோபரில் நிரம்பியது. கயவாய்ப் பகுதியிலுள்ள சம்பா தாளடி பயிர்களுக்கு தொடர்ந்து பாசனமளிக்கவும் வெள்ளத்தின்போது பயிர் இழந்த உழவர்கள் அதை ஈடுகட்டும் வகையில் மற்றொரு போகம் சாகுபடி செய்யவும் இன்னும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

15. 1977 ஆம் ஆண்டு நவம்பரில் புயலினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி இந்த அவை அறியும். அமராவதி, காவிரி, கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் அதிக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் காரணத்தால் ஆறுகளிலும் கால்வாய்களிலும் பெரும் உடைப்புகள் ஏற்பட்டன. உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கல்லணைக்கு மேல் கிளிக் கூட்டில் காவிரியில் பெரும் உடைப்பு ஏற்பட்டதன் காரணத்தால் கயவாய் பகுதிகளுக்கு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் நாள் வரை தண்ணீர் வழங்குவது நிறுத்தி வைக்கப் பட வேண்டியதாயிற்று. மிக விரைவாக இப்பெரும் உடைப்பை அடைத்து முடித்த பெருமை பொதுப்பணித் துறையையே சாரும். வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை சீர் செய்யும் பணியில் மிகு விரைவாகவும் ஆழ்ந்த அக்கறையுடனும் பொதுப் பணித் துறை ஈடுபட்டது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

காவிரி நீர்ப் பிரச்சனை:

16. இந்த ஆண்டும் காவிரி நீர் வரத்தினை கர்நாடக அரசு தொடர்ந்து தடுத்தது. இருந்த போதிலும் இந்த அரசு மேற்கொண்ட தனி முயற்சிகளினாலும், இரண்டு மாநிலங்களுக்கும் இடையில் நிலவிவரும் பரஸ்பர நல்லெண்ணத்தினாலும்

பிரச்சினையை புரிந்து கொண்டு செயல்பட்டதனாலும் தமிழ் நாட்டுக்கு போதிய அளவுக்கு உரிய காலத்திற்குள் நீர் கிடைத் தது. வட கிழக்குப் பருவ மழை சாதகமாக இருந்ததால் இந்த ஆற்றின் கீழ் வரும் எல்லா பாசன ஏற்பாடுகளுக்கும் தண்ணீர் திறந்துவிடப்பட்டு தொடர்ந்து வழங்கி வருவதில் எவ் வித இடர்பாடும் ஏற்படவில்லை.

17. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக மூன்று மாநிலங்களின் மேல் மட்ட அளவுக் கூட்டத்தை நடத்தும்படி இந்திய அரசினை இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் தற்போது உள்ள பாசன ஏற்பாட்டை பிரதிகூல மாக பாதிக்கும் வகையில் எந்த ஒரு பேச்சு வார்த்தைக்கு அல்லது ஏற்பாட்டிற்கு ஒரு தரப்பினராக தமிழ்நாடு இருக்காது.

சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் வழங்குதல்:

18. சென்னை மாநகருக்கு 15 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்ணா நீரை வழங்குவது குறித்தும் அதைக் கொண்டு வருவதற்கான நடை முறைகள் குறித்தும் 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27-ம் நாளன்று இந்த ஆறு பாயும் வடிநில மாநிலங்களுடன் உடன்பாடு ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஏற்பாடுகளை முடிவு செய்வதற்கு ஆந்திர பிரதேச அரசு டன் தற்போது பேச்சு வார்த்தைகள் தொடங்கப்பட வேண்டி யுள்ளது. ஆந்திர மாநிலத்தின் சட்ட மன்ற தேர்தல்கள் முடிந்த பிறகு பேச்சு வார்த்தைகளை தொடங்கலாமென்று அம் மாநில முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்பி விடுதல்:

19. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் பரஸ்பர நலனுக்காக மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை திசை திருப்பி விடுவது குறித்து இந்திய அரசு நியமித்த தொழில் நுட்பக் குழுவின் ஆய்வு வரம்பை இறுதியாக முடிவு செய்தது பெரும் முன்னேற்றமாகும். இதில் கேரளா மாநிலம் ஏற் கெனவே சில நிபந்தனைகளைத் தெரிவித்தது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் திருவனந்தபுரத்தில், இந்திய பிரதமர் முன் னிலையில், தமிழ் நாடு, கேரள முதல் அமைச்சர்களிடையே நடைபெற்ற கலந்துரையாடலின் மூலம் இது இயலக்கூடியதாகச் செய்யப்பட்டது. தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களிடையே

ஏற்கெனவே ஏற்பட்ட உடன்பாடுகளில் அடங்காத ஆறுகளை கிழக்கு நோக்கித் திசை திருப்புவதற்கான சாத்தியக் கூறுகளை தொழில் நுட்பக் குழு ஆராயலாம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டது.

20. இது போன்ற மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினை களை தீர்க்கதரிசனத்துடனும் விடாமுயற்சியுடனும் அணுக வேண்டும். நல்லெண்ணமும், பரஸ்பரமும் புரிந்து கொண்டு செயல்படுவதும்தான். தமிழ்நாடின் நீண்டகாலப் பாசனத் தேவைகளை நிறைவு செய்யும் திருப்திகரமான ஏற்பாட்டினை அடைவதற்கான முயற்சிகளுக்கு அடிப்படையாக இருக்கும்.

பொதுப்பணித் துறையைத் திருத்தியமைத்தல்:

21. நிர்வாகத்தின் திறனை மேம்படுத்தவும், செவ்வியவகை மேற்கொள்ளவும் பொதுப்பணித் துறையைத் திருத்தியமைக்கக் கருதப்பட்டுள்ளது. பாசனம், கட்டிடம், ஆகிய இரண்டையும் நிர்வகிக்கும் பலநோக்கு நிர்வாகப் பணியாளர் அமைப்பாக, நில எல்லை அடிப்படையில் இத் துறை உருவாக்கப்பட்டுள்ளது. நவீன தொழில் நுட்பத்திற்கு இன்றியமையாத அம்சமாகவுள்ள சிறப்பு அறிவு பெறுவதற்கு இந்த ஏற்பாடு ஒவ்வாது. கிராமப் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் வகையில் சிதறாத வல்லு நர்களின் கண்காணிப்பும் நவீன தொழில் நுட்ப நடவடிக்கை களும் முக்கியமான பணியான நீர்பாசனத்தில் இணைந்திருக்க வேண்டும்.

கட்டிடங்களை கட்டத் திட்டமிடுதல், கட்டுதல் ஆகியவை வேறொரு தொழில் நுட்ப அம்சமாகும். பொதுப்பணித் துறையை பாசனம், கட்டிடங்கள் என்று இரு கூறாக்கத் திட் டமிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க, நிர்வாக, மேற்பார்வைப் பணி பணியாளர் அமைப்புகளைச் சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மாற்று ஏற்பாட்டினால் நிர்வாகத்தின் திறமையும் சுறு சுறுப்பும் ஓங்கும்.

22. பாசன ஏற்பாடுகளின் அமைப்பினைக் கருத்தில் கொள்ளாமல் வட்டார அடிப்படையில் நீர்ப்பாசனத்துறை தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வரையறுப்பு, அறிவியல் முறையில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும், குறிப்பாக வெள்ளம் முதலியன ஏற்படும் காலங்களில் உடனடியாகவும்

உறுதியானவுமான நிவாரண நடவடிக்கைகள் எடுப்பதை
பாதிக்கின்றது. பாசனத்திற்காக நீரைப் பாதுகாப்பதும்
பயன்படுத்துவதும், வடிநிலப் பகுதி வாரியாக நன்கு கவனிக்கப்
பட வாய்ப்பு இருக்கிறது. ஒவ்வொரு முக்கிய வடிநிலப் பகுதி
யிலும் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, பயன்படுத்துதல், உபரி
நீர் அளவு ஆகியவற்றை மதிப்பிடுதலும், ஆற்றுப் பள்ளத்
தாக்குப் பகுதிகளில் நீரை உரிய அளவுக்குச் சிக்கனமாகப்
பயன்படுத்துவதன் மூலமும் தொடர்பான வேளாண்மை நடை
முறைகள் மூலமும் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான
பெருந் திட்டங்களை வகுப்பதும் பொருத்தமாகும். இந்த
நடவடிக்கை நமது மாநிலத்தின் உடனடித் தேவையாகும்.
ஏனெனில், இம்மாநிலம் மேற்பரப்பு நீர் வாயில்களை ஏறக்குறைய
முழுவதும் பயன்படுத்தியாகி விட்டது. தேவைகளையொட்டி
ஒவ்வொரு வடிநிலப்பகுதியிலும் உறுதியான அடிப்படையில்
அமைந்துள்ள பாசன வாயில்களைப் பேணுவதற்கும் பாதுகாக்கவு
மான திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும்.
அந்த வகையில், தற்போது அறிவியல் அடிப்படையில் அமைந்
திராத மாவட்ட வாரி அதிகார வரம்புகளை நீக்கிவிட்டு மேற்
குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இம்மாநிலத்
தில் உள்ள பாசன வழி நிலைகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்த
உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

வடக்குத் தொகுதி:

ஆரணியாறு, கொற்றலையாறு, கூவம், அடையாறு,
பாலாறு வடிநிலங்கள்.

பெண்ணையாறு வடிநிலம்.

மத்தியத் தொகுதி:

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம்.

காவேரி, பவானி, அமராவதி வடிநிலங்கள்.

தென் தொகுதி:

வெள்ளாறு, அக்கினியாறு, மணிமுத்தாறு, வடிநிலப்
பகுதி.

பெரியாறு, வைகை வடிநிலப் பகுதி.

தாமிரவருணி—கோதையாறு வடிநிலப் பகுதி.

ஒவ்வொரு தொகுதி வடிநிலப் பகுதியும் ஒரு தனியான தலைமைப் பொறியாளரிடம் (பாசனம்) ஒப்படைக்கக் கருதப் பட்டுள்ளது. அவர், திட்ட ஆய்வு, திட்ட கட்டுமானம், திட்டத்தை இயக்குதல், முறை பராமரிப்பு ஆகியவற்றிற்கு ஒட்டுமொத்தப் பொறுப்பு வகிப்பார்.

ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள்:

23. திட்டங்களைத் தீட்டி செயல்படுத்துதல், நீரைச் சிக்கன மாகப் பயன்படுத்துதல், பயிரிடும் முறை குறித்துத் திட்டமிடுதல் ஆகியவற்றில் அதிக அளவில் நடவடிக்கை எடுப்பதில் ஆயக் கட்டுதாரர்களோடும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோடும் இணைந்து செயல்படுவது அவசியமாகும் என்று இந்த அரசு கருதுகிறது. பாசனத் திட்டங்களின் ஆயக்கட்டு பகுதிகளில் பொறுப்பு வகிக்கும் பல்வேறு அரசுத் துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது அவசியமாகும் என்றும் இவ் வரசு கருதுகிறது. இந்த இரு நோக்கங்களைக் கருத்தில் கொண்டு பெரிய வடிநிலப் பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் பாசன, வேளாண்மை, கூட்டுறவு, மீன், வனம், மின்சாரம், வருவாய் ஆகிய துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் விவரம் தெரிந்த ஆயக் கட்டுதாரர்கள், அப்பகுதிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப் பினர்கள், மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை நியமிக்கக் கருதப்பட் டுள்ளது.

வெள்ளமும், வெள்ள நிவாரணமும்:

24. பருவ மழைக் காலங்களில் சென்னை மாநகரிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதற்கும், வெள்ளத்தால் பாதிக்கப்படுவதற்கும், வாய்ப்பு உள்ளது. 1976-77 ஆம் ஆண்டுகளில் பெற்ற அனுபவத்திலிருந்து இது தெரிய வருகிறது. இவற்றிற்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து பரிகார நடவடிக்கைகள் குறித்து பரிவுரை செய்யுமாறு குழுக்கள் அமைக்கப்பட்டன. கோட்டூர்புரம் குடியிருப்பு வீட்டுத் தொகுதிகளில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து ஆய்வு செய்ய திரு. கே. கே. நம்பியார் தலைமையில் அமைக்கப் பட்ட குழு 1976-ல் ஆய்வு செய்தது. இந்த வீடுகள் இயற்கை யாகவே வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய அடையாறு ஆற்றுப் பகுதியில் கட்டப்பட்டுள்ளன என்று அக்குழு கருத்து

தெரிவித்தது. மேலும் இக்குடியிருப்புகளுக்கு ஆற்று வெள்ளத் தினின்று பாதுகாப்பு அளிப்பதற்காக அவற்றை சுற்றிக் கட்ட திட்டமிடப்பட்ட வளைவுக்கரை கட்டப்படாமலேயே விடப் பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது. வளைவுக்கரையை முழுவதும் கட்டி முடித்து, நீர் உட்புகா வண்ணம் தடுப்பதற்கு இந்த வளைவுக்கரை உயரமாகக் கட்டப்பட வேண்டும் என்று குழு பரிவுரை செய்தது. இப்பரிவுரை தற்போது நிறைவேற்றப் பட்டுள்ளது.

இக்குழு தெரிவித்தக் கருத்துக்கிணங்க அடையாற்றை சென்னை மாநகர் 1884-ஆம் ஆண்டு ஆறுகள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவரவும் ஆற்றுப் பாதுகாவலர் ஒருவரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருக்குள் ஓடும் ஆறுகள் அனைத்தையும் பராமரித்தல் பாதுகாக்கும் பணி குறிப்பாக பொதுப்பணித் துறை யிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியை மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்திலும் சென்னை மாநகரிலும் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களைத் தடுப்பதற்கான நிலையான நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பரிவுரைகள் அளிக்குமாறு திரு. சிவிலிங்கம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு மௌண்ட் போரூர் பாலத்திலிருந்து அடையாற்றுப் பாலம் வரையில் உள்ள அடையாறு ஆற்றின் பகுதி முழுவதிலும், நெடுக வெள்ளத் தடுப்புச் சுவர்களைக் கட்ட வேண்டும் என்று பரிவுரை செய்தது. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

25. 1977 அக்டோபர்-நவம்பர் திங்கட்களில் முன்னெப்போதும் கண்டிராத பெருமழை பெய்ததன் விளைவாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கால் உயிருக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதம் ஏற் பட்டது. பாசன வாயில்கள், கட்டுமானங்கள் ஆகியவற்றை அவசரமாகப் பழுதுபார்க்கும் பணி, போர்க்கால நடவடிக்கையைப் போல மேற்கொள்ளப்படுவதற்காக திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள பாசனத் தலைமை சிறப்புப் பொறியாளரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சிறப்புப் பிரிவால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாசன வாயில்

களுக்கு வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள சேதம் சுமார் 7.40
கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம்
வருடம் மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிவரையில் பார்க்கப்படும்
செப்பனிடு பணிகளுக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
பொதுக் கட்டிடங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் 2 கோடி ரூபாய்
ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம் வருடம்
மார்ச்சு மாதம் 31 ஆம் தேதிவரையில் பழுதுபார்க்கும்
பணிகளுக்காக 1 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

26. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் நேரிடும்
காலத்தில் மீனவர்களுக்கும் கடற்கரையோரப் பகுதியில்
வாழும் ஏனையோருக்கும் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு கடற்
கரையோரத்தில் முக்கியமான இடங்களில் புயல்-வெள்ளப்
புகலிடங்களைக் கட்டுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. முதல
மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பெறும் உதவி
யுடன் ஒவ்வொன்றும் ரூ. 2 இலட்சம் செலவில் ஏழு புகலிடங்
களைக் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய
புகலிடங்கள் கட்டுவதற்கு தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம்
வட்டத்தில் அக்கரைப்பேட்டை (வடக்கு பொறையூர் கிராமம்),
புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் மீமிசல்
(சந்திரம்பட்டினம் கிராமம்), தென் ஆர்க்காடு மாவட்டம், சிதம்
பரம் வட்டத்தில் வல்லம்படுகை, பிச்சாவரம், ஜெயங்கொண்ட
பட்டினம், தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டத்தில்
ஆலப்பாக்கம், கள்ளயார்குப்பம் ஆகிய இடங்கள் தெரிந்தெடுக்
கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணம்:

27. தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை நன்றாகப்
பெய்யவில்லை. எனவே, ஏரிக்கரைகளை வலுப்படுத்துதல், ஏரி
களையும் குளங்களையும் தரப்படுத்துதல், கால்வாய்கள் முதலிய
வற்றில் தூர்வாருதல் போன்ற வறட்சி நிவாரணப் பணிகள்
நடப்பாண்டிலும் மேற்கொள்ளப்பட்டன. 1977-78-ல் வறட்சிப்
பகுதிகளில் மேற்கொள்வதற்காக 770 திட்டங்களுக்கு ரூ. 571.33
இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ரூ. 15 இலட்சம்
சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. எஞ்சிய தொகை,
1977-78 ஆம் ஆண்டுக்கான முறையான மானியங்களில் இப்பணி
களுக்காக நிதி ஒதுக்கம் செய்ததன் மூலம் பெறப்பட்டது.
1977, அக்டோபர் வரையில் ஆன செலவு ரூ. 148.169 இலட்ச

மாகும்; உழைப்பு நாட்கள் 9,42,261 ஆகும். இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது வடகிழக்கு பருவ மழை பெய்யத் தொடங்கி வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணம் அளித்தது.

கடல் அரிப்பு:

28. சென்னை மாநகரிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. கடல் அரிப்பை தடுப்பதற்காக விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கோவாவிலுள்ள கடல் ஆய்வுநிறுவனத்தின் தொழில் நுட்ப ஆலோசனையைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் இனயத்தில் பாறுங்கற்களைக் கொண்டு அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது. முட்டந்துறையில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன.

நிலப்படை (Land Army):

29. மாநிலத்தில் நிலப்படை அமைப்பதற்கான திட்டம் ஒன்றை வகுக்க தலைமைச் செயலாளரின் தலைமையில் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அடுத்த சில மாதங்களுக்குள் அப்படை அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டிடங்கள்:

30. மாநிலத்தில் எல்லா அரசுக் கட்டிடங்களையும் கட்டும் பணி பொதுப்பணித்துறையின் கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவற்றைத்தவிர, குறிப்பிட்ட 'செண்டேஜ்' கட்டணங்களைச் செலுத்துவதின்பேரில், நகராட்சிகள், கூட்டுறவுச் சங்கங்கள், ஓரளவு அரசுத் தன்மைவாய்ந்த ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான பணிகளை இப்பிரிவு நிறைவேற்றுகிறது. இந்திய அரசுக்காக, தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனைக் கட்டிடங்கள், தொலைக்காட்சி நிழற்படம் எடுக்கும் கூடங்கள் போன்ற பணிகளையும், பொதுப்பணித்துறை நிறைவேற்றி வந்தது. ஆய்வாளர் மாளிகைகள், பயணியர் விடுதிகள் ஆகியவற்றைக் கட்டும் பொறுப்பையும் இப்பிரிவு ஏற்கிறது. மதுரையில் கூடுதலாகப் பயணியர் விடுதி ஒன்று, கடலூரில் புதிதாகப் பயணியர் விடுதி ஒன்று, வேலூரிலும் சேலத்திலும் பொதுப்பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவற்றை இவ்வாண்டு கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது.

வேலை கிடைக்காத பொறியாளர்களுக்கு உதவும் திட்டம்:

31. வேலை கிடைக்காத பொறியாளர்களுக்குப் பெருமளவில் உதவும் நோக்கத்துடன், ஒப்பந்தங்கள் வழங்குவதில் தற்போதுள்ள சலுகைகளை அரசு தாராளமாக்கியுள்ளது. வேலை இல்லாத பட்டதாரிகளுக்கும் பட்டயதாரர்களுக்கும் எவ்வித வேறுபாடுமின்றி ஒரே அளவில் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

பணி ஆலோசனைக் குழுக்கள்:

32. அரசுத் துறைகளில் ஏற்படும் செலவு குறித்து துறை அளவில் மட்டுமே ஆய்வு செய்வதைவிட, பொதுமக்களின் தொடர்ந்த கண்காணிப்பு இருக்க வேண்டுமென்பதே இவ்வரசின் கொள்கையாகும். பொதுப்பணிகளின் தரம், முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆய்வு செய்வதில் உள்ளூர் மக்களும் பங்கு கொள்ளவேண்டும். அப்போதுதான் முறைகேடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டு, அரசு செலவிடும் பணத்திற்கு நல்ல பலன் கிட்டும். இந்த நோக்கங்களை எய்துவதற்காக, கோட்டாட்சியரின் தலைமையில் வட்ட அளவில் பணி ஆலோசனைக் குழுக்களை அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இக்குழுவில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், பொது மக்களின் பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆகியோர் இருப்பர். இந்த ஆலோசனைக் குழு, துறை கட்டி வரும் பணிகள் அனைத்தையும் பார்வையிட்டு அவற்றின் முன்னேற்றத்தையும் தரத்தையும் ஆய்வுசெய்யும். முறைகேடுகளும், ஊழல்களும் நடந்திருப்பதாகத் தெரிய வருமாயின் அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்படும். பணி நடைபெறும் இடம் ஒவ்வொன்றிலும் பணியின் விவரங்கள், ஒப்பந்தக்காரரின் பெயர், ஒப்பந்தம் அளிக்கப்பட்ட நாள், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி முடிக்கப்படுவதற்கு வரையறுக்கப்பட்ட நாள் ஆகியவை குறித்த விவரங்கள் எல்லாருக்கும் தெரியும் வகையில் வைக்கப்படவேண்டும். அதனால், பொதுமக்கள், பணியின் முன்னேற்றம், தரம் குறித்து தெரிந்து மனநிறைவு கொள்வர்.

நீரியல் குறித்த புள்ளி விவரத் தகவல் காப்பகங்கள்:

33. இம்மாநிலத்தில் பெய்யும் மழையின் அளவு, வடிந்து போகும் மழை நீரின் அளவு, பல்வேறு ஆறுகளில் வந்துசேரும் வெள்ளப்பெருக்கு நீர் அளவு ஆகியவை தொடர்பான தகவல்

[1978 மார்ச் 11

களைத் தொடர்ந்து பாசனத்துறை சேகரிக்கிறது. அத்துடன் வெள்ளத்திற்கு முன்பும் பின்பும் குறிப்பிட்ட இடங்களில் ஆறுகளில் போக்கு குறித்த தகவல்களையும் அது வைத்துள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள் இப்போது ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாமல் பல்வேறு வடிவங்களில் கிடைக்கின்றன. தற்காலக் கணக்கீட்டுப் பொறி நடைமுறைகளை மேற்கொள்வதன் மூலம் அவற்றை வரிசைப்படுத்தி தொகுத்துத்திரட்டி வைக்கவேண்டும். இத் துறையிடம் உள்ள தகவல்கள் அடங்கிய பதிவேடுகள் சில காலப்போக்கில் சிதைந்து போய்விடக்கூடும். அவற்றைத் தொகுத்த பிறகு, புள்ளிவிவரத் தகவல் காப்பகங்களில் நிலையாகச் சேகரித்து வைக்கலாம். அவ்வாறு அவற்றைப் பாதுகாத்தால் திட்ட நடைமுறைப் பகுப்பாய்வுக்காகவும் எதிர்காலத்தில் மேற்கொண்டும் ஆய்வுகள் செய்வதற்காகவும் அவை எளிதில் கிட்டும். தற்போது கிடைக்கிற புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தொகுக்கவும் பல்வேறு வடிநிலப்பகுதிகள் முதலியவற்றை ஒரே சமயத்தில் பகுப்பாய்வு செய்யவும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் ஒரு பிரிவை ஏற்படுத்தக் கருதப்படுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளின் நீரியல் புள்ளிவிவரங்களை அறிவியல் முறையில் பயன்படுத்துவதற்காக சிறந்த முன்னேற்ற நடைமுறைகளில் இது ஒன்றாகும்.

34. பொதுப்பணித்துறை பெருமளவில் தொகை செலவிடும் ஒரு துறையாகும். பொருளாதார அமைப்பு—குறிப்பாக, கிராமத்துறையின் பொருளாதார அமைப்பு—இத்துறையின் திறமையையே பொறுத்துள்ளது. பொது நிதிகளை விவேகமாகச் செலவு செய்யும் வகையிலும் பணிகளை விரைவாக நிறைவேற்றும் வகையிலும் செவ்விய தொழில்நுட்ப வகையிலும் இத்துறையின் கொள்கைகளும் திட்டங்களும் அமைந்திருக்க வேண்டும். எல்லா நிலைகளிலும் பொதுமக்களின் தேவைகளை அறிந்து செயல்படுதல், தொழில்நுட்பத் திறமை, நிர்வாகத் திறமை, நாணயம் ஆகியவை கொண்டதாக பொதுப்பணித்துறையை அமைத்து அதற்கு புதியதோர் உருக்கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த வகையில் நமது முயற்சிகளைப் பற்றிச் சுருக்கமாக நான் விளக்க முயன்றுள்ளேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 மார்ச் 13

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அவியூர் ஏரிக்கு நீர் வரத்து.

*528—வினா திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்னார்க்காடு மாவட்டம், வராக நதிக் கால்வாயிலிருந்து வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த அவியூர் பெரிய ஏரிக்கு புதிய கால்வாய் வெட்ட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்காக ரூ. 87,000க்கு ஒரு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: அந்தத் திட்டம் நடப்பு ஆண்டிலே செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வராக நதிக்குக் குறுக்கே சேவலப்பேரி கிராமத்திற்கு அருகில் ஒரு அணை கட்டப்பட்டு தண்ணீர் திருப்பி விடப்பட்டிருக்கிறது. அந்த நீர்ப்பாசனத்தின் மூலம் என்ன நிலைமைகள் என்பதை கண்காணித்த பிறகு இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

[1978 மார்ச் 13

<u>பெருமாள் ஏரி மராமத்து</u>

*529 வினா—<u>திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்னாற்காடு மாவட்டம்; குறிஞ்சிப்பாடி தொகுதியிலுள்ள பெருமாள் ஏரி (8,000 ஏக்கர் ஆயக்கட்டு) மராமத்து செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வேலைகள் நடைபெறாமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u>

(அ) மற்றும் (ஆ): இத்திட்டத்தின் வேலைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

(துணை வினா இல்லை)

சிதம்பரம் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு மின்இணைப்பு.

*530 வினா—<u>திரு. துரை கலியமூர்த்தி:</u> மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சிதம்பரம் தாலூக்கா காவாலகுடி, நெடுஞ்சேரி சாத்த வட்டம் ஆகிய ஊர்களில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக்கோரி அப்ளிகேஷன் கொடுத்து பல வருடங்களாகியும் மின் இணைப்பு கொடுக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(துணை வினா இல்லை)

<u>பெரியகுளத்தில் நீதிமன்றங்கள்</u>

* 531—வினா <u>திரு. கே, பண்ணை சேதுராம் :</u> மாண்புமிகு ...டத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பெரியகுளத்தில் சப்கோர்ட் ஒன்றும், முதல் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம் ஒன்றும் நிறுவ திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறுவப்படும்?

1978 மார்ச் 13]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR :

(*a*) There is a proposal to constitute only a Sub-Court at Periakulam.

(*b*) The constitution of new Courts, both Civil and Criminal, are being considered on a phased programme. The priority list of Courts for the first phase has been received from the High Court. It is under examination. Orders will be issued as early as possible.

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> பெரியகுளம் பாராளுமன்றத் தொகுதியில் 7 லட்சம் வாக்காளர்களும்; 10 லட்சம் மக்கள் ஜனத் தொகையும் இருக்கும் அந்தப் பகுதியில் சப் கோர்ட் வசதியும், முதல் வகுப்பு குற்ற இயல் வசதியும் இல்லை. இங்கிருக்கும் மக்கள் திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதியிலுள்ள கோர்ட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது. இங்கு ஒரு கோர்ட் வேண்டுமென்று பல காலமாகக் கேட்டு வந்தும் இன்னும் முடிவு எடுக்காமல் இருக்கிறது. எப்பொழுது வரும் ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : There is no proposal to locate any Sub-divisional Judicial Magistrate Court at Periyakulam. There is a proposal for the establishment of a separate Sub-divisional Magistrate Court at Uthamapalayam but this proposal has not yet taken any final shape.

<u>திரு. கே. பண்ணை சேதுராம் :</u> இங்கே சப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் பிறப்பித்ததில் பெரியகுளத்தில் ஏற்படுத்துவதற்குப் பதில் அடிஷனல் சப் கோர்ட் திண்டுக்கல்லுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையாவது பெரியகுளத்திற்குக் கொடுக்க இயலுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : I have already stated that so far as the Sub-Court at Periyakulam is concerned there is a proposal now. We have already received priority communication from the High Court and it is under examination of the Government.

<u>திரு. வே. இரா. ஜெயராமன் :</u> உத்தமபாளையத்தில் சப் டிவிஷனல் கோர்ட் ஏற்படுத்த சாத்தியக்கூறு இல்லையென்று சொன்னார்கள். மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : There is a proposal before the Government for constituting a separate Sub-Divisional Magistrate Court at Uthamapalayam and not at Periyakulam.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள்.

* 532 வினு—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள கொக்கிரக்குளம் கோர்ட்டுகள் ஹைக்கிரவுண்டுக்கு மாற்றல் குறித்து அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: (a) Yes.

(b) The representation received from the public of Tirunelveli, Merchants and Bar Association of Tirunelveli objecting to the shifting of Courts in Tirunelveli from Kokkirakulam to High Grounds, was referred to the High Court, Madras for its remarks. The High Court has stated that the site in the High Grounds, Medical College Campus, was chosen after a comparative study and inspection by the Collector of Tirunelveli District and Sessions Judge, Tirunelveli and on the recommendation of the Public Works Department authorities and that the construction of the combined Court buildings on the new site at Tirunelveli was an imminent necessity and that there should be no going back on the scheme. The Government accepted the views of the High Court.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக திருநெல்வேலி மாவட்டம் கொக்கிரகுளத்தில் இருக்கின்ற கோர்ட்டை ஹைகிரவுண்டுக்கு மாற்றுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எப்போது மேற்கொள்ளப்படும் ? விரைவிலே முடிவுக்கு வந்து நல்ல கட்டிடங்களில் நீதிமன்றங்கள் நடைபெற வைப்பதற்கு இந்த அரசு முன் வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This is a phased programme. For each year a sum of Rs. 5 lakhs is allotted for the construction of works. The construction of the necessary works will be undertaken because the proposal has been accepted in principle.

சென்னை மத்திய சிறையில் கைதி இறப்பு.

*533 வினு—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மத்திய சிறையில் 1977 ஆகஸ்டு மாதத்தில் பார்னபாஸ் என்ற கைதி இறந்துவிட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR:

(a) Lifer convict No. 7930, Barnabas confined in Central Prison, Madras died on 30th July 1977.

(b) Lifer convict No. 7930 Barnabas was admitted in Central Prison, Madras on 9th July 1973. He was undergoing treatment for stomach pain in the prison hospital from 21st July 1977 to 26th July 1977. He was sent to the Government General Hospital, Madras on 27th July 1977 for treatment as advised by the Prison Medical Officer. Inspite of treatment given to him, the convict died on 30th July 1977 at 4-20 a.m.

(துணை வினு இல்லை)

ஜவகர் உயர்நிலைப்பள்ளி, மேட்டூர்

*534 வினு—திரு. சு. பாலன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மேட்டூர் கருமலைக்கூடல் ஜவகர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றம் அவர் குற்றவாளி என்று தீர்ப்பு அளித்திருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர் தொடர்ந்து தலைமை ஆசிரியராக பணியாற்றிக்கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இவ்வாறான தகவல் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. பாலன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்ற பணத்தையும் மற்ற நிதிகளையும் அவர் கையாடல் செய்ததுபற்றிய குற்றமும், மற்றும் பல குற்றங்களும் அவர்மீது சுமத்தப்பட்டு அவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர் எந்தத் தேதியில் குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1-11-1967 முதல் 21-2-1968 வரை ஊழியர்களுக்கு அகவிலைப்படி அரசிடமிருந்து மானியமாகப் பெறப்பட்டும் அதை ஆசிரியர்

வைப்புத் தொகையில் செலுத்தாமல் வெகு நாட்களாக கையிருப்பில் வைத்திருந்தது. தொகை வழங்கப்படாமல் பின்னர் நீண்ட நாட்களுக்கு பின் வழங்கியது. இந்த ஆணையை எதிர்த்து திரு நடேசன் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். உயர்நீதி மன்றம் இந்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது. இதற்குப் பிறகு திரு. நடேசன் அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியர் பதவியை மட்டும் வகித்து வருகிறார். இவர்மீது வேறு கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டதாகவோ அதன்மீது நீதிமன்றம் குற்றவாளியென தீர்ப்பளித்துள்ளதாகவோ இதுவரை தகவல் ஏதும் பெறப்படவில்லையென சங்ககிரி மாவட்ட கல்வி அலுவலர் கூறியுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்தி வகுப்புகள்.

*535 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உயர்நிலைப்பள்ளிகளில் மாலைநேர இந்தி வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) நடப்புக் கல்வி ஆண்டில் உயர்நிலைப்பள்ளிகளில் பள்ளி நேரத்திற்குப் பின் இந்தி வகுப்புகள் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*536 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நமது மாநிலத்தில் மீண்டும் பள்ளிகளில் இந்தி வகுப்புகளை நடத்துவது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசுக்கு ஏதேனும் குறிப்பு அனுப்பியுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாட்டில் மீண்டும் உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி நேரத்திற்குப் பின் மாலை நேர இந்தி வகுப்புகள் நடத்தும் திட்டத்திற்காக நடப்புக் கல்வி ஆண்டில் ரூ. 5 இலட்சம் **மானியம் வழங்க ஒப்பளித்துள்ளது.**

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே மாலை நேரத்திலே இந்தி வகுப்புக்கள் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இதைப் போன்று தென் மாநிலங்களைச் சேர்ந்த, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியை வடமாநிலங்களில் இவ்வாறு மாலை நேர வகுப்புகளில் நடத்த வேண்டும் என்று இந்த அரசு எந்த மாநிலத்தையாவது கோரியுள்ளதா? அப்படி நடத்தப் படவேண்டுமென்று மத்திய அரசாங்கத்தின் மூலம் இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறதா? இந்த நான்கு மொழிகளிலே ஏதாவது ஒரு மொழியாவது வடமாநிலங்களிலே இவ்வாறு மாலை நேரங்களிலே கற்பிக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இந்த ஆலோசனை, மும்மொழித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த அரசு மும்மொழித் திட்டத்தை ஏற்கவில்லையென்பதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடைமுறைப்படுத்திய இரு மொழித் திட்டத்தை ஆதரிக்கிறது என்பதும் அந்த அடிப்படையிலே செயல்படுகிற இந்த அரசு மத்திய அரசுக்கு அப்படிப்பட்ட ஆலோசனையைச் சொல்வதற்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, புதிய அரசும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைப்பிடித்த இருமொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் தெளிவாக்கியிருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள், முன்னால் பிரதமர் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்த இருமொழிக் கொள்கைக்கு மாறாக எவ்வகையிலேனும், எக்காலத்திலாவது இந்திய துணைக் கண்டத்தில், தமிழகம் உட்பட இந்தி கொண்டு வரப்படும் என்று பேசியிருக்கிறார்கள். தமிழகத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் நடைமுறைப்படுத்திய இரு மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த அரசு எந்த வகையிலே செயல்படும் என்பதை அறிவிக்க முன்வருமா?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் நேற்றைய தினம் கோவையில் பேசும்பொழுதுகூட இந்தியை நாங்கள் திணிக்க மாட்டோம் என்ற உறுதியை மீண்டும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே நாம் தேவையற்ற சந்தேகங்களைக் கிளப்பிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இப்பொழுது உருவாகவில்லை. பேரறிஞர் அண்ணா

[1978 மார்ச் 13

அவர்களின் இருமொழித் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றுமா
என்பதற்கான உறுதிமொழியை எங்களிடம் கேட்க உறுப்பினரவர்
கள் விரும்புகிறார்கள். மக்களிடத்திலே அந்த உறுதி மொழியைக்
கொடுத்து வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடித்திருக்கிறோம்.
நிச்சயமாக மக்களுக்குச் சொன்ன உறுதிமொழியை நிறைவேற்று
வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே,
இந்த மாலை நேர இந்தி வகுப்புகள் எந்த ஆண்டில் அனுமதிக்கப்
பட்டது ? எந்தெந்தப் பள்ளிகளில் இந்த வகுப்புகளை நடத்த முன்
வந்திருக்கிறார்கள் ? அரசுப் பள்ளிகளில் இந்த வகுப்பு
களை நடத்துகிறார்களா ? அப்படி நடத்துவதற்கு அரசு ஏதேனும்
அவர்களுக்குத் தனியாக ஆணை பிறப்பித்திருக்கிறதா ? அல்லது
தனியார் பள்ளிகளில் மட்டும் நடத்துகிறார்களா ? அப்படி நடத்
துவதை இந்த அரசாங்கம் அனுமதிக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை கேள்விகள் கேட்
கிறீர்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
தனிக்கேள்வி போட்டால் விவரங்களைச் சொல்லலாம்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த
அரசினுடைய மொழிக்கொள்கை இருமொழிக்கொள்கை என்று
சொல்லிக்கொண்டு இருக்கிறது. ஆனால் இந்தியாவில் இந்தி கண்டிப்
பாக ஒருகாலத்தில் வந்துதான் தீரும் என்று சிலர் சொல்லக்கூடிய
நிலைமை இருக்கிறது. அதை எதிர்ப்பதற்கு இந்த அரசு என்ன
நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
சண்டை வருவதற்கு முன் என்ன செய்து கொள்ளப் போகிறீர்
கள் என்று கேட்பதுபோல் இருக்கிறது. வரும்பொழுது பார்த்துக்
கொள்வோம்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சரவர்கள், இந்தியப் பிரதமர் இந்தி கட்டாயமாகத் திணிக்
கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்கிறார்
கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அதே கோவையிலே,
ஆங்கிலம் நூற்றுக்கு இரண்டு பேரால்கூட உணர முடியாமல்
இருக்கிறது, இந்திதான் பெரும்பாலான மக்கள் உணரக்கூடிய
நிலை இருக்கிறது, அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனத்தில்
உள்ள பதினேழு மொழிகளில் ஆங்கிலம் இடம் பெறவில்லை.
ஆகவே, ஒரு காலத்திலே இந்தியாவிற்கு இணைப்பு மொழி தேவை
என்று சொல்லும் நேரத்தில் அது ஆங்கிலமாக இருக்க முடியாது,
இந்தியாகத்தான் இருக்க முடியும் என்ற கருத்துப்பட

978 மார்ச் 13]

பிரதமர் மொரார்ஜி தேசாய் பேசியிருக்கிறார்கள்.
ஆகவே, என்னதான் உறுதி மொழி கொடுத்திருந்தா
லும் இப்படிப்பட்ட பேச்சுக்களைப் பார்க்கிற பொழுது கட்டாய
மாக இந்தி இணைப்பு மொழியாக வந்துவிடுமோ என்ற நிலை
ஏற்படுகிறது. ஆகவே, இந்திய அரசியல் சாசனத்தில் ஆங்கிலம்
தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்கும் வகையில் அதைத்
திருத்துவதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
ஆங்கிலம் அரசியல் சாசனத்தில் ஒரு மொழியாக ஏற்றுக்கொள்ளப்
பட வேண்டுமென்ற கருத்தை எங்களுடைய கட்சி ஆதரித்து வரு
கிறது என்பதை முதலில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
பிரதமர் இந்தி மொழி திணிப்பு இராது என்று சொல்கிறார்கள்.
ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்களின் இருமொழித் திட்டத்தை
அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நான் இங்கு சொல்ல
வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புலவர் கோவிந்தன் அவர்
கள் மிகவும் வளர்ந்துவிட்டிருக்கிறார்கள். ஒலிபெருக்கியைக்
கொஞ்சம் தூக்கி வைத்துப் பேச வேண்டும். அவர்கள் பேசுவது
கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். கொஞ்சம் பார்த்துப் பேசு
மாறு கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவரவர்களே, ஆங்
கிலம் இந்திய அரசியல் சாசனத்தில் இடம் பெற வேண்டுமென்
பதை இந்தக் கட்சியும் அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று
அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்றுக்கொண்டால் மட்டும்
போதாது. அதற்கான வழி செய்வதற்கு, ஆங்கிலம் தொடர்ந்து
இருக்க வேண்டுமென்ற அளவில் இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம்
போட்டு அரசியல் சாசனத்தில் திருத்தம் வருவதற்கு வழி செய்ய
நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
ஆங்கிலம்தான் இணைப்பு மொழியாக இருக்க வேண்டுமென்ற
கருத்தை நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வரு
கிறோம். அதை அரசியல் சாசனத்திலேயும் இடம் பெறச் செய்ய
வேண்டுமென்பதிலும் நாங்கள் எங்களுடைய கருத்தைத் தெரி
வித்துக் கொண்டு வருகிறோம். இணைப்பு மொழி என்று மட்டு
மல்லாமல், ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு
சமூகமும் இந்த நாட்டிலே இருக்கிறது என்பதையும் அடிப்படை
யில் நாங்கள் சொல்லி வருகிறோம். ஆகவே, அதற்கான முயற்சி
களை பல்வேறு கட்டங்களில் இந்த அரசு எடுக்கும் என்பதை
மட் தென் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் விரும்பினால், இந்தி படிப்பதற்கு தனியார் பள்ளிகளில் அந்த மொழியைக் கற்றுக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைத் தனியார் பள்ளிகள் நடத்த விரும்பினால் அரசு அதற்கு வேண்டிய சலுகைகளைக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசு எந்தவிதமான சலுகைகளையும் அதற்காகத் தராது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்தெந்த மாநிலங்களில் இருமொழித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, மும்மொழித் திட்டத்தின் கீழ் வட நாட்டிலேயிருக்கும் மாநிலங்கள் தென்னாட்டு மொழி ஏதாவது ஒன்றைப் படிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய அடிப்படை கருத்து. ஆனால் நடைமுறையிலே நாம் பார்க்கிறபொழுது இந்தி பேசுகின்ற மாநிலங்களில் மும்மொழித் திட்டம் என்பதற்குப் பதிலாக ஒரு மொழித் திட்டம்தான் இன்றைக்கு நடைமுறையில் அமுலில் இருந்து வருகிறது என்பதையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அதை எடுத்துக் கூறியதையும் இங்கே எடுத்துக் கூறி அதைவிட இரு மொழித் திட்டம் சிறப்பானது என்பதைச் சொல்லி அங்கே மும்மொழித் திட்டத்திற்கு போதுமான ஆதரவு இல்லாமல் தான் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மொழியானாலும் சரி, முடிவானாலும் சரி, திணிக்கப்பட்டால் கலகம் நிச்சயமாக வரும். எனவே, திணிக்கப்படாமல் பல்வேறு கலைகளை நாம் பயில முன்வருகிற நிலையில், அதேபோல் மொழிகளையும், இந்தி மொழி, ரஷ்யன் போன்ற மொழிகளைப் பயிலத்தயார் என்று நாம் கூறுகின்றபொழுது அதற்கான உதவி செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர்வர்களே, இருமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிற அரசு அதற்கான உதவிகளைச் செய்ய இயலாது.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் சட்டத்திலே 14 மொழிகள் தேசிய மொழிகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருந்தும், இந்தி மொழி மட்டும் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, ஏன் தமிழகத்

தில் திணிக்கிறார்கள்? அது கடைசியிலே இந்தியைக் கட்டாயமாக ஆக்க வேண்டுமென்ற அடிப்படையில்தானா என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கட்டாயப் படுத்தப்படவில்லையென்பதும், அது திணிக்கப்படவில்லை என்பதும், திணிக்கப்படமாட்டாது என்கின்ற உறுதிமொழிகளைத் தந்திருக்கிறார்கள் என்ற சில உண்மைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தியப் பேரரசு மும்மொழி திட்டத்தின்கீழ் இந்தியைப் பயில வேண்டுமென்று சொல்வதைப் போல், வட மாநிலங்களிலே, இருக்கிற எல்லா மாவட்டங்களிலும் தமிழை மும்மொழித் திட்டத்தின்கீழ் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தமிழக அரசால் வலியுறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைச் சொன்னாலே, பிறகு அவர்கள் சொல்வதை நடத்த வேண்டுமென்ற நிலைமை ஏற்படும் என்பதை மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரவர்களுடைய கவனத்தி திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள்.

*537 வினா.—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை நகரம், கிழக்கு சட்ட மன்றத் தொகுதியில் எவ்வளவு குடிசைவாழ் மக்கள் உள்ளார்கள்?

(ஆ) அந்த மக்களுக்கு குடிநீர், நடைபாதை, விளக்கு, போன்ற வசதிகள் செய்து கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) 5,823.

(ஆ) கீழே கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் வழங்க திட்டமிட்டு வேலைகள் நடந்து வருகின்றன:

வேலையின் பெயர்.	திட்டமிட்டுள்ள செலவு. (ரூ. இலட்சத்தில்)
சாலை வசதிக்கு	5.17
குடிநீர் வசதிக்கு	4.40
கழிப்பிடங்கள் மற்றும் சாக்கடை வசதிக்கு.	6.03
தெரு விளக்கு	0.27

[1978 மார்ச் 13

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் என் தொகுதிக்கு வந்து, சில குடிசைப் பகுதிகளை அவரே பார்வையிட்டபொழுது, சுகாதாரமும், குடி தண்ணீர் வசதியும் இல்லாத நிலையை நேரில் கண்டார், சில உத்தரவுகளையும் போட்டார். கோவை நகராட்சி இந்த விஷயத்தில் கவனக் குறைவாகச் செல்வதும், மோசமான சுகாதார நிலை இருப்பதும், பல பகுதிகளிலே தெரு விளக்குகள் கூட போடப்படாமல் இருப்பதும் அமைச்சருக்குத் தெரியுமா? இப்பொழுது பணக்கணக்கைச் சொன்னார். நடைமுறையிலே, துரிதமாக நடவடிக்கை எடுக்க அவர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இவைகளையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், விரைவிலே அவைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அரசு கண்காணிக்கும்.

திரு. கே. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, கோவை கிழக்குக்கு அருகில் உள்ளது எனது தொண்டாமுத்தூர் தொகுதி. அந்தத் தொகுதியிலே உள்ள ரத்தினபுரி கணபதி கண்ணப்ப நகர், மணியகாரம் பாளையம், இராமகிருஷ்ணாபுரம் கவுண்டனபாளையம், சங்கனூர், சாயப்பா காலனி ஆகிய இன்னும் நூற்றுக்கணக்கான ஊர்களில் இப்படி மின் விளக்கு எரிவதில்லை. பல பகுதிகளில் போக்குவரத்துக்கள் சரியாக இல்லையென்று என்னிடம் நூற்றுக்கணக்கான மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு தெருவில் 200 விளக்குகள் இருந்தால் இரண்டு தான் எரிகின்றன. மற்ற 18 எரிவதில்லை. ஆகவே இது விஷயத்தில் துரிதமாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் தனது தொகுதியின்மேல் தனி அக்கறை எடுத்துக் கொண்டு தனிக் கேள்வி போட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 9-20]

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே கோவை நகராட்சியை ஒட்டியுள்ள சிங்காநல்லூரில் உள்ள குடிசைப் பகுதிகள் மொத்தம் எவ்வளவு? அதை மாற்றி அமைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு உள்ளதா? அந்தப் பகுதியில் முக்கியமாக விளக்கு வசதி, ரோடு வசதி மற்ற வசதிகளை செய்து கொடுக்க ஏற்பாடு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தனியாக கேள்வி போடவும் அல்லது தனியாக வந்து கேட்கவும்.

ரெயில்வே செஸ் திட்டத்தின்கீழ் தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள்.

* 538 வினா—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம் திருவிடமருதூர் ஒன்றியத்தில் ரெயில்வே செஸ் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் எவை எவை?

(ஆ) ரெயில்வே செஸ் திட்டத்தின் கீழ் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் —

(1) பருத்திச்சேரி—ஆரியச்சேரி சாலையின் முடிகொண்டான் ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(2) திருவிடமருதூர்—தண்டான்தோட்டம் சாலையில் நாட்டார் ஆற்றில் பாலம் கட்டுதல்.

(3) விட்டலூர் கிராமச்சாலையில் நாட்டார் ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(4) திருவிடமருதூர்—தண்டான்தோட்டம் சாலை கீர்த்திருமணறு ஆற்றில் ஒரு பாலம் கட்டுதல்.

(ஆ) ரெயில்வே செஸ் நிதியிலிருந்து இவ்வொன்றியத்திற்கு ரூ. 3,45,140 அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் ஒன்றியத்தில் இரயில்வே செஸ் திட்டத்தின்கீழ் கட்டப்படவிருக்கிற விட்டலூர் பாலம் போக்குவரத்துக் குறைவாக உள்ளதும், பொதுமக்களுக்கு அதிகம் பயன்படாத ஒரு இடத்தில் கட்டப்பட இருக்கின்றது. அதை மாற்றி பொதுமக்களுக்குப் பயன்படும் இடத்திலே அதே விட்டலூர் ஊராட்சியிலே கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

—

[1978 மார்ச் 13

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக எந்த ஆண்டு இந்தக் கோரிக்கை தரப்பட்டது. இது வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா, ஏனென்ருல் என்னுடைய தொகுதியில் 20 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் எந்த விதமான வேலைகளும் நடைபெறவில்லை. எனவே, இந்தப் பாலம் எந்த ஆண்டிலே கட்டி முடிக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இரயில்வே செஸ் தஞ்சை மாவட்டத்திற்கு 1,28,63,029 ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நடப்பாண்டில் கட்டி முடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த இரயில்வே செஸ் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும்தாஞ அல்லது அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நிதியிலிருந்து செலவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கோவை, சேலம், தஞ்சை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பழைய காலத்திலே மாவட்டக் குழுவில் இருப்புப் பாதைகளைப் பராமரிப்பதற்கு இந்த நிதி இருந்து வருகிறது. ஆகவே மற்ற மாவட்டங்களைப் பற்றி இந்தப் பிரச்சினை இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இரயில்வே செஸ் நிதியின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே இந்த நிதியை முன்னுரிமைக் கொடுத்து சிலவற்றிற்குப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருக்கிருர்கள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கும், தெருவிளக்குகள் போடுவதற்கும், தொடக்கப்பள்ளி கட்டுவதற்கும், குழந்தைகள் மகப்பேறு இல்லங்கள் கட்டுவதற்கும், மருந்தகங்கள் கட்டுவதற்கும், இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் என்று வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே இப்போது இணைப்புச் சாலை கட்டுவது என்கிற வகையில் இந்த நிதி பயன்படுத்தப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே ஒவ்வொரு ஆண்டும் இந்த ரெயில்வே செஸ் மூலம் எல்லா ஒன்றியங்களுக்கும் நிதி கிடைக்கிறதா ? அப்படியாளுல், சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு ஏன் வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன் ?

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. இது கையிலே உள்ள இருப்பைச் செலவு செய்ய வேண்டிய நிலை. ஆகவே இந்த நிதி வளருவதற்கு வழியில்லை.

*539 வினு—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா : சிக்கலில் இருந்து சிக்கப்பத்து, ஒரத்தூர், அகர ஒரத்தூர், கலசம்பாடி, ஆய்மழை, தன்னிலப்பாடி, ஒட்டத்தட்டை, வழியாக சோழ வித்தியாபுரம் செல்லும் சாலையை சீர்செய்ய ரயில்வே செஸ் நிதியிலிருந்து ரூபாய் 1·2 இலட்சம் அனுமதிக்கப்பட்டும், வேலைகள் ஆரம்பிக்காமலிருக்கக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்த வேலையை எடுத்துக்கொள்ள பொதுமக்களிடமிருந்தும் ஊராட்சி தலைவர்களிடமிருந்தும் ஆட்சேபனைகள் வந்தன. ஆகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் குழு ஏற்பட்ட பிறகு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே இந்தக் கேள்வி கேட்டதே இந்த முக்கியமான பிரச்சினை வரும் என்பதிலேதான். இது முக்கியமான ரோடு. பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனை வரவில்லை. அதிகாரிகளும் பிளான் போட்டு எங்கிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டார்கள். பஞ்சாயத்து, ஒன்றியத் தலைவர்களும் முன்பிருந்த தலைவர்கள்— பெருவாரியான பஞ்சாயத்துத் தலைவர்கள் அதிகாரிகள் போட்ட திட்டத்தின்படி, ஆரம்பிக்க வேண்டும் என்று எழுத்து மூலம் அனுமதித்து விட்டார்கள். ஆனல் அந்த யூனியன் சேர்மன், எக்ஸ் சேர்மன், தன்னுடைய ஊரிலே இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று தனக்கு இருக்கிற 'வீட்டோ' பவர் மூலம், மெஜாரிட்டி பஞ்சாயத்துத் தலைவர்களும் ஓ.கே. கொடுத்துவிட்டபிறகு இது தடைபட்டிருக்கிறது என்ற தகவல் அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எல்லா ஊராட்சித் தலைவர்களும் ஒத்துக்கொள்ளவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. ஆனல் 66 விழுக்காடு தலைவர்களுடைய ஒப்புதல் பெற்ருல், இந்த வேலையை ஆரம்பித்துவிடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தீர்மானம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த இரண்டாவது கேள்வி நான் போடுவதற்குக் காரணம், அதற்கு எல்லா ஊராட்சித் தலைவர்களும் சம்மதிக்கவில்லை, மெஜாரிட்டி ஊராட்சித் தலைவர்கள சம்மதித்தால் அந்த வேலையை துவங்கலாம் என்று சொல்லி அங்கேயிருந்து ரிப்போட் வந்துள்ளது உண்மையை மறைக்கக்கூடிய முறையில் இருக்கிறது என்று கருதுகிறேன். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அரசாங்கம் நிதி ஒதுக்கி, திட்டம் போட்டு, பிறகு, பஞ்சாயத்துத் தலைவர்களை கன்சல்ட் செய்கிறபோது ஏகமனதாக ஒப்புதல் இருக்க வேண்டும், அப்போது தான் வேலையை ஆரம்பிக்கலாம், ஒருவர் எதிர்த்தால்கூட நிறுத்தி வைக்க வேண்டும் என்று சொல்லி அரசாங்கத்திலிருந்து ஏதேனும் உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி ஒன்றும் உத்தரவு அனுப்பப்படவில்லை. அதனால் தான் 66 சதவீதம் ஊராட்சித் தலைவர்கள் சம்மதித்தால் அந்த வேலையைத் துவக்கலாம் என்று முடிவுக்கு வந்து இருக்கிறார்கள்.

நகராட்சிகள் திரையரங்குகள் நடத்தல்.

* 540. வினா—திரு. துரை கலியமூர்த்தி

திரு. என். கிட்டப்பா

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளுக்கு சினிமா தியேட்டர் கட்ட லைசென்ஸ் கொடுக்கப்படுமா ? அரசு மானியத் தொகை வழங்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) நகராட்சி மன்றங்களே சினிமா தியேட்டர்களை கட்டி நடத்தி வருகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த நகராட்சிகளில் இவ்விதம் நடைபெறுகிறது ?

(ஈ) எந்தெந்த நகராட்சிகள் அரசுக்கு இவ்வித கோரிக்கை விடுத்துள்ளன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம். தேவைப்படும்போது லைசென்ஸ் கொடுக்கப்படும். மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை.

(ஆ) ஆம்.

(இ) தஞ்சாவூர் நகராட்சி, மேட்டூர் நகரியம், குற்றாலம் நகரியம.

(ஈ) தற்போது இது சம்பந்தமாக கோரிக்கை ஏதும் நகராட்சிகளிடமிருந்து வரவில்லை.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, சிதம்பரம் நகராட்சியில் இந்த மாதிரி சினிமாத் தியேட்டரை ஆரம்பிப்பதற்கான திட்டத்தை வைத்துள்ளார்கள். அதற்கு அரசாங்கம் மானியத் தொகை அளித்தால் அந்த வேலையைத் துவங்க ஏதுவாக இருக்கும். ஆகவே, அரசாங்கம் மானியம் கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மானியம் வழங்கும் உத்தேசம் இல்லை. ஆனால் அப்படி தியேட்டர் கட்டவேண்டும் என்று முடிவு எடுத்து, அரசுக்கு அனுப்பப் படுமானால், நிலைமையை உத்தேசித்து பரிசீலித்து முடிவுக்கு வரலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நகராட்சிகளே சினிமாத் தியேட்டர்களை நடத்தும் அடிப்படையில் தஞ்சாவூர் போன்ற நகராட்சிகள் அத்தகைய திரைப்பட அரங்குகளை நடத்தி வருவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தஞ்சாவூரில் நடத்தப்பட்டு வரும் சினிமாத் தியேட்டர் லாபகரமாக நடைபெறுகிறதா, அப்படி லாபகரமாக நடந்தால் ஏனைய இடங்களிலும் அத்தகைய கோரிக்கைகள் வரும்போது, அவற்றை உடனடியாகப் பரிசீலித்து, அவைகளுக்குச் சலுகைகள் அளிக்கும் அடிப்படையில் அரசு ஏதேனும் திட்டம் வைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தஞ்சாவூர் நகராட்சி நடத்துகிற திரையரங்கு லாபகரமாக நடந்து வருகிறது. மற்ற இடங்களில் இருந்து அதுபற்றி கோரிக்கைகள் வருமானால், அது பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பார்வையாளர் பகுதியில் இருந்து சட்டமன்ற நிகழ்ச்சிகளை போட்டோ எடுப்பதாகத் தெரிகிறது. சற்று முன் ப்ளாஷ் லைட் அடித்தது. அது பற்றி விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடனடியாக அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

[1978 மார்ச் 13

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள் மேலேயிருந்து புகைப் படம் எடுத்ததாகச் சொன்னார்கள். அவர்களைப் போட்டோ எடுத்து விட்டு, எங்களை விட்டு விட்டார்களா, அல்லது எங்களை எடுத்து விட்டு அவர்களை விட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுக்கலாமா என்பது அவர் கேள்வி. அப்படி எடுக்கக்கூடாது. அப்படி நடந்து இருந்தால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, நகராட்சிகள் நடத்தும் சினிமா தியேட்டர்கள் லாபகரமாக நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, எல்லா சினிமா அரங்குகளையும் அரசாங்கமே ஏற்று, வருமானம் பற்றாக்குறையில் இருக்கும் நகர பஞ்சாயத்துகளுக்கு அவைகளை நடத்தும் உரிமைகளை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மூலக் கேள்வியோடு இது தொடர்பற்றது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சில நகராட்சி மன்றங்கள், கார்ப்பரேஷன் கூட — அந்த சினிமாத் தியேட்டர்களை உருவாக்கி தங்கள் வருமானத்தைப் பெருக்கி கொள்ளலாம். அவர்களே கூட படங்கள் எடுக்கலாம். அதற்கு பணம் வேண்டும் என்று சொன்னால், சில தனிப்பட்டவர்கள் எந்த அடிப்படையில் யாரிடமிருந்து கடன் வாங்குகிறார்களோ அந்த மாதிரி பெறுவதற்கு அவர்களுக்கும் அனுமதி அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சி மன்றங்கள் தியேட்டர்களை நடத்துவதற்கு ஏதேனும் அனுமதி கேட்டால் அதைக் கொடுப்பது பற்றித்தான் மூலக் கேள்வி. தனிப்பட்டவர்கள் கேட்டால் கொடுக்கலாம் கொடுக்கக்கூடாது என்பது பற்றி அந்தத் துறை அமைச்சர் முடிவு செய்ய வேண்டும்.

[முற்பகல் 9—30]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, நிதி வசதி இருக்குமானால் அவர்கள் சினிமா தியேட்டர் கட்ட வேண்டுமென்று அனுமதி கேட்டால், அரசாங்கம் அதற்கு அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கோரிக்கை எழுப்பப்பட்டால், நிலைமைகளை ஒட்டி, பரிசீலித்து முடிவு, செய்யப்படும்.

1978 மார்ச் 13]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, வசதியுள்ள பேரூராட்சிகள்-சினிமாத் தியேட்டர் இல்லாமல் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்-தியேட்டர் கட்ட அனுமதி கேட்டால், அனுமதி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மக்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பது தெரியவில்லை. வசதியுள்ள பேரூராட்சிகள் இப்படி ஒரு கோரிக்கையை எழுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்திலிருந்து நடத்தப்படும் கலையரங்கு சீசன் காலத்தில் தான் பயன்படுகிறது. மற்ற நாட்களில் நகரியத்திற்கு வருமானம் கிடைக்கின்ற வகையில் வேறு எதற்காவது பயன் படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குற்றாலம் நகரியத்தில் அமைந்திருப்பது திரையரங்கு அல்ல ; அது ஒரு டவுன் ஹால். நாடகங்கள் போடவும், சில சமயங்களில் திரைப்படங்கள் காண்பிக்கவும் அது பயன்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது, திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் கேள்வி நேரத்தின்போது ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள். பின்னால் இருக்கிற கண்ணாடிக்கதவு மூடப்படும் போது வந்த ஒளிதான் அவர்கள் குறிப்பிட்டது. அவர்கள் மன்ற நடவடிக்கையை மட்டும்தான் கவனித்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைத்திருந்தேன். ஆனால், அங்கே, மேலே என்ன நடக்கிறது என்றும் உன்னிப்பாக கவனித்து சொன்னதற்கு நன்றி.

இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் மருந்துகள் வழங்கல்.

* 541 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் சாதாரணமாக வழங்கி வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட மருந்து வகைகள் ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம் ? அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தமாதிரி ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரியில் விலை அதிகமுள்ள விசேஷ மருந்துகள்கிடைக்கவில்லை என்று பிரச்னை மறுபடியும் மறுபடியும் வந்து கொண்டிருக்கிறது. இதற்கு முன்பு ஒரு தடவை அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது, அடிக்கடி மருந்துகள் கிடைக்கவில்லை என்று சொல்லப் படுகின்ற இடங்களுக்கு உத்தரவு போட்டு, 'சப்ஸ்டிடியூட்' மருந்து கூட அல்ல, 'ஒரிஜினல்' மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும் தொடர்ந்து இந்த புகார் வந்திருப்பதை தடுத்து, ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளில் இருக்கும் நோயாளிகளுக்கு நிலைமைக்கேற்ப அந்த நல்ல மருந்துகளைக் கொடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது ? அதைக் கண்காணிக்கும் முறையில் அடிக்கடி கண்காணிப்பு நடவடிக்கை ஏதாவது மேற்கொள்ள மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்களுக்கு கேள்வியைச் சுருக்கமாகப் போட முடியும். எல்லாக் கேள்வி களுக்குமே நீண்டநேரம் எடுத்துக்கொள்கிறீர்கள். கேள்வியைச் சுருக்கமாகப் 'போட' உங்களுக்குத் தெரியும் ; சுருக்கமாகப் போடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபற்றிய புகார் எந்தெந்த இடத்தில் எப்படி நடக்கிறது என்று சொன்னால் நான் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்கி றேன். கண்காணிப்பு என்ற முறையில் நானே அநேகமாக எல்லா மருத்துவ மனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் சென்று, 'சர்பிரைஸ் செக்' செய்து கொண்டிருக்கிறேன் என்பதை அவர்கள் அறிவார்கள்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, எந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்குச் சென்றாலும், 'சப்ஸ்டிடியூட்' மருந்துதான் கொடுக்கிறார்கள் ; டாக்டர்கள் 'பிரிஸ்கிரைப்' செய்யும் மருந்து இல்லை என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அப்படி ஒரு புகார் இருந்தது உண்மைதான். புகார் எந்த இடத்திலிருந்து வந்ததோ உடனடியாக அங்கு சென்று, உரிய நடவடிக்கை எடுத்து, அந்த குறை தீர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, ஐயனாவரத்தில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் தவறான ஊசி மருந்து கொடுக்கப் பட்டு, அதன் காரணமாக பலர் இறந்து விட்டதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா ? அது அமைச்சரவர்களின் கவ னத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். மூலக் கேள்வி ஆர்டினரி பிரிவு மருந்துகளை ஸ்பெஷலிஸ்ட் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளதா என்பது பற்றியது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஈ. எஸ். ஐ. மருத்துவ மனைகளுக்கு தானே நேரில் சென்று பலமுறை பார்த்ததாகச் சொன்னார்கள். அவர்கள் அமைச்சராகச் சென்றார்களா அல்லது மாறு வேடத்தில் சென்றார்களா ? மாறுவேடத்தில் சென்றால் பல தவறுகள் தெரிய வரும் ; அமைச்சராகச் சென்றால் ஒன்றும் தெரியாது.

(பதில் இல்லை.)

தொழிலாளர் நல நிதி.

* 542 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர் நல நிதிக்கு 1974-ம் ஆண்டு முதல், வருடத்திற்கு ஒவ்வொரு தொழிலாளர்களிடமும் ஒரு ரூபாய் பிடிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அந்நிதி எவ்வளவு சேர்ந்துள்ளது ?

(இ) என்ன நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் . (அ) 1973 ஆம் ஆண்டு முதல் தொழிலாளர்களிடமிருந்து ரூபாய் ஒன்றும், தொழிலதிபர்களிடமிருந்து ரூபாய் இரண்டும் தொழிலாளர் நல நிதியின் ஆண்டு சந்தாவாக வசூலிக்கப்படுகிறது.

(ஆ) 31—12—77 நாளன்று அந்நிதியில் இருந்த தொகை எழுபத்து ஏழு லட்சம் எழுபதாயிரத்து நானூற்று எண்பத் தொன்று ரூபாய்.

(இ) பத்து இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் நடத் தப்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் தொழிலாளருக்கென நான்கு படிப்பகங்கள் திறக்கப் பட்டுள்ளன. சென்னை திரு. வி. க. நகரில் தொழிலாளர்களின் குடும்பப் பெண்களால் பதிவு செய்யப்பட்டு நடத்தப்படும் தொழிலாளர் மகளிர் மன்றத்திற்கு மானியம் அளிக்கப்படுகிறது.

[1978 மார்ச் 13

நல நிதி வாரியத்திற்கென பல மாடிக் கட்டிடம் ஒன்று சென்னையில் கட்டப்பட்டு வருகிறது. தாம்பரத்திலுள்ள காசநோய் மருத்துவ மனையில் 26 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டினை தொழிலாளர்களின் உபயோகத்திற்காக இவ்வாரியம் கட்டியுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அதாவது ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை சம்பந்தமாக தொழிலாளர்களிடமிருந்து பணம் பிடிக்கப்படுகிறது. அது, தனியார் கம்பெனிகளால் உரிய காலத்தில் ஈ.எஸ்.ஐ. தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்படாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா? அப்படி உரிய காலத்தில் அனுப்பாமல் தாமதப்படுத்துவதன் காரணத்தால் தொழிலாளர்கள் லீவு எடுத்துச் செல்கின்ற காலங்களில் அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைப்பது மிக்க கடினமாக இருக்கிறதே. இதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி தொழிலாளர் நல நிதியைப் பொறுத்தது, அதாவது லேபர் வெல்பேர் பண்டை பொறுத்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தமது பதிலில் ரூ. 77 இலட்சம் ரூபாய்க்கு மேல் இந்த நிதியில் சேர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். மிகவும் நல்லது. ஆனால் கோவை போன்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கும் படியான ஒரு பிரதேசத்தில் அவர்களுடைய கேளிக்கைக்காக அல்லது இதர பொழுது போக்குக்காக சிறந்த சில நடவடிக்கைகள் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். இது வரைக்கும் செய்யாமல் இருக்கின்றதே, அது சரிதானா? இனிமேலாவது சீக்கிரத்தில் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார்கள். அவர்கள் மூலம் அந்தக் குழுவில் கூட்டம் நடக்கும்போது பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டால் அதன் மீது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நல நிதிக்கு ரூ. 77 இலட்சம் சேர்ந்துள்ளது. அது இன்னின்ன நலப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னென்ன பணிகள் செய்யவேண்டும் என்று சொல்வது அமைச்சர் அவர்கள் மட்டும்

1978 மார்ச் 13]

தானா. இல்லையென்றால் அதைச் சொல்வதற்கு ஏதாவது குழு இருக்கின்றதா? அப்படி இருந்தால் அந்தக் குழுவில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அதில் யார் யார் இருக்கிறார்கள் என்ற தகவலையும் இதுவரை அந்தக் குழு என்ன செய்திருக்கிறது என்ற தகவலையும் இதில் பங்கு கொண்ட உறுப்பினர்களுக்கு நாளை மறுதினம் அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலக் கல்வி.

* 543 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தொழிலாளர் நலன் பற்றி கல்வி நிலையம் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பணிகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இந்நிலையத்தின பணிகள் பின்வருமாறு :

(1) தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளுக்கு முறையாக பயிற்சி அளிப்பது ;

(2) தொழிலாளர் தலைவர்களுக்கு தொழிலாளர் சட்டங்கள், தொழிலதிபர்—தொழிலாளர் உறவுகள் குறித்து பயிற்சி அளித்தல் ;

(3) தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டங்கள், தொழிலாளர் குறித்த பொருளாதாரவியல் கூறுகள் குறித்து அவர்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் ஒரு வருடத்திற்கு பயிற்சி அளித்தல், மற்றும்

(4) தொழிலாளர்கள் தங்களுக்குள்ள உரிமைகளை உணர்ந்து கொள்ள தொழிலாளர் நல சட்டங்கள் விதிகள் பற்றி தொகுத்து தமிழில் வெளியிடுதல்.

[1978 மார்ச் 13

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு விசேஷப் பயிற்சி.

* 544 வினா— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போக்குவரத்துக் கழகங்களின ஊழியர்களுக்கு விசேஷ பயிற்சியளிப்பதற்காக பயிற்சி நிலையமொன்றை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) போக்குவரததுக் கழகங்களின் ஊழியாகளுக்குச் சிலகுறிப்பிட்ட துறைகளில் பயிற்சி அளிப்பதற்காக அரசினால் "இன்ஸ்டிடியூட் ஆப் ரோட் டிரான்ஸ்போர்ட்" என்ற பயிற்சி நிலையம் சென்னையில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு :

(1) சாலைப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அந்நிறுவனங்களின் தொழில் நுட்ப வளர்ச்சி, போக்குவரவு, நிர்வாகம் மற்றும் கணக்கு ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பது ;

(2) சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் திறமையாக செயல்பட சாலைப் போக்குவரத்துத் துறையில் நடைமுறை மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வது ;

(3) சாலைப் போக்குவரத்தில் தற்கால முன்னேற்றங்கள் பற்றியும் அவைகளின் தற்போதைய பிரச்சனைகள் பற்றியும் விவாதித்து அறிந்துகொள்ள கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடத்துவது ;

(4) மாநில போக்குவரத்து நிறுவனங்களுடன் கலந்து தக்க ஆலோசனை கூறுவது ;

(5) மாநில போக்குவரத்து நிறுவனங்கள் வாங்கிய பல்வகை உபரி உறுப்புகளின் தன்மைகளை பரிசோதித்து தருதல் ;

(6) போக்குவரத்து நடைமுறை நூல் தயாரித்தலும், மற்றும் திட்டமிட்ட அளவு மற்றும் தேவையான வரையறைகளை நிர்ணயித்தலும் ;

(7) போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான தொலைநோக்குத் திட்டங்களை தயாரித்தல்.

1978 மார்ச் 13]

இராமநாதபுரம் மாவட்டத்தில் பேருந்து வழித்தடங்கள்

*545 வினா—திரு. ர. ஜெபமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முகவை மாவட்டத்தில் அரசாங்க பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த தடங்களை ரத்து செய்து விட்டு தனியார் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கி இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மம்சாபுரத்திலிருந்து கடல்குடி வரை சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து வழித் தடத்தை 8—5—1973 அன்று பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக் கொண்டது. மேற்கூறிய ஊர்களில் பேருந்துகளை பழுது பார்ப்பதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால் மேற்படி வழித்தடத்தின் அனுமதியை திருப்பி ஒப்புவித்துவிட்டு சில மாற்றங்கள் செய்து இராஜபாளையத்திலிருந்து மம்சாபுரம் வழியாக நாகலாபுரம் வரை பேருந்து விடுவதற்கான அனுமதியை கோரினர். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. போக்குவரத்துக் கழகமும் 1—5—1974 முதல் 20—9—1977 வரை தற்காலிக அனுமதியின் பேரில் பேருந்து ஒன்றினை இயக்கி வந்தனர். தற்காலிக அனுமதியை மாற்றி முறைப் படுத்துவதற்கான விண்ணப்பங்கள் 1939-ம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கோரப் பட்டன. அவ்வாறு வந்த விண்ணப்பங்களில் சாத்தூரைச் சேர்ந்த ஸ்ரீனிவாசா டிரான்ஸ்போர்ட்டைச் சேர்ந்த தனிப்பட்ட உரிமையாளர் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தைவிட அதிக மதிப்பெண்கள் பெற்றதினால், இராமநாதபுர மாவட்டப் போக்குவரத்து அதிகாரி மேற்கூறிய தனி உரிமையாளருக்கு மேற்படி வழித் தடத்தில் பேருந்து விடுவதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். இந்த அனுமதியின் பேரில் 20—9—1977 முதல் மேற்கூறிய தனியாரின் பேருந்து ஒன்று மேற்படி வழித் தடத்தில் இயங்கி வருகிறது. மாவட்டப் போக்குவரத்து அதிகாரியின் முடிவினை எதிர்த்து பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மாநில போக்குவரத்து மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் (State Transport Appellate Tribunal) வழக்கு ஒன்றினை தொடர்ந்துள்ளது. இவ்வழக்கு தீர்ப்பாயத்தின் ஆய்வில் உள்ளது.

[முற்பகல் 9-40].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் அமைச்சர்களுக்கு நினைவுபடுத்தவேண்டியது என் கடமை.

[1978 மார்ச் 13

'Questions requiring long statements or statistics shall not be starred.'

அதனால் அதிகமாக இருந்தால் அச்சடித்து டேபிள்மீது வைத்து விடலாம். அப்போது துணைக் கேள்விகள் கேட்க சுலபமாயிருக்கும்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள கிராமங்களில் பஸ்கள் இல்லை என்ற குறையைப் போக்க மினிபஸ்கள் விடுவதற்கு ஒரு திட்டமிருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மினிபஸ் விடுகிற திட்டம் தற்போது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரையில் நிலக்கோட்டை தாலூகாவில் அமல்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறை மூலம் வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு தாலூகாக்களில் அமல்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து, ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த முறையை அமல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : அரசு போக்குவரத்துக் கழகங்கள் மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு வருமானமும் மக்களுக்குத்தான் கிடைக்கிறது. மார்க் என்ற அடிப்படையில் மோட்டார் ஆய்வாளர்கள் பணிமனை இருக்க வேண்டும் என்று ஒரு கண்டிஷன் போடுகிறார்கள், அதற்கு தனியாக ஒரு மார்க் கிடைக்கிறது. மார்க்ஸ் அதிகம் கிடைக்க சிலருக்கு சில அதிகாரிகள் உதவிசெய்கிறார்கள். அவர்களும் மார்க் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? பணிமனை இருக்கவேண்டும் என்ற ஒரு கண்டிஷன் இருக்கிறது. ஆகவே அங்கு பணிமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மார்க்ஸ் என்ற நிலைமை மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகளில் இருந்துவருகிறது; அதன்படி நடைமுறையில் இருந்துவருகிறது. ஆனால் பாண்டியன் போக்குவரத்து கழகம் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் பணிமனை ஒன்றை விரைவில் நிறுவி இந்தக்குறையைப் போக்க ஏற்பாடு செய்துவருகிறது.

திரு. எம். எம், ஏ. ரசாக் : புதிதாக மினிபஸ் விடுகிறபோது பஸ்களுக்காக சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு கடன் கொடுக்க அரசு முன்வருமா ?

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மினிபஸ் போன்ற பேருந்துகளை விடுபவர்கள் பொதுவாக வசதிபடைத்தவர்களாக இருக்கிற காரணத்தால் அந்த முறையை அரசு நடைமுறைக்குக் கொண்டுவராது. இருந்தபோதிலும், டெக்னோக்ராட்ஸ்' என்று சொல்லப்படுகிற பொறியியல் துறை வல்லுனர்களாக இருக்கிற படித்த வேலையில்லாமலிருக்கிற பட்டதாரிகள் முன் வருகிறபோது அவர்களுக்கு இந்த உதவியைச் செய்ய நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு பரிந்துரை செய்ய அரசு சிந்தித்து வருகிறது.

திரு. து. ராமசாமி : மினி பஸ் விடுகிற திட்டத்தை கோவை மாவட்டத்திற்கு விஸ்தரிக்க அரசாங்கத்திடம் திட்டம் உண்டா ? நடப்பாண்டில் அது விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் விடுகின்ற விஷயத்தில் தற்போது, தென் ஆற்காடு மாவட்டத்திலும், செங்கை மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் மட்டுமே அரசு இந்த மினி பஸ் விடுகின்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, தனியார் துறைக்கு லைசென்ஸ் வழங்குகிற கேள்வியையொட்டிய கேள்வி இது. இன்று தனியார் துறையில் இருக்கும் நிறுவனங்களையும் பஸ்களையும் அரசே வெகு விரைவில் எடுத்துக்கொள்ளும் என்பது தான் அரசின் கொள்கையா அல்லது இப்போதுள்ள முறையே நீடித்துக் கொண்டிருக்குமா என்பதைப்பற்றி ஆலோசித்து, வெகுவிரைவில் எல்லா பேருந்துகளும் அரசு எடுத்துக்கொள்வது பற்றிய கொள்கையை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கொள்கை அளவிலும், நடைமுறையிலும் தனியார் துறையிலும் இருக்கின்ற பேருந்துகளை படிப்படியாக அரசு நாட்டுடமையாக்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை. கலியமூர்த்தி : இந்த மினி பஸ்கள் விடுவதில் தனிப்பட்டவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அரசே அதை ஏற்று நடத்த முன்வருவார்களா ? மேலும் மார்க் சிஸ்டத்தைப் பற்றி கூறினார்கள். இந்த மார்க் சிஸ்டத்தை மாற்றும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மினி பஸ் விடுவதில் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். மினி பஸ்கள் விடுவது என்பது கிராமப்புற

மக்கள் பயன்பெறவேண்டும் என்ற கருத்தில், கிராம மக்களின் நலனைக் கருதி, சிறிய பேருந்துகளை, நகர்புறங்களோடு கிராமப் புறங்களோடு இணைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மினி பஸ்கள் விடுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்காகத்தான் இதற்கு 50 ரூபாய் டாக்ஸ் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் நஷ்டம் வராது என்று நம்புகிறேன்.

(திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எழுந்திருந்தார்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முகவை மாவட்டத்தைப் பற்றியது. ஆகவே தொடர்புடைய கேள்வியாக கேளுங்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்த மினி பஸ்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால்தான் நான் கேள்வி கேட்க முன்வந்தேன் என்பதை தலைவர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இந்த மினி பஸ்கள் விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது போதாது, மேலும் பல தாலூகாக்களில் இது தேவைப்படுகிறது, டிமாண்ட் அதிகமாக இருக்கிறது. இதை அனுமதித்தால், நமக்கும் வருமானம் வரும், மக்களுக்கும் வசதியாக இருக்கும். ஆகவே இதை விஸ்தரிப்பதற்கு அரசு முன் வருமா? அரசாங்கத்திற்கும் இதனால் நன்மை உண்டாகும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு வட்டங்களில் இப்போது நடைமுறையில் இருந்து வருகிறதாயினும், ஏனைய இடங்களுக்கு இந்த மினி பஸ் விடுவது பற்றி ஆய்வு நடந்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. ஓ. சுப்பிரமணியம் அவர்கள் எழுந்திருந்தார்......)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு கட்சிக்கும் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். அதே நேரத்தில் எல்லோருக்கும் கொடுக்க நேரம் இருக்காது. சில நேரங்களில் தவறியும் இருக்கலாம். அடுத்த கேள்வி............

பால்வள நிறுவன ஊழியர்களது ஊதியங்கள்.

546. வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுகு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு பால்வள கார்ப்பரேஷன் ஊழியர்களுக்கு வேலைத் தன்மை அடிப்படையில் புதிய ஊதிய விகிதம் நிர்ணயிக்கும்படி அரசுக்கு, மதுரை பால்பண்ணை ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனரா?

(ஆ) ஆமெனில், அதன் பேரில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பால்வள நிறுவன ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம், அரசாங்க ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியத்தை தழுவியுள்ளது. ஆகவே, தற்போது தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு தனியாக ஊதியத்தை மாற்றி அமைக்கத் தேவை இல்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள்.

* 547. வினா—திரு கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆற்றுத் தண்ணீரை வீணாக்காமல் சிறு அணைக்கட்டுகள் கட்டும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஆறுகளின் குறுக்கே கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம். மலைக் குன்றுகளின் வட்டார முன்னேற்றத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் ஓடும் ஆறுகளின் குறுக்கே 13 சிறு அணைகள் கட்டும் திட்டம் 1975–76ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த அணைக்கட்டுகள் அனைத்தும் நீலகிரி பகுதியில் ஓடுகிற காட்டாறுகளின் குறுக்கே கட்டப்படுகின்றன. இக் காட்டாறுகள் பல பகுதிகளிலிருந்து ஓடிவந்து முடிவில் மோயார் ஆறு அல்லது பவானி ஆற்றில் கலக்கின்றன. மலைப்பகுதியில் உள்ள சிறிய பள்ளத்தாக்குகளிலிருந்து பெருகி வருகின்ற பெரும்பாலான இந்த காட்டாறுகளுக்கு குறிப்பிட்ட பெயர் எதுவும் இல்லை.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சிறிய சிறிய காட்டாறுகள் ஓடுகின்ற இடங்களில் அந்தந்த கிராமங்களுக்கு பயன்படும் வகையில் அந்த ஆற்றிலிருந்து நீரை ஏற்றி அங்குள்ள மக்களுக்கு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 13 செக்டாம்-களுக்கான திட்டங்கள் இருப்பதாக ஏற்கெனவே என் பதிலில் சொன்னேன். அவைகள் எல்லாம் அந்தந்த

[1978 மார்ச் 13

கிராமங்களிலுள்ள மக்களுக்காக பலன் அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான், அந்தந்த கிராமங்களில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன என்பதை உச்சி கவுடர் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் இத்தகைய 13 திட்டங் களை கட்டயிருப்பதாகத் குறிப்பிட்டார்கள். அதிலே மாண்பு மிகு உறுப்பினர் உச்சி கவுடர் சேர்ந்த தொகுதியாகிய கூடலூர் தொகுதியில் எந்தெந்த இடங்களில் கட்டியிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நண்பர் கிட்டப்பா அவர்கள் ஜாதி கூடாது என்று சொல்பவர் ஆயிற்றே ? எனவே, உச்சி கவுடர் என்று ஜாதி அடிப்படையில் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மத சம்பந்தப்பட்ட கேள்வியை இப்போது இங்கே கேட்க வேண்டாம். மூலக் கேள்வியை யொட்டி ஏதாவது ஒழுங்குப்பிரச்னை இருந்தால் எழுப்புங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவே : பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியில், கூடலூர் கிராமம் மாங்குளி அருகில் க.க. எண் 313/1-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 20,000 ரூபாய் செலவிலும், நெல்லியாளாம் கிராமம் க.ச. எண் 444-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 60,000 ரூபாய் செலவிலும், பாடந் துரை கிராமம் க.ச. எண் 13-ல் ஒரு தடுப்பு அணைக்கட்டுதல் 22,000 ரூபாய் செலவிலும், பாடந்துரை கிராமம் க.ச. எண் 71-ல் மற்றும் 72-ல் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 42,000 ரூபாய் செல விலும், எருமாடு கிராமம் மூப்புகன்னூர் அருகில் ஒரு தடுப்பு அணை கட்டுதல் 50,000 ரூபாய் செலவிலும் ஆகும்.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களின் மூலமாக கோவை மாவட்டத்தில் ஏதாவது பகுதி கள் பயன் பெறுகின்றனவா ? அப்படிப் பெறுமானால், அதிலே காங்கேயம் பகுதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தது கோவை மாவட்டத்தைப் பொறுத்து தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தது, அதனால், தாமரைக்கனி, தயவுசெய்து அது சம்பந்தமான கேள்வியைப் போடவும்.

1978 மார்ச் 13]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின் போது பால் வாங்கும் விலையை அதிகரித்திருப்பதாகக் கூறினர்கள். அதைப்போலவே பாலை விற்கின்றவர்களிடமும் அதிக விலை கொடுத்து வாங்குவதற்கான உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை.

திரு. வி. கெ. சின்னசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பவானி ஆற்றில் கலக்கின்ற ஆற்றின் குறுக்கே அணைகட்டுவதாக உச்சி கவுடர் கேள்விக்குப் பதில் அளித்தார்கள். பவானி ஆற்றிற்கு வருகிற பவானிசாகர் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுவதால், பவானிசாகர் அணைக்கு வருகிற தண்ணீர் இதனுல் பாதிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆறுகளிலே இருந்து வரக்கூடிய தண்ணீர் மோயாறு அல்லது பவானிசாகர் ஆறுகளில் கலந்து கொண்டிருந் தன. இந்த ஆறுகளிலெல்லாம் இப்பொழுது செக் டாம்ஸ் போடுதவன்மூலமாக இந்த சிறு அணை கட்டுவதன் மூலமாக இந்த நீலகிரி மாவட்டத்திலுள்ள பல பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவது என்ற முறையிலே இந்தத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. பவானியைப் பொறுத்த வரையில், கலந்து கொண் டிருந்த ஆறுகளில் அணைகட்டுவதால் எங்கே பவானி ஆற்றுக்குத் தண்ணீர் வராமல் போய்விடுமோ என்கிற அச்சம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் முதுமலை பாரஸ்ட் ஏரியாவில், அந்தப் பகுதியில் நீர்வீழ்ச்சி போகிறது. நாங்கள் கமிட்டிக்குப் போகும் போது பார்த்திருக்கிறோம். அந்தப் பகுதியில் அணை கட்டினுல், அந்த இடங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். இந்த நீர்ப்பாசன வசதி ஏற்படவில்லை என்றாலும், அதிலே மின்விசை உற்பத்தியை யாவது செய்யலாம். ஆகவே , அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சிறு பாசனத் திட்டத்தைப் பொறுத்தது. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பெரிய அணையைப் பற்றிக் கேட்கிறர். ஆகவே, இது பொதுப்பணித் துறை வேலை. அவர்களைக் கேட்டால் உண்மையிலேயே நல்ல பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. ஒழுங்குப் பிரச்சினை

ஓர் உறுப்பினரைப் பார்க்க வந்த அரசிதழ் பதிவுபெறு அலுவலர் யூனியனைச் சேர்ந்த சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுவது பற்றி

திரு. மு. அம்பிகாபதி : ஓர் ஒழுங்குப் பிரச்சினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதி காலையில் 11 மணிக்கு என்னைப் பார்ப்பதற்காக என்.ஜி. ஓ. யூனியனைச் சேர்ந்த ரவிசெல்வம் , ஜெகந்நாதன் ஆகியோர் வந்திருக்கிறார்கள். அவர்களைக் கோட்டைக் காவலர்கள் கைது செய்து வெளியே நிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மீது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து திரு. அம்பிகாபதி அவர்கள் எந்த அடிப்படையில் இதைப் பற்றி சொல்லுகிறார்கள் என்று சொல்ல வேண்டும். விதியின் அடிப்படையில் எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். இதை ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்ப வேண்டாம். எழுதி அனுப்புங்கள்.

திரு மு. அம்பிகாபதி : இது என்னுடைய உரிமைப் பிரச்சினை. என்னைப் பார்க்க வந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எழுத்து மூலம் எழுதி அனுப்புங்கள். உட்காருங்கள்.

(3) அமைச்சரின் அறிக்கை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பணியிறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர்களாக நியமிப்பது குறித்து

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. பாலகிருஷ்ணன், செ. சிவசாமி, கிருஷ்ணன், எம். அண்ணாமலை, என். பழனிவேல் ஆகிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் பேரவையின் விதி 42-ன் கீழ் எழுப்பியுள்ள அவசரமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பிரச்சினையைக் குறித்து விவாதிக்க அவையை ஒத்தி வைக்ககோரிய அந்தத் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டு மறு

படியும் அது பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க விதி 82-ன் கீழ் இந்த அறிக்கையை நான் அளிக்கிறேன்.

1-4-70-க்குப் பின்னர் அரசினர் 'பி' பிரிவு உயர்நிலைப்பள்ளியில் நேரிடையாக இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்கள் முதல் நிலை தமிழாசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் அரசாணை எண்கள் 325-கல்வி, நாள் 25-2-72, 1724, கல்வி நாள் 28-10-72 மற்றும் 63-கல்வி, நாள் 17-1-74-இன்படி முதல்நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து முதல்நிலைத் தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கத் தேவையில்லையென்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல்நிலைத் தமிழாசிரியர் பணியில் பதவி உயர்வு அளிக்கப்பட்ட தேதியில் (முதல்நிலை தமிழாசிரியர் பணியில்) வரன்முறை செய்யலாமென்று அரசு குறிப்பாணை எண். 5471/பி2/76-9 கல்வி நாள் 17-8-76 ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணையின்படி இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை தமிழாசிரியர் பணிக்கு மாற்றி பதவி உயர்வு அளிக்கப்பட்ட முதல் நிலைத் தமிழாசிரியர்கள் யாவருக்கும் பணி வரன் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது.

ஸ்தல ஸ்தாபன நிலை விதிகளில் (Statutory Rules) வயது வரம்பு இல்லாததால் 1-4-70 க்குப் பின் ஒரு சில 30 வயதிற்கு மேற்பட்டவர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியில் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வாசிரியர்களை இரண்டாம் நிலைத தமிழாசிரியர் பணியில் 21-3-74-இல் தான் வரன்முறை செய்யப்பட வேண்டுமென்று அரசாணை எண். 765 கல்வி, நாள் 16-5-74 ல் ஆணையிடப்பட்டது. ஆனால் இவ்வாசிரியர்கள் 16 பத்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி 25-2-71, 28-10-73 மற்றும் 1-1-74 ஆகிய தேதிகளில், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு, பதவி உயர்வு அளிக்கப்பட்டு விட்டனர்.

எனவே இவ்வாசிரியர்களை முதல்நிலைத் தமிழாசிரியர் பணியில் அரசு குறிப்பாணை எண். 5471/பி2/76-9 கல்வி நாள் 17-8-76-ன்படி இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் பணியிலிருந்து மாற்றி முதல் நிலைத் தமிழாசிரியர் பணிக்கு பதவி உயர்வு, அளிக்கப்பட்ட தேதியில் வரன் முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது சரியல்ல என்றும் 21-3-74 லிருந்து தான் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்றும் அரசு குறிப்பாணை எண். 89091/பி2-77-2 கல்வி, நாள் 27-9-77-இல் ஆணையிடப்பட்டது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 மார்ச் 13

ஆகையால் அரசு குறிப்பாணை எண். 89021/பி2/77-2 கல்வி, நாள் 27-9-77-ன்படி வயது வரம்பு மீறியவர்களுக்கு ஏற் கனவே பணி வரன்முறை செய்து பிறப்பித்த ஆணையை ரத்து செய்தும், அவர்கட்கு வழங்கப்பட்ட அதிகஉயர்வுத்தொகையை பிடித்தம் செய்யும்படி ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப் பட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது. பள்ளிக் கல்வி இயக்கு னரின் செயல் முறைகள் ந. க. எண். 196976/பி1/72, நாள் 6-10-72-ல் கண்டுள்ள உத்திரவின்படி 40 வயது வரை வரம்பு விதியினைத் தளர்த்துவது, ஆரம்பப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் பி. டி. பட்டதாரிகளானாலும் முதல்நிலைத் தமிழா சிரியர் பதவிக்குத் தகுதி பெற்றிருந்தாலும் ஐந்து ஆண்டுகள் ஆசிரியப் பணி புரிந்திருந்தால் அவர்கள் மற்றவைகளில் அப் பதவிக்குத் தகுதியுடையவரெனத் தேர்வாணைக் குழுவினால்கருதப் பட்டு தேர்ந்து எடுக்கப்படுவதற்கு மட்டுமே பொருந்தும். தமிழாசிரியர்களைத் பொதுப்பணித் தேர்வாணைக் குழுவினால் நேரி டையாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மட்டுமே மேற்படி ஆணை பொருந்துமே தவிர முதல்நிலைத் தமிழாசிரியராக பதவி உயர்வு பெற இவ் விதி பொருந்தாது.

பள்ளிக் கல்வி இயக்குனரின் பரிந்துரையை ஏற்று 'பி' பிரிவில் பணியாற்றி பதவி இறக்கத்திற்குள்ளான இப்பதின்மூன்று தமிழாசி ரியர்களையும் இராமநாதபுரம் மாவட்ட 'ஏ' பிரிவு பள்ளிகளில் தமிழாசிரியர்களாக நியமனம் செய்ய 10-3-78 நாளிட்ட அரசாணை எண். 456-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

[முற்பகல் 10-00]

4. கவனஈர்ப்பு.

கோவை, பல்லடம் அவிநாசி பகுதிகளில் பார்த்தீனியம் என்ற நச்சுச் செடியால் மனிதர்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்படும் தீங்கு குறித்து.

திரு. எஸ். என். பழனிச்சாமி: தலைவர் அவர்களே, கோவை நகரத்தைச்சுற்றி விஷச் செடி பெருகி தற்போது பூக்கள் தோன்ற ஆரம்பித்த நிலையில் கோவை, பல்லடம், அவிநாசி பகுதிகளுக்கு. அதன் விஷக்காற்று பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே பார்த்தீனியம் என்னும் நச்சுச்செடி மனிதர்களுக்கும் பயிர்களுக் கும் தீங்கு விளைவிக்கக்கூடியது. கோவை, சிங்காநல்லூர் ஆகிய நகராட்சி பகுதிகளிலும் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை வட் டங்களிலும் அதிகமாகக் காணப்படுகிறது. மற்ற மாவட்டங் களில் இங்குமங்குமாகக் காணப்படுகிறது. இந்தச் செடியின் விதைகள் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தானி யங்களுடன் இந்தியாவுக்குள் வந்திருக்கக்கூடும் என்று கருதப் படுகிறது.

காற்று, நீர், பறவைகள், கால்நடைகள் மற்றும் வாகனங்கள் மூலமாக எளிதில் இச்செடியின் விதைகள் பரவுகின்றன. இச்செடி மனிதர்கள்மீதோ பிராணிகள் மீதோ பட்டால்தான் தோலில் அழற்சியை ஏற்படுத்துகிறது. ஆனால் இச்செடி யிலிருந்து விஷக்காற்று ஏதும் உண்டாவதில்லை.

கட்டுப்படுத்தும் முறைகள் :—

செடிகளை கையால் பிடுங்கி அப்புறப்படுத்துவதுதான், சாதா ரணமாக கையாளப்படும் முறையென்றாலும் இந்தச் செடி உட லில் பட்டால் அழற்சி ஏற்படுத்துவதால் இது சரியான முறை ஆகாது. உழுவதாலோ மற்றபடி மற்ற பொறிகளாலோ செடி களைச் சாய்த்தாலும் கைகளாலேயே அப்புறப்படுத்துவது அவசிய மாகிறது. இந்த முறையும் சிறந்ததல்ல. செடிகளை அப் படியே நெருப்புக்கு இரையாக்கினாலும் இதை குறுகிய காலத் திற்கே கட்டுப்படுத்த முடிகிறது. இச்செடி இளம்பயிராக இருக் கும்போதே விதைகள் உற்பத்தியாவதாலும் சிறிதளவு ஈரம் கிடைத்தவுடன் கீழே விழுந்துள்ள விதைகள் முளைத்து விடுவதா லும் இச்செடிகளை அழிக்கும் வேலை, தொடர்ந்து செய்ய வேண்டி யிருக்கிறது. இதனால் அதிக காலமும் பணமும் செலவாகி றது.

உயிரியல் முறையால் அகற்றுதல் (Biological Control) :

1. அபிஸ் டாபி (Ahpis tabce)

2. ஸ்யூடோகோக்கஸ் எஸ். பி. பி. (Pseudoc.ccus Spp)

3. டெட்ராவியூக்யூஸ், எஸ். பி. பி. (Tetraviuchus Spp-mites) ஆகிய மூன்று நுண் பூச்சியினங்கள் இச்செடியை 20 நாட்களில் அழிப்பதில் வல்லவையெனக் கருதப்படுகிறது. ஆனால் இவை ''பார்த்தீயனத்தை'' மட்டுமல்லாமல் ஏனைய பயிர்களையும் அழித்து விடுமாகையால் இம்முறை ஏற்றதல்ல.

இராசாயனக் கட்டுப்பாடு—

2-4 டி. என்ற இராசயன மருந்து 20 லிருந்து 25 நாள் வளர்ந்த செடிகளை அழிப்பதில் திறமை வாய்ந்தது. ஒரு ஹெக்டேருக்கு 2 கி. கி. மருந்தை 600 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு மருந்து கிரையம் ரூ. 60-ம் தெளிப்புச் செலவாக ரூ. 20-ம் ஆகும்.

அன்சார் 529 சி என்ற மருந்தில் 4 லிட்டரை 600 லிட்டர் நீரில் கரைத்து ஒரு ஹெக்டேருக்கு தெளிக்கலாம். இம்மருந்து இந்தச் செடியின் எல்லா நிலைகளிலும் உபயோகிக்கத்தக்கது. இம்முறையினால் ஒரு ஹெக்டேருக்கு மருந்துக்கு ரூ. 120-ம் தெளிப்புக்கு ரூ. 20-ம் ஆகும்.

வேளாண்மைத் துறை 1976-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் கோவை நகராட்சி ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைத் திரட்டி "பார்த்தீனியம் ஒழிப்பு இயக்கம" ஒன்றை நடத்தியது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும் இதில் பங்கேற்றார். வேளாண்மைத் துறை இதன் மூலம் இந்நச்சுச் செடியைப் பற்றி பொது மக்களை எச்சரித்தது.

அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய பயிர் பாதுகாப்பு மாநாட்டில் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. இந்தச் செடியை அழிக்க மத்திய அரசு உதவ ஒப்புக் கொண்டது. இதன்படி இச் செடியை ஒழிக்க உபயோகிக்கும் மருந்தின் பாதி விலையையும் தெளிக்கும் வகைக்காகும் செலவுக்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் மூன்றையும் மத்திய அரசு அளிக்கும்.

திரு. எஸ். என். பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த பார்த்தீனியம் விஷச் செடியினால் பாதிக்கப்பட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அரசு என்ன என்ன உதவி செய்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். இந்தச் செடியை அழிக்க மத்திய அரசு உதவி செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த மருந்துக்காக மருந்து விலையில் பாதியையும் தெளிக்கும் வகைக்காகும் செலவுக்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 3-ஐயும் மத்திய அரசு அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : இன்றைய தினம் அஜண்டாவிலே 44-வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் முதலிலே எடுக்கப்படுகிறது என்று வந்திருக்கிறது. அதற்கு மொத்தம் ஒரு மணி நேரம் என்றால் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத நிலைமை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே அனுமதிக்கிறேன். தங்களுடைய நல்ல கருத்துக்களை நல்ல ஆலோசனைகளைச் சொல்கிறபோது நேரத்தை அதற்குத் தகுந்தவாறு நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கிறேன். ஒரு கட்சிக்கு ஒருவர் வீதம் பேசுவதாகக் கொடுத்திருக்கிறார்கள். எவ்வளவு நேரம் திரு. உமாநாத் அவர்கள் பேசவேண்டுமோ அவர்கள் அரை மணி நேரத்திலே பேசுவதை 15 நிமிடத்திலும் பேசலாம், தாங்கள் பேசுங்கள், பேசுவதைப் பொறுத்து மற்றவைகளை எடுத்துக் கொள்ளலாம். எதிர்கட்சி தலைவருக்கும் தெரிவித்துக்கொள்றேன். முதலில் இதை எடுத்துமுடித்து விட்டு பிறகு மானியக் கோரிக்கைகளை 1½ மணி நேரம் வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால் இஸ்மாயில் கமிஷன் அறிக்கை பற்றி பின்னாலே எடுத்துக்கொள்வதாக இருக்கிறோம்.

ஆகவே, அதைப்பற்றிப் பேசாமல் இருந்தால் இந்த ஜெயில் மானியத்தை குறுகிய காலத்தில் முடித்து விடலாம், மானியக் கோரிக்கையை நிறைவேற்றி விடலாம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால் மாலையிலே வைத்துக் கொண்டால் நலமாக இருக்கும் என்ற எனது கோரிக்கையை விடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலையிலே என்று சொல்லிவிடுகிறோம், வேண்டுமென்றால் திரு. மார்க்கபந்து அவர்கள் வந்து விடுவார்கள், மற்ற உறுப்பினர்கள் வர இயலவில்லை. ஆகவே, பார்ப்போம், வேண்டுமென்ற நிலை இருந்தால் வைத்துக்கொள்வோம், அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நீங்கள் எல்லோரும் விரும்பினால் வைத்துக் கொள்ளலாம். ஆகவே, இப்பொழுது பேசும் பேச்சை வைத்து, எவ்வளவு நேரம் பேசலாம் என்று கணித்துப் பார்ப்போம்.

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIAR . Mr. Speaker, I move that . . . .

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, சட்ட அமைச்சரவர்கள் தமிழில் படித்தால் அனைவரும் புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிதாகப் பிரச்னையைக் கிளப்புகிறீர்கள். ஏற்கனவே பேசி முடிவெடுத்து ஒன்று. அவருக்கென்று தனி விதிவிலக்கு.

(5) அரசினர் தனித்தீர்மானம்

1977-ம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி நான்காவது திருத்த) சட்டமுன் வடிவினுல் செய்யக் கருதப்பட்டுள்ள திருத்தங் களுக்கு ஏற்பளித்தல்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Sir, I move :—

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of Article 368 thereof, proposed to be made by the Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, as passed by the two Houses of Parliament and the short title of which has been changed into 'The Constitution (Forty-third Amendment) Act, 1977'."

The said Bill provides for the omission of Articles 31-D, 32-A, 131-A, 144-A, 226-A and 228-A of the Constitution which were inserted by the Constitution (Forty-Second Amendment) Act, 1976. This Bill also provides for certain consequential amendments to Articles 145, 226, 228 and 366 of the Constitution.

The Constitution (Forty-second Amendment) Act, 1976, inserted various Articles in the Constitution to curtail, both directly and indirectly the jurisdiction of the Supreme Court and the High Courts to review the constitutionality of laws. Article 32-A barred the Surpreme Court from considering the constitutional validity of any State law in proceedings for the enforcement of fundamental rights unless the constitutional validity of any Central law was also in issue in such proceedings. Article 131-A gave to the Supreme Court exclusive jurisdiction to decide the constitutional validity of a Central law and thus deprived the High Courts of their jurisdiction in respect of the same. Article 144-A provided that the minimum number of Judges of the Supreme Court who shall sit for the purpose of determining the constitutional validity of any Central law or State law shall be seven and required a special majority of two-thirds for the invalidation of such law. Article 226-A barred the High Courts from deciding the validity of any Central law and Article 228-A required that there should be a Bench of at least five Judges for determining the constitutional validity of any State law and prescribed a special majority for a judgment invalidating such a law.

It is considered that Articles 32-A, 131-A and 228-A cause hardship to persons living in distant parts in India. Further, Article 32-A would lead to multiplicity of proceedings as cases relating to the validity of a State law which could be disposed of by the Supreme Court itself, have to

be heard first by the High Court. The minimum number of Judges in every case wherein the Constitutional validity of a law is involved, however unsubstantial the challenge might be, results in valuable judicial time being lost in hearing and rejecting submissions that have no substance. The Supreme Court has also expressed in a case which came up before it, the hope that article 144-A would engage the prompt attention of Parliament and woud, be amended so as to leave to the court itself the duty to decide how large a Bench should decide any particular case.

[முற்பகல் 10-10]

We may take this opportunity to dwell upon the inconvenience resulting from the enactment of Article 144A which was introduced by the 42nd Amendment to the Constitution. That Article reads thus ;

"144—A. Special provisions as to disposal of questions relating to constitutional validity of laws :—(1) The minimum number of Judges of the Supreme Court who shall sit for the purpose of determining any question as to the constitutional validity of any Central law or State law shall be seven.

(2) A Central law or a State law shall not be delared to be constitutionally invalid by the Supreme Court unless a majority of not less than two thirds of the Judges sitting for the purpose of determining the question as to the constitutional validity of such law hold it to be constitutionally invalid."

The point raised in these appeals undoubtedly involve the determination of questions as to the constitutional validity of a State law but they are so utterly devoid of substance that Mr. Asoke Sen and Mr. Gokhale who appeared for the appellants could say nothing in support of their contentions beyond barely stating them. Were it not for the valiant, though vain, attempt of Mr. Gobind Das to pursue his points, the appeals would have taken lesser time to dispose of than for a Court of seven to assemble.

Article 13 (3) (*a*) of the Constitution defines "law" to include any Ordinance, Order, bye-law rule, regulation, notification, etc. having the force of law with the result that seven Judges of this Court may have to sit for determining any and every question as to the constitutional validity of even orders and notifications issued by the Government, which have the force of law. A Court which has large arrears to contend with has now to undertake an unnecessary burden by seven of its members

assembling to decide all sorts of constitutional questions, no matter what their weight or work. It is hoped that Art. 144A will engage the prompt attention of the Parliament so that it may, by general consensus, be so amended as to leave to the Court itself the duty to decide how large a Bench should decide any particular case.

It has, therefore, been proposed to omit Articles 32-A, 131-A, 144-A, 226-A and 228-A.

Article 31-D confers special power on Parliament to enact certain laws in respect of anti-national activities. It is considered that these powers of Parliament to make laws for dealing with anti-national activities and anti-national associations are of a sweeping nature and are capable of abuse. It has, therefore, been proposed to omit Article 31-D.

Under the proviso to clause (2) of Article 368 of the Constitution, any Bill containing amendment which seeks to make any change in the Articles specified in that proviso shall be ratified by the Legislatures of not less than one half of the States by resolutions to that effect passed by those Legislatures before the Bill making provision for such amendment is presented to the President for assent. As many of the amendments in the Constitution (Forty-fourth Amendment) Bill, 1977 seek to make changes in some of the Articles specified in clause (*b*) of the proviso to clause (2) of Article 368, the Bill has to be ratified by resolution by Legislatures of not less than one half of the States.

Sir, I commend the resolution for ratification by this House.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று, எங்களுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

42-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமாக இழைக்கப் பட்ட சில தவறுகளைச் சரி செய்கின்ற வகையில் 44-வது திருத்தம் கொண்டு வரப்பட்டதை நாமெல்லாம் அறிவோம். 42-வது சட்டத் திருத்தம் இந்த நாட்டிலே கொண்டு வரப்பட்டபொழுது என்ன சூழ்நிலையிருந்தது என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர். எல்லோரும் நன்ருக அறிவர். அது, பாராளுமன் றத்திலே யாராலும் எதிர்க்கப்பட முடியாமல் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டம். பாராளுமன்ற மேலவையிலே இரண்டு உறுப்பினர்கள்தான் அதனை எதிர்க்க

முடிந்தது. மாண்புமிகு உறுப்பினர்கள், தப்தாரியும், கிரிஷன் காந்த் இவர்கள் இரண்டு பேர்தான் இதற்கு எதிர்ப்பு தெரி வித்தார்களே தவிர, வேறு யாருமே எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

அந்த அளவு, குரல்வளை நெரிக்கப்பட்ட நேரத்திலே இந்தத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த நேரத்தில் எவ்வளவு பெரிய கொடுமைகளை இந்திய நாட்டு ஜனநாயகம் சந்தித்தது என்பதெல்லாம், இன்றைக்கு மறுக்க முடியாத வரலாற்று உண் மைகள். நம்மைப் பொறுத்தவரையில் சில அநீதிகளைச் சரிப் படுத்த வேண்டியிருக்கிறது.

ஒன்று 31 (டி). அதன் மூலமாக தனிப்பட்டவர்களுக்கு எதி ராகக் கூட திசை திருப்புகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கின்ற அடிப்படையிலே இந்த உரிமைகளுக்குத் தடை விதிக்கப்பட்டன. ஆர்ட்டிகிள் 14, 19-வது பிரிவிலேயும், ஆர்ட்டிகிள் 14ன் ஈக்குவாலிடி, என்ற உரிமைகளைப் பறிக்கக்கூடிய அளவிற்கு இந்தத் திருத்தங்கள் அமைந்திருந்தன. 31 (டி) அறவே ஒழிக்கப் பட்டது. மற்ற தீர்மானங்கள் உச்ச நீதி மன்றம் உயர்நீதி மன்றங்கள் ஆகியவற்றின் அதிகார வரம்பைக் குறைத்து நடை முறையிலே பல்வேறு சிக்கல்களை உருவாக்கி, எந்த அளவுக்கு நீதியை குலைக்க முடியுமோ, அவற்றை எல்லாம் திருத்த வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப் பட்டிருக்கின்றன. இருந்தாலும் இன்றைக்கு வந்திருக்கிற ஜனதா அரசாங்கம்கூட எல்லாவற்றையும் உள்ளடக்கி, ஒரு காம்ப்ரஹென்சிவ் பில்லாக, 42-வது சட்டத்தை மாற்றுவதற்கு இன்ெருரு திருத்தம் கொண்டு வரமுடியவில்லை. இதிலே ஏற் றுக் கொள்ளக்கூடிய ஒன்றிரண்டுதான் கொண்டு வரமுடியும் என்ற நிலை இருக்கிறது.

அதுவும் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்து அவர்களுடைய கான்சென்சஸ் அறிந்து, அதன் பிறகுதான் இதை முன்மொழிந் திருக்கிருர்கள்.

இன்னும் மாற்றவேண்டிய திருத்தங்கள் நிறைய இருக்கின் றன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்பு 'பெடரல் ரிபப்ளிக்' என்று இருக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானம் போட்டது. 'பெடரல்' அவசியம் இல்லை, 'யூனிடரி' என்று போட்டால் போதும் என்று சொல்லப்பட் டது. அவை எல்லாம் சரி செய்யப்பட்டு அந்தத் திருத்தங்கள் எல்லாம் இந்த மன்றத்திலே கொண்டு வரப்படவேண்டும்.

மாநிலத்தினுடைய உரிமைகளுக்காக குரல் கொடுத்தாலும் கூட அவை எல்லாம் ஒருமைப்பாட்டுக்கு விரோதம் என்று சொல் லுகிற நிலை இருக்கிறது. அதைப் போன்ற நிலைமையில், தமிழ்

நாடு தேசிய நீரோட்டத்திலே இருந்து விலகிப் போய்விட்டது
என்று சொல்லி, அந்த நீரோட்டத்திற்கு வாய்க்கால் வெட்டுவது
போல பல்வேறு அனுவசியமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டார்
கள்.

1975-லே இதே மன்றத்திலே சிக்கிம் பற்றிய தீர்மானம்
கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானம் கொண்டுவரப்
பட்ட நேரத்தில் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள்
மிக அருமையாக வாதாடினார்கள். முறையான ஜனநாயக
திசையில் நாடு போகிறது. இது மக்களாட்சிக்குக் கிடைத்தி
ருக்கிற வெற்றி என்றெல்லாம் பேசியிருக்கிறார். அப்படிப்
பேசியிருக்கிற தீர்மானத்தைக்கூட இன்றைக்கு சில பேர்கள்
எதிர்க்கக்கூடிய அளவுக்கு, 'மெர்ஜர்' என்று சொல்லக்கூடிய
அளவுக்கு போய்விட்டார்கள் என்று சொன்னால் அதை எல்லாம்
ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

ஆனால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை
நாம் ஏற்றுக் கொள்கிறோம். சிக்கிம் பற்றிய விவகாரத்திலே,
தீர்மானம் 'ரேட்டிபிகேஷனுக்கு' வந்தபோது எப்படி எல்லோரும்
ஏற்றுக்கொண்டார்களோ, அதே நிலைமையில்தான் இன்றைக்கு
44-வது திருத்த தீர்மானம் கொண்டுவரும்போது நாம் ஏற்றுக்
கொள்கிறோம்.

எல்லா உரிமைகளும் ஒடுக்கப்பட்டன. நீதி மன்றங்களின்
அதிகாரங்கள் நீக்கப்பட்டன. உயர்நீதி மன்றமாக இருந்தால்
அந்த மாநில சட்டங்களை மாத்திரம் தான் அவை பரிசீலிக்க
வேண்டும். Validity of law if it is passed by the State Legisla-
ture alone can be reviewed என்று கொண்டு வந்தார்கள். அந்த
மாநிலங்களின் சட்டமன்றங்கள் நிறைவேற்றிய சட்டங்களைத்
தான் உயர்நீதி மன்றங்கள் பரிசீலிக்க வேண்டும். மத்திய
சர்க்காரால் நிறைவேற்றப்படக்கூடிய எந்த சட்டத்தையும், அவை
செல்லாது என்று வாதிடுவதற்கு எந்த உயர்நீதி மன்றங்களுக்கும்
உரிமை கிடையாது என்று சொன்னார்கள்.

மத்திய அரசு சட்டங்களை சுப்ரீம் கோர்ட்டுதான் வாதாடலாம்
என்று திருத்தம் கொண்டு வந்தார்கள். நமக்கு உயர்நீதி மன்றம்
சென்னையில் இருக்கிறது. அங்கே நாம் வாதாடலாம். எந்த
சட்டத்தை நாம் எதிர்க்கவேண்டிய நிலை ஏற்பட்டாலும் டெல்லிக்
குத்தான் செல்லவேண்டும். டெல்லி என்ன அருகில் இருக்கிறதா?
வாதாடுவதற்கான அடிப்படை உரிமைகள் கூட இந்த நாட்டிலே
இருந்து நீக்கப்பட்டன.

சாதாரண மக்களால் டெல்லிக்கு போகமுடியுமா? பணம்
இருக்கிறதா? என்.ஜி. ஒக்களுக்கு கொடுக்கக்கூட பணம் கிடை
யாது, தாய்மார்கள் கட்டுவதற்கு சேலையில்லாமல் இருக்கிறார்கள்
என்று வாதாடக்கூடிய முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் இதனை
நன்றாக உணர்வார்கள். டெல்லிப்பட்டணம் செல்ல அதிகம்
செலவாகும் என்ற நிலையில் இயலாத நிலையில் அடிப்படை உரிமை
கள் மறுக்கப்பட்டன. அன்றையதினம் கூட எதிர்த்துக் குரல்
கொடுக்க முடியாத நிலைமை சில கட்சிகளுக்கு இருந்தன.
நல்லவேளையாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அந்த
நிலை இல்லை.

(பேரவைத் துணைத் தலைவர்)

இந்த அரசுக்கு ஒரு மணிமுடியாக இருக்கிற மாண்புமிகு
சட்ட அமைச்சர் அவர்கள் இதை எல்லாம் உணர்வார்கள். சில
பேர்களுக்கு அமைச்சராக இருந்தால்தான் மதிப்பு வரும். ஆனால்
இவரால் இந்த அமைச்சரவைக்கு மதிப்பு. அவர் நீதி மன்றத்தில்
நீதிபதியாக இருந்தார். அட்வகேட் ஜெனரலாக இருந்தவர்.
இந்த அமைச்சரவைக்கே அவர் மணிமுடி என்று தான் கருது
கிறோம்; அவர் நீடித்து இருக்கவேண்டும் என்று கருது
கிறேன். அவர் நன்றாகச் சொன்னார்கள். இந்த நாடே ஒரு
'பிரிசன் அவுசாக' ஆக்கப்பட்டது என்று சொன்னார்கள்.
இந்த அளவுக்கு சொல்லக்கூடிய எண்ணம் வேறு யாருக்கு வரும்?
ஜூடிசியல் மைன்ட் உள்ளவர்களுக்குத் தான் வரும். மற்றவர்
களுக்கு மைன்டே இல்லையா என்று கேட்கக்கூடாது. I don t mind

(முற்பகல் 10-20)

இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி அல்ல பிரச்னை.

ஆனாலும் கூட, நம்முடைய சட்டமன்றப் இப்போது இந்தத்
தீர்மானத்தை நிறைவேற்றக் கொண்டு வந்து இருக்கிறது. இப்படி
பட்ட சட்டத்தால் இந்தியா முழுவதுப் சிறைக்கூடமாக மாற்றப்
படும் சூழநிலை இருந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் கொண்டு
வரப்பட்ட சட்டம் இது, அப்படிப்பட்ட இருண்ட நேரத்தில்
கொண்டுவரப்பட்ட சட்டம் இது. இதை மாற்றவேண்டுப் என்று
சொல்லும்போது எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். காங்
கிரஸ் கட்சிகூட நாடாளுமன்றத்தில் எதிர்க்கவில்லை. யாரும்
இதை எதிர்க்கவில்லை. இன்றைக்கு நியாயவுணர்வுள்ள அத்தனை
பேரும் அந்தச் சட்டத்தை எதிர்க்கிறார்கள். ஆனால் அன்று ஏன்
அதை உணரவில்லை. அப்படி உணர்வற்ற மரக்கட்டைகளாக
இந்த நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த நேரம் அது.
உணர முடியாமல், மரக்கட்டைகளாக இருந்தவர்கள் இன்றைக்கு
உணரும் நிலைமைக்கு வந்து இருக்கிறார்கள். இந்த நாட்டிலே
அன்றைக்கு அந்தச் சட்டங்களைப் பாராட்டிய, வாதாடிய சக்திகள்
எல்லாம் எத்தனையோ இருக்கின்றன......

[1978 மார்ச் 13

திரு.ஓ.சோ.வேலுச்சாமி : துணைத் தலைவரவர்களே, பாராளு மன்ற உறுப்பினர்களை மரக்கட்டைகள் என்று சொல்கிறுர்களே, அது அவைக்குறிப்பில் இருக்கவேண்டுமா? துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு கூறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : இது ஒழுங்குப் பிரச்னை அல்ல என்பதால், மேலே என் பேச்சைத் தொடர்கிறேன். நான் சொல்வது அன்று 42-வது அரசியல் சட்டம் கொண்டு வரும்போது இருந்தவர்களின் நிலை பற்றி . . . .

திரு. எஸ்.ஆர். இராதா ; நண்பர் சுப்பு அவர்கள் எல்லா விவரமும் தெரிந்தவர்; தீர்ப்பு வழங்கவேண்டியது சபையில் இருக்கும் தலைவர். அப்படியிருக்க, அவரே தீர்ப்பு வழங்கிக் கொண்டு, அவரது பேச்சைத் தொடருவது முறைதானு? தாங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: திரு. சுப்பு அவர்கள் சொன்னதில் அன்-பார்லிமென்டரி எதுவும் இல்லை. நீங்கள் கொடுத்த பாராளு மன்றப் ப்ரோசீடிங்சில் . . . . rump of parliament—Parliament was made into a rump. என்று இருக்கிறது. நீங்கள் கொடுத்ததை வைத்துத்தான் நாங்கள் பேசுகிறோம்.

திரு. க. சுப்பு: என்னைவிட ஆணித்தரமாக பேசுவதற்கு திரு. உமாநாத் அவர்கள் இருப்பதால் நான் மைல்டாக பேச விரும்புகிறேன்.

என்னைப்பொறுத்தவரையில் நான் மரக்கட்டைகள் என்று யாரையும் குறித்துச் சொல்லவில்லை. அன்று கொண்டுவரப்பட்ட 42-வது அரசியல் திருத்தச் சட்டம் தேவை அற்றது. அதைமாற்ற இந்த 44-வது அரசியல் சட்டத் திருத்தம் வந்து இருக்கிறது. அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறுர்கள். ஆனுல் சில மாண்புமிகு உறுப்பினர்களால் அன்றைக்கு எதிர்க்கமுடியவில்லையே, என்ன செய்வது? அன்று நிலைமை அப்படி, எல்லோரும் பயந்து கொண்டு இருந்தார்கள்.

மாண்புமிகு திரு.கி.மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அந்த 42-வது அரசியல் சட்டத் திருத்தம் பாராளு மன்றத்தில் விவாதத்திற்கு வந்தபோது, அதைக் கடுமையாக விமர்சனம் செய்தவன் நான் என்பதை சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 13]

திரு.க.சுப்பு : ரொம்ப மகிழ்ச்சி. அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகம் என்று மாற்றம் வந்ததால்தான் உங்களுடைய எதிர்ப்பு அதிலே மூழ்கிப்போய் விட்டது. திடீரென்று நாங்களும் தேசீய நீரோட்டத்தில் மிதக்கிறோம், கலக்கிறோம் என்று சொன்னீர்கள். அதனுல் அன்றைக்குத் தெரிவித்த எதிர்ப்புக் கூட பெரிய குரலாக இருந்தாலும் சிறிய குரலாக மாறி மூழ்கடிக்கப்பட்டு விட்டது.

இருந்தாலும், அன்றைக்கு அதை வரவேற்ற நீங்கள் இன்றைக்கு இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். அன்றைக்கு இருந்த சூழ்நிலை அப்படி; யாருக்குத்தான் எதிர்த்துப் பேசுவதற்கு தைரியம் இருந்தது? நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. அன்று நிலைமை அப்படி. இன்று நிலைமை மாறியிருக்கிறது. உண்மையை ஏற்று, நியாயத்தை ஏற்று இன்றைக்கு இந்தத் திருத்தத்தை ஆதரித்து இருக்கிறீர்கள். அன்றைக்கு எதிர்த்தால் என்ன வரும்?

இஸ்மாயில் கமிஷன் வரும். அப்படியே வந்தாலும் அந்த ரிப்போர்ட் தாமதமாக வரும். அப்படித் தாமதமாக வந்தாலும் அந்த அறிக்கைமீது விவாதம் வருமா என்ருல் வரும், கால தாமதமாக வரும். ஆகவே, அந்த அறிக்கையின்மீது அமைச்சரவை நல்ல முறையில் பரிசீலித்து விரைவான நடவடிக்கைகளை எடுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அவசர கால நிலையின் போது எப்படிப்பட்ட அடக்குமுறைகள் கொடுமைகள் நடந்தன என்பதைப்பற்றி எல்லாம் கண்டறிவது எளிதான காரியம் அல்ல. மிகுந்த சிரமத்திற்கு இடையே அவற்றைக் கண்டறிந்து, அந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறுர்கள். காலதாமதமானுலும் சற்று அனுதாபத்தோடு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கருதுகிறேன். ஒரு சிறிய குற்றம் செய்தால் என்.ஜி.ஓக்களை சஸ்பெண்டு செய்கிறோம். ஆனுல் இவ்வளவு பெரிய குற்றம் செய்தார்கள் என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட பிறகும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லையே, என்ன காரணம்? மனம் இல்லை.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR; On a point of clarification Mr. Deputy Speaker, Sir, I beg leave of the House to say that I gather that one day has been separately allotted for discussion of Ismail Commission Report. Therefore, I would very much appeal to the Hon. Members to reserve their gun powder for discharge on the subsequent date which will be somewhere about the beginning of the next month.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய சட்ட மன்றம் அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்குள் நம்முடைய மக்கள் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, ஊர் வலம் போட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட கேட்கக் கூடிய நிலைமை வரலாம். அதைத்தான் உங்களின் சீரிய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நீங்கள் திருந்திய நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுங்கள்.

Let them be placed under suspension. aninated suspence. ஆக வைத்துக்கொண்டு எதற்காக நடவடிக்கை எடுக்காமல் இருக் கிறீர்கள்? உறுதியான நடவடிக்கை எடுங்கள். தற்போது சட்ட மன்றத்தில் அமைச்சராக இடம் பெற்று இருக்கிறீர்கள். இந்த அறிக்கையின்மீது நடவடிக்கை எடுப்பதன் மூலமாக நீங்கள் வரலாற்றில் இடம் பெறுவீர்கள். அப்படி வரலாற்றில் இடம் பெறத்தக்க வகையில் தாங்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத் திருத்தங்களைப் பொறுத்த வரையில் முழு மனதோடு ஏற்றுக்கொள்ளக்கூடிய சட்டத் திருத்தங்கள். இதோடு நின்று விடாமல் இன்னும் பல சட்டத் திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும். சுப்ரீம் கோர்ட் வழக்குகளைப் பாராளுமன்றத்தில் விவாதிப்பது என்றால் என்ன நிலைமை உருவாகும்?

அதுமட்டுமல்ல. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தில் முறைகேடு இருப்பதாகத் தெரிந்தால், அதுபற்றி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது. சுப்ரீம் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும். சுப்ரீம் கோர்ட்டில் சிங்கள் ஜட்ஜ் விசாரிப்பதில்லை. 7 நீதிபதிகள் விசாரிப்பார்கள். ஒரு பிரச்சனை வந்தால் அது சரியா இல்லையா, பிரிமாபேசி கேஸ் இருக்கிறதா? இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள சுப்ரீம் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டுமென்று சொன்னால் அது, சாதாரண மக்களால் முடியக்கூடிய காரியமா? அப்படி சுப்ரீம் கோர்ட்டுக்குப்போய், அங்கே ஒரு முடிவு செய்யப்பட்டால் அது மீண்டும் பாராளுமன்றத்திற்கு வரலாம். 7 ஜட்ஜுகளில் 4 பேர் ஒரு கருத்தையும் 3 பேர் ஒரு கருத்தையும் சொல்லியிருந்தால் கோர்ட்டில் 4 பேர் கருத்துப்படி தீர்ப்பு சொல்வார்கள். அது பாராளுமன்றத்திற்கு வந்தால் 4 பேர் கருத்து பின்னுக்குத் தள்ளப்பட்டு, 3 பேர் கருத்து மேலோங்கி நிற்கவும் வாய்ப்பு இருக்கிறது. அப்படி என்றால் ஜனநாயகம் எப்படிக் காப்பாற்றப் படும்? யோசிக்க வேண்டாமா? இதையெல்லாம் அன்றைக்கு

யாரும் யோசிக்கவில்லை; யோசிக்க விடவும் இல்லை. ஆனால் ஜனநாயகத்தைக் காப்பாற்றுகிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்தத் திருத்தம் வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் ஜனநாயகப் பண்பை மதிக்கவும், ஜனநாயகத்தை நிலை நாட்ட உயிர் நீத்த தியாகிகளை மதிக்கவும் நாம் பழகிக்கொள்ள வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டவே இவைகளைச் சொன்னேன்.

சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டுமானால் போய்விட லாம். ஆனால் தீர்ப்புச் சொல்ல 7 நீதிபதிகள் உட்கார வேண்டும். ஹைகோர்ட்டில் 5 நீதிபதிகள் இருக்க வேண்டும். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கொடுக்கின்ற தீர்ப்பு, விரும்பினால் பார்லி மெண்டுக்குப் போகும். அந்த நிலைமைகள் எல்லாம் இந்தத் திருத்தத்தினால் மாற்றப்படுகின்றன. சிங்கிள் ஜட்ஜ் தீர்ப்புக்கே காலதாமதமாகிறது என்று சொல்லும்போது 7 பேர் 5 பேர் தீர்ப்புக்கு எவ்வளவு காலதாமதமாகும்?

1975-ல் 1,700 வழக்குகள் பெண்டிங் இருப்பதாகச் சொன்னார்கள்; இன்றைக்கு அது 17,000 ஆக உயர்ந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். '' ஜஸ்டிஸ் டிலேய்டு இஸ் ஜஸ்டிஸ் டினைடு '' என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, இந்த 7, 5 என்ற முறையெல்லாம் மாற்றப்படுவதற்கு, இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் அதை ரத்து செய்து மேலும் பல திருத்தங்கங்ளைக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

இப்போது வந்திருக்கும் திருத்தமே மிகவும் காலதாமதமாகி வந்திருக்கிறது; இதைப்போல இன்னும் பல திருத்தங்களை நீங்கள் கொண்டு வந்தாலும் நாங்கள் அதை வரவேற்கிறோம். அதைப்பற்றி யாரும் குறை சொல்ல மாட்டார்கள்.

அண்ணா தி.மு.க. என்றிருந்த உங்கள் கட்சியின் பெயரை அகில இந்திய அண்ணா தி.மு க. என்று மாற்றிக் கொண்டது எந்தச் சூழ்நிலையில் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ''மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டது'' மாதிரி திராவிடத்திற்கும் அகில இந்தியாவுக்கும் என்ன தொடர்பு இருக் கிறது என்பதை உணர்ந்து, இப்போதுகூட நீங்கள் பழைய பெயரை வைத்துக் கொள்ளலாம்; அதில் ஒன்றும் தவறு இல்லை. ஏனென்றால் இப்போது சூழ்நிலை மாறியிருக்கிறது.

மேலும் நம்முடைய '' Setup '' பெடரல் ரீபப்ளிக் என்று சொல்லுவதுதான் பொருத்தமாக இருக்கும். அதுதான் சரியானது. அதற்குக்கூட ஏதாவது திருத்தம் தேவைப்படுமானால் நீங்கள் கொண்டுவாருங்கள்; நாங்கள் முழு ஆதரவு தருகிறோம். இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம் உங்கள் கரத்தை வலுப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான்.

[திரு. க. சுப்பு] [1978 மார்ச் 13

இரண்டு பைசா எலெக்ட்ரிசிட்டியில் உயர்த்தினீர்கள். அதை நீக்கவேண்டுமென்று கேட்டோம். நீங்கள் என்ன சொன்னீர்கள்? அரசாங்கத்தை நடத்த நிதி ஆதாரத்திற்கு என்ன செய்வது என்று கேட்டீர்கள். ஆக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிதி ஆதாரம் குறைந்து விட்டது. வேண்டிய நிதி ஆதாரத்தைப் பெற வேண்டுமானால் நமக்கு அதிக அதிகாரம் தேவை. அதற்கு ஒரு தீர்மானத்தை இந்த அரசு கொண்டுவரலாம்; கொண்டுவர வேண்டும். அதற்கு நாங்கள் ஆதரவு தருகிறோம். மக்கள் நலன்களைக் காக்க, நிதி ஆதாரத்தைத் திரட்ட அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்டால் நிச்சயமாக நாங்கள் ஆதரவு தருகிறோம்.

அதே நேரத்தில் மக்கள் நலன்களையும் அலுவலர் நலன்களையும் நீங்கள் காக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திரு. சுப்பு அவர்கள் 42-வது அரசியல் சட்டத் திருத்தம் வந்த நேரத்தில் நாங்கள் எல்லாம் கோழைத்தனமாக இருந்ததைப் போலவும் அவர்கள் தைரியமாக இருந்ததைப் போலவும் இங்கே சொன்னார்கள். சிக்கிம் பிரச்சனைபற்றியும் சொன்னார்கள். சிக்கிமை அசோசியேட்டட் ஸ்டேட்டாகச் சேர்க்கின்ற நேரத்தில் அதை வரவேற்று திராவிட முன்னேற்றக் கழகம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அசோசியேட்டட் ஸ்டேட்டாக இருப்பதை வரவேற்று, இந்த மன்றத்திலே தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது நான் உறுப்பினராக இருந்தேன். எந்த அடிப்படையில் இதை வரவேற்கிறீர்கள் என்று நான் அப்போது கேட்டதற்கு எந்தவிதமான பதிலும் என்னால் பெற முடியவில்லை. அந்த அளவுக்குத்தான் நீங்களும் அச்சத்துடனும் பயந்த சுபாவத்திலும் இருந்தீர்கள் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றெல்லாம் இதில் இருக்கிறது. அரசாங்கம் கொண்டு வந்த தீர்மானத்தை அவை முன்னவராக இருந்த டாக்டர் நாவலர் அவர்கள் முன்மொழிந்து பேசினார்கள். அதிலே மிகவும் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள். அப்போது எந்த நெருக்கடியும் இல்லை. நீங்கள் அன்றைய தினம் மாநில சுயாட்சி வேண்டாமென்று சொன்னீர்கள். அதை நாங்கள் வரவேற்க முடியாது. இன்றைக்கும் அப்படித்தான். எங்களுடைய கொள்கைக்கு விரோதமாக வரும் எதையும் நாங்கள் ஆதரிக்க மாட்டோம்.

1978 மார்ச் 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னுடைய பேச்சு இருக்கிறது என்று சொன்னதற்கு நன்றி. 6, 7 கேள்விகள் அன்றைய முதலமைச்சரைக் கேட்டேன்; பதில் சொல்ல வேண்டுமென்று வலியுறுத்தினேன். அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

திரு. ஒ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 42-வது திருத்தச் சட்டத்தை மாற்றி இன்று 44-வது திருத்தச் சட்டம் என்று இங்கே ரேட்டிபிகேஷன் செய்வதற்கு வந்திருக்கிறது. இதிலே எங்களது காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே 42-வது திருத்த சட்டம் என்று சொன்ன உடனே ஏதோ அந்தத் திருத்தச் சட்டத்திலே பல பஞ்சமா பாதகங்கள் இருப்பது போலவும் இந்த நாட்டினுடைய ஜனநாயக அமைப்பைக் கெடுத்துவிடுவது போலவும் ஒரு பெரிய பிரச்சாரத்தையே அன்று ஜனதாக் கட்சிக்காரர்களும், மற்றக் கட்சிக்காரர்களும் செய்தார்கள்.

அவர்கள் ஆட்சிக்கு வந்த பிற்பாடு இந்த 42-வது திருத்தத்தை அப்படியே ஒழித்துக் கட்டப் போவதாக மக்களிடத்திலே சொன்னார்கள். ஆனால் இந்த 44-வது திருத்தச் சட்டத்திலே பார்த்தோமென்றால் 42-வது திருத்த சட்டத்தைப் பொறுத்த வரையிலே பெரும்பகுதியில் எந்தவிதமான மாற்றமும் செய்யவில்லை. அவர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால் ஒரு சில திருத்தங்கள் மட்டும் சுப்ரீம் கோர்ட்டைப் பொறுத்தவரையில், ஹைக்கோர்ட்டைப் பொறுத்தவரையில், பாராளுமன்றத்திற்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்பதைப் பொறுத்த வரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

42-வது திருத்தத்தைப் பொறுத்த வரையில் 59 பிரிவுகள் இருக்கின்றன. இங்கே 44-வது திருத்தத்திலே அதிலே இரண்டு மூன்று பகுதிகளை மட்டுப் தான் திருத்தி இருக்கிறார்கள். மற்றப்படி இதிலே அவர்களால் கை வைக்க முடியவில்லை. அப்படிக் கை வைத்தால் அது மக்களின் நல்வாழ்வில்தான் கை வைப்பதாக இருக்கும் என்ற அடிப்படையிலே அந்த 42-வது சட்டத் திருத்தத்தை நாம் ஆழ்ந்து படித்தோமென்றால் அது தெரிய வரும்.

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1978 மார்ச் 13

இங்கு 31-வது பிரிவு டி, 32ஏ, 131ஏ, 144ஏ இவைகளிலே 32ஏ, 131சி, 144ஏ இந்தப் பிரிவுகளை நாம் பார்த்தோம் என்றால் சுப்ரீம் கோர்ட்டின் அதிகாரத்தைப் பொறுத்த வரையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

சுப்ரீம் கோர்ட்டிலே மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்ட சம்பந்தமாக கான்ஸ்டிட்யூஷனல் வேலிடிட்டி சம்பந்தமாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்றால் உயர் நீதி மன்றமே தீர்ப்புச் சொல்லலாம், சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஜூரிஸ்டிக்ஷன் சுப்ரீம் கோர்ட்டிலே இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. 131ஏ பொறுத்த வரையில் எக்ஸ்க்ளூசிவ் ஜூரிஸ்டிக்ஷன் சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இயற்றக் கூடிய சட்டங்களைப் பொறுத்த வரையில் கான்ஸ்டிட்யூஷனல் வேலிடிட்டி சம்பந்தமான தீர்ப்புகள் சுப்ரீம் கோர்ட்டு கொடுக்கலாம். உயர்நீதி மன்றத்திலேயிருந்து அந்த அதிகாரம் எடுக்கப்பட வில்லை. ஆகவே, இந்த இரண்டு பிரிவுகளை நாம் பார்த்தோம் என்றால் 32ஏ பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூடச் சொன்னார்கள், நீதி மன்றத்தின் அதிகாரங்கள் குறைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நீதி மன்றத்தி னுடைய அதிகாரங்கள் குறைக்கப்படவில்லை. கன்கரண்ட் ஜூரிஸ்டிக்ஷனாக இருந்ததைத் தனித்தனியாக இந்த ஜூரிஸ்டிக்ஷனாக மாற்றி இருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டுக்கு என்று சில அதிகாரங்கள், உயர்நீதிமன்றத்திற்கு என்று சில அதிகாரங்கள் இப்படி மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, இன்னும் சொல்லப் போனால் ஜூடிசியல் பவர்ஸ்—நீதிமன்றங்களின் அதிகாரங்களை டீசென்ட்ரலைஸ் செய்திருக்கிறார்கள்.

இப்போதுகூட மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான கருத்து சொல்லப்படுகிறது. கன்கரண்ட் லிஸ்டை அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்திலிருந்து எடுத்து விட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி எடுத்துவிடுவதன் மூலமாகத்தான் இங்கே ஒரு மாநில சுயாட்சியை ஏற்படுத்த முடியும் என்று நினைத்தால் அந்த டீசென்ட்ரலைசேஷன் ஆஃப் பவர்ஸ் என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே ஏன் ஜூடீஷியல் அதிகாரத்தைக்கூட டீசென்ட்ரலைஸ் பண்ணக் கூடாது. ஆகவே 32ஏ, 131ஏ என்பது அதன் ஜூரிஸ்டிக்ஷனை எடுத்திருக்கிறார்கள். அதற்கடுத்தபடியாக, இங்கே நீதி மன்றத்தின் 144ஏ பற்றிச் சொன்னார்கள். சிம்பிள் மெஜாரிட்டி இல்லாமல் ஸ்பெஷல் மெஜாரிட்டி வேண்டுமென்றால் இது எந்த ஜனநாயகத்தைப் பாதித்து விட்டது? இன்னும் சொல்லப்போனால் நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் ஜனநாயகத்துக்கு ஒரு நல்ல அடிப்படை அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம்.

1978 மார்ச் 13] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

ஏழு நீதிபதிகள் இருக்க வேண்டும். அதற்கான நீதிபதிகள் இருந்து காஸ்டிட்யூஷனல் வாலிடிட்டி சம்பந்தமாகத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். ஆகவே, 'ஸிம்பிள் மெஜாரிட்டி' என்றிருந்ததை 'ஸ்பெஷல் மெஜாரிட்டி' ஆக ஆக்க வேணடுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

மாநில உயர்நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் இதே கருத்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. 246(எ), 248 (எ) பிரிவுகளை எடுத்துக் கொண்டால், 246 (எ) மத்திய அரசு சம்பந்தமான சட்டங்களை மாநில உயர் நீதிமன்றங்கள் கான்ஸ்டிட்யூஷனல் வாலிடிடடி சம்பந்தமாக அவர்கள் தீர்ப்பு சொல்ல வேண்டிய அவசியமில்லை, அதை சுப்ரீம் கோர்ட்டுதான் சொல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் என்ன ஜனநாயகம் பாதிக்கப்பட்டிருக்கிறது?

248 (எ), யில் ஐந்து நீதிபதிகள் இருக்கவேண்டும், அதில் ஸ்பெஷல் மெஜாரிட்டி வேண்டும், அதிகமான மெஜாரிட்டி வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆக, உயர்நீதிமன்றம் சம்பந்தமான இந்த ஐந்து பிரிவுகளை எடுத்துப் பார்த்தால் இதில் என்ன ஜனநாயகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதில் ஜனநாயகம் எந்த அளவிற்கும் பாதிக்கப்படவில்லை.

ஒரு வேளை 31 (டி) பொறுத்தவரை பாராளுமன்றத்திற்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல் 14, 19, 31 பிரிவுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது பண்டமன்டல் ரைட்ஸ் என்று சொல்லக்கூடிய 3ம் சாப்டரில் இருக்கிறது. அடிப்படை உரிமைகள், தனிநபர் சுதந்திரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அடிப்படை உரிமைகள், தனி நபர் சுதந்திரம் எல்லாவற்றையும் விட இந்த நாட்டின் பாதுகாப்பு மிகமிக முக்கியமானது. ஆகவே, 31 (டி) பொறுத்த வரையில் தேசிய விரோத செயல்கள், ஆன்டி நாஷனல் ஆக்டிவிட்டீஸ், ஆண்டி நாஷனல் அஸோஸியேஷன்ஸ் இவைகளைத் தடுக்க இது போன்ற அமைப்புக்களைத் தடுப்பதற்குப் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆகவே இதுவும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய அளவில், இந்த நாட்டின் ஒற்றுமையை, இந்த நாட்டில் அமைதி நிலவுவதற்குரிய வகையிலும், நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த 31 (டி) என்ற இந்தப் புதிய பிரிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

[திரு. ஓ. சோ. வேலுச்சாமி] [1978 மார்ச் 13

இந்தச் சூழ்நிலையில்—ஆர்.எஸ்.எஸ்., ஆனந்த மார்க் போன்ற ஸ்தாபனங்கள் எல்லாம் எப்படிச் செயல்பட்டு வந்தன. காந்தியடிகள் கொலையிலிருந்து இப்போது ஆஸ்திரேலியாவிற்கு நம் பிரதமர் அவர்கள் சென்றிருந்தபோது அவரது உயிருக்கேகூட ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலையில், இப்படி நடந்த செயல்களை எல்லாம் பார்த்தால், இத்தகைய தேசிய விரோதச்செயல்களை, தேசிய விரோத அமைப்புகளைப் பார்த்தால் இப்போதுள்ள சூழ்நிலையில் இந்த 31 (டி) பிரிவு எவ்வளவு முக்கியமானதொரு பிரிவு என்பதை நாம் மறந்துவிட முடியாது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்களா அல்லது நீதிமன்றத்திற்கு அதிக அதிகாரங்களா என்று நாம் சொல்கிறபோது பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் காந்தியடிகள், நேருபெருமகனார் போன்ற தலைவர்கள் எல்லாம் சொன்னது ஒருபுறமிருக்க, லெனின் அவர்கள் சொன்னார்கள், All powers to the people, எல்லா அதிகாரங்களும் மக்களுக்கே என்று. ஆகவே மக்கள் பிரதிநிதிகள் இருக்கக்கூடிய பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரங்கள் கொடுப்பது என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள்கூட ஏன் அதை எதிர்க்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் சொன்ன கருத்தைச் சொல்கிறேன். இந்தக் கருத்தோடு எங்களுக்கு உடன்பாடு கிடையாது. Judiciary is an instrument of feudalism in India என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, Judiciary is an instrument of feudalism in India என்று சொல்கிறபோது இந்த நாட்டிலே ஒரு முற்போக்கான கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமென்றால், சமதர்மக் கொள்கையைச் செயல்படுத்த வேண்டுமென்றால் அதற்கு நீதிமன்றங்கள் துணையாக இல்லை என்பது தோழர் ஈ.எம்.எஸ். அவர்கள் கருத்து.

ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, நாம் நல்ல கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமென்ற சூழ்நிலையில் இதன் பின்னணியைப் பார்ப்போம். அப்பின்னணியைப் பார்த்தால் 1931-ம் ஆண்டில் கராச்சியில் வல்லபாய் பட்டேல் அவர்கள் தலைமையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. அம்மாநாட்டில் காந்தி அடிகள் முன்னிலையில் ஒரு **முக்கியமான தீர்மானம்** நிறைவேற்றப்பட்டது.

1978 மார்ச் 13] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

அத்தீர்மானம் என்னவென்றால்,

Our political freedem must include the real economic freedom of the starving million of our people.

கோடிக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கிறார்கள், எனவே அவர்களது பொருளாதார சுதந்திரத்தையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். அது அரசியல் சுதந்திரமாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்கள் சுதந்திரமாக இருந்தாலும், சரி, அடிப்படை உரிமைகளாக இருந்தாலும் சரி, உண்ண உணவு இல்லை, உடுக்க உடை இல்லை, இருக்க இடம் இல்லை என்ற சூழ்நிலையில் அதற்கேற்றபடி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைத்தால் என்ன தவறு இருக்கிறது?

ஆகவேதான் 42-வது திருத்தச் சட்டத்தில் 31 (ஸி) பிரிவு, ஒரு முக்கிய பிரிவு. சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த 31 (ஸி) பிரிவைப் பொறுத்தவரையில் காந்தி அடிகள் முன்னிலையில் 1931ல் போடப்பட்ட தீர்மானம் இருக்கிறதே பொருளாதார சுதந்திரம் இந்த நாட்டுமக்களுக்குக் கொடுத்தாகவேண்டும், சமதர்மக் கொள்கையை நிறைவேற்றவேண்டும் என்ற தீர்மானம் இருக்கிறதே, அதைப்பொறுத்துச் செயல்படும்.

(முற்பகல் 10-40)

அதைச் செயல்படுத்துவதற்கு அந்த ஆதார உரிமைகள் என்பது தடைக்கற்களாக இருக்கின்றன என்று சொன்னால், நீதிமன்றங்களில் ஆதார உரிமைகளாக இருப்பதை அடிப்படையாகக் கொண்டு முற்போக்கான திட்டங்கள் இது

Directive Principles of State Policy

என்று கான்ஸ்டிட்யூஷனில் சொல்லுகின்ற 4-வது சாப்டர் இந்த நாட்டிலுள்ள மக்களுடைய பொருளாதார நல்வாழ்வுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் இந்தப் பிரிவின் அடிப்படையில் நீதிமன்றத்திற்குச் சென்று நிறைவேற்றவேண்டும் என்று வற்புறுத்த முடியாது.

அடிப்படை உரிமை என்று சொல்லும்போது, தனிப்பட்டவர்கள், பெரிய பணக்காரர்கள் நீதிமன்றத்திற்குப்போய் சாதித்துக் கொள்ள தங்கள் சுதந்திரம், அல்லது தன்னுடைய உரிமையை பெற்றுவிடுகிறார்கள். இந்த ஒரு சூழ்நிலையில் 31-சி. பிரிவை மிகுந்த கவனத்துடன் கொண்டு வந்தார்கள்.

Directive Principles of State Policy.

இந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக, மக்களுக்காக அரசு செயல்திட்டங்களை செயலாக்க வேண்டுமென்ருல். அதற்குத் தகுந்தவாறு சட்டங்களை அமைக்கவேண்டுமென்ருல் அதற்குத் தகுந்தவாறு இந்திய அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும். அதற்கு இடையூருக நீதிமன்றங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் 31-சி பிரிவை விரிவடையச் செய்திருக்கிருர்கள்....

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This House should remind the Hon. Member that this Resolution has nothing to do with Article 31-C.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது போல 31-சி பிரிவு இங்கே இல்லை, 44-வது திருத்தத்தில் இல்லை என்பதும் எனக்குத் தெரியும். நான் சொல்ல வந்தது, 42-வது திருத்தத்தை அடியோடு நீக்கவேண்டும் என்று ஜனதா கட்சியும் மற்றும் சில கட்சிகளும் சொன்னுர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சுப்பு அவர்கள் கூட பேசினுர்கள், 42-வது திருத்தச் சட்டம் அத்தனையும் மோசம் என்று சொன்னுர்கள். 42-வது திருத்தச் சட்டத்திலே நல்ல அம்சங்களும் இருந்தன என்பதை இந்த மன்றத்தில் யாரும் எடுத்துச் சொல்லவில்லை. நல்ல அம்சங்களாக 31-ஸி, 39-ஏ போன்ற பிரிவுகள், ஏழை மக்களுக்குச் சட்ட உதவி செய்ய வேண்டும். இதற்காக பல வழிவகை செய்யவேண்டும், பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்பெதல்லாம் 42-வது திருத்தத்தில் இடம் பெற்றிருக்கிறது.

நாம் உண்மையிலேயே முற்போக்கான கொள்கைகளை எல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்ருல், 1931-ல் காந்தியடிகளின் முன்னுல் போடப்பட்ட தீர்மானத்தைப் பல வருடங்களுக்குப் பிறகு நாட்டிலுள்ள பல முட்டுக்கட்டைகளை எல்லாம் போக்கி, திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் முற்போக்கான திட்டங்களை, முற்போக்கான கொள்கைகளை நிறைவேற்றவேண்டும் என்பதற்காக அரசியல் சட்டத்தில் பல திருத்தங்களைச் செய்யவேண்டும் என்பதற்காக இதைக் கொண்டு வந்தார்கள். உண்மையிலே ஏழை மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்ததற்காக இந்தச் சட்டமன்றம் நன்றி செலுத்தித் தீர்மானம் போட்டிருக்கவேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே நமது மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசுகின்றபோது சுட்டிக்காட்டிச் சொன்னுர்கள், ஒருவேளை மற்றவர்களும் பேசலாம், மிகு உமாநாத் அவர்கள்

நல்லபடியாக இதைப்பற்றி விமர்சனம் செய்வார்கள் என்றும் சொன்னுர்கள்.

அடிப்படை உரிமைகள் விஷயத்தில் 42-வது திருத்தம் அடிப்படை உரிமைகளை பாதித்துவிட்டது என்பதைச் சொன்னுர்கள். அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பாட்ணு காந்தி மைதானத்தில் 18 நவம்பர் திங்கள் 1974-ல் பேசியிருக்கிருர்கள். அதைப் புத்தகத்திலிருந்து அப்படியே எடுத்துக்கொண்டு வாசிக்கிறேன்.....

The people of India rejected the Communist System when they enshrined the fundamental rights in the Constitution.

இந்தக் கருத்தோடு எங்களுக்கு உடன்பாடா இல்லையா என்பது வேறு விஷயம், இங்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிருர்கள். "கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளில்—அங்கேயிருக்கின்ற அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் ஃபண்டமென்டல் ரைட்ஸ்-ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டால்—அல்லது என்றைக்கு அரசிலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகளைப் புகுத்திவிட்டார்களோ அன்றைக்கே கம்யூனிஸ்ட் சிஸ்டத்தை தள்ளுபடி செய்ததாகிவிடும்" என்ற கருத்தை இன்றைக்கு இவர்கள் ஆதரித்துக் கொண்டிருக்கின்ற ஜெயப்பிரகாஷ் நாராயண் சொல்லியிருக்கிருர்கள். இந்தக் கருத்தைப் பொறுத்தவரையில்-என்னைப் பொறுத்தவரையில் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை.

அதற்கு அடுத்தபடியாக, பொதுவான சுதந்திரத்திலே தலையீடு என்று வரும்போது, அதைப் பார்க்கும்போது,

"There must be balance between Individual freedom and Social Welfare"

என்று சொல்கிருர்கள். ஆனுல், சோஷியலிஸத்திலே பொதுவாக மக்களுடைய பொது நன்மை, தனி நன்மை ஆகிய இரண்டையும் சமமாக பாலன்ஸ் செய்து பார்க்கும்போது, தனி நன்மையைவிட, இந்திய மக்களுடைய, பொது மக்களுடைய பொதுநல நன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதுதான் காங்கிரஸ் கட்சியின் வாதம். அந்த அடிப்படையிலேதான் 42-வது திருத்த விதிகளிலேகூட முற்போக்கான கொள்கையின் செயல்முறையிலே இருந்த முட்டுக்கட்டைகளைத் தகர்த்து எறிந்திருக்கிறது. பத்தாம்

பசலிக் கொள்கை ஜனநாயகம் என்ற பெயரால் இன்னும் பல தத்துவங்களின் பெயரால் இருந்த முட்டுக்கட்டைகளை யெல்லாம் தகர்த்தெறிந்து,

நான்காம் சேப்டரில், 'டைரக்டிவ் பிரின்சிபல்ஸ் ஆப் ஸ்டேட் பாலிசி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நல்ல கருத்துக்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு பாராளும் மன்றத்திலே சட்டங்கள் இயற்றுவதற்கு என்று அப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 44-வது திருத்தத்திற்கு முரணுக ஏதோ சில அதிகாரங்களை அவர்கள் மாற்றியிருப்பதன் மூலம் ஜனநாயகத்திற்கு ஆபத்து வந்து விடலாமோ என்றெல்லாம் தனி மக்களிடத்திலே பொதுப் பிரசாரம் செய்து, மக்களை ஏமாற் றுவதற்கு சொல்லி இருக்கலாமே தவிர இந்த 44-வது திருத்தம் மூலமாக ஜனநாயகத்திற்கு ஏதோ பெரிய மாற்றங்கள் கொண்டுவந்து விட்டார்கள் என்று சொல்வதைப் படித்தவர்கள் அல்லது அரசியல் சட்டத்தின், ஜனநாயக அமைப்புகளில் நாட்டு மக்களுடைய முற்போக்கான கொள்கைகளிலே அக்கறை யுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனறு சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ரா. உமா நாத்.

<u>THE HON. THIRU K. MANOHARAN :</u> Please be short.

<u>திரு. ரா. உமாநாத் :</u> துணைத் தலைவர் அவர்களே, 44-வது திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் டைம் கொடுக்கிறேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> 15 நிமிஷத் திற்குள் முடித்து விடுங்கள்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> நமது அரசியல் சட்டத்தின்மீது திணிக்கப்பட்டிருக்கிற பெருங் கொடுங்கோன்மை என்று நான் சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய உரிமைகள் பறிக்கப் பட்டு, அவர்கள் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய உரிமைகள் பறிக்கப்பட்டு, நீதிமன்றங்களுக்கு இருக்கக்கூடிய குறுகிய உரிமைகளும், குறுகிய உரிமை என்று சொல்கிறபோது காங் கிரஸ் நண்பர் சொல்கிறபோது ஈ.எம்.எஸ்.-ஐ கோட் பண்ணி னூர். அவர் சொன்னது என்னவென்ருல், கிளாஸ் அதாவது வர்க்கத்தன்மை என்பது. இந்த வர்க்கத் தன்மை அடிப்படை யில் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய குறுகிய சில உரிமைகள் இருக்கின்றன. அந்த உரிமைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன

தடுக்கபபட்டிருக்கின்றன என்பதுதான். மனிதன் உயிர் வாழ் வதற்கு உரிமை உண்டு. அது ஃபண்டமெண்டல் ரைட். '' No Citizen shall be deprived of his life or liberty except as per and in accordance with law''. அப்படியென்ருல், அந்த உரிமைகளைப் பறிப்பதா? சுருங்கச் சொன்னுல், நமது நாட்டின் 'சாவிரனிடியை' அதாவது மக்களின் உரிமைகளைப் பறிப்பது என்பதாகும். அப்படிப் பறித்து விட்டு அவர்களுக்குக் கடமைகளை மட்டும் விட்டுவைப்பது. அதே நேரத்தில் மக்களின் சேவகர்கள் யாரோ, 'Servants of the people' அதாவது அதிகார வர்க்கம், 'Bureaucracy and the Executive'. அவர்களுக்கு எந்தக் கடமையும், பொறுப்பும் இல்லாமல் அவர்களுக்கு சகல உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. இது தான் 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் சாராம்சம் ஆகும்.

இப்படி ஒரு சர்வாதிகார அமைப்புக்குச் சட்ட வடிவம் கொடுப்பதுதான் இந்த 42-வது அரசியல் திருத்தச் சட்ட அமைப்பாகும். இதிலே சில ஷரத்துக்களை ரத்து செய்ய வேண்டு மென்று இப்பொது நாடாளு மன்றத்திலே 44-வது சட்டத்திலே திருத்தம் கொண்டு வந்திருக்கிருர்கள். இதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் ஆதரிக்கிறேன். இது அவசியமும்கூட. இந்த அளவுக்கு முன் வந்ததற்காக நான் ஜனதா கட்சி அரசாங்கத்தை இந்த நேரத்திலே உள்ள படியே பாராட்டுகிறேன். ஏனென்ருல், தேச விரோத நட வடிக்கைகளில் ஈடுபட்டால், தனி நபரும், ஸ்தாபனங்களும். தடை செய்யலாம் என்ற ஷரத்து எவ்வளவு டேன்ஜரஸ், அதிலும், தேச விரோத நடவடிக்கை என்று சொல்கிறபோது

இந்த 3 -D-4(ii)—''which disclaims. questions, threatens, disrupts or is intended to threaten or disrupt the Sovereignty and integrity of India or the security of the State or the unity of the Nation.''

இந்த ஷரத்தின்கீழ் மாநில சுயாட்சி கேட்பதை நாட்டைப் பிரிப்பது, யூனிட்டியை குலைப்பது என்ற கருத்தை அன்றைய தினம் ஆளும் கட்சி வைத்திருந்தது. அன்றைக்கு அவர்கள் என்ன சொன்னுர்கள் என்று நமக்குத் தெரியாது. இப்போது சொல்கிருர்கள். மாநில சுயாட்சி கேட்பது பற்றி சில கருத்துக் களைச் சொல்கிருர்கள். அதிகாரபூர்வமாகச் சொல்கிருர்களா அல்லது சில மந்திரிகள் மட்டும் சொல்கிருர்களா? தெரிய வில்லை. இந்த ஷரத்தின்கீழ் மாநில சுயாட்சி கேட்பது என்பது சட்ட விரோதமாகிறது. அப்படிக கேட்கக்கூடிய எல்லாக் கட்சிகளும், எந்தக் கட்சியானுலும் தடை செய்யலாம், அபபடிக

கேட்கக்கூடிய நபர்களை சிறையிலே அடைக்கலாம். இப்போது
லேட்டஸ்ட் இன்ஃபர்மேஷன் என்னவென்றுல், சிக்கிமிலே
விடுதலைப்பற்றி நகராறு நடந்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-50)

சிக்கிம் பற்றி இன்றைய பிரதமர் மொரார்ஜி அபிப்பிராயம்
சொல்லியிருக்கிறுர்கள். இணைக்கப்பட்டது சரியல்ல என்று
சொன்ஞர்கள். இன்றைக்கும் அந்தக் கருத்து இருக்கிறது.
நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டம் வந்தபோது எங்கள்
பார்ட்டி குரூப் யார் இருந்தார்களோ அவர்கள் அன்றே
கடுமையாக அதை எதிர்த்தார்கள். எந்தவிதமான தயக்கமும்
இல்லாமல் எதிர்த்தார்கள். ஆகவே, பிரைமினிஸ்டர்
மொரார்ஜியே இணைக்கப்பட்ட முறை சரியல்ல என்று கூறி
யிருக்கிறுர்கள். இந்த ஷரத்துப்படி ஏற்கனவே உள்ளபடி
பிரைமினிஸ்டர் மொரார்ஜியையே பிடித்து உள்ளே போட்டு
விடலாம். அவ்வளவு டேஞ்சரான ஷரத்தாக இருக்கிறது.

3-வது 4-வது சப் செக்ஷன்படி ரயில்வே ஸ்ட்ரைக், டிரான்ஸ்
போர்ட் ஸ்ட்ரைக் ஆகியவையெல்லாம் சர்க்காரைக் கவிழ்க்கும்
பலவந்தமான நடவடிக்கைகள் : ஒரு ஸ்ட்ரைக் நடக்கும்போது
யூனியன் ஆபீசில் போய் போலீஸ் சர்ச் பண்ணி கத்தி, கபடா
கிடைத்தன என்று சொல்லி ஸ்ட்ரைக் பலாத்காரமாக அரசாங்கத்
தைக் கவிழ்க்க என்று சொல்லி தொழிற்சங்கத்தையே தடை
செய்யலாம்.

இந்த ஷரத்தின் நோக்கம் என்னவென்றுல், அரசுடன் உடன்
படாத அரசியல் கட்சிகளின் செயல்பாட்டையும் தொழிற்சங்கங்
களின் செயல்பாட்டையும் சமூக கலாச்சார ஸ்தாபனங்களின்
செயல்பாட்டையும் முடக்கி சர்வாதிகாரத்தைப் புகுத்துவதற்
காகவே இந்த ஷரத்து 42-வது அரசியல் சட்டத் திருத்தச் சட்டத்
திலே கொண்டு வரப்பட்டது.

இன்னும் சுருங்கச் சொன்னுல்—அன்றைய பிரதமரைக் குறித்
தலைவணங்காத, அன்றைய பிரதமருடைய மகனுக்குத் தலைவணங்
காத யாராகயிருந்தாலும் இந்த ஷரத்துக்கு அவர்கள் உட்படுத்தப்
படுவார்கள் என்பதுதான். இதை எடுத்ததை நான் வரவேற்
கிறேன். எடுத்தது நல்லது என்பதற்காக புதிய சட்டத் திருத்தத்
தை ஆதரிக்கிறேன்.

ஆனுல், நிலைமையின் முழுத் தேவையை இந்தச் சட்டத் திருத்
தம்மட்டும் பூர்த்தி செய்யாது. 42-வது திருத்தச் சட்டம் வேரடி
வேராகவும், மண்ணடி மண்ணுகவும் Lock, Stock and Barrel
ஒழித்துக் கட்டப்படவேண்டும். அப்படி எடுத்து விட்டால்தான்
இன்றைய நிலைமையின் தேவை பூர்த்தியாகும்.

ஜனதா கட்சியின் வாதம் என்னவென்று சொன்னுல்—42-வது
அரசியல் சட்டத்தில் சிலது நல்லது இருக்கிறது, சிலது கெட்டது
இருக்கிறது என்பதாகும். ஒரு உதாரணம் சொல்லப்பட்டிருக்கி
றது. பிரஜைகளுக்குச் சட்ட உதவி தருவது—லீகல் எய்டு—
இதுபற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

லீகல் எய்டு கொடுப்பது பற்றி சட்டத் திருத்தத்திலே ஃபண்ட
மென்டல் ரைட்டாகச் சேர்க்கவில்லை. டைரக்டிவ் பிரின்சிபிள்
ஒரு கோட்பாடு, நோக்கம் என்பதில்தான் சேர்க்கப்பட்டுள்ளது.
சர்க்கார் கவனிக்க வேண்டியது—' ரைட் டு ஒர்க் '— வேலை செய்ய
செய்ய உரிமை— சுதந்திரம் கிடைத்த நாளிலேயே எழுதப்பட்
டிருக்கிறது. ஆனுல் என்ஃபோர்ஸ் பண்ணப்பட்டிருக்கிறதா?
இல்லை.

இப்போது லீகல் எய்டு என்பது டைரக்டிவ் பிரின்சிபிள் ஆகத்
தான் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, ரைட்டாகக் கொடுக்கப்
படவில்லை. அது நம்முடைய பிரஜைகள் கைக்கு வராது. ஆகவே
உண்மையான உரிமைகள் பறிக்கப்படுவதை மறைப்பதற்காகத்
தான் ' லீகல் எய்டு ' போன்றவற்றை டைரக்டிவ் பிரின்சிபிள்
ஆகப் போட்டிருக்கிறுர்கள். '

ஒரு சிறு கதை எனக்கு ஞாபகம் வருகிறது. அதைச் சொன்
னுல் கிளியராகப் போகும். ஒருவர் மாடு திருடி விட்டார். அவர்
கிறித்தவர். பாவ மன்னிப்பு கேட்க வேண்டும். திருடிவிட்ட
மாட்டை வீட்டில் வைத்துக் கொண்டு ' நான் மாட்டைத் திருடி
விட்டேன். பாவ மன்னிப்பு கொடுங்கள் ' என்று பாதிரியாரிடம்
சென்றுர். அவர் ஒரு நிபந்தனையுடன் பாவ மன்னிப்புக் கொடுத்
தார்: அந்த ஊரில் போய் ' அங்கே மாடு காணுமல் போச்சா '?
என்று சொல் : யாரும் மாடு காணவில்லை என்று சொல்லவில்லை
என்றுல் நீயே வைத்துக்கொள் என்று சொன்னுர். அவர் அந்த
ஊருக்குப் போனுல் சத்தம் போட்டு · கயிறு காணுமல் போச்சா ?
என்று சத்தமாகச் சொல்லிவிட்டு ' நுனியில் ஒரு மாடு இருந்தது '
என்று மெதுவாகச் சொன்னுர். ' கயிறு காணுமல் போச்சா '?
என்ற சத்தத்தைக் கேட்டு யாரும் வரவில்லை. ஆகவே, பாதிரி
யார் சொன்னபடி அவரே மாட்டை வைத்துக் கொண்டார்.
அந்தத் திருடன் மாதிரி இந்த வேலை நடக்கிறது. மக்களை
ஏமாற்ற சட்ட உதவி என்பது கயிறு — அது வெறும் கயிறு—
திருடியது நமது உரிமை— அது மாடு. அதுதான் 42வது சட்டத்தில்
நல்லதும் கெட்டதும் இருக்கிறது என்ற வாதம்.

நான் இன்னொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். நல்லதும்
கெட்டதும் இருப்பது உண்மை என்று சொன்னுல் நான் ஒன்று
கேட்க விரும்புகிறேன். அந்தச் சட்டம் நாடாளுமன்றத்திற்கு
வந்தபோது ஜனதாக் கட்சியில் இணைந்திருக்கும் அங்கத்தினர்கள்

இருந்த நல்லதை ஆதரிக்கவும், கெட்டதை எதிர்க்கவும் இல்லை. அப்படி செய்யாமல் அந்த ப்ரொசீடிங்ஸ் பூராவையும் கம்ப்லீட்டா பாய்காட் செய்தார்கள். அன்று அவர்கள் செய்தது ரொம்ப கரெக்ட். நல்லதும்கெட்டதும் என்று பாகுபடுத்திப் பார்க்கவில்லை. புரொசீடிங்ஸ் பூராவையும் அவர்கள் பாய்காட் செய்தார்கள்.

மாண்புமிகு லா மினிஸ்டர் திரு சாந்திபூஷன் இந்த மாதிரிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டுவருவதைப்பற்றி எக்ஸ்பிளநேஷன் கொடுக்கிறார். என்ன சொல்கிறார் என்றால், எதிர்க்கட்சி குறிப்பாக காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் ஒத்துபோகக்கூடிய அவர்களோடு ஒருமைப்பாடு உள்ள திருத்தங்களைத்தான் கொண்டு வருகிறோம், அவர்கள் ஒத்துக் கொள்ளாததை ஒத்தி வைக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால்,

'Abolishing dictatorship with the consent of Dictator'

இது நடக்கிற காரியமா? சர்வாதிகாரியின் அனுமதியின் பேரில் சர்வாதிகாரத்தை ஒழிப்பது என்றால் இது நடக்கிற காரியமா? 42 வது அரசியல் சட்டத் திருத்தத்தை அடியோடு ஒழிக்கக்கூடிய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து லோக் சபாவிலே நிறைவேற்றிவிட்டு அதற்குப் பிறகு ராஜ்ய சபாவிற்கு அது செல்கிறபோது காங்கிரஸ் கட்சி எதிர்த்தால் மீண்டும் அவர்கள்தான் அதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பதை மக்கள் இனங்கண்டுகொள்வார்கள். இந்த நாட்டினுடைய சாவர்னிட்டியை வைத்திருக்கக்கூடிய மக்கள் அதைப்பற்றி முடிவு எடுப்பார்கள். அப்படிப்பட்ட நிலை வருகிறபோது மக்களிடத்திலே நாம் போக வேண்டாம் என்று நினைத்து அவர்கள் அதை ஆதரித்திருப்பார்கள். ஜனதா அரசாங்கம் அப்படிச் செய்யவில்லை.

நான் இந்த ஜனதா அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கட்சி தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய தமிழ் மொழிபெயர்ப்பை நான் இங்கே சொல்கிறேன். 42-வது திருத்தத்தைப்பற்றிச் சொல்லுகிறபோது சொல்லியிருக்கிறார்கள். அதை ஒரு திருத்தமெனக் கூறுவதே தவறு. அது 1950-வது ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின் அடிப்படை அமைப்பையே கவிழ்க்கிறது. நமது அரசியல் சட்டத் திட்டத்தின் தந்தைகள் நம்மிடம் விட்டுச் சென்ற நம்பிக்கை சாஸனத்திற்குத் துரோகம் செய்கிறது. அது பெடரல் கோட்பாட்டை மாசுபடுத்துகிறது. அது மக்களுக்கும் நாடாளுமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் நீதித் துறைக்கும், நீதித் துறைக்கும் நிர்வாகத் துறைக்கும், மாநிலங்களுக்கும் மையத்

திற்கும், பிரஜைக்கும் அரசுக்கும் இருந்துவந்த நைஸ் பேலன்ஸை கவிழ்த்து விட்டது' என்று சொல்லி 42-வது திருத்தத்தை வேரடி வேராகவும் மண்ணடி மண்ணாகவும் ஒழிப்போம்; லாக், ஸ்டாக் அன்ட் பேரல் என்ற முறையிலே ஒழிப்போம் என்று வாக்குறுதியைச் சொன்னார்கள். அதை நிறைவேற்றுவதற்கு ஜனதா அரசாங்கம் நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைச் செய்தால் தான் சர்வாதிகார அமைப்பின் சகல தூண்களையும் தகர்க்க முடியும்.

இந்த அவையின் மூலமாக நான் இன்னொரு முக்கியமான விஷயத்தை நாடாளுமன்றத்தின் கவனத்திற்கும் ஜனதா அரசாங்கத்திற்கும் சொல்ல விரும்புகிறேன. மத்தியில் இந்திரா சர்க்கார் தோற்கடிக்கப்பட்டதனால் மீண்டும் தலை தூக்கும் ஆபத்து நீங்கவில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாங்கள் சொன்னோம். ஆனால் சிலர் நம்பவில்லை. ஆனால் சமீபத்திலே நடந்த தேர்தலிலே கர்நாடகத்திலே அதிகாரத்தைக் கொண்டு வந்து விட்டார்கள், ஆந்திரத்திலே அவர்கள் அதிகாரத்திற்கு வந்துவிட்டார்கள். காங்கிரஸ் பிளவுக்குப் பிறகு இந்திராதான் சர்வாதிகாரி என்றுப் பிரம்மானந்த ரெட்டி சர்வாதிகாரத்திற்கு எதிர்ப்பு என்றும் சொன்னார்கள். இப்போது அதுவும் பொய்யாகிவிட்டது. மகாராஷ்டிரத்திலே இரண்டு காங்கிரஸும் ஒன்றாகி சர்க்கார் அமைத்து விட்டார்கள்.

ஆகவே, இந்த ஆபத்தைத் தடுக்க வேண்டுமானால் 42-வது திருத்தத்தை ரத்து செய்தால் மட்டும் போதாது, ஜனநாயகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அதற்கு எந்த ஆளும்கட்சியும் எந்த அரசாங்கமும் இனிமேல் மக்களின் ஜீவாதார உரிமையின் மீதும் கை வைக்க முடியாத அளவு அரசியல் சட்டத்தில் புதிய ஷரத்துக்கள் புகுத்த வேண்டும். அதற்கு என்னுடைய சில ஆலோசனைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தடுப்புக் காவல் ஷரத்தை அரசியல் சட்டத்திலிருந்து எடுத்து விட வேண்டும். இன்றைக்கு மிஸா, மினிமிஸா என்ற முறையிலே கொண்டுவருகிறார்கள். அரசியல் சட்டத்திலே மூன்றாண்டுக்காலம் தடுப்புக் காவல் சட்டத்தை நிறைவேற்றலாம் என்று விதி இருக்கிறது, அந்த ஷரத்தை ரத்து செய்ய வேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் திருத்தம் பூரணமாக இருக்காது.

அடுத்து, சர்வாதிகாரத்தின் பிரதான கருவி, ரீசர்ச் அன்ட் அனலிஸிஸ் விங்—ரா என்று சொல்வார்கள், அப்படிச் சொன்னால் சிலருக்குப் புரியாது என்பதால் முழுமையாகச் சொன்னேன். இது பூராவும் எலக்ஷன் முழுமையும் கவிழ்க்கக்கூடிய போலித்தனமாக இருப்பது, இதைக் கலைக்க வேண்டும்.

அடுத்தபடியாக, 352-வது ஷரத்து தான் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தக்கூடிய ஷரத்து ஆகும். அதை அந்நியர் படையெடுக்கும்பொழுது மட்டும்தான் பயன்படுத்த வேண்டும். அதைத் தவிர மற்றபடி இன்டர்னல் காரியங்களுக்காக மற்ற காரியங்களுக்காக கொண்டுவரக்கூடாது, இன்றைக்கு ஜனதா அரசாங்கம் ஆயுதம் தாங்கிய கலகம் ஏதாவது இருந்தால், இன் சர்ஜன்ஸி இருந்தால், எப்படி டிஃபைன் செய்வார்கள்? அந்த ஷரத்தை முழுவதும் மாற்றிவெளிநாட்டுப் படையெடுப்பு என்ற முறையில் இருந்தால் மட்டும்தான் என்று இருக்க வேண்டும்.

[முற்பகல் 11-00]

நான்காவதாக, மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப் படுத்த அதிகாரமளிக்கும் 356 முதல் 360 வரையில் உள்ள ஷரத்துக்கள் ரத்து செய்யப்பட வேண்டும்.

ஐந்தாவதாக, மக்கள் பிரதிநிதியை வாக்காளர்களைத் திரும்பப்பெறும் உரிமை அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

ஆறாவதாக, விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் எலக்ஷன்களும், ரெப்ரசன்டேஷன்களும் இருக்க வேண்டும் என்ற ஷரத்தை அரசியல் சட்டத்தில் சேர்க்க வேண்டும்.

சிறு உடைமைக்காரர்களுக்கும், விவசாயிகளுக்கும் மட்டும் வழங்கி, சொத்துரிமை என்பதை அடிப்படை உரிமையிலிருந்து எடுத்து விட வேண்டும்.

வாக்காளர் வயதை 18-ஆகக் குறைக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாட்டை ஒரு குடும்பத்தின் அடிமையாக்க சதி செய்ததற்காகவும் மக்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பறித்த குற்றத்திற்காகவும், மக்கள் மீது மனிதத் தன்மையற்ற சித்திரவதைகளைத் திணித்ததற்காகவும், அரசியல் சட்டத்தைக் கவிழ்த்த குற்றத்திற்காகவும், நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கவிழ்த்த குற்றத்திற்காகவும், நீதித்துறையின் குறுகிய சுதந்திரங்களைக்கூட பறித்ததற்காகவும் பொறுப்பாக இருக்கும் முந்தைய பிரதமர் காந்தி அவர்களையும், அவர்களது காகஸ்-ஐயும், அரசியல் குற்றத்திற்காகக் கைது செய்து, எப்படி ஹிட்லரையும், அவரது சகாக்களையும் விசாரிப்பதற்காக நியூரம்பர்க்

தனிக் கோர்ட்டை நியமித்தார்களோ அப்படிப்பட்ட கோர்ட்டை நியமித்து தண்டனை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

(பேரவைத் தலைவர்)

இது இடைக்கால நிவாரணம்தான். மறுபடியும் சர்வாதிகார சக்தி தலை தூக்காமல் இருப்பதற்காக, என்றைக்கும் சர்வாதிகார சக்தி இருக்காது என்ற நிலைமை தோன்றுவதற்காக வழி செய்ய வேண்டும். பெரும் முதலாளி வர்க்கமும், நிலச் சுவான்தார்களும் தங்களுக்கு நெருக்கடி ஏற்பட்டு இலாபம் குறைகிறது என்பதற்காக, விவசாயிகளிடமிருந்தும், மக்களிடமிருந்தும், தங்களுக்குக் கிடைக்கின்ற இலாபத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கான முயற்சிகளைச் செய்யும்பொழுது தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள், விவசாயிகள் போராடுகிறார்கள். அப்படி நடக்கும்பொழுது அதை அடக்க இந்த வர்க்கங்களுக்கு இது தேவை. ஆகவே, அந்த ஊற்று இருப்பதால் அந்த வர்க்கங்களின் கையிலிருந்து பொருளாதாரத்தை மீட்டால்தான் அமைதியாகவும், நிம்மதியாகவும், சர்வாதிகார சக்தி வராது என்ற நம்பிக்கையில் இருக்கலாம். அந்த அடிப்படையில் இந்த ஆலோசனைகளை நாடாளுமன்றம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும், ஜனதா அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் பேசும்பொழுது முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நியூரம்பர்க் தனிக் கோர்ட் மாதிரி வைத்து விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது மக்கள் தீர்ப்பிற்கு மேலானதா என்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது மக்களே தீர்ப்பளித்து விட்டார்கள், இந்திராகாந்திதான் இந்தியாவுக்குத் தகுதி வாய்ந்த சுப்ரீம் லீடர் என்று அறிவித்து விட்டார்கள். அதற்குமேல் விசாரணை உண்டா?

திரு. ரா. உமாநாத் : இந்திய நாடு பூராவும் இருக்கின்ற மக்களினுடைய தீர்ப்பு இந்திரா காந்தி தலைவி அல்ல என்பது. இரண்டாவதாக, மக்களுடைய தீர்ப்பு என்பது தனிப் பிரச்னை. செய்த குற்றத்திற்காகத் தண்டனை வேண்டுமே தவிர எலக்ஷன்ஸ் அது ஒருபுறம். She should not be left scot-free and her caucus should not be left scot-free

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே,........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம், விளக்கம் இப்படிப் போய்க்கொண்டே இருக்க வேண்டாம். அடுத்து ஜேம்ஸ் அவர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் அவையிலே வைத்திருக்கிற தீர்மானத்தை ஆமோதித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஏற்கனவே, பாராளுமன்ற மேலவையிலும் கீழவையிலும் நிறைவேற்றப்பட்டு இந்த மாநில அவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இங்கே வைக்கப்பட்டிருக்கிற தீர்மானமானது பெயரளவில் நமது கருத்துக்களைக் கூறுவதற்குப் பயன்படுகிறது என்றிருந்தாலும் கூட, இங்கே அன்றிருந்த பல்வேறு நிலைமைகளையும் இன்று இருக்கிற நிலைமைகளையும் பற்றி ஆராய்வதற்கு இது பயன்படுகிறது என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே, நிறைவேற்றப்பட்ட 42-வது திருத்த அரசியல் சட்டமானது எந்தச் சூழ்நிலையில் நிறைவேற்றப்பட்டது என்பதை இந்த நாடு நன்றாக அறிந்திருக்கிறது. இந்த நாட்டில், தனி மனிதர்களுடைய சுதந்திரம் எடுக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் எலலாம் பறிக்கப்பட்டச் சூழ்நிலையில், நெருக்கடி நிலைமை பிரகடனம் செய்யப்பட்டு, இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சி நடைபெற்றிருந்தபொழுது இந்தச் சட்டமானது நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல, அதுவரையிலும் சுதந்திரமாகச் செயல்பட்ட நீதித்துறையானது சுதந்திரத் தன்மையை இழந்து, 'கமிட்டட் ஜுடிஷியரி' என்ற நிலைமையில் ஒரு தனி மனிதருடைய—அன்றிருந்த சர்வாதிகாரியின் விருப்பப்படி, ஜுடிஷியரி' செயல்பட வேண்டுமென்ற நிலைமையிருந்த சூழ்நிலையில்தான் 42-வது திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது என்பதை இந்த நாடு நன்றாக அறியும்.

ஆக, அந்த நிலையை மாற்றி, இந்த நாட்டின் நீதிமன்றம் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்; இந்த நாட்டு மக்களுக்கு அரசியல் சட்டத்தின் வாயிலாகக் கொடுக்கப்பட்டிருக்கிற அடிப்படை உரிமைகள் அத்தனையையும் வழங்கவேண்டுமென்று நினைப்பதோடு ஜனதா கட்சி தேர்தலுக்கு முன்னதாக மக்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில்தான் இன்றைய தினம் 44-வது அரசியல் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல, எந்த முறையில் நிறைவேற்றப்பட்டது என்பதையும் இந்த மாமன்றம் நன்றாக உணர வேண்டும், அறிய வேண்டுமென்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பாராளுமன்றத்தில் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன்பாக, இன்றைக்கு ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிற ஜனதா அரசு அங்கே இருக்கிற அனைத்து எதிர்க்கட்சிகளையும் அழைத்து, முந்தைய திருத்தத்தை நிறைவேற்றிய காங்கரஸ் கட்சியின்

தலைவர்களையும் அழைத்து, அதைத் திருத்தும் இந்த திருத்தம் நாட்டிற்குத் தேவையானது, அதற்கு உங்கள் அனுமதியை வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து, அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக்கொண்ட சூழ்நிலையில்தான் இந்த மசோதாவானது பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

ஆக, ஒன்றை நான் கூற விரும்புகிறேன். ஜனதா அரசு எந்த அளவில் எதிர் கட்சிகளுக்கு வாய்ப்பு அளிக்கிறது; அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கிறது என்பதனை இங்கே இருக்கிற அரசும் கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானத்தில் மேல் இங்கே இருக்கிற எதிர்கட்சிகள் கூறுகின்ற காரணங்களை நன்கு சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

ஆக, எதிர்கட்சிகளையும் மதிக்கிற ஜனதா மத்தியிலுள்ள நிலைமையில்தான் அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒருமுகமாக ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமானது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜுடிஷியரி தனது சுதந்திரத் தன்மையை இழந்து விட்டது என்று நாம் கூறினோம். அலகாபாத் நீதிமன்றம் அன்றைய பிரதமருடைய தேர்தல் செல்லாது; அதில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிகாரிகள் முறை தவறாக நடந்திருக்கிறார்கள், ஆக, அந்தத் தேர்தல் செல்லாது என்பதுமட்டுமல்ல இந்திராகாந்தி அம்மையார் 6 ஆண்டு காலத்திற்கு எந்தத் தேர்தலிலும் நிற்கக்கூடாது என்ற தீர்ப்பை வழங்கிய அந்தச் சுதந்திர நீதித்துறையானது எந்த அளவுக்கு அவமதிக்கப்பட்டது என்பதனை ஒருவேளை நம்மில் சிலர் மறந்திருக்கலாம்,

தன்னுடைய சொந்த வழக்குக்காகத்தான், மீண்டும் தேர்தலில் நிற்க வேண்டுமென்பதற்காக அலகாபாத் நீதிமன்றம் நிறைவேற்றிய தீர்ப்பிற்கு எதிராக, எந்தச் சட்டத்தால் அம்மையார் 6 ஆண்டுக்காலம் தேர்தலில் நிற்கக் கூடாது என்று அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதோ அந்தச் சட்டத்தை திருத்தி, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் மனு கொடுத்து, திருத்தப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் செல்லும் என்ற அளவிற்கு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கக் கூடிய அளவு சூழ்நிலையை உருவாக்கியது, அன்றைய தினமிருந்த அரசு; அதிலும் குறிப்பாக, சர்வாதிகாரியாக செயல்பட்ட இந்திராகாந்தி அம்மையார் என்பதை நிச்சயமாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

அதுமட்டுமல்ல. நெருக்கடி காலத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டத்தின் வாயிலாக, தான் 6 ஆண்டுக்காலம் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற தீர்ப்பை ஆதரித்து மீண்டும் தேர்த

லுக்கு நிற்கலாம் என்ற உரிமையை பெற்றிருக்கிற அந்த அம்மையார் இன்றைய தினம் ஆட்சியிலே இருக்கிற ஜனதா அரசு, ஒவ்வொன்ருக எமர்ஜென்ஸி காலத்தில் திருத்திய சட்டங்களை எல்லாம் இப்போது மாற்றி வருகின்ருேமே, அந்த முறையில் அந்த அம்மையாருக்கு தீர்ப்பு வழங்கிய அந்தச் சட்டத்தையும் இப்போது திருத்த இருக்கிருேம் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அந்தச் சட்டத்தை திருத்தி அமைக்கின்ற சூழ்நிலையில் அம்மையார் ஏற்கெனவே அலகபாத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி அந்தத் தேர்தல் செல்லாது, மேலும் 6 ஆண்டு காலத்திற்கு திருமதி இந்திராகாந்தி அம்மையார் தேர்தலில் நிற்க முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆகவே, தலைவரவர்களே நீதிமன்றத்தையும் தனது சர்வாதிகார சக்திக்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும். இந்த நாட்டை, நாட்டை மட்டுமல்ல இந்த நாட்டில் சுதந்திரமாக செயல்பட்ட நீதிமன்றம் தான் சொல்லக்கூடிய முறையிலே செயல்பட வேண்டும் அதற்கடுத்த படியாக தனது தனயன் சொல்லுகின்ற முறையில் செயல்பட வேண்டுமென்று சொல்லுகின்ற ஆட்சியை அகற்றி இந்த நாட்டிற்கு மீண்டும் சுதந்திரம் பெற்று, எமர்ஜென்சி காலத்தில் திருத்தப்பட்ட அத்தனையையும் ஒவ்வொன்ருக நாம் திருத்திக் கொண்டிருக்கிருேம்.

நண்பர் உமாநாத் அவர்கள் அத்தனையும் ஒரே நேரத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று சொன்ருர்கள். உண்மையிலே அவர்களுக்கு அந்த அக்கறை இருக்கும். ஆனுல் ஜனநாயக அரசு இருந்தால்தான் பாராளுமன்றத்தில் இந்தச் சட்டங்களை திருத்துவதற்கு உள்ள மெஜாரிட்டி இருந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் நன்ருக அறிவார்கள்.

ஆக ஜனதா அரசு, படிப்படியாக ஒவ்வொரு சட்டத்தையும் திருத்தி வருகிறது. இந்த நாட்டிலே இருக்கிற அடிப்படை உரிமைகள் அனைத்தையும் ஒவ்வொன்ருக வழங்கத்தான் வருகிறது.

அது மட்டுமல்ல நீதித்துறைக்கும் ஏற்கெனவே இருந்த சுதந்திரத் தன்மையையும், தனித் தன்மையையும் வழங்கத்தான் இருக்கிறது.

இப்போது இந்த அவையில் வைத்திருக்கிற இந்தச் சட்டத்தின் வாயிலாகக் கூட இழந்த சுதந்திரத்தை நீதி மன்றங்களுக்கு வழங்குகிற தீர்மானமாக இது அமைகிறது என்பதை, பாராளு மன்றத்

தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதைப் பாராட்டி கூறியதைப் போல ஒருவேளை இங்கேயும் இந்திராகாந்தியினுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் மன வேதனையோடு சில கருத்துக்களையும் கூறி இருந்தாலும் கூட, அவர்களுக்கும் பயன் தரக்கூடிய வகையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிற காரணத்தால் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே, மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நன்றி கூறி, ஏகமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கூறி அமைகிறேன்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> தலைவர் அவர்களே, சபை முன்னுல் விவாதத்தில் இருக்கிற 44-வது அரசியல் சட்ட சம்பந்தமான தீர்மானத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 42-வது அரசியல் சட்ட திருத்த சம்பந்தமாக அதிலே சில நல்லவைகளும், சில கெட்டவைகளும் இருக்கின்றன என்பதைத்தான் அப்போது இந்தத் திருத்தம் பாராளுமன்றத்தில் வந்தபோது எங்கள் கட்சியினைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசியிருக்கிருர்கள். வரவேற்கக்கூடிய அம்சங்களையும் வரவேற்று, எதிர்க்கக்கூடிய அம்சங்களை, மனித ஜீவாதார உரிமைகளுக்கு எதிராக உள்ளவற்றைச் சுட்டிக்காட்டி அதை எல்லாம் கடுமையாக எதிர்த்திருக்கிருர்கள்.

ஆகவே, இப்போது இங்கே கொண்டு வரப்பட்ட 44-வது திருத்தம் பாராளுமன்றத்திலும், அங்கே உள்ள ராஜ்ய சபாவிலும், எல்லா கட்சித் தலைவர்களும் வரவேற்கக்கூடிய திருத்தமாக, அனைவரும் சேர்ந்து பேசி ஒப்புக்கொண்ட திருத்த மசோதாவாக வந்திருக்கிறது.

இது வரவேற்கக்கூடிய ஒரு திருத்தம். இதிலே மேலும் பல திருத்தங்களைக் கொண்டுவர சகல கட்சியினரைச் சேர்ந்தவர்களும் பேசிக்கொண்டு இருக்கிருர்கள். அதிலே வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கக்கூடும். அது சம்பந்தமாக அந்தச் சட்டம் வரும்போது பேசுகிருேம்.

இந்தத் திருத்தத்தைப் பொறுத்த வரையில் எங்கள் கட்சியின் சார்பில் நான் இதை வரவேற்பதோடு, மேலும் ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த 42-வது திருத்தத்திலே பேசுகின்ற நேரத்தில், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஏனைய எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்களும், பேசியிருக்கிருர்கள். பாராளுமன்றத்திற்கு அதிக

அதிகாரம் வேண்டுமா ? நீதிமன்றங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமா ? அந்த 42-வது திருத்தம் வருவதற்கு முன்னுல் கூட, மக்களுக்குத் தேவையான திட்டங்களைக் கொண்ட அடிப் படைச் சட்டங்கள் வரும்போது— குறிப்பாக நிலச்சீர்திருத்தம், தேசீய உடைமைகளாக்கப்பட்டவைகளுக்கு நஷ்டஈடு கொடுப்பது போன்ற பிரச்னைகளில் — நீதி மன்றம் தடைவிதிக்கும் அளவிற்கு பல நிலைமைகள் இருந்தன. இப்படி பல்வேறு நிலைகளில் கோர்ட்டுகள் தடைகள் போட்ட காரணத்தால் பல சீர்திருத்த, முற்போக்குத் திட்டங்கள் கொண்டு வரப்பட முடியவில்லை. ஆகவே, பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் என்று இருக்கும் கருத்து நீடிப்பது நல்லது என்று கருதுகிறேன்.

அதேபோல், சொத்துரிமை, அடிப்படை உரிமை என்று இருப் பதை மாற்ற இருக்கிறோம் என்று ஜனதா கட்சி அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தது. இதுவரையில் அது குறித்து மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சொத்துரிமை அடிப் படை உரிமை என்று வைத்துக்கொண்டு இருப்பதால் பல தடங் கல்கள், பல சிக்கல்கள் அதிலே பெரிய மாற்றங்கள் கொண்டு வரப்படும் போது கோர்ட்டின் தடை ஏற்படக்கூடும். ஆகவே, அந்த சொத்துரிமை அடிப்படை உரிமை என்பதை நீக்குவதற்கு ஜனதா கட்சி தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும், அதற்காக நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

அந்தச் சட்டத்திலே வேறு சில நல்ல அம்சங்களும் இருக் கின்றன. அதையெல்லாம் பற்றி பின்னுல் பரிசீலித்துக்கொண்டு வரலாம். ஆகவே, இப்போது கொண்டு வரப்பட்டு இருக்கும் இந்த 44-வது திருத்தத்தை என்னுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கின்ற இந்த 44-வது அரசியல் சட்டத்திருத்த மசோதாவை உழைப்பாளர் முன்னேற்றக்கழக மானது வரவேற்கின்றது. அப்படி வரவேற்கின்ற அதே நேரத் தில் எங்களுடைய கட்சி இந்தத் திருத்தத்திலே ஒரு சில மாறுதல்களைச் செய்யாமல் இருப்பது நல்லது.

'in the inter st of the nation'

என்று நினைக்கிறது. காரணம், இந்த இந்தியாவினுடைய தேச ஒற்றுமை, மற்ற எதிர்ப்பு சக்திகளாலும் உள்நாட்டிலே இருக் கின்ற தீய சக்திகளாலும், சமூக விரோத சக்திகளாலும், உள் நாட்டின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் ஆபத்து வரும் காலத்தில் பிரத்யேகமாக சட்டங்கள் போடுவதால் ஒரு நாடு பாதுகாக்கப்

படும் என்ற வகையிலே ஒருசில சட்டங்களை இந்த 42-வது திருத்தமானது கொண்டு வந்து இருக்கிறது. அதிலே சில திருத்தங்கள் தேவை. காரணம், தேச விரோத சக்திகள் என்று சொல்லக்கூடிய சமூக அமைப்புகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டால் அவர்களால் பேராபத்து ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட சமூக விரோத அமைப்புகளுக்கு வாய்ப்பளிக்காமல் இருக்க இங்கே சொல்லப் பட்டு இருக்கும் ஆர்டிக்கிள் 31(டி) சப்-கிளாஸ் 4 (சி) என்பதை (Has to be retained) நிறுத்திக்கொள்ள வேண்டும். அது தேசத்தின் நலனுக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

மற்றும் இங்கு அரசியல் சட்டத்திலே ஒரு மனிதனின் ஜீவா தார உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிப்பட்ட மனித னின் ஜீவாதார உரிமை பறிக்கப்படுமானுல் அதை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாட்டிலே ஒரு ஆட்சி வருமானுல் அந்த ஆட்சியாளர்கள் எந்தவிதமான கொள்கைகளைக் கொண் டிருக்கிறார்களோ, எந்த கொள்கையினுல் மக்களுக்கு நல்லது செய்ய முடியும் என்று கருதுகிறார்களோ அந்தக் கொள்கைகளை சட்ட மாக்கி சட்டத்தின் மூலம் கொள்கைகளை அமுலாக்குகிறார்கள். அதை நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமானுல் ஜனநாயக அடிப்படையிலே நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற [Fundamental Rights] 'ஃபண்டமென்டல் ரைட்ஸ்' என்று சொல்லப் படுகிற அடிப்படை உரிமையில் கை வைக்கும்போது அது ஒரு பேராபத்து ஆகிவிடும்.

ஆர்டிக்கிள் 226 என்பது தனி மனிதனின் சுதந்திரம் பறிக்கப் படும்போது அவன் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்ல வழி வகுக் கிறது. ஆனுல் 42-வது திருத்தத்தின் மூலம் அதை ஒழித்திருக்கிறார் கள் என்றால் ஒரு தனி மனிதனின் உரிமைக் குரல்வளையை நெரிக்கும்அளவுக்கு பறிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அதை யாரும் வரவேற்க முடியாது, அதை கண்டிப்பாக ஒழித்தே ஆக வேண்டும் என்பதில் எங்கள் கட்சி உறுதியாக இருக்கிறது.

மேலும் சுப்ரீம் கோர்ட்டுக்கு போவதற்கு முன்னுல் ஹைகோர்ட்டுக்குச் சென்று நீதி பெறமுடியாமல் ஆர்டிக்கிள் 226-ஏ என்பதன் மூலம் 'டிபார்' செய்திருக்கிறார்கள். தனி மனிதனின் உரிமை காப்பாற்றப்பட வேண்டுமானுல் அதை நீக்கியாக வேண் டும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய நாட்டில் கொடுக்கப் படுகின்ற தீர்ப்பு திருப்தியளிக்கவில்லை என்றால் Privy Council என்று இங்கிலாந்தில் வைத்திருந்த கோர்ட்டுக்குச் செல்ல வாய்ப்பிருந்தது. அதைப்போல தனி மனிதன் ஹைகோர்ட்டுக்குச்

சென்று நீதி கிடைக்கவில்லை என்று அவன் கருதினுல் உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று தன்னுடைய உரிமையை நிலைநாட்டும் வாய்ப்பு இருந்தாக வேண்டும். அந்த உரிமை நீக்கப்பட்டது தவறு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

114-ஏ ரூலை நீக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். அதை நான் வரவேற்கிறேன். காரணம் Independence of the Judiciary என்று அதற்கு அர்த்தம். ஒரு நாட்டில் வாழும் தனிப்பட்ட மனிதன் நீதிமன்றத்திற்குச் செல்கிருன் என்ருல், இந்த இடத்தில்தான் நீதி கிடைக்கும் என்று செல்கிருன். அவனுக்கு நீதி தரவேண்டுமென்று நீதிமன்றம் இருக்கிறது. அப்படி நீதி பெறச் செல்லும் போது, நீதிபதி எந்தவித மான கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக தீர்ப்பு வழங்கும் வாய்ப்பு இருக்க வேண்டும்; பயந்துகொண்டே தீர்ப்பு வழங்கினுல் அது சரியான தீர்ப்பாக அமையாது. ஆகையால் நீதிபதிகள் சுதந்திரமாக தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.

அதேமாதிரி சென்ட்ரல் கவர்ன்மென்ட் பாஸ் செய்த சட்டம் 'டிரக்ஷன்ஸ் அண்டு ரூல்ஸ்' என்று சொல்லப்படுகின்றவைகளை இந்திய யூனியனில் இருக்கிற எந்த ஒரு மாநிலத்தின் சட்ட மன்றத்திலும் — 'ஸ்டேட் லெஜிஸ்லேச்சர்' — விவாதிக்கும் அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரம் இருக்கக்கூடாது என்று சொல்லுகிருர்கள். மத்திய அரசு போடுகின்ற சட்டத்தைத் தான் கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்றும், வேறுவிதமாகச் செயலாற்றக்கூடாது என்றும் சொல்வது அவ்வளவு பொருத்தமுடையதாகாது. மத்திய அரசு போடுகின்ற சட்டத்தின்மீது 'ரூல்ஸ், ரெகுலேஷன்ஸ், டிரக்ஷன்ஸ்' பற்றி இந்த மாநிலத்திலே இருக்கிற உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல உரிமை இருக்க வேண்டுமென்ற கருத்தை நான் தெளிவாக வர வேற்கிறேன்.

இன்றைக்கு இப்படிச் சொல்லப்படுகின்ற தீர்மானத்தில் ஒரு குறிப்பை மட்டும் தந்திருக்கிருர்கள். நீதிமன்றத்திற்குச் செல்லும்போது இத்தனை ஜட்ஜுகள் தீர்ப்பைச் சொல்லவேண்டும் என்று கட்டுப்பாடு விதித்து இருக்கிருர்கள். கட்டுப்பாடு இருக்கக்கூடாது. எத்தனை பேர் வேண்டுமாஞலும் இருந்து கொள்ளலாம்.

They can constitute a Division Bench having any number of Judges so that they can dispense with justice என்று சொல்லுகின்ற முறையிலே விதிகள் இருப்பது நல்லது என்ற கருத்தைக் கூறி, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, I rise to offer my remakrs on the Constitutional Amendment Bill (Forty-fourth) that is being considered by this House for the purpose of its ratification. Even though I am suffering from high fever I thought that it is my duty to extend my helping hand to the process of administration of medicine to the Body of the Constitution of this country which suffers like my high fever. I think, the Forty-Second Amendment was the most obnoxious law ever enacted by any Parliament or any Legislature in the World.

I rise to speak with mixed feelings of happiness and with gruesome reminiscences of the most darkest day in the history of India. Much has been said about the despicable, detestable, abominable and diabolical aspects of the Amendment and the provisions in regard to the so-called Forty-Second Amendment which was nothing but legislation to butcher the Indian democracy and therefore it is my duty to associate myself with the sentiments expressed by the hon. Members of this House, that it is a most abominable piece of legislation which was put on the Statute Book to perpetuate the political hegemonism in this country and to march the country towards authoritarianism and individualisation of all our public systems. It should be the happy day for us that such a piece of legislation is being removed from the Statute Book from the Constitution of our Country.

When Dr. Ambedkar, the veteran first Law Minister of the Union Government who was considered to be the Father of the Indian Contitution, while speaking on the floor of the Constituent Assembly, submitted that if he were to say—"if any provision that is sought to be incorporated in the Constitution which can be termed as the heart of the Constitution, as the soul of Democracy, then I will chose Article 32".

Now that Article 32 has been benumbed and people were asked to close their mouth, tongues of the people were not allowed to tantalise, hands were tied and even the hearts were asked not to beat and if they were to beat, they were to beat according to the whims, fancies and aspirations of the one person who was holding the entire authority in her or his hands.

[Thiru M. A. Latheef] [1978 மார்ச் 13

Therefore, Mr. Speaker, Sir, this is the happiest day for us in that what has been done to harm the basic Constitution of India is being removed, is being undone and therefore this should be welcomed. The Fundamental Rights were relegated to the background, the so-called Directive principles were given priority and precedence over the Fundamental Rights at the cost of the individual and collective liberties and the freedom of people of this country who voted them to power.

(முற்பகல் 11-30)

With the sanction and mandate received from the people, they tried to strangulate the very people who gave them authority to rule this country. Minorities were strangulated. Legitimate trade-union activities were curbed by introducing Article 31 (D). Legitimate trade union activities which have been enunciated under Articles 19, 14, 31 of the Constitution of India were sent to cold storage. People could not open their mouths and if anybody could speak, could write giving expression to something, he was penalised like anything.

In the name of family planning, thousands and thousands of Muslims and other minorities were held in the very capital of the Indian Union which has seen so much of turmoil and damages of many imperialistic Governments. Minorities were killed. Their personal laws were sought to be touched in the name of bringing out a common civil code.

The previous Government tried to interfere in the minority character and religions aspirations, religious beliefs and faith of minorities of this country.

In the name of having national language, a common language in this country the very language which had previously flourished in India viz. Urdu, that Urdu language was torn as under and termed as alien language. That was perpetrated by previous rulers and by present rulers also.

That is why I cannot wholeheartedly congratulate the Janata Government in the way in which it has brought this amending Bill in a piecemeal way. They should have tried in a comprehensive way to remove all the distortions that were made in the Constitution of India. But the Janata manifesto declares that it would repeal the entire 42nd amendment to the Constitution that has unfortunately been placed on the Statute Book by the previous Government. But after having made this promise specifically to the electorate and having risen to power, the Central Government gave a promise in the last session of Parliament that a Bill repealing the 42nd amendment entirely would be brought in this session of Parliament that is going on now.

1978 மார்ச் 13] (Thiru M. A. Latheef)

But in the present Bill, the Law Minister in the Centre has miserably failed. He has not kept up his promise. If promises are not kept, as Mrs. Gandhi used to do not to keep up promises, then what is the difference between the present Law Minister and Mrs. Gandhi. If you bring Bills like this in a piece-mealway, repealing some portions of 42nd amendment, what is the use?

THIRU N. SUNDARARAJ : Sir, the hon. Member is talking about Mrs. Gandhi who is not present in this House. I suppose it is irrelevant.

THIRU M. A. LATHEEF : I am speaking about the author of all these distortions. I am entitled to speak. This is not the way in which the hon. Member should try to teach me parliamentary procedure. I am quite within my realm.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஒரு நிமிடம் இருக்கிறது, முடித்துக்கொள்ளுங்கள்.

THIRU M.A. LATHEEF I am speaking about the head of Government who has been responsible for the rape of the Indian Constitution. I am not making this observation against the Minister ......

THE HON. THIRU K. MANOHARAN : May I remind the hon. Member Thiru Latheef that he is suffering from high fever ?

THIRU M.A. LATHEEF : Eventhough I am having fever, I am trying to remove the fever of Indian politics.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடம்தான் இருக்கிறது, முடித்துக்கொள்ளுங்கள்.

THIRU M.A LATHEEF :—These are not my own expressions. Even the members who belonged to the Cabinet of Mrs. Gandhi, the former Prime Minister, they have made the same observations having expressed whole-harted repentence on the floor of the Parliament. The same language, I am expressing now. I want to read one expression in Hindi, which has been used against her.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மற்ற அத்தனை தலைவர்களும் சொன்ன நேரத்தில் முடித்தார்கள். நான் மணி அடிக்கிறேன், இன்னும் பேச முயற்சித்தால் நான் என்ன செய்வது ?

THIRU M.A. LATHEEF : One member of Parliament has said

(Thiru M. A. Latheef) [1978 மார்ச் 13

the most abominable, and despicable thing. (If there is anything abominable in the long history of Indian Nation) It is this

அபமான ஜனக் அத்யாய

which is most despicable and abominable, Chapter, that is the period of regime of Mrs. Indira Gandhi, who not only tried to prepetrate her own rule but also tried most recklessly to bring her son as her political heir.

Therefore, Mr. Speaker, I very much express my gratitude and associate myself with the sentiments expressed by the people, who supported this Bill.

While I support this amending Bill, I would request the Janata Government to bring in an all-comprehensive legislation to remove all the distortions that were perpetrated on the Constitution of India, which strangulated the minorities, which butchered democracy and posed a danger to the very soul of democracy. With these words I support the present resolution.

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு, ஜனதாக் கட்சி தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிக்கேற்ப நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 44ஆவது அரசியல் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவைப் பெற இந்த மாமன்றத்தில் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வரவேற்று, ஆதரித்து சில கருத்துக்களை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல் இதை இந்த மன்றத்தின் முன் வைத்த நமது சட்ட அமைச்சர் அவர்கள், அவசர காலச் சட்டத்தால் இந்திய திருநாடு சர்வாதிகார இருளை நோக்கி இழுத்துச்செல்லப்படும் என்ற எச்சரிக்கையை விடுத்தவர் என்பதை நினைவுகூர்வது இன்றியமையாத ஒன்றாகும். நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு அவர் எழுதிய கட்டுரை ஒன்றை இந்த மாமன்றத்தில் படித்துக்காட்டியிருக்கிறேன். நெருக்கடி நிலை என்ற பெயரால் இந்தியாவுக்கு வர விருந்த பேராபத்து அண்மையில் நீங்கிவிட்டது என்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்தி நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் கட்டுரை தீட்டியிருந்தார்கள். தாமதமாக இதை உணர்ந்தார்கள் என்றாலும், உணர்ந்து திருந்திக் கொண்டோம் என்ற வகையில் நமக்கு நாமே ஆறுதலைக் கூறிக் கொள்ள முடியும்.

1978 மார்ச் 13] [திரு. மு. கருணாநிதி]

இந்த 42ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது பல கட்சிகளும் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்ற போதிலும், என்ன கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள் என்பதை ஏடுகளில் அன்றைக்கு நாம் காண இயலவில்லை.

நம்முடைய அவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அன்றைக்கு நாடாளுமன்றத்தில் அவர்களுடைய கட்சியின் சார்பில் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் எவை எவை என்று நான் இப்போது தான் அவரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடிந்ததே தவிர பத்திரிகைகளில் பார்த்து தெரிந்து கொள்ளக் கூடிய சூழ்நிலை அன்றைக்கு நாட்டில் இல்லை என்பதை இன்றைக்கு மெத்த வேதனையோடு எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்தத் திருத்தங்களில் எல்லா கருத்துக்களும் தங்களுக்கு உடன்பாடானவை என்று அவர்கள் முடிவெடுத்திடவில்லை என்று சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைக்கு ஜனதா அணியில் இருக்கின்ற பல்வேறு கட்சிகள், அவைகளிலுள்ள உறுப்பினர்கள், அனைவரும் இந்தத் திருத்தத்தை அல்லது இந்தத் திருத்தத்திற்கு காரணமாக நெருக்கடி நிலையை மிகவும் வன்மையாக எதிர்த்ததின் காரணமாக எவ்வளவு இன்னல்களுக்கு ஆளாக நேரிட்டது என்பதைக் கடந்த கால வரலாற்று ஏடுகள் எதிர்காலத்திலும் சொல்லிக்கொண்டு இருக்கத்தான் போகின்றன.

[முற்பகல் 11-40]

எனவே, இந்த விவரங்களிலே எல்லாம் நான் இப்போது நுழைய விரும்பவில்லை. ‘தேச விரோதம்’ என்ற சொல்லை நுழைத்துக்கொண்டு, எதிர்க் கட்சிகளை அழிந்து விட வேண்டும். தங்களுக்கு எதிராக உள்ள நிறுவனங்கள், தொழிற் சங்க அமைப்புகள், தொழிலாளர்களுடைய உரிமைக்குரல் அனைத்தையும் தீர்த்துக் கட்டிவிடுவது என்ற முனைப்பான முயற்சியை மையமிட்டிருந்தது. ‘தேச விரோதம்’ என்ற அந்தச் சொல்லில் யாரைப் பார்த்தாலும், யாரை வேண்டுமானாலும் ‘தேச விரோதி’ என்று கூறிவிடுவதன் மூலம் அந்தக் கட்சிகளை, அமைப்புகளை, இயக்கங்களை, லட்சியங்களை ஒடுக்கி விடலாம் என்கின்ற அடிப்படையிலேதான் 42ஆவது திருத்தம் என்ற பெயரில் சில பயங்கரமான முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

42ஆவது திருத்தம் வருவதற்கு முன்பு எப்படிப்பட்ட திருத்தங்களை எல்லாம் கொண்டு வரலாம் என்பதற்காக அமைக்கப்பட்ட சுவரன் சிங் குழுவினர் சில கருத்துக்களைத் தந்து, அதைப்பற்றிய

விளக்கங்களை நாடு தழுவிய வகையில் எல்லோரும் சொல்லலாம், அனைவருக்கும் உரிமை இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நண்பர் மாதவன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, சுவரன் சிங் குழுவினர் தந்திருக்கின்ற கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறிக்கை தரு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அப்படி தயாரிக்கப்பட்ட கருத்துக்களை நாங்கள் பத்திரிக்கைகளிலே வெளியிட வேண்டுமென்று முயற்சித்தபோது, எல்லோருக்கும் அபிப்பிராயம் வழங்க உரிமையிருக்கிறது, தாராளமாக உங்களுடைய கருத்துக்களை வழங்கலாம் என்று சுவரன் சிங் குழுவினர் கூறியபோதிலும், மத்திய அரசு தன்னுடைய தணிக்கை அதிகாரிகள் மூலம் இப்படி வழங்கப்பட்டக் கருத்துக்களை பத்திரிகைகள் வெளியிட முடியாமல் குந்தகமான காரியங்களைச் செய்தது என்பதையும், நாம் இப்போது மறந்து விடுவதற்கில்லை. அந்தக் குழுவின் அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியதை நான் இங்கே படித்து, இந்த அவைக் குறிப்பிலே பதிய வைக்க வேண்டிய, எதிர்கால சரித்திரத்திற்கு மிக முக்கியமானது என்ற வகையிலே பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு, சில வரிகளை இங்கே படிக்க விழைகிறேன்.

''கடமைகளை யாரும் எதிர்த்திட மாட்டார்கள். ஆனால் இந்தக் கடமைகளை அரசியல் அமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கும், அரசியல் அமைப்புத் சட்டத்தின் ஏனைய பிரிவுகளுக்கும் முரணாகச் செயல்படுத்திட பாராளுமன்றம் சட்டங்களை இயற்றலாம் என்பதும், இதில் நீதி மன்றங்கள் தலையிட முடியாது என்பதும், பேராபத்தாக அமைந்துள்ளன. ஜனநாயக நாட்டில் ஆட்சியின் அதிகார சுழலில் அமிழ்ந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வதற்காகத்தான் அடிப்படை உரிமைகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. கடமைகள் என்ற பெயரில் கொடுக்கப்பட்ட உரிமைகளைப் பறிப்பது ஜனநாயகத்திற்கு முரணாகும். கடந்த 26 ஆண்டுகளாக மேற்சொன்ன கடமைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிக்கப்படாமலேயே சட்டங்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளன. அண்மை காலத்தில்தான் கடமைகள் என்ற பெயரில் அடிப்படை உரிமைகளைத் தகர்த்திடும் போக்கு எழுந்துள்ளது.''

என்று அந்தப் பரிந்துரை நூலின் முன்னுரை விளக்கம் கொடுக்கிறது.

நண்பர் திரு மனோகரன் அவர்கள், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்திலே எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம்—யார் அந்தக்

கருத்தை முன்னால் சொன்னார்கள் என்ற போட்டிக்கு நான் வரவில்லை. 11-8-1976 அன்று வெளியிடப்பட்ட அந்த நூலில் வெகு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சுவரன் சிங் குழுவின் சிபாரிசில்,

''இறையாண்மை வாய்ந்த ஜனநாயக, மத சார்பற்ற, சோஷலிச குடியரசு''

என்று இருக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டதை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அளிக்கப்பட்ட அந்த அறிக்கையில்,

''இறையாண்மை வாய்ந்த, ஜனநாயக, மத சார்பற்ற, சோஷலிச கூட்டாட்சிக் குடியரசு''

என்று அமைய வேண்டுமென இந்தக் குழு வற்புறுத்துகிறது என்று அப்போது தெளிவாகச் சொல்லப்பட்டது. இந்தக் கருத்தை இன்றைய நிதி அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் நாடாளுமன்றத்திலே எடுத்து வாதாடியிருக்கிறார்கள். இதைக் கேட்கவே எனக்கு இன்பமாக இருக்கிறது.

கூட்டாட்சித் தத்துவத்தை ஏற்றுக்கொண்டு விட்டால், தானாகவே மாநில சுயாட்சித் தத்துவமும் அதிலிருந்து பிறந்து விடுகிறது. மாநில சுயாட்சி அமைப்பும் அதோடு இணைந்தது தான். கூட்டாட்சித் தத்துவத்தை ஒப்புக்கொண்ட அமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சுயாட்சியை நாங்கள் ஆதரிக்கவில்லை என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வாதாடினாலும்கூட, கூட்டாட்சியை ஒப்புக்கொண்ட பிறகு, மாநில சுயாட்சியை எதிர்ப்பது, 'எப்படி ஒரு அணு காசுக்குள், காலணாவும் அடங்கியது' என்று அண்ணா அவர்கள் சொன்னாரோ, அதைப்போல் கூட்டாட்சித் தத்துவத்தில் மாநில சுயாட்சியும் அடங்கியிருக்கிறது என்ற காரணத்தினால் கூட்டாட்சி என்ற சொல்லும் அதிலே இருக்கவேண்டுமென்று அன்றைக்கே நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

ஆனால் இப்படி கூட்டாச்சி, சுயாட்சி என்கிற இந்த வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிற நிகழ்ச்சிகள், இவைகள் மக்கள் மத்தியில் பரவிவிடாமல் தடுக்க அல்லது இந்த வார்த்தைகள் தத்துவங்களுக்கு மக்களிடத்தில் செல்வாக்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள, தங்களுடைய பிரச்சார பலம் போதாது என்ற காரணத்தால் தான் நெருக்கடி காலத்திலே தேச விரோத நடவடிக்கைகள் என்ற பெயரால் அதைத் தடுக்க முனைந்தார்கள். 44-வது திருத்தத்தின் மூலம் அந்த நடவடிக்கை இப்போது

தவிர்க்கப்பட்டுவிட்டது. 44-வது திருத்தத்தை ஆதரித்துப் பேச காரணமே, இப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் ஆளாக்கப்படத் தேவையில்லை என்ற மகிழ்ச்சியால் தான்.

ஆயினும் சட்டத்தின் மூலமாக இல்லாவிட்டாலும் இன்றைக்கு பிரச்சாரத்தின் மூலம் நடைபெறுகிறதா இல்லையா என்பதை இந்தஅவையிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திட வேண்டும்.

இந்தி மொழித் திணிப்பு கூடாது என்று நாம் அனைவரும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருமுகமாகக் கருதுகிறோம். நேற்றைய தினம் கோவையில் நடைபெற்ற ஜனதா கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகத்தைப் படிக்கிற நேரத்தில் 'தமிழ்நாட்டில் பிரிவினை பிற்போக்கு சக்திகள் மொழி வெறியைத் தூண்டி விடுகின்றன' என்று தீர்மானத்தின் வாசகம் அமைந்திருக்கிறது. ஆக, தமிழ் மொழி காப்பாற்றப்பட வேண்டும், தமிழர் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டும், அதற்கு வேற்று மொழி ஆதிக்கம் வரக்கூடாது. இந்தி மொழித் திணிப்பை ஏற்க மாட்டோம் என்று சொல்கிற நேரத்தில் அப்படி சொல்லுகிற அனைவரும் பிரிவினைச் சக்திகள், பிற்போக்குச் சக்திகள் மொழிவெறியைத் தூண்டுகிறவர்கள் என்ற வகையில் தமிழ்நாட்டில் ஜனதா கட்சி மாநாட்டில் தீர்மானம் போடப்படுகிறது. நெருக்கடி காலத்தில் சட்டத்தை வைத்துச் செய்தார்கள், இப்போது பிரச்சாரத்தின் மூலம் செய்கிறார்கள். இரண்டுக்கும் இடையே பெருத்த மாறுபாடோ, முரண்பாடோ இருப்பதாகத் தெரியவில்லை.

இன்னொரு நிகழ்ச்சி—12-ஆம் தேதி ஜனதா கட்சித் தீர்மானம் போடுகிற அதே நேரத்தில் புதுடில்லியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி — இந்திரா காங்கிரஸ் அல்ல—காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி அவர்கள் போடுகிற தீர்மானத்திலே 'இந்தியாவிலே ஜனதா கட்சியும், இந்திரா காங்கிரஸும் பிராந்திய, பிற்போக்கு, வகுப்புவாதக் கொள்கைகளைக் கொண்டவை' என்று தீர்மானம் போடுகிறார்கள். தமிழ் நாட்டிலே இந்தித் திணிப்பை எதிர்க்கிறவர்கள் பிரிவினை வாதிகள், பிற்போக்கு வாதிகள், மொழிவெறியைத் தூண்டிவிடுகிற சக்திகள் இன்று இங்கே உள்ளவர்களைப் பற்றி ஜனதா தீர்மானம் போடுகிறது. அதே நேரத்தில், இவர்களைப் பற்றி அதே நாளில் 12-ஆம் தேதி புதுடில்லியில் 'பிற்போக்கு, பிராந்திய வகுப்புவாத சக்திகள்' என்று தீர்மானம் போடப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் காரணம், அரசியல் காலத்திற்கு காலம் எப்படி ஆகாயத்தில் அலைகிற மேகங்கள் அடிக்கின்ற காற்றிற்கு ஏற்ப உரு மாறுகிறதோ அதைப் போலவே மாறுகின்றன என்பதற்கு இவைகள் அடையாளங்கள்

என்றாலும்கூட, ஒரு கட்சியினுடைய கொள்கைகளை கோட்பாடுகளை எடுத்திச் சொல்லுகிற எண்ணங்களை ஒத்துக் கொள்ள இயலாத நிலையில் அதற்கான ஆதாரங்களை, கருத்துக்குக் கருத்து மோத விடுகின்ற நிலைமைகளை எடுத்து வைக்க வேண்டும் என்பதற்காகத் தான் சொல்லுகிறேன்.

ஒட்டு மொத்தமாக பிரிவினை வாதிகள், பிற்போக்கு வாதிகள் மொழி வெறியைத் தூண்டிவிடுகின்ற சக்திகள் என்று கூறுவதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. என்னதான் அரசியல் சட்டத்திலே திருத்தங்கள் செய்தாலும் மையக் கருத்திலிருந்து அகன்றுவிடக் கூடாது. இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு தேசிய இனங்களின் உரிமைகள், பல்வேறு தேசீய இனங்களின் கலாச்சாரங்கள், பல்வேறு தேசீய இனங்களின் பண்பாடுகள் காப்பாற்றப்பட அரசியல் சட்டத்திலே இடம் இருக்க வேண்டும் என்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொன்னேன்—அரசியல் அலைகள் எப்படி காற்றடிக்கின்ற திசையில் எப்படி எல்லாம் மாறுகின்றன என்று குறிப்பிட்டேன்.

இப்போது இருக்கும் வேடிக்கை என்னவென்றால், அருமை நண்பர் உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டியது போல் 42-வது திருத்தம் அனைத்தையும் 44-வது திருத்தம் தீர்த்துவைத்துவிட்டதா என்றால் இல்லை. தீர்த்து வைக்க முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் இருப்பதை நடைமுறையில் நாம் உணர முடியும். அதற்கு நாடாளுமன்றத்தில் எத்தனை வாக்குகளைப் பெறவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவைகளை எல்லாம் கருதி இதை— முள்ளில் போட்ட துணியை மெல்ல மெல்ல எடுப்பது போல இன்றைக்கு ஜனதா அரசு மற்ற எதிர்க் கட்சிகளைக் கூட்டி வைத்து மெல்ல மெல்ல செய்ய முன்வந்திருக்கிறது என்பதற்காகப் பாராட்டைத் தெரிவித்தாலும், இந்திரா காந்தி ஆண்ட நேரத்தில் ஜனதா கட்சித் தலைவர்கள் சொன்னதெல்லாம் 'வெளிநாட்டு அபாயம் இந்தியாவிற்குவந்தால் மட்டுமே அவசர நிலைப் பிரகடனத்தைப் பயன்படுத்த வேண்டும்; உள்நாட்டு அபாயம் என்று சொல்லி அவசர நிலையைப் பிரகடனப்படுத்தக் கூடாது' என்று வலியுறுத்தி வந்தார்கள். இன்றைக்கு நிலைமை அப்படியே தலைகீழாக மாறியிருக்கிறது. எப்படி இருந்தாலும் உள்நாட்டு அபாயம் என்று சொல்லி நெருக்கடி நிலையைப் பயன்படுத்தக் கூடாது என்று அன்று ஜனதா கட்சி சொல்லிற்று.

அன்றைக்கு காங்கிரஸ் கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தது. அன்று நெருக்கடி நிலையைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சி இன்றைக்கு எதிரில் அமர்ந்து கொண்டு, 'வெளிநாட்டு அபாயம் வந்தால் தான்' நெருக்கடி நிலையை அறிவிக்கலாம், உள்நாட்டு அபாயம் என்று சொல்லி நெருக்கடி நிலையை அறிவிக்கக்கூடாது, என்று வாதிடு

கின்ற அளவிற்கு காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது. ஆனுல்
ஜனதா கட்சி தன்னுடைய அன்றைய நிலையிலிருந்து மாற்றிக்
கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-50]

அது மாத்திரமல்ல, நண்பர்கள் பலரும் இங்கே எடுத்து
காட்டியதைப் போலவும் மாண்புமிகு உமாநாத் அவர்களும் திரு.
சுப்பு அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னதைப் போலவும்,
இந்தத் திருத்தங்கள் மட்டும் போதாது, இன்னும் பல திருத்தங்
கள் தேவை. மத்திய மாநில உறவுகளைச் சீர்படுத்த, மத்தியில்
கூட்டாட்சியும் மாநிலங்களுக்கு சுயாட்சியும் தேவை என்ற
அடிப்படையிலே திருத்தங்கள் தேவை அரசியல் சட்டத்திலே
என்பதை நாம் இன்றைக்கு வலியுறுத்திக் கொண்டிருக்கிருேம்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அரங்கநாயகம் அவர்கள்
இங்கே பேசிய நேரத்திலே சொன்ஞர்கள், சிக்கிம் பிரச்சினையில்
எப்படி நடந்து கொண்டீர்கள், நான் திருப்பித் திருப்பிக் கேட்
டக் கேள்விகளுக்கு அன்றைக்கிருந்த முதலமைச்சர் பதில் சொல்ல
வில்லை என்று சொன்ஞர்கள். நான் அந்த நடவடிக்கைக் குறிப்பு
களைப் பார்த்தேன். அன்றையதினம் நான் பதில் சொல்லாவிட்
டாலும் கல்வியமைச்சராகவிருந்த அவை முன்னவராக இருந்த
இன்றைய தினம் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்
கழகத்திலே அவைத் தலைவராக இருக்கின்ற நாவலர் இந்த அவை
யில் ஆற்றிய உரையில் பதில் அளித்து இருக்கிருர், அதை அப்
படியே படிக்கிறேன்.

'மாநில சுயாட்சியை இன்றும் கேட்கிருேம். அன்று எவ்
வளவு அழுத்தந்திருத்தமாக மாநில சுயாட்சி கேட்டோமோ
அப்படியே இன்றும் கேட்கிருேம். இந்தச் சிக்கிம் பிரச்சினைக்குப்
பிறகு அதை இன்னும் அழுத்தந்திருத்தமாகக் கேட்க முடியும்.
எப்படி அரசியல் சட்டத்தை இந்தச் சிக்கிம் இணைப்பிற்காகத்
திருத்தி மாற்றியமைக்கிருேமோ அதே போல் அரசியல் சட்டத்தை
மாற்ற முடியாது என்பதல்ல, மாற்ற முடியும். மாநில
சுயாட்சி உரிமையை நாம் கேட்கலாம். 21 மாநிலங்களுக்கு
மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிருேம். இனிமேல் 22
மாநிலங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டு மென்று கேட்கிற நிலை
தான் வரும்.

மாநில சுயாட்சி கேட்பதற்கும் இந்த சிக்கிம் பிரச்சினைக்கும்
இடையே எந்தவிதமான இடர்பாடும் ஏற்படவில்லை. பாண்டிச்
சேரி, கோவா, டையூ, டாமன் போன்றவை இந்தியாவோடு
சேர்ந்தன. இப்போது சிக்கிம் சேருகிறது. திரு. கே. டி. கே.
தங்கமணி அவர்கள் குறிப்பிட்ட மாதிரி நேபாளம், பூடான்,

திபெத் போன்ற மற்றப் பகுதிகளும் சேர்க்கப்படும் நிலை வந்தால்
நல்லதுதான். அப்போது அவைகளுக்கும் சேர்ந்து நாம் மாநில
சுயாட்சி கேட்கலாம். ஆனுல் அந்தப் பிரச்சினைக்கும் இந்தப்
பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. அது எப்போதும் அழுத்தந்
திருத்தமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. நம்பிக்கை
இழந்துவிட்டோம் என்று சொல்கிருர்கள். 'இடம் மாறினுல்
நம்பிக்கை மாறலாம், சூழ்நிலை மாறினுல் நம்பிக்கை மாறலாம்,
கவனிக்க வேண்டும். 'இடம் மாறினுல் நம்பிக்கை மாறலாம்
சூழ்நிலை மாறினுல் நம்பிக்கை மாறலாம், என்று நாவலர் பேசி
யிருக்கிருர்.

அன்றைக்கு நாவலர் அவர்கள் இதே அவையிலே எடுத்துச்
சொல்லியிருக்கிருர்கள். இது யார் இடம் மாறியதைப்பற்றியோ
எந்தச் சூழ்நிலை மாறியதைப்பற்றியதோ அல்ல, எடுத்து வைக்கப்
பட்ட வாதங்கள், ஆட்கள் பேசுவதல்ல, எடுத்து வைக்கப்பட்ட
அறிவுரைகள், எடுத்து வைக்கப்பட்ட வாதங்கள், வலிவான
வாதங்கள் அப்படியே இருக்கின்றன. அந்த வகையிலே மத்தி
யிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்று நம்முடைய
நிதியமைச்சர் நாடாளுமன்றத்திலே வலியுறுத்திய அந்தக்
கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அந்தக்
கொள்கை வலியுறுத்தப்படுகிற வகையிலே மாநிலங்களிலே
சுயாட்சி அமைகின்ற வகையிலே அரசியல் சட்டம் திருத்தப்பட
வேண்டும்.

தேச விரோத சக்திகள் என்ற பெயர் சூட்டி கட்சியை தடை
செய்து விடக்கூடிய ஆபத்து வந்துவிடுமோ கட்சியைக் காப்பாற்ற
வேண்டுமென்ற முறையிலே அகில இந்திய என்ற சொல்லை அண்ணு
திராவிட முன்னேற்றக் கழகம் என்பதோடு சேர்த்துக் கொள்ள
வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அகில இந்திய என்று சேர்த்துக்
கொண்டாலும் எங்களையும் உங்களையும் சேர்த்துப் பிராந்திய
கட்சிகள் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள்
தருகின்ற பரிசோ, தருகின்ற பட்டமோ, சூட்டுகின்ற பெயரோ
நம்மைப்பற்றிய அவர்களுடைய எண்ணத்தை மாற்றிவிடாது.
அகில இந்திய அளவிலே இருக்கின்ற கட்சிகள்கூட, அகில இந்திய
என்ற அடைமொழியைப் போடுவதில்லை. உதாரணமாக மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உண்மையில் ஒரு அகில இந்திய கட்சியாக
இருந்தபோதிலும் தேவையில்லாமல் அகில இந்திய என்று
சொல்லிக் கொண்டிருப்பதில்லை. ஆகவே இனிமேலாவது அகில
இந்திய என்பது இல்லாமல் அதிலிருந்து மாறி அண்ணு திராவிட
முன்னேற்றக் கழகம் என்ற பெயரிலேயே நீங்கள் வழங்கலாமா
என்று யோசிக்கலாம்.

<u>திரு. ரா. உமாநாத்</u> : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக்
பொறுத்தவரைக்கும் சி.பி.ஐ.(எம்.) என்றுதான் இந்திய கம்யூ
னிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) என்று தான் போடுகிருேம்.

leave to recall, there was the unique feature of the Congress organisation sending out various observers to various States and then make a study of the reasons for their defeat and make a report to the Working Committee. I think there was only one paper that carried the feature—this extraordinary feature of that report, I think Mr. Nimbalkar was sent to one State. Some other Congress Members were sent to other States like that.

The first Working Committee's proceedings where these observers have made their reports would constitute the worst declamation, the worst critiscism, the most damaging and the most denunciatory chapter regarding the activities of the Congress dictatorship from the days of the Emergency or even from the days of the split from 1969 itself. Some of the intellectual friends who have go time to go through these speeches will really agree with me that it constitutes, what I call the most damaging indictment of the Congress tyranny from the days of Emergency right down to the day of total defeat in the general Elections held in March 1977. It is worthwhile preserving that indictment even for future historians, so that they can remind themselves of the worst features of the tyranny and the personal absolutism of these people who dominated the organisation of the Congress and who were responsible for bringing these, what I call the monstrous an ugly distortious in the Indian Constitution which has been devalued and defaced beyond recognition as it were.

Gentlemen, I would like to express one thing. I was one who always felt a tremendous amount of mental unrest, disquiet and unhappiness That is the background of which I am striking a personal note. Amarar Anna and myself, were discussing as early as 1963-64. Probably Anna had the premonition that one day such a tyranny might envelop—such a dark tyranny would envelop the entire country, might sweep his country and sweep away the citizens' rights. So, once he told me Do not bother Narayanaswamy about the citizens' rights about property-when I drafted the entire Constitution of our Human Rights' Association the Indian capitalist or the Indian richmen-the richmen in India—they know how to protect their property—but all other ritghs must be preserved.

Anna had the unique priviledge and distriction of inaugurating this Association and I was an humble spectator in that inaugural ceremony with this background from 1963-64 and with innate love of

human. liberties, you can imagine my mental anguish, disquiet and misery during those twenty months. (interruption) I was one who apprehended a midnight knock sometimes. Fortunately—well, well, well—I have been spared and therefore, I could not dilate on the greater miseries that would befall to one who had been detained.

Again I make my humble submission to this House in expressing my debt of gratitude to the whole-hearted support given to this Resolution which will be certainly conveyed to the Government in the Centre in due course. Thank you.

<u>திரு. எஸ். ஆர். இராதா :</u> பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் இங்கே ஒரு கிளாரிபிகேஷன் கேட்டார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பெயர் வித்தியாசத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர் ஒன்றைச் சொல்லியிருப்பார் என்று நான் ஆசைப்படுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், ஜனதா அரசு இப்பொழுது உள்நாட்டு அபாயம் வந்தால் அவசர நிலைமை வரும் என்று குறிப்பிட்டதைச் சொன்னார்கள். அவர்கள் ஏன் அந்த நிலைமைக்கு மாறியிருக்கிறார்கள் என்று ஜேம்ஸ் அவர்கள் சொல்லியிருந்தால் இந்த அவைக்கு உதவியாக இருந்திருக்கும். நான் பணிவோடு கேட்கிறேன், ஏன் அவர்கள் அப்படி மாறவேண்டிய அவசியம் வந்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பதில் இல்லை.

<u>திரு. நா. சுந்தரராஜ்</u>; பேரவைத் தலைவர் அவர்களே இப்போது நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் எல்லாம் அவருடைய தனிப்பட்ட கருத்துக்களா அல்லது அரசாங்கத்தின் கருத்துக்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> பேரவை முன்னுள்ள கேள்வி :—

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to Clause (2) of Article 368 thereof, proposed to be made by the Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, as passed by the two Houses of Parliament and the short title of which has been changed into 'The Constitution (Forty-Third Amdnment) Act ,1977."

அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

(திரு. ரா. உமாநாத் அவர்கள் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய கைகளைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம். திரு. உமாநாத், அமைச்சரைச் சற்று விடுங்கள். அவர் மானியம் கேட்கப்போகிருர்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Speaker, Sir, Thiru Umanath was so much happy and so pleased with my brief speech that he came to congratulate me, and as a part of culture, I must receive his congratulations with a sense of thanks and gratitude.

(6) 1978–79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

THIRU K. NARAYANASWAMY MUDALIYAR; Sir. on the recommendation of the Governor,

I move that the Government be granted a sum not exceeding Rs. 4,85,71,000 under Demand No. 13 Administration of Justice.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 13—நீதிநிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,85,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, திருமயம் தாலுக்காவில் உள்ள பொன்னமராவதி நகரில் "முகாம் நீதி மன்றம் அமைக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,85,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் அதிக காலம் தள்ளிப் போவதும், பல வழக்குகள் பல ஆண்டுகள் முடிவுபெருமல் இருக்கும் நிலையை அகற்றுதல் பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,85,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,85,71,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(திரு. மு. அம்பிகாபதி அவர்கள் இருக்கையில் இல்லாததால், வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.)

THIRU R. MARGABANDHU; Mr. Speaker, Sir, to discuss about the independence of Judiciary, I move;—

"That the allotment of Rs. 4,85,71,000 under Demand No. 13—Administration of Justice—be reduced by Rs. 100"

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, to discuss above the need to establish a Civil Court at the Taluk Headquarters of Vanayambadi— I move :

"That the allotment of Rs. 4,85,71,000 under Demand No. 13—Administration of Justice—be reduced by Rs. 100"

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Speaker Sir, on the recommendation of the Governor, I move.

"That the Government be granted a sum not exceeding Rs. 5,67,42,000 under Demand No. 14—Jails."

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில் நவீன கழிப்பறைகள் இல்லாததும் வார்டர்களுக்கு நியாயமான வேலை நேரம் இல்லாததும் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,67,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

[1978 மார்ச் 13

திரு. ரெ. வி. சௌந்திரராஜன் அவர்கள் இருக்கையில் இல்லாததால் முன்மொழியப் பெறவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, தண்டனை அடைந்து சிறையிலுள்ள எல்லா அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யாததைப்பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,67,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் ; தலைவர் அவர்களே, நாகர்கோயிலில் இருக்கும் கிளைச் சிறைச்சாலையில் தற்போதுள்ள இடநெருக்கடியைக் கருத்தில் கொண்டு அதைப் பெரிதாக்கத் திட்டமிடாதது குறித்து விவாதிக்க —

"மானியக் கோரிக்கை எண். 14-சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 5,67,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(திரு. சோ. அழகர்சாமி இருக்கையில் இல்லாததால் வெட்டுத் தீர்மானம் முன்மொழியப் பெறவில்லை.)

THIRU R. MARGABANDHU : Sir, to discuss about the importance of separation of Probation Department from Jail Department, I move :

"That the allotment of Rs. 5,67,42,000 under Demand No. 14—Jails—be reduced by Rs. 100."

THIRU M. A. LATHEEF : Sir, to discuss about the need to contain maltreatment of prisons in Jail, I move:

"That the allotment of Rs. 5,67,42,000 under Demand No. 14—Jails—be reduced by Rs. 100."

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr, Speaker, Sir, In respect of both the Demands, I have placed before this House policy statements. I have placed policy statements on both the subjects—Prisons and Administration of Justice* and also a policy statement on Department of Correctional Administration.* They may be taken as read and may be incorporated in the official proceedings.

*319-371-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

1978 மார்ச் 13]

[பிற்பகல் 12-10]

* திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அவை முன் உள்ள சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

" மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை "

என்ற புரட்சிக்கவிஞரின் போர் முழக்கத்தை வாழ்க்கை நெறியாக ஏற்று, செங்கோல் பிடித்து நாடாள்வதையும், இலட்சியத்திற்காக சிறைச்சாலையில் வாடுவதையும் ஒன்றெனக் கருதி, நாட்டுமக்களின் நலனுக்காக உழைக்கும் ஒரு தியாகியை தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள ஒரு இயக்கத்தின் தொண்டன் என்ற முறையில் அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் " மூட்டை சுமப்பவனுக்குத்தான் கழுத்து வலி தெரியும் " என்று குறிப்பிட்டதற்கொப்ப அத்தகைய சிறைவாசத்தைப் பெறக் கூடிய வாய்ப்பு பெற்றவன் என்ற முறையில், பெறுகிறவன் என்ற முறையில், இனிமேலும் பெறலாம் இந்த ஆட்சியில் என்ற வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையில் நான் சில வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

உலக உத்தமர் காந்தியடிகள் அவர்கள் " சிறைச்சாலைகள், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்து நோயைக் குணப்படுத்தும் மருத்துவ மனைகளாகத் திகழவேண்டும் — குற்றவாளிகள் மருத்துவ மனைகளிலுள்ள நோயாளிகளைப் போல் கவனிக்கப்படவேண்டும் " என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். ஆனால், அரசியலில் ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில், மாற்றுக் கட்சியினரைப் பழிவாங்குவதற்கு. தொல்லைகளுக்கு உள்ளாக்குவதற்கு, துயரங்களை ஏற்படுத்துவதற்கு சிறைச்சாலைகளை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தும் ஒரு இடமாக, சிறைக்கூடம் மாற்றுக் கட்சியினருக்கு பலிபீடம் என்று கூறப்படும் வகையில் திகழ்ந்தது என்பதை மிகக் குறிப்பாக நெருக்கடி காலத்தில் தமிழகத்திலே இருந்தவர்கள் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலே இருந்தவர்கள் பெரும்பாலும் உணரக்கூடிய வாய்ப்பினைப் பெற்றார்கள்.

" மத்திய சிறைச்சாலையில் நான்தான் சக்ரவர்த்தி — நான விரும்பும் எதையும் செய்வேன் — எனக்கு எதிராக எவரும் எதையும் செய்துவிட முடியாது என்று சென்னை மத்திய சிறைச்சாலையின் கண்காணிப்பாளராக இருந்த திரு. வித்யாசாகரன் அரசியல் கைதிகளிடம் கூறினார். இது குறித்து அரசியல் கைதிகளின் கூற்றைத் தள்ளிவிடக் காரணம் ஏதும் எனக்குத் தென்படவில்லை " என்று இஸ்மாயில் கமிஷன் அறிக்கையில் 54-ம் பக்கத்தில் குறிப்பிட்டு இருக்கின்றார்.

[திரு. என். கிட்டப்பா] [1978 மார்ச் 13

நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்களைப் பார்த்து அப்படிக் குறிப்பிடுகின்றார் என்றால், அதிலும் குறிப்பாக சிட்டிபாபு, பாலகிருஷ்ணன் ஆகியோர் மரணம் அடையவேண்டிய அளவிற்கு கொடுமைகள் படுத்தப் பட்டனர் என்று சொன்னால், சாதாரண நிலையில் உள்ள கைதிகளாக இருப்பவர்கள் எந்த அளவிற்கு நடத்தப்படுவார்கள் என்பதை நம்மால் உணர முடியும்.

நெருக்கடி காலத்தில் சென்னைச் சிறைச்சாலையில் நடைபெற்ற கொடுமைகளைப் பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட இஸ்மாயில் கமிஷன் தவறுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்று சுட்டிக் காட்டியிருந்தாலும், அவர்கள் எவ்வளவு பெரிய சக்ரவர்த்திகள் என்று சொல்லிக்கொண்டு இருந்தாலும், அத்தகைய மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டிகள் மீது உடனடியாக சட்ட ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று புதிய ஆட்சியை சிரம் தாழ்த்தி மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

சிறைச்சாலைகளை நம்பி எந்த எந்த ஒரு ஆட்சியும் நிலைத்தது இல்லை.

என்னை விட சரித்திரத்தை நன்றாகப் படித்தவர்கள் இந்த அவையில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிக நன்றாக அறிவார்கள். பாஸ்டிலியை நம்பிய 14-ம் லூயி எப்படி வீழ்ச்சி அடைந்தான் என்பதை அறிவீர்கள். பல சிறைச்சாலைகளை ஆட்சிக்கு அரணாக அமைந்திருந்த ஆங்கிலேய சாம்ராஜ்யம் நிலை நிறுத்தப்பட்டதா, ஆகவே, ஜனநாயகத் தத்துவத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிற நாம், இவற்றையெல்லாம் உணர்ந்து, அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றாமல், நல்ல நெறி முறைகளை உணர்ந்து நாட்டுக்கு ஏற்ற வகையில் சிறைச்சாலைகளை, சிறைச்சாலைகளில் உள்ளவர்களை நடத்தவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டுகோள் விடுக்கக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிறைச்சாலைகள் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் இன்றைய அரசு ஒரு குழு நியமித்துள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்னால், நம்முடைய மதிப்புமிக்க காங்கிரஸ் ஆட்சி காலத்தில் கூட சில சீர்திருத்தங்கள் நடந்துள்ளன. அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால், மேலும் பல விரிவான சீர்திருத்தங்களை இயன்ற அளவிற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்து, டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட காலம் வரையில் பல வகையான சீர்திருத்தங்களை நிறைவேற்றியிருக்கிறது.

1978 மார்ச் 13] [திரு. என். கிட்டப்பா]

சிறைச்சாலைக்கு அடிக்கடி சென்று வந்தவன் என்ற முறையில் நான் நன்றாக அறிவேன். திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தவரையில், மனிதர்கள் சிறைக்குச் செல்வதே ஒரு தண்டனைதான் — தண்டனை பெறுவதற்காகச் சிறைக்குச் செல்லவில்லை '' என்ற கருத்துக்கு ஏற்ப பல சீர்திருத்தங்களை மேற் கொண்டது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை]

ஆயுள் தண்டனை கைதிகளைப்பற்றி இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர்களை ஆயுட் தண்டனை பெற்று பத்து ஆண்டுகளில் விடுதலை செய்யலாமா என்பது குறித்து பரிசீலனை செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. கேள்வி நேரத்தின்போது சில நாட்களுக்கு முன்னால் நான் கேட்ட ஒரு கேள்விக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ' தனிக் கேள்வி போடவும் ' என்று சொன்னதாக எனக்கு நினைவு.

1976 ஆம் ஆண்டில் சிறையிலுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்யும் கால அளவைப்பற்றி பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட குழு தனது பரிந்துரையை அளித்தது. அதற்குப் பின்னால் ஜனாதிபதி ஆட்சி தமிழ்நாட்டில் வந்தது. அவர்கள் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அனுப்பிவைக்கப்பட்ட பரிந்துரை, என்று கருதியோ என்னவோ ஜனாதிபதி ஆட்சியில் அதை அப்படியே தள்ளிவிட்டார்கள். மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன்.

பேரவைத் துணைத்தலைவர்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஆயுள் தண்டனை கைதிகள் பற்றி அளிக்கப்பட்ட பரிந்துரைகள் இன்றையதினம் வரையில் மீண்டும் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று அறிகிறேன். அது உண்மையா? உண்மை என்றால் சட்ட அமைச்சரவர்கள் கவனத்திலே கொண்டு அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்யும் கால அளவை பரிசீலனை செய்து, 10 ஆண்டுகளில் விடுதலை செய்ய முடியாவிட்டாலும் அவர்களை 12 அல்லது 13 ஆண்டுகளில் விடுதலை செய்யும் சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கைதிகளுக்கு பரோல் அளிப்பது பற்றி கேள்வி கேட்ட நேரத்தில் சட்ட அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். நடை முறையைப் பார்க்கும்போது எவ்வளவு சிக்கல் இருக்கிறது என்பதை நேரடியாகச் செல்லும்போது நன்கு உணர முடிகிறது. இப்போது புயல், வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் கூட கைதிகளுக்குப் பரோல் அளிக்கப்பட்டது.

[திரு. என். கிட்டப்பா] [1978 மார்ச் 13

பரோல் அளிப்பது பற்றி இங்கே உத்தரவு போடப்படுகிறது. இந்த நாள் முதல் இந்த நாள் வரை 15 நாட்களுக்கு என்று உத்திரவு போடுகிறார்கள். ஆனால் இருக்கின்ற நிலைமை என்னவென்றால், 15 நாள் பரோல் கொடுக்கிறார்கள் என்றால் 13-வது நாள் தான் சிறைச்சாலைக்கு அந்த உத்தரவு கிடைப்பதாகக் கூறப்படுகிறது. உண்மையிலேயே அந்த நிலை இருக்குமானால் அதை பரிசீலிக்க வேண்டும்.

குறிப்பாக, ஆயுள் தண்டனைப் பெற்றவர்களிடம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் குற்றம் புரிந்து உள்ளே வந்திருக்கலாம். அப்படி இருந்தாலும் திருந்திய வாழ்க்கையை மேற்கொண்டு நடத்தும் சூழ்நிலையில் இருக்கும்போது அவர்கள் மேல் பரிவு காட்டி, உரிய நேரத்தில் உத்தரவு சிறைசாலைக்குப் போய் சேர்ந்து, பரோலில் வெளிவர செய்ய ஏற்பாடு வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற மாநிலங்களிலே கைதிகளுக்கு ' கான்டீன் ' வசதி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் இப்போது அந்த வசதி இல்லை. புதிய சட்ட அமைச்சர் — பழைய சட்ட அமைச்சர் விட்டுவிட்டார் — உணவு, சிற்றுண்டி அருந்திக்கொள்கின்ற முறையில் அவர்களுக்கு கான்டீன் வசதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் வேறு காரணத்திற்காக இரண்டரை ஆண்டு சிறைக்குச் சென்று வந்தார்கள். சிறையில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவர்களுக்கே உரிய பாணியில் ஒரு பாட்டாகப் பாடினார்கள். அந்தத் திரைப் படம் '' பைத்தியக்காரன் '' என்று நினைக்கிறேன்.

'' கும்பிடக் கோயிலு மில்லீங்க
அது ஒரு குறையா சொல்லுங்க''

என்று குறிப்பிட்டார்கள். இப்போது சிறையில்திரும்பிப் பார்க்கும் இடங்களில் எல்லாம் கோவில்களைப் பார்க்க முடிகிறது. (குறுக்கீடு) குடந்தை ராதா அவர்களும் இதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்; நானும் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சிறைச்சாலைகளில் மத போதனை நடைபெறுகிறது. அதற்கு இஸ்லாமிய மதத்தவர், கிறிஸ்தவ மதத்தவர், இந்து மதத்தவர் என்று சொல்லிக்கொள்ளக் கூடியவர்கள் — அவர்களுக்கெல்லாம் மதபோதனை செய்ய வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நான் சுயமரியாதை இயக்கத்தின் தொண்டன் என்ற முறையில் கேட்கிறேன். என்னைப்போன்றவர்கள் கைதிகளாக சிறையில் இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டால் மதத் தலைவர்களுக்கு சிறைச் சாலைகளிலே

1978 மார்ச் 13] [திரு. என். கிட்டப்பா]

போதனை வாய்ப்பளிக்கப்படுவதைப்போல் எங்களுக்கும் போதனை செய்யவும் — அதாவது பகுத்தறிவு பற்றிய போதனை அளிக்கவும் வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டுமென்ற கோரிக்கையை, துணைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு சட்ட அமைச்சர் முன் வைக்கிறேன்.

[பிற்பகல் 12—20]

இன்னொன்று சிறைச்சாலைகளிலே நூலகங்கள் இருப்பதாக நாம் பார்க்கிறோம். திருச்சி மற்றும் மற்ற மற்ற மத்திய சிறைச்சாலைகளிலே நூலகங்கள் இருக்கின்றன. அந்த நூலகங்கள் கணக்கிலே தான் இருக்கிறதே தவிர சிறைச்சாலைகளுக்குள்ளே இருக்கின்ற நேரத்தில் பார்த்தால் பெருவாரியான நூலகங்கள் சரிவர இயங்குவது இல்லை.

குறிப்பாக, திருச்சியிலே உள்ள சிறைச்சாலையில் நூலகம் இயங்கவில்லை. அதை நிர்வகித்து வந்தவர் இறந்துவிட்டாரோ என்னவோ தெரியவில்லை அல்லது வேறு எங்காவது சென்றுவிட்டாரோ தெரியவில்லை எனக்குச் சரியாக நினைவு இல்லை. எப்படியோ அந்த திருச்சி மத்திய சிறைச்சாலை நூலகம் இப்போது இயங்காமல் இருக்கின்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தினசரிப் பத்திரிகைகள் வழங்குவது பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூட இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிறைச்சாலையிலே ஒரே ஒரு தினத்தாள் தான் அதாவது தினமணி மட்டும்தான் வழங்கப்படுகிறது. நான் தினமணி வேண்டாம் என்று சொல்லவில்லை. மற்ற பத்திரிகைகளையும் வழங்கலாம். இதற்கொன்றும் நிதி ஒதுக்கீடு அதிகமாக தேவைப்படாது என்று நான் கருதுகிறேன். எனக்குத் தெரிந்த மட்டில் சொல்லுகிறேன். தினமணி வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. மற்ற பத்திரிகைகள் அதாவது முரசொலி, அண்ணா— நான் அண்ணாவையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்— விடுதலை, தீக்கதிர் போன்ற தினசரிப் பத்திரிகைகளையும் படிப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுததபடியாக, சிறு வயது குற்றவாளிகளையும், இளைஞர்களையும்— முதியோர் சிறைகளில் சேர்க்காமல் தனியாக வைத்திட வேண்டுமென்ற கோரிக்கையோடு அரசியல் கைதிகளை அறைக்குள்ளே வைத்துப் பூட்டும் நேரத்தைக் குறைக்கலாம் என்ற ஆலோசனையையும் தெரிவித்துக்கொண்டு— இன்னும் சில நிமி

[திரு. என். கிட்டப்பா] [1978 மார்ச் 13

டங்களில் முடித்து விடுகிறேன்—சிறைக் கைதிகளுக்கு வழங்
கப்படும் உணவில் மாற்றங்கள் செய்து அவர்களுக்குக் கிடைக்க
வேண்டிய உணவு சரிவரக் கிடைத்து வருவதற்கு ஆவன செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கழிவறைகளைப் பொறுத்த மட்டில் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சென்னை—கடலூர் போன்ற
மத்திய சிறைச் சாலைகளில் உருவாக்கப்பட்டதைப் போல
திருச்சியிலும் பிளஷ் அவுட் முறையில் மாற்றி அமைத்திட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய அரசுக்கு அந்த
நல்லதொரு வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பினைப் பயன்
படுத்தி பிளஷ் அவுட் முறையை உருவாக்கித் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலைகளில் ஜாதியின் அடிப்படையில் வேலை
கள் வாங்கப்படுவதாக சில கைதிகள் சொல்கிறார்கள். அது
உண்மையாக இருக்குமானால், அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய
முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறைக் காவலர்களுக்கு பணி நேரம் சற்று அதிகமாக
இருக்கிறது. அதாவது பத்து முதல் 12 மணி நேரம் வரை
என்று இருப்பதை 8 மணி என்ற அள்வில் மாற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொள்வதோடு அவர்கள் பணியாற்றுகின்ற
நேரத்தினையும் 3 ஷிப்டுகளாக ஆக்கவேண்டுமென்றும் அவர்
களுடைய அதிகப்படியான பணிகளுக்கேற்ப போனஸ் தொகை
தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1953-ஆம்
ஆண்டில் கல்லக்குடி போராட்டத்தில் அதாவது டால்மியாபுரம்
என்ற பெயரை கல்லக்குடி என்று மாற்றவேண்டுமென்று எங்
களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை
யில் போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தின்
காரணமாக அவர்கள் 6 மாதம் திருச்சி மத்திய சிறையிலே இருந்
தார்கள். 6 மாதம் என்பது சிலருக்குக் குறைவாகத் தோன்ற
லாம். அந்த ஊரினுடைய பெயரைக்கூட தற்போது கல்லக்குடி
பழங்கானத்தம் என்று மாற்றப்பட்டு வெகு நாட்களாகிறது.
அதனுடைய அடையாளமாக அந்தப் போராட்டத்தின் அடை
யாளமாக கலைஞர் அவர்கள் சிறையில் இருந்த இடத்தில்
வைக்கப்பட்டிருந்த கல்வெட்டு என்ன காரணத்தினாலோ நீக்கப்
பட்டிருக்கிறது. அதை மீண்டும் அந்த இடத்திலே அவர்
இருந்த அந்தப் பகுதியிலே அமைக்கவேண்டுமென்று வேண்டு
கோள் விடுத்து இந்த மன்றத்திலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்
பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

1978 மார்ச் 13]

*THIRU S. V. RAMASWAMY: Hon. Deputy Speaker, Sir, let me first of all have the privilege to express my opinions in English on these two important demands, as I am very much confident that our Law Minister is more conversant with English than with Tamil.

As I am a practising lawyer, having my profession both in Civil and Criminal Courts of Law, I feel it is my utmost duty to contribute my views on these two demands. Before I go deep into these policies, let me not fail to avail this opportunity to comment upon the speech of Thiru Kittappa, who has brought to the notice of the House much of his prison life. In this connection, I would like to stress that I am much thankful to Mr. Kittappa....................

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஆங்கிலம் அந்த அளவிற்குத் தெரியாது. அதிலும் என்னைப் பற்றி சொல்கிறார்கள். என்னைப் பற்றி நான் புரிந்துகொள்வதற்காகவாவது—அவர்களுக்குத் தமிழ் தெரியும் என்றுகருதுகிறேன், நமது சட்டத் துறை அமைச்சர் அவர்களைப்போல் அவர்களுக்குச் சங்கடம் இருக்காது. அவர்கள் தமிழில் பேசினால் எனக்கு உதவியாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்களை இந்த முறையில்தான் பேசவேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. உங்களைப் பற்றி ஒன்றும் தவறாக சொல்லவில்லை.

I can give guarantee.

திரு. எஸ். வி. இராமசாமி: நான் ஆங்கிலத்தில் பேசுவதற்கான காரணத்தைக் கூறியே என் உரையைத் தொடங்கினேன். அதனால், அது எனக்கு இந்த சபை கொடுத்திருக்கிற ஒரு உரிமை என்பதையும் கூறி என் உரையை ஆங்கிலத்தில் தொடருகிறேன்.

As I have said earlier, before I go deep into the matter, I would like to thank Thiru Kittappa. It is well known to all the Hon. Members that within a short span of time, the Government, which is wedded to the principle of justice, has brought forward to the entire world and to this Hon. Assembly, the Ismail Inquiry Commission Report with its decisions thereon. It would clearly show how we are dedicated ourselves to the principles of justice, to the spirit of justice. From that itself it can be found how we are realistic in our principles.

Another aspect, I would like to remind my hon. Friend Thiru Kittappa, is that during their regime, 30,000 cases, baseless cases, motivated cases were filed against A.I.A.D.M.K. volunteers. That itself will show

[Thiru S. V. Ramaswamy] [1978 மார்ச் 13

how we are reasonable in these matters. From this fact, I am confident that my hon. Member, Thiru Kittappa, will not insist further on this point. I need not waste much of my time on this point.

Before I go into..............

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது உரை நிகழ்த்திக்கொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 13,000 வழக்குகள் அந்த இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களுக்கு எதிராக போடப்பட்டதாகச் சொன்னார்கள். ஆதாரத்தோடு, அந்த 13,000 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் நிரூபிக்க தயாரா? அப்படி இல்லை என்றால் தவறான ஒரு அபிப்பிராயம் வெளியில் ஏற்பட்டுவிடும். ஆதாரம் இல்லாமல் பேசினால், துஷ்பிரயோகம் செய்வதை, அதை குறிப்பிலிருந்து நீக்கி விடவேண்டும். ஆதாரம் இருந்தால் பேசலாம்.

THIRU S. V. RAMASWAMY: I would like to inform my hon. Friend, Thiru Ragumankhan, that I said roughly 30,000 cases and not 13,000 cases, baseless cases, motivated cases were filed against A.I.A.D.M.K volunteers during the previous regime.

THIRU RAGHUMANKHAN: On what basis, my learned friend is making that baseless statement?

MR. DEPUTY SPEAKER: Perhaps, he is making them on some baseless basis.

THIRU S. V. RAMASWAMY: I have said roughly 30,000 baseless cases were filed.

THIRU RAGHUMANKHAN: Roughly is not the question.

MR. DEPUTY SPEAKER: Please sit down.

THIRU S. V. RAMASWAMY: Regarding the Policy Note on Administration of Justice, I would vehemently stress the integration of courts.

[பிற்பகல் 12-30]

As regards the implementation of the integration of courts, I am very happy that something is contained in the Policy Note and that the Government have decided to upgrade the post of the Second Class Magistrate to the post of First Class Magistrate and to integrate it with the post of District Munsif.

1978 மார்ச் 13] [Thiru S. V. Ramaswamy]

Then I come to pending cases. Cases have been pending from 1976 and immediate action should be taken to dispose of them and also to integrate the above posts.

Regarding pay, I am very sorry to say that their scales of pay are poo as compared to the pay given to them in other States.

As regards amenities, there must be free furnished quarters for the Magistrates. In this connection I wish to point out that even on holidays like Sundays, they work in the Office and remain there till late in the night.

I am very glad that the importantce of the Second Class Magistrate is being realised but I am very anxious that this Post should be upgraded to that of the First Class Magistrate and their promotional opportunities should be improved. Now there are more number of Second Class Magistrates working in that post for nearly 15 years. Once a Magistrate always a Magistrate and that position is now in vogue.

Regarding the constitution of courts, the Government have accepted the recommendations of the Committee on the Jurisdiction of Courts So far as my constituency, Perambalur is concerned, there has been no functioning of the District Munsif Court there and the poor people have to walk about 70 kms. to go to Thuraiyur to get justice. So there should be a District Munsif Court at Perambalur.

As regards the Bar at Perambalur, as hon. Members know, the Members of the Bar are not able to get amenities. So, the Government should provide amenities for them.

So far as Thuraiyur is concerned, the Committee on Jurisdiction of Courts has recommended the setting up of an Additional First Class Magistrate Court. In this connection I would like to point out that the people in that area have to cross a river to go to Kulithalai and Karur and also spend money to cover a distance of 90 kms. So it is quite necessary that an Additional First Class Magistrate Court should be set up at Thuraiyur.

As regards camp court at Thuraiyur the court staff have to work till 10 O'clock in the night and their work load should be reduced. Also there should be a permanent Criminal Court at Thuraiyur.

Regarding disposal of cases, as one Hon. Member has stated, justice delayed is justice denied. Justice denied means negation of Justice. Even a simple case takes more than a year for disposal and that is because the Police do not bring witnesses to the court early and consequently the poor people suffer. So, the Government should see that these cases are disposed of expeditiously.

Coming to Prisons, more amenities should be provided. In Tiruchirappalli, it is necessary that there should be a separate Ward for women convicts. Also the Canteen should be located separately away from the Bar Association Hall at Tiruchy Sessions Court. With these words I conclude my speech.

திரு. ஓ.சோ. வேலுச்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாகம் சம்பந்தமாக நீதிபதி வரதராஜன் அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டு, அந்த வரதராஜன் கமிட்டி எல்லா மாவட்டங்களுக்கும் சென்று, அங்கே உள்ள நிலவரங்களைத் தெரிந்து, அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருக்கிறதா என்று தெரியவில்லை. அந்த அறிக்கை நமக்கு கிடைக்கவில்லை.

அந்த அறிக்கையைப் பொறுத்தவரையிலே நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிலே இந்த வரதராஜன் கமிட்டி என்ன சொல்லியிருக்கிருர்கள் என்பது தெரியவில்லை. ஆனுல் சில மாதங்களுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, தூத்துக்குடியிலே வழக்கறிஞர்கள் சங்கச் சார்பிலே அவர்களுக்கு ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்த வரவேற்பிலே நெல்லை மாவட்ட நீதி நிர்வாகம் ஒரே மாவட்டமாக இருப்பதினுல், இதை இரண்டாகப் பிரித்து தூத்துக்குடியிலே ஒரு மாவட்ட நீதி மன்றத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிருர்கள். அதை புத்திரிகையிலே நான் பார்த்தேன், மகிழ்ச்சி அடைந்தேன். இது விஷயமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள் நமது சட்ட அமைச்சர் அவர்கள் என்று தெரியவில்லை.

இந்த நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு விதத்திலே ஏற்கனவே எல்லா மாவட்டங்களுக்கும் ஒரு நீதிபதி தான் இருக்கிருர்கள். ஆனுல் இங்கேதான் ஒரு அடிஷனல் டிஸ்ட்ரிக்டு செஷன்ஸ் கோர்ட்டு இருக்கிறது. அதற்கு ஒரு நீதிபதியும் இருக்கிருர். ஆகவே, நெல்லை மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாக இருப்பதினுலே இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தூத்துக்குடியிலே ஒரு மாவட்ட நீதி மன்றம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியை ஒரு நீதி நிர்வாகமாக, மாவட்டமாகப் பெறுகின்றபோது அங்கே கோவில்பட்டி ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே, இப்போது கோவில்பட்டியிலே இருக்கக்கூடியவர்கள் சப்-கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்ருல், தூத்துக்குடிக்குப் போகிருர்கள். ஆகவே, தூத்துக்குடியை ஒரு நீதி மாவட்டமாகப் பெறுகின்ற காலத்திலே

கோவில்பட்டியிலே ஒரு சப்-கோர்ட் டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசுக்கு சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது மாவட்ட முன்சீப் என்று சொல்லியிருக்கிருர்கள். ஆனுல், இந்த டிஸ்டிரிக்ட் முன்சீப் என்று சொல்லக்கூடியது பல நேரங்களிலே அது தவருன பதமாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அதை டிஸ்டிரிக்ட் முன்சீப் என்பதற்குப் பதிலாக, கோட்ட முன்சீப் என்று மாற்றியமைக்க வேண்டும். காரணம், ஒரே மாவட்டத்தில் பல டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புகள் இருக்கிருர்கள். ஆகவே, இந்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப் என்று சொல்லக்கூடியது, மாவட்ட முன்சீப் என்று சொல்லக்கூடியது தொடர்ந்து ஒரு கன்வென்ஷனுக இருந்து வருகிறது. ஆகவே, அதை மாற்றியமைக்கவேண்டும்.

நான் சென்ற ஆண்டே, இந்த நீதி நிர்வாகத்தைப் பற்றிப் பேசுகின்றபோது ஒட்டப்பிடாரத்திலே இரண்டாவது வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டேன். காரணம், வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் அங்கே வழக்கறிஞராக வேலைப்பார்த்தார்கள். அது சரித்திர பிரசித்தி பெற்ற இடம். ஆகவே, அவர்களுடைய நினைவாக அங்கு ஒரு இரண்டாவது வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு ஒன்று இருக்கவேண்டும். இதை நான் சென்ற ஆண்டே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே மிகவும் பணிவுடன் கேட்டேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பொன்னமராவதியிலிருந்து திருமயம் 30 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. திருமயத்திலே இருக்கிற இரண்டாவது வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு, பொன்னமராவதிக்கு கேம்ப் கோர்ட்டாக வாரத்திற்கு ஒன்றிரண்டு நாட்கள் மட்டும் வருவதாக இருந்தால், அது அந்தப் பகுதிக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்கிற கருத்தினையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-40]

அடுத்தபடியாக, ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்பட்டிருப்பதாக இங்கே கொடுக்கப்பட்ட புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் மிகவும் வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் சாராயம் வடிப்பது சம்பந்தமான வழக்குகள் எல்லாம் இரண்டாவது வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காரணம் என்னவென்ருல், தமிழ்நாடு ப்ரொகிபிஷன் ஆக்டில் 4 (1) (பி) என்ற பிரிவின்கீழ் மதுவிலக்குக்

[திரு. ஓ. சோ.வேலுச்சாமி] [1978 மார்ச் 13

குற்றம் செய்தவர்களை, சாராயம் வடித்தல் போன்ற குற்றங்
களைச் செய்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிறார்கள். ஆனால்
இப்படிப்பட்ட குற்றங்களை கிராமங்களில் யார் யார் செய்கிறார்
கள், யார் யார் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதை ஆங்காங்கு
இருக்கக்கூடிய கிராம மக்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள்.
தற்போதுள்ள முறையில் சாராயம் வடிப்பவர்களுக்கு எவ்வளவு
தான் கடுமையான தண்டனைகள் கொடுத்தாலும் ஆண்டுக்கு ஆண்டு
அந்த எண்ணிக்கை வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. போன
வருஷத்தைவிட இந்த வருஷம் அதிகமாக இருக்கிறது; இந்த
வருஷத்தைவிட அடுத்த வருஷம் அதிகமாகப் போகிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு நியாயப் பஞ்சாயத்தை
ஏற்படுத்தி பல சிறிய வழக்குகளை (பெட்டி கேசஸ்) அவர்கள்
பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்குவதோடு கூட, இந்த மாதிரி
சாராய கேஸ்களைக்கூட "நியாய பஞ்சாயத்து" களுக்கு,
பஞ்சாயத்து அளவில் கொடுத்தால் இதை என்னுடைய கருத்
தாகச் சொல்லுகிறேன். உண்மையாக சாராயம் காய்ச்சுபவர்
களைத் தெரிந்து வைத்திருக்கக்கூடிய அவர்கள் தண்டனை கொடுக்க
வாய்ப்பாக இருக்கும். இதன் மூலம் சாராய வடிப்பே ஒழிந்து
போகக் கூடிய நிலைமை ஏற்படும். தற்போது கோர்ட்டுகளில்
வழக்குகள் நடக்கும்போது போலீஸ்காரர்களுக்குப் பயந்துக்
கொண்டும் சாட்சி சொல்லலாம் சாராயம் வடிப்பவர்களுக்குப்
பயந்து கொண்டும் சாட்சி சொல்லலாம். ஆகவே, நியாய
பஞ்சாயத்தாரிடம் சாராய வடிப்பு வழக்குகளைக் கொடுத்தால்
நிச்சயமாக சாராயம் வடிப்பது ஒழிந்துவிடும்.

இரண்டாவது வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில்
ஏராளமான வழக்குகள் இருக்கின்றன. இந்தச் சுமை அதிக
மாகிக் கொண்டே இருக்கிறது. இரவு ஏழு, எட்டு மணி
வரை நீதிபதிகள் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். முன்பு
கவுரவ மாஜிஸ்ட்ரேட் என்று இருந்ததை தற்சமயம் எடுத்து
விட்டார்கள். ஹானரி பஸ்ட் கிளாஸ், செகண்ட் கிளாஸ்
ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட்ஸ் என்று ஏற்படுத்திக் கொடுத்தால்
இவர்களுடைய சுமை குறையும் என்பதையும் இந்த அரசுக்குத்
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் இரண்டொரு கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன். சிறைச்சாலை அதிகாரிகளைப்
பொறுத்தவரை போலீஸ் ட்ரெயினிங்கைவிட கரெக்ஷனல்
ட்ரெயினிங் அதிகமாகக் கொடுக்க வேண்டும். தற்போது அங்கு
இருக்கக்கூடிய அதிகாரிகள் போலீஸ்காரர்களைப் போலவே மனோ
பாவத்தில் செயல்படுகிற நிலைமை இருக்கிறது. சிறைச்சாலை
களில் ஏற்பட்ட நிலைமைகள் பற்றி மாண்புமிகு கிட்டப்பா அவர்
கள் சொன்னார்கள். அதுபோன்ற நிலைமைகள் ஏற்படக்

1978 மார்ச் 13] [திரு. ஓ. சோ. வேலுச்சாமி]

காரணமே போலீஸ் ட்ரெயினிங் அதிகமாக இருப்பதுதான்.
ஆகவே, அவர்களுக்கு கரெக்ஷனல் ட்ரெயினிங் கொடுப்பதுபற்றி
அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே சிறைச்சாலை
களைப் பார்க்க மாநில ஆலோசனைக் குழு என்று அமைத்திருந்தார்
கள். அந்தக் குழுவில் இருந்த அங்கத்தினர்களைப் பார்த்தால்
சிறைச்சாலை நிர்வாகத்தில் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக்
கழகத்திற்கு எந்த அளவுக்கு அக்கறை இருந்தது என்பது தெரிய
வந்தது. நான் அதை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்,
அதே நேரத்தில் அதைச் சொல்ல வருத்தமாகவும் இருக்கிறது.

சினிமாத் துறையில் இருந்த திருமதி மாடி லட்சுமி என்ற
அம்மையார் அவர்களை சிறைச்சாலை ஆலோசனைக் குழுவில் 1974-
ஆம் ஆண்டில் போட்டிருந்ததாகத் தகவல் கிடைத்தது. ஆகவே
தான் சிறைச்சாலை நிர்வாகம் மிகவும் மோசமடைந்து இருக்கிறது
என்று தெரிகிறது. இப்படிப்பட்டவர்களை எல்லாம் ஆலோசனைக்
குழுவில் நியமித்தால் எப்படி சிறைச்சாலை நிர்வாகம் நன்றாக
இருக்கும்? ஆகவே, சிறைச்சாலை நிர்வாகத்தைப் பாழ்படுத்திய
வர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெரும் பங்கு
உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்
பட்டது.)

திரு. பி. எச். பாண்டியன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த நீதி நிர்வாக மானியத்தில் என்னைப் பேச
அழைத்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நீதி நிர்வாகம் சாதாரண மனிதனோடு அன்றாடத் தொடர்பு
கொண்டிருக்கின்ற காரணத்தால் அதைச் சற்று விமர்சனம்
செய்து என்னுடைய உரையை ஆற்ற விரும்புகிறேன். சாதாரண
மனிதன் ஒருவன் நீதிமன்றத்திற்கு வருவானேயானால் அவனுக்கு
நீதிமன்றத்திற்கு செலவு செய்ய வேண்டிய தொகை, நீதி
மன்றத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணம், வழக்கறிஞர்
களுக்குக் கொடுக்க வேண்டிய பீஸ் இவை எவ்வளவு என்பதை
மனத்திலே கொண்டு பார்த்தால் சாதாரண மனிதன் இன்றைய
தினம் தன்னுடைய ஒரு சிறிய வழக்கிற்காக எத்துணை துன்பங்
களுக்கு உள்ளாகிறான் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய தமிழகத்திலே பல்வேறு நீதிமன்றங்களிலே பல்
வேறு வழக்குகள் பல ஆண்டுகளாகத் தேங்கிக் கிடக்கின்றன.
சென்னைக்கு வருகை தந்த மத்திய சட்டத் துறை அமைச்சர்
திரு. சாந்தி பூஷன் அவர்கள் ஒரு வழக்கைத் தொடர்ந்து ஒரு
ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே சிறிய நீதிமன்றத்திலிருந்து உச்ச
நீதிமன்றம் வரையிலும் சென்று முடித்துவிட வேண்டுமென்று
எடுத்துச் சொன்னார்கள். சில வழக்குகள் சட்டத் தாமதத்தாலும்

[திரு. பி. எச். பாண்டியன்] [1978 மார்ச் 13

சில வழக்குகள் நீதிமன்றத் தாமதத்தாலும் வழக்குகள் தேங்குகின்றன என்று சொன்னார்கள். சட்டத்தினால் ஆகும் தாமதத்தைத் தவிர்ப்பதற்காக நம்முடைய அரசாங்கம் எந்த வகையிலே அவைகளைத் துரிதப்படுத்த வேண்டுமோ அந்த வகையிலே துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமன்றங்களிலே ஏற்படுகின்ற குறைகளைத் தீர்க்கின்ற பொறுப்பு அரசிடம் இருக்கிறது. முன்பு நம்முடைய மாநிலத்திலே எத்தனை நீதிமன்றங்கள் இருந்தன என்பதையும் இப்போது எத்தனை நீதிமன்றங்கள் செயல்படுகின்றன என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். சென்ற மானியக் கோரிக்கையின்போது 95 மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள் இருந்ததாக அறிக்கையிலே தெரிவித்தார்கள், இந்த ஆண்டு நான் பார்க்கிறபோது 10 நீதிமன்றங்கள் குறைந்து 85 நீதி மன்றங்கள்தான்செயல்படுகின்றன. வழக்குகள் அதிகரிக்கின்றன இந்த நேரத்திலே நீதிமன்றங்கள் அதிகரிக்க வேண்டும், இந்த நிலைமையில் எப்படி ஏழை எளிய மக்களுக்கு நீதியை விரைவில் வழங்க முடியும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, நீதிமன்றங்களை மக்களின் தேவைக்கு ஏற்ப அடிப்படைக்கு ஏற்ப அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அறிக்கையைப் படிக்கிற நேரத்திலே சென்னை உயர்நீதி மன்றத்திலே 22 நீதிபதிகள் இருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்டப்படுகிறது. ஆனால் உண்மையிலேயே செயலாற்றுகிறவர்கள் 19 நீதிபதிகள் தான். இன்னும் 3 இடங்கள் காலியாக இருக்கின்றன. அலகாபாத்திலே 52 நீதிபதிகள் இருக்கிறார்கள். ஒரிஜினல் சைட் என்று எடுத்துக் கொண்டால் 12 நீதிபதிகள் அங்கே உட்காருகிறார்கள். ஆனால் சென்னை உயர்நீதி மன்றத்தினை எடுத்துக் கொண்டால் 50 ஆயிரம் வழக்குகள் நடத்தப்படுகிற இடத்திலே அப்படிப்பட்ட நிலைமை இல்லை, சிறிய டெல்லியை எடுத்துக்கொண்டால் அங்கே 21 நீதிபதிகள் இருக்கிறார்கள். நம்முடைய பரந்த சென்னையை மாநிலத்திலே அது போன்று அதிகமான நீதிபதிகளை ஏன் நியமிக்க முயற்சி செய்யக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய நீதிபதிகள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள். இதற்கு முன்னாலே நீதிபதிகள் நியமனம் பற்றிய விமர்சனங்கள் செய்யப்பட்டன. நீதிபதிகளை நியமிப்பதுபற்றி சட்ட நிபுணர்களும் உச்ச நீதி மன்ற நீதிபதிகளும் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு ஜுடிஷியல் கமிஷன் அமைத்து அவர்கள் மூலமாக நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்குக் காரணம், 100க்கு 95 வழக்குகளில் அதன் ஒரு லிட்டிகன்ட் ஆக, வாதியாகவோ அல்லது பிரதிவாதியாகவோ அரசாங்கம் இருக்கிறது. அப்படி வாதியாகவோ அல்லது பிரதிவாதி

1978 மார்ச் 13] [திரு. பி. எச். பாண்டியன்]

யாகவோ இருக்கிற அரசு நீதிபதிகளை நியமிப்பது சரியல்ல என்பதை எடுத்துக் காட்டினார்கள். ஆகவே, இதுபோன்ற ஜுடிஷியல் கமிஷன்களை நியமிக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகள் எந்த நிலையில் நடத்தப்படுகிறார்கள் என்பதையும் எப்படி நெருக்கடியில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னாலே ரிட் மனு உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்ய வேண்டுமென்றால், ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு, 25 ரூபாய் கட்டணம் செலுத்தினால் போதுமென்ற நிலைமை இருந்தது, ஆனால் தி.மு.க. ஆட்சியிலே அது 100 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அப்படி உயர்த்தப்பட்டதால் ஒரு ஏழை எளிய குடிமகன் எப்படி நீதிமன்றத்திற்குச் சென்று தன்னுடைய உரிமையைப் பாதுகாக்க முடியும் என்று பார்க்க வேண்டும். பெந்தம் என்ற அறிஞர் சொல்கிறார் Justice should not be sold என்று. நீதியை விலைக்கு விற்கக் கூடாது என்று சொல்கிறார் 25 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்துவது நீதியின் விலையை அதிகரிப்பதாகத்தான் பொருள்படும்.

[பிற்பகல் 12-50]

Justice should not be sold

அதை நாம் இந்த நேரத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள் நீதிமன்றங்களில் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தை, ஏழை எளியவர்களுக்குச் சாதகமாக இருப்பதற்காக பல்வேறு துறைகளிலும், பல்வேறு மனுக்களுக்கும் குறைக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இதுவொரு முக்கியமான பிரச்சினை என்பதால் ஆளுங்கட்சியைச் சார்ந்த நாங்கள் ஏதோ ஒருசில நேரத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஆகவே, தலைவரவர்கள் இன்னும் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் அளித்தால் சபைக்கு இலகுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து பலபேர் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே, நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள.

திரு. பி. எச். பாண்டியன் : இங்கே நம்முடைய மாநில சட்ட அதிகாரிகள் என்ற வகையில் அட்வகேட்-ஜெனரல், பப்ளிக் ப்ராசிகியூட்டர். கவர்ன்மெண்ட் ப்ளீடர் என்று அரசால்

[திரு. பி. எச். பாண்டியன்] [1978 மார்ச் 13

நியமிக்கப்படுகிறார்கள். இதுபற்றி நான் ஒன்றை இந்த நேரத்
தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி அரசால் நிய
மிக்கப்படுபவர்கள், அரசின் அதிகாரத்தைப் பெறுபவர்கள்,
அவர்கள் அவர்களுடைய ஆற்றலுக்கேற்ப அதிக ஊதியத்தைப்
பெறுவதால் அவர்கள் தங்கள் ஆற்றலையும், அறிவையும் தனி
மனிதனுக்காக இந்தப் பதவியை பயன்படுத்தக்கூடாது என்ற
விதியை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு சட்டத்துறை
அமைச்சரவர்கள் அரசுக்குக் கூற வேண்டுமென்பதை இந்த
நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

'டீ-சென்டரலைசேஷன் ஆஃப் கோர்ட்ஸ்' என்று [illegible]த்தில்
[illegible]. டீ-சென்டரலைசேஷன் [illegible] சொல்லு
[illegible] இடத்தில் குவிந்து, பரவலாக்கப்படாமல்
இருப்பதால் ஏழை மக்கள் அணுகமுடியாமல் இருக்கிறார்கள்.
கோவை மாட்டத்தை நிர்வாகத்திற்காக அவர்கள் இரண்
டாகப் பிரித்தார்கள். தஞ்சை மாவட்டத்தையும் இரண்டு
மாவட்டங்களாக நிர்வாகத்திற்காகப் பிரித்தார்கள். ஆனால்
அந்த இரண்டு மாவட்டங்களுக்கு நீதிமன்றங்கள் நிறுவப்படா
மல் இருக்கின்றன. அதை அரசு கருத்திற்கொண்டு இப்படிப்
பட்ட பரந்த இடங்களில் பெரிய நீதிமன்றங்களை நிறுவ வேண்டு
மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் அவர்
களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி இலகுவாகக் கிடைக்கவேண்டும்.
அதைக் கருத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் சாம்யூல் பட்லர்
என்பவர் கூறிய கருத்தையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்.
Justice though painted blind to the weaker section inclined
என்று சொல்லியிருக்கிறார். எனவே, தாழ்த்தப்பட்ட மக்க
ளுக்கு, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி சரியான முறை
யில் கிடைக்க வேண்டுமென்று உறுதியாகக் கூறிக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்:

அதுமட்டுமல்ல, சுமார் ஏழாண்டுகளுக்கு முன்பு 'ஜுரிஸ்
டிக்ஷன் கமிட்டி ஆன் கோர்ட்ஸ்' என்று போடப்பட்டது. நான்
நினைக்கிறேன், உயர்நீதி மன்ற நீதிபதி மாண்புமிகு வரதராஜன்
அவர்கள் அதில் நியமிக்கப்பட்டார்கள் என்று. தமிழகம் முழு
வதும் அந்தக் கமிட்டி சென்று, நிலைமைகளுக்கு ஏற்ப, ஜுரிஸ்
டிக்ஷனுக்கு ஏற்ப அமைக்க வேண்டுமென்று பரிந்துரை
அளித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பரிந்
துரையை இந்த அவையின் முன்னால் வைத்து, அவையிலுள்ள
உறுப்பினர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 13] [திரு. பி. எச். பாண்டியன்]

நம்முடைய தமிழகத்தில் 60 ரெவின்யூ டிவிஷன்கள் இருக்கின்
றன. கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி நான் ஒரு
சிலவற்றைக் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். குறிப்பாக
சேரன்மாதேவி பெரிய டிவிஷன்; ஹெட்குவார்ட்டராக ஐம்பது
ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. அந்த ஒரேயொரு
ஹெட்குவார்ட்டரில்தான் நீதிமன்றம் அமைக்கப்படாமல் இருக்
கிறது. மற்ற ஹெட்குவார்டர்களில் நிறுவப்பட்டிருக்கின்றன.

சுதந்திர காலத்திற்கு முன்பு ஆங்கிலேயர் சப்-கலெக்டராக
இருந்திருக்கிறார். அவர்கள் பர்ஸ்ட் கிளாஸ் ஜுடீஷியல் பவர்
எக்சர்ஸைஸ் செய்திருக்கிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு
நீதியையும் நிர்வாகத்தையும் பிரிப்பதற்கு முன்பு, அங்கே நீதி
ஓச்சிய காரணத்தினால், சேரன்மாதேவியில் இரண்டாவது வகுப்பு
மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டையும், ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட்
டையும் ஒரு பர்ஸ்ட்-கிளாஸ் கோர்ட்டையும் அமைக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், முதலாவது வகுப்பு
குற்றத்திற்காக அங்குள்ள மக்கள் நீதி கிடைக்க வேண்டு
மென்றால் 60 மைல்கள் சென்று செங்கோட்டைக்குப் போக
வேண்டும். காலை 6 மணிக்குக் கிளம்பி 11 மணிக்குச் சென்று
நீதிக்காக போராட வேண்டியிருக்கிறது என்பதை இந்த அரசு
கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

*திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள், நீதி நிர்வாகம் ஆகிய மானி
யங்கள்மீது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான்
ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நமது சிறை நிர்வாகத்தில் இன்னும் கடந்த ஏகாதிபத்திய நடை
முறை தான் இன்னும் இருக்கிறது என்று கூறவேண்டும்.
ஏனென்றால், இன்றையதினம் சிறைகளிலே அவ்வளவு கொடுமை
கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைப் போக்குவதற்காக,
இந்த அரசானது நமது மதிப்பிற்குரிய ஈ.எம்.எஸ். நம்பூதிரி
பாத் அவர்கள் 1957-வது ஆண்டிலே, கேரளாவிலே திறந்த
வெளிச் சிறைகளைக் கொண்டு வந்ததைப் போல் கொண்டு வர
வேண்டும். அந்தமாதிரி சிறைகள் தமிழகத்திலே ஒன்றிரண்டு
இருப்பதாக அறிகிறேன். அந்தமாதிரி நாடு முழுவதும் நீங்கள்
திறந்த வெளிச்சிறைகளைக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிளைச் சிறைகளை எடுத்துக் கொண்டால், இன்றைய
தினம் தமிழகத்திலே இருக்கக் கூடிய 134 சிறைகளிலே, 25
சிறைகள் மட்டும் மத்திய சிறை நிர்வாகத்தின் கீழ் இருப்ப
தாகவும், மீதமிருக்கிற 109 கிளைச் சிறைகள் மாவட்ட

கலெக்டர்களுடைய நிர்வாகத்தின்கீழ் இருப்பதாகவும் சொல்லப் படுகிறது. அதனால்தான், இன்றையதினம் மாநிலத்தில் கிளைச் சிறைகளில் நடக்கக் கூடிய கொடுமைகள், சிறை நிர்வாகத்தில் நடக்க வேண்டிய முறையில்லாமல், போலீஸ் ஸ்டேஷனில் எப்படி நடக்குமோ, அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறைச் சாலைகளிலே, 'ஃபிளஷ் அவுட்ஸ்' வசதி செய்து கொடுக்க வேண்டும். சிறைச்சாலைகளிலே தேவையான வசதி களை, படிப்படியாக செய்து தருவதாகச் சொல்லிவருகிறார்கள். ஓரே சமயத்தில் அப்படிச் செய்தால் செய்து முடிக்க பல பத்து ஆண்டுகள் பிடிக்கும். எனவே, செலவைப் பாராமல், உடனடியாக, அனைத்துச் சிறைகளிலும் அந்த வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்ட நாட்களாகச் சிறையில் இருப்பவர்களுக்குத் தொழில் பயிற்சி கொடுப்பதாகவும், அவர்கள் வெளியே வரும்போது தொழில் கற்று வருவதாகவும் சொல்கிறார்கள். அவர்களுக்கு வெளியே வரும்போது, உதவித் தொகை கொடுத்தால், அவர் களுடைய எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன்: அவையிலே எல்லோருக்கும் சாக் லேட் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. எங்கள் பக்கம் ஒன்றும் வரக் காணோம். என்ன காரணத்திற்காக சாக்லேட் வழங்கப் படுகிறது என்று தெரிவிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சாக்லேட் வழங்கு வதாகச் சொல்கிறீர்கள். எனக்கே வரவில்லை. யார் வழங்குகிறார் கள்?

திரு. நா. பழனிவேல்: ஜென்ம தண்டனைக் கைதிகளுக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு, பரிசீலனை செய்வதாகவும், அதுவும் கூட, அவர்கள் நிலைமையைப்பற்றி, அவர்கள் தொகுதியிலே, ஊரிலே விசாரணை செய்து, போலீஸ் அதிகாரியிடம் விசாரணை செய்து, விடுதலை செய்வதாகச் சொல்கிறார்கள். அவர்கள் ஒழுக்கத்தைப்பற்றி, சிறையிலே அவர்கள் நடந்துகொண்டதை வைத்து மட்டும் பரிசீலித்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டும். ஊரிலே. அவர்களுக்கு எதிரிகள் இருப்பார்கள். போலீசார் போட்ட கேஸ். ஆகவே அவர்கள் நல்ல முறையி லே விசாரித்து நடந்துகொள்வார்கள் என்று நம்ப முடியவில்லை. அதோடு, தண்டிக்கும்போது ஒரு போலீசார் இருந்திருப்பார். விசாரிக்கும் போது வேறு ஒரு போலீசார் இருந்திருப்பார்.

ஆகவே, குழப்பமான நிலைமை வந்திருக்கிறது. ஆகவே, சிறைக் குள்ளே உள்ள நடவடிக்கையை வைத்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறையிலே உள்ள வார்டர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு, சப் இன்ஸ்பெக்டருக்குக் கொடுக்கும் சம்பளம் அளவுக்கு உயர்த்திக் கொடுத்தால், அவர்கள் உணவிலே கலப்படம், கையாடல் செய்யாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே, வார்டர்களுக்கு 8 மணி நேரமே வேலை கொடுத்து, மீதி நேரத்திற்கு மற்ற பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற போராட்டங்களிலே கலந்துகொண்டு தண்டனைப் பெறுகின்றவர்களை அரசியல் கைதி களாக நடத்த வேண்டுமென்று நான் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், சிறையில் அவர்களுக்கு என்ன வசதி என்பது பற்றி, சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு செக்ஷனைப் போட்டு விடுகிறார் கள் போலீஸ் அதிகாரிகள். உள்ளே போனால், உங்களுக்கு அந்த செக்ஷன் கிடையாது, நாங்கள் எப்படி உங்களை அரசியல் கைதிகளாக நடத்துவது என்று கேட்கிறார்கள். ஆகவே, அரசியல் கைதிகளை, அரசியல் கைதிகளாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஜெயிலிலே, சீர்திருத்தக் கமிட்டிகளை உடனடியாக நியமிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜெயில் நிர்வாகம் ஒழுங்காக நடக்கும். நல்ல வசதி கிடைக்கும்.

அதேபோல், இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் கள், தமிழகத்திலேயிருக்கிற அத்தனை சிறைச்சாலைகளையும் பார் வையிட சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். எல்லாச் சிறைச்சாலை களையும் பார்வையிட சந்தர்ப்பம் கொடுத்தால்தான், அவற்றை முன்னேற்ற நல்ல ஆலோசனை வழங்க முடியும்.

சிறையிலே சாதாரணமானவர்கள் ரிமாண்டிலே வைக்கப்படு கிறார்கள். சிறையிலே வைக்க வேண்டுமென்பதற்காக ஏதோ காரணம் காட்டி கேஸ் போடக் கூடாது. சிறைக்குப் போனவர் கள், நீதிபதியிடம் கொண்டு வரப்படாமலேயே, ரிமாண்டில் நீடிக்கப்படுகிறார்கள். அதைக் கேள்விப்பட்டால், மிகவும் கொடுமையாக இருக்கிறது. நான்கூட மதுரைச் சிறையி லிருந்தபொழுது, பலபேர்கள் என்னிடம் சொன்னார்கள், இரண்டு மாதம் ஆகிறது, மூன்று மாதம் ஆகிறது. வாய்தா தேதி கூட எங்களுக்குத் தெரியவில்லை; வெளியே போனால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும், நீதிபதியின் முன்னால் கொண்டு வரப்படாமல் ரிமாண்டில் நீடிப் பதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏழை, எளியவர்களுக்கு வாதாட வக்கீல்கள் இருப்பதாகச்
சொல்லியிருக்கிறார்கள். எந்த வக்கீல், எங்கே இருக்கிறார்,
விலாசம் என்ன என்று எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்குக்
கூடத் தெரியவில்லை.

(பிற்பகல் 1-00)

ஆகவே, அந்த வகையில் அவர்கள் இன்னின்ன இடத்தில்
இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் இது என்று எல்லா
கோர்ட்டுகளிலேயும் போர்டு வைத்தால் ஏழை எளிய மக்களுக்கு
உதவி செய்யக்கூடிய முறையிலே இருக்கும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து 3 மாதங்கள், 4 மாதங்கள் தண்டனை பெற்ற கைதி
களை எல்லாம் சப்ஜெயிலிலேயே வைத்திருக்கிறார்கள். உதாரண
மாக, என்னுடைய தொகுதியிலே பழனியில் உள்ள சப்ஜெயிலில்
நான் சென்று பார்த்தபொழுது, 40 கைதிகள் இருக்கவேண்டிய
அந்தச் சிறையில் 96 பேர்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள்.
ஒவ்வொரு அறையிலும் 10 பேர்கள் 8 பேர்கள் அடைப்பட்டிருந்
தார்கள். குறிப்பாக தாய்மார்கள் 4 மாதம்,
3 மாதம் தண்டனை பெற்றவர்கள், 2 மாதங்களாக அங்கேயே
வைத்திருக்கிறார்கள்.

இன்னொரு கொடுமை என்னவென்றால், அங்கு தாய்மார்கள்
வைத்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு 2 வருடம் 3 வருடம் ஆன
அந்தக் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பது இல்லை. இது
சரிதானா என்று கேட்க விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

அதேபோல இன்றையதினம் 25 வயதுக்குக் கீழ்பட்ட சிறுவர்
களை சிறையில் இருந்து குற்றவாளியாக தீர்ப்பு வழங்குவதற்கு
முன்பு அவர்களுக்கென்று ஒரு கோர்ட்டு இருப்பதாகச் சொன்னார்
கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், முதன்முதலாக
குற்றம் செய்து கோர்ட்டுக்கு வந்த இவர்களை கேஸ் போடாமல்
ஒரு மாதம் 15 நாட்களுக்கு கோர்ட்டில் வந்து கையெழுத்து
போட்டுவிட்டு வந்தால் போதும் என்ற புதிய முறையை இந்த
அரசு கொண்டுவர வேண்டும். ஏனென்றால் ஒரு தடவை குற்றவாளி
என்று ஒத்துக்கொண்டால், அவனை வாழ்நாள் முழுவதும் குற்ற
வாளியாகவே ஆக்குகின்ற முயற்சியில் சிறைச்சாலையினரும்,
போலீசாரும் இருப்பார்கள் என்பது உங்களில் பலருக்குத் தெரியும்.
எனவே முதல் குற்றவாளிகளுக்கு முதல் சந்தர்ப்பத்திலே அவர்
களுக்கு "கன்டிஷன் பெயில்" என்கின்ற முறையில் ஒரு மாதம்
15 நாட்கள் கையெழுத்துப் போடும்படி வசதி செய்து தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறையிலே கொடுக்கின்ற உணவை எடுத்துக் கொண்
டால் இங்கே சொல்கிறார்கள், புட்டு கொடுக்கப்படுகிறது, இட்டிலி
கொடுக்கப்படுகிறது என்று. ஆனால் மதுரை சிறையிலே நான்
இருந்த நேரத்தில் கொடுத்த இட்டிலி மனிதன் சாப்பிடுவானா
என்பதைப் பார்க்கவேண்டும். அந்த இட்டிலியை எடுத்துச் சுவற்
றிலே எறிந்தால், சுவர்தான் உடையும், ஆனால் இட்டிலி உடை
யாது. அந்த இட்டிலிக்கு சர்க்கரை கொடுக்கிறார்கள். இட்டி
லிக்கு யாராவது சர்க்கரை தொட்டு சாப்பிடுவார்களா? இதை
நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக புட்டு கொடுக்கிறார்கள். அதில் சரிபாதி
மணல் இருக்கிறது. அதை எல்லாம் போக்கி நியாயமான
சுத்தமான உணவைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,
சிறைத் தண்டனை அனுபவிப்பது என்பது வேறு, பட்டினி கிடந்து
சாவது என்பது வேறு. எனவே நீங்கள் உணவை நல்ல முறை
யிலே கொடுக்க ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணி அடிக்கப்பட்டது.) இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும்
கூற விரும்புகிறேன்.

சிறைச்சாலையிலே பணி செய்யக்கூடிய ஊழியர்களுக்கு இப்
போது மாதம் 25 பைசா முதல் 2 ரூபாய் வரை கொடுக்கிறார்கள்.
அவர்களுக்கு இப்போது கொடுப்பதை அதிகப்படுத்த வேண்டும்.
மாதத்திற்கு 5 ரூபாய் 10 ரூபாய் கொடுத்தால் அவர்கள்
வெளியே வருகிற நேரத்தில் ஒரு கணிசமான தொகையோடு
அதாவது 500, 400 ரூபாய் கிடைக்கும். வெளியே வந்து ஏதேனும்
தொழில் செய்ய உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்
திலே கூறிக்கொள்கிறேன்.

நெருக்கடி காலத்திலே மதுரைச் சிறையிலே சி.ஐ.டி.யு.
தோழர் எஸ். ஏ. தங்கராசன் அவர்கள் 1½ ஆண்டுக் காலம் இருந்
தார்கள் அவர் குடும்ப அலவன்சுக்கு மனு செய்திருக்கிறார்.
அவருக்குத் தரப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் அங்கே
அவருடன் இருந்த தீப்பொறி ஆறுமுகம் என்பவர் ஸ்தாபன
காங்கிரஸில் இருந்து இப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியில்
இருப்பதாக நினைக்கிறேன். அவருக்கு குடும்ப அலவன்ஸ்
கொடுக்கப்பட்டது. எனவே, இந்த விஷயத்தில் உடனடியாக
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ஓ. எஸ். வேலுசாமி: தலைவர் அவர்களே, தீப்பொறி
ஆறுமுகம் என்பவர் எந்தக் காலத்திலும் இந்திரா காங்கிரசில்
உறுப்பினராக இல்லை.

[1978 மார்ச் 13

*திரு. அ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, நீதித் துறை, சிறைச்சாலை ஆகிய இரு துறைகளின் மீதான மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதற்கு உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு ஒதுக்கிக் கொடுத்த நேரம் போதாது. ஏனெனில் மிகவும் முக்கியமான பல விஷயங்களை நீதித் துறைப் பற்றி கூறவேண்டியிருக்கிறது.

நீதித் துறையைப் பொறுத்தவரையில், அது ஒரு முக்கியமான துறை. மக்கள் நியாயம் கிடைப்பதற்காக நீதி மன்றங்களை நோக்கி நாள் தோறும் சென்றுகொண்டிருக்கிருர்கள். பொதுவாக இந்தத் துறையைப் புனிதமாக பராமரிக்கக்கூடிய முறையில் ஒரு நல்ல நடைமுறை இருக்கவேண்டும். நீதி மன்றங்கள் சிறப்பாக இயங்கினுல்தான் நீதி நிச்சயமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்படும். அண்மைக் காலத்தில் ஏற்பட்டு இருக்கும் சூழ்நிலையைப் பார்த்தால், கவலையாக இருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதி பெயரிலேயே குற்றச்சாட்டுகள் சாட்டப்பெற்று இருக்கின்றன. அந்த முறையில் அந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது மக்களுக்கு அந்தத் துறைமீது ஒரு ஐயப்பாடு ஏற்படுகிறது. மக்கள் எல்லோரும் அங்கலாய்த்துக்கொண்டு இருக்கிருர்கள்.

நீதி கிடைக்க வேண்டுமென்று எண்ணி, நீதி மன்றத்திற்கு வழக்கை எடுத்துச் செல்லும் ஒவ்வொருவரும், நம் வழக்கு எந்த பெஞ்சுக்கு வரும், எந்த வழக்கறிஞர் போட்டால் அந்த நீதிபதிக்கு வேண்டியவர், அதனுல் வழக்கு ஜெயிக்கும் என்றெல்லாம் தேடிக்கொண்டு போகிருர்கள். இந்த நிலைமை எல்லோருக்கும் தெரியும். மக்கள் மத்தியில் இந்த எண்ணம் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அந்தத் துறையைச் சீரமைக்க வேண்டும். இவற்றை மாற்றி நீதித் துறையை நவீனமான துறையாக, தூய்மையான துறையாக, நல்ல வகையில் தீர்ப்பு வழங்கும் துறையாக அது செய்யப்படவேண்டும், அப்படிச் செய்தால்தான் மக்கள் மத்தியில் நியாயம் கிடைக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டு, தங்கள் வழக்கை கோர்ட்டு வரை எடுத்துச் சென்று வாதாடும் நிலையேற்படும்.

அடுத்ததாக, இத்துறையில் பணிபுரியும் சப்-மாஜிஸ்டிரேட்டுகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பதவிக்கு ஒருவர் வந்து விட்டால் சாகும் வரையில் அந்தப் பதவியில் தான் இருக்க வேண்டும். அவருக்கு வேறு விமோச்சனமே கிடையாது. சப்-மாஜிஸ்டிரேட்டுகள் கடுமையான வகையில் தங்கள் பணிகளை ஆற்றிவருகின்றனர். அவர்கள் காலை 10 மணிக்கு கோர்ட்டுக்கு வந்து விட்டால், இரவு 12 மணி வரையில் கூட வேலை செய்யும் நிலை இருக்கிறது. அவர்களுக்குப் பதவி உயர்வு கிடையாது. ஊதியமாவது அதிகம் உண்டா என்று கேட்டால் அதுவும் கிடையாது. ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிக்குக் கூட ஓவர்-டைம் ஊதியம் கொடுக்கிருேம். சப்-மாஜிஸ்டிரேட்டு

1978 மார்ச் 13] [திரு. அ. சுவாமிதாஸ்]

களுக்குப் பொறுப்பும் அதிகம், வேலையும் அதிகம். ஆனல் ஊதியம் மட்டும் குறைவு. அவர்கள் குடும்பத்தையும் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் அந்தப் பதவி கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டும். இப்போது அந்தத் துறைக்கு அமைச்சராக இருப்பவர்கள் நீதிபதியாக இருந்து பணியாற்றிய காரணத்தால் அவர்களுக்கு நல்ல முறையில் அவர்கள் குறைகள் தெரியும். ஆகவே, அவர்களது நிலையை மாற்றியமைக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்து கொடுத்தால் அவர்கள் எந்தவிதமான சஞ்சலமும் இல்லாமல் நல்ல முறையில் அவர்கள் பணிகளை ஆற்ற முடியும்.

மேலும் அந்த சப்-மாஜிஸ்டிரேட்டுகள் சில இடங்களில் போலீஸ் காரர்களுக்கு பயந்துகொண்டு வேலை பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. போலீஸ்காரர்கள் கொண்டு வரும் ஒரிரு வழக்குகளைத் தள்ளிவிட்டால், அவர் பேரில் மேல் இடத்திற்கு புகார்கள் எழுதி விடுகிருர்கள். அவர்களைப் பல வழிகளில் பயமுறுத்துகிருர்கள். ஆகவே, போலீஸ் துறையிலிருந்து இந்த சப்மாஜிஸ்டிரேட்டுகளைப் பாதுகாக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சப்-மாஜிஸ்ட்டிரேட்டுகளாகப் பதவியில் சேர்ந்து இருப்பவர்கள் உயர் நீதி மன்றம் வரையில் பதவி உயர்வு கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இப்போது கிரிமினல் கோர்ட்டில் இருந்தால் அவர்கள் கடைசி வரையில் கிரிமினல் கோர்ட்டில் இருந்துதான் சாகவேண்டும். ஆகவே, இந்த நிலைமை எல்லாம் போக்க ஒரு சப்-மாஜிஸ்டிரேட் நல்ல முறையில் பணியாற்றினுல் அவர் உயர்நீதி மன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்று ரிடையர் ஆகலாம் என்ற நிலைக்கு வழிவகை செய்ய வேண்டும். ஒருவர் சப்-மாஜிஸ்டிரேட் பதவிக்கு 25 வயதில் வந்தால் நிச்சயமாக உயர்நீதி மன்ற நீதிபதியாக வரலாம் என்ற வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகவே அந்த வகையில் நிலைமைகளை உருவாக்க அரசு முன்வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

அடுத்து, சிறைச்சாலைகளைப் பொறுத்தமட்டில் பல கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக மத்திய சிறையைப் பொறுத்தவரையில் ஓரளவு வசதியாக இருக்கிறது. ஆனல் கிளைச் சிறைச்சாலைகளைப் பார்த்தால் மிகவும் வசதிக் குறைவு, இருள் குகைபோல காணப்படுகின்றன. காரணம் வெள்ளையர்கள் காலத்தில் நம்மை அடிமைகளாக நடத்தி, அடிமைகளைப் பிடித்து அடைப்பதற்கு என்றே அவைகள் உருவாக்கப்பட்டவை அவைகளில் காற்ருேட்டம் கிடையாது. இட வசதி கிடையாது; பிளஷ் அவுட்டும் இல்லை. அதே நிலையில்தான் இன்றைக்கும் இருக்கின்றன என்று சொல்வதற்கு நாம் எல்லாம் வெட்கப்பட வேண்டும். இது ஒரு சுதந்திர நாடு. நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். இந்த இந்நாட்டு மன்னர்களுக்கு ஏற்ற வகையில் சிறைச்சாலைகளை அமைக்க வேண்டும்.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 மார்ச் 13

இட நெருக்கடியைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. எங்கே
வேண்டுமானாலும் இருந்துகொள்ளலாம். ஆனால், சப்-ஜெயில்
களில் இருக்க முடியாது. 5 பேர் இருக்கக்கூடிய இடத்தில்
50 பேர்களை அடைக்கிறார்கள. நானும் சப்-ஜெயிலில் இருந்
திருக்கிறேன். இரவு மல ஜலம் கழிப்பதற்கு வசதி கிடையாது.
5 பேர் இருக்கக்கூடிய இடத்தில்தான் இரண்டு சட்டி வைத்திருப்
பார்கள். அங்கேதான் மலஜலம் கழிக்க வேண்டும். அங்கே
தான் உட்கார வேண்டும் : அங்கே தான் படுக்க வேண்டும்.
வெள்ளைக்காரர்கள் நம்மை அடிமைகளாக வைத்திருந்த காலத்தில்,
அடிமைகளை பிடித்து வைப்பதற்கு கட்டி வைத்திருந்த அதே நிலை
யில்தான் இன்றும் சப்-ஜெயில்கள் இருப்பது மிகவும் வேதனைப்
பட வேண்டிய ஒரு விஷயம். இந்த நிலை மாற வேண்டும்.

அடுத்தபடியாக நாகர்கோவிலில் ஒரு கிளை சிறைச்சாலை இருக்
கிறது. அண்மையில்தான் அதைக் கட்டினார்கள். ஒரே நேரத்தில்
அங்கு 100 , 200 பேர்களை அடைத்து வைக்கிறார்கள். கோர்ட்டி
லிருந்து கைதிகளை சாயங்காலம்தான், 6 அல்லது 7 மணிக்குக்
கொண்டுவருவார்கள். உடனடியாக பாளையங்கோட்டைக்கு
கொண்டுபோக முடியாது. பாளையங்கோட்டைக்கு 50 மைல்
தூரம் போகவேண்டும். ஆகவே, கைதிகளை வசதியாக, ஆனால்
பாதுகாப்பான முறையில் அங்கே வைத்துக்கொள்ளும் அளவுக்கு
நாகர்கோவிலில் கிளை சிறைச்சாலையை விரிவுபடுத்த வேண்டும்.
அல்லது அங்கே ஒரு திறந்தவெளி சிறைச்சாலையாவது அமைத்து
பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன்
என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி : துணைத் தலைவரவர்களே, இந்த
நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள்
மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன்.

நீதியும் சிறைச்சாலையும் என்பது நேற்று இன்று தொடங்கப்
பட்ட ஒரு காரியமல்ல. இந்த நாடு பிரிட்டீஷ் ஏகாதிபத்திய
அடக்கு முறையில் இருந்தபோது, இந் நாட்டுக்கு சுதந்திரம் கேட்ட
போது, இந்திய நாட்டு மக்களை அடக்கி, ஒடுக்கி, அடைத்து வைப்
பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்றுதான் இந்த நீதியும் சிறைச்
சாலையும். சுதந்திரத்திற்காகப் போராடிய காலத்தில் வீர இளை
ஞன் பகவத்சிங்கை தூக்கிலிட உருவாக்கப்பட்டதுதான் நீதியும்
சிறைச்சாலையும். இந்த நாடு விடுதலை பெற்று இத்தனை ஆண்டு
ஆகிவிட்டது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபிறகு கூட, இந்தநாட்
டிலே போராடக் கூடிய மக்களை நசுக்க வேண்டுமென்றுதான்
டாங்கே போன்ற பெரும் தலைவர்களை பல்லாண்டு காலம் சிறை
யிலே வைத்தார்கள. இந்திய கம்யூனிஸட் கட்சியை சேர்ந்த
இளம் சிங்கம் பாலுவை தூக்கிலிட்டார்கள். இந்த நாட்டிலே
உண்மையாக உழைக்கின்ற தொழிலாளர்கள் வர்க்கத்தை நசுக்க,
ஒடுக்க நீதியையும் சிறைச்சாலையையும் பயன் படுத்தினார்கள்.

1978 மார்ச் 13] [திரு. பொ. உத்திராபதி]

காங்கிரஸ் ஆட்சிக்குப் பின்னாலே தமிழ்நாட்டில் 9 ஆண்டு
காலம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, உழைக்கின்ற
மக்கள் போராடுகின்ற நேரத்தில் சிறைச்சாலைகளைப் பயன்படுத்தி
னார்கள் ; நீதியைப் பயன்படுத்தினார்கள். இன்னும் சொல்லப்
போனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் மக்கள்
கொதித்தெழுந்த காலத்தில் எங்கள் ஒப்பற்றத் தலைவர் எம். கல்
யாணசுந்தரம் அவர்களும் இன்றைக்கு முதலமைச்சராக இருக்
கின்ற எம். ஜி. ஆர். அவர்கள் பேரிலும் தொண்டர்கள் பேரிலும்
பல வழக்குகளைப் போட்டு நீதி மன்றத்தில் பலமாதக் கணக்கில்
அலைய வைத்தார்கள். அந்த ஏழை எளிய மக்களை தண்டிப்
பதற்கு இந்தநீதியையும் சிறைச்சாலைகளையும் பயன்படுத்தினார்கள்.
இதுதான் வெள்ளையர் ஆட்சியிலிருந்து இன்றைய ஆட்சிவரையில்
வரலாறு நமக்கு காட்டும் செய்தியாக இருக்கிறது. ஆட்சி மாறி
னாலும் உழைக்கின்ற மக்களை நசுக்குவதற்கு பயன்படுத்தும் சிறைச்
சாலையும் நீதியும் மாறவில்லை. இவைகளை அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் எதிர்காலத்தில் சிந்தித்துப் பார்த்து, சீர்
திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நக்சலைட்டுகள் இன்னும் சிறைச்சாலைகளிலே அடைக்கப்பட்டி
ருக்கிறார்கள். அவர்கள் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்
கிறார்கள். அவர்கள் எதற்காக சிறைக்குச் சென்றார்கள் ? ஆட்சி
யாளர்களின் அடக்கு முறைகளை எதிர்த்து, அட்டூழியங்களை
எதிர்த்து, அதன் காரணமாக சிறைக்குச் சென்றார்கள். அங்கே
பல்லாண்டு காலமாக சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டிருக்
கிறார்கள்.

இன்றைக்கு ஜனதா கவர்ன்மென்ட் வந்த பிறகு மேற்கு
வங்கத்திலும் கேரளத்திலும் நக்சலைட்டுகளை எல்லாம் விடுதலை
செய்திருக்கிறாகள். அதைப்போல தமிழ்நாட்டிலும் விடுதலை
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் முன்னாள் முதலமைச்சவரவர்கள் சமீபத்தில்
சிறையில் இருக்கக்கூடிய காலத்தில் இன்றைய அரசு அவர்களு
டைய மனைவி உணவு அளிக்கலாம் என்று அனுமதித்திருக்கிறார்
கள். மற்றவர்கள் எல்லாம் கைதிகள் இல்லையா? இன்றைக்கு
ஆயிரக்கணக்கான கைதிகள் 10 ஆண்டுகள் 14 ஆண்டுகள்
என்று சிறைவாசத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கும் அவர்களுடைய மனைவிமார் உணவு அளிக்கக்
கூடிய அளவில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தூக்குத் தண்டனை என்பது ஒரு கொடிய
தண்டனை. உண்மையிலே கடுமையான குற்றவாளியாக இருந்
தால் கூட தூக்கு தண்டனை வழங்குவதை ரத்து செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கைதிகள் பரோலில் வருகிறார்கள். பரோலில் வருவதற்கு விண்ணப்பம் கொடுத்தால் அவர்களுக்கு உத்தரவு வர மாதக் கணக்கு ஆகிறது. பரோல் கொடுக்கக்கூடியவர்களுக்கு உடனடியாக பரோல் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சிறைச்சாலை வார்டர்களுக்கு மிகவும் குறைந்த அளவில் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தக் குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அந்த வார்டர்களுக்கு அதிகச் சம்பளம் அளிப்பதற்கு அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சீர்திருத்தக் குழு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சீர்திருத்தக் குழுவில் சினிமா நடிகைகளை எல்லாம் போடுவது நல்லதல்ல. அவர்களுக்கு சிறையில் உள்ளவர்களின் நிலையினைப் பற்றி அனுபவம் இருக்காது. சிறையில் நீண்ட காலம் அனுபவப்பட்டவர்களுக்கு அந்தச் சீர்திருத்தக் குழுவில் இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் எப்படி இருந்ததோ— இன்றைக்கு நாம் தத்துவம் பேசுகிறோம், சிறையில் உள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்கிறோம்—நாம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அதேபோல் இழைக்கப்படும் கொடுமைகள் இன்னும் நீக்கப்படவில்லை. இதையெல்லாம் கவனித்து நீக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதித் துறை இன்றைக்கு பெரிய நிலப்பிரபுகளுக்குத்தான் சாதகமாக இருக்கிறது. அவர்களுக்கு என்றால் உடனடியாக எவிக்ஷன் ஆர்டர் கிடைத்து விடுகிறது. ஆனால் ஏழை விவசாயிகள் இன்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எவிக்ஷன் ஆர்டர் கிடைப்பதென்றால் பல மாதங்கள் ஆகின்றன. இதற்கெல்லாம் காரணம் லஞ்சம் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறது. அந்த ஏழை எளியவர்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய வகையில் நீதித்துறை நிர்வாகம் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவில், மடம், தர்மஸ்தாபனம் பூராவும் நிலச்சுவான்தார்களுக்கு உரியதாக இருக்கிறது. நீதி நிர்வாகம் இந்தக் காலகட்டத்திலாவது ஏழைகளுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள்கள் சர்க்காரால் சிறைகளிலே வழங்கப்
டுகிறது. அதில் பாதிப் பொருள் எங்கோ போய்க்கொண்டிருக்
றது. பாதிதான் அந்தக் கைதிகளுக்கு கிடைக்கிறது. நீண்ட
ாலமாக நாம் சிறையில் இருந்தவர்கள். எனவே நமக்கு நன்கு
தரியும். அந்தக் கைதிகளுக்குப் பூரணமாக உணவு கொடுக்
ப்படவில்லை. இந்த அரசு கொடுக்கக்கூடிய உணவுப் பொருள்
த்தனையும் அந்தக் கைதிகளுக்குக் கிட்டுவதற்கு ஏற்பாடு செய்ய
வண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். 1945–46-ல்
ன்னடத்தைக் குழு அமைக்கப்பட்டு 1948-லே அது தமிழ்நாடு
முழுவதும் விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. 1950–51 சிறை
ர்திருத்தக் குழு நன்னடத்தைத் துறை தனித் துறையாக
இயங்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்து இருக்
கிறது. இப்படிச் செய்தும் கூட அந்தக் குழு தனியாக
இயங்க உத்தரவாதம் அளிக்கவில்லை. அது தனியாக இருந்தால்
தான் சிறையில் இருக்கக்கூடிய கைதிகளின் நிலைமைகளை நன்கு
உணர்ந்து நல்லபல நிலைமைகள் ஏற்பட வழிவகுக்கும். ஆகவே,
அந்த முறையில் அக்குழு தனியாக இயங்கும் அளவுக்கு அமைக்
கப்பட வேண்டும். அந்தக் குழுவில் வேலை செய்யக்கூடியவர்
கள் இருபது ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவர்களுக்கு ஊதிய
உயர்வு அளிக்கப்படவில்லை. பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை.
இவற்றைச் செய்வதற்கு இந்த அரசு உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்னடத்தைக் குற்றவாளியின் மறுவாழ்வுக்கு போதிய வசதிகள் உண்டு பண்ணவில்லை. ஆகவே, அக்குழு தனியாக இயங்கினால் தான் இது போன்ற காரியங்கள் சிறப்பாக அமையும்.

சென்னை ஜெயிலில் ஒரு பெரிய அதிகாரி லஞ்சம் மற்றும்
முறைகேடுகள் நடத்தியதாக இதே சபையில் முன்னாள் உறுப்
பினர்கள் கே.டி.கே. தங்கமணியும், பொன்னப்பநாடாரும்
எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அவர் மீது இன்னும் எந்த
நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் ஒரு டி.ஐ.ஜி.
இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று பேசிக்கொண்
டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக இந்த அரசு நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நீதியையும், நிர்
வாகத்தையும் ஏழை எளிய மக்களுக்கு நன்மை பயக்கும்வகை
யில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி
முடித்துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 13

[பிற்பகல் 1–20]

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரிக்கார்டில் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். திரு. உத்திராபதி அவர்கள் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கு வீடுகளில் இருந்து உணவு கொண்டு வந்து வழங்கப்பட்டது, மனைவிமார்கள் வந்து பரிமாறினார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் அப்படி விரும்பினாலும், ஆனால் சிறை விதிகள் இடம் கொடுக்க வில்லை என்பதால் அவ்விதம் கொடுக்கப்படவில்லை. நாங்களும் கேட்க இல்லை, கொடுக்கவும் இல்லை. ஆகவே, அப்படிக் கொடுக்கப்பட்டது என்பது ரிகார்டில் இருக்கக்கூடாது என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நீதி, நிர்வாகம், சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பு பெற்றமைக்கு உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டில் நடைபெறுகிற நீதி நிர்வாகமும், காவல் துறையும் இந்திய துணைக் கண்டத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கிறது என்பதை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலங்களில் நம்முடைய உயர்நீதி மன்றத் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி எழுதுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் இருக்கக் கூடிய பர்மா, சிலோன், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் கூட நம்முடைய சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி எழுதுகிற நிலை இருப்பதை நினைக்கும்போது உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறோம். அந்த அளவிற்கு நம் நீதி நிர்வாகம் தலையீடு இல்லாமல் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

ஆனால் இன்றையதினம் பேசிய பல நண்பர்கள் ''ஜஸ்டிஸ் டிலேட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைட்'' என்று குறிப்பிட்டது போல், எவ்வளவுக்கெவ்வளவு காலதாமதமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நீதி, நியாயம் கிடைக்க முடியாத ஒரு நிலை ஏற்படும் என்பதை பழமொழி மூலம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் ஒருவர் இரண்டு மூன்று மனைவிகளைக் கட்டிக் கொள்கிற நேரத்தில் முதல் மனைவி கணவன் வேண்டாமென்று கருதி ஜீவனாம்சம் வேண்டுமென்று நீதிமன்றத்தில் வழக்காடுகிற நேரத்தில் அந்த வழக்கு ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டு

களுக்குள் முடிந்தால் அதன் பலன் அந்தப் பெண்ணுக்குக் கிடைக்கும். ஆனால், ஐந்து, ஆறு, ஏழு ஆண்டுகள் என்று காலக் கெடு நீடித்துக் கொண்டுபோனால் அந்தப் பெண்மணி தீர்ப்பு கிடைப்பதற்கு முன்னாலே இறந்துவிடுகிறார். அப்படி இறக்கிற நேரத்தில் கொடுக்கப்படுகிற வழக்கின் சாராம்சம் அல்லது வழக்கின் முடிவு பயனில்லாமல் போய்விடுகிறது. எனவே வழக்குகளை உடனுக்குடனே, எவ்வளவு குறுகிய காலத்தில் தீர்ப்புகள் வழங்க முடியுமோ அவ்விதம் வழங்கினால் அதன் பலன் ஏழை மக்களுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டக் கல்லூரியில் படிக்கிற நேரத்தில் ஒரு வழக்கு பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஒரு கோவிலின் யானைக்கு வடகலை நாமம் போட வேண்டுமா அல்லது தென்கலை நாமம் போட வேண்டுமா என்ற சர்ச்சை பற்றி வழக்கு வந்தது. அந்த வழக்கு கிட்டத்தட்ட 17 ஆண்டுகள் வழக்குமன்றத்தில் நடை பெற்றது. வழக்கு, யானைக்கு வடகலை நாமம் போட வேண்டுமா அல்லது தென்கலை நாமம் போடவேண்டுமா என்பதாகும். தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால் அந்த யானை இறந்து விட்டது. கோவில் பணம்தான் விரயமாயிற்று, வீணானது. இது போன்ற வழக்குகள் எல்லாம் தேவை இல்லை என்பதால், இது போன்ற பணம் விரயமாகாமல் இருக்க நீதிமன்றங்கள் தங்கள் தீர்ப்புகளை உடனடியாக வழங்கும் விதத்தில் செயல்படும் என்றால் நிச்சயமாக அது பயன் அளிக்கக் கூடியதாக இருக்கும்.

நீதி மன்றத்தில் தலையீடுகள் இருக்கக்கூடாது என்றிருந்தாலும் கடந்த கால வரலாறுகளைப் பார்த்தால் நிச்சயமாக சில வழக்குகளில் தலையீடுகள் இருந்தன என்பது வரலாற்றில் ஏற்றிக்கொள்ள பொறிக்கப்பட வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

நமது அருமை சகோதரர் இன்றையதினம் குறிப்பிட்ட நேரத்தில், போலீஸ் இலாகாவில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது போடப்பட்ட வழக்குகள் 13,000 என்று சொல்லும்போது குறுக்கீடுகள் எழுப்பப்பட்டன, சவால்கள் விடப்பட்டன. நான் அந்த நண்பர் அவர்களுக்கு பணிவோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 13,000 குடும்பங்கள் மீது வழக்குகள் போடப்பட்டன என்பதை இன்றும் இந்தத் தருணத்தில் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வழக்கு என்றால், 100, 140 பேர்கள் கொண்ட வழக்குகள் எல்லாம் நடைபெற்றன. திண்டுக்கல்லில் நடைபெற்ற வழக்கு ஒன்றில், 232 பேர்கள் கொண்ட வழக்கு நடைபெற்றது.

இப்படி 25 ஆயிரம் பேர் மீது, 13 ஆயிரம் குடும்பங்கள் மீது வழக்குகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இத்தருணத்தில் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. பண்ணை சேதுராம்] [1978 மார்ச் 13

அது மட்டுமல்ல, திண்டுக்கல் தேர்தலின்போது வத்தலக்குண்டு ஆறுமுகம் படுகொலை செய்யப்பட்டான். அன்றைய ஆட்சியில் இருந்த முதலமைச்சர் அவர்களால் அவர்களுடைய தலையீட்டால் இதில் போடப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

திரு. க. சுப்பு: நான் ஒழுங்கு பிரச்னை கிளப்ப விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விஷயங்களை எல்லாம் போலீஸ் மானியத்தில் பேசலாம். இப்போது சிறைச்சாலை மானியத்தின் மீது இதைப்பற்றி எல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேண்டியதில்லை. இப்படி பேசுவது சரிதானா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி எல்லோரும் தான் பேசுகிறார்கள், மானியத்தை விட்டு விட்டு வேறு விஷயங்களைப்பற்றி எல்லோரும்தான் பேசுகிறார்கள். இதில் ஒழுங்கு பிரச்னை ஒன்றுமில்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: வத்தலகுண்டு ஆறுமுகம் கொலை செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் வந்தபோது, அப்போது இருந்த முதலமைச்சர் தலையிட்டு இந்த வழக்கை தள்ளுபடி செய்தார் என்பதை எங்களால் சொல்ல முடியும். அப்போது இருந்தவர்கள் நீதி நிர்வாகத்தில் தலையிட்டார்கள். நீதிமன்றத்திலும், போலீஸ் நிர்வாகத்திலும் அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் தலையிட்டார்கள் என்பதை எங்களால் சொல்ல முடியும்.

நீதிபதிகளைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் சட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். டெப்யூடி கலெக்டர், டெப்யூடி சூப்பிரன்டண்ட் ஆப் போலீஸ், டிஸ்ட்ரிக்ட் முனிசீப் போன்றவர்கள் அரசாங்கத்திற்கு நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்ற டெப்யூடி கலெக்டர், டெப்யூடி சூப்பிரன்டென்டிங் ஆப் போலீஸ் இவர்களுக்குப் பின்னால் ஐ.எ.எஸ். பதவி கொடுக்கப்படுகிறது. அது போல் டிஸ்ட்ரிக்ட் முனிசீப்களுக்கு ஐ.எ.எஸ். பதவிகள் கொடுக்க வேண்டும் என்பதை பரிந்துரையாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்விதம் நீதிக்கும் நிர்வாகத்துக்கும்....

திரு. க. சுப்பு: திரு. பண்ணை சேதுராம் அவர்கள் ஒரு வழக்கறிஞர். ஜூடிஷியல் சர்வீஸ் என்பதும், அட்மினிஸ்ட்ரேடிவ் சர்வீஸ் என்பதும் வேறு. நீதிபதிகளாக இருக்கின்றவர்களுக்கு ஐ.எ.எஸ். என்பது கொடுக்க இயலாது. இதை அவர்கள் நன்றாக தெரிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன்.

1978 மார்ச் 13]

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு சுப்பு அவர்களும் ஒரு வழக்கறிஞர் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்கு சொல்லிக் கொள்கிறேன். Judiciary, Administration and Legislature should be in separate departments. நீதி, நிர்வாகம், சட்டப் பேரவை இவைகள் எல்லாம் தனிப்பட்ட முறையில் இருந்தாலும், தனித்தனியாக இயங்க வேண்டும் என்பது தான் நோக்கம்.

நீதியும், நிர்வாகமும் ஒன்றாக இருக்கக்கூடாது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இப்போது டிரெயினிங் மாஜிஸ்டிரேட் என்று இருக்கக் கூடியவர்கள் சில இடங்களில் நீதிமன்ற வழக்குகளை எடுத்துக் கொண்டு விசாரணை செய்து தீர்ப்புகளை தருகிறார்கள். இந்த நிலைமை இருப்பதால் அவர்கள் இன்புளுயன்ஸ் செய்யப்பட்டு நீதி படுகொலை செய்யப்படுகிறது. ஆகவே டிரெயினிங் மாஜிஸ்டிரேட்களாக இருப்பவர்களுக்கு நீதித் துறையில் இருக்கக்கூடிய வழக்குகளை கொடுக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்டின் கீழ் வருகின்ற வழக்குகளை ஆங்காங்கு உள்ள தாசில்தார்கள், ரெவின்யூ உதவி அதிகாரிகள் போன்றவர்கள் விசாரணை செய்கிறார்கள். அப்படி இல்லாமல் அவற்றை எல்லாம் நீதிபதிகளே விசாரணை செய்தால் நல்லபடியாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

தென் மாவட்டங்களுக்கு வசதியாக மதுரையில் ஹைகோர்டு பெஞ்சு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பெரியகுளத்தில் சப் கோர்ட் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, சிறைச்சாலைகள் பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

(மணியடிக்கப்பட்டு—முடிக்கப்பட்டது).

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்: தலைவர் அவர்களே, மன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் நீதி, நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் உயர்நீதிமன்றத்தைத் தவிர, மாவட்ட நீதிபதிகள், சப்-ஜட்ஜ் அதாவது சார்நிலை நீதிபதிகள், டிஸ்ட்ரிக் முனிசீப், மாவட்ட நீதிபதி, ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் அதாவது முதலாவது வகுப்பு நீதிபதி சப்-மாஜிஸ்டிரேட் போன்ற நீதிபதிகள் பலவிதங்களில் செயல்பட்டு வருகின்றனர். இப்படிப்பட்டவர்களுடைய ஊதியத்தை எடுத்துக்கொண்டால் நமது அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகம், ஆந்திரா பிரதேசம் ஏன் பாண்டிச்சேரியையும் எடுத்துக்கொள்ளலாம், இங்கெல்லாம் செயல்பட்டு வரும் நீதிபதிகளுடைய ஊதியத்தைவிட நம் மாநிலத்திலுள்ள நீதிபதிகளின் ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதை உடனடியாக பரிசீலனை செய்து, நமது அண்டை மாநிலங்களில் இருக்கின்ற நீதிபதிகளின் ஊதியத்திற்கு ஏற்றதான இந்தத் தரத்தையும் உயர்த்தவேண்டும். அந்த அளவுக்கு நீதிபதிகளின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும். நீதிபதிகள் என்பவர்கள் வறுமைக்கு மேலானவர்களாக இருக்கவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அவையின் முன்னுள்ள தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு முடியும் வரை சபையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1—30]

<u>திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால் :</u> வறுமைப் பிணியிலே நீதிபதிகள் இருக்கக்கூடிய அவல நிலையிருந்தால், அவர்கள் நீதித் திட்டத்தைப் பராமரிப்பதிலே, சரியான சேவை செய்வதிலே எப்படிச் செயல்படுவார்கள் என்பதை நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

இந்த மாகாணத்தில் சென்னையைத் தவிர, மற்ற மாவட்டங்களிலே நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அந்த மாவட்டங்களிலே செயல்படுகின்ற நீதிபதிகள் சென்னைக்கு மாற்றலாகி வந்தால், அவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் மாவட்ட நீதிபதி அளவிலே, சென்னையிலே மாஜிஸ்திரேட் கோர்ட்டிலே பணிபுரிகின்ற நீதிபதிகளில் சீப் மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுக்குத்தான், அவர் ஒருவருக்குத்தான் வீட்டு வசதி இருக்கிறது.

இன்னொரு வேடிக்கையான விஷயம் இருக்கிறது. சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சைதாப்பேட்டை தாலுகாவைச் சேர்ந்த சைதாப்பேட்டையில் மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டு நெம்பர் 1, நெம்பர் 2 ஆகிய இரண்டு நீதிபதிகளுக்கு மட்டும் சைதாப்பேட்டையில், அந்த அலுவலகத்திற்குள்ளேயே இந்த இரண்டு பேர்களுக்கு மாத்திரம் வீடுகள் இருக்கின்றன

ஆனால் அங்கேயே செயல்படும் மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டு நெம்பர் 4, அதேபோல் மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டு நெம்பர் 11 ஆகியவர்களுக்கு வீட்டு வசதி இல்லை. அதிகாரத்திலே இந்த இரண்டு மாஜிஸ்திரேட்டுகளைவிட இவர்கள் உயர்ந்தவர்கள். ஆனால் குறைந்த ஜூரிஸ்டிக்ஷன் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி இருக்கிறது. அதிகப்படியான அதிகாரம் உள்ள அந்த மாஜிஸ்திரேட்டுகளுக்கு சென்னையிலே வீட்டு வசதி இல்லை.

இன்னொரு முக்கியமான விஷயம். மற்ற இடங்களில் இலாகாக்களுக்கு மாற்றலாகி சென்னைக்கு வரும் அதிகாரிகளுக்கு, சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு வீட்டு வசதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நீதிபதிகளுக்கு இந்த வீட்டு வசதி இல்லை. ஆனால், வீடு ஒதுக்குவது பற்றி அக்காமடேஷன் கன்ட்ரோலர் ஆபீசிலிருந்து வழக்கு வரும்போது இவர்கள் அதற்கான தீர்ப்புகளை எல்லாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இந்த வழக்குகளையெல்லாம் தீர்ப்பதற்கு மட்டும், அந்த வேலைகளைமட்டும் நீதிபதிகள் செய்யவேண்டும். ஆகவே, இத்தகைய அவல நிலையில் இந்த நீதிபதிகளுக்கு சென்னையில் உடனடியாக வீட்டு வசதிகள் செய்து தர வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், பல நண்பர்கள் நீதி மன்றங்களிலே வழக்குகளைத் தாக்கல் செய்கின்றபோது, அவைகளைத் தீர்ப்பதிலே டிலே இருக்கிறது என்றும், அவைகளுக்கெல்லாம் உடனே தீர்ப்பு கிடைக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்டங்கள்தோறும் இப்போது ஒரு போலீஸ் சூபரன்டெண்டுக்குப் பதில், இரண்டு போலீஸ் சூபரண்டெண்டுகள் பணியாற்றுகிறார்கள். அதற்கு அங்கே வேலை அதிகம் என்று சொல்கிறார்கள். 1—4—1974-லிருந்து கிரிமினல் புரோசீஜர் கோடின்படி மாவட்டங்களிலே உள்ள அப்பீல்கள் எல்லாம், ரிவிஷன் பெடிஷன்கள் எல்லாம் துரிதமாக செய்யப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, மாவட்ட நீதிபதிகளாக இருக்கக் கூடியவர்களுக்கு வேலை உயர்ந்து அதிகமாகி விட்டது. இப்படி வேலை அதிகமாக இருக்கிற நேரத்திலே எப்படி போலீஸ் அதிகாரிகள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டிருக்கிறதோ, எப்படி ஒரு மாவட்டத்திற்கு இரண்டு போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்களோ, அதைப் போல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கூடுதலான அடிஷனல் செசன்சு ஜட்ஜ் வீதம் 16 மாவட்டங்களுக்கும் 16 அடிஷனல் செசன்சு ஜட்ஜ் நீதிபதிகள் போடுவதன் மூலம் இப்படிப்பட்ட அதிகப்படியாக இருக்கும் அப்பீல்களையெல்லாம் உடனடியாக தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அவர்கள்

(திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்) [1978 மார்ச் 13

உடனடியாக இதிலே கவனம் செலுத்தி, இந்த 16 அடிஷனல் கோர்ட்டுகளை அமைப்பதற்கு ஹைகோர்ட்டுடன் கலந்து 16 கோர்ட்டுகள் அமைத்தால், நீதி மன்றங்களிலே வழக்குகள் எல்லாம் துரிதமாக தீர்ப்புகள் வழங்குவதற்கு உதவியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலே, சைதாப்பேட்டை, எழும்பூர், ஜார்ஜ் டவுன் ஆகிய மூன்று இடங்களில் குற்ற இயல் பிரிவு நீதி மன்றங்கள் இருக்கின்றன. இதிலே இப்போது 21 மெட்ரோபாலிடன் மாஜிஸ்திரேட்டுகள் இருக்கிறார்கள். பல பேருக்கு சேம்பர்ஸ் இருக்கிறதா என்றால் இல்லை, எழும்பூரிலே ஒரு மாஜிஸ்திரேட்டு வராந்தாவிலே கோர்ட்டு நடத்துகிறார். சைதாப்பேட்டையிலே மாஜிஸ்திரேட்டுகளுக்கு சரியான பாத் ரூம், பிளஷ் அவுட் கிடையாது. அங்கே இந்த மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகளிலே வேலை பார்க்கும் எழுத்தர், கிளார்க்குகளுக்கு டிபன் ரூம் கிடையாது. அவர்கள் வேலை பார்க்கும் இடத்திலேயே, அந்த ஆபிசிலேயே மத்தியானம் கீழே உட்கார்ந்து கொண்டு சாப்பிடக்கூடிய அவல நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட அவல நிலைகளையெல்லாம் உடனடியாகப் போக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நீதிமன்றங்களாக இருந்தாலும், மற்ற கோர்ட்டுகளாக இருந்தாலும் நீதிமன்றங்களில் லைப்ரரிஸ் இல்லை. இருந்தாலும் சரியான புத்தகங்கள் வைக்கப்படவில்லை. நீதிபதிகள் வழக்கறிஞர்களிடத்தில் இருந்துதான் புத்தகங்களை வாங்கிப் படித்து தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-மாஜிஸ்திரேட்ஸ் ஏறத்தாழ 3, 4 வருஷங்கள் பணியாற்றியும் இன்னும் ரெகுலரைசேஷன் ஆப் சர்விசஸ் ஆகவில்லை. அரசிடம், சப் மாஜிஸ்ட்ரேட்டை முன்சீப் ஆக்கும் திட்டம் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை நான் வரவேற்கிறேன். கூடிய சீக்கிரம் அதை அமலாக்க வேண்டும். சப்-மாஜிஸ்ட்ரேட் என்ற போஸ்ட் இருக்கக்கூடாது. அதை அரசு நீக்கிவிட்டு முன்சீப் கோர்ட்டை ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் என்று அமைக்க வேண்டும்.

நீதிமன்றங்களில், முக்கியமாக குற்ற இயல் நீதிமன்றங்களில் நீதிபதிகள் குற்றவாளிகளுக்கு 6 மாதம், 2 வருஷம், 3 வருஷம் என்று தண்டனை கொடுக்கிறார்கள். அவர்கள் தண்டனை வழங்கிவிட்டு சாயங்காலம் வேலை முடிந்து வீட்டுக்குச் செல்ல பஸ்ஸைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. யாருக்குத் தண்டனை வழங்கப்பட்டதோ அந்தத் தண்டனை அடைந்தவரையோ, அல்லது அவருக்குச் சொந்தக்காரரையோ அதே பஸ்ஸில் பார்க்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அந்த நீதிபதிகளை அவமானப்படுத்துகிற முறையில், திட்டிப் பேசு

1978 மார்ச் 13] [திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்]

கிற, சில சமயங்களில் காரித் துப்புகிற நிலைமைகூட ஏற்படுகிறது. ஹைகோர்ட் நீதிபதிகளுக்குத்தான் பாதுகாப்பு இருக்கிறது. மாவட்ட நீதிபதிகளுக்குக்கோ, சப்-ஜட்ஜுகளுக்கோ, ஃபஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கோ, மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கோ எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஆகவே, சென்னையிலாவது இந்த நீதிபதிகளை வீட்டிலிருந்து அழைத்துச் செல்லவும், திரும்பவும் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் செல்லவும் ஒரு பேருந்து வசதியைச் சட்ட அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய முகவை மாவட்டத்தில் மிக வேடிக்கையாக நீதித் துறை இயங்கி வருகிறது. ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தேவகோட்டையில் இருக்கிறது; ச-கோர்ட் சிவகங்கையில் இருக்கிறது. மாவட்ட நீதிமன்றம் எங்கள் மாவட்டத்திலேயே இல்லை, மதுரையில் இருக்கிறது. இந்த அவல நிலையை நீக்கி எல்லா நீதிமன்றங்களையும் ஓரே இடத்தில் எங்கள் மாவட்டத்திலேயே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்ப்பு எங்கே, தண்டனை எங்கே என்ற பேச்சுத்தான். இன்று மக்களிடம் இருக்கிறது. சர்க்காரியா கமிஷன் தீர்ப்பு வந்த பிறகும் இனியும் தாமதம் செய்வது மத்திய அரசுக்கோ மாநில அரசுக்கோ நல்லது அல்ல என்பதை இந்த நாட்டு மக்கள் உணர்ந்து அதை வலியுறுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் பேசும் போது "என்னுடைய தலைவர் சிறைத் தண்டனைப் பெறப் போகிறவர்" என்று கூறினார்கள். ஒரு நீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்ற நேரத்தில் வழக்கின் முடிவு இப்படித்தான் இருக்குமென்று அந்த தீர்ப்பு வருவதற்கு முன்பு சொல்லுவது..

திரு. என். கிட்டப்பா: ஒரு தன்னிலை விளக்கம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நானே சொல்லிவிடுகிறேன். அவர் அப்படிப் பேசவில்லை. அவர் பேசும் போது "சிறைக்குப் போனவன், இனிமேல் போவதானாலும் வரவேற்கிறேன்" என்றுதான் சொன்னாரே தவிர, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. எம். ஏ. ஜெயவேலு: போகப் போகிறவர் என்று சொன்னார்....

திரு. என். கிட்டப்பா : நான் குறிப்பிட்டது இதற்கு முன்னால் சிறை சென்றிருக்கிறேன் : இப்போதும் சென்றிருக்கிறேன் ; இனிமேலும் சிறை செல்லுவதற்கான சூழ்நிலை ஏற்படக்கூடும் என்ற வகையிலேதான் பேசினேனே தவிர, போய்த்தான் தீர வேண்டுமென்ற வகையில் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தால் அது வேறு விஷயம்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : இந்த அரசுக்கு குற்றத்தின் தன்மை தெரியும். குற்றம் செய்தவர்கள் யார் என்று தெரியும், எங்கே வழக்குகள் போடப்பட வேண்டுமென்று தெரியும். அப்படி இருந்தும் வழக்குகள் போடப்படாததற்குக் காரணம் என்ன? சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டின் மேல் சுதந்திரமாக வழக்குகளைத் தொடர்ந்து போட வேண்டுமென்று கேட்டுக் சொள்கிறேன்.

பல புதிய சட்டங்கள் வருகிற நேரத்தில் பொதுவாக வழக்கறிஞர்களுக்கு நிறைய வழக்குகள் வரும். ஆனால் இன்று வழக்கறிஞர்கள் தொழிலே பாதிக்கப்படக்கூடிய அளவுக்கு, வழக்கறிஞர்கள் வறுமையால் வாடுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

வழக்கினுடைய தாமதத்தைப்பற்றி இங்கே பலர் கூறினார்கள். சில நேரங்களிலே தாமதம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஸ்டே பெட்டிஷன், அட்ஜர்ன்மெண்ட் பெட்டிஷன், ரீ ஓப்பன் பெட்டிஷன், இன்ஜங்ஷன் பெட்டிஷன் இவைகளைப் பொறுத்த வரையில் தாமதம் தவிர்க்க முடியாதது. இவைகள் எல்லாம் சட்டத்திலே இருக்கின்றன. These may be necessary evils அதே நேரத்திலே தாமதம் ஏற்படக் கூடாது என்பதற்காக அவசரக் கோலத்திலே வழக்கை நடத்தினால் நீதி கிடைக்காத நிலைமை ஏற்பட்டுவிடும்.

சில நீதிபதிகள் கீழே இருக்கிற நீதிபதிகளுக்கு வாய் மூலமாக உத்தரவிடுவதாகத் தெரிகிறது. இந்தப் பெட்டிஷன்கள் எல்லாம் வந்தால் இவற்றை எல்லாம் நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பல நீதிபதிகள் சொல்லியிருப்பதாக எனக்கு நம்பகமான சூழ்நிலையிலிருந்து தகவல் வந்திருக்கிறது. இப்படிப் பட்ட முறைகள் நீதித் துறையைப் பாதிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இதற்கு முன்பு ஒரு பெரிய சட்டம் என்று சொல்லிக் கொண்டிருந்த பப்ளிக் மென் ஆக்டை ரத்து செய்திருக்கிறார்கள். அதற்கான காரண காரியங்களை இங்கே இந்த மன்றத்திலே பல

உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஏதோ ஒரு அமைச்சர் மீது புகார் இருப்பதால் அதை ரத்து செய்து விட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள், ஆனால் அது ஜோடனை செய்யப் பட்ட தாவா, பொய்யான தாவா, போலியான தாவா என்று சொன்னதற்குப் பிறகு இன்றைக்கு எதைப் பேசுவது என்று அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

உயர்நீதி மன்றத்திலே நாம் இருக்கின்ற நேரத்திலே ஏதோ உ.பி.யிலே இருப்பதைப் போன்ற நிலை இருக்கிறது. We are not feeling at home. We feel as if we are in Uttar Pradesh. மேலும், High Court of Judicature என்று போட்டு விட்டு அதற்குக் கீழே சத்தியமேவ ஜெயதே என்று சீலிலே போட்டிருக்கிறார்கள், சித்திரங்களிலே எல்லாம் இந்தியிலே இருக் கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதிபதிகளுக்கு ஒரு குறை இருக்கிறது. நீதிபதிகள் அதை எதிர்க்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதி பதிகள் பதவிப் பிரமாணம் செய்யும் போது குடிக்கக் கூடாது என்று பிரமாணம் செய்யும் முறையைக் கொண்டுவருவதால் அதை எதிர்க்கிறார்கள் என்று தெரிகிறது, அது நமக்கு வருத்தம் தரு கிறது. இவ்வாறு செய்வதால் நீதித் துறையிலே இருக்கிறவர் கள் எல்லாம் ஏதோ அத்தகைய குடிப் பழக்கத்தை வைத்திருக் கிறார்கள் என்று எண்ணுகிற நிலை ஏற்படுகிறது. இது நீதித் துறையின் நிலையை உயர்த்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சி, பிரதான எதிர்க்கட்சி அடிக்கடி ஒன்றைச் சொல்லி வந்திருக்கிறார்கள். சென்னையிலே 3 வசதிகள், வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். இதிலே திறந்த சிறை, படக் காட்சியை ஏற்படுத்துவது, மனநோய் உள்ளவர்களுக்குத் தனியாகச் சிறை ஏற்படுத்துவது இத்தகைய கோரிக்கைகள் எல் லாம் அவர்கள் சுயநலத்தோடு கேட்டிருந்தாலும் அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சிறைகளிலே ஆலோசனைக் குழு முன்னாலே இருந்தது. அதிலே வழக்கறிஞர்கள் முன்பெல்லாம் இடம் பெற்றிருந்தார்கள். ஆனால் தி.மு.க. ஆட்சியிலே வழக்கறிஞர்கள் இருந்தால் முறையல்ல, குற்றவாளிக்கு தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று வாதாடி இருப்பார்கள். அவர்களுக்காக ஆஜராகி இருப்பார்கள், வக்கா லத்து வாங்கி இருப்பார்கள் என்று நினைத்து வழக்கறிஞர்களைப் போடவில்லை. மீண்டும் அவர்களை அந்தக் குழுவில் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலே பேராவூரணியிலே மேஜிஸ்திரேட் கோர்ட் ஒன்றும், முன்சீப் கோர்ட் ஒன்றும் ஏற்படுத்தவேண்டும்.

அடுத்து, கிராமங்களிலே கொலை செய்ய முயன்றதாக வழக்கு, கையாடல் வழக்கு, கள்ள நோட்டு வழக்கு இவைகள் எல்லாம் தாமதமாகின்றன. இவைகளை எந்த அளவிற்குத் துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குத் துரிதப்படுத்த வேண்டும். சென்னையிலே இருக்கின்ற காவல் துறையைப் போன்று தனியாக அதிகமான காவலர்களை அந்தப் பகுதிகளிலே நியமிக்க வேண்டுமென்றும் அதன்மூலம் இந்த வழக்குகளை துரிதமாக பைசல் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலப்படை ஏற்படுத்துவதாக நம்முடைய அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. நிலங்களை அதிகமாக ஜமீன்தார்கள்தான் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று கோர்ட்டிற்கு சென்று தடை உத்திரவை வாங்கி விடுகிறார்கள் என்ற அச்சம் இருக்கிறது. எந்தவிதமான தடையும் வாங்க முடியாத அளவிலும் அப்பீலோ, சூட்டோ போட முடியாத அளவிலும் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அந்த தகராறுகளை தீர்க்க தனியாக டிரிப்யூனல் ஏற்படுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பொ. சிகாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் வைகதுள்ள இந்தக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் சென்றவர்களின் மைனர்கள், எஸ்டேட் சம்பந்தப்பட்ட பொறுப்பு இவைகளுக்கு அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல் அண்ட் அபிஷியல் டிரஸ்டி என்ற இரண்டு அதிகாரிகள் நியமிக்கப்படுகிறார்கள். இதில் எந்தவிதமான புகார்களும் இல்லாத அதிகாரிகளாகப் பார்த்து நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையைச் சுத்தப்படுத்த இரண்டு மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் உள்ளன. இவைகளில் துப்புரவு சார்ந்த குற்றங்கள் மட்டும் விசாரிக்கப்படும் என்பது வரவேற்கத் தக்கது. இதனால் சென்னை நகரம் மேலும் பொலிவு பெறுவதற்கு இது வகை செய்கிறது.

மோட்டார் வண்டி விபத்துக்கள் உரிமை கோரிக்கையின் கீழ் வழக்குகளை விசாரணை செய்ய 1978-79-ஆம் ஆண்டில் நாமக்கல்லில் சப்-கோர்ட்டும், ராசிபுரத்தில் டிஸ்ட்ரிக் முன்சீப் கோர்ட்டும் வர இருப்பதுபோல் சென்னைக்கு அருகாமையில்

உள்ள ரெட்ஹில்ஸில் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட்டு அமைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாநில சட்ட உதவி மற்றும் அறிவுரை குழு அமைத்து இருக்கிறது. அதற்காக 1978-79-ஆம் ஆண்டுக்கு ரூபாய்5,31,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு ஏழைகளின் பக்கம் நீதி தேவன் ஆட்சி செய்கிறான் என்பதில் பெருமைப்படுகிறது என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறைகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக திறந்த வெளிச் சிறைகளில் அரசு கடைப்பிடிக்கும் வகைகள் பாராட்டத் தக்கது. இதனால் இட நெருக்கடி தவிர்க்கப்படுதல், விவசாயத்தில் பயிற்சி நன்னடத்தையின் பேரில் நம்பிக்கை, இதனால் குறைவான சிறைத் தண்டனை ஆகிய நன்மைகள் ஏற்படுகின்றன.

கைதிகள் சந்திப்பதிலும், கடிதப் போக்குவரத்திலும் 'ஏ' வகுப்பு கைதிகளுக்குச் சலுகை அளிப்பதுபோலவே 'பி' வகுப்பு கைதிகளுக்கும் பாரபட்சம் இன்றி உரிமை வழங்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்னை மத்திய சிறைச்சாலையைச் சென்னைக்கு அருகிலுள்ள புழல் கிராமத்திற்கு மாற்ற அரசு உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த புழல் கிராமத்தைச் சுற்றி தொழிற்சாலைகள் நிரம்ப இருக்கின்றன. அதுவும் தவிர சென்னைக்கு குடிநீர் வருகின்ற புழல் ஏரி அங்கு இருக்கிறது. இந்தச் சிறை மாற்றத்தினால் சுகாதாரக் கேடு மற்றும் பல சங்கடங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதை அரசு ஆராய்ந்து குறைந்தது ஐம்பது மைல் தூரத்திற்கு அப்பால் இந்தச் சிறைச்சாலையை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது 'பி' வகுப்புக் கைதிகளுக்கு தினமணி, நவசக்தி போன்ற பத்திரிக்கைகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று அரசின் கொள்கைகளைத் தாங்கி வருகின்ற அண்ணா, தென்னகம், மக்கள் குரல் போன்ற பத்திரிக்கைகளை வழங்க இந்த அரசு உடனடியாக ஏற்பாடு செய்ய வெண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கைதிகளுக்கு ஊதியம் வழங்கும்போது, அந்த ஊதியத்தை அந்தக் கைதியினால் நிராதரவாக விடப்பட்ட மனைவி மக்களிடம் நேரடியாகக் கொடுத்தால் அவர்களுடைய உள்ளம் மகிழும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பார்ஸ்டல் பள்ளியில் படிக்கும் இளம் குற்றவாளிகள் சிறையில் தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு உடனடியாக அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்புத் தரவேண்டும் அல்லது

[திரு. பொ. சிகாமணி] [1978 மார்ச் 13

இன்டஸ்ட்டிரியல் லோன் தந்து சிறு தொழில் ஆரம்பிக்க வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைதிகளை விடுதலை செய்வதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக மாவட்ட ஆட்சியாளர், காவல்துறை அதிகாரிகள், இவர்களின் குறிப்புக்ள் வரப்பெறும் காலதாமதத்தைத் தவிர்க்க காவல்துறை அதிகாரிகள் மட்டும் அரசுக்கு ஆணை அனுப்பலாம் என்று அரசு ஆணை அனுப்பியுள்ளது. இந்த ஆணையை நான் வரவேற்கிறேன்.

அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு ஒரு ஆண்டு தண்டனை குறைக்கப்படுகிறது. அதேபோல் இரத்த தானம் செய்கின்ற கைதிகளுக்கும் பத்து முதல் பதினைந்து நாட்கள் என்பதிற்குப் பதிலாக மூன்று மாத தண்டனையைக் குறைக்க அரசு ஆவனசெய்ய வேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஜெயில் ரிஃபார்ம்ஸ் கமிட்டி என்று மூன்று மெம்பர்கள் கொண்ட குழுவை இந்த அரசு அமைத்திருப்பது பாராட்டத் தக்கதாகும். இந்த ஹிஸ்டாரிக்கல் குழுவை அமைத்ததற்காக நமது புரட்சிதலைவர் அவர்களுக்கும், லா மினிஸ்டர் அவர்களுக்கும் அரசின் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு, பி. எச். பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். காலையிலே பேசும்பொழுது 44-வது அமென்ட்மெண்ட் பற்றி எல்லோரும் பேசும்பொழுது சொன்னார்கள். இங்கிருந்து மாநிலச் சட்டத்துறை சென்ட்ரல் ஆக்டைச் சேலஞ்ச் செய்தால் டெல்லிக்குப் போக வேண்டும். அதே கருத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். மணியடித்து விட்டதால் சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து நீங்கள்அமருங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்.

(பிற்பகல் 1·50)

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : Mr. Deputy Speaker Sir, there has been a very, very variegated and interesting discussion on the two subjects of Administration of Justice and Prisons by leaders and speakers belonging to the various parties in this House. Particularly, the hon. Friend Thiru Kittappa has covered a wide canvas which is faily large. so far as the jail administration is concerned.

1978 மார்ச் 13] [Thiru K. Narayanaswamy Mudaliyar]

I think he has covered almost all the salient points or defects or reforms which were bound to be pointed out by him, and they were so very effectively pointed out.

The first thing he mentioned is about the Report of the Ismail Commission. As I have already stated, the findings are there. The Commissions report has already been placed on the Table of the House. A separate day will be allotted for its debate. Hence, I would appeal to the hon. members to keep the powder dry as the English phrase goes till then. Then they can have the shots of rhetoric and eloquence in due course. I do not want them to dynamite it immediately, lest it should result in some explosion.

The hon. Member Thiru Kittappa mentioned about parole and the need for its liberalisation. I may assure the hon. Members of this House—I think I was absolutely liberal, very free and the information from the Department I got was, I have been too fair and too liberal and I must say, magnanimous in giving paroles, particularly on the festival days like Pongal day. I was very liberal because I felt that most of these prisoners must go back to their homes and see their relations on the day of *Puthandu —Tamizharukku sirappana Puthandu*—It is for this very reason that I was very liberal and magnanimous in granting paroles.

Some people have taken advantage of it. People who enjoyed parole two months before or earlier, have started presenting petitions. They were all faked petitions, but I do not mind. I thought the best thing is, they must go back to their homes, see their children, wife and relations on the happy day for the Tamilians. It is in that vein that I was very liberal. If I can, I will make every effort on further liberalisation and I am certainly not hesitating to do it, consistent with the sound administration of jails.

The hon. Thiru Kittappa pleaded for opportunities for the propagation of the ideals of self-respect movement. That is a matter which will be ceartainly examined by the Government in due course of time.

As for flush-out latrines, it is a very, very, elementary sanitary need for every human-being. Humanity requires that they must be given these facilities. There is no difficulty about it. There cannot be two opinions about it. The only constraintion my liberality is, the Finance Department's check-over me. I have no control over it. Funds are not liberally given to meet this elementary sanitary need. Enough funds must be

[Thiru K. Narayanaswamy Mudaliyar [1978 மார்ச் 13

provided and my own reading is, my information is, that the Government of India have given a few lakhs of rupees to us on a Matching Grant basis and I think if we can equally match it with the same amount, we will be in a position to furnish more sanitary conveniences in all these jails.

The other suggestion made by the hon. Member Kittappa is about the formulation of labour on caste basis. That is something like Thotti doing Thotti's business, Dhobi doing Dhobi's business, Achari doing Achari's business. On that the hon. Member has commented. It is better to look into this matter very seriously and the Department of Administration of Jails of this Government will issue proper and adequate instructions in this matter and also proper guidelines for not imposing the Sanathana caste basis on all these people. these unfortunate prisoners. If I am born a Thotti, I see no reason why I should do Thotti's business even after I go to jail. It is really very inequitous arrangement. It is a very, very inequitous arrangement. The clever fellows who have devised the caste system have also devised a kind of priority. Even among Thotti, there is A, B, C sub-caste and they say they are lesser than our sub-caste'. They are genius in inventing this caste system which is abominable, mostrous caste system which has really eaten into our society like cancer. It has created vested interests. The sooner it is ended, I tell you, it is ended mercilessly by resorting to the extremist steps, the better it is for the society and for the country.

Eight hours work has been, I think, implemented in Salem jail. There is no difficulty about it. We are trying our best to implement it in other Central Jails also. In some places they are doing about 10 hours roughly. It is only the financial constraints and the restrictions over our financial commitments that have been operating as a bar to the extension of this facility. The sooner we do it the better it is. We will certainly bend our energies to extend this facility of 8 hours work to other jail warders also.

About canteen facilities, this Government is seriously considering about instituting these canteen facilities and they will be done in due course of time.

I am also beholden to the hon-Member Thiru. S. V. Ramaswamy who has pleaded for implementation of the integrated scheme of the First Class Magistrates and District Munsifs. It is a very, very desirable Judicial reform which ought to be done in the interests of the judiciary, judicial fairness and the integrity of the judicial administration. The sooner it is done the better it is, and this Government will not hesitate to implement this wholesome satutary judicial reform as eary as possible.

1978 மார்ச் 13] [Thiru. K. Narayanaswamy Mudaliyar]

The hon. Member Thiru Ramaswamy also pleaded for the establishment of a Court of District Munsif at Perambalur. My recollection is, this has been under the consideration of both the Government and the High Court, and the decision will be intimated in due course of time. But by and large, the general scheme is that the Finance Department has instructed the Government as well as the High Court that for each year so many courts may be established in a phased manner, so that they may not be saddled with further additional financial burdens, if at every time a Court is opened here, there and everywhere to serve the local needs. Therefore, in a year so many Courts are going to be established on the civil side and on the criminal side, and these Courts are recommended by the High Court and thereafter it is bound to be scrutinized so far as the financial viability is concerned. The needs of the Finance Department are also looked into and thereafter, we are giving, what If call, the green signal as it were, to go ahead with the establishment of the Court as recommended by the High Court.

[பிற்பகல் 2·00]

The hon. Members Thiruvalargal Veluchami, Pandian, Palanivelu, Sigamani, Uthirapathi, Jayavelu and Pannai Sethuram have also spoken about their local needs for establishing courts in their areas. Not merely that, they rightly do it. In fact, Mr. Jennings has said in one place that, when National problems are discussed in England, the hon. Members coming from so many Constituencies also speak about their local interest because when they go back to their constituencies, they have to tell their constituents that they have pleaded their cause. So, this is not extra-ordinary or unbecoming when Members speak about the needs for the location of Courts in their constituencies or near about their constituencies.

One thing I was very much pained to hear was this. I was really pained to hear one sentiment expressed by my hon. Friend Thiru Swamidoss. I think it was that Thiru Swamidoss mentioned about the clients going to the High Court hunting after favourite advocates for each Judges and quesing their favour. If such unsatisfactory state of affairs prevail in the Courts, I beg leave to tell the House, that it should be, it ought to be condemned by every section of the House. I beg leave to tell the House...............

THIRU S. J. SADIQ PASHA: May I know from the Hon. Minister his experience? Mr. Swamidoss has made his allegation I request the Hon. Minister to say what is his experience about that.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: I am displeased with that. That state of affairs, I may tell you, has a very very—what I call it—gloomy prospect of real administration of justice. In the administration of justice, I will not hésitate to criticise or condemn such quest because a Judge should not give room among the public that 'X' or 'Y' or 'Z' is a favourite advocate to him.Then,he is not worthy of the salt. He is unfit to hold that office, if he gives that impression that'Y' or'Z'is his favourite advocate.You might have read in 1950-51 one Judge in Allahabad High Court, I think Mr. Sinha had one Muslim advocate as his favourite. The Allahabad Bar compiled the statistics about the number of cases in which the Advocate has appeared each day and they compiled all the details and statistics and presented a petition before the Chief Justice, I think Kenia or to his predecessor. Then the matter was looked into by the Chief Justice of the Federal Court or Supreme Court and it was on that border line an enquiry was conducted. Then he was found guilty. I think he tendered his resingation for his improper misconduct.

It is a great pity that Thiru Swamidoss should have referred to the former Chief Justice of this Court whois standing trial and the matter is *sub-judice*. Therefore, nothing can be said about that. It is good that this House should refrain from doing anything on that.

I would appeal to the House not to say anything about the entire institution of judiciary by quoting one solitary instance which is under trial. It may be that the former Chief Justice may be innocent or may not be innocent. the matter is *sub-judice* and we cannot come to any judgement about it. But if any Judge is going to promote the interest of any group of lawyers or single lawyer as a favourite, certainly Hon. Members of this House may compile some statistic] and bring it to the notice of the Government and this Government wils not hesitate to take up the matter, vigorously with them Union Government. to take appropriate action that maybe open to the. Some of you who are interested in the matter may go through some of the FirstVolume or second Volume Idɔ not remember the exact number of thevolume-of Nehru—Patel Correspondences. It runs into 10 volums. It is very interesting. Every legislator, every administrator, every M.P., every M.L.A. must go through these ten volumes It is my earnest appeal that every one of you must read the very interesting political history of India—Ten Volumes edited by the doyen of the Journalists, the veteran journalist Durgadoss just before his death. They are very interesting. Political literature, great norms of the administrative work, administrative re-forms, levels of administration and all these things can be gleaned from the correspondence between Patel and Nehru. I am sure that some of you will take the trouble to got hrough them. In these volumes, I find

Nehru—Patel expressed their greatest admiration. I do not know how many of you have read the great Transfer of Power printed in the Sixth Volume which volume is so much (the Hon. Minister was showing his hands) and if you go through it..............

திரு. க. சுப்பு: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு இருக்கக்கூடிய பரந்த அனுபவத்தை வைத்து நிறையச் சொல்ல முடியும். இப்போது நேரமாகி விட்டது. எல்லோருக்கும் பசி எடுக்க ஆரம்பித்து விட்டது. ஆகவே, அவர்கள் நாங்கள் எழுப்பிய சில பிரச்சனைகளுக்கு பதில் சொன்னால் நல்லது. மதுரையில் ஒரு ஹைகோர்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதற்கும் சேர்த்து அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: This is relevant to the question raised by the Hon. Member Thiru Swamidoss. If yougo through those volumes you will find how they have been effectively expressed by the then Prime Minister in regard to theentire judiciary. You will find their sentiments expressed. It is with pain that I hear this from my Hon. Friend. I am sure that the Judges will not give room for such complaints. I hope, at any rate, Madras High Court is the real institution which is really worthy of our admiration. I hope after hearing my reply, the Members will withdraw their Cut Motions and pass on the Demands.

திரு க. சுப்பு: துணைத் தலைவரவர்களே, மதுரையிலே ஒரு உயர்நீதிமன்றம் நிறுவ அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்து இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டும்.

இரண்டாவதாக, ஆயுள் தண்டனை அடைந்தவர்கள், தூக்குத் தண்டனை அடைந்தவர்கள் பற்றி கேட்டிருந்தேன். தூக்குத் தண்டனையை ரத்து செய்து, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் 10 ஆண்டு காலம் சிறையில் கழித்திருந்தால் அவரை விடுதலை செய்வதுபற்றி முடிவு செய்ய ஒரு அட்வைசரி போர்டு இருந்தது. அந்த நடைமுறை இப்போது இல்லை. இப்போது இருக்கும் முறை மாற்றப்பட்டு, மீண்டும் பழைய முறையைக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: My answer to the Hon. Member Thiru Suppu is that every effort is being made by this Government towards that end. Now the Government of

[Thiru K. Narayanaswamy Mudaliyar] [1978 மார்ச் 13

India has asked for the views of the Chief Justice and we have asked the ChiefJustice to express his views. We are awaiting his reply. This is my answer so far as his first question is concerned.

So far as his second question is concerned, my answer is so far as lifers are concerned, previously their cases were considered by the Advisory Board on their completion of ten years or little more. Now the Government of India has sent a communication stating that a lifer should have-undergone 14 years at least. Then we have written to the Government of India again to clarify the position in respect of two types of lifers.

One is life-prisoners and other who were converted into life-imprisonment, that is, the condemned prisoners converted into lifers. We have written to the Government of India to clarify the position. We are awaiting their reply.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை 13-க்கு திருவாளர்கள் செஞ்சி என். இராமச்சந்திரன், நா. சுந்தரராஜ், என்.வரதராஜன் ஆகியவர்கள் கொடுத்திருந்த வெட்டு தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், ரா. மார்க்கபந்து, மற்றும் திரு.எம்.ஏ. லத்திப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,85,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கபெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை 14-க்கு திரு. ஏ. சுவாமிதாஸ் அவர்கள் கொடுத்திருந்த வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் மா. மணிமாறன், வி. கே. கோதண்டராமன், ரா. மார்க்கபந்து மற்றும் எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

1978 மார்ச் 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 14-சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,67,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·12 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*123. பாசனம், நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம், 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

இணைப்பு I.

[88-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

சிறைகள்.

சிறைகள், ஒரு பார்ஸ்டல் பள்ளி, ஆண்களுக்கான ஒரு பிற்காப்பு இல்லம் ஆகியவற்றின் நிர்வாகம், அமைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றை சிறைத்துறை கவனித்து வருகின்றது. சிறைத் தண்டனைப் பெற்றவர்களைச் சீர்திருத்தி அவர்கள் விடுதலையான பின்பு சட்டத்திற்குக் கட்டுப்பட்ட நல்ல குடிமக்களாக வாழும் வகையில் அமைத்துக்கொள்ள உதவுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

1. சிறைகளின் வகைப்பாடு—

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்பட்டுள்ளன :—

1. மத்திய சிறைகள்.

2. சிறப்புச் சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).

[1978 மார்ச் 13

3. கிளைச் சிறைகள்.

*10—3—1978 ஆம் தேதியன்று அனுப்பப்பெற்றுள்ளது.

பொதுவாக, ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தண்டனையை அடைந்தவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், வழக்கமாக குற்றம் செய்வோரும் மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு மாதத்திற்குக் குறைவாக தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். சிறைக் கைதிகளில் வயது வந்தவர்கள், இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்; அது போன்று ஆண்களும் பெண்களும் பிரித்துத் தனித்தனிச் சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வாலாயமான கைதிகள் (Habitual prisoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளிலும், பெண் கைதிகள் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் வைக்கப் படுகின்றனர். இளங்குற்றவாளிகள் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். தற்காலிகமாக, மனநோய் குற்றவாளிகள் சென்னை அரசாங்க மனநோய் மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றனர். வேலூர் திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய் மற்றும் தொற்று நோய் குற்றவாளிகளுக்கென்று தனிச் சிறைக் கூடங்கள் உளளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள வெவ்வேறு நிறுவனங்கள் பின்வருமாறு :

1.	மத்திய சிறைகள்	..	..	8
2.	மாநில மகளிர் சிறை	..	..	1
3,	பார்ஸ்டல் பள்ளி	..	..	1
4.	சிறப்புக் கிளைச் சிறைகள்	..	..	3
5.	திறந்தவெளிச் சிறைகள்	..	..	2
6.	கிளைச் சிறைகள் —			
	(அ) சிறைத் துறைத் தலைவரின் பொறுப்பில் உள்ளவை ..	..	..	10
	(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பில் உள்ளவை	..	..	109

1978 மார்ச் 13]

மத்திய சிறைகளிலும் மற்றும் ஏனைய சிறைகளிலும் (கிளைச் சிறைகள் தவிர்த்து) 12,121 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது. கிளைச் சிறைகளில் 3,446 பேரை அடைத்து வைப்பதற்கான இடவசதி உள்ளது.

2 நிர்வாகம்—

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பை காட்டும் விளக்கப் படம் ஒன்று பிற்சேர்க்கை 1-ல் இணைக்கப்பட்டுள்வது.

பிற்சேர்க்கை இரண்டில் 1972–73லிருந்து 1976—77 வரை சிறைத்துறையின் செலவினங்களும் வருவாயும் 1977–78க்குரிய திருத்திய மதிப்பீடும், 1978–79—க்கு நிதி நிலை மதிப்பீடும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. திறந்தவெளிச் சிறைகள்—

தற்போது மாநிலத்தில் இரண்டு திறந்த வெளிச் சிறைகள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரில் உள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும் உள்ளன. இதனைத்தவிர சேலம் மத்திய சிறையுடன் இணைந்த ஒரு திறந்த வெளிச் சிறை ஒன்று உள்ளது.

திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன—

(1) சாதாரணச் சிறைகளில் உள்ள இட நெருக்கடியை தவிர்ப்பது.

(2) கைதிகளுடைய எதிர்கால மறு வாழ்வுக்காக அவர்களுக்கு சரியான முறையில் விவசாயத்தில் பயிற்சி அளிப்பது.

(3) சிறைகளுக்குத் தேவைப்படும் வேளாண்மைப் பொருட்களை உற்பத்தி செய்து தன்னிறைவு காண்பது.

(4) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளுக்கு நம்பிக்கையின் பேரில் சிறிதளவு சுதந்திரம் அளிப்பது.

(5) குறைந்த அளவில் சிறைத் தண்டனையை செயல்படுத்த வேண்டும் எனும் கொள்கைக்கு ஆக்கமளிப்பது.

ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகள் அமைப்பது குறித்து செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(1) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகெங்கை அருகில் முத்துப்பட்டி.

(2) நெல்லை மாவட்டத்தில் சிங்கப்பட்டி.

(3) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் மாநில விதைப்பண்ணை.

(4) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வெங்கடமங்கலம்.

4. சிறைவாசிகளின் பாகுபாடும் அவர்களின் உரிமையும்—

சிறைகளில் 'ஏ', 'பி' என்ற இரண்டு வகுப்புகளே உள்ளன. சமூக அந்தஸ்து, கல்வி மற்றும் உயர்தரமான வாழ்க்கையைக் கொண்ட கைதிகள் 'ஏ' வகுப்புக்குத் தகுதியுள்ளவர்கள். கீழ்த்தரமான குற்றம் புரிந்தவர்களும் தகாத நடத்தை உடையவர்களும் 'ஏ' வகுப்பில் வைக்கப்படமாட்டார்கள். முன் வரலாறு, நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாலாயமான கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு கொடுப்பது, அதுபற்றிப் பாகுபாடு செய்யும் அதிகாரமுடையவர்களின் முடிவுக்கு விடப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கு விரோதமான குற்றம் புரிந்த கைதிகளுக்கு 'ஏ' வகுப்பு வழங்கப்படுவதில்லை. 'பி' வகுப்பில் அநேகமாக 'ஏ' வகுப்பிற்கு தகுதியற்ற சாதாரண கைதிகள் வைக்கப்படுகின்றனர்.

(அ) உணவு :

'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்படும் உணவு கீழ்க்கண்ட நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள்—

(1) வேலை செய்யும் கைதிகள் .. சைவர்கள்.

(2) வேலை செய்யாக் கைதிகள் .. சைவர்கள்.

(3) வேலை செய்யும் கைதிகள் .. அசைவர்கள்.

(4) வேலை செய்யாக் கைதிகள் .. அசைவர்கள்.

இந்தக் கைதிகள் பிஸ்கட், கோகோ, ஓவல்டின் மற்றும் உணவுக்குப் பயன்படும் இதர பொருட்களையும், பழங்களையும் தங்கள் சொந்த செலவில் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகளுக்குச் சைவ உணவு குறித்த அளவு வழங்கப்படுகிறது. உணவின் அளவு, வேலை செய்வோர்களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் மாறுபடும். மருத்துவ அதிகாரி உடல் நலனை முன்னிட்டு இவ்வகைக் கைதிகளுக்கு முட்டை, கறி ஆகியவை வழங்குமாறு பரிந்துரை செய்யலாம்.

ஒவ்வொரு வகுப்பு குற்றவாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டிய உணவுப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட வெவ்வேறு அளவுகளின்படி அவைகளின் மதிப்பு வேறுபடுகிறது. சிறைவாசிகளின் உணவுமுறை மதிப்புக்கு உச்ச வரம்பு இல்லை. எனினும், விதிகளின்படி வழங்கப்படவேண்டிய உணவுப் பொருட்களின் மதிப்பீடு செய்யப்படுகின்றது. உணவுப் பொருட்களின் அளவு நிரந்தரமானது எனினும், அந்தந்த நேரங்களிலுள்ள மார்க்கெட்டு நிலவரங்களுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட வேண்டிய பொருட்களின் மொத்த மதிப்பீடு மாறுபடுகிறது.

பல்வேறு வகுப்பு சிறைவாசிகளுக்கும் நாளொன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு வழங்கப்பட வேண்டிய அளவுகளின்படி உணவு பொருட்களின் தோராயமான மதிப்பீடு கீழ் வருமாறு:—

(1) 'ஏ' வகுப்புக் கைதிகள்—

வேலை செய்யும் கைதிகள்—சைவர் ..	ரூ. 5·65
வேலை செய்யாக் கைதிகள்—சைவர் ..	ரூ. 5·40
வேலை செய்யும் கைதிகள்—அசைவர் ..	ரூ. 5·35
வேலை செய்யாக் கைதிகள்—அசைவர் ..	ரூ. 4·60

(2) 'பி' வகுப்புக்கைதிகள்—

சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	ரூ. 2·80
ஓரளவு சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள கைதி	ரூ. 2·70

[1978 மார்ச் 13

சத்துணவுத் திட்டம் (Nutritious Diet Scheme)

1971-ம் ஆண்டில் 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் 'கலோரி' மதிப்பினை அதிகப்படுத்த வகை செய்யும் சத்துணவுத் திட்டம் முதன் முதலாக சென்னை மத்திய சிறையில் செயல்படுத்தப்பட்டது. பின்பு மதுரை, கோவை மத்திய சிறைகளுக்கும் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் விஸ்தரிக்கப்பட்டது. இந்த திட்டத்தின்படி இச்சிறைகளில் காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக மூன்று நாட்களுக்கு இட்லியும் மீதி நான்கு நாட்களுக்குப் புட்டும், மாலை வேளைகளில் கடலை சுண்டலுக்குப் பதிலாக வேர்க்கடலையும் கொடுக்கப்படுகின்றது.

ஓரளவு சத்துணவுத் திட்டம் (Partly Nutritious Diet Scheme)

1975-76-ம் ஆண்டு அமுலுக்கு வந்த இத்திட்டத்தின்படி 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக மூன்று நாட்களுக்கு இட்லியும் நான்கு நாட்களுக்குப் புட்டும் வழங்கப்படுகிறது. மாலை வேளைகளில் கடலை சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மற்ற மத்திய சிறைகளிலும் வேலூர் மாநில மகளிர் சிறையிலும் செயல்பட்டு வருகிறது.

எல்லா மத்திய சிறைகளிலும் மாநில மகளிர் சிறையிலும் உள்ள அனைத்து 'பி' வகுப்புக் கைதிகளுக்கும் ஒரே மாதிரியான உணவு முறையைக் கொண்டு வருவதற்கான செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) உடைகளும் படுக்கையும்:

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்தப் படுக்கையைப் பயன்படுத்தவும் வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் தங்களுடைய சொந்த உடைகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணிய வேண்டும். உறவினர்களைச் சந்திக்கும்நேரங்களில் 'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்த உடையை அணிய அனுமதிக்கப் படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகள் சிறை ஆடைகளையே அணிதல் வேண்டும்.

1978 மார்ச் 13]

(இ) சோப்பும் மற்றும் வாசனைப்பொருட்களும் :

கைதிகள் அனைவரும் சோப்பு, தலைக்கு தேய்க்கும் எண்ணெய் (Hair oil) மற்றும் எண்ணெய் ஆகியவைகளை தங்களுடைய சொந்த செலவில் வாங்கி பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மாதத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் ஒரு அவுன்சு (28 கிராம்) எண்ணெய் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு கைதிக்கும் ஒன்றரை அவுன்சு (42 கிராம்) சீயக்காய்த்தூளும், 370 கிராம் சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறையில் உள்ள நூற்பாலையில் வேலைசெய்யும் கைதிகளுக்கு குளிப்பதற்காக மாதத்திற்கு ஒருமுறை 2 அவுன்சு (56 கிராம்) எண்ணெய் கொடுக்கப்படுகிறது. நன்னடத்தை உள்ள, தகுதியுள்ள எல்லா வகுப்பு கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பொருட்கள் சிறை உயர் அதிகாரி ஒருவரால் நன்கு பரிசீலிக்கப்பட்ட பின்னரே கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

(ஈ) சந்திப்பும் கடிதத் தொடர்பும் :

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதவும், பெறவும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணிநேரம் சந்திக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகள் மாதத்திற்கு 2 கடிதங்கள் எழுதவும், பெறவும் மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி நேரம் சந்திக்கவும் அனுமதிக்கயபடுகிறார்கள்.

(உ) நாளிதழ்களும் சஞ்சிகைகளும்:

தற்போது 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி (2) சுதேசமித்திரன் (3) நவசக்தி (சுதேசமித்திரன் தற்போது வெளியிடப்படுவதில்லை) நாளிதழ்கள் 100 கைதிகளுக்கு ஒரு பிரதி என்ற விகிதத்தில்

[1978 மார்ச் 13

அரசு செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட நாளிதழ்களைத் தங்களது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள 'ஏ' வகுப்புக் கைதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சிறை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட நூலகங்களிலிருந்து புத்தகங்கள் பெறப்பட்டு கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக்கல்வி இயக்குநருடன்கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்ட புத்தகப் பட்டியல் ஒன்று எல்லாச் சிறைக் கண்காணிப்பாளர்களின் பார்வைக்கும் அனுப்பப்படுகிறது. புத்தகப் பட்டியலிலுள்ள புத்தகங்கள் யாதேனும் தேவைப்பட்டால் அவைகளை வாங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) இதர சலுகைகள்:

'ஏ' வகுப்புக் கைதிகள் மரச்சாமான்கள், கொசுவலை மற்றும் புகையிலை, சமையல் செய்யவும் சாப்பிடவும் தேவைப்படும் பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைக் கண்காணிப்பாளரின் முடிவுக்கிணங்க மருத்துவ ஆலோசனையின் பேரிலும் இதற்கு முன் சிறைத் தண்டனை அடைந்திராத வழக்கமாகக் குற்றம் செய்தவராக இராத கைதிகள் சிறைக் கண்காணிப்பாளரது முடிவுப்படி சிறையின் மருத்துவமனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலோடு உறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லா மத்திய சிறையிலுள்ள கைதிகளும் ஞாயிற்றுக்கிழமையிலும் ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் கைப்பந்து, பூப்பந்து, கபடி ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூர் மாநில மகளிர் சிறைவாசிகள் வளைபந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

5. கைதிகளின் தொழிலும் சிறைகளில் தொழிற்சாலைகளும் :

சிறைகளில் தொழில் அனுமதிக்கப்படுவதின் முக்கிய நோக்கம் கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களின் புதுவாழ்வுக்கு உதவுவதே ஆகும். எனவே, பயனில்லாத, உற்பத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. எல்லா சிறை வேலைகளும், கடினம், நடுத்தரம், சுலபம் என்று மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மருத்துவ அதிகாரியின் ஆலோசனைப்படி கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல், நெசவு, சாயம்

1978 மார்ச் 13]

தோய்த்தல், கட்டிட வேலை; கருமார் வேலை, தோல் தொழில், புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல் ஆகிய தொழில்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவுடன் கூடிய நூற்பாலை ஒன்று இருக்கிறது.

கூடுமானவரையில் கைதிகள் சிறைக்கு வரும்முன்னதாக எந்தெந்தத் தொழில்களை செய்து வந்தார்களோ அத்தொழில்களே கொடுக்கப்படுகின்றன. தொற்று நோய்க்காக ஒதுக்கப்படும்போது கைதிகளுக்கு கொடுக்கப்படும் வேலை, கல்வி, பயிற்சி ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்காக சிறையின் கண்காணிப்பாளர் மூத்த உதவி மருத்துவ அலுவலர், மற்றும் ஜெயிலர் (jailor) ஆகியோரைக் கொண்ட ''பாகுபாட்டுக் குழு'' அமைக்கப்பட்டுள்ளது. சிறைக் கைதிகள் சென்னை மத்திய சிறைச்சாலையில் உள்ள அச்சுக் கூடத்தில் தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். கைதி தன்னுடைய வேலையில் மாற்றம் வேண்டினால் அது குறித்து அந்தச் சிறைக் கண்காணிப்பாளரிடம் விண்ணப்பிக்கலாம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுச் செய்து முடிக்கப்படும் வேலை உரிய தரமுடையதாகவும், வரையறுக்கப்பட்ட அளவுக்கு மேலும் வருவாய் உள்ளதாகவும் இருந்தால் கீழ்க்கண்ட விகிதங்களில் அத்தகைய வேலைகளுக்குப் பணிக்கொடை வழங்கப் படுகிறது.

	பணிக்கொடை விகிதம்., ரூ.	காசு.	(ஒரு மாதத்திற்கு)
1. கைதி	0	25	,,
2. கைதி (இரவுக் காவலர்) ..	0	50	,,
3. கைதி (வேலை மேற்பார்வையாளர்). ..	1	00	,,
4. கைதி (வார்டர்)	2	00	,,

ஊதியம் வழங்கும் திட்டமானது சேலம் மத்திய சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வழங்கப்படும் ஊதிய விகிதங்களாவன :	ரூ.	காசு.	(ஒரு நாளைக்கு)
1. தேர்ச்சி பெற்ற வேலையாள்	0	40	,,
2. ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள்.	0	20	,,
3. தேர்ச்சி பெறாத வேலையாள்	0	10	,,

[1978 மார்ச் 13

இத் திட்டத்தை மற்ற மத்திய சிறைகளிலும் செயல்படுத்தும் செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

6. மருத்துவ-சுகாதார ஏற்பாடுகள்.—

ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும், வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும், பல்லாவரத்தில் உள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லத்திலும் ஒரு மருத்துவமனை உள்ளது. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் ஒரு மருத்துவ அதிகாரியும் அவருக்கு உதவி செய்ய உதவி மருத்துவர்களும், மருந்தாளுநரும் உள்ளனர். பல்லாவரத்திலுள்ள ஆண்களுக்கான பிற்காப்பு இல்லத்தில் முழு நேர மருந்தாளுநரும், பகுதி நேர மருத்துவ அதிகாரியும் உள்ளனர். கைதிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. கைதிகளுக்கு அவர்களின் பாகுபாட்டின்படியும் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் பொருட்டும் அவர்களுடைய சொந்த செலவிலோ அல்லது அரசாங்க செலவிலோ பல் வைத்தியம் செய்யப்படுகிறது. தலைமை மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட பல் மருத்துவர் வாரத்திற்கு இருமுறை கைதிகளைப் பார்வையிடுகிறார். வேலூர், திருச்சி மத்திய சிறைச்சாலைகளில் உள்ள தனிக்கூடங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட கைதிகள் தனியாக வைக்கப்படுகின்றனர். மன நோய்க் குற்றவாளிகள் சென்னை மனநோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

7. கைதிகளுக்குக் கல்வி :—

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய நிலையில் இருக்கும் கைதிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் முழுமையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. சில குறிப்பிட்ட சிறைச் சாலைகளில் முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு முதியோர் கல்வித் திட்டம் நவீன முறையில் நடத்தப்படுகிறது. கைதிகள் விளக்கு வசதி உள்ள சிறைச்சாலைகளில் இரவு 9 மணி வரை படிக்க அனுமதிக்கப் படுகிறார்கள்; விளக்கு வசதி இல்லாத சிறைச்சாலைகளில் அவ்வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளின் நன்மையைக் கருதியும், சிறைச் சாலையில் கல்வியை மேம்படுத்தவும் சிறைக் கண்காணிப்பாளர்கள் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வர

1978 மார்ச் 13]

வழைத்துச் சிறை விடுமுறை நாட்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் அரசியல் சம்பந்தப்படாத விஷயங்களில் உரையாற்றுமாறு ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். புத்தகம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதனைச் சார்ந்த எல்லாச் செலவுகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகிறது. கைதிகள் முதல்முறை தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டாலும் மேலும் இருமுறை தேர்விற்கு அரசாங்க செலவிலேயே அனுமதிக்கப்படுகின்றனர்.

மத சம்பந்தமான போதனைகளும், ஒழுக்க நீதி போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் அந்த விரிவுரைகளும், விளக்கவுரைகளும் ஆற்றுவதாகக் கூறிக்கொண்டு அவர்கள் வேற்று மதங்களைச் சார்ந்தவர்களைத் தம் மதத்திற்கு மாற்ற முயற்சிக்க கூடாது என்றும், தமது சமயத்தைச் சார்ந்தவர்கள் மீது மட்டுமே நாட்டம் செலுத்த வேண்டும் என்றும் நிபந்தனையோடு தான் அனுமதிக்கப்படுகின்றனர். அறநெறி சம்பந்தமான விரிவுரை ஆற்றுவதற்காகத் தமிழ் அறிஞர்கள் அழைக்கப்படுகின்றனர்.

8. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை:—

இளம் வயது குற்றவாளிகள் (18 வயதுக்கு மேல் 23 வயதிற்குள்) பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர் :—

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) விவசாயம்.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பேண்ட் வாத்தியக் கருவிகள் இசைக்கும் பயிற்சி.

(ஐ) வீட்டு வேலைகள்—சமையல் வேலை போன்றவை

பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு மேற்படி தொழில் பயிற்சி நிலையங்களிலிருந்து அவர்கள் பிற்காலத்தில் வேலையில் அமர்வதற்கு வசதியாக சான்றிதழ்கள் வழங்கப்படு

கின்றன. பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 405 இருக்கும். பார்ஸ்டல் பள்ளியில் தற்போது சராசரியாக 200 மாணவர்கள் உள்ளனர். அங்குள்ள துயிற்கூடம் ஒன்று வயது வந்த இளங்குற்றவாளிகள் (23 முதல் 25 வயது வரை) தங்குவதற்கான நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. வயது வந்த இளங்குற்றவாளிகள் அங்கு 25 வயது வரும் வரை வைக்கப்படுகின்றனர். அந்த துயிற்கூடம் ''சிறைச்சாலை சட்டத்தின்படிக்கான சிறைச்சாலை'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் விடுதலையாகி வரும்பொழுது ரொக்கமாக வழங்காமல் இயந்திரங்களும் பசுமாடு அல்லது எருமை மாடும் வாங்கித்தந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. அவர்கள் மறுவாழ்வு பெற உதவும் பொருட்டு அவர்கட்கு அளிக்கப்பட்ட நிதி உதவி அவர்களிடமிருந்து சுலப தவணையில் வசூலிக்கப்படும்.

9. ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்—

பல்லாவரத்திலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களிலிருந்தும் சீர்திருத்தம் அல்லாத நிறுவனங்களிலிருந்தும் வெளிவருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு தச்சுவேலை, உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வித பயிற்சிகளினால் அவர்கள் ஒரு நிலையான வாழ்க்கையில் அமர்ந்து தங்களை நேர்மையான சட்டத்திற்குட்பட்ட குடிமக்களாக ஆக்கிக்கொள்ள முடியும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு முதல் ஆண்டில் நாளொன்றுக்கு ரூ. 1·50 வீதமும் மறுவருடம் நாளொன்றுக்கு ரூ. 2 உதவித் தொகையும் மற்றும் இலவச உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு தொழிற் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடதிட்டங்களின்படி பிற்காப்பு இல்லத்தில் உள்ள நிலைமைக்கும், வசதிக்கும் ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வயது வந்த ஆண்கள் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 100 என்றாலும் இவ்வில்லத்தில் சராசரியாக 40 பேர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வில்லத்தில் தச்சுவேலை, தையல் வேலை, உலோக வேலை ஆகிய மூன்று தொழிற் பிரிவுகள் உள்ளன.

10. சிறைப் பார்வையாளர்கள்—

பணிச்சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, பணிச்சார்பில்லாத பார்வையாளர்களையும் அரசு நியமிக்கிறது. நீதி, மருத்துவம், சுகாதாரம், தொழில் மற்றும் தீயணைக்கும் துறைகளில் பணியாற்றுகிறவர்கள், பணிச்சார்புள்ள பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். பொதுமக்களில் புகழ் பெற்றவர்கள் குறிப்பாக கைதிகளுக்காகப் பணிசெய்யும் மனப்பான்மையுடையவர்களும், மனநோய் நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும், சமூக சேவையாளர்களும், விடுதலை பெற்ற கைதிகளின் சகாய சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்களும், குற்றவாளிகளின் நல்வாழ்வில் அக்கறை உள்ளவர்களும் பார்வையாளர்களாக சாதாரணமாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் பணியாதெனில் சிறை விதிகள் சரியாக கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்ப்பதும் சிறை வாசிகளின் குறைபாடுகளைக் கேட்டறிவதும் மற்றும் சிறையின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதும் ஆகும். இவர்களுடைய பதவிக்காலம் இரண்டாண்டுகளாகும்.

11. கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்தல்—

மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் காவல்துறை அதிகாரிகளையும் கலந்தாலோசித்து கைதிகளை விடுமுறையில் விடுதலை செய்வது வழக்கமாக இருந்து வந்தது. காவல்துறை அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு குறிப்புரைகளை அனுப்புவார்கள். இக்குறிப்புரைகளின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசுக்கு தங்கள் பரிந்துரைகளை அனுப்புவார்கள். இவ்வாறு இரண்டு வழிமுறைகள் மூலம் குறிப்புகள் வரப்பெற காலதாமதமாவதை தவிர்க்க காவல்துறை அதிகாரிகளை நேரிடையாக அரசுக்கு குறிப்புரைகள் அனுப்பலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகளின் குறிப்புரைகளின்பேரில் கைதிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டு வருகின்றது.

12. தண்டனைக் குறைப்பு—

கைதிகள் நன்னடத்தையில் இருக்க ஊக்குவிக்கவும், நன்கு வேலை செய்யவும், தங்களுடைய குற்றம் செய்யும் மனப்போக்கை மாற்றி கொள்ளவும், பலவிதமான தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் கைதிகளின் நன்னடத்தைக்காகவும் மாதத்திற்கு இரண்டு நாட்கள் அவர்கள் செய்யும் வேலைக்காகவும்

[1978 மார்ச் 13

தண்டனை குறைப்பு அளிக்கப்படுகிறது. இவ்விதிகளின்படி கிடைக்கப்பட்ட தண்டனைக் குறைப்புடன், ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் சிறைகளில் சமையற்கூடங்களில் வேலை செய்யும் கைதிகளுக்கும் துப்புரவுப்பணி செய்யும் கைதிகளுக்கும் மூன்று மாதத்திற்கு 3 நாட்கள் கூடுதலாகத் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கைதிக் காவலர்களுக்கு மாதத்தில் 8 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. சிறை ஒழுக்கத்தையும் விதிமுறைகளையும் பராமரித்து வரும் கைதிகளுக்கு ஆண்டிற்கு 30 நாட்கள் சிறப்பு தண்டனைக் குறைப்பு சிறை கண்காணிப்பாளரால் வழங்கப்படுகிறது. மிகச் சிறப்பாக பணிபுரிவோருக்கு சிறைத்துறைத் தலைவரால் அல்லது அரசால் 60 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. குடும்பநலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் கைதிகளுக்கு அதிகபட்சம் ஒரு ஆண்டு தண்டனைக் குறைப்பும் இரத்ததானம் செய்யும் கைதிகளுக்கு 10 முதல் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவைகளைத் தவிர, ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளுக்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளின் நினைவாகச் சிறப்பு தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

		தண்டனைக் குறைப்பு.
(1)	உலகத்தமிழ் மாநாடு	ஒரு ஆண்டு.
(2)	காந்தி நூற்றாண்டு விழா ..	ஒரு ஆண்டு.
(3)	இந்திய சுதந்திர வெள்ளி விழா ..	ஒன்றரை ஆண்டு.
(4)	முன்னாள் முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் 69–ஆம் பிறந்த நாள் விழா.	மறைந்த ஆறு மாதங்கள்.

மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்ற கைதிகளை காலக்கெடுவுக்கு முன் விடுதலை செய்வது குறித்து கைதிகளின் தண்டனைக் குறைப்பு உள்பட மூன்றில் இரண்டு பங்கு தண்டனையைக் கழித்த பின்பு, ஆலோசனைக்குழு பரிசீலிக்கிறது. ஆலோசனைக் குழு பிரிவு 432 கு.பு.கோ. 1973-ன் படி காலக்கெடுவுக்கு முன் விடுதலை செய்வதுபற்றி பரிந்துரை செய்ய கைதிகளின் முந்தைய பதிவுகளையும், நன்னடத்தை **அலுவலர், காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட**

1978 மார்ச் 13],

ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைகள் ஆகியவைகளை விடுதலை செய்வதற்குமுன் கருத்திற்கொள்கிறது. முதல் தடவையாக தண்டனை பெற்ற 65 வயதிற்கு மேற்பட்ட ஆண் கைதிகளின் நிலைமையையும் 55 வயதிற்கு மேற்பட்ட பெண் கைதிகளின் நிலைமையையும் அவர்களின் தண்டனைக் குறைப்பும் சேர்த்து $2\frac{1}{2}$ ஆண்டு தண்டனை அனுபவித்திருந்தால் ஆலோசனைக் குழுவினால் முன்னதாக விடுதலை செய்யப்படுவதற்காக பரிசீலிக்கப்படுகிறது.

மரண தண்டனை பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு தமிழ் நாட்டு சிறைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனைக் கைதி முழுமையாக 14 வருடம் தண்டனை அனுபவித்திருந்தால், அவர்களுக்கு முன் விடுதலை அளிப்பது குறித்து பரிசீலனை செய்ய ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம். 6—2—1970 அன்று வரை சிறைப்படுத்தப்பட்ட மற்ற ஆயுள்தண்டனைக் கைதிகள் குறித்து, அவர்கள் $9\frac{1}{2}$ ஆண்டு காலம் முழுமையாக சிறையில் கழித்தவுடன் அவர்களுடைய முன் விடுதலை பரிசீலனைக்காக ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம். 6—2—1970-க்குப் பின்னால் சிறைப்படுத்தப்பட்ட மற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்து அவர்களுடைய தண்டனையில், தண்டனைக் குறைப்பையும் சேர்த்து 2/3 பாகம் கழித்திருந்தால், ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படலாம்.

மாறுபட்ட அமைப்பு வழி முறைகள்படி, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி மாணவர்களை முன்னதாக விடுதலை செய்வது மரபாக இருந்து வருகிறது. இம்மரபு ''உரிமத்தின் மீது விடுதலை செய்வது அல்லது வெளியே அனுப்புவது'' என்று அழைக்கப்படுவதுண்டு.

இந்தப்பள்ளி மாணவர்களைப் பொறுத்தமட்டில், இச்சட்டத்தின் 15-வது பிரிவு, (1) உட்பிரிவின்படி, மாணவர்களை விடுதலை செய்ய பரிந்துரைக்க கண்காணிப்பாளர் கருதினால் குழுவின் ஒவ்வொரு கூட்டமும் கூடுவதற்கு முன் 6 வாரத்திற்கு குறையாத அளவில், அத்தகைய மாணவர்களின் பெயர்களை, கிராமங்களாய் இருப்பின் மாவட்டத்தின் நன்னடத்தை அலுவலருக்கும், சென்னை நகரமாய் இருப்பின் தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளருக்கும் அனுப்ப வேண்டும். அவர்கள் மேற்கொண்ட தொழிற் பயிற்சி, அவர்களுக்குப் பொருத்தமான பணிவகைகள் ஆகிய

[1978 மார்ச் 13

விவரங்களை, அவர்களை விசாரணை செய்ய ஏதுவாக இருக்கும் பொருட்டு அனுப்ப வேண்டும். பார்வையிடவரும் குழுவின் முன், நன்னடத்தை அலுவலர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் இவர்களிடமிருந்து பெற்ற தகவல்களை வைக்க வேண்டும். அவ்வாறு உரிமத்தின் மீது விடுதலை செய்ய தகுந்த மாணவர்கள் குறித்து விஜயம் செய்யும் குழுவால் பரிந்துரைக்கப்படுபவை கட்டளைக்காக சிறைத் துறைத் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படும்.

திறந்த வெளிச் சிறைகளின் பயன்களையும் அதனை பயன்படுத்துவது பற்றியும் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு திறந்த வெளிச்சிறைகளில் இருக்கும் கைதிகளுக்கு ஞாயிறு விடுமுறை நாட்களை தவிர்த்து ஒரு நாள் வேலைக்கு ஒரு நாள் தண்டனைக் குறைப்பும் நன்னடத்தைக்கு ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும் மேலும் ஐந்து வருட நன்னடத்தைக்கு ஒரு வருட தண்டனைக் குறைப்பும் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

13. கைதிகளின் நலம்.—

தற்போது ஒவ்வொரு மத்திய சிறைக்கும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறைக்கும் புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளிக்கும் ஒருவர் வீதம் மொத்தம் பத்து கைதிகள் நல அலுவலர்கள் உள்ளனர். இந்த நல அலுவலர்கள் கைதிகளுக்கு உதவியும் கைதிகளுக்குச் சிறையின் விதிமுறைகளுக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும் கைதிகள் வெளியிலுள்ள தங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ள கடிதப்போக்குவரத்திற்கு உதவி செய்தும் கைதிகள் விடுதலைக்குப்பின் சமூகத்தில் நல்வாழ்வில் இடம் பெறுவதற்கும் வழிவகை செய்கிறார்கள்.

பெண் கைதிகளின் மூன்று வயது, அதற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு காப்பிடமும்; மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் குழந்தை வளர்ப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் செயல்படுகிறது.

கைதிகளின் நலத்திற்கும், கலாச்சாரத்திற்கும் ஒழுக்கச் சீரமைப்பிற்காகவும் ஒவ்வொரு மத்திய சிறையிலும், கலாச்சாரக்குழு ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கலாச்சாரக்குழு கைதிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

1978 மார்ச் 13]

14. நன்னடத்தைப் பணி—

நன்னடத்தைப் பணி சிறைத்துறையின் ஒரு பிரிவாகும். கைதிகளின் வீட்டு நிலை முதலியன குறித்து விசாரிப்பது, பிணைப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் குற்றவாளிகளையும், உரிமத்தின் பேரில் விடுதலையாகும் கைதிகளையும், பார்ஸ்டல் பள்ளியில் இருந்தும் சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களிலிருந்தும் விடுதலையாகும் கைதிகளையும் கண்காணிப்பது முதலியன நன்னடத்தை பணியாகும். சிறைத் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத்தை பணிப்பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரிடைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. ஒரு மண்டல நன்னடத்தை அலுவலரை கொண்ட ஓர் ஆராய்ச்சிப் பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகளின் நன்னடத்தை சட்டம் மத்திய சட்டத்தால் மாற்றப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இவ்விரண்டு தண்டனையையும் அளிக்கக் கூடிய குற்றத்தைப் புரிந்த குற்றவாளிகளை, முன் குற்றம் ஏதும் அவர்கள் மீது இல்லை என்று நிருபணம் செய்யப்பட்டால் நீதி மன்றம் இத்தகைய குற்றவாளிகளை நன்னடத்தையின்பேரில் மன்னித்து விடுதலை செய்ய இச்சட்டம் அதிகாரம் அளிக்கின்றது. இச்சட்டத்தின் விதித்துறைகள் நவீன முறையான சீர்திருத்த நிர்வாகத்திற்கு எளிதாகவும், பொருத்தமாகவும் உள்ளன.

15. தமிழ்நாட்டு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம்—

விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இச்சங்கம் விடுதலை பெற்ற கைதிகளுக்கு புதுவாழ்வு அமைத்து கொடுக்கவும், குற்றங்கள் புரிந்து தண்டனை பெற்றவர்களுக்குத் தேவையான ஏனைய உதவிகள் அளித்தலும், இளங்குற்றவாளிகள், தற்செயலாக குற்றம்புரிபவர்கள் குற்றம்புரிவதை வழக்கமாக கொள்வதைத் தடுக்கவும்; அவர்களது நல்வாழ்விற்காக புதிய சட்டங்களை வகுத்து இருக்கும் சட்டங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இச்சங்கம் சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவிகள், தேநீர் கெண்டி (கொதிகலன்), தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காக, பண வசதி செய்து

கொடுக்கிறது. மேலும் புகை வண்டி பேருந்து செலவிற்காக பண வசதியும், தொழிலில் பயிற்சி பெறுவதற்குக் கடனும் வழங்குகிறது. வேலை வாய்ப்பிற்கும், சட்ட உதவிகள் பெறுவதற்கும், ஓய்வுகால ஊதியங்கள் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவை வழங்குகிறது.

இச்சங்கம் சென்னையில் உள்ள மத்திய குழுவினாலும் மாவட்டங்களில் மாவட்ட குழுக்களினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 10 மாவட்டக் குழுக்கள் சென்னையில் உள்ள மத்தியக் குழுவின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டக் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவல் சார்பற்ற தலைவர்களாக இருக்கின்றனர். சென்னையிலுள்ள மத்தியக் குழுவில் மொத்தம் 30-க்கு குறையாத தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் சிறைத்துறை தலைவர், காவல் துறை தலைவர், நகர காவல் துறை ஆணையாளர், தலைமை மாநகர மாஜிஸ்டிரேட், சென்னையிலுள்ள மத்திய சிறையின் கண்காணிப்பாளர், முதன்மை நன்னடத்தை கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம் கண்காணிப்பாளர் ஆகியோர் அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள் ஆவர். மத்தியக் குழுவிற்கு அரசு ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமல் நியமனம் செய்ய ஓர் விதித்துறையும் உள்ளது. மாவட்டக் குழுக்கள் ஐம்பது உறுப்பினர்களுக்கு ஒரு நியமனதாரர் என்ற விகிதத்தில் பத்து மாவட்டக் குழுக்கள் தங்களுடைய நியமனதாரர்களை மத்தியக் குழுவிற்கு அனுப்புகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தைத் தவிர காலாண்டுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களுக்கு அரசு தலைமைச் செயலாளர் அல்லது அரசு உள்துறைச் செயலாளர் முறையான தலைமைப் பணிகளைச் செய்ய தலைமை வகிக்கின்றனர். அதேபோன்று மாவட்டக் குழுக்கள், மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் கூட்டங்களை நடத்துகின்றன.

சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சென்னையிலுள்ள மத்தியக் குழுவும் மதுரையிலுள்ள மாவட்டக் குழுவும், தொழில் பிரிவுகளை நடத்தி வருகின்றன. சென்னையிலுள்ள தொழிற்பிரிவு ஒரு தச்சுப் பட்டறையைப் பெற்றுள்ளது. இது சராசரி மாதமொன்றுக்கு 20 நபர்களுக்கு வேலை அளிக்கிறது. பொதுமக்களிட

மிருந்து நன்கொடை சந்தா மூலமாக ரூ. 6,000 இச்சங்கம் திரட்டவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 வீதம் இச்சங்கத்திற்கு சிறைத்துறை தலைவரின் மூலம் அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. இந்தத் தொகை இரண்டு தவணையாக அளிக்கப்படுகிறது.

16. சிறைகள் சீர்திருத்தக் குழு—

சிறை நிர்வாகத்தை சீர்திருத்துவதற்கு தேவையான மாற்றங்களை பரிந்துரை செய்வதற்காக அரசு குழு ஒன்றினை நியமித்துள்ளது.

பாட்னா உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற முதல் நீதிபதி திரு. நரசிம்மன் (ஐ.சி.எஸ்.) தலைவராகவும், மதுரை எர்ஸ்கின் மருத்துவமனை உளநூல் வல்லுநர் திரு. வெங்கோபராவும் ஓய்வுபெற்ற காவல் துறை அலுவலர் திரு. எஸ்.எம்.டையஸ் (ஐ.பி.எஸ்.) உறுப்பினர்களாகவும் இக்குழுவில் இருப்பர். இக்குழு சிறைகள் சட்டம், 1894 செய்ல்முறை அனுபவங்களை கருத்தில் கொண்டு மற்றும் கைதிகள் சட்டம், 1900-ல் உள்ள குறைபாடுகளை கண்டறிந்து சட்டத்தின் எந்த விதிகளை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டுமென திட்டவட்டமான பரிந்துரைகளை வழங்கும். அரசியல் கைதிகளை காவலில் வைப்பது, நடத்துவது பற்றிய சட்ட விதிகளையும் நெறிகளையும் தேவைப் பட்டால் மாற்றங்கள் செய்வதற்காக பரிந்துரைகள் செய்யும். மாநிலத்தில் தற்போதுள்ள சிறைக் கட்டிடங்களின் தரத்தினை ஆராய்ந்து பெரும்பாலான சிறைச் சாலைகளில் காணப்படும் இட நெருக்கடி ஏனைய குறைபாடுகளை நீக்கும் வண்ணம் மேம்பாடுகள் செய்வதற்கான தனது பரிந்துரைகளை இக்குழு வழங்கும்.

தனது அறிக்கையினை இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதிக்குள் அளிக்குமாறு இக் குழு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

[1978 மார்ச் 13

இணைப்பு A

1972-73 முதல் 1976-77 வரை சிறைத் துறையின் செலவினங்களும் வருவாயும், 1977-78 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டையும், 1978-79-க்கான நிதிநிலை மதிப்பீட்டையும் குறிக்கும் அட்டவணை.

		தொகை (ரூபாய் ஆயிரத்தில்.)
1. செலவு—		
1972-73	..	2,79,25
1973-74	..	3,19,23
1974-75	..	3,89,06
1975-76	..	1,89,63
1976-77	..	4,72,98
1977-78 (திருத்திய மதிப்பீடு)	..	4,62,56
1978-79 (நிதி நிலை மதிப்பீடு)		4,68,29
2. வரவு—		
1972-73	..	80,76
1973-74	..	87,94
1974-75	..	1,00,61
1975-76	..	99,82
1976-77	..	1,18,61
1977-78 (திருத்திய மதிப்பீடு)	..	1,39,57
1978-79 (நிதி நிலை மதிப்பீடு)	..	1,36,49

1978 மார்ச் 13]

மாநிலத்திலுள்ள சிறைகளின் எண்ணிக்கை

1.	மத்திய சிறைகள்	..	8
2.	மாநில மகளிர் சிறை	..	1
3.	பார்ஸ்டல் பள்ளி	..	1
4.	தனிக்கிளைச் சிறைகள்	..	3
5.	திறந்தவெளிச் சிறைகள்	..	2

5. கிளைச் சிறைகள்—

(அ) சிறைத்துறைத் தலைவரின் நேரடிப் பொறுப்பில் இருப்பவை—10

(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின்கீழ் இருப்பவை—109

சிறைகளின் பட்டியல்.

(1) சிறைத்துறையின்கீழ் இருப்பவை.—

வரிசை எண்.	சிறைகளின் பெயர்.
1	மத்திய சிறை, சென்னை.
2	மத்திய சிறை, வேலூர்.
3	மத்திய சிறை, கடலூர்.
4	மத்திய சிறை, திருச்சி.
5	மத்திய சிறை, சேலம்.
6	மத்திய சிறை, கோவை.
7	மத்திய சிறை, மதுரை.
8	மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9	மாநில மகளிர் சிறை, வேலூர்.
10	பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.
11	தனிக்கிளைச் சிறை (ஆண்கள்), சேலம்.
12	தனிக்கிளைச் சிறை, கொக்கிரகுளம்.
13	தனிக்கிளைச் சிறை, திருச்சி.
14	திறந்தவெளிச்சிறை, தஞ்சாவூர்.

[1978 மார்ச் 13

வரிசை எண்.	சிறைகளின் பெயர்.
15	திறந்தவெளிச் சிறை, சிங்கநல்லூர்.
16	கிளைச்சிறை (நிலை-1), சைதாப்பேட்டை.
17	கிளைச்சிறை ((நிலை-1), நாகர் கோயில்.
18.	கிளைச்சிறை, செங்கற்பட்டு.
19.	கிளைச்சிறை, மதுராந்தகம்.
20.	கிளைச்சிறை, பூந்தமல்லி.
21.	கிளைச்சிறை, தஞ்சாவூர்.
22.	கிளைச்சிறை, பொன்னேரி.
23.	கிளைச்சிறை, திருவள்ளூர்.
24.	கிளைச்சிறை, காஞ்சீபுரம்.
25.	கிளைச்சிறை, திருத்தணி.

(2) வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளவை:—

வடாற்காடு மாவட்டம்.

1.	கிளைச்சிறை, அரக்கோணம்.
2.	கிளைச்சிறை, ஆம்பூர்.
3.	கிளைச்சிறை, செய்யார்.
4.	கிளைச்சிறை, ஆரணி.
5.	கிளைச்சிறை, செங்கம்.
6.	கிளைச்சிறை, குடியாத்தம்.
7.	கிளைச்சிறை, போளூர்.
8.	கிளைச்சிறை, திருப்பத்தூர்.
9.	கிளைச்சிறை, திருவண்ணமலை.
10.	கிளைச்சிறை, வாணியம்பாடி.
11.	கிளைச்சிறை, வாலாஜா.
12.	கிளைச்சிறை, வந்தவாசி.

தென்னாற்காடு மாவட்டம்.

13.	கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி.
14.	கிளைச்சிறை, சிதம்பரம்.

1978 மார்ச் 13]

வரிசை எண்ணும்.	சிறைகளின் பெயரும்.
15.	கிளைச்சிறை, கடலூர்
16.	கிளைச்சிறை, செஞ்சி.
17.	கிளைச்சிறை, காட்டுமன்னார்கோயில்.
18.	கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை.
19.	கிளைச்சிறை, திண்டிவனம்.
20	கிளைச்சிறை, திருக்கோயிலூர்.
21.	கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை.
22.	கிளைச்சிறை, விழுப்புரம்.
23.	கிளைச்சிறை, விருத்தாசலம்.
24.	கிளைச்சிறை, பண்ருட்டி.

கோவை மாவட்டம்.

25.	கிளைச்சிறை, அவிநாசி.
26.	கிளைச்சிறை, பவானி.
27.	கிளைச்சிறை, தாராபுரம்.
28.	கிளைச்சிறை, ஈரோடு.
29.	கிளைச்சிறை, கோபி.
30.	கிளைச்சிறை, காங்கேயம்.
31.	கிளைச்சிறை, மேட்டுப்பாளையம்.
32.	கிளைச்சிறை, சத்தியமங்கலம்.
33.	கிளைச்சிறை, திருப்பூர்.
34.	கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை.
35.	கிளைச்சிறை, பொள்ளாச்சி.
36.	கிளைச்சிறை, பெருந்துறை.
37.	கிளைச்சிறை, பல்லடம்.

நீலகிரி மாவட்டம்.

38.	கிளைச்சிறை, உதகமண்டலம்.
39.	கிளைச்சிறை, குன்னூர்.
40.	கிளைச்சிறை, கூடலூர்.

[1978 மார்ச் 13

சேலம் மாவட்டம்.

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்.

41. கிளைச்சிறை, ஆத்தூர்.
42. கிளைச்சிறை, நாமக்கல்.
43. கிளைச்சிறை, ஓமலூர்.
44. கிளைச்சிறை, பரமத்தி.
45. கிளைச்சிறை, ராசிபுரம்.
46. கிளைச்சிறை, சங்கரி.
47. கிளைச்சிறை, திருச்செங்கோடு.
48. கிளைச்சிறை (பெண்கள்), சேலம்.

மதுரை மாவட்டம்.

49. கிளைச்சிறை, திண்டுக்கல்.
50. கிளைச்சிறை, கொடைக்கானல்.
51. கிளைச்சிறை, நிலக்கோட்டை.
52. கிளைச்சிறை, பழனி.
53. கிளைச்சிறை, பெரியகுளம்.
54. கிளைச்சிறை, திருமங்கலம்.
55. கிளைச்சிறை, உசிலம்பட்டி.
56. கிளைச்சிறை, உத்தமபாளையம்.
57. கிளைச்சிறை, வேடசந்தூர்.
58. கிளைச்சிறை, மேலூர்.

கன்னியாகுமரி மாவட்டம்.

59. கிளைச்சிறை, தக்கலை.
60. கிளைச்சிறை, குழித்துறை.

இராமனுதபுரம் மாவட்டம்.

61. கிளைச்சிறை, அருப்புக்கோட்டை.
62. கிளைச்சிறை, முதுகுளத்தூர்.
63. கிளைச்சிறை, பரமக்குடி.
64. கிளைச்சிறை, இராமனுதபுரம்.
65. கிளைச்சிறை, சாத்தூர்.

1978 மார்ச் 13]

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்.

66. கிளைச்சிறை, சிவகங்கை.
67. கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்.
68. கிளைச்சிறை, திருப்பத்தூர்.
69. கிளைச்சிறை, திருவாடனை.
70. கிளைச்சிறை, விருதுநகர்.

திருச்சி மாவட்டம்.

71. கிளைச்சிறை, அரியலூர்.
72. கிளைச்சிறை, ஜெயங்கொண்டான்.
73. கிளைச்சிறைகள், கரூர்
74. கிளைச்சிறை, குளித்தலை.
75. கிளைச்சிறை, லால்குடி.
76. கிளைச்சிறை, மணப்பாறை.
77. கிளைச்சிறை, முசிறி.
78. கிளைச்சிறை, பெரம்பலூர்.
79. கிளைச்சிறை, துறையூர்.

புதுக்கோட்டை மாவட்டம்.

80. கிளைச்சிறை, புதுக்கோட்டை.
81. கிளைச்சிறை, அறந்தாங்கி.
82. கிளைச்சிறை, கீரனூர்.
83. கிளைச்சிறை, திருமயம்.

திருநெல்வேலி மாவட்டம்.

84. கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்.
85. கிளைச்சிறை, கோவில்பட்டி.
86. கிளைச்சிறை, நாங்குனேரி.
87. கிளைச்சிறை, சங்கரன்கோயில்.
88. கிளைச்சிறை, தூத்துக்குடி.
89. கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்.
90. கிளைச்சிறை, தென்காசி.
91. கிளைச்சிறை, திருச்செந்தூர்.

[1978 மார்ச் 13

வரிசை எண்ணும் சிறைகளின் பெயரும்.

தஞ்சை மாவட்டம்.

92. கிளைச்சிறை, கும்பகோணம்.
93. கிளைச்சிறை, மாயூரம்.
94. கிளைச்சிறை, மன்னார்குடி.
95. கிளைச்சிறை, நாகப்பட்டினம்.
96. கிளைச்சிறை, நன்னிலம்.
97. கிளைச்சிறை, பட்டுக்கோட்டை.
98. கிளைச்சிறை, பாபநாசம்.
99. கிளைச்சிறை, சீர்காழி.
100. கிளைச்சிறை, திருத்துறைப்பூண்டி.
101. கிளைச்சிறை, திருவையாறு.
102. கிளைச்சிறை, திருவாரூர்.
103. கிளைச்சிறை, தரங்கம்பாடி.
104. கிளைச்சிறை, திருவிடைமருதூர்.

தர்மபுரி மாவட்டம்.

105 கிளைச்சிறை, ஹோசூர்.
106. கிளைச்சிறை, ஹரூர்.
107. கிளைச்சிறை, தர்மபுரி.
108. கிளைச்சிறை, கிருஷ்ணகிரி.
109. கிளைச்சிறை, ஊத்தங்கரை.

சிறைத்துறையில் உள்ள பதவிகளின் விவரங்கள் அடங்கிய அட்டவணை :—

பதவியின் பெயர். (1)	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2)
அலுவலர்கள்.	
சிறைத்துறைத் தலைவர்	1
சிறைத்துறை துணைத் தலைவர்	1
முதுநிலைக் கணக்கு அலுவலர்	1
சிறைத்துறைத் தலைவரின் அரசிதழ் பதவி பெற்ற உதவியாளர்.	1

1978 மார்ச் 13]

பதவியின் பெயர். (1)	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2)
கண்காணிப்பாளர் (தேர்வு நிலை)	1
சிறைக் கண்காணிப்பாளர்கள்	8
கண்காணிப்பாளர், மாநில மகளிர் சிறை, வேலூர்	1
இணைக் கண்காணிப்பாளர்கள்	5
துணைக் கண்காணிப்பாளர், மாநில மகளிர் சிறை, வேலூர்.	1
சிறை அலுவலர்கள்	8
குடிமுறை உதவி அறுவை மருத்துவர்	16
தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் ..	1
மண்டல நன்னடத்தை அலுவலர்கள்	12
இளநிலை உதவி அறுவை மருத்துவர்	1
பணியாளர் தொகுதி.	
பொது வகைகள்—	
கண்காணிப்பாளர்கள்	6
உதவியாளர்கள்	58
இளநிலை உதவியாளர்கள்	80
சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள்	3
தட்டச்சர்கள்	24
பதிவுரு எழுத்தர்கள்	35
டஃபேதார்	1
கடைநிலை அரசு ஊழியர்கள்	95
சிறப்பு வகைகள்—	
கணக்கர்கள்	8
உற்பத்தி உதவியாளர்	1
மூதாய்	1
துணைச் சிறை அலுவலர்கள்	8
உதவிக்கண்காணிப்பாளர்	1
இளநிலை உதவிக்கண்காணிப்பாளர்	1

[1978 மார்ச் 13

பதவியின் பெயர்:	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை.
(1)	(2)
சிறப்பு வகைகள்—தொடர்ச்சி:	
தனிக் கிளைச் சிறைகளின் கண்காணிப்பாளர்கள் ..	3
காவலர் உதவித் தலைவிகள் (இருப்பு)	2
உயர்தர தேர்ச்சி பெற்ற வேலையாள்	1
தேர்ச்சி பெற்ற வேலையாட்கள் நிலை 2	4
மனோதத்துவ நிபுணர்கள்	3
சமூகப் பணியாளர்கள்	3
போதகர்கள்	3
முதலாள்	1
உதவிச் சிறை அலுவலர்கள்	24
தொழிற்சாலை மேலாள்	1
செவிலிச் சிப்பந்திகள்	10
மருந்து செய்பவர்கள்	18
உதவி ஆண் செவிலியர்கள்	26
முதன்மைத் தலைமைக் காவலர்கள்	22
வாயிற்காப்பாளர்கள்	10
தனிக் கிளைச் சிறைகளின் வாயிற்காப்பாளர்கள் ..	3
காவலர்கள் மற்றும் சிற்றலுவலர்கள், நிலை 1 ..	115
காவலர்கள் மற்றும் சிற்றலுவலர்கள், நிலை 2 ..	1,047
அலுவலக மேலாளர்கள், நிலை 1	3
அலுவலக மேலாளர்கள், நிலை 2	7
சிப்ப எழுத்தர்கள்	10
இடை நிலை ஆசிரியர்கள்	28
உயர்நிலை ஆசிரியர்கள்	9
உடற்பயிற்சி போதகர்	1
தச்சு ஆசிரியர், நிலை 1 மற்றும் 2	16
நெசவு ஆசிரியர்கள்	4
புத்தகம் கட்டும் கண்காணிகள்	2
தையல் முதலாட்கள்	13

1978 மார்ச் 13]

பதவியின் பெயர்:	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை.
(1)	(2)
சிறப்பு வகைகள்—தொடர்ச்சி:	
கருமான் ஆசிரியர்கள்	3
ச்சுப்பட்டரை முதலாட்கள்	4
ின்கம்பியாட்கள்	12
ளைச் சிறை அலுவலர்கள், நிலை 1	2
ளைச் சிறை அலுவலர்கள், நிலை 2	5
ன்னடத்தை அலுவலர்கள்	96
நல அலுவலர்கள்	10
லாரி ஓட்டுநர்கள்	8
ாய் முடைதல் போதகர்	1
ச்சு யந்திர கம்மியர்	1
லாரி ஆள்	1
தோல்பொருள் மேற்பார்வையாளர்	1
காலணி யந்திரக் கம்மியர்	1
செருப்பு தைப்போரின் கண்காணிகள்	4
அலுமினிய முதலாள்	1
கைத்தறி நெசவுக் கண்காணிகள்	2
வண்டிக்காரர்கள்	3
நூற்பாசிரியர்	1
நெசவு ஆசிரியர்	1
சாய ஆசிரியர்	1
இணை சாய ஆசிரியர்	1
பாவு ஆசிரியர்	1
சிட்ட ஆசிரியர்	1
பாண்டு வாத்திய ஆசிரியர்	1
மின்சாரப் பணியாள்	1
உதவிக் கூடார ஆசிரியர்	1
பாவு, கஞ்சி போடும் பணியாளர்	1
கொதிகலன் பணியாள்	1

[1978 மார்ச் 13

பதவியின் பெயர். (1)	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2)
சிறப்பு வகைகள்—தொடர்ச்சி.	
பொருத்துத் தச்சர்	1
பருத்தி கலந்து சுத்தம் செய்யும் பணியாள்	1
நெசவுப் பணியாட்கள், நிலை 1	2
நூற்பாலை எழுத்தர்	1
நெசவுப் பணியாள், நிலை 2	1
நெசவுப் பணியாளர்கள், நிலை 3	3
கட்டு கட்டும் பணியாள்	1
நீரேற்று நிலையப் பொருத்துபவர்	1
குழாய் வழிப் பொருத்துபவர்	1
கொதி கலன் தீயணைப்பாளர்	1
உருளை மூடும் பணியாள்	1
மோட்டார் பணியாட்கள்	2
நூற்புத் தலைமைப் பணியாள்	1
உதவி நூற்புப் பணியாளர்கள்	2
நூற்பு ஆசிரியை	1
விளக்குநர்கள்	2
இயந்திர இயக்குநர், நிலை 1	1
இயந்திர இயக்குநர், நிலை 2	3
தச்சர்கள்	4
பால்காரர்	1
கால்நடை உதவியாளர்கள்	8
குழந்தை வளர்ப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்	1
பெண் செவிலி உதவியாளர்	1
பற்ற வைப்பவர்	1
தலைமை ஆயா	1
ஆயாக்கள்	8
மின் மோட்டார் பணியாளர்கள்	2
மேற்பார்வையாளர்கள் மற்றும் போதகர்கள் (கைமுறைக் காகிதத் தொழிற்சாலை).	6

1978 மார்ச் 13]

பதவியின் பெயர். (1)	தற்போது அமலிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை. (2)
சிறப்பு வகைகள்—தொடர்ச்சி.	
சோப்பு இரசாயன வல்லுநர்	1
எஞ்சின் ஓட்டுநர்	1
மெருகு போடும் உதவியாளர்	1
காகிதக் கூழ் தயாரிக்கும் உதவியாளர்கள்	4
காவற்காரர்	1
சிப்பந்திக் காவலர்கள் (கிளைச் சிறைகள்)	96
உடல் சம்பந்தமான தொழில் நுட்பப் பணியாளர்.	1
கால்நடை மேய்ப்பவர்	1
டிராக்டர் ஓட்டுநர்கள்	2
தோட்டி	1
சமையற்காரர்கள்	20
டிராக்டர் சுத்தம் செய்பவர்	1
கண்காணிப்பாளர், ஆண்கள் பிறகாப்பு இல்லம், பல்லாவரம்.	1

இணைப்பு II.

[272-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க].

மானியக் கோரிக்கை எண் 13.

நீதி நிர்வாகம்.

1978-79.

முக்கியக் கூறுகளையும் கொள்கைகளையும் பற்றி விளக்கக் குறிப்பு.

இந்திய அரசியல் அமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள நெறி முறைக் கோட்பாடுகளுக்கிணங்க, குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்குமாறு செய்வதே இவ்வரசின் கொள்கையாக இருந்து வருகிறது. நீதி நிர்வாகம்

நீதிமன்றங்களின் பொறுப்பாகும். இது அரசாங்க நிர்வாகப் பணியாளர், நிர்வாக இயந்திரம் இவற்றினின்றும் முழு சுதந்திரத்துடன் செயல்படுகின்றது. உயர்நீதி மன்றம் பரிந்துரைப்பதன் பேரில், அவசியமானபோதெல்லாம், புதிய கூடுதல் நீதிமன்றங்கள் அமையப்பெற அனுமதிப்பதன் மூலமாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படுவதில் ஏற்படும் கால தாமதத்தை நீக்கும் பயனுள்ள பணியை அரசு தனது தரப்பில் செய்யக்கூடும்.

நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

13 ஆம் எண் கோரிக்கையும் 'நீதி நிர்வாகம்' தொடர்பான மானியங்களும், இதன்கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள் அதிகாரிகள் மற்றும் அவர்களது பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்.

1. உயர்நீதி மன்றம், சென்னை.

2. நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee) உயர்நீதிமன்றம், சென்னை.

3. (மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட) சிவில் செஷன்ஸ் நீதிமன்றம்.

4. சிறு வழக்கு நீதிமன்றங்கள்.

5. மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்.

6. துணைக் குற்றவியல் நீதிமன்றங்கள் (தலைமை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்).

7. அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியாளர் பொறுப்புச் சொத்தாட்சியர்.

8. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள்.

நீதிமன்றங்கள், அதிகாரிகளிடையே பின் வருவனவற்றைக் குறித்த செலவு "சாட்டியவை" என்றும் "அனுமதித்தவை" என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சாட்டியவை.

1. உயர்நீதிமன்றம் நீதிபதிகள், பதிவாளர், அசல் தரப்பு, அப்பீல் தரப்பு கொண்ட பணியாளர் அமைப்பு, மொழிபெயர்ப்பு, அச்சுத்துறை, சட்ட அறிக்கையாளர்கள், தனி அலுவலர், பணியாளர் அமைப்பு, புதுச்சேரி, சென்னை உயர்நீதி மன்ற ஷெரிப்—அவரது பணியாளர்.

2. நொடித்தவர் சொத்தாட்சியர்—அவரது பணியாளர் அமைப்பு.

அனுமதித்தவை.

1. மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில், செஷன்ஸ் நீதிமன்றங்கள்.

2. சிறு வழக்குகள் நீதிமன்றம்.

3. மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்.

4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள்.

5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர் — பொறுப்புச் சொத்தாட்சியர் (Administrator General and Official Trustee), சென்னை.

6. அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள்.

1978-79 ஆம் ஆண்டுக்கான செலவுக்கு 'சாட்டியவை' எனும் இனங்களின்கீழ் ரூ. 72,78,000 தொகையும், "அனுமதித்தவை" எனும் இனங்களின்கீழ் ரூ. 4,85,71,000 தொகையும் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1. உயர்நீதி மன்றம்.

உயர்நீதிமன்றம் இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலையாய நீதிமன்றமாகும். மேதகு தலைமை நீதிபதி உள்ளிட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட மேதகு நீதிபதி பதவிகளின் எண்ணிக்கை 22.

சிவில் விவகாரங்களில் உயர்நீதிமன்றம், அசல் தரப்பு வழங்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். சிவில், குற்றவியல் வழக்குகளில் இதற்கு அப்பீல் விசாரணை அதிகாரம் உண்டு. அசல் தரப்பு வழக்கில், ரூ. 50,000-க்கு மேற்பட்ட மதிப்புடையதும் சென்னை மாநகருக்குள்ளேயே எழக்கூடியதுமான வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. நீதிபதிகளுக்கு, தலைமை நீதிபதி பணியைப் பிரித்து கொடுக்கிறார். உயர்நீதிமன்றம், நீதி வழங்குவதுடன், நீதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் செலுத்துகிறது.

[1978 மார்ச் 13

2. உயர்நீதிமன்றம்—" சாட்டிய " இனங்கள்:

மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 19 நீதிப்திகள்
தற்போது உள்ளனர். தலைமை நீதிபதியின் சம்பளம் மாதம்
ஒன்றுக்கு ரூ. 4,000 ஆகும். நீதிபதியின் சம்பளம் மாதம்
ஒன்றுக்கு ரூ. 3,500 ஆகும். நீதிபதிகளின் சம்பளம், அரசிய
லமைப்புச் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களின்
பணி நிபந்தனைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிபந்
தனைகள்) சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. மாண்புமிகு
நீதிபதிகள், மாவட்ட நீதிமன்றங்களை ஆய்வுசெய்வதற்
காகப் பயணம் செய்கையில் பயணப்படி பெறத் தகுதியுடை
யவர்களாவர். மாண்புமிகு தலைமை நீதிபதி, தலைமை நீதி
பதிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், தலைமை
யிடத்தை விட்டுப்பிற இடங்களுக்கு, பிற அரசுப் பணிகளைக்
கவனிப்பதற்காகவும் பயணம் செய்கையில் அவர் பயணப்படி
பெறத் தகுதியுடையவராவார்.

பதிவாளர், அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார்.
அவருக்கு மேலாளர், துணைப் பதிவாளர், உதவிப் பதிவாளர்
கள் போன்ற பல அதிகாரிகள் உதவி புரிகின்றனர். உயர்
நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது.
அவையாவன: அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறை
யீட்டுத் தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப்
பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப்
பிரிவு, ரிட் மனு அதிகார வரம்பு, அதிகார வரம்பைப்
புதுச்சேரிக்கு நீட்டித்தல், பெஞ்ச் கிளார்க் துறை, மேல்முறை
யீடு ஆய்வாளர்கள் பிரிவுகள், சுருக்கெழுத்து, தட்டச்சர்கள்
பிரிவு, மொழி பெயர்ப்பு, அச்சு, நகலெடுப்போர் துறை,
ஆவணப் பிரிவுகள் ஆகும். மொழி பெயர்ப்பு, அச்சுத்
துறை, சட்ட நிருபர்கள், ஆட்சி வரம்பைப் புதுச்சேரிக்கு
நீட்டிக்கும் தனி அதிகாரி இவர்களுக்காகும் செலவு உட்பட
மாண்புமிகு நீதிபதிகள், உயர்நீதி மன்ற அதிகாரிகள்
பணியாளர்கள் ஆகியோரின் சம்பளமும் படிகளும் ஆண்டுக்கு
ரூ. 64 49 000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. "அலுவலகச்
சில்லறைச் செலவுகள்" என்னும் தலைப்பின்கீழ் ரூ.5,19,000
செலவு செய்யக் கருதப்பட்டுள்ளது. அலுவலகச் சில்லறைச்
செலவு என்பதில் அரசுப்பணி அஞ்சல் செலவு பயன்படுத்தப்
படும் மின்சாரத்திற்கான கட்டணங்கள் தொலைபேசிக் கட்ட
ணங்கள் அலுவலகச் செலவுகள் வாடகை வீதங்களும்
வரிகளும். மேசை, நாற்காலிகள் முதலியன, புத்தகங்கள்,
சஞ்சிகைகள், மாண்புமிகு நீதிபதிகளின் பயனுக்காகச் செய்தித்
தாள்கள், ஆணைகள், புத்தகங்கள் ஆகியவற்றை அனுப்புவதற்
கென்று உள்ள மோட்டார் வண்டிகளைப் பராமரிப்பதற்கான
செலவு, உயர்நீதி மன்றத்தில் நிறுவப்பட்டுள்ள படவுருப்
படிவங்களை எடுப்பதற்கான நிழற்படக் கருவியை இயக்கு
வதற்காகக் கட்டணங்கள் ஆகியவை அடங்கும்.

1978 மார்ச் 13]

நொடித்தவர் சொத்தாட்சியரும் பணியாளர்களும், இந்
தியச் சட்ட அறிக்கையின் ஆசிரியரும், பணியாளர்களும்
அதிகார வரம்பை புதுச்சேரிக்கு நீட்டிப்பதற்கான சிறப்பு
அதிகாரி, மொழி பெயர்ப்பு, அச்சுத்துறை ஆகியவற்றால்
அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ளவாறு பணியாளர்
அமைப்பு—அலுவலகச் சில்லறைச் செலவுகளைப் பொறுத்தமட்டில்
மதிப்பீடு செய்யப்பட்டவாறு, செய்யப்பட வேண்டிய
செலவுகளைக் குறித்த விவரங்கள் தனித் தனியே கீழே கொடுக்
கப்பட்டுள்ளது.—

	ரூ.
நொடித்தவர் சொத்தாட்சியர், பணியாளர்	3,10,000
இந்தியச் சட்ட அறிக்கை ஆசிரியர், பணியாளர்	49,000
புதுச்சேரி, தனி அதிகாரி, பணியாளர்	86,000
மொழி பெயர்ப்பு—அச்சுத்துறை	7,34,000

"அனுமதித்த" இனங்கள்

3. சட்ட அதிகாரிகள்.

மாநகரத்திலும் வெளியூரிலும் உள்ள சட்ட அதிகாரிகள்,
உச்ச நீதிமன்றத்தில் உள்ள ஆவணம் குறித்த வழக்கறிஞர்
ஆகியோருக்கு ஆகும் செலவுகளை ஏற்பதற்காக இத்தலைப்பின்
கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. மாநிலத் தலைமை வழக்கறிஞர், அரசு
வழக்கறிஞர், வழக்கு நடத்துனர், கூடுதல் அரசு வழக்கறிஞர்
உதவி வழக்கு நடத்துனர்கள் மாநகர அரசு வழக்கறிஞர், மாநகர
வழக்கு நடத்துனர்கள் ஆகியோர் மாநகரிலுள்ள சட்ட அதிகாரி
களாவர். கிழக்குத் தஞ்சாவூர், மேற்குத் தஞ்சாவூர், நீலகிரி
ஆகிய இடங்களில் அரசு வழக்கறிஞர் வழக்கு நடத்துனர் பதவி
களை ஒருவரே ஏற்றுள்ளார். இதைத் தவிர வெளியூரில், ஒவ்
வொரு மாவட்டத்திலும் அரசு வழக்கறிஞர் ஒருவரும், வழக்கு
நடத்துனர் ஒருவரும் இருக்கின்றனர். மாநகரத்திலும்,
வெளியூரிலும் உள்ள உதவி வழக்கு நடத்துனர்கள் (தரம்
I, II) முறையான சம்பள வீதங்களைப் பெறும் முழுநேர
அரசுப் பணியாளர்களாவர். மாவட்ட முனிசீப் நீதி மன்றங்
களிலும், துணை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியை மேற்
கொள்வதற்காக வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்படு
கின்றனர். அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம்
மட்டுமே வழங்கப்படுகிறது. வழக்கறிஞர் அமர்த்துகை கட்
டணம் எதனையும் பெற அவர்கள் தகுதியுடையவர் அல்லர்.
அரசு சட்ட அதிகாரிகள், தனியார் சட்ட அதிகாரிகள் ஆகி
யோருக்கு வழங்கப்படும் அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள்,
சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்டத்தில் பற்று
எழுதப்படுகின்றன.

[1978 மார்ச் 13

சட்ட அதிகாரிகள் புரிகின்ற பணியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. இக் கட்டணம் அரசினால் அல்லது துறைத் தலைவர்களால் அனுமதிக்கப்படுகிறது. மேற்கூறிய கட்டணங்களைத் தவிர, அரசு அல்லது துறைத் தலைவர்கள் அரசுப்பணியில் இல்லாத வழக்கறிஞர்களுக்கு (அதாவது, மாநிலத் தலைமை வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர்கள், வழக்கு நடத்துனர்கள், சட்ட அதிகாரிகளுக்கு உதவி புரியும் பயிற்சி பெறும் வழக்குரைஞர்கள் ஆகியோர் நீங்கலாக ஏனைய வழக்கறிஞர்கள்) கட்டணங்கள் வழங்குகின்றன.

பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் கட்டணவில்லைகளை வாங்குவதற்காக கணிசமான அளவுக்குச் செலவு செய்யப்படுகிறது. இச் செலவு, எத்துறை தமது சார்பில் சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்யுமாறு அரசு வழக்கறிஞருக்குக் கட்டளையிடுகிறதோ அத்துறையின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் கீழ்ப் பற்றுவைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்போதைக்கு இச் செலவினம், " 214. நீதி நிர்வாகம்—H சட்ட ஆலோசகர்கள்—வழக்கறிஞர்கள் AC அரசு வழக்கறிஞர்கள்— 03. அலுவலகச் செலவினங்கள் " என்ற தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட்டு வருகிறது.

1978-79 ஆம் ஆண்டுக்காக, "சட்ட அதிகாரிகள் " என்ற தலைப்புத்தொடர்பான மொத்தச் செலவு ரூ. 13,61,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

4. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர் (Administrator, General and Official Trustee) சென்னை.

சென்னை, அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ளவர். அவருக்கு உதவியாக துணை அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர் செயல்படுகிறார். அவருடைய சம்பள வீதம் ரூ. 575—25—600—40—1,000 ஆகும். இவ்விரு அதிகாரிகளும் காலஞ்சென்றவர்களின் மைனர்கள், எஸ்டேட்டுகள் சம்பந்தப்பட்ட பொறுப்பு வகிப்பவர்களாவர். அவர்கள் அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்திலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றி வருகின்றனர். ரூ. 575—25—600—40—1,000 சம்பளவீதத்தில் முதுநிலைக் கணக்கு அதிகாரி பதவி ஒன்றுக்கும், ரூ. 425—20—525—25—700 சம்பள வீதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்றிற்கும் அண்மையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 13]

1978-79-ல் இந்தத்தலைப்பு தொடர்பான செலவு 2,38,000 ரூபாயாகும்.

5. மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்.

இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் முதல் நீதிமன்றம், கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் இரண்டாவது நீதிமன்றம், ஆகியவை உட்பட 22 மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி தரத்தைச் சேர்ந்தவர். கூடுதல் மாநகரத் தலைமை முதல் மாஜிஸ்ட்ரேட், கூடுதல் மாநகரத் தலைமை இரண்டாவது மாஜிஸ்ட்ரேட் இரண்டாவது மூன்றாவது, நான்காவது, பத்தாவது. பதினோராவது, மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் சார்நிலை நீதிபதிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் அனைவரும் மாவட்ட முன்சீப் தரத்தைச் சேர்ந்தவர்கள். மாநகர மாஜிஸ்ட்ரேட்கள் சென்னை மாநகரில் உள்ள சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆட்சி வரம்பில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (மத்திய சட்டம் 2/1974) புதிதாகக் கொண்டுவரப்பட்டதன் விளைவாக அரசு, பெருகிவரும் பணிச்சுமையை ஈடு செய்ய உயர்நீதிமன்றப் பரிவுரைகளின் பேரில் தேவையான பணியாளர்களுடன் கூடிய 7 மாநகர மாஜிஸ்ட்ரேட் பதவிகளை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கியது. பெருகிவரும் பணிச்சுமையைக் கவனிக்க உதவி வழக்கு நடத்துனர்-II பதவிகள் (மாநகர, 7-ஐ ஏற்படுத்தவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. காவல்துறை சிறப்புப்பிரிவும் மாநில அரசு காவல் துறை உணவுப் பிரிவும் தாக்கல் செய்துள்ள வழக்குகளைக்கவனிக்க சென்னை மாநகரில் மாநகரத் தலைமை கூடுதல் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள் இரண்டினை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மெரினா கடற்கரை உட்பட சென்னை மாநகரத்தைச் சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துக் கொள்ளும் நோக்குடன் இரண்டு மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவை நகரத் துப்புரவுச் சார்ந்த குற்றங்களை மட்டுமே விசாரிக்கும்.

சென்னை மாநகரில் உள்ள மேற்சொன்ன குற்றநீதி மன்றங்களுக்கு 1978-79 ஆம் ஆண்டு ஆகும் செலவு ரூ. 22,66,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

6 சென்னை மாநகர சிவில் நீதிமன்றம்.

நான்கு மாவட்ட நீதிபதிகள், 12 சார்நிலை நீதிபதிகள் என்ற அடிப்படையில் 16 நீதிமன்ற அதிகாரிகள், சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

[1978 மார்ச் 13

நிர்வாகப் பொறுப்பினை கவனிக்கும் பொருட்டு, மாவட்ட முனுசீப் பதவி தரத்தில் தனியானதொரு பதிவாளர் பதவி ஒன்று உள்ளது. மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதற்கும் பரந்து நிற்கும். மாநகர சிவில் நீதிமன்றம் ரூ. 50,000 வரை பண விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மாநகர சிவில் நீதிமன்றம் மேல் முறையீட்டு கீழ்நீதிமன்றம் ஆகவும் உள்ளது. எனவே, மேல் முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கான அதிகாரம், மாவட்ட நீதிமன்றத்திற்கு இணையாக இருப்பதற்காக ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை கோட்டம் பொறுத்தவரையில் செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. மாநகர சிவில் நீதிமன்றத்திற்கு ஆன மொத்தச் செலவு ரூ. 14,18,000 ஆகும்.

7. வெளியூர்களில் உள்ள சிவில் நீதிமன்றங்கள்.

இம்மாநிலத்தில் 15 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. திருநெல்வேலியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் உள்ளது. மாவட்ட நீதிபதிகள், சம்பந்தப்பட்ட கோட்ட செஷன்ஸ் நீதிபதிகளாவர். ரூ. 10,000 மதிப்பு வரையிலான சிவில் மேல் முறையீடுகளை விசாரிக்க அவர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். அவை, சிறப்பு நடுவர் நீதி மன்றங்களாக (அதாவது தொழிலாளர்கள் மாநில காப்புறுதி நீதிமன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றம் போன்று) சிறப்புச் சட்டங்களின்கீழ் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள், தங்களது கோட்டங்களில் உள்ள சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும் நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். மாநகர சிவில் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியுடன் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன், குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்கென், சிறப்பு நீதிபதிகளாகவும் பதவிப் பெயர் வழங்கப்பட்டுள்ளனர்.

8. சார்நிலை நீதிபதிகள்.

இம்மாநிலத்தில் 52 சார்நிலை நீதிமன்றங்கள் உள்ளன. சார்நிலை நீதிபதிகளுக்கு வரையறையற்ற பண விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரமுண்டு. அவர்களுடைய வட்டார அதிகார வரம்பு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிபதிகள் தங்களது அதிகார வரம்பிற்குள் செயல்படும் மாவட்ட முனிசீப்புகளின் முடிவுகளுக்கு எதிராக செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யவும் அதிகாரமுண்டு. சார்நிலை நீதிபதிகள், உதவி செஷன்ஸ் நீதிபதிகளும் ஆவர். சில இடங்களில் மோட்டார் வண்டி விபத்துகள் உரிமை கோரிக்கையின் கீழ் வழக்குகளை விசாரணை செய்ய தலைமையிடங்களிலுள்ள பிரதம சார்நிலை நீதிபதிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில், 1978-79 ஆம் ஆண்டில் நாமக்கல்லில் ஒரு சார்நிலை நீதிமன்றமும், இராசிபுரத்தில் ஒரு மாவட்ட முனிசீப் நீதிமன்றமும் ரூ. 2.53 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

9. மாவட்ட முனிசீப்புகள்.

இம்மாநிலத்தில் 85 மாவட்ட முனிசீப் நீதிமன்றங்கள் உள்ளன. ரூ. 5,000 வரை பண விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்ய மாவட்ட முனிசீப்புகளுக்கு அதிகாரமுண்டு. ஒவ்வொரு மாவட்ட முனிசீப் நீதிமன்றத்திற்கும் தனியே வட்டார அதிகார வரம்பு உண்டு. சிறு வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் அவர்களுக்கு உண்டு. அவர்கள், தங்களுடைய பகுதிகளில் வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

வெளியூர்களிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களின் 1978-79ஆம் ஆண்டின் மொத்த செலவு ரூ. 2,67,32,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவில், அதிகாரிகளின் சம்பளம், படி ஆகியவை மட்டுமல்லாமல், அரசுப்பணி அஞ்சல் செலவு, கட்டணங்கள், வரிகள் (அரசு கட்டிடங்கள் மீது செலுத்தப்படுகின்ற சொத்து வரி), தனியார் கட்டிடங்களுக்கான வாடகை, அலுவலக செலவுகள், புத்தகங்கள், வார, மாத இதழ்கள் முதலிய செலவுகள், மின் கட்டணங்கள், தொலைபேசி கட்டணங்கள், மேசை, நாற்காலி போன்ற சாமான்கள் செலவு, செஷன்ஸ் நீதிமன்றங்களின் முன் ஆஜராகும் சாட்சிகளுக்கு உணவு, போக்குவரத்து செலவு ஆகியவை வழங்கல் குறித்த செலவு ஆகியவைகளும் அடங்கும்.

[1978 மார்ச் 13

10. சென்னை, மதுரை, கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்.

தற்போது சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. சென்னையில் தொழில் நடுவர் மன்றம் ஒன்றும் உள்ளது. தொழிலாளர் நீதிமன்றங்கள், தொழில் நடுவர் மன்றங்கள் ஆகியவற்றின் விசாரணை அதிகாரிகள் மாவட்ட நீதிபதிகளின் தரத்தைச் சேர்ந்தவர்கள். அரசு விசாரணைக்காக அனுப்பும் தொழிலாளர் தகராறுகளையும் கட்சிக்காரர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நீதிமன்றங்கள் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கின்றன.

தொழிலாளர் நீதி மன்றங்களின் விசாரணை அதிகாரிகள் அனைவரும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அதிகாரிகள் ஆவர்; அவர்கள் தங்களது விசாரணை அதிகார வரம்புக்குள் தொழிலாளர் தகராறுகளையும், உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து தீர்ப்பு கூறுவதற்காக தாம் முகாமிட்டுள்ள இடங்களில் நீதிமன்றத்தை நடத்துகிறார்கள். தொழிலாளர் நீதிமன்றங்கள் குறித்த செலவு, ''287. தொழிலாளர் நலன்-வேலை வாய்ப்பு'' என்பதன்கீழ் தற்போது மறுவகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 1978-79ஆம் ஆண்டில், இக்கோரிக்கையின்கீழ், நிதி ஒதுக்கம் ஏதும் செய்யப்படவில்லை.

11. சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை.

இந்த நீதிமன்றத்தில், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் தலைமை நீதிபதி ஒருவரும், சார்நிலை நீதிபதிகள் பதவித் தரத்தில் நீதிபதிகள் நால்வரும், மாவட்ட முனிசீப் பதவித் தரத்தில் நீதிபதிகள் மூவரும் உள்ளனர். மாவட்ட முனிசீப் பதவித் தரத்தில் பதிவாளர் ஒருவர் இருக்கிறார். இவர் இந்நீதிமன்ற நிர்வாகப் பொறுப்பினை மேற்கொண்டுள்ளார். நிறைவேற்றல் மனுக்கள் குறித்து விசாரணை செய்தல் போன்ற நீதித்துறைச் சார்ந்த சில பணிகளையும் இவர் கவனித்து வருகிறார். தலைமை நீதிபதியும் 2 முதல் 5 வரையிலான நீதிபதிகளும் மாநகர சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டத்தின்கீழ் சிறு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றனர். 6 முதல் 8 வரையிலான நீதிபதிகள் சென்னை மாநகருக்கு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயலாற்றுகின்றனர்,

1978 மார்ச் 13]

தலைமை நீதிபதி மற்றும் 2 முதல் 5 வரையிலான நீதிபதிகள் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றார்கள். சிறு வழக்குகள் விசாரணை நீதிமன்றங்கள் செலவு 1978-79ஆம் ஆண்டில் ரூபாய் 9,79,000ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் முன்னால் ஜமீன்தார் எஸ்டேட்டுகள் தொடர்பாக இழப்பீட்டுத் தொகையைப் பிரித்து அதனை பங்கீட்டளிப்பதற்கென நடுவர் மன்றம், இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம் ஆகியவற்றிற்காகும் செலவும் மேற்கண்ட தொகையில் அடங்கும்.

12. குற்ற வழக்கு நீதிமன்றங்கள்—மாவட்டங்களில் உள்ளவை.

மாநிலத்தில் நீதித் துறை தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகள் 15 பேர் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் சார்நிலை-நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்கள். இவர்கள் தங்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலைக் குற்ற வழக்கு நீதிமன்றங்களையும் பார்வையிடுகின்றனர். அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 சிறப்பூதியம் பெறுகின்றனர். இவர்கள் தங்களுக்குள்ள நிர்வாகப் பணியோடு 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் விதித்துறையின்படி மாவட்ட செஷன்ஸ் நீதிபதி முன்னால் தாக்கல் செய்யப்பட்டு அவரால் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்பப்படுகிற மேல் முறையீடுகளையும் விசாரணை செய்ய இவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

16. உட்கோட்ட நீதித் துறை மாஜிஸ்ட்ரேட்டுகள், 7 மாவட்ட முனிசீப்-உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள், 1 மாவட்ட முனிசீப்-நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் உள்ளனர். அவர்கள் மாவட்ட முனிசீப் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு நீதிபதிக்குரிய அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். ஆனால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் தீர்ப்பு குறித்து செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 22 பேர் உள்ளனர். நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகளின் நேரடி அதிகார வரம்பிற்குள் உள்ள பகுதியிலிருந்து எழுகின்ற வழக்குகளை முடிவு செய்வதில் அவர்களுக்கு உதவுவதற்காகவே இவர்கள் உள்ளனர்.

நீதித்துறை இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 135 பேர் உள்ளனர். இந்த மாஜிஸ்ட்ரேட்டுகள் தத்தம் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியிலிருந்து வருகின்ற புகார்களை ஏற்றுக் கொண்டு அவை தொடர்பான வழக்குகளை 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் முதலாவது விவர அட்டவணையில் விதித்துள்ளவாறு விசாரணை செய்து தீர்ப்பளிக்கின்றனர்.

மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 1,49,12,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகையில் பின்வரும் செலவினங்கள் அடங்கும்—அதிகாரிகளின் சம்பளம், நிர்வாகப் பணியாளர்களின் சம்பளம், நிர்வாகப் பணியாளர்கள் வாங்கும் படிகள் அன்றியும் அரசுப்பணி அஞ்சல் தலைகள், வாடகைகள் கட்டணங்கள், வரிகள், அலுவல்வகைச் செலவுகள் ஆகியவை போன்ற சில்லறைச் செலவினங்களும், ஏனைய வகைச் சில்லறைச் செலவினங்களுமாகும். I, II-நிலை அரசு உதவி வழக்குரைஞர்கள் வெளியூர்களில் உள்ள மாஜிஸ்ட்ரேட்டுகளின் நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்துகின்றனர். ஆயினும் இவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர்.

நீதிமன்றம் விதிக்கும் அபராதங்களுக்குப் பதிலாக உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஏனையோருக்கும் கொடுக்கப்படும் இழப்பீட்டுச் செலவுத் தொகைகள் இதுகாறும் "214 நீதி நிர்வாகம்" என்பதன்கீழ் "e.AA. குற்றவியல் நீதிமன்றங்கள்" என்னும் தலைப்பில் பற்று எழுதப்பட்டு வந்தன. இவை இனி கோரிக்கை எண் 46-இன் கீழ் "363 உள்ளாட்சி மன்றங்களுக்கும், பஞ்சாயத்து இராஜ் நிறுவனங்களுக்கும் இழப்பீடும், ஒப்படைகளும். d. ஏனைய்ப் பல்வகை இழப்பீடும் ஒப்படைகளும்" என்னும் தலைப்பின்கீழ் பற்று எழுதப்பட வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொது—

தலைமையிடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் மிகுதியாக வந்து குவிவதைத் தவிர்க்கவும், தங்கள் வழக்குகளுக்காக தற்போது தலைமையிடத்தை நாடிச் செல்வதில் இடர்ப்பாடுறுகின்ற வழக்காடும் பொது மக்களுக்குப் போதுமான அளவிற்கு நிவாரணமளிக்கவும்

இயலும் வகையில் தலைமையிடங்களிலுள்ள வழக்கு மன்றங்களின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென அரசும், உயர்நீதிமன்றமும் கருதுகின்றன. உரிமை வழக்கு, குற்ற வழக்கு நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளைக் குறித்து மாநில அளவில் பரிசீலனை செய்யும் பணியை ஏற்கும் பொருட்டு அரசால் நியமிக்கப்பெற்ற அலுவலர்கள்குழு தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. எனினும் இப்பரிவுரைகளை ஐந்து ஆண்டு கால அளவில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் செயற்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. அனுமதிக்கப்பட வேண்டிய குற்றவியல் நீதிமன்றங்கள்—உரிமை வழக்கு நீதிமன்றங்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்தளிக்குமாறு உயர்நீதி மன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டது. அது தற்போது கிடைக்கப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

நீதித்துறை சார்ந்த இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுப் பதவிகள் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுப் பதவிகளாக உயர்த்தப்பட்டு, மாவட்ட முனிசீப்பு பதவித்தரத்துடன் ஒருங்கிணைக்கப்படலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டுகளும், உரிமை வழக்கு நீதிபதிகளும் ஆகிய இருசாரர்களுமே பதவி உயர்த்தப்பட்டு, மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாக நியமனம் பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை மிக நன்றாக அறிந்திருக்கச் செய்ய வேண்டி, மாஜிஸ்ட்ரேட்டுகள் உரிமை வழக்குகள் குறித்து அனுபவம் பெறவும், உரிமை வழக்கு நீதிபதிகள் குற்ற வழக்கு விசாரணைகள் பற்றி அனுபவம் பெறவும் உதவும் பொருட்டே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. குற்ற வழக்கு மாஜிஸ்ட்ரேட்டுகளும், உரிமை வழக்கு நீதிபதிகளும் பின்னர் வகிக்க இருக்கின்ற ஒருங்கிணைந்த பதவிகளில் தம் கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் பொருட்டு, மேற் சொன்ன அரசாணையானது குற்ற வழக்கு மாஜிஸ்ட்ரேட்டுகளின் அதிகார வரம்புகளையும் உரிமை வழக்கு நீதிபதிகளின் அதிகார வரம்புகளையும் திருத்தி அமைத்து ஒன்றாக்குவதற்கு அல்லது இவ்விருசாரரின் அதிகார வரம்புகளையும் ஒருங்கிணைப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டதாகும்.

இது தொடர்பான இன்னொரு முக்கியமான அம்சம் என்னவெனில், அசல் வழக்குகளிலும் மேல் முறையீட்டு வழக்குகளிலும் உயர்நீதிமன்றமும், அத்துடன் சார்நிலைக் குற்றவியல் நீதி மன்றங்களும் "நீதி நிர்வாகம்" என்னும்

தலைப்பின்கீழ் வருவாயைப் பெறுகின்றன என்பதாகும். மேலும் ''நீதி நிர்வாகம்'' என்னும் தலைப்பின் கீழ் பெறுகின்ற வருவாயைக் கருத்திற் கொண்டு பார்த்தால், இதற்கு ஏற்படக்கூடிய செலவு நீதித் துறையால் நிர்வகிக்கப்படக் கூடிய வரம்பிற்குள்ளேயே இருக்கும்.

ஏழை எளியவர்களுக்குச் சட்ட உதவியளிக்கும் நோக்குடன், தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி-ஆலோசனைக் குழுவை அரசு அமைத்துள்ளது. சென்னை மாநகரிலும், மற்ற மாவட்டங்களிலும் சட்ட உதவி—அறிவுரை— ஆலோசனை மையங்களும் மாவட்டக் குழுக்களும் அமைக்கப் பட்டுள்ளன. மாநிலச் சட்ட உதவி—அறிவுரைக் குழுவிற்கு 1978-79ஆம் ஆண்டுக்குரிய மானியம் வழங்குவதற்காக ரூ. 5,31,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு III.

[272-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

சமூகநலத் துறை.

சீர்திருத்தப் பணித்துறை.

கொள்கை விளக்கம் 1978–79.

கடந்த காலங்களில் தமிழக அரசு தீமைகளைத் தீர்க்கவும், தடுக்கவும் கூடிய, நலன் தரக்கூடிய செயல்களை நடைமுறை படுத்துவதில் ஊன்றி கவனம் செலுத்துகின்றது. சீர்திருத்தப் பணித்துறை, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்படி இளங்குற்றவாளிகள், அனாதைகள், குற்றம் புரிந்த இளஞ்சிறார்கள், மற்றும் கட்டுக்கடங்கா பிள்ளைகள் ஆகியவர்களை கவனிப்பது, பாதுகாப்பில் வைப்பது, கல்வித் துறையிலும் மற்றும் தொழிற் கல்வியிலும் பயிற்சியளித்தல், பிற்காப்பு அளித்தல், மற்றும் அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல் ஆகிய பலநோக்குத் திட்டங்களை செயல்படுத்துகின்றது. அதுபோன்று 1956 ஆம் ஆண்டு மகளிர் மற்றும் பெண்கள் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ், பண்பு தவறிய மகளிர் மற்றும் பெண்களுக்கும் மேலே கூறியது போன்ற திட்டங்களை வகுத்து செயல்படுத்துகின்றது.

2. பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வியில் பயிற்சிக்கான வசதிகளுடன் கூடிய நீண்டகால தங்குமிடங்களாக இருபத்துமூன்று சீர்திருத்தப்பள்ளிகள் தற்போதுள்ளன. அவற்றில் இரண்டு முதுநிலைப் பள்ளிகளும், ஐந்து இளநிலை சீர்திருத்தப் பள்ளிகளும், மற்றும் மகளிருக்காக முதுநிலை, இளநிலை இணைந்த ஒரு பள்ளியும் அரசின் நேரடிப் பொறுப்பிலும், மற்ற 15 இளநிலை சீர்திருத்தப் பள்ளிகள், அரசு உதவியுடன் தனியாராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் சென்னை பாலவிகாரின் கீழ் இயங்கிவரும் இரண்டு இளநிலை சீர்திருத்தப் பள்ளிகள் (ஒன்று சிறுவர்களுக்கும் மற்றொன்று சிறுமியர்களுக்கும்) மன வளர்ச்சிக்குன்றிய பிள்ளைகளுக்கென்று நடத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரத்திலுள்ள மல்லிப்புதூரில் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியொன்று 1977 டிசம்பர் 18-ல் ஆரம்பிக்கப்பட்டது.

3. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள வரவேற்பில்லம், தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியுடன் இணைக்கப் பட்டுள்ள வரவேற்பில்லம், சென்னை பாலமந்திரின் கீழ் உள்ள வரவேற்பில்லம் ஆகியவற்றோடு சிறுவர் சிறுமியர்க்கான வரவேற்பில்லங்கள் பதினொன்று உள்ளன. இவற்றில் நான்கு அரசினராலும், மற்றவை அரசு உதவியுடன் ''குழந்தைகள் உதவிச் சங்கம்'' விடுதலை கைதிகள் உதவிச் சங்கம் போன்ற தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. இவைகளைத் தவிர சீர்திருத்த நிலையங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கென இரண்டு பிற்காப்பில்லங்கள் ஒன்று செங்கற்பட்டிலும், மற்றொன்று மதுரையிலும் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இத்துடன், சீர்திருத்த நிலையங்களிலிருந்தும், சிறையிலிருந்தும் வெளியேற்றப்படும் பெண்களுக்கென தொழிற் பயிற்சி நிலையம் அமைந்த பிற்காப்பில்லம் ஒன்று வேலூரில் அரசால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்ததொழிற் பயிற்சி நிலையத்திற்கு ''ஆடைகள் மற்றும் உள்ளாடைகள் தொழிற் பயிற்சி நிறுவனம், வேலூர்'' என்று பெயர்.

4. இம்மாநிலத்தில் இயங்கி வரும் பதிமூன்று விழிப்புப் பணி நிலையங்களில், ஏழு குறுகிய கால நிறுவனங்களாகவும், ஆறு நீண்டகால நிறுவனங்களாகவும் உள்ளன. மதுரை அரசு விழிப்புப்பணி நிலையம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்துறையால் ஆரம்பிக்கப்பட்டது ஆகும்.

[1978 மார்ச் 13

சென்னை இராயபுரத்தில் தனியாரால் நடத்தப்பட்டு வந்த குழந்தைகள் நல இல்லத்தை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாள் முதல் அரசு பொறுப்பேற்று அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி, இராயபுரம், சென்னை-13 என்ற பெயரில் நடத்தி வருகின்றது.

5. கீழே கூறப்பட்டிருக்கும் திட்டங்கள் நடப்பு ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும் :—

(அ) அரசு சென்னை விழிப்புப்பணி நிலையம் ஸ்ரீசதனுவில் ஒரு தனி இணைப்பகம் விழிப்புப்பணி வரவேற்பு மையமாக கட்டுதல்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் இளநிலை குற்றவாளிகளை தனியாக வைப்பதற்கென்று கூடுதலாக ஒரு வர வேற்பில்லம் திறக்கப்படுதல்.

6. 1978–79 ஆம் ஆண்டிக்காக இத்துறையைப் பொறுத்த மட்டில் திட்டத்தில் சேரா வேலைகளுக்காக ரூ. 86·50 இலட்சங்களும், திட்டவேலைகளுக்காக ரூ. 12·64 இலட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளுக்கு விவரம்:—

	(ரூபாய் இலட்சத்தில்)
(1) மாநிலத் திட்டங்கள்	12·64
(2) திட்டத்தில் சேராதவை ..	86·50
மொத்தம்	99·14

செலவு விவரங்கள்

விவரம். (1)	திட்டத்தில் சேராதவை. (2)	திட்டத்தில் சேர்ந்தவை. (3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
1. பணியாளர்களின் ஊதியம்	32·10	7·10
2. பிரயாணச் செலவு ..	0·40	0·07
3. உணவுச் செலவினம் ..	28·10	2·28

1978 மார்ச் 13]

விவரம். (1)	திட்டத்தில் சேராதவை (2)	திட்டத்தில் சேர்ந்தவை (3)
	(ரூபாய் இலட்சத்தில்)	
4. உடையும் படுக்கைகளும் ..	2·89	0·38
5. கருவிகளும் தளவாடங்களும்	0·10	0·10
6. இதரச் செலவினங்கள் ..	1·61	1·17
7. மூலப் பொருட்கள் ..	2·67	0·07
8. மருத்துவமும், சுகாதாரமும்.	1·02	0·06
9. உதவி மான்யம் ..	12·21	..
10. சில்லரைச் செலவினங்களும் சார்புடையவைகளும்.	3·53	0·82
11. விடுதலையளிக்கப்பட்ட இளங் குற்றவாளிகளுக்குப் புனர் வாழ்விற்கென செலவு.	..	0·05
12. சிறப்புப் பயிற்சிக் கூடம் (ஆடைகள் உள்ளடக்கிகள் செய்தலுமான பயிற்சி நிலையம், வேலூர்).	1·56	..
13. மனவியல் நெறிமுறையும் செயலும் (இளைஞர் வழி காட்டி நிலையம்).	0·31	..
மொத்தம் ..	86·50	12·64

துறை வரவுகள்

	(ரூபாய் இலட்சத்தில்).
1. சீர்திருத்தப்பணித்துறை நிறுவனங்களிலிருந்து வெளியேறியவர்களுக்கான பிற்காப்பு இல்லங்களிலிருந்து வரவு.	0·45
2. சீர்திருத்தப் பணித்துறை உற்பத்திக் கூடங்களிலிருந்து வரவு.	4.01
3. இதர-வரவினங்கள்	3·33
4. விழிப்புப்பணி இல்ல வரவு	0·30
5. சீர்திருத்தப்பணி இல்லங்களிலிருந்து வரவு	0·01
மொத்தம் ..	8·10

[1978 மார்ச் 13

சீர்திருத்த பள்ளிகள், விழிப்புப்பணி நிலையங்கள், பிற்காப்பில்லங்கள் ஆகியவைகளில் கற்பிக்கப்படும் தொழில்களின் பட்டியல்.

சீர்திருத்தப் பள்ளிகள் விழிப்புப்பணி நிலையங்கள்

1. தச்சுவேலை.
2. தையல் மற்றும் பூ வேலை.
3. நெசவு.
4. பாய் நெசவு.
5. கருமார்த் தொழில்.
6. உலோகத் தொழில்.
7. தோட்டமும் விவ்சாயமும்.
8. கொத்துவேலை.
9. புத்தகக் கட்டுமானம்.
10. பேண்டு வாத்தியம்.
11. மாட்டுப்பண்ணை.

பிற்காப்பில்லங்கள்

1. புத்தகக்கட்டுமானம்.
2. கருமாரத் தொழில்.
3. தையல்.

தொழிற்பிரிவு

ரெடிமேடு ஆடைகள், உபயோகமான ரெக்சின் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஃபோம், உள்ளடக்கி ஆடைகள் ஆகிய பொருட்கள் செய்வதில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

1978 மார்ச் 13]

துறையிலுள்ள நிறுவனங்களில் மாணவர் எண்ணிக்கை விவரம். (4–2–1978 வரை)

	சிறுவர்.	சிறுமியர்.	குழந்தைகள்.
(1)	(2)	(3)	(4)
அரசு சீர்திருத்தப்பள்ளிகள்—8	2,579	215	..
தனியார் சீர்திருத்தப் பள்ளிபள்—15.	853	468	..
அரசு வரவேற்பில்லங்கள்—4	239	14	0
தனியார் வரவேற்பில்லங்கள்—7.	379	21	..
அரசு பிற்காப்பில்லங்கள்—3	59	57	..
அரசு விழிப்புப்பணி இல்லங்கள்—5.	..	388	13
அரசு விழிப்புப்பணி புகலிடங்கள்—5.	..	62	3
தனியார் விழிப்புப்பணி இல்லங்கள்—1.	..	17	[illegible]
தனியார் விழிப்புப்பணி புகலிடங்கள்—2.	..	24	[illegible]
	4,109	1,266	2[illegible]

ஊழியர் விவரம்

அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்கள் (தலைமையிடம், சென்னை நகரம்)	..	..	9
மாவட்ட அலுவலக நிலையம்.	..	..	12
			21

[1978 மார்ச் 13

அரசிதழ் பதிவுறு அலுவலர்கள்.

அமைச்சுப் பணியாளர்கள்	..	116
பாதுகாப்புப் பணியாளர்கள்	..	186
ஆசிரியர்கள், தொழிலாசிரியர்கள்	..	208
மருத்துவப் பணியாளர்கள்	..	29
கடைநிலை ஊழியர்கள்	..	267
		806
மொத்தம்	..	827

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அனுமதிக்கப் பட்டுள்ள திட்டப் பணிகளாவன.

1. சீர்திருத்தப் பள்ளிகளில் தொழிற்கல்வியை வலுப் படுத்துவதுடன், செங்கற்பட்டு மாவட்டம், ஆத்தூர் கிராமத்தில் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கெனத் தொழிற்கூடம் நிர்மாணித்தல்.

2. சீர்திருத்தப்பள்ளி விழிப்புப்பணித் துறையை வலுப்படுத்துவதுடன், ''சீர்திருத்தப்பணித் துறை இயக்கம்'' எனப் பெயர் மாற்றம் செய்தலும் மற்றும் இளமையில் தவறு இழைத்தோர் மற்றும் ஒழுக்கத்தில் தவறியோர் களுக்கென சீர்திருத்தப்பணித் துறையின்கீழ் தனியே ஒரு நன்னடத்தை அலுவலர் அமைப்பு ஏற்படுத்துதல்.

3. ஆதரவற்ற மற்றும் அனாதைக் குழந்தைகளுக்காக இல்லம் ஒன்று துவக்குதல்.

4. செங்கற்பட்டுக்கு அருகாமையில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் சிறுவர் பிற்காப்பில்லத்திற்காக கட்டிடம் ஒன்று கட்டுதல்.

5. தென்னாற்காடு, கடலூரில் அரசினர் சிறுவர் (இளநிலை) சீர்திருத்தப்பள்ளி ஒன்று துவக்குதல்.

1978 மார்ச் 13]

6. மதுரையில் ''மீனாட்சி சதனம்'' என்ற தனியார் நிறுவனத்தில் பணி இல்லத்தை அரசு ஏற்று நடத்துதல்.

7. கோயம்புத்தூரில் அரசு பாதுகாப்பு இல்லம் ஒன்று ஏற்படுத்தல்.

ஐந்தாவது திட்டக் காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களில் கீழ்காணும் திட்டங்கள் 1974-75, 1975–76, 1976–77 மற்றும் 1977–78 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப் பட்டன:—

1974–75:

1. சென்னை, செங்கற்பட்டு, தஞ்சாவூர் அரசினர் சீர் திருத்தப்பள்ளிகளில் இயந்திரமயமாக்கப்பட்ட தொழில் களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

2. சீர்திருத்தப்பள்ளி விழிப்புப்பணித் துறையை வலுப் படுத்துவதுடன், சீர்திருத்தப் பணித்துறை இயக்கம் எனப் பெயர் மாற்றம் செய்தலும் மற்றும் இளமையில் தவறி ழைத்தோர் மற்றும் ஒழுக்கத்தில் தவறியோர்களுக்கெனத் சீர்திருத்தப் பணித்துறையின் கீழ் தனியே ஓர் நன்னடத்தை அலுவலர் அமைப்பு ஏற்படுத்துதல்.

3. தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் ஓர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி (சிறுவருக்கு) ஆரம்பித்தல்.

1975–76: தொழில்களை இயந்திரமயமாக்குதல்—

1. (அ) செங்கற்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் நெசவுத் தொழில், (இ) தஞ்சாவூர் அரசினர் இள நிலை சீர்திருத்தப்பள்ளியில் தையல், (உ) சென்னை சிறுமியர் சீர்திருத்தப்பள்ளியில் தையல் தொழில்:

2. மதுரை மீனாட்சி சதனத்தின்கீழ் இயங்கி வந்த விழிப்புப்பணி இல்லத்தை அரசு பொறுப்பேற்று நடத்துதல்.

[1978 மார்ச் 13

1976–77:

(ரூபாய் இலட்சத்தில்.)

1. செங்கற்பட்டு அரசினர் மாணவர் பிற்காப்பில்லத்திற்காக செங்கற்பட்டு அருகாமையில் ஆத்தூர் கிராமத்தில் தொழிற்கூட கட்டிடங்கள் நிர்மாணித்தல். 1·00

1977–78:

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் அரசினர் சிறுவர் பிற்காப்பு இல்லத்திற்கான மாணவர் விடுதியும் நிர்வாக அலுவலகம் ஒன்றும் கட்டுதல்.

மேலே கூறப்பட்டுள்ள திட்டப்பணிகளை செயலாக்குவதுடன், சில புதிய திட்டப் பணிகளும் 1977–78-ல் அனுமதிக்கப்பட்டுள்ளன.

திட்டத்தில் சேர்ந்தவை

(ரூபாய் இலட்சத்தில்.)

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுவர்களுக்காக அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளி ஒன்று துவக்குதல் (மல்லிபுதூர்). 4·06

2. சென்னை விழிப்புப்பணி மற்றும் ஸ்திரிசதன இல்லத்தில் விழிப்புப்பணி வரவேற்பு மையங்கள் கட்டுதல். 1·00

திட்டத்தில் சேராதவை

இராமநாதபுரம் மாவட்டத்தில் இளம் குற்றவாளிகளுக்கான மற்றுமொரு வரவேற்பில்லம் ஏற்படுத்துதல். (காரைக்குடி). 0·93

1978 மார்ச் 13]

1978–79:

மேலே கூறப்பட்டுள்ள திட்டப்பணிகளை செயலாக்குவதுடன், சில புதிய திட்டப்பணிகளும் 1978–79-ல் மேற்கொள்ளப்படும்.

திட்டத்தில் சேராதவை

(ரூபாய் இலட்சத்தில்.)

1. தனியார் நடத்தும் சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப் பணி இல்லங்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை உயர்த்தவேண்டி. 1·38

2. விசாரணையில் இருக்கிறவர்களுக்கென்று ஒரு வரவேற்பில்லம் தென்னாற்காடு மாவட்டத்தில் திறப்பது. 1·15

சீர்திருத்தப்பள்ளிகளில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்கள் உருவாக்காவிட்டால் அவர்களுக்கு புனர் வாழ்விற்கு வழி செய்வதாலோ, திருத்துவதாலோ எண்ணிய படி பலன் அடையமுடியாது. திட்ட காலங்களில் உருவாக்கும் பலவிதமான திட்டங்களில் அவர்கள் இல்லங்களில் கொடுக்கப்பட்ட பயிற்சிகளின்படி அவர்களை பயன்படுத்தி ஒரு நல்ல வாழ்வை உருவாக்க வேண்டிய வழிவகைகளை செய்யவேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1978 மார்ச் 14.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வெள்ளாற்றுத் தடுப்புச் சுவர்.

*548 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், சேத்தியாத்தோப்பு கீழ்ப்பகுதி வெள்ளாற்றின் தென் கரையான கோனுற்றங்கரை என்ற பகுதியில் உடைப்பு ஏற்படுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் எழுப்ப தயாரிக்கப்பட்ட மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) வேலை முழுவதும் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) சிதம்பரம் வட்டம் சேத்தியாத்தோப்பு கீழ்ப்பகுதி ஓரையூர் கிராமத்தில் வெள்ளாற்றின் வலது கரையில் ஏற்படும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக இரண்டு வெள்ளத் தடுப்புத் தேக்கம் கட்டுவதற்காக ரூ. 3.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள பொதுப்பணித் துறையின் 24–11–77 நாளிட்ட அரசாணை எண். 1751-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ஆ) இப்பணி இன்னும் தொடங்கப்படாததால், இதுவரை செலவு ஒன்றும் ஏற்படவில்லை.

(இ) பணி தொடங்கப்பட்டு ஓராண்டில் வேலை முழுவதும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. துரை கலியமூர்த்தி : இந்தத் தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால் அங்கே நீண்ட தூரம் ஹைவேஸ் ரோடு அடித்துச் செல்லுகிற நிலையிருக்கிறது. அதோடு அங்குள்ள நிலங்களும் சேதமடைகிறது. ஆகவே, தடுப்புச் சுவர் கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா? முன்னால் போட்ட திட்டங்கள் பாதி அளவிற்குத்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1972-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டது. அது குறித்து அப்போது ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஏழு இடங்களில் 6½ லட்சம் ரூபாய் அளவிற்கு செலவு செய்து அந்த வெள்ளத் தடுப்புத் தேக்கம் கட்டுவதென தீர்மானிக்கப்பட்டது. ஆனால் போதிய நிதி ஒதுக்கம் அப்போது செய்யப்படவில்லை. பிறகு இந்த ஆண்டு இரண்டு இடங்களிலாவது கட்டுவது என தீர்மானித்து மூன்று இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. செ. சிவசாமி : கடந்த புயல் வெள்ளம் காரணமாக மதுரையில் பல இடங்களில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் சுவர் எடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவா? குறிப்பாக வைகையாற்றின் கரையோரத்தில்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : செய்யப்பட்டிருக்கலாம். விவரம் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டியதாக துணைக் கேள்வி கேட்க வேண்டும்.

திரு. துரை கலியமூர்த்தி : ஆறு இலட்சம் ரூபாய் அளவிற்கு திட்டம் போட்டு மூன்று லட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மற்ற திட்டங்கள் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கனவே சொன்னேன். ஏழு இடங்களில் அதே போல் செய்யவேண்டியுள்ளது. இரண்டு இடங்களில் செய்ய ரூபாய் மூன்று லட்சம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில் வேலை முடிந்த பிறகு அது எப்படி இயங்குகிறது என்பதைப் பார்த்து அதற்குப் பிறகு தான் மற்ற இடங்களில் அதை மேற்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும்.

மருதையாற்றின் குறுக்கே அணை.

*549 வினா— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் மருதையாற்றின் குறுக்கே அணைகட்டி நீர்ப்பாசனத்துக்கு தண்ணீர் விடும் திட்டம் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அவசியத்தைக் கருதி மதிப்பீடு செய்யப்பட்டு இந்த ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1975-ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிப்படி லில்லிபிருங்கியம் என்ற கிராமத்தில் 134 லட்சம் ரூபாய் செலவில் ஒரு நடுத்தர திட்டத்திற்கான செயற்குறிப்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பகுதியிலுள்ள மருதையாற்றின் நீர் உப்புத் தன்மை உள்ளதாக இருப்பதால் இதுபற்றி ஆராய ஒரு உயர்மட்டக் குழு அமைக்க வேண்டியுள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : அந்த உதவிப் பொறியாளர் மீது புகார் வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அது உண்மையா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பிள்ளையே பிறக்கவில்லை, அதற்குள் பெயர் வைப்பதைப் போல் உள்ளது. புகார் வந்திருக்கிறதா என்றால், திட்டமே இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

[1978 மார்ச் 14

பெருந்துறைப்பட்டு கிராமத்தில் மின் இணைப்பு.

*550 வினா— திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் தாலுக்கா, தாண்டராம்பட்டு தொகுதியில் உள்ள பெருந்துறைப்பட்டு கிராம விவசாயிகள் 1972-1977 வரை எத்தனை பேர் மின் இணைப்பு கோரியுள்ளனர்?

(ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படாததற்கு காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) 20 விண்ணப்பதாரர்கள்.

(ஆ) மூன்று.

(இ) மின் வசதியளிப்பதற்கான திட்ட மதிப்பீடு வருவாய் குறைவாக உள்ளதால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. துரை முத்துசாமி: இது எந்தத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது? விரைவில் முடிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இதற்கென குறிப்பிட்ட திட்டம் இல்லை. இருக்கிற மனுக்களில் 17 மனுக்கள் ஆதாயமற்ற காரணத்தால் எடுத்துக்கொள்ளப்பட முடியவில்லை என்று அவை பென்டிங்கில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. வேணுகோபால்: 1977-78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 30,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதாக அறிவித்து இருக்கிறார்கள், அந்த அறிக்கையின்படி பெருந்துறைப்பட்டு கிராமத்தில் மின் இணைப்பு தரப்பட்ட பம்ப் செட்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த அறிக்கை அண்மையில் தான் வந்திருக்கிறது. இனிமேல் தான் அதுபற்றி பரிசீலிக்கப்பட வேண்டும்.

1978 மார்ச் 14]

நெல்லித்துறை நீர் மின் திட்டம்.

*551 வினா— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோயம்புத்தூரில் நெல்லித்துறை நீர் மின் சக்தி உற்பத்தி திட்டம் இப்போது எந்த அளவில் உள்ளது?

(ஆ) அது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மத்திய மின் அமைப்பின் ஒப்புதல் எதிர்பார்க்கப் படுகிறது.

(ஆ) வேலைகள் துவங்கி ஐந்து ஆண்டுகளில் திட்டப்பணிகள் முடிவடையும்.

வள்ளுவா கோட்டம்.

*552 வினா— திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் பணியாற்றத் தொடங்கி விட்டதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறளைப்பற்றி பல்வேறு ஆராய்ச்சி நூல்கள் வந்திருக்கின்றன என்றாலும், இன்னும் சிறப்பான முறையில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு இந்த ஆராய்ச்சிப் பிரிவை வள்ளுவர் கோட்டத்தில் துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு முடிந்ததற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு மூன்று லட்சம் ரூபாய் நிதியையும் வழங்கி தனித்தனியாக திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் நான்காவது ஒரு ஆராய்ச்சி கூடம் வேண்டுமா என்ற பல்வேறு கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 14

<u>திரு. அ. க. அரங்கநாதன்</u> : வள்ளுவர் கோட்டத்தில் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்கின்ற இந்த நேரத்தில், அண்ணா அவர்கள் எழுதிய நூல்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு வள்ளுவர் கோட்டத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை வைக்க முடியுமா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது.

<u>திரு. இ. கா. ராமலிங்கம்</u> : தலைவர் அவர்களே, மதுரை பல்கலைக் கழகத்திற்கு திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று ஒதுக்கிய நிதி அதற்காக சரியாக செலவிடப்படவில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : தலைவர் அவர்களே, அப்படி ஒரு புகார் அரசுக்கு வரவில்லை. அங்கு ஆறு ஆராய்ச்சி நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன; திருவள்ளுவர் திருநாள் அன்று, மூன்று பல்கலைக் கழகங்களும் வெளியிட்ட 16 ஆராய்ச்சி நூல்களும் வெளியிடப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. வி. கே. கோதண்டராமன்</u> : இப்படி லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டு திருக்குறள் ஆராய்ச்சி செய்கின்ற நேரத்தில், கல்லூரி மாணவர்களில் இப்படிப்பட்ட ஆராய்ச்சியில் முதன்மையாக தேர்வு பெற்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய முறையில் இப்போது என்ன சலுகை கொடுக்கப்படுகிறது ?

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : இப்போது மூலக் கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது. அதன் தொடர்பான பதில்கள் தான் இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களைப் பற்றி கேட்கிறார்கள். இதைப்பற்றி தனியாக கேள்வியை சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்தில் போட்டால் அவர்களுக்கு தகுந்த பதில் கிடைக்கும்.

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறள் ஆராய்ச்சி நூல்கள் மிக அதிகமான விலையில் இருக்கின்ற காரணத்தினாலும், இதிலுள்ள விளக்கங்கள் மிகக் கடினமாக இருப்பதாலும், இதை சாதாரண ஏழை எளிய மக்கள் படித்து புரிந்து கொள்கின்ற வகையில், எளிய முறையில், மலிவான விலையில்-மலிவுப்பதிப்பாக வெளியிட்டு, ஏழை எளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில் ஏதாவது வழிவகை செய்யப்படுமா ?

1978 மார்ச் 14]

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறள் பற்றியும் நாட்டில் எந்தவிதத்தில் எல்லாம் பரப்பலாம், அதற்கு என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி முக்கியமான கருத்துக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பற்றியும் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. போ. கோபாலன்</u> : உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற பிறகு திருக்குறள் ஆராய்ச்சிக்கு என்று நிதி ஒதுக்கீடு செய்த பின்னல், பல்கலைக் கழகங்களில் திருக்குறள் ஆராய்ச்சி நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : பல்கலைக் கழகங்களில் அதற்கென்று தனியாக துறை ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதுவரை பல்கலைக் கழகங்கள் வெளியிட்ட 16 புத்தகங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்தேன். ஆனால் மக்களிடத்தில் திருக்குறள் பற்றி அதிக அளவுக்கு பரப்பப் படவில்லை என்று தெரிகிறது. இனிமேல் அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : மாண்புமிகு தலைவர் அவர்களே,

“ உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு ”

என்று வள்ளுவர் சொல்லியபடி, இந்த நாட்டில் பசி, பிணி, வறுமை இவைகள் எல்லாம் இல்லாதிருக்க வேண்டும். ஆனால், இன்று அட்சய பாத்திரங்களும், நோய் நொடியும் நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நாட்டில் பசி, பிணி, வறுமை இவை இல்லாதிருக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்</u> : கேள்வி திருக்குறள் ஆராய்ச்சியைப் பற்றியது. வேறுள்ள விவரங்களுக்கு தனியாக கேள்வி போட்டால் சம்பந்தப்பட்டவர்கள் பதில் அளிக்க வசதியாக இருக்கும்.

[முற்பகல் 9—10]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இந்த திருக்குறள் ஆராய்ச்சிக்காக சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதில் எத்தனை நூல்கள் இதுவரை வெளியிட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே. 1968-லே உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் திருக்குறல் ஆராய்ச்சிப் பிரிவுகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி இதுவரை மக்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. இருந்தாலும் சொல்லுகிறேன். சென்னை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கிறது. அண்ணாமலை பல்கலைக் கழகம் 4 நூல்களை வெளியிட்டிருக்கின்றது. மதுரை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கின்றது.

*553 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் பொருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(ஆ) தக்க இடத்தில் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தக்க இடத்திலே பதிக்கப்படும் என்று சொன்னார்கள். நன்றி. அப்போது கால் கோள் விழா செய்யப்பட்ட கல் ஜாக்கிரதையாக உள்ளதா ? பழைய கவர்னர் ஆட்சியின் போது அது அகற்றப்பட்டதாக சொல்லப்படுகிறதே, அதைப்பற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கால்கோள் விழா நடத்தியதைக் குறிக்கும் அந்தச் சாசனக்கல் இருந்த இடத்திலே சுற்றுச்சுவர் எழுப்புகின்றபோது, அஸ்திவாரம் போடப்பட்ட போது, அந்தக் கல் பத்திரமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதைப் பொருத்துவதிலே சங்கடமில்லை.

உதகமண்டலத்தில் கலை அரங்கம்.

*554 வினா—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் கோடைக்கால விழாக்கள் மற்றும் அரசாங்க விழாக்கள் நடத்திட ஒரு கலை அரங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் அதிகமாக பயணிகள் வரக்கூடிய கோடை வாசஸ்தலமாக-ஆண்டில் செப்டம்பர், மார்ச், ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வரக் கூடியதாக இருக்கிறது. அப்போது கலை விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த விழாக்கள் அத்தனையும், அண்ணா ஸ்டேடியம் என்று சொல்லப்படுகின்ற விளையாட்டு மைதானத்திலே ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெறுவதால் அந்தக் காலங்களில் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு தடை ஏற்படுகிறது. இதை உணர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஒரு தனி கலையரங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் மாத்திரமல்ல. மாவட்டங்களின் தலைநகரங்களிலே மட்டுமாவது இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளுக்கு பயன்படுவதற்கு கலை அரங்கங்கள் கட்டப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் திட்டம். இதையொட்டி, உதகமண்டலத்தின் தேவையும் பரிசீலிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே கம்பர், வள்ளலார் போன்றவர்களுக்கு நினைவாலயம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கம்பர் வாழ்ந்த இடமாகிய தேரெழுந்தூரில் அந்தமாதிரி நினைவாலயம் ஒன்று ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா ? அதோடு.. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கலை அரங்கத்தைப் பற்றிய கேள்வி.

திரு. இரெ. இராசமாணிக்கம் : கம்பர் நினைவாலயம் அமைப்பதற்காக தமிழகத்தில் முன்னாள் ஆளுநராக இருந்த பிரகாசம் அவர்கள் 10—10—1954-லே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இதை கவனத்திலே கொண்டு இந்த அரசு என்னுடைய தொகுதியாகிய தேரெழுந்தூரில் அத்தகைய நினைவாலயம் அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 14

[முற்பகல் 9–10]

திரு. துரை கலியமூர்த்தி : தலைவரவர்களே, இந்த திருக்குறள் ஆராய்ச்சிக்காக சிதம்பரத்திலுள்ள அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. அதில் எத்தனை நூல்கள் இதுவரை வெளியிட்டிருக்கிருர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே. 1968-லே உருவாக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் திருக்குறல் ஆராய்ச்சிப் பிரிவுகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப் பற்றி இதுவரை மக்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து தெரிகிறது. இருந்தாலும் சொல்லுகிறேன். சென்னை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கிறது. அண்ணுமலை பல்கலைக் கழகம் 4 நூல்களை வெளியிட்டிருக்கின்றது. மதுரை பல்கலைக்கழகம் 6 நூல்களை வெளியிட்டிருக்கின்றது.

*553 வினு—திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தில் கால்கோள் விழா செய்த சாசனக்கல் பொருத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைப் பொருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

திரு. செ. சிவசாமி : மாவட்டத் தலைநகரங்களில் கலை அரங்கம் அமைக்கப்படும் என்று சொன்ஞர்கள். ஆனல் முகவை மாவட்டத்திற்குத் தலைநகரமே இல்லாத காரணத்தால் அங்கு எங்கு இந்தக் கலையரங்கம் அமைக்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்கள் மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்விகள் கேட்க வேண்டும். மூலக் கேள்வி உதகமண்டலத்தில் கலை அரங்கம் அமைப்பதைப் பற்றியது. இதையொட்டிய கேள்விகளுக்குத்தான் அமைச்சரிடம் விவரம் இருக்கும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்த மாவட்டத்திற்கென்று தனித் தலைநகரம் அந்த மாவட்டதிற்குள்ளே இல்லை என்ருலும் அந்த மாவட்டத்திற்குள்ளே எது முக்கியமான நகரம் என்று தெரிந்து அங்கே அமைக்கலாம்.

1978 மார்ச் 14]

உதகமண்டலத்தில் கலை அரங்கம்.

*554 வினு—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் கோடைக்கால விழாக்கள் மற்றும் அரசாங்க விழாக்கள் நடத்திட ஒரு கலை அரங்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. போ. கோபாலன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் அதிகமாக பயணிகள் வரக்கூடிய கோடை வாசஸ்தலமாக—ஆண்டில் செப்டம்பர், மார்ச், ஏப்ரல், மே, ஜுன் மாதங்களில் வரக் கூடியதாக இருக்கிறது. அப்போது கலை விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த விழாக்கள் அத்தனையும், அண்ணு ஸ்டேடியம் என்று சொல்லப்படுகின்ற விளையாட்டு மைதானத்திலே ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடைபெறுவதால் அந்தக் காலங்களில் விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு தடை ஏற்படுகிறது. இதை உணர்ந்து கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக ஒரு தனி கலையரங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உதகமண்டலம் மாத்திரமல்ல. மாவட்டங்களின் தலைநகரங்களிலே மட்டுமாவது இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளுக்கு பயன்படுவதற்கு கலை அரங்கங்கள் கட்டப்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கி[illegible]ம். இதையொட்டி [illegible]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) முதல் (ஈ) வரை: பேரவைமுன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. சுப்பிரவேலு : தொழிலாளர் துறையில் இருக்கின்ற ஊழியர்களில் 18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது என்று மக்கள் மத்தியில் தகவல் இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரில் எஸ்.சி. மற்றும் எஸ்.டி. காக ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி போட்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட கமிட்டியை நம்முடைய அரசும் அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வேலைக்கு எடுக்கும்போது 18 சதவிகிதம தாழ்த்தப்பட்டவர்களுக்குத நாப்படுகிறது. மாறுபட்ட தகவல் இருந்தாலும் அதுபற்றி எனக்கு எழுதிக் கொடுத்தால் அதை நான் பரிசீலிக்கிறேன்.

491–492ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது]

[1978 மார்ச் 14

சென்னை கொத்தவால்சாவடி இடமாற்றம்.

*556 வினா—திரு. து. புருஷோத்தமன் திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கொத்தவால் சாவடியை வேறு இடத்துக்கு மாற்றும் யோசனை எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

அண்ணா நகரிலுள்ள மத்தியதர வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்புகள்.

* 557 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையிலுள்ள அண்ணாநகர், சாந்தி காலனியில் எம்.ஐ.ஜி. பிளாட் உரிமையாளர்களிடமிருந்து வீடுகளைக் கட்டுவதற்கான செலவு பெருமளவு அதிகரித்துள்ளது குறித்து நிறைய புகார்கள் வீட்டுவசதி வாரியத்துக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள், அதிகரித்துள்ள செலவுக்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ). விளம்பரம் செய்யப்பட்ட விலையைவிட இறுதி விலை மிகவும் கூடுதலாக உள்ளது என்று சாந்தி குடியிருப்பிலுள்ள அங்கணங்களை வாங்கியவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். கட்டிட பொருள்களின் விலை ஏற்றம், நில ஆர்ஜிதத்திற்கு நீதி மன்றத்தின் ஆணைப்படி கொடுக்கப்பட்ட அதிகப்படியான நஷ்ட ஈடால் உருவாக்கப்பட்ட நிலவிலை ஏற்றம், கட்டுமான காலத்தில் உருவாகின்ற வட்டி தொகை முதலியனவே இந்த விலை ஏற்றத்திற்கு முக்கிய காரணங்கள்.

திரு. கு. ரமணி : அரசுத் துறைகளிலும் மற்றவற்றிலும் தொழில் செய்து ரிடையர் ஆனவர்கள் தாங்கள் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, கிராச்சுவடி போன்றவற்றைக் கொண்டு வீடு கட்ட விரும்புகிறார்கள். அந்த அடிப்படையில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து தீர்மானிக்கப்பட்ட விலையை வேறு பொருள்களின் விலை உயர்ந்து விட்டது என்று கூறி ஒப்பந்தத் தொகையை எக்கச்சக்கமாக ஆக்கினால் வீடு கட்ட முடியாமல் போகும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அவ்வாறு உயர்த்தியிருப்பதைக் குறைக்க ஏற்பாடு செய்யப்படுமா ? துரிதமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

1978 மார்ச் 14]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வீடு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிகமாவதற்குக் காரணங்கள் சொன்னேன். நிலத்தை ஆர்ஜிதம் பண்ணும்போது நாம் ஒரு விலையை நிர்ணயிக்கிறோம். நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் அதிகமான விலை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பு வாங்குகிறார்கள். வீடு கட்டிக் கொண்டு போகும்போது சில நேரங்களில் மெட்டீரியல் காஸ்ட் ஏற்படுகிறது. அது எப்படி இருந்தாலும் முறையீடுகள் வந்திருப்பதால் அதைப் பற்றிப் பரிசீலிப்பதற்கு சர்வ கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது. அதில் மாண்புமிகு உறுப்பினர்கள் கட்சியைச் சார்ந்த பெரும் தலைவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய முடிவு விரைவில் எடுக்கப்படும்.

மன்னார்குடியில் தொழிலாளர் நல மருத்துவமனை.

*558 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மன்னார்குடியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை ஏற்படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

(முற்பகல் 9-20).

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி பகுதியைச் சுற்றி திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையும் பாமினி உரத் தொழிற்சாலையும் சி. டபிள். சி.யும் இப்படி பல்வேறு தொழிற்சாலைகள் இருப்பதால் அங்கே ஒரு இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆரூரான் சர்க்கரை ஆலை திருவாரூரைச் சுற்றி இருக்கிறது.

புதுக்கடை நகரப் பஞ்சாயத்துக் குடிநீர் வழங்கல்.

*559 வினா—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கான குடிநீர் வழங்கு திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

<u>மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்</u> : (அ) ஆம்.

(ஆ) திட்டத்திற்கு ஆகும் செலவை ஏற்கும் வகையில் புதுக்கடை பேரூராட்சி, மற்றும் முன்சிறை, பார்த்திவபுரம் ஆழங்குளம் ஊராட்சிகளின் நிதி நிலைமை உள்ளதா என்பது பற்றிய ஊரக வளர்ச்சி இயக்குநரின் அறிக்கை கிடைத்ததும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டத்தை அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கும். அரசு ஒப்புதல் கொடுத்த பிறகு அத்திட்டம் துவங்கப்படும்.

'படகர்' வகுப்பினர்.

*560 விஞ—திரு. <u>போ. கோபாலன்</u>: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி வாழ் 'படகர்' இனத்தவரை (பின்தங்கிய வகுப்பினர்) தாழ்த்தப்பட்ட பழங்குடியினராக (Scheduled Tribes) கருதி அவ்வாறு ஆணைபிறப்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

<u>மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்</u> : பழங்குடியினரிடையே காணப்படும் தனித்தன்மையான பண்புகள் நீலகிரிப் பகுதியில் வாழும் படகர் இனத்தவரிடையே காணப்படாததால் படகர் இனத்தவரை ஆதிவாசிகளின் பட்டியலில் சேர்க்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

<u>திரு. போ. கோபாலன்</u>: பழங்குடியினரிடையே உள்ள பழக்க வழக்கங்கள் படகர்களிடையே காணப்படவில்லை என்று யார் சொன்னது? அப்படிப்பட்ட அறிக்கையை அளித்தது எந்தக் குழு? அப்படியே சொல்லி இருந்தாலும் அது உண்மையல்ல என்பது அரசுக்குத் தெரியுமா? அவர்களுடைய பழக்க வழக்கங்களும், பொருளாதாரத் துறையிலேயும், கல்வித்துறையிலேயும் அவர்கள் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே வாழக்கூடிய தனிப் பிரிவினராக அந்த மக்கள் இருப்பதால் அரசாங்கம் மீண்டும் அதைப் பரிசீலனை செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : ஒரு குறிப்பிட்ட இனத்தவரை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்றால் கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

காலத்தால் மாறுபட்ட நாகரீக முன்னேற்றம் பெறாத நிலைமை, தனித்தன்மை பெற்ற பழக்க வழக்கங்கள், புவியியலமைப்பின் காரணமாக சிதறிக் கிடக்கும் நிலைமை, பெரும்பான்மையான பிற மக்களுடன் தொடர்பு கொள்வதில் அச்சம் அல்லது வெட்கப்பட்டு நிற்கும் நிலைமையிலுள்ள பிற்போக்குத் தன்மை. மேற்கண்ட

பண்புகளை ஒரு குறிப்பிட்ட இனத்தவர் பெற்றிருக்கிறார்களா என்பது குறித்து ஆய்வறிக்கை ஒன்றினைப் பெற்று, அதன்பின், அவ்வினத்தவர் பழங்குடியினரின் பண்புகளைப் பெற்றுள்ளனரா என்றும், அவர்கள் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்குத் தகுதியுடையவரா என்றும் கண்டறிந்த பின்னர், அப்பட்டியலில், குறிப்பிட்ட ஒரு இனத்தவரைச் சேர்ப்பதற்குரிய அதிகாரம் பெற்ற இந்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யும். மாநில அரசின் பரிந்துரையினை ஏற்று, இந்திய அரசு அதற்கான ஆணையினை பழங்குடியினர் இனப்பட்டியலில் திருத்தச் சட்டம் என்ற வடிவில் பிறப்பிக்கும். இவ்வாறு பழங்குடியினர் பட்டியலைத் திருத்தியமைக்கும் மைய அரசின் ஆணை ஒரு சட்ட வடிவில் அமைந்திருக்கும். இதுவே குறிப்பிட்ட ஓரினத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்குரிய முறையாகும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. உச்சி</u> : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விரிவான பதிலைக் கேட்ட பிறகும் கூட எனக்கு ஒரு நப்பாசை தோன்றுகிறது. ஷெட்யூல்ட் வகுப்பில் சேர்க்கவில்லையென்றாலும் கூட அவர்களை மோஸ்ட் பேக்வர்ட் கம்யூனிட்டிலாவது இடம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : தலைவர் அவர்களே, கேள்வி கேட்டிருப்பது அவர்களை ஆதிவாசிகள் பட்டியலில் சேர்க்கப்படுமா என்பது தான், ஷெட்யூல்ட் வகுப்பில் சேர்க்க வேண்டும் என்பதல்ல. மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்ப்பதற்கும் சில விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளையொட்டி வருமானால் பரிசீலிக்கலாம்.

<u>திரு. க. மருதாசலம்</u> : தலைவர் அவர்களே, இந்த படகர் ஜாதியினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்காமல் இருப்பதற்கு என்ன என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா?

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u>: தலைவர் அவர்களே, தற்போது அந்த சமூகத்தினர் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டில் அதிகம் முன்னேறியிருக்கிறார்கள், அதோடு மட்டுமல்லாமல் விவசாயத்தில் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை வருமானம் பெறுகின்ற அளவிற்கு நீலகிரியில் தேயிலைத் தோட்டமும் உருளைக்கிழங்கு தோட்டமும் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு என கல்லூரிகளும் இருந்து வருகின்றன. ஆகவே, அவர்களுடைய சமுதாயத்தைப் பற்றி ஆய்ந்தறிந்த வல்லுநர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்த சமுதாயமாக இருக்கிறார்கள் என்று அறிக்கை அனுப்பியிருப்பதால்தான் ஆதிவாசிகளின் பட்டியலில் சேர்க்கும் கோரிக்கையை ஏற்க முடியாத நிலைமை இருக்கிறது.

[1978 மார்ச் 14

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் நீலகிரி மாவட்டத்திலே உள்ள படகாஸ் எந்தெந்த வகையிலே முன்னேறி இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அது அந்த மாவட்டத்தை பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாக நாம் எடுத்துக் கொள்ளுகின்ற புள்ளி விவரமாக இருக்க முடியாது. தாழ்ததப்பட்ட மக்களிலேயும்கூட இரண்டு சதவிகிதம் பேர், அமைச்சரவர்கள் சொல்வதைப் போல வாணிபம் செய்பவர்களாக, விவசாயம் செய்பவர்களாக, பொருளாதாரத்திலே மேம்பட்டவர்களாக இருக்கிறார்கள். அதைக்கொண்டு அந்தச் சமுதாயம் முழுவதும் முன்னேறிவிட்டது என்று எப்படி கணக்கிட முடியாதோ அதைப் போலவேதான் படகர் சமுதாயத்தில் ஒரு சிலர் முன்னேறி இருப்பதை நாம் எடுத்து வைத்துக்கொண்டு அந்தச் சமுதாயத்தை மிகப் பின் தங்கியவர்கள் பட்டியலில் இணைப்பதற்கு விதிமுறைகள் தடையாக இருப்பதாகக் கூறுவது நல்லது அல்ல. இதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிடுவதைப் போலப் பார்த்தால் முன்னேறிய சமுதாயத்தில் இருக்கின்ற எல்லாச் சமுதாயத்திலும் பொருளாதாரத்தில் மிகமிகத் தாழ்ந்த நிலைமையிலே, குடிக்கக் கஞ்சிக்கே வழியில்லாமல் இருக்கும் நிலைமைகள் நாட்டிலே இருக்கின்றன. அப்படிப் பார்க்கும்பொழுது அவர்களையும் மிகமிகப் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டி வரும், தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டிய சூழ்நிலைகள் வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொண்ட இயக்கம் என்ற முறையிலேயும், திராவிட முன்னேற்றக் கழகம் அதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்ற முறையிலேயும் இந்தப் பிரச்னையை அணுக வேண்டுமென்று அமைச்சரிடத்தில் எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது எப்படிப்பட்ட கருத்துக்களை வலியுறுத்தினார்களோ அதே கருத்துக்களை இப்பொழுதும் வலியுறுத்துவது வேதனைக்குரியதாக இருக்கிறது. முன்னேறிய சமுதாயத்திலும் பொருளாதாரத்தில் பிற்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அந்த நிலைமைகளிலே அவர்களுக்கும் நாம் சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுமேயானால், வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்திற்கு முன்னுரிமை தரப்படாமல் போய்விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். அதை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு

1978 மார்ச் 14]

கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ஒரு சமுதாயத்தை ஆதிவாசிகள் பட்டியலிலோ அல்லது தாழ்த்தப்பட்டோர் பட்டியலிலோ எப்படி சேர்க்க முடியும் என்பதற்கு மத்திய அரசாங்கம் விதிமுறைகளை வைத்திருக்கிறது, மாநில அரசும் அதைப் பின்பற்றுகிறது. ஆகவே, விதிதான் அதை நிர்ணயிக்கவேண்டுமே தவிர நாம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலைக் கேட்டபொழுது எனக்குச் சற்று ஆச்சரியமாக இருந்தது. காரணம், படகா சமுதாயத்தைச் சேர்ந்த பெண்மணிகளெல்லாம் ஏராளமான பேர்கள் பள்ளிக்கூடத்தில் படிக்காத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் மலையிலே இருக்கிறார்கள். அவ்வாறு மலையிலே இருக்கின்ற மலைவாழ் மக்கள் சந்தன மரக்கட்டைகளைச் தோளிலே சுமந்து செல்கிறார்கள் என்பதற்காக அவர்கள் முற்போக்காக ஆகிவிட்டார்கள் என்று அமைச்சரவர்கள் கருத மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். படகா சமுதாயத்தினர் கீழ் பகுதியிலே உள்ள மக்களோடு தொடர்பு கொள்ளுகின்ற அளவிற்குக்கூட நாகரீகம் வராமல் இருக்கும்பொழுது அவர்கள் மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் சேர்க்கப்படுவார்களா? மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக் கொண்டதைப்போல் அமைச்சரவர்கள் அதற்கு வேண்டியதைச் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா? மத்திய அர்சாங்கத்திற்கு வற்புறுத்திக் கூறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அரசினுடைய முற்போக்குக் கொள்கைகள் காரணமாக படகர் சமூகம் வாழும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஆரம்ப நடுத்தரப் பள்ளிகளும், பெரிய கிராமங்களில் உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இதைத் தவிர, பெண்களுக்கென்று தனியாக இரண்டு கல்லூரிகளும், ஆண், பெண் இருபாலருமாக அரசினர் கலைக்கல்லூரி ஒன்றும் நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. இதனால் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் கல்வியறிவு பெற்றிருப்பதுடன், அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஐந்து முதல் பத்து நபர்கள் வரை பொறியியல், மருத்துவம், விவசாயம், மற்றும் அறிவியல் ஆகியவற்றில் பட்டப் படிப்பு படித்தவர்களாக உள்ளார்கள் என்ற விவரம் இருக்கிறது. ஆகவேதான் நான் அந்தப் பதிலை அளித்தேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஷெட்யூல்ட் ட்ரைப்ஸ் என்கின்ற அந்தப் பட்டியலிலே கொண்டு வருவதற்குத்தான் மத்திய அரசினுடைய அனுமதி தேவை. பின்தங்கியோர் பட்டியலில் இருப்பவர்களை மிகவும் பின் தங்கியோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதி தேவையில்லை. விதிமுறைகள் குறுக்கிடுவதாகச் சொல்கிறார்கள்.

[1978 மார்ச் 14

எப்பொழுதுமே அதிகாரிகள் அடிக்கடி காரணங்கள் சொல்லி கொண்டுதான் இருப்பார்கள். பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இலாக்காவை நான் கொஞ்ச நாள்— ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது வைத்திருந்த நேரத்தில் எத்தனையோ விதிமுறைகள் சுட்டிக் காட்டப்பட்டன என்றாலும்கூட, " தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டென " புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறியதைப்போல் விதிமுறைகளைத் தூக்கியெறிந்து விட்டு பின்தங்கியவர்களாகவும், மிக்வும் பின்தங்கியவர்களாகவும் மாற்றுகின்ற முறைகள் எடுக்கப்பட்டன. எனவே, அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் அக்கறை காட்டி இதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.30.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அதிகாரிகளைப்பற்றிய அனுபவம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நிரம்ப இருக்கிறது. இந்த 6 மாதத்தில் எனக்கும் கொஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. எனினும் மனம் இருக்குமானால் மார்க்கம் பிறக்கும் என்பதை நான் அறிவேன்.

பாதிரிவேடு பகுதியில் தீண்டாமைக் குற்றங்கள்.

*561 வினா— திரு. வி. ரகுராமன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் (மேற்கு) காஞ்சிபுரம் 'இ4' பாதிரிவேடு காவல்நிலைய எல்லையைச் சேர்ந்த தேர்வாய்—கொள்ளானூர் கிராமங்களில் தீண்டாமை கடைப் பிடிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) 1977, 'மே மாதத்தில் இக்குற்றங்கள் குறித்து எத்தனை புகார்கள் காவல்துறைக்கு கொடுக்கப்பட்டன ?

(இ) எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

(ஈ) வழக்குகள் எந்நிலையிலுள்ளன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) செங்கை மாவட்டம் (மேற்கு), காஞ்சீபுரம் 'இ 4' பாதிரிவேடு காவல்நிலைய எல்லையைச் சேர்ந்த தேர்வாய்—கொள்ளானூர் கிராமங்களில் தீண்டாமை கடைப் பிடிக்கப்படுவது பற்றி அரசுக்கு குறிப்புரை இல்லை.

(ஆ) 1977 மே மாதத்தில் இக்குற்றங்கள் குறித்து இரண்டு புகார்கள் காவல்துறைக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

1978 மார்ச் 14]

(இ) இரண்டு புகார்களில் ஒன்று பொய் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஒரு புகார் மீது மட்டும் குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 7 (1)(டி)இன் படி குற்ற எண். 137/77-ல் மற்றும் 352 இ.பி.கோ.-வில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வழக்கு சி. சி. 521/77-ல் திருவள்ளூர் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றத்தில் பதிவாகி விசாரணையில் உள்ளது

தஞ்சை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டுமனைகள்.

*562 வினா— திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் குடியிருப்பு மனை இல்லாத அரிசனக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்து சரியான விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

(ஆ) அவர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் அரசிடம் உண்டு. 1949 வருடத்திலிருந்து நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31—12—1977வரை, 23.724 வீட்டுமனை பட்டாக்கள் தஞ்சை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-லே எத்தனை பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 1978–79-லே எத்தனை பேர்களுக்கு வழங்க இந்த அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை தஞ்சை மாவட்டத்தில் மொத்தமாக 23,724 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1977-78-லே எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது என்கிற விவரம் இங்கே இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துச் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடையளிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தகவல் வரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்படி அரிசன மக்களுடைய கணக்குகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இல்லை என்ற நிலையா, அல்லது தரக்கூடாது என்று அவர்கள் நினைக்கிறார்களா? இப்படி இருக்கின்ற காரணத்தினால்தான் கும்பகோணத்திலே 1967ஆம் ஆண்டு அரிசனங்களுக்கு வழங்க இருந்த வீடு கட்டும் திட்டத்தை அங்கே வராமலே இருக்கிற அளவுக்குத் தவறுகள் ஏற்பட்டன. எனவே அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக கவனம் செலுத்தி, பல்வேறு இடங்களிலே வீட்டுமனை கட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த அரிசன நல இலாகா அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அரசுக்கு வந்தவுடன், 4—10—1977 அன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரை விவரம் கேட்டோம். 28—11—1977அன்று இலாகாவிலிருந்து மீண்டும் ஒரு தகவல் வந்தது. எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறது என்பதை ஆராய்ந்த பிறகு, மீண்டும் தகவல் கேட்டோம். இதுவரையில் தகவல் வரவில்லை.

இருந்தாலும் அந்த முறைகேடான தகவலை அனுப்பிய அதிகாரி மீது இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறது.

வீட்டு மனைகளை வழங்குவதைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் தீவிரமாக இருக்கிறது என்பதையும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை நல்லமுறையில் கவனிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை ; தஞ்சை மாவட்டம் வெள்ளபள்ளத்தில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டு மனைகளை வசதி படைத்தவர்களுக்குக் கிராம அதிகாரிகள் விற்றது அரசுக்குத் தெரியுமா? ஜாம்புவன் ஓடை, துறைக்காடு; வீரன்வயல், வடக்காடு, கீழ்க்காடு, தில்லை, வெலகாம், தம்பிக்கோட்டை, இந்தப் பகுதிகளிலுள்ள மிராசுதாரர்கள் அந்தப் பகுதியிலே குடியிருக்கக்கூடிய அரிசனங்களிடத்தில் 'இந்த நிலம் எங்களுக்குத் தேவையில்லை'யென்று சோடி எழுதி வாங்கிக்கொண்டு பட்டா கொடுக்கப்படாமல் இருப்பதோடு அந்த நிலங்களில் குடி இருக்கக்கூடிய மக்கள் தென்னை மரம், ஓலை தேங்காய் போன்றவற்றைச் சேகரித்துக் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு வருகிறார்கள். அதைத் தடுத்து, பாதுகாப்பு கொடுத்து, [illegible] அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது எதுவுமே அரசுக்குத் தெரியாது. ஆகவே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து உரிய பதிலை அளிக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், இந்தக் கேள்வி கேட்கப்பட்டு 6 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லையென்ற வகையிலே சொன்னார்கள். இதற்கு இவ்வளவு நாள் காலம் எடுத்துக் கொள்வதற்கு கேள்விகளுக்கு இருக்கிற விதிமுறைகளின்படி இது சரிதானா? இதில் சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகள் மீதும், கீழே இருக்கிற ஊழியர்கள்மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தின் பேரில்தான் இந்த அரசாங்கம் உடனடியாக விளக்கம் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கிய வகுப்பில் எந்த எந்தச் சமூகங்களைச் சேர்ப்பிப்பது என்பதைப் பற்றிய சர்ச்சை இங்கே எழுந்தது. நீலகிரி மாவட்டத்திலே வாழ்கிற படகர் என்று குறிப்பிடுகிற அந்தச் சமுதாயத்தை, பின்தங்கிய வகுப்பில் (திரு. மு. கருணாநிதி : மிகப் பின்தங்கிய வகுப்பில்), மிகப் பின்தங்கிய வகுப்பில்— Most Backward Class சேர்க்கிற உத்தேசம் உண்டா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். அதை நிச்சயம் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Encroachments in Highway at Palani

*563 Thiru S. M. VASAN : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(a) whether the persons occupying the places belonging to the Highways Department in Palani area have been evicted ; and

(b) the number of persons yet to be evicted ?

[1978 மார்ச் 14

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) அங்கீகாரம் பெறப்படாத 111 ஆக்கிரமிப்புளில் 37 ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

(ஆ) எண்ணிக்கை 74 ஆகும்.

திரு. சீ.மு. வாசன் : மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற இந்த அரசு ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, நெடுஞ்சாலை ஆக்கிரமிப்பிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்களில் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால், எவ்வளவு? ஒதுக்கப்படாமல் இருந்தால், ஒதுக்க ஏதாவது நடவடிக்கை அரசின் முன்னால் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைவாழ் மக்கள் மிகுதியாக ஆக்கிரமிப்பு செய்சவில்லை. பெட்டிக் கடை வைத்திருப்பவர்களும், மற்ற வியயாரம் நடத்துபவர்களும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருப்பவர்களும்தான் அதிக ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். குடிசைவாழ் மக்கள் சில பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்ததற்கு மாற்றி இடம் தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் வேறு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

சிங்காநல்லூரில் மேம்பாலம்.

*564 வினா—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் நகரத்தில், ஒண்டிப்புதூரில், திருச்சி செல்லும் நெடுஞ்சாலையின் குறுக்கே ரயில்வே மேம்பாலம் கட்ட அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

1978 மார்ச் 14]

(முற்பகல் 9—40)

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, சிங்காநல்லூர் நகரப் பகுதியில் திருச்சி நெடுஞ்சாலையில் பாலம் கட்டவேண்டியது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். தொழிலாளர்கள் கணிசமான நிறைந்து இருக்கும் அந்தப் பகுதியில் போக்குவரத்து ஏராளமாக இருக்கிறது, பாலம் இல்லாத காரணத்தால் அடிக்கடி ஆக்சிடெண்ட் ஏற்பட்டு உயிர் இழப்பு ஏற்படுகிறது. இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த இடத்தில் பாலம் கட்ட அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர்களே, மேம்பாலம் அப்பகுதியில் அமைக்கவேண்டிய தேவையை ஆராய்ந்து அது பற்றி பரிசிலனையை அரசு மேற்கொள்ளும்.

கைத்தறித்துணிகள் விற்பனை.

*565 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளின் உபயோகத்தை அதிகப்படுத்த சமூக சேவா ஸ்தாபனங்களின் உதவியை அரசு நாடியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) சமூக சேவை நிறுவனங்கள் தங்களது தேவைகளுக்கு கைத்தறித் துணிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட புயல்வெள்ளச் சேதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைத்தறி ஆடைகளை அரசு வாங்கி வழங்கியது போல், பிற சமூக நிறுவனங்களும் வாங்கி வழங்கினவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஆம்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, கைத்தறித் துணி இன்று அதிகமான அளவிற்குத் தேங்கியிருக்கிறது. அந்தத் தேக்கத்தைத் தவிர்க்க, சோசலிச நாடுகளுக்கு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்ய அரசு ஏற்பாடு செய்ய முற்படுமா?

[1978 மார்ச் 14

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, நம்முடைய கைத்தறித் துணிகளுக்கு உலகம் பூராவும் வரவேற்பு இருப்பதால், அத்தனை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் திட்டத்தில் அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, கைத்தறித் துணி, பருத்தி நூல், செயற்கைப் பட்டு ஆகியவைகள் அதிக அளவில் தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக, சின்னாளப்பட்டி செயற்கைப்பட்டு சேலைகள்— என் தொகுதியில் செய்யப்படுபவை— அதிகமாகத் தேங்கியிருப்பதால், அங்கேயுள்ள தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தேக்கத்தை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தேங்கியிருக்கின்ற துணிகளை விற்பனை செய்வதில் அரசு ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது.

திரு. இ. தமிழரசன் : தலைவரவர்களே, நெசவாளர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு, இந்த சமூக சேவா ஸ்தாபனங்களில் இருக்கும் ஊழியர்கள் பகுதி நேர வேலையாட்களாக வந்து, அந்தத் துணிகளை விற்பனை செய்ய, அந்த வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்ய, இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, சமூக சேவா ஸ்தாபனங்கள் அவர்களாகவே முன் வந்து கைத்தறித் துணிகளை வாங்கி விற்கும் முயற்சியில் ஈடுபடுவார்களானால், நிச்சயமாக அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாய்லாந்து போன்ற நாடுகளில் இருக்கும் ஆண்களும், பெண்களும் நம்முடைய நாட்டில் தயாராகும் கைலிகள், புடவைகள் ஆகியவைகளை உடுத்த ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நாடுகளுக்கு நேரடியாக ஏற்றுமதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற பகுதிகளில் நம்முடைய கைத்தறித் துணிக்கு நிறைய செல்வாக்கு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். ஆனால் நேரடியாக அனுப்புவதற்குச் சாத்தியக் கூறுகள் இல்லை. இருப்பினும், நேரடியாக அனுப்பும் முயற்சிகளை இப்போது அரசு ஆராய்ந்து வருகிறது.

1978 மார்ச் 14]

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை விரைவாக விற்க, மக்கள் விரும்பி ஆர்வத்துடன் வாங்க, சிறப்புத் தள்ளுபடி 30 சதவிகிதம் அல்லது 35 சதவிகிதம் என்று தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, ஏற்கனவே நாம் தள்ளுபடி கொடுத்து, தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்து வருகிறோம். இப்போது அகில இந்திய கைத்தறி விழாவை மார்ச்சுத் திங்கள் இறுதியில் கொண்டாட இருப்பதால், அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தங்களிடம் தேங்கிக் கிடக்கும் துணிகளை விற்பனை செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, கைத்தறித் துணியை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் குறைந்த விலையில் கொடுப்பதற்கும், சபாநாயகர் அவர்களுக்கும் கொடுப்பதற்கும், எல்லோருமே கைத்தறித் துணியை வாங்கி உபயோகிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு அறிவிப்பை, அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இப்போது இந்த மாத இறுதியில் கைத்தறி விழா நடைபெற இருக்கிறது. எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தயவு செய்து ஒவ்வொருவருக்கும் ஒரு 5 மீட்டர் துணியை வாங்கிக் கொடுக்கும் அந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, உள்நாட்டைப் பொறுத்தமட்டில் மடிப்பு கலையாத உடைகளையும், வெளி நாடுகளைப் பொறுத்தமட்டில் கசங்கிய உடைகளையும் விரும்புகின்ற காரணத்தால், உள்நாட்டுத் தேவைக்கு மடிப்பு கலையாத துணிகளையும், வெளிநாட்டுத் தேவைக்கு சுருக்கமுடைய துணிகளையும் தயாரிக்கின்ற வகையில் கைத்தறித் துணியின் தயாரிப்பில் மாற்றம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வெளி நாடுகளில் '' ப்ளீடிங் மெட்ராஸ்'', '' ரியல் மெட்ராஸ் ஹான்ட் கர்ச்சீப் '' என்ற வகைகளை அதிகமாக விரும்பி வாங்குகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத்தான் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையான துணிகள் பல கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன ; தனியார் துறையில் இருந்தும் அரசுத்துறையில் இருந்தும் ஏற்றுமதி செய்கிறோம். மடிப்பு கலையாத துணி

உற்பத்தியைப் பற்றிக் கேட்டார்கள், சமீபத்தில் தமிழ்நாட்டில் ''பாலிஸ்டர் சிந்தெடிக்'' என்ற புதிய ரகத் துணியை மார்க்கெட்டில் அறிமுகம் செய்திருக்கிறோம். மற்ற மில்களில் தயாரிக்கும் துணியைவிட இதற்கு விலையும் குறைவு என்ற காரணத்தால் மக்கள் அதிக அளவில் போட்டி போட்டுக் கொண்டு வாங்குகிறார்கள். அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறோம். அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் மாநில அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் கிராமம், நகரங்களிலுள்ள ஏழை எளிய மக்களால் வாங்க முடியாத அளவுக்கு சக்தியற்ற நிலையும், விலையும்தான் காரணம் என்பதை அரசு அறியுமா? அவர்கள் எல்லாம் வாங்கக் கூடிய அளவுக்கு மாநில அரசு மத்திய அரசின் நிதி உதவி பெற்று, இந்த விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கிராமப்புற மக்கள் பொதுவாக வாங்கும் சக்தியை இழந்திருப்பதன் காரணமாகத்தான் இந்திய பொருளாதாரத்தில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவேதான் கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்து, வாங்கும் சக்தியை உயர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அந்த வாங்கும் சக்தி உயரும் சூழ்நிலை வரும் வரையில் எந்த முயற்சியும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, கைத்தறித் துணிகளை விற்பனை செய்கின்ற ஏற்பாட்டில், சேவா ஸ்தாபனங்கள் முன் வருவது பாராட்டுக்குரியது. அதே நேரத்தில் நம் மாநில அரசு ஊழியர்களுக்கு கைத்தறி துணிகளை கடன் தருவதைப் போல தமிழ்நாட்டில் இருக்கிற மத்திய அரசு ஊழியர்களுக்கும் கைத்தறித் துணிகளை கடனாகக் கொடுத்தால் அவர்கள் வாங்கிக் கொள்ள தயாராக இருக்கிறார்கள். மத்திய அரசிடம் கேட்டு அவர்களுக்கு கடன் கொடுத்து, கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, மத்திய அரசுத் துறையில் பணியாற்றுகின்ற குறிப்பாக இராணுவத் துறை, இரயில்வே துறைகளில் இருப்பவர்கள் எல்லாம் கைத்தறித் துணிகளை வாங்க முற்படும் கூற்று உண்மை. அவர்களும் வாங்கி பயன்படுத்தும் அளவுக்கு, நம்முடைய விற்பனையையும் பெருக்கும் அளவுக்கு மத்திய அரசு அலுவலகங்களின் ஒத்துழைப்போடு ஒரு முடிவை எடுத்து, மத்திய அரசை அணுகுவது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் வெற்றி பெறுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிக்கு தனியார் துறையில் உற்பத்தியாகும் துணியைவிட அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம் கூட்டுறவு நூற்பாலைகளில் கொடுக்கும் நூலுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதும், கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு கூலி அதிகமாக கொடுப்பதும்தான். அதனால் தனியாருடன் கூட்டுறவு சங்கம் போட்டி போட முடியவில்லை. அதோடு கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளை கோவாப்டெக்ஸ் மூலம் 60 சதவிகிதம் கொள்முதல் செய்கிறார்கள். 40 சதவிகிதம் தனியார் கொள்முதல் செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ரிபேட் கொடுத்தால்தான் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் துணிகளை விற்பனைச் செய்ய முடியும். என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில்..................
(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது கேள்வியா அல்லது விளக்கமா ? நானும், சீக்கிரம் முடித்துவிடுவீர்கள் என்று இருந்தால் நீங்கள் பேசிக் கொண்டே போகிறீர்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : எல்லாக் கைத்தறித் துணி விற்பனையாளர்களுக்கும் ரிபேட் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, கைத்தறி வார விழாவை ஒட்டி, மேலும் ரிபேட் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு கிட்டத்தட்ட 4, 5 முறை ரிபேட் கொடுத்து, விற்பனை செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிங்காரவாடி நெசவாளர் கூட்டுறவு சங்கம்.

*566 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் உள்ள சிங்காரவாடி நெசவாளர் கூட்டுறவு சங்கம் செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அதை மீண்டும் செயல்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

(இ) எத்தனை ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது?

(ஈ) நெசவாளர்களுக்கு கடன் வழங்க மாற்று ஏற்பாடு ஏதாகிலும் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டிய தவணை கடந்த பாக்கி ரூ. 30,000 கட்ட முடியாத நிலையில் இருப்பதாலும், அங்கத்தினர்களிடம் பாக்கியை வசூல் செய்ய எவ்வித சாத்தியக் கூறுகள் இல்லாததாலும் இச்சங்கத்தை தற்போது புதுப்பித்து செயல்படுத்த வாய்ப்பில்லை.

(இ) இச்சங்கம் 1—7—1974 முதல் செயலிழந்துள்ளது.

(ஈ) இல்லை.

(முற்பகல் 9 50)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே சிங்காரவாடி கிராமத்தில் இருக்கின்ற அத்தனை மக்களும் கைத்தறி தொழிலையே நம்பி இருக்கிறவர்கள். ஆனால் 1974-லேயிருந்து அந்தச் சங்கம் செயல்படவில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து அந்த மக்களுக்கு புத்துயிர் அளிக்கின்ற வகையிலே கடன் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, 103 உறுப்பினர்கள் தான் அந்த சங்கத்திலே ஆரம்பத்திலே இடம் பெற்றிருந்தார்கள். அந்த 103 உறுப்பினர்களும் தொடர்ந்து கோ-ஆப்-டெக்ஸ் மூலமாகவும், மத்திய வங்கி மூலமாகவும் கடன்களைப் பெற்று அச்சங்கத்தை நடத்தி வந்தார்கள். ஆனால் இடையிலே அவர்களால் வாங்கிய அப்பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையிலே அவர்கள் தொடர்ந்து செயல் பட முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். 1974-லே இது பரிசீலிக்கப்பட்டது. 1974-லேயிருந்து அவர்களுக்கு எந்தவித உதவியும் செய்யாமல் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த அரசு வந்து இப்போது மேலும் புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் எங்கெங்கே செயல் இழந்த சங்கங்கள் இருக்கின்றனவோ அவைகளை செயல்படச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்ற சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர் குடும்பங்களுக்கு வங்கியின் மூலம் ஒரு நெசவாளருக்கு ரூ. 300, ரூ. 500 என்று கடன் வழங்கப்பட்டு வந்தது. வாங்கிய அந்தக் கடனை அவர்கள் தற்போது திரும்பச் செலுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு இத்தகைய சூழ்நிலையில் மேலும் கடன் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? மேலும் அவர்களுக்கு உதவுகின்ற வகையில் கடன் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, அரசுத் துறையினுடைய கண்காணிப்பில் இருக்கிற எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நெசவாளர்கள், அவர்களுடைய உற்பத்திக்கும், உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்குமான கோரிக்கைகளோடு கடனுதவி பெற முன்வருவார்களேயானால் கூட்டுறவுத் துறையிலேயிருந்து தக்க உதவி செய்யப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது தனியார் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய நெசவாளர்களைப் பற்றியதாக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசாங்கத்திடம் இல்லை. அப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தாலும் அரசாங்கம் நேரடியாக எதுவும் செய்வதற்கில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, அந்தச் சங்கம் உடனடியாக செயல்பட இயலாவிட்டாலும் பக்கத்திலே நல்லமுறையிலே செயல்படுகின்ற சங்கங்களிலே அந்த கைத்தறி நெசவாளர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்து அவர்களுக்கும் கடன் வழங்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, செயல் இழந்த நிலையிலே இருக்கக்கூடிய சங்கங்களின் பக்கத்தில் நல்ல முறையிலே இயங்கக்கூடிய சங்கங்கள் இருக்குமேயானால் அவற்றோடு இச்சங்கங்களை சேர்ப்பதற்குரிய ஒரு யோசனை அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது. சிறு சிறு சங்கங்கள் செயல்படாமல் இருக்கக்கூடிய நிலையில் இருந்தால் அந்தச் சங்கங்களை எல்லாம் நல்ல நிலையில் இயங்கக்கூடிய சங்கங்களோடு இணைத்து 'அமால்கமேஷன் ஆப் சொஸைட்டிஸ்' என்ற முறையினை நடைமுறைப் படுத்துவதைப் பற்றி அரசு பரிசிலனை செய்துவருகிறது. ஆனால் ஒருவிஷயத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் செயல் இழந்த சங்கங்களின் உறுப்பினர்களாக இருந்து கடன்கள் பெற்று அவற்றைத் திருப்பித் தர இயலாத நிலையில் இருப்பவர்கள் வேறு சங்கங்களிலே சேர்த்துக்கொள்ளப்பட முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 14

கரூரில் உள்ள கைத்தறி நெசவாளர்கள்.

*567 வினா—திரு. கு. ரமணி: மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்ற ஆகஸ்ட் மாதத்தில், கரூர் கைத்தறி நெசவாளர் பிரதிநிதிகளுக்கும், முதலாளிகளுக்கும் மத்தியில் ஏற்பட்ட தொழில் தகராறில் அரசு தலையிட்டு செய்த ஒப்பந்தத்தை முதலாளிகள் மீறியதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை சரிவர அமுல் நடத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைமுன் ஓர் அறிக்கை *வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னபடி வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் கரூரில் இருக்கும்படியான கைத்தறி நெசவாளர்கள் இரண்டுவிதமான ரகங்களை நெசவு செய்வதற்கான உத்தரவாதம் அளிப்பதாக உள்ளது. இவ்வாறு உத்தரவாதம் அளித்தது, பிரமாதமாக தகராறுகள் வருவதற்குக் காரணம் அல்ல. அறிக்கையில் உள்ளபடி பல்வேறு ரகங்களின் நூலை வேறு பக்கத்திற்கு அதாவது விசைத்தறிக்கு கொடுத்து விடுவதாலேயே இந்தமாதிரியான தகராறுகள் வருகின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அப்படியானால் அந்த உத்தரவாதப்படி விசைத்தறிகளில் நெசவு நடைபெறுகிறதா ? அல்லது மாறுபட்ட முறையில் நடக்கிறதா என்பதைத் திட்டவட்டமாக கண்காணிக்க ஆய்வாளர்கள் போன்ற அதிகாரிகளை நியமித்து அதை அமுலாக்குவதில் அரசு சரியான நடவடிக்கை எடுக்குமா ? அப்படியானால் அந்த விசைத்தறிகள் இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: 2/2 ரகங்கள், பீஸாக நெய்கிற படுக்கை விரிப்பு ரகங்கள் போன்றவைகளில் அகலம் 47 அங்குலத்திற்குக் குறைவாக உள்ளது. விசைத்தறியிலும், அகலம் 47 அங்குலத்திற்கு மேலே உள்ளவை கைத்தறியிலும் நெய்ய வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு விதித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் இந்த ரகங்களையும் விசைத்தறிகளில் பயன்படுத்தும் முயற்சிகள் நடக்கின்றன. அதை மறுக்கவில்லை. ஆனால் அப்படி நடைபெற்றுவருவது கடந்த பல ஆண்டுகளாகவே இருந்து வருகிற ஒரு நிலையாகும். இந்த அரசு வந்ததற்குப் பிறகு—மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேள்விப்பட்டிருப்பார்கள்—மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

*493-ம் பக்கத்தில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1978 மார்ச் 14]

இதுபோன்று நடவடிக்கை எடுக்கும்போது அதில் வேலை பார்க்கிற தொழிலாளர்கள் கூட பாதிக்கப்படுகிற அளவிற்கு நாங்கள் என்ன குற்றம் செய்தோம் இவ்வளவு கடுமையான தண்டனை அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு என்று முறையிடும் அளவிற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன.

இதே கேள்வியை இந்தக் கூட்டத் தொடரில் திரு. உமாநாத் அவர்கள் கேட்டபோது கூட, கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறேன். சமீபத்தில் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புகூட பறிமுதல் செய்து வழக்கு போட்டிருக்கிறோம். கரூர், வெள்ளக்கோவில் பகுதிகளில் தனியாக ஆய்வாளர்கள் இருக்கிறார்கள். தொடர்ந்து பறிமுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுத்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: அமைச்சர் அவர்கள் முதலாளிகள் மீது நடவடிக்கைகள் எடுப்பதாகத் தெரிவித்தார்கள். அதைப் பாராட்டுகிறேன். ஆனால் பல்வேறு இடங்களில் கைத்தறி முதலாளிகள் ஒத்துக்கொள்கிற ஒப்பந்தங்களை எல்லாம் தொடர்ந்து மீறுகிற வழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது கரூரில் மட்டுமல்ல. பல்வேறு இடங்களில் கூலியைக் குறைப்பதற்குக் கூட முன்வருகிறார்கள். பல்வேறு இடங்களில் அப்படிச் செய்கிறார்கள். அதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிற முதலாளிகள் மீது அரசாங்கம் தொழில் துறையில் இல்லாவிட்டாலும் சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வழிவகை செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிற நெசவாளர்களுக்குப் இந்தப் பிரச்னை இல்லை. தனியார் துறையில் வேலை பார்க்கிற நெசவாளர்களுக்குத்தான் குறைந்த கூலி கொடுக்கப்படுவதும் சில நேரங்களில் வேலை கொடுக்க மறுக்கப்படுவதும் போன்றவை இருப்பதை அரசு கவனத்தில் கொண்டு அவ்வப்போது பேச்சுவார்த்தை மூலம் அந்நிலை ஏற்படுவதை தவிர்த்துவருகிறோம். இருந்தாலும் சட்டரீதியாக அவர்களுக்கு நியாயமான கூலி கிடைக்க வேண்டும் என்பதற்கு ராஜா சுப்பிரமணியம் குழு அறிக்கையை எல்லாம் பரிசீலனை செய்து நாம் ஒரு குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தை கொண்டுவருவதற்கான முயற்சி குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ரா. மார்க்கபந்து: வழக்கு மன்றங்களுக்குச் சென்று ஒரு தீர்ப்பு வழங்குகிறபோது அதன் மீது ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். அது தீர்க்கப்படுவதற்கு ஏராளமான காலம் ஆகிறது. ஆகவே

வழக்கில் ஈடுபடுகிற காலத்தைக் குறைப்பதற்கு, அப்பெலட் ஸ்டேஜ் என்று சொல்வார்கள் அதைக் குறைக்க வழிவகை செய்யப்படுமா? குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பை அமல் படுத்தாதவர்கள்மீது ப்ராஸிக்யூஷன் நடவடிக்கை போன்றவை எடுத்துக் கொள்ளப்படுமா?

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:</u> கைத்தறியில் நெய்ய வேண்டிய ரகங்கள் என்று ஒதுக்கீடுமுறையில், சில ஒதுக்கிவைத்திருக்கிறோம். அதை விசைத்தறிகளில் செய்கிறபோதுதான் பிரச்னை வருகிறது. அப்படி விசைத்தறிகளில் செய்கிறபோது அந்த விசைத்தறிகளை ஓட்டக்கூடாது என்றோ அல்லது அதற்கு மின் இணைப்பு கொடுக்ககூடாது என்றோ சட்டத்தில் இடமில்லை. ஒதுக்கப்பட்ட ரகங்களை மீறி விசைத்தறிகளில் தயாரித்தால் அந்த ரகங்களை மட்டும் பறிமுதல் செய்து வழக்குபோடுகிறோம். மீண்டும் அப்படிச் செய்தால் பறிமுதல் செய்து வழக்குபோடுகிறோம். இது தொடர்ந்து நடைபெறுகிறது, ஒரு குடைராட்டினத்தில் பயணம் செய்வது போலிருக்கிறது. மத்திய அரசினிடம் கைத்தறிக்கு சில ரகங்களை ஒதுக்கி மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கான பதில் கிடைத்த பிறகு மேலும் துரிதமாக, விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[<u>குறிப்பு :</u> ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2· தகவல் கோரல்.

(அ) அலுவலகங்கள் மூடியிருப்பதால் உறுப்பினர்கள் சம்பளம் வாங்கமுடியாதது குறித்து.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> தலைவர் அவர்களே, இன்றைக்கு 14-ம் தேதி ஆகிறது. இன்னும் என் போன்றவர்கள் சம்பளம் வாங்க முடியவில்லை. எல்லா அலுவலகங்களும் மூடிக் கிடக்கின்றன. இதையெல்லாம் ....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இதைப்பற்றி நீங்கள் திடீரென்று எழுந்து கேட்க முடியாது, தயவு செய்து உட்காருங்கள்.

ஆ) கொடுக்கப்பட்ட வினாக்கள், உரிமைப்பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து

<u>திரு· மு. அரங்கநாதன் :</u> தலைவர் அவர்களே, 11—7—1977 அன்று நான் போட்ட கேள்விக்கு இன்று வரையிலும் பதில் அளிக்கப்படவில்லை. இத்தனை நாட்களுக்குள் கேள்விகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஏதாவது விதிமுறை இருக்கிறதா? அல்லது, எப்போது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று விதிகள் சொல்லுகின்றனவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் எதைப்பற்றிக் கேட்கிறீர்கள் என்பதே எனக்குப் புரியவில்லை. எந்தவிதி மீறப்பட்டிருக்கிறது என்று நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால் நான் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். வேறு ஏதாவது பிரச்சினைப்பற்றிக் கேட்கவேண்டுமென்றால் எனது அறையில் வந்து கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

<u>திரு· மு. அம்பிகாபதி:</u> நேற்று ஒரு உரிமைப் பிரச்சினைப் பற்றிச் சொன்னேன்... அது என்னவாயிற்று என்று தெரியவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அது ஆய்வில் இருக்கிறது.

(திரு எம்.ஏ. லத்தீப் எழுந்திருந்தார்...)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

<u>திரு· எம்· ஏ.லத்தீப்:</u> நாம் எல்லாம் அவசரமாக அறிந்து கொள்வதற்காக அரசின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக பல பிரச்சினைகளை ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் கொடுத்திருக்கிறோம். அவசரமாக இவற்றை எல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தான் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறோம். இவைகளை எடுத்துக்கொள்வதில் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது. அரசின் தரப்பில் காலதாமதம் ஏற்படுகிறது என்றால் தாங்கள் அரசுக்கு அறிவுரை கூற வேண்டும். என் போன்றவர்கள் உடல்நலமில்லாமல் இருந்தும், எங்கே நான் கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டு விவாதிக்கப்பட இருக்கிறதோ என்ற கவலையில் கடமை உணர்ச்சியுடன் இங்கே வந்திருக்கிறேன். ஆனால் இங்கு எந்தத் தீர்மானமும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி உங்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அது தங்களுக்கு வந்து சேருவதில் ஒருவேளை தாமதம் இருக்கலாம். முக்கியமாக அவையில் மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் நேரத்தில் என்னென்ன தீர்மானங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும், எதற்கு அனுமதி மறுக்கவேண்டும் என்று முடிவு செய்யக்கூடிய அதிகாரம் அவைத் தலைவருக்கு இருக்கிறது. எந்த முறையில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கேட்டுத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் என் அறையில் வந்தும் தாங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

திரு மு. அரங்கநாதன்: அதைப்போலவே நானும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி எனது அறையில் வந்து கேளுங்கள்... அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பிரச்சினை தீர்க்கப்படாததும், அவர்கள் உண்ணுவிரதமும், அதனுல் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, பல்லவன் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை கொடுத்துவிட்டு 1978 மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் ஊதிய உயர்வு உட்பட எல்லாக் கோரிக்கைகள் குறித்தும் பேசித் தீர்ப்பதென்று முடிவு செய்தபடி நடவடிக்கை எடுக்க வேண்டியதற்கு மாருகத் தொழிற் சங்கங்களைக் கலக்காமல் ஊதிய உயர்வு போன்ற முக்கியக் கோரிக்கைகளை நீக்கி விட்டதாலும் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் அவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாலும் அவர்கள் மாநிலம் பூராவும் பல ஊர்களில் உண்ணுவிரதம் நடத்தியதுடன் அவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சில தொழிலாளர் சங்கங்கள் பல கோரிக்கைகளை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலும் ஆகஸ்ட் திங்களிலும் எழுப்பின. அந்தக் கோரிக்கைகள் சென்னை தொழிலாளர் துணை ஆணையாளர் முன்னிலையில் சமரசப் பேச்சில் இருந்தது. பேச்சுவார்த்தை முடியு

ஊழியர்கள்
முன்னர் பல்லவன் போக்குவரத்துக் கழக வேலை நிறுத்
27—8—1977 முதல் திடீரெனச் சட்ட விரோதமாக வேலை நிறுத்தம் 27—8—1977
தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தம்
முதல் 3—9—1977 வரை நடந்தது.

நான் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு
வார்த்தைகளில் பயனுகவும் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்
காகவும் 3—9—1977 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழக
நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே உடன்
பாடு ஒன்று ஏற்பட்டு, தொழில் தகராறு சட்டம் 12 (3) பிரிவின்
படி உடன்பாடு ஒன்று என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.
இந்த உடன்பாட்டில் ஒரு சங்கம் அரசாங்கப் போக்குவரத்து
ஊழியர் சங்கம் 11—1—1978 அன்றுதான் கையொப்பமிட்டது.
உடன்பாட்டில் கையொப்பமிட்டோருடன் கலந்து எந்தெந்தப்
பிரச்சினைகளில் இரு தரப்பினரும் கூடிக் கலந்து பேசி முடி
வெடுக்கவேண்டும் என்பதை அரசு நிர்ணயம் செய்யவேண்டு
மென்பது உடன்பாட்டின் ஓர் அம்சமாகும். அரசாங்க போக்கு,
வரத்து ஊழியர் சங்கம் 11—11—1977 அன்று முக்கிய பிரச்சினை
களின் விபரத்தை அனுப்பியது. பல்லவன் போக்குவரத்து ஊழியர்
முன்னேற்றச் சங்கம், பல்லவன் போக்குவரத்துக் கழக
ஜனதா சங்கம், பல்லவன் போக்குவரத்துக் கழக தேசீயப் போக்கு
வரத்துத் தொழிலாளர் சங்கம், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்
எம்பிளாயீஸ் அன்டு ஜெனரல் ஓர்க்கர்ஸ் யூனியன், மதராஸ்
கோச் பில்டிங் பாக்டரி அன்டு டிரான்ஸ்போர்ட் ஓர்க்கர்ஸ் யூனி
யன், தமிழ்நாடு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் மற்றும் சார்ப்ப
ரேஷன் டிராபிக் சூப்பர்வைஸிங் ஸ்டாப் அசோசியேஷன் அடங்
கிய தொழிற் சங்கங்களின் ஐக்கியக் குழு 25—12—1977-ம்
தேதி அன்றுதான் தங்கள் கோரிக்கை மனுவை அரசுக்குக்
கொடுத்தனர். பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக ஊழி
யர் சங்கம் தனது பிரச்சினைகள் அடங்கிய மனுவை 12-1-1978-ம்
தேதி அன்றுதான் அரசுக்கு அனுப்பியது. தமிழ்நாடு அரசுப்
போக்குவரத்துக் கழகம் மற்றும் பொறியியல் மேற்பார்வையா
ளர்கள் சங்கம் தனது கோரிக்கை மனுவை 18—1—1978
அன்றுதான் அரசுக்கு அனுப்பியது. இம்மனுக்களை நன்கு
பரிசீலனை செய்து அரசு தனது 19—1—1978 தேதியிட்ட கடிதத்
தில் இரு தரப்பினரும் கலந்து பேசி முடிவெடுக்கவேண்டிய 12
கோரிக்கைகளை அறிவித்தது. மற்றும் சில கோரிக்கைகளையும்
சேர்த்து விவாதிப்பதற்கான பிரச்சினைகளை விரிவுபடுத்தக்கோரி
ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சில சங்கங்கள் 22—1—1978
அன்றுதான் அரசுக்குச் கடிதம் எழுதின.

இரு தரப்பாரும் 23—1—1978 அன்று முதற் சுற்றுப் பேச்சு
வார்த்தைகளை நடத்தினர். இக்கூட்டத்தில் சி.ஐ.டி.யூ., ஏ.ஐ.
டி.யூ.சி., ஏ.ஐ.எ.டி.எம்.கே. ஆகியவற்றைச் சார்ந்த சங்கங்களே

கலந்துகொண்டனர். இச்சங்கங்களும் ஊதியம், அகவிலைப்படி, விடுப்பு போன்ற பிரச்சினைகளையும் சேர்த்து விவாதிப்பதற்கான பிரச்சினைகளை விரிவுபடுத்தும்படி கேட்டுக் கொண்டன. பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக ஊழியர் சங்கம், அண்ணா தொழிலாளர் சங்கப்பேரவை, தேசீயப் போக்குவரத்து ஒர்க்கர்ஸ் யூனியன், தமிழ்நாடு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அன்டு டிரான்ஸ் போர்ட் கார்ப்பரேஷன்ஸ் டிராபிக் சூப்பர்வைசரி ஸ்டாப் அசோசியேஷன், தொழிலாளர், முன்னேற்றச் சங்கப் பேரவை, பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கம், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் போர்ட் எம்ப்ளாயீஸ் மற்றும் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், பல்லவன் போக்குவரத்துக் கழக தேசீய ஒர்க்கர்ஸ் காங்கிரஸ் அன்டு மெட்ராஸ் கவர்ன்மென்ட் கோச் பில்டிங் பேக்டரி அன்டு டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் சங்கங்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளவில்லை.

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் 30—1—1978 அன்று நடந்தன. இந்தப் பேச்சுவார்த்தையிலும் முன் கூறிய சங்கங்களில் மதராஸ் கவர்ன்மென்ட் கோச் பில்டிங் பேக்டரி யூனியன் டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் தவிர மற்ற சங்கங்கள் எதுவும் பங்கு பெறவில்லை.

19-1-1978 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 12 பிரச்சினைகளைத் தவிர மேலும் இருதரப்பினரும் ஏதாவது பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் முடிக்க வேண்டுமென்று தீர்மானித்தால் அவற்றையும் பேச்சுவார்த்தைக்காக எடுத்துக் கொள்ளலாம் என்று 10—2—1978 தேதியிட்ட கடிதத்தில் அரசு நிர்வாகத்தினருக்கு அறிவித்தது.

திரு. ரெங்கராஜன் குமாரமங்கலத்தைத் தங்களைச் சந்திக்கும்படி நிர்வாகத்தினர் 21—2—1978 அன்று கேட்டுக் கொண்டனர்.

ஆனால், அவர் அரசின் 10—2—78 தேதியிட்ட கடிதம் தங்களுக்கு நேரிடையாகக் கிடைக்கப்பெறாததால் 16—2—1978 அன்று பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை என்று பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரிடம் சொன்னார். மேற்குறித்த கடிதம் நேராக அவர்களுக்கு வந்திருக்குமாயின் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருப்பார்கள் என்றும் சொன்னார். 10—2—1978 தேதியிட்ட அரசுக் கடிதத்தின் பொருள் 23—2—1978 அன்று எல்லாச் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது. முன்னால் நடந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளாத சங்கங்களை 25—2—1978 அன்று நடக்கவிருந்த அடுத்த சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ளும்படி நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டனர். ஆயினும் எந்தச் சங்கமும் பேச்சுவார்த்தைக்கு ரவில்லை.

25—2—1978 அன்று எனக்கு, நடவடிக்கைக் குழு தலைவரான திரு எஸ். சி. சி. அந்தோனிப் பிள்ளை அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அவர் தனது 23—1—1978 தேதியிட்ட கடிதத்தில் கண்டுள்ளபடி எல்லா கோரிக்கைகளையும் நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளுமா என வினவினார். பின்னர் 6—3—1978 அன்று இக்குழுவினர் போக்குவரத்துச் செயலாளரைச் சந்தித்தனர். அவர்கள் பேச்சுவார்த்தையில் தங்களது 35 கோரிக்கைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். இந்த வேண்டுகோளையும் அரசு பரிசீலனை செய்தது. ஊதிய அமைப்பு, அகவிலைப்படி போன்றவற்றில் தொழில் தகராறுகள் சட்டம் 12 (3), 18 (1) பிரிவுகளின்படி ஒப்பந்தங்கள் நடைமுறையிலுள்ளன. சட்டரீதியான அவைகள் சட்டப்படி ரத்து செய்யப்படுகிறவரை இருதரப்பினரையும் அந்த ஒப்பந்தங்கள் கட்டுப்படுத்தும். மேற்சொன்ன ஒப்பந்தங்களின்கீழ் உள்ள உரிமைகளை நிலை நிறுத்துவதற்குள்ள உரிமை இரு தரப்பினரையும் பாதிக்காவண்ணம் ஊதிய அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு போன்றவற்றில் உடன்பாடுகள், முடிவுகள் காணும் நோக்கில் பேச்சு வார்த்தைகள் நடத்தலாம் என்று அரசு 9—3—1978 அன்று பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அறிவித்துள்ளது. இந்தப் பேச்சு வார்த்தைகள் 31—3—1978-க்குள் முடிக்கப்படவேண்டுமென்பது இருதரப்பினரும் ஏற்றுக்கொண்ட உடன்பாட்டின் மற்றொரு அம்சமாகும்.

அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இன்று நடக்க இருக்கிறது. இதனிடையில் திரு எஸ். சி. சி. அந்தோனிப் பிள்ளையின கையெழுத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகச் சங்கங்களின் ஐக்கிய முன்னணி 11—3—78 தேதியிட்ட கடிதத்தை அனுப்பியுள்ளது. அக் கடிதத்தில் நலனெண்ணத்தோடு பணி நிபந்தனைகளிலுள்ள கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, பலன் அளிக்காத விதத்தில் நுட்ப காரணங்களை விலக்கி, எல்லாக் கோரிக்கைகளையும் பேசித் தீர்வு காணவேண்டுமென்று நிர்வாகத்தினரைக் கேட்டுக் கொள்ளுமாறு அரசிடம் விண்ணப்பித்துள்ளார்கள்.

பேச்சுவார்த்தைக்கான பிரச்சினைகள் எவையென முடிவு செய்தபின்னும் சில சங்கங்கள் தங்களது கோரிக்கைகள் முழுமையும் பேச்சுவார்த்தைப் பட்டியலில் இடம் பெறவில்லை எனக் கூட்டத்தில் கலந்துகொள்ள முன்வரவில்லை. இந்த முடிவு 3—9—1977 ஒப்பந்தத்திற்குப் புறம்பானதாகும். ஏனெனில், அந்த ஒப்பந்தப்படி பிரச்சினைகளை நிர்ணயிக்கும் உரிமை அரசைச் சார்ந்ததே. இருந்தபோதிலும் சங்கங்களின் விருப்பத்திற்கேற்ப எல்லாப் பிரச்சினைகளையும் விவாதிக்க அரசு அனுமதித்திருக்கிறது. எனவே, பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று நல்லதோர் முடிவு விரைவில் கிட்டும் என அரசு நம்புகிறது.

பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் பிரச்னை தீர்க்கப் படாததும் அவர்கள் உண்ணாவிரதமும், அதனால் ஏற்பட்ட பதட்ட நிலையும் குறித்து

[1978 மார்ச் 14

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெற்ற வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எப்படியாகிலும் ஆகட்டும். எப்படியானாலும் இறுதியில் அது ஒரு ஒப்பந்தத்திலே முடிவுற்றது. 3–9–1977, 11–9–1977 ஆகிய தேதிகளில் ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தப்படி இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட சங்கங்களைக் கலந்துகொண்டு தான் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளுக்கான பிரச்சினைகள் நிர்ணயம் செய்வது என்று அந்த ஒப்பந்தத்திலே இருந்தாலும், அதை விலக்கிவிட்டு, போக்குவரத்துச் செயலாளர் அவர்களும், போக்குவரத்துக் கழகமும் தன்னிச்சையாக இன்னதுதான் பேச வேண்டுமென்று கூறி சுற்றறிக்கை அனுப்பியதன் காரணமாகத்தான், பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அந்தச் சங்கங்கள் வரவில்லை என்பதும், இறுதியாக இப்படிச் செய்தால் தான் வருவோம் என்று சொன்ன பிறகு தான் 21-ல் அப்பேர்ப்பட்ட சுற்றறிக்கை எல்லா சங்கங்களுக்கும் போயிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

(முற்பகல் 10–10)

இப்படி நிபந்தனைபோட்டுப் பேச்சுவார்த்தைகளுக்குக் கூப்பிட்ட காரணத்தால்தான் அவர்கள் வரவில்லை. ஆச, மார்ச் 31ஆம் தேதிக்குள் இந்தப் பிரச்சினை முடிக்கப்பட வேண்டும். அதற்குள் அவசரமாக முடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்ன? ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளை நீக்கிவிட்டார்களே; அது சம்பந்தமாக நிபந்தனை இல்லாமல் பேசுவதற்கு அரசு உத்தரவுகள் அனுப்புமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆகஸ்டு மாதம் நடந்த பல்லவன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் போராட்டத்தின் போது சில அம்சங்களை, சில கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகச் சங்கம் போன்றவைகள் அன்று கோரிக்கைகளை எங்களுக்குத் தரவில்லை. பின்னர் தருவதாகக் கூறினார்கள். 11–1–1978 அன்றுதான் சி.ஐ.டி.யூ. சங்கம் உடன்பாட்டில் கையெழுத்திட்டது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மற்றும் ஐக்கிய சங்கங்கள் தங்கள் இறுதிக் கோரிக்கையை 21--1-1978 அன்றுதான் நிர்வாகத்திற்குத் தந்தது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அரசைப் பொறுத்தவரை அவர்கள் கேட்ட அவ்வளவு கோரிக்கைகளையும் பரிசீலிப்பதற்கு ஒப்புக் கொண்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோயால் ஆடு, மாடுகள் இறந்தது குறித்தும் நிவாரண நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருவார காலமாக ஆடு, மாடுகள் கோமாறி என்ற கொடுமையான தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கில் இறந்து சேதமடைந்துள்ளன. இன்னும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்காததால் அப் பகுதியில் பதட்ட நிலை நிலவுவது குறித்து மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, திரு. துரை முத்துசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் பின்வரும் பொருள் குறித்து அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துள்ளார்.

"தென்னாற்காடு மாவட்டத்தில் ஒரு வார காலமாக ஆடு. மாடுகள் கோமாறி என்ற கொடுமையான தொத்து வியாதியால் பாதிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கில் இறந்து சேதமடைந் துள்ளது. இன்னும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்காததால் அப் பகுதியில் பதட்ட நிலை நிலவுவது குறித்து"

இது குறித்த நிலைமையை விளக்க நான் இப்பொழுது முற்படுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கோமாறி நோய் ("கானை" என்றும், "வாய்நோய், கால் நோய்" என்றும் ஆங்கிலத்தில் "Foot and Mou h disease" என்றும் அழைக்கப்படும்), கடந்த இரண்டு மாதங்களாக பரவலாக இருந்து வருகின்றது.

இதுவரை சுமார் 159 மாடுகளுக்கு இந்நோய் தாக்கி அதில் 9 மாடுகள் இறந்ததாக அறிக்கை வந்துள்ளது.

கால்நடை வளர்ப்புத் துறையினர் தகுந்த தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். நோய் வந்த மாடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கோமாறி நோய் கால்நடைகளுக்கு எல்லாக் காலங்களிலும் தோன்றக்கூடியது. இந்த வியாதி வந்த நாட்டு மாடுகளுக்கு உயிர்ச் சேதம் அதிகமாக ஏற்படுவதில்லை. ஆனால், மேல் நாட்டு பசுக்களோ, கலப்பின மாடுகளோ தாக்கப்பட்டால், சில இறக்கக் கூடும். ஆகையால் கலப்பினப் பசுக்கள் வைத்திருக்கும் பண்ணையாளர்கள், அப்பசுக்களுக்குத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கலப்பின மாடுகளுக்கு தடுப்பு ஊசி ஒரு முறை போட்டுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள ஒரு முறையும், அதன் பின்னர் ஆண்டுக்கு ஒரு முறையும் தடுப்பு ஊசி போட வேண்டும்.

வெக்கை நோய், தொண்டை அடைப்பான், சப்பை நோய் போன்ற தொற்று வியாதிகளுக்குத் தடுப்பு ஊசி இலவசமாகப் போடப்படுகிறது.

ஆனால் கோமாறி நோய் தடுப்பு மருந்து, தற்சமயம உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள மத்திய அரசுக்கு உரிமையான கால் நடை மருத்துவ ஆராய்ச்சி நிலயத்திலும் மற்றும் ஓர் தனியார் நிறுவனத்திலும் மட்டுமே இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது.

ஒருமுறை உபயோகப்படுத்தும் மருந்தின் விலை ரூ. 8.00 ஆகும்.

தற்போது, பால் பண்ணையாளர்களுக்கு, கோமாறி நோய் தடுப்பு ஊசி மருந்தின் செலவின் பளுவைக் குறைப்பதற்காக மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து ஒரு திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. இத்திட்டம் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் உதகை பகுதிகளிலும் 7.20 இலட்சம ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஊசி மருந்தின் விலையில் 50 சதவீதம் கால்நடைகளின் சொந்தக்காரரும் மறற 33-1/3 சதவீதத்தினை மத்திய அரசும், 16-2/3 சத வீதத்தினை மாநில அரசும் ஏற்கிறது. மேற்குறித்த திட்டத்தினை, மற்றப் பகுதிகளுக்குப் படிப்படியாகச் செயல்படுத்துவதற்கு, கால் நடை பராமரிப்புத்துறை இயக்குநர் ஆய்வு செய்து வருகிறார்.

இந்த கோமாறி நோய் தடுப்பு ஊசி மருந்து தமிழகத்திலேயே தயாரிப்பதற்கும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

தற்பொழுது தென்னாற்காடு மாவட்டத்தில் கால்நடை நோய் தடுப்புப் பணிகளைத தீவிரப்படுத்துவதற்காக ஒரு பிரத்தி யேகக் குழு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. துரை முத்துசாமி : இந்த மருந்துகள் இல்லாததால், வருவதுல் காலதாமதம் ஏற்பட்டதால் இத்தனை ஆடுமாடுகள் இறந்திருக்கின்றன. இராணிப்பேட்டையில் நம்முடைய அரசாங் கத்தின் மூலமாகச் செய்யப்படுகிற மருந்து எதற்காகப் பயன் படுத்தப்படுகிறது ? மேலும் ஆடு மாடுகள் செத்து விவசாயிகள் ஆடு மாடுகளை இழந்திருக்கும் காரணத்தால் அவர்கள் மீண்டும் ஆடு மாடுகளை வாங்கக் கடனும், மானியமும் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதுபற்றி அரசு ஆராய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி : இராணிப்பேட்டையிலே செய்யப் படுகிற மருந்து எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இராணிப்பேட்டை யிலே செய்யப்படுகிற அந்த மருந்து தொண்டை அடைப்பான் நோய்க்கும், வெறி பிடித்த நாய் கடித்தால் அதைத் தடுக்கக் கூடிய அளவிற்கு ஒரு ஊசியே அந்த நாய்க்குப் போட்டால் வெறிபிடிக்காத அளவிற்குத் தடுப்பு ஊசிகள் தயாரிக்கப்படு கின்றன.

4. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின பரிந்துரையினமேல், கீழ்க்கண்ட தீர் மானத்தை முன்மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, 'மதுவிலக்கு அமலில்' நடைபெறும் ஊழல்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 65, 75,000இல் ரூ 100 குறைக்கவேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாத நிலையைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 65,75,000இல் ரூ. 100 குறைக்கவேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,13,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, எல்லா விற்பனைப் பொருள்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்காதது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும்' ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,13,41,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி ரூபாய்க்கு 4 பைசா வசூலிப்பதை நிறுத்துவதாக அரசு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,13,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு திட்டமிடாதது குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,13,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, விற்பனை வரி அதிகாரிகள், சில்லறை வியாபாரிகளை, வரி வசூல் என்ற பெயரால் தொந்தரவுக்குள்ளாக்குவதைக் குறித்து விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,13,41,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. A. LATHEEF; Sir, to discuss about the serious implications of the tax enhancements on soap, leather (Hides and Skins), etc., and the need to revise the same, I move—

"That the allotment of Rs. 6.13,41,000 under Demand No. 4-General Sales Tax and other Taxes and Duties—Administration be reduced by Rs. 100/'.

(இ) கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 71,93,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் ரூ. 100க்கு வாங்க வேண்டுமென்றால் கூடுதல் தொகைக் கொடுத்து வாங்கும் நிலையை மாற்ற வேண்டுமென்பதைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,93,000 —இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, நில உச்சவரம்புச் சட்டத்தின் காரணமாக கிரயப் பத்திரங்கள் விற்பனையாகாமல், அரசு வருவாய் குறைவதைப்பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 71,93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் விற்பவர்கள் பெரும்பகுதி அதிக விலைக்கு விற்பதைத் தடுத்து நிறுத்துவது குறித்து விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.71,93,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M.A. LATHEEF; Sir, tc discuss about the need to ensure sufficient and timely supply of stamps, I move—

"That the allotment of Rs. 71,93,000 under Demand No. 5. Stamps—Administration be reduced by Rs.100/-"

(ஈ) கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முனபணங்களும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின பரிநதுரையின மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 86,82,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'.

(முற்பகல் 10-20)

திரு. பெ.சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, சிறிய விவசாயிகளின அரசுக் கடனைத் தள்ளித்தரக் கோரி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 86,82,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, கிராம விவசாயிகளுக்குக் கொடுத்துள்ள கடனை வசூலிக்க கெடுபிடி செய்வதைக் கைவிட வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 86,82,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, நான் அவையிலே தாக்கல் செய்த அத்தனை மானியக் கோரிக்கைகளைப் பற்றிய விளக்க உரைகள் புத்தக வடிவில் அச்சிடப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் நான் படித்ததாக நீங்கள் ஏற்றுக்கொண்டு குறிப்பேட்டிலே இடம் பெறச் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழைகிறேன்.

நம்முடைய அரசு கொடுத்திருக்கின்ற குறிப்புகளிலேயிருந்து பார்க்கும்பொழுது ஆயத் தீர்வை ஒரு காலத்தில் அதிக வருவாய் பெறக் கூடிய இலாக்காவாக இருந்து, இன்றைய தினம் மிகக் குறைவான வருவாயைப் பெற்றுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தினுடைய மதுவிலக்குக் கொள்கையினால் இன்றையதினம் நாம் பெரிய வருவாயை இழந்து இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்திலும், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் பிறந்த தமிழ் மாநிலத்திலும் மதுவிலக்கை அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இந்தியப் பிரதமரானாலும், மத்தியத் தலைவர்களானாலும் அவர்களெல்லாம் இந்த மது விலக்குக் கொள்கையை இந்தியா பூராவும் அமல்படுத்த வேண்டுமென்ற கொள்கையைப் பல்லாண்டுக் காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். நமக்கும் அதிலே கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால் நம்முடைய மாநிலத்தில் இந்த மது விலக்குக் கொள்கையை நாம் நல்லமுறையில் அமல்படுத்தினாலும் அண்டைய மாநிலங்களிலே மதுவிலக்குத் திட்டம் அமலில் இல்லாத காரணத்தினால் நம்முடைய அரசு இன்றையதினம் பெரிய வருவாயை இழந்தும், அந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல் படுத்த முடியாத ஒரு நிலைமையும் தமிழகத்திலே இருந்து வருகிறது என்பதை உங்கள் மூலமாக இந்த அரசுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

*494—529ம் பக்கங்களில் இணைப்புகள், III, IV, V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1978 மார்ச் 14

மதுவிலக்குத் திட்டத்தை ஒத்திவைத்த நேரத்திலே இரண்டு மூன்று மைல்களுக்கு ஒரு கடைதான் இருந்து வந்தது. ஆனால் இன்றையதினம் கிராமங்களிலே பார்த்தால் ஒவ்வொரு கிராமத்திலும் மூன்று, நான்கு இடங்களிலே கள்ளச் சாராயமும், கள்ளுக் கடைகளும் இருக்கின்றன என்பதை நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் இதை அதிகப்படுத்திச் சொல்லவோ அல்லது இந்த அரசாங்கத்தின் மீது குற்றச் சாட்டாகச் சொல்லவோ விரும்பவில்லை. இருந்தாலும், இன்றையதினம் கிராமங்களில் இருப்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

இன்றையதினம் நம்முடைய அரசாங்கம் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே மதுவிலக்கை அமல் படுத்துவதற்காகத் தனியாக மாவட்ட அளவிலே போலீஸ் அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதிலே டெபுடி சூப்பிரண்டென்டெண்ட் ஒருவர், இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் இருவர், தலைமைக் காவலர் இருவர், காவலர்கள் இருபது பேர் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டம் போன்ற பெரிய மாவட்டத்தில், வேலூரிலிருந்து ஏறக்குறைய ஐம்பது மைல் சுற்றளவிற்கு அந்த மாவட்டம் பரந்து இருக்கிறது. அந்த மாவட்டத்தில் இந்தக் குறைந்த அளவிலே இருக்கின்ற காவலர்களை வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்தை நல்லமுறையிலே செயல்படுத்த முடியுமா என்பதை அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

அதேநேரத்தில் ஆங்காங்கு இருக்கின்ற காவலர்கள் இதைக் கவனித்தாலும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு சமயங்களில் இருக்கின்ற காரியங்களையும் அவர்கள் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இன்றையதினம் அவர்கள் ஏதோ ஒருநாள் கிராமங்களிலே சுற்றிப் பல்வேறு வழக்குகளை அவர்கள் தொடுத்தாலும் இன்றையதினம் விற்பவர்கள் மீது அல்லது குடிப்பவர்கள் மீது கொடுக்கப்படுகின்ற தண்டனை மிகக் குறைவாக இருக்கிறது.

நம்முடைய முதலமைச்சரவர்கள் மது விலக்கைத் தீவிரமாக அமுல் நடத்த வேண்டுமென்று கொண்டிருக்கிற நல்லெண்ணத்தை நான் வரவேற்கிறேன். தீவிரமாக அமுல் நடத்த வேண்டுமென்கிற அவருடைய நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. ஆனால், நிர்வாகத்திலே எங்கோ இருக்கிற சீர்கேட்டை நாம் செப்பனிட்டாக வேண்டும், இந்தத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமானால் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் மெத்தப் பணிவாக அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1978 மார்ச் 14] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

ஏற்கனவே, நடந்த சட்டமன்றக் கூட்டத்திலே கூட நம்முடைய முதலமைச்சரவர்கள் அதற்கான சட்டத்தை விரைவிலே கொண்டு வர இருக்கிறேன் என்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் நல்லமுறையிலே செயல்பட வேண்டுமேயானால் அப்படிப்பட்ட சட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்திலே நான தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கம் கொடுத்திருக்கிற அறிக்கையிலேகூட சதாசிவம் குழுவினர் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே, பிரச்சாரக் குழுக்களைப் பல மட்டங்களிலே அமைத்து, நல்லமுறையிலே சமுதாயத்திலே இருக்கிற மக்கள் திருந்துவதற்குப் பிரச்சாரத்திலே ஈடுபட வேண்டுமென்று அந்த அறிக்கையிலே கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய பணிவான வேண்டுகோள், அந்தக் குழுக்கள் நியமிக்கப்படுகிற காலத்திலே, அதிகமான தாய்மார்களை அந்தக் குழுக்களிலே நியமிக்க வேண்டுமென இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் மதுவிலக்கை மீறுகிற குற்றத்திலே, அதிகமாக ஈடுபடுகிறவர்கள் சமுதாயத்திலே ஆண்கள்தான்; அவர்கள்தான் மதுக் குற்றத்திலே அதிகமாக இருக்கிறார்கள். அதனால், குடும்பங்களிலே பாதிக்கப்படுபவர்கள் தாய்மார்கள் தான என்பதை நாம் நன்றாக அறிவோம். ஆகவே, படித்த தாய்மார்களை, அல்லது நல்லமுறையிலே எடுத்துச் சொல்கிற தாய்மார்களை அந்தக் குழுக்களிலே போட்டு, நல்ல முறையிலே பிரச்சாரம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அரசாங்க அதிகாரிகள் இப்படிப்பட்ட மது விலக்கு மீறிய குற்றத்திற்கோ அல்லது அப்படிப்பட்ட தவறான காரியங்களிலோ ஈடுபடுகிறவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, தனியாகவே, அதற்காக ஒரு விதி இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன், மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன், எந்த முறையிலே இந்தக் குற்றத்திலே ஈடுபடுகிறார்கள் அல்லது தவறான காரியங்களிலே ஈடுபடுகிறார்கள் என்பதைக் கண்காணிக்கிறது அரசு என்பதைச் சொல்ல வேண்டும். அப்படிக் கண்காணிப்பதாக இருந்தால், இந்தச் சட்டமன்றம் துவங்கிய பிறகு, இதுவரையில் எத்தனை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டுமென நான் மெத்தப் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மது அருந்துபவர்களுக்கு ஏற்கனவே முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கத்திலே மது பர்மிட்டுகள் வழங்குகின்றபொழுது கொஞ்சம் கடுமையாக நடந்து மிகக் குறைவான மது பர்மிட்டுகளைத்தான வழங்கி வந்தார்கள். ஆனால், ஆளுநருடைய ஆட்சியினபொழுது அந்த மது பர்மிட் வழங்குவது சுலபமாக்கப்பட்டு, ஏராளமான மது பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இன்றைய தினம் நம்முடைய புதிய அரசு அதை மிகக கடுமையாககியிருக்கிறார்கள், நான் வரவேற்கிறேன். ஆனால், அதிலே சொல்லியிருக்கிற ஒரு நிபந்தனை—மது பர்மிட் புதிதாகப் பெற வேண்டுமேயானால், அல்லது ஏற்கனவே, மது பர்மிட் பெற்றவர்கள் அதனை புதுப்பிக்க வேண்டுமானாலும் அவர்களுடைய வயது 45-க்கு மேல் இருக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை அதிலே சேர்த்திருக்கிறார்கள். நான் அரசாங்கததைக் கேட்டுக்கொளகிறேன், ஏற்கனவே, ஒருவர் 30-வது வயதிலேயிருந்து மது பர்மிட்டை வைத்துக் கொணடு 10 ஆண்டுக்காலம், 5 ஆணடுக்காலம் அந்தப் பழக்கத்திலே ஈடுபட்டிருப்பவர் இப்பொழுது பர்மிட்டுடைய காலம் முடிந்து இந்தச் சட்டம் வநத பிறகு, அவருடைய பர்மிட்டைப் புதுப்பிக்க அரசாங்கத்துற்கு விண்ணப்பித்திருக்கிறார். ஆனால், அரசாங்கம், உங்களுக்கு 45 வயதாகவல்லை என்று தள்ளி விடுமானால், 10 ஆண்டுக்காலம் அந்தப் பழக்கத்திலே ஈடுபட்ட ஒருவர், வசதி வாய்ப்பு உள்ளவர், இன்றையத் தினம் அந்தப் பழக்கத்தை விட்டுவிடுவார்கள் என்று அரசாங்கம் எண்ணுகிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

அப்படி நீங்கள் பர்மிட்டைப் புதுப்பிக்கத் தவறி விடுவீர்களானால், சட்டத்தை மீறி, அரசாங்கத்திற்கு எதிராக, அவர்கள் மது அருந்த நாம் வாய்ப்பை ஏற்படுத்துகிறோம் என்பதை அரசாங்கத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாங்கம், பொதுவாக, பர்மிட் கொடுப்பவர்களுக்கு வேண்டுமானால் இந்த 45 வயதை வைத்துக் கொள்ளலாமே தவிர, ஏற்கனவே, 10 ஆண்டுக்காலம், 5 ஆண்டுக்காலம் பர்மிட் வைத்திருப்பவர்களுக்கு இந்த வயதைத் தளர்த்தி, அவர்களுக்கு பர்மிட் அளிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30.)

அதே நேரத்தில் ஏற்கனவே மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்ட நேரத்தில் முன்னால் உரிமம் பெற்றிருந்தவர்கள் அதிகமாகப் போட்டிருந்ததன் காரணமாக ஏராளமான தொகைக்கு குத்தகை எடுத்து நடத்த முடியாமல் அதிக நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களிலே பலபேர்கள் அரை மாதம் ஒரு மாதம் கிஸ்தியைக் கூட அவர்கள் கட்டவேண்டிய தொகையினை கட்டி

கருணை மனுவின் மூலமாகத் தள்ளுபடி பெற்றுள்ளதாகவும், கட்டாமல் இருந்தவர்கள் அந்தச் சட்டம் காலாவதியானதால் வழக்கு மன்றங்களிலே ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள் என்றும் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வரவேண்டியிருககிறது என்றும் அரசாங்கக் குறிப்பிலே தந்திருக்கிறார்கள்.

நான் இந்த அரசாங்கத்திற்கு மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்வேன், ஏற்கனவே பல ஏழை எளிய விவசாயிகள், இதிலே பல்வேறு அரிசன மக்கள் கூட எடுத்து, நடத்தினால் ஏராளமான லாபம் பெறலாம் என்று ஏலத்தைக் கேட்டுவிட்டு, முதல் பணத்தைக்கூட கட்டமுடியாமல் கடனை வாங்கியும் நடத்த முடியாத நேரத்தில், அரசாங்கம் வேறு நபர்களுக்கு அந்தக் கடைகளை ஏலம் விட்டு விட்டாலும், அரசாங்கத்தினுடைய அந்த நல்ல திட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, விதிவிலக்கு பெறாமல் பலபேர்கள் தவறிவிட்டார்கள். அப்படிப்பட்ட ஏழை எளியவர்கள் கணக்கையாவது இந்த அரசாங்கம் எடுத்து அவர்கள் தவறிவிட்டு இருந்தாலும் அவர்களுடைய குடும்பத்தின் நன்மையைக் கருதி அந்தத் தொகையைத் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று அரசாங்கத்தை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து முத்திரைத்தாள்களைப் பற்றி இந்த மானியக் கோரிக்கையில் வந்திருக்கிறது. இன்றைய தினம் விவசாயிகள் அல்லது வியாபாரிகள் போன்றவர்கள் முத்திரைத் தாள்கள் வேண்டும் என்று சொல்லுகிற நேரத்தில் அவர்களுக்கு அந்தத் தாள்கள் கிடைப்பதில்லை. அதை நம்முடைய அரசாங்கம் கவனித்து வேண்டிய அளவுக்கு முத்திரைத் தாள்களை அதிகமான அளவிலே கஜானாவிலே இருப்பு வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு ஸ்டாம்ப் வெண்டார்கள் முத்திரைத் தாள்களைக் கேட்கிறபோது கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களை நம்பியுள்ள விவசாயிகள், வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நம்முடைய அரசாங்கம் வேண்டிய அளவுக்கு அந்த முத்திரைத் தாள்களை அடித்துத்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தக்காவிக் கடன்கள். இன்றைய தினம் அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற தக்காவிக் கடன்களை, கடும் வரட்சியின் காரணமாக அல்லது பல்வேறு காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிற கடன்களை வசூலிக்கும்போது அந்த ஒத்தி வைக்கப்பட்டு இருந்த காலத்திற்கும் அபராதம் வசூலிக்கிறார்கள். நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், தனிப்பட்டவர்கள்கூட இப்போது கடன்களை வட்டியில்லாமல் கொடுத்தால் கூட வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். எனவே,

அரசாங்கம் வட்டியைத் தள்ளுபடி செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதே போன்று ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் போன்ற ஸ்தாபனங்கள் விவசாயிகளுக்கு அரசாங்கக் கடன் கொடுத்திருக்கிறது. அவைகள் அபராதத் தொகை வசூலிக்கிறார்கள். அந்த அபராதத் தொகையை நகராட்சிகள், பேரூராட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சி மன்றங்கள் அதிலிருந்து கிடைக்கும் வருவாயை அரசாங்கத்திற்குத் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்காரிடத்திலே கடன் வாங்குகிற நம்முடைய அரசாங்கம் அங்கே வட்டியை வாங்கவேண்டாம் என்று சொல்கிறதே தவிர, தன் கீழ் உள்ள ஊராட்சி மன்றங்களிடம் வட்டி வாங்குவது நியாயம் அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விற்பனை வரித்துறையைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது என்றாலும் விவசாயிகள் வாங்குகின்ற பொருள்களுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மின்சார மோட்டார், ஆயில் இன்ஜின், மின்சார மோட்டாருக்குத் தேவையான உபகரணங்கள் இப்படிப்பட்ட, விவசாயிகள் உபயோகப்படுத்துகின்ற பொருள்களுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏராளமான வியாபாரிகளிடமிருந்து விற்பனை வரி வசூலிக்கப்படாமல் இருக்கிறது. ரூபாய் 100, 200 என்ற அளவில் விவசாயிகளிடத்தில் வரி பாக்கியிருந்தால், உடனடியாக ஜப்தி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிடும் அரசாங்கம், லட்சக் கணக்கான ரூபாய் அளவிற்கு வியாபாரிகளிடமிருந்து விற்பனை வரி வசூலிக்காமல் இருப்பது நியாயமல்ல. ஆகவே, விரைவான நடவடிக்கைகள் எடுத்து அவற்றை வசூல் செய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டு, சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கும் மூன்று மானியக் கோரிக்கைகளை ஆதரித்து, அவற்றின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கு. ஆயத்தீர்வை பற்றி கொடுத்து இருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால் முன்பு இருந்த அரசாங்கம் அந்த மதுவிலக்கு ஆயத் தீர்வையில் வரக்கூடிய பாக்கிகளை வசூல் செய்யாமல் விட்டு இருக்கிறது என்று தெரிகிறது. அப்போது போடப்பட்ட தீர்வுகள் இன்றும் வசூலிக்காமல் பெண்டிங்காக இருக்கிறது.

யார், யார் எங்கெங்கே கட்டாமல் இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எங்களுடைய மாவட்டத்தில் பல பேர் கட்டாமல் இருக்கிறார்கள், குறிப்பாக, என்னுடைய அரக்கோணம் தொகுதியிலே ஏகப்பட்டபேர் கட்டாமல் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானம் காலதாமதம் இல்லாமல் வசூலிக்கப் படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இதில் சொல்ல விரும்புகிறேன். இதற்காக வரக்கூடிய வருமானத்தைப் பார்த்தால் இப்போது இருக்கும் நிலையில் 4 கோடி ரூபாய் என்றுதான் குறிப்பில் இருக்கிறது. அந்த 4 கோடி வருமானம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகள் அல்லது அதர் ஸ்டேட்டிலிருந்து வரும் பிராந்தி, லிக்கர் போன்றவற்றில் இருந்து வரும் வருமானம் என்று கருதுகிறேன். இந்த 4 கோடி ரூபாய் வருமானம் போதாது. இன்னும் கொஞ்சம் அதிகமாக வரவேண்டும். வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் நன்றாகக் கொடுக்கலாம். கொடுக்க முடியும். ஆகவே, அந்த 4 கோடி ரூபாய் வருமானம் என்று இருப்பதை 5 கோடி அல்லது 6 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தலாம் என்பது என்னுடைய கருத்து. அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, ஸ்டாம்புகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது கொடுக்கப்பட்டு இருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால், ரூபாய் 18 கோடியே 50 இலட்சம் வரும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால், இதற்காகச் செலவிடப்படும் தொகையைப் பார்த்தால் 75 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்குத்தான் இருக்கிறது. இவ்வளவு ரூபாய் வருமானம் வருகிறபோது, அந்தச் செலவைப் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகமாகச் செலவு செய்யலாம்.

ரிஜிஸ்டிரார் அலுவலகங்கள் வெள்ளைக்காரர்கள் காலத்தில் கட்டப்பெற்றவை. அவற்றை விரிவு படுத்த வேண்டும், அவற்றைச் செப்பனிடவேண்டும். அப்போதும் சொல்லிக் கொண்டு வந்தேன். இப்போதும் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். ஆனால் அவை அப்படியே இருக்கின்றன. இந்த விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த ரிஜிஸ்டிரார் ஆபீசையும் சீர்திருத்த வேண்டும். ரிஜிஸ்டிரார் ஆபீசிற்குச் சென்று, பத்திரம் பதிவு செய்யவேண்டும் என்றால் ரூபாய் 10, ரூபாய் 20 பத்திரத்தோடு ரகசியமாக வைத்துக் கொடுத்தால்தான் வேலை முடிகிறது என்ற நிலைமை இருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டும். இது எல்லோருக்கும் தெரியும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசிற்கு மனை வாங்கப் போகிறாரா, நிலம் விற்கப் போகிறாரா என்பது தெரிந்தால் நன்றாக இருக்கும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில் எதுவும் கிடையாது. நண்பர் சாதிக் பாட்சாவிற்கு வேண்டுமானால் வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

இப்போது விற்பனை செய்யும் நிலங்களுக்குக் கட்டணம் அதிகமாகிப் போய்விட்டது. இப்போது ரூபாய் 11 என்ற அளவிற்குப் போய்விட்டது. அதை விவசாய நிலங்களுக்குக் குறைக்கவேண்டும். கணக்குப் பிள்ளை எந்த மதிப்புப் போட்டுத் தருகிறாரோ அதற்குத்தான் கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய தயவு வாங்குகிறவர்களுக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இதை உத்தேசித்து, அதைச் சிறந்த முறையில் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.40)

இந்த ரெஜிஸ்டிரார் ஆபீசுக்குப் போய், பத்திரப் பதிவு செய்தால் பின்னால், காப்பிக்கு ஸ்டாம்பு போடுகிறோம். காப்பிக்குப் போடும் ஸ்டாம்ப் உரிய நேரத்தில் வருவதில்லை. அதை இத்தனை நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் ; 10, 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டுமென்று அரசு ஏதாவது உத்தரவு போடவேண்டும்.

மத்திய அரசிடமிருந்து இப்போது சில '' நிலத் தீர்வை '' வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அது சுமார் 78½ இலட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாம் உரிய அளவுக்கு வாங்கவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்னும் அதிகமாக வாங்கலாம். அதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடாற்காடு மாவட்டத்தில் அரக்கோணம் ரெஜிஸ்டிரார் ஆபீஸ் பழைய காலத்துக் கட்டடத்திலேயே இன்னும் இருக்கிறது. அதைப் புதுப்பிக்க வேண்டும் ; அதோடு செம்மைப்படுத்தவும் வேண்டும்.

காவேரிப்பாக்கத்தில் ஒரு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் இருக்கிறது. அது பழைய காலத்துக் கட்டடமாக இல்லாவிட்டாலும், வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. பத்திரப்பதிவு அலுவலகங்கள் எல்லாம் சொந்தக் கட்டடத்தில் இருக்க வேண்டும் ; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விற்பனை வரியைப்பற்றி இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு விற்பனை வரிகளை நாம் ஒருமுனைப் படுத்த வேண்டும். கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஒரு முறை இதுபற்றிக் கேட்பதற்கு ஒரு தூதுகோஷ்டியை அழைத்துச் சென்றிருந்தேன். அவர்கள் அப்போது என். ஜி. ஓ. சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து வாருங்கள் ; அவர்கள் சம்பளம் அதிகம் வேண்டுமென்று கேட்கிறார்கள் ; அதற்கு என்ன செய்வது என்பதையெல்லாம் பேசி முடிவு செய்யலாம் என்று குறிப்பிட்டார்கள்.

வரியை ஒருமுனைப்படுத்துவதால் சிரமம் இல்லாமல் வசூல் செய்து கொள்ளலாம். வியாபாரிகளுக்கும் கஷ்டம் இருக்காது. பலமுனை வரியில், பொருள் விற்பனையாகும் ஒவ்வொரு இடத்திலும் வரி விதிக்கப்படுவதால் சில சமயங்களில் அந்தப் பொருளின் விலையைவிட வரி அதிகமாகிவிடுகிறது அல்லது அதற்குச் சமமாக வந்துவிடுகிறது. அதனால் வாங்குவோருக்கு மிக அதிக விலை கொடுப்பதாகத் தெரிகிறது. அதோடு வியாபாரிகள் வரி ஏய்க்கும் முறையும் ஏற்படுகிறது. ஒருமுனைப்படுத்திவிட்டால் இந்த சிரமங்கள் எல்லாம் இருக்காது.

அதோடு, இந்த விற்பனை வரி சம்பந்தமாக சில வழக்குகள் கோர்ட்டுக்குப் போயிருக்கின்றன. பெரிய வியாபாரிகளாக இருந்தால் அவர்கள் அதற்கு ஸ்டே வாங்கி, இழுத்தடித்து, சில சமயங்களில் வழக்கைத் தள்ளுபடி செய்யக்கூடிய அளவுக்குப் போய் முடிகிறது. ஆனால், சிறு சிறு வியாபாரிகளால் அப்படிச் செய்ய முடியாது. சிறு சிறு மளிகைக் கடை வியாபாரிகள் எல்லாம், பலசரக்கு வியாபாரிகள் எல்லாம் அவஸ்தைப்படுகிறார்கள். விற்பனை வரி ஆபீசில் இருக்கக்கூடிய பியூனுக்குக் கூட அவர்கள் கட்டுப்பட வேண்டிய ஒரு துர்ப்பாக்கியம் இருக்கிறது. ஆகவே, மளிகைக் கடை வியாபாரிகள், பலசரக்கு வியாபாரிகள்—இவர்களுக்கு எல்லாம் வரியை '' காம்பவுண்ட் '' செய்து கொண்டு வசூல் செய்தால் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியங்கள்மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே, 'வரி செலுத்துவோருக்கும் வணிக வரி அலுவலருக்கும் இடையே நிலவிய சுமுகமான உறவு வணிக வரிச் சட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த ஏதுவாக இருந்தது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த சுமுகமான உறவு யாருக்கும் யாருக்கும் மத்தியில் இருக்கிறது என்று பார்த்தால் பெரிய வணிகர்களுக்கும் வணிகவரி அலுவலர்களுக்கும்தான். சிறிய வணிகர்களுக்கும் அவர்களுக்கும் சுமுகமான உறவு கிடையாது. காரணம்' அவர்களுடைய ஏழ்மை ; ஏழ்மையின்

காரணமாக வணிக வரி அலுவலர்களைக் சரியாக கவனிக்க முடியாதநுதான். அதனால் அவர்கள் பொதுவாகப் பாதிக்கப்படுகின்றனர். அதே நேரத்தில் பெரிய வணிகர்கள் அவர்களுக்கு வேண்டியதைக் கவனித்துக்கொள்வதால் அவர்களுக்கு எல்லாக் காரியங்களும் தடையின்றி நடக்கின்றன.

இந்த அரசு இப்போது கெய்வார் கமிட்டியை அமைத்திருக்கிறது. ஊழலைத் தடுப்பதற்கும் வரி வசூலைப் பெருக்குவதற்கும் இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. நான் இங்கே குறிப்பிடுகினறவைகளையும் அந்தக் கமிட்டியினர் கருத்திற் கொண்டு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஒருமுனை வரி போட்டிருக்கிறார்கள்; அதைப் பாராட்டுகிறேன். அதன்மூலம் அரசாங்கத்திற்கு நிரந்தரமான வருமானம் எவ்வளவு என்பதைச் சுலபமாக அறிய முடியும். அதுமட்டுமல்ல; வரி ஏய்ப்பதைத் தடுக்கவும் இந்த ஒருமுனை வரி விதிப்பு முறை பயன்படும். அதற்காக அரசைப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் சில ஏழை எளிய மக்கள் செய்கின்ற சிறிய தொழில்களுக்கும் ஒருமுனை வரி போட்டிருக்கிறார்கள். பழைய கண்ணாடி சாமான்கள் சேகரிக்கும் தொழிலுக்குக்கூட இந்த முறையைப் போட்டிருப்பது சரியல்ல. ஏனென்றால் அந்தத் தொழிலில் கிராமப்புற மக்கள் அதிலும் படித்துவிட்டு வேலையில்லாதவர்கள்கூட கிராமங்களுக்குச் சென்று பழைய பாட்டில்களை வாங்கி வந்து, நகரத்தில் இருக்கிற பெரிய வியாபாரிகளிடம் விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இப்போது 10 சதவிகிதம் ஒருமுனை விற்பனை வரி போட்டிருக்கிறார்கள். அதனால் படித்துவிட்டு, வேலையில்லாமல் கஷ்டப்படுபவர்கள் இந்தத் தொழிலைச் செய்து சிறு வருவாய் ஈட்டுவதற்கும் வழியில்லாமல் பாதிக்கப்படுகிறார்கள். இப்படியே போனால் அவர்களும் போராட்டத்தில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகிவிடும். ஆகவே, அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற இந்த 10 சதவிகிதம் ஒருமுனை விற்பனை வரியை மறுபரிசீலனை செய்து, அதை நீக்கிவிட்டு, மிகக் குறைந்த அளவில் பலமுனை வரியாக அதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் எல்லாம் இவர்களுக்குப் பலமுனை வரிதான் போட்டிருக்கிறார்கள். ஏனென்றால் அந்தத் தொழில்களை நடத்துபவர்கள் ஏழை எளியவர்கள் தான். பெரிய பெரிய பணக்காரர்கள் அந்தத் தொழிலை நடத்துவதில்லை. ஆகவே அவர்கள் மீது இவ்வாறு அதிகமான வரியினை விதிப்பது போராட்டங்களை, கிளர்ச்சிகளை அவர்கள் தொடங்குவதற்கு ஒரு வாய்ப்பாக

அமைந்துவிடும். ஆகவே பழைய கண்ணாடிச் சாமான்கள் மீது போடப்பட்டிருக்கும் 10 சதவீத வரி என்பதைக் குறைப்பதற்குரிய பரிசீலனையைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல சிறிய ஓட்டல்களிலே விற்கும் பண்டங்களின் மீது விற்பனை வரி போட்டிருக்கிறார்கள். இன்று சட்டத்திலே தான் விற்பனை வரி, விற்பனை செய்கின்றவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்து இருக்கிறதே தவிர உண்மையிலேயே அந்த வரி வாங்குபவர்கள் தலை மீது தான் விழுகிறது. அவர்கள்தான் அதனைச் செலுத்துகிறார்கள். ஆக, சட்டத்தின் மூலம்தான் இவ்வாறு இருக்கிறதே தவிர உண்மை நிலை வேறாக இருக்கிறது. யார் யார் வாங்குகிறார்களோ அவர்கள் அதனைச் செலுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது.

சிறு சிறு ஓட்டலிலே யார் வந்து சாப்பிடுவார்கள்? பெரிய பெரிய மிட்டா மிராசுதார்களும், படித்தவர்களும், பணக்காரர்களுமா வந்து சாப்பிடுகிறார்கள்? ஏழை எளியவர்கள், கூலி வேலை செய்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள், இப்படிப்பட்டவர்கள்தான் வந்து சாப்பிடுகிறார்கள். ஆகவே ஏழை எளியவர்களின் மீது விழுகின்ற அதாவது ஓட்டல்களுக்குப் போடப்படுகின்ற அந்த விற்பனை வரியையே ரத்து செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விற்பனை வரி இலாக்காவைப் பொறுத்த வரையிலே அது ஊழல்நிறைந்த இலாக்காவாக இருக்கின்றதென்று சொன்னால் அது மிகையாகாது. இங்கே கூட எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் அதுபற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த இலாக்காவிலே வேலை செய்கின்ற ஒரு பியூனுக்குக் கூட அதிக மதிப்பு இருக்கிறது. மற்ற இலாக்காவிலே உள்ள அதிகாரிகளுக்குக்கூட அவ்வளவு மரியாதையும் மதிப்பும் இருப்பதில்லை. ஊழல் அந்த அளவுக்கு விற்பனை வரி இலாக்காவிலே நிறைந்திருக்கிறது.

நான் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லத் தயாராக இல்லை. அந்த விற்பனை வரி இலாக்காவில் பணியாற்றும் ஒரு பியூன் சுமார் 400 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். அவர் சுமார் 10 ஆண்டுக் காலம் அந்த இலாக்காவில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். அந்தப் பத்தாண்டுக் காலத்தில் அவர் 4 இலட்ச ரூபாய்க்கு அதிபதியாகி இன்றைக்கு இரண்டு மனைவிகளுடன் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆரம்ப காலத்தில் அவர் எவ்வாறு இருந்தார்? இப்போது எப்படி இருக்கிறார்? எப்படி

இவ்வளவு பணம் வந்தது? இதையெல்லாம் கெய்வார் கமிட்டி மற்றும் இன்னும் அரசாங்கத்திலே இருக்கின்ற லஞ்சக் கண்காணிப்புக் குழுக்கள் தீவிரமான முறையிலே கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

__திரு. சி. அறுமுகம் :__ தலைவரவர்களே, உறுப்பினர், அந்தப் பியூன் பத்தாண்டுக் காலத்தில் 4 இலட்ச ரூபாய் சம்பாதிக்கிறார் என்பதாகக் குறிப்பிட்டார்கள். அது எந்த மாவட்டத்திலே, எந்தப் பகுதியிலே என்பதையும், அவர் பெயர் என்ன என்பதையும் தெரிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

__திரு. துரை முத்துசாமி :__ தலைவரவர்களே, அதை வேண்டுமானால் தனியாக அவர்களுக்குச் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு இயந்திரங்கள் இருக்கின்ற காரணத்தினால் என்னுடைய பதிலில் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஊரைச் சொல்கிறேன். அது திருக்கோயிலூராகும். அந்த ஊரிலே பணி புரிகின்ற ஒரு பியூன் ஆவார்.

அதைப்போல விற்பனை வரி இலாக்காவிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் எல்லாம் அலுவலகத்திலே இருந்து வேலை செய்வதில்லை. அவர்கள் எங்கே தங்கி இருக்கிறார்களோ அந்த இடத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்து தனியாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் குடும்பம் நடத்தும் இடங்களுக்கெல்லாம் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிக் குடும்பம் நடத்தாதவர்கள் லாட்ஜிலே தங்கி இருந்தால் அங்கேயே விற்பனை வரி அலுவலகமாக இயங்கக்கூடிய நிலை அதாவது அதிகாரிகளைத் தனியாகக் கவனிக்கின்ற நிலை இருக்கிறது. கெய்வார் கமிட்டி மற்றும் அரசாங்க ஆண்டி-கரப்ஷன் கமிட்டி மூலம் இந்த ஊழல்களை எல்லாம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் எங்களிடத்தில் சொல்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர பயப்படுகிறார்கள். காரணம் என்னவென்றால் அவர்கள் நடத்துகின்ற தொழில் பாதித்துவிடும் என்பதுதான்.

(முற்பகல் 10-50)

எங்களைப் போன்றவர்களிடம் சொல்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதில் கவனம் செலுத்தி, குறிப்பாக வணிகவரி இலாகாவில் உள்ள ஊழலைப் போக்குவதற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும். கண்காணிப்புக் குழுவாவது அமைக்க வேண்டும். கெய்வார் கமிட்டி நான் சொன்னவற்றைக் கவனிக்க வேண்டும்.

வணிகவரி இலாகாவில் இருக்கிற அதிகாரிகள் ரிட்டயரான பிறகு அந்த இலாகாவிற்குச் சென்று வழக்காட உரிமை கொடுத்திருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். சில நேரங்களில் சில பைல்களை வேண்டுமென்றே காலதாமதப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதன் காரண காரியங்கள் பெரிய வியாபாரிகளுக்குத் தெரியும். வணிக வரி இலாகாவில் சில பைல்கள் மாதக்கணக்காக, ஏன் வருடக்கணக்காக மூவ் ஆகாமல் இருக்கிறது என்று சொன்னால் அதைப் புரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்புள்ளவர்கள் பெரிய வியாபாரிகள். அவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்றால் வணிக வரி இலாகா அதிகாரிகளுக்கும் அரசாங்கத்துற்கும் இடையே அவர்கள் பில் கலெக்டர்கள் போல் வசூல் செய்து அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரி ஒரு பக்கம், அதே நேரத்தில் வாங்கிக் கொடுக்க வேண்டிய மாமூலை வாங்கிக் கொடுத்துக்கொண்டும் இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் இடையே பெரிய வியாபாரிகள் பில் கலெக்டர்கள்போல் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

பைல்கள் மூவ் ஆவதில் காலதாமதமாகிறது. ஆகவே ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும். இவ்வளவு நாட்களுக்குள்ளாக ஒரு பைல் மூவ் ஆகவேண்டும் என்ற ஒரு முறையில் காலக்கெடு வைக்கவேண்டும் என்று கெய்வார் கமிட்டிக்கு என் கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது ஒரு போராட்டம் நடக்கிறது. பலயிடங்களில் முத்திரைத்தாள்கள் கிடைப்பதில்லை. கோர்ட்டுக்குச் சென்றால் கோர்ட் ஸ்டாம்ப் கிடைக்கவில்லை. ரெஜிஸ்டிரார் ஆபீசுக்குச் சென்றால் அங்கே ஸ்டாம்ப் கிடைப்பதில்லை. பத்து பதினைந்து நாட்களாக மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இது ஒரு துர்ப்பாக்கியகரமான நிலையாகும், வேதனைக்குரிய ஒரு நிலையாகும்.

ஸ்டாம்ப் வெண்டர்கள் என்று யார் யாருக்கோ கொடுக்கிறார்கள். இன்று படித்துவிட்டு வேலையில்லாது இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்கவேண்டும். இன்னொன்று, கிராம அதிகாரிகள் 20ஆம் தேதி ஒரு போராட்டம் நடத்த இருக்கிறார்கள். அரசாங்கத்தினிடம் அவர்கள் சில வேண்டுகோள்கள் வைத்திருக்கிறார்கள், சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கேட்காத ஒன்றை நிறைவேற்றுகிறோம் என்று செய்ய வேண்டும். கிராம மக்களுக்கு கிராமங்களில் ஸ்டாம்ப் தேவைப்படுகிறது. ஸ்டாம்ப் வெண்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள், ஆகவே கிராம கணக்குப்பிள்ளை, மணியக்காரர் போன்றவர்களுக்கு இந்த ஸ்டாம்ப் வெண்டர்கள் வேலையைக் கொடுக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்தினால் அவர்களின் சில குறைகள் நிறைவேற்றப் பட்டதாக இருக்கும். அதோடு படித்துவிட்டு வேலையில்லாதிருப்பவர்களுக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

இப்போது கிராம அதிகாரிகள் பத்து அம்சக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். 55 வயதுக்குப் பிறகு கட்டாயமாக ஓய்வு கொடுக்கக்கூடாது என்பது ஒன்று. 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படவேண்டும் என்பது ஒன்று. ஆகவே இந்தக் கிராம அதிகாரிகளுக்கு ஸ்டாம்ப் வெண்டர்களுக்குள்ள உரிமையை அளித்தால் அவர்களது குறைகள் சிலவற்றைத் தீர்ப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும்.

அதே போல் பத்திரங்கள் ரிக்கார்ட் செய்யப்படுகின்றன. அறுபது அல்லது நூறு ஆண்டுகள் ஆனாலும், நாம் பிறந்த தேதியாக இருந்தாலும் அல்லது சொத்து சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் அதைப் பெறக்கூடிய இடம் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ். ஆனால் பலயிடங்களில் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இருக்கின்றன. சிலயிடங்களில் சொந்தக் கட்டடங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடும். ஆனால் அந்தக் கட்டடங்கள்கூட அந்தக் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள், இடிந்துவிழக் கூடிய நிலையில் உள்ளன.

ரிக்கார்ட் தேவைப்படுகிறது என்று சொன்னால், சொத்து சம்பந்தமாக அல்லது பிறப்பு இறப்பு சம்பந்தமாகப் பத்திரம் வேண்டுமென்றால் அதைத் தேடிப்பிடிக்கமுடியாத அளவிற்கு அந்தப் பத்திரங்கள் பத்திரமாக இருக்கவேண்டிய இடத்தில் பத்திரமாக இல்லை. ஆகவே ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கு நல்ல கட்டடங்கள் கட்டிக் கொடுத்து அந்தயிடத்திலேயே அதிகாரிகள் தங்கவும் குவார்ட்டர்ஸ்ம் கட்டிக் கொடுக்க வேண்டும்.

என் பகுதியில் ஒரு ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறந்திருக்கிறார்கள். அது வடபொன்பரப்பியில் இருக்கிறது. அங்கே அலுவலகத்திற்கே இடம் இல்லை. ஆகவே, அந்த ரெஜிஸ்ட்ரார் ஆபீசை வடபொன்பரப்பியிலிருந்து மூங்கில்துரைப்பட்டுக்கு மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அங்குள்ள ப்யூன்களுக்கும் அலுவலர்களுக்கும் படி கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மற்ற இலாக்காக்களில் என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகிறதோ அந்தச் சலுகைகள் இத்துறையில் இருப்பவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொருவரும் போராடித்தான், கிளர்ச்சி செய்துதான், மொட்டை அடித்துத்தான், உண்ணாவிரதம் இருந்துதான் தங்கள் குறைகளைச் சொல்லவேண்டும், அப்போதுதான் இந்த அரசு உணரும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. எங்கிருந்து கோரிக்கைகள் வருகின்றன என்பதை

ஆரம்பத்திலேயே குழுக்கள் ஏதாவது போட்டுப் பார்க்கலாம். எத்தனையோ குழுக்களைப் போடுகிறீர்கள். கிராமங்களில் மக்கள் குழு, ஊராட்சி ஒன்றியத்தில் குழுக்கள் இவைகள் எல்லாம் அமைக்கப்படுகின்றன. அதைப்போன்று ஒவ்வொரு இலாகாவுக்கு ஒவ்வொரு குழுவை அமைத்து, அதிலுள்ள ஊழியர்களின் தேவைகள் என்னென்ன, அவர்களுடைய கடமைகள் என்ன என்பதையெல்லாம் அறிந்து அரசுக்கும் அமைச்சர்களுக்கும் சொல்லி, ஆலோசனைகளையும் சொல்லுகின்ற வகையில் ''நான்-அபிசியல் எக்ஸ்பெர்ட் கமிட்டி'' என்று அமைத்து, அதன் மூலமாக இது போன்ற குறைகளை எல்லாம் போக்கலாம்; போராட்டங்கள் கிளர்ச்சிகள் இவைகளை எல்லாம் தவிர்க்கலாம் என்பதை தெரிவித்துக்கொண்டு, கெய்வார் கமிட்டி நல்ல முடிவுகளை மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு சந்தர்ப்பம் நல்கிய தலைவருக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

<u>திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் ;</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கு கொண்டு பேசுவதற்கு நேரம் தந்தமைக்கு என் நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன.

தமிழ்நாட்டில் வரி வருவாய், பொது விற்பனை வரி இவைகளின் மூலம் கணிசமான வருவாய் நாட்டுக்குக் கிடைத்து வருகிறது. இதில் முக்கியமாக விற்பனை வரிச் சட்டம் போவதை நாளா வட்டத்தில் வளர்ச்சி பெற்று—சீர்திருத்தம் பெற்றிருப்பதற்குக் காரணம் அரசு அவ்வப்போது மேற்கொண்டுள்ள முடிவுகள் மூலமாகவும், அவ்வப்போது வணிகர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அங்கு போடுகின்ற வழக்குகள் காரணமாக ஏற்படுகின்ற சாத்தியக் கூறுகள் அமைந்திருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

மாநிலத்தில் வணிக வரித் துறையைப் பொறுத்தவரையில், வணிகத் தொழிலில் ஈடுபட்டுள்ள வணிகப் பெருமக்கள் மீது இந்த அரசு அக்கறை கொண்டு இருப்பது மிகவும் பாராட்டுதற்குரியதாகும். ஒரு லட்சத்திற்கும் குறைவாக மொத்த விற்பனை இருப்பதாக இருந்தால் அதற்காக மொத்தமாக கணக்கிட்டு, அதாவது சம்மரி அசெஸ்மெண்ட் முறையில் வரி விதிப்பு செய்யப்படும் என்பது அமலாக்கப்பட்டிருக்கிறது. எந்த வணிகருடைய கணக்கில் முந்தைய விற்பனைத் தொகைக்கும், வணிகப் போக்குக்கும் நிகராக விற்பனை வரி செலுத்திய விவரங்களை அனுப்பவில்லையோ அப்படிப்பட்டவர்களுடையவும், எந்த வணிகருடைய கணக்குகளில் முறைகேடுகள் நடந்திருக்கின்றனவோ அந்த வணிகர்களுடையவும் கணக்குகள் மட்டுமே விரிவாக சரி பார்க்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது ஒரு மாற்றமாகக் கருதப்படுகிறது. இது சிறு வணிகர்களுடைய சிரமங்களை

குறைப்பதோடு வரிவிதிப்பு அலுவலர்கள் மூலம் வேறு பல முக்கிய இனங்களில் கவனம் செலுத்துவதற்கு இது உதவி செய்யும் என்றும் கருதப்படுகிறது.

மேலும், (சிங்க் சல்பேட்) துத்தநாக சல்பேட்டை ரசாயன உரவகையின்கீழ் கொண்டு வருதல், நாட்டு செக்கு எண்ணெய், பிண்ணுக்கு போன்றவற்றை பல்முறை வரிவிதிப்பினகீழ் கொண்டு வருதல் போன்றவையும் பாராட்டுக்குரியவையாகும். அது போன்று, பின்னலாடைக்கான பருத்தி நூலிழை விற்பனை செய்யும் வணிகர்கள் செலுத்த வேண்டிய வரிவிகிதம் 3 சத வீதத்தி லிருந்து இரண்டு சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதும் நல்ல மாற்றமாகக் கருதப்படுகிறது.

இந்த வரிவிதிப்பு முறையில் பல மாற்றங்கள் செய்து, வணிகர் களுக்கும், வசூல் செய்கின்றவர்களுக்கும் இடையில் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த அரசு கருதி பல திட்டங்களைச் செயல்படுத்தியிருப்பதை இந்த அறிக்கை யில் பார்க்க முடிகிறது. அதையெல்லாம் வரவேற்க நாம் கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம். அதே நெரத்தில் சேல்ஸ் டாக்ஸ் என்கின்ற வரியை முன்னால் ஆட்சி செய்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மதுவிலக்கை அமல் நடத்துவதில் ஏற்படுகினற இழப்பை ஈடு செய்வதற்காக கொண்டு வந்தார்கள். மது விலக்கை அமல் நடத்துவதில், மற்ற மாநிலங்களை விட நாம் சோடை போகாத அளவுக்கு நமது மாநிலம் மதுவிலக்கை அமல் நடத்திக் கொண்டிருக்கின்றது.

(முற்பகல் 11·00)

இதனால் இன்றைக்கு எத்தனை கோடி ரூபாயை இழந்திருக்கி றோம் என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் அறிவார்கள். இந்த மதுவிலக்கை நாம் செயல்படுத்துவதிலே எத்தனையோ இன்னல்கள் இருக்கின்றன. இதை ஒரு நல்ல திட்டமாக அமல்படுத்த, இதை ஒரு வெற்றி கரமான திட்டமாக உருவாக்க இருக்கின்ற இந்த நேரத்திலே, இந்த வருவாய் இழப்பையும் தாங்கிக் கொண்டிருக்கிற நேரத் திலே, பல்வேறு கோரிக்கைகளை இந்த அரசு ஏற்று போராடிக் கொண்டிருக்கின்றவர்களுக்கு திருப்தி ஏற்படக் கூடிய அளவிலே இந்த மாநிலம் இருக்கிறதென்று நாம் கூற வேண்டிய நிலவரத் திலே இருக்கிறோம்.

இந்த மதுவிலக்கை அமுல்படுத்துகின்ற நேரத்திலே, போலீசா ருடைய, காவல்துறையினருடைய ஒத்துழைப்பு இன்றியமையாத தாக இருக்கிறது. அதே நேரத்தில் பொதுமக்களுடைய ஒத்து ழைப்பும் மிகவும் முக்கியமாக வேண்டியிருக்கிறது என்று சதா சிவம் குழு நமக்கு அறிக்கை அளித்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே சேல்ஸ் டாக்சை நாம் காமதேனு என்றும், கற்பக விருட்சம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த விற்பனை வரியை மத்திய அரசு எடுத்து விட வேண்டும், அப்படி எடுத்து விட வேண்டும் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், இதற்குப் பதிலாக எக்சைஸ் டூடி போடயிருப்பதாக அண்மையில் வெளிவந்துள்ள கருத்து மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், சேல்ஸ் டாக்சை எடுத்துவிட்டு, இந்த எக்சைஸ் டூடி போடப்பட்டால், அந்த அடிப்படையிலே வரக்கூடிய வருமானம் மத்திய சர்க்காருக்குப் போய்ச் சேரும் என்பதில் ஐயப்பாடு ஒன்றுமில்லை என்று நான் கருதுகிறேன். இந்த ஐயப்பாட்டைப் போக்குகின்ற வகையிலே, மத்திய சர்க்கார் மாநில அரசுகளைக் கலந்து முடிவு செய்யும் என்று அண்மையில் பாரதப் பிரதமர் அவர்கள் கூறியிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும் என்று நான் கருதுகிறேன்.

எக்சைஸ் டூடியில் வரக்கூடிய வருவாயை மத்திய சர்க்கார் எடுத்துக் கொண்டால், இந்த சேல்ஸ் டாக்சையும் ரத்து செய்து விடுவதால், இந்த மதுவிலக்குக் கொள்கையை நாம் தீவிரமாக எப்படி அமுல்படுத்த முடியும்? தமிழ்நாடு என்ன பாவத்தைச் செய்ததோ. நமக்குத் தெரியவில்லை. அதே போன்று, மற்ற மாநிலங்களிலே மதுவிலக்கை அமுல்படுத்தாத மாநிலங்களிலே இந்த சேல்ஸ் டாக்சும் இருக்கிறது; அதுவும் இருக்கிறது. அதே நேரத்திலே மத்திய சர்க்கார் மான்யமும் மற்ற மாநிலங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டிற்கு எவ்வளவு மான்யம் தரப்படுகிதோ, அதே போன்று அண்டை மாநிலங்களுக்கும், மதுவிலக்கை அமுல்படுத் தாத மாநிலங்களுக்கும் இந்த மான்யம் கொடுக்கப்படுகிறது. அப்படியென்றால், மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்துகின்ற மாநிலங்களுக்கு, மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய மானியத்தி லிருந்து முக்கால் பங்கை இந்த மாநிலத்திற்குக் கொடுக்க வேண்டும் எனறு நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்தால் நமக்கு எவ்வளவோ லாபகரமாக இருக்கும். இதை விட்டுவிட்டு, மத்திய சர்க்கார் மானியம் கொடுப்பதே தவறு என்று சில பெரியவர்கள் கருத்து தெரிவித்திருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும் என்று நான் கருதுகிறேன்.

திருமதி சுசீலா நய்யார் அவர்கள்கூட, மத்திய சர்க்கார் இந்த மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்தும் மாநிலத் திற்கு 50 சதவிகிதம் மான்யம் ஒதுக்கித் தர வேண்டுமென்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, மத்திய சர்க்கார் மாநிலத்திலே சேல்ஸ் டாக்சையும் ரத்து செய்து விட்டு, அவர்கள் எக்சேஸ் டூடி போட்டு, அதையும் அவர்கள்

எடுத்துக் கொண்டால், இந்த மாநிலத்திலே எப்படித் தீவிரமான மதுவிலக்கை அமுல்படுத்த முடியும் என்பதை மத்திய சர்க்கார் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி மதுவிலக்கைத் தீவிரமாக இந்த மாநிலத்திலே அமுல் படுத்த வேண்டுமென்றால், இந்த சேல்ஸ் டாக்சிலே இருந்து வரக் கூடிய பணத்தில் முக்கால் பங்கை ஒதுக்கினால், நாம் தீவிரமாக மதுவிலக்கை அமுல்படுத்தலாம். ஆகவே, அந்தத் தொகையை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்து கின்றபோது, உரிமங்கள் வழங்கப்பட வேண்டிய நிலையில், பெரிய மாற்றங்களையெல்லாம் செய்து, குறிப்பிட்ட வயதிற்கு மேலுள்ள வர்களுக்குத்தான் இந்த உரிமங்கள் வழங்கப்படுகின்றன. குறிப்பிட்ட வயதிற்கு கீழுள்ளவர்களுக்கு, அவர்கள் உடல்நலம் பொதுவாக வெகுவாக பாதிக்கப்பட்டு, மது அருந்தினால்தான், இல்லை அவர்கள் உடல்நிலை பாதிக்கப்படும் என்கின்ற நிலை இருக்கு மானால், அவர்கள் அதற்கான சான்றிதழ் பெறுவதன் மூலம் இந்த உரிமங்கள் வழங்கப்படுகின்றன என்று இந்த அரசு திட்டம் வகுத்திருப்பதை நான் மிகவும் பாராட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

ஏழைமக்களிடத்திலே இந்த மதுவிலக்குக் குற்றம் பரவலாகக் காணப்படுகிறதென்றாலும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது, கள் இறக்குவது போன்றவைகளுக்கு நாம் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஒரு தனி இலாகாவே செயல்பட்டால்கூட நல்லது என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்குக் குற்றங் களுக்கு நாம் குறைவான தண்டனை விதிப்பதால், அதைப் பெற்று விட்டு, மீண்டும் இந்தத் தொழிலைத் தொடரக்கூடிய ஒரு அவல நிலைமையை நாம் இன்று காண முடிகிறது.

அந்த அவல நிலையைப் போக்கும் வண்ணம் நீதிமன்றங்களில் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், கள் இறக்குவோர்மீது, கிரிமினல் குற்றம் புரிகிற குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படுகிற தண்டனை போல் நிச்சய மாக அளிக்கப்பட வேண்டும். மேலும் பொதுமக்கள் மத்தியில் மிகத் தீவிரமாகப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டு இதனால் எவ்வ ளவு தீங்குகள் ஏற்படுகின்றன என்பதை சதாசிவம் குழு அறிக்கை யில் கண்டவாறு பரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது சாதாரண பிரச்சினையாக இல்லை. மது அரக்கன் எவ்வ ளவு கொடியவன் என்பதை உணர்ந்திருக்கிறோம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் அளவில் இந்த அரசு முன்வந்து பல நல்ல காரியங்களைச் செயல்படுத்தும் திட்டங்களை உருவாக்க வேண்டும். சென்னை நகரிலும் சுற்றுப் புறங்களிலும் தீவிரமாக மது விற்கிறார்கள் என்பதைப் பற்றி இம் மாமன்றத்தில் பல நேரங்களில் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மேலும் தீவிரப்படுத்தப்பட வேண்டுமானால் மதுவிலக்குக் குற்றத்தின்கீழ் கொண்டு வரப்படுகிறவர்கள் நிச்சயமாக ஒரு முறை அல்லது இரண்டு முறைக்கு மேல் தண்டனை பெறுவார்க ளானால் அந்தத் தண்டனைக் காலம் ஆறு ஆண்டுகள், எட்டு ஆண்டுகள் என்று அதிக்கரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

கடைசியில் ஒன்றை மட்டும் கூறி விடைபெறலாம் என்று கருதுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மிகத் தீவிர மாகச் மதுவிலக்கைச்செயல்படுத்துகிற இந்த மாநிலத்திற்கு மத்திய சர்க்கார் ஆவன செய்து ஒத்துழைப்புத்தர வேண்டும். பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தத் திட்டத்தில் மிகத் தீவிரமாக இருக்கும் நிலையில், தமிழ் மாநிலம் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய நிலையில் அவர்கள் இதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் மானியத்தைத் தமிகத்திற்கு அளித்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஐயா, இன்று நமக்கு முன்னால் இருக்கக்கூடிய பொது விற்பனை வரி மானியத்தின் மீதும் மற்றுமுள்ள மானியங்களின்மீதும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

1937-வது வருஷத்திலே, ராஜாஜி இருந்த காலத்திலே இது ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அரை தம்பிடி விற்பனை வரி என்ற பெயரால் ஆரம்பிக்கப்பட்டது. தம்பிடி என்றால் என்ன என்று ரொம்பப் பேருக்குத் தெரியாது அல்லது ஒருவேளை மறந்து போயிருக்கும். இப்போதுள்ள பைசாவில் கால் பைசா தம்பிடி என்பது. அரைத் தம்பிடி விற்பனை வரி என்று ஆரம்பித்தபோதே என்ன சொல்லப்பட்டது என்றால் — இது ஒரு காமதேனு, இது கற்பக விருட்சம் என்றெல்லாம் வர்ணிக்கப்பட்டது.

அப்பேர்ப்பட்ட காமதேனுவை இன்றையதினம் நமது மதிப் பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள், இந்த அரசு சர்வ ஜாக்கிரதை யாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும், இந்தக் காமதேனுவை மத்திய அரசு. பிரதம அமைச்சர் தேசாயும், நிதியமைச்சர் பட்

டேலும் இணைந்து கொண்டு — நாம் ஒத்துக்கொள்ளவில்லை என்
றாலும் — கட்டிப் போட்டுத் தூக்கிக் கொண்டு செல்லத் தயாராக
இருக்கிறார்கள். ஆகவே, அதனால் என்ன விளைவுகள் ஏற்படுவதாக
இருந்தாலும் ரொம்பவும் உறுதியாக, தைரியமாக எதிர்த்துப்
போராடியாகவேண்டும். விற்பனை வரி என்பதற்குப் பதிலாக
எக்ஸைஸ் வரி என்று பெயரால் போட்டு அதையும் அவர்களே
வசூல் பண்ணி ஏப்பம் விடக்கூடிய அளவுக்குப் போகிற முயற்சி
நடைபெற்று வருகிறது, அதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது என்று
குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

லோகநாதன் என்ற பொருளாதார நிபுணர் குழு இதைப்
பற்றி ஆராயப் போட பட்டது. அவர் கூட என்ன சொன்னார்;
இந்த வரி அரை சதவிகிதம் இருந்தாலே போதுமானது ; அதுவும்
உணவுப் பொருள்மீது போடவே கூடாது என்று சொல்லப்பட்டது.
சென்ற ஆண்டு இந்த மானியத்தின் மீது பேசுகிற நேரத்தில்
சாதாரண மக்கள் உபயோகப் படுத்தக்கூடிய இதுபோன்ற
பொருள்கள் மீது வரி போட்டது சரியல்ல என்று சொன்னபோது
கூட, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் — இது தெரிந்தோ
தெரியாமலோ போடப்பட்டு விட்டது, இனிமேல் இப்படி ஏழை
எளிய மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்கள் மீது போடா
மல் பார்த்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். இன்றைக்கு
என்ன நிலைமை ?

ஓட்டலில் போய் சாப்பிடுகிற இட்டிலி, தோசை போன்ற
உணவுப் பண்டங்களுக்கு ரூபாய்க்கு 4 பைசா வரி போடப்படு
கிறது. எந்த அளவுக்கு ஓட்டல்காரன் அதைச் சர்க்காருக்குக்
கொடுப்பான் என்பது வேறு விஷயம். அதை எடுத்துக் விடுவதாக
அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் இது
வரை எடுக்கவில்லை. வெள்ளைக்காரன் காலத்தில், வரி போடப்
பட்ட போது, ஜனவரி, பிப்ரவரிதான் பாக்கி என்றெல்லாம்.
அன்றைக்குப் பேசினோம். (குறுக்கீடு) அன்றைக்கு 1942 ஆகஸ்டு
போராட்டத்தில் காங்கிரஸ்காரன் என்ற முறையில் நானும்
போராடியிருக்கிறேன். இன்றைக்கு என்ன நிலைமை ? ஒண்
ணுக்குப் போனாலும் இரண்டுக்குப் போனாலும் வரி, பஸ் ஸ்டாண்
டுகளில் பல இடங்களில் கக்கூசுக்குப் போனால் பத்து பைசா
கொடுக்கவேண்டும். இன்னும் அந்த மாதிரி போடவில்லை, அதற்

(முற்பகல் 11-10)

கும் வருமோ என்னவோ சொல்லமுடியாது. போகப் போக
எது மேலே எல்லாம் வரிப் போடப் கூடிய சூழ்நிலை வருமோ
என்னமோ தெரியாது. இதுபோன்ற மறைமுகமான வரிகளை
சாதாரண ஏழை எளிய மக்கள் மீது போட்டு நிர்ப்பந்தப்படுத்தி
வசூலிக்கக்கூடிய இந்தப் போக்கு இருக்கிறதே அது அவ்வளவு
சரியானதல்ல. உணவுப் பொருட்களுக்கு கண்டிப்பாக வரி
போடக்கூடாது, அதை நீக்கவேண்டும்.

இன்றைக்கு வெல்லத்தின் மேல் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ்
தான் இருந்தது, இப்போது மல்டி பாயின்ட் டாக்ஸ் போடப்
போகிறார்கள். சிங்கிள் பாயின்டிலேயே 5 சதவீதம் வேண்டு
மானாலும் போடட்டும், ஆனால் மல்டி பாயின்ட் என்ற முறை
யிலே 3 சதவீதம் போட்டால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.
இன்னும் பலதரப்பட்ட சிறியவியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள்.
இந்த மாதிரி பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே,
எந்தக் காரணத்தையொட்டியும் எந்தப் பொருள்மீதும்
ஒரு முனை வரிதான் போடவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே நேரத்திலே எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்
லாம் கூட பெரிய வியாபாரிகள் எல்லாம் தப்பித்துக்கொள்கிறார்
கள் என்று சொன்னார்கள். சிறிய, சிறிய வியாபாரிகள் சிக்கிக்
கொள்கிறார்கள். பெரிய வியாபாரிகள் தப்பித்துக்கொள்ளக்கூடிய
நிலைமை. காரணம் என்னவென்றால் பச்சை நோட்டினுடைய
மகிமைதான், தள்ளிவிட்டால் அவர்கள் தப்பித்துக்கொள்ளலாம்.
ஆனால், சிறிய சிறிய வியாபாரிகள் 50 ஆயிரம் ரூபாய்க்குத்தான்
உண்மையிலேயே வியாபாரம் செய்திருந்தாலும், நீ 2 லட்சத்
திற்கு பண்ணியிருக்கிறாய் என்று பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட்
என்ற முறையிலே சொல்கிறார்கள். அப்படி அவர்கள் எழுதிவிட்
டால் போதும், வரி கொடுக்கவேண்டியதைத் தவிர வேறு வழி
யில்லை. ஏனென்றால், பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மெண்ட் அவர் எழுதி
விட்டால் அந்த வரியைக் கட்டிவிட்டுத்தான் அவர் கோர்ட்டிற்கு
போகமுடியும்; அப்பீலே போகமுடியும். அப்புறம் அப்பீல் என்று
போனாலே வருஷக்கணக்கிலே ரப்பர் மாதிரி இழுத்துக்கொண்டு
தான் நிற்கும். அப்பீலில் ஜெயித்துவிட்டாலும்கூட அந்தப்
பணத்தை திருப்பி வாங்குவதற்கு 1,2 வருஷம் கூட ஆகிவிடுகிறது.

இந்த அளவிற்கு சிறிய சாதாரண வியாபாரிகள் கொடுமைப்
படுத்தக்கூடிய அளவிற்கு இருந்து வருகிறது என்பதை மாண்பு
மிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்.
அந்த அதிகாரிகள் செய்யக்கூடிய அட்டகாசங்களை யெல்லாம்
கொஞ்சம் குறைக்க வேண்டும். சிறிய வியாபாரிகள் மீது இந்த
அளவிற்கு வேகமாக நடந்துகொண்டால் அவர்கள் பாதிக்கப்
படக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படி நடந்து கொள்ளக்
கூடாது என்று அதிகாரிகளுக்கு அட்வைஸ் பண்ணவேண்டும்.

சாதாரணக் கடைகள், பெட்டிக்கடை, வெற்றிலை பாக்குக்
கடை, மளிகைக் கடை வைக்கவேண்டுமென்றால் கூட எவ்வளவு
பெரிய மூலதனம் இப்போது தேவைப்படுகிறது? எப்படியோ வட்
டிக்குப் பணத்தை வாங்கி, டனுக்கு சரக்குகளை வாங்கி கடையை
வைக்கிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரிகள் இன்றைக்குப் பாதிக்
கப்படாத அளவிற்கு 50 ஆயிரம் ரூபாய் வரையில் எந்த வரியும்
இல்லாமல் முழு வரிச் சலுகை அளிக்கப்படவேண்டும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1978 மார்ச்

இப்போதுள்ள சூழ்நிலையில் செக்போஸ்ட்கள் எல்லாம் இரு
கின்றன. போன வருஷமே நான் டிமாண்டிலே பேசும்போ
சொல்லியிருக்கிறேன். இன்டர்னல் செக்போஸ்ட்ஸ், பார்ட
செக்போஸ்ட்ஸ் எல்லாம் இருக்கின்றன. எனக்கு முன்பு பேசி
உறுப்பினர்கள் எது எதோ ஊழல் என்று சொன்னார்கள். இந்
இன்டர்னல் செக்போஸ்டிலே தான் எக்கச்சக்கமான ஊழல்
பார்டர் செக்போஸ்டிலே உள்ள பேர்வழிகள் அங்கே இரண்டு
வருடம் இருந்து விட்டால் போதும். பெரிய வியாபாரியாக மா
விடுகிறார். அந்த அளவிற்கு மூலதனத்தைச் சேர்த்து விடுகிறார்
இது உள்ள நிலைமை. ஆகையினாலே, சரியான முறையில்
உறுதியாக, நேர்மையாகக் கண்காணிக்கக் கூடியவர்களைப்
போட்டு, பார்டரைப் பொறுத்தவரையில் இருந்தால் போது
மானது என்ற அடிப்படையில் இருப்பதுதான் நல்லது. மற்ற
இடங்களில் வேண்டுமென்றால் ரோமிங்கோ அல்லது ப்ளையிங்கோ
என்று சொல்லுகின்ற ஸ்குவாட்களை, அது பறக்கிறதோ, ஓடு
வதோ, நடப்பதோ போன்ற எந்த மாதிரியான ஸ்குவாடு
களாக இருந்தாலும் சரி, அந்த ஸ்குவாடுகளை விட்டுப் பார்க்கக்
கூடிய அளவிற்கு இருந்தால் போதுமானது. அப்பொழுதுகூட
முழுக்க முழுக்க ஊழலைப் போக்கிவிட முடியுமென்று நான் சொல்ல
வில்லை. ஓரளவிற்கு, பாதி அளவிற்குத்தான் போக்க முடியு
மென்ற நிலைமை இருக்கும். எனவே, அந்த அடிப்படையின்
பிரதானமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

அதிகாரிகள் சொல்வதற்கு இரையாகிவிடக் கூடாது. அவர்
களுக்குத் தெரிந்தது இன்றைக்கு இருக்கும் இந்தச் சமுதாய
அமைப்புக்கு எந்த மாதிரி இருக்கவேண்டுமென்று நினைக்
கிறார்களோ அதுபோன்ற ஆலோசனைகளைக் கூறுவார்கள்.
அதற்காக அவர்கள் சொல்வதைக் கேட்காமலும் இருக்க
முடியாது. முழுக்க முழுக்கத் தலையை ஆட்டிக் கொண்
டிருந்தாலும் விளைவு சாதாரண மக்களைப் பாதிக்கும்
நிலைமை ஏற்பட்டுவிடும். அதிகாரிகளும் பாதிக்கப்படும் நிலைமை
இருக்கிறது. இங்கு இருப்பவர்கள் இராமநாதபுரத்திற்கு மாற்றப்
படுவார்கள், இராமநாதபுரத்தில் இருப்பவரை இன்னொரு
இடத்திற்குப் போடுவார்கள். அதனால் அவர்கள் கேட்கின்ற
மாதிரி இவர் வாங்கிக்கொடுக்க வேண்டும். இது பிரதானமாக
இருக்கிறது. ஆகவே, அதையும் கொஞ்சம் கண்காணிக்க
வேண்டும்.

பெரிய அதிகாரிகளாக இருப்பவர்கள் எல்லோரையுமே சரா
சரியாக நான் சொல்லவில்லை. நேர்மையானவர்களும் உண்டு;
நேர்மை தவறி நடக்கக் கூடியவர்களும் உண்டு. ஒரு வருஷம்,
இரண்டு வருஷங்களில் ரிடையர் ஆகப்போகிறார் என்ற சமயத்தில்
அறுவடை இன்னும் கொஞ்சம் அதிகம். அந்த அளவிற்கு இருக்
கிறது. ஆகவே, இதில் தீவிரமான, சரியான கவனம் செலுத்தியாக
வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

1978 மார்ச் 14] [திரு. வி. கே. கோதண்டராமன்]

உணவுப் பொருள், ஹோட்டல் பலகாரம், அழுகல் பொருள், பிண்ணாக்கு போன்ற பொருள்களின் மீது வரியே கூடாது என்பது மட்டுமல்ல, பலமுனை வரி என்பதே இருக்கக்கூடாது, ஒரு முனை விற்பனை வரிதான் இன்றைக்கு இருக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை என்று இருக்கிறது: மதுவிலக்கை முதலமைச்சர்தான் என்னமோ ரொம்பத் தீவிரமாகக் கட்டிக்கொண்டு அழுகிறார்.. எந்த அளவிற்கு உறுதியாக அதை நடத்த முடியுமென்று அவர்களுக்குத் தெரியும். அந்த விஷயத்திலே என்னுடைய கருத்து என்னவென்றால், இன்றைக்கிருக்கின்ற மதுவிலக்கு பற்றித் தெளிவாகச் சொல்கிறேன். ஏழை பணக்காரர்கள் என்று பாகுபடுத்தக் கூடிய ஒரு மதுவிலக்கு. பண்க்காரர்களுக்கு உடல் நலம் சரி இல்லை என்றால் அவர்களுக்கு பர்மிட் கொடுத்துவிடலாம், உயர்ந்த ரக மதுபானத்திற்கு. அதைக் குடிக்கவில்லை என்றால் அவர் செத்துப் போவார். ஆனால், ஏழைகள் குடிப்பது கள். அதற்கு மட்டும் டாக்டர் சர்ட்டிபை செய்யமாட்டார். அதைக் குடித்தால் அந்த ஏழை செத்து விடுவானும். இப்படி இது ஏழைபணக்காரர்கள் என்று பாகுபடுத்தக் கூடிய ஒரு மதுவிலக்காக இருக்கிறது.

ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், உண்மையாக, நேர்மையாக, இந்த மதுவிலக்கைக் கடைப்பிடிக்கக்கூடிய அளவில் இருந்தால், இந்தச் சர்க்காருக்குத் தைரியம் இருக்குமேயானால், உண்மையிலேயே இந்த மதுவிலக்கைக் கடைப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால் ஏழைபணக்காரர் என்ற பாகுபாடு இல்லாத அளவிற்கு, உயர்ந்த ரக மதுவாக இருந்தாலும் சரி, அல்லது மட்டரக மதுவாக இருந்தாலும் சரி, அதற்கு யாருக்குமே பர்மிட் கொடுக்கக்கூடாது என்று உறுதியாக நிற்கவேண்டும். அது கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதுதான் மதுவிலக்கு. அந்த மாதிரி இருந்தால் தான் மதுவிலக்கு, இதற்குப் பெயர் மதுவிலக்கு அல்ல. இது கண்டிப்பாக மதுவிலக்கு அல்ல. இது ஜனங்களை ஏமாற்றுகின்ற, பாமர மக்களை ஏமாற்றுகின்ற, சாதாரண மக்களை ஏமாற்றுகின்ற அளவிற்கு இருக்கிறது. ஒரு பக்கத்திலே சாதாரண மக்களின் ஆதரவுக்காக வேண்டி இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இந்த மாதிரி மதுவிலக்கு இருக்கிறது என்றால், பல துறைகளிலே எப்படிப் பணக்காரர்களுக்கு ஆதரவாக இருக்கும் போக்கு இருக்கிறதோ அதைப்போல் இந்த மதுவிலக்கிலேயும் பணக்காரர்களுக்கு ஆதரவு காட்டக்கூடிய போக்கு இருக்கிறது.

ஆகவே, முழுக்க முழுக்க இந்த மதுவிலக்கை அமல் நடத்த வேண்டுமென்றால் வசதி படைத்த யாருக்குமே கொடுக்கக்கூடாது. பெரிய அதிகாரிகளானாலும் சரி, பெரிய சினிமா ஸ்டாராக இருந்தாலும் சரி, அல்லது பெரிய வியாபாரிகளாக இருந்தாலும், யாராக

இருந்தாலும் சரி, குடிக்க வில்லை என்றால் சாக மாட்டார்கள். நல்ல மாதிரி இருப்பார்கள். கள் குடித்தால் நீண்ட நாளைக்கு உயிரோடு இருப்பார்கள் என்று நான் சொல்லவில்லை. பெரிய பொருளாதார நிபுணர்கள், டாக்டர்கள் சொல்கிறார்கள். வைட்டமின் ஏ டு இஸட் அதில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை நிறுத்தும் அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த மதுவிலக்கைப் பரிபூரணமாக நடத்த வேண்டுமென்று சொன்னால் இந்த அடிப்படையிலேதான் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும், இந்த முறையிலேதான் இருக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11·20)

'நத்தையில் முத்து' என்ற படத்திற்கு 3 மாதமும், 'கிங் எலிஃபண்ட்' என்ற படத்திற்கு ஒரு வருஷமும் வரிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சர்க்கார் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே இருந்த அரசு கொடுத்ததாகத் தெரிகிறது. எதற்காக கொடுக்கப்பட்டது? அல்லது இன்னும் வேறு சில படங்களுக்கு, சமூக சீர்திருத்த படங்கள் என்ற பெயரிலே, அல்லது வேண்டியவர், வேண்டாதவர் என்ற பெயரிலே, கொடுக்கப்பட்டிருக்கிறதா? வேறு ஏதாவது இருக்கிறதா என்று அதையும் கூட தயவுசெய்து விவரமாகச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெல்லத் தூள், நாட்டுச் சர்க்கரை இதற்கெல்லாம், 4 சதவீதமாக இருந்தது 3 சதவீதமாக, பலமுனை விற்பனை வரியாக்கப்பட்டிருக்கிறது. அது 4 சதவீதமாகவே இருக்கட்டும், 3 ஆக்க வேண்டியதில்லை. ஆனால், சிங்கிள் பாய்ன்ட் டாக்ஸ் ஆக இருந்தால் போதுமானது. எந்தப் பொருளாக இருந்தாலும், எல்லா பொருள்களுக்கும் சிங்கிள் பாய்ன்ட் டாக்ஸ்தான் விதிக்கப்பட வேண்டும். கண்டிப்பாக, பலமுனை வரி இருப்பது சரியில்லை.

அதேபோல், உணவுப் பொருள்களின்மீது போடப்படுகிற அந்த வரியை உடனடியாக, இப்பொழுதே ரத்து செய்யக் கூடிய அளவு நமது மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். சென்ற ஆண்டே ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, கண்டிப்பாக இந்த ஆண்டு அறிவிப்பார்கள் என்று கருதி, என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. சுவாமிதாஸ் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிற பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் முத்திரைத் தாள் நிர்வாகம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை ஆகிய இந்தக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

இங்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் பலமுனை விற்பனை வரி கூடாது என்ற கருத்துப்பட, கூடாது என்று எடுத்துச் சொன்னார்கள். பல முனை விற்பனை வரியை விதித்து இருப்பதால் வரக்கூடிய சிக்கல்களைப் பற்றியும், அதனால் விளையக்கூடிய ஊழல்களைப் பற்றியும் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். எல்லோரும் ஒருமித்த கருத்தாக, ஒரு முனை வரியாகத் தான் இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான் பல சிக்கல்களைக் களைய முடியும் என்று சொன்னார்கள்.

இந்த மன்றத்திலே கூட பல தடவை இக் கருத்து சொல்லப்பட்டது. ஒரு முனை வரியை விதிப்பதால், பல இன்னல்களை, தொல்லைகளைப் போக்க முடியும்: வியாபாரிகளும் தங்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு இடையூறுகளிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். பொதுமக்களுக்கும் இதனால் நன்மைகள் இருக்கின்றன. அரசாங்கம் வருவாயை இழக்க வேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை: அரசாங்கம் வருவாயைப் பெருக்கிக் கொள்கிற வகையிலே ஒரு முனை வரியாக மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மத்திய அரசு ஒரு கருத்தை, மாநில அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இந்த விற்பனை வரியை அறவே ரத்து செய்துவிட்டு, ஏன் எக்ஸைஸ் வரியைப் போட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்ளக் கூடாது என்ற ஒரு கருத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி எக்ஸைஸ் வரியை விதிப்பதனால் அரசுக்குக் கூடுதல் வருவாய் வருகிறதென்றால், ஏன் இதை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். விற்பனை வரியாகத்தான் இருக்க வேண்டுமென்று அல்ல. நமக்குத் தேவையானது வருவாய். விற்பனை வரியின் மூலம் கிடைக்கும் வருவாயை விட அதிகமாக எக்ஸைஸ் வரியினால் கிடைக்குமானால், மத்திய அரசாங்கம் கொடுத்தாலும் சரி, அல்லது மாநில அரசே தனக்கு எக்ஸைஸ் டியூட்டி என்ற அமைப்பை ஏற்படுத்தினாலும் சரி, வருவாயைப்பெருக்க வழி இருக்குமானால், அதை ஏன் அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது. அரசுக்கு மிகுதியாக எக்ஸைஸ் வரி கிடைக்குமானால், அதை ஏற்றுக்கொள்ள தயங்கக் கூடாது என்ற கருத்தை நான் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்ற குறிப்புகளில் பல இனங்களில் வரி விலக்கு அளித்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். பிற மாநிலங்களில் இருந்து நம் மாநிலத்திற்கு வியாபாரிகள் கொண்டு வருகிற ஆடுகள், மாடுகள், கன்று காலிகள் போன்ற இனங்களுக்கு வரிவிலக்கு அளித்திருக்கிறார்கள். அது குறித்து ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதிலே ஏதோ அரசியல் சித்து விளையாட்டு இருப்பதாக மக்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1978 மார்ச் 14

எனென்றுல் ஆந்திராவில் இருக்கக்கூடிய ஓங்கோல், சிங்க
ராயன்பட்டி போன்ற பத்து சந்தைகளில் இருந்து நமது
மாநிலத்துக்கு ஏறத்தாழ ஒரு வாரத்தில் 60, 70 லாரிகளில் செம்
மறியாடுகள், மாடுகளும் வந்து கொண்டிருக்கின்றன. அந்த மாடு
களுக்கும் ஆடுகளுக்கும் 4 சதவீதம் வரி விதித்துள்ளோம். ஒரு லாரி
யிலே குறைந்தது 100 ஆண்டுகளுக்கு மேல் வரலாம். அப்படி
கணக்குப்போட்டுப் பார்த்தால் குறைந்தது 400 ரூபாய் வரி
யாக இந்த வரிவிதிப்பின் மூலம் ஒரு லாரி ஆடுகளுக்கு வந்து
கொண்டிருக்கிறது. ஆனல் இன்று வரி விலக்குக் கொடுத்திருப்
பதை ஒட்டுமொத்தமாகக் கணக்குப் போட்டுப்பார்த்தால் வரு
கிற வரி ஏறத்தாழ அரை கோடி ரூபாய்-50 லட்சம் ரூபாய்—
இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இழப்பிற்கு இந்த அரசு
எப்படி ஒத்துக் கொண்டது என்பது தெரியவில்லை.

அதே நேரத்தில் ஒன்றை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.
இரண்டு மாதங்களுக்கு முன்னுலே நான் சென்னையிலே விசாரித்துப்
பா: த்தபோது ஒரு கிலோ ஆட்டிறைச்சி 12 ரூபாயாக இருந்தது.
வரிவிலக்கு கொடுத்த பிறகும் விலை குறைந்திருக்கிறதா என்று
பார்த்தால் இல்லை. மாருக, 12 ரூபாய் இருந்தது இப்போது
14 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இப்படி வியாபாரிகள்
கொள்ளை லாபம் ஈட்டும்போது இந்த வரிவிலக்கு எப்படி கொடுக்
கப்பட்டது என்பது தெரியவில்லை. பொதுமக்கள் என்ன சொல்
கிருர்கள் என்றுல், ''ஆடு வியாபாரிகள் நிதியைத் திரட்டிஞர்
கள், வரிவிலக்கு பெற்ருர்கள்'' என்று. ஆகவேதான் இதில்
அரசியல் சித்துவிளையாட்டு இருப்பதாக நான் சொன்னேன்.

எனவே, அரசு இத்தகைய எண்ணத்துக்கு இடம் கொடுக்
காமல் பரிசீலனை செய்து இந்த இழப்பை சரிக்கட்ட வேண்டும்.
இப்படி செய்வதன் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள
உயர்வுக்கு அந்த வருவாயைப் பயன்படுத்தலாம். ஆகவே இதை
மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உணவுப் பண்டங்களுக்கு வரியைப் போடுகிருர்கள்.
உணவுப் பண்டங்களுக்கு வரிபோடக் கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன். நிதி அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்
கொண்டு, உணவுப் பண்டங்களுக்கு விதித்திருக்கிற வரியை
ரத்து செய்யவேண்டும்.

ஒட்டல்களிலே சென்று இட்லி, வடை போன்ற பலகாரங்
களைச் சாப்பிடும்போது 15 பைசா 20 பைசா என்று வரிபோடு
கிருர்கள். இதனுல் ஏழை எளிய மக்கள் மிகவும் கஷ்டப்படு
கிருர்கள். எனவே, இதை நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

1978 மார்ச் 14] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

விற்பனை வரித் துறையைப் பொறுத்தமட்டில், ஏ.சி.டி.ஓ.
டி.சி.டி.ஓ. போன்ற பதவிகளுக்கு 40 சதவீதம் பப்ளிக் சர்வீஸ்
கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கிருர்கள். குருப் 1 குருப் 2 என்ற
நிலையில் 40 சதவீதம் பேர்களை அவர்கள் நியமிக்கிருர்கள்.
ஆனுல் வணிக வரித்துறைக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம்
குரூப் 1 குரூப் 2 சர்வீஸ் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரி
களுக்கு வேறு சலுகைகள் இல்லாமல் போய்விடுகிறது. ஆனுல்
அதே நேரத்தில் அதே குரூப் 1, குரூப் 2 சர்வீஸ் மூலம் தேர்ந்
தெடுக்கப்படுகின்ற டிப்டி கலெக்டர்கள், டி.எஸ்.பி.க்கள் போன்ற
வர்களுக்கு, 5, 6 வருடங்கள் சர்வீஸ் ஆனபிறகு அவர்களுக்கு
ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். கிடைக்கின்ற அளவுக்கு சலுகைகள்
உள்ளன. அரசு இதை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடிமட்டத்திலே இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிற அதி
காரிகளுக்கு பதவி உயர்வு பெற்று மேலே வருவதற்கு வழிவகை
செய்து கொடுக்கவேண்டும். ஆனுல் தற்போது இப்படிப்பட்ட
நிலை இத்துறையில் இல்லை. சாதாரண மட்டத்திலே இருக்கிற
அதிகாரி பதவி உயர்வு பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருந்
தால் புரொமோஷனை அவருக்குத் தடை செய்யக்கூடாது என்று
கேட்டுக் கொள்கிறேன். அவருக்கிருக்கிற அனுபவத்தைப்
பயன்படுத்திக்கொண்டு அவருக்குப் பதவி உயர்வு கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

விற்பனை வரித்துறையில் ஒரு சில அதிகாரிகள் கீழ் மட்டத்தில்
தவறு செய்கிருர்கள் என்ற கருத்தைச் சொன்னுர்கள். அதை
யும் அரசு ஊன்றி கவனிக்கவேண்டும். இந்தக் கருத்து பல
பேர் குறிப்பிட்டு வரும் கருத்து. எல்லோருக்கும் தெரிந்த
விஷயமும் ஆகும்.

காங்கிரஸ் நண்பர் ஒருவர் பேசும்போது அந்தத் துறையில்
பணியாற்றிக்கொண்டு வரும் ஒரு பியூன் லட்சாதிபதியாக மாறி
யிருக்கிருர் என்ற கருத்தைச் சொன்னுர்கள். எங்கள் மாவட்
டத்தில் கூட சின்னச்சின்ன வியாபாரிகள், குறிப்பாக, சாதாரண
ஓட்டல் வைத்து இருப்பவர்கள் அத்தகைய கருத்தைச் சொல்லத்
தவறவில்லை. கடைகளைச் சோதனை போடப் பெரிய அதிகாரிகள்
வரப்போகிருர்கள் என்று சொன்னுல், அவர் போவதற்கு
முன்பே, அவருக்குக் கீழே இருக்கும் பியூன், அவர் செல்ல
இருக்கிற இடங்களுக்குச் சென்று தகவல் கொடுத்து, உங்களுக்கு
அவரிடமிருந்து தொந்தரவு இல்லாமல் இருக்கவேண்டும் என்றுல்
இன்னின்ன செய்யுங்கள் என்று முறைப்படுத்தி விடுகிருர். இந்த
நிலைமை இருப்பதால், அங்கே ஊழல் நடைபெறுவதற்கு இடம்

இருக்கிறது. இதில்எல்லோருக்கும் பங்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். இதில் உண்மை இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அத்தகைய நிலையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் இருக்கும் பெரிய அதிகாரி ஒருவர் எங்கள் மாவட்டத்திற்கு வந்தார். அவர் மகளுக்குக் கல்யாணம். அவர் பயணியர் விடுதியில் வந்து உட்கார்ந்து கொண்டு, கீழே இருக்கும் சிப்பந்திகளைப் பார்த்து, இங்கே நல்ல பட்டுத் துணி கடைகள் இருக்கின்றனவா என்று கேட்டார். அவர்கள் ஒரு இரண்டு மூன்று கடைகள் பெயரைச் சொல்ல, அவர் உடனே என் மகளுக்குக் கல்யாணம் வருகிறது, ஆகவே, மாதிரிக்கு பட்டுச் சேலைகள் இருந்தால் எடுத்து வாருங்கள் என்று சொன்னார். அவர்களும் ஒவ்வொரு கடையில் இருந்தும் ஒரு இரண்டு மூன்று. பட்டுச் சேலைகள் எடுத்து வந்தார்கள். அவர் எல்லாவற்றையும் பார்த்து விட்டு, நன்றாக இருக்கிறது என்று எடுத்து வைத்துக்கொண்டு போய்விட்டார். பணமும் கொடுக்கவில்லை. கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் மிகவும் அங்கலாய்த்தார்கள். அந்த அதிகாரியின் பெயரை நான் வெளியில் சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கும் வெளியே சொல்ல முடியவில்லை, சொன்னால் அவர்கள் நீண்ட நாள் வேலையில் இருக்க முடியாது. ஆகவே, இந்த மாதிரி இருக்கும் இந்தச் சூழ்நிலையை அந்தத் துறையில் இருந்து அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி நான் பேசும்போது, 1962–63என்று நினைக்கிறேன், ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம் என்று கருதுகிறேன். இதேபோல் ஒரு அதிகாரியைப் பற்றி இந்த மன்றத்தில் பேசினேன். அப்படிப் பேசும்போது, பெயர் குறிப்பிடவில்லை. அவர் செய்து வந்த முறைகேடான செயலை சூசகமாக அரசுக்குத் தெரியப்படுத்தினேன். அவர் தினசரி 5 பாக்கட் ப்ளேயர்ஸ் சிகரெட் குடிப்பார். ஒரு பாக்கட் விலை 1–50 என்றால் 5 பாக்கட் விலை 7–50 ஆகிறது. அவருக்குச் சம்பளம் வருவதைப் பார்த்தால் ரூ. 250 தான், அப்படியிருக்கும் போது, அவர் எப்படி சிகரெட் வாங்கிக் குடிக்க முடியும் என்று கேட்டேன். அப்போது காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அவர் என்னை தனியாக அழைத்து, யார் அந்த அதிகாரி என்று கேட்டார். நீ விவரம் சொல் என்று கேட்டார். நான் சொன்ன உடனே ரகசியமாக போலீஸ் அதிகாரிகளை வைத்து, 3 மாதத்திற்குள் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அவர் சஸ்பென்ட் செய்யப்பட்டார். அரசு பின்னர் அவர் மீது வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்குகளில் அவர் தாக்குப் பிடிக்க முடியவில்லை, டிஸ்மிஸ் செய்யப்படுவார் என்ற நிலை வருகிறபோது, அவர் தற்கொலை செய்து கொண்டு இறந்து விட்டார் இதை எதற்காகச்

சொல்கிறேன் என்றால், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும் கருத்துக்களில் உண்மை நிச்சயமாக இருக்கும் என்பதை தெளிவுபடுத்தத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தற்கொலைக்கு நீங்கள் காரணமா ?

திரு. ஏ. சுவாமிதாஸ் : தற்கொலைக்கு நான் காரணம் அல்ல. இந்த மன்றத்தில் அவரைப் பற்றிச் சொல்லியதால் அரசாங்கம் அவர் பேரில் நடவடிக்கை எடுத்தது என்பதைக் குறிப்பிடுவதற்காகச் சொன்னேன். அப்போது காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இல்லாமல் இருந்தால் இந்த மாதிரி நடவடிக்கை வந்து இருக்காது. அருள் ஐ.ஜி. ஆக இல்லாமல் இருந்திருந்தால் வந்து இருக்காது. ஆகவே, உறுப்பினர்கள் சொல்லும் குற்றச்சாட்டுகளை அரசாங்கம் ரகசியமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிஷ்டம், ஆசவம், கசாயம் போன்றவைகளை உற்பத்திச் செய்ய அரசு அனுமதி கொடுத்திருக்கிறது. அதில் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஏனென்றால் மது அருந்துபவர்கள், அரிஷ்டத்தில் மது இருப்பதாக எண்ணி, மிகுதியாக அருந்த ஆரம்பிக்கிறார்கள். சிலர் அதை ஒரு வியாபாரமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரிஷ்டத்தில் நல்ல வகையும் இருக்கிறது. சிறந்த வைத்தியர்கள், மருத்துவத் துறையில் நிபுணர்கள் தயாரிக்கும் அரிஷ்டம் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. ஆனால் அரசு யார் யாருக்கு அரிஷ்டம் தயாரிக்கும் உரிமத்தை வழங்கியிருக்கிறது என்று பார்த்தால் மருத்துவத் துறையில் அனுபவம் இல்லாதவர்களுக்கெல்லாம் கூட உரிமம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அரிஷ்டத்தை எப்படி தயாரிக்க வேண்டும், என்னென்ன பொருட்களை கலவையாக கலக்க வேண்டும் என்பது பற்றி தெரியாதவர்களுக்கெல்லாம் உரிமம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அத்தகையவர்களை அரசு ஆதரிக்கிறது என்ற குற்றச்சாட்டை இங்கே நான் சுமத்துகிறேன்.

மதுவிலக்கு, அரிஷ்டம் உற்பத்தி இவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பிலே ஒரு டி.எஸ்.பி.யை போட்டிருக்கிறார்கள். அவருக்கு உதவியாக இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இந்த வைத்தியர்கள் கவனித்துக் கொண்டால், எப்படி வேண்டுமானாலும் அவர்கள் இந்த அரிஷ்டத்தை உற்பத்தி செய்து, குறைந்த விலைக்கு விற்று, மக்கள் மத்தியிலே மது அருந்தும் பழக்கத்திற்கு ஊக்குவிப்பது போன்ற நடவடிக்கையில் ஈடுபடலாம் ; ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலையை அரசு கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். அரிஷ்டங்களை தயாரிப்பதைச் சரியாக கண்காணிக்க ஒரு குழுவை வேண்டுமானாலும் போடலாம். அந்தக் குழுவில்

நல்ல அனுபவம் வாய்ந்த அலோபதி மருத்துவர் ஒருவர், சித்த வைத்தியர் ஒருவர், ஹோமியோபதி வைத்தியர் ஒருவர், பார்மசிஸ்ட் ஒருவர் இருக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அதில் இடம் பெறலாம். உற்பத்திச் செய்கின்ற அரிஷ்டம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறதா, அது மனித உடம்புக்கு ஏற்றதுதானா, என்பதை அந்தக் குழுவினர் ஆராய்ந்து பார்த்து, சிறந்ததாக இருந்தால் மட்டும் லைசென்ஸ் வழங்க வேண்டும். ஏற்கனவே லைசென்ஸ் கொடுத்திருந்தால் அவர்கள் உற்பத்தி செய்யும் அரிஷ்டத்தை வரவழைத்து பரிசோதனை செய்து பார்த்து, அது சிறந்ததாக இருந்தால் தொடரச் செய்யலாம். இல்லாவிட்டால் ரத்து செய்துவிட வேண்டும். இந்த முறையில் லைசென்ஸ் வழங்குவது பற்றி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைத் தாள்களைப் பொறுத்த வரையில், அண்டை மாநிலங்களில் விலை குறைவாக இருக்கிறது. தமிழ்நாட்டில் அதிகம். எங்கள் பகுதியை ஒட்டி கேரளா இருக்கிறது. அங்கு முத்திரைத் தாள்-விலையும் குறைவு; பத்திரப் பதிவு கட்டணமும் குறைவு. ஆகையால் அங்குள்ளவர்கள் பத்திரம் பதிக்க வேண்டும் என்றால் கேரளாவுக்குப் போய்விடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு லாபம் இருக்கிறது. இப்படி அண்டை மாநிலங்களுக்குப் போய்விடுவதனால் நம்முடைய மாநிலத்திற்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. அண்டை மாநிலங்களுக்குப் போய் பதிவு செய்பவர்களையும் நாம் தடுப்பதற்கு வழியில்லை. அண்டை மாநிலத்து வரையும் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. இன்னும் சொல்லப்போனால் அண்டை மாநிலத்திற்குப் போய் பதிவு செய்வதனால் நம்முடைய மாநிலத்திற்கு இழப்பு ஏற்படுகிறது; பஞ்சாயத்துக்கும் வருவாய் இல்லை; ஒன்றியத்திற்கு வருமானம் இல்லை; ரெஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு வருமானம் இல்லை. ஆகையால் இதை மறு பரிசீலனை செய்து அண்டை மாநிலங்களில் இருப்பதைப்போன்று, நம்முடைய மாநிலத்திலும் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

கடைசியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மதுவிலக்கு எப்படி அமுல்படுத்தப்படுகிறது என்பது பற்றிக் குறிப்பிட வேண்டுமானால் இங்கே பல உறுப்பினர்களும் பேசிய கருத்தைத்தான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். மதுவிலக்கை அமுல்படுத்தும் காவல் துறையினரைப் பார்த்தால், அவர்களே கூடியிருந்து திருட்டுச் சாராயம் குடிப்பதாகத் தெரிய வருகிறது. காவல் துறையிலிருக்கும் காவலரை சரியாகக் கண்காணித்துவிட்டால் அமுல்படுத்தும்முறை ஒழுங்காக இருக்கும் என்று கருதுகிறேன்.

காவல் துறையினர் இப்போது என்ன செய்கிறார்கள்? 10, 15 வழக்குகளைப் போடுகிறார்கள். அது பெயருக்குத்தான். மற்றபடி அவர்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் கள்ளச் சாராயம், திருட்டுச் சாராயம் உற்பத்திச் செய்வதை அவர்கள் ஊக்குவிப்பதாகத்தான் இருக்கிறது. ஆகவே, காவலர் நடவடிக்கைகளை சரியாகக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நேரம் ஆகிவிட்டது என்பதை நான பலமுறை நினைவுபடுத்திவிட்டேன். உங்களை பேச அனுமதிக்கிறேன். ஆனால் பின்னால் ஒருவருக்கு அனுமதியை மறுத்துவிடுவேன். நீங்கள் 20 நிமிடங்களுக்கு மேல் பேசிவிட்டீர்கள்.

<u>திரு. ஏ. சுவாமிதாஸ்</u> ; இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

இப்போது வெளி மாநிலங்களிலிருந்து அந்நிய நாட்டு மது வகைகள் நம்முடைய மாநிலத்திற்கு வந்துகொண்டிருக்கிறது. அதை எல்லாம் தீவிரமாகக் கண்காணித்து, தடை செய்ய வேண்டும். இங்கு உற்பத்தியாகின்றவைகளையும் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்..

(முற்பகல் 11-40)

* <u>திரு. மு. அம்பிகாபதி</u> : பேரவைத் தலைவரவர்களே, பொது விற்பனை வரியும் ஏனைய விற்பனை வரியும் என்கின்ற இந்தத் தலைப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1975–76-ஆம் ஆண்டில் 228 கோடி ரூபாய் இருந்த வருவாய் 1976–77-ஆம் ஆண்டில் 255 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்து இருக்கிறது. முதல் ஆண்டைக் காட்டிலும் 1976–77-ல் 27 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் அதிகமாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, வரி உயர்ந்திருக்கிறது என்பதுதான் இதனுடைய உண்மையான அர்த்தமாகும்.

இந்த வரி விதிப்பு முறையைப் பொறுத்து எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். குறிப்பாக நமக்கு மது விலக்கால் ரூபாய் 140 கோடிக்கு மேல் இழப்பு வருகிறது என்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டினார்கள்.

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 14

இதனை அமல் படுத்துவதிலே இருக்கின்ற சிரமங்களையும், சிக்கல்களையும் பல்வேறு உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மதுவிலக்கினை அமல் செய்கின்ற கொள்கையின் விளைவால் குறிப்பாக வழக்குகள் உயர்ந்து இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க முடியும். கள்ளத்தனமாக சாராயத்தை எடுத்துச் செல்வது 1975–76-லே 6,010. 1976–77-லே 10,569, 1977 ஏப்ரலில் இருந்து 1977 டிசம்பர் வரை 13,137. இத்தகைய நிலையில் இது வளர்ந்து கொண்டே நமக்கு. வருகிற இழப்பையும் கணக்கிலே வைத்துக்கொள்கிற போது இந்த மதுவிலக்குப் பிரச்சினையினால் நமக்கு வருகின்ற இழப்பினை மத்திய அரசு தரவேண்டுமென்று கேட்பதை விடுத்து இந்த மதுவிலக்கு கொள்கை என்பது சரிதானா என்பதைப் பரிசீலிப்பதற்கு ஒரு சர்வ கட்சி கமிட்டி அமைத்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, பல்வேறு பொருட்களுக்கும் விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. வரி என்பது உயர்ந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல பல முனை விற்பனை வரிக்கு பதிலாக ஒரு முனை விற்பனைவரி அதாவது மல்டி பாயிண்ட் டாக்ஸ் என்பதற்குப் பதிலாக சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். அதையே நானும் வலியுறுத்துகிறேன்.

குறிப்பாக எவர்சில்வர் தகடுகளுக்கு 4 சதவீதம் வரி விதிக்கிறார்கள். அதை இறக்குமதி பத்து சதவீதமாக உயர்த்தி M. M. T. C. மூலமே வசூலிக்கலாம். பலமுனை வரியை ஒரு முனை வரியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக கும்பகோணத்தில் விற்பனை வரி கட்ட முடியாமல் பல்வேறு எவர்சில்வர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்காக அவர்களுடைய வீடுகள் ஜப்தி செய்யும் நிலை வந்தது. இவ்வாறு பலவித சிரமங்கள் வந்திருக்கின்றன. ஆகவே இதை அரசாங்கம் பரிசீலித்து எவர்சில்வர் தகடுகளின் மீது ஒரு முனை வரி விதிப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கோழி உயிருடன் விற்றால் வரி உண்டு. அதை உரித்து விற்றால் வரி கிடையாது. இதனால் கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களுக்கு பெரிதும் கஷ்டமாக இருக்கிறது ஆகவே, கோழிக்கு விதிக்கின்ற வரியை அறவே ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று சிவகாசி தீப் தொழிற்சாலை இருக்கிறது. அங்கேயும் பலமுனை வரிக்குப் பதிலாக ஒருமுனை வரி விதிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 14] [திரு. மு. அம்பிகாபதி]

விவசாயிகள் உபயோகிக்கும் பொருள்கள் அனைத்துக்கும் வரிகளை ரத்து செய்ய வேண்டும். மீன் வியாபாரத்திலும் ஒருமுனை வரியே போட வேண்டும்.

குறிப்பாக, எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். பல்வேறு வரிகள் விதிக்கப்படுவதோடு ஓட்டல் பண்டங்களின் மீதும் வரி விதிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். இதை கடந்த முறை பட்ஜெட்டிலே நாங்கள் சுட்டிக் காட்டினோம். கடந்த வரிவிதிப்பு சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீதும் பேசினோம். ஓட்டல்களில் இட்டிலிக்கும், காப்பிக்கும், சட்னிக்கும் வரி விதிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடித்த 'குலேபகாவலி என்ற படத்தில் ஒரு பாடலில் தடுக்கி விழுந்தால் வரி, குனிந்து நிமிர்ந்தால் வரி, இட்டிலிவரி, சட்னி வரி, பட்டினி வரி என்று அவர்கள் பாடி நடித்திருக்கிறார்கள். இட்டிலி வரி, சட்டினி வரி, தடுக்கி விழுந்தால் வரி, குனிந்து நிமிர்ந்தால் வரி இப்படிப்பட்ட பல வரிகள் அந்த ஆட்சியிலே விதிக்கப்படுவதாகப் பாடியிருக்கிறார்கள்.

இன்றைக்கு அவர்கள் முதல் அமைச்சராக வந்திருக்கக்கூடிய இந்த ஆட்சியில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் இந்த மானியக் கோரிக்கை மீது முடிவுரை சொல்லும்போதே ஹோட்டல்களுக்கு உள்ள வரிகள் அத்தனையும் ரத்து செய்து விட்டோம் என்று சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய ப்யூன்கள் தவறு செய்வதாகச் சொல்கிறார்கள். ப்யூன் முதல் பெரிய அதிகாரிகள் வரை தவறு செய்கிறார்கள். குறிப்பாக ஹோட்டல்களுக்கு வரி விதித்திருப்பதால் ரவா தோசை, முருகல் தோசை, மசால் தோசை இவைகள் எல்லாம் விற்பனை வரி அலுவலகத்திற்கு அதிகமாக வேகமாக சைக்கிளில் போகக் கூடிய வாய்ப்புதான் இருக்கிறது. விடிந்து எழுந்து ஹோட்டலுக்குச் சென்று காப்பி குடித்தால் உடனே வரி, என்று எதற்கெடுத்தாலும் வரி, வரி என்று இருக்கிற நிலையை மாற்றி, பல்வேறு வரி முறைகள் இருப்பதை மாற்றி ஹோட்டல்களுக்கு விதிக்கப்படும் வரிகளை ரத்து செய்வதோடு விற்பனை வரி பற்றி மத்திய அரசின் அணுகுமுறைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த விற்பனை வரி என்பது நமக்கு காமதேனு ...ல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த ...விக்க வேண்டி கடத்திச் செல்வதுபோல் எக்ஸைஸ் வரி என்ற நிறுத்தத்தில் தோற்றத்தைக் காட்டி நமது தமிழக நிதி அமைச்சரான நடவடிக் ...
நிலிக்கவேண்டிய

மயக்குவதாகத் தெரிகிறது. நிதி அமைச்சர் அவர்கள் மயங்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். எக்ஸைஸ் ட்யூட்டி என்று விதித்து எல்லாவற்றையும் அவர்களிடம் கொடுத்துவிட்டு எதற்கும் நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி நோக்கி படை எடுக்கவேண்டும் என்ற ஒரு முறையில் அவர்கள் செல்வதாகத் தெரிகிறது. இந்த முறையை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இன்றுள்ள பல்வேறு வரிகளை மாற்றியமைத்து ஒருமுனை வரியை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று மதுவிலக்கு சம்பந்தமாக பெர்மிட் வாங்கிக் குடிக்கிறார்களா, வாங்காமல் குடிக்கிறார்களா? என்பதல்ல பிரச்னை. நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அல்லது இந்தியா முழுவதும், வெளிநாடுகளில் கூட மதுவிலக்கு அமல் நடத்தியது அமலாக வில்லை. திருக்குறளில் திருவள்ளுவர் சொல்கிறார்,

"கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு."

என்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார். அவர் சொல்லியதற்குப் பிறகும் கள் இருக்கிறது, மது இருக்கிறது, கடைகள் இருக்கின்றன. காரணம் என்ன?

இதற்கான அடிப்படைக் காரணம் பற்றி நாம் பரிசீலித்து மதுவிலக்கு சம்பந்தமாக அதனால் ஏற்படுகிற இழப்பு சம்பந்தமாகவும் இந்த வரிவிதிப்புக் கொள்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான முறையில் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் பல்வேறு துறைகள் இருக்கின்றன. சிறிய வியாபாரிகள், ஒரு லட்சத்திற்குக் கீழ் வருமானம் வருகிறவர்கள், விற்பனை வரி அதிகாரிகளைக் கண்டு சிம்ம சொப்பனம்போல், இவர்கள் கடைக்குள் வந்தால் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று பயந்து செத்துக்கொண்டு கடைகளை நடத்துகிற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் குறிப்பாக நிலவிவருகிறது. அரசாங்க ஊழியர்கள் என்று சொல்கிறபோது அவர்கள் பொதுமக்களின் சேவகர்கள் என்ற மனப்பான்மை ஏற்படுவதற்குப் பதிலாக சில குறிப்பிட்ட அதிகாரிகள் அவர்களை மிரட்டுவதும், தங்களுக்கு இசைவாக நடத்துவதும் என்ற போக்கு இன்று வளர்ந்திருக்கிறது, இது தொடர்ந்து இருக்கிறது.

வரிவிதி... என்ற முறை இருக்கும்போது சிறிய வர்த்தக ...வனுதே பேராட்டுகிற அந்தகைய தன்மையை சிலர் மேற் அங்கேயும் பலமுள். அதிலிருந்து அவர்களை விடுதலை செய்து குரிய நடவடிக்கைமுறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த

குறிப்பாக, மதுவிலக்கு சம்பந்தமாக சர்வகட்சிக் குழுக்களை அமைத்து கூட்டிப் பேச வேண்டும். இந்த மதுவிலக்கின் விளைவாக லட்சக்கணக்கான மரத் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். ஜின், பீர், விஸ்கி, ரம், வைன் இவற்றைச் சாப்பிடலாம், கள்ளைச் சாப்பிட்டால் மட்டும் பாதகமா? என்று வெளியில் பேசுகிறார்கள். எனவே இந்த மதுவிலக்குத் திட்டத்திலிருந்து கள்ளுக்கு விலக்கு அளித்தால் என்ன என்பதுபற்றி அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

கள்ளில் உணவுச் சத்து அதிகம் இருப்பதாக ஆய்ந்து ஆராய்ந்த அறிஞர்கள் அறிக்கைகள் பல வெளியில் வந்திருக்கின்றன. விஸ்கி, சாராயம் போன்றவற்றில் கெடுதல் இருக்கிறது, ஆனால், கள்ளில், மாண்புமிகு உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் சொன்னதுபோல், ஏ-ல் இருந்து இஸட் வரை எல்லா வைட்டமின்களும் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைப்பற்றியும் அரசு பரிசீலித்துப் பார்க்க வேண்டும். நாம் மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறோம், அவர் சொன்னார், இவர் சொன்னார் என்றெல்லாம் சொல்லி வீணாக போலீஸ்க்கும் தொந்தரவு, பொதுமக்களுக்கும் தொந்தரவு, அரசாங்க...ற்கும் வரி இழப்பு. எதைஎதையோ குடித்துவிட்டு ...மக்களின் பலரின் உடல் நலம் பாதிப்பு, எரிப்பு, குடி...ப்பு, தொடர்ந்து சிறை என்ற நிலைதான் நாட்டில் வள...ண்டு இருக்கிறது.

(முற்பகல் 11–50)

...றுப்பினர் ஒருவர் சொன்னார். அபராதத் தொகை... ...ரித்துவிட்டால் இந்தத் தொந்தரவு இருக்காது என்... ...ர்கள். கொலை செய்தால் தூக்கு தண்டனை என்பது ... கொலைகள் நடைபெறுகின்றன, என்ன காரணம்? ...டினால் சிறை தண்டனை கிடைக்கும் என்று தெரிந்தும் தி...டுகள் நடைபெறுகின்றன. என்ன காரணம்? நாட்டில் போலீஸ், துப்பாக்கிகள், சட்டம், விதிகள் போன்றவை எல்லாம் இருந்தும் தவறுகள் நடைபெறுகின்றன. என்ன காரணம் social being creates social consciousness 'சமுதாய வாழ்வு சமுதாய உணர்வுகளை உருவாக்குகிறது என்பது தான் நிலை. எனவே, சமுதாய அமைப்பு முறையை மாற்ற வேண்டும். இது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரியாததல்ல. ஆகவே நிதி அமைச்சர் அவர்கள் இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விதிக்கப்படுகின்ற வரிகளை வசூலிக்க வேண்டியவர்கள்—என். ஜி. ஓக்கள் இன்றைக்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். வரிவிதிப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அலுவலகங்கள், வரி வசூலிக்கவேண்டிய

[திரு. மு. அம்பிகாபதி] [1978 மார்ச் 14]

அலுவலகங்கள் எல்லாம் கடந்த பத்து நாட்களாக மூடப்பட்டு சாத்தப்பட்டு கிடக்கின்றன. இதன் காரணமாக நாட்டிலே மக்களிடையே ஒரு பதட்டமான நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் அந்த என். ஜி. ஓ.க்களை கௌரவப் பதிவிலா அரசு ஊழியர்களை அழைத்துப் பேசுவதற்கு தயங்கக் கூடாது. போராட்டத்தைப் பார்த்து பதட்டப்படக் கூடாது.

இன்றைக்கு என்.ஜி.ஓக்களின் வேலைநிறுத்தம், நாளைக்கு பட்டதாரி ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் செய்வார்கள். அதற்கு மறுநாள் விவசாயிகள் வரி கொடுக்கமாட்டோம் என்று கோயம் புத்தூரிலிருந்து மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள எல்லா விவசாயி களும் அறிவிக்கலாம். இவ்விதமாக போராட்ட அறிவிப்புகளை கண்டு அரசு பதட்டமோ ஆத்திரமோ அடையக் கூடாது. அல்லது, ஏதோ இந்த அரசை கவிழ்க்க நினைக்கிறார்கள் என்று நினைக்க வேண்டியதில்லை. இவர்களை எல்லாம் அழைத்து பேசு கின்ற முறையில் பிரச்னையை தீர்க்கவேண்டும்.

இன்றைக்கு மருத்துவமனை ஊழியர்கள் வேலை நிறுத்தம், நாளையிலிருந்து நகர சுத்தி தொழிலாளர்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். என். ஜி. ஓக்களுடைய போராட்டத்தைப்பற்றியும் மீண்டும் மீண்டும் பரிவோடு, மிகுந்த பொறுமையோடு அவர்களை எல்லாம் அழைத்து பேசி நல்ல முடிவுகளை எடுக்கின்ற முயற்சியில் நமது நிதி அமைச்சர் அவர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இருக்கின்ற எல்லா பலமுனை வரிவிதிப்பையும் ஒரு முனை வரியாக ஆக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் அளித்திருக்கின்ற மசோதா மீது எனக்குத் தெரிந்த சிலபல கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பினை நல்கி யதற்கு தலைவருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய அரசின் ஒரு முக்கியமான கொள்கை என்ற அளவில் ஒருமுனை வரிவிதிப்பு கொள்கை இருக்கிறது. இந்த அரசு ஏழை எளிய மக்களுக்காக எந்தவிதத்தில் எல்லாம் இன் னும் பல நன்மைகளை செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து அதை செயல்படுத்தவேண்டும் என்கின்ற அளவில் இதுபோன்ற மசோதாக்கள் இன்றைய தினம் வந்திருக்கிறது. இன்றைய தினம் இதை பாராட்டி பேசுவது அதிகப்படியாக இருந்தாலும் கூட, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற குறைந்தபட்ச நேரத்தில் எனக்குள்ள சில குறைபாடுகளை கூறலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன்.

1978 மார்ச் 14] [திரு. ந. தனசேகரன்]

சோதனைச் சாவடிகளை எடுத்துக்கொண்டால், தமிழகம் முழு வதற்கும் பல இடங்களில் இருந்து வருவது நமக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்து வருகின்ற சோதனைச் சாவடிகளில் முறைகேடுகள் அதிகமாக நடக்கிறது. வரிவிதிப்பின் மூலம் அரசாங்கத்திற்கு வருவாயை அதிகரிக்கவே இந்தத் துறைகள் இயங்கவேண்டும். அப்படி எதிர்பார்க்கின்ற அளவுக்கு இந்த சோதனைச் சாவடிகள் இயங்கவில்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சோதனைச் சாவடிகளில் என்ன நடைபெறுகிறது என்றால், லாரிகள் வந்தால் போதிய அளவுக்கு நியாயமாக சோதனை செய்யப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. சோதனைச் சாவடியில் ஒரு லாரி வந்து நின்றால், லாரியோடு இருக்கும் கச்சாத்து, கைத்தபால் போன்றவைகளைப் பார்த்துவிட்டு; இது இந்த நபரா, அப்படியென்றால் வண்டி போகலாம், அடுத்த தைப் பார்த்துவிட்டு இந்த நபரா, வண்டியை நிறுத்திப் போடு, என்று சொல்லுகின்ற அவலக்கேடான நிலையில் சோதனைச் சாவடிகள் நடந்து கொண்டிருப்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருளுக்கு அகில இந்திய அளவில் வரி நீக்கப்பட்டிருக்கிறது நம்முடைய அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும், சோதனைச் சாவடிகளில் அப்படிப்பட்ட பொருட்களுக்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்தும், அதற்குரிய சான்றுகள் இணைக்கப்பட்டிருந்தும் அங்குள்ள அதிகாரிகள் தவறான முறை யில் ஏதாவது கொடுத்தால் விட்டுவிடுவது, கொடுக்காவிட்டால் அங்கேயே லாரிகளை மடக்கிப்பிடித்து போடுவது, அபராதத் தொகை வசூலிப்பது போன்ற நிலைமைகள் இருக்கின்றன.

எனக்குத் தெரிந்து பல லாரிகளுக்கு அபராதத் தொகை வசூலித்தப் பிறகு, அந்த அபராதத் தொகை அப்பீல் முறை யீட்டின் மூலம் திரும்பப் பெறக்கூடிய சூழ்நிலையை வணிகர்கள் பெற்றிருக்கிறார்கள். இப்படி உயர் மட்ட அளவில் அப்பீல் செய்து திரும்பப் பெறுகின்றபோது, கீழ்மட்ட அளவிலே இருக்கின்ற இந்தச் சோதனைச் சாவடிகளில் அந்த முறையை ஏன் கையாளக் கூடாது என்பது தெரியவில்லை. எனவே, நமது அரசு இந்த சோதனைச் சாவடிகளில் அதிகம் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

வெல்லத்தைப் பொறுத்தமட்டில் சிறு வியாபாரிகள், விவ சாயிகள் பல முறையீடுகளை அரசுக்கு எடுத்து வைத்திருப்பதன் காரணமாக, அந்த முறையீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு

[திரு. ந. தனசேகரன்] [1978 மார்ச் 14

ஏதாவது செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் ஒருமுனை விற்பனை வரியை உயர்ந்தபட்சம் எந்த அளவில் செலுத்த முடியுமோ அந்த அளவிலாவது அல்லது பல முனை விற்பனை வரியை குறைந்த பட்சம் செலுத்துவதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் செயல்பட முடியுமா என்பதில் கொஞ்சம் அரசு ஆராயும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

அன்றாட உபயோகப்பொருள்களின் மீது அதிகமான விற்பனை வரி போடப்பட்டிருக்கிறது என்ற குறைபாடுகள் இந்த அரசுக்கு வந்திருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். இருந்தாலும், அப்பேர்ப்பட்ட அன்றாட உபயோகப் பொருள்களின் மீது ஓரளவுக்கு இந்த விற்பனை வரியைக் குறைக்கவோ, அல்லது அறவே நீக்கவோ இந்த அரசு முற்படுமானால் கீழ்மட்டத்திலே இருக்கக் கூடிய ஏழைகளுக்கு இது உபயோககரமாக இருக்கும் என்பதை நான் எடுத்துவைக்க ஆசைப்படுகிறேன்.

அரசுத் துறையில் இருந்து போடப்படுகின்ற இந்த விற்பனை வரியை, ஓட்டல் அதிபர்கள் விற்பனை செய்கின்ற பண்டங்களின் மீது போட்டு, சாப்பிட வருகின்றவர்களை வரிகொடுத்துவிட்டுத் தான் நீங்கள் சாப்பிட வேண்டுமென்கிற ஒரு நிலைமை இப்பொழுது இருக்கிறது. நான் அரசுத் துறையைக் கேட்டுக் கொள்வது இந்த விற்பனை வரியை ஓட்டல் அதிபர்கள் மொத்தம் விற்கின்ற பொருள்களின்மீது, அந்தத் தொகையின் மீது போடவேண்டுமே அல்லாது இப்படி வசூலித்துக் கொடுக்கக்கூடாது என்று சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று, நான் அரசை இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வரி விதிக்கும்போது ரசீதுகள் கொடுக்கப்படுகிறது. மேல் முறையீட்டுற்குச் செல்லும்போது, அந்த ரசீதுகளை வைத்து மேல் முறையீடு செய்கிறார்கள். அப்படி மேல் முறையீடு செய்தபிறகு, அந்தப் பணம் திருப்பிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை வணிகர்கள் பெறுவார்களானால், அந்தப் பணம் அவர்களுக்குத் கிடைப்பதற்கு பல ஆண்டுக் காலம் காலதாமதமாகிறது. அதனை டிரஷரி போன்ற இடத்திற்குச் சென்று நின்று வாங்குவதற்கு காலத்தை அவர்கள் கழிக்கவேண்டியிருக்கிறது. இந்த ஒரு மிக மோசமான நிலைமை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரியை வசூலிப்பதற்கு இந்த இலாகாவிற்கு எந்த அளவிற்கு உரிமை இருக்கிறதோ, அதைப்போலவே வரியை வஜா செய்யும் போது திருப்பிக் கொடுப்பதற்கும் இந்த இலாகாவிற்கு உரிமை அதிகாரம் இருக்க வேண்டுமென்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 மார்ச் 14] [திரு. ந. தனசேகரன்]

வரி விதிப்பிலே பல விசித்திரங்கள் நடந்திருக்கின்றன என் பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். கயிறு போன்ற சாதாரண தொழில் நடத்தி வரு கின்ற குடிசைத் தொழிலுக்கு, 10, 20 தாய்மார்களை வைத்து பின்னல் கயிறு தயாரிக்கின்றவர்களுக்கு வரி விதிப்பு கிடையாது. சென்னையில், ஒரு வணிகர் தெரிந்தோ, தெரியாமலோ ஒரு விற்பனை வரி அதிகாரியிடம் போய் இதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, அந்த அதிகாரி ஒரு விசித்திர மான உத்தரவு போட்டிருக்கிறார். நார் மூலம் பின்னல் கயிறு தயாரித்தால் அதற்கு வரி கிடையாது. பட்டு நூல் மூலம் தயாரிப்பதற்கு வரி உண்டு என்றும் உத்தரவு போட்டிருக் கிறார். பட்டு ஒரு அத்தியாவசியப் பொருள் என்றோ, கிடைக் காத பொருள் என்றோ நினைக்க வேண்டாம். கயிறு மூல மாகத் தயாரிக்கப்படுகின்ற நூல் பட்டு அல்லது பம்பர்பட்டு நூலாக இருந்தால் அதற்கு வரி போடப்படுகின்றது என்பதை இந்த அரசு உணர்ந்து, இந்த அதிகாரிகளுக்கு, சென்னையிலே இருக்கக்கூடிய இந்த அதிகாரி கூறுவது இந்தத் தொழிலுக்கு நல்லதல்ல என்பதைக் கருதி, இந்த அதிகாரிகள் கூறுவதை கவனத்தில் வைத்து, இந்த நூல் கயிறு போன்றவற்றிற்கு வரி கிடையாது என்று சொல்லி, இந்தத் தொழிலிலே உள்ளவர்களுக்கு தொல்லைத் தரக்கூடாது என்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மரத்திற்கு ஒரு முனை விற்பனை வரி என்கின்ற நிலைமை இருக்கிறது. இன்றைய தினம், கேரளப் பகுதியிலே இருந்து மொத்த வியாபாரி ஒருவர் தமிழகப் பகுதிக்கு மரத்தைக் கொண்டு வந்து, தான் வரி செலுத்தியதாகச் சொல்லி, செங்கோட்டையிலே இருக்கின்ற அந்தப் பணக்காரர் பல லட்சக் கணக்கான ரூபாய்களை வசூல் செய்து ஏப்பம் விட்டு விட்டார். நமது அதிகாரிகள் அந்த மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கிச் சென்ற சில்லறை வியாபாரிகளைத் தொந்தரவு செய்கிறார்களே தவிர, மொத்த வியாபாரியைப் பிடித்து, அந்தப் பணத்தை முழுவதும் நமது அரசுக்கு சேரவேண்டிய நடவடிக்கையை மேற்கொள்கிறாரா என்றால், நிச்சயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, அந்தச் செங்கோட்டைப் பகுதியிலே இருக்கின்ற அந்தப் பணக்காரரை கண்டுபிடித்து, அந்த மொத்த விற்பனை வரியை வசூல் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00.)

மதுவிலக்கின் மூலமாக நாம் இழந்துள்ள தொகையை ஈடு கட்ட வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு கேட்டாலும் கிடைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாத நிலைமை நீடித்துக் கொண்டே போகும் காரணத்தால் எனக்குத் தெரிந்த சிறு ஆலோ

சனேயை எடுத்து வைப்பதன் மூலம் பெரிய கொள்கையை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். தூத்துக்குடி, வேதாரண்யம் போன்ற பகுதிகளில் அதிகமாக விளையும் உப்புக்கு மத்திய சர்க்கார் செஸ் என்ற வரி வைத்திருக்கிறது. அதன் மூலம் மத்திய சர்க்காருக்கு ஒரு தொகை கிடைக்கிறது. அதைப் போல் மதுவிலக்கால் பாதிக்கப்பட்டுள்ள நிலைமையில் உப்புக்கு நம்முடைய மாநில அரசு ஒரு வரியைப் போட்டால் கூட அது தவருகாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

மொத்தத்தில் ஊழல் மலிந்த இலாகாவாக இருந்த வணிக வரி இலாகா மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில், நாஞ்சிலார் பொறுப்பில் ஊழல்கள் ஒழிந்து புனிதம் அடைந்து வருகிறது. தொடர்ந்து புனிதமான நிர்வாகம் ஏற்பட போராடுவோம் என்று கூறி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்றத்தில் நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கும் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லவிழைகிறேன்.

மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பில் 65 கோடி ரூபாய்க்கு மேல் கோரிக்கை கோரப்பட்டிருக்கிறது. இந்த அரசு மதுவிலக்கைத் தீவிரமாகச் செயல்படுத்துவோம் என்று கூறுகிறது. புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறு பகுதிகளில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது மிகுதியாகயிருக்கிறது. தெருக்களில் எல்லாம் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது.

செஞ்சி பகுதிகளில் கள்ளச் சாராயம் அதிகமாயிருக்கிறது. அங்கிருக்கும் காவல் துறையினர் கையூட்டு வாங்கிக் கொண்டு செயல்படுகிருர்கள். ஆளும் கட்சியினரை ஆதரிக்கிருர்கள், ஊக்கங்கள் தருகிருர்கள், குறிப்பாக இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னுல் அங்கிருக்கும் ஆளும் கட்சியினர் இந்தக் குற்றம் செய்து கைது செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்க கண்காணிப்புக் குழு என்று நியமித்திருக்கிருர்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மாநில அரசின் வருமானம் வளர்ந்து வரும் நிலைமையில் காமதேனுவாக இருக்கும் விற்பனை வரி முக்கியமான அம்சமாகும். இதை மத்திய அரசு எடுத்துக் கொள்ளப் போவதாகப் பரவலாக பேசப்படுகிறது. இதிலே இந்த அரசாங்கம் என்ன கொள்கை எடுத்திருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன், சொல்லவில்லை, பதிலுரைக்கும் நேரத்திலாவது அதைப் பற்றித் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி மாநில அரசின் அதிகாரத்தை மத்திய அரசு எடுத்துக் கொள்கிற சூழ்நிலை உருவாகுமாஞல் அதற்கு இந்த அரசு இங்கே ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் எங்கள் இயக்கத்தைப் பொறுத்த வரை அதைக் கண்டிப்பாக ஆதரிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு விலைவாசி உயர்ந்து கொண்டே இருக்கிறது. விற்பனை வரியை சீரான முறையில் போட வேண்டும். பல்வேறு முனைகளில் வரி விதிப்பதை மாற்றி ஒரு முனை வரியாகப் போட வேண்டும். குறிப்பாக, விவசாயி உற்பத்தி செய்கிற வெல்லத்திற்கு பல முனை விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி ஒரு முனை வரியாக விதிக்கவேண்டும்.

நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் இடையே அரசாங்கம் வரி வசூல் செய்கிற முறையில் ஒரு சீரான அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று உயர்மட்டக் குழு கூறியிருக்கிறது. உயர்மட்டக் குழுவின் அடிப்படை என்ன என்று தெரிவிக்கவில்லை. இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் வரி வசூலை அதிகமாக அமல்படுத்த வேண்டுமென்று சொல்லுகிருர்கள். நுகர்வோருக்கு நியாயமான முறையில், குறைந்த விலையில் தரப்பட வேண்டும், உற்பத்தியாளருக்கு சரியான முறையில் விலை தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழு செயல்பட வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

திருச்சியில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வியாபாரிகள் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில் வியாபாரிகளைக் கொடுமைப் படுத்தும் அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிருர்கள். அதே நேரத்தில் தவறுகள் செய்கிற வியாபாரிகள் மீதும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படும் என்று கூறியிருக்கிருர்கள். பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதுபோல் இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் வரி ஏய்ப்பாளர்களைக் கண்டு பிடித்தாலொழிய வரி வருமானத்தை நல்ல முறையில் வசூல் செய்ய முடியாது. அப்படிப்பட்ட திட்டம் எதுவும் சொல்லப்படவில்லை.

இன்றைக்கு எதிலே பார்த்தாலும் புரட்சி, புரட்சி என்று சொல்லுகிருர்கள். ஏழைஎளிய மக்களிடமிருந்து வரியை ஏமாற்றி வசூல் செய்து பல முனை வரியாக வாங்கும்போது சிலர் சொத்துக்களை சேர்த்து வைத்திருக்கிருர்கள். அப்படிப்பட்ட சொத்துக்களை கைபகப்படுத்த திட்டம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான செயலை இந்தத் தீர்மானத்தின் மூலமாகக் கொண்டுவந்திருந்தால் உண்மையிலேயே பாராட்டுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கும்.

விலைவாசி உயர்வு, ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு கேட்டு இன்றைக்கு நாட்டிலே தொழிலாளர்கள் எல்லாம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு குறிப்பாக என்.ஜி.ஓ.க்கள் கூட ஒரு வார காலமாக போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

இந்த நிலையில் விற்பனை வரி முறையை சீரான வகையிலே அமல்படுத்தினால் வருமானமும் அதிகமாகக் கிடைக்கும். அதிலே இருக்கின்ற சந்து பொந்துகளை அடைத்து வசூல் செய்யக் கூடிய நிலை ஏற்பட்டால் வருமானம் அதிகமாகக் கிடைக்கும்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அதை எடுக்கின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தினுடைய அணுகுமுறை என்ன என்பதை அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முத்திரைத்தாள்களைப் பொறுத்தவரையில் அதன்மூலமாக வருகின்ற பங்குத் தொகை ஊராட்சிகளுக்குப் போய்ச் சேருவதில்லை. பெரும்பாலான ஊராட்சிகளைப் பொறுத்தவரையில் அந்தத் தொகை இன்னும் பிரித்துக் தரப்படவில்லை, உதாரணமாக கொள்ளிடம் ஊராட்சிக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை, 6 மாத காலமாகியும்கூட இன்னும் அந்தப் பங்குத் தொகைகள் கொடுக்கப் படவில்லை.

முத்திரைத் தாள்கள் மதிப்பின் அடிப்படையிலே வாங்குகிறார்கள். ஆனால் ரெஜிஸ்திரார் ஆபீஸிலே இருக்கிறவர்கள் அந்தத் தொகை போதாது, இன்னும் அதிகமாகக் கட்ட வேண்டுமென்று சொல்லி கூடுதலான பணத்தை வாங்குகிறார்கள், ஆனால் அப்படிக் கூடுதலாக வாங்கப்பட்ட பணம் எல்லாம் பிரித்து ஊராட்சிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முத்திரைத் தாள் கட்டணத்திலிருந்து தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் விதிவிலக்கு கொடுத்தால் தான் இந்த அரசு தன்னை தொழிலாளர் நல அரசு என்று உண்மையிலேயே சொல்லிக்கொள்ள முடியும்.

அடுத்து, திரைப்படக் கட்டணம் பற்றி இங்கே சொல்லப் பட்டிருக்கிறது. ஒரு சீராக அமைக்கப்பட்டிருக்கிறது, யாரும் வரியை ஏய்க்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள், அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அந்தக் கட்டணத்திலிருந்து வருகின்ற பங்குத் தொகைகள் ஊராட்சிகளுக்கு அந்த கேளிக்கை வரியின் மூலமாக வரக்கூடிய பங்குத் தொகை எந்த அளவிற்கு தரப்படுகிறது என்று குறிப்பிலே தரப் படவில்லை.

விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அரசு கொடுக்கும் கடன்களும் முன்பணங்களும் என்பதுபற்றி இங்கே மானியக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அதைப்பற்றி விளக்கமான எந்தக் குறிப்பும் இங்கே வைக்கப்படவில்லை, ஒரு முன்னறிவிப்போ அல்லது அறிக்கையோ எந்த அளவிற்கு கடன்கள் தரப்படுகின்றன; எந்த அளவிற்கு தருவதற்குத் திட்டமிருக்கிறது, எந்த அளவிற்கு நிறுத்தப்படுகிறது என்பதைப் பற்றிய விவரங்களைப் பற்றிய குறிப்புகள் இங்கே உறுப்பினர்களுக்குத் தரப்படவில்லை என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான குறிப்புகள் கூட தரப்படவில்லை, அவர்கள் உரிமை பாதிக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உண்மையான விவரங்கள் தெரிந்தால்தான் பிரச்சினைகளைப் பற்றிப் பேசமுடியும், எந்த முறையிலே கடன்கள், முன்பணங்கள் கொடுக்கப்படுகின்றன, எப்போது கொடுக்கப்படுகின்றன, யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்ற விவரங்களையெல்லாம் இங்கே தரவில்லை.

அடுத்து, பலமுனை விற்பனை வரியை மாற்றி ஒருமுனை வரியாக செய்தால்தான் சந்து பொந்துகளை அடைக்க முடியும், இடைத்தரகர்களை ஒழிக்க முடியும், அதன் மூலம் அரசாங்கத்திற்கும் வருமானம் கிடைக்கும், வாங்குகிறவர்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு, நுகர்வோர்களுக்கு சரியான நன்மைகள் கிடைக்க முடியும்.

வரி செலுத்துவோரின் சுமைகள் குறைக்கப்படவும், வசூலைப் பெருக்கவும், அதே நேரத்தில் ஊழலைக் களையவும் ஆலோசனைகள் கூற குழு அமைக்கப்படும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழு நல்ல முறையிலே செயல்பட்டு இதைப்பற்றி திட்டவட்டமாக முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

வணிக வரித் துறையினருக்குக் கட்டடங்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. எங்கள் பகுதியில் அவர்களுக்கு தேவையான கட்டடங்களை உடனடியாகக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரித் துறையினர் பெரும்பாலான இடங்களில் கையூட்டு வாங்கிக் கொண்டு வருமானக் கணக்கைச் சரியாகப் போடாமல் விட்டு விடுகிறார்கள். இப்படி லஞ்சம் வாங்கியவர்கள் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, யார் யார் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இதிலேகுறிப்பிடப்படவில்லை. லஞ்சத்தை ஒழிக்கப்போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் அப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டம் எதையும் அறிவிக்கவில்லை. ஏழை எளிய மக்களை உறிஞ்சாமல், பெரிய பெரிய வணிகர்களிடம் இருந்து வரிகளைப் பெறுகின்ற முறையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12-10)

திரு. எஸ். வி. இராமசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.
* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. எஸ். வி. இராமசாமி: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். அவரிடமிருந்து கிளாரிபிகேஷன் வேண்டுமானால் கேட்கலாம். புது பாயின்டைச் சொல்லக்கூடாது. தயவு செய்து உட்காருங்கள். அவைத் தலைவர் சொன்னால் உட்கார வேண்டும். அப்படி யில்லாமல் நின்று பேசியதை அத்தனையையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுவதோடு, இனிமேல் அனுமதிக்கவும் மாட்டேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, முத்திரைத்தாள் பற்றிய விவாதம் இன்று நடைபெறுகிறது. இதிலே குறிப்பாக பிளாக் மார்க்கெட்டிங் என்பது முத்திரைத் தாள் விற்பனை செய்கின்றவர்களிடத்தில் நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக ஒரு இன்டென்ட் போடுகிறார்கள். இன்டென்ட் போட்ட அந்த நேரத்தில் குறிப்பிட்ட தொகைக்கு முத்திரைத்தாள்களை அவர்களிடத்தில் தருகிறார்கள். வாரத்திற்கு இரண்டு நாட்கள் முத்திரைத்தாள் தருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அப்படி வாங்குகின்ற அந்த முத்திரைத் தாள்களை விற்பனையாளர்கள் பதுக்கி வைத்துக்கொண்டு ஆறுமாத காலம், ஒரு வருஷ காலம் என்று முத்திரைத் தாள்களை மறைத்து வைக்கிறார்கள். பின்னாலே unscrupulous dealers என்று சொல்பவர்கள் அந்தப் பழைய பத்திரங்களை வாங்கி அதன் மூலமாகப் பழைய பத்திரங்களைச் சிருஷ்டி செய்யும் வகையிலே பழைய முத்திரைத் தாள்களை அதிகமாக விற்கும் பேரபாயம் நாட்டிலேயிருக்கிறது.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

கோர்ட்டுகளிலே பலவிதமான வழக்குகள், இப்படிப் பழைய பத்திரங்களை வாங்கி அதிலே பத்திரங்களை எழுதி கோர்ட்டிலே அதைப் புகுத்தி அதன்மூலமாக நியாயமாகக் கிடைக்க வேண்டிய நீதிகள் கிடைக்க முடியாத நிலைமைகளுக்கு வழிவகைகள் ஏற்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

ஆகவே, நான் சொல்லக் கூடிய கருத்து என்னவென்றால். ஒரு நாளிலே கொடுக்கப்படும் ஒரு முததிரைத்தாள், அடுத்து வருகின்ற இன்டென்ட் தேதிகளில் எவ்வளவு முத்திரைத்தாள் விற்கப்பட்டதோ அதுபோக மீதியுள்ள முத்திரைத்தாள்களை மறு இன்டெண்டுக்கு டிரஷரி ஆபிசிலே கொடுத்து அதற்கு 'ரீ-வேலிடேஷன் டேட்' என்று முத்திரை அடிப்பதன் மூலம் பழைய முத்திரைத்தாள்களைப் பதுக்கி வைத்திருந்து அதன் மூலம் இலாபம் பெறும் நிலைமைகளை நாம் சமாளிக்க வேண்டும். அதை ஒரு முக்கியமான கருத்தாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, 'கைட் லைன்ஸ்' என்பதை 1969-ஆம் ஆண்டிலே ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். இந்தக் கிராமத்தில் இந்த சர்வே நம்பருக்கு இவ்வளவு விலை நிர்ணயம் என்று நிர்ணயம் செய்து வைத்திருக்கிறார்கள். சிலயிடங்களில் அந்த ஊரிலேயிருக்கின்ற கர்ணம் அவர்கள் கொடுக்கின்ற கைட் லைன்ஸ் பிரகாரம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் விலையில்லாத நிலத்திற்கும் அந்த கர்ணம் நினைத்த விலையே இருப்பதால் அந்த விலையில்லாத நிலத்திற்கும் அதிக ஸ்டாம்ப் டியூட்டி கட்டி வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, முழு பரிசீலனை செய்து, எந்தெந்தப் பகுதிகளில் எந்த நிலங்கள் என்ன விலைக்குப் போகக்கூடும் என்பதை அக்கம் பக்கத்திலே உள்ள நிலங்களின் மதிப்பை வைத்து புனராலோசனை செய்து கைட் லைன்ஸை மறுபடியும் புதுப்பித்துச் செய்வதன் மூலம் நியாயமான நன்மைகள் கிடைக்கக்கூடும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

மற்றும், இந்த கைட் லைன்ஸை வைத்துக் கொண்டு, 'ரைட் டு ரீபர்சேஸ்' என்று வருகிறார்கள். சாதாரண ஏழை விவசாயி இருக்கிறார்—2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறான். அவனுக்குப் பணம் வேண்டுமென்று சொல்கிற காரணத்தாலே, நிலத்தின் பேரிலே 'டெட்' இருக்கிற காரணத்தாலே, நிலத்தை விலைக்கு வாங்கி விடுகிறார்கள். அவனுக்கு ரூ. 1000 தேவையாக இருக்கிறதென்றால், கடனாகக் கொடுக்காமல், நிலத்திற்கு விலையாகக் கொடுக்கிறார்கள். 5 ஆண்டு காலத்திற்குள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால், நிலத்தை திருப்பி வாங்கி விடலாம் என்று அக்ரிமெண்ட் செய்து விடுகிறார்கள். 5 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, பணத்தை திருப்பிக் கொடுத்து, கிரயப் பத்திரம் வாங்கும்போது, கைட் லைன்ஸிலே சொல்லப்பட்டிருக்கிற மதிப்புக்குத் தகுந்தாற்போல், விலை வந்தால்தான் கிரயம் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள்.

ஒரு விவசாயி ரூ. 1,000 கடன் வாங்கி, 5 ஆண்டுகளுக்குப் பின்னால், அந்தப் பணத்தைக் கட்டி, நிலத்தைத் திரும்பி வாங்குகிற பொழுது அந்த நிலத்தினுடைய மதிப்பு அப்பொழுது ரூ. 20,000 என்று இருக்குமானால், அதற்கு வேண்டிய ஸ்டாம்ப் டியூட்டி ஏறத்தாழ ரூ. 3,000 கட்டித்தான் கிரயம் வாங்க வேண்டுமென்ற கடுமையான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது; அது கோர்ட்டுகளிலே, 'ஸ்பெசிபிக் பர்பார்மன்ஸ் சூட்' என்று சொல்கிற பொழுது,. அதை அமல் படுத்தும்பொழுதுகூட, அரசாங்கத்திலே அதைக் கட்டாயப்படுத்துகிறார்கள். அதனாலே, விவசாயிகளுக்கு உண்மையிலே பாதிக்கப்படுகிற ஏழைகளுக்கு அந்த முறைகள் மிகமிக கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதிலே மாற்றம் செய்வது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும், ஸ்டாம்புகளை விற்கிறவர்களுக்கு the man who possess solvency என்பதை அடிப்படையாக வைத்து, லைசென்ஸ் கொடுக்கிறார்கள். ஆகையினால், பணம் படைத்தவர்கள்தான் அந்த முத்திரைத் தாள்களை வாங்கி விற்க வாய்ப்பிருக்கிறது. அதை அடிப்படையாக வைத்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். இங்கே ஒரு வெட்டுத் தீர்மானத்திலே தந்திருக்கிறார்கள். விதவைகளுக்கும் ஹாண்டிகேப்ட் பர்சன்ஸுக்கும் தர வேண்டும், முன்னுரிமை தர வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அதைச் சிறந்த கருத்தாக ஏற்றுக் கொள்வது நலமாக இருக்கும்.

அதேபோல், படித்து, வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிற கிராஜுவேட்ஸுக்கு, முன்னுரிமை கொடுத்தால் சிறந்ததாக இருக்கும். ஆகவே, விதவைகளுக்கும், ஹாண்டிகேப்ட் பர்சன்ஸுக்கும், படித்து வேலையில்லாமலிருக்கிற பட்டதாரிகளுக்கும் இந்த ஸ்டாம்ப் விற்க லைசென்ஸ் கொடுப்பதில் முன்னுரிமை கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

கடன் வசூலிப்பதிலே கெடுபிடிகள் யாரிடத்திலே இருக்கின்றன என்றால், சிறுசிறு விவசாயிகள் தாங்கள் வாங்குகிற கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமையிலே, கடன்களை கட்டாயமாக வசூலிக்கின்ற நிலை இருக்கிறது. அதைச் சிறிது தளர்த்தி, பெரும் நிலச்சுவாந்தார்கள் இருக்கிறார்கள்—அவர்களிடம் வசூலிக்கலாம். குறிப்பிட்டு, 5 ஏக்கருக்குக்கீழ் நிலம் வைத்திருக்கிறவர்கள், அந்தக் கடனைத் திருப்பித் தர வேண்டுமென்று நோட்டீஸ் பெறும்போது, கட்டாயம் திருப்பித் தர வேண்டுமென்று கட்டாயப் படுத்தப் படுகிறார்கள். அவர்களுக்குச் சிறிது தளர்த்துவதால், நல்ல வழிகாட்டியவர்களாக ஆவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் ஒரு பயிருக்குக் கடன் வாங்கி விட்டு, அதைத் திருப்பிக் கட்டவில்லை யென்றால், மறு பயிருக்கு, கிராப் லோன்ஸ் கேட்டால் மறுக்கப்படுகிறது. ஏற்கனவே, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமைகள் எப்படி ஏற்பட்டன என்று சர்வே செய்து, மேலும் கடன் தருவதன் மூலமாக, சிறு விவசாயிகளை ஊக்கப்படுத்தினால், அவர்கள் கடனைத் திருப்பித் தர வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜப்தி செய்யும்போது, சிவில் கேஸ்ஸில் ஸ்டிரிக்ட்டாக இருக்கிறார்கள். அங்கே இருக்கலாம். ஆனால், சிறு விவசாயிகளுக்கு எக்சம்ஷன் கொடுக்கவேண்டும். இப்பொழுது இருக்கிற நிலையாலே, சிறு விவசாயிகள் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

பல பொருள்களுக்கு பலமுனை வரி விதிக்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது. அதை ஒரு முனை வரியாக்க வேண்டும். அதே போன்று, உணவுப் பொருள்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கிற பலமுனை வரியை ஒரு முனை வரியாக விதிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். காரணம் விளைபொருள்களுக்கு விதிக்கப்படுகிற வரி, திருப்பி அந்த விவசாயிகள் தலையிலேதான் அத்தனை வரியும் விதிக்கப்படுகிறதே யொழிய, கடைசியிலே அவஸ்தைப் படுகிற மக்கள் அந்த விவசாய மக்கள் தான். ஆகவே, அந்த விவசாயிகள் மேல் போடப்படுகிற பலமுனை வரிகளைத் தவிர்ப்பது சாலச் சிறந்ததாக இருக்கும். அது விவசாயிகளுக்கு நன்மை செய்ததாக ஆகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

அதேபோன்று சாதாரண பொருள்கள் commodities which are being used by the common man இவைகளை எல்லாம் சேர்த்து எடுத்து விற்பனை வரி விலக்குத் தருவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பயிர்களுக்கு அமைச்சர் அவர்கள், கிராப்ஸ் என்று இருப்பவைகளைக்கூட கமர்சியல் கிராப்ஸ் ஆக சேர்த்துக் கொள்ளலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது கரும்பு, வாழை போன்றவைகளுக்குக்கூட வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை விவசாயிகள் தலையில் போட்டது, யாரோ செய்து யார் தலையிலே விடிகிறது என்ற அளவிலேதான் இந்த அரசுக்கு ஒரு பேரபாயம் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பேரபாயத்தை நீக்க அரசு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, சிறு விவசாயிகளுக்கு மண் வள மேம்பாட்டுத் திட்டம் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்களுக்கு அவர்கள் வரப்பை உயர்த்துவதற்கு, சென்ற ஆண்டு ஆட்சி செய்தவர்கள், வரியைப் போட்டார்கள். இப்போது அந்த வரியை வசூலிக்கிறார்கள். அப்படி வசூலிக்கும்போது பலவிதமான கெடுபிடிகள் நடைபெறுகின்றன. முன்பு போட்ட வரிகளை வசூலிக்கிற அந்தப் பணியையும் ஏற்றுக் கொண்டுள்ள இந்த அரசுக்கு, அந்தக் கெடுபிடிகளால் கெட்ட பெயர் சேருகின்ற நிலைமை ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

அடுத்தபடியாக, ஆயத்தீர்வை பற்றிச் சொன்னார்கள். இதிலே குறிப்பாக 4(1)(பி), 4(1) (ஐ) மீது விற்பனை செய்கிறவர்கள் மீது, காய்ச்சுகிற ஒரு நிலைமை இருக்கிற போது உண்மையிலேயே அதை யார் காய்ச்சுகிறார்களோ, யார் விற்கிறார்களோ அவர்கள் தப்பித்துக் கொண்டு. hire-lings என்கின்ற கையாட்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டு அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது ஏழ்மையான நிலைமையிலே இருப்பவனை பிடித்துப் போய் இவன் விற்றான், என்ற குற்றத்தையும் அல்லது உற்பத்தி செய்தான் என்ற குற்றத்தை வைத்திருக்கிற காரணத்தாலே 'புரொகிபிஷன் ஆக்டிலே' சொல்லுகிறார்கள். It must be chemically analysed திட்டவட்டமான சட்டதீர்ப்புகள் இருந்தாலும் போலீஸ் ஆபிசர் if he gives evidence, the sole testimony of sub-Inspecter can be taken as evidence. On that basis conviction can be given இம்முறைகளைப் பயன்படுத்தி சாதாரண மக்களின் மேல் பொய்வழக்குப் போடுகின்றபோது பாதிக்கப்படுபவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்த புரொகிபிஷன் ஆக்ட்லேகூட சில திருத்தங்களைச் செய்வது சரியாக இருக்கும் ன்பது என்னுடைய கருத்தாகும்.

அதே நேரத்திலே பொய் வழக்குப் போடுகின்றவர்கள், அது பொய் வழக்கு என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் அந்தப் போலீஸ் அதிகாரி கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டிய வகையிலே சட்டம் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த போலீஸ் அதிகாரிக்குத் தெரியாமல், அவருடைய " நாலேட்ஜ் " இல்லாமல் இதுபோன்ற மதுவிக்குக் குற்றங்கள் இந்த நாட்டிலே ஏற்படாது. ஆகையினாலே

There must be a special court. They must go round the border of State limit. If they find in any place on the border any ilicity distillation the officer concerned should be placed under suspension. If it is detected twice or thrice, the officer should be served with an order of dismissal.

என்கின்ற முறையிலே நாம் கடுமையாக கடமையை ஏற்படுத்தினால் ஒழிய இவைகளை நாம் கட்டுப்படுத்த முடியாது என்று சொல்லி, உழைப்பாளர் முன்னேற்ற கழகத்தின் சார்பாக இந்தக் கருத்தக்துகளை இந்த மன்றத்திலே வைத்து என்னுடைய கருத்துக்களை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பொது விற்பனை வரிச்சட்டம் என்பது தமிழ் நாடு முழுவதும் வணிகர்களை எவ்வாறு பாதிக்கிறது, இந்த வரியை வசூலிக்கக்கூடிய துறையில் உள்ள அதிகாரிகள், வணிகர்கள் மீது எத்தகைய கெடுபிடிகள் முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கூறியிருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இந்த பொது விற்பனை வரியை சீராக்கவும் அதே நேரத்தில் பொது மக்களுக்கும், வணிகர்களுக்கும் தொல்லை இல்லாமலும், இந்த வரிவிதிப்பின் மூலம் ஏழை வணிகர்கள், பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையிலும் இந்த பொது விற்பனை வரி முறைகளை ஆராய்வதற்காக உயர்திரு. கெய்வார், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவானது விரிவாகவும், அதே நேரத்தில் அரசினுடைய வருவாயை பெருக்கக்கூடிய வகையில் ஏழை எளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கின்ற சிறு சிறு பொருள்களுக்கு வரிவிலக்கு அளிப்பதன் மூலமாக பயன்தரும் வகையில் அவர்களுடைய பரிந்துரை அமைய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருமுனை விற்பனை வரி என்பதை தமிழ்நாடு முழுவதும் இருக்கும் வியாபாரப் பெரு மக்களாலே வரவேற்கப்படுகிறது. வெல்லத்திற்கு இப்போது பல முனை விற்பனை வரி $4\frac{1}{2}$ சதவிகிதம் என்று இருக்கிறது. அதை 6 சதவிகிதம் இல்லது 7 சதவிகிதம் என்று உயர்த்தி ஒரு முனை விற்பனை வரி என்று கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெல்லம் போன்ற பொருள்களை குடிசைத் தொழிலாகக் கொண்டு கிராம மக்கள், விவசாயிகள் உற்பத்தி செய்து வருகிறார்கள். அந்தப் பொருளை ஆண்டு முழுவதும் வைத்துக்கொண்டு இருக்க முடியாது. வெல்லம் அது உருகும் தன்மை வாய்ந்தது. அழிந்து போகக் கூடியது. அப்படிப்பட்ட பொருள்களுக்கு பல முனை வரி விதிப்பில் இருந்து விலக்களித்து, ஒரு முனை விற்பனை வரியாக மாற்றி விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓட்டல் போன்ற உணவு விடுதிகளில் அவசரகால நிலையின் போது புகுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் மீதான வரி விதிப்பை உணவுப் பண்டங்கள், போன்ற பொருள்களின் மீதான வரி வசூலை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் சாதாரண பொது மக்கள் இதனால் மிகவும் பாதிக்கப்

படுகிறார்கள். ஏற்கெனவே விலைவாசி உயர்ந்து இருக்கிற நேரத்தில், இந்த உணவு விடுதிகளில் வசூலிக்கும் வரியால் மேலும் உயர்கிறது. ஓட்டல்களில் விற்கப்படும் பண்டங்களின் தரம் தாழ்ந்து இருக்கிறது. எடை குறைந்து இருக்கிறது. தரம் தாழ்ந்து, எடை குறைந்து இருக்கிற போது, விலைவாசி மட்டும் ஏறிவருவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் அந்த வரி விதிப்பு முறையை அவசியம் பரிசீலித்து, முதலில் உணவு விடுதிகளில் வசூலிக்கும் வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைக் காகிதங்கள் கள்ள மார்க்கெட்டில் விற்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அப்படிப்பட்டவர்கள் உரிமைகளை ரத்து செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே தமிழ் நாட்டில் குதிரைப்பந்தயம் ஒழிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக் காரணமாக அது இப்போது நடைபெற்று வருகிறது. இந்த குதிரைப் பந்தயத்தின் மூலம் சாதாரண பாமர மக்கள். பாட்டாளி மக்கள் தங்கள் கையிருப்புக்களை இழந்து, தாங்கள் சம்பாதித்த பொருள்களை இழந்து, பெரும் தொல்லைக்குள்ளாகும் நிலை இருக்கிறது. பணம் படைத்தவர்கள் எங்கே வேண்டுமானாலும் சென்று குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ளட்டும். அதைப் பற்றி கவலை இல்லை. ஆனால் சாதாரணப் பொது மக்கள் தங்கள் கையிருப்புக்களையும் சேமிப்புகளையும் இழந்து விடுகிற காரணத்தால், அந்தக் குதிரை பந்தய ஒழிப்புச் சட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்தாவது ரத்து செய்ய முடியுமா என்பதைப் பரிசீலித்து, அந்தக் குதிரைப் பந்தயத்தை நிரந்தரமாக தமிழ் நாட்டில் ஒழிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வியாபாரிகள் விற்பனை வரியை ஒழுங்காக செலுத்துகிற நேரத்தில் கூட கூடுதல் வரி, என்று விதிக்கப்படுகிறது. இந்தக் கூடுதல் வரியின் காரணமாக வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, வியாபாரிக்கள் மீது, அவர்கள் ஒழுங்காகச் செலுத்தும் விற்பனை வரி ஒருபுறம் இருக்க, இந்தக் கூடுதல் வரி என்று போடுவதல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதால் அந்த முறையை நீக்க வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாடு முழுவதும் உள்ள கமர்சியல் டாக்ஸ் ஆபீஸ்கள் பொதுவாக ஒரேயிடத்தில் இருக்காமல், பல்வேறு இடங்களில் இருக்கின்றன. சில இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அந்தத் துறையைச் சேர்ந்த அலுவலகங்கள் ஒரே இடத்தில் இல்லாமல் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பொது மக்கள் எளிதில் அந்த அலுவலகங்களுக்குச் செல்வதற்கு இயலவில்லை. ஆகவே; அந்த சி.டி.ஓ. கட்டிடங்களை

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும், ஒவ்வொரு வட்டாரத்தில் உள்ள ஏ.சி.டி.ஓ. அலுவலகங்களுக்கும் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கட்டிக் கொடுத்தால் அந்த அலுவலகங்களுக்கு மக்கள் எளிதாகச் சென்று தங்கள் வேலைகளை முடித்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே அந்தத் துறையைச் சேர்ந்த பறக்கும் படை என்ற விசேஷ பிரிவினர் ஒரே மாவட்டத்தில் பல மாதங்களாக முகாம் இட்டு இருப்பதால், எந்த நோக்கத்திற்காக இந்த அரசு அந்த விசேஷப் பிரிவை ஏற்படுததி இருக்கிறதோ, அந்த நோக்கம் நிறைவு பெறாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

அந்தத் துறையில் சில ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. அந்த ஒழுங்கீனங்கள் களையப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அந்த சிறப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அந்த ஒழுங்கீனங்களில் யார் ஈடுபடுகிறார்கள் என்று மக்கள் கருதுகிறார்களோ, அப்படிப்பட்டவர்கள் அந்த விசேஷப் பிரிவை தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு, அரசு எந்த நோக்கத்தோடு அந்த விசேஷப் பிரிவை ஏற்படுத்தியதோ அதை நிறைவேற்ற முடியாமல் செய்து விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பிரிவால் எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கும் ஒரு நிலையை இது ஏற்படுத்துவதால், அரசுக்கு அதனால் வருவாய் இழப்புதான் அதிகம் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

எத்தனைப் பிரிவுகளைப் போட்டாலும், அந்த பிரிவுகள் எல்லாம் எந்த நோக்கத்திற்காக போடப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறுகிறதா என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு குழுவுக்கும் அதைக் கண்காணிக்க இன்னொரு குழு போட வேணடும். மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்த வரையில் எத்தனை பிரிவுகளைப் போட்டாலும், எத்தனை உத்தரவுகளைப் போட்டாலும் இந்த அரசு கருதிய நோக்கம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை; இந்தத் துறையிலே இன்னமும் ஒழுங்கான நிர்வாகம் அமையவில்லை என்பதை அரசு உணரும் என்று நினைக்கிறேன்.

விற்பனை வரி மூலம் இந்த அரசுக்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான ரூபாயில் சில பகுதி வீணாக எங்கோ போய் கொண்டிருக்கிறது. எங்கே போகிறது என்பதைக் கண்டறியவும், தவறுகள் எப்படி தவிர்க்கப்படலாம், எப்படி ஒழுங்காக வசூல் செய்யலாம் என்பதைக் கண்டறியவும், கெய்வார் தலைமையில் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு

வினர் அரசுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொகையை எப்படி பெறுவது, வரி இழப்பை எப்படித் தடுப்பது, தவறுகளைத் தடுப்பது எப்படி என்பவைகளிலே தீவிரமாகக் கவனம் செலுத்தி, பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கா. வே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது என்னைப் பேச அழைத்தமைக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏழை எளிய மக்களை காக்க வேண்டுமென்ற அடிப்படையில் மதுவிலக்கிலே தீவிரம் காட்டப்படுகிறது. அதற்காக ஏழை எளிய மக்கள் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

இதைப் பொதுவுடைமை ஆக்க வேண்டுமென்று சிலர் ஆசைப் படுகிறார்கள். பணக்காரர்கள் குடித்து ஒழியட்டும்; அதைப் பற்றி கவலையில்லை. ஆனால் ஏழை எளிய மக்கள் குடித்து, கெட்டுவிடக்கூடாது என்பதுதான் எங்களுடைய ஆசை. இதில் சமதர்மம் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, மதுவிலக்கில் காவல் துறையினர் இன்னும் தீவிரம் காட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கள்ளச் சாராய உற்பத்தியிலும் விற்பனையிலும் சில பெரிய மனிதர்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர் கள்மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து, அவர்களை சிறை யிலே தள்ளி, மதுவிலக்கை சிறப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொது விற்பனை வரி சட்டத்தில் சில குறை பாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைய நிலைமையில் தமிழ்நாட்டில் உயர்மட்ட அதிகாரிகள் பல கோணங்களில் அவர் களுக்கு கீழுள்ள அதிகாரிகளை துன்புறுத்துவதாக இங்கே சில உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டினார்கள், ஏனென்றால் பொருட் களை எடுத்துச் செல்லும் லாரிகளை சோதனை செய்வதற்கு நட மாடும் கோர்ட்டுக்கள் போட்டிருக்கிறார்கள்; அவர்கள் லாரி களை நிறுத்தி சோதனை போடும்போது வசூல் செய்யும் பணம் முழுவதும் அரசாங்கத்திற்கு வருவதில்லை; வேறு எங்கோ போ கிறது என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அது ஏன் வந்து சேரவில்லை என்பதைப் பார்க்க வேண்டும்.

திரு. பொ. விஜயராகவன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நிதியமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது. ஆனால் நிதியமைச்சரவர்கள் இங்கே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிதியமைச்சரவர் கள் இப்போது வந்துவிடுவார்கள். அவர்கள் இல்லாவிட்டாலும் மற்ற அமைச்சர்கள் இங்கே இருந்து உறுப்பினர்கள் என்ன பேசு கிறார்கள் என்று குறித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குறிப்பைப் பார்த்து, பதில் சொல்லுவார்கள்.

திரு. கா. வே. கந்தசாமி : நடமாடும் கோர்ட்கள் என்று இன்றைக்கு தமிழ்நாட்டில் பல இடங்களில் வைத்திருக்கிறார்கள். லாரிகளில் சாமான்களை ஏற்றிச் செல்லும்போது தடுத்து அங்கே பில் இருக்கிறதா, இல்லையா என்று அதிகாரிகள் சோதனையிடு கிறார்கள். சோதனையிட்ட பிறகு அவர்களிடம் உரிய பில் இல்லா மல் இருந்தால் பறிமுதல் செய்ய வேண்டும் என்பதுதான் அரசி னுடைய நோக்கம். அந்தப் பணம் சரிவர அரசுக்கு வந்து சேரு வதில்லை. அதற்காக இந்த அரசு இன்னும் அதிகக் கவனம் எடுத் துக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களிலே சவுக்கம் என்று போட்டு அங்கே சில அதிகாரிகள் இருக்கிறார்கள். அங்கே மாநிலம் விட்டு மாநிலம் போகின்றபோது மாடுகள், ஆடுகள், எருமை போன்றவற்றை லாரிகளில் ஏற்றிக் கொண்டு நமது மாநிலத்திற்கு அருகாமையில் உள்ள கேரளத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது. அதைக் கண் காணித்து வரிவிதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முத்திரைத்தாள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 25 பைசா ஸ்டாம்பை சில நேரங்களில் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் வீதம் விற்கிறார்கள். அதையும் இந்த அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். ஜே. சாகிக் பாட்சா : தலைவரவர்களே, நம் முடைய நிதியமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மேல் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்தைப் பொறுத்த வரையிலே மூன்று கருத்துக்களை பொதுவாக எல்லோரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்று கருத்துக்களில் இரண்டு கருத்துக்களை நம்முடைய நிதி யமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்பு

கிறேன். ஏற்றுக் கொள்வதோடு மாத்திரமல்ல'. அவருடைய வாதத்திற்கும் வலுவூட்டும் என்றும் கருதுகிறேன். அந்த மூன்று கருத்துக்கள் என்னென்னவென்று பார்க்கும்போது முதலாவதாக மது விலக்கினுல் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்ய மத்திய அரசு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்ற கருத்தை பொதுவாக இந்த மன்றத்திலே எல்லாக்கட்சிக்காரர்களும் ஆதரித்து இங்கே கருத்துக்களை தெரிவித்திருக்கிறுர்கள். ஏனென்று சொன்னுல் நமது நாட்டினுடைய பல பணிகள்—டெவலப்மென்ட் ப்ரோகிராம்—செய்வதற்கு போதுமான நிதியாதாரங்கள் இல்லாத நிலையிலே நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்தக் கருத்தை வற்புறுத்தி மத்திய அரசிடம். மதுவிலக்கினுல் ஏற்பட்ட நஷ்டத்திற்கு நஷ்ட ஈடு கோரிப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு கருத்துச் சொல்லப்படுகிறது. விற்பனை வரி விதிப்பதால் மது விலக்கிலே ஏற்பட்ட நஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது என்று கருத்துச் சொல்கிறுர்கள். இன்றைக்குப் பல மாநிலங்களிலே, மதுவிலக்கு அமல் படுத்தாத மாநிலங்களிலே கூட விற்பனை வரி மூலம் வருகின்ற இந்த வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறுர்கள். எனவே அந்த வாதம் நியாயம் அல்ல பொறுத்தமுடையதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவது ஒரு முக்கியமான கருத்து இங்கே சொல்லப் பட்டது. மத்திய அரசு இப்போது ஒரு கொள்கையைக் கடைப் பிடித்து சேல்ஸ்-டாக்ஸுக்குப் பதிலாக எக்சைஸ் அடியோடு. எல்லாப் பொருட்களுக்கும் போடப் போவதாக ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நடைமுறைக்கு வருகிறது என்ற நிலைமை இருக்கிறது.

மத்திய அரசு இவ்வாறு நம்முடைய மாநில அரசின் அதிகாரத்தில் என்குரோச்மென்ட் செய்கின்ற அளவிலே காரியம் செய்திருக்கிறுர்கள். இன்றைக்கு மத்திய அரசு பொறுப்பில் இருக்கக்கூடிய ஜனதாக் கட்சியினுடைய எலக்ஷன் மேனிபெஸ்டோவில் பார்க்கும்போது சேல்ஸ் டாக்ஸ்-ஐ ஒழித்து விடுவோம் என்று சொல்லி இருக்கிறுர்கள். எனவே, இப்போது ஒரு அச்சம். இந்த மத்திய அரசு அது போல் திட்டத்தை கொண்டு வந்து நம்முடைய மாநிலத்தில் அதிகமான வருமானத்தைக் தரக்கூடிய சேல்ஸ்-டாக்ஸை அவர்கள் எடுத்துக் கொள்வார்களோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நமது அரசாங்கம் சேல்ஸ்-டாக்ஸை விட்டுக் கொடுக்காது என்று நமது நிதியமைச்சரும் பேசியிருப்பதாக பத்திரிகைகளில் கூட பார்த்தேன். அந்த சேல்ஸ் டாக்ஸை விட்டுக் கொடுக்காத வகையிலே கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்னுர்கள். காமதேனு கற்பக விருக்ஷம் என்று பேசி நம்முடைய நிதியமைச்சரை மயக்கி விடுவார்களோ என்று சொன்னுர்கள். ஒரு வேளை நம்முடைய நிதியமைச்சர் வேண்டுமானுல் அவர்களை மயக்குவாரேயல்லாமல் அவர் மயங்க மாட்டார். அவரை யாராலும் மயக்க முடியாது.

மூன்ருவதாக சொல்லப்பட்ட கருத்து நம்முடைய நிதியமைச்சரவர்கள் திருச்சியிலே வணிகர்கள் மாநாட்டிலே கூடச் சொன்னுர்கள். பொதுவாக இன்று வியாபாரிகள் மத்தியிலே சொல்லப்படுகிற எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரி விதிக்க வேண்டுமென்று அதாவது சிங்கிள் பாயின்ட் சேல்ஸ் டாக்ஸ் விதிப்பதுதான் நலன் பயக்கும் என்று கருத்து நிலவுகிறது. இதையே வணிகர்கள் சார்பாகச் சொல்கிறுர்கள். ஏற்கனவே இருந்த அரசு அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டு சில பொருள்களுக்கு சிங்கிள் பாயின்ட் சேல்ஸ் டாக்ஸ் விதித்திருக்கிறது.

(பிற்பகல் 12—40).

நமது நிதி அமைச்சர் அவர்கள் திருச்சி மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறுர்கள். அந்த மாநாட்டில் வணிகர்கள் சங்கத் தலைவர் காளிதாஸ் சேட் அவர்களும், பொதுச் செயலாளர். கும்பகோணத்தைச் சேர்ந்த சண்முகம் அவர்களும் வற்புறுத்திப் பேசியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நான் கேட்டுக் கொள்வது, சிங்கில் பாயின்ட் சேல்ஸ்-டாக்ஸ் விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனுல் எந்த விதமான வரி வசூலும் குறைந்து விடாது. ஏற்கனவே விதிக்கப் பட்ட பொருள்களை எடுத்துக் கொண்டாலும், சிங்கில் பாயின்ட் சேல்ஸ்டாக்ஸ் விதிப்பதினுல் வருமானம் குறைந்துவிட்டதாகச் சொல்லப்படவில்லை. எனவே அந்தக் கருத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசாங்கத்திற்கு வரக் கூடிய வருமானத்தில் அதிகமான வரியை ஈட்டித் தருகிற இலாகா விற்பனை வரி இலாகா. கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரங்களைப் பார்த்தால் கூட தெரியும். 1973—74—ல் விற்பனை வரி வசூல் ரூ. 99 கோடி. 1974—75-ல் 141 கோடி ரூபாய். 1975—76-ல் ரூ. 156 கோடி 1976—77—ல் ரூ. 167 கோடி. 1977—78ல் டிசம்பர் வரை ரூ. 132 கோடி என்று கொடுத்திருக்கிறுர்கள் அதுவும் ரூ. 180 அளவிற்கு வரும் என்று எதிர்பார்க்கிறேன். விற்பனை வரி மூலமாகத்தான் அரசுக்கு அதிகப்படியான வரி வசூலாகிறது.

சில அதிகாரிகள் பற்றி குறை சொன்னார்கள். பொதுவாக, பை அன்ட் லார்ஜ், இந்த இலாகாவில் உள்ள அதிகாரிகள் திறமையாகச் செயல்படுகிறார்கள். ஒன்றிரண்டு அதிகாரிகள் தவறு செய்யலாம். பொதுவாகப் பார்க்கும்போது 200 கோடி ரூபாய் வசூல் செய்யும் இலாகாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறைகள் இருக்கத்தான் செய்யும். அதைக் கண்காணித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

நான் அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன், இந்த இலாகாவில் பணியாற்றக் கூடிய அதிகாரிகள் மேலேயிருந்து கீழே வரையில் திறமையாகத்தான் செயல்படுகிறார்கள். அப்படிச் செயல்படுவதின் காரணமாகத்தான் இந்த 200 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. பத்து நாட்களாக என்.ஜி.ஓ–க்கள் போராட்டம் நடத்துகிறார்கள். பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கிறபோது இந்தப் போராட்டம் காரணமாக வரி வசூல் கிட்டத்தட்ட எட்டு கோடி, பத்து கோடி ரூபாய் வசூல் காலதாமதமாகியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, என்.ஜி.ஓ–க்கள் பிரச்னையை அணுகும்போது இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரிகளை குறை சொல்லாத பிரஜைகளைக் காணமுடியுமா என்றால் முடியாது. ஆனால், நல்ல முறையில் பணியாற்றுகிற அதிகாரிகளுக்கு ஊக்கம் அளித்து, தவறு செய்பவர்களை, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, தண்டிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விற்பனை வரி இலாகா பொதுமக்களோடு அதிக தொடர்புள்ள இலாகாவாக அமைந்திருக்கிறது. பப்ளிக் ரிலேஷன்ஸ் இலாகாவாக இருக்கிறது. 200 கோடி ரூபாய் வசூல் செய்து கொடுக்கும்போது வியாபாரிகளுக்கும் அரசுக்கும் அதிகமான தொடர்பு ஏற்படுகிறது. அந்தத் தொடர்பு நல்ல முறையில் அமைவதற்கான முறையில் நாம் கண்காணித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், ஒரு சாதாரண வியாபாரி, சிறிய வியாபாரிகள் ஒரு பிரச்சினையை எடுத்துக்கொண்டு சென்னைக்கு வரமுடியாது. அப்படி வந்தாலும் அதிகாரிகளைப் பார்த்து அல்லது அமைச்சர்களைப் பார்த்து குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் நிலை இருக்காது. ஆகவே, ஆங்காங்கு ஏற்படுகிற குறைகளைக் களைய அதிகாரிகள் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்ற முறையில் அரசு அறிவுறுத்தவேண்டும்.

அதேபோல் மாவட்ட அளவில், ரெவின்யூ டிவிஷன் ஆபீசர் அளவில் அட்வைசரி கமிட்டிகள் உள்ளன. இந்தக் கமிட்டிகளை இயங்கச்செய்யவேண்டும். ஆர்.டி.ஓ. அல்லது கலெக்டர் தலைமையில் இருக்கிற குழுக்கள் ஆர்.டி.ஓ. அல்லது கலெக்டருக்கு இருக்கிற வேலைப்பளு காரணமாக அவற்றைக் கூட்ட

வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, ஆர். டி. ஓ.-க்கள் அல்லது கலெக்டர்களால் கூட்டமுடியவில்லை என்றால் வணிகவரி இலாக்காவில் உள்ள அதிகாரிகள் மூலம் அந்த ஆலோசனைக் குழுக்களைக் கூட்டி, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டி, ஆங்காங்கு ஏற்படுகிற சில்லரைப் பிரச்னைகளை தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை பேசும்போதும் குறிப்பிட்டேன். ஸ்டேட் சேல்ஸ் டாக்ஸ் அட்வைசரி போர்ட் என்று இருக்கிறது. அந்தக் குழுவை கூட்டவேண்டும் என்று சொன்னேன். அந்தக் குழுவில் தலைவராக இருப்பவர் நிதி அமைச்சர் அவர்கள் ஆவார். அந்த இலாகா சம்பந்தமான அமைச்சர் என்ற முறையில் அவர்கள் அதன் தலைவராவார். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அக்குழு கூட்டப்பட வேண்டும். அதிகாரிகளும், வியாபாரிகளுடைய பிரதிநிதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் கூடி பேசுகிற ஒரு வாய்ப்பு கிடைக்கிற ஒரு இடம் இந்த சேல்ஸ்டாக்ஸ் அட்வைசரி போர்ட். சட்டமன்றத்தில் கூட அதிகமாகப் பேச வாய்ப்பு கிடையாது. சில விஷயங்களை நாம் சொல்லமுடியாது.

ஆகவே, நான் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்த அட்வைசரி போர்டை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சென்னை, மதுரை போன்ற எல்லா நகரங்களிலும் கூட்டவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே, சிறு வியாபாரிகளுக்கு சலுகைகள் வழங்க வேண்டும் என்ற கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். நான் சொல்லிக்கொள்வது 50 ஆயிரம் வரை டர்ன் ஓவர் இருக்கின்றவர்களுக்கு வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே, 50 ஆயிரம் ரூபாய் என்றிருப்பது போதுமா என்றால் போதாது. ஒரு லட்ச ரூபாய் டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கும் வரிவிலக்கு கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த பிரச்சினையைச் சொல்லும்போது, இன்றைக்கு வரிவிதிப்பு மூலமாக நமக்கு வரவேண்டிய பாக்கியைப்பற்றி, அரியர்ஸ் ஆஃப் சேல்ஸ் டாக்ஸ் எவ்வளவு என்பதைப்பற்றி பலரும் கேட்டார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத்தான் நானும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்விதம் பாக்கி கொடுக்கவேண்டியவர்கள் வசதி படைத்த பல வியாபாரிகள், அப்பலட் அத்தாரிட்டிக்கு நேரடியாக அப்பீல் செய்து கொள்வதின் மூலமாக தப்பித்துக்

கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமென்றால், அப்போது இந்த பாக்கி 8 கோடி அல்லது 10 கோடி இருந்தது என்று நினைக்கிறேன். இதை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்போமானால் இந்த இலாகா கோருகின்ற நிதியைப் பெற முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நான் ஒரு விஷயத்தை நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய நிதி ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.......... "சுத்தப்படுத்தப்பட்ட தோல் (ட்ரெஸ்டு ஹைட்ஸ் அன்ட் ஸ்கின்ஸ்) மீதான ஒருமுனை வரி 1½ சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும்......" என்று வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ் வியாபாரத்தைப் பொறுத்த அளவில் ஒரு பிரச்னை இருந்து வருகிறது. இந்த ஹைட்ஸ் அன்ட் ஸ்கின்ஸ்சைப் பொறுத்தவரையில் ஷெட்யூல் 2, 7-பி என்ற தலைப்பில்..

Dressed Hides and skins which were not subjected to tax at the point of first sale in the state is taxed at 1½%

இதில் 1½ சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது இதை 2 சதவீதம் என்று நிதி அமைச்சர் அவர்கள் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இதில் எனக்கு ஆட்சேபனையில்லை. அப்போது சிங்கிள் பாயின்ட் என்று இருந்தது, அது மாற்றப்பட்டு 1½ சதவீதம் என்று வருகிறது. இந்த ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ் என்பது முக்கியமான தொழில். குறிப்பாக, இந்த ஹைட்ஸ் அண்ட் ஸ்கின்ஸ் தொழில் நடத்தக்கூடியவர்கள் சின்னஞ்சிறு வியாபாரிகள். வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், இந்தத் தொழிலை நடத்துகின்றவர்கள் முஸ்லீம்களாகவும், தொழிலாளர்களாக இருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அதிகமாகவும் இருந்து வருகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட வரி உயர்வின் காரணமாக இப்படிப்பட்ட தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும், இந்தத் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதில் முக்கியமாக எழுந்துள்ள பிரச்னை, முக்கியமான பிரச்சினை. இதைப்பற்றி சிலர் நிதி அமைச்சர் அவர்களை சந்தித்து ரெப்ரசென்டேஷன் கொடுத்திருப்பதாக சொன்னார்கள். பதனிட்ட தோலுக்கு 1½ சதவீதம் ஒருமுனை வரியாகவும், மேலும் பதனிடப்பட்டு சாயமேற்றப்பட்டிருந்தால் அதற்கு வேறுபாடு காண்பிக்கப்படுகிறது. சட்டப்படி இதில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படவில்லை. விற்பனைவரிப்படி, சாயமேற்றப்பட்டிருந்

தால், 4 சதவீதம் பலமுனை விற்பனை வரியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றும், 'கலர்டு ஸ்கின்ஸ்' என்று வந்துவிட்டால் 4 சதவீதம் வரி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற ஒரு பிரச்னை ....

Before the Tamil Nadu Sales Tax Appelate Tribunal, Main Branch Madras-1, Tribunal Appeal No. 1294/1974

இந்த வழக்கில் இந்த பிரச்னை வந்தபோது, அப்போது பெஞ்சில் இருந்த நீதிபதிகள், இவ்விதம் வசூலிக்கப்பட்டது சரியல்ல என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 'கலர்டு ஸ்கின்ஸ்'க்கு 1½ சதவீதம் என்று வரி வசூலிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"We have therefore no hesitation whatsoever that the appeal deserved to be allowed and is accordingly allowed on merits.

We have carefully considered the records as well as the arguments. We have seen the specimen of the articles sold. Bits of the same are also on record. We have carefully scrutinised the same. We are unable to say that what the appellant had sold is not leather or in the other word dressed hides and skins. The fact that the appellant has done some more finishing would not take away the resultant product from the classification."

என்று 39-ம் ஆண்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, அரசாங்க ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற மான்வலில்..........

(பிற்பகல் 12-50)

அவர்களுடைய மான்யூவலிலேகூட சொல்லப்பட்டிருக்கிறது.

Government Memo, No. 7555- S.T.Spl. 2/61-3 dated 4-6-62)

iv. 'Dressed skins' referred to in the Second Schedule will include half-tanned, tanned or coloured, glazed and finished leather'

இதிலே பிரச்னை என்னவென்று சொன்னால், அதிகாரிகள் 4 சதவீதம் மல்டி பாயின்ட் சேல்ஸ் டாக்சை பழைய கேஸ்களுக்கும் ரீ-ஓபன் செய்து நடவடிக்கை எடுக்கிறார்கள். அப்பலேட் அசிஸ்டென்ட் கமிஷனரிடம் வியாபாரிகள் அப்பீலுக்குப் போனால் சாதகமான முடிவு வழங்கப்படுகிறது. எனவே, ட்ரிபியூனல் முடிவுக்குப் பிறகு, அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போகவில்லை. அப்படி அரசாங்கம் அப்பீலுக்குப் போகாததனால், அதுதான் பைனல் ஜட்ஜ்மெண்டு.

அந்த ஜட்ஜ்மெண்டுபடி அதிகாரிகள் நடக்காமல், அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அதற்குப் பிறகு வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கும் நிலைமை கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, முக்கியமான இந்தப் பிரச்சினையை அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெப்ரசென்டேஷக்குப் பிறகு என்ன பதில் வந்திருக்கிறது என்று சொன்னால், வேண்டுமென்றால் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போகவில்லை. ஆதலால், டிரிபியூனல் முடிவுக்குப் பிறகு, It has become final டிரிபியூனல் முடிவுக்குப் பிறகு, ரெவின்யூ போர்டு அதை ரெகார்டு செய்து அதிகாரிகளுக்கு அதை தெரியப் படுத்துவது கடமை. எனவே, இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்வது என் கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, என்டர்டைன்மென்டு டாக்ஸ் பிரச்னை. அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், இது ஏற்கனவே ஒப்புக்கொண்ட பிரச்னை. புதிதாகச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. முதல் அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் ஏற்கனவே, 1977ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் தேதியில் இந்த கம்பவுண்டிங் சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

மொத்தம் இருக்கிற 1,450 சினிமா தியேட்டர்கள், டூரிங் சினிமா, பஞ்சாயத்து சினிமா, இன்னும் முனிசிபல் கிரேடு 3, 2 ஆகியவைகளுக்கு இந்த கம்பவுண்டிங் சிஸ்டம் வந்துவிட்டது. முனிசிபல் கிரேடு 1, செலக்ஷன் கிரேடு, மதராஸ், மதுரை போன்றவைகளுக்கு இது விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இவைகளிலும் இந்த கம்பவுண்டிங் சிஸ்டத்தை அமல்படுத்தினால் அதிகாரிகளின் தொல்லை குறையும். பிரச்னை இல்லாமல் காரியங்கள் செய்ய வாய்ப்பிருக்கும்.

நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலேகூட மலைத் தோட்டப் பயிருக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் இல்லை, அதிலேகூட கஷ்டமிருக்கிறது என்றார்கள். இதற்கும் , கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டுவந்தால் வியாபாரிகள், விவசாயிகள் அதிகாரிகளின் தயவை நாடாமல் காரியங்கள் செய்து கொள்ள முடியும். தேவைப்பட்டால், ரேட்டை வேண்டுமென்றால் அதிகப்படுத்திக் கொள்ளலாம். அதிலே எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், இதுபோன்ற கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்த இலாகாவைப் பற்றிச் சொல்லும்போது. நிதி அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். நான் அவர்களைப் பாராட்டி ரொம்ப நாள் ஆகிவிட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த இறால், மீன் ஆகியவற்றிற்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். நான் கேள்வி போடும்போது சொன்னார்கள், இறாலை அதிகம் சுவைக்கிறார்கள் போலும் என்று. என்னைவிட அதிகமாக அவர்கள் சுவைத்திருக்கலாம். எனவே, அவர்கள் அளித்த இந்தச் சலுகையைப் பாராட்டி, இந்த அளவோடு என் கருத்துக்களைக் கூறி, விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சபையிலே வைத்த மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே, அதைப்பற்றி பேசிய உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லி , கடைசியில் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் உளமாற என்னைப் பாராட்டி உட்கார்ந்திருக்கிறார்கள். நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இந்த அவையிலே பெரும்பாலானவர்கள் பேசிய கருத்துக்களை எதிரொலிக்கின்ற வகையிலே பேசினார்கள்.

இதிலே ஒன்று, விற்பனை வரியை எடுத்துவிட்டு, எக்சைஸ் வரியைக் கொண்டு வருவது என்று மத்திய சர்க்கார் ஒரு முடிவிலே இருப்பதாகவும், அதை பல கூட்டங்களிலே அல்லாது, இதே சட்ட மன்றத்தில் நான் ஒத்துக் கொள்ளாமல் பேசியிருந்தாலும், அவர்கள் அதில் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்றும், அது மட்டுமல்லாமல், அவர்கள் எலெக்ஷன் மானிபெஸ்டோவிலே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், நிச்சயம் சேல்ஸ் டாக்சை எடுத்துவிட்டு, எக்சைஸ் டாக்ஸ் கொண்டு வருவோம் என்று பேசியிருப்பதாகவும், சொல்லி அது அச்ச உணர்வைத் தருகிறது என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று பிரதம அமைச்சரைச் சந்தித்துப் பேசிய நேரத்திலும், நமது மத்திய அரசின் நிதியமைச்சர் எச். எம். படேல் அவர்கள் இங்கே வந்து முதலமைச்சரைச் சந்தித்து உரையாடிய நேரத்திலும், அவரோடு பக்கத்தில் இருந்தவன் என்ற காரணத்தால் நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் — எந்த காரணத்தைக் கொண்டும் இந்த அரசு சேல்ஸ் டாக்சை நீக்கிவிட்டு எக்சைஸ் வரியைக் கொண்டு வர ஒப்புதல் அளிக்காது என்று பேசியதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த ஜட்ஜ்மெண்டுபடி அதிகாரிகள் நடக்காமல், அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அதற்குப் பிறகு வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுக்கும் நிலைமை கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, முக்கியமான இந்தப் பிரச்சினையை அமைச்சர் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரெப்ரசென்டேஷக்குப் பிறகு என்ன பதில் வந்திருக்கிறது என்று சொன்னால், வேண்டுமென்றால் கோர்ட்டுக்குப் போகலாம் என்று சொல்கிறார்கள். அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போகவில்லை. ஆதலால், டிரிபியூனல் முடிவுக்குப் பிறகு, It has become final டிரிபியூனல் முடிவுக்குப் பிறகு, ரெவின்யூ போர்டு அதை ரெகார்டு செய்து அதிகாரிகளுக்கு அதை தெரியப் படுத்துவது கடமை. எனவே, இந்தப் பிரச்சினையில் அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக் கொள்வது என் கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, என்டர்டைன்மெண்டு டாக்ஸ் பிரச்னை. அரசாங் கத்தைப் பொறுத்தமட்டில், இது ஏற்கனவே ஒப்புக்கொண்ட பிரச்னை. புதிதாகச் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. முதல் அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் ஏற்கனவே, 1977ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் தேதியில் இந்த கம்பவுண்டிங் சிஸ்டத்தைக் கொண்டு வந்தி ருக்கிறது.

மொத்தம் இருக்கிற 1,450 சினிமா தியேட்டர்கள், டூரிங் சினிமா, பஞ்சாயத்து சினிமா, இன்னும் முனிசிபல் கிரேடு 3, 2 ஆகியவைகளுக்கு இந்த கம்பவுண்டிங் சிஸ்டம் வந்துவிட்டது. முனிசிபல் கிரேடு 1, செலக்ஷன் கிரேடு, மதராஸ், மதுரை போன்றவைகளுக்கு இது விஸ்தரிக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இவைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இவைகளிலும் இந்த கம்பவுண்டிங் சிஸ் டத்தை அமல்படுத்தினால் அதிகாரிகளின் தொல்லை குறையும். பிரச்னை இல்லாமல் காரியங்கள் செய்ய வாய்ப்பிருக்கும்.

நிதி அமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையிலேகூட மீன் தோட்டப் பயிருக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் இல்லை, அதிலேகூட கஷ்டமிருக்கிறது என்றார்கள். இதற்கும் கம் பவுண்டிங் சிஸ்டம் கொண்டுவந்தால் வியாபாரிகள், விவசாயி கள் அதிகாரிகளின் தயவை நாடாமல் காரியங்கள் செய்து கொள்ள முடியும். தேவைப்பட்டால், ரேட்டை வேண்டு மென்றால் அதிகப்படுத்திக் கொள்ளலாம். அதிலே எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், இதுபோன்ற கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இந்த இலாகாவைப் பற்றிச் சொல்லும்போது, நிதி அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். நான் அவர் களைப் பாராட்டி ரொம்ப நாள் ஆகிவிட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த இறால், மீன் ஆகியவற்றிற்குச் சலுகை கொடுத்திருக்கிறார்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற் கிறேன்; பாராட்டுகிறேன். நான் கேள்வி போடும்போது சொன்னார்கள், இறாலை அதிகம் சுவைக்கிறார்கள் போலும் என்று. என்னைவிட அதிகமாக அவர்கள் சுவைத்திருக்கலாம். எனவே, அவர்கள் அளித்த இந்தச் சலுகையைப் பாராட்டி, இந்த அளவோடு என் கருத்துக்களைக் கூறி, விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சபையிலே வைத்த மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே, அதைப்பற்றி பேசிய உறுப் பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளை யும் எடுத்துச் சொல்லி, கடைசியில் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் உளமாற என்னைப் பாராட்டி உட்கார்ந் திருக்கிறார்கள். நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது, இந்த அவையிலே பெரும்பாலானவர்கள் பேசிய கருத்துக்களை எதிரொலிக்கின்ற வகையிலே பேசினார்கள்.

இதிலே ஒன்று, விற்பனை வரியை எடுத்துவிட்டு, எக்சைஸ் வரியைக் கொண்டு வருவது என்று மத்திய சர்க்கார் ஒரு முடி விலே இருப்பதாகவும், அதை பல கூட்டங்களிலே அல்லாது, இதே சட்ட மன்றத்தில் நான் ஒத்துக் கொள்ளாமல் பேசி யிருந்தாலும், அவர்கள் அதில் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்றும், அது மட்டுமல்லாமல், அவர்கள் எலெக்ஷன் மானி பெஸ்டோவிலே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றால், நிச்சயம் சேல்ஸ் டாக்சை எடுத்துவிட்டு, எக்சைஸ் டாக்ஸ் கொண்டு வருவோம் என்று பேசியிருப்பதாகவும், சொல்லி அது அச்ச உணர்வைத் தருகிறது என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் சென்று பிரதம அமைச்சரைச் சந்தித்துப் பேசிய நேரத்தி லும், நமது மத்திய அரசின் நிதியமைச்சர் எச். எம். படேல் அவர்கள் இங்கே வந்து முதலமைச்சரைச் சந்தித்து உரை யாடிய நேரத்திலும், அவரோடு பக்கத்தில் இருந்தவன் என்ற காரணத்தால் நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் — எந்த காரணத்தைக் கொண்டும் இந்த அரசு சேல்ஸ் டாக்சை நீக்கிவிட்டு எக்சைஸ் வரியைக் கொண்டு வர ஒப்புதல் அளிக் காது என்று பேசியதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதைச் சொல்லுகிறபோது இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். நமது மாநிலம் மட்டுமல்லாமல், இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற பல்வேறு மாநிலங்கள் தங்களது கடுமையான எதிர்ப்புகளைத் தெரிவித்திருக்கிறது என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் எப்படி மத்திய அரசு சிந்தனையோட்டம் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத் தக்க வகையில் அண்மையில் எச். எம். படேல் அவர்களும், மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களும் மக்களவையில் பேசிய அந்தப் பேச்சின் ஒரு பகுதியை இந்த அவைக்கு நான் படித்துக் காட்ட விரும்புகிறேன் — உங்கள் அனுமதியோடு.

அதிலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்—

The Prime Minister Mr. Morarji Desai and the Finance MInister Mr. H.M. Patel, assured Janata members in the Lok Sabha to-day that they stood by the party's election pledge to secure abolition of sales tax and replace it with Central excise.

இதில் உறுதியாக நாங்கள் நிற்கிறோம் என்று இரண்டு பேரும் சொன்னார்கள்.

'But' இதிலே தான் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"But this could not be done without the approval of all the States. Although efforts so far to bring the States round to the view had not succeeded, they would not give up trying to persuade them.

Answering a volley of questions, the Finance Minister said in the event of States not agreeing to the proposal, an alternative might be suggested to atleast secure uniformity in the rate of sales tax on some commodities to remove certain difficulties,''

அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து — நான் தமிழில் சொல்வதானால் பல மாநிலங்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொன்னாலும் முயற்சியைக் கைவிடாமல் அந்த மாநிலங்களை நமது வழிக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபடுவோம் என்று மொரார்ஜி அவர்களும், தொடர்ந்து பேசிய எச். எம். படேல் அவர்கள் மாநிலங்கள் இந்த சேல்ஸ்டாக்சை மாற்றிவிட்டு எக்ஸைஸை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் யூனிபார்ம் சேல்ஸ் டாக்சை சில ஐட்டத்தின் மீது, கமாடிடிஸ் மீது கொண்டு வர

முயற்சிக்கலாம் என்று பேசியிருக்கிறார்கள். அத்தோடு அந்தக் கூட்டத்திலேயே பேசிய அருமை எதிர் கட்சித் தலைவர் சவான் அவர்கள் பேசும்போது—

Mr. Y.B. Chavan said the question of sales tax also had political aspects. He asked whether in view of the current fears over Central-State relations the Governmen would once and for all give up the idea of abolishing sales tax so that the move did not create further difficulties.

என்று கூறியிருக்கிறார்.

சவான் அவர்கள் பேசும்போது, ஏற்கனவே மத்திய மாநில உறவு ஒருவகையான நெருக்கடியில் இருக்கிறது. அதையொட்டி நீங்கள் இதைக் கொண்டு வருவீர்களானால் மேலும் பல சிக்கல்கள் உருவாகாதா என்ற கேள்வியைக் கேட்டபோது படேல் அவர்கள் தெரிவித்த கருத்து—

Mr. Patel said coming as it did from an experienced person he would give the view due weight.

ஒரு தலைசிறந்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் திரு. சவான் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிற காரணத்தால், நிச்சயமாக அதற்குத் தரவேண்டிய மரியாதை உரிய அளவுக்குத் தரப்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு அவர் நின்றுவிடவில்லை. அந்த அவையில் நடந்த விவாதத்தைச் சொல்லுகிறேன். கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த நண்பர் லக்கப்பா அவர்கள் இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து பேசும்போது—

"To another question by Mr. K. Lakkappa whether the move was not politically motivated to reduce the States to the leve of Municipalities"

என்று கூறியிருக்கிறார்.

இதை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த முடிவு மாநிலங்களை பஞ்சாயத்துக்கள் அளவுக்குத் தரம் தாழ்த்துவதற்கு உள்ள அரசியல் நோக்கத்தோடு கொண்டு வருவது அல்லவா என்றெல்லாம் கேட்டிருக்கிறார்.

இந்த உணர்வுகள் எல்லாம் மக்கள் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குச் சொல்லி, பல மாநிலங்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, இந்த அரசு நிச்சயமாக இதை ஏற்றுக்கொள்ளாது என்ற உறுதியினை முதலமைச்சர் அவர்கள் சார்பிலும், இந்த அரசின் சார்பிலும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கிறேன்.

(பிற்பகல் 1–00)

இரண்டாவது இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்து, மதுவிலக்குப் பற்றிய கருத்தாகும். இன்னொன்று, இங்கு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கோதண்டராமன அவர்கள் பேசுகின்றபோது ஆவேசத்தோடு பேசினார்கள், இது ஒரு காமதேனு, சேல்ஸ்டாக்ஸ் என்பது ஒரு காமதேனு, அது ஒரு நல்ல கறவை மாடு, அதை கயிறு போட்டு இழுத்துக் கட்டி திரு. எச். எம். படேல், டெல்லிக்குக் கொண்டுபோய் விடுவார் என்று குறிப்பிட்டார்கள். நான் திரு. கோதண்டராமன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த காமதேனு இங்கே தான் இருக்கிறது. கயிறை அங்கே இருந்து கொண்டுவர படேல் கடமைப்பட்டு இருக்கிறார். அவர் கயிறை அங்கே இருந்து கொண்டு வந்து இந்த காமதேனுவைக் கட்ட முயற்சிக்கும்போது அதைத் தடுக்கின்ற கரங்களிலே ஒரு கரமாக திரு. கோதண்டராமன் அவர்கள் கரம் நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நான் திரு. கோதண்டராமனை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காமதேனு விந்தியத்தை விட்டுத் தாண்டாது என்ற உறுதியை நான் அளிக்க விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு மதுவிலக்கு பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். திரு. கோதண்டராமன் அவர்களும் பேசினார்கள், திரு. அம்பிகாபதி அவர்கள் இப்போது இல்லை, அவர்களும் பேசினார்கள்., ரொம்ப சலித்துக் கொண்டு பேசினார்கள், இது எதற்காக என்று கூடப் பேசினார்கள், இதை கைவிட்டால் நிதி ஆதாரம் பெருகாதா என்று கேட்டார்கள்.

சிலர் பேசும்போது பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே பிரிவினை காட்டுவதாக இருக்கிறது, பணக்காரர்கள் பெர்மிட் வைத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள், மற்றவர்கள் எல்லாம் குடிக்கக்கூடாதா என்று திரு. கோதண்டராமன் பெரியவர், கேட்டார். அவர்கள் கள்ளைப்பற்றி ஒரு ரிசர்ச் ஒர்க்கையே இங்கே செய்தார்கள், அதிலே ஏ முதல் இஸட் வரையில் என்ன என்ன வைட்டமின்கள் இருக்கின்றன என்றெல்லாம் அவர் பேசியபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தின் அடையாளம் என்று நான் கருதாமல் மற்றவர்கள் சொல்லியதை எடுத்துக் கொண்டு பேசினார் என்று கருதுகிறேன், கள் குடிக்கலாம், அது நல்லது என்று சொன்ன அவர் கடைசியிலே ஒன்றை அழுத்தந் திருத்தமாகக் கூறினார், மதுவிலக்கை தீவிரமாக அமல் நடத்தவேண்டுமானால் எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருக்கும் மது பெர்மிட் வழங்கக் கூடாது என்று சொன்னார். குடிக்காத காரணத்தால் மற்றவர்கள் இறந்து போவார்கள் என்று சொல்கிற காரணத்தை நான் ஏற்க மாட்டேன். ஆகவே மது பெர்மிட் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்று அறிவிப்பார்களா என்று கேட்டார்கள்.

இந்த இலாகாவை, பெரும்பாலும் நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றெடுத்துக் கொண்டிருக்கிறவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நிச்சயமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் அது பற்றி, திரு. கோதண்டராமன் அவர்கள் அறிவிப்பு பற்றி அல்லது யோசனை பற்றி அரசு பரிசீலிக்கும், முதலமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு பேசியவர்கள் மொத்தமாகத் தெரிவித்த கருத்து, நீங்கள் எல்லாம் மல்டிபாயிண்டிலிருந்து சிங்கிள் பாயிண்டிற்கு எல்லா கமாடிட்டீஸ்ஐயும் கொண்டுவர வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்னார்கள். நான் திருச்சியிலே நடைபெற்ற வியாபாரிகள் மாநாட்டிலே கலந்து கொண்டபோது........

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இப்படி மது பெர்மிட் கொடுக்கக்கூடாது என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆனால் ஸ்பிரிட் பெர்மிட் கொடுக்கப்படுகிறபோது அதை வைத்து மது காய்ச்சுவதற்கு தவறாக பயன்படுத்தப்படுகிறதே அதையும் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளும் ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதற்கு பிறகு வருகிறேன். அந்த மாநாட்டிலே நான் கலந்துகொண்டேன். கலந்து கொண்டு பேசியது பற்றி இங்கே சில நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகள் தவறு செய்தால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அதே போல வணிகர்கள் கலப்படம் செய்வார்களானால் அவர்களும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்றும் நான் பொதுவாக எடுத்து சொன்ன கருத்து எப்படி தவறாக இருக்கும் என்று இந்தத் தரப்பிலிருந்துகூட எழுப்பப்பட்டது.

அந்த மாநாட்டிலே நான் கலந்து கொண்டு பேசினேன். இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சொல்ல வேண்டிய கருத்துக்களை முறையாக எடுத்துச் சொல்லி அவர்கள் மனம் மகிழத் தக்க வகையிலும் அதே நேரத்திலே கடமையை உணர்த்தத் தக்க வகையிலேயும் கருத்துக்களைச் சொல்லி அவர்களுடைய பாராட்டுக்களைப் பெற்று விட்டு வந்திருக்கிறேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

சில பேர்கள் கலப்படம் செய்கிறார்கள் என்பதற்காக மொத்த சமுதாயத்தையே குற்றவாளிகளாக ஆக்கிவிடக் கூடாது என்பதை நான் அந்த மாநாட்டிலே தெரிவித்தேன்.

கலப்படம் செய்வது எவ்வளவு பெரிய பாவகாரியம் என்பதைப் பற்றியும், எவ்வளவு பெரிய கொடுமையான சமுதாயக் குற்றம் என்பதைப் பற்றியும் அந்த மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசிய நமது மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் அந்த மாநாட்டிலே பேசினார்கள்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்லி விட்டு, ஆக எந்தக் காரணத்திற்காகவும் கலப்படம் செய்பவர்களை இந்த அரசு அனுமதிக்காது என்றும், அவர்களை அடையாளம் காட்டுங்கள் என்றும் வீரப்பன் அவர்கள் பேசினார்கள். வீரப்பன் பேசியதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் ஒருவர் பேசும்பொழுது அந்த வேலை எங்களுக்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். இது சமுதாயத்திற்கு இருக்கின்ற பொதுப் பொறுப்பு என்ற காரணத்தினால் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன், யார் தவறு செய்தாலும் சரி, அந்தத் தவறுகளை அடையாளம் காட்டுவதற்காக, இனம் காட்டுவதற்காக அரசியல் கட்சிகள் மட்டுமல்லாமல் சமூக சேவைகளிலே ஈடுபடுபவர்கள் அத்தனை பேர்களும் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு அந்த மாநாட்டிலே அவர்கள் தெரிவித்தது, எல்லாவற்றையும் ஒரு முனை வரியாக ஆக்குங்கள் என்று தெரிவித்தார்கள். இப்பொழுது நாம் எத்தனை பண்டங்களின் மேல் ஒரு முனை வரி வைத்து இருக்கிறோம் என்றால் ஏறக்குறைய, கொடுத்திருக்கின்ற கணக்கின்படி, கிட்டத்தட்ட 137 அயிட்டங்களின் மேல் நாம் இன்றைக்கு சிங்கிள் லெவி வைத்திருக்கிறோம்.

இதற்குப் பிறகு வெல்லத்திற்கும், நாட்டு சர்க்கரைக்கும் நீங்கள் மல்டிபாயிண்ட் போட்டிருக்கிறீர்கள், அதைக் கொஞ்சம் மாற்ற வேண்டுமென்று இங்கே கருத்து சொல்லப்பட்டது. ஒரு முனை வரியாக்கினால் உங்களுக்கு ஏராளமாக வரி வசூலிக்க முடியும் என்றும் அதன் மூலம் ஹராஸ்மெண்ட் இருக்காது என்றும், அதன் மூலம் நீங்கள் நிதி ஆதாரங்களைத் தேடிக் கொள்ள முடியும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது ஒரு முனை வரி அதிலே இருந்து பலமுனை வரியாகப் போடப்பட்ட பிறகு ஏதாவது வியாபாரிகள் அதன் மூலம் சிரமப்படுவார்களானால் அல்லது சிரமப்பட்டிருக்கிறார்களானால் அதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் நிச்சயம் ஒரு முனை வரியாக்குவதற்கு இந்த அரசுக்குத் தயக்கம் இல்லை என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்னொன்றையும் நான் தெரிவித்தாக வேண்டும். இங்கே பேசிய நண்பர்களிலே பலர் எந்தெந்த அளவிற்கு இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்கள் இலஞ்சம் வாங்குகிறார்கள் என்றும், வாங்கிக் கொண்டு தப்பித்து விடுகிறார்கள் என்றும் இங்கே கருத்து தெரிவித்தார்கள். நான் இங்கே மகிழ்ச்சியோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வரி விதிப்பு முறைகளைப்பற்றி ஆராய்வதற்காக ஏற்கனவே— உங்களுக்குத் தெரியும்—குழு போடப்பட்டது, கெய்வார் தலைமையின் கீழ் அது பணிகளை செய்து கொண்டிருக்கிறது. அந்தக் குழுவின் ரிப்போர்ட் கிட்டத்தட்ட ஜூன் மாதத்திற்குள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அவர்கள் எப்படி ப்ரொசீஜர் என்பதைப்பற்றி மட்டும்தான் ஆராய்கிறார்கள். டாக்ஸ்-எவேஷனை எப்படித் தடுப்பது என்பதைப்பற்றி ஆராய்கிறார்கள். ஒருமுனை வரி அல்லது பலமுனை வரி என்பதைப்பற்றி அந்தக் குழு ஆராயவில்லை. அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமேயானால், பலமுனை வரி உள்ள ஒன்று இது ஒருமுனை வரிக்குத் தள்ளப்பட வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகுமேயானால் நிச்சயம் அதுபற்றிப் பரிசீலிக்கும், அதுபற்றி அனுதாபத்தோடு கவனிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப்பிறகு இப்படிப்பட்ட தவறுகள் நடக்கிறதே, இதைக் கண்டுபிடிக்க என்ன வழி என்று கேட்பவர்களுக்கு நான் இங்கே அதை அறிமுகம் செய்ய விரும்புகிறேன். 'ஸ்டேட் லெவல் அட்மினிஸ்ட்ரேட்டிவ் செட் அப்' ஒன்று போடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது விஜிலென்ஸ், இன்பெக்ஷன் இண்டெலிஜென்ஸ் என்ற மூன்றையும் இணைத்து ஒரு மாநில நிர்வாக அமைப்பாக ஆக்கி, ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையின் கீழ் அது இயங்கும். மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இன்டெகிரேட்டாக இயங்கும் வகையில், சீ. டி. ஓ. இல்லாமல் அங்கேயுள்ள டிவிஷனல் லெவலில் டெபுடி கமிஷனரின் தலைமையில் அந்தக் அமைப்பு இயங்கும். அந்த அமைப்பு இந்தக் காரியத்தைக் கவனிக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப்பிறகு, இங்கே பேசியவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். மாண்புமிகு மார்க்கபந்து அவர்கள் பேசும் பொழுது அவர்கள் தெரிவித்தது, மதுக் கஷாயம், அரிஷ்டம் போன்ற இவைகளை உற்பத்தி செய்பவர்கள் அதிலே இப்படிப்பட்ட ஸ்பிரிட்களைக் கலந்து விடுகிறார்கள், அதைத் தடுக்க இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் மார்க்கபந்து அவர்களுக்கு அரசின் சார்பாக உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கென்று கடுமையான அளவிற்கு அவர்களுக்குத் தண்டனை வழங்குகின்ற முறையில் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது என்ற முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்து நல்ல முடிவதைத் தர முடியுமானால், உங்களுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறது, நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு மறுத்தளித்து விடாது என்று பதில் அளித்துள்ளேன்.

அதற்குப் பிறகு என்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் என்று சொல்லி சிட்டி போன்றவைகளை நீங்கள் இதிலே சேர்க்கக் கூடாதா என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

''கம்பவுண்டிங் சிஸ்டம்'' மிக நல்லது என்று அவர்கள் பாராட்டினார்கள். இதன் மூலம் 'ஹராஸிங்' குறைகிறது. 'எவேஷன்' குறைகிறது என்று அவர்கள் மிகத் தெளிவாக இட்டவட்டமாக எடுத்துக் கூறினார்கள். இது வெற்றிகரமாக இங்காங்கே நடக்கிறபோது, செகன்டு கிரேடு, தேர்டு கிரேடு முனிசிபாலிடிகளில் நடக்கும்போது, ஏன் தலைநகரத்திலே இதைக் கொண்டுவரக்கூடாது என்று அவர் தெரிவித்த யோசனை எவ்வளவு அற்புதமான யோசனை என்பதை நான் எண்ணிப்பார்க்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில், இன்னொன்றையும் நான் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக இந்த கம்பவுன்டிங் முறை வெற்றி பெறாது, இதிலே நீங்கள் தோல்வி அடைவீர்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். ஆகவே, இந்தக் கருத்தினை அருமை சாதிக் பாட்சா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி அவர்களைத் திருப்திபடுத்துவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அந்த கம்பவுன்டிங் சிஸ்டத்தை தலைநகருக்கும் கொண்டு வருகின்ற பிரச்சினையை இந்த அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்று நான் சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு மற்றபடி பேசியவர்கள் அனைவரும் நான் பேசியதைத்தான் பேசினார்கள், அவர்களுக்கும் நான் சொல்ல வேண்டிய அளவுக்கு நான் பதில் சொல்லிவிட்டேன் என்று கருதுகிறேன்.

ஆகவே, அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய நல்ல யோசனைகளை ஏற்று நிறைவேற்றக்கூடிய யோசனைகளை நிறைவேற்றுவோம் என்று உறுதி சொல்லி, நான் இங்கே சமர்ப்பித்த மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட கேட்டிருப்பதை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களை, எல்லோரும் பாராட்டியதற்குப் பிறகு, அந்த வெட்டுத் தீர்மானங்களை தேவையில்லை என்று நான் கருதுகிற காரணத்தாலே அந்தப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு இதை நிறைவேற்றித் தருவீர்கள் என்று நம்பி, நான் பேசியதற்குப் பிறகு, இன்னும் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்று உறுப்பினர்கள் உணருவார்கள் என்று........

(திரு. துரை முத்துச்சாமி கையை தூக்கி காண்பித்தார்.)

ஆகவே உறுப்பினர் அவர்கள் கையைத் தூக்கிக் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லை (குறுக்கீடு) ஒன்றை விட்டு விட்டேன், அந்த நல்ல கருத்தை அவர்கள் தெரிவித்தார்கள்.

உணவுப் பண்டங்களுக்கு—ஓட்டலிலே உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி விதிப்பதை நீக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள் அதை நான் விட்டு விட்டதற்காக வருந்துகிறேன். அந்த விற்பனை வரியின் மூலம், அதை நீக்கிவிடுவதன் மூலம் சர்க்காருக்கு ஏற்படுகிற இழப்பு 2 கோடி ரூபாய் என்று சொல்லிக் கொள்கிற அதே நேரத்தில் 2 கோடி ரூபாயாக இருந்தாலும், அந்த விற்பனை வரியை நீக்குவதற்காக எந்தெந்த வழிகளைக் கையாள்வது, எப்படி அதை செய்வது என்பது பற்றி இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை கனம் உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலே இல்லை என்றாலும், சிறிய ஓட்டல்களிலாவது அதை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் பொதுவாகவே சொல்லியிருக்கிறேன். நீங்கள் பிரித்துப் பார்க்கிறீர்கள். பொதுவாக உணவுப் பண்டங்கள் என்று சொல்லும்போது, எல்லோரும் சாப்பிடுகிறவர்கள்தான். அதிலே சில பேர்கள் பெரிய நட்சத்திர ஓட்டல்களுக்குப் போவார்கள், அங்கே வசதி உள்ளவர்கள்தான் போவார்கள் என்று அவர் கருதலாம். சின்ன ஓட்டல்களுக்காகத்தான் அவர் தெரிவித்திருக்கிறார் என்று நான் கருதுகிறேன். எப்படி சிறு விவசாயிகளை பாதுகாக்கிற பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளதோ, அதைப்போல சின்னச் சின்ன பெட்டிக் கடைகளை வைத்திருப்பவர்களையும், சிறு ஓட்டல் வைத்திருப்பவர்களையும் பாதுகாக்கிற முக்கியமான பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதைத் தெரிவித்து, இங்கே வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்த அத்தனை உறுப்பினர்களும் அதை திரும்பப் பெற்று திரு. கோதண்டராமன் தயாராக இருக்கிறார் என்று கருதுகிறேன், நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு, மெத்தப் பணிவுடன் அமைகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, நான் பேசும்போது அண்டை மாநிலங்களிலே இருந்து வருகிற ஆடு மாடு, கன்று கால்நடைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதே, அதனால் அரை கோடி ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்படுகிறதா.....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: புரிந்து கொண்டேன் சுவாமிதாஸ் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து, சுவாமிதாஸ் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். இதனாலே சர்க்காருக்கு ஏற்படுகிற நஷ்டம் 50 லட்சம் ரூபாய் என்று தெரிவித்தார் என்பது என் நினைவு. நான் விசாரித்துப் பார்த்ததில்

[திரு. கி. மனோகரன்] [1978 மார்ச் 14

அதன் மூலம் ஏற்படுகிற நஷ்டம் இழப்பு—50 ஆயிரம் என்று எனக்குக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆயிரத்திலே இருந்து லட்சத்துக்கு தாண்டவேண்டாம் என்று சுவாமிதாஸ் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்...

(பிற்பகல் 1-20)

அதற்குப் பிறகு இதை எதற்காகச் செய்தோம் என்றால் அந்த ஆடுமாடுகளை ஏற்றிக்கொண்டு வருகிறபோது, செக்போஸ்டில் ஏற்படுகின்ற ஹராஸ்மென்ட்டிலிருந்து விடுவிப்பதற்காகவும், இப்படிப்பட்ட காரியங்கள் செய்யப்பட்டதே தவிர வேறு எதற்கும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அதன் மேல் இப்படிப்பட்ட எக்சம்ஷன் கொடுக்காவிட்டால் ஏற்படுகின்ற வரி ஏய்ப்பு மிகவும் அதிகமாக இருக்கும் என்று கண்டுதான் அந்த எக்சம்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் நமக்கு ஏற்படும் இழப்பு வெறும் 50,000 ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதன் மூலம் நான் வரி ஏய்ப்பிலிருந்து எடுத்துக்கொண்டு இருக்கிற வரவு அதிகம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அந்த சிறிய ஓட்டல்களுக்காவது விலக்களிக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்தோடு 7 முறை அதைப் பற்றி கேட்டு விட்டீர்கள். அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். இப்போது மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஓ. சுப்பிரமணியம், வி. கே. கோதண்டராமன் ஆகியோர் கொடுத்திருந்த மானியக் கோரிக்கை எண். 2-க்கு வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண். 2–மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 65,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஏ. சுவாமிதாஸ், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் மானியக் கோரிக்கை எண். 4-க்கு கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன

1978 மார்ச் 14]

திரு. கு. ரமணி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாக கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,13,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"..

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் த. வேணுகோபால், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் மானியக் கோரிக்கை எண். 5-க்கு கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. ம. ஆண்டி அம்பலம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 71,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், வி. கே. கோதண்டராமன் ஆகியோர் மானியக் கோரிக்கை எண். 58-க்கு கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 86,82,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*124. 1977-78ஆம் ஆண்டில் உள் (மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை) துறை ஆற்றிய பணிகள் பற்றிய ஆய்வு (ஆங்கிலம், தமிழ்).

*125. கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*126. கோரிக்கை எண். 5—முத்திரைத்தாள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

*127. 1977ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 29ஆம் தேதிவரை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை (தமிழ்).

* 11-3-1978 அன்று அனுப்பப் பெற்றன.

இணைப்பு I.

[383ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 555-க்கான விடையைக் காண்க).

தொழிலாளர் துறையில் தொழிலாளர் பிரிவு (Labour Wing), தொழிற்சாலைப் பிரிவு (Factories Wing) என இரு பிரிவுகள் உள்ளன. இதில் 329 அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த இரு பிரிவுகளிலும் வேலை செய்யும் அலுவலர்கள் பின்வருமாறு :—

(1) தொழிலாளர் துறை—(Labour Department)—

(அ) தொழிலாளர் துறை அலுவலர் ..	41
(ஆ) தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்.	217
(இ) தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்.	30

(2) தொழிற்சாலை பிரிவு—(Factories Wing)—

(அ) தொழிற்சாலை ஆய்வாளர் ..	24
(ஆ) தொழிற்சாலை உதவி ஆய்வாளர்	16
(இ) தொழிற்சாலை ஆய்வாளர் (மகளிர்)	1

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எத்தனை பேர்?

(1) தொழிலாளர் பிரிவு (Labour Wing)—

(அ) தொழிலாளர் துறை அலுவலர்	2
(ஆ) தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்..	4
(இ) தொழிலாளர் துறை துணை ஆய்வாளர்	1

(2) தொழிற்சாலை பிரிவு—(Factories wing)

(அ) தொழிற்சாலை ஆய்வாளர்	2
(ஆ) தொழிற்சாலை உதவி ஆய்வாளர் (ஒருவர் பதவியிலிருந்து விலகிவிட்டார்) ..	3

(இ) விகிதாச்சார முறையான 18 சதவீதம் உள்ளதா ?

தொழிலாளர் துறையைப் பொறுத்தவரையில் அரசு அலுவலர்கள் தேர்ந்தெடுப்பதைப் பற்றி பொது விதி 22 (General Rule 22) கூறுகிறது. இதன்படி நேரடியாக தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கும் பதவிகளுக்கு மட்டுமே விதி 22-ன்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவீதம் கொடுக்கப்படவேண்டும். எனவே அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 9 தொழிற்சாலை ஆய்வாளர்களில் இருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தொழிற்சாலை உதவி ஆய்வாளர்கள் பதவிக்கு 16 பேர் தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டதில் மூவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். பின் ஒருவர் பதவியிலிருந்து விலகி விட்டார். ஆகவே 18 சதவீதம் தேர்வு நடந்தபோது விகிதாச்சார முறை கடைபிடிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் துறை அலுவலர்களை பொறுத்தவரையில் 5 பேர் நேர்முகத் தேர்வு மூலமாக (direct recruit) தமிழ்நாடு அரசுத் தேர்வுக்குழுவால் (Tamil Nadu Public Service Commission) தேர்ந்தெடுக்கப்பட்டதில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். தொழிலாளர் துறை உதவி ஆய்வாளர்கள் (Assistant Inspector of labour) 20 பேர் நேர்முகத் தேர்வு மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் 4 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆகவே 18 சதவீதம் விகிதாச்சார முறைப்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு நேர்முகத் தேர்வு மூலமாக எடுக்கப்பட்ட பதவிகள் தவிர மற்றெல்லாம் துறை மூலமாக பதவி உயர்வு மற்றும் மாற்றல் முறைப்படி கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு 18 சதவீதம் விகிதாச்சார முறை பொருந்தாது.

(ஈ) இல்லையேல் அரசின் எதிர்கால நடவடிக்கை என்ன ?

தொழிலாளர் துறையில் தொழிலாளர் பிரிவு தொழிற்சாலை பிரிவு ஆகிய இருபிரிவுகளிலும் உள்ள காலியான இடங்களில் காலியான அரசிதழ் பதிவு பெற்ற அல்லது பதிவு பெறாத இரு பதவிகளுக்கும் தமிழ்நாடு அரசு தேர்வுக்குழு (Tamil Nadu Public Service Commission) மூலமாக நேர்முகமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவல்களுக்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பொருத்தவரை 18 சதவீதம் விகிதாச்சார முறைப்படி கொடுக்கப்பட்டிருப்பதால் இந்தக் கேள்விக்கு இடமில்லை.

இணைப்பு II.

[402ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 567 க்கான விடையைக் காண்க].

(அ) திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் முன்னிலையில் கைத்தறி தொழிலாளர் பிரதிநிதிகளும், கைத்தறி உரிமையாளர் பிரதிநிதிகளும் 20-8-1977 அன்று திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக அளவு வேலைவாய்ப்பு அளிக்க முதலாளிகள் அதிக அளவு நூல் வழங்க வேண்டுமெனவும், கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட துணிகளை விசைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு நூல் வழங்கக் கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்ட பின்பு முதலாளிகள் (கைத்தறி உரிமையாளர்கள்) வேலை வாய்ப்பை போதிய அளவு அதிகரிக்கவில்லை எனக்கோரி கைத்தறி நெசவாளர்கள் மறியல் போராட்டம் 5-9-1977 முதல் 10-9-1977 வரை பகுதி, பகுதியாக கரூரில் நடத்தினார்கள். ஆனால் இதுபற்றி கணக்கெடுத்ததில் மாஸ்டர் வீவர்கள் நெசவாளர்களுக்கு முன்பு இருந்ததைவிட அதிக அளவு வேலை வாய்ப்பு அளித்திருந்தனர் என தெரிய வந்தது. எனினும் முறுக்கு நூலைக்கொண்டு கரூர், அதை அடுத்த பகுதிகளில் பெட்ஷீட் ரகங்களை விசைத்தறிகளில் நெய்வதைத் தடுக்க வேண்டுமென்பதே இப்போராட்டத்தின் நோக்கம்.

(ஆ) 11-9-1977ஆம் தேதியன்று கைத்தறி நெசவாளர் போராட்டக் குழு பிரதிநிதிகள், கைத்தறி உரிமையாளர்கள் பிரதிநிதிகள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் நடந்தது. இக்கூட்டத்தில் விசைத்தறிகளில் கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை நெய்வதற்கு கைத்தறி உரிமையாளர்கள் நூல் வழங்கக் கூடாது எனவும் மூடப்பட்ட பாக்டரிகளை உடனடியாக திறக்கவும் நெசவு தொழிலாளர்களுக்கு திரும்ப வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மீண்டும் 24-10-1977 அன்று சென்னையில் கைத்தறி இயக்குநர் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் போராட்டக் குழு கைத்தறி உரிமையாளர்கள், கரூர் மற்றும் வெள்ளக்கோயில் பகுதிகளைச் சார்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் ஆகிய முத்தரப்பினர்களைக் கொண்ட கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) ஏற்கெனவே ஒப்பந்தம் செய்தபடி படுக்கை விரிப்புகளில் குறிப்பாக 2/2 ரகங்கள் சாதா ரகங்கள் உட்பட விசைத்தறியில் உற்பத்தி செய்யக்கூடாது.

இணைப்பு III

[45ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

1977-78 ஆம் ஆண்டில் உள் துறையின் (மதுவிலக்கு-ஆயத் தீர்வை) நடவடிக்கைகள் குறித்த ஆய்வு :

பொது :

மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை ஒரு தனியான துறையாக 15-10-1977 வரை இயங்கி வந்தது. இத் துறை 15-10-1977-ல் உள்துறையோடு இணைக்கப்பட்டது. இத்துறை தமிழ்நாடு மது விலக்கு ஆயத்தீர்வை சட்டங்கள், அவற்றின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகள், மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் (ஆயத் தீர்வை) விதிகள், அபின் விதிகள், ஹோமியோபதி-ஏனைய மருந்துப் பொருட்கள் விதிகள், சாராவி தயாரிப்பு (மாநிலங்களுக்கு இடையேயான வர்த்தகம்-வணிகம்) கட்டுப்பாட்டு விதிகள் முதலியவற்றைச் செயல்படுத்தும் பணியை இத்துறை கவனிக்கிறது.

அமைப்பும் அதன் பணிகளும் :

2. இத்துறையின் தலைவர் மதுவிலக்கு-ஆயத்தீர்வை ஆணை யாளர் ஆவார். மதுவிலக்குச் சட்டங்களை செயல்படுத்தும் பணி காவல் துறையினரால் கவனிக்கப்படுகிறது. சென்னை, மது விலக்குப் புலனாய்வுப் பிரிவுக்கு காவல் துறை டெபுடி-இன்ஸ்பெக் டர்-ஜெனரல் ஒருவர் தலைவராக உள்ளார். இவர் மதுவிலக்கு-ஆயத் தீர்வை ஆணையாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிகிறார். காவல் துறை டெபுடி-இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு காவல் துறை சூப்பிரன்டெண்ட் ஒருவர், காவல் துறை டெபுடி சூப்பிரன்டெண்ட் ஒருவர், இன்ஸ்பெக்டர்கள் ஏழு பேர், சப்-இன்ஸ்பெக்டர்கள் மூன்று பேர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர்கள் 46 பேர் ஆகியோர் உதவி புரிகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறை டெபுடி சூப்பிரன்டெண்ட் ஒருவர் உள்ளார். இவருக்கு காவல் துறை இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர்கள் இருவர், தலைமைக் காவலர்கள் இருவர், காவலர்கள் இருபது பேர், ஆர்டர்லி காவலர்கள் இருவர், காவலர் வலவர்கள் இருவர் ஆகியோர் உதவி புரிகின்றனர். மாவட்டங்களிலுள்ள காவல் துறைப் பணியாளர்கள், காவல் துறை மாவட்ட சூப்பிரன்டெண்டுகளின் கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிகின்றனர்.

3. சாராயம், கள் ஆகியவற்றைக் கள்ளத்தனமாக வடித் தெடுத்து விற்பனை செய்வது குறித்த தகவல்களைச் சேகரித்து மதுவிலக்குச் சட்டத்தை மீறுபவர்கள் மீது வழக்குத் தொடர் வதே மதுவிலக்குப் புலனாய்வுப் பிரிவின் முக்கிய பணியாகும். இந் நிறுவனம் மிக முக்கியமான வழக்குகளைத்தான் கவனித்து வருகிறது. கள்ளச் சாராயம் தயாரிப்போரையும் விற்பனை செய்வோரையும் கண்டுபிடித்து வழக்குத் தொடரும் பணி உட் பட மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணி மாவட்டங்களில் காவல் துறை மாவட்ட சூப்பிரன்டெண்டுகளாலும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையாளராலும், கவனிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் மதுவிலக்கைக் கண்டிப்பாகச் செயல்படுத்துவதற்காக காவல் துறை டெபுடி கமிஷனர் ஒருவர், காவல் துறை உதவிக் கமிஷனர் ஒருவர், 8 இன்ஸ்பெக்டர்கள், 4 சப்-இன்ஸ்பெக்டர்கள், 6 உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள், 5 தலைமைக் காவலர்கள், 58 காவலர்கள் ஆகியோரைத் தனியாக நியமிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணி மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்காக அவர்களிடம், தனியாக அல்லது சிறப்பாகப் பணியாளர் எவரும் இல்லை. அவர்கள் தங்களிடம் பணி புரியுக்கூடிய வருவாய்ப் பணியாளர்களையும் மாவட்டங்களிலும் உள்ள காவல் துறைப பணியாளர்களையும் பயன்படுத்துகின்றனர்.

4. மதுவிலக்கு-ஆயத்துறை ஆணையாளருக்கு மதுவிலக்கு ஆயத் தீர்வை துணை ஆணையாளர் ஒருவர் உதவி புரிகிறார். அவர் வடிப்பாலைகளையும் ஆயத்தீர்வைக்கு உட்பட்ட தொழிற்சாலைகளை யும் மேற்பார்வையிடுகிறார். இவருக்கு மாவட்டங்களிலுள்ள ஆயத்தீர்வைக்கு உட்பட்ட தொழிற்சாலை அதிகாரிகள், வரு வாய்த் துறையிலிருந்து தருவிக்கப்பட்ட சரக அதிகாரிகள் ஆகி யோர் உதவி புரிகின்றனர்.

அ. மதுவிலக்கு

மதுவிலக்கை மீண்டும் கொண்டு வருதல்.

5. நம் நாட்டில் மதுவிலக்கைச் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னணியில் நிற்கிறது. தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மது விலக்குச் சட்டம், தமிழ்நாட்டில் மக்களரசு இல்லாத 1943-46 ஆம் ஆண்டிலும், அதன் பிறகு 1971-74 ஆம் ஆண்டிலும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இச்சட்டமானது சுமார் 40 ஆண்டு காலமாக செயலில் இருந்து வருகிறது. மது விலக்கு இம்மாநிலத்தில் 1-9-1974 ஆம் நாளிலிருந்து மீண்டும் செயலுக்கு கொண்டுவரப்பட்டது. இதற்கு முன்னரே, கள்ளுக் கடைகள் மூடப்பட்டன. 1-9-1974 ஆம் நாளிலிருந்து சாராயக்

கடைகளும் இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது வகைகளை விற்பனை செய்யும் கடைகளும், வெளிநாட்டு மதுவகைகளை விற்பனை செய்யும் கடைகளும் மூடப்பட்டன.

உரிமம் வைத்திருப்போருக்கு நம் நாட்டில் தயாராகும் வெளிநாட்டு மது வகைகள், வெளிநாட்டு மதுவகைகள் ஆகியவற்றை விற்பனை செய்ய 11 கூட்டுறவுகளுக்கும் 11 தனியார் விற்பனையாளர்களுக்கும் ஆக மொத்தம் 22 எப்.எல் 1 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பொழுதுபோக்குச் சங்கங்களிலும் (Non-proprietory clubs), நட்சத்திர ஓட்டல்களிலும் மது விற்க அனுமதிக்கப்படுகிறது. அனுமதி சீட்டுவைத்திருப்போருக்குத் தேவைப்படும் வெளிநாட்டு மதுவகைகள் அல்லது நம் நாட்டில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுவகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

செயற்படுத்துதல் :

6. மதுவிலக்குத் திட்டம், ஒரு சமூக நலத் திட்டமாகும். கடின உழைப்பின் மூலம் ஈட்டிய வருமானத்தை மதுவிற்காக செலவிட்டுச் சீரழிவதினின்றும் ஏழை மக்களைக் காத்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்களின் நல்வாழ்வைக் கருதி மதுவிலக்கைச் செவ்வனே செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மதுவிலக்கைத் திறம்படவும், கண்டிப்பாகவும் அமுல்படுத்துவதில் மாநில அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. கள்ளத்தனமாக மது வகைகள் தயாரிக்கப்படுவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற வாயில்களையே ஒழிப்பதற்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக கள்ளத்தனமாக மது விற்போர், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மது வகைகளை கடத்துவோர் ஆகியோரின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்ற மதுவிலக்கு குற்றங்களை கண்டுபிடித்த விவரங்களைக் காட்டும் அறிக்கை இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு மதுவகைகள் கள்ளத்தனமாக கடத்திக்கொண்டுவரப்படுவதை தடுப்பதற்கும் மதுவிலக்குக் குற்றங்களை கடுமையாகக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கும் சென்னை மாநகரில் காவல்துறை வலுப்படுத்தப்பட்டுள்ளதோடு காவல்துறை துணைக் கமிஷனர் பதவி ஒன்றுக்கும் 1977 டிசம்பரில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு கூடுதலாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள பணியாளர்கள் குறித்த விவரங்கள் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன. நமது மாநிலத்தைச் சுற்றி எட்டு கிலோ மீட்டர் தூரம் வரை (5 மைல்) உள்ள பகுதிகளை மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் பகுதியாக வைத்திருக்குமாறு நமது அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

கருப்பஞ்சாற்றுக் கசண்டும், மற்றும் ஆல்கஹால் மீதான கட்டுப்பாடும்.

7. கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குத் தேவைப்படும் மிக முக்கியமான மூலப் பொருள்களில் ஒன்றான கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு கண்டிப்பாக்கப்பட்டுள்ளது. கருப்பஞ்சாற்றுக் கசண்டு விற்பதற்கு இடையாட்களுக்கு உரிமங்கள் வழங்கப்படுவதில்லை. வடிசாலைகள், கால்நடை-கோழித் தீவனங்களைத் தயாரிப்போர் முதலியவர்களுக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்படுகின்றன. காவல் துறையினரும், வனத்துறைப் பணியாளர்களும் இணைந்து செயல்பட்டு தொலைவில் உள்ள காடுகளில் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதை எளிதாகக் கண்டுபிடிக்கின்றனர். இவ்வாறே, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் ஏராளமான எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அது போல சாராயம் கள்ளச் சந்தைகளுக்கு அனுப்பப்படுவதற்கான வாய்ப்புகளை நீக்க வடிசாலைகள் மீதான கட்டுப்பாடும் கண்டிப்பாக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கு வெளியே அனுப்பப்படும் ஆல்கஹால் பாதுகாப்புடன் அனுப்பப்படுகின்றது. மதுவிலக்கு அமுலில் இல்லாத ஓரிடத்திலிருந்து மதுவிலக்கு அமுலில் இல்லாத பிறிதொரு இடத்திற்கு தமிழ்நாட்டின் மூலம் இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மதுவகைகள் அனுப்பப்படும்போது அதற்கான அனுமதிச் சீட்டு முறை ஒன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்சொன்ன கட்டுப்பாடு முறைகள் செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் நம் நாட்டில் தயாரிக்கப்படும் வெளி நாட்டு மது வகைகளோ அல்லது சாராவியோ கள்ளச் சந்தைக்கு அனுப்பப்படுவது பற்றிய புகார்கள் எதுவும் வரவில்லை.

இயல்பு மாற்றப்பட்ட சாராவி தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுத்தல்.

8. வார்னிஷ், பாலிஷ் போன்று சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற பொருட்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்படும் ஏராளமான உரிமங்கள் குறித்து ஒதுக்கப்பட்ட இயல்பு மாற்றப்பட்ட சாராவி, கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கான முக்கிய ஆதாரமாக விளங்கியது. உரிமதாரர்களுக்கு வழங்கப்பட்ட சாராவியை அவர்கள் உண்மையிலேயே பயன்படுத்தியுள்ளனரா என்பதைக் கண்டறிவதற்கான அவர்களது அளவுகள், கணக்குகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக சிறப்பு சோதனை ஒன்று நடத்தப்பட்டது. இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட, இயல்பு மாற்றப்பட்ட சாராவி பெரும்பாலான உரிமதாரர்களால் கள்ளச் சந்தைக்கு விற்கப்படுவது கண்டுபிடிக்கப்

பட்டது. அதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ஏழு இலட்சம் லிட்டர்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள 250 உரிமங்களை வருவாய்த் துறை வாரியம் (மதுவிலக்கு-ஆயத்தீர்வை) ரத்து செய்தது.

சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருட்களை பொதுத் துறையில் தயாரித்தல்.

9. தொழில் காரியங்களுக்காக ஒதுக்கப்படும் சாராவியை குடிப்பதற்காக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கோடு பொதுத்துறையில் பிரெஞ்சு பாலிஷ், வார்னிஷ் முதலியன தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அம்பத்தூரிலுள்ள 'டான்சி' நிறுவனமும், மதுரையில் உள்ள அரக்குத் தொழிற்சாலையும் அரசு நிறுவனங்களாகும். இவை வார்னிஷ், தின்னர், (thinner) முதலியவற்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனுல் உரிமம் பெற்று பயன்படுத்துவோருக்கு இவை நியாயமான விலையில் கிடைக்க இயலுகிறது. அரசுத் துறை நிறுவனமான வன மேம்பாட்டுக் கழகமும் பட வார்னிஷ், காஸ்கட் ஷெல்லாக் (Gasket Shelloc) ஆகியவற்றை மதுரையில் தயாரிக்கத் தொடங்கியுள்ளது. இந்த உற்பத்திப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள், சிறப்பு அங்காடிகள், பிற கூட்டுறவுப் பண்டக சாலைகள் மூலமாகவும் பெருமளவில் பயன்படுத்துபவர்களுக்கு நேரடியாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சாராவியையும், சாராவியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களையும் வாங்குகின்றவர்களுக்கு விற்பனை செய்யும் பணியை மேற்கொள்ள, கூட்டுறவுச் சங்கங்கள் முன் வந்துள்ளன.

மருந்து-ஒப்பனைப் பொருள்கள் தயாரித்தல்:

10. மருந்து ஒப்பனைப் பொருள்கள் தயாரித்தல் சட்டத்தின் கீழ் பங்கீட்டு சாராவி பெற்றுள்ள உரிமதாரர்களின் நடவடிக்கைகளும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்ட பல நேர்வுகளில் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இன்னும் பல நேர்வுகளில், பிணைய வைப்புத் தொகைகள் முழுவதுமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அசவங்களும், அரிஷ்டங்களும் :

11. அசவங்களும், அரிஷ்டங்களும், கஷாயங்களும் மதுவைக் கள்ளத்தனமாக வழங்குவதற்கான முக்கிய வாயிலாக அமைந்து உள்ளது. அசவங்கள், அரிஷ்டங்கள், கஷாயம் ஆகியவற்றை விற்பதாகச் சொல்லிக் கொண்டு சாராயம் விற்கப்பட்டு வந்துள்

ளது. சில நேர்வுகளில் வண்ணமிடப்பட்ட நீரில் குளோரல் ஹைடிரேட் சேர்க்கப்பட்டு விற்கப்பட்டு வந்தது. இவற்றைக் கண்டுபிடிக்கும் பொருட்டு, தனிச் சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனுல் போலியான தயாரிப்புகளின் மாதிரிகள் பெருமளவில் கைப்பற்றப்பட்டன. இந்த வழக்குகள் அனைத்திலும் மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் அல்லது மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அல்லது முடிந்தால் இவ்விரு சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முப்பதுக்கும் மேற்பட்ட உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதுடன், பலர் மீது வழக்கும் தொடரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1-6-1977 முதல், 1955 ஆம் ஆண்டு மருந்துகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் IV-A அத்தியாயத்தை செயற்படுத்துவதன் மூலம் எல்-2 உரிமங்களைக் கொண்டு அசவங்களும், அரிஷ்டங்களும் தயாரிக்கும் தொழில் மீது சிறப்பான வகையில் கட்டுப்பாடு செலுத்த முடிந்தது.

குளோரல் ஹைட்ரேட் :

12. குளோரல் ஹைட்ரேட் அபாயம் விளைவிக்கக் கூடிய ஓர் இரசாயனப் பொருளாகும். தமிழ்நாட்டில் குளோரல் ஹைட்ரேட் தயாரிப்பதற்கு முழுத்தடை உள்ளது. இதனைப் பயன்படுத்துவது, மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட சிறப்பு விதிகளின் தொகுதியினுல் முறைப்படுத்தப்படுகிறது. உண்மையில் பயன்படுத்துபவர்கள் சிலருக்கு மட்டுமே உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனுல், குளோரல் ஹைட்ரேட், நாட்டின் பிற பகுதிகளிலிருந்து கள்ளத்தனமாகக் கொண்டுவரப்படுகிறது. இவ்வாறு கள்ளத்தனமாகக் கொண்டு வருவதைக் கண்டு பிடிப்பதில் மதுவிலக்குக் காவலர்கள், போற்றத்தக்க முயற்சியையும் நடவடிக்கையையும் எடுத்துள்ளனர். இம்மாநிலத்திற்கு வந்த ஒப்படைச் சரக்குகள் பல கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றை விற்பனை செய்வதற்கும் எடுத்துச் செல்வதற்கும் பொறுப்பு வாய்ந்த அனைவருக்கும் எதிராகச் சட்டபடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்திய அரசும், குளோரல் ஹைட்ரேட் தயாரிக்கும் சில மாநில அரசுகளும் அவற்றின் விற்பனையையும் கொண்டு செல்லப்படுவதையும் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

மதுவிலக்குக் குற்றங்களுக்குத் தண்டனை:

13. மதுவிலக்குக் குற்றங்களுக்கு எதிராக நீதி மன்றங்களில் பிறப்பிக்கப்பட்டத் தண்டனைகள் போதுமானவையாக இல்லையென்ற பொதுவான குற்றச்சாட்டு முன்பு நிலவிவந்துள்ளது. பல வழக்குகளில், சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு தண்டனைகளும் கூட கொடுக்கப்படவில்லை. குற்றவாளிகள்,

பட்டுள்ளது. அதன் விளைவாக, எந்த நிபந்தனைகளின் கீழ் நாட்டு மருந்துகள் தயாரிக்கப்பட வேண்டுமென்பது, நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள், அவர்களது பணியாளர்கள் ஆகியோருக்கு இருக்க வேண்டிய தகுதிகள், தரக் கட்டுப்பாட்டினைக் கருதி அவர்கள் உற்பத்திப் பொருட்களைச் சோதனை செய்தல், விற்பனையை முறைப்படுத்தல் ஆகியவற்றைத் தற்போது வரையறுக்க முடிகிறது. மருந்து—ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தின் IV-Aவது அத்தியாயத்தின் விதித்துறைகள் செயற்படுத்தப்படுவதனால் அசவங்கள், அரிஷ்டங்கள் முதலியவற்றைத் தயாரிப்பவர்கள் மீதான கட்டுப்பாடு மேலும் கண்டிப்புள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருக்குமென்றும், உண்மையாக அப்படிப்பட்ட மருந்துகளைத் தயாரிப்பவர்கள் மட்டுமே இந்த உரிமங்களைப் பெற்றுச் செயல்பட இயலுமென்றும் நம்பப்படுகிறது.

மக்கள் ஒத்துழைப்பு :

19. மதுவிலக்கு, மக்களுக்கு நலம் பயக்கும் ஒரு நடவடிக்கையாகும். மக்களின் முழு ஒத்துழைப்பு இல்லாமல் இது வெற்றி அடைய இயலாது. எனவே, மதுவிலக்குக்கு ஆதரவாக மக்கள் கருத்துக்கள் வலுவுடன் உருவாக வேண்டியது அவசியமாகும். மதுவிலக்கினால் ஏற்படும் நன்மைகள், மது அருந்துவதனால் ஏற்படும் தீமைகள் ஆகியவைபற்றி மக்களுக்கு எடுத்துக்கூறும் பெரும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகுமென்று சதாசிவம் குழுவும் குறிப்பிட்டுள்ளது. மக்கள் ஒத்துழைப்பை நாட கிராம, வட்டார, மாவட்ட, மாநில அளவில் குழுக்களை அமைக்கவும், அக்குழு பரிவுரை செய்துள்ளது. இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆ. ஆயத்தீர்வை

ஆயத்தீர்வை வருவாய் :

20. ஒரு காலத்தில் மாநிலத்திற்கு அதிக வருவாய் தரக்கூடியதாக இருந்த ஆயத்தீர்வை, மாநிலத்தில் மதுவிலக்கு செயலுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31 ஆம் நாள் வரை மதுவிலக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட போது ஆயத்தீர்வை மீண்டும் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. சாராயக்கடைகள், கள்ளுக்கடைகளை குத்தகைக்கு விடுதல், ஆயத்தீர்வை, உரிமக் கட்டணங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மதுவிற்கு காலனேஜ் கட்டணம் முதலியவற்றின் மூலம் அரசுக் கருவூலத்திற்கு பல கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. 1974 ஆம் ஆண்டு செப்டம்பர்

திங்கள் 1 ஆம் நாளிலிருந்து மீண்டும் மதுவிலக்கு செயலுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், ஆயத்தீர்வை வருவாய் மீண்டும் குறைந்து விட்டது. தற்போது, அது சுமார் ரூ. 4 கோடிதான்.

21. கீழ்க்காணும் தீர்வைகளிலிருந்து ஆயத்தீர்வை வருவாய் கிடைக்கிறது :—

(1) ஆயத்தீர்வை.

(2) காலனேஜ் கட்டணம்.

(3) இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு வகை மது இறக்குமதி மீதான சரிசமத் தீர்வை.

பல்வேறு தீர்வைகளின் வீதங்களைக் காட்டும் விவர அறிக்கை ஒன்று III-வது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த நான்காண்டு காலத்தில் ஆயத்தீர்வை வருவாய் பற்றிய ஒப்பு நோக்கு அறிக்கை இணைப்பு IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

முறைப்படுத்தப்பட்ட அலுவல்கள் :

22. மதுவகைகளைத் தயாரிப்பதற்கும் வைத்து வருவதற்கும் உரிமங்கள் அனுமதிச் சீட்டுகள் முதலியவற்றை வழங்குதல் மது விலக்கு ஆயத்தீர்வை துறை நிர்வகித்து வரும் பல்வேறு விதிகளின் கீழ் ஆயத்தீர்வை விதிக்கத்தக்க பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி மீது தீர்வைகள், கட்டணங்கள் முதலியவற்றை வசூலித்தல் போன்ற முறைப்படுத்தும் அலுவல்களை வருவாய்த்துறை அதிகாரிகள் தொடர்ந்து கவனித்து வருகின்றனர்.

வடிசாலைகள் :

23. மாநிலத்தில் தற்போது ஏழு வடிசாலைகள் உள்ளன. அவற்றிற்கு சர்க்கரை ஆலைகள் தயாரிக்கும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு வழங்கப்படுகிறது.

1. திருவாளர்கள் ஈ.ஐ.டி. பாரி லிமிடெட், நெல்லிக்குப்பம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

2. திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஆப்பக்கூடல், கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திருவாளர்கள் திருச்சி டிஸ்டிலரிஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

4. திருவாளர்கள் அரவிந்த் டிஸ்டிலரிஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், காடாம்புலியூர், தென் ஆர்க்காடு மாவட்டம்.

5. திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

6. திருவாளர்கள் ஓரியன் கெமிக்கல்ஸ் அண்டு டிஸ்டிலரிஸ் லிமிடெட், வேதநாராயணபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

7. திருவாளர்கள் சதர்ன் அக்ரிப்புரேன் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், முண்டியம்பாக்கம், தென்னாற்காடு மாவட்டம்.

திருவாளர்கள் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக் இந்தியா நிறுவனம், கூனூரின் அருகே அரவன்காட்டிலுள்ள கார்டைட் தொழிற்சாலை, இம்மாநிலத்திலுள்ள டி. எல். (D. L.) உரிமதாரர்கள் ஆகியோர் இம்மாநிலத்தில் ஆல்கஹால் பெருமளவில் பயன்படுத்துபவர்களாவர். உபரியாக உள்ள ஆல்கஹால், முக்கியமாக ஆந்திரப் பிரதேசம், கேரளம், மேற்கு வங்காளம் ஆகியவற்றிற்கு அனுப்பப்படுகிறது. கோவா, மகாராட்டிரம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குக் குறைந்த அளவுகளில் ஆல்கஹால் அனுப்பப்படுகிறது. சாராவியைத் தவிர, சில வடிசாலைகள் ''ப்யூஸல் ஆயில்'' முதலியவற்றைத் தயாரிக்கின்றன. மேட்டூர் கெமிக்கல்ஸ் அண்டு பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட், அரவங்காடு, கார்டைட் தொழிற்சாலை, இம்மாநிலத்தில் உள்ள டி. எல். வரிசை உரிமைதாரர்கள் போன்ற சாராவியைப் பெருமளவில் பயன்படுத்துபவர்களின் தேவையை நிறைவு செய்த பின்னர் தொழிற்சாலை சாராவி மாநிலத்தில் உபரியாக உள்ளது. இந்திய அரசு ஒதுக்கிய அளவில் உபரியாக உள்ள சாராவி பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உரிமதாரர்கள் :

24. கீழ்க்காணும் வகை உரிமங்க்ள் வழங்கப்படுகின்றன :—

(1) (i) இயல்பு மாற்றப்பட்ட சாராவியை விற்பதற்கும்,

(ii) இயல்பு மாற்றப்பட்ட சாராவியை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கும் டி. எல். வரிசை உரிமங்கள்.

(2) (i) தூய்மைப்படுத்தப்பட்ட சாராவியை விற்பனை செய்வதற்கும்,

(ii) தூய்மைப்படுத்தப்பட்ட சாராவியை அடிப்படையாகக் கொண்டு பொருள்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்வதற்கும் ஆர். எல். உரிமங்கள்.

(3) மருந்து—ஒப்பனைப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான 'எல்' வரிசை உரிமங்கள்.

(4) மருந்து பொருட்கள் விற்பனை செய்வதற்காக 'எம்' வரிசை உரிமங்கள்.

பெரும்பாலான உரிமதாரர்கள் முதல் வகையைச் சேர்ந்தவர்களாவர். செயலில் உள்ள டி. எல். வரிசை உரிமங்களின் பட்டியல் V-ஆவது இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆயத்தீர்வை நிலுவைகள்.

25. 1972-73 ஆம் ஆண்டுக்கு சாராய-கள்ளுக்கடைகளை குத்தகைக்கு விடுவதில் கடும் போட்டி நிலவியது. இதனால் ஏலத்தொகை அதிகமாக இருந்தது. மோசமான பருவ நிலைகள் உட்பட பல்வேறு காரணங்களினால், ஏலம் கேட்டவர்கள் பலர் பணம் கட்டத் தவறி விட்டனர். இதனால் இழப்பிற்காக கடைகள் மீண்டும் ஏலத்தில் விடப்பட்டன. இழப்பிற்கான பொறுப்பு முன்னர் ஏலம் எடுத்தவர்கள் மீது சுமத்தப்பட்டது. கடைகளை மீண்டும் ஏலத்தில் விடுவதன் காரணமாக ஏற்பட்ட விரயத்தொகை வரிவசூல் சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட வேண்டுமென கேட்கப்பட்டது. தங்களுடைய கட்டுக்கு மீறிய சூழ்நிலைகளில் விரயம் ஏற்பட்டுள்ளது என்று ஏலத் தொகை கட்டத் தவறியவர்கள் அரசுக்கு முறையிட்டனர். அவர்கள் முறையீடு செய்து கொண்டதன் பேரில், 1975 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 1 ஆம் நாள் வரை வலுக்கட்டாய நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பின்னர், முன்னாள் உரிமதாரர்கள் ஒரு மாத கிஸ்தியை அல்லது அரை மாத கிஸ்தியை செலுத்தினால் மதுவிலக்கு—ஆயத்துறையின் 1975 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் சலுகைகள் வழங்குதல், நிலுவை பாக்கிகளை தள்ளுபடி செய்தல் ஆகியவை மூலம் அவர்களுடன் உடன்பாடு ஒன்றை செய்து கொள்ளலாம் என்று மதுவிலக்கு-ஆயத்துறையின் 1975 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 29 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் அரசு ஆணைகளைப் பிறப்பித்தது. இச் சலுகை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் அன்றுடன் முடிவடைந்தது. சிவில், நீதிமன்றங்களில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஏலத் தொகை கட்டத் தவறியவர்களிடமிருந்து பாக்கித் தொகைகளை வசூலிக்கும் செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. முன்னாள் குத்தகைதாரர்களிடமிருந்து இன்றுள்ளவாறு ரூ. 427 இலட்சம் பாக்கித் தொகை வர வேண்டியுள்ளது. நீதிமன்ற நடவடிக்கை உள்பட பல்வேறு நிலைகளில் இத்தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

கி. மனோகரன்,
நிதி அமைச்சர்.

இணைப்பு III-A

கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகளின் விவரங்கள்.

(1)	1975–76. (2)	1976–77. (3)	1977 ஏப்ரலிலிருந்து 1977 டிசம்பர் வரை. (4)
I. பிற மாநிலங்களிலிருந்து சாராயத்தைக் கள்ளத்தனமாகக் கடத்துதல்	5,826	5,384	3,777
I-(a) ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு கள்ளத்தனமாகச் சாராயத்தைக் கடத்துதல்	648	193	266
IV கள்ளச் சாராயம் காய்ச்சுதல்..	57,977	59,262	38,997
V சாராவி அல்லது சாராயத்தை வைத்திருத்தல்.	204,132	187,141	122,751
VI ஐ.டி. சாராயம் அல்லது சாராவியின் விற்பனை.	4,736	10,522	12,525
VII (a) உரிமம் இல்லாமல் கள்ளை புளிக்கச் செய்தல்.	9,114	6,488	4,190
(b) உரிமம் இல்லாமல் இனிப்புக் கள்ளை புளிக்கச் செய்தல்	357	260	212
(c) உரிமம் இல்லாமல் மரத்திலிருந்து கள்ளை இறக்குதல்	1,144	743	560
VIII கள்ளத்தனமாகச் சாராயத்தை எடுத்துச் செல்லுதல்	6,070	10,569	13,137
IX சாராயத்தை அனுமதியின்றி விற்பனை செய்தல்.	35	436	288
X அனுமதியின்றி சாராயத்தை வைத்திருத்தல் ..	19,608	17,412	13,452
XIV ஹெம்ப் மருந்துச் செடி வகைகளை பயிரிடுதல் ..	28	42	170
XV பிற மாவட்டங்களிலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு கள்ளத்தனமாக மருந்துப் பொருள்களைக் கடத்துதல்	..	..	..
XVI மருந்துப் பொருள்களை கள்ளத்தனமாக அனுப்புதல்	132	37	27
XVII உரிமம் இல்லாமல் மருந்துப் பொருள்களை விற்பனை செய்தல்	80	131	306
XVIII உரிமம் பெறுமல் மருந்துப் பொருள்களை வைத்திருத்தல்	6,644	8,104	5,664
XIX பல்வகை (குடிபோதையில் இருத்தல்) ..	127,721	105,125	54,827
XIX (a) இயல்பு மாற்றப்பட்ட சாராவியைக் குடிப்பதற்கேற்றதாகச் செய்தல்	3,388	1,901	1,958
XX அபினை கள்ளத்தனமாக கடத்துதல் ..	..	2	17
XXI அபினை எடுத்துச் செல்லுதல்	..	..	..
XXII அபினை வைத்திருத்தல்	93	314	327
XXIII அபினை விற்பனை செய்தல்	..	..	..
XXIV ஆபத்தான மருந்துப் பொருள்கள் சட்டத்தின் கீழ்க் குற்றங்கள்	177	262	130
மொத்தம் ..	447,910	414,328	273,581

இணைப்பு III. B

சென்னையில் உள்ள காவல் துறை கமிஷனரின் கீழ், உள்துறையின் மதுவிலக்கு-ஆயத்தீர்வை 17—12—1977ஆம் நாளிட்ட 3364ஆம் எண் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட, கூடுதல் தற்காலிக காவல்துறை ஊழியர்களின் விவரங்களைக் காட்டும்

விவர அட்டவணை.

	காவல் துறைப் பணியாளர்கள்-	பதவிகளின் எண்ணிக்கை.
1.	காவல் துறை துணை கமிஷனர்	1
2.	காவல் துறை உதவி கமிஷனர்	1
3.	காவல் துறை இன்ஸ்பெக்டர்	8
4.	சப்-இன்ஸ்பெக்டர்	4
5.	உதவி சப்-இன்ஸ்பெக்டர்	6
6.	தலைமைக் காவலர்	5
7.	காவல் துறை காவலர் கிரேடு II	58
8.	உதவியாளர்	1
9.	இளநிலை உதவியாளர்-தட்டச்சர்	3
	வழக்கு தொடரும் பணியாளர்கள்	
10.	அரசு உதவி வழக்கறிஞர்	2

இந்தப் பணியாளர் அமைப்புக்கு உத்தேசமான ஆண்டு செலவு 7 இலட்சமாகும்.

இணைப்பு III-C.

ஆயத்தீர்வை வீதங்களைக் காட்டும் விவர அறிக்கை.

		ஆயத் தீர்வைக் கட்டணம்.	காலன் கட்டணம். (பல்க் லிட்டர் ஒன்றுக்கு.)
		ரூ. பை.	ரூ. பை.
1.	இயல்பு மாற்றப்பட்ட சாராவி .. உள்நாட்டிற்கு வழங்குவதற்காக அல்லது இறக்குமதிக்காக.	8.00 (புரூஃப் லிட்டர் ஒன்றுக்கு.)	1.00
	வடிகட்டிய பிறகு கிடைத்த பொருளானது ஆல்கஹால்—		
	தன்மையில்லாத பொருளாக இருந்தால். உள்நாட்டுப் பயனுக்கு. (கெம்பிளாஸ்ட்)	0.10	0.10
	தூய்மைப்படுத்திய சாராவி ஏற்றுமதிக்காக.	0.80	0.25
2.	இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மெதிலேடட் சாராவி, மெத்தனால் (Methanol)		
	ஏற்றுமதி	இல்லை.	0.25
	உள்நாட்டுப்பயன் அல்லது இறக்குமதி ..		0.50
	வடிகட்டிய பிறகு கிடைத்த பொருள் ஆல்கஹால் தன்மையில்லாபொருளாக இருந்தால் உள்நாட்டுப் பயனுக்கு. ..		0.10

3. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுவகைகளின் இறக்குமதி மீது விதிக்கப்படும் சரிசமத்தீர்வையும் காலன் கட்டண வீதமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

	சரிசமத் தீர்வை.	காலன் கட்டணம்.
இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மதுவகை.	புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 17.	ரூ. 2 பல்க் லிட்டர் ஒன்றுக்கு.
பீர் ..	பல்க் லிட்டர் ஒன்றுக்கு 75 காசு.	பல்க் லிட்டர் ஒன்றுக்கு 0.35 காசு.

இணைப்பு III-D

ஆயத்தீர்வை-வருவாய்.

தொடர் எண்	விவரங்கள்	1974,75. ரூபாய்,	ஆயத்தீர்வை. 1975-76. ரூபாய்,	1976-77. ரூபாய்	திருத்த மதிப்பீடு, 1977-78. (ரூபாய் ஆயிரத்தில்.)
1.	நாட்டுச் சாராயம் ..	20,96.40,000	50.82,441	38,55,068	5,36
2.	புளிக்கச் செய்யப்பட்ட நாட்டுச் சாராயம். ..	34,13,000	6,43,804	3,72,484	4,50
3.	புளித்த சாராயம் ..	18,84,000	9,56,585	9,68,346	10,73
4,	ஒயின் சாராவிகள் ..	2,47,01,000	1,05.85,691	1,95,21,935	1,75,40
5.	இயல்பு மாற்றப்பட்ட சாராவி, மருந்து கலக்கப்பட்ட ஒயின் ஆகியவை உட்பட வாணிகத்திற்கான சாராவியிலிருந்து பெற்ற வருவாய்,	29,40,000	61,23,091	64,84.380	2,03,84
6.	அபின்	..	4,03,929	78,628	·71
7,	மருந்துப் பொருட்கள், ஒப்பனைப் பொருட்கள் மீது தீர்வைகள்.	43,26.000	50,07,804	1,11,11,095	1,00,43
8.	ஹெம்ப், பிற மருந்துப் பொருட்கள்,	1,09,000	..	..	..
9.	வடிசாலைகளிலிருந்து பெற்ற வரவு.				
10.	அபராதங்கள், பறிமுதல்கள், பல்வகை வசூல்கள்.	..	..	..	30,27
11.	பணிகள் செய்ததற்கான கட்டணங்களை வசூலித்தல்.	51,68,000	6.03,791	12,04,456	57
		..	15,93,485	30,35,626	4,04
	மொத்தம் ..	25,21,81,000	3,10,00,621	4,66,32,018	5,35,85

இணைப்பு III E.

D.L. வரிசைகளின் கீழ் தற்போது செயலில் உள்ள உரிமங்களின் எண்ணிக்கை.

உரிமத்தின் வகை.	எண்ணிக்கை.	அளவு (லிட்டரில்).
D.L. 1	34	1,775,428
D.L. 2	305	4,381,748
D.L 3	3	9,250
D.L. 4	331	517,576
D.L. 5	53	216,116
D.L. 6	21	15,341
D.L. 7	2	9,250
D.L. 8	308	683,878
மொத்தம்	1,057	7,608,587

இணைப்பு IV.

[417 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மானியக் கோரிகை எண்—4.

பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம்.

தமிழ் நாட்டின் வரி வருவாயில், பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும் கணிசமான வருவாயை அளிக்கின்றன. வணிகவரிகள் வாயிலாக 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 228.24 கோடி வருவாயாகக் கிடைத்ததற்கு மாறாக 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 255.58 கோடி வருவாயாகக் கிடைத்தது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ. 27.34 கோடி கூடுதலான வருவாயாகும்.

2. இத்துறை கீழ்க்காணும் சட்டங்களை நிர்வகித்து வருகிறது : —

1. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் ;

2. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் ;

3. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம் ;

4. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம் ;

5. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் எரி எண்ணெய் விற்பனை வரிச் சட்டம் :

6. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் ;

7. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ;

8. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம்;

[1978 மார்ச் 14

3. கடந்த ஐந்து ஆண்டுகளில் வணிகவரித் துறை வசூல் செய்த வருவாய் மற்றும் அத்துறைக்கான செலவு குறித்த விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	வருவாய்.	செலவு
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1973-74	14,796.56	338.93
1974-75	20,694.07	364.65
1975-76	22,823.93	412.57
1976-77	25,558.04	466.87
1977-78	19,495.66	329.33
	(டிசம்பர் 1977 வரையிலும்).	(நவம்பர் 1977 வரையிலும்).

1977-78 ஆம் ஆண்டுக்காக, கடந்த 1977 ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலும் ரூ. 19,495.66 இலட்சம் வசூலிக்கப் பட்டுள்ளது. இதே கால கட்டத்தில் இதற்கு முந்தைய ஆண்டில் வசூல் தொகை ரூ. 18,288.34 இலட்சமாக இருந்தது.

4. நடைமுறைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து, விற்பனை வரிச் சட்டம் வளர்ச்சி பெற்று சீர்படுத்தப் பட்டுள்ளது. அரசு அவ்வப்போது மேற்கொண்ட பல்வேறு முடிவுகளும் நீதி மன்றங்கள் அளித்துள்ள தீர்ப்புகளுந்தான் இதற்குக் காரணமாகும். மாநிலத்தின் வருவாயைப் பெருக்குவதில் மட்டுமே கண்ணுயிராது, தொழில்கள் வணிகப் பெருமக்களின் நலன்களிலும் அரசு அக்கறை கொண்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டுதான் வணிகவரித் துறையின் நடைமுறைகளைச் சீர்ப்படுத்தவும் மூன்று கொள்கைகளான வரி செலுத்துவோரின் சுமைகள் குறைக்கப்படவும், வசூலைப் பெருக்கவும் அதே நேரத்தில் ஊழலைக் களையவும் ஆலோசனைகள் கூற ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படுமென கடந்த வரவு-செலவு கூட்டத் தொடரில் குறிப்பிடப்பட்டது. அதற்கிணங்க, அதிகாரிகள் அரசு சார்பற்றவர்கள் அடங்கிய குழு ஒன்று திரு. எஸ். ஆர் கெய்வார், I.C.S. (ஓய்வு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. இக் குழுவின் அறிக்கை 1978 மே மாத முடிவிற்குள் கிடைக்குமென எதிர்நோக்கப்படுகிறது.

1978 மார்ச் 14]

5. பல்வேறு வணிகவரி அலுவலகங்களுக்கு வர வேண்டியுள்ள வரி செலுத்தும் வணிகர்களுக்கும், ஊழியர்களுக்கும் தேவையான வசதிகளை அளிக்கும் பொருட்டு வணிகவரி அலுவலகங்களுக்காக கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு முனைந்துள்ளது. காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம், கடலூர், தருமபுரி, சேலம், நீலகிரி, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், பொள்ளாச்சி ஆகிய இடங்களில் வணிகவரி அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளது. விருதுநகரில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மதுரை, திருப்பூர், கரூர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் கட்டிடம் கட்டுவதற்கான திட்டங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணியை தவிர துணை ஆணையாளர்களுக்கும் வணிகவரி அலுவலர்களுக்கும் அரசு குடியிருப்புகள் கட்டியுள்ளது.

6. வணிகவரித் துறையில் விற்பனை வரி மதிப்பீடுகள் தொடர்பான புள்ளி விவரங்களை மின் கணக்கீட்டுப் பொறி மூலம் கணக்கிடும் முறை 1974 ஆம் ஆண்டில் கொண்டு வரப் பட்டது. இது மொத்த விற்பனைத் தொகை மற்றும் வரியினையும் பண்ட வாரியாகவும், வரி விதிப்பு வட்டங்கள் வாரியாகக் கணக்கிடவும், வரி விதிப்புக்குள்ளாகும் மொத்த விற்பனையை இன வாரியாகவும், வரி விதிப்புத் தொகை வாரியாகவும், வரி விலக்கப்பட்ட பொருள்களின் மொத்தத் தையும், எவ்வளவு வணிகர்கள் எந்தெந்த மொத்த விற்பனை இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதனையும் கணக்கிட உதவுகிறது. இதன் மூலம் திரட்டப் பட்ட புள்ளி விவரங்கள் தோராயமாகக் கிடைக்கக் கூடிய வரி வருவாயைப் பண்ட வாரியாகக் கணக்கிடவும், வரி விதிப்பு முறைகளை வரையறுக்கவும், அரசுக்கு உதவுகிறது.

7. ரூபாய் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக மொத்த விற்பனை செய்யும் வணிகர்களிடம் 'ஒட்டு மொத்தக் கணிப்பு முறையில் (Summary assessment) வரி விதிப்பது அமுலாக்கப்பட்டது. எந்த வணிகர்கள் தங்களது முந்தைய ஆண்டு மொத்த விற்பனைத் தொகைக்கும் வணிகப் போக்குக்கும் நிகராக தங்களது விற்பனைத் தொகை குறித்து விவர கணக்குகளை அனுப்பவில்லையோ அந்த வணிகர்களின் கணக்குகள் மட்டும் அல்லது எந்த வணிகர்களின் கணக்குகளை ஆய்வு செய்ததில் முறைகேடுகள் இருப்பதாக தெரிய வருகிறதோ அந்த வணிகர்களின் கணக்குகள் மட்டும் விரிவாக சரி பார்க்கப் படும். இம்மாற்றம் சிறு வணிகர்களின் சிரமங்களைக் குறைத்ததோடல்லாமல் வரி விதிப்பு அலுவலர்கள் மேலும் முக்கியமான இனங்களில் கவனம் செலுத்தவும் உதவுகிறது.

8. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்—சில முக்கிய திருத்தங்கள்.— தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் விதித்துறைகள், 1977ஆம் ஆண்டு 7-வது சட்டத்தினுல், 1977-78ஆம் ஆண்டில் பின் வருமாறு திருத்தப்பட்டது :—

மேற்சொன்ன சட்டத்தின் 7-வது பிரிவின் கீழான வரி விதிப்பு வரம்பினின்றும் தற்காலிக வணிகர்களுக்கும், ஓரிடத்தில் வசித்து வராத வணிகர்களின் முகவர்களுக்கும் விலக்களிப்பதன் மூலம் மேற்படி வரி விதிப்பு வரம்பு கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. காலம் தாழ்த்தி வரி செலுத்துவதற்கு விதிக்கப்படும் அபராத வீதம் திங்கள் ஒன்றுக்கு 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக உயர்த்தப் பட்டது. அதிக அளவில் வரி செலுத்தும் பெரும் வணிகர்கள் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வரி செலுத்து கின்றனர். இவர்களுக்குக் கூடுதல் அபராதத் தொகை விதிப்பதன் மூலம் அவர்களை உரிய காலத்தில் வரித் தொகையைக் கட்டச் செய்வதே இதன் நோக்கமாகும். அதே சமயம் ரூ. 100-க்கு குறைவாகவுள்ள வரித் தொகைக்கு, ஒரு திங்கள் வரை கால தாமதமாக வரி செலுத்துவதற்கு அபராதமேதும் விதிப்பதில்லை. சோதனைச் சாவடிகளில் சோதனையிடுவதற்கான நடைமுறைகளை எளிதாக்கவும், குறைகளை விரைவில் களையவும் வகை செய்ய வேண்டி சோதனைச் சாவடிகளில் பொருள்களை நிறுத்தி வைத்துப் பிறப்பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்து வணிகர்கள் மேல் முறையீடு செய்து கொள்வதற்குப் பதிலாக மறு பரிசீலனை மனுக்களைத் தாக்கல் செய்ய இயலும் பொருட்டு மேற்படி சட்டத்தில் விதித்துறை ஒன்று சேர்க்கப்பட்டது. சரக்குகளைக் கொண்டுசெல்கையில் அவை சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்கு வகை செய்யும் விதித் துறைகள், மேற்படி சட்டத்தின் 42(5) பிரிவின் விதித்துறைகளுக்கிணங்க இருக்கும் வகையில் தகுந்தவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மற்றொரு வணிகர் வரி ஏய்ப்பு செய்வதைக் கண்டுபிடிக்க பிறிதொரு வணிகர் வியாபாரம் செய்யும் இடத்தைச் சோதனையிடுவது குறித்த அதிகாரம் பற்றிய ஐயப்பாடுகளை அகற்றிட மேற்படிச் சட்டத்தில் திட்டவட்டமான விதித்துறைகள் வகுக்கப்பட்டுள்ளன. வணிகவரித் துறையில் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள், வரி விதிக்கப் பெற்றவர்கள் சார்பாக வழக்கில் வாதாடுவது தொடர்பான நிபந்தனைகள் மேலும் கடுமையாக்கப் பட்டுள்ளன. வருமான வரி கட்டத்தவறியவர்களைப் பொறுத்த மட்டில் என்னென்ன நிபந்தனைகள் உள்ளனவோ அதுபோலவே விற்பனை வரி கட்டத் தவறியவர்களின் பெயர்களை, சில நிபந்தனைகளுக்குட்பட்டு செய்தித் தாள்களில் வெளியிடுவதற்கு வகை செய்ய விதித்துறை ஒன்று மேற்படிச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

பின் வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டு இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது :—

1. துத்தநாக சல்பேட்டை (Jinc Sulphate) இரசாயன உரவகையின் கீழ்க் கொண்டு வருதல் ;

2. மெருகுக் கலவையுடன் உலோக மெருகிட்ட உருளைகளை வகைப் படுத்துதல், அவற்றை 8 சதவீத ஒருமுனை வரி விதிப்பிற்கு உட்படுத்துதல் ;

3. ஆடம்பரப் பொருட்களையும் பொதுவாகப் பயன்படுத் தப்படும் பொருட்களையும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தியும், அவற்றைப் புதிய துணை இனங்களின் கீழ் மறுவகைப்படுத்தியும் இவ்வாறு செய்வதன் மூலம் 51-வது இனத்தை மேலும் விரிவுபடுத்துதல், பொதுவாக பயன்படும் பொருட்களுக்கு 8 சதவீத வரி விதிக்கவும், ஆடம்பரப் பொருட்கள் மீது 12 சதவீத வரி விதிக்கவும் வகை செய்தல். இப்பொருள்களை மறு வகைப் படுத்துவதன் விளைவாக முதலாம் விவர அட்டவணையிலுள்ள 113-வது இனம் நீக்கப்பட்டுள்ளது ;

4. வெவ்வேறு வகை அலுமினியத்தின் மீதான வரி திரளாகச் சேருவதைத் தவிர்க்கும் வகையில் சம்பந்தப் பட்ட பதிவினைத் திருத்துதல் ;

5. வெல்லத்தை ஒரு முனை வரி விதிப்பிலிருந்து பலமுனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டுவருதல் ;

6. நாட்டுச் செக்கு எண்ணெய்ப் பிண்ணாக்கையும், நாட்டுச் செக்கு எண்ணெயையும் பலமுனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டுவருதல் ;

7. பருப்புகள், பயறுகள் (அறிவிக்கப்பட்ட பொருள்களாக வகை செய்யப் படாதவை), உலர்த்தப்பட்ட, வறுக் கப்பட்ட பருப்புகள், பயறுகள் முதலியவற்றிற்கு ஒரு முனை வரி விதித்தல் ;

8. மருந்தாக்கப் பொருட்களுக்கு ஏற்கெனவே வரி விதிக் கப்பட்டிருப்பின் மருந்துக் கலவைகள், கூட்டுப் பொருள்கள் விற்பனையின் மீது மீண்டும் வரி விதிக்கப்படாமலிருக்கும் வகையில் சம்பந்தப்பட்ட பதிவினைத் திருத்துதல் ;

9. வரி விதிக்கப்பட்டுள்ள ஒரு வகைத்தாள் மற்றொரு வகையாக மாற்றப்பட்டு அதே பதிவின் கீழ் வரி விதிப்பிற்குட் படும் நேர்வில் அதற்கு மீண்டும் வரி விதிக்கப்படாமலிருக்கும் வகையில் சம்பந்தப்பட்ட பதிவினைத் திருத்துதல் ;

10. அலுவலகத்தில் பயன்படும் ஏனைய மேசை, நாற்காலி முதலியவற்றுடன் வீடுகளில் பயன்படுத்தப்படும் மேசை, நாற்காலிகள் முதலியவற்றிற்கு வரி விதித்தல் ;

11. தற்போது பலமுனை வரி விதிப்பின் கீழுள்ள சாயுங்கள், இரசாயனங்கள், சாறுகள், பழச் சாறுகள் ஆகியவற்றை 8 சதவீத ஒரு முனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டு வருதல் ;

12. தைப்பதற்கான பருத்தி நூலை பலமுனை வரி விதிப்பிலிருந்து 3 சதவீத ஒரு முனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் பொது மக்களுக்கும் தையற்காரர்களுக்கும் குறிப்பாகத் தயாராடை தயாரிப்பவர்களுக்கும் நிவாரணமளித்தல் ;

13. செயற்கை வைர தளங்கள் மீதான வரி ஏய்ப்பைத் தவிர்க்கும் பொருட்டு அவற்றைப் பல முனை வரி விதிப்பிலிருந்து 15 சதவீத ஒரு முனை வரி விதிப்பின் கீழ்க் கொண்டு வருதல் ;

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 17-ன் கீழ் 1977-78ஆம் ஆண்டில் இதுவரை பின்வருபவைக்கு வரி விலக்கும் வரிக் குறைப்பும் செய்யப் பட்டுள்ளன :—

வரி விலக்கு :

1. விவசாயத்திற்கு உதவும் நுண்ணுயிர் வகை, நுண்மங்களை அழிக்கும் மருந்துகள் விற்பனை :

2. கைத்தறியில் டிசைன்கள் போட உதவும் ஜாக்குவார்டு [Jacquard Box] பெட்டியின் விற்பனை.

3. சென்னை, விக்டோரியா தொழில் நுட்ப நிலையத்தில் தயாரிக்கப்பட்டு தென் சொரிய தூதுவர், கடந்த 1976 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை வந்தபோது விற்கப்பட்ட பொருட்கள்;

4. தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்திலுள்ள கஸ்தூரிபா காந்தி குருகுலத்தில் உள்ளவர்களால் செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை. இவ்விலக்கு 1974-75 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்தது;

5. மதுரையிலுள்ள ''கில்ட் ஆப் சர்வீஸ்'' [Guild Service] —ன் ரொட்டித் தொழிற்சாலையில் 1-4-1975ல் முதல் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை;

6. சென்னை, மயிலாப்பூரிலுள்ள ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்த இலவச மருந்தகத்திற்கு விற்கப்பட்ட மருந்துகள், விஞ்ஞானக் கருவிகள்;

7. இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிறுவனம் (Cement Research Instititue of India) தயாரிக்கும் சிமெண்டின் விற்பனை. இந்நிறுவனம் தனது ஒவ்வொரு மாதத்திய மொத்த விற்பனைக் கணக்குகளை, அப்பகுதியிலிருக்கும் வணிகவரி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது ஒரு விதியாகும்;

8. 1968-69 லிருந்து தேசிய மாணவர் படைப் பிரிவுகளுக்கும் சைனிக் பள்ளிகளுக்கும் 'காண்டின் ஸ்டோர்ஸ்' துறை விற்பனை செய்யும் பொருட்கள்;

9. எந்த ஒரு வணிகரும் எந்த ஒரு காச நோய் நலம் பேண் மருத்துவ மனைக்கும் காச நோய் மருத்துவ மனைக்கும் அல்லது காச நோய்ப் பிரிவினை உடைய மாநிலத்திலுள்ள எந்த ஒரு மருத்துவ மனைக்கும் விற்கும் விஞ்ஞானக் கருவிகள், மருந்துகள், இம்மாநிலத்தில் உள்ள காச நோய் நலவிடுதி, காச நோய் மருத்துவ மனை அல்லது காச நோய்ப் பிரிவுகளை உடைய மருத்துவ மனை ஆகியவற்றின் நோயாளிகட்கு விற்கிற நோய் அறிவதற்கான 'எக்ஸ் கதிர் படங்கள்; விஞ்ஞான கருவிகள், மருந்துகள்;

10. சென்னை ஸ்டேண்டர்டு மோட்டார் ப்ராடக்ஸ் ஆப் இந்தியா நிறுவனத்தால், சென்னை யூனியன் மோட்டார் ப்ரைவேட் லிமிட்டெட்டுக்கு விற்கப்பட்டு பின்னர் அவர்களால் 1975 ஜனவரி 29-ந் தேதியன்று சென்னை அகர்வால் நிவாரணக் கட்டளைக்கு விற்கப்பட்ட 'ஸ்டேண்டர்டு 20 ஆம்புலன்ஸ்' வண்டி. இவ்வண்டி சென்னை அகர்வால் மருத்துவ மனைக்குப் பயன்படும்;

11. கதர்-கிராமத் தொழில்கள் கமிஷனால் அல்லது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் அல்லது அதன் உதவியுடன் நிறுவப்பட்ட விசைச்சாதனங்களின் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள், தைத்த கைத்தறி ஆலைத்துணி, கைக்குட்டைகள், முதலியவற்றின் விற்பனை;

12. இறால், 'லாப்ஸ்டர்' என்கிற பெருங்கடல் நண்டு வகை, நண்டு, தவளை, தவளைச்கால்கள் முதலியவற்றினைப் பொறுத்த வரையில் வரி விதிக்கத் தக்க மொத்த விற்பனைத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டது;

13. கையால் பூவேலை செய்த பொருட்களை விற்றல்;

14. மத்திய அல்லது மாநில அரசு ஊழியர்களின் நிர்வாகக்குழுவால் அல்லது கூட்டுறவு சங்கங்களால் லாப நோக்கு இல்லாமல் நடத்தப்படும் உணவகங்கள்;

15. வணிக வரித் துறையால் விற்கப்படுகிற தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட நமூனக்களை விற்றல்;

16. ஓட்டல் தொழிற்கலை, ஊட்டச்சத்து உணவு தயாரிக்கும் கலையை பயிற்றுவிக்கும் நிலையம் 1971-72 முதல் விற்பனை செய்த உணவுப் பண்டங்கள்;

17. செம்மறி ஆடு, வெள்ளாடு, பசு, காளை, எருது, பன்றி மற்றும் பிற மிருகங்களை ஒரு வணிகர் விற்றல்.

18. இந்திய கப்பற்படை, எம்பார்க்கேஷன் தலைமையிட சிவிலியன் பணியாளர்களுக்கு காண்டீன் ஸ்டோர்களின் விற்பனை;

19. ஊட்டி, கில்ட் ஆப் சர்வீஸ் (Guid of Service) விற்பனை செய்யும் பொருட்கள்;

20. இம்மாநிலத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளக் கொடுமைகளை நீக்கும் பணிகளில் ஈடுபட்ட சென்னையிலுள்ள இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளைக்கு விற்கப்பட்ட பொருட்கள்;

வரிக் குறைப்பு ;

1. பின்னலாடைக்கான பருத்தி நூலிழை விற்பனை செய்யும் வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி விகிதம் 3 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.

2. வெல்லத் தூள், நாட்டுச் சர்க்கரை உட்பட வெல்லத்திற்கும் சர்க்கரைக்கும் (பனைவெல்லம், பனங்கற்கண்டு தவிர) செலுத்த வேண்டிய பலமுனை வரி 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக 25-7-1977 அன்றிலிருந்து குறைக்கப்பட்டது.

3. மின் சாதன வணிகர்கள் முதல் அட்டவணையில் வகைப்படுத்தப்பட்டுள்ள 41, 41-A, 41-B 41-C பதிவுகளில் குறிப்பிடப்பெற்ற மின்சாதனங்களை மாநில மின் நிறுவனங்களுக்கோ, மாநில மத்திய அரசைச் சார்ந்த துறைகளுக்கோ, இந்தியன் ரெயில்வேக்கோ விற்றால் மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் 8-வது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்தில் செலுத்த வேண்டிய வரித் தொகையை செலுத்தும் வண்ணம் குறைக்கப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்— இந்தச் சட்டத்தின்படி 1973-74 முதல் 1977-78 வரை அரசுக்கு கிடைத்த வருவாய் வருமாறு—

காலம்.	மொத்த வரவு. [ரூ. இலட்சத்தில்.)
1973-74	9,931.82
1974-75	14,129.06
1975-76	15,660.61
1976-77	16'788.36
1977-78 (டிசம்பர் 1977 வரை) ..	13,201.60

1976-77-ல் டிசம்பர் 1976 முடிய வருவாய் ரூ. 11,986.62 இலட்சமாகும். 1977 டிசம்பர் முடிய கிடைத்த வருவாயை முந்தைய வருடத்தில் கிடைத்த வருவாயோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 10 சதவீதம் கூடுதலாகி உள்ளது.

மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956—இச் சட்டத்தின் மூலம் 1973-74 முதல் 1977-78 வரை கிடைத்த வருவாய் வருமாறு :—

காலம்.	மொத்த வரவு. (ரூ. லட்சத்தில்)
1973-74	2,087.03
1974-75	2,897.63
1975-76	3,331.32
1976-77	4,190.62
1977-78 (டிசம்பர் 1977 முடிய) ..	3,083.90

1977-78 ஆம் வருட வருவாயை முந்தைய வருட வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 4 சதவீத வருவாய் அதிகரித்துள்ளது. அதாவது 1976-77-ல் டிசம்பர் 1976 வரை வருவாய் ரூ. 2,959.04 இலட்சம் ஆகும்.

1977-78 ஆம் ஆண்டில், 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் சில முக்கியமான வரி விலக்குகளும் வரிக் குறைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

1. சங்கீத் பில்டிங்ஸ், ஆர்.எஸ். ரோடு, கோழிக்கோடு, கேரளா என்ற விலாசத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு நிறுவனத்துக்கு உடல் ஊனமுற்ற குழந்தைகளின் விடு

முறை கால பயிற்சிக்காக 'கலைமணி சிலிண்டர் பிரிண்டிங் மெசினை' கோயம்புத்தூர் ஒப்பனைக்காரத் தெருவில் இருக்கும் திருவாளர் கலைமணி பிரிண்டிங் இண்டஸ்டிரிஸ் பிரைவேட் லிட். தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலத்திற்கு விற்பதற்காக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2. முழுக்க பருத்தி நூலினால் நெய்யப்பட்ட பின்னலாடைக்கான பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்கள் தமிழ்நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு விற்பனை செய்தால் அவர்கள் செலுத்த வேண்டிய விற்பனை வரி 2½ சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

3. தஞ்சை மாவட்டம் சுவாமிமலை கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் புதுடெல்லியில் இருந்த சென்னை கைவினைப் பொருட்கள் விற்பனையகத்திற்கு ஒரு மாநிலத்திலிருந்து பிறிதொரு மாநிலத்திற்கு பொருட்களை விற்கும் முறையில் விற்பனை செய்யப்பட்ட எல்லா பொருட்களுக்கும் 1973-74 ஆம் ஆண்டுக்கு வரி 10 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

4. மயிலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தினரால் ஸ்ரீ இராமகிருஷ்ண பரஹம்சர், அவருடைய சீடர்கள் ஆகியோரின் நிழற்படங்கள், ஓவியங்கள், பதக்கங்கள், ஆகியன ஒரு மாநிலத்திலிருந்து பிறிதொரு மாநிலத்திற்கு வாணிபம் செய்த முறையில் விற்கப்படுபவைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

11. தமிழ்நாடு மோட்டார் எரி எண்ணை வரிச் சட்டம் (1939 ஆம் ஆண்டு) :— இந்தச் சட்டத்தின் கீழ் போடப்படும் வரியானது எண்ணைக் கம்பெனிகள் முதலில் எண்ணையை விற்கும் போது போடப்படும் ஒருமுனை வரியாகும்.

1973-74 முதல் 1977-78 வரை கிடைத்த வருவாய்.

காலம்.	மொத்த வருவாய் (ரூ. இலட்சத்தில்.)
1973-74	1,334.71
1974-75	1,888.98
1975-76	1,972.22
1976-77	2,187.21
1977-78 (டிசம்பர் 1977 வரை)	1,523.97

முந்திய வருடத்தில் இதே கால கட்ட வருமானம் ரூ. 1,573.40 இலட்சம் ஆகும்.

12. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம், தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களின் நிதிச் சட்டம்.—இந்தச் சட்டங்களின்கீழ் 1973-74 முதல் 1977-78 வரை கிடைத்த வருவாய் :—

காலம்.	மொத்த வரவு (ரூ. லட்சத்தில்).
1973-74	1,291.32
1974-75	1,591.09
1975-76	1,748.39
1976-77	2,127.85
1977-78 (டிசம்பர் 1 77 வரை)	1,543.18

இதே காலத்தில் முந்தைய வருடம் கிடைத்த வருமானம் ரூ. 1,586.50 லட்சமாகும். இதே காலத்தில் சென்ற வருடம் கிடைத்த வருமானத்துடன் ஒப்பிட்டால் இது 3 சதவிகிதம் குறைவானதாகும்.

இந்த இரு சட்டங்களின் ஆளுகைக்கு உட்பட்டதே கேளிக்கை வரி ஆகும். இச்சட்டம் அனுமதிச் சீட்டு பெற்று பொதுமக்கள் பார்க்கும் திரைப்படம்; குதிரைப் பந்தயம் இவற்றுக்கே பொருந்தும். தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்ற நிதிச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் முழு வருமானமும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கே வழங்கப்படுகிறது. இதைத் தவிர 1939 ஆம் வருடத்திய கேளிக்கை வரிச் சட்டத்தின்படி கிடைக்கின்ற கேளிக்கை வரியில் 90 சதவிகிதம் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கே வழங்கப்படுகிறது.

1939-ம் வருடத்திய கேளிக்கை வரிச்சட்டத்தின் கீழ் 1977-78-ம் வருடம் கீழ்க்கண்ட முக்கியமான திருத்தங்கள் கொண்டு வரப் பட்டன ;—

தமிழ்நாடு 1939-ம் வருடத்திய கேளிக்கை வரிச் சட்டத்தின் 4-B பிரிவு 1977-ம் ஆண்டு 8-வது சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது. கேளிக்கை வரியும் மேல் வரியும் சேர்ந்து (Surcharge) நிகரக் கட்டணம் 25 காசுக்கு மேற்படாத அனுமதிச் சீட்டுக்கு 4-பி பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரியானது

15 காசிலிருந்து 5 காசாக குறைக்கப்பட்டது. 25 காசுக்கு மேற்பட்டு ஆனால் ஒரு ரூபாய்க்கு மேற்படாத அனுமதிச் சீட்டுக்கு வரி 15 காசிலிருந்து 10 காசாக குறைக்கப் பட்டது.

தமிழ்நாடு அரசு 1975-ம் வருடம் நவம்பர் மாதம் கேளிக்கை வரிச் சட்டத்தை முறைப்படுத்தவும் அதற்கான ஆலோசனைகளையும் வழி முறைகளையும் அரசுக்கு வகுத்துக் கொடுக்க ஒரு திரைப்படத் தொழில் விசாரணைக் குழுவை அமைத்தது, இந்தக் குழு திரையரங்க உரிமையாளர்கள் வரி ஏய்ப்புச் செய்வதைத் தவிர்ப்பதற்காக ஒரு பரிந்துரையை அனுப்பியது: அதன்படி தற்போது உள்ள கேளிக்கை வரிக்குப் பதிலாக ஒரு காட்சிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் வரியாகக் கட்ட வேண்டும். அதன்படி தமிழ்நாடு அரசு 1977 ஆம் ஆண்டு 5-வது அவசரச் சட்டத்தின்படி இந்த குறிப்பிட்ட தொகையை வரியாக வசூலிப்பதை நடைமுறைப் படுத்தியது. அதன்படி ஒரு திரையரங்கின் மொத்த இருக்கைக்கான வசூல் அடிப்படையில் அதாவது ஒரு நிறைந்த திரையர்ங்கின் வசூலை அடிப்படையாக வைத்து இந்த குறிப்பிட்ட வரி நிர்ணயிக்கப்பட்டது இந்த அவசர சட்டத்திற்குப் பதிலாக 1978-ம் ஆண்டு 5-வது சட்டம் கொண்டுவரப்பட்டது, 1977 டிசம்பர் 26 முதல் நடைமுறைப் படுத்தப்பட்ட இந்தப் புதிய திட்டம் இரண்டாம் நிலை மூன்றும் நிலை நகராட்சிகள், தேர்வு நிலை பேரூராட்சிகள். இதர பேரூராட்சிகள், ஊராட்சி கிராமங்கள் ஆகியவற்றில் உள்ள தற்காலிக, பகுதி நிலையான, நிலையான திரையரங்குகள் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப் பட்டது. திருத்தச் சட்டத்தின் 5-A பிரிவின் கீழ் ஒரு குறித்த சதவிகிதம் அதாவது அந்த அரங்கில் இருக்கக்கூடிய இருக்கைகளினால் வசூலாகும் மொத்த வசூலில் $27\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை ஒரு காட்சிக்கு வரியாக வசூலிக்க வகை செய்யப் பட்டுள்ளது, மேற்படி சட்டத்தின் 5-B பிரிவின் படி ஒரு திரைப்பட அரங்கில் ஒரு வாரத்தில் எத்தனை காட்சிகள் நடத்தப் பட்ட போதிலும், வாரம் ஒன்றுக்கு 14 முதல் 20 வரை குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காட்சிகளுக்கு ஆகும் மொத்த (இருக்கைகளுக்கான) வசூலில் 15 சதவீதத்திலிருந்து $22\frac{1}{2}$ சதவீதம் வரை வரி செலுத்துவதன் மூலம் வரி இணக்கம் செய்து கொள்ள உரிமையாளர்களுக்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டுள்ளது, 1978-ம் ஆண்டு 5-வது சட்டத்தின் படி வரி ஏய்ப்பு செய்வோருக்கு தண்டனை வழங்குவதற்கான விதிமுறைகள் விரிவு படுத்தப் பட்டுள்ளன. இதன்படி வரி ஏய்ப்பு செய்பவர் அதிக பட்சம் ஒரு வருடம் சிறை தண்டனைக்குள்ளாவதுடன் அபராதமும் கட்ட வேண்டியிருக்கும்,

கீழே குறிப்பிட்டுள்ள திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிச் சட்டத்திலிருந்து 1977-78-க்கு வரி விலக்கை அரசு அளித்துள்ளது: —

'நத்தையில் முத்து' என்ற படத்துக்கு 1977 ஏப்ரல் 4 முதல் மூன்று மாதத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது:

'கிங் எலிபெண்ட்' (குழந்தைகள் படம்) என்ற படத்துக்கு தமிழ் நாட்டில் திரையிடப்படுகிற நாளிலிருந்து ஒரு வருடத்துக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1978 ஜனவரி 3 முதல் 1978 ஜனவரி 17 வரை சென்னையில் விமரிசையாகக் கொண்டாடப் பட்ட திரைப்பட விழாவில் மத்திய அரசு செய்தி ஒலிபரப்பு அமைச்சகம் திரைப்பட விழா இயக்குநரகத்தால் திரையிடப்பட்ட படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

13, <u>தமிழ்நாடு 1936 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்</u>.—சென்னையிலும், உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடத்தப் படுகின்றன, இந்தப் பந்தயத்தில் வின்ஸ், பிளேஸ், டபுல், டிரிபுல் தனலா, போர்க்காஸ்ட், ஜாக்பாட் ஆகிய பந்தயங்களுக்கும் சென்னையில் புக் மேக்கர்களுடன் கட்டப்படும் பந்தயங்களுக்கும் 20 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது, அவ்வரிக்கு 5 சதவீதம் மேல் வரியும் விதிக்கப்படுகிறது. ஊட்டியில் நடத்தப்பெறுகின்ற குதிரைப்பந்தயங்களைப் பொறுத்த மட்டில் 10 சதவிகிதம் வரியும், அவ்வரிக்கு 5 சதவிகிதம் மேல்வரியும் விதிக்கப்படுகிறது.

உதகமண்டலம், ஹைதராபாத், பெங்களூர் ஆகிய இட[illegible]களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களுக்கு கிண்டி[illegible] பந்தயப் பணம் கட்ட அனுமதிக்கப்படுகிறது. அது[illegible] 1978 ஜனவரி 11 முதல் பம்பாய், கல்கத்தா, போ[illegible]ரங்களில் நடக்கும் பந்தயங்களுக்கும் இவ்வாறு பந்த[illegible] கட்ட அனுமதிக்கப்படுகிறது, அவற்றிற்கு 10 சதவீத[illegible] அவ்வரிக்கு 5 சதவீதம் மேல்வரியும் விதிக்கப்படுகி[illegible]

0

10,08.484.00

மேற்கூறிய சட்டத்தில் 1973-74 முதல் 1977-78 வரை கிடைத்த வருவாய் விவரம் :—

காலம்.	மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)
1973-74	151.68
1974-75	187.31
1975-76	111.39
1976-77	264.00
1977-78 (டிசம்பர் 77 வரை) ..	143.01

14. வணிக வரித் துறையின் நிர்வாகம் வழக்கம் போல் 1977-78 லும் அரசுக்கு மன நிறைவு அளிப்பதாக இருந்தது. வரி செலுத்துவோருக்கும் வணிகவரி அலுவலருக்கும் இடையே நிலவிய சுமுகமான உறவு வணிக வரிச் சட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த ஏதுவாக இருந்தது. இந்த நல்லுறவும், ஒத்துழைப்பும் வணிகவரித் துறைக்கும், மக்களுக்கும் இடையே தொடர்ந்து நீடிக்கும் என்று அரசு நம்புகிறது.

இணை V

[417-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

வணிகவரி மற்றும் அறநிலையத்துறை

மானியக் கோரிக்கை எண். 5

முத்திரைத்தாள் நிர்வாகம்.

எழுத்து மூலம் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ், முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படுவதற்கு உரியனவாகும். இம்மாநிலத்தில் பல்வேறு ஆவணங்களுக்கு வசூலிக்கத்தக்க முத்திரைத்தாள் கட்டண வீதங்கள். மேற்சொன்ன சட்டத்தின் விவர அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்றங்களின் சட்டத்திற்கிணங்க, சில குறிப்பிட்ட ஆவணங்கள் தொடர்பாக, சில சொத்துக்களுக்கு முத்திரைத்தாள் வரியோடு 5 சதவீதத்திற்கு மேற்படாத மேல்வரிக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்பெற்ற வரி உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பப்படுகிறது.

2. முத்திரைத்தாள்களின் ஒவ்வொரு வகையிலும் பெறப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

முத்திரைத்தாள்களின் வகை.	1976-77ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1977-78ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (டிசம்பர் 1977 முடிய).
(1)	(2)	(3)
1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்களின் வருவாய்..	18,80,53,938.55	17,35,83,872.00
2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்களின் வருவாய்..	3,16,48,601.86	2,65,59,835.00
3. உண்டியலுக்கான முத்திரைத்தாள்களின் வருவாய்..	11,78,864.50	10,08,484.00

முத்திரைத் தாள்களின் வகை. (1)	1976—77ஆம் ஆண்டில் பெற்ற வருவாய். (2)	1977-78ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (டிசம்பர் 1977 முடிய) (3)
4. பசை தோய்த்த முத்திரைத்தாள்களின் மூலம் வருவாய் ..	1,62,34,298.91	1,36,86,165.00
5. ஏனைய வருவாய்	3,59,87,219.59	1,91,01,178.00
மொத்தம் ..	27,31,02,923.41	23,39,39,534.00
கழிக்கவும்-திருப்பிச் செலுத்தப்படும் தொகைகள் (—)		
நீதித்துறை சாரா முத்திரைத்தாள்கள் ..	8,19,11,792.76	4,73,26,337.00
நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்கள்.	9,19,240.41	7,70,343.00
மொத்தம் திருப்பிச் செலுத்தப்படும் தொகை	8,28,31,033.17	4,80,96,680.00
கட்டணங்கள்—		
1. முத்திரைத்தாள்கள் விற்பனையில் தள்ளுபடி ..	23,55,878.76	23,67,679.00
2. பணியாளர்கள் செலவு ..	2,88,483.41	3,02,161.00
3. மத்திய முத்திரைத் தாள்கள் பண்டக சாலையிலிருந்து வழங்கப்பட்ட முத்திரைத் தாள்கள் குறித்த செலவு	27,00,018.69	16,76,217.00
மொத்தம் ..	53,44,380.86	43,46,057.0

முத்திரைத் தாள்களின் வகை. (1)	1976—77ஆம் ஆண்டில் பெற்ற வருவாய். (2)	1977-78ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (டிசம்பர் 1977 முடிய) (3)
மொத்த வருவாய்	27,31,02,923.41	23,39,39,534.00
மொத்தச் செலவும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளும்.	8,81,75,423.03	5,24,42,737.00
நிகர வருவாய் ..	18,49,27,500.38	18,14,96,797.00

3. இந்த அறிக்கையில் உள்ள காலத்தில் முத்திரைத்தாள் வருவாய் நிர்வாகம் மன நிறைவு அளிப்பதாக உள்ளது. மாநிலத்திலுள்ள பல்வேறு மாவட்டக் கருவூலங்களின் வாயிலாக பொதுமக்களுக்கு முத்திரைத்தாள்களைச் சரிசமமான அளவில் பங்கீடு செய்வதற்கும், அவர்களது கூடுதல் தேவையை நிறைவு செய்வதற்கும் மாவட்டங்களில் முத்திரைத்தாள்களின் பல்வேறு வகைகளையும் போதுமான அளவு இருப்பு வைத்திருக்கும் பொருட்டு, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தகுதியுடைய நேர்வுகளில், பொதுமக்களுக்காக பணிபுரியும் நிறுவனங்களுக்கு முத்திரைத்தாள் வரியில் ஒரு பகுதி அல்லது முழுவதும் தள்ளுபடி செய்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1978 மார்ச், 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கேளிக்கை வரி விலக்கு.

*506 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, சொர்க்கவாசல் போன்ற சமுதாய சீர்திருத்த திரைப்படங்களுக்கு தமிழக அரசின் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரி, ஓர் இரவு, நல்ல தம்பி, சொர்க்க வாசல் போன்ற சமுதாய சீர்திருத்த திரைப்படங்களுக்கு, சில படங்களுக்கு அளிப்பது போன்று வரி விலக்கு அளிக்க இனியாவது அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்கள் மக்களிடையே நிறைந்த செல்வாக்கு பெற்றவை. ஆகையால் அவைகளுக்கு வரி விலக்கு அளித்துதான் மக்களிடையே பரப்ப வேண்டுமென்ற நிலைமை இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, வேலைக்காரி, ஓர் இரவு, நல்லதம்பி, சொர்க்கவாசல் போன்ற திரைப்படங்களுக்கு வரிவிலக்கு அளிக்கவில்லை என்றாலும் அண்ணா அவர்களின் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்கின்ற வகையில் அவைகளை நாடகமாக நடித்துக் காட்டும் நாடக மன்றங்களுக்கு அரசு மானியம் கொடுக்குமா ?

தலைவரவர்களே,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஏற்கனவே அந்தப்
இயலவில்லை என்பதல்ல அரசின் கருத்து. என்பதுதான் அரசின்
படங்கள் செல்வாக்கைப் பெற்றவை அதனுடைய பலனை
கருத்து. வரி விலக்கு அளிப்பதன் மூலம் அவர்களோ அல்லது அவர்களின்
பெறுவது அறிஞர் அண்ணா அவர்களோ அல்லது அவர்களின் பார்க்க வேண்டும். நாடக
குடும்பமோ அல்ல என்பதையும் பார்க்க வேண்டும். தனிக் கேள்வி போடவும்.
மன்றங்களுக்கு உதவி செய்வது பற்றி தனிக் கேள்வி போடவும்.

தலைவரவர்களே, அறிஞர் அண்ணா

திரு. என். கிட்டப்பா: "சிவாஜி கண்ட இந்து ராஜ்
அவர்களின் "சந்திரோதயம்", "சிவாஜி கண்ட இந்து ராஜ் திரைப்படங்களாக
யம்" போன்ற மிகச் சிறந்த நாடகங்களை திரைப்படங்களாக
எடுக்க அரசுத் துறையில் ஏதாவது முயற்சி இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

தலைவரவர்களே,

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனியார்
அரசுத் துறை இதைச் செய்ய முன்வரவேண்டியதில்லை; தனியார்
முன் வந்தால் நல்லது.

தலைவரவர்களே, அறிஞர்

திரு. எஸ். ஆர். இராகர்: படங்களுக்கு வரி விலக்கு
அண்ணா அவர்கள் எழுதிய மற்றப் படங்களுக்கு வரி விலக்கு
அளிக்காவிட்டாலும், "நல்ல தம்பி" படம் மதுவிலக்கு பிரச்
சாரத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆகையால்
அதை அரசே வாங்கி, மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக அரசே
வெளியிட்டு, மதுவிலக்குக் கொள்கையில் அண்ணா அவர்களின்
கருத்தைப் பரப்ப அது மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு துணை
யாக இருக்கும் என்பதால் அரசு முன்வருமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

அந்தப் படத்தி

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: என்று தெரியவில்லை.
னுடைய உரிமை யார் கையில் இருக்கிறது என்று தெரியவில்லை.
ஆனாலும் மதுவிலக்கில் அண்ணா அவர்களும், அதற்குப் பிறகு
நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களும் தீவிரமாக இருக்கிறார்
கள் என்பதால் இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

பேரவைத் தலைவரவர்களே, அண்ணா

திரு. மு. அம்பிகாபதி: பண்டார சன்னிதிகளின் அட்ட
அவர்கள் எழுதிய சொர்க்கவாசல் பண்டார சன்னிதிகளின் அட்ட
காசங்களை விளக்குவதாக இருக்கிறது. அந்த பண்டார
சன்னிதிகளின் நிலங்களை அரசே எடுத்து, அதை உழுகின்ற விவ
சாயிகளுக்கே கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

அதற்குத் தனிக்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கோவில் நிலங்களைப் பொறுத்த
கேள்வி போட வேண்டும். கோவில் நிலங்களைப் பொறுத்த
வரையில் ஏற்கனவே அண்ணா அவர்கள் நிறைய எழுதி இருக்கிறார்
கள். அதைப் பற்றி அரசும் தீவிரமாக சிந்தித்து வருகிறது
என்ற விவரத்தை ஏற்கனவே இங்கே தெரிவித்திருக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலுரையில் இந்த வரி விலக்கு அளிப்பதன் காரணமாக அண்ணா குடும்பத்திற்கு சலுகை எதுவும் கிடைக்கப்போவதில்லை என்று குறிப்பிட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் குடும்பம் 4½ கோடி மக்களுடைய தமிழ்ச் சமுதாயமாக இருப்பதால், வேலைக்காரி, ஓர் இரவு, நல்ல தம்பி, சொர்க்க வாசல் போன்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்க அரசு இனியாவது முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்தை இந்த 4½ கோடியோடு நிறுத்துவது கூட சரியல்ல. மனித சமுதாயத்திற்கே அவர்கள் சொந்தம் என்பதை திரு. கிட்டப்பா அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள். நான் குறிப்பிட்டது ஏற்கனவே அந்தப் படங்கள் மக்கள் மத்தியிலே மிகுந்த செல்வாக்கு பெற்றவை என்பதால்தான். பல படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; அது வேறு பிரச்சனை. எந்த அடிப்படையில் திரைப்படங்களுக்கு வரி விலக்கு அளிப்பது என்பதைப் பற்றி நுணுகி ஆராய்வதற்காகவும் எந்த அடிப்படையில் சலுகைகள் வழங்கலாம் என்பதை ஆராய்வதற்காகவும் ஒரு குழு அமைக்கலாம் என்று அரசு கருதுகிறது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, இந்த வரி விலக்கு அளிப்பதற்கான விதிகள் என்னென்ன அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய படங்கள் அந்த விதிக்கு உட்பட்டு வருகின்றனவா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு செல்வாக்குள்ள படங்களுக்கு வரி விலக்கு அளிப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். செல்வாக்குள்ள படங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்கனவே வரி விலக்கு அளிப்பதில் இரண்டு அடிப்படையை வைத்து அதன்படி வரி விலக்கு அளித்து இருக்கிறார்கள். அதில் ஒன்று தேசிய ஒருமைப்பாடு, அதாவது மொழி பாகுபாடு இன்மை என்ற தலைப்பின்கீழ் வருகிற படங்களுக்கு நேஷனல் இன்டெக்ரேஷன் அன்ட் ப்ரேக்கிங் டவுன் வேரியஸ் லாங்வேஜ் பேரியர்ஸ் என்ற அடிப்படையில் வருகின்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அது மட்டும் போதாது என்று சமுதாய, பொருளாதார சீர்திருத்த, அதாவது பொருளாதார சமுதாய ஏற்றத்தாழ்வுகளைப் போக்குகின்ற வகையிலே தயாரிக்கப்படுகின்ற படங்களுக்கு வரி விலக்கு அளிக்கின்ற வகையில் ஓர் உயர் மட்டக்குழு அமைத்து அதன் மூலம் பரிந்துரை பெறுவதுதான் பொருத்தம் என்று அரசு கருதுகிறது.

தஞ்சை மாவட்ட வேளாண்மைத் தொழிலாளரது ஊதியங்கள்.

*507—வினா திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தற்போது தஞ்சை மாவட்டத்தில் கீழ்த்தஞ்சை, மேலத்தஞ்சை எனப் பிரித்து, விவசாயத் தொழிலாளர்களுக்கு வெவ்வேறு வகை கூலி வழங்கப்பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம், கிழக்கு தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி ஆகிய ஏழு வட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு கீழ்க்கண்டவாறு கூலி வழங்கப்படுகிறது:—

ஆடவர்	..	ரூபாய் 6 அல்லது 6 லிட்டர் நெல்லுடன் ரொக்கம் ரூ. 2·75 பைசா.
பெண்டிர்	..	ரூபாய் நான்கு அல்லது 5 லிட்டர் நெல்லுடன் ரொக்கம் ரூ. 1·50 பைசா.

அறுவடை காலங்களில் ஒவ்வொரு 54 லிட்டர் அறுவடைக்கும் 6 லிட்டர் நெல் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் மேலத் தஞ்சை உள்பட இதர பகுதிகளில் 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி கீழ்க்கண்டவாறு கூலி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது:—

	வயது வந்தவர்கள். ரூ.	வயது வந்தவர்கள். பை.	சிறியவர்கள். ரூ.	சிறியவர்கள். பை.
1. விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் மாடுகளுடனும், விவசாயக் கருவிகளுடனும் விவசாயத்தில் ஈடுபட்டால்.	9	00	..	
2. விவசாயிகள் தங்கள் மாடுகளையும், விவசாயக் கருவிகளையும் பயன்படுத்தாமல் விவசாயத்தில் ஈடுபட்டால்.	5	00	..	
3. விதைவிதைத்தல் போன்ற வேலைகளுக்கு.	5	00	3	
4. நாற்று நடுதல், களை எடுத்தல் போன்ற வேலைகளுக்கு.	3	50	2	10
5. அறுவடை மற்றும் அது சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு.	5	00	3	00
6. வரப்புகளைச் செப்பனிடுதல், உரங்கள் சுமத்தல், தென்னை, பாக்கு மரங்களிலிருந்து காய்கள் பறித்தல் ஆகிய வேலைகளுக்கு.	5	00	3	00

திரு. ஏ. செல்லப்பன் : தலைவரவர்களே, கீழத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பெறுகின்ற கூலி ஏன் மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போயின? அப்படி மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் என்ன பாவம் செய்தார்கள். இந்த அரசு முன் வந்து கீழ்த்தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் பெறுவதைபோல மேலத்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தக் கூலி கொடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கீழத்தஞ்சையில் விவசாயத் தொழிலாளர்களுடைய போராட்டத்தின் விளைவாக குறிப்பாக 1967–68 ஆம் ஆண்டில் கணபதியா பிள்ளை என்பவர் தலைமையில் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டு அவர் விவசாயத் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு கூலி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தார். அதையொட்டி 1969 ஆம் ஆண்டில் சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டத்தின்கீழ் விவசாயத் தொழிலாளர்களுடைய கூலி நிர்ணயிக்கப்படுகிறது. மற்ற பகுதிகளில் அதாவது மேலத்தஞ்சையில் மட்டுமல்ல மற்ற மாவட்டங்களிலும் ஒரே விகிதத்தில் கூலி கிடைப்பதற்கு வேறு சட்டத்தின்கீழ் அந்தக் கூலி நிர்ணயம் செய்யப்படவிருக்கிறது. ஆகவே இது ஒரு வரலாற்றால் ஏற்பட்ட ஒரு வேறுபாடே தவிர வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஒப்பந்த… நிறை மன்றத் …ய கோரிக்
பட்டிருக்கக்கூடிய கூலியிலும் நிர்ணயிக்கப்பட்டிரு…து வருகிறது.
யிலும், நிர்ணயம் செய்த இடைக் காலம் அதிகம்… சதவிகிதம்
மீண்டும் கூலி உயர்வு கேட்டு அடித்தளத்து…க்கும் $1\frac{1}{2}$ சத
மக்கள் கோரிக்கை வைத்திருப்பதனால் அது ஒரு…ான்றுக்கும் ஷெட்
யாக ஆக்காமல் இதற்கு தீர்வு கா…ுகின்ற …க்குத் தேவைப்பட்

ஒரு பகுதி கூலி கொடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. ஆக, இந்த இரண்டு காரணங்களுக்காக பிரச்சினை முற்றுவதற்கு முன்பாக ஒரு முத்தரப்பு மாநாடு கூட்டி பேசி முடிவு செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : 'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி, இவ்வையம் தழைக்குமாம்' என்று பாடினான் பாரதி. அதேபோல் ஆணுக்கு ஒரு கூலி பெண்ணுக்கு ஒரு கூலி என்ற நிலையை அகற்றி இருசாராருக்கும் பொதுவாக ஒரு கூலியை நிர்ணயிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாரதி பாட்டு பாடினும் அவர் ஏழ்மையிலுள்ள விவசாயம் செய்தானா என்று தெரியவில்லை. ஆனால் ஆண்களானாலும் சரி பெண்களானாலும் சரி வயல்களில் வெவ்வேறான வேலைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

திரு. துரை. கோவிந்தராசன் : மேல் தஞ்சை மாவட்டத்தில் புன்செய் நிலங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், சிறிய விவசாயிகள் நடுத்தர விவசாயிகள் மேல் தஞ்சையில் அதிகமாக இருக்கிற காரணத்தாலும் அங்கே கூலி வேலை செய்கிறவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற இந்த கூலியை விட குறைவாகவே கிடைக்கிறது. ஆகவே, அதற்கு மேல் அதிகப்படுத்தினால் கூலி வேலை செய்கிறவர்களுக்கு கூலி கிடைக்காத நிலை ஏற்படும். இதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதை அரசு உணர்ந்திருக்கிறது. ஆயினும் குறிப்பிட்ட கூலி விகிதத்தை விவசாயத் தொழிலாளர்கள் பெறுவதற்கு வழிவகை கட்டாயம் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 508.—

ஈடு? தாழை மு. கருணாநிதி உட்கார்ந்தபடி ஏதோ கூறினார்.)

2. விவசா. மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து 234 பேர்
யும், பயன்படுத்துப் பார்க்க வேண்டும். ஒரு கேள்விக்கு மூன்று
நிமிடங்கள் தான் ஒதுக்க முடியும். தாழை
ஈடுபட்டால் யை மட்டும் பார்த்தால் போதாது. இருபது
3. விதைவிதைத்க்க வேண்டும். இக்கேள்வியை விட்டு அடுத்த
களுக்கு.

கேள்விக்கு போகும்போது தாழை மு. கருணாநிதி உட்கார்ந்து கொண்டே பேசுவது நல்லதல்ல. நான் ஒவ்வொரு கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் தருகிறேன். அது தாழை கருணாநிதியா அல்லது வேறு யாரோ என்பதல்ல. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வாய்ப்பு தந்திருக்கிறேன். அவர்கள்தான் கேட்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருபது பேர்கள் இருக்கிறார்கள், இருபது பேர்களும் இப்படி கேட்க ஆரம்பித்தால் என்னவாகும்? கேள்வி எண். 508.

ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் முறையீடு.

*508—வினா திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூக்கா ஸ்டாம்பு வெண்டர்கள் சங்கத்தின் சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு 20-7-1977-ந் தேதி அன்று அனுப்பப்பட்ட மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மனுவில் உள்ள கோரிக்கைகள் வருவாய் வாரியத்தை கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே அவர்கள் எந்தளவிற்கு கமிஷன் பெற்றுக் கொண்டிருந்தார்கள்? அது எந்த ஆண்டில் பாதியாகக் குறைக்கப்பட்டது என்பதை அறிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1962-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு விதமான விகிதம் இருந்தது. அதற்குப் பிறகு அதைப் பற்றி ஆய்ந்து 1965ல் இருந்து புதிய விகிதங்கள் கொண்டு வரப்பட்டன. இந்தப் புதிய விகிதங்களை எதிர்த்து அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனார்கள். ஹைகோர்ட்டில், இது செல்லாது அதற்கு ஒரு சட்ட திருத்தம் தேவை என்று குறிப்பிட்டார்கள். சட்டத் திருத்தமும் கொண்டுவரப்பட்டு அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதையும் எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். இருப்பினும் அவர்களுடைய கோரிக்கைகளைப் பற்றி வருவாய் வாரியம் பரிந்துரை செய்து வருகிறது. ஏற்கனவே சென்னையைப் பொறுத்த வரையில் 3 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது எல்லாயிடங்களுக்கும் $1\frac{1}{2}$ சதவிகிதம் என்று ஆகிறது. அதே போல் ஒவ்வொன்றுக்கும் ஷெட்யூல் இருக்கிறது. உறுப்பினர்கள் அவர்களுக்குத் தேவைப்பட்டால் அதை அவையில் வைக்கலாம்.

[1978 மார்ச் 15

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒரு பக்கம் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. இப்போது ஸ்டாம்ப் ஒன்றுக்கு பத்து மடங்கு விலை உயர்ந்து விட்டது. இந்நிலையில் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருந்த கமிஷன் பாதியாக ஆக்கப்பட்டு இன்னும் பரிசீலனையில் இருந்து கொண்டு வருகிறது என்று சொல்லக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்குமானால் அவர்கள் உண்மையில் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதால் அவர்கள் தொடர்ந்து நீதி ஸ்தலங்களுக்குப் போயிருக்கிறார்கள், அமைச்சர் அவர்களிடமும் வந்திருக்கிறார்கள். ஆகவே விரைவில் அதற்கு தீர்வு காணக் கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது சரிஅல்ல. முத்திரை வரி பொதுவாக அதிகரித்துள்ளது. எனவே, அதன் விளைவாக முன்பிருந்ததை விட அதே கொடுக்கல் வாங்கலுக்கு அதிகப்படியான கமிஷன் இப்போது கட்டப்படுகிறது. ஆகவே, பாதிக்கப்பட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. ஓரளவு பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் இது சம்பந்தமாக வருவாய் துறை வாரியம் பரிசீலித்து வருவதால் விரைவில் அரசு நடவடிக்கைகள் எடுக்கும்.

திரு. துரை முத்துசாமி : ஸ்டாம்ப் வெண்டர்களுக்கு விற்பதற்கு அனுமதி கொடுக்கிறபோது படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற வகையிலும், கிராமங்களில் உள்ள கர்ணம், மணியக்காரர் இவர்களுக்கும் கொடுக்கிற மாதிரி இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. மார்க்கபந்து : தி. மு. க. அரசு இருந்த போது ஸ்டாம்ப் வெண்டர்களுக்கு கமிஷன்களை குறைப்பதற்கு உத்தரவு போடப்பட்டது. பின்னால் அவர்கள் ஹைகோர்ட்டுக்குப் போனதின் காரணமாக அரசின் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. இப்போது அந்த பழைய உத்தரவு தான் இருந்து வருகிறதா, ஏனென்றால் இதுவரை புதிய உத்தரவின் படி கமிஷன் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, வேறு ஏதாவது ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல், 1965-ம் ஆண்டு திருத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1968-ம் ஆண்டிலேயே அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். உயர் நீதிமன்றத்தில் இது சட்ட திருத்தத்தின் மூலம் தான் கொண்டு வர முடியும் என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு 1975 அக்டோபர் திங்களில் சட்ட மன்றத்தின் இரு

1978 மார்ச் 15]

சபைகளிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1976 மார்ச் திங்களில் சட்டமாக ஆக்கப்பட்டது. 1976 மார்ச் திங்களில் இது வெளியிடப்பட்டது. பின்னால் இதன் மீது ரிட் மனுக்கள் தாக்கப்பட்டன. அவை இப்போது உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன.

தமிழ் நாட்டுக்குக் கேரளத்திலிருந்து தண்ணீர்.

*568—வினா. திரு. வி. கே. கோதண்டராமன்
திரு. எஸ். ஜே. இராமசாமி
திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977 செப்டம்பர் 23, 24 தேதிகளில் கேரளத் தண்ணீர் விஷயமாக பிரதம மந்திரி முன்னிலையில் கேரள முதல் அமைச்சரும் தமிழ்நாடு முதல் அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தினார்களா ?

(ஆ) அதன் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே ஏற்கெனவே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு உட்படாத மேற்கு நோக்கி பாயும் நதிகளை திசை திருப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்ப குழு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவாகியுள்ளது.

*569—வினா. திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் : கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மேற்குப் பகுதி தண்ணீரை தமிழ் நாட்டுக்கு கொண்டு வருவது குறித்து, கேரளா, தமிழ்நாடு, மத்திய அரசு பொறியாளர்கள் கூடிப்பேசினார்களா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவ்வாறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதா இல்லையென்றால் எப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை உள்ளது, எடுத்துக் கொண்டால் முடிவு ஏற்படுவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே இதற்கான தொழில் நுட்பக் குழு விரைவில் கூட்டப்படவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம். அவர்கள் கூட்டிய பிறகு கேரளத்தில் மேற்கு நோக்கி ஓடுகின்ற தண்ணீரை கேரள மாநிலம் பயன்படுத்தியது போக உபரியாக கடலில் வீணாகச் சென்று கலக்கின்ற தண்ணீரை, எந்த அளவுக்கு தமிழகத்திற்கு திருப்பிவிட முடியும், அதற்கு எந்த அளவுக்கு தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்து அறிக்கை தர இருக்கிறார்கள். இதை விரைவு படுத்த வேண்டும் என்பது இந்த அரசின் ஆசை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து தண்ணீர் பெறுவது பற்றி மாநில முதலமைச்சர்கள் பேசியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்விதம் தண்ணீரைப் பெறுவதற்கு கேரள, தமிழ் நாடு, மத்திய அரசு இவைகளின் பொறியாளர்கள் இது வரை கலந்து பேசவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்திருக்கிறார்கள். இனியேனும் விரைவில் கூடிப் பேசுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதில் மத்திய நீர்ப் பங்கீட்டு குழுவின் உறுப்பினர் அமைப்பாளராகவும், தமிழ் நாடு, கேரளா, கர்நாடகம் இவைகளிலுள்ள தலைமைப் பொறியாளர்கள் இந்த தொழில் நுட்பக் குழுவின் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள், இந்த தொழில் நுட்பக் குழு 1976 டிசம்பரில் அமைக்கப்பட்டது. அந்தக் குழு இது சம்பந்தமாக ஆராய நடவடிக்கை எடுத்த போது கேரள மாநிலத்தைப் பொறுத்த வரையில், இதற்கென்று போடப்பட்டிருந்த டேர்ம்ஸ் ஆஃப் ரெப்ரன்ஸை சிலவற்றை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று தெரிவித்தார்கள். பின்னால் கேரளத்திற்கு பிரதம அமைச்சர் அவர்கள் வந்திருந்த போது, நமது முதலமைச்சர் அவர்களும், கேரள முதலமைச்சர் அவர்களும் சந்தித்துப் பேசினார்கள். அதன் பிறகு இதிலுள்ள டேர்ம்ஸ் ஆஃப் ரெப்ரன்ஸில் இருந்ததை பரிசீலனை செய்தார்கள். கேரள மாநிலத்தின் நதிகளைப் பற்றி இரு மாநிலங்களுக்குள்ளும் ஏற்கனவே பேசி ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதைப் பற்றி மீண்டும் இப்போது ஆராயக் கூடாது என்று அவர்கள் தெரிவித்தார்கள். அதை நாம் ஒப்புக் கொண்டோம். பின்னால் டேர்ம்ஸ் ஆஃப் ரெப்ரன்ஸ் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆகவே இனிமேல் இதைப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்கவேண்டும்.

திரு. நாஞ்சில் மீ. வின்சென்ட் : கேரளாவில் உள்ள தண்ணீரை தமிழ் நாட்டுக்கு திருப்பிவிடுவதால், எந்தெந்த மாவட்டங்கள் பயன் பெறும், எத்தனை ஏக்கர் நிலங்கள் இதனால் பலனடையும் என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது பற்றியெல்லாம் தொழில் நுட்பக் குழு ஆராய்ந்து தகவல் தரவேண்டும். இருந்தாலும் நம்முடைய மதிப்பீட்டின் படி கேரளாவில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளிலுள்ள தண்ணீரை, அவர்களுடைய உபயோகத்திற்குப் போக, அதுவும் வருங்காலத்தின் தேவையும் போக, மீதமுள்ள தண்ணீரை அதாவது கடலில் உபரியாகப் போகின்ற தண்ணீரில் 10 சதவிகிதம் தண்ணீரை நாம் பயன்படுத்தலாம் என்றிருந்தாலும் கூட, சுமார் 5 லட்சம் ஏக்கர் பலனடைய வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் இதனால் பயனடையும்.

(முற்பகல் 9-20)

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மேற்கு நோக்கி போகும் ஆறுகள் என்று சொல்லப்படுகிறது. எந்தெந்த ஆற்றுத் தண்ணீரைப் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில், சிவகங்கை தாலூகா பயன்பெறக் கூடிய எந்தத் திட்டமாவது அரசின் ஆலோசனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நான் ஏற்கனவே சொன்னதுபோல் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆறுகள் பற்றி தற்போது ஒத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் அதைப் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டுமென்ற நிலையில் நமது அரசாங்கம் இருக்கிறது. அப்போது இரு மாநிலங்களுக்கும் இடையே ஒப்பந்தமாகியுள்ள ஆறுகள் என்று கணக்கிடுகிறபோது, பாம்பாறு, அச்சங்கோயில் ஆறு, கல்லடா ஆறு, அத்திங்கால் ஆறு, காரமணா ஆறு ஆகியவைகள் இடம் பெறுகின்றன. இதனால் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்கள் பலன் பெறும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, கேரள மாநிலத்திலிருந்து கொடுக்கிற தண்ணீர் நமது மாநிலத்திற்கு நீர்ப்பாசனத்திற்கு மட்டும் தானா ? அல்லது மின்சக்தி உற்பத்திக்கும் அது தேவைப்படுகிறதா ? அப்படியானால் மின்சக்தி உற்பத்தி ஆகின்ற இடங்கள் எவை எவை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது மின் சக்தி உற்பத்திக்குப் பயன்படாது. மின்சக்திக்குப் பொதுவாக, கேரள எல்லையிலே தண்ணீர் விழுவதால் அங்கேதான் உற்பத்தி செய்ய முடியும். நம்முடைய பகுதிக்கு திருப்பப்படும் போது, மலை உச்சியிலேலிருந்து டன்னல் மூலம் மலையைக் குடைந்து, அதன்மூலம் கொண்டுவர வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு அது மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படும் என்பதை இப்போது சொல்ல முடியாது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நொய்யாற்று இடது கால்வாயில் இப்போது கேரள மாநிலத்திலிருந்து ஏற்கனவே இருக்கின்ற அக்ரிமெண்டுபடி விடவேண்டிய தண்ணீர் விடப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் கேரள மாநிலத்திற்கு தண்ணீர் விடுகின்றபோது, அதே அளவுக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தண்ணீர் விடப்படவில்லை என்று குறைபாடு இருக்கிறது. ஆகவே கேரள மாநிலத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, நமக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் முழுவதும் பெறுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள முடியாத ' டேர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸ் ' எவை என்பதை அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ' டேர்ம்ஸ் ஆப் ரெபரென்சை ' ஏற்றுக் கொண்டிருக்கிறது. கேரள அரசைச் சேர்ந்தவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருந்து உற்பத்தியாகி, மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைக் குறித்து பரிசீலனை செய்யவேண்டும், அப்படி எல்லா ஆறுகளையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டபோது, கேரள அரசைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள், மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து, கிழக்கே நோக்கி ஓடுகின்ற ஆறுகளையும் சேர்த்துப் பரிசீலிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதிலே காவேரி பிரச்னை எல்லாம் வருகின்றது. ஆகவே, இவைகளை யெல்லாம் சிந்தித்துப் பார்த்து, காவேரியிலே ஏற்கனவே தண்ணீர் கிடையாது என்கிற இந்த நிலைமையில் ஒப்பந்தம் ஆகிய ஆறுகளையெல்லாம் கணக்கெடுத்து, அது கேரளாவில் மேற்கு நோக்கி ஓடி வீணாக அரபிக்கடலிலே கலக்கின்ற ஆறுகளை மட்டும்சேர்த்துக் கொள்ளலாம். அதற்குப் பிறகு மற்றவைகளை பார்த்துக் கொள்ளலாம் என்பது இந்த அரசின் நிலை.

திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆளியாறு போன்ற அணைக்கட்டுகளிலிருந்து இன்றைய தினம் கூட நாள் ஒன்றுக்கு ஒரு விநாடிக்கு 60 கன அடி தண்ணீர் தமிழ்நாடு அரசிடமிருந்து கேரளா அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, மேற்கு நோக்கி கடலில் போய் விழுகிற அந்தத் தண்ணீரை பரம்பிக்குளம், ஆளியாறு, திருமூர்த்தி நகர் ஆகியவைகளுக்குக் கொண்டு வருவதற்காக பேச்சுவார்த்தைகள் நடத்தி அந்தத் தண்ணீரை இங்கே திருப்பி விடுவதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் தற்போது அது இடம் பெறவில்லை.

*570 வினா—திரு. என்.கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து மைசூருக்கு மின் சப்ளை செய்வது குறித்து கேரளா அரசு தமிழ்நாடு அரசிடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) கேரளா அரசு தன்னுடைய 5-10-1977 தேதியிட்ட கடிதத்தில் தமிழ்நாடு கேரளா மின் விசையை கர்நாடகத்துடன் பகிர்ந்து கொள்வது பற்றி குறிப்பிட்டு அத்தகைய ஏற்பாடு மூன்று மாநிலங்களின் ஒப்புதலின் பேரில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா: கேரளத்திலிருந்து இப்படி மின்சாரத்தை பெறும்போது அதற்காக நாம் வழங்குகின்ற விலையையும் அதே நேரத்தில் அதை நாம் கர்நாடகத்திற்கு விற்கும்போது அதற்காக நாம் வாங்குகிற விலையையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரளத்திலிருந்து பெறுகிற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 12 1/2 பைசா கொடுக்கிறோம். கர்நாடகத்திற்கு அதைத் தருகிறபோதும் 12 1/2 பைசா தான் வாங்குகிறோம். ஆனால் மின்சாரத்தை அனுப்புகிறபோது 10 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸ் வழியில் ஏற்படுதல், மின்சார அளவு காட்டப்படுகிறது.

திரு. க. அன்பழகன் : கர்நாடகத்திற்கு மின்சாரம் வழங்க இசைந்ததற்குப் பின்னர் அதுபற்றி கேரள அரசு தெரிவித்த மறுப்புக்கு நம்முடைய அரசு தெரிவித்திருக்கிற பதில் என்ன ?

[1978 மார்ச் 15

இப்படி மின்சாரத்தை வழங்குவது கர்நாடக அரசாங்கத்திற்கு தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட பிரச்னைக்காக மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்றும் நமக்கு முறையாக கிடைக்கிற காவிரித் தண்ணீர் கிடைக்காமல் போய் அதை கிடைக்கச் செய்வதற்காக இடையில் செய்யப்பட்ட சலுகை போல் மின்சாரம் வழங்கப்படுகிறது என்றும் சொல்வதைப் பற்றி அரசு என்ன கூறுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இரண்டு கேள்விகள் இருக்கின்றன. முதலாவது, கேரளாவிலே உற்பத்தியாகிற உபரி மின்சாரத்தைத் தமிழகம் பெற்றுக் கொள்வது என்று 12-2-76-ல் ஒப்பந்தமாகியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி நாம் மற்ற மாநிலங்களுக்கு அந்த மின்சாரத்தைக் கொடுக்கக்கூடாது என்று எந்தவிதத் தடையும் இல்லை. கேரள மாநிலத்திற்கு நான் சென்றபோது அங்குள்ள மின்சார அமைச்சரிடம் இதுபற்றிப் பேசினேன். அவர்களும் நம்முடைய நிலையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கர்நாடகத்திற்கு நாம் மின்சாரம் வழங்குவதில் அவர்களுக்கு எந்த தடங்கலும் இல்லை. ஆனால் 12-10-1977ல் அவர்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது—கர்நாடக அரசும் கேரளத்திலிருந்து உபரி மின்சாரத்தைத் தங்களுக்கு தர வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகையால் இதுகுறித்து மூன்று மாநிலங்களும் முடிவு செய்து கொண்டால் நன்றாக இருக்கும்.. நீங்களும் எங்களிடமிருந்து வாங்கி கர்நாடகத்திற்கு தருவது நாங்களும் நேராகத் தருவது என்ற நிலைமையை மாற்றி எந்த வகையில் கொடுப்பது என்பது பற்றி முடிவு செய்யலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். நாம் ஏற்கனவே செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தம் 1979ஆம் ஆண்டு வரை உள்ளது. ஆகவே, எந்த அளவுக்குப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற வகையில் கேரளா அரசோடு பேச வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவது, கர்நாடகத்தை பொறுத்தவரை காவிரித் தண்ணீருக்காக இந்த மின்சாரம் வழங்கப்பட்டது என்ற கருத்து சரியானதல்ல. உண்மை என்னவென்றால் 23-3-1976 ஆளுநர் ஆட்சி காலத்தில் மத்திய அரசு கர்நாடக மாநிலத்திற்கு அங்குள்ள— குறிப்பாக டிபென்ஸ் இண்டஸ்டரிஸ் — பாதுகாப்புத் தொழிற்சாலைக்குப் போதிய மின்சாரம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் கூடுதலாக மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கொடுத்து வந்தார்கள். அன்றைக்கு இருந்த ஆளுநர் ஆட்சி கேரளாவிலிருந்து பெறுகிற மின்சாரத்தில் 50 சதவிகிதம் அல்லது நாள் ஒன்றுக்கு ஒருமிலியன் யூனிட் வரையில் தரமுடியும், அதற்கு மேல் தரமுடியாது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே மின்சார வாரியம் ஒரு மிலியன் யூனிட்டை நாள் ஒன்றுக்கு தந்து வந்தது.

ஆனால் தமிழ் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து ஒரு மிலியன் யூனிட் தரவில்லை. 0·4 மிலியன் யூனிட்தான் தந்தார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நானும் அங்கே சென்ற

போது 'நீங்கள் ஏற்கனவே சொன்ன உறுதிமொழிப்படி ஒரு மிலியன் யூனிட் தரப்படவில்லை; ஒரு மிலியன் யூனிட் தருகிறோம் என்று சொன்ன உறுதிமொழியை நீங்கள் காப்பாற்றத் தவறுவது சரிதானா, என்று அவர்கள் கேட்டபோது ஒரு மாநிலத்திலுள்ள அரசு இன்னொரு மாநில அரசுடன் உடன்பாட்டுக்கு வருகிறபோது அந்த உடன்பாட்டை நிறைவேற்றுவது மாநிலங்களிடையே நல்ல உறவை வளர்க்கக்கூடிய வகையில் இருக்கும்— அதாவது கமிட்மென்ட். அந்த வகையில்தான் 0·4 மிலியன் தந்த நிலை மாறி ஒரு நாளைக்கு ஒரு மிலியன்யூனிட் என்ற அளவில், முதலில் எப்படி ஒத்துக் கொண்டார்களோ அதே அளவில் தரப்பட்டதே தவிர வேறல்ல.

கடந்த மாதத்தில்கூட மத்திய அரசிடம் இருந்து மேலும் ஒரு தாக்கீது வந்தது. அங்குள்ள தொழிற்சாலைகளுக்குப் போதிய அளவு மின்சாரம் கிடைக்கவில்லை, கர்நாடகத்தில மின்வெட்டு அதிகமாக இருக்கிறது, உங்களால் முடிந்தால் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நிலைமையைப் பொறுத்தவரை பரிசீலித்த பிறகு தர இயலாத சூழ்நிலையில் இருக்கிறோம் என்று மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களிடையே நல்ல உறவும் மத்திய சர்க்காரிடத்திலே ஒரு சுமுகமான நிலைமையையும் ஏற்படுத்துவதற்கு இது போன்ற காரியங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

(முற்பகல் 9-30)

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இலங்கையிலிருந்து மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பு மிக எளிதாக இருப்பதாகவும் அப்படி மின்சாரம் பெற்றால் அது இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கும் என்ற கருத்து நிலவுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தரப்படும்.

பூம்புகார் கலைக்கூடம்.

* 571 வினா திரு. என் கிட்டப்பா; மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா; பூம்புகார் கலைக்கூடத்தைக் காணவருவோரிடமிருந்து நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : கலைக்கூடத்தைக் காண வருவோரிடமிருந்து, நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு 25 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது. நாள்தோறும் வசூலாகும் தொகை சராசரியாக ரூ. 275/-.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக் கூடத்தைக் காணவருகின்றவர்களுடைய தொகை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவதாக இப்போது சொல்லப்படுகிறது. அதற்கு முக்கிய காரணமாக நம்முடைய அரசால் அதற்கான பராமரிப்பு அதிகமாகக் கவனிக்கப்படவில்லை என்றுகூடக் கூறப்படுகிறது எனவே நமது புதிய அரசு நல்லமுறையிலே அதைப் பராமரித்து அந்தப் பூம்புகார் கலைக்கூடத்தைச் சீரிய முறையிலே நடத்துவதற்கு ஆவன செய்யுமா? அதோடு ஆண்டு ஒன்றுக்கு அதற்காகும் பராமரிப்புச் செலவு எவ்வளவு என்பதையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பூம்புகார் கலைக்கூடம் பொதுத் துறையிலிருந்து சமீபத்திலேதான் சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதை நன்றாகப் பராமரிக்கவும், விளம்பரப்படுத்துவதற்கும் அதைக் காண வருவோர்களுடைய தொகை அதிகப்படுத்தவும் அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

1975–76 இல் வருமானம் ரூ. 72,009·60 பராமரிப்பு மற்றும் சம்பளச் செலவு ரூ 1,31,150.

1976-77 ஆம் ஆண்டில் வருமானம் ரூ. 60,806·25 செலவு ரூ 1,71,220.

1977–78 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் முடிய வருமானம் ரூ 60,302·95, செலவு ரூ 59,995.

திரு மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் கலைக்கூடம் கட்ட அறிஞர் அண்ணா காலத்திலே திட்டமிடப்பட்டது என்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுவது உண்மையா? அது உண்மையாக இருந்தால் அண்ணா அவர்களுடைய பெயர் பொறித்த கல் அங்கே நிறுவப்படுமா?

மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உலகத் தமிழ் மாநாடு நடந்தபொழுது தீவுத்திடலிலே அமைக்கப்பட்டிருந்த பூம்புகார் கலைக் காட்சியிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் மீண்டும் பூம்புகார் உருவாக்கப்படும் என்று பேசியதாக அறிகிறேன். அதையொட்டி உலகத் தமிழ் மாநாடு முடிந்ததற்கு பிறகு அன்றைக்கு அதிலே கிடைத்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாயை பூம்புகாரை உருவாக்குவதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்ற குறிப்புகளிலிருந்தும் சான்றுகளிலிருந்

தும் பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கியதாகவோ அல்லது ஆரம்பித்ததாகவோ தகவல் இல்லை. 28-5-1968 ஆம் நாள் அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பூம்புகாருக்கு அடிக்கல் நாட்டியதாக ஒரு செய்தி இருக்கிறது. தொடர்ந்து வேலைகள் நடைபெறவில்லை. 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கலைக்கூடம் முடிவுபெற்று திறக்கப்பட்டிருக்கிறது.

திரு கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, இந்த பூம்புகார் கலைக் கூடத்தில் வசூலிக்கும் கட்டணத் தொகையிலிருந்து அந்தக் கட்டடத்திற்கு ஆன செலவை ஈடுசெய்துவிட்டதற்கு பிறகு நுழைவுக் கட்டணம் இல்லாமல் இலவசமாகவே அனுமதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அதற்காகப்போட்ட முதலீட்டை எப்போது எடுப்பது என்பது வேறு பிரச்னை. பெரும்பாலும் நடைமுறைச் செலவுக்கே நான் கொடுத்த கணக்கிலிருந்துதுண்டு விழுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கலைக்கூடத்தில் ஐம்பெருங்காப்பியங்களுள் தலையாயது என்று கருதப்படும் சிலப்பதிகாரம் முழுவதும் விளக்கமாகச்சிற்பங்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஐவகை மன்றங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளைப்பற்றிப் பயணிகளுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு ஏற்றவகையில் சிலப்பதிகாரத்தில் தேர்ச்சி பெற்ற ஒருவரை அங்கே நியமிக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவரவர்களே, பூம்புகார் பகுதியைப் பற்றியும் அந்தக் கலைக்கூடத்தைப்பற்றியும் ஒரு ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்த பிறகு அதை இன்னும் மேம்பாட்டோடு, சிறப்பாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனையும் சேர்த்துக் கவனிக்கப்படும்.

572 *விஞ திரு. என் கிட்டப்பா — மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆண்டுதோறும் சித்திரை முழு நிலவு நாளில் பூம்புகாரில் கொண்டாடப்பட்டு வந்த விழா நிறுத்தப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் இவ்விழா நடத்தப்படவில்லை. எனவே இரண்டாவது கேள்வி எழவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்த அந்த விழா நெருக்கடி கால நிலைக்குப் பின்னாலே நிறுத்தப்பட்டு விட்டது. எனவே தொடர்ந்து அதைத் நடத்துவதற்கு அரசு தனியாகக் கவனம் செலுத்தி அதை நடத்த முன் வருமா? ஏனென்றால் இளங்கோவடிகள் விழாவாக அது நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து நடத்த அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவரவர்களே, கேள்வி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்ததா என்று இருப்பதனால், அது ஆண்டு தோறும் நடத்தப்படவில்லை என்ற பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதையே மீண்டும் வற்புறுத்துகிறார்கள். இரண்டுமுறை அங்கே விழாக்கள் நடந்திருக்கின்றன. 1973-ஆம் ஆண்டு நடந்த விழா, கலைக்கூடத் திறப்பு விழா என்று நடைபெற்றிருக்கிறது. பிறகு 1974-இலே அன்றைய தினம் இருந்த முதல்வர் எங்கேயோ அறிவித்ததையொட்டி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பிறகு நிறுத்தப்பட்டு விட்டது. காரணம், இரயில்வே வேலைநிறுத்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1975 ஆம் ஆண்டிலே அன்றையதினம் முதல்வராக இருந்தவர் ஒரு இடத்தில் அறிவித்ததையொட்டி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அந்த ஆண்டிலே மே மாதத்தில் நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு நடைபெறவில்லை. ஆகவே, அரசில் தொடர்ந்து அதை நடத்த குறிப்புகளோ ஆணைகளோ அதற்கான நிலைமைகளோ இல்லை. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய அக்கறை, ஆர்வம் இந்த அரசுக்கும் இருக்கிறது. அந்த பூம்புகார் பற்றிய எல்லாக் குறிப்புகளையும் பரிசீலித்துமுடிந்த பிறகு அந்த விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டிய அவசியமிருந்தால் தொடர்ந்து இந்த அரசு நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மாண்புமிகு தலைவரவர்களே, பூம்புகார் நகரில் பல்வேறு சதுக்கங்கள் இருந்ததாகவும் நீதியை நிலைநாட்ட பூதச் சதுக்கம் என்ற இடம் இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. ஆனால் புதிதாக அமைத்தவர்கள அந்தப் பூதச் சதுக்கத்தை அங்கே அமைக்காததற்கு என்ன காரணம்? அதை இந்த அரசு அமைப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன் : தலைவரவர்களே, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்ததாகக் காவியத்திலே சொல்லப்படும் பூம்புகாரை மீண்டும் அதே பெயரிலே உருவாக்கிய பொழுது இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன என்று பல

வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு கருத்துதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. செளந்திரராஜன் அவர்களுடைய கருத்தும். என்றாலும் அதைத் தீவிரமாகப் பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளிலே இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் நல நிதி

*573. வினா— திரு.கே. சுப்பிரவேலு : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளிலும், உயர் தொடக்கப்பள்ளிகளிலும் ஆசிரியர்களது நல நிதி பிடித்தம் செய்து உரிய தேதிக்குள் அஞ்சலகத்தில் கட்டாததால் ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இழப்பு ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்படும் இழப்பைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) இழப்பு ஏற்படாதவாறு கண்காணிக்கப்படுகிறது.

திரு. கே. சுப்பிரவேலு : அவைத் தலைவரவர்களே, இப்படித் தமிழ்நாடு பூராவும் தனியார் பள்ளிகளில் இருக்கும் நிர்வாகிகள் ஆசிரியர்களிடமிருந்து கட்டணத்தை வசூலித்துவிட்டு அதை உடனடியாக அரசுக்குக் கட்டாமல் காலந்தாழ்த்தி வருகிறார்கள். அதனால் ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அரசுக்கும் இதிலே இழப்பு ஏற்படுகிறது என்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே தனியார் பள்ளிகளுக்கு ஒரு தனி சுற்றறிக்கை அனுப்பி இதைச் சரியாகக் கண்காணிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகள் பல்வேறு ஆணைகளின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நல நிதி பிடித்தத்தில் இவ்வாறு இடையூறுகள் ஏற்படுவதால் இதை அரசே கணக்குப் பார்த்து இந்தத் தொகையைப் பிடித்துக் கொண்டு எஞ்சிய தொகையை அந்தந்தப் பள்ளிகளுக்குத் தர முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம். ஆய்வு நிலையில் உள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடு செல்கின்ற நேரங்களில் பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன. பல ஏழை எளியவர்கள், பம்பாயிலும், சென்னையிலும் இதற்காகப் பணம் கொடுத்து, மோசடி செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதற்காக மத்திய சர்க்காரை வலியுறுத்தி, மாநில சர்க்கார் மூலமாக, ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற வகையில் வழிவகை காண இந்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்கத்தையும் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகத்தையும் நேரில் அணுகி, இதுபற்றிப் பேச்சு வார்த்தை நடத்துமாறு மாநில வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இணை இயக்குநரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. பொ. சிகாமணி : தலைவரவர்களே, இந்த நிறுவனமானது தமிழ் நாட்டு மக்களுக்காக மட்டும் இயங்கும் நிறுவனமாக இருக்குமா ? மற்ற மாநிலங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கடல் கடந்து செல்லுகின்ற தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒரு நிறுவனத்தை அமைக்க முடியுமா, அதை எப்படி அமைப்பது என்பதை ஆய்வு செய்ய இப்பொழுது முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், அதே நிலையில் அரபு நாடுகள் போன்ற பல்வேறு நாடுகளில் படித்த இளைஞர்களுக்கு மிகுந்த தேவையிருக்கிற காரணத்தாலே, கேரள மாநிலத்தில் ஒரு கார்ப்பரேஷன் அமைத்து அங்கிருந்து வெளிநாடுகளுக்குப் படித்த இளைஞர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுபோன்ற ஒரு அமைப்பைத் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த தமிழ் நாடு அரசு முன் வருமா ? அதோடு, இப்பொழுது எல்லாம் நம் மாநிலத்திலே இருந்து வெளிநாடு செல்ல பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. ஆகவே, பலர் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த நிபந்தனைகளைத் தளர்த்த அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட அடிப்படையிலேதான் இந்த யோசனை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, கேரளத்திலே நிறுவப்

பட்ட அந்த நிறுவனம் தங்களுடைய ஒரு கிளையைத் தமிழ்நாட்டிலே துவங்குவதற்கும் அவர்கள் எண்ணம் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே தொடங்கப்படவிருக்கும் நமது நிறுவனத்தோடு சேர்ந்து ஒத்துழைக்க அவர்கள் யோசனை செய்து இசைவு தந்திருக்கிறார்கள்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு வேலைக்கு ஆள் தேவை என்று பலவிதமான கம்பெனிகள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். பல பேர்கள் அதை நம்பி முன்பணம் கொடுக்கிறார்கள். அது போலியாக இருந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதே போல ஸ்டாம்புகள் அனுப்பச் சொல்லுகிறார்கள். அது பற்றியும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காகத்தான், அரசு இப்படிப்பட்ட நிறுவனத்தை ஏற்படுத்துகின்ற முயற்சியிலே இறங்கி இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அண்டையிலே உள்ள கேரள மாநிலத்திலே, 5 வருடம் தொடர்ந்து பதிவு செய்து கொண்டு வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு அரசு மானியத் தொகையாக மாதம் 100 ரூபாய் 50 ரூபாய் கொடுப்பதாக அறியப்படுகிறது. அதைப்போல விதி முறைகளை அமைத்து நமது மாநிலத்திலும் இதைப்போன்று அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கேரளாவில் மதுக்கடைகள் இருக்கின்றன. அதைப்போல நாம் இங்கே திறப்பதற்கில்லை. அதுபோல இதையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இலங்கையிலே இருந்தும் வேறு இடங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அகதிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நேரடியாகவே அரபுநாடுகளுக்கு அனுப்ப அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது கேரள நிறுவனத்தின் கிளை ஒன்று தமிழகத்தில் ஆரம்பிப்பதற்கான ஆலோசனை இருக்கிறது என்று கூறினார்கள். கேரள நிறுவனத்தின் கிளையை இங்கே ஆரம்பித்தால் நிச்சயமாக நாம் உத்தேசிக்கின்ற அத்தனை சலுகைகளையும், நன்மைகளையும் நாம் நேரடியாகப் பெற வாய்ப்பு இல்லை. ஏனென்றால் கேரளாவிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்த நிறுவனத்தை மத்திய அரசின் துணையோடு நாமே தனியாக நிறுவ முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

[1978 மார்ச் 15

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கேரளாவில் இருக்கிற நிறுவனம் தங்களுடைய கிளையை நிறுவுவதற்கு யோசனையை நாம் வைத்திருப்பதாகச் சொல்லவில்லை. அப்படி ஒரு யோசனையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், தனியாக ஒரு நிறுவனத்தைத் துவக்குவதற்கான வாய்ப்புக்களைத்தான் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அரபு நாடுகளுக்கு வேலைச் தேடி செல்லக்கூடியவர்களுக்கு அரபு மொழியில் ஓரளவு அனுபவம் வாய்த்திருக்க வேண்டும் என்பது அவசியமாகிறது. இப்போது தமிழ்நாட்டில் அரபு மொழியை மற்றவர்களுக்குக் கற்றுத் தருகிற நிறுவனம் இல்லை. அரபு மொழியிலே பாண்டித்தியம் பெற்று அதிலே தொண்டாற்ற ஏதாவது ஒரு நிறுவனம் பயிற்சி தர முன்வருமானால் அரசு அதற்கு உதவும் வகையிலே மானியம் தர முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்போது அரசுக்கு இல்லை.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் குளங்கள் தூர் எடுப்பு.

*576. வினு—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பஞ்சாயத்துக்களுக்கு போதிய நிதி வசதி இல்லாததால் ஏராளமான குளங்கள் தூர் எடுக்கமுடியாமல், மேடாக மாறி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றிற்குப் பரிகாரம் காண அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா ?

(இ) அரசு மானியம் அளித்து ஊராட்சி ஒன்றியம் மூலம் இந்த வேலையை செய்யலாமென்ற கிழக்குத் தஞ்சை மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலின் சிபாரிசு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைகளை மட்டுமே கொண்டு ஒன்றியங்களால் இப்பாசன ஆதாரங்களைச் சரிவர பராமரிக்க இயலவில்லை என்று தெரியவந்ததால் ஒன்றியங்களின் பளுவைக் குறைக்கும் பொருட்டு 100 ஏக்கரும் அதற்கு மேற்பட்டுமுள்ள ஆயக்கட்டுகொண்ட பாசன அமைப்புகள் பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் விடப்பட்டுள்ளது. இருப்பினும் ஒன்றியங்களுக்கு எவ்வித குறிப்புமின்றி தற்போதைய அளவிலேயே மானியங்கள் வழங்கப்படுகின்றது.

(அ & ஆ) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டம் 85 (1) பிரிவின்படி ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட குளங்களைத் தூர் எடுக்கும் வேலை ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்தது. ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சிறு பாசன

1978 மார்ச் 15]

ஆதாரங்களைப் பராமரிப்பதற்காக, அந்தந்த ஒன்றியங்களுக்கு ஆண்டுத் தேவையின் அடிப்படையில் அரசு பாசன மானியம் வழங்குகின்றது.

(இ) ஆம், அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தக் கஷ்டம்
அங்கே ஏற்பட்டுள்ளது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அங்கீ
கரித்தற்கு மிக்க நன்றி. ஆனால் அது கடைமடைப் பகுதி
யாக இருப்பதால் வருஷா வருஷம் இந்த நிகழ்ச்சி நடந்து
கொண்டு இருக்கிறது. தண்ணீர் இல்லாத காலத்தில் மேலே
இருப்பவர்கள் தண்ணீரை இழுத்துக் கொள்கிறார்கள். தண்ணீர்
அதிகமாக வரும்போது வேண்டாம் என்று தள்ளிவிடுகிறார்கள்.
அதனாலே வெள்ளம் வருகிறது. அந்தப் பகுதியில் தூர் எடுக்
கப்படாமல் இருப்பதால், அந்தக் குளம் மேடாக இருக்கிறது.
இது அவசரமும் அவசியமுமாக இருப்பதால் அரசாங்கம் பரி
சீலிக்கிற முடிவு எவ்வளவு சீக்கிரத்தில் முடியும் என்று அறிய
விரும்புகிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே,
1978-79-ம் ஆண்டுக்கு பாசன மானியத் தலைப்பிற்கு ரூ. 25
லட்சம் ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பெற்று இருக்கிறது.
ஆனால் கிழக்குத் தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம்
தந்து இருக்கிற அறிக்கையை அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்
கிறது.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவரவர்களே, இந்த
மாதிரி குளங்களில் விவசாயிகள் ஆக்கிரமிப்புச் செய்வதன்
காரணமாக அவைகள் மண் மேடிட்டு ஆழம் குறைந்து விடு
கிறது. மழைக் காலங்களில் வரும் அதிகமான தண்ணீர் காரண
மாகக் குளங்கள் உடைப்புக்கு உள்ளாகின்றன. ஆகவே, அந்த
ஆக்கிரமிப்புகளை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, குறிப்
பிட்ட புகார் சொன்னால் அது பற்றி விசாரித்து நடவடிக்கை
எடுக்கலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கனம் அமைச்சர்
அவர்கள் தெரிவித்துள்ள நிதியில், நாகைத் தாலுக்காவிற்
எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அந்தத் தாலுக்
கடைமடைப்பகுதியாக இருக்கிற காரணத்தால் அத
விசேஷ நிலைமை இருக்கிறது என்பதாலும், ஒவ்வொரு ம ள்ளாட்
காலத்தின் போதும் வெள்ளத்தின் காரணமாக உடைப்பாரா—
ஏற்பட்டு இருப்பதாலும், ஏதாவது அதிகார பூர்வமானலும் பாதை
நியமித்து அதற்கு நிரந்தரமான ஒரு சொல்யூஷன் கரக உள்ளை த
அரசாங்கம் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்

[1978 மார்ச் 15

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நாகை வட்டத்திற்கு எவ்வளவு நிதி என்ற குறிப்பு இல்லை. ஆனால் கிழக்குத் தஞ்சை மாவட்ட வளர்ச்சி மன்றம் தந்துள்ள அறிக்கையை அரசு பரிசீலித்து வருவதால், அது குறித்து விரைவான நடவடிக்கை எடுக்கத் தீவிரமாகப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சிவசாமி : தலைவரவர்களே, குளங்களைத் தூர் எடுக்கும் அதே நேரத்தில் வரத்துக்கால்வாய்களையும், வடிகால்களையும் சுத்தம் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, பாசன மானியத்தில் அதுபோன்ற பல பணிகளை மேற்கொள்ளவும் சேர்த்துத்தான் நிதி ஒதுக்கப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, பஞ்சாயத்துப் பகுதியில் கட்டப்பட்டு இருக்கிற குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைப் பராமரிக்கப் போதிய நிதி வசதி இல்லாததால், அவற்றைப் பொதுப்பணித் துறைக்கு அரசு மாற்றியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது எப்போது செய்யப்பட்டது? அதனால் பஞ்சாயத்துகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, 1975-ம் ஆண்டில் 100 ஏரிகளுக்குக் குறைவாக உள்ளவற்றை ஒன்றியங்கள் ஏற்க வேண்டும் என்றும், அதற்கு அதிகமாக இருப்பதை பொதுப்பணித் துறை ஏற்கவேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்தது. அதனால் எவ்வளவு நஷ்டம் என்கிற விவரம் இல்லை.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்தக் குளங்கள், கிணறுகள், தூர் எடுப்பதற்கு நிதி ஒதுக்குவதில் இராமனாதபுரம் மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி, அந்த ஒன்றியங்களுக்கு அதிகமான அளவில் நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்களும் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான். அங்கே ஜமீன் பகுதியாக இருந்த பகுதியில் பல ஆண்டுக் காலமாக, 50-60 வருஷத்திற்கு மேலாகத் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அங்கே பல்வேறு அன்கிளாசிஃபைட் இனும்ஸ் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அந்த இடங்களில் உள்ள கண்மாய்களும் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அந்த பகுதியில் கண்மாய்களைத் தூர் வார அரசு முன்வருமா?

1978 மார்ச் 15]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் பூராவும் பின்தங்கிய மாவட்டம் என்பது தெரியும். மாண்புமிகு உறுப்பினர் இதற்காகத் தனிக் கேள்வி போட்டால் தனியாக விவரங்கள் தெரிந்து கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, குளம் குட்டைகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் எடுப்பதை ரெவின்யூ அதிகாரிகள் தடுக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்தி, விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை எடுத்துச் செல்ல அனுமதித்தால் அதனால் ஏரிகளும், குளங்களும் ஆழமாக ஆவதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, அரசு அதை அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படுகிற ஏரிகளுக்கு சுமார் 5,000 ரூபாய் வரைதான் மதிப்பீடு செய்து அதைப் பராமரிக்கிறார்கள். அதனால் பெரிய ஏரிகள், கண்மாய்களை மராமத்து செய்ய முடியவில்லை. ஆகவே, அந்த ரூ. 5,000 என்பதை ரூ. 10,000 என்று உயர்த்த அரசு திட்டம் வைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களில் நிதிப் பற்றாக்குறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஊராட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய பல கோடி ரூபாய்கள் வரி வசூல் பாக்கி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை வசூல் செய்ய அரசு முன் வருமா? அதற்குப் போதிய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, எங்கே நிலைமை அப்படி இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது பற்றி விசாரித்துப் பரிசீலிக்கலாம்.

ஒழிந்தியாம்பட்டு-கீழ்புதுப்பட்டு சாலை.

*577. வினா—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒழிந்தியாம்பட்டு— கீழ்புதுப்பட்டு செல்லும் பாதை மிகவும் பழுதடைந்து போக்குவரத்துக்குத் தடையாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இப்பாதையைச் சீரமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) தென் ஆற்காடு மாவட்டம் வானூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள ஒழிந்தியாம்பட்டு—கீழ்ப் புதுப்பட்டு சாலை பழுது பார்க்கப்பட உள்ளது.

(ஆ) வெள்ளநிவாரண நிதி ஒதுக்கீட்டில் இதற்காக ரூ. 92,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த வேலை விரைவில் துவங்கப்பட்டுவிடும்.

திரு. மொ. பரமசிவம் : தலைவரவர்களே, இந்த வேலை ஒப்படைக்கப்பட்ட கான்ட்ராக்டர் சரியாக வேலை செய்யவில்லை. அதனால் அந்த கான்ட்ராக்டர் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது பற்றி குறிப்பு இல்லை. ஆனால் சாலை பழுதடைந்திருக்கிறது என்பதும், அதைச் செப்பனிட ரூ. 92,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் குறித்த விவரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இருக்குமானால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவைபுதூரில் முன்னாள் ராணுவ வீரர்களது வீடுகளுக்கு வரி.

*578. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் ராணுவ வீரர்கள் குடியிருக்கும் ''கோவைப்புதூர்'' காலனி வீடுகளுக்கு வரி விதிப்பிலிருந்து (Exemption from house tax) விலக்கு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கூத்தாநல்லூருக்குக் குடிநீர் வழங்கல்.

*579 வினா.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மன்னார்குடி ஒன்றியம், கூத்தாநல்லூர் பேரூராட்சியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூத்தாநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

BOARD UNDER CONTRACT LABOUR ACT.

*580. Q -THIRU RUMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) names of persons nominated to the Board under the Contract Labour (Regulation and Abolition) Act: and

(b) basis of the representations on the Board?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்.

(அ)—

1. செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9. .. தலைவர்.

2. தொழிலாளர் துறை ஆணையர் (அல்லது) அவர் இல்லாத சமயம் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளர், சென்னை-5 .. அங்கத்தினர்.

மற்றப்பிரதிநிதிகள்.

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை-5 .. அங்கத்தினர்.

நிறுவனத்தின் பெயர்.	உறுப்பினர் பெயர்.
1. தமிழ்நாடு மின்சார வாரியம்.	திரு. சி. சஞ்சீவி, தலைமைப் பொறியாளர் (பொது).
2 தென்னிந்திய நிர்வாகிகளின் பேரவை ..	திரு. பி. டி. சம்பத், தொழில் தொடர்பு மேலாளர், பின்னி லிமிடெட், சென்னை.
3 என்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பொரேஷன் லிமிடெட்	திரு. ஏ. கே. நடராசன்.
4 ராமன் பிரதர்ஸ் ..	திரு. எம். என். ராஜாராமன்.
5 இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் ..	திரு. கே. ராமமூர்த்தி, தலைவர்
6 ஹிந்து மஸ்தூர் சபா ..	திரு. ஜி. பலராம்.
7 அண்ணா தொழிற்சங்கப் பேரவை	திரு. வி. பெருமாள்.
8 அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரஸ் ..	திரு. ஜெ. சைலம் பால்.

(ஆ) 1975-ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் நீக்குதல்) விதிகளின் கீழ் விதி எண். 3-இன் படி ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் படித்த பிரதிநிதித்துவப் பட்டியலில் சி.ஐ.டி.யூ. பிரதிநிதிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் பல தொழிற்சங்க பிரதிநிதிகள் இடம் பெறவில்லை என்பது தெரிகிறது. அந்தப் பட்டியல் எமர்ஜன்ஸி காலத்தில் தயாரிக்கப் பட்டது என்று நினைக்கிறேன். ஆகையால் "புரோ எமர் ஜன்ஸி, ஆன்டி எமர்ஜன்ஸி" என்ற பேச்சில்தான் அமைக்கப் பட்டிருக்கும். எனவே, அதை ஒரு முழுமையான பிரதிநிதித் துவம் கொண்டதாக அமைக்கும் வகையில் "ரீ கான்ஸ்டிடியூட்" பண்ண அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, '76 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ந் தேதி இந்தக் குழு அமைக்கப் பட்டது. ஆனால், அதனுடைய உறுப்பினர் பெயர்கள் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது. இந்தக் குழு அமைக்கப்பட்டது 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் ரூல்ஸ் பிரிவு 3, மற்றும் 4-ன்

படி அமைக்கப்பட்டது. அதில் இடம்பெற்றிருக்கும் பிரதிநிதி களுக்கு, கெசட்டில் என்று வந்ததோ அன்றிலிருந்து 3 ஆண்டு களுக்குப் பதவி உண்டு. ஆகையால், இந்தக் குழு அமைக்கப்பட்ட 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதியிலிருந்து அவர்களுக்கு 3 ஆண்டுக் காலம் சட்டப்பிரகாரம் பதவி உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி ,, என்டயர்லி டிஃப்ரண்ட்''. அந்தக் குழு "புரோ எமர் ஜன்ஸி, ஆண்டி எமர்ஜன்ஸி" என்ற பேச்சில், எமர்ஜன்சியை ஆதரித்தவர்களைக்கொண்டு அமைக்கப்பட்டது. இப்போது நிலைமை மாறியிருக்கிறது. ஆகையால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந் தவர்களுக்கும் எல்லா நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதி நிதித்துவம் அளிக்கும் வகையில் அந்தக் குழுவை "ரீ கான்ஸ்டிடி யூட்" செய்யும் உத்தேசம் உண்டா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, 3 ஆண்டா, அதற்கு மேலா என்பதல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் முன்பே சொன்னது போல 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் ரூல்ஸ் 3, மற்றும் 4 ன்படி மிகத் தெளிவாக அவர்களுக்கு 3 ஆண்டுக் கால பதவி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ரா. உமாநாத் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் மற்றவர்களைப் போல அடிக்கடி கேட்பது கிடையாது. என்னுடைய கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரு. ஜேம்ஸ் அவர் களை அழைத்தேன். முதலில் அவர்கள் கேட்கட்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அந்த போர்டு அங்கத் தினர்களைப் பார்க்கும்போது நெருக்கடி காலத்தில் அப்போ திருந்த அரசை ஆதரித்த அரசியல் கட்சி தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். அன்றையதினம் நெருக்கடியை எதிர்த்த மற்ற அரசியல் கட்சி தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை, ஆகவே, "ரீ கான்ஸ்டிடியூட்" பண்ண வேண்டிய தேவை இல்லை என்றாலும் எந்தெந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அதில் இடம் பெறவில்லையோ அவர்களுக்கு இடமளிக்க அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, சட்டம் அனுமதித்தால் அதைப்பற்றி பரிசீலிப் பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி 581-ம், 582ம் தள்ளி வைக்கப்படுகிறது.

திண்டிவனத்தில் பேருந்து நிலையம்.

*583 வினா—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 5 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திண்டிவனத்தில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வேலை முடிக்கப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட நிலையம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் பேருந்துகளின் உபயோகத்தில் இருந்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புதுக்கோட்டையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

*584 வினா—திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கும், புதுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கும் விரைவு பஸ் விட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. த. புஸ்பராஜு : தலைவரவர்களே, சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்பு புதுக்கோட்டையிலே இருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்பட்டிருந்தது. ஆம்னி பஸ்ஸின் கட்டணத்தை விட அது ரூபாய் 5 அதிகமாக இருந்த காரணத்தால் வசூலாகாத நிலையில் நிறுத்தப்பட்டது; அந்த பஸ் திரும்

பவும் திருச்சி, விழுப்புரம் வழியாக சென்னைக்கு விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்ல இரவு 11 மணிக்குக் கூட்டம் அதிகம் இருப்பதால், புதுக்கோட்டையிலே இருந்து திருச்சி வழியாக, கோயம்புத்தூருக்கு ஒரு பஸ் விடப்படுமா ? இதுபற்றி அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு இரண்டு பேருந்துகள் செல்லுகின்ற காரணத்தால் அங்கு புதிதாக வேறு பஸ் விடுவது தேவையில்லை. புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்குப் போதிய பயணிகள் கிடைக்காத காரணத்தால்தான் அது நிறுத்தப்பட்டிருந்தது. கட்டணம் உயர்ந்தது காரணம் அல்ல. இருப்பினும் கட்டணம் குறைந்திருக்கின்ற இந்த நேரத்தில் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு மீண்டும் ஒரு பஸ் விடுமாறு போக்குவரத்துக் கழகத்திற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது போன்றே புதுக்கோட்டையிலிருந்து கோவைக்கும் பஸ் விடுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. த. புஸ்பராஜு : பேரவைத் தலைவர்வர்களே, இரவு 4 ஆம்னி பஸ்கள் விடப்பட்டும் இடம் கிடைக்காத காரணத்தால் இந்தப் புதிதாக விடக்கூடிய பேருந்தை புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி கட்டண உயர்வு குறைவாக இருக்கும் இந்நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒழுங்குப் பிரச்சனைகள்.

(அ) எஸ். எஸ். எல். சி. தேர்வு வினாத் தாள்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டது குறித்து.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மிக அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பொது மக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்சனையைக் கிளப்புகிறேன்...... இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்...... குறுக்கீடு......

[திரு துரை முருகன்] [1978 மார்ச் 15

காலைப் பத்திரிகையிலே மிகப் பரபரப்பூட்டக்கூடிய அளவில் இன்றைக்குச் செய்தி வந்திருக்கிறது. எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குரிய கேள்வித்தாளை அதாவது பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கு கொடுக்க வேண்டியதை ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்கும் ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்குக் கொடுக்க வேண்டியதை பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கும் மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். எம். சி. டி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இந்து உயர்நிலைப் பள்ளி, வேப்பேரியில் உள்ள புனித பால் உயர்நிலைப்பள்ளி மற்றும் கள்ளக்குறிச்சியில் ஒரு நகராட்சிப்பள்ளி ஆகிய இடங்களில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. இது மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதுபற்றி அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர். இவ்வாறு பிரச்சனையைக் கிளப்புவது சரியல்ல. அவர் முன்பே என்னிடம் இதுகுறித்து எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். இது எழுத்து மூலமாகத் தர வேண்டிய விஷயம். திடீரென பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆரம்பிப்பது சரியல்ல. இது சபையின் நேரத்தை வீணாக்குவது போல் இருக்கிறது. ஆகையால் இதனை முன்பே எழுத்து மூலமாகத் தந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்கு ஏற்பட்ட பீதியும் பரபரப்பும் நாட்டிலே யாருக்கும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் இவ்வாறு கேள்வித்தாள் மாறுவதற்கு காரணமாய் இருந்த தலைமையாசிரியர்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் மாணவர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்புத் தருவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தகவல் கோரல்.

(அ) கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் வினாத்தாள்கள் மாற்றப்பட்டது குறித்து.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். எங்கள் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் இதேவிதமாக பேப்பர் மாற்றப்பட்டு அவர்கள தேர்வு எழுதாமல் புறக்கணித்து விட்டார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்பர்மேஷன் கேட்பதற்கு இது நேரம் அல்ல.

978 மார்ச் 15]

திரு. துரை முத்துசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது. அவருக்குப் பதில் சொல்ல விருப்பம் இல்லை என்றால் உட்கார வேண்டியதுதான். அவர்களது பதில் உங்களுக்கும் சேர்த்துத்தான்.

திரு. துரை முத்துசாமி : நான் கேட்க விரும்புவது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற விதிகளைப் படித்துவிட்டுப் பேசுங்கள். தயவு செய்து உட்காருங்கள். எது வேண்டுமானாலும் பேசக்கூடாது. இது மன்றம். அமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் சேர்த்து பதில் சொல்லியிருக்கிறார்கள். மேலும் எழுந்திருந்து வலியுறுத்துவது என்பது நம் மரபுகளுக்கு அழகல்ல. ஆகவே, விதிகளுக்கு உட்பட்டுப் பேசுங்கள்.

(2) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி.

(ஆ) ஒரு கொலை வழக்கைப்பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் ஆதாரங்களை அளித்தல் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 5 ஆம் நாள் அன்று பேரவை உறுப்பினர் நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கொலை வழக்கைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அவர், அதைப் பேசும்போது நான் ஆதாரங்கள் வைத்திருக்கிறேன், நான் காட்டுகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்ன பிறகு அவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்று தெரிந்து கொள்ளலாம். பாயின்ட் ஆப் ஆர்டரை அனுமதிக்காமல் இருக்க முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்குக் காரணம் இந்த மன்றத்தில் அவர்கள் பேசியதற்குப் பின்னால், பத்து நாட்களுக்கு முன்னால் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன், இப்பிரச்சனை பற்றி. நிரூபிப்பது பற்றி, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்று கேட்டேன். நீங்கள் பதில் சொல்கிறேன் என்று சொன்னீர்கள், பத்து நாட்களாகிவிட்டன. (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்குப் பதில் சொல் கிறேன். இராதா அவர்கள் கேட்டதற்கு, நான் நடவடிக்கைகள் எடுத்து அவருக்கு எழுத்து மூலம் இன்றைக்குள் தர வேண்டும் என்று அனுப்பி இருக்கிறேன். அவர் இங்கே அவைக்கு எழுத்து மூலம் தரவேண்டுமென்று, இன்றைக்குள் தரவேண்டும் என்று உத்திரவிட்டிருக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தாங்கள் அவருக்கு ஒரு இரகசியக் கடிதம் எழுதியிருப்பதாக ரகுமான்கான் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவருக்கு இரகசியமாக கடிதம் எழுதிவிட்டு அதைத் தாங்கள் அவையில் அறிவித்தது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரகசியம் என்று சொல்லவில்லை. அனுப்பியது என்ன என்று சொல்லவில்லை. அனுப் பியிருக்கிறேன் என்று மட்டும்தான் கூறியிருக்கிறேன். இன்றைக் குள் தர வேண்டும் என்று சொன்னேன். என்ன எழுதினேன் என்று உள்ளே நுழையவில்லை. என் தீர்ப்பையொட்டி அவருக்கு நினைவூட்ட கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, இந்தப் பரீட்சைத் தாள்கள் சம்பந்தமாக காலையில் விதி 42-ன் கீழ் நான் கொடுத் திருக்கிறேன் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சனையோடு வாருங்கள். ஒன்றைச் சொல்லுங்கள், அதை நின்று சொல்லுங்கள்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : முக்கியமாக வியாசர்பாடியில் நடந்த சம்பவம் மற்றும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக எங்களால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேறு சந்தர்ப்பங்களில் பேச வாய்ப் பிருக்கிறது என்று சொல்லி தள்ளுபடி செய்கிறீர்கள். இது சரி யல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விதியின் கீழ் இது சரி இல்லை என்று அவர்கள் சொல்ல முடியும் என்றால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். நீங்கள் கொடுத்திருக்கிற அத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங் களும் இன்றைய மானியக்கோரிக்கைக்குள் அடங்கியவை. ஆகவே, நீங்கள் எழுப்பியுள்ளவை அதில் அடங்கும். ஆகவே, தயவு செய்து சரிவர சிந்தித்து அப்பிரச்சனைகள் எல்லாம்பற்றி இன்றைய மானியக் கோரிக்கைமீது பேசுகிறபோது அதில் தாராளமாகப் பேசுங்கள். அமருங்கள்.

(முற்பகல் 10—10)

(2) ஒழுங்குப்பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டின்மீது எந்த விதியின் கீழ் பேரவைத் தலைவரால் விளக்கம் கேட்கப்பட்டது என்பது குறித்து.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, தாங்கள் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு விளக்கம் கேட்டு கடிதம் எழுதியிருப்பதாக தெரியப்படுத்தினீர் கள். சட்ட மன்ற விதிகளில் எந்த விதியின் கீழ் இந்த விளக்கத்தை தாங்கள் கேட்டிருக்கிறீர்கள் ? சட்டமன்ற விதிகளில் எந்த விதிகள் மூலம் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், இந்தப் பிரச்சனை கிளப்பப்பட்டு பல நாட்கள் ஆகியும், இப்போது, போலீஸ் மான்யம் வரும்போது இந்த விளக்கம் கேட் டிருப்பதின் உள்நோக்கம் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ் மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பேசினாரோ அந்த விதியின் கீழ் தான். எந்த விதியின் கீழும் உறுப்பினர் அவர்கள் அப்படி பேச முடியாது, என்பதையும் நான் நினைவுபடுத்துகின்றேன். நான் கடிதம் எழுதியிருப்பது எந்த விதியின் கீழும் அல்ல. கனம் உறுப்பினர் அவர்கள் பேசியதின் அடிப்படையில்தான் கடிதம் எழுதினேனே தவிர வேறு எந்த விதியின் அடிப்படையிலும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) கோவையில் நடைபெற்ற ஜனதா மாநாட்டிற்கு லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச் சென்றது குறித்து.

திரு. ரெ. வீ. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக்கூட்டத்திற்கும் மாநாட்டுக்கும் லாரிகளில் பொதுமக்களை ஏற்றிச் செல்லக்கூடாது என்று பொது உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் அண்மையில் கோவையில் நடை பெற்ற ஜனதா மாநாட்டிற்கு ஏராளமான லாரிகளில் பொது மக்களை ஏற்றிக்கொண்டுப் போயிருக்கிறார்கள். அது சரிதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றியெல்லாம் மான்யக் கோரிக்கையின் மீது பேசிக்கொள்ளலாம். இப்போது இதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தயவு செய்து உட்காருங்கள்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) அரசிதழ் பதிவுபெறு அலுவலர் வேலைநிறுத்தம் வாபஸ் ஆன பிறகு அரசு அறிக்கை அளிப்பது குறித்து.

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். என்.ஜி.ஓ. வேலைநிறுத்தம் இன்று முதல் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இவர்களுடைய வேலை நிறுத்தம் பற்றி ஒரு ஸ்டேட்மென்ட்டை இங்கே கொடுத்திருக் கிறார்கள். இப்போது முடிவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதன் மீதும் ஒரு அறிக்கையை இந்தச் சபையில் கொடுத்தால் நன்றாக இருக்கும், அதைச் செய்யும்படி முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முதலமைச்சரின் விருப்பத்தைப் பொறுத்தது, நான் கட்டாயப்படுத்த முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. நாளையதினம் ஒரு அறிக்கை விடுவதாக இருக்கி றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தாங்கள் ரகுமான்கான் அவர்களுக்கு எந்த விதியின் அடிப்படையில கடிதம் எழுதினீர்கள் என்று கேட்டதற்கு அவர் எந்த அடிப்படையில் பேசினாரோ அந்த அடிப்படையில் தான் கடிதம் எழுதப்பட்டதாக தெரிவித் தீர்கள், ஒரு தவறு நடந்து விட்டது என்பதற்காக. ஒரு தவறுக்கு இன்னொரு தவறு பரிகாரம் ஆகுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி முடிவு செய்வதற்கு அவைத் தலைவருக்கு டிஸ்க்ரீஷனரி பவர் இருக்கிறது. அந்த முறையில் தான் கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

திரு. எம். சுப்பிரமணியம் : (சின்னசேலம்) : கள்ளக்குறிச் சியில் பெண்கள் உயர் நிலைப்பள்ளியில் நடைபெற்ற தேர்வில், சில தவறுகள் ஏற்பட்டிருப்பதாகவும், இதன் காரணமாக மாணவிகள் தேர்வு எழுதவில்லை என்றும் எனக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. இப்படி தேர்வைப் புறக்கணித்த மாணவிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

களுடைய ... றைய

...கவே, நீங்கள் எழு... மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் ... செய்து சரிவர ... பதில் சொல்லிவிட்டார்கள். கனம் உறுப் ... மானியக் ... கவனிக்கவில்லை என்றால் அதற்கு நான் ... ங்கள். ... என் குறையும் அல்ல. அடுத்தது

மொத்தமாக ... மாண்புமிகு இதற்கு

பினர் அவர்கள்

பொறுப்பு

கவன ஈர்...

(4) கவன ஈர்ப்பு

(அ) வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்திருப்பதன் விளைவாக, விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. ஆர். கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது மத்திய அரசால் தடை செய்யப்பட்டிருப்பதால் தமிழகத்தில் வெங்காயம் உற் பத்தி செய்யும் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, வெங்காய ஏற்றுமதிக் கொள்கையை மத்திய அரசு தீர்மானிக்கிறது. வெங்காய உற்பத்தியையும் விலை நிலவரங்களையும் பொறுத்து மாநில அரசுடன் கலந்துகொண்டு வெங்காய ஏற்றுமதியை அனுமதிப்பதையோ தடை செய் வதையோ மத்திய அரசு தீர்மானம் செய்து ஆணைகள் பிறப்பிக்கின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 2.47 லட்சம் டன் வெங்காயம் தமிழ்நாட்டு மக்களின் உபயோகத்திற்குத் தேவைப் படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் உற்பத்தியோ சுமார் 1.90 லட்சம் டன்கள்தான். மார்ச்சு மாதத்தில் ஒன்றும் செப்டம் பர், அக்டோபர் மாதங்களில் ஒன்றுமாக வருடத்தில் இரண்டு முறை வெங்காயம் அறுவடை செய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் முக்கியமாக மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் வெங்காயம் பயிரிடப்படுகிறது. மதுரையில் சுமார் ஒரு லட்சம் டன்னும் கோவையில் 40 ஆயிரம் டன்னும் திருச்சிராப்பள்ளியில் 22 ஆயிரம் டன்னும் திருநெல்வேலியில் 30 ஆயிரம் டன்னும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே வெங்காய பற்றாக்குறையை கர்நா டகம் மாநிலத்திலிருந்தும் ஆந்திரப்பிரதேசம் மாநிலத்திலிருந்தும் தேவையானபோது வணிகர்களால் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாட்டின் தேவை நிறைவு செய்யப்படுகிறது.

வெங்காயம் ஏற்றுமதியை 1977ம் ஆண்டு ஜூலை மாதம் 19ம் தேதி முதல் மத்திய அரசு தடை செய்தது. கர்நாடக மாநிலத்திலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் வெங்காய உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும், ஏற்றுமதித் தடை யை நீக்குமாறு மத்திய அரசினை கேட்டுக்கொண்டார்கள். மாநில அரசுகளைக் கலந்துகொண்டு இத்தடையைத் தொடர்ந்து நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்தது.

[திரு சி. பொன்னையன்] [1978 மார்ச் 15

தமிழ்நாட்டில் சாதாரண வெங்காயம் கிலோ 80 பைசா முதல் ரூ 1.20 வரை விற்கப்படும். 1976-ஆம் ஆண்டு சராசரி கிலோ 84 பைசா முதல் ரூ. 1·20 வரை விற்றது. புயல் மழை சேதத்தின் காரணமாக வெங்காய உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு 1977-ம் ஆண்டு விலை ஏறி கிலோ ரூ.3·00 வரை விற்றது. இப்பொழுது அறுவடைக்காலம் ஆரம்பமாகிவிட்ட காரணத்தினால் விலை குறைந்து கிலோ 80 பைசா முதல் 90 பைசா வரை விற்கப் படுகிறது. வெங்காயத்தின் விலை மிகவும் குறைந்து விவசாயிகளுக் குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் அதே சமயத்தில் பயன்படுத்து வோருக்கு நியாயமான விலையில் கிடைக்கும் வண்ணமும் நேப்பட் நிறுவனத்தை (Nafed–National Agricultural Co-operative Marketing Federation) தரத்தைப் பொறுத்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 45 முதல் 60 வரை வெங்காயத்தைப் பெரிய அளவில் கொள்முதல் செய்யுமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. அந்நிறுவன மும் பெரிய அளவில் வெங்காயக் கொள்முதல் செய்து கிளை நிறு வனங்கள் மூலமும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் மூலமும் விநி யோகம் செய்கிறது. தமிழ்நாட்டில் நேப்பட் (Nafed) நிறுவனத் தின் சென்னைக் கிளை தினசரி திண்டுக்கல்போன்ற உற்பத்தித் தளங்களிலிருந்து பெரிய அளவில் கொள்முதல் செய்கிறது. அந்நிறுவனம் செய்துள்ள கொள்முதலிலிருந்து விலைக்கு வாங்கி நுகர்வோருக்கு மலிவு விலையில் விநியோகம் செய்யுமாறு மாநில கூட்டுறவுத்துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைய நிலவரப்படி வெங்காய விலை 80 பைசா முதல் 90 பைசா வரை உள்ளது. அறுவடை சமயத்தில் உள்ள இந்த விலை நிலவரம் மிகவும் குறைவு என்று கூறமுடியாது. மேலும் நேப்பட் நிறுவனமும் வெங்காயம் கொள்முதல் செய்கிறது. ஆகவே உற்பத்தியாளர்களுக்கு விலைவாசியைப் பொறுத்த அளவில் பெரிய பாதிப்பு இருக்க முடியாது என்று கருத இடமுள்ளது. உரிய நேரத்தில் இத்தடையை மத்திய அரசு நீக்கும் என எதிர்பார்க்கலாம்.

திரு. ... ருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெங்காயத் திற்கு ... விலை இப்போது 80 காசிலிருந்து 90 காசு வரை இருக்கிறது ... அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், ... வட்டத்திலே வெங்காயம் 40 காசிலிருந்து 50 காசு ... து. ஏற்றுமதி செய்யவேண்டு ... மைச்சர் அ ... விரும்பவில்லை. இருந்தாலும், ... லட்சம் என்றும், அதே நேரத் ... றைய ... லட்சம் என்றும் குறிப்பிட் ... கவே, நீங்கள் எழு ... ந்த ஆண்டு ஒரு கிலோ 3 ரூபாய் ... வு செய்து சரிவர ... காசுக்கு விற்கப்படுகிறது. எனவே, 'சூனியக் ... இல்லாத ஒரு சூழ்நிலை இருக்க இதற்கு ... பேசுங்கள். ... நிர்ணயிப்பதற்கு இந்த அரசு தயாரா எ ... றேன்.

... ண்புமிகு ... ாக இதற்கு ... பொறுப்பு அவர்கள் ... கவன ஈர் ...

1978 மார்ச் 15]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய உற்பத்திப் பொருள்களுக்குச் சீரான விலை நிர்ணயிப்பது என்பது சிரமமான காரியம். சென்ற ஆண்டு 3 ரூபாய்க்கு விற்றதற்குக் காரணம், புயல் வெள்ளச் சேதம் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் நடைமுறைப்படுத்துவதிலே சிரமம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெங்காயம் பயிரிடுவதற்காகச் செலவழிக்கப்படும் தொகையை விட, அதை விற்கும்போது 6 மடங்கு குறைவாகத் தொகை கிடைக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளிலே பல ஆண்டுகளாக மழை இல்லாத காரணத்தால், வறண்டிருந்தது. போன ஆண்டு தொடர்ந்து மழை பெய்ததன் காரணமாக, வெங்காயம் பயிரிட்டால் நல்லது என்று, நல்ல விலை கிடைக்கும் என்று அதைப் பயிரிட்டார்கள். கடைசியில், உற்பத்திச் செலவைவிட குறைந்த விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது.

இப்படி அறுவடையாகின்ற இந்த நேரத்தில், அரசாங்கக் கடன், கூட்டுறவுக் கடன், விவசாயக் கடன் இதுபோன்ற கடன் களை வசூலிக்கின்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஒருபுறம் ஏற்று மதிக்குத் தடையிருப்பதால், விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது. இன்னொரு பக்கம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டினாலும் இன்றையதினம் விவசாயிகள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு 'சப்போர்ட்' விலை கிடைக் கின்ற வகையில், இந்த ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளுக்கு ஏற்படுத்த உடனடியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதோடு, மத்திய அரசு இப்போது ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது. அதை அவர்கள் நீக்குவார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் நீக்க மாட்டார் கள். நீக்கவேண்டுமென்று வற்புறுத்தி நாம் ஒரு தீர்மானம் போடலாம் அல்லது எது எதற்கோ தந்தி அடிப்பது போல் இதற்கும் ஒரு தந்தி அடித்து, உடனடியாக ஏற்றுமதிக்கான தடையை நீக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, வெங்காய ஏற்றுமதி மீது தடைவிதிப்பது பற்றி மத்திய அரசு, மாநில அரசைக் கலந்து கொண்டுதான் நிர்ணயிக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அதன் தேவை 2.4 இலட்சம் என்றிருக்கிறது. ஆனால், உற்பத்தி செய்வது 1,9 இலட்சம். எனவே, இதிலே பற்றாக்குறை நிலை இருப்பதினால், நம் மாநிலத்

திலே இதன் விலை உயர்ந்துவிடும் என்கின்ற நிலைமையில் இது செய்யப்பட்டிருக்கின்றது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கூ.ச. முருகேசன் : தலைவர் அவர்களே, இந்த வெங்காயம் என்ற சொல் தந்தை பெரியார் அவர்களால் சொல்லப்படும் வார்த்தை. ஆகவே, இந்த வெங்காய விலை வீழ்ச்சியில் விவசாயிகள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆகவே, இதை மத்திய அரசிடம் எடுத்துக்கூறி, இந்த வெங்காயத்தை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெங்காய விலை வீழ்ச்சிக்கு மத்திய அரசோ, மாநில அரசோ பொறுப்பல்ல. இது உற்பத்தியாகின்ற நேரத்திலே, மிகுதியாகக் கிடைப்பதால் தேக்கமேற்பட்டு, விலையிலே சரிவு ஏற்படுகிறது. உற்பத்தியில்லாத காலங்களில் படிப்படியாக இதன் விலை உயர்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. இரா. தாமரைக்கனி : ஸ்ரீவில்லிபுத்தூரில் சிறு விவசாயிகள் உற்பத்தி செய்த போது ஒரு மூட்டை வெங்காயம் 60 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரை கொடுத்து நடவு செய்தார்கள். ஆனால், இப்போது அவர்கள் உற்பத்தி செய்த வெங்காயம் மூட்டை 25 அல்லது 30 ரூபாய்க்கு மேல் போகவில்லை. ஒரு ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்ய 3,600 ரூபாய் வரை ஆகிறது. நன்றாக விளைந்தால் 100 மூட்டை விளைச்சல் வரும். தற்போது ஒரு மூட்டை 30 ரூபாய் விற்பதை வைத்துக் கணக்கிட்டால் 100 மூட்டை விளைந்திருந்தால் 3,000 ரூபாய் வரைதான் வரும். இப்படி இருந்தால் விவசாயி கூட்டுறவுக் கடனை, வங்கிக் கடனை, அரசாங்கக் கடனை எப்படிக் கட்ட முடியும்? ஏற்கெனவே பேசிய உறுப்பினர் சொன்னது போல் தந்தை பெரியார் அவர்கள் எதற்கெடுத்தாலும் வெங்காயம், வெங்காயம் என்று சொல்வார்கள். எங்களுடைய இயக்கத் தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் பெரியார் சொல்லுகின்ற அந்த வெங்காயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக்கூடிய முறையில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெங்காயத்தைப் பற்றி விளக்க வேண்டாம்; பிரச்சினையை விளக்குங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : நம்முடைய அரசு வெங்காயத்தைக் கொள்முதல் செய்வதோடு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சீசனல் பிராடக்ட் என்று கருதப்படுகிற வெங்காயத்தை அரசே கொள்முதல் செய்து விநியோகம் செய்வதில் சிரமம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : வெங்காயம் அழுகும் பொருள், பெரிஷபிள். அது காலம் பூராவும் கெட்டுவிடாமல் இருப்பதற்கான ஏற்பாடு செய்தால் அறுவடை காலத்தில் குறைகிற நிலையையும் மற்ற நேரங்களில் விலை ஏறுகிற நிலையையும் மாற்ற முடியும். அந்த அடிப்படையில் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தனிப்பட்ட வியாபாரிகள்தான் வெங்காயத்தைக் கொள்முதல் செய்கிறார்கள். " நே... பட் " என்ற நிறுவனம் அப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நுகர்வோர்க்கு அதிக விலை ஏற்பட்டுவிடக் கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் 120 ரூபாய் விற்கும் போது அந்த நுகர்வோர்க்கு என்ன விலைக்குக் கொடுத்தார்கள் ? இன்றைக்கு விவசாயிகளுக்கு சப்போர்ட் பிரைஸ் கூட இல்லாமல் இருக்கிறது ஆகவே, விவசாயிகளுக்கு அடக்க விலை, நுகர்வோருக்கு நியாயமான விலை கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே நேஷனல் அக்ரிகல்சுரல் கோவாப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் பெடரேஷன் உற்பத்தியாளருடைய இந்தக் குறைபாட்டைக்களையும் வண்ணம் குவின்டாலுக்கு 45 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரை கொடுத்து வெங்காயத்தை விலை கொடுத்து வாங்கி மலிவு விலையில் நுகர்வோர்க்கு விற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : வெங்காயம் உரிக்க உரிக்க ஒன்றும் இல்லாமல் போய்விடும். அந்த வெங்காயத்தின் மீது அரசு கருணை கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து என்னுடைய அறையில் வந்து கேளுங்கள், திரு. அரங்கநாதன் அவர்கள் பேசியது அத்தனையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்திரவிடுகிறேன்.

(5) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண்—15 காவல்துறை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,54,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, வலங்கைமான் தொகுதியிலுள்ள அம்மாப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த மிலட்டூரில் ஓ.பி. காவல் நிலையம் உள்ளதை விரிவுபடுத்தி காவல் நிலையமாக அமைத்து சப்-இன்ஸ்பெக்டர் நியமிப்பது பற்றி விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,54,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாத இறுதிக்குள் இத்தனை கேஸ்கள் போட வேண்டுமென்ற முறையை மாற்றுவது பற்றி விவாதிக்க—

" மானிய[illegible]கோரிக்கை எண். 15— காவல் துறை என்ற தலை[illegible]பின் [illegible] பெறுகின்ற ரூ. 33,54,42,000-இல் ரூ. 100 குறைக்க [illegible]

[illegible] ர்களும் பெரிய [illegible] த்தில் வைத்துக் [illegible]

என்ற வெட்டு[illegible] முன்மொழிகிறேன்.

---

* மாண்புமிகு [illegible]ரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க [illegible] பெற்றது. [illegible] பிரச்சினையை [illegible]

திரு. எம். அண்ணாமலை : மின்சார வாரியம், பாங்குகள், இரயில்வே, அரசு போக்குவரத்து போன்ற ஸ்தாபனங்களில் வைக்கப்படும் புகார் புத்தகம் போன்று காவல் துறைக்கும் புகார் புத்தகம் ரெவின்யூ அலுவலகத்தில் வைத்து ரெவின்யூ அதிகாரிகள் மூலம் கண்காணிப்பது குறித்து விவாதிக்க—

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 33,54,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru P. VIJAYARAGHAVAN : Sir, to discuss the need to take action against the Police Officers who have committed excesses during the emergency period, I move.

"That the allotment of Rs. 33,54,42,000 under Demand No.15 Police be reduced by Rs. 100.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டம், திருவாடானை, மானாமதுரை, தாலுக்காக்களில் முறையே ஆனந்தூர், தெ. புதுக்கோட்டையில் போலிஸ் அவுட் போஸ்ட் திறப்பது சம்பந்தமாக விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,54,42,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M.A. LATHEEF: Sir, to discuss about the need to give proper representation to the Muslims in the intelligence wing of the Police Department, I move—

"That the allotment of Rs. 33,54,42,000 under Demand No. 15 Police, be reduced by Rs. 100.

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'மானியக் கோரிக்கை எண். 16 — தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ். ரூ. 2,38,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.'

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, வட்டத் தலைநகர்தோறும் ஒரு தீயணைப்பு நிலையம் நிறுவ வேண்டிய தேவையை வலியுறுத்தி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,38,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. த. புஸ்பராஜு: தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவது குறித்து விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,38,10,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் தொகுதியில் குறிப்பாக புளியங்குடியில் தீயணைக்கும் பணி நிலையம் ஏற்படுத்தாமலிருப்பது பற்றி விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,38,10,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தீயணைப்பு வண்டிகளை அதிகப்படுத்துவது பற்றியும் கிராமப் பகுதிகளில் இந்தப் பணிகளைத் துரிதமாகச் செய்வதுபற்றியும் விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,38,10,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, முகவை மாவட்டம் இளையாங்குடியில் தீயணைப்பு நிலையம் ஒன்று திறப்பது சம்பந்தமாக விவாதிக்க—

'மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,38,10,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M.A. LATHEEF. Sir, to discuss about the need to expedite the construction of Fire Service Station at Vaniyambadi, I move—

"That the allotment of Rs. 2,38,10,000 under Demand No. 16 Fire Service be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மானியக் கோரிக்கைகள்– சம்பந்தமான குறிப்புகள்* ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் படித்ததாகக் கருதி குறிப்பேட்டில் அவைகளைப் பதிப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மானியக் கோரிக்கைகள் மீதும் வெட்டுத் தீர்மானங்களின் மேலும் மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களை இந்த அரசுக்கு நல்ல யோசனைகளாகவும், நல்ல பயன் உள்ளதாகவும் அமையக் கூடிய வகையில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்மிகு தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தின்மீது என்னுடைய கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்குக் காவல் துறையினரின் உண்மையான காவலனாக நின்று பல்வேறு நன்மைகள் அவர்களுக்குச் செய்யப்பட்டன என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அரசாங்க ஊழியர்கள் வேலைசெய்துகொண்டிருக்கும்போதே இறந்துவிட்டால் பாதுகாப்பாக அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதி வழங்குகிற திட்டம் எங்கள் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் தான் கொண்டுவந்தார்கள்.

பதவி உயர்வு என்று வருகிறபோது போலீஸ் துறையில் அது ஒரு முயல்கொம்பாகத்தான் இருந்தது என்பதை அந்தத் துறையைப்பற்றி அறிந்தவர்கள் தெளிவாக அறிந்திருப்பார்கள். கழக ஆட்சியின் போது போலீஸார் போலீசாராக இருக்கின்ற நிலைமை ஏற்பட்டது. [பேரவைத்துணைத் தலைவர் தலைமை]

---

*655-677 ம் பக்கத்தில் இணைப்புகள் I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 15

கிரேடு 1 போலீஸ்காரர்கள் என்ற புதிய பதவி கொண்டு வந்தவர் கலைஞர் அவர்கள் தான். அதைப் போலவே டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் என்ற பதவியையும் ஏற்படுத்தி னார்கள், பல்வேறு டி.எஸ்.பி. போஸ்ட்கள் உருவாக்கப்பட்டன. அது போன்று போலீஸார்களுக்கு பல்வேறு நன்மைகள் செய் யப்பட்டன.

அதுமட்டுமல்லாமல் இரண்டாம் நிலை போலீஸார், அதாவது சாதாரண கான்ஸ்டேபிளாக இருக்கின்றவர்களுடைய அடிப் படைச் சம்பளம் 1970 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை 70 ரூபாய் முதல் 95 ரூபாய் வரை தான் இருந்தது. 1970 ஆம் ஆண்டிற் குப் பிறகு அது 150 ரூபாயிலிருந்து 225 வரையில் உயர்த்தப் பட்டது.

போலீஸ் கமிஷன் அமைத்து அது தெரிவித்த 134 பரிந்துரை களில் 40-க்கும் மேற்பட்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டவர் எங்கள் கழகத் தலைவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்.

450 காவல் நிலையங்களில் மோட்டார் சைக்கிள்கள் கொடுக் கப்பட்டன.

700 காவல் நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டன.

போலீஸ் துறையினருக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கள் கழகத் தலைவரின் ஆட் சிக் காலத்திலேதான் பல்வேறு நன்மைகள் அவர்களுக்குச் செய் யப்பட்டிருக்கின்றன.

கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கலைஞர் அவர்கள் இவைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அப்போது நம்முடைய முதலமைச்சர் சொன்னார்கள். 'நான் ஒன்றைச் சொல்வேன். சம்பளத்தை எப்படி உயர்த்தியிருக்கிறோம். மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு எப்படி உதவினோம், சைக்கிள் வாங்குவதற்கு எவ்வளவு செய்தோம் என்பதை இங்கே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆட்சி அதைப் போன்ற பல திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறது. அதுமட்டுமின்றி ஏறத்தாழ பதினாயிரம் புதிய போலீஸ்காரர்களாக இளைஞர் களைத் திரட்ட நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்'. என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்கள்.

1978 மார்ச் 15] [திரு. ஏ. ரகுமான்கான்]

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது நாங்கள் காவல் துறையினருக்கு என்ன என்ன செய்தோம் என்று சொன் னார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறு தியை நிறைவேற்றியிருக்கிறார்களா? 10 ஆயிரம் போலீஸ் காரர்கள் புதிய நியமனம் பெற்றிருக்கிறார்களா?

[முற்பகல் 10-30]

ஆனால், இந்த மானிய அறிக்கையைப் படித்துப் பார்க் கின்றபோது—நான் வருத்தத்தோடு சொல்கிறேன் — சினி மாப்பாட்டு புத்தகம் போல இருக்கிறதே தவிர இதுபோன்ற புரட்சிகரமான திட்டங்கள், புதிய விளக்கங்கள் இருக்கின் றனவா என்று கேட்டால் இல்லை.

அதே நேரத்தில் இன்னொரு வாக்குறுதியையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகளை அழைத்துப் பேசும் பொழுது ஒரு செய்தியைச் சொன்னார்கள். மன்னிக்க வேண்டும்.

''எங்கு பார்த்தாலும் அமரர் அண்ணாவின் படத்தை எடுத்து விடுங்கள் என்றும், பெரியார் படத்தை எடுத்துவிடுங்கள் என்றெல்லாம் சொல்லப்பபட்டது என்றும் ஆங்காங்கு நீக்கப் பட்டது என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வந் ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் ஒன்று நான் சொல்கிறேன். அவைகள் எல்லாம் மீண்டும் எங்கு வைக்க வேண்டுமோ அங்கு அங்கு வைப்பதற்கு இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும், அது எந்த அலுவலகமாக இருந்தாலும் சரி என்று சொல்லும் போது, சில காவல்துறை யினர் இருக்கின்ற இடங்களில் இப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். அவர்களுக்கு இந்த அவையில் நான் சொல்லிக்கொர்ள்ள விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் என் னுடைய இந்தப் பேச்சை பத்திரிகை மூலம் படித்தாலும் சரி, கேள்விப்பட்டாலும் சரி, அதற்குப்பிறகு சரியாக நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.'' என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார்கள்.

ஆனால் குறிப்பாக என்னுடைய தொகுதியில் எடுத்துக்கொண் டாலும், என்னுடைய தொகுதியை வைத்தே நான் பேசுகி கிறேன். அங்கே அவருடைய வாக்குறுதி நிறைவேற்றப்பட்டிருக் கிறதா, பெரியாருடைய படம் இருக்கிறதா, அண்ணா அவர் களுடைய படம் இருக்கிறதா, தமிழ் நாட்டில் பல்வேறு இடங் களில் இருக்கிறதா என்றால் இல்லை. அவசரக் காலத்தில் எந்த அண்ணாவின் படம் அகற்றப் பெற்றதோ, எந்த தந்தை

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 15

பெரியாரின் படம் அகற்றப் பெற்றதோ அப்படியே அவைகள் அகற்றப் பெற்ற நிலையில்தான் இருக்கின்றன என்பதை முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப் போல, காவல் துறையைப் பொறுத்தவரையில் காவல் துறையினரின் திறமையைக் கணக்கிடும் அளவிற்கு நாம் எப்படி கணக்கிட வேண்டுமென்று பார்க்கின்றபொழுது Cost per Policeman should be reasonable—காவல் துறையினருக்குச் செலவிடப்படும் பணம் ரீசனபிலாக, சரியாக இருக்க வேண்டும்.

அதுபோல workload per policeman should be adequate. அவர்கள் செய்யும் பணி போதுமான அளவாக இருக்க வேண்டும்.

அதுபோல, prevention and detection of crimes should be good—குற்றங்களைத் தடுக்கும் முறைகளும், குற்றங்களைக் கண்டுபிடிக்கும் முறைகளும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்று போலீஸ் காவல் துறை அவர்களுடைய திறமையை எப்படிக் கணக்கிடுவது என்பதற்கான விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது அந்தப் பின்னணியில்தான் அவர்களுடைய திறமையைக் கணக்கிட வேண்டும். இன்றைக்குக் காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய பளு அதிகமாக இருக்கிறது. ஓர்க் லோட் அதிகமாக இருப்பதால் எண்ணிக்கைகளை அதிகமாகக் கூட்ட வேண்டும்.

அது போல கழக ஆட்சிக் காலத்தில் பல்வேறு நவீன வசதிகள் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றன. காவல் நிலையங்களுக்கு ரேடியோ, டெலிபோன், கம்ப்யூட்டர், வாகன வசதி, புதிய குடியிருப்புகள் ஆகிய இவைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் செய்கின்ற விதத்தில் இந்த அரசு ஏதாவது திட்டங்களை அறிவித்திருக்கிறதா என்றால் எந்தவிதமான திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல், 'நேஷனல் போலீஸ் கமிஷன்' என்று 1902 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 76 ஆண்டுகளுக்குப் பிறகு 1978 ஆம் ஆண்டில் தான் ஜனதா அரசு இப்பொழுது 'நேஷனல் போலீஸ் கமிஷன்' என்ற ஒன்றை அமைத்திருக்கிறது. அதற்கு இந்த அரசு ஏதாவது பரிந்துரை செய்திருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

சப்-இன்ஸ்பெக்டராக இருப்பவரை டி. எஸ். பி. யாக ஆக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இப்பொழுது ஐ. பி. எஸ். விருந்து அதிகமான அதிகாரிகள் நியமிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. டி. எஸ். பி.க்களாக டிபார்ட்மெண்டில் இருப்பவர்கள் அதிகமா ஆக்கப்பட வேண்டும்.

1978 மார்ச் 15] [திரு. ஏ. ரகுமான்கான்]

கர்நாடகத்திலும், கேரளாவிலும் ஹோம் டிபார்ட்மெண்டில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக கேரளாவில் ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்டுக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே இங்கே ஹோம் டிபார்ட்மெண்டிற்கு காவல் துறையைச் சேர்ந்தவர்களை அடிஷனல் செக்ரட்டரியாக நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முதல்வரவர்கள் மிகத் தெளிவாகப் பலமுறைச் சொல்லியிருக்கிறார்கள். காவல் துறையில் ஆளுங்கட்சியினருடைய அதிகாரத் தலையீடு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். நிச்சயமாக முதலமைச்சரவர்கள் அதற்குப் பதில் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். 'மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்' என்ற சினிமாப் படத்தில் நடித்த ஒரு நடிகை விபச்சார வழக்கு சம்பந்தமாக 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் தேதி கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே விசாரிக்கப்பட்டார். இதற்கிடையில் என்ன மாயமோ தெரியவில்லை, அவர் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். அவர் வீட்டிற்கு அனுப்பப்பட்ட பிறகு காவல் துறையைச் சேர்ந்த ஐந்து பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எஸ். ஐ. உள்பட. ஆனால் கிரிமினல் புரொசீஜர் கோட் மிகத் தெளிவாகச் சொல்கிறது, செக்ஷன் 160, எந்தப் பெண்ணையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வரக்கூடாது.

முதல்வரவர்கள் கூட பலமுறைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு பெண்ணைக் காவல் நிலையத்திற்கு அழைக்காமல், அவருடைய வீட்டிலேயே விசாரித்து அவர்கள் குற்றம் செய்திருக்கிறார்களா இல்லையா என்பதையெல்லாம் அங்கேயே இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டுமென்று கூட அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்தக் காவல் துறையைச் சேர்ந்த இந்த 5 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படிப் பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு அந்தப் பெண் ஏதாவது புகார் மனு கொடுத்தார்களா, புகார் மனு ஏதாவது இருக்கிறதா, என்ன பின்னணியில் அந்தப் பெண் விடுதலை செய்யப்பட்டார். இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, இன்னொரு பிரச்னையையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். புரசைவாக்கத்தில் ஒரு ஓட்டல் இருக்கிறது. பெயர் 'சில்வர் ஸ்டார் ஓட்டல்'. அந்த ஓட்டலில் 9-ந் தேதி இரண்டு பெண்கள், நடிகைகள் விபச்சார வழக்கிலே ஈடுபட்டார்கள் என்று சொல்லி கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு, 14-வது மெட்ரோபாலிட்டன் மாஜிஸ்டிரேட் முன்னால் நிறுத்தப்பட்டார்கள். குற்றச்சாட்டு,

விபச்சார வழக்கு என்பது. அதிலே ஆளுங் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது எனக்குத் தகவல். அந்தத் தகவல் எந்த அளவு உண்மை என்பதை முதல்வர் அவர்கள்தான் விளக்க வேண்டும். இரண்டு பெண்களும் ரிமாண்டிலே இருந்தார்கள். யாருடைய தலையீட்டின் பேரிலே, அவர்கள் விடுதலை பண்ணப்பட்டார்கள் ? யார், யாரை, 'ரெய்ட்' பண்ணும்போது அரஸ்ட் செய்தார்கள் என்பது எல்லாம் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்தால்தான் ஆளுங் கட்சித் தலையீடு எந்த அளவு இல்லை என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

அரசினுடைய கவனத்திற்கு இன்னொன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். சாராயம் ஒழிக்கப்பட வேண்டும், மதுவிலக்கு அமுல் படுத்தப்பட வேண்டுமென்று கூறுகிறோம். ஒரத்தநாடு திட்டம் என்று இருக்கிறது. அங்கு மக்களே சாராயம் குடிப்பவர்களைப் பிடித்துக் கொடுக்கிறார்கள் என்று இப்படியெல்லாம் நிலைமை இருக்கிறது. ஆனால், சென்னை நகரில் சாராயம் வீதிகளில் தண்ணீராக ஓடுகிறது. எந்த மாவீரன் இதற்குக் காரணமாக இருக்கிறார்? இது முதல்வருக்குத் தெரியாதது அல்ல, காவல் துறைக்குத் தெரியாதது அல்ல. மது கூடாது என்று முதல்வரே விரும்புகிறார், காவல் துறையைச் சேர்ந்தவர்களும் விரும்புகிறார்கள். மக்கள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், இது என்ன வேதனையாக இருக்கிறது என்று வருத்தப்படுகிறார்கள். சாராயம் நதி போல் ஓடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிற மாவீரன் யார் என்பதை நம்முடைய முதலமைச்சரவர்கள் தெரியப்படுத்த வேண்டும்.

அதே போல், நம்முடைய முதலமைச்சரவர்கள் கவனத்திற்கு இன்னொன்றையும் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள், மதுவிலக்கை அமுல்படுத்துவதாகச் சொல்கிறீர்கள். ஆனால், குடித்துவிட்டு வன்முறை செய்தால்தான் அவர்களைக் கைது செய்ய வேண்டும், மற்றவர்களைக் கைது செய்யக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கிறது, என்று. உடனே, முதல்வர் அம்மாதிரி உத்தரவில்லையென்று சொன்னார். உடனே, கலைஞர் அவர்கள் உத்தரவைக் காட்டினார். உடனே முதல்வர் அவர்கள் இது அதிகாரிகள் செய்த தவறு, என்று சொன்னார். உடனே, கலைஞர் அவர்கள் இல்லை, இல்லை, இது ஹோம் டிபார்ட்மென்ட் போட்ட உத்தரவு, உங்களுக்குத் தெரியாமல் வந்திருக்க முடியாது என்று சொன்னார். பிறகு, நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழ் தெரியாத அதிகாரிகள் இந்தத் தவறைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னார் ; நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். எந்த அதிகாரி அந்தத் தவறைச் செய்திருக்கிறார் ? யார் அவர் ? அவர் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் ?

இந்தச் சபைக்கு அதைத் தெரிவித்திருக்கிறாரா, இல்லை ; வெளியே அறிவித்திருக்கிறாரா ? இவற்றை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மது பர்மிட்டை யாருக்கும் தராத சூழ்நிலையை இந்த அரசு பார்த்துக்கொள்ளும் என்று சொன்னார். அரசாங்க அதிகாரிகளிடம் கூட சில பேரிடத்திலே மது பர்மிட் இருக்கிறது. ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், இப்பொழுதும் சொல்லுகிறேன். நாங்கள் மது பர்மிட்டை சரண்டர் செய்ய முடியாது என்று சில அதிகாரிகள் கூட எழுதிக் கொடுத்திருப்பதாக எனக்குத் தகவல். மதுவை ஒழிக்க இருக்கிற ஒரு சர்க்கார் இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சேலம் சண்முகா நகரில், சாராயம், கடைத் தெருக்களில் தண்ணீரைப் போல் ஓடிக் கொண்டிருக்கிறது, அதுவும் அங்கே * * * எம். ஜி. ராகவன் என்று பெயர், அவர் காவல் துறையில் இன்ஸ்பெக்டராக இருக்கிறார்—அவரைச் சொல்கிறேன். * * * எம். ஜி. ராகவன் என்ற இன்ஸ்பெக்டரைச் சொல்கிறேன். சேலம் நகரில் அவருடைய ஆதரவோடு இன்றைக்கு இது நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அங்கே சாராயம் காய்ச்சுவது * * * என்று முதலில் சொன்னீர்கள்.

<u>திரு. ஏ. ரகுமான்கான் :</u> அவர், காவல் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> * * * என்று சொன்னது வேண்டாம். எம். ஜி. ராகவன் என்று சொன்னது இருக்கட்டும், * * * என்று சொன்னதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

[முற்பகல் 10–40]

<u>திரு. எஸ். ஜே. இராமசாமி :</u> துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைக் கேட்கிறேன். மது பெர்மிட்டைப் பற்றி சொல்லும்போது அவருடைய கட்சியினுடைய கொள்கை என்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க 10–40-ல் சில பகுதிகள் நீக்கப்பெற்றன.

திரு. ஏ. ரகுமான்கான் : தவறாக எண்ணிவிடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் நான் சொன்னேன். * * * என்பது காவல் துறையைச் சேர்ந்த எம். ஜி. ராகவன் அவர்களைக் குறிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக எங்கள் கட்சி உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பேசும்போது இப்படிப்பட்ட அசம்பாவிதமான வார்த்தைகள், தேவையற்ற வார்த்தைகள் இல்லாமலேயே நம்முடைய கட்சியின் கொள்கைகளை, கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்பும், வசதியும் நாம் பெற்றிருக்கிறோம். அந்த வகையிலே இப்படிப்பட்ட பெயர்களை எடுத்துச் சொல்லுவது போன்றவைகளை தவிர்த்துப் பேசலாம் என்பதை தங்கள் மூலமாக எங்கள் கட்சி உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து அவர் சொன்னதையும் எடுத்துவிடும்படி உத்தரவிடுகிறேன். எம். ஜி ராகவன் என்று சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். * * என்று சொன்னதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : அடுத்து இன்றைக்கு இருக்கக்கூடிய காவல் துறை ஆளுங்கட்சியினுடைய ஒரு கருவியாக இருக்கிறது என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பார்க்கமுடிகிறது.

சட்டமன்ற உறுப்பினர் இளம்பரிதி அவர்கள் மைலாப்பூர் காவல் நிலையத்திலே கேவலமாகப் பேசப்பட்டார். அது குறித்து கவனத்திற்குக் கொண்டு வந்தும் கூட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எல்மந்தா எம். எல். சி. யும் தாக்கப்பட்டிருக்கிறார். அது குறித்தும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. காஞ்சிபுரத்தில், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருவேங்கடம் மிருகத்தனமாக காவல் துறையினரால் தாக்கப்பட்டார். அதுகுறித்து எந்தவிதமான விளக்கமும், இல்லை, விவரமும் இல்லை. இதற்குப் பதில் கூறும்படி உங்கள் மூலமாக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என். ஜி. ஓ.க்கள் போராடினார்கள். அந்தப் பிரச்னையில் நுழைய நான் விரும்பவில்லை. போராடுவது சட்ட விரோதம் அல்ல. ஆனால், ஜெனரல் ஆஸ்பத்திரியின் முன்னால் சில சம்பவங்கள் நடந்தன. 9590 என்ற எண்ணுள்ள அம்பாசிடர் காரில் சோடா பாட்டில்களோடு, சைக்கிள் செயின் முதலிய

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வற்றால் என். ஜி. ஓ.க்கள் தாக்கப்பட்டார்கள். பெண்களையும் கடுமையாகத் தாக்கினார்கள். அவர்களைக் காவல் நிலையத்திலே பிடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காரிலிருந்து என்னென்ன கைப்பற்றினார்கள், அவர்களை எப்படி விடுதலை செய்தார்கள், என்ன வழக்குகள் பதிவு செய்திருக்கிறார்கள்? இது குறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதே போல மின்சார வாரிய ஊழியர்கள் போராட்டம் நடத்தியபோது கூட, நம்முடைய முதல்வர் அவர்கள் அடிக்கடி சொல்வார்களே பொதுமக்கள் என்று, அந்தப் பொதுமக்கள் எண்ணூர், பேசின் பிரிட்ஜ் போன்ற இடங்களில் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்வதற்காக சொல்கிறேன்.

ஆளுங்கட்சி, ஜனநாயக சக்திகளின் நியாயமான கோரிக்கைகளைக் கூட இன்றைக்குக் காவல் துறை பயன்படுத்திக்கொண்டு, சட்ட விரோதமாக, ஜனநாயக விரோதமாக இன்றைக்குத் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் முதலிய காரியங்கள் எல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இன்னொன்றையும் உங்கள் மூலமாக சபையினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெங்கடாத்திரி கமிஷன் நம்முடைய அமைச்சர் சௌந்தரபாண்டியன் அவர்களைக் காப்பாற்றுவதற்காக கலைக்கப்பட்டது என்று வெளியே பேசுகிறார்கள்.

அதே நேரத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த அக்னிராஜ் அவர்களுடைய வீட்டில் சோதனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதிகாரிகள் சொல்கிறார்கள் எந்தப் பொருள்களும் அகப்படவில்லை. ஒரு குற்றம் சுமத்தப்படுகிறவர் பாதுகாக்கப்படுகிறார், சட்டத்தின் மூலமாக. அதே நேரத்தில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த அக்னிராஜ் அவர்கள் வீடு பரிசோதனை செய்யப்படுகிறது என்று சொன்னால், இதிலே அரசியல் நோக்கம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, லாக்கப்பில், நெல்லிக்குப்பத்தில் இராமலிங்கம் என்ற தோழர் இறந்து போனார். இது குறித்து சாதிக் அவர்கள் கேட்டார்கள். நீதி விசாரணை போடப்பட்டது.

சின்னமனூரில் ஒச்சாத் தேவர் லாக்கப்பில் இறந்து போனார். அது என்ன அடிப்படையிலே நிகழ்ந்தது? அதற்கு ஏதாவது நீதி விசாரணை உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, திருவெற்றியூர் லாக்கப்பில் மணி என்பவர் இறந்து போனுர். அதற்கு நீதி விசாரணை அறிவித்திருக்கிறதா? போலீஸ் லாக்கப்பில் இறந்தவர்கள் எப்படிப்பட்ட இறந்தார்கள் என்று ஒரு அறிக்கையை முதல் அமைச்சர் அவர்கள் சொன்ஞர்களே தவிர ராமலிங்கம் எப்படி இறந்தாரென்பது குறித்து நீதி விசாரணை நடத்தப்பட்டதா? அப்படி விசாரணை நடத்தப்பட வேண்டும். அப்படி இறந்ததற்குக் காரணமாக காவல் துறையினர் இருந்தால் 302 வது செக்ஷன் படி அவர்கள் மீது கொலை வழக்குப் போடப் பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்ல, தாய்மார்களைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் மிகவும் அக்கறை கொண்டு இருக்கிருர்கள். மெத்த மகிழ்ச்சி. ஆனல், இன்றைய முதலமைச்சர் ஆட்சியில்தான் பல தாய்மார்கள் பல்வேறு இடங்களில் கற்பழிக்கப்படுகிற சம்பவங் கள் நடந்து இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனதா கட்சித் தோழர்கள் காரைக்குடியில் நடைபெற்ற கற்பழிப்புச் சம்பவத்தைப் பற்றி சட்டமன்றத்தில் விவாதத்திற் குக் கொண்டு வந்தார்கள். பாலம்மா கற்பழிக்கப்பட்டு இருக்கி ருள். மும்தாஜ் கற்பழிக்கப்பட்டு இருக்கிருள், ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு இருக்கிருள். இவைகளுக்கு எதிராக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு இருக்கின்றன. நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

இன்ஞென்றையும் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக் கிறேன். ஒரு அரசாங்கம் பைலில் அமைச்சர் ஸ்டே கொடுத் தார். அந்த ஸ்டே மறுக்கப்பட்டது என்று இடையிலே யாரோ ஒருவர் புகுந்து எழுதி விட்டார் என்று சொல்லி அதைச் செய்தவர் குற்றவாளி என்று சொல்லி அவரைக் கண்டுபிடித்து, அவர் மீது வழக்குப் போட்டு இருக்கிருர்கள். அதைப் பற்றி நான் பேசக் கூடாது. '' அது சப்ஜூடிஸ் என்பது எனக்குத் தெரியும். நான் அந்த வழக்குக்குள் போகாமல் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். அது எப்படி நடந்தது ? வெளியே பேசிக் கொள்கிருர்கள், அதில் அமைச்சர் ஸ்டே கொடுத்தார்கள்.........''

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சைக் கவனித்து, சட்டத்திற்கு உட் பட்டு அவர் வெளியே அந்த எண்ணங்களை கொண்டுவராமல் இருக்கவேண்டும். ஆகவே, தாங்கள் சிந்தித்து இதற்கு முடிவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நம்முடைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய தலைஞர் மீது புகார் கொடுக்கிறபோது '' சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது '' என்று கொடுத்து இருக்கிருர்கள். அதே பாணியில் நானும் வெளியே இதைச் சொல்கிருர்கள் என்று கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவரவர்களே, சொல்லப்படுகிறது, நம்பப்படுகிறது, தெரிகிறது, பேசிக் கொள்கிருர்கள் என்பது எல்லாம் பத்திரிகைக்காரர்கள் அவ்வப்போது தங்கள் சாமர்த்தியத்தால் தப்பித்துக் கொள்ளப் பயன்படுத்தும் வார்த்தைகள். நாங்கள் கொடுத்த புகாரில் பிரைமா பேசி கேஸ் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிக் கொடுத்தோம். அதிலே எந்தெந்த வழக்குகளில் உண்மை இருக் கின்றன, எதை எப்படி எடுக்கலாம் என்று அரசு கருதியதோ அந்த வகையில் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிருர்கள். அவர்களுக்கு எதிலே நம்பிக்கை இல்லையோ அதை விட்டு விட்டு இருக்கிருர்கள் என்பதை மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக் குச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: புகாரில் அப்படிச் சொல்லியிருக்கிருர்கள் என்பதற்காகச் சட்டமன்றத்தில் பேசும் போது அப்படி நீங்கள் சொல்வது சரியல்ல. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து அப்படிப் பேசாதீர்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இந்த நேரத்தில் நான் இன்ஞென்றையும் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு எதிராக வழக் குப் போடப்பட்டு இருக்கிறது. இன்று பார்த்தால் ஏழை எளிய மாணவர்கள் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதிலே வழக்கு, எதிர் வழக்கு என்று அவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு பொய் வழக்கு போடப்படுகிறது. வகுப்புகளில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிருர்கள். அவர்களைக் கோர்ட்டிலே சந்திக்கிறேன் என்று கல்வி அமைச்சர் சொன்ஞர்கள்.

அது மட்டுமல்ல. எம். சி. இராஜா ஆஸ்டல் மாணவர்கள் தாக்கப்பட்டு இருக்கிருர்கள். அவர்களுக்கு எதிரான வழக்கு இருக்கிறது. இந்த அரசுக்கு மாணவர்கள் மீது அக்கறை இருக்கு மானல், அவைகளைத் திரும்பப் பெறவேண்டும்.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். அவர் களுக்கு எதிராக வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. இந்த அரசு மாணவர்கள் மீது அக்கறை கொண்டு இருக்கிற அரசாக இருந் தால் அவைகளைத் திரும்பப் பெறவேண்டும்.

இந்த அரசு மாணவர்கள் மீது அக்கறை உள்ள அரசாக இருந்
தால், என். ஜீ. ஓ-க்கள் மீது அக்கறை உள்ள அரசாக இருந்
ஆசிரியப் பெருமக்கள் மீது அக்கறையுள்ள அரசாக இருந்தால்,
அவர்களுக்கு எதிராக சட்ட விரோதமாக, ஜனநாயக விரோத
மாகப் போடப்பட்டு இருக்கிற வழக்குகளைத் திரும்பப்
பெற்றுக் கொள்ளவேண்டும். காரணம், கோர்ட்டில் வாதாடுவது
வெற்றி பெறுவது என்பது முடியாது. அந்த வகையில் போலீஸ்
துறை பயன்படுத்தப்பெற்று இருக்கிறது என்பதைச் சொல்லி
குறிப்பாக கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இந்த மானி
யத்தில் புரட்சித் திட்டங்கள் அறிவிக்கிறேன் என்று முதலமைச்சர்
அவர்கள் வெளியிலே சொன்னாலும், உள்ளே சொன்னாலும்,
அந்தத் திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. மாறாக பல்வேறு
பிரச்னைகள் சொல்லப்படாமல் இருக்கின்றன என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலை
வரவர்களே, குறுக்கிடுவதற்கு நானே வருந்துகிறேன். புரட்சித்
திட்டம், புரட்சித் திட்டம் என்று நான் பேசியதாகக் கூறுகின்
றார்கள். அது அவரவர்களுடைய நோக்கத்திற்கு, நிலைமைக்கு—
எது புரட்சி, எது புதுமை, எது பழமை என்பது அவரவர்களு
டைய நம்பிக்கையைப் பொறுத்தது. நீங்கள் நம்பவில்லை என்றால்
அது உங்களுடைய உரிமை என்பதைத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : * * * மாண்புமிகு
முதலமைச்சரவர்களால் கொண்டுவரப்படும் என்று பண்ணை
சேதுராம் அவர்கள் சொன்னார்களே, அதுவும் புரட்சிகரமானது
தானா என்று கேட்க விரும்புகிறேன்.

(திரு. கே. பண்ணை சேதுராம் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்
காருங்கள். நான் அதற்கு விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: அவர் என்னைப் பற்றிக் குறிப்
பிட்டதால் அதற்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்ல விரும்பு
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து
நீங்கள் உட்காருங்கள். * * * என்று அவர்கள் சொன்னதை
ஏற்கெனவே குறிப்பிலிருந்து நீக்கிவிடச் சொல்லியிருக்கிறேன்.

* * * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

அதோடு சிறிய நீர்த்தேக்கம் என்று மாற்றிக் கொள்ளவும் அப்
போதே சொல்லியிருக்கிறேன். ஆகவே, மீண்டும் அதைப்பற்றிக்
குறிப்பிட வேண்டாம். இப்போது அவர்கள் சொன்னதிலும்
நான் சொன்னதிலும் உள்ள * * என்பதை நீக்கிவிட உத்தர
விடுகிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள்.
பேசுகின்ற உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது,
குறிப்பாக அரசாங்க பதவிகளில் இருப்பவர்களைப் பற்றிச் சொல்
லும்போது, அவர்கள் வகிக்கின்ற பதவி, இருக்கிற இடம்
பற்றித்தான் இங்கே பேசுவது மரபாக இருந்து வந்திருக்கிறது ;
அந்த அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிடுவது மரபல்ல.
ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் அந்த மரபைக் காப்பாற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத்
தலைவரவர்களே, என்னுடைய வேண்டுகோள் ஒன்று உண்டு.
மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைப் பொறுத்த
வரையில் அவர்கள் ஆதாரம் இல்லாமல் பேசுவதில்லை. ஆதாரத்
தோடு பேசுவதால் அவர்களுக்கு அந்த அனுமதியை விதிவிலக்
காகக் கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் : பேரவைத் துணைத்
தலைவரவர்களே, என்னுடைய பேச்சின் தொடக்கத்தில் கடந்த
ஆண்டு தமிழ்நாட்டிலே வீசிய புயல்—வெள்ளச் சேதத்தின்போது
மிகச் சிறந்த முறையிலே பணியாற்றிய காவல் துறையினருக்கும்
தீ அணைப்புப் படையினருக்கும் முதலிலே எனது நெஞ்சார்ந்த
நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையத்தினம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர்
அவர்களுடைய தலைமையின் கீழ் இயங்குகின்ற காவல் துறை
எவ்வளவு சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகிறது என்பதற்கு
இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் எல்லாம் சொல்லுகின்ற கருத்
துக்களுக்கு ஒப்பாக தமிழகத்தினுடைய காவல் துறை தலைமைப்
பொறுப்பை ஏற்றிருக்கிற ஐ. ஜி. ஸ்டேரேசி அவர்கள் கடந்த
சில மாதங்களுக்கு முன்னால் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சுதந்
திரம் கிடைத்ததற்குப்பின்னாலே காவல்துறை நிர்வாகத்திலே தலை
யிடாத ஒரு அரசு உண்டு என்றால் அது புரட்சித்தலைவர் தலைமையில்
இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்
பதை நாகர்கோவிலில் ஒரு பேச்சின்போது குறிப்பிட்டார்கள்.
அவர்கள் சொல்லிய கருத்தைப் பெருமையோடு ஏற்றுக்கொள்ளு
கின்றவர்கள் இந்த நாட்டிலே ஏராளம் உண்டு. அந்த அளவிற்கு
இன்றையதினம் சிறப்பான ஆட்சியை அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகம் நடத்திக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது,

பாக காவல் துறை எவ்வளவு சுய சார்போடு செயல்பட்டு கொண்டிருக்கிறது என்பதை நல்ல உள்ளம் படைத்த அத்தனை பேர்களும் போற்றி புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் காவல்துறையில் ஆளும் கட்சியின் தலையீடு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எங்களுக்குள்ள நிலைமை எல்லாம் இன்றைக்கு புரட்சித் தலைவரவர் கள் கடைப்பிடிக்கின்ற கண்டிப்பின் காரணமாக 1972—லே இருந்து 1977 வரை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதனுடைய இலட்சோப இலட்சம் தொண்டர்களும் எப்படி பொய்யான வழக்குகளிலே எதிர்க்கட்சியாக இருககும்போது சிக்கித் தவித்தோமோ, எப்படி அடக்கு முறைகளினால் அலங் கோலப்படுத்தப் பட்டோமோ அதே நிலையில்தான் இன்றைக்கும் ஆளும் கட்சியான பின்னாலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் தொண்டர்களும் பாதிக்கப்படுகிறோம் என்ற நிலைமையைத்தான் நாட்டிலே கண்டுகொண்டிருக்கிறோம்.

அதற்கு இன்றைக்கு பல்வேறு உதாரணங்களை என்னாலே கோடிட்டுக் காட்ட முடியும்.

என்னுடைய நெல்லை மாவட்டத்திலே நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்களை உறுப்பினராகக் கொண்டிருக்கக்கூடிய பாளையம்கோட்டையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளர் ஒருவர் 9 ஆண்டு காலமாக நடத்தி வந்தது போல இந்த ஆட்சியிலேயும் சூதாட்ட விடுதி ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறார். அப்படி நடத்துவதை விட மிகக் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருக்கின்ற பொதுக்கூட்டத்திலே அந்தப் பொதுக்கூட்ட மேடை யிலே வைத்து காவல் துறையினருக்கு அவர் சவால் விடுகிறார். 'நான் சூதாட்ட விடுதி நடத்துகிறேன், இதை ஒடுக்குவதற்கு காவல் துறைக்கு தைரியம் உண்டா' என்று அவர் சவால் விடுகிறார்.

பொதுக்கூட்ட மேடையிலே பேசப்பட்டது காவல் துறை யினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. திரு நெல்வலியிலே மாவட்ட போலீஸ் சூப்பிரண்டையும், சப் இன்ஸ் பெக்டரையும் அழைத்து இதை விசாரிக்கின்ற நேரத்தில், அந்த பாளையங்கோட்டை சப் இன்ஸ்பெக்டர் சூதாட்ட விடுதியைத் தடுப்பதற்கு இல்லாமல் ஆளும் கட்சிக் சட்டமன்ற உறுப்பினர் களின் மீது வழக்குப் போடுவதற்கு வழி உண்டா என்று ஆதாரங் களைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்ற காட்சியைத்தான் என்னால் காண முடிகிறது.

இதைப்போல் தென்னாற்காடு மாவட்டத்திலே ஒரு சம்பவம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் ஒரு நூதனமான வழக்கு போட்டிருக்கிறார்கள். முகவை மாவட்டத் திலே பரமக்குடியிலே சட்டம் படித்து பட்டம் பெற்றவழக்கறிஞர் ஒருவர் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முன்னாள் முதலமைச் சராக இருந்த காலத்தில் கோழி திருடியதாக வழக்கு போட்டிருக் கிறார்கள். அதைப்போல இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருக்கிற நேரத் திலே கூட தென்காசியிலே ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஆளும் கட்சியைச் சேர்ந்த வட்ட அமைப்பாளர்—அவர் இலட்ச ரூபாய்க்கு சொத்து மதிப்பு உள்ளவர், நல்ல நாணயமான குடும்பத்தைச் சேர்ந்தவர்—அவர் மீது ஜேப்படி செய்தார் என்று அதாவது பிக் பாக்கட் செய்தார் என்று வழக்கு போடப் பட்டிருக்கிறது.

இதைப்போல என்னுடைய தொகுதியிலே கீழப்பாதூரில் எதிர்க்கட்சித் தலைவருக்கு மிக நெருக்கமான ஒருவர் காட்டு தர்பார் நடத்திக்கொண்டிருக்கிறார். இதுபோன்று அங்கே இன்னும் பல இடங்களில் நீங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தானே வாக்களித்தீர்கள் என்று வீடு நுழைந்து கூட பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் தொல்லை கொடுக்கப்படுகிறது.

இவை பற்றியெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக் கும் காவல் துறை ஐ.ஜி. அவர்களுக்கும் கூட பல்வேறு தந்திகள் கொடுக்கப்பட்டன. என்னுடைய தொகுதியில் டி.ஐ.ஜி. அவர் களுக்கு நானே சென்று மனு கொடுத்த நேரத்தில் அங்கே எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த சூழ்நிலையைத் தான் எங்களாலே காண முடிந்தது.

அதைப்போல இன்னொரு சம்பவம். திராவிட முன் னேற்றக் கழகத்தைச் சார்ந்த முன்னாள் நெல்லை நகரசபைத் தலைவர் ஒருவருடைய காலத்திலே பொருட்காட்சிக்கு குத்தகை எடுத்துக் கொண்டு அவருடைய நண்பர் ஒருவருடைய உதவியுடன் திருநெல்வேலியிலே ஒரு சூதாட்டத்தை மாதக் கணக்கிலே நடத்திக் கொண்டிருந்தார்கள். இதைக் காவல் துறையினரின் கவனத் திற்கு எடுத்துச் செல்கின்ற நேரத்தில் அவர்கள் ஹைக்கோர்ட்டிலே ரிட் போட்டு ஸ்டே வாங்கி வைத்துக் கொண்டு இப்படிப்பட்ட சூதாட்டத்தைக் நடத்துகிறார்கள், இவர்களை கைது செய்வதற்கு சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆனால் அதைவிட ஒரு வேடிக்கை என்னவென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பத்திரிகைகளிலே மிகச் சாதுரியமாகப் போடுகிறார்கள். அதாவது ஆளும் கட்சியைச் சார்ந்த பிரமுகர் கள் சூதாட்டம் நடத்துகிறார்கள் என்று அவர்கள் மிகச் சாதுரி மாகப் போடுகிறார்கள். இந்தச் செய்தியைப் படித்ததும்

[திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்] [1978 மார்ச் 15

நெல்லையிலே இருந்து உடனடியாக பல தபால்கள் எழுதி இருக்
கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு காவல்துறையினால்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்தான்
பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இதற்
கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போன்ற ஒரு செய்தியைச்
சொல்ல விரும்புகிறேன்.

கயத்தாற்றிலே ஒரு சம்பவம் நடைப்பெற்றிருக்கிறது.
புரட்சித் தலைவரவர்கள் நடித்த சினிமா ஒன்றினைப் பார்த்து
விட்டு ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரை வீதியிலே
மறித்து காவல்துறையைச் சேர்ந்தவர்கள் 'எங்கே போய்விட்டு
வருகிறாய்' என்று கேட்க அவர், பக்கத்திலே இருக்கும் டூரிங்
சினிமாக் கொட்டகையிலே சினிமா பார்த்துவிட்டு வருகிறேன்'
என்று சொன்னார். அவர் அப்படிச் சொன்ன நேரத்திலே
உனக்கெல்லாம் என்ன சினிமா வாழவேண்டும் என்று செம்மை
யாக உதைத்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

ஆக இன்றைக்கு நாட்டிலே நிலைமை என்னவென்றால் ஆளுங்
கட்சி ஆனபின்னாலும்கூட அகில இந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்தினர் அடக்குமுறைக்கு ஆளாகிக் கொண்டிருக்
கிற நிலையைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இன்றைக்குப் பல்வேறு
இடங்களில் பழைய பழக்க தோஷம் காரணமாக இன்னும் ஆளும்
கட்சி போன்ற உணர்வோடு பல இடங்களில் அவர்கள் இன்னும்
தர்பார் நடத்திக் கொண்டிருக்கிற காட்சியைத் தான் தினம்
தினம் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

என் தொகுதியில், மானூரில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது.
பொங்கல் விழா அன்று ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு
செய்து அதில் சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்வதாக
விளம்பரத்தாள் அச்சடித்து அனுமதி வாங்குவதற்காக வானூர்
காவல் நிலையத்திற்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே சென்றிருந்த
கழகத் தோழரிடம் உங்களுக்கெல்லாம் என்ன பொதுக்கூட்டம்
போடவேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்று கூறி காவல்
நிலையத்தில் வைத்து இரண்டு பல் கீழே விழுகிற அளவுக்கு
பூட்ஸ் காலால் உதைத்திருக்கிறார்கள். இது குறித்து திருநெல்
வேலி மாவட்ட போலீஸ் சூப்பரின்டென்ட்டின் கவனத்திற்கு
நாங்கள் கொண்டுவந்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும்
எடுக்கப்படாத நிலைதான் இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.
என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பழைய ஆட்சிக் காலத்தில் இன்றையதினம்
ராதாபுரம் அண்ணா தி. மு. க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற

19 8 மார்ச் 15] [திரு வீ. கருப்பசாமி பாண்டியன்]

யூசப் அவர்களோடு நானும் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினேன்.
அந்த பொதுக் கூட்டத்தில் பேசுகிறபோது அவர்கள் குறிப்பிட்
டார்கள், ரூ. 8-க்கு படி அரிசி விற்கிறது, ஆனால்நீங்கள் பூம்
புகாரில் இந்திர விழா நடத்திக் கொண்டிருக்கிறீர்கள், இதே
நிலைமை நீடித்தால் மக்கள் எல்லாம் கொதித்தெழுந்தால்
உங்கள் நிலைமை என்ன என்று கோடிட்டுக் காட்டினார்கள்.
பின்னால் யூசப் மீது முதல் அமைச்சரை கொலை செய்வதற்கு
மக்களைத் தூண்டிவிட்டதாக வழக்கு போடப்படுகிறது.
இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், எதிர்க்
கட்சியைச் சேர்ந்தவர்கள் புரட்சித் தலைவர் அவர்களைத் தரம்
தாழ்ந்து அவர்களது குடும்பத்தைப் பற்றி விமர்சனம்
செய்துகொண்டிருக்கிறார்கள் ஆளும் கட்சி உறுப்பினர்களுடைய
உயிருக்கும் உடைமைக்கும் சேதம் விளைவிக்க கூடியவகையில்
தூண்டுகிற வகையில் எந்தளவிற்கு இன்றைக்கு மேடைகளில்
பேசுகிறார்கள் என்பது தெரியும். ஆனால் இது வரையில்
தமிழக அரசு இப்படி தரம் தாழ்ந்து பேசுகிற எந்தப் பேச்சாளர்
மீதாவது ஒரு வழக்கு போட்டிருக்கிறதா, நடவடிக்கை
எடுத்திருக்கிறதா என்றால் இல்லை. அது புரட்சித் தலைவர்
அவர்களது தாய் உள்ளத்தைக் காட்டுகிறது.

காவல் துறையை கையில் வைத்துக்கொண்டு இம்மியளவேனும்
அடக்குமுறையைக் கட்டவிழ்க்காத நிலையில் இருப்பதைப் பார்க்
கிறோம். அதே போல் நாட்டில் எவ்வளவோ போராட்டங்கள்
நடைபெற்றன. அவற்றில் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்ய
வில்லை, தடியடிப் பிரயோகம் இல்லை. கடந்த 11 நாட்களாக
என். ஜி. ஓ. க்கள் போராடிய நேரத்தில் முதல் அமைச்சர்
அவர்கள் சிறந்த முறையில் அடக்குமுறையை ஏவி விடாமல்,
அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடாமல் கண்காணிப்போடு
பார்த்துக் கொண்டார்கள் என்பதை நிச்சயமாக போற்றாதவர்கள்
யாரும் இருக்க முடியாது. அந்த அளவிற்கு சிறந்த முறையில்
காவல் துறை எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சம நோக்கோடு
மத இன வேறுபாடின்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்
பதை யாரும் மறுக்க முடியாது.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ரகுமான்கான்
அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், முதல் அமைச்சர்
அவர்கள் தெரியவருகிறது, புரியவருகிறது என்று குறிப்பிடுகி
றார்கள் என்றும் நாங்களும் அதேபாணியில் சொல்லுகிறோம்என்றும்
சொன்னார்கள். ஆனால் எங்கள் ஒப்பற்ற தலைவர் புரட்சித் தலைவர்
அவர்கள் எவை, எவை எல்லாம் தெரியவருகிறது, புரியவருகிறது
என்று சொன்னார்களோ அவர்களுடைய முடிவுகள் எல்லாம்
இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. வெளியிடப்பட்ட
சர்க்காரியா அறிக்கையில் அவர்களுடைய தீர்ப்பு எப்படி இருக்
கிறதுஎன்பதைப்பற்றி நாடு நன்கு கவனித்துக் கொண்டிருக்கிறது.

அவர்கள் சென்னூர்கள், 'நான் ஒரு கொலைவழக்கில் ஆதாரங்
களை கையில் வைத்துக் கொண்டு பேசுகிறேன்' என்று. அப்படிச்
சொன்ன அவர் இன்றைக்கு எப்படியெல்லாம் திசை தெரியாமல்
குழம்பிக் கொண்டிருக்கிறூர்கள் என்பதைச் இச் சட்டமன்றமும்
நாடும் இன்றைக்கு அறிந்து கொண்டிருக்கிறது.

அந்தஅளவில் அண்ணு திராவிட முன்னேற்றக்கழக சட்டமன்ற
உறுப்பினர்கள் அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுவது
என்றால் கையில் ஆதாரம் இல்லாமல் சொல்வதில்லை என்ற
மரபை இன்றைக்கு நாடு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்
கிறது. (மணியடிக்கப்பட்டது) இன்னும் பல்வேறு பிரச்சினைகள்
உள்ளன. துணைச் சபாநாயகர் அவர்கள் நேரத்தைச் சுருக்க வேண்
டும் என்று சொல்வதால் ஒருசில கருத்துக்களைச் சொல்லி அமர
லாம் என கருதுகிறேன்.

நாட்டில் பல்வேறு குற்றங்களுக்காக ஏன் நடவடிக்கை எடுக்க
வில்லை. என்று காவல் துறையிடம் சென்று விளக்கம் கேட்டால்
அவர்கள் எல்லாம் இங்கேயுள்ள பல்வேறு ஸ்டேஷன்களில் காவலர்
கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. நெல்லை
மாவட்டத்தைப் பொறுத்தவரை பல போலீஸ் ஸ்டேஷன்களில்
ஆய்வாளர்கள் துணை ஆய்வாளர்கள் இவர்களை எல்லாம் போட
முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. என்று புள்ளி
விவரத்தைத் தருகிறூர்கள்.

ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறைக்கு
புதிதாக ஆட்களை எடுக்க வேண்டும் அத்துடன் அதில் வேலைக்கு
ஆள் எடுக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்
பட்ட மக்களுக்கும் அதைச் சார்ந்த மக்களுக்கும் முன் உரிமை
கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். (மணியடிக்கப்பட்டது) அதேபோல் காவல் துறையைச்
சேர்ந்தவர்களின் வாரிசுகளுக்கும் முன் உரிமை வாய்ப்பு கொடுக்க
வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு காவல்துறை மீது தந்திருக்கின்ற அறிக்கையில்
இருக்கின்ற காவல் நிலையங்களில் இன்னும் 117 காவல் நிலையங்
களில் தொலை பேசி வசதி இல்லை என்று புள்ளி விவரம் தந்திருக்
கிறூர்கள். காவல் துறைக்கு தொலை பேசி எவ்வளவு அவசிய
மான சாதனம் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த
முறையில் இந்த ஆட்சி காலத்தில் எல்லா காவல் நிலையங்களிலும்
இந்த தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்
கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், 24மணி நேரமும் பணிபுரிகின்ற இந்த காவல் துறை
ஊழியர்கள் மீது தனி கவனம் செலுத்த வேண்டும், அவர்கள்
எந்த சங்கமும் அமைத்துக் கொள்ளாமல் தங்கள் குறைகளை

எடுத்துச் சொல்லாமல் இருக்கின்ற இந்த காவலர்கள் மீது பரிவு
காட்டி கணிசமான அளவுக்கு அவர்களுடைய வசதிகளை பெருக்க
வேண்டும், அதன்மூலம் லஞ்சம் வாங்கவேண்டிய அவசியமில்லாத
ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த முடியும் என எடுத்துச் சொல்லிக்
கொள்கிறேன். இங்கே மது விலக்கைப் பற்றியும் சாராயத்தைப்
பற்றியும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பலர் பேசினூர்கள்.

அதில் இன்றைக்கு சாராய வியாபாரம் செய்துகொண்டிருப்ப
வர்கள் தண்ணீராக ஓடவிட்டுக் கொண்டிருப்பவர்கள் எந்தப்
பக்கத்தில் எந்த முகாமில் இருக்கிறூர்கள் என்பதை இந்த நாட்டி
லுள்ள $4\frac{1}{2}$ கோடி மக்கள் நன்றாக அறிவார்கள். அந்த அடிப்
படையில் மதுவிலக்கை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கவனம்
செலுத்தி அதற்காக தனியாக மொபைல் பார்ட்டி ஏற்படுத்தி
நாட்டில் இருந்துவருகின்ற லஞ்சத்தை ஒழிப்பதற்கும் தனியாக
போலீஸ் படை ஏற்படுத்தியிருப்பதற்காகவும் புரட்சித் தலைவர்
அவர்களுக்கு எங்களது இதயத்தின் அடித்தளத்திலிருந்து வருகின்ற
பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்ல முறையில்
யில் பணியாற்றி வருகிற காவல்துறையை ஏற்றிருக்கின்ற நமது
புரட்சித் தலைவர் அவர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்
கொண்டு, இத்தனை நேரம் பேசுவதற்கு வாய்ப்பு தந்த சட்ட
பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்.
அமருகிறேன். வணக்கம்.

* திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்க
ளால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற காவல் துறை மானியத்தின்
மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கும்
வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல
விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் போலீஸ் நிர்வாகம் காங்கிரஸ் காலத்தில்
மிக சிறந்த அமைப்பாக இருந்தது, இந்தியாவிலேயே மிக சிறந்த
தாக விளங்கியது, தி. மு. க. ஆட்சி காலத்தில் அரசியல் கட்சி
களுக்கு சாதகமாக இந்த அமைப்பு மாறி பின்னூல் ஆளுனர் ஆட்சி
காலத்தில் அந்த நிலை மாறி, இப்போது ஒரு புதிய சிந்தனையில்
செயல் பட்டுக் கொண்டிருப்பது பெருமைப்படத்தக்க அளவிற்கு
இருக்கிறது; குறிப்பாக புயல், வெள்ளம் வந்து தாக்கிய நேரத்
தில் மரியாதைக்குரிய இந்தத் துறையின் பெரிய அதிகாரி ஸ்டிரேசி
அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்த நேரத்தில் சட்ட மன்ற உறுப்
பினர்கள் எல்லோரையும் அவர்கள் பார்த்தார்கள். அப்போது
அவர்களிடம் நாங்கள், இங்குள்ள காவல் துறை அதிகாரிகள்
மிகவும் உதவி செய்தார்கள் என்று சொன்னோம். அப்போது
அவர்கள் என்ன சொன்னூர்கள் என்றால், இப்படிப்பட்ட நேரத்
தில் தான் பாராட்டுரைகள் கிடைக்கின்றன. மற்ற நேரங்களில்
எல்லாம் பிரிக் பாட்ஸ்-கல்லெறிதான் கிடைக்கிறது என்று
சொன்னூர்கள். அது உண்மைதான்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 மார்ச்

இன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக
இருந்தாலும் சரி, காவல் துறையை பெரிதாக விமர்சனம் செய்
கிறோமே தவிர பாராட்டுவதில்லை. இதை நாம் தெளிவாக
தெரிந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக இவருடைய
பெருந்தன்மையை எப்படிக் காட்டினார் என்றால். கடந்த
காலத்தில் காவல்துறையின் பெரிய அதிகாரியாக இருந்த
எப். வி. அருள் அவர்கள் காவல் துறைக்கு செய்திருந்த பல்
வேறு காரியங்களை சொல்லி பாராட்டினார். தமிழகத்தில்
எப். வி. அருள் காலத்தில் தான் பல்வேறு காவல் நிலையங்
களுக்கும் வயர்லெஸ் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்
தார் என்பதை குறிப்பிட்டுப் பாராட்டினார். புயல் - வெள்ள
சேதம் ஏற்பட்ட நேரத்தில் எல்லாம் பல உயிர்களை காப்பாற்று
வதற்கு இந்த வயர்லெஸ் எந்த அளவுக்கு பயன்பட்டது என்
பதைக் கூறி அதற்கு காரணமாக இருந்த எப். வி. அருள் அவர்
களைப் பாராட்டினார்கள். எந்த அளவுக்கு காவல்துறை பெரி
தாக இருந்தது என்பதையும் சொல்லி பாராட்டினார்கள்.

[முற்பகல் 11-10]

அடுத்ததாக, இன்றையத்தினம் தொடர்ந்து கடந்த காலத்
திலே இருந்ததைப் போல், காவல்துறையினரிடம் பொது
மக்கள் ஒரு பிராதைச் சொல்ல வேண்டுமானால், உரிய முறை
யில் சொல்ல முடியாமல், கடந்த காலத்திலே எப்படியிருந்
ததோ, அதைப்போல் செருப்பை வெளியிலே கழட்டிவிட்டு,
இடுப்பிலே ஒரு துண்டைக் கட்டிக் கொண்டு, ஐயா, எஜமான்
சாமி என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இன்றைக்கும் இருக்
கிறது. அப்படி எஜமான் சாமி என்று சொல்லாமற் போனால்,
அந்தப் பிராதின்மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. ஆனால்,
அவர்மீதே வழக்குப் போடப்பட்டு, தண்டிக்கக்கூடிய ஒரு சில
காவல் நிலையங்கள் இருக்கின்றன. இப்படி இன்னும் பல ஆண்டு
களாக இருந்து கொண்டிருக்கிறது. இதிலே எந்தவிதமான
மாற்றமும் இல்லை. ஆகவே, இதை உடனடியாக மாற்றியாக
வேண்டும். காரணம், இன்றைய தினம் நாம் ஜனநாயக அமைப்
பிலே பல்வேறான மாற்றங்களைச் செய்துக் கொண்டிருக்கிறோம்.

அதோடு மட்டுமல்லாமல், சென்ற ஆண்டுகூட இந்தச்
சட்டமன்றத்திலே உறுப்பினர்கள் பேசும்போது, தமிழ்நாட்
டிலே தான் இந்த 'டபிள்ஸ்' செல்வது குற்றமாகக் கருதப்
படுகிறது ; அப்படிப் போகிறவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்,
ஆனால் டெல்லி மாநிலம், சண்டிகார் மாநிலத்திலே 'டபிள்ஸ்,
போகலாம், அங்கே தண்டிக்கப்படுவதில்லை' என்று குறிப்பிட்
டார்கள். அங்கே 5, 6 பேர்கள் கூட போகலாம். ஆனால்,
அதற்கு மாறாக இங்கே 'டபிள்ஸ்' தமிழகத்திலே இந்த பில்லி
யன் ரைட் செய்வது தவறு என்று சொல்லி, போலீஸ் வழக்

1978 மார்ச் 15] [திரு. நா. சுந்தரராஜ்]

போடுகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற வேண்டும். இந்த
நிலைமையை உடனடியாக மாற்றினால், தமிழகத்திலே இருக்கக்
கூடிய ஏழை எளிய மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே,
அதற்கான சட்டத்தைத் திருத்துவதற்கோ அல்லது உடனடி
யான உத்தரவு ஒன்றைப் பிறப்பிப்பதற்கோ இந்த அரசு முன்
வந்தால், நிச்சயமாக முதல் அமைச்சர் அவர்களுக்கு
பாராட்டு கிடைக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே ஒரு அபிராமி கமர்ஸியல் யோர்னிங்ஸ்
(பினான்ஸ்) பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு கம்பெனி ஆரம்
பிக்கப்பட்ட நேரத்திலே, என்னிடம் அதிலே பல பேர்கள்
சேருவதற்கு, விண்ணப்பிப்பதற்கு வந்தார்கள். அப்படி விண்
ணப்பம் பெறுகின்ற நேரத்திலே, மானேஜருக்கு ரூ. 750 என்
றும், கிளார்க்குக்கு ரூ. 500 என்றும், ஊழியருக்கு ரூ. 250
என்றும், அப்படிச் சேருவதற்குத் தொகை கட்டி சேரவேண்டு
மென்றும் சொல்லப்பட்டது. இந்த நிலையில் நான் காவல்
துறையினருக்கு, கமிஷனர் ஆப் போலீசுக்கு ஒரு கடிதம் எழுதி,
சென்னையிலே இப்படி அபிராமி கமர்ஸியல் யோர்னிங்ஸ்
(பினான்ஸ்) பிரைவேட் லிமிடெட் என்று கம்பெனி ஆரம்பிப்ப
தாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா அல்லது
போலியா, அப்படி அது ஒரு மோசடியான கம்பெனியாக
இருந்தால், அதைப்பற்றி தயவு செய்து பத்திரிகைகளிலே எடுத்
துச் சொன்னால், எழுதினால் அதன்மூலம் பலர் பயனடை
வார்கள் மக்கள் ஏமாறாமல் இருப்பார்கள் என்று எழுதிய
நேரத்தில், அதற்குப் பதில் வந்தது. அந்தப் பதில் நிச்சயம்
கமிஷனர் அவர்கள் எழுதவில்லை. அவருக்கு கீழே வேலை
செய்யக்கூடிய யாரோ ஒரு அதிகாரி விசாரித்து எழுதியிருக்
கிறார். அதில், பொருள் : அபிராமி கமர்ஸியல் யோர்னிங்ஸ்
(பினான்ஸ்) பிரைவேட் லிமிடெட், கடித எண். மு.மு. 4870/
121687/எப்5/77, தேதி 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம்
11-ந் தேதி என்ற அந்தக் கடிதத்தில், ''பார்வையில் கண்ட
தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி அபிராமி கமர்ஸியல்
யோர்னிங்ஸ் (பினான்ஸ்) பிரைவேட் லிமிடெட் கம்பெனி, எண்.
15, ஸ்டேட் பேங்க் ரோடு, அண்ணா சாலை, சென்னை-2ல்
செயல்பட்டு வருகின்றது என்பதை இதன்மூலம் தங்கட்கு
தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று எழுதியிருந்தார்கள்.

ஆனால், அப்படி அந்தக் கடிதம் கிடைத்த 15 நாட்களுக்குப்
பின்னால் அந்தக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் பல
லட்சம் ரூபாய்களை மோசடி செய்துவிட்டார் என்பதற்காக
கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இந்த மோசடி
யில் என்னுடைய பகுதியிலே உள்ள பலர் இந்தக் கம்பெனி
யிலே பங்குதாரர்களாகச் சேர்ந்து, பல பொருள்களை வாங்க
வேண்டுமென்று அந்தப் பகுதியிலே உள்ள ஏழை எளிய மக்கள்

கிட்டத்தட்ட 10,000 ரூபாயைக் கொடுத்து, அவர்கள் மோசடி செய்யப்பட்டார்கள். இந்தக் காவல் துறையைச் சேர்ந்த பரமகுரு அவர்கள் நல்லவர் என்று சொன்னாலும், திறமையாகப் பணியாற்றக்கூடியவர் என்று சொன்னாலும், அவருக்கு கீழே பணியாற்றக்கூடிய ஒரு அதிகாரி இதை விசாரித்து எழுதியிருக்கிறார், அதிலே இத்தகைய தவறு நடந்திருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையத் தினம் சாராயத்தைப் பற்றி எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இங்கே பேசினார்கள். குறிப்பாக தமிழ் நாட்டில் பல இடங்களில் அதிலும் என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இப்படி சாராயம் காய்ச்சப்பட்ட இடங்களில் ரெயிட் செய்யப்பட்டு பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், இன்னும் ஒரு சில இடங்களில் குறிப்பாக என்னுடைய பகுதியில் கழனிவாசல், புதுப்பட்டி என்ற இடத்திலுள்ள துணை உதவி ஆய்வாளர் அங்கே சாராயம் காய்ச்சுபவர்களிடம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு, சாராயம் விற்கக்கூடிய ஒரு கேவலமான நிலைமை இருக்கிறது. ஒரு சில பகுதிகளிலே இதனை ஒழித்துக் கட்டுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தாலும், புதுக்கோட்டைப்பையைப் பொறுத்தமட்டில் அந்த இடத்திலே இம்மாதிரியான தவறு நடந்துக்கொண்டிருக்கிறது, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டிலே சாராயம் காய்ச்சுபவர்களுக்கு பல சலுகைகள் அளிக்கப்படுகின்றன. குறிப்பாக, ஒரு நபர் சாராயம் காய்ச்சுவதாக மேலதிகாரிக்கு எழுதினால், அதை அவர் கீழே உள்ள ஸ்டேஷனுக்கு அனுப்பி அவர்கள் தப்பித்துக் கொள்ளக்கூடிய நிலைமைதான் காணப்படுகிறது.

குறிப்பாக, சாராயம் காய்ச்சுபவர்கள் மீது இன்று 4 (1) செக்ஷனில் கேஸ் போடப்படப்படுகிறது. சாரயம் காய்ச்சுபவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் நியூசென்ஸ் என்று சொல்லக்கூடிய அளவில் ஒலிபெருக்கி இரவு 11 மணி 12 மணி வரை அலறுகிறது.
அரசியல் கட்சிக் கூட்டங்களுக்கு 10 மணி என்ற லிமிட்
காணுமை ரெவு 11 மணி, 12 மணி வரை நடக்கிறது. சென்னை
டுகிறது ; அப்பூதிகமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தை
ஆனால் டெல்லி மாநடத்த வேண்டும். பொதுமக்களுக்கு பெருத்த
போகலாம், அங்கே நத்தும் அளவுக்கு இது இருக்கிறது.
ார்கள். அங்கே 5, 6
அதற்கு மாருக 'இங்கே 'டமு முறையில் போடுவது கடந்த காலத்
நகரத்தில் செய்வது தவறு ஏபிசி. & 110, சி.ஆர்.பி.சி. என்ற செக்
தீவிரமாக அமல் ஏழை எளிய மக்கள் எல்லாம் பாதிக்
இடைஞ்சல் ஏற்ட

கப்படக்கூடிய அளவுக்கு வழக்குகள் போடுகிறார்கள். இதற்குக் காரணம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கண்காணிப்பாளர்கள் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் மேற்கண்ட செக்ஷன்களில் இவ்வளவு கேஸ்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரத்தைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை காரணமாகத்தான் இது போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன.

கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அவர்கள் தூண்டுதலின் பேரில் மரியாதைக்குரிய நெடுமாறன், முருக தனுஷ்கோடி, நவசக்தி ஆசிரியர் போன்றவர்களை எல்லாம் டிபன்ஸ் ஆப் இந்தியா ரூல்சில் கைது செய்தார்கள். இதுபோன்ற நிலைமை, அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக தனிப்பட்ட நபர்களை வஞ்சம் தீர்க்கும் எண்ணம் கடந்த காலத்தில் இருந்தது. அது தொடர்ந்து இருக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய காவல் நிலையங்கள் திறப்பது சம்பந்தமாக அரசாங்கத்தில் இருந்து ஒரு 'பான்' செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம் மணியாச்சியிலுள்ள சங்கிப்பட்டி கிரிமினல் சென்டராக இருக்கிறது. அங்கு ஒரு அவுட் போஸ்ட் அமைக்க வேண்டுமென்று மரியாதைக்குரிய ஐ.ஜி. அவர்களிடம் கேட்டபோது, ஒரு பான் இருக்கும் காரணத்தால் அமைக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு கிரிமினல் சென்டர் ; உடனடியாக ஒரு அவுட் போஸ்ட் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் நடைபெற்ற சம்பவம்-காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தோழர் முத்துகிருஷ்ணன் 16-2-78 அன்று பட்டப்பகலில் ஜனதாக் கட்சித் தோழரால் கொலை செய்யப்பட்டார். இது வரை யாரும் கைது செய்யப்பட வில்லை. உரிய கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குற்றம் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை?

ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல்வேறு இடங்களில் மத்திய அரசைக் காண்பித்து * * * மிரட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. மத்திய அரசுக்குத் தந்தியை அவர்கள் கொடுக்கிறார்கள். இங்குள்ள அமைச்சர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. காவல் துறை அதிகாரிகளை மிகக் கேவலமாக விமர்சிக்கிறார்கள் ; சட்டமன்ற உறுப்பினரைக் கூட மிகக் கேவலமான முறையில் விமர்சிக்கிறார்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பேசும்போது * * * என்று சொன்ன வார்த்தைகளை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: மத்திய உள்துறை அமைச்சருக்குத் தந்தி கொடுக்கிறார்கள்; தகவல் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஜனதாக் கட்சி தமிழ்நாட்டில் மத்திய சர்க்காரை எதிர்பார்த்து அதிகாரம் செய்து கொண்டிருக்கிறது; மிரட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் கோவையில் ஜனதா கட்சி மாநாடு நடைபெற்றது. தமிழ்நாட்டில் மற்றக் கட்சிகள் செய்ய முடியாததை, அவர்கள் மாநாட்டுக்கு லாரிகளில் ஆட்களை ஏற்றிச் சென்றிருக்கிறார்கள். இதை அனுமதிப்பது நம்முடைய அரசாங்கத்தின் பலகீனமாகும். யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை நகரத்தில் ஒருசில நாட்களுக்கு முன் மெயின் வீதியில், ராஜ வீதியில் பட்டப்பகல் 12½ மணிக்கு வெடி விபத்து ஏற்பட்டு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. 17 பேர் இறந்து போனார்கள். 44 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உயிர் பிழைத்திருந்தாலும் வாழ லாயக்கற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தோல் எல்லாம் உரிந்து வெள்ளை வெளேர் என்று அருவருப்பு ஊட்டக்கூடிய நிலைமையில், பரிதாபகரமான நிலைமையில் ...து கொண்டிருக்கிறார்கள். அவர்களி... முதல்வர் ... கேட்டுக் கொண்டேன், இது பற்றி ... கொண்டு விசாரணை நடத்தப்பட ...ங்குள்ளே இப்படி அவர்கள் வெடி ...து. ஊருக்கு அப்பால் வைத்திருக்க ...து வெடி விபத்து ஏற்பட்டதால் ...ப் பால் கொடுத்துக் கொண்டிருந்த ...காண்டிருந்தவன், கடை வீதிக்குச் ...ள் இப்படி சம்பந்தா சம்பந்தம் ...க்கிறார்கள். உடனடியாக நீதி ...பட்டவர்கள் மீது கடுமையான ... இதனால் பாதிக்கப்பட்டு இறந்து ...தலா 5,000 ரூபாய் கொடுக்க ...யும் அரசாங்கத்தின் முன் ...

...ின் ஆணைக்கிணங்க அகற்றத் ...க் ...டுக்

வில் ... அரசியல் ... தூண்டி ... படுகி... நகரத்தி... தீவிரமாக ... இடைஞ்சல் ... சந்தேகக் கே... தில் இருந்தது. 1... ஷன் களில் கிராம...

[முற்பகல் 11-20]

காரணம், அதன் மூலமாக அந்தக் குடும்பங்கள் வாழ்வதற்கு வழி பிறக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் பல்வேறு போராட்டங்களை தூண்டுகின்ற கட்சிகள், ஏற்கெனவே பல போராட்டங்களை சந்திப்பதற்கு உட்பட்ட கட்சிகள் எல்லாம் இன்றைக்கு போராடுவதற்குத் தயாராகிக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் இந்த அரசாங்கத்திற்கு எச்சரிக்கையாக சொல்ல விரும்புகிறேன். அரசியல் ரீதியாக எதிரியைச் சந்திக்க திராணியற்றவர்கள் இன்றைக்கு இனவெறியைக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு என்னும் தெளிவான நீரோடையில் இனவெறி என்ற சாக்கடையைக் கலக்கக்கூடிய முறையில் அவர்கள் தூண்டுகிறார்கள் என்ற காரணத்தாலே எதிர்காலத்திலே தமிழன்—மலையாளி இனப் பிரச்சினையை அவர்கள் உருவாக்கலாம், அதைச் சந்திப்பதற்கு அரசியல் ரீதியாக மட்டுமல்ல, காவல் துறை மட்டுமல்ல, பல்வேறு லட்சியங்களின் மூலமாகவும் அவர்களைச் சந்திக்கவேண்டும். குறிப்பாக, செக்கிழுத்த சிதம்பரனார், வ.வே.சு. அய்யர், ராஜாஜி, சுப்பிரமணிய பாரதியார், பெருந்தலைவர் காமராஜ் இவர்கள் எல்லாம் பிறப்பாலும் பேச்சாலும் இந்தியர்களாகவே பிறந்து இந்தியர்களாகவே மடிந்தனர். அப்படிப்பட்ட நிலையில் சிறிய மனப்பான்மை கொண்டு மொழியின் பேரால், இனத்தின் பேரால், ஜாதியின் பேரால் இன்றைக்கு புதிய துவேஷத்தை உருவாக்கத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன என்பதை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நான் இதைப் பேசுகின்றபோது சட்ட அமைச்சர் அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கலாம், காரணம் அவர் இன்றைக்கு தவறிப் போய் ஆளுங்கட்சியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார், தி.மு.க.வில் இருந்து பேசவேண்டிய பேச்சு மாதிரி கடுமையாகத் தாக்கிப் பேசுகிறார். 44-வது சட்ட திருத்தம் இங்கே கொண்டு வரப்பட்டபோது அவர் பேசிய பேச்சு இன்றும் என்னுடைய காதிலே ஈட்டிப்போல் பாய்ந்துகொண்டிருக்கிறது: அந்த அளவிற்கு அவர் கடுமையாகப் பேசினார், அரசியல் ரீதியாகப் பேசவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு பி. எச். பாண்டியன்: மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே! இந்த காவல்துறை மானியத்தில் என்னுடைய அகருத்துக்களை கூறுவதற்காக அழைத்ததற்கு நான் முதற்கண்

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆளுகின்ற கட்சியாக வந்தாலும் அதிகமாகத் தாக்கப்படுகின்ற ஒரே இலாகா இந்த போலீஸ் இலாகா என்பதுதான்.

சுதந்திரம் அடைந்ததிலிருந்து எதிர்க்கட்சிகளால் தாக்கப்படுகிற ஒரே ஒரு இலாகா இந்த காவல் இலாகாதான். 1861 ஆம் ஆண்டு போலீஸ் ஆக்ட் என்ற ஆக்ட் ஆங்கிலேயர்களால் அறிமுகப் படுத்தப்பட்டது. அந்த சூழ்நிலையில் இந்தியர்கள் நம் இந்திய நாட்டில் தங்களுடைய வியாபாரத்தைத் தொடங்குவதற்காகவும தங்களுடைய ஆட்சியின் மூலமாக நம்மை அடிமைகளாக ஆக்கி விட்ட நிலைமையில்தான் அந்தச் சட்டத்தை ஒச்சினார்கள். அந்தச் சட்டத்தால் அந்த சூழ்நிலையில் ஆங்கிலேய அதிகாரிகள் நம்மை அமுக்கி வைத்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அந்த போலீஸ் சட்டத்தின் கீழ் போலீஸார் கடமைகள் மூன்றே மூன்றுதான்.

Prevention of crime;
Law and Order;
Detection of crime;

இந்த மூன்றிற்குப் பிறகு படிப்படியாக போக்குவரத்தை அவர்கள் சேர்த்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு 1902 ஆம் ஆண்டிலேயே போலீஸ் கமிஷனை நியமித்தார்கள்.

கடந்த 75 ஆண்டுக்காலமாக யாதொரு கமிஷனும் நியமிக்கப் படாமல் இப்போது ஜனதா அரசால் அது நியமிக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் இரண்டே இரண்டு குற்றங்களைத் தான் விசாரிக்க வேண்டும், புலனாய்வு செய்ய வேண்டும் என்ற முறையிலே அமலாக்கி வந்தார்கள்.

Common Law Offences, Substantial Law Offences என்பது தான் அவை. இந்த Substantial Law Offences, Common Law Offences இரண்டும்தான். காரணம், இந்தியக் குற்றச் சட்டத்தின்கீழ் முதலிலே, விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். ஸ்பெஷல் ஆக்ட்ஸ் அரசாங்கம் கொண்டு வந்தபோது அதையும் போலீஸார் அமலாக்க ஆரம்பித்தார்கள். ஸ்பெஷல் ஆக்ட்ஸ் இப்போதும் இருக்கின்றன. மதுவிலக்கு துறை கூட ஸ்பெஷல் ஆக்ட்டின கீழ்தான் வருகிறது. அதையும் போலீஸார்தான் அமலாக்கி கொண்டிருக்கிறார்கள்.

சப்ஸ்டான்ஷியல் அஃபென்ஸ், காமன் லா அஃபென்ஸ் என்பதில் அவர்கள் எத்தனை புலனாய்வு செய்திருக்கிறார்கள் என்று பார்க்கும் நேரத்தில் ஸ்பெஷல் ஆக்டில் போலீசார் புலனாய்வு செய்து பதிவு செய்த வழக்குகள் அதிகமாக, அதாவது ஸ்டாட்டிஸ்டிக்ஸ் அதிகமாக இருக்கிறது. சப்ஸ்டான் ஷியல் அஃபென்ஸில் குறைவாக இருக்கிறது. இதற்குக் காரணம் எது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சப்ஸ்டான் ஷியல் அஃபென்ஸில் அவர்கள் அதிகமாக பதிவு செய்தால் அதற்குப் புலனாய்வுத் துறை அதிக நேரம் விசாரணை செய்ய வேண்டும் என்ற நிலையில் இருக்கிறது.

அதுமட்டுமல்ல 'ஒர்க் லோட்' அதிகமாக அரசாங்கம் அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில், 'டிரக்ஸ் ஆக்ட், ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்ட், கஸ்டம்ஸ் ஆக்ட்' ஆகியவற்றில் தனியாக விசாரணை நடத்தி புலனாய்வு செய்து ப்ராசிகியூஷன் தரப்பில் எப்படி நடத்துகிறார்களோ அதைப்போல நாம் இப்பொழுது 'அன்-டச்சபிலிட்டி ஆக்ட், ப்ரொஹிபிஷன் ஆக்ட்', ஆகிய இவ்விரண்டையும் போலீசார் வசமிடமிருந்து எடுத்து அதை அந்தந்த இலாக்காக்களுக்கே கொடுப்போமேயானால் உண்மையிலேயே அவர்களுடைய பளு குறையும். அவ்வாறு பளு குறைகின்ற நேரத்தில் அவர்கள் உண்மையாகவே கொலை வழக்குகள், கள்ள நோட்டு வழக்குகள் போன்ற பெரிய வழக்குகளை விசாரிக்க முடியும். அவர்கள் அவைகளை விசாரிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு அதிக நேரமும் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய இந்தியன் குற்றச் சட்டத்தை எடுத்துக் கொண்டால் வெள்ளைக்காரர்கள் நாட்டிலேயிருந்து அவர்கள் சட்டத்தைக் கொண்டு வரும் நேரத்தில் மெக்காலே, 'ப்ரிப்பரேஷன் டு கமிட் ராபரி' என்பதைப் பெரிய குற்றமாகவும், 'ப்ரிப்பரேஷன் டு வேஜ் வார்' என்பதைப் பெரிய குற்றமாகவும் கொண்டு வந்தார்கள். இதிலிருந்தே நாம் புரிந்து கொள்ள முடியும், வெள்ளைக்காரர்கள் இங்கே அவர்களுடைய வியாபாரத்தை நடத்திக் கொண்டிருந்ததால் அவர்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்ள அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தார்களே தவிர நம்மைக் காப்பாற்றுவதற்காக அல்ல. எனவே மெக்காலே காலத்துச் சட்டம் இந்தச் சூழ்நிலைக்கு ஒவ்வாது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் இங்கே பாரின் கவர்ன்மெண்டாக அந்நிய ஆட்சியாளர்களாக இருந்த காரணத்தினால் நம்மை அவர்கள் விரோதிகளாகப் பாவித்திருந்தார்கள். பிரிட்டிஷ் நாட்டை

எடுத்துக்கொண்டால் அங்கே போலீசார், 'ப்ரண்ட்ஸ் ஆஃப் தி பீப்பிள்' என்று கருதப்படுகிறார்கள். ஆனால் நமது நாட்டில் அவர்கள் 'எனிமி ஆஃப் தி பீப்பிள் என்று கருதப்படுகிறார்கள்.

இதற்குக் காரணம் என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வெள்ளைக்காரர்கள் நாட்டில் 'ப்ரண்ட்ஸ் ஆஃப் தி பீப்பிள் — ஆகச் செயல்படுகின்ற போலீசார் அதே சட்டத்தின்கீழ் செயல்படும் போலீசார் இங்கே நமக்கு விரோதிகளாகப் பாவிக்கப்படுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? சுதந்திரத்திற்குப் பிறகும், வெள்ளைக்காரர்கள் எந்தச் சட்டத்தை, எந்த நடைமுறைகளை விட்டுச் சென்றார்களோ அதையே நாம் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய போலீசாரின் திறமையையும், ஆற்றலையும் நாம் வெளிப்படுத்த வேண்டுமேயானால், 'ஸ்டரக்சர் ஆஃப் தி போலீஸ் ஃபோர்ஸை மாற்ற வேண்டும். வளர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான முறையிலே போலீஸ் அதிகாரிகளை ரெக்ரூட்மெண்ட் செய்யும் நேரத்திலே நாம் அதைச் சரி செய்தால் உண்மையிலேயே அவர்கள் விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட மாட்டார்கள். எதிர்க்கட்சியினரால் தாக்கப்பட மாட்டார்கள். போலீசார் எந்தத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தாலும், எந்தக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் உடனே நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டு விடுகிறார்கள். எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும் அவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிடும் நேரத்தில் போலீஸ் மொரேல் கெட்டு விடுகிறது. போலீசாரை சுதந்திரமாக விட்டு, அவர்களை அதிகமாக விமரிசிக்காமல் அவர்களை நம்முடைய சகோதரர்களாகப் பாவித்தால் அதற்கேற்ப அவர்களுடைய பணியையும், அதற்கேற்ப அவர்களுடைய திறமையையும் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்று அரசுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நேஷனல் போலீஸ் கமிஷனில் ஒன்றைச் சொல்கிறார்கள். இந்திய சாட்சிச் சட்டத்தில் 25-வது செக்ஷனில் நாம் எந்த வாக்குமூலத்தைக் கொடுத்தாலும் சட்டத்தில் செல்லாது என்று இருக்கிறது. ஆனால் இப்பொழுது நேஷனல் போலீஸ் கமிஷனில் எந்த ஸ்டேட்மெண்டையாவது யாராவது போலீசாரிடம் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்க வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகளாலும், பெரிய அதிகாரிகளாலும் வற்புறுத்தப்படுவதாக அறிகிறேன். எந்தச் சூழ்நிலையிலும் 25-வது செக்ஷனில் எந்த ஸ்டேட்மெண்டும் செல்லக்கூடாது என்று இருக்க வேண்டுமென்று இந்த அவையில் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். காரணம், இது போன்ற சட்டமன்றங்களில் 25-வது இந்தியன் எவிடென்ஸ் ஆக்டின் சாராம்சத்தையும், 27-வது இந்தியன் எவிடென்ஸ் ஆக்டின் சாராம்சத்தையும் நாம் விமரிசனமாக எடுத்துக்

கூறினால் அதை பப்ளிக் ஒபினியனாக எடுத்துக்கொண்டு அவர்கள் வரையறுப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11–30]

இது மட்டுமல்ல, நம்முடைய விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற நேரத்தில், இப்பொழுது தேர்ட் டிகிரி மெத்தட்ஸை போலீசார் பயன்படுத்துகிறார்கள். இதற்கு அவர்களைக் குறை சொல்லவில்லை. காரணம், நாம்தான் அவர்கள் விஞ்ஞான முறையில் குற்றவாளிகளை அணுக, அதற்கேற்ற விஞ்ஞான சாதனங்களை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. வெளி நாடுகளில் கைரேகைகளைக் கொண்டும், கால் பூட்ஸ் ரேகைகளைக் கொண்டும், மற்ற விஞ்ஞான சாதனங்களைக் கொண்டும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அங்கே யாராவது குற்றவாளியாகக் கொண்டு வரப்பட்டால், அவர்களை விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு குற்றம் செய்தவரா, இல்லையா என்று கண்டு பிடிக்கிறார்கள். இங்கே, யாராவது குற்றம் செய்ததாகக் கொண்டு வரப்பட்டால், தேர்ட் டிகிரி மெத்தட்ஸைக் கொண்டு உண்மை கண்டு பிடிக்கிற நிலைமை இருக்கிறது.

சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகளுக்குப் பிறகும் தேர்ட் டிகிரி மெத்தர்ட்ஸ்—அந்நியர்களால் எப்படி வதைக்கப்பட்டோமா, அதே நிலைமையிலே நாம் மக்களை வாட்டுவது உண்மையிலே ஜனநாயகத்திற்கு ஒவ்வாதது என்று கூறி, அந்த தேர்ட் கிரேட் மெத்தட்ஸ் கைவிடப்பட்டு, விஞ்ஞான சாதனங்களை அவர்கள் உபயோகப்படுத்துகிற வகையில், விஞ்ஞான, அறிவியல்களை அவர்களுக்கு ஊட்ட வேண்டுமென்றும் அந்த Structure of the Police Force மாற்றுகிற நேரத்தில், இது போன்ற விஞ்ஞான அறிவை ஊட்ட வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, நம்முடைய சென்னை மாநகரத்தில், பல்வேறு போலீஸ் பயிற்சிப் பள்ளிகளும், பயிற்சிக் கல்லூரிகளும் இருக்கின்றன. அதுபோன்ற கல்லூரிகளிலாவது, முதல்முறையாக போலீஸ் இலாகாவில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றவர்களுக்கு இதுபோன்ற விஞ்ஞானப் பயிற்சி கொடுக்கப்படுமானால் உண்மையிலே நம்முடைய போலீஸ் இலாகாவை ஸ்காட்லாந்து யார்டுக்கு ஈக்குவலாக நம்மால் கொண்டு வரமுடியும் என்றும் அவர்களுக்கு விஞ்ஞான பயிற்சிகளை அளிக்க வேண்டுமென்றும், விஞ்ஞான சாதனங்களை அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி, அமர்கிறேன். வணக்கம், நன்றி.

*திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, போலீஸ் மானியத்தின்மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்
டுத் தீர்மானங்களை நான் ஆதரித்து, எனது கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன்.

ஏற்கெனவே, ஒவ்வொரு ஆண்டும் ஆதாயத்திற்காக பல்வேறு
குற்றங்கள் செய்யப்படுவதும், ஒவ்வொரு ஆண்டும் குற்றத்தின்
எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதுமாக உள்ளது. ஆனால்,
அப்படிப்பட்ட குற்றங்கள் கூடிக்கொண்டு போவதற்கான உண்
மையான காரணங்கள் என்ன என்பதைப் பற்றி அறிக்கைகள்
கொடுக்கின்றபொழுது, அல்லது ஆய்வுரை கொடுக்கின்ற
பொழுது, அதற்கு ஒரு நொண்டி சாக்கைச் சொல்கிறார்கள்...

இந்த ஆண்டு இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில்,
1976 ஆம் ஆண்டைவிட, குற்றங்களின் எண்ணிக்கை, 1977-ல்
8,321 உயர்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் சொல்லப்பட்டிருக்
கிறது, '' தாக்கல் செய்யப்பட்ட எல்லா வழக்குகளையுமே பதிவு
செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டதும், அவசர நிலைமை
ரத்து செய்யப்பட்டதன் விளைவுமே '' என்று இங்கே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. 1970-71 ஆம் ஆண்டுகளிலே கூட, 1970 ஆம்
ஆண்டில் குற்றங்கள் நடந்ததைவிட, 1971-ம் ஆண்டில் குற்றங்
கள் அதிகமாக இருந்ததற்கு அன்றைக்கிருந்த அரசாங்கம் என்ன
காரணம் கூறியதென்றால், அதிகமாகக் குற்றங்கள் பதிவு செய்யப்
பட்டதும், வளர்ச்சி பெற்ற நாடுகளில் குற்றங்கள் அதிகமானதும்,
என்று காரணங்கள் கூறப்பட்டன. தாக்கல் செய்யப்பட்ட
எல்லா வழக்குகளையுமே இப்பொழுது பதிவு செய்ததாகக் கூறு
கிறார்கள்.

அதற்கடுத்தபடியாக, மற்றொரு காரணம் சொல்லப்படுகிறது,
அவசர நிலைமை அகற்றப்பட்டதால் இந்த நிலைமை என்று கூறு
கிறார்கள். 1970 ஆம் ஆண்டில், ஆதாயத்திற்காக கொலை செய்
யப்பட்டது 23 ; 1971-ல் 15 ; 1976-ல் 30 ; 1977-ல் 49.
நான் கேட்கிறேன், 1970-71-ல் அவசர நிலைமை நிச்சயமாக இல்லை.
அப்படியிருக்கும்போது, இந்த அவசரகாலம் ஒரு காரணமாக
இருக்கிறது என்று கூறுவது எந்த அளவு பொருத்தம் என்பதை
இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழிப்பறி, 1970-ல் 17 ; 1971-ல் 11 ; 1976-ல் 120 ;
1977-ல் 130. இப்படி எல்லா வழக்குகளையும் எடுத்துக்கொண்
டால், 1970-71-ல் மிகவும் குறைவாகத்தான் இருக்கிறது. உண்
மையிலே, இன்றைக்கு வறுமை அதிகமாக இருக்கிற காரணத்
தாலும், வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற காரணத்தாலும்
தான் இப்படிப்பட்ட பொருளாதாரக் குற்றங்கள் இருப்பதாக
உள்ள உண்மையை மறைக்க அடிப்படை காரணம் என்ன
என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மதுவிலக்கு பற்றி இங்கே அதிகமாகக் கூறினார்கள்.
வெள்ளமாக ஓடுகிறது என்று சொன்னார்கள். அது ஓரளவுக்கு
நிச்சயமாக உண்மைதான். அதைப்பற்றி நான் கூற விரும்புவது
என்னவென்றால், ஏற்கெனவே இந்த மன்றத்தில் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கூறும்போது குறிப்பிட்டார்கள். குடிப்
பவர்கள் மீது அதிகமான நடவடிக்கை எடுப்பதைவிட காய்ச்சு
கிறவர்கள், விற்பனை செய்கிறவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கூறியதன் விளைவாக, இன்றைக்கு குடித்
தவர்கள் மீது, யாராவது குடித்தவர்கள் என்று பிடிபட்டால்
அவர்கள் மீது, காய்ச்சினார்கள், அல்லது விற்பனை செய்தார்கள்
என்று வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. குடிப்பவர்களுக்கு
குறைந்த தண்டனைதான். ஆனால், இப்படிப்பட்டவர்கள் மீது
காய்ச்சுகிறார்கள், விற்பனை செய்கிறார்கள் என்று அதிகமான அள
வுக்குத் தண்டனை வழங்கும் நிலை இருப்பதை இந்த அரசு கவனிக்க
வேண்டும். மதுவிலக்கைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு அது
ஊற்றாக இருக்கிறது. கிராமப்புறங்களிலே இது குடிசைத் தொழி
லாக இருக்கிறது.

இதற்கு முக்கியமான காரணம் போலீசார் உடந்தையாக
இருக்கிறார்கள் என்று உறுதியாகக் கூறமுடியும். தமிழ்நாட்டில்
பல்வேறு இடங்களில் சாராயம் காய்ச்சுவதும், அவற்றை விற்பனை
செய்வதும் போலீசார் உதவியோடுதான் நடந்து வருகிறது என்று
உறுப்பினர்கள் சொன்னார்கள். போலீஸ்காரர்கள், அதை கண்
காணிக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள், இப்படிக் குற்
றம் அதிகமாக நடக்க உடந்தையாக இருக்கிறார்கள் என்று
எண்ணுகிற நேரத்தில்—' மங்கை சூதகமானால் கங்கையில் குளிக்
கலாம், ஆனால் அந்த கங்கையே சூதகமானால் எங்கே போய்
குளிப்பது ' என்ற கேள்விதான் எழுகிறது. ஆகவே, இப்படிப்
பட்ட மதுவிலக்கைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில்
கவனம் செலுத்துவதைவிட, மற்ற திட்டங்களை நிறைவேற்ற
வேண்டும். தனியாக மதுவிலக்கு போலீஸ் படை அமைக்க இருக்
கிறார்கள்; அதை நான் வரவேற்கிறேன்.

இன்றைக்குப் போலீஸ் வேலைகள் அதிகமாகப் பாதிக்கப்படு
கின்றன. கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களை பிடிப்பதும், வழக்
குப் போடுவதும் போன்ற நிலைமைதான் இருக்கிறது. மற்ற வழக்கு
கள் கவனிக்கப்படாமல் கிடக்கின்றன. புறநகர்ப் பகுதிகளில்,
அண்ணா நகர் போன்ற பகுதிகளில் காவல் நிலையங்களை அமைப்பதில்
உடனடியாக சாத்தியம் இல்லாவிட்டாலும் அந்தப் பகுதிகளில்
உள்ள வீடுகளில் நடக்கின்ற களவுகளைத் தடுப்பதற்கான வழிகளை
அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கி
றேன்.

அதோடு தொழிலாளர் பிரச்சனையைப் பொறுத்த மட்டில்
அவர்களுடைய கோரிக்கைகளை வைத்து பல்வேறு இயக்கங்கள்
நடத்துகின்றபோது, குறிப்பாக உண்ணாவிரதம், தர்ணா, போன்ற

[திரு. ரா. கிருஷ்ணன்] [1978 மார்ச் 15

போராட்டங்களை நடத்துகிறபோது, அவர்களை உடனடியாகக் கைது செய்து 307 செக்ஷன்படி வழக்குப்போட்டு கடுமையான குற்றங்களை அவர்கள் மீது சாட்டுவதை நாம் பார்க்கிறோம்.

லட்சுமி மெஷின் ஒர்க்ஸில் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்ற ஒரே காரணத்திற்காக 900 தொழிலாளர்களைக் கைது செய்து கோர்ட்டுகளில் வழக்குப்போட்டு, அவர்கள் அத்தனைபேர்களும் கோர்ட்டுகளுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல சங்கரன்கோவில், அருப்புக்கோட்டை நெசவாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்துப் போராடுகிறபோது உடனடியாக எந்தவிதமான, தயக்கமும் காட்டாமல் கைது செய்யப்பட்டார்கள். ஏற்கெனவே தொழிலாளர்கள்மீது இருக்கிற வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கேட்டபோது அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக வாபஸ் வாங்குவதாக உறுதி அளித்தார்கள். அங்கே கிட்டத்தட்ட 250 பேர்கள், 12 குழந்தைகள், 30 பெண்கள் உட்பட்ட வழக்கு மன்றத்திற்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கட்சியின் தோழர் திரு. சி. கோவிந்தராஜன் அதர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்த தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்குகள் உடன்பாடு ஏற்பட்டாலும் அவர்கள் மேல் போடப்பட்டிருக்கிற வழக்குகளை வாபஸ் வாங்கக் கூடாது என்று ஒரு சுற்றறிக்கை விடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையைப் பார்க்கும்போது அப்படிப்பட்ட சுற்றறிக்கை இருக்குமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது.

(முற்பகல் 11-40).

ஆகவே, ஒரு தொழிற்சாலையில் ஒப்பந்தம் ஏற்பட்டு பிறகு மாமூலான வேலைகள் நடந்து கொண்டு இருக்கிற நேரத்தில் மீண்டும் அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிற காரணத்தால் அங்கே நிச்சயமாக தொழில் அமைதி ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்பட முடியாது என்புதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, அந்தத் தொழிலாளர்கள் மீது வழக்குப் போடுகிறபோது, அந்த வழக்குகளை நடத்துவதற்கு, அவர்களுக்கு விரோதமாக சாட்சிகள் தயாரிக்கும் பொறுப்பு அந்த முதலாளிகளைச் சேர்ந்ததாக இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்தத் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்படுவதற்குப் பதிலாக அதற்கு விரோதமான சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1978 மார்ச் 15] [திரு. ரா. கிருஷ்ணன்]

ஆகவே, தொழிலாளர்கள் மீது எத்தகைய வழக்காக இருந்தாலும், ஒரு சுமுகமான ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, அந்த வழக்குகளை மீண்டும் தொடராமல், அந்த வழக்குகளை உடனடியாக வாபஸ் பெற அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே இங்கே பல்வேறு சமயங்களில் பேசப்பட்டு வந்து இருக்கிறது. டி.வி.எஸ், நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அந்த டி.வி.எஸ். நிறுவனம் குண்டர்களை வைத்துத் தொழிலாளர்களைத் தாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். காவல் துறையைச் சேர்ந்த டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் மற்றும் பலர் அங்கே இருந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருந்தும், அந்த குண்டர்கள் காவல் துறையினரின் எதிரிலேயே தொழிலாளர்களை தாக்கி பல்வேறு வன்முறைச் சம்பவங்களை நடத்தி இருக்கின்றனர். குண்டர்களை வைத்துத் தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர் என்று முதலமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே மாதவன் என்ற தொழிலாளி தாக்கப்பட்டு, அவனுக்கு இரண்டு விலா எலும்பு முறிந்து இருக்கிறது. அதற்குக் காரணமானவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேபோல் கம்பெனிக்குள் இருந்த குண்டர்கள் வெளியே இருந்த தொழிலாளர்களைத் தாக்கியிருக்கின்றனர். அங்கே டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் எல்லோரும் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் காவல் துறை அதிகாரிகள் முன்னிலையில் கடுமையாகத் தாக்கப்பட்டு இருந்தபோதிலும், அந்த குண்டர்களின் மீது நடவடிக்கை எடுக்காமல், வழக்குப் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அராஜகம் நடத்தியவர்கள் மீது இதுவரையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சரிதானா என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தால் தான் அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

அடுத்ததாக, கட்டுக் குத்தகை விவசாயிகள் படும் இன்னல்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியில், வீரகேளம்புதூர் காவல் நிலைய எல்லையில் வெள்ளகால் கிராமத்தில் கிட்டத்தட்ட 100 விவசாயிகள் 20-30 ஆண்டுகாலமாக பயிர் செய்து வருகிறார்கள். அந்த நிலச்சுவான்தாரின் தூண்டுதலின்பேரில் அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக ரிகார்ட் செய்து, வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடுத்து, எக்ஸ்-பார்ட்டியாக இன்ஜங்ஷன் வாங்கியிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் அங்கே பயிர் செய்து இருந்த நெல்லை அறுவடை செய்து இருக்கிறார்கள். அப்படி அறுவடை

செய்த விவசாயிகள் மீது ராபரி கேஸ் போட்டு, அவர்களைச் சிறையில் தள்ளியிருக்கிறார்கள். இந்த நிலைமை இருந்தால் எப்படி விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இருக்கும், நிலத் தகராறுகளில் காவல் துறை தலையிடக் கூடாது என்று ஏற்கனவே நிலையங்களிலேயே குறிப்பிடப்பட்டு இருந்தும், இந்தமாதிரி முறையில் காவல் துறையில் உள்ளவர்கள் சாதாரண ஏழை விவசாயிகள், அரிசனங்கள் மீது கொடுமையான வழக்குகளைப் போடுவதால், எப்படி கட்டுக் குத்தகைச் சட்டத்தை அமல் நடத்த முடியும், எப்படி அவர்களுக்கு அரசு பாதுகாப்புக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூரில் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்டார். இன்னும் அது பற்றி துப்பு துலக்கப்படவில்லை.

அதேபோன்று, எனது தொகுதியில் சிவகிரி போலீஸ் சரகத்தில் அத்துவழி கிராமத்தில் பிள்ளையார் என்ற நபர் சாகடிக்கப்பட்டார். 10–15 நாட்கள் கழித்து வழக்குத் தொடுக்கப்பட்டது. சில நபர்கள் மீது சந்தேகம் என்று வழக்குத் தொடுக்கப்பட்டது. கூட இருந்த நபர், இன்னார் இன்னார் கொலை செய்தார்கள், இன்னார் இன்னார் அடித்தார்கள் என்று சில குறிப்புகளைப் போலீஸ் அதிகாரிகளிடத்தில் கொடுத்து இருந்தும், அந்த போலீஸ் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், பாடி கிடையாது, உடனடியாக வழக்குத் தொடுக்கவில்லை, அதோடு சாட்சிகள், உடனடியாகச் சொல்லவில்லை என்று சொல்லி, அந்த வழக்கை தள்ளுபடி செய்யும் நிலைக்குப் போய்க்கொண்டு இருக்கிறது.

ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அந்த இடத்தில் இன்னின்னார் கொலை செய்தார் என்று சொன்ன பிறகும் நடவடிக்கை எடுக்காத போக்கு இருந்தால் பொது மக்களுக்கு எந்த அளவுக்கு பாதுகாப்பு வழங்க முடியும், எந்த அளவுக்கு அவர்கள் தங்களுடைய உயிரை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சைக்கிளில் டபிள்ஸ் போவது ஒரு பெரிய குற்றம் என்று சொல்கிறார்கள். டபிள்ஸ் போவதால் யாருக்கும் தொந்தரவு இல்லை என்பதால் அந்தச் சட்டத்தை உடனடியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீசாரின் குறைந்தபட்ச பொருளாதார கோரிக்கைகளை வலியுறுத்திக் கூறுகின்ற அளவுக்கு-இன்றைக்கு எல்லா ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் சங்கம் வைக்க உரிமை இருக்கும்போது, '' சட்டத்தின் முன் அனைவரும் சமம் '' என்று சொல்லிக்கொண்டிருக்கிறபோது, அவர்களுக்கு சங்கம் வைக்கின்ற

உரிமையை வழங்க வேண்டுமென்றும், அவர்களுடைய வீட்டு வசதி, சம்பள உயர்வு, பஞ்சப்படி போன்ற இப்படிப்பட்ட பிரச்சனைகள் பற்றி அரசு கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. டி. இராமசாமி : மாமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த போலீஸ் மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 9 மாத காலத்தில் காவல் துறை எந்த அளவுக்கு நேர்மையாக, எதிர்க்கட்சிக்காரர்களை ஒடுக்கக்கூடிய சுபாவம் இல்லாத அளவுக்கு, ஜனநாயக மரபுகளைக் கட்டிக் காக்கின்ற முறையிலே நடந்து வருகிறது என்பதையெல்லாம் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். மக்களும் அறிவார்கள்.

எத்தனையோ போராட்டங்கள் இந்த அரசு அமைந்த பிறகு முடுக்கிவிடப்பட்டிருந்தாலும் கூட நியாயமான முறையிலே பேசி, தீர்வு காணக்கூடிய அளவுக்கு இந்த அரசு கடந்த காலத்தில் நடந்துகொண்டிருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்தவர்கள் போராட்டக்காரர்களை ஒடுக்கவோ அல்லது துப்பாக்கிச் சத்தத்தைக் நாட்டிலே வெடித்துக்காட்ட வேண்டுமென்றோ தடியடிப் பிரயோகத்தை நடத்திக்காட்டவோ வேண்டுமென்ற நிலை இல்லாத அளவுக்கு நேர்மையாக செயல்பட்டு வருகிறது என்பதை நாடு கண்டுகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்த நேரத்தில், குடிசைகள் எல்லாம் அடித்துச் செல்லப்பட்ட நேரத்தில், ஏழை எளிய மக்களின் விவசாயம் அழிக்கப்பட்ட நேரத்தில் காவல் துறை நண்பர்களும் தீ அணைப்புத் துறையினரும் எங்கள் பகுதியிலே மிகுந்த சிரத்தையோடு பணியாற்றினார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கும்போது, அந்தப் பகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய கடமை உணர்வோடு செயலாற்றிக்கொண்டிருக்கும் காவல்துறைக்கும் இந்த அரசுக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சில போலீஸ் அதிகாரிகள் நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை என்னால் மெத்த வேதனையோடு சொல்லாமல் இருக்க முடியவில்லை.

[திரு. டி. இராமசாமி] [1978 மார்ச் 15

இராமநாதபுரம் தொகுதியில் தேவி பட்டணம் என்ற இடத்தில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. பல்வேறு கிராமங்கள் அந்த காவல் நிலையத்தின்கீழ் இருக்கின்றன. அரசு மதுவிலக்குக் கொள்கையில் எந்த அளவுக்கு விழிப்போடு இருக்கிறது என்பதை மறந்து அங்கே இருக்கின்ற துணை ஆய்வாளர் அனுமதியோடு அந்தப் பகுதியில் மதுவிலக்குச் சட்டத்தை மீறுகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு துணை ஆய்வாளர் உடந்தையாக இருக்கிறார் என்பதை வருத்தத்தோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

இராமநாதபுரம் தாலுக்காவுக்கு ஒரு தாலுக்கா ஸ்டேஷன் இல்லாதது பெரும் குறையாக இருக்கிறது. ஆகவே அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தில் இருக்கக்கூடிய காவல் நிலையத்தில் 36 காவலர்கள் தான் இருக்கிறார்கள். அந்தக் காவல் நிலையத்தோடு பல்வேறு கிராமங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு டவுன் ஸ்டேஷனிலே இத்தனை கிராமங்களை இணைத்திருப்பது சரியான முறையிலே காரியங்கள் ஆற்றுவதற்கு இயலாமல் இருக்கிறது. இருக்கின்ற அந்த 36 பேர்களில் 12 பேர்களை கிளைகளுக்கு அனுப்பி விடுகிறார்கள். மீதி இருக்கின்ற 24 பேர்களில் 5 அல்லது 6 பேர்களை மட்டும் அங்கே ஸ்டேஷனிலே வைத்திருக்கிறார்கள். மற்றவர்கள் சப்-இன்ஸ்பெக்டர் வீடு மற்றும் அதிகாரிகளின் வீட்டில் வேலை செய்யும் ஏவலர்களாக அமைக்கப்பட்டிருக்கிறார்கள். காவலர்கள் ஏவலர்களாக மாற்றப்படும் சூழ்நிலை இருக்கிறது. இப்படி இருந்தால் அவர்கள் எப்படி பொதுப்பிரச்சினை சம்பந்தமாக காரியங்களைச் சரிவர செய்ய முடியும் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்த்து, அதற்கு வேண்டிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரத்தில் கிழக்குப் பகுதியாகிய இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் ஆகிய தீவுப்பகுதிகளுக்கு லாரியோ, பஸ்ஸோ போக முடியாது. விசைப்படகு அல்லது நாட்டுப் படகில்தான் செல்ல முடியும். அந்த அளவுக்கு துண்டிக்கப்பட்ட நிலையிலே அவை இருந்து கொண்டிருக்கின்றன. எனவே அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் தேவை. ஆகவே அந்தப் பகுதியிலே உடனடியாக ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். வெகு தூரத்திலே இருந்து தீயணைப்பு படை வந்து தீயை அணைப்பதற்குள் தீ பக்கத்திலே பரவி பெரும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே 70 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு

1978 மார்ச் 15] [திரு. டி. இராமசாமி]

கொள்கிறேன். இதற்கு, ஏழை எளியவர்களின் உள்ளங்களிலே வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் காவல் நிலையத்தில் மொத்தம் 36 காவலர்கள் தான் இருக்கிறார்கள். இராமேஸ்வரத்தில் இருந்து 12 மைல் தூரத்தில் சென்றால் அங்கே இலங்கை நாட்டினுடைய எல்லை வருகிறது. ஏராளமான பேர்கள் இலங்கையிலிருந்து அந்தப் பகுதி வழியாக வந்து கடத்தல் என்ற முறையிலே இலங்கை நாட்டிலேயிருந்து பொருட்களை எடுத்துக்கொண்டு உள்ளே வந்து விடுகிறார்கள். அவர்கள் இங்கே அப்படி வருகிறபோது தட்டிக் கேட்க யாரும் இல்லாத நிலை இருக்கிறது. 12 மைல் தூரத்தில் இருக்கக்கூடிய அந்தப் பகுதிக்கு நமது மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றால் கூட அங்குள்ள இலங்கைக் காவலர்கள் பிடித்துச்சென்று விடுகிறார்கள். ஒரு காலத்தில் நம்மிடம் இருந்தது அந்தத் தீவு. உரிமையோடு நாம் அனுபவித்து வந்த தீவு, ஏதோ இப்போது அவர்களிடத்தில் இருக்கிறது.

அந்தத் தீவுக்கு மீன் பிடிக்கச் சென்றால் கூட நமது மீனவர்களைப் பிடித்துச் சென்று விடுகிறார்கள். அங்கேயுள்ளவர்கள் கடத்தல் என்ற முறையிலே வந்தாலும் கூட இங்கே தட்டிக் கேட்க யாரும் இல்லாத நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட அவல நிலை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு அங்கே தனி போலீஸ் படை ஒன்றை இராமேஸ்வரத்தில் அமைக்க வேண்டுமென்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரத்தில் மொத்தம் நான்கு காவல் நிலையங்கள் தான் இருக்கின்றன. இராமேஸ்வரத்தில் ஒரு காவல் நிலையம், மண்டபத்தில் ஒரு காவல் நிலையம், தோரிப்பட்டிணத்தில் ஒரு காவல்நிலையம், இராமநாதபுரத்தில் ஒரு காவல் நிலையம். ஆக நான்கு தான் இருக்கின்றன. அது போதாது. மேலும் ஏற்படுத்த வேண்டும். உச்சிப்புளியில் ஒரு காவல் நிலையம் அமைப்பது பற்றி 6 ஆண்டுகளாக செயற்குறிப்பு இருந்து வருகிறது. அது பேப்பரில் தான் இன்னும் இருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தி காவல் நிலையம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கத்திலே தங்கச்சிமடத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதையும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிலைகளையெல்லாம் ஆராய்ந்து உடனடியாக அவுட் போஸ்ட்களாக செயல்பட்டுக் கொண்டிருப்பதை எல்லாம் பக்கா போலீஸ் ஸ்டேஷன்களாக ஆக்குவதற்கான காரியங்களில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியத்திற்கு அப்பாற்பட்ட பிரச்னையாக இருந்தாலும் முக்கியமான ஒரு பிரச்னைபற்றிச் சொல்லி விடைபெறலாம் என்று கருதுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற கருத்து நிலவுவதாக நான் அறிகிறேன். அதில் கிழக்கு, மேற்கு என்று சொல்லப்படுகிறது. கிழக்கு இராமநாதபுரம் என்று பிரிக்கப்படுகிறபோது—நிர்வாக வசதிக்காக மாவட்டம் பிரிக்கப்படுகிறபோது—கிழக்கு இராமநாதபுரத்தின் தலைநகராக இராமநாதபுரம் நகரம் இருக்கவேண்டும் என்று மிகுந்த உரிமையோடும் அழுத்தத்தோடும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். அது சேதுபதி ஆண்ட இடம். 12 ஆண்டுகளாக அம்மாவட்டத்தின் தலைநகராகத் திகழ்ந்து வருகிறது. ஆகவே கிழக்கு இராமநாதபுரத்திற்கு தலைநகராக இராமநாதபுரம் நகரம் இருந்தாக வேண்டும், இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஏழை மக்களின் இதயத்தில் வாழ்கிற புரட்சித் தலைவர் அவர்கள் இதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. கா. அப்புனு கவுண்டர்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காவல்துறை மானியத்தின்மீது நான் சார்ந்திருக்கிற ஜனதாக் கட்சி சார்பில் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல் துறைபற்றிய ஆய்வுரை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில், 4,5 பக்கங்களில் கொடுக்கப்பட்டிருக்கிற விவரங்களிலிருந்து குற்றங்கள் 1976-ல் இருந்ததை விட 1977-ல் அதிகமாக ஆகியிருக்கிறது என்று விளக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற காரணம் என்னவென்றால், 1976 ஆம் ஆண்டைவிட 1977-ல் குற்றங்களின் எண்ணிக்கை 8,321 உயர்ந்துள்ளது. அதாவது 26·5 சதவீதம் உயர்ந்துளளது. தாக்கல் செய்யப்பட்ட எல்லா வழக்குகளையுமே பதிவு செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டதும் அவசர நிலைமை ரத்து செய்யப்பட்டதன் விளைவுமே நடப்பாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்தற்கு முக்கிய காரணங்களாகும் என்று சொலப்பட்டிருக்கிறது.

இந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. உண்மையிலேயே காவல் துறை சீர்குலைந்துவிட்டது. அந்த முறையில்தான் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. அப்படி கண்டுபிடிக்கப்படாததால் குற்றங்கள் அதிகரித்து விட்டன என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். சமாதான விளக்கம் சொல்லும் முறையில் இப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர உண்மையான விளக்கம் அல்ல அது.

நம் காவல்துறை துப்பு துலக்குவதில், புலன் ஆய்வு செய்வதில் பெயர்பெற்றிருந்த ஒரு காலம் உண்டு. இன்று அந்நிலை மாறி நாம் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம். அதைப் பொறுத்தவரையில் அதற்கு இது ஒரு சான்று என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக அரசு மதுவிலக்குத் திட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கிறது. அந்நிலையில் மதுவிலக்கை அமல்படுத்தும் துறை இந்த காவல் துறையோடு ஒப்படைக்கப்பட்டிருப்பது பெரிய தவறு. அப்படி ஒப்படைக்கப்பட்ட ஒரே காரணத்தினால்தான் மற்றக் குற்றங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்கள் ஏதோ சாக்குபோக்கு சொல்லி தட்டிக்கழித்து விடுகிறார்கள். ஆகவே மதுவிலக்கைப் பொறுத்தவரையில்—ஐ.ஜி. அவர்கள் கூறியுள்ளதைப் போல்—தனி ஒரு பிரிவு ஏற்படுத்தி காவல் துறையிடமிருந்து பிரித்து ஒப்படைத்தால் தவிர இந்தக் காவல் துறை சீர்படாது, மதுவிலக்குக் கொள்கையையும் சரிவர அமல்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஜனநாயக நாட்டில், நீதி சட்டம், நிர்வாகம் என்ற முறையில் பிரிக்கப்பட்டிருந்தாலும் இந்த நிர்வாகத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது காவல்துறை. சட்டத்தை அமல்படுத்த வேண்டியது, சட்டம் ஒழுங்கு, அமைதியை நிலைநாட்டுவது, மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பது இவைகளைக் கவனித்து செய்ய வேண்டியது காவல்துறை. அந்த முறையில் பார்த்தால் காவல் துறையைப் பொறுத்தவரையில் குற்றச்சாட்டுகள்தான் அதிகமாக வருகிறதே தவிர பெருமைகள் அல்லது பாராட்டுகள் வருவதை நாம் காண்பதில்லை.

கண்ணீர்ப் புகை, தடியடி, துப்பாக்கிச் சூடு என்றிருக்கிறது. காவல்துறை அதிகாரிகள் தங்கள் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யாத முறையில், சர்வாதிகார முறையில் நடந்து கொள்ளாதிருக்கும் வகையில் அவர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

[திரு. கா. அப்புனு கவுண்டர்] [1978 மார்ச் 15

(நண்பகல் 12—00.)

அடுத்து, வழக்குகளை புலன் ஆய்வு செய்கின்ற நேரத்தில், விஞ்ஞான ரீதியில் புலன் ஆய்வு செய்து உண்மையிலேயே குற்றஞ் செய்தவர்கள் மீது வழக்குகளை போட வேண்டும். குற்றங்கள் நல்ல முறையில் கண்டு பிடிக்கப்பட்டு, குற்றஞ் செய்தவர்கள். உண்மையிலேயே தண்டிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் குற்றச்சாட்டுகளை போட வேண்டும். நாம் போடுவது போடுவோம், கோர்ட்டில் தண்டனை கொடுத்தால் கொடுக்கட்டும், இல்லையென்றால் போகட்டும் என்ற முறையில் புலனாய்வு செய்யக் கூடாது. முக்கியமான வழக்குகளில் உண்மையான குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் குற்றச்சாட்டுகளை போட வேண்டும். அதற்கு தகுந்தவாறு வழக்குகளை போட வேண்டும் என்று காவல் துறையினருக்கு அறிவுறுத்துகின்றேன்.

மேலும் இந்த முறையில் போனால் குற்றம் செய்தவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து திருந்திவிடக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எங்கள் மாவட்டம் 1965-ல் ஏற்படுத்தப்பட்டது. இவ்விதம் அமைக்கப்பட்டு 13 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் காவல் துறை, ரிசர்வ்-அலுவலகம் இன்னும் தனியார் கட்டிடத்தில்தான் இயங்கி வருகிறது. அரசு துறையில் இன்னும் தனியாக கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் கவனித்து அரசாங்கத்தின் சார்பில் தனியாக அலுவலகம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று காவலர் இல்லங்கள் கட்டப்படாமல் இருந்து வருகின்றன. அதையும் உடனடியாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தர்மபுரி நகரம், அந்த மாவட்டத்தின் தலைநகரமாக இருந்து வருகிறது. இங்கு இயங்கி வருகின்ற காவல் துறை அலுவலகத்தில் தனியாக குற்றப் பிரிவு-கிரைம் பிராஞ்சு தனியாக பிரிவு ஏற்படுத்தி, அதற்கு தனியாக ஆய்வாளர்-இன்ஸ்பெக்டர் என்று ஏற்படுத்தினால் நல்ல முறையில் செயல்படுவதற்கு உதவியாக இருக்கும். குற்றங்களை விரைவில் கண்டு பிடிப்பதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, இந்த குற்றப் பிரிவுப் பகுதியை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 15] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

மேலும் தர்மபுரி நகரத்தில் ஒரே ஒரு காவல் நிலையம் மட்டுமே இயங்கி வருகிறது. இங்கு இன்னொரு காவல் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சென்ற கூட்டத்திலேயே குறிப்பிட்டேன். ஆனால் இதுவரை அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இதைப்பற்றி உடனடியாகக் கவனம் செலுத்தி இன்னொரு காவல் நிலையத்தை தர்மபுரியில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியில் இரண்டு காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று பாப்பரப்பட்டி என்ற இடத்திலும், இன்னொன்று பெண்ணாகரத்திலும் இருந்து வருகின்றன. பெண்ணாகரத்தின் காவல் நிலையத்தின் பரப்பை பொறுத்தளவில், அதிகமான அளவில் காட்டுப் பகுதி நிறைந்திருக்கிறது. ஏதாவது அங்கு குற்றங்கள் நடைபெற்றால் அங்கு போய் உடனடியாக நடவடிக்கை எடுக்க வசதியில்லாமல் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இரண்டு இடங்களில் அதாவது. ஒகனேக்கல், நெருப்பூர் என்ற இரண்டு இடங்களிலும்-பெண்ணாகரத்தின் காவல் நிலையத்தைச் சேர்ந்து இரண்டு அவுட் போஸ்ட் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே இதன் மீது அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவல் நிலையங்களில், சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, மோட்டார் சைக்கிள் கொடுக்கப்படுகிறது. இப்படி கொடுக்கப்படுவது நல்லதுதான், இருந்தாலும் ஒவ்வொரு சர்க்கிள்-க்கும் அதாவது ஒவ்வொரு இன்ஸ்பெக்டருக்கும் நான்கு சக்கர உந்து வண்டிகள் கொடுக்கப்பட்டால் குற்றங்கள் நடைபெறுகின்ற இடத்திற்கு உடனே செல்வதற்கும், அவற்றை கண்டுபிடிப்பதற்கும் வசதியாக இருக்கும், இதை செயல்படுத்த வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், காவல் துறையினர் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நிலை வரும்போது, மக்களுக்கு பாதுகாவலாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக காவல் துறையினர் நடந்து கொள்ளக் கூடாது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் காரைக்குடியில் சமீபத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள் என்றும், இதற்கு காரணமாக இருந்த காவலர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், குறிப்பாக ஜனதா கட்சியைச் சேர்ந்த கருப்பையா அவர்கள், இன்னும் மற்றவர்கள் எல்லாம் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். இதற்காக ஒரு கூட்டம் போட்டு காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பேசிய நேரத்தில், எந்தவிதமான தேவையுமில்லாமல், தடியடிப்

பிரயோகம் செய்ததோடு, பொய் வழக்குகளைப் போட்டு பலரை கைது செய்து ஜெயிலில் வைத்திருக்கிறார்கள். தங்கள் மீது குற்றத்தைச் சொல்லுகிறார்கள் என்பதற்காக காவல்துறை அதிகாரிகள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தேவையில்லாமல் வழக்குகளை போடுகின்ற நிலைமை மாறவேண்டும். இதற்காக கடுமையான உத்தரவுகளை அரசு பிறப்பிக்க வேண்டும். அதோடு தவறாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்தில், குளச்சல் பகுதியைச் சேர்ந்த கருங்கல் என்ற இடத்தில் ஒரு அவுட் போஸ்ட் ஏற்படுத்த வேண்டும் என்று கடந்த 20, 25 ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வருகிறார்கள். இருந்தும் இதுவரை செயல்முறைக்கு வரவில்லை. ஆகவே, இதில் கவனம் செலுத்தி இதை உடனடியாக செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் மதுவிலக்கை அமுல்படுத்துவதற்கு பல நண்பர்கள் குறிப்பிட்டதுபோல், இதற்கு ஒரு தனிப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஒரு பிரிவு இல்லையென்றால் நிச்சயம் எல்லா நண்பர்களும் கூறியது போல் லஞ்சம் அதிகம் பரவிவிடும். போலீஸ் நிர்வாகம் சீர் குலைந்துவிடும். இந்த வகையிலே இதை அவசியம் பிரிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 7 காவலர்கள் என்ற வகையிலே இருக்கிறார்கள். இந்த முறையானது சுதந்திரம் வருவதற்கு முன்பு ஏற்படுத்தப் பட்டது. அந்த நிலைமை இப்போதும் நீடித்துக் கொண்டு வரு கிறது. இப்போது மக்கள் பெருக்கத்தைக் கணக்கில் கொண்டு, மக்களுக்கான வசதிகளை, தேவைகளை, அதோடு குற்றங்களைக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே காவலர்களின் எண் ணிக்கையை உயர்த்துவது மிகவும் அவசியம். இதைப்பற்றி நான் இங்கே பலமுறை கூறியிருக்கிறேன். போன பட்ஜெட்டிலேகூட இந்த சட்டமன்றத்திலே பேசினேன். இந்தமாதிரி காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதனால், நாம் ஏதாவது முறையீடு சொல்லச் சென்றால், ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள் என்று சொல்லி தட்டிக் கழிக்கிறார்கள். எனவே, இந்த முறையிலே நாம் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். இதன் மூலம் குற்றச்சாட்டுகள் அல்லது முறையீடுகள் என்று நாம் எடுத்துச் சொன்னால், அவைகளின் மீது தக்க நடவடிக்கை கள் எடுக்க வசதியாக இருக்கும். எனவே, இதை இந்த அரசு முக்கியமாக கவனிக்க வேண்டும்மென்று நான் கேட்டுக் கொள் கிறேன். இதனால், காவலர் துறை, அவர்களுடைய நிர்வாகம் பெருமளவிற்கு சீர்பட்டு விடும். நான் அரசின் மீது ஏதோ

குற்றம் கூறுவதற்காக இதைக் கூறவில்லை. இந்த துறையின் நிர்வாகம் உண்மையிலேயே சீர்திருத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், இந்தக் குற்றங்கள் எல்லாம் குறைக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், களையப்பட வேண்டு மென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. க. மருதாசலம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நம்முடைய தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதும், தமிழ்நாடு தீயணைப் புத்துறை மானியக் கோரிக்கையின் மீதும் என்னுடைய சில கருத் துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பழைய ஆட்சிக் காலத்தில் காவல் துறை எப்படி தவறான பாதைக்கு இழுத்துச் செல்லப்பட்டது என்பதை எல்லாம் இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஒரு சிலர் சுயநல நோக்கத் தோடு இந்தத் துறை பயன்படுத்தப்பட்ட நிலைகளை யெல்லாம், காட்சியாகப் பார்க்கிறோம். அதை மாற்றி இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் இத் துறையை நல்ல முறையில் கையாண்டு வருகிறார்கள் தொட்டதற் கெல்லாம் தடியைத் தூக்கியது அந்தக் காலம். ஆனால் இன்றைய தினம் பொறுமையின் பொக்கிஷமாக, காந்தியாரின் வாரிசாக அறிஞர் அண்ணா அவர்களின் உண்மைத் தம்பியாக நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் இன்றைக்கு இங்கே எனக்கு முன்பு முதலிலே பேசிய, திரு. ரகுமான்கான் என்று கருதுகிறேன், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கலைஞர் ஆட்சிக் காலத்தில் காவலர்களுக்கு காவலனாக அவர் இருந்ததாகவும், இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏதோ அதற்கு மாறுபட்ட நிலைமை இருப்பதாகவும் இங்கே எடுத்துச் சென்னார்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு காவலர்களுக்கு மட்டு மல்ல, இந்த நாட்டிலே உள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களுக்கும், அவர்க ளுடைய பாதுகாவலராக, போலீஸ் துறைக்கு மட்டுமல்லாமல், இந்த நாட்டு மக்களுக்கும் காவலராக இருந்து வருகிறார்கள்.

அது மட்டுமல்ல, இந்தத் துறையிலே போடப்பட்டுள்ள புத்த கத்தைப் பார்த்துவிட்டு, இது சினிமாப் பாட்டுப் புத்தகம் போல் இருக்கிறது என்றும் சொன்னார்கள். அவர்கள் பேசுவதற்கு வேண்டுமென்றால், அது அழகாக இருக்கலாமே தவிர, இந்தப் புத்தகத்திலே நல்ல கருத்துக்கள், மக்களுக்குத் தேவையான கருத் துக்கள், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கருத்துக்கள்

இதிலே அடங்கியிருக்கிறது. இந்தப் புத்தகத்தைப் பார்த்து இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லலாமா என்பது உங்களுக்கே தெரியும்.

என்னுடைய ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த தமிழகத்திலே நடைபெற்ற காலத்திலே, எங்கள் கோவை மாவட்டத்திலே, ஈரோட்டிலே, கோவையிலே இன்றைய தினம் முதல் அமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் நடித்துள்ள ஒரு திரைப்படத்தை ஓடாமல் அமைச்சர் தடுத்து நிறுத்திய அந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி, இன்றைக்கு ஜனநாயகத்தின் சிற்பியாக நமது புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு ஒருசில மாற்றங்களை இந்தக் காவல் துறையிலே செய்ய வேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—10]

காவல் துறையைப் பொறுத்தவரை காவல் துறை அதிகாரிகள் காவல் துறையில் சேரும்போது உடல் பரிசோதனை செய்து மருத்துவர் சான்றிதழ் பெறுவதோடு நின்றுவிடுகிறது. வேலையில் சேர்ந்தபிறகு எந்தவிதமான உடல் பரிசோதனையும் செய்வதில்லை. பல காரணங்களால் அவர்கள் உடல் நலம் சரியாக இருப்பதில்லை. தினசரி கடமையைச் செய்யும் போது தவறுகளைச் செய்கிறார்கள். காவல் துறையினர் உடல் நலத்தோடு இருப்பதுதான் சமுதாயத்திற்கு நல்லது. ஆகவே, ஒவ்வொரு அதிகாரியும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை கட்டாய உடல் பரிசோதனை செய்யப்பட்டு மருத்துவர் சான்றிதழ் பெறவேண்டுமென்ற முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மது குடிக்கும் பழக்கமுடைய காவலர்களுக்குப் பதவி உயர்வு இல்லை என்ற கட்டாயமான நிலைமையைக் கொண்டுவர வேண்மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் அவரவர்கள் சொந்த ஊரிலேயே பணியாற்றினால் தான் அந்த மக்களுக்கும் அங்கே வருகின்ற பிரச்சினைகளை கவனிப்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கவனப்படுத்துகிறேன்.

காவல் நிலையங்கள் கைப்பற்றும் சாராயம், திருட்டுச் சாமான்கள் போன்றவற்றை உடனடியாக நீதிமன்றத்திலே ஒப்படைக்க வேண்டும். ஏனென்றால் காவல் நிலையத்தில் வைத்திருந்தால் மறுநாளோ, அதற்கு மறுநாளோ சம்பந்தப்பட்டவர்கள் வந்து

கேட்டால் அது இல்லை, இது இல்லை என்று சொல்லிவிடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். காவல் நிலையங்களுக்குப் பெரும்பாலும் சொந்தக் கட்டிடங்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை 100 க்கு 75 இடங்களில் காவல் நிலையங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயே தான் இருக்கின்றன. அவற்றைச் சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் காவல் துறை அதிகாரிகள் தனியார் நிறுவனங்களின் திறப்பு விழாக்களுக்குச் சென்று கலந்து கொள்கிறார்கள். தனியார் நடத்துகின்ற கடை திறப்புவிழா போன்றவற்றைக் காவல் துறை அதிகாரிகள் செய்கின்ற காரணத்தால் சம்பந்தப்பட்டவர்கள் தவறு செய்கிறபோது அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, காவல் துறை அதிகாரிகள் தனியாருக்குச் சொந்தமான கடைகள் போன்றவற்றின் திறப்புவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று அறிவிக்க வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை அதிகாரிகள் அரசு வீடு இல்லாமல் வாடகை வீடுகளில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பல பகுதிகளிலும் வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விக் கூடங்களில் பயிலுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவலர் முதல் நிலை 4309 என்றும், காவலர் இரண்டாம் நிலை 32,689 என்றும் இருப்பதைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் கிராமங்களில் நல்ல முறையில் போலீஸ்துறை பணியாற்ற ஏதுவாக இருக்கு மென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொண்டாமுத்தூர் தொகுதியில், பெரியநாய்க்கன் பாளையம், துடியலூர் என். ஜி. ஓ. காலனி தொண்டாமுத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் காவல் நிலையங்கள் உள்ளன. என்னுடைய தொகுதியில் ஏறத்தாழ 400 க்கு மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. மைல் சுற்றளவைப் பார்க்கும் போது நூற்றுக்கணக்கான மைல்கள் இருக்கின்றன. ஒரு காவல் நிலையத்திற்கு வர வேண்டுமென்றால் 10 , 15 மைல் போக வேண்டும். இந்த நிலைமைகளைப் போக்குகின்ற முறையில் என்னுடைய தொகுதியில் பல்வேறு பகுதிகளிலும் காவல் நிலையங்களை அமைத்துத் தருவதன் மூலம் அங்கே நடக்கின்ற குற்றங்களைத் தடுக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன.

அதே போல் காவலர்களுக்கும் பொதுமக்களுககும் நல்லுறவு ஏற்படுகின்ற வகையில் அடிக்கடி சந்திக்கின்ற முறையில் மக்கள்-காவலர் குழுவை அமைத்திட வேண்டும்.

காவலர்களுக்கு முதல்வரின் தங்கப் பதக்கம் வழங்கப் பட்டு வந்ததாகவும் இடையில் நிறுத்தப்பட்டதாகவும் தற்போது மீண்டும் அது வழங்கப்பட இருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்தச் சிறப்புமிக்க காரியத்தைச் செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு இருந்த ஆட்சியில் விசாரணைகள் நடந்த போது கழக உடன் பிறப்புக்களை விசாரிக்க என்று காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செனறு துன்புறுத்தும் நிலைமை இருந்தது. இந்த நிலைமைகளை யெல்லாம் மாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து தீயணைப்புத் துறை பற்றி ஒரிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தீயணைப்புத் துறையைப்பொறுத்த வரையிலே அந்த வாகனங்கள் அவசர வேலைகளுக்காகச் செல்லும்போது வழியிலே செல்லும் வாகனங்கள் வழிவிடுவதில்லை. அதன் காரணமாக தாமதமும், பொருட் சேதமும், உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. ஆகவே, வாகன ஓட்டுனர் உரிமம் வழங்கும் போது இதுபோன்ற விவரங்களை அவர்களுக்கு அறிவித்து அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வெளிநாடுகளிலே தீயணைப்பு இயந்திரங்கள் நவீன முறையிலே உள்ளன. அதைப் போன்று இங்கேயும் வாங்கி ஆபத்துக்களைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, சென்னையிலே எல்.ஐ.சி. கட்டடத்திலே தீப்பற்றி எரிந்த போது நவீன இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் அந்தக் கட்டடம் பெரும் சேதத்திற்கு உள்ளாகியது, ஆகவே நவீன இயந்திரங்களைக் கொண்டு வந்து இந்தப் பிரச்சினைகளைப் போக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கட்டுக் கொள்கிறேன்.

இங்கே பலர் பேசுகின்ற நேரத்திலே இந்த போலீஸ் நிலையங்களிலே பல தவறுகள் நடக்கின்றன. என்று சுட்டிக் காட்டினார்கள். தி. மு. க. ஆட்சி நடந்தபோது பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள்மீது போலீஸை விட்டு பொய் வழக்குப் போடப்பட்டதும் அப்படிப் போலீஸ் அதிகாரிகள் அதைச் செய்யவில்லை என்றால் அவர்களை ஒரு மணி நேரத்திற்கு ஒருதடவை போலீஸ் அதிகாரிகளை மாற்றுகின்ற நிலைமை அந்தக் கால்த்திலே இருந்தது.

ஆனால் இன்றைக்கு நீதியின் பிறப்பிடமாக நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே ஒரு சட்டமன்ற உறுப்பினர் போன் செய்தால் ஒருவர் மீது பொய் வழக்குப் போட வேண்டும், இந்த செக்ஷனிலே போடவேண்டுமென்று சொன்னால் அதை அன்றைக்குச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு தர்மத்தின் அடிப்படையியிலே நியாயத்தின் அடிப்படையிலே காவல் துறையாக இருந்தாலும் சரி, தீயணைப்புத் துறையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் துறையாக இருந்தாலும் சரி நீதியின் பக்கம் நின்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வழி நடத்தி வருகிறார்கள்.

காவல் துறையை நடத்துவதில் கண்ணியம் பின்பற்றப்படுகிறது. கடமையுணர்ச்சி காக்கப்படுகிறது. கட்டுப்பாடோடு நடத்தப்படுகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணியில் மல்லி பட்டணத்திலே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தி, பேராவூரணியில் ஒரு வட்ட ஆய்வாளர் அலுவலகம் ஏற்படுத்துவதற்கும் நிதிநிலை அறிக்கையில் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் வழிவகுத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இப்படி எண்ணற்ற சாதனைகளைச் செய்துவருகின்ற புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியிலே காவல் நிலையம் மட்டுமல்ல, எல்லா நிலையங்களுமே மிகச் சிறப்பாக விளங்குகிறது. என்று சொல்லி இந்தத் தீர்மானங்களை இந்த அவையிலே முழு மனத்தோடு வரவேற்று ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

<u>திரு. எம். ஏ. ஜெயவேலு :</u> தலைவர் அவர்களே ஒரு நாளிலே 24 மணி நேரமும் கல்லாலும், சொல்லாலும் தாக்குதலைப் பெறுகின்ற துறை காவல் துறை என்று சொன்னால் நிச்சயமாக மிகையாகாது. அப்படி இருந்தும் காவல் துறையைச் சேர்ந்த எல்லோரும் "All ranks continue to work with real and interest" என்ற முறையிலே அதனுடைய மொரேல் மிகவும் நல்ல முறையிலே இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே மகிழ்ச்சி ஏற்படுகிறது. காவல் துறையினரை டீமாரலைஸ் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்த போதிலும் காவல் துறையினர் நல்ல முறையிலே நடந்து வருவதை நினைக்கும்போது நமக்கு சந்தோஷமாக இருக்கிறது.

கடந்த 9 அல்லது 10 ஆண்டுக் காலத்திலே கற்றுக் கொள்ளக் கூடாத சில கெட்ட செய்கைகளைக் கற்றுக் கொண்டதன் காரணமாக அவைகளை ஒரே நாளிலோ ஒரு மாதத்திலோ விடமுடியாமல் நடத்திக் கொண்டிருக்கலாம். ஏதோத சில காவலர்கள் தவறு செய்து விட்டால் அதற்காக ஒட்டு மொத்தமாக காவல் துறையையே தவறு செய்தார்கள் என்று சொல்வது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. ஜெயவேலு] [1978 மார்ச் 15

காவல் துறையைப் பற்றி இந்த மன்றத்திலே அடிக்கடி புகார் கூறப்படுவதன் காரணமாக அவர்கள் சுதந்திரமாகச் செயல்படு வதிலே கொஞ்சம் தயக்கம் காட்டுகிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ளும்போது இன்னும் கொஞ்சம் அதிகமான சுதந்திரம் அவர்களுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதாவது, 'to tackle the accused person' இன்னும் கொஞ்சம் சுதந்திரம் கொடுக்க வேண்டும். அதற்காக காவல் துறையினர் மோசமாகத் தாக்க வேண்டுமென்பது அல்ல, விஞ்ஞானரீதியிலே, நல்ல முறையிலே குற்றத்தைக் கண்டுபிடிப்பார்கள் என்ற நம்பிக்கை இருப்பதால் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20].

அடிக்கடி சட்டமன்ற விடுதியில் திருட்டு போகும் நிலைமை யிருக்கிறது. அதாவது அழைக்காத விருந்தாளிகளாக, வேண் டாத விருந்தாளிகளாக இருவர் அடிக்கடி அங்கே வருகிறார்கள். ஒன்று, கூவம் நாற்றம், இன்னொன்று திருடர்கள். இரண்டையும் போக்கும் சக்தி படைத்தவர் நம்முடைய முதல்வரவர்கள். ஏனென்றால் சுகாதாரத் துறையும் அவர்கள் கையிலே தான் இருக்கிறது. அப்படித் திருட்டு வழக்குகளிலே புகார்கள் கொடுக் கப்பட்டு இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. அதன் காரண மாக அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்ற பொழுது அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்கள் உள்ளபடியே மகிழ்ச்சிகரமாக இருக் கிறது. ஏனென்றால் இந்த ரெவ்யூவில் கொடுத்துள்ள விவர தின்படி தமிழ் நாட்டிலே அதிகமாகக் குற்றங்கள் நடப்பதாக வும், குறைவாகவே பிடிக்கப்பட்டதாகவும் இருக்கிறது. சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் 1977-லே 63 சதவிகிதம் குற் றத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டில் 58 சதவிகிதம் தான் இருந்தது. மற்றபடி இலாபத்தை எண்ணி கொலை செய்ததில், ஒரு வழக்கிலே மூன்று பேர்களுக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டு விட்டது. அடுத்து, ஏதோ கொலை வழக்கைக் கண்டு பிடிக்காததற்காக இந்த நகரக் காவல் துறை யினரையே, சென்னை நகரக் காவல் துறையினரையே மிகவும் குறைவாக நினைத்து வருவதாகத் தெரிய வருகிறது. அதற்கு ஒரு காரணம், வதந்திகளைப் பரப்புபவர்களும், ரூமர் மாங்கர்ஸ் பத்திரிகைகளும் ஒரு விதத்திலே, அந்தக் குற்றவாளிகள் அங்கே கிடைக்கின்ற நேரத்திலே கூட இவர்கள் போடும் கூச்சலிலே அந்தக் குற்றவாளி தற்காலிகமாகத் தப்பித்து விட்டான், கூடிய சீக்கிரம் அவன் கண்டுபிடிக்கப்படுவான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 15] [திரு. எம். ஏ. ஜெயவேலு]

கூட்டுக் கொள்ளை என்று பார்த்தால் 1976 ஆம் ஆண்டில் அதிகமாக இருந்தது, அதாவது பத்து இருந்தது. ஆனால், 1977 ஆம் ஆண்டிலே ஒன்றுமே இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

கொள்ளை வழக்கு என்று எடுத்துக் கொண்டால் 1976 ஆம் ஆண்டு 23இல் 17 கண்டு பிடிக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டில் 20 இல் 14 கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

6 முக்கிய திருட்டு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டிலே ஏழாண்டு ஆண்டுக் காலம் தண்டனை சம்பந்தப்பட்ட குற்றவாளி களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் 4 வழக்குகள் விசாரணையிலிருக்கிறது.

காவல் நிலையங்களில் 'டவுட் சிஸ்டம்', அதாவது தரகர்கள் இருக்கிறார்கள். அதையும் தவிர்க்க அரசு ஆவன செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூட்டு உடைத்தல் அதாவது ஹவுஸ் ப்ரேக்கிங் தான்; லாக் பிரேக்கிங் என்று சொல்வதில்லை. 1977 ஆம் ஆண்டில் 714 தான்; ஆனால் 1976 ஆம் ஆண்டில் 778 இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற வழக்குகளையெல்லாம் பார்த் தாலும் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டது 1977 ஆம் ஆண்டில் தான் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு முக்கியமான விஷயம் 13 திருட்டு வழக்குகளில் 17 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களை இந்த சென்னை நகர போலீசார் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். 7 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய அறையிலே திருட்டு நடந்து விட்டதால் அதற்காக சென்னை நகர போலீசாருக்கு ஏதோ நான் ஐஸ் வைப்பதாக நினைக்க வேண்டாமென்று தெரி வித்துக் கொள்கிறேன். ஏதோ பழைய நினைப்பில், பப்ளிக் ப்ராசிகியூட்டர் என்ற நினைப்பில் கதவைத் திறந்து வைத்துத் தூங்கி கொண்டிருந்தேன், அதன் காரணமான சுமார் 800 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களைப் பறிகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. கூடிய சீக்கிரம் சென்னை நகரக் காவல் துறை யினர் அதைக் கண்டுபிடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வி. எச். எஃப். என்று இருக்கிறது. மின் அலை மூலமாகச் செய்தி அனுப்பும் அந்த முறையை மரண அறிவிப்பை அறிவிக்க வும் அதைப் பயன்படுத்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், தந்தி இல்லாத ஊர்கள்,

பல கிராமங்கள் இருக்கின்றன. இருபது மைல்களுக்கு அப்பால் சென்று தந்தி கொடுக்க வேண்டும். அத்தகைய நேரத்திலே மிக முக்கியமான, அவசரமான, அவசியமான காரியங்களுக்குப் பொது மக்கள் உபயோகிக்கும் அளவில் வி.எச்.எஃப்-ன் மூலம் போலீசார் உதவ வேண்டும். மரண அறிவிப்புக்கு மட்டும் கட்டாயமாக எல்லாக் காவல் நிலையங்களிலும் அதை அனுமதிக்க வேண்டும். அவ்வாறு அனுமதித்து அந்தச் செய்திகளை அனுப்ப உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகாரிகள், சென்ட்ரி இருக்கிறார்கள், லஸ்கர் இருக்கிறார்கள், ஆர்டர்லி இருக்கிறார்கள், அவர்களை நல்ல முறையிலே நடத்துவதில்லையென்று உணர்கிறேன். வீட்டிலே சில பல காரணங்களுக்காக மன வருத்தம் இருக்கலாம். அதே நிலையிலே 8 மணி நேரம், 10 மணி நேரம் நின்று கொண்டிருக்கிற காரணத்தாலே, அவர்கள் தற்கொலை செய்து கொள்கிற, தங்களைத் தாங்களே சுட்டுக் கொள்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அதிகாரிகளும், அமைச்சர்களும், மற்றவர்களும் இரண்டு நாளைக்கு, மூன்று நாளைக்கு ஒரு நாள் 'ஏனப்பா சௌக்கியமா' என்று கேட்டால், ஓரளவு மன ஆறுதல் இருக்கும் அவர்களுக்கு. ஆடம்பரமாக இருப்பவர்களைப் பார்த்து, சதா காத்துக் கொண்டிருக்கிற நிலை, காவல் துறையில் இருக்கிற அந்த சென்ட்ரிகளுக்கு இருக்கிறது. அதனால் மன நோய் ஏற்படுகிற நிலைமையிருக்கிறது. அதையெல்லாம் போக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில விபச்சார வழக்குகளிலே, ஆண்களைத் தண்டிப்பதில்லை என்று சொன்னார்கள். சட்டத்திலே, துணை போகிற ஆண்களுக்குத் தண்டனையில்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினரை, மக்களுடைய தொண்டன் என்று நினைக்கிற நிலைக்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீ அணைப்புப் படையைப் பொறுத்தவரை, பெட்ரோல் அவர்களுக்குக் கொடுப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இன்னும் அதிகமாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

ஸ்பெஷல் போலீஸ்—பட்டாலியன் கமாண்டன்ட்—பனிஷ்மென்ட் பதவி என்று நினைக்கிறார்கள். அந்தப் பதவியும் நல்ல பதவி ; சமூகத்திற்காகச் சேவை செய்கிற பதவியாக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே, வேலை நிறுத்தங்கள்பொழுது, காவல் துறையினர் சிறப்பாக, துடிதுடிப்போடு நின்றிருந்த போதிலும், அரசு, தமிழக முதல்வர் அதைப் பயன்படுத்தாமல், சிறப்பாக அதைத் தவிர்த்தார் என்பது உண்மையிலேயே மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. ஆகவே, அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. க. அரங்கசாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் 1978–79-ம் ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை தந்த உங்களுக்கும் அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்தினை எடுத்து வைக்க வாய்ப்பினை தந்தமைக்கும் நன்றி கூறி, என்னுடைய கருத்துக்களை அவை முன் வைக்க விழைகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு ஆளுங்கட்சி சார்பிலே பேசுகின்ற அனைத்து நண்பர்களும், கடந்த ஆட்சியின்போழுது, காவல் துறையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் மிகவும் தலையிட்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே காவல் துறையிலே ஆளுங்கட்சியினுடைய தலையீடு இல்லையென்று கூறுகிறார்கள். அவர்களுக்கு ஒரு சில விளக்கங்களையும் என் கையிலேயுள்ள புகார் மனுக்களையும் உங்கள் மூலமாக, முதல்வருக்குக் கொடுத்துவிடுகிறேன்.

குன்னூர் பகுதியிலே, கோத்தகிரிக்கு அருகாமையிலே, கினன்பர்ன் என்ற எஸ்டேட் இருக்கிறது. அங்கே, ஒருவர் தி.மு. கழக கொடி நடச் செல்கிறார். அனைவருக்குமே பொதுவான முருகன் கோவில் இருக்கிற ஒரு பகுதி அது. அந்தப் பகுதியிலே எங்களுடைய கழகக் கொடியை நடச்சென்ற நேரத்தில் ஒரு சில ஆளுங்கட்சியினர் தாக்கி அருகாமையில் இருக்கிற கோத்தகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறார்கள். அந்தப் புகார் கொடுக்கப்பட்டு, முருகன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இன்றுவரை எந்த நடவடிக்கையும் இல்லாமல், எப். ஐ. ஆர். கூட கொடுக்காத நிலைமையிருக்கிறது.

அதேபோல், உதகை தொகுதியைச் சேர்ந்த ஏலக்காடு, என். கே. தேவராசன்—தலைமையாசிரியர்—என்பவர் வீட்டிலே குடி இருக்கிற ராமசாமி என்பவர் தன்னுடைய வீட்டைச் காலி செய் என்று சொன்ன காரணத்திற்காக அவரும் அருகாமையிலிருக்கிற மஞ்சூர் காவல் நிலையத்திற்குச் சென்று வேலாயுதம் என்ற காவல் துறை அதிகாரியை அழைத்துக்கொண்டு இரவிலே சென்று, அவர்களை மிகவும் பலவந்தமாகவும் கீழ்த்தரமாகவும் பேசியதோடு மட்டுமல்லாமல் வேண்டுமென்றே அவர்மீது பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள்.

[திரு. க. அரங்கசாமி] [1978 மார்ச் 15

அதே போல், தஞ்சை மாவட்டம் வலங்கைமான் அருகிலுள்ள, ஆர். கருப்பையன் பிள்ளை வீராசாமி என்ற இளைஞனிடம் அவன் வேலை செய்கின்ற செம்மமேடு திரு. சங்கரமூர்த்தி என்பவர் ரூ. 50 மருந்து வாங்கித் தருகிறார். அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றபொழுது அவர் யாரோ ஒரு பெண்ணை அழைத்துச் சென்றதாகவும், அழைத்துச் சென்றதன் காரணமாக புகார் கொடுக்கப்பட்டு, அந்தப் புகாரின் மீது அவர் அந்தப் பெண்ணின் பெற்றோர்களை அவசரப்படுத்தி, அதற்குப் பிறகு அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்றதாகவும் புகார் கூறியிருக்கிற நேரத்தில், இராமசாமி என்பவர் காணப்படவில்லையென்று 14-3-1978-லே வலங்கைமான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்லப்பா ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால், காவல் துறை மானியத்திலே பேசுகின்ற சந்தர்ப்பம் இருக்கிறது, ஆகவே, அந்தத் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்கிறேன் என்று தலைவர் அவர்கள் பதில் கொடுத்திருக்கிறார்கள். இவையெல்லாம் ஆளுங்கட்சி தலையீடு இல்லையா என்று சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

[பிற்பகல் 12-30]

அதே நேரத்திலே இந்த வலங்கைமான் தொகுதியில் காவல் துறையில் இருந்தவர்கள் ஒரு சில அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் காவல் துறையில் தலையிட்டு அந்த வழக்குகளை வேறு திசையில் திருப்பியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல, இன்றைக்குப் பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் சட்டமன்ற விடுதியிலே 800 ரூபாய் அளவுக்கு பொருள்கள் களவு போய்விட்டது என்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் வேறு சில உறுப்பினர்கள் அறைகளிலும் நடந்திருக்கிறது. அரசு இதிலே கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டம் மலைப்பாங்கான ஒரு பகுதி. ஒவ்வொரு கிராமத்திலும் காவல் துறையிலே நாங்கள் சென்று வழக்குக் கொடுக்க செல்லும்போது அவர்கள் உடனடியாக அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வந்து விசாரிக்க முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அங்கு இருக்கின்ற துணை ஆய்வாளர்களுக்கு மட்டும் மோட்டார் பைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஜீப் வசதி கிடையாது. எனவே, அது மலைப்பகுதியாக இருப்பதால் அவர்களுக்கு ஜீப் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 15] [திரு. க. அரங்கசாமி]

அதே நேரத்தில் அந்த கிராமப்பகுதிகளில் எங்கு பார்த்தாலும் சாராயம் காய்ச்சுகின்ற தொழில்கள் மிகவும் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் வருகிறார் என்று கூட பார்க்காமல், கண்ணியம் இல்லாத அளவுக்கு எங்களுக்கு முன்பாகவே அந்த சாராயத்தை ஊற்றிக் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. புகார் கொடுத்தாலும் அந்தப் புகாரை காவல் துறையினர் எடுக்காமல் இருக்கிறார்கள். இதுபோன்ற நிலைமையை மாற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் கிராமத்தில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல்வேறு கிராமங்களிலும் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது என்னுடைய தொகுதியில் எடப்பள்ளி கிராமத்தின் அருகில் பந்துமி என்ற ஏரி இருக்கிறது. அங்கே கடையிலே வேலை செய்து கொண்டிருந்த ஒருவனை அடித்து கொலை செய்து அந்த ஏரியில் தூக்கிப் போட்டு விட்டார்கள். இது குறித்து அவரங்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில், அந்தப் பிணத்தை எடுத்து, மருத்துவப் பரிசோதனை செய்து தற்கொலை என்று கூறி, வழக்கைப் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார்கள். ஆனால், அந்தக் குடும்பத்தில் உள்ளவர்கள், அந்த பையனின் பெற்றோர்கள் அவன் கொலை செய்யப்பட்டான் என்கிற புகாரை இந்த தமிழகத்தின் பெரிய போலிஸ் அதிகாரியாக மிகப் பெரிய பொறுப்பை பெற்றிருக்கிற ஐ. ஜி. அவர்களிடம் கொடுத்தார்கள். அதனை கவனித்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமைகிறேன்.

*<u>திரு. மு. அம்பிகாபதி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காவல்துறை மற்றும் தீயணைப்பு சம்பந்தமான இந்த மானியக் கோரிக்கைகள் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, சட்டம், ஒழுங்கு அமைதியை நிலைநாட்டவும், குற்றங்கள் நடைபெறுவண்ணம் பார்த்துக் கொள்ளவும், துப்புத் துலக்கவும், மக்களுக்குப் பொதுவான பணிகளைச் செய்தல் போன்ற கடமைகளை காவல் துறை ஆற்றி வருவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

காவல்துறை என்பது வெள்ளையர்கள் காலத்தில் மக்களை ஒடுக்குவதற்காக, பயன்படுத்தப்பட்ட ஒரு கருவியாக அமைந்து இருந்தது. அப்படிப்பட்ட கருவி வெள்ளையர்களுடைய காலத்தில் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களை ஒடுக்கவும், சிறையில் போடவும், சுட்டுக் கொலை செய்யவும், இப்படிப்பட்ட அடுக்குமுறை இயந்திரமாக அது பயன்படுத்தப்பட்டு வந்தது.

சுதந்திரத்திற்குப் பிறகும் நம்முடைய நாட்டில் உள்ள மக்கள் அந்த எண்ணத்தின் காரணமாக காவல்துறையைச் சேர்ந்தவர்களைக் கண்டாலே பீதி அடைகின்றனர். பயப்படுகின்றனர். அந்த நிலைமை இன்றும் இந்த நாட்டில் நிலவுகிறது என்பதை நம்முடைய கவனத்தில் கொள்ள வேண்டும்.

சுதந்திரத்திற்குப் பிறகு காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலும் சரி, மக்களுக்கு எதிராக துப்பாக்கி வெடித்தது என்பதையும், சிறைச்சாலைகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சி காலத்திலும் தொழிலாளர்களுக்கு எதிராக—தொழிலாளர்கள் போராட்டம் நடத்தப்பட்டபோது—துப்பாக்கி வெடித்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் விவசாயப் போராட்டம், மாணவர்கள் போராட்டம் நடந்த நேரத்தில் துப்பாக்கி வெடித்தது. அதேபோன்று ஓரிரு சம்பவங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் போதும் நடந்து இருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும்.

லெனின் அவர்கள் கூறியிருக்கிறார்கள். சிறைச்சேதம், துப்பாக்கி, லத்தி, இவைகளை உழைக்கின்ற வர்க்கத்தில் பிறந்த பிள்ளைகளின் கையில் அளித்து, உழைக்கின்ற வர்க்கத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது என்று எல்லாம் சொன்னார். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் துப்பாக்கி வெடிக்க வில்லையா? அப்படியிருந்தால் அவர்கள் அதையும் அல்லவா சேர்த்து சொல்லியிருக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக துப்பாக்கி வெடிக்காது. எனவே, தோழர் லெனின் அவர்கள் உழைக்கும் வர்க்கத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு சீருடை அணிவித்து..............

திரு. ர. ஜெபமணி : கம்யூனிஸ்ட் ஆட்சி கேரளத்தில் நடைபெற்றபோது எந்த முதலாளியையும் சுட்டார்கள் என்று நான் பார்க்கவில்லை. அங்கேயும் தொழிலாளர்கள்தான் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : முதலாளிகளை சுடுகிற அவசியம் ஏற்படவில்லை என்று நினைக்கிறேன். * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப்பேரவை தலைவரவர்களே, * * *
என்று அவர் பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அந்த வார்த்தையை உபயோகிக்கக்கூடாது. * *
என்று அவர் சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்க உத்தர விடுகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : குறிப்பாக, விவசாயிகள் வீட்டுப் பிள்ளைகள் தொழிலாளர்கள் வீட்டுப் பிள்ளைகள் ஆகியோரை சீருடை அணிந்து துப்பாக்கி பிடித்த, லத்தி பிடித்த போலீஸ்காரர்கள் சாதாரண உழைக்கின்ற மக்களுக்கு எதிராக பயன்படுத்துவது என்பது தொடர்ந்து வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் இருந்து நடைமுறையாக இருந்து வரும் ஒரு விஷயம். அதைத்தான் நான் முன்னாலேயே குறிப்பிட்டேன். இன்று சாதாரண சின்ன ஏழை எளிய மக்கள் மீது சந்தேகக் கேஸ்கள் போடப்படுவது என்பது தொடர்ந்து இருந்து வருகிறது. சாதாரணமாக சென்னைக்கு ஒருவன் புதிதாக வந்து இருப்பானானால் அவனைச் சந்தேக வழக்கில் போடுவது, உடனே அவனை சிறையில் அடைப்பார்கள். அவ்விதம் அவன் சிறையை விட்டு வெளியே வந்ததும், எந்தக் காவல்துறை வழியாவது சென்றால், அவனைப் பிடித்து எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்க வேண்டியது, உடனே மறுபடியும் அவனை உள்ளே தள்ளுவது, சந்தேகக் கேஸ் போட்டு, இது தொடர்ந்து நடந்து வருகிறது.

காவல்துறை நிலையத்தின் அறிக்கையில் 1976-ஆம் ஆண்டிலும் 1977-ஆம் ஆண்டிலும் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. 1976-ஆம் ஆண்டைவிட 1977-ஆம் ஆண்டில் வழக்குகள் அதிகமாகப் பதிவாகியிருக்கிறது. 1976-ஆம் ஆண்டில் 31,377 வழக்குகள், 1977-ல் 39,698 வழக்குகள். எனவே, இந்த வழக்குகளைப்பார்த்தால், 1977-ஆம் ஆண்டில் அதிகம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இந்த 1967-ஆம் ஆண்டில் எந்த மாதம் வரையில் என்பதை மாண்புமிகு உறுப்பினர் புரிந்து கொண்டாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 12·40]

திரு. மு. அம்பிகாபதி : புரிந்து கொண்டேன். இந்த அறிக்கையிலே 1977-ஆம் ஆண்டு 8,321 வழக்குகள் கிட்டத்தட்ட 26·5 சதவீதம் அதிகம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதிலே

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

முக்கியமாக நான் முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்த வழக்குகளில் பல வழக்குகள் மதிப்பிற் குரிய ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி,—திருநெல்வேலி மாவட்டத்தில்—காவல்துறை அதி காரிகள் தவருன வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி, இராமச்சந்திரன் :</u> மீண்டும் சொல்கிறேன். 1966–67-ல் என்று சொல்லும்போது 1967 மார்ச் மாதத்தோடு முடிகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : நான் 1966–67-ஐப்பற்றிச் சொல்ல வில்லை. 1976–77பற்றிச் சொல்கிறேன். அவர்கள் சொன்ன மாதிரி சில தவருன வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரர்களே, 1976-77 என்று வந்தாலும் 1977 மார்ச் 31-ந்தேதி வரைதான்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : மிகவும் சரி. இந்த வழக்குக்ள் அதிகரித்திருப்பதற்கு முக்கியமான காரணம் சில தவருன வழக்கு கள் பதிவு செய்யப்பட்டதுதான் என்பதைக் குறிப்பிட விரும் கிறேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் லக்ஷமாங்குடி காவல் நிலையத்தின்கீழ் வருகிற வேளுக்குடி என்ற கிராம விவசாயத் தொழிலாளர்கள்மீது எத்தனை செக்ஷன்கள் உண்டோ அத்தனை செக்ஷன்களின் கீழும், செக்ஷன்கள் 147, 176, 326 என்று பல்வேறு செக்ஷன்களின்கீழ் பொய்யான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

அதைப்போல திருச்சி முத்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் மீது, புயல்—வெள்ளம் நேரத்தில் அத்துமீறி வீடு கட்டினார்கள் என்று கூறி, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் பாபனாசம் பகுதியில் தட்டிமான்படுகை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது கபிஸ்தலம் காவல்நிலையத்தார் வழக்குகள் பதிவு செய்திருக்கிறார்கள்.

அதைப்போல கோவை மாவட்டத்தில் லட்சுமி மில்ஸ் தொழிலாளர்கள் மீதும் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன.

இப்படி பல்வேறு இடங்களில் உண்மைக்குப் புறம்பான வழக்கு களை பதிவு செய்து, வழக்குகளின் எண்ணிக்கையை இப்படிக் கூட்டியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காக இவைகளைச் சொல்கிறேன்.

இன்னும் குறிப்பாக, சென்னையில் மாணவர்கள்மீது இருக்கிற வழக்குகள், கோட்டைப்பட்டினம், மல்லிப்பட்டினம் மீனவர்கள் மீது இருக்கிற வழக்குகள், போன்றவைகளைக் குறிப்பிடலாம். இன்னும் சொல்லப் போனால் தர்மபுரி மாவட்டத்தில் எங்கள் கட்சி மாவட்டச் செயலாளர் தோழர் முத்துமீதே வழக்கு போடப் பட்டிருக்கிறது. எல்லா வழக்குகளும் உண்மைக்குப் புறம்பாகப் போடப்பட்டிருக்கின்றன. அத்தகைய வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். 1978-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 11-ஆம் நாள் அன்று என்னை சட்டமன்றத்தில் காண வந்த என். ஜி. ஓ. வினர் <u>ரவி, செல்வம், ஜெகந்நாதன்</u> மீது வழக்குப் போட்டு, கைது செய்திருக்கிறார்கள். அதையும் வாபஸ் வாங்க வேண்டும்.

குறிப்பாக, காவல்துறையைப் பொறுத்தவரையில் நாணய மாணவர்கள், நல்லவர்கள், யோக்கியமானவர்கள் எல்லாம் அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதேநேரத்தில் லஞ்சம் வாங்கு கினவர்களும், பொய் வழக்குகள் போடுகின்றவர்களும் இருக்கி றார்கள் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும். சில அதிகாரிகள் எந்த விதமான லஞ்சமும் வாங்காமல், தங்களுக்குக் கிடைக்கின்ற ஊதியத்தில் வாழ்க்கை நடத்துகின்ற நிலைமையை நான் கண்டிருக்கிறேன். அதேநேரத்தில் ஏதாவது ஒரு வழக்கு கொடுத்தால் கொடுத்தவரிடமும் பணம் வாங்குவது, வழக்கில் சம்பந்தப்பட்டவரிடமும் பணம் வாங்குவது என்று இரண்டு பேர் களிடமும் பணம் வாங்குவதற்காகவே வழக்குகளைப் பயன் படுத்துகின்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதையும் நான் கண்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சில முக்கிய மான விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். காவல்துறையின் பணியில் வாரிசுதாரர் இல்லாமல் இறந்து போனவர் பிணத்தை புதைக்க அல்லது எரிக்கக்கூடிய பொறுப்பை காவலரிடம் ஒப் படைக்கிறார்கள். அதற்கு செலவுக்காக 12 ரூபாய் கொடுக்கப் படுகிறது. எரிக்கக்கூடிய அல்லது புதைக்கக்கூடிய இடத்திற்குக் கொண்டுச் செல்வதற்கே 10, 12 ரூபாய் வண்டிக் கூலி கொடுக்க வேண்டும். பிறகு, எரிப்பதற்கு 15, 20 ரூபாய் கொடுக்க வேண் டும். ஆக, 45, 50 ரூபாய் தேவைப் படுகிறது. அரசாங்கம் கொடுப்பது 12 ரூபாய்தான். அதை மாற்றி, செலவாகின்ற பணம் முழுவதையும் கொடுக்கவேண்டும்.

எஸ்.ஐ., ஏ.எஸ்.ஐ. போன்றவர்களுக்கு உடைக்கான அல வன்ஸ் சரியாக வழங்கப்படவில்லை. இந்த அலவன்ஸ் கூட்டிக் கொடுக்க வேண்டும்.

காவலர்களுக்கு மாதம் நான்கு நாட்கள் விடுப்பு இருந்தாலும், அந்த நாட்களில் அவர்கள் வேலைக்கு வந்தால் $4 \times 2 = 8$ (நாலு-இரண்டு =எட்டு) ரூபாய் தான் கொடுக்கப்படவேண்டும். அப்படிக் கொடுப்பதில்லை சற்று அதிகமாகப்படி கொடுக்கப்படவேண்டும்.

காவல் துறையில் இருக்கின்ற காவலர்களை எட்டு மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்கக்கூடாது, என்ற முறையை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் வார விடுப்பில் வேலைக்கு வந்தால் டபுள் சம்பளம் அதாவது இரட்டை ஊதியம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் காவலர் குடியிருப்பில் எல்லோருக்குமாகச் சேர்த்து ஒரே மீட்டர் வைத்திருக்கிறார்கள். அந்த ஒரே மீட்டரைப் பார்த்து அதன்படிதான் எல்லோரும் மின் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கிறது. வீட்டைப் பூட்டி வெளியூருக்குச் சென்று விட்டால்கூட பூட்டப்பட்ட அந்த வீட்டுக்குக்கூட மின் கட்டணம் மாதம் ரூ. 30 ரூ. 40 என்று கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இம்முறையை மாற்றி காவலர் குடியிருப்பில் தனித்தனியாக மீட்டர் பொருத்தப்படவேண்டும்.

ஆர்ம்டு ஃபோர்ஸில் வேலை செய்பவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும், அலவன்ஸும் கொடுக்கப்படாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். எட்டு மணி நேரத்திற்கு மேல் காவலர்கள் வேலை செய்யக்கூடாது என்ற முறையை அமல்படுத்த வேண்டும். பதவி உயர்வுகள் சர்வீஸ் அடிப்படையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 40 வயதிற்கு மேலும் அவர்கள் பேரேடுக்கு வரவேண்டுமென்று கூறுகின்ற முறையை மாற்றியமைக்கவேண்டும். அதற்கான உத்தரவு இருந்தால் அதனை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு மற்றும் மூர் மார்க்கெட் ஆகிய இடங்களிலுள்ள சில சிறு கடைகளில் பணம் வசூல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. அதை வசூலிப்பது யார்? போலீஸ்காரர்கள்தான் வசூல் செய்கிறார்களா? அல்லது வேறு யாராவது வசூல் செய்கிறார்களா? வசூல் செய்த பணத்திற்கு ரசீது கொடுக்கப்படுகிறதா என்பவற்றை எல்லாம் பரிசீலித்து மாண்புமிகு முலமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையிலே அதிகாரிகள் அனைவருக்கும் 8 மணி நேர வேலையை ஏற்படுத்துவதுடன் ஷிப்ட் முறையையும் அமல்படுத்த வேண்டும். அவர்கள் கடுமையாக உழைக்கின்ற நிலையிலிருந்து விடுபடுகின்ற தன்மையிலே இது ஏற்படுத்தப்படவேண்டும்.

காவல் துறை என்பது மக்களுடைய நண்பர்கள். சேவகர்கள். மக்களுக்கு பணியாற்றுகின்றவர்கள் என்கின்ற உணர் வினை உருவாக்க வேண்டுமே தவிர இன்றைச்கு காவல் துறையைக் கண்டாலே பீதி அடைகின்ற நிலைதான் இருக்கிறது. அதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை மானியக் சோரிக்கையிலே பேசும்போது கூட குறிப்பிட்டேன் சைக்கிளில் டபிள்ஸ் செல்வது பற்றி. இது பற்றி சற்றுத் தெளிவாகவே குறிப்பிட்டேன். டெல்லியிலே சைக்கிளிலே 3 பேர் போகிறார்கள். பம்பாயிலே 5 பேர் போகிறார்கள். விஜயவாடாவிலே ஆறு பேர் கூட போகிறார்கள். அங்கே அவர்களைக் கூப்பிட்டு நீங்கள் ஏன் 6 பேர்கள் போகிறீர்கள்? ஏன் 7 பேராக போகக்கூடாது என்று கேட்கிறார்கள். ஆகவே சைக்கிளில் டபிள்ஸ் போவதைக் குற்றம் சொல்லக்கூடாது. அவனுக்கு பலம் இருக்கிறது. ராமசாமி சைக்கிளில் குப்புசாமியை ஏற்றிக்கொண்டு செல்கிறான். அவனுக்கு உடல் பலம் இருக்கிறது. கூட ஒருவனை வைத்து மிதித்துக்கொண்டு செல்கிறான். ஆகவே சைக்கிளில் டபிள்ஸ் போகலாம் என்று அறிவிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவரவர்களே. இன்று மாண்புமிகு முதலமைச்சரவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்ற காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே காவல் துறை மானியக் கோரிக்கையில் மிக நல்ல பல திட்டங்களை காவல் துறையினர் செயல்படுத்துவதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். திருடுகள் முதலியவற்றைக் கண்டறிவதற்கு பல நல்ல கருவிகளை நமது மாநிலத்திலே அறிமுகப்படுத்துவதற்கு இன்றைய முதலமைச்சரவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற சிரமத்திற்கு நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

காவல் துறை அதிகாரிகளில் நல்ல சேவைகளைச் செய்கின்ற பலர் இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் என்னுடைய தொகுதியாகிய கிருஷ்ணகிரியில் நடக்கின்ற சில குறைபாடுகளை இங்கே அமைச்சரவர்களுக்கு எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன். அங்கே வெள்ளைக்காரர்கள் காலத்திலே எத்தனைப் போலீஸ்

[திரு. க. இரா. சின்னராசு] [1978 மார்ச் 15

காரர்கள் போட்டார்களோ அதே அளவுக்குத்தான் இன்று வரைக்
கும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நடக்கின்ற பல
களவுகளையும் தகராறுகளையும் நேரிலே கண்டறிவதற்கு எந்த
நேரத்திலே போன் செய்தாலும் அங்கே போலீஸ்காரர்கள் இல்லை
என்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல்— 12-50)

ஆனால் அந்தக் காலத்தில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மட்டும்
இருந்து கொண்டிருந்தார். இப்போது அங்கே துணை மாவட்ட
அதிகாரி ஒருவரும், சர்கிள் இன்ஸ்பெக்டர், துணை சர்கிள் இன்ஸ்
பெக்டர் இவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். எல்லா
ஆள்களையும் அனுப்பிவிட்டால் இந்த போலீஸ் ஸ்டேஷனில் எந்த
நேரத்திலும் ஆள்கள் இருப்பதில்லை என்ற நிலைதான் இருக்கிறது.
ஆகவே, கிருஷ்ணகிரி போலீஸ் ஸ்டேஷனில் அதிகப்படியான காவ
லர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கிருஷ்ணகிரி நகரில் ஒரு நகர் காவல் நிலையம்
ஏற்படுத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாக அரசைக் கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அங்கு அப்படி ஒரு காவல் நிலையத்தை
ஏற்படுத்திக் கொடுத்தால் நகரத்தில் ஏற்படுகிற திருட்டுகள்
போன்ற குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் நல்ல வசதியாக இருக்கும்.

நம் காவல் துறை அதிகாரிகள் ஆங்காங்கு கிராமப் புறங்களில்
சாராயம் காய்ச்சுபவர்களிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டு அவர்கள்
சாராயம் காய்ச்ச இவர்கள் துணை நின்று கொண்டிருக்கிறார்கள்.
அதை நேரிலே கண்டு காவல் துறை அதிகாரிகளிடம் சட்ட
மன்ற உறுப்பினர் என்ற முறையில் தகவல் கொடுத்தால் அதை
சரியாகப் போய் பிடித்துக்கொண்டு வந்து அவர்கள் மீது வழக்கு
போடுவதில்லை. நாங்கள் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவர்
கள் கேட்பதில்லை. இந்த நிலை தமிழகத்தில் பெரும்பாலான
பகுதிகளில் கிராமப் பகுதிகளில் நடந்துகொண்டிருக்கிறது என்
பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துச்
சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் சில இடங்களில் சென்று காவல் துறை அதிகாரிகளிடம்
பெயரோடு எழுதிக் கொடுத்தும்கூட அந்த இடத்தில் அவர்கள்
மாமூல் வாங்குகிறபோது இந்தத் தொகுதி சட்ட மன்ற உறுப்பி
ருக்கும் அந்த மாமூலில் பங்கு இருக்கிறது என்று ஒரு தவறான
கருத்தை பொதுமக்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
இந்த நிலையை மாற்ற வேண்டும்.

போலீஸ் அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகள் செய்வதை
கண்டுபிடிக்க தனியான ஒரு இலாகாவை உருவாக்கித் தருவதா
அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் பாராட்டி வர

978 மார்ச் 15] [திரு. க. இரா. சின்னராசு]

றேன். அதே நேரத்தில் எங்கள் ஊரில் இருக்கிற சர்கிள் இன்ஸ்
பெக்டர் எந்த நேரத்திலும் நகரைச் சுற்றிவந்து * * * *
தையெல்லாம் அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர்
அவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகளை அதிகாரிகளுக்கோ அல்லது
அமைச்சர்களுக்கோ எழுத்து மூலம் எழுதிக் கொடுக்கலாமே தவிர
அவற்றைப் பற்றி இங்கே வந்து பேசுவது என்பது நல்லதல்ல.
அதை விட்டுவிட்டு வேறு பிரச்னைக்கு வாருங்கள்.

*** அப்படி இப்படி என்று பேசியது அத்தனையும் அவைக்
குறிப்புலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : பாய்ன்ட் ஆப் ஆர்டர், இப்பிரச்னைமீது
எழுப்புகிறேன் என்று நினைக்க வேண்டாம். ஒரு குறிப்பிட்ட
அதிகாரியின் பெயரைச் சொல்லக்கூடாது என்று தீர்ப்பு சொன்னீர்
கள். கரெக்ட். அவர் வகிக்கக்கூடிய பதவியைச் சொல்லலாம்,
செய்கிற தவறுகளைச் சொல்லலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.
உறுப்பினர் அவர்கள் சொன்னது எப்படி அன்-பார்லிமென்டரி
யாகும். ஆளும் கட்சிக்குச் சாதகமாக இல்லாதது, ஒரு குற்றச்
சாட்டு சொல்கிறார், அதை நீக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள்.
எழுதிக்கொடுக்கலாம் என்று சொன்னீர்கள், எழுதிக்கொடுத்தால்
நடவடிக்கை எடுப்பதில்லை. ஆனால் சபையில் சொன்னால் அரசாங்
கத்தின் கவனத்திற்கும் வரும், அதிகாரிகள் கவனத்திற்கும் வரும்.
பொது மக்கள் கவனத்திற்கும் வரும் என்பதால் இங்கே சொல்லப்
படுகிறது. ஆகவே அவர்கள் சொல்லியது அன்-பார்லிமென்டரி
யல்ல, அதை நீக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, இப்போது பேசியது எல்லாம் எங்களுக்குச் சாதக
மானவை என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள்
தெரிந்து கொள்ள வேண்டும். பாதகம் என்பதற்காக நடவடிக்
கைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை.
கண்ணியமான வார்த்தைகளைக் கொண்டே இதே கருத்தைச்
சொல்லலாம். அந்த வார்த்தைகள் இங்கே பதிவேட்டில் ஏறுவது
நமக்கெல்லாம் மரியாதையாக இருக்காது என்பதால் இதை
சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்ணியமான வார்த்தை
கள் நடவடிக்கைக் குறிப்பில் ஏற வேண்டும் என்பதற்காக சொன்
னேனே தவிர—சில வார்த்தைகள் நடை முறையில் ஏற்றுக்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

கொள்ளக் கூடியவை அல்ல—அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் ஏறக்கூடிய வார்த்தைகள் அல்ல என்பதால் நீக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, அன்-பார்லிமென்டரி வார்த்தைகள் என்ற அர்த்தத்தில் செய்யவில்லை.

திரு. க. இரா. சின்னராசு : அடுத்து, தீயணைக்கும் படைத் துறையைப் பொறுத்தவரையில், கிருஷ்ணகிரியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிலையத்திற்கு கட்டிட வசதியில்லை. மேலும் ஒரே ஒரு வண்டிதான் அங்கு கொடுத்திருக்கிறார்கள். அதனால் அங்கு சரியான முறையில் தீயணைப்பு நிலையம் இயங்கமுடியவில்லை. கிருஷ்ணகிரியைச் சுற்றியுள்ள 30 மைல் அளவுக்குள்ள கிராமங்களில் ஏதாவது தீவிபத்து ஏற்பட்டால் உடனடியாக போய் சேர முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இன்னும் 2 வண்டிகள் இந்த தீயணைப்பு நிலையத்திற்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிட வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கரு. இராம. கரியமாணிக்க அம்பலம் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கும் போலீஸ் மான்யத்தின் மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய சில அங்கத்தினர்கள் காரைக்குடியில் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அது சம்பந்தமாக சில தகவல்களை இந்த மன்றத்தில் வைக்க விரும்புகிறேன்.

* * * * *

* * * உண்மையிலேயே அப்படி கற்பழிக்கப்பட்டிருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் * * இவ்வளவு பெரிதாக ஆக்கி, அதற்கு அரசியல் சாயம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது நாட்டில் இப்போது, மது, சூது, லஞ்சம் அதிகமாயிருக்கிறது. இதற்கு காரணம் போலீஸ் டிப்பார்ட்மெண்ட்தான் என்ற குற்றச்சாட்டை நான் இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். மது, வெள்ளம் போல் பெருகியிருக்கிறது.......

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுவரை பேசிக்கொண்டு வந்த போது கற்பழிக்கப்பட்ட சம்பவம் பற்றி சொல்லும்போது, அந்த பெண் * * * என்று சொல்லுகிறார். அப்படியானால் அப்படி நடந்த சம்பவம் சரிதான் என்று சொல்லுகிறாரா? * * பெண்ணை கற்பழித்தது சரிதான் என்று வாதாடுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கரு. இராம. கரியமாணிக்க அம்பலம் : அப்படி தவறு நடந்திருந்தால் அதற்காக நடவடிக்கை எடுப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் * * வைத்துக்கொண்டு இவ்வளவு தூரம் அரசியல் சாயம் பூசி பெரிதாக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்ராயம்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, பெரியவர் கரியமாணிக்க அம்பலம அவாகள், கற்பழிக்கப்பட்ட பெண் * * என்று குறிப்பிட்டுள்ளார்: இந்த * * இருந்தால் என்ன செய்திருப்பார்களோ, அவ்வளவு பயங்கரமாக இருக்கிறது....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பெரியவர் கரியமாணிக்க அம்பலம் அவர்கள் இதைப்பற்றி தெளிவாக குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட தவறு நடந்திருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிறார்கள், பிறகு அவர் சொன்னது, * * பெண் விஷயத்தில் அரசியல் சாயம் பூச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் குறிப்பிட விரும்புவது * * பெண்ணாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி. அவர்களுடைய மானத்திற்கு தக்க மதிப்பு இந்த நாட்டில் இருந்தாக வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கரியமாணிக்க அம்பலம் அவர்கள் கற்பழிக்கப்பட்ட * * * இதனை இத்தனை பெரியதாக ஆக்கி பேசிவிட்டார்களே என்று வியப்பு தெரிவித்தார்கள். * * இந்த கற்பழிக்கப்படும் விஷயத்தில் ஏதாவது வித்தியாசம் இருக்கின்றதா என்பதை தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . முதலமைச்சர் அவர்கள் தான் இதைப்பற்றி சொல்லிவிட்டார்களே, அதன் பின் நீங்கள் என்ன அர்த்தத்தோடு எழுந்து பேசுகிறீர்கள் என்று

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தெரியவில்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள், அதற்குப் பின் இப்போது அதற்கு என்ன பொருள் என்று கேட்டால், என்ன பதிலை சொல்ல முடியும், தயவு செய்து உட்காருங்கள்.

[பிற்பகல் 1—00]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, * இருந்தாலும் கூட, இது தப்பு எனபதைத் தான் பல்வேறு அங்கத்தினர்கள் கூறினார்கள். ஆனால், திரு கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் எடுத்துக் கூறிய கருத்தில் ஏதோ ஜஸ்டிபிகேஷன் இருப்பதுபோல் எடுத்துக் கூறியதைத்தான் ஆட்சேபிக்கிறேன். ஆகவே.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து அமருங்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரண்டையும் எடுத்துச் சொல்லி விளக்கியதோடு, யாராக இருந்தாலும் பெண்களின் மானத்தைக் காப்பாற்றுவது இந்த நாட்டின் கடமை, இந்த அரசின் கடமை என்று சொல்லி முடித்த பிறகு அதைப்பற்றி மறுபடியும் இப்போது தாங்கள் அதே பிரச்சினையை எழுப்புவது என்ன நியாயம்? கரியமாணிக்கம் அம்பலம்.

(திரு. ர. ஜெபமணி எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். நேரமாகிறது. பேசுவதற்கு உங்கள் பெயர் கடைசியில் ஆபத்தான இடத்தில் இருக்கிறது. கடைசியிலே உங்களுக்கு 5 நிமிஷங்கள்கூட கிடைக்காது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் * * * * * * என்றெல்லாம் பிரச்னையை விளக்கினார்கள். சமீபத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இங்கே * * * பற்றிப் பேசியது நீக்கப்பட்டது. அதைப்போலவே இதையும் நீக்கம் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவர் இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது தவறான வார்த்தைகளோ, கடுமையான வார்த்தைகளோ அல்லது அன்-பார்லிமெண்டரி வார்த்தைகளையோ உபயோகிக்கவில்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

*திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கைப் பொறுத்த வரைக்கும் எங்கு பார்த்தாலும் குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன. அப்படி அதிகமாக இருப்பதற்குக் காரணம், போலீஸ்காரர்களுக்கு வாடிக்கை கொடுப்பதுதான். இதனால், மது காய்ச்சுவது மிக அதிகமாக போய்க் கொண்டிருக்கிறது. மந்திரிகள், எம்.எல்.ஏ-க்கள் சிபார்சு செய்தாலும் கூட, இந்தப் போலீஸ்காரர்கள், போலீஸ் டிபார்டுமெண்டு நடவடிக்கை எடுப்பதில்லை. இந்த மது காய்ச்சுபவர்கள் சொன்னால், உடனே செய்வார்கள். அதற்குக் காரணம், அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். எனவே, இதை எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் நன்றாக யோசித்து, இதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், இந்த மது காய்ச்சுபவர்கள், கள் இறக்குபவர்கள் பற்றி ரிப்போர்ட்டு செய்தாலும், உடனே போலீஸ் ஸ்டேஷனிலே உள்ளவர்கள் இந்த எம்.எம்.ஏ.-தான் தொந்தரவு செய்கிறார், உங்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்கிறார் என்று தகவல் கொடுக்கிறார்கள். அதன் மூலமாக எங்களுக்கு ஆபத்து கூட ஏற்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு சரியான பாதுகாப்பு இந்த அமைச்சரவை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், மது காய்ச்சுபவர்கள் பக்கம் குடிப்பவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆபத்து இருக்கிறது இந்த நாட்டிலே. அவர்கள் பக்கம் போலீஸ்காரர்களும் இருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்குத் தாங்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (மணியடித்து) சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்பொழுது தானே ஆரம்பித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களைக் குற்றம் சொல்லவில்லை. மொத்தம் 10 நிமிஷங்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஆகவே, எங்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தேவகோட்டையிலே ஒரு கலை விழா என்ற பெயராலே கடந்த ஒன்றரை மாதமாக சூதாட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. எல்லாக் கட்சிக்காரர்களும் ஆட்சேபணை தெரிவித்தும் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படி

கலை விழா என்ற பெயராலே நடக்கும் சூதாட்டங்களைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களிலே எங்கு பார்த்தாலும், திருவிழாக்கள், கூட்டங்கள், நாடகங்கள் நடைபெறுகின்ற இடங்களிலே எல்லாம் இந்த சூதாட்டம் நடைபெறுகின்றது. இதற்குக் காரணம், இந்தச் சூதாட்டக்காரர்கள் போலீசாருக்கு வாடிக்கை கொடுக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு சூதாட்டத்திற்கும் போலீசாருக்கு அவர்கள் வாடிக்கை கொடுப்பதால், அவர்களுக்கு இந்த போலீஸ் டிபார்டுமெண்டே பாதுகாப்பு கொடுக்கிறது. ஆகவே, இந்த சூதாட்டம் நடைபெறாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகோட்டையிலே ஏராளமாக சாராயம் காய்ச்சுவது நடந்து கொண்டிருக்கிறது. அதிலும், ஒரு பார்ட்டி லட்சக் கணக்காக சம்பாதித்திருக்கிறது. ரிப்போர்டு செய்தாலும்கூட, அவரைப் பிடிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதில்லை. பல லட்சக் கணக்கிலே சம்பாதித்திருக்கிறார். அப்பேர்ப்பட்டவர் மீது நடவடிக்கை எடுத்து, அப்படிப்பட்ட சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி சாராயம் காய்ச்சுகின்ற கம்பெனிகள்மீது கடுமையான தண்டனை கொடுப்பதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த கள் இறக்குவதற்கு பனை மரங்கள் கொடுக்கிறார்கள், அப்படி மரம் கொடுக்கின்றவர்கள் மீதும் கேஸ் போட வேண்டும். அப்படி கேஸ் போட்டால் கொஞ்சம் குறைவதற்கு ஆரம்பிக்கும். இதையும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பிராந்தியத்தில் இருக்கிற கர்ணம், தலையாரி போன்றவர்களை இதற்குப் பொறுப்பாக்க வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது சாராயம் காய்ச்சும் கம்பெனி என்று சொன்னார். அப்படி ஏதாவது சாராயம் காய்ச்சும் கம்பெனிக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஒவ்வொருவரும் இப்படி விளக்கம் கேட்டுக் கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை. அவர் பேசுவதற்கு அமைச்சர் பதில் கூறும்போது தேவைப்பட்டால் பதில் சொல்லிக் கொள்வார்கள். அவர் பேசுகின்ற முறையிலே அவர் கூறுகிறார். இப்படி ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்படிப்பட்ட நபர்கள் சட்டத்திற்கு அஞ்சுவதில்லை. பொதுமக்கள் இவர்களைக் கண்டு அஞ்சக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கு கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைத் தடுக்க கிராமக் கட்டுப்பாடுகள் அதிகமாகச் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். நான் கூட பரிட்சார்த்தமாக 20 கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரு கட்டுப்பாட்டைச் செய்திருக்கிறேன். அங்கு சாராயம் காய்ச்சுவதும் இல்லை, குடிப்பதும் இல்லை. அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளைச் செய்ய முதல் அமைச்சர் அவர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் ஸ்டேஷன்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் கேஸ் கொடுக்கப் போகும்போது அவர்கள் மரியாதையாக நடத்தப்படுவதில்லை. கேஸ் கொடுத்தால் டாக்சி அவர்கள் செலவில் எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டும். அப்படியானால்தான் போகிறார்கள். போனவுடன் எதிரிகளிடத்தில் பணத்தை வாங்கிக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லஞ்சம் இப்போது அதிகமாகிக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் இருந்தது ; தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இருந்தது; அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் லஞ்சம் போலீஸ் ஹெட் கான்ஸ்டேபிள் மட்டத்தில் இருந்தது ; தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சப்-இன்ஸ்பெக்டர் அளவில் இருந்தது ; அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இன்ஸ்பெக்டர் லெவலுக்கு ஏறியிருக்கிறது. இதை எல்லாம் நன்றாகப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பட்டு திரு. இரா. அருணாசலம் பேச அழைக்கப்பட்டார்).

* திரு இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, **காவல்** துறை மானியத்தின்மீது பேச வாய்ப்பளித்த **தலைவர் அவர்களுக்கு** முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு பகல் பாராது 24 மணி நேரமும் மக்களுக்காகத் தொண்டாற்றும் காவல் துறையின் பணி மகத்தானது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படிச் சிறப்புப் பெறும் காவல் துறை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் மேலும் சிறப்புப் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

[திரு. இரா. அருணாசலம்] [1978 மார்ச் 15

கள்ளச் சாராயத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கிறார்கள். வெளியிலும் பேசுகிறார்கள். கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்குத் தீவிர நடவடிக்கை தேவை. சிறைச்சாலைக்கு என்று ஐ. ஜி. இருப்பதுபோல், போலீசுக்கு ஒரு ஐ. ஜி. இருப்பது போல், கள்ளச் சாராயத்தைத் தடுப்பதற்கும் ஒரு ஐ. ஜி. நியமிக்க வேண்டும். அப்படி தனியாக ஐ.ஜி.யை ஏற்படுத்தி கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோற்று விக்கப்பட்டபோது அன்றைய ஆட்சியினர் காவல் துறையைப் பயன்படுத்தி எத்தகைய வழக்குகளைப் போட்டார்கள் என்பது தெரியும். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அண்ணா தி.மு.க.வில் இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக பொய் வழக்குகள் பல போடப்பட்டிருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், கோர்ட்டுக்கும் போலீஸ் நிலையத்திற்கும் சுற்றிக்கொண்டிருக்கும் நிலைதான் இருந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த ஒரே காரணத்திற்காக புரட்சித் தலைவரின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்த முயன்ற வன்முறை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது.

எவ்வளவோ போராட்டங்கள் நடந்தன. அந்தப் போராட் டங்களை எல்லாம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எந்த வகையில் சமாளித்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். கடைசியாக, என்.ஜி.ஓவினர் பத்து நாட்கள்

(பிற்பகல் 1-10)

போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்தச் சமயத்தில் எந்தவித அசம்பாவிதமும் இன்றி சமாளித்தது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அறவழி ஆட்சிக்கு ஒரு சான்று ஆகும். புரட்சித் தலைவரின் கொள்கை வழி நடக்கிறார்களே என்ற ஒரே காரணத்திற்காக * * *

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு வழக்குமன்றத்திலே இருப்பதால் அதைப்பற்றி பேச வேண்டாமென்று உறுப்பினருக்கு உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி பேச வேண்டாம், மற்றவைகளைப் பேசுங்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 மார்ச் 15]

திரு. க. சுப்பு : அது சப்ஜுடிஸ் ஆக இருக்கிறது. அதை நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுப்படையாகத்தான் அவர் பேசினார், என்ன என்ன விவரங்கள் என்று சொல்லவில்லை, இதற்கு மேலே நுழைந்து பேசவேண்டாம் என்று உத்திரவிட்டிருக் கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் கூறுவதற்குக் காரணம் என்ன என்ன நடந்திருக்கிறது என்பதைப் பற்றியே அவர் பேசவேண்டாம் என்ற வகையிலே தான், ஆட்களைப் பற்றிப் பேசவேண்டாம் என்பது மட்டுமல்ல, வழக்கு மன்றத் திலே அதுபற்றி விரிவாகப் பேசப்படுகிறபோது, இங்கே பேசியது ஒருவேளை சரியல்ல என்று ஆகலாம் அல்லது இதைவிட இன்னும் அதிகமாக உண்மை என்று ஆகிவிடலாம். ஆகவே நீதிபதிகளுக்கு ஒரு தவறான எண்ணம் உருவாகுமாறு அல்லது மற்றவர் களிடம் தவறான எண்ணம் ஏற்படுமாறு இங்கே பேசவேண்டாம் என்ற முறையிலேதான் தாங்கள் அதைப்பற்றி உத்திரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் * * * பிரச்சினையைப் பற்றிப் பேசியதை அவைக் குறிப்பி லிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி.

பேரவையில் உறுப்பினரல்லாத ஒருவர் அமர்ந்திருந்ததாகக் கூறப்படுவது குறித்து.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சபையில் என்னுடைய ஸ்தானத்திற்குப் பின்பாக ஒருவர் இப்போது அமர்ந்துகொண்டிருந்தார். அவர் சபைக்குப் புதியவராக இருந்தார். அவர் ஒருவேளை ஆளுநராலே நியமிக்கப்பட்டிருக் கிறாரா ? அப்படியென்றால் அவர் பெயர் என்ன ? மற்ற விவரங்கள் என்ன என்பதையெல்லாம் ஏன் நீங்கள் முறைப்படி சபைக்குத் தெரிவிக்கவில்லை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைப்பற்றி விசாரிக் கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(5) 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு சர்க்கிள், டி. எஸ். பி. போன்றவர்களுக்கு மோட்டார் சைக்கிள் இருப்பதைப் போல போலீஸ்காரர்களுக்கும் வாகன வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்றால், சர்க்கிள்களும், டி. எஸ். பி.க்களும் வாகனங்களைப் பயன்படுத்தி பிடிக்க முடிகிறது, ஆனால் அதே சமயத்தில் போலீஸ்காரர்களாக இருந்தால் அவர்களுக்கு வாகனங்கள் இல்லாததால் குற்றவாளிகளைப் பிடிப்பது கடினமாக இருக்கிறது. அவர்களுக்கும் தேவையான வாகன வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களிலே காவல் நிலையங்கள் வாடகை இடங்களில் இருக்கின்றன. இதுபோன்ற நிலையங்களை அரசு சொந்தக் கட்டடங்களிலே வைக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினர் ஒரு மாதத்திற்கு இத்தனை வழக்குகள் பதிவு செய்யவேண்டுமென்ற விதியை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று இருப்பதால் ஒன்றும் அறியாத அப்பாவிகளையும் போலீஸார் பிடிக்கவேண்டுமென்பதற்காக குற்றவாளிகள் இல்லையென்றாலும் பிடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது, ஆகவே அந்த விதியை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போலீஸார்களுக்கு வீடுகள் போதுமானதாக இல்லை . . . . .

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, அருமை நண்பர் ஆறுமுகம் அவர்கள் யாரோ இங்கே உட்கார்ந்திருப்பதாக ஒரு பிரச்சினையைக் கிளப்பினார். அது யார் என்று நான் போய் விசாரித்துப் பார்த்தேன். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு துரை முருகன், ஒன்றும் அவசரப்படாதீர்கள். எனக்கு வந்த தகவல் உறுப்பினர் அப்துல் லத்தீபை லாபியில் யாரோ பார்க்க வந்திருக்கிறார், அவர் இங்கே வந்து உட்கார்ந்துவிட்டுப் போயிருக்கிறார் என்பது தான். அது தான் உறுப்பினர்களுக்கு வேண்டுகோள் வி-

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டியவனாக இருக்கிறேன். லாபியிலே யாரையும் உறுப்பினர்கள் அழைத்து வராமல் இருந்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காது. உறுப்பினர்கள் மட்டும் வாருங்கள், கூட யாரையும் அழைத்து வராதீர்கள் என்று நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, துரை முருகன் அவர்கள் * * * என்று சொல்லியிருக்கிறார்கள். அது சபைக் குறிப்பிலே ஏறி, பத்திரிகையிலும் வந்தால் நன்றாக இருக்காது, எனவே, அதைச் சபைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரைமுருகன் அவர்கள் கொஞ்சம் அவசரப்படாமல் பேச வேண்டும். என்னவென்று பார்த்துச் சொல்ல வேண்டும். தாங்கள் மருத்துவர் போலவும், பரிசோதித்துவிட்டு வந்ததைப் போலவும் சொல்வது நம்முடைய அவைக்கு நல்லது அல்ல. என்ன செய்வது? துரைமுருகன் சொன்னதையும் நீக்க வேண்டுமென்று கூறுகிறேன்.

திரு. துரைமுருகன் : ஸ்பீக்கருக்கு ஹெல்ப் பண்ண வேண்டுமென்றுதான் வெளியே போய்க் கேட்டேன். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சாதிக்பாட்சா அவர்கள் சொன்ன நல்ல கருத்தை நாம் ஏற்றுக்கொள்வோம்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, கொஞ்ச நேரத்திற்கு முன்பு கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கைப்பற்றிக் கூறும்பொழுது * * * * * என்று சொல்லிவிட்டார். அதை அனுமதித்திருக்கிறீர்கள். நீதிமன்றத்தில் இருக்கும்பொழுதே * * * என்று அவர் பேச ஆரம்பித்துவிட்டார். அந்த * * * என்று யார் சொல்வது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நிகழ்ச்சியை வைத்துச் சொன்னார்கள். ஆனால் துரைமுருகன் சொன்னது. . . . . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். காரைக்குடி நிகழ்ச்சி சம்பந்தமாக வழக்கு மன்றத்தில் இருக்கிறது. * * * என்று அது சம்பந்தமாகக் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் சொன்னது அத்தனையையும் நீக்க வேண்டும். அந்த வழக்கு சம்பந்தமாக உள்ள காரியத்தை, டிஃபென்ஸ் சம்பந்தமாக

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 15

உள்ள காரியத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நீக்கவில்லை என்றால் சட்டமன்றத்திலேயே சொல்லிவிட்டார்கள் என்று நீதி மன்றத்திற்கு இன்ஃப்ளுயன்ஸ் செய்யக்கூடிய நிலை வரும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் அவர்களுக்கு நேரடியாகத் தெரிந்த விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடத்திலே வந்து அந்தப் பெண்ணுக்கு வைத்திய வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டதை வைத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பொறுப்புணர்ச்சியோடு அந்த உறுப்பினர் சொல்லியிருக்கிறார்.

திரு. துரை முருகன் : * * * * * என்று சொல்ல அத்தாரிட்டி யார்? நீதிமன்றத்தில் டாக்டரே சொல்ல வேண்டுமே தவிர உறுப்பினர் சொல்வதில் அர்த்தமில்லை.

மாண்புமிகு திரு.ஆர்.எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவலைத்தான், விவரங்களை நேரடியாகத் தெரிந்துதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாறுபட்ட கருத்துக்கள் மருத்துவத் துறையிலேயிருந்து வந்தால் அதற்கு உறுப்பினர்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்பொழுதே வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று குறுக்கிட்டு ஆட்சேபணை செய்திருந்தால் அப்பொழுதே இதற்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பேன். வழக்குமன்றத்தில் இருக்குமேயானால் அதைப்பற்றிய பிரச்சினைகளை பேசுவது சரியில்லை தான். வழக்கு மன்றத்தில் இருக்குமேயானால் * * * என்று விளக்கிப் பேசுவது கூடாது. அது உண்மை. ஆனால், வழக்கு மன்றத்திலே இருக்கிறது என்று அப்பொழுது எந்த உறுப்பினரும் எடுத்துக்காட்டாத காரணத்தால் பேச அனுமதித்தேன். அது வழக்குமன்றத்தில் இருப்பதாக இருந்தால் கரியமாணிக்கம் அம்பலம் அப்பொழுது * * * * என்று பேசியது நியாயம் இல்லை. அதை எடுத்துவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : மற்ற அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டாத காரணத்தினால்தான் அனுமதித்தேன் என்று சொன்னீர்கள். ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பிப் பாருங்கள். எவ்வளவு பேர் நிற்கிறீர்கள்? யாராவது ஒருவர் எழுந்து சொன்னால் பரவாயில்லை. எல்லோரும் உட்காருங்கள். தயவு செய்து ஒருவர் எழுந்து சொல்லுங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 மார்ச் 15]

திரு. துரை முருகன் : எந்த அங்கத்தினராவது எடுத்துக்காட்டியிருந்தால் நீக்கியிருக்கலாம் என்று சொன்னீர்கள். அப்படி எடுத்துக்காட்டாததால்தான் * * * என்று சொன்னது சபை நடவடிக்கைக் குறிப்பில் வந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். நாங்கள் எடுத்துக்காட்டவில்லையென்றாலும், தலைவரவர்களுடைய பொறுப்பு—நான் தங்களைக் குறை கூறவில்லை—நீங்களாகவே சொல்லி அதை நீக்கியிருக்கக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு மன்றங்களில் உள்ள எல்லாமே தலைவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதற்கு அவசியமும் இல்லை. வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று நீங்கள் எடுத்துச் சொன்னால் செய்ய முடியும். வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்று நான் யூகித்துச் சொல்ல முடியாது.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு முன்பு மூன்று பேர் நின்றார்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, கோயம்புத்தூர் ஜனதா மாநாட்டில் இந்த வழக்கு சம்பந்தமாக அந்தத் தலைவரே பேசியிருக்கிறார்கள். அதைத்தான் எங்களுடைய....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து வெளியிலே பேசியதைப்பற்றி அவையிலே பேசத் தேவையில்லை. இனிமேல் இதன்மேல் யாருக்கும் ஒழுங்குப் பிரச்னை அனுமதிக்கப்படவில்லை.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன் மேல் கிடையாது.

[முற்பகல் 1-20]

திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவரவர்களே, போலீஸ்காரர்களுக்குப் போதுமான வீடுகள் இல்லாமலிருக்கின்றன. என்னுடைய தொகுதியான நாமக்கல்லில் வீடுகள் போதுமானதாக இல்லை. அதனால், போலீஸ்காரர்கள், வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான வீடுகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நாமக்கல்லில் தீயணைப்பு நிலையம் ஒன்றிருக்கிறது. அந்த நிலையம் நாமக்கல்லைவிட்டு ஒது க்குப்புறத்தில் இருக்கிறது. வெகு தூர ஒதுக்குப்புறத்தில் இருப்பதால், தீயணைப்பு நிலையம் தன் பணிகளை உடனடியாகச் செய்ய முடியாத நிலைமையிருக்கிறது. சென்ற வாரத்தில் திடீரென்று ஊரின் நடுப்பகுதியில் தீ பிடித்து 15 வீடுகள் எரிந்து விட்டன. தீயணைப்பு நிலையத்திற்குச் சொல்லி அனுப்பியும் அவர்கள் வருவதற்குச் சிறிது காலதாமதம் ஆகிவிட்டதால், அவர்கள் வருவதற்கு முன்னதாகவே 15 வீடுகளும் எரிந்து சாம்பல் ஆகிவிட்டன. ஆகவே, தீயணைப்பு நிலையத்தை நாமக்கல் நகரத்திற்குள்ளாக இருக்கும்படி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேலூரிலும் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு தீயணைப்பு நிலையம் இல்லாதிருப்பதால், உடனடியாக அங்குள்ள பகுதிகளுக்கு நாமக்கல்லிலிருந்து செல்ல முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, அங்கும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் 1978–79-ம் ஆண்டின் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்தக் காவற் துறை எப்படிச் செயல்படுகிறது என்பதைப்பற்றியெல்லாம் இங்கே ஆளுங்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் கொடுக்கப்பட்டிருக்கிற ஆய்வுரையிலிருந்து ஒரு சிலவற்றைக் குறிப்பிடுகிறேன். 1976, 1977 ஆம் ஆண்டுகளில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பிட்டு அறிக்கை பின்வருமாறு :—

குற்றத் தலைப்பு (1)	1976 (2)	1977 (3)
ஆதாயத்திற்காகக் கொலை செய்தல் ..	30	49
கொள்ளை	20	22
வழிப்பறி	120	130
கன்னக் களவு	7,759	10,305
பெரிய திருட்டுகள்	19,710	24,589
சிறிய திருட்டுகள்	2,551	3,241
கால் நடைட் திருட்டுகள்	1,187	1,359

ஆக, ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானல் 1976-ல் 31, 77 ; 1977-ல் 39,698.

குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்று பார்த்தால், 1976-ல் அதிகமாகத் துப்பு துலக்கப்பட்டிருக்கிறது ; அதாவது 52·4 சதவீதம். 1977-ல் 41.8 சதவீதம் தான்.

தண்டனை விதிக்கப்பட்ட வழக்கு, விசாரணை நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பதைப் பார்த்தால், 1977-ல் அது குறைவாக இருக்கிறது. அதாவது, 1976-ல் 70·7 சதவீதம் இருக்கிறது. ஆனல், 1977-ல் 57·7 சதவீதம். ஆக, 1976-க்கும் 1977-க்கும் ஒப்பிட்டுப் பார்ப்போமானல். 1976லே அதிகமான துப்புத்துலக்கப்பட்டிருக்கிறது. 1977-ல் அது குறைவாக இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றல், இன்றையதினம் காவல் துறையில் இருக்கிறவர்கள், காவல் துறையினர் எப்படிச் செயல்படுகிறர்கள் என்றல், அதற்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள்தான் முக்கிய காரணம்.

இன்றையதினம் தொடர்ந்து பல போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல் பல்லவன் போக்குவரத்து ஊழியர் போராட்டம். அதற்குப் போலீஸ் பாதுகாப்புத் தேவைதான். இல்லையென்று சொல்லவில்லை. அதே போல், ஆசிரியர்கள் போராட்டம் ; போலீஸ் பாதுகாப்புத் தேவைதான், இல்லையென்று சொல்லவில்லை. அதேபோன்று, என்.ஜி.ஓக்கள் போராட்டம். இங்கே சொன்னர்கள், புரட்சித் தலைவர் ஆட்சியில் போராட்டமே இல்லை, சுமுகமாக நடந்தது என்று. 9 மாத காலத்தில் எத்தனை போராட்டங்கள் ?

முதல்வர் செல்கிற இடங்களில் எல்லாம் அதிகமான போலீஸ் பந்தோபஸ்து. முதல்வருக்கு பந்தோபஸ்து வேண்டாமென்று சொல்லவில்லை. காவலர்களை எப்படிப் பயன்படுத்துகிறர்கள் ? முதல்வரைப் பாதுகாக்கவும், போராட்டங்களைப் பாதுகாக்கவும் தான் அவர்கள் பயன்படுகிறர்களே தவிர, இப்படிப்பட்ட குற்றங்களையும், திருட்டுக் குற்றங்களையும் சிறிய குற்றங்களையும் கண்டு பிடிக்க அவர்களுக்குப் போதிய அவகாசமே தரவில்லை, போதிய நாட்கள் இல்லை. இது அவர்களுடைய குற்றம் என்று கூடச் சொல்லவில்லை, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் குற்றம் தான் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னென்றையும் சொல்லிக் கொள்கிறேன். கருப்பசாமி பாண்டியன் என்னும் அருமை நண்பர், சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னர்கள்.

புரட்சித் தலைவர் ஆட்சியில் ஒரு கண்ணீர் புகை உண்டா, ஒரு தடியடிப் பிரயோகம் உண்டா, அடக்குமுறை இல்லாத புனித ஆட்சி நடக்கிறது என்றார். நான் அவரைக் கேட்கிறேன் இந்த 9 மாத ஆட்சியில் அவர் சென்னையில் இல்லையா, அல்லது தமிழ்நாட்டிலேயே இல்லையா; அவர் வேறு எங்கு இருந்தார் என்றே எனக்குப் புரியவில்லை. அண்மையில் * * * * * * * * * * அமைதியான கருப்புக் கொடி போராட்டத்தில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே இந்த அவையிலே இது பற்றி ரூலிங் கொடுத்திருக்கிறேன். ஒருவர் பேசும் போது * * * * என்று பேசக் கூடாது, சர்வாதி காரத்தோடு செய்திருக்கிறார் என்று பேசலாம் என்று தீர்ப்பளித்திருக்கிறேன். * * * * என்று அவர் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : ஜனநாயக விரோதி இந்திரா காந்தி அவர்களுக்குக் கருப்புக்கொடி காட்டிய நேரத்தில் நமது புரட்சித் தலைவர் அவர்கள் தாய்மார்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசவில்லையா, தடியடிப் பிரயோகம் நடத்தவில்லையா ....

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இந்த * * * * * என்ற பிரச்சினை வந்தபோது அதை நான்தான் எழுப்பி எதிர்ப்புத் தெரிவித்தேன். அதற்கு நீங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள். இப்போது இன்னொரு பெயரைச் சொல்லி அவர் பேசுகிறார். அப்படியானால் வேறு அடைமொழிகளைக் கொண்டு இன்னொரு தலைவரைக் குறிப்பிட்டுப் பேசவேண்டிய அவசியம் வருகிறது. இது முறை தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * * என்ற வார்த்தையை நீக்கும்படி உத்தரவிடுகிறேன். ஜனநாயக விரோதி இந்திரா என்பது 'அன்பார்லிமெண்டரி' வார்த்தை அல்ல. அது பேசுகிறவர்களுடைய தன்மையைப் பொறுத்தது, அதை விட்டு விடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 1.25–1.30-ல் சிலசொற்கள் அகற்றப்பெற்றன

திரு. கெ. சொக்கலிங்கம் : துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு கழகத் கண்மணிகள் தீனன், பாபு ஆகியோரை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். யாருடைய ஆட்சிக் காலத்தில், இன்றைய தினம் நமது முதலமைச்சராக இருக்கிற மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில். அவர் நீதிக்குத் தலை வணங்குகிறவர்—ஒத்துக் கொள்ள முடியாத விஷயம். அந்த நீதியை நிலைநாட்டக்கூடிய நிலையில் இன்றைய தினம் நீதி காப்பாற்றப்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் திருப்போரூரில் ஒரு சம்பவம் நடந்தது. நேற்றைக்கு முன் தினம் அதாவது 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ந் தேதி அன்று, குரோம்பேட்டையிலே நடந்திருக்கிறது. அந்தக் குரோம்பேட்டையில் குழாய் சண்டை நடந்திருக்கிறது. நாகம்மாள் என்ற பெண்மணியை, சூர்யகலா, பாப்பம்மாள் ஆகிய இருவரும் சேர்ந்து வயிற்றை அறுத்துவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருப்போரூர் என்று சொல்லிவிட்டு, குரோம்பேட்டையைப் பற்றிச் சொல்கிறீர்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பக்கத்துத் தொகுதி, அனேகமாகப் பேரவைத் தலைவர் தொகுதி அதற்காகத்தான் சொல்கிறேன். குழாயடிச் சண்டையிலே அந்தப் பெண்ணின் வயிற்றை அறுத்துவிட்டார்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என் தொகுதி இல்லை. கனம் அப்துல் ரசாக் அவர்கள் தொகுதியாகும்.

திரு. கெ. சொக்கலிங்கம் : அந்தப் பெண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள். அந்தப் பெண்ணை நான் சென்று பார்த்தேன். கட்டுப் போடப்பட்டிருக்கிறது. டாக்டர்களைக் கேட்டபோது, போலீசுக்கு ரிப்போர்ட்டு செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணை உடனே டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள். அவரால் நடக்கக் கூடாத நிலை. நான் உடனே எஸ்.பி. அவர்களுக்குப் போன் மூலம் சொன்னபோது உடனே நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதைக் கவனிக்கும்படி நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் போலீஸ் இலாகாவில் எங்களுடைய மதிப்பிற்குரிய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலே இந்தத் துறை எவ்வளவு சிறப்பாக இருந்தது, சீர்தூக்கி இருந்தது என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும். அவர்களுக்கு டெரிகாட்டன்

துணி, தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பதவி உயர்வு, ஏட்டுகளாக, சப்-இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது, முன்னுரிமை கொடுக்கப்பட்டது கலைஞர் ஆட்சியில், அதை இப்போதும் செய்ய வேண்டும் என்று முதல்வரைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30].

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கோவளம் கிராமம் மாமல்லபுரம், முட்டுக்காடு போன்ற பகுதிகளில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஏதேனும் விபத்து ஏற்பட்டு விட்டால், செங்கற்பட்டில் இருந்து தான் தீயணைப்புப் படை வர வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கேயொரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மாம்பாக்கம் பகுதியில் 3 மாதங்களுக்கு முன்பு ஒரு விபத்தில் ஒரு சிறுவன் இறந்து விட்டான். அந்தச் சிறுவன் இறந்த உடனேயே அவனை எடுத்துச் செல்ல வாகன வசதி இல்லை. அந்தச் செய்தி கேட்ட உடனே வந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருநாள் பூராவும் அந்த இடத்திலேயே இருந்துஇருக்கிறார். மறுநாள் எனக்குத் தகவல் வந்து நான் போய் பார்த்தேன். அதுவரையில் அந்த பிணம் அங்கேயிருக்கிறது. இறந்து போய் 24 மணி நேரத்திற்குப் பிறகும் அந்தப் பிணம் அங்கே இருந்ததற்குக் காரணம் வாகன வசதி இல்லாதது தான். அதற்கு அந்த இன்ஸ்பெக்டர் கூட வருத்தப்பட்டார். இந்த மானியத்தில் எத்தனையோ லட்சங்கள் வாகன வசதிக்காக ஒதுக்கப்பட்டு இருப்பதால், அந்தப் பகுதிக்கு ஒரு வாகனம் வாங்கி வைக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

304. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள், அறக் கட்டளைகள் துறையின் 19—12—1977-ஆம் தேதியிடப்பெற்ற 2117 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*128 1977-78ஆம் ஆண்டின் தமிழ்நாடு காவல்துறை பற்றிய ஆய்வுரை (ஆங்கிலம், தமிழ்)

*129. 1977—78ஆம் ஆண்டின் தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய ஆய்வுரை (ஆங்கிலம், தமிழ்).

இணைப்பு I.

[577 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.].

தமிழ்நாடு காவல் துறை.

1977—78 ஆம் ஆண்டு ஆய்வுரை.

தமிழ்நாடு காவல்துறை, சட்டம்-ஒழுங்கு அமைதியை நிலைநாட்டல், குற்றங்கள் நடைபெறா வண்ணம் தடுத்தல், குற்றங்களைத் துப்புத்துலக்குதல் ஆகிய பணிகளோடு மாநில மக்களுக்கு ஆற்றும் பொதுவான பணி ஆகியவற்றைத் தொடர்ந்து செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இப் பணிகளை ஆற்றி வரும் போது ஏற்பட்ட இயற்கை சீற்றங்களுக்கு ஈடு கொடுத்தும் தங்கள் கடமையை நிறைவேற்றி வந்தனர்.

தற்போது காவல்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள்.

இம்மாநிலத்தில் படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள் ஐந்து உள்ளன. ஒவ்வொர் அணியும் 6 இயங்கும் பிரிகளையும் ஒரு தலைமையிடப் பிரிவையும் கொண்டுள்ளது. 30 இயங்கும் காவற்படைப் பிரிவுகளில் 4 பிரிவுகள் தற்போது உணவுப் பொருள் வழங்கல் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பயிற்சியும் தேர்வும்.

தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல் பணிப் பதவிகள் 113 ஆகும். ஒரு ஐ.பி.எஸ். இளநிலை அதிகாரி பயிற்சி முடித்த பின்னர், ஒரு உட்கோட்டத்தின் காவல் துறை உதவி சூப்பிரண்டெண்டாகப் பதவி ஏற்றார். தமிழ்நாட்டில் முதன் முதலாக இரண்டு பெண்கள் உட்பட புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகள் ஏழுபேர் மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்காக, 1977 டிசம்பரிலும் 1978 ஜனவரியிலும் சென்னை, காவலர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்துள்ளனர்.

---

* 14—3—1978 அன்று அனுப்பப்பெற்றுள்ளன.

நடப்பாண்டில், மூன்று ஐ.பி.எஸ் அதிகாரிகள், ஹைதராபாத்தில் உள்ள சர்தார் வல்லபாய் படேல் நேஷனல் போலிஸ் அகாடமியில் 14 வார முதுநிலை அதிகாரி பயிற்சி பெற்றனர். இரண்டு ஐ.பி.எஸ். அதிகாரிகள், புதுடில்லியிலுள்ள புலனாய்வுக் கழகத்தில் '' மிக முக்கியமானவர்கள் பாதுகாப்பும் புலனாய்வும் '' குறித்து ஒரு மாதப் பயிற்சி பெற்றனர். மேலும் இரண்டு ஐ.பி.எஸ் அதிகாரிகள், புதுடில்லியிலுள்ள இந்தியக் குற்றவியல்-குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் நிறுவனத்தில் காவலர் சமுதாயத் தொடர்புகள் குறித்துப் பயிற்சி பெற்றனர். ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி, இங்கிலாந்து பிராம்ஸ்ஹில் என்னும் இடத்தில் உள்ள தேசியக் காவலர் கல்லூரியில் 11—7—1977 முதல் 26—9—1977 வரை ''மேலை நாடுகளில் காவல்பணித் தலைமை '' பற்றிய பயிற்சி பெற்றார்.

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் துறை டெபுடி சூப்பிரண்டெண்டெண்டுகள் (வகை-1) இருவர் சென்னை, காவலர் பயிற்சிக் கல்லூரியில் தங்களுடைய பயிற்சியை முடித்துவிட்டு, தற்போது நேரிடப் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், காவல்துறை டெபுடி சூப்பிரண்டெண்டெண்டுகள் (வகை-1) மூவர் நேரடியாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், 7—2—1978 அன்று காவலர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறச் சேர்ந்துள்ளனர்.

நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 268 சப்-இன்ஸ்பெக்டர்கள், சென்னை, காவலர் பயிற்சிக் கல்லூரியில், ஓராண்டுப் பயிற்சி முடிந்த பின்னர், நடைமுறைப் பயிற்சிக்காக 12—10—1977 அன்று மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஹைதராபாத் மத்தியத் துப்பறியும் பயிற்சிப் பள்ளியில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துவதிலும் மேம்படுத்தப்பட்ட புலனாய்வு முறைகளிம் 14 வாரம் பயிற்சி பெறுவதற்காக நான்கு சப்-இன்ஸ்பெக்டர்களும் இன்ஸ்பெக்டர் ஒருவரும் அனுப்பப்பட்டனர்.

பெண் காவலர் பிரிவு.

1973 டிசம்பர் திங்களில் பெண் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும், பெண் காவலர் 21 பேரும் உள்ள பெண் காவலர் பிரிவு ஒன்று சென்னை மாநகரில் ஏற்படுத்தப்பட்டது. செங்கற்பட்டு (கிழக்கு) மாவட்டம், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பாதுகாப்பு, விமானக் கடத்தலைத் தடுக்கும் அலுவல் தொடர்பான பணிக்காக 1975—ல் 8 பெண் காவலரை நியமிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியது. மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் பெண் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், பெண் தலைமைக் காவலர் ஒருவர், பெண் காவலர்கள் 12 பேர் அடங்கிய பெண் காவலர்கள் பிரிவுகளை ஏற்படுத்தவும் அரசு அனுமதிவழங்கியுள்ளது. பெண் சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட மூவர், சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரியில் 1—7—1977 முதல் பயிற்சி பெற்று வருகின்றனர். பெண் காவலர் பதவிகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட 37 பேர், சென்னை காவலர் பயிற்சிக் கல்லூரியில் 31—12—77 அன்றுடன் 6 மாதப் பயிற்சியை முடித்து விட்டு, சென்னை சமூகப் பணிப் பள்ளியில் 1—1—78-லிருந்து மூன்று மாதப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் ஆய்வுக்கூடம்.

முன்னாள் தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் ஆய்வுக் கூடத்தையும், தமிழ்நாடு இராசயன ஆய்வுக் கூடத்தையும் ஒருங்கிணைத்து 1973, மார்ச் 1ஆம் நாளன்று தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல்-இராசயன ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டது. காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த ஆய்வுக் கூடத்தில் இயக்குநரால் நியமிக்கப்பட்டார். இந்த ஆய்வுக் கூடம் 1—4—1976-லிருந்து '' தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் ஆய்வுக் கூடம் '' என்று மறு பெயரிடப்பட்டுள்ளது. சென்னை, காவல் துறை கூடுதல் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (திட்டமிடுதல் ஒருங்கிணைப்பு) 1—4—1976 முதல் இதன் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நிகழ்ந்த குற்றங்களின் எண்ணிக்கை விவரம்.—

1976, 1977 ஆம் ஆண்டுகளில் சொத்து குறித்து நிகழ்ந்த குற்றங்கள் பற்றிய ஒப்பீட்டு அறிக்கை பின்வருமாறு :—

குற்றத் தலைப்பு.	1976	1977
ஆதாயத்திற்காகக் கொலை செய்தல்	30	49
கொள்ளை	20	22
வழிப்பறி	120	130
கன்னக் களவு	7,759	10,305
பெரிய திருட்டுகள்	19,710	24,589
சிறிய திருட்டுகள்	2,551	3,244
கால்நடை திருட்டுகள்	1,187	1,359
மொத்தம் ..	31,377	39,698
குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது	52.4	41·8
தண்டனை விதிக்கப்பட்ட வழக்கு, விசாரணை நடைபெறுகின்ற வழக்குகளின் எண்ணிக்கையில் துப்புத் துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்பது	70·7	57·7

1977ஆம் ஆண்டில் சொத்து குறித்துப் பதிவான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 39,698 ஆகும். அவ்வகையில் 1976 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 31,377 ஆகும். 1976 ஆம் ஆண்டை விட 1977-ல் குற்றங்களின் எண்ணிக்கை 8,321 உயர்ந்துள்ளது, அதாவது 26.5 சதவீதம் உயர்ந்துள்ளது. தாக்கல் செய்யப்பட்ட எல்லா வழக்குகளையுமே பதிவு செய்யத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டதும் அவசர நிலைமை ரத்து செய்யப்பட்டதன் விளைவுமே நடப்பாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்ததற்கு முக்கியக் காரணங்களாகும்.

குற்றங்களைத் துப்புத் துலக்குதல்.

குற்றப் பிரச்சினையைச் சீரிய முறையிலும் திறமையாகவும் சமாளிப்பதற்குத் தேவையான முயற்சிகள் அனைத்தையும் தமிழ்நாடு காவல்துறை மேற்கொண்டது. 1976 ஆம் ஆண்டில் வழக்குகளில் 52·4 சதவீத வழக்குகள் துப்புத் துலக்கப்பட்டன. ஆய்வு அறிக்கை ஆண்டில் 41.8 சதவீத வழக்குகளில் துப்புத் துலக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டும், மற்றும் விசாரணை முடிவடையாத வழக்குகளின் சதவீதம் 70.7 ஆக இருக்க, ஆய்வு அறிக்கை ஆண்டில் இது 57·7 சதவீதமாக உள்ளது. தீர்த்து வைப்பது மிகக் கடினம் என்று வெளிப்படையாகத் தெரிய வருகின்ற வழக்குகளும் பதியப்படுவதால் துப்புத் துலக்கப்படுகின்ற வழக்குகளின் சதவீதம் புள்ளிவிவரப்படி குறைந்துள்ளது. அறிவியல் சார்ந்த துப்புத் துலக்கும் முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும், பெருமளவில் பதிவாகியுள்ள குற்றங்களைக் கவனிக்க அதிக அளவில் புலன் விசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலமுமே இந்தச் சவாலை ஏற்க வேண்டும். இருப்பினும் புள்ளி விவரங்கள், இம்மாநிலத்தில் நிலவும் உண்மையான குற்ற நிலைமையையும் துப்புத் துலக்கப்படுவதையும் புலப்படுத்துகின்றன.

திருட்டுச் சொத்துக்களை மீட்டல்.

1976-ல் 60.6 சதவீத திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்டிருக்க அறிக்கை ஆண்டில் 47.2 சதவீத திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த வீழ்ச்சிக்கு துப்புத் துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைந்ததற்காகக் கொடுக்கப்பட்டுள்ள காரணங்கள் பொருந்தும். குற்றஞ் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் செய்யும் குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்காக, அறிவியல் சாதனங்கள், மாநில விரல் ரேகைப் பதிவுக் கழகம், மாவட்டங்களிலுள்ள ஒற்றை விரல் ரேகைப் பதிவு நிலையங்கள், தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம், மாவட்டங்களிலுள்ள குற்றம்

சார்ந்த சட்ட அறிவியல் நடமாடும் ஆய்வுக் கூடங்கள், காவல்துறை வான் தந்தி அமைப்புகள், துப்பறியும் நாய்ப் படைகள், காவல்துறை கணக்கிடும் பொறிப் பிரிவு ஆகியவற்றைப் புலனாய்வுப் பணியாளர்கள் இவ்வாண்டும் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இது தவிர, பயங்கரமான குற்ற வழக்குகளில் துப்புத் துலக்கும் முறையை மேம்படுத்தும் பொருட்டு, கொலை வழக்கில் துப்புத் துலக்குவதில் நவீன உத்திகளைக் கையாளுவதற்கான மும்முரப் பயிற்சியைக் குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த குற்றப் பிரிவு 1972-ல் தொடங்கியது.

வகுப்புக் கலவரங்கள்.

வகுப்புக் கலவரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறலாக நடைபெற்றன. இவற்றால் பொது அமைதிக்குக் கடுமையான குந்தகம் எதுவும் ஏற்படவில்லை. வெவ்வேறு வகுப்பினரிடையே நீண்டகாலப் பகைமை உணர்ச்சி, நிலத் தகராறுகள், பாசன, மீன்பிடி உரிமைகள் குறித்த தகராறுகள், சமூக விரோதங்கள், திருவிழாக்கள், சமய ஊர்வலங்கள், நடைபாதைகளைப் பயன்படுத்தல் முதலியன தொடர்பான சண்டை, சச்சரவுகள் ஆகியவை மோதல்களுக்கு முக்கிய காரணங்களாகும். அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவும் நடைபெறாமல் தவிர்க்கவும் சட்ட ஒழுங்கு அமைதியை நிலை நாட்டவும் காவலர்களால் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

துப்பறியும் நாய்ப்படை.

இம்மாநிலத்தில் சென்னை மாநகரம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நாய்ப்படைப் பிரிவுகள் மொத்தம் மூன்று உள்ளன. இவை மனநிறைவு அளிக்கும் வகையில் செயலாற்றி வருகின்றன. நாய்ப்பட்டிகள் கட்டப்பட்டதும் திருச்சிராப்பள்ளியில் நாய்ப்படை ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. 1977 டிசம்பர் வரையில் 620 வழக்குகளில் துப்பறியும் நாய்ப்படைகளின் பணி பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் 246 வழக்குகளில் நாய்ப்படையைப் பயன்படுத்தியது பலனளித்தது.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.

நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு "மார்க்ஸிஸ லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் (CPML) தடை விதிக்கப்பட்டதன் விளைவாக நெருக்கடியான தீவிரவாதிகள் 73 பேர் கைது செய்யப்பட்டு, 1977 பிப்ரவரி வரையில் "மிசா" வின் கீழ்க் காவலில் வைக்கப்பட்டனர். 1977 மார்ச்சில் நெருக்கடி நிலை

ரத்து செய்யப்பட்டதன் பேரில், 73 தீவிரவாதிகளும் விடுதலை செய்யப்பட்டனர். குறிப்பிட்ட குற்றங்களில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகள் 14 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 13 பேர் விடுதலை செய்யப்பட்டனர். தற்பொழுது தடுப்புக்காவலில் ஒருவர் மட்டும்தான் உள்ளார். இவர் காவல் துறை அதிகாரி ஒருவரைத் தாக்கிய முக்கியமான வழக்கில் சம்பந்தப்பட்டு 30 மாத காலக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டவராவார். இவர் காவல் துறை அதிகாரியைத் தாக்கியது பற்றிய மற்றொரு வழக்கிலும் சம்பந்தப்பட்டுள்ளார். இவ்வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது. குற்றவாளியெனத் தீர்ப்பளித்துத் தண்டனை விதிக்கப்பட்ட 20 தீவிரவாதிகள் மாநிலத்தின் பல்வேறு சிறைகளில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களைத் தவிரவும், 12 தீவிரவாதி விசாரணைக் கைதிகளும் உள்ளனர். வன்முறைச் சம்பந்தப்பட்ட வழக்குகளில் இவர்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

உழவர்கள் நிலைமை.

உடனடியாக வறட்சி நிவாரணம் அளித்தல், நிலவரி வசூலை ஒத்திப் போடுதல், காவிரி நீர்த் தகராறில் தீர்வு காணல், வேளாண்மைப் பம்பு செட்டுகளுக்கான மின் கட்டணங்களைக் குறைத்தல், குறைந்த அளவு ஊதியம் நிர்ணயித்தல்,. நியாயவிலைக் கடைகள் மூலமாக இன்றியமையாப் பொருட்கள் வழங்கல், ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் 14—2—1977, 20—4—1977, 22—4—1977, 16—5—1977, 12—8—1977, 1—9—1977, 14—9—1977, 4—10—1977 ஆகிய நாட்களில் பல்வேறு இடங்களில் ஊர்வலங்கள் நடத்தி வருவாய்த் துறை அதிகாரிகளிடம் மனுக்கள் கொடுத்தனர். அவ்வமயம் அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

தொழிலாளர் அமைதியின்மை.

அவசர நிலைமை ரத்து செய்யப்பட்ட பின்னர் இம் மாநிலத்தில் தொழிலாளர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டதுண்டு. பஞ்சாலைகள், நெசவாலைகள், பல்லவன் போக்குவரத்துக் கழகம், இரயில்வே, ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், தமிழ்நாடு மின்வாரியம், வங்கிகள், மற்றும் சில தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தங்கள், உண்ணாவிரதங்கள், கிளர்ச்சிகள், ஊர்வலங்கள், முதலியவற்றில் ஈடுபட்டனர். எனினும், நிலைமையை அரசு திறம்படச் சமாளித்ததனால், தொழில் துறையில் தற்போது அமைதி நிலவுகிறது.

துப்பாக்கிச் சூடு.

1977-ஆம் ஆண்டில், காவல்துறையினர் துப்பாக்கிச் சுடும் சம்பவம் நான்கு முறை நடந்தது.

(அ) செங்கற்பட்டு (கிழக்கு)

29—6—1977 அன்று, செங்குன்றம் காவல் நிலையத்திற்கு அருகில் 500 பேர் அடங்கிய கும்பல் ஒன்று கூடி, காவல் நிலையத்தில் பிடித்து வைக்கப்பட்டிருந்த சிலரை விடுவிக்குமாறு கேட்டனர். அவர்கள் கைது செய்யப்படவில்லை என்றும், குற்றஞ் செய்தவர் யாரெனத் தெரிந்து கொள்ளவே அழைத்து வரப்பட்டனர். என்றும் காவல்துறை டெபுடி சூப்பிரண்டெண்டன்டு கொடுத்தஉறுதிமொழியினால் மன நிறைவு அடையாத கும்பல் அத்து மீறிக்காவலர்களைத் தாக்கத் தொடங்கியது. கும்பலைக் கலைக்கக்கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப்பட்டது. அது பயனளிக்காததால் காவலர் முதலில் தடியடி நடத்திய பின்னர் துப்பாக்கியால் சுட்டார்கள். ஐம்பத்தைந்து பேர் காயமுற்றனர். அவர்களில் இருவர் துப்பாக்கிச் சூட்டினாலும் எஞ்சியவர் தடியடி பிரயோகத்தினாலும் காயமுற்றனர். எவரும் இறக்கவில்லை. மாஜிஸ்டிரேட் ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. காவலர் நடத்திய துப்பாக்கிச் சூடு நியாயமானதே என்று முடிவு செய்யப்பட்டது.

(இ) சென்னை மாநகர்

(i) 30—10—77 அன்று கட்டுக்கடங்காத ஆர்பாட்டக்காரர்கள் அடங்கிய கும்பலொன்று தடை உத்திரவுகளை மீறி கிண்டி அண்ணாசாலையில் ஹால்டா சந்திப்புக்கு அருகில் கூடியது. அக் கும்பல் அவ்வாறு கூடியிருப்பது சட்ட விரோதமானது என்று அறிவிக்கப்பட்டு கலைந்து போகுமாறு எச்சரிக்கப்பட்டது. அக்கும்பல் கலைந்து போவதற்குப் பதிலாகக் கற்கள் சோடாபுட்டிகள் கொடிக்கம்புகள் தடிகள் ஆகியவற்றைக் கொண்டு காவல் படையினரைத் தாக்கியது. முறையாக எச்சரிக்கப்பட்ட பிறகு, கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டது. ஆனால், அது பயனளிக்கவில்லை . இது பயனளிக்காமல் போனதாலும், கும்பல் ஆவேசமடைந்திருந்ததாலும், காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று. இதில் இருவர் இறந்தனர் ; இருவர் காயமுற்றனர். காவல் படையினரில் அறுபத்தைந்து பேர் காயமுற்றனர். விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது· அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) 30—10—1977 அன்று ஆத்திரமும் கோபாவேசமும் கொண்ட கும்பலொன்று, சைதாப்பேட்டை சாலை இருப்புப் பாதை கடவுக்கருகில் இரயில்களுக்கும் , இரயில்

சாதனங்களுக்கும் தீ வைத்தது; சைதாப்பேட்டை கடை வீதிக்கருகில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான வண்டிகள் பலவற்றுக்கும் தீ வைத்தது; இரயில் கேட்டுக்குச் சேதம் விளைவித்தது. நிலைமையைக் கட்டுப்படுத்த அங்கு விரைந்த காவல் படையினரையும் அக்கும்பல் கற்களாலும் சோடா புட்டிகளாலும் தாக்கியது. கும்பலைக் கலைக்க கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டது. இது எதிர்பார்த்த பயனை அளிக்காததாலும், காவல் படையினரை நோக்கி கும்பல் தீய நோக்குடன் முன்னேறியதாலும் உரிய எச்சரிக்கை விடுத்துப்பின் காவல் படையினர் ஒரு முறை துப்பாக்கியால் சுட நேர்ந்தது. ஒருவர் இறந்தார். எவரும் காயமடையவில்லை. காவல் படையினரைச் சேர்ந்த 18 பேர் காயமுற்றனர். விசாரணைக் கமிஷன் ஒன்றை அரசு நியமித்துள்ளது. அதன் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) 24–11–1977 அன்று, பயங்கர ஆயுதங்கள் ஏந்திய 1,000 பேர் காசிமேடு கடற்கரையில் விசைப்படகு மீனவர்களைத் தாக்கவும் அவர்களது விசைப்படகுகளுக்குத் தீ வைக்கவும் முயற்சி செய்தனர். காவல் பணியிலிருந்த காவல் படையினர் தாக்கப்பட்டனர். கண்ணீர்ப் புகை பிரயோகித்தும், கும்பல் கலையவில்லை. மாறாக, அக்கும்பல், வன்முறையில் மேலும் இறங்கி, காவல் துறை அதிகாரி ஒருவரைக்கடலில் இழுத்துத் தள்ள முயற்சி செய்தது. திரும்பத் திரும்ப எச்சரிக்கை விடுத்தும், பலனில்லாது போகவே காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது. ஒருவர் இறந்தார். காவல் துறை உதவிக் கமிஷனர் ஒருவரும் இன்ஸ்பெக்டர்கள் இருவரும் காவலர்கள் 22 பேரும் காயமுற்றனர். மாஜிஸ்ட்டிரேட் ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. விசாரணைத் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

கண்ணீர்ப்புகை பிரயோகம்.

இவ்வாண்டில் சட்டம்—ஒழுங்கு அமைதியை நிலை நாட்ட சென்னை மாநகரில் 10 முறையும், செங்குன்றம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முறையும் கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட வேண்டியதாயிற்று.

வானொலிப் பிரிவு.

தமிழ்நாடு காவல்துறை வானொலி அமைப்பில் மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டு உள்ளன.. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், செங்கற்பட்டு சரகங்கள் ஆகிய ஆறு செய்தித் தொடர்பு நிலையங்கள் உள்ளன. மேலே கூறியவை தவிர சென்னை மாநகர காவற்படை வானொலித்தொடர்பு அமைப்பு, தமிழ்நாடு சிறப்புகாவற்படை வானொலித் தொடர்பு அமைப்பு ஆகியவையும் உள்ளன. சென்னை மாநகரம், கீழ் அணை, மேல் அணை, கல்லணை

தஞ்சாவூர்,, பவானிசாகர், தேக்கடி, மேட்டூர், இராமநாதபுரம், மதுரை, . திருநெல்வேலி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. 18 நிலையான வானொலி அமைப்பு நிலையங்கள், 6 உட்கோட்ட வானொலி அமைப்பு நிலையங்களுடன் 24 எடுத்துச் செல்லத்தக்க வானொலி அமைப்பு நிலையங்கள், 19 மீ. உயர் மின்னலைச் செய்தித் தொடர்பு நிலையங்கள், 19 மாநகரச் செய்தித் தொடர்பு நிலையங்கள், 10 வெள்ள நெருக்கடி கால அறிவிப்பு நிலையங்கள் ஆகியவை தமிழ்நாடு காவல் துறை வானொலி அமைப்புடன் இணைந்துள்ளன. முக்கியமான எல்லாத் திருவிழாக்கள், புயல்கள், வேலை நிறுத்தங்கள் பெருமக்கள் வருகை, மற்ற நெருக்கடிக் காலங்கள் எல்லாவற்றிலும் இந்நிலையங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர், ஆகிய இடங்களில் வானிலை எச்சரிக்கை நிலையங்கள் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு காவல் படையை நவீனப்படுத்தல்.

காவலர் படையை நவீனப்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியுள்ளது. இதற்கான நிதி உதவியும் அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வண்டிகள் கம்பியில்லா தந்திச் சாதனங்கள், அறிவியல் சாதனங்கள், இவற்றை வாங்குவதற்காக 1971–72-லிருந்து 1977–78 வரை ரூ. 400·79 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதிய வகையில் ரூ. 48·50 இலட்சம் தொடரினச் செலவாகவும் அரசு வழங்கியுள்ளது. 1976–77-ஆம் ஆண்டில் 30 மோட்டார் சைக்கிள்களை வாங்குவதற்காக ரூ. 2·25 இலட்சம் அரசு அனுமதித்தது.

போக்குவரத்து.

இத்திட்டத்தின் கீழ், உட்கோட்டங்கள், வட்டங்கள் காவல் நிலையங்கள், குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் நடமாடும் ஆய்வுக் கூடங்கள், காவல் துறை வானொலி நிலையங்கள் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்காக வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

செய்தித் தொடர்பு.

உயர்மின் அலை செய்தித் தொடர்பு, மீ-உயர் மின் அலைச் செய்தித் தொடர்பு ஆகியவற்றின் மூலம் காவல் நிலையங்களை மாவட்டத் தலைமையிடங்களுடனும் மாநிலத் தலைமையிடத்துடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும். ஒலி பரப்பு, டெலிபிரிண்டர் மூலம் செய்திபரப்பு ஆகியவற்றிற்கு வகைசெய்ய மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைமையிடத்துடன் ஏற்கனவே மீ-உயர் மின் அலைச் செய்தித் தொடர்பு மூலம் இணைக்கப்பட்டு உள்ளன. தவிர 873 காவல் நிலையங்களில் 708

[1978 மார்ச் 15

காவல் நிலையங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப் பதிவுகள், நிழற் படங்கள், ஐயத்திற்கிடமான ஆவணங்கள் ஆகியவற்றை அனுப்பும் பொருட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் உள்ள சரகத் தலைமையிடங்களில் உருவ நேர்ப்படித் தொடர்பு வசதிகள் தற்போது உள்ளன.

மாநிலத் தலைமையிடத்திற்கும், மாவட்டத் தலைமையிடங்களுக்கும் இடையே செய்திப்போக்குவரத்து பெருகி விட்ட காரணத்தினால் தற்போதுள்ள ஒரு வழி மீ-உயர் மின்னலைச் செய்தித் தொடர்பு (Single channel VHF Trunk Line) வசதி போதுமானதாயில்லை, எனவே, சுமார் ரூ. 100 இலட்சம் செலவில் நுண்ணலைப் பல்வழிச் செய்தித் தொடர்பைப் (Multi channel Micro Wave Trunk Line) ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பல்வழி அமைப்பில் சுமார் 540 கிலோ மீட்டர் தொலைவிற்கு செய்தி தொடர்பைப் பரப்புகிற 6 இடங்களில் 5 வானொலி நிலையங்கள் மிக உயர்ந்த இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். இந்த ஏற்பாடு செயல்படத் தொடங்குகையில் இம்மாநிலத்தில் ஏதாவது ஒரு இடத்தில் ஒரு குற்றம் நிகழ்வது குறித்து புள்ளி விவரங்கள் தேவைப்படும்போது, இம் மாநிலத்தின் விரல் ரேகைப்பதிவுகள், குற்ற வழக்குகள் குறித்த தகவல்களை மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்திலுமிருந்து டெலிபிரிண்டர்கள் உருவ நேர்படி தொடர் (facsimile Circuits) ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் விரைவாக அனுப்ப இந்த ஏற்பாடு வகை செய்யும். இத்திட்டம் காஜியாபாத்திலுள்ள திருவாளர்கள் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இதற்குரிய சாதனங்களை தயாரித்து, நிறுவியும், இயக்கியும், கொடுப்பார்கள். 1978ஆம் ஆண்டில் இந்த அமைப்பு முறை செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம் மாநிலத்தில் 873 காவல் நிலையங்களில், 756 காவல் நிலையங்களுக்குத் தொலைபேசி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. 640 காவல் நிலையங்களிலும் 50 உட்கோட்ட அலுவலகங்களிலும், மீ உயர் மின்னலை வானொலி அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

காவல் துறையினருக்கு அறிவியல் தொழில்நுட்ப சாதனங்கள்.

சட்டத்தையும் ஒழுங்கையும் திறம்படப் பேணிவரவும் குற்ற நிகழ்வுகளையும், குற்ற போலிகளையும் கண்டுபிடிக்கவும் எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை ஏற்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. மாநிலக் குற்றம் சார்ந்த அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு நவீன கருவிகள் அளிக்கப்பட்டுள்ளன. காவல் துறை மாவட்டங்கள் அனைத்திலும் எல்லா வகையிலும் நிறைவு பெற்ற குற்றம் சார்ந்த சட்ட அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திப் பிரிவுகள் ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. ஆய்வு செய்வதில் இந்தப் பிரிவுகள் செவ்விய முறையில் செயல்பட்டு வருகின்றன. 19 காவல் துறை மாவட்டங்களிலும் நிழற்படப்பிரிவுகளும், ஒரு

1978 மார்ச் 15]

பிரிவும் செயல்பட்டு வருகின்றன. குற்றம் நடந்த இடத்தில் தடயங்களையும் கை ரேகைகளையும் விரைவாக அடையாளம் கண்டு கொள்வதற்காக ரூ. 11·2 இலட்சம் செலவில் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் "கோடக் மிரா கோடு" (Kodak Mira Code) மைக்ரோ பிலிம் என்னும் சாதன அமைப்பு நிறுவப்பட்டது. கைவிரல் ரேகைகள் பதிவை மைக்ரோ பிலிம்மில் பதிவு செய்யும் முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுவிட்டது. இம்முறை 1978 ஆம் ஆண்டில் செயலுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

காவல் துறை புள்ளிவிவர கணக்கீட்டுப் பிரிவு.

காவல் துறைப் புள்ளிவிவரக் கணக்கீட்டுப் பிரிவை ஏற்படுத் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 இலட்சம் குற்ற நிகழ்வுகள், 3 இலட்சம் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, குறியீடு இடப்பட்டுள்ளன. குற்றத்தையே தொழிலாகக் கொண்ட மூன்று இலட்சம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகளும் கணக்கீட்டுப் பொறி முறையில் கணக்கு வைத்து வரப்படுகின்றன. குற்ற நிகழ்வுகள், குற்றவாளிகள் பற்றிய விவரங்கள் விரல் ரேகைப் பதிவுகள் ஆகியவற்றைக் கணக்கீட்டுப் பொறி முறையில் கணக்கிட வைக்கும் பணி முடிவடைந்துள்ளது. இம் மாநிலத்துலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திற்கும் அன்றாட செய்தி வழங்கும் நடைமுறை 1—2—1975 முதல் தொடங்கப்பட்டது. குற்ற நிகழ்வுகளையும், குற்றவாளிகளையும் விரைவில கண்டுபிடிக்க இம்மாநிலத்திலுள்ள காவலர் அனைவருக்கும் இது மிகவும் பயனுள்ளதாயிருக்கும். ரூ. 74 இலட்சம் செலவில் நேரிய காவல் துறை கணக்கீட்டுப் பொறி கணிப்பு முறை திட்டத்தின்கீழ் T.D.C. 316 கணக்கீட்டுப் பொறி ஒன்றை முதலில் பெற்ற ஒரு சில மாநில காவல் படைகளில் தமிழ்நாடு காவல் படையும் ஒன்றாகும். கணக்கீட்டுப் பொறி முறையின் 1-வது கட்டப் பணிக்குரிய கருவிகள் வரப்பெற்றுள்ளன. இது விரைவில் செயல்படத் தொடங்கும். 2-வது கட்டப் பணிக்கான கருவிகள் தொகுதி 1978-79-ல் செயல்படத் தொடங்கும்.

போக்குவரத்துப் பணிக்களரி பயிற்சிப்பள்ளி, ஆவடி.

தமிழ்நாடு காவல்துறைக் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில், ஆவடியில் போக்குவரத்துப் பணிக்களரிபயிற்சிப் பள்ளி ஒன்று சென்னை மாநகரக் காவலர் படை, படைக்கலம் தாங்கிய காவலர் அணிகள் ஆகியவற்றின் பலனுக்காக தொடங்கப்பட்டு 20—12—75 ஆம் நாளிலிருந்து செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு காவலர் நல நிதி.

காவல் துறையில் பணிபுரியும் அரசிதழ் பதிவிலாப் பணியாளர்கள் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி, நிதியுதவி, படிப்புதவி, நல உதவி, பொழுது போக்கு

வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் தொடர்ந்து செவ்விய முறையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறையில் பணி புரியும் அரசிதழ் பதிவிலா அதிகாரிகள் மனமுவந்து கொடுக்கும் தொகைகள் மூலம், அரசிதழ் பதிவு அதிகாரிகளிடமிருந்து பெறும் நன்கொடைகள்மூலமும் இந்நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது. 1971–72 முதல் ஒவ்வொரு நிதியாண்டுக்கும் ரூபாய் 1·5 இலட்சம் ஒட்டு மொத்த மானியமாக அரசு இந்நிதிக்கு வழங்குகிறது. தமிழ்நாடு காவலர்கள் சிறப்பாக பணியாற்றியதைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு மத்திய அரசு மானிய உதவித் தொகையான 1975–76-ஆம் ஆண்டில் 2·20 இலட்சம் ரூபாயும் 1976–77 ஆம் ஆண்டில் 1·95 இலட்சம் ரூபாயும வழங்கியது.

தமிழ்நாடு காவல் துறை நூற்றுண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதி.

மேற்கூறிய நிதியைத் தவிர தமிழ்நாட்டுக் காவல்துறை நூற்றுண்டுவிழா படிப்பு உதவித் தொகை நிதியொன்றும் உள்ளது. காவல்துறை அரசிதழ் பதிவிலா நிர்வாக அதிகாரிகளின் பிள்ளைகளில் தகுதியுடையோர்க்குக் கல்லூரிகளில் மேல் படிப்பும், தொழில் நுட்பக் கல்வியும் கற்க ஆண்டு தோறும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்டுகிறது. தனிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதிக்குத் தொகை திரட்டப்படுகிறது. 1976–77 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக ரூபாய் 26,000 செலவிடப்பட்டது.

தமிழ்நாடு காவலர் குடும்ப நல அமைப்பு.

தமிழ்நாடு காவலர் குடும்ப நல அமைப்பு தொடர்ந்து நற்பணியாற்றி வந்தது. இந்த அமைப்பு வகுத்த பல்வேறு திட்டங்களின்கீழ் நூற்பு, தையல் வேலை, பாய் முடைதல் ஜமக்காள நெசவு, தீக்குச்சி செய்தல், பட்டாசு வெடி மருந்து வைப்பதற்கான உறைகள் செய்தல், பீடி சுற்றுதல், காகித உறை செய்தல், புத்தகம் கட்டுதல், பாற்பண்ணை கோழிப் பண்ணை அமைத்தல், கைவினைத் தொழில்கள், பனியன்கள் தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களின் வருவாயை உயர்த்துவதில் தொடர்ந்து துணைபுரிந்து வருகின்றன. பல்வேறு மாவட்டங்களில் உள்ள குடும்பநல அமைப்புப் பிரிவுகளின் மூலம் தயாரிக்கப்படுகின்ற பொருட்கள், காட்சிக்கு வைக்கப்படுவதற்காகவும் விற்பனை செய்யப்படுதவற்காகவும் 1977 டிசம்பர் திங்கள் ஜலந்தரில் நடைபெற்ற நல அமைப்புப் பொருட்காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஊர்க்காவல்படை.

இந்தத் தொண்டு நிறுவனம் காவல்படையினருக்குத் தொடர்ந்து துணைப்படையாகத் திறம்படச் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 96 அணிகளில் 32 அணிகள் சென்னை மாநகரில் உள்ளன. எஞ்சிய 64 அணிகள் மாவட்டங்களில் 52 இடங்களில் அமைந்துள்ளன. 5 ஊர்க்காவல்படை மகளிர்அணிகள் உள்ளன. அவற்றில் 3 அணிகள் சென்னை மாநகரிலும் ½ அணிவிதம் நான்கு மாவட்டத் தலைமை இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இந்த ஆண்டில் போக்குவரத்தை முறைப்படுத்தல், இரவு நேரத்தில் ரோந்துப் பணி, வெள்ள நிவாரணப் பணி சமூகப் பணி ஆகியவை தொடர்பான கடைமைகளைக் கவனிப்பதுடன் திருவிழாக்கள் ஏனைய பொது நிகழ்ச்சிகளில் பாதுகாப்புப் பணி இவற்றில் ஊர்க்காவல் படையினரின் பணி பயன் படுத்தப் பட்டது. இதைத் தவிர, இந்த ஆண்டில் 1977 மார்ச், 1977 ஜூன் திங்களில் முறையே நாடாளுமன்ற மாநிலச் சட்ட மன்றத் தேர்தல்களை அமைதியாக நடத்துவது தொடர்பான பல்வேறு கடமைகளிலும் அவர்களுடைய பணி பயன்படுத்தப்பட்டது. முதலுதவி, தீயணைப்புப் பணி, உள்நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

காவலர் வீட்டு வசதி திட்டம்.

காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவீதத்தினருக்கு குடியிருப்பு வசதிகள் செய்துதரும் நோக்கத்தோடு 1955–56 ஆம் ஆண்டில் இத் திட்டம் கொண்டுவரப்பட்டது. முதலில் இத்திட்டம் "திட்டத்தில் சேராத முக்கியப் பணியாகக் கருதப் பட்டது. பின்னர் இது திட்டப் பணி" யில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரில் 80 சதவீதத்தினருக்குக் குடியிருப்பு வசதிக்காக ஏற்பாடு செய்வதும் இதில் அடங்கும். 80 சதவீதம் என்ற இலக்கில் இதுவரை 60 சதவீத இலக்கையே அடைய முடிந்தது.

கடன் உதவியின் கீழ் 1976–77 ஆம் ஆண்டில் ரூபாய் 23.00 இலட்சமும், 1977–78 ஆம் ஆண்டில் ரூபாய் 29.87 இலட்சமும் இந்திய அரசு அனுமதித்துள்ளது.

காவலர் பதக்கங்கள்.

1977 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த 18 அதிகாரிகள், காவலர்கள் ஆகியோருக்கும் குடியரசுத் தலைவர் பதக்கமும் காவலர் பதக்கமும் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் வழங்குவது 1969-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது 1976 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டு, பதக்கம் வழங்குவது 1977 ஆம் ஆண்டில் மீண்டும் தொடரப்பட்டது.

விளையாட்டுப் போட்டிகள்.

இந்த ஆண்டில் மாநிலக் காவல் உடற்பயிற்சி, நீச்சல் போட்டி மாநிலக் காவலர் பணிப் போட்டி, சரகங்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டி ஆகியவை தமிழ்நாடு காவல் துறையினரால் நடத்தப்பட்டன. இதைத் தவிர, தமிழ்நாடு மாநிலக் காவலர் பணிப் போட்டி அணி 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி வரை பஞ்சாப் ஜலந்தரில் நடைபெற்ற 21 ஆம் அகில இந்தியக் காவலர் பணிப் போட்டிகளில் பங்கேற்றது. 1977ஆம் ஆண்டு அகில, இந்தியக் காவலர் பணிப் போட்டியில் தமிழ்நாடு காவலர் அணி, 7 தங்கப் பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும், 4 சுழற்கோப்பைகளையும் பெற்றது. தமிழ்நாடு காவலர் அணி எட்டாவது முறையாக மொத்தத்தில் முதன்மை விருது பெற்றதுடன் முதலாவது இடத்தையும் பெற்றது. அறிவியல் சாதனை ஆய்வு அணி முதலாவது மூன்றாவது இடத்தைப் பெற்றது. தமிழ்நாடு காவலர் அணி, குஜராத்தில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5 ஆம்தேதி முதல் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 ஆம் தேதி வரை நடைபெற்ற 26 ஆவது அகில-இந்திய காவலர் நீச்சல் விளையாட்டு போட்டியிலும் பங்கேற்றது.

தேர்தல்கள்.

நாடாளுமன்ற மக்கள் அவைக்கான தேர்தல்கள் 16-3-1977 முதல் 19-3-1977 வரை நடைபெற்றன. நாடாளுமன்ற மக்கள் அவைக்கான தேர்தல்கள் முடிவுற்றவுடனே, சட்ட மன்றப் பேரவைக்கான தேர்தல்கள் 12-6-1977 அன்றும் 14-6-1977 அன்றும் நடைபெற்றன, காவல் துறையினர் தேர்தலுக்கான ஏற்பாடுகளைத் திறம்படச் செய்திருந்ததால் இம்மாநிலத்தில் பெரிய கலவரம் ஏதுமின்றி தேர்தல்கள் முழுமையும் அமைதியான முறையில் நடைபெற்றன.

வெள்ள நிவாரணப் பணி.

இம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை மாவட்டங்களில் 1977 ஆம் ஆண்டு நவம்பரில் தாக்கிய புயல் வெள்ளத்தினால் பொதுமக்களுக்கும், பொருள்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்ட போது நிவாரணப் பணிகளில் காவல் படையினர் போற்றத்தக்க பணி புரிந்தனர். காவல் துறையினர் மேற்கொண்ட இந்த

நிவாரணப் பணிகளைத் தவிர, காவல்துறையின் நிர்வாகப் பணியாளர்கள், எழுத்துப் பணியாளர்கள் ஆகியோர் தங்களுடைய ஒருநாள் சம்பளத் தொகையை வழங்கிய வகையில் மொத்தம் ரூ. 5,27,195.19ஐத் தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கினர். இதைத் தவிர, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 3-வது அணியினர் [illegible] வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வழங்குவதற்காக ரூ. 10,016 பெறுமான 640 ஆனதா சேலைகள் வாங்கினர்.

இயங்கும் காவல் படைகள்.

மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளை மீறுபவர்களைக் கண்டுபிடிக்கவும், குற்றம் புரிவோரைப் பிடிக்கவும் தமிழ்நாட்டிலுள்ள 19 மாவட்டங்களில் கோயம்புத்தூர் (நகர்ப்புறம), மதுரை (தெற்கு), தென்னாற்காடு, தஞ்சாவூர் (மேற்கு) திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய ஆறு மாவட்டங்களில் மட்டுமே இயங்கும் காவல்படையினர் இயங்கி வருகின்றனர். எஞ்சியுள்ள 13 மாவட்டங்களிலும் அதே போன்ற இயங்கும் காவல் படைகளை அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

காவலருக்கும் பொது மக்களுக்குமிடையே நல்லுறவு.

(i) மக்கள் ஆட்சியில் குற்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கும், துப்பு துலக்குவதற்கு மட்டுமல்லாமல் சட்டம் ஒழுங்கு அமைதியை நிலைநாட்டக் காவல் துறையினர் திறம்பட பணியாற்றுவதில் காவலருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்லுறவு நீடிப்பது இன்றியமையாத முதன்மை இடம் பெறுகிறது.

(ii) எல்லாத் துறையிலும் தேர்ச்சி பெற்ற சிறந்த காவலர் ஒருவரே காவல் படையின் சிறந்த பொதுமக்கள் தொடர்பு அலுவலராக இருக்க முடியும் என்பதைக் காவலரின் மனதில் பதிய வைத்து பொறுப்புணர்வை வளர்ப்பதில் அடிப்படைப் பயிற்சிக்கும் பணியிருப்புப் பயிற்சிக்கும் அதிக நேரமும் சிந்தனையும் தற்போது செலவிடப்பட்டு வருகிறது.

(iii) "பொதுமக்கள் தொடர்பு" என்பது இன்று அதிக நாட்டம் செலுத்தப்பட்டுவரும் சிறப்புத் துறையாகும். 47,000 பேரையும், ஏராளமான அதிகாரங்களையும் சமூகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஊடுருவியுள்ள அதன் பிணைப்பும் கொண்ட காவல் துறையைப் போன்ற பெரிய துறை எதுவும் இதில் வல்லுநரின் ஆலோசனையின்றிச் செயல்பட முடியாது. 'சிறுவர் சங்கங்கள்' சிறுவர் போக்குவரத்துப் பூங்கா', போக்குவரத்து வாரங்கள்' பொருட்காட்சிகளில் 'காவல்துறை அரங்குகள்' போன்ற தனி முயற்சிகள் காவலருக்கும் பொதுமக்களுக்கு

மிடையே உள்ள நல்லுறவை மேம்படுத்துவதற்காக உள்ளன என்பது உண்மைதான். ஆனாலும், இவையெல்லாம் இப்பிரச்சினையின் விளிம்பைத்தான் தொடுகின்றன. இவையெல்லாம் ஆழ்ந்த உளவியல் அறிவையும் உளவியல் முறைகளையும் அடிப்படையாகக் கொண்டவையல்ல. ஒப்பந்த அடிப்படையில் பொது மக்கள் தொடர்பு வல்லுநர் ஒருவரை நியமிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகின்றது. அவரது ஆலோசனையுடன் காவல் துறையின் மதிப்பை உயர்த்தும் பல்நோக்கு அறுகுமுறை ஒன்றை வகுப்பதெனக் கருதப்பட்டுள்ளது.

காவலர் ஒழுங்குணர்வு.

காவல்துறையினரின் கட்டுப்பாடும் ஒழுங்குணர்வும் தொடர்ந்து போற்றத் தக்க வகையில் இருந்து வந்துள்ளன. குறிப்பாக, 1977 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் காவல்துறையினர் தொடர்ந்து அதிக பணிச் சுமையை ஏற்க வேண்டியிருந்த போதிலும் அவர்கள் பாராட்டத்தக்க வகையில் தங்கள் கடமையைஆற்றினர். காவல் துறையில் எல்லாப் பதவித்தரங்களில் உள்ளவர்களும் ஆர்வத்துடனும் கடமைப் பற்றுடனும் தொடர்ந்து பணியாற்றி வந்தனர்.

இணைப்பு I-A.

31–12–1977 அன்றுள்ளபடி காவற்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை.

பதவித்தரம்.	பதவிகளின் எண்ணிக்கை.
காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல்	1
கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல்	1
காவல் துறை ஆணையாளர்	1
துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்	15
சூப்பிரண்டு/இணை சூப்பிரண்டு	35
கூடுதல் சூப்பிரண்டு	3
தளவாய்	5
துணைத்தளவாய்	3
உதவி சூப்பிரண்டு-துணை சூப்பிரண்டு (தரம்-1)	201
துணை சூப்பிரண்டு (தரம் 2)	26
துணை சூப்பிரண்டு (தரம்-3)	21
காவல்துறை இன்ஸ்பெக்டர்	683
ரிசர்வ் இன்ஸ்பெக்டர்	71
டெபுடி இன்ஸ்பெக்டர்	168

பதவித்தரம்	பதவிகளின் எண்ணிக்கை
சப்-இன்ஸ்பெக்டர்	1,980
ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்	288
உதவி சப்-இன்ஸ்பெக்டர்	682
ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்	159
தலைமைக் காவலர்	4,243
ஹவில்தார்	513
நாயக்	310
லான்ஸ் நாயக்	217
காவலர் (முதல்நிலை)	4,309
காவலர் (இரண்டாம் நிலை)	32,689
பெண் சப்-இன்ஸ்பெக்டர்	4
பெண் தலைமைக் காவலர்	4
பெண் காவலர்	64
மொத்தம் ..	46,716

இணைப்பு II.

577-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

1977–78 ஆம் ஆண்டிற்கான ஆய்வுரை.

1967 அக்டோபர் திங்களிலிருந்து தனிப்பட்ட ஒரு துறையாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை, நாட்டில் மிகப் பெரிய திறமை மிக்க ஒரு நிறுவனமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்துறையின் பணி, பொதுமக்களுக்கு எப்போதும் கிடைக்கிறது.

2. தீ விபத்தைத் தவிர்ப்பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணிகளாகும். பொதுமக்களுக்கு வேறு பல வழிகளிலும் பங்கு கொண்டு இத்துறை பயன்மிகு உதவிகள் செய்கின்றது. கண்காட்சிகள் திருவிழாக்கள் நடைபெறும் இடங்களில்தீத்தடுப்புப் பணிகளை மேற்கொள்வதுடன் இடிபாடுகளுக்கான கட்டிடங்களி

விருந்தும் மக்களேயும், கால்நடைகளேயும் மீட்கும் பணிகளிலும் ஈடு
படுகிறது. உடல்நல மற்றவர்களேயும், காயமடைந்தவர்களேயும்
உடனடி மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவ மனேகளுக்கு எடுத்து
செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்கிறது. கொள்ளே நோய் ஏற்படும்
சமயங்களில் பொதுச் சுகாதாரத் துறைக்கு இத்துறை உதவிபுரி
கிறது. தேர்தல்கள், கலவரங்கள், பந்தோபஸ்துக்கள் ஆகியவற்
றிற்கு காவல் துறையினர் தீயணேப்புப்படை விரர்களின் பணிகளேக்
கோருகின்றனர். மனிதாபிமானத்தின் அடிப்படையில் செய்யும்
இத்தகைய பணிகளேத் தவிர, தீயணேப்புத்துறைப் பணியாளர்
பொதுமக்கள் பொழுது போக்கிடச்சட்டம், தமிழ் நாடு மாவட்ட
நகராட்சிகள் சட்டம் சென்னே மாநகராட்சிச் சட்டம், தமிழ்நாடு
ஊராட்சிகள் சட்டம், படைக்கலச் சட்டம் அதன் கீழ்ச் செய்யப்
பட்ட விதிகள், தமிழ்நாடு தொழிற்சாலேகள் சட்டம் முதலியவற்
றின்கீழ் உரிமங்கள் வழங்கப்பட்ட வழங்கப்பட, உள்ள இடங்களே
ஆய்வு செய்யும் பணிகளேயும் கவனிக்கின்றனர்.

3. துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை.

1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாளன்றுள்ளபடி
தமிழ்நாடு தீயணேப்புத் துறையில் பணியாளர்களின் எண்ணிக்கை
குறித்த விவரங்கள் இணேப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

4. தீயணேப்பு நிலேயங்கள்.

1978 ஜனவரி 1 ஆம் நாளன்றுள்ளபடி இம்மாநிலத்தில்
செயல்படும் தீயணேப்பு நிலேயங்களின் எண்ணிக்கை 103 ஆகும்.
இவற்றில் 14 சென்னே மாநகரிலும், எஞ்சியவை வெளியூர்
நகரங்களிலும் உள்ளன. சென்னே மாநகர் வடக்கு கோட்டத்
தில் தண்டையார் பேட்டையிலும், வ. உ. சி. நகரிலும் திறக்க
அரசால் ஏற்கனவே அனுமதி அளிக்கப்பட்ட இரண்டு தீயணேப்பு
நிலேயங்கள் திறக்கப்பட உள்ளன. இவற்றிற்கு தக்க இடங்கள்
கிடைத்து, அந்த இடத்தில் கட்டிடங்கள் கட்டப்பட்டவுடன்
மேற்கண்ட இடங்களில் தீயணேப்பு நிலேயங்கள் திறக்கப்படும்.
நிலேயங்களேக் கூடிய விரைவில் திறக்க தனி முயற்சிகள்
இந்க்கப்பட்டு வருகின்றன.

5. 1977-ல் அரசு இரண்டு தீயணேப்பு நிலேயங்களே ஒன்று
தூத்துக்குடி அனல் மின் நிலேயத்திலும், மற்றொன்று இராணிப்
பேட்டையிலுள்ள தொழிற்சாலேத் தொகுதியிலும் திறக்க அனுமதி
அளித்துள்ளது. இந்த இடங்களில் ஏற்படும் விபத்துக்களிலிருந்து
காக்கும் பணிகளில் இந்நிலேயங்கள் ஈடுபடும். இந்த இரண்டு
தீயணேப்பு நிலேயங்களேயும் திறக்க விரைவு நடவடிக்கைகள் எடுக்
கப் பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம் ஒசூரில் உள்ள 'சிப்
காட்டில்' தீயணேப்பு நிலேயம் ஒன்றைத் திறப்பதற்கான மற்றொரு
செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் உள்ளது.

6. தீயணேப்பு அழைப்புகள்

1977-ல் இம்மாநிலத்திலுள்ள தீயணேப்பு நிலேயங்கள்
7,553 அழைப்புகளேப் பெற்றன. அவற்றில் 126 பொய்
யான அழைப்புகளாகும். 1.475 அவசர மீட்பு அழைப்பு
களாகும். எஞ்சிய 5,952 உண்மையில் தீ விபத்து பற்றியன
ஆகும். நகரப் பகுதிகளில் 3,148 தீ விபத்துக்களும், கிராமப்
பகுதிகளில் 2,804 தீ விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. உண்மை
யில் ஏற்பட்ட தீ விபத்துக்களில் 64 பெரும் தீ விபத்துக்களாகும்.
இவை: ஒவ்வொன்றிலும் உயிர் இழப்புகள் அல்லது ரூ. 50,000
மேற்பட்ட சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. மாநிலம்
முழுவதிலும் தீ விபத்துக்களால் ஏற்பட்ட சொத்து இழப்பு
அல்லது அழிவு ரூ. 199·6 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இந்தக் கால அளவில் தீயில் அழிவதனின்றும் காப்பாற்றப்பட்ட
சொத்துக்களின் மதிப்பு ரூ. 1,958.4 இலட்சம் என மதிப்பிடப்
பட்டுள்ளது. தீயணேப்புப் படையினர் வருவதற்கு முன்பு தீ
விபத்தினுல் எற்பட்ட உயிர் இழப்புகளின் எண்ணிக்கை 114,
காப்பாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை 344 ஆகும்.

7. அவசர மீட்பு அழைப்புகள்

1977-ல் 1,475 அவசர மீட்பு, அழைப்புகள் வரப்பெற்றன.
1977 நவம்பரில் நாகப்பட்டினத்தில் கடும் புயல் தாக்கியதன்
காரணமாக, அந்நகரில், பொது மக்களின் உயிருக்கும், உடமை
களுக்கும் இதுவரை ஏற்பட்டிராத அளவிற்குப் பெருமளவில்
சேதம் ஏற்பட்டது. வேறு சில மாவட்டங்களிலும் இதைப்
போன்ற இழப்புகள் ஏற்பட்டன. கடும் வெள்ளத்தின் காரண
மாக ஆயிரக்கணக்கான மக்கள் தவித்தனர். பலர் உயிரிழந்தனர்.
பெரும் சொத்துக்கள் அழிந்தன. பலர் வீடிழந்தனர். பாதிக்கப்
பட்ட எல்லா இடங்களிலும் மீட்புப் பணிகளே மேற்கொள்ள
தீயணேப்புத்துறை தம்மிடமிருந்து பணியாளர்கள் அனேவரை
யும் அனுப்பியது. அவர்கள் தக்க தருணத்தில் அளித்த
உதவியாலும், திறமைமிக்க பணியாலும், பெருமளவிற்கு ஏற்
படவிருந்த பொருள் இழப்பும், உயிர் இழப்பும், வெகுவாக
குறைந்தது. 1977 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 12, 13
தேதிகளில் தீயணேப்புத் துறை அதிகாரிகள் மேற்கொண்ட
துயர்தணிப்பு, மீட்பு நடவடிக்கைகள், பொது மக்களாலும்
பொது நிறுவனங்களாலும் போற்றப்பட்டன.

8. ஆம்புலன்ஸ் பணி

நகரங்களின் தேவைகளுக்கிணங்க, தீயணேப்பு நிலேயங்
களுடன், தீயணேபபுப் படைபிரிவுடன் ஆம்புலன்ஸ் வண்டிகளும்
இணேக்கப்பட்டுள்ளன. 1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள்
1 ஆம் நாளன்றுள்ளபடி துறையிடமுள்ள ஆம்புலன்ஸ்
வண்டிகளின் மொத்த எண்ணிக்கை 65. 1977-ல் இந்த
ஆம்புலன்ஸ் வண்டிகள் 8678 அழைப்புகளேப் பெற்றன.
இவற்றில் விபத்து அழைப்புகளும் கட்டணமில்லாத அழைப்பு

களும் 499. கட்டண அழைப்புகள் 8,179 ஆகும். இந்த ஆம்புலன்ஸ் வண்டிகளுக்கு வாடகைக் கட்டணமாக, ரூ. 2.07 இலட்சம் வருவாய் கிடைத்தது.

9. தீயணைப்பு தீவிபத்து தடுப்பு நீர் இறைத்தல் பணி ஆகியவற்றிற்கு ஆதாரப் பிரிவுகள்

தீ விபத்துகள் ஏற்படும் கட்டிடங்களில் தீயணைப்பு ஏற்பாடாக, ஆதாரப் பிரிவுகளைப் பெற்றிருக்க வேண்டுமெனத் தீயணைப்புத்துறை வலியுறுத்துகிறது. 1977. ல் மேற்கொள்ளப் பட்ட இத்தகைய ஆதாரப்பணிகள், நீர் இறைப்புப் பணிகளின் மொத்த எண்ணிக்கை 335. வாடகைக் கட்டணமாக ரூ. 1.25 இலட்சம் கிடைத்தது.

10. நெருக்கடி வண்டி

இத்துறையில் ஒரே ஒரு நெருக்கடி வண்டி மட்டும் உள்ளது. இது சென்னை மாநகரத்தின் தெற்குக்கோட்டத்துடன் இணைக்கப் பட்டுள்ளது. சாலை விபத்துக்குள்ளான வண்டிகளைத் தூக்கி, அகற்றவும் கட்டங்கள் இடியும் சமயங்களில் பெரிய கான்கிரீட் கட்டுமானங்களை அகற்றுவதற்கும் ஏற்ற தனி அமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டில் இந்த வண்டி 18 அழைப்பு களைப் பெற்றது. தனியார்களிடமிருந்து வாடகைக் கட்டணமாக ரூ. 3,510 வசூலிக்கப்பட்டது.

11. பணிக்களரியும் பழுது பார்க்கும் நடமாடும் குழுக்களும்

துறையின் வண்டிகளுக்கும் சாதனங்களுக்கும், ஏற்படும் பெரிய அளவிலான பழுதுகளை நீக்கும் பணிகளைக் கவனிப்பதற் காக சென்னையில் பணிக்களரி ஒன்றை இத்துறைப் பராமரித்து வருகிறது. ஒவ்வொரு கோட்டத் தலைமையிடத்திலும், நட மாடும் பழுதுபார்க்கும் குழு ஒன்று உள்ளது. இது, அந்தக் கோட்டத்தில் வண்டிகளுக்கு ஏற்படும் சாதாரணப் பழுதுகளைக் கவனிக்கிறது. சென்னையிலுள்ள துறையின் பணிக்களரி, துறை வண்டிகள் சம்பந்தப்பட்ட 237 பணிகளைக் கவனித்தது. அப் பணிகளின் மதிப்பு ரூ. 1,34,614. கோட்டத் தலைமையிடத் துடன் இணைக்கப்பட்டுள்ள நடமாடும் பழுது பார்க்கும் குழுக்கள் 237 பணிகளைக் கவனித்துள்ளன, பணிகளின் மதிப்பு ரூ. 28,480 ஆகும்.

12. பரிசுகள்

மதுரை கோட்டத்தைச் சேர்ந்த 1,564 ஆம் எண் தீயணைப்புப் பணியாளர் மீர்தாஜுதீன், பாராட்டத்தக்க பணிக் காக 1977 ஆம் ஆண்டு குடியரசு நாள் விழாவின்போது

தீயணைப்புப் பணி விருது பெற்றார். தீயணைப்புப் பணி துறையைச் சேர்ந்த கீழ்க்கண்ட அதிகாரிகள், தமிழ்நாடு முதலமைச்சர் விருதினை பாராட்டத்தக்க பணிக்காகப் பெற்றனர்.

1. திரு. ஆர். சந்திரசேகரன், கோட்ட தீயணைப்பு அதிகாரி.

2. திரு. எல். ஜனார்த்தனன், முன்னணி தீயணைப்புப் பணியாளர், 592.

மேற்குறிப்பிடப்பட்டவர்கள் தவிர, 593 அதிகாரிகளும், பணியாளர்களும், தீவிபத்துக்கள், மீட்புப் பணி முதலியவற்றில் அவர்கள் ஆற்றிய நற்பணிக்காக ரூ. 5,127 ரொக்கப் பரிசுகள் பெற்றனர்.

13. தீயணைப்புப் பணியாளர் பயிற்சி

தமிழ்நாடு தீயணைப்புப் பணியாளர் நல நிதி-நல நிறுவனம்,
1962-ல் ஏற்படுத்தப்பட்டது. பணியாளர்களுக்கு இடர்ப்பாடு
கள் ஏற்படும் பொழுது நிதியுதவி அளிப்பதற்கும் அவர்களின்
நலனை மேம்படுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. காச
நோய், தொழு நோய், அல்லது புற்று நோய் ஆகியவை கண்ட
உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்தோருக்கு ஊட்டச்
சத்துணவு வாங்குவதற்கும் தங்களின் குழந்தைகள் உயர்
கல்விக்கும் ஏற்படும் செலவைச் சரிக்கட்டவும், அவர்களைச் சார்ந்
தோருக்காக ஈமக்கடன் செலவுகளைச் செய்யவும், பணியிலிருக்கும்
போது இந்த நிதியிலிருந்து உதவி எதனையும் பெறாத, பதவியி
லிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு அடையாளத் தொகை கொடுப்
பதற்கும், நிதியுதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியின் பட்டியலி
லுள்ளவர்களின் எண்ணிக்கை 3,361 ஆக இருந்தது.
1977-ல் சந்தாத் தொகையாக ரூ. 8,036 வசூலிக்கப்
பட்டது. 1977-ல் இந்நிதி சார்ந்த உறுப்பினர்களுக்கு
ரூ. 18,500 நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்நிதிக்கு அரசு
ஆண்டுக்கு ரூ. 10,000 நேரடி மானியம் அனுமதிக்கிறது.

14. பயிற்சி

தீயணைப்புத்துறையில் நேரடியாக நியமனம் செய்யப்
பட்ட அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும் சென்னையிலுள்ள
தமிழ்நாடு தீயணைப்புப்பணி அரசுப் பயிற்சி பள்ளி அளிப்பதுடன்
மறுபயிற்சி, ஏனைய வகுப்புகளையும் நடத்துகிறது. இதனை
கோட்டத் தீயணைப்பு அதிகாரி ஒருவர் மேற்பார்வையிடுகிறார்.
அவருக்கு, தீயணைப்பு நிலைய அதிகாரிகள் இருவரும் 2
முன்னணித் தீயணைப்புப் பணியாளர்களும் உதவி புரிகின்றனர்.
சென்னையிலுள்ள, தமிழ்நாடு தீயணைப்புப் பணி அரசு பயிற்சிப்

பள்ளியில் இந்த ஆண்டு புதிதாகச் சேர்ந்த தீயணைப்புப் பணியாளர்களுக்கு 4 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. மேற்சொன்ன பயிற்சி வகுப்பில் பயிற்சி அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 342 ஆகும்.

15. பொது

சென்னை மாநகரிலும் மாநகரைச் சுற்றிலும் உள்ள பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்தில் தீயணைப்பு, மீட்புப் பணிகளை மேற்கொள்ள, நவீன சாதனங்கள் இல்லாதது தீயணைப்புத் துறைக்கு ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது. ரூ. 18 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிலான 'ஸ்நார்கல்' எனப்படும் ஒரு நவீன சாதனத்தை வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த சாதனத்தை புது டில்லியிலுள்ள வழங்கல் தீர்வுசெய்தல் தலைமை இயக்குநர் முகவரைமைப்பு மூலமாக இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சாதனம் இறக்குமதி செய்யப்படுவதன் பேரில், சென்னை மாநகரில் உள்ள பலமாடிக் கட்டிடம் ஏதேனும் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டாலும் அதனைத் திறமையாகவும், நல்ல முறையிலும் அணைக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. எண்ணூர் அனல் மின் நிலையம் அதைச் சுற்றியும் ஏற்படும் பெரிய தீ விபத்துக்களைச் சமாளிக்க, ''க்ராஷ் டெண்டர்'' என்னும் மற்றொரு சிறப்பு சாதனம், பம்பாயில் ரூ. 2.79 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வாங்கப்பட்டது. இந்த சிறப்புச் சாதனம் 1977-ஆம் ஆண்டு மே திங்கள் 13-ம் தேதியிலிருந்து பயனியிலுள்ளது. இதே போன்ற மற்றொரு சாதன வண்டி தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலுள்ள தீயணைப்பு நிலயத்திற்காக அனுமதிக்கப்பட்டுள்ளது.

16. தீ விபத்து நடந்த இடத்திற்குத் தீயணைப்புப் படை பிரிவுகள் சென்றவுடன் அவர்களுக்குத் தேவைப்படக்கூடிய நீர் போதிய அளவிற்குக் கிடைக்காமல் போவதே இத்துறைக்கு ஏற்படும் மற்றொரு பிரச்சினையாகும். தற்போதுள்ள தீயணைப்பு ஊர்திகளின் அமைப்பு முறைகள் மாற்றப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட அமைப்பிற்கிணங்க, ஒவ்வொரு தீயணைப்பு நிலயத்திலும், இரண்டு நடமாடும் தண்ணீர் வண்டிப்பிரிவுகள் இருக்கும். ஒன்று 1,000 காலன் தண்ணீர் கொள்ளளவு கொண்டதாகவும் மற்றொன்று 500 காலன் தண்ணீர் கொள்ளளவு கொண்டதாயும் இருக்கும். இவை ஒவ்வொன்றும், 500 காலன் கொள்ளளவுள்ள நடமாடும் தண்ணீர் வண்டிப் பிரிவு உள்ள இடத்தில் 150 GPM தொடர் ஊர்திப்பம்பு ஒன்றை இழுத்துச் செல்லும். இத்துடன் தொடர் ஊர்திப் பம்புடன் கூடிய தீயணைப்புத் துணை இழு வண்டி ஒன்றும் இருக்கும். தீயணைப்பு நிலயம் அமையப்பெற்றுள்ள நகரங்களில் மட்டுமல்லாது, அதனைச் சுற்றுப்

புள்ள பகுதிகளிலும் ஏற்படக்கூடிய எத்தகைய தீ விபத்தாயினும் அதனைத் திறமையாகவும் பலனளிக்கத் தக்க வகையிலும் போராடி வெற்றிகாண முடியும் என்று நம்பப்படுகிறது.

இணைப்பு II A

1978 ஜனவரி 1-ஆம் நாளன்றுள்ளபடி தீயணைப்புப் படையிலுள்ளவர்களின் எண்ணிக்கை—

(1) அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள்—	
1. தீயணைப்புத்துறை இயக்குநர் ..	1
2. துணை இயக்குநர்கள் ..	2
3. கோட்ட தீயணைப்பு அதிகாரிகள் ..	6
(2) அரசிதழ் பதிவு பெறாதவர்கள்—	
1. கோட்ட உதவித் தீயணைப்பு அதிகாரிகள்	8
2. கோட்ட உதவித் தீயணைப்பு அதிகாரி (போக்குவரத்து).	1
3. நிலயத்தீயணைப்பு அதிகாரிகள் ..	110
4. போக்குவரத்து நிலய அதிகாரிகள் ..	7
5. முன்னணி தீயணைப்பு பணியாளர்கள் ..	379
6. ஓட்டுநர்—இயந்திரக் கம்மியர்கள் ..	114
7. பற்றவைப்பவர் (Welder) ..	1
8. தீயணைப்போர்-இயந்திரக்கம்மியர்கள் ..	8
9. தீயணைப்போர்-தச்சர்	1
10. தீயணைப்போர்-ஓட்டுநர்கள்	604
11. தீயணைப்புப் பணியாளர்கள்	2,335
மொத்தம் ..	3,580

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 மார்ச் 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தாழஞ்சேரி பகுதியில் வழங்கப்பட்ட நிலப்பட்டாக்கள்.

*585— வினா. திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாயூரம் தாலூக்கா, தாழஞ்சேரி, வில்லியநல்லூர் கிராமங்களில் சர்வே எண். 239/4பி/1ல் அளிக்கப்பட்டிருந்த நிலப்பட்டா உரிமைகள் ரத்துச்செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : (அ) ஆம். வருவாய் வாரியத்தினால் ரத்துச் செய்யப்பட்டன.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட நிலங்கள் சேத்தூர் வாய்க்காலை மாற்றி அமைக்கத் தேவைப்படும் என்று கருதப்பட்டதால் ரத்து செய்யப்பட்டன. வாய்க்கால் மாற்றி அமைக்கும் வேலை முடிந்தபின், வாய்க்காலுக்குத் தேவையில்லாத நிலங்கள் மீண்டும் அடமானம் செய்யப்பட்டுள்ளன.

எடமேலையூரில் வீட்டுமனைகள் ஒப்படை.

*586— வினா. திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீடாமங்கலம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த எடமேலையூர் பஞ்சாயத்திற்குட்பட்ட அம்மணி அம்மன் குளத்தின் தென் கரையில் குடியிருப்போருக்கு அந்த இடங்களை பட்டா செய்து கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

திரு. துரை. கோவிந்தராசன் : தலைவரவர்களே, கிராமப் புறங்களில் இருக்கிற குளங்களின் கரையோரங்களில் குடியிருப்பவர்கள் கொஞ்ச காலத்திற்குப் பின்னால் குளம் இல்லாத அளவுக்கு தூர்த்து விடுகிறார்கள். அதனால் கிராமப் புறங்களில் இருக்கிற சிறு விவசாயிகளின் கிணறுகளில் தண்ணீர் ஊற்று இல்லாமல் போய் விடுகிறது. குளங்களில் தண்ணீர் இருந்தால் தான் அந்த வட்டாரத்தில் வெட்டப்படும் கிணறுகளில் தண்ணீர் ஊற்று இருக்கும். அதனால் ஏரி, குளங்கள் கரையோரங்களில் குடியிருப்பவர்களுக்கு அரசு மாற்று இடங்களைக் கொடுத்து, ஏரி, குளங்கள் தூர்ந்து போகாமல் பார்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், மன்னார்குடி வட்டம், எடமேலையூர் கிராமம் ஆர். எஸ். எண். 489-ல் உள்ள நிலத்தின் மொத்த அளவு 5.56 ஏக்கர். அதில் சுமார் 1.56 ஏக்கர் நிலத்தை 16 பேர்கள் குடிசைகள் கட்டி ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் அனைவரும் வீடோ, நிலமோ இல்லாத ஏழைகளாவர். அவர்கள் 'அம்பலகாரன்', 'கள்ளர்' குலத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஆக்கிரமிப்பு 10 ஆண்டுகளாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆக்கிரமிப்பு ஆட்சேபகரமானதாகக் கருதப்பட்டு, அபராதமும் விதிக்கப்பட்டு வருகிறது. குளம் புறம்போக்காக உள்ள இந்த நிலத்தை "நத்தம் புறம்போக்காக" வகை மாற்றம் செய்து வீட்டு மனைகளாக மேற்படி ஆக்கிரமிப்பாளர்களுக்கு அளித்து முறைப்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று உள்ளதாக தஞ்சாவூர் கூடுதல் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். எனினும், இது வரையில் அவ்வாறு ஆக்கிரமிப்பாளர்களுக்கு இந்த நிலத்தை வீட்டு மனைகளாக ஒப்படை செய்வதற்கான ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

திரு. கிரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், இப்படிப்பட்ட ஊருணிகள் பாசனத்திற்கு ஏற்றதாக இருக்கின்றன. ஏற்கெனவே பாசனவசதி கிணறுகள் இல்லாத இடங்களில், கதிர் அறுவடைக் காலத்தில் ஒரு தண்ணீர், இரண்டு தண்ணீர் தட்டுப்பாட்டினால் கதிர் அறுவடை ஆகாமல் போகும் சூழ்நிலை ஏற்பட்டால் இப்படிப்பட்ட ஊருணிகளிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் அல்லது கிணறுகளை வெட்டி சிறிது ஆழத்திலேயே தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம். அதைக் கருத்திற் கொண்டு தான் முந்திய காலத்தில் ஏராளமான ஊருணிகளை பல இடங்களில் அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, கிராமப் புறங்களில் இருக்கின்ற ஊருணிகள் ஆக்கிரமிப்பாளர்களாலோ அல்லது வேறு வகையிலோ ஆக்கிரமிக்கப்படாமல் இருப்பதற்கும் புதிய ஊருணிகளை அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை எல்லாம் அடிப்படையாக வைத்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

முளகிரிப்பட்டு கிராம முன்சீப்.

*587— வினா. திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இந்த வருடத்தில் (1977) வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு தாலூக்கா முளகிரிப்பட்டு கிராம மணியக்காரரால் பணம் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

சாத்தனூர் பிரதான கால்வாய் மராமத்து.

*588— வினா. திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயினை பழுதுபார்த்து கால்வாயின் கடைசிப் பகுதியிலுள்ள நிலங்கள் வரை தண்ணீர் தடையின்றி பாய்வதற்கு வசதி செய்யும் உத்தேசம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

[1978 மார்ச் 16

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சாத்தனூர் அணையின் பிரதானக் கால்வாயில் கடைசிப் பகுதி வரை தண்ணீர் தடையின்றி பாய்கின்றது. இவ்வணையின் பிரதான கால்வாய் கரைகளின் சில பகுதிகளை மேலும் பலப்படுத்த மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெறுகின்றன. மேலும் செப்பனிடப்படும் வேலைகள் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது வேலைகள் முறையே நடைபெற்று வருகின்றன என்று கூறினார்கள். கடந்த மூன்றாண்டுக் காலமாக பிரதான கால்வாயில் எந்த வேலையும் செய்யப்படாமல் இருப்பதால் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் பாயாமல் இருப்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே கடந்த மூன்றாண்டு காலமாக செலவு செய்யப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:—

1974–75-இல்— ரூ. 35,303

1975–76-இல்— ரூ. 23,598

1976–77-இல்— ரூ. 21,246

என்கின்ற அளவில் இந்தப் பணிகளுக்காக தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. வேணுகோபால்: பேரவைத் தலைவரவர்களே, கால்வாய் சரியான முறையில் இல்லாத காரணத்தினால் அங்குள்ள சில பகுதிகளிலே 1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் தேதியிலிருந்து இன்று வரை சரியான முறையிலே தண்ணீர் நிலங்களுக்கு பாயவில்லை என்பதால் அந்த கடைமடைப் பகுதியிலுள்ள நான்கைந்து கிராமங்களில் பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து அமைச்சரவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பொதுவாகவே பாசன கடைமடைப் பகுதியிலே இருந்து இப்படி கோரிக்கைகள் எழுப்பப்படுவது வாடிக்கை.

1978 மார்ச் 16]

வட ஆற்காடு மாவட்டத்தில் நில நீர்.

*589—வினா திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் நிலத்தடி நீரை பாதுகாக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) எந்தெந்த தாலூக்காக்களில் நிலத்தடி நீர் இல்லை என்று தெரிய வந்துள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) விரிவான, விஞ்ஞான அடிப்படையிலான நிலநீர் ஆய்வு வட ஆற்காடு மாவட்டத்தில் நிலநீர் இருப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வு முடியும் வரையில் ஒன்றியம் வாரியாக தற்பொழுது உள்ள நிலநீர் இருப்பு, நிலநீர் இறைவை மற்றும் மீதிமுள்ள நிலநீர் கணக்கிடப்படுகிறது. கணக்கிடப்படும் மீதமுள்ள நிலநீரிலிருந்து தொடர்ந்து கூட்டுறவுத் துறையின் சிறுபாசனத் திட்டங்கள் செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. இரு கிணறுகளுக்கு இடைப்பட்ட தூரமும் வரையறுக்கப்படுகிறது.

(ஆ) நிலநீர் எல்லா வட்டங்களிலும் உள்ளது. ஆனால் கீழ்க்கண்ட தாலுக்காக்களில் செலவழிக்கப்படும் நீர், நீர் வரத்தை விட அதிகமாக உள்ளது:—

1. அரக்கோணம்.
2. குடியாத்தம்.
3. வேலூர்.
4. வாலாஜாப்பேட்டை.
5. ஆரணி.
6. வந்தவாசி.

திரு. இ. தமிழரசன் ; பேரவைத் தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தைச் சுற்றிலும் மலைகள் நிறைந்த இடம். இது விளைச்சலிலும் இரண்டாவது இடத்தைத் தமிழகத்திலே பெற்றிருக்கிறது. இருந்தாலும் அந்தக் காடுகளிலும் மலைகளிலும் இருந்து வரும் காட்டாற்றுநீரை ஆங்காங்கே தடுத்து நிறுத்தி வைப்பதற்கு நாங்கள் பலபேர் மனு கொடுத்திருந்தோம். அப்படியிருந்தும் இதுவரையிலும் சரியாகக் கவனிக்கப்படவில்லை. பத்திரப்பள்ளி, மோர்தனா, பல்லடம் போன்ற இடங்களில் தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கொடுக்கப்பட்டிருந்தும், இதுவரையிலே சரியாக கவனிக்கப்படவில்லை. ஆகவே, இதைப்போன்ற ஏற்பாடுகளைச் செய்து நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிதி வாயில்களைப் பொறுத்து இது கவனிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீர் குறித்து எந்தெந்த முறையில் ஆய்வு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து அணை கட்டி பாதுகாப்பதால் நிலத்தடி நீர் சான்றிதழ் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, தமிழகத்தில் நிலத்தடி நீர் பாதுகாப்பில் கண்டிப்பான முறையை இந்த அரசு நிறைவேற்றி வருவதால் அந்தப் பகுதிகளிலே பயிர் செய்கின்ற சிறிய விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ? கடந்த ஆண்டில் பெய்த மழையின் காரணமாக நிலத்தடி நீர் நன்றாக இருக்கிறது என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே, 1977–78 ஆம் ஆண்டு வரை வரப்பெற்ற மனுக்களுக்காவது மின் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதையெல்லாம் ஒட்டித்தான் இவ்வாண்டு 35 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு நிலத்தடி நீர் சான்றிதழ் இல்லாமல் மின் வசதி வழங்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி '(அ)' வுக்கு அவர்கள் அளித்த பதிலில் அரக்கோணம், குடியாத்தம் போன்ற தாலுக்காக்களில் நீர் செலவு அதிகமாக ஆகிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியாக விளங்கவில்லை. அதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக ஆண்டுதோறும் பெய்கின்ற மழையின் மூலம் நிலத்தடி நீர் அதிகமாகும். இதை நீர் வரத்து என்று சொல்வார்கள். கிணறு வெட்டி நீரேற்றுக்கள் மூலமாக அந்தத் தண்ணீரை வெளியேற்றுகிறபோது அதை நீர் செலவு என்று சொல்வார்கள். ஆண்டுதோறும் கிடைக்கின்ற தண்ணீரின் வரத்தைவிட பம்பின் மூலமாக வெளியேற்றப்படுகிற தண்ணீர் அதிகமாக இருந்தால் அங்கே நிலத்தடி நீரின் மட்டம் குறைந்துவிடும். அப்படி அதிகத் தண்ணீரை வெளியேற்றிவிட்டால் பின்னர் நீர் வளமே இல்லாமல் போய்விடும். மழைக் காலங்களில் கிடைக்கின்ற, மற்றும் மலையிலிருந்து வருகின்ற நீரினால் நிலத்தடி நீர் மட்டம் அதிகமாகிறது. அந்தத் தண்ணீரை கிணறுகளிலிருந்து இரைப்பதன் மூலமாகவும், நீரேற்றுக்களின் மூலமாகவும், மழையினால் வருகின்ற தண்ணீரின் அளவை விட அதிகமாக செலவிடப்படுகிறது என்ற குறிப்புத்தான் அது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9–10.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வட ஆற்காடு மாவட்டத்தைப்பற்றிய கேள்வி. வட ஆற்காடு மாவட்ட உறுப்பினர்கள் கேட்டால் நல்லது. அத்தனை பேர்களும் கேட்பது நியாயமல்ல.

திரு. எம். ஏ. ஜெயவேலு : பாலாற்றிலிருந்து தற்போது பத்து இருபது மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள் குடிநீருக்காக. ஆகவே பாலாற்றுப் படுகையில் தண்ணீர் குறைகிற அபாயம் இருக்கிறது. அந்த படுகையில் இருப்பவர்களுக்கு தண்ணீர் கிடைக்காத ஆபத்து இருக்கிறது. ஆகவே, நீண்ட தூரம் தண்ணீரை எடுத்துச் செல்லாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்று அரக்கோணம், வாலாஜா போன்ற வட்டங்களில் தண்ணீர் செலவு அதிகமாகிறது. ஆகவே, சர்ட்டிபிகேட் வழங்க முடியாது என்று சொல்கிறார்கள். தண்ணீர் உள்ள இடங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் எவை எவை ? இப்போது பெய்த மழை காரணமாக நீர் மட்டம்கூட ஏறியிருக்கும். ஆகவே, விதிவிலக்கு கொடுத்து வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், வாலாஜா போன்றவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் 36 ஒன்றியங்கள் இருக்கின்றன. இவற்றில் 28 ஒன்றியங்களில் ஆய்வு வேலை முடிந்து விட்டது. மீதி

எட்டு ஒன்றியங்களில் ஆய்வு வேலை நடந்துவருகிறது. இந்த 28 ஒன்றியங்களில் 11 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் இல்லை. மேலும் நீர் எடுக்கும் வாய்ப்பு இல்லை என்ற விவரம் இங்கே இருக்கிறது. இந்த ஆண்டு மழை பெய்ததன்மூலம் எவ்வளவு நிலத்தடி நீர் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை இந்தக் கோடை காலத்தில் கணக்கெடுப்பது மூலம்தான் அறிய முடியும்.

திரு. துரை முருகன்: அரக்கோணம், குடியாத்தம், வாலாஜா போன்ற தாலுக்காக்களில் நீர் செலவைவிட வரத்து குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிலத்தடி நீரை கிணறுகளின்மூலம் எடுத்துவிட்டால் வரத்து குறைவாகப் போய்விடும் என்று சொன்னால், அதற்காக பயிர் செய்யாமல் இருக்கமுடியுமா எங்கள் தாலுகாவில்? அங்கு மழை அதிகமாகப் பெய்வது கிடையாது. காரணம், நான் அங்கே இல்லை. அதுமட்டுமல்ல பாலாற்றில் தண்ணீர் வருவதில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தனை பேர்களுக்கும் நிலைமை புரிகிறது. கேள்வியை விளக்காமல் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. துரை முருகன்: பாலாற்றில் எங்களுக்கு சொட்டு தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் சர்ட்டிபிகேட் வேண்டும் என்று கேட்கப்படுகிறது. காவிரியில் தண்ணீர் வரவில்லையென்றால் மைசூர் அரசோடு வாதாடுகிறது இந்த சர்க்கார். அதே சமயத்தில் பேத்தமங்கலம் ஏரியில் அணை கட்டியிருக்கிறார்கள். ஆகவே பாலாற்றுக்கும் தண்ணீர் வரவேண்டும் என்ற வகையில் காவிரி தண்ணீருக்காக வாதாடுவது போன்று பாலாற்றுக்கும் தண்ணீர் வர மைசூர் அரசோடு போராட இந்த அரசு தயாராயிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் இருக்கிற இடத்தில் மழை பெய்யுமானால் உண்மையிலேயே தமிழ் நாட்டுக்கு அது மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். எங்கெங்கே மழை வேண்டுமோ அங்கே அவர்களை அரசாங்கச் செலவில்கூட அனுப்பி வைக்கலாம். ஆனால் நிலைமை அப்படியல்ல. பருவக் காற்றின் அடிப்படையில்தான் இந்த மழை பெய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதால் நீர்வளம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு நிச்சயமற்ற தன்மையைப் பெற்றிருக்கிறது.

அவர்கள் கர்நாடகாவோடு ஏன் பாலாறு சம்பந்தமாகப் பேசக்கூடாது என்று கேட்டார்கள். காவிரிபற்றி பேசுவது போல் பாலாறுபற்றியும் பேசவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது முடிந்த கதை தொடர்வதில்லை என்பதுதான்.

திரு. அ.க. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயத்திற்கு நிலத்தடி நீரை எல்லாம் பயன்படுத்திவிட்டதால் கிணறுகளில் வெகு ஆழத்தில் கூட தண்ணீர் கிடைப்பது இல்லை. அங்கு விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை இருந்து கொண்டிருப்பதால்—இதை தவிர்க்க—ஆந்திராவிலிருந்து இப்போது சென்னை மாநகருக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு திட்டமிருப்பதாக பேசப்படுகிறது. அப்படி ஆந்திராவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது இந்தத் தண்ணீரை பாலாற்று வழியாக கொண்டு வந்தால், அங்கு நிலத்தடி தண்ணீர் ஏற்பட்டு கிணறுகளில் தண்ணீர் நிறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிகவும் ஆபத்தான யோசனை. அப்படி பாலாற்றில் அந்தத் தண்ணீரை கொண்டு வந்தால், அந்தத் தண்ணீர் சென்னைக்கு வந்து சேராது, பாலாற்று மணலிலேயே எல்லாத் தண்ணீரும் போய்விடும்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர்களாகிய நாங்கள் கேள்விகளை கேட்கிறோம், அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரிகள் கொடுக்கும் தகவல்களை வைத்து பதில்களை தருகின்றார்கள். நாங்கள் அந்த பதில்களிலிருந்து கிடைக்கின்ற விஷயங்களிலிருந்து துருவித் துருவி பல துணைக் கேள்விகளை கேட்கிறோம். அப்படி கேட்பதிலிருக்கின்ற விஷயங்களை மீண்டும் கவனத்தில் எடுத்து எங்களுக்கு பதில் தெரிவிப்பதற்கு இங்கே ஒரு அதிகாரி கூட கேள்வி நேரத்தில் வரவில்லையே, அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் அவர்கள் இங்கே நீண்ட காலம் இருந்திருக்கிறீர்கள். கேள்வி நேரத்தின் போது, அதிகாரிகள் இங்கு இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது, அப்படி கட்டாயமும் இல்லை. இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை.

வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் இறைவைப் பாசனம்.

*590 வினா—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை தொகுதி, வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் உள்ள மானாவாரி நிலங்களுக்கு இறைவைப் பாசனம் அளிப்பதற்கான திட்டம் ஒன்று 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம்

தேதியில் காவேரி வளர்ச்சிப் பணிகள் வட்டம், தனி மேற்பார்வை பொறியாளரால் பாசன தலைமை பொறியாளருக்கு அனுப்பப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் சிக்கனமில்லாத காரணத்தாலும் போதிய அளவு நீர் கிடைப்பது நிச்சயமில்லாததாலும் கைவிடப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இத்திட்டம் கைவிடப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இத்திட்டம் கைவிடப்பட்டதற்கு காரணம் அன்-எக்னாமிக்காக அதாவது சிக்கனமாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இந்தப் பகுதி வறட்சியான பகுதி. இப்படிப்பட்ட திட்டங்கள் இருந்தால் தான் அங்குள்ள மக்கள் பலன் பெற முடியும். 1950-ம் ஆண்டிலிருந்தே இது பற்றி சொல்லப்பட்டு வந்தது. 1954-ல் மாணிக்கவேலு நாயக்கர் தலைமையில் பிரம்மாண்டமான ஊர்வலம் எல்லாம் வந்துதான் இப்படிப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படும் என்று உறுதி மொழி தரப்பட்டது. அதற்குப் பின்னால் இப்போது 18 ஆண்டுகளுக்குப் பின்னால் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறபோது இப்படி மானாவாரி பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன் அடையக் கூடிய இப்படிப்பட்ட திட்டங்கள் கைவிடப்பட்டது என்று சொல்லிவிட்டால், எப்படி அங்குள்ள விவசாயிகள் வாழ்வது. ஆகவே இதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்திட்டம் 1974-75-ம் ஆண்டில் 10.35 லட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு, 653 ஏக்கர் நிலத்திற்கு பயன்படும் என்ற முறையில் எதிர்பார்க்கப்பட்டது. பின்னால் இத்திட்டம் பற்றி ஆராயப்பட்டபோது, இத்திட்டத்தினால் பயன்படக்கூடிய உத்தேச ஆயக்கட்டு நிலங்களுக்கு போதுமான உபரித் தண்ணீர் ஆரம்ப சாகுபடி காலமாகிய ஆகஸ்டு, செப்டம்பர் காலங்களில் கிடைக்காது என்று தெரியவந்தது. மேலும் இத்திட்டம் எதிர்பார்க்கும் அளவுக்கு சிக்கனமாகவும் இருக்கவில்லை. சிக்கனமாக இல்லை என்பது மட்டும் முக்கிய காரணமல்ல, போதுமான நீர் கிடைக்காது என்று தான் தகவல் தந்திருக்கிறார்கள். அது தான் பிரச்சினைக்குரிய விஷயம்.

திரு. ரா. உமாநாத் : நான் இதுபற்றி வெரிஃபை பண்ணின போது, போதிய நீர் கிடைக்காது என்று உங்களுக்கு சொல்லப்படுகின்ற தகவல், டிபார்ட்மென்ட் கொடுத்திருப்பது சுத்தமாக சரி இல்லை, இது அன்-எக்கனாமிக்காக இல்லை என்பது தான் மெயினாக சொன்னது. இப்படிப்பட்ட மானாவாரி பிரதேசங்களில் இப்படிப்பட்ட திட்டங்களை கொண்டு வரும்போது, அது எக்னாமிக்-காக இருக்குமா அல்லது அன்-எக்னாமிக்காக இருக்குமா என்று பார்க்காமல் ஒட்டு மொத்தமாக நாட்டு நலனைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதி, நஷ்டமாக இருந்தாலும் இப்படிப்பட்ட திட்டங்களை மேற்கொள்வது தான் சரி. அந்த அடிப்படையில் இதையும் மேற்கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டுகோள். அந்த அடிப்படையில் இது செய்யப்படுமா எனபது தான் எனது கேள்வி.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Availability of continuous minimum supply cannot be established during the earlier months of the irrigation season namely, August and September. எனவே நீர் பற்றாக் குறை என்பதும் உண்மை தான். மேலும் திட்டங்களை ஆய்வு செய்வதில் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரை டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு டன உணவு உற்பத்தி செய்வதற்கு 2,500 ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், தர்மபுரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களுக்கு 3,500 ரூபாய் செலவு செய்யலாம் என்றும், இது தவிர மற்ற மாவட்டங்களுக்கு 3,000 ரூபாய் என்றும் அளவு வைககப்பட்டிருக்கிறது இந்த 'யார்ட்-ஸ்டிக்கை' வேண்டுமென்றால் மறு பரிசீலனை செய்யலாம்.

[முற்பகல் 9-20]

Supply of Power at Concessional Rates to Poultry Farms

*591 Q. THIRU R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state whereas poultry farms in other states enjoy the benefits of concessional tariff of 12 to 15 per cent per unit of electricity, the reason for charging the Tamil Nadu Poultry Farms at a higher tariff of about 70 paise per unit normally and about Rs. 1·50 per unit under power cut?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கோழிப் பண்ணையில் கோழிக் குஞ்சுகளுக்குத் தேவையான உடற் சூட்டிற்கு தனி மீட்டர் அமைத்து பயன்படுத்தும் மின் விளக்குகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 31 முதல் 34 காசு வரை மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. மின் உற்பத்தி விலையோடு ஒப்பிடும்போது இது சலுகைக் கட்டணமே ஆகும்.

[முற்பகல் 9-20]

[1978 மார்ச் 16

THIRU R. E. CHANDRAN JEYAPAL. Hon. Speaker, Poultry farmers produce meat and eggs for the table. Likewise agricultural farmers also produce food. So, poultry farmers also come under the Head 'Food Production' So, why not concessional tariff accorded to the agricultural farmers in regard to supply of electricity, be extended to the poultry farmers also?

THE HON. THIRU S. RAMACHANDRAN: The reason is very simple, Sir. The Electricity Board cannot afford.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, பிற
மாநிலங்களிலே கோழிப் பண்ணைகளுக்கு அலகு ஒன்றுக்கு 12
முதல் 15 காசு வரை கட்டணம் செலுத்தப்படுகிறது. ஆனால்,
தமிழகத்தில் மட்டும் 31 முதல் 35 காசு வரை செலுத்துவதாக
அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தமிழகத்தின் கோழி
இறைச்சி ஏழைகளுக்கு கிடைக்காமல் விலை அதிகமாக இருக்கின்ற
காரணத்தால், கோழி இனப் பெருக்கத்தைக் கருதி, அலகு ஒன்
றுக்கு விதிக்கின்ற இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கான எண்
ணம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
கோழி விற்கின்ற விலைக்கும், அவர்கள் செலுத்துகின்ற கட்ட
ணத்தையும் பார்க்கும்போது இது ஒன்றும் அவ்வளவு பெரிய
தாக இல்லை. அது சில காசுகள் தான் ஆகின்றன. ஆகவே,
அத்தகைய உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தியா முழுவதும் கோழிப் பண்ணைகளுக்கு வழங்குகின்ற
மின்சாரத்திற்கு 12, 13 காசுகள் வசூலிக்கப்படுகின்றன.
தமிழகத்தில் 33, 34 காசுகள் வசூலிப்பதாக அமைச்சர் ஆனல்
கூறினார்கள். ஆனல், தமிழ் நாடு கோழி அபிவிருத்தி அவர்கள்
களைச் சார்ந்த நிலையங்களுக்கு நிறுவனங்
என்ற அடிப்படையில் 70 காசுகள் நான்-டொமஸ்டிக் பர்பஸ்
அவர்களுக்குத் தெரியுமா? வசூலிக்கப்படுவது அமைச்சர்
முன்வருவார்களா? அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
அத்தகைய கோழிப் பண்ணைகளுக்கு, கோழிப் பண்ணைக்கு மட்டும்
தனியாக மீட்டர் வைத்துவிட்டால், இந்த 65 பைசா விகிதம்
வராது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, கட்டுப்படி
யாகாது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.
தொழிற்சாலைகளுக்கு மின்சார சப்ளை செய்கிறபோது, சாதாரண
ஏழைக் குடும்பங்களுக்கு மின்சாரம் உபயோகிப்பதற்கு இருக்கக்
கூடிய சார்ஜைவிட மிகவும் குறைவாகும். அப்படி தொழிற்

1978 மார்ச் 16]

சாலை முதலாளிகளுக்குச் சலுகைகள் கொடுக்கிறபோது, ஏன் இந்த கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களுக்கு அந்த மாதிரி கொடுக்கக்கூடாது. அதற்கு பதில் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது பெரிய தேசீயப் பொருளாதாரப் பிரச்னை.

திரு. கா. செங்கோடன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைக்கு யூனிட் ஒன்றுக்கு 31 காசுகள் விதிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கோழிப் பண்ணை ஒன்றை எனது பெயரில் வைத்து, அதற்கு தனி மீட்டர் பொருத்தி, 67 காசுகள் வீதம் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் செலுத்திக் கொண்டு வருகிறேன் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனி மீட்டர் இருக்குமானல் எல். டி. டாரிப்4(ஏ)-ன் படி சென்னையாக இருந்தால் 34 காசுகள், மற்றப் பகுதிகளுக்கு 31 காசுகள், தனி மீட்டர் இல்லையென்றால், மெட்ரோபாலிடன் பகுதியில் யூனிட் ஒன்றுக்கு $71\frac{1}{2}$ காசுகள் ; மற்றப் பகுதிகளுக்கு $68\frac{1}{2}$ காசுகள். இது ஜெனரல் பர்பஸ் டாரிப் விகிதத்தில் வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக மீட்டர் வைத்து அதிகக் கட்டணம் செலுத்தி வருவதாகக் கூறுகிறார். அப்படி வசூலிப்பது உண்மையாக இருக்குமானல், உரிய விகிதாச்சார அடிப்படையில் பில் போடப்பட்டு, அவர் எவ்வளவு அதிகமாக செலுத்தியிருக்கிறார்களோ, அதை வருங்கால கரண்டு சார்ஜிலே ஈடு செய்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிய தகவலை மின்சார வாரியத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

திரு. என். வரதராஜன் : இந்த சாதாரண கோழிப்பண்ணைகளுக்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து பெரிய அளவில் வைக்க இருக்கும் யானைப் பண்ணைகளுக்கு அதிகமாகக் கட்டணத்தை உயர்த்தும் முறையில் இப்போது இல்லாவிட்டாலும் அடுத்து வருகிற மின்சார பட்ஜட்டுக்குள் அரசு மறு பரிசீலனை செய்து கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : யானைப் பண்ணைகளைப் பற்றி நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். இதிலே மத்திய சர்க்கார் முந்திக் கொண்டார்கள். யூனிட்டுக்கு 2 காசு வீதம் உற்பத்தியில் மத்திய அரசு வரி போட்டதன் மூலமாக யூனிட் ஒன்றுககு $3\frac{1}{2}$ காசு வரை உயர்த்த வேண்டியிருக்கிறது. மேலும் உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்கனவே மின்சார வாரியத்திற்கு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

[1978 மார்ச் 16

சென்னை மாநகராட்சிப் பள்ளி வாசகசாலைகள்

* 592 வினா—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் உள்ள வாசகசாலைகள் சரிவர நடத்தப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவை திருத்தியமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) சென்னை நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள வாசகசாலைகள் சரிவர நடந்து வருகின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : பள்ளிகளின் எண்ணிக்கை என்ன? வாசகசாலைகளின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னை மாநகராட்சி நடத்தும் 34 உயர்நிலைப் பள்ளிகளிலும் நூலகங்கள் உள்ளன.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த நூல் நிலையங்களுக்காக நகராட்சிகளிலே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்படுகிற கட்டணம் முழுவதும் இந்தப் பணிக்காகச் செலவு செய்யப்படுவதில்லை. முழுவதையும் இதற்காகச் செலவு செய்து நகராட்சிகளிலும், சென்னை மாநகராட்சியிலும் சிறந்த முறையில் வாசகசாலைகளை நடத்த அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது பொது நூலகங்களைப் பற்றிய கேள்வி. தனியாகக் கேட்கவேண்டும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாநகராட்சி நேரடியாக வாசகசாலைகளை நிர்வாகம் செய்து வருகிறதா அல்லது நூலாணை குழு நிர்வாகம் செய்து வருகிறதா ? உள்ளாட்சித் துறையில் லைப்ரரி செஸ் வசூலிக்கப்படுவது நீண்ட நெடுங்காலமாக வசூலிக்கப்படாமல் இருக்கிறது. துரிதமாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இங்கே குறிப்பிட்ட நூலகங்கள் மாநகராட்சிப் பள்ளிகளால் நடத்தப்பட்டு வருகின்றன மற்ற கேள்விகள் தனியாகக் கேட்க் வேண்டும்.

1978 மார்ச் 16]

நடுநிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள்.

*593 வினா—திரு. தீ. சு. நல்லதம்பி:
திரு. க. அரங்கசாமி: } மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுநிலைப் பள்ளிகளிலும், தமிழை சிறந்த முறையில் போதிக்க தமிழாசிரியர்களை நியமிக்கக் கோரி ஆசிரியர் சங்கத்திடமிருந்து ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ? அவ்வாறு நியமிக்க ஏதேனும் திட்டமுள்ளதா ?

(ஆ) அவசரநிலையின்போது தமிழகத்தைச் சேர்ந்த எத்தனை பள்ளி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர் ? அரசு ஆணைப்படி அவர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—(அ) ஆம். நடுநிலைப் பள்ளிகளில் 1977–78ம் ஆண்டில், தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கென்று 200 முதல்நிலை தமிழ் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்த அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) ஏழு ஆசிரியர்கள் அவசரநிலையின்போது கைது செய்யப்பட்டார்கள். அனைவரும் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

திரு. தீ. சு. நல்லதம்பி : அந்த ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டனரா ? அவர்கள் காவலில் இருந்த காலத்திற்கு ஊதியம் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றி விவரம் இல்லை.

திரு. க. அரங்கசாமி : மிசா காலங்களில் கைது செய்யப்பட்டு ஆறு மாத காலம், ஓராண்டுக் காலம் கல்லூரி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் விடப்பட்டு மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்களா ? அவர்களுடைய குடும்பங்களுக்கு உதவும் வாய்ப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாதிக்கப்பட்ட ஏழு ஆசிரியர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர் என்று முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தமிழாசிரியர்கள் அவர்கள் பணியை ஆற்றிக்கொண்டே படிப்படியாக பி.டி. தேர்வு பெற்றவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அவர்கள் பி.டி. தேர்வு பெற்ற காரணத்தால் அந்தத் தகுதியை அவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முதல்நிலை தமிழாசிரியர்களாக இருப்பார்களானால் அப்போதே அவர்கள் அந்தத் தகுதியைப் பெற்று விடுகிறார்கள். பி.டி. தேர்வு பெற வேண்டுமென்ற நிலை இல்லை.

(முற்பகல் 9.30).

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவசரநிலை இருந்தபோது எந்தக் காரணத்தைக் கொண்டு ஆசிரியர்களை கைதுசெய்தார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நெருக்கடி காலத்தில் 7 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தைத் தான் தந்திருக்கிறார்கள், அந்தக் காரணங்களை இங்கே குறிப்பிடவில்லை. அவசரநிலை காலத்திலே எடுக்கப்பட்ட முடிவுகள் அவை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : 7 பேர்களை கைது செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த 7 பேரும் சென்னையைச் சேர்ந்தவர்களா அல்லது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களா? அதோடு அவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டார்கள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவர்கள் விவரம் வருமாறு :

திரு. கே. வி. வஜ்ரம், பி.டி. ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பர்கூர், தர்மபுரி மாவட்டம்.

திரு. எம். சுப்ரமணி, தலைமை ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி. மேசலசின்னம்பள்ளி, கிருஷ்ணகிரி தாலூகா, தர்மபுரி மாவட்டம்.

திரு. வி. ராஜூ, அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஹோசூர், தர்மபுரி மாவட்டம்.

திரு. எஸ். வேலுசாமி, உடற்பயிற்சி ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, கே. இராமநாதபுரம், மதுரை மாவட்டம்.

திரு. பி. இருதயராஜ், முதல்நிலை தமிழாசிரியர், வெஸ்லி உயர்நிலைப் பள்ளி, ராயப்பேட்டை, சென்னை-14.

திரு. கே. இராமரத்தினம், பட்டதாரி ஆசிரியர், வீரராகவா உதவிபெறும் உயர்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்.

திரு. இராமசாமி, ஆசிரியர், அரிசன நலப் பள்ளி, உதய செங்கன்பட்டி, நெல்லை மாவட்டம்.

மேலே உள்ள ஆசிரியர்களில் முதல் ஐவரை நெருக்கடிநிலை நீங்கி விடுதலை செய்யப்பட்டவுடனேயே மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளது. திரு. இராமரத்தினம் என்பவர் 28-11-1977 முதல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

திரு. இராமசாமி விடுதலையான மறுதினமே 25-3-1977 அன்றே மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவர் அவர்களே, உயர்தொடக்கப் பள்ளிகளிலே மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கிலே கொள்ளாது, தமிழின் தரத்தை உயர்த்துவதற்காக தமிழ் பயிற்றுவிப்பதற்கு தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொறுத்து தமிழாசிரியர்களை நியமிக்கின்றபோது சில விதிமுறைகளை நாம் அனுசரித்து வருகிறோம்.

திரு. சு. உ. பாக்கூர் சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, புலவர் படிப்பைப் படித்துவிட்டு வேலையற்றிருக்கின்ற தமிழாசிரியர்களை உயர்தொடக்கப் பள்ளிகளிலே நியமிக்க அரசு முன்னுரிமை தருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நிதி ஆதாரங்களைப் பொறுத்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. தாழை மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவசர காலத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே பணிபுரிந்த தட்சிணாமூர்த்தி, சரவணமுத்து ஆகியோர் மிசாவில் கைதாகியிருந்தார்கள், அமைச்சர் அவர்கள் படித்த பட்டியலில் அந்தப் பெயர்களைச் சேர்க்கவில்லையே அதற்கு என்ன காரணம் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : புதிய தகவலைத் தந்திருக்கிறார்கள், அதுபற்றி விசாரிக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 200 தமிழாசிரியர்களை நியமிப்பதற்காக உத்திரவிடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நியமிக்கப்படுகிறபோது ஊராட்சி நடுநிலைப் பள்ளிகளிலேயும் அந்த 200 பேர்களில்

நியமிக்கப்பட இருக்கிறார்களா ? இன்றேன்று, அரசினுடைய நிதி ஆதாரங்களை எடுக்காமல், ஒன்றியங்களிலிருந்து சம்பளத்திற்காக நிதியை கொடுக்கக்கூடிய முறையிலே தமிழாசிரியர்களை நியமிக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இத்தமிழாசிரியர் பதவிகளை தமிழாசிரியர்கள் இல்லாத 6 முதல் 8 வகுப்புகளில் 4 பிரிவுகள் அல்லது அதற்கு மேலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகள், உயர்தர ஆரம்பப்பள்ளிகள் முதலியனவற்றிற்கு தேவைக் கேற்றாற்போல் வழங்கவேண்டுமென்றும் அவ்வாறு பகிர்ந்து அளித்தபின் மீதமுள்ள பதவிகளை இதே நிலையிலுள்ள தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படல் வேண்டுமெனவும், இவ்வாறு இப்பதவிகள் வழங்கப்படும்பொழுது பி.டி. ஆசிரியர் ஊதிய விகிதத்தில் தலைமை ஆசிரியர் பதவி வகிக்கும் பள்ளிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டுமெனவும் அதற்குப் பின்னரே இடைநிலை பயிற்சிபெற்ற ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாகக் கொண்டுள்ள மற்ற பள்ளிகளுக்கு மீதமுள்ள இப்பதவிகளை வழங்கல் வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநர் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்குஅறிவுரை வழங்கியுள்ளார்.

ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து சம்பளம் தரும் வாய்ப்பை ஆராய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள். பள்ளிகளுக்குத் தரப்படும் மானிய அடிப்படை பற்றிய கேள்வியாக இருப்பதால் அதை நான் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன்.

துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

*594 வினா—திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

எல்லா துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் பணிப் படி (Duty Allowance) கொடுக்கப்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, துவக்கப் பள்ளிகளில் ஓராசிரியராகப் பணி புரிபவர்களுக்கும் பணிப்படி கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மூன்று ஆசிரியர்கள் மட்டுமே (தலைமை ஆசிரியர் உள்பட) பணி யாற்றும் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டு

வந்த பணிப்படி ரூ. 5 நிறுத்தப்பட்டு விட்டது என்றும், இதனை அரசு மறுபரிசீலனை செய்து ஏற்கனவே, பணிப்படியாக கொடுத்து வந்த ரூ. 5, 3 ஆசிரியர்களையும், 300-க்கு குறைவான மாணவர் களைக் கொண்ட ஆரம்ப பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரி யர்களுக்கு, தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று ஆசிரிய மன் றங்கள் அரசுக்கு மனுக்கள் கொடுத்துள்ளன. இதன்பேரில், பள்ளிக் கல்வி இயக்குநரின் குறிப்புரை கேட்கப்பட்டு அவரது குறிப்புரையும் கிடைக்கப் பெற்றுள்ளது. நிதித்துறையுடன் கலந் தாலோசித்து விரைவில் முடிவு எடுத்து தக்க ஆணை வெளியிடப் படும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, கேரளம், மேற்கு வங்கம் ஆகிய அரசுகளில் ஐந்தாண்டுகளாகப் பதிவு செய்தும் வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு அன்-எம்ப்ளாய் மெண்ட் அலவன்ஸ் கொடுப்பது என்பதற்கேற்ற முறையில் சட்டங்களை இயற்றியிருக்கின்றன. அதைப்போல இல்லாவிட் டாலும் தமிழ்நாட்டில் பி.டி. படித்தவர்கள், புலவர் படிப்பு படித்தவர்கள் பதிவு செய்தும் ஐந்தாண்டுகளாக வேலையில்லா மல் இருப்பவர்களுக்கு அன்-எம்ப்ளாய்மெண்ட் அலவன்ஸ் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஓராசிரியர் பள்ளி நடைமுறைக்குச் சாத்தியமாக இல்லாத முறையில் இருப்பதால், ஒரு ஆசிரியரை வைத்துத் தகுந்த கல்வியை மாணவர்களுக்குத் தர முடியாத காரணத்தால் ஓராசிரியர் பள்ளிகளை மாற்றிவிட்டு இரண்டு மூன்று ஆசிரியர்களை நிய மிக்கும் உத்தேசம் உண்டா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, கல்வியின் தரத்தை உயர்த்துவதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. செ. மெ. ராஜு : தலைவரவர்களே, மூன்று ஆசிரி யர்கள் பணியாற்றும் இடங்களில் டியூட்டி அலவன்ஸ் கொடுப் பது பற்றிச் சொன்னார்கள். ஓராசிரியர் இருக்கும் பள்ளி களுக்கும் டியூட்டி அலவன்ஸ் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்பொழுது கொடுத்துவந்த முறையில் மாறுதலை நிவர்த்திக்கும் முறையில்தான் அதைத் திருப்பித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்கள்.

*595.—வினா. திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பஞ்சாயத்து ஒன்றியங்களில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வர வாய்ப்பளிக்கும் அரசு ஆணை எண். 1219, 1977-ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ந் தேதியின் உத்திரவினை நகராட்சி ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த 12, 19-ந் தேதி ஆணை என்பது — ஒரு நான்கு நாட்களுக்கு முன்புதான் நான் அறிந்தேன் — அதை ரத்து செய்துவிட்டு 130 எண். கொண்ட ஒரு ஆணை புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று. இதனுல் ஒரே குழப்பமாக இருக்கிறது. முதல் ஆணை 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட்'டிலிருந்து எய்டட் ஸ்கூலிலிருந்து பஞ்சாயத்து யூனியனுக்கு அப்சார்ப்ஷன் செய்யும்பொழுது சீனியாரிட்டி என்று சொல்லிவிட்டு, இரண்டாவது ஆணையில் 'டேட் ஆஃப் அப்பாயிண்ட்மெண்ட் இன் பஞ்சாயத்து யூனியன்' என்று வந்து, பிறகு 130 எண். கொண்ட ஆணை வந்திருக்கிறது. தயவு செய்து இந்த 130 ஆம் எண் ஆணையை கேன்சல் செய்து விட்டு, எய்டட் ஸ்கூலாக இருந்தாலும் ஒரே சீனியாரிட்டி என்று கொண்டுவரப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் சிலர் இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். அங்கு கிடைத்த தீர்ப்பையொட்டித்தான் புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டது. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் கொடுத்த ரிட்மனு மீது இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை. அப்படித் தீர்ப்பு வழங்கப்படாமல் இருக்கும்பொழுது ஆணை பிறப்பிக்கலாமா என்று சட்டத்துறையோடு ஆலோசனை நடைபெற்று வருகிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழும் நகராட்சிகளின் கீழும் பணியாற்றும் செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு, ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திற்கு மாற்றம் தேவைப்படும் நேரத்தில் அவர்களுடைய தகுதி குறையாமல், சர்வீஸ் குறையாமல் மாற்றம் செய்ய வழிவகை உண்டா ? உண்டெனில் இதற்கு முன் யாரேனும் விண்ணப்பம் செய்திருக்கிறார்களா ? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மாநகராட்சி அளவிலே உள்ள நிலைமைகளைக் கேட்கிருர்கள். அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் தான் விவரம் கூற முடியும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலேயும், நகராட்சிப் பள்ளிகளிலேயும் ஆசிரியர் வேலைக்கு நியமிக்கப்படும்பொழுது எந்த விதியின்கீழ் அவர்கள் நியமிக்கப்படுகிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டு விவரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோவை நகராட்சியிலுள்ள தினக்கூலித் தொழிலாளர்கள்.

*596 வினா—திரு. கு. ரமணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபையின் கீழ் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்கு பொதுப்பணித்துறையின் கீழ் பணிபுரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்குள்ள ஊதிய விகிதம் மற்ற சலுகைகள் கொடுக்கப்படாமலிருப்பது அரசு கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் உள்ளது.

[1978 மார்ச் 16

(முற்பகல் 9—40)

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை நகராட்சியின் கீழ் 400-க்கும் மேற்பட்ட என்.எம்.ஆர். தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்று மின்சார வாரியத்தின்கீழ் உள்ள என்.எம்.ஆர்.-கள் கன்பர்மேஷன் ஆகிவிட்டார்கள். அதைப் போல 3 வருடம் சர்வீஸ் ஆன என்.எம்.ஆர்.-களை கன்பர்மேஷன் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? மற்ற சலுகைகளை அளிக்க ஏற்பாடு செய்யுமா? இதற்குக் காலதாமதம் ஏன் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டிருக்கிற அந்தக் கோரிக்கை நியாயமானதான். அரசு அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. அது கோவையைப் பொறுத்தது மட்டுமல்ல. தமிழகத்திலே உள்ள எல்லா நகராட்சிகளைப் பொறுத்தது. அந்த அடிப்படையிலே 99 நகராட்சிகளில் பணிபுரியும் இந்த ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதன் மூலமாக எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் பார்க்கப்பட்டது. 7,57,543 ரூபாய்கள் ஆகும் என்று நகராட்சிகளின் ஆய்வாளர் தெரிவித்திருக்கிறார். அந்த நிதியைக் கணக்கில் எடுத்து அரசு இதைத் தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இராயபுரத்திலுள்ள இரயில்வே மேம்பாலம்.

*597 வினு—திரு. அ. செல்வராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

சென்னை, இராயபுரம் மன்னர்சாமி கோயில் தெருவிலுள்ள இரயில்வே மேம்பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே அந்த இராயபுரம் பாலம் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இப்போது பாழ் அடைந்து பழுதாகி இருக்கிறது. அந்தப் பாலத்தை அகலப்படுத்த உத்தேசம் இல்லை என்றாலும் அதைப் பலப்படுத்த உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அகலப்படுத்துவதற்கு இயலாத காரணம் அதன் பக்கத்திலே உள்ள எண்ணெய் சேமிப்புத் தொட்டிகள்தான் காரணம். அந்தப் பாலத்தைப் பலப்படுத்துவதற்கு உரிய முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது.

1978 மார்ச் 16]

அன்னவாசலில் பேருந்து நிலையம்.

*598 வினு—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி மன்றத்திடமிருந்து, பேருந்து நிலையம் கட்ட கடன் கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே, அன்னவாசலிலே பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டும் என்று பல நாட்களாக கோரிக்கை கொடுத்து மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு அரசாங்கம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. அது மறுபடியும் ஒரு அத்தியாவசியமான காரியமாக இருக்கக்கூடியதால் அதை மறுபடியும் அரசாங்கம் பரிசீலனை செய்து, அதை அங்கு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு புதுக்கோட்டை டவுனிலே பஸ் ஸ்டாண்டை மாற்றி மற்றொரு இடத்திற்குக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள், பாதி கட்டி அது அப்படியே நிற்கிறது. அதை எப்போது கட்டி முடிப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அன்னவாசல் பேரூராட்சியைப் பொறுத்தமட்டில் அங்கு ஒரு ஊரணி இருக்கிறது. அந்த ஊரணியில் பேருந்து நிலையத்தை அமைப்பதற்கு செயற்குறிப்பு இருக்கிறது. அந்த ஊரணி இப்போது புழக்கத்தில் இருந்து வருகிறதா, அதை அங்கு கட்டுவதால் பொது மக்களுக்கு ஏதேனும் வசதிக்குறைவு ஏற்படுமா என்ற விவரத்தை அரசு கேட்டிருக்கிறது. அந்த விவரங்கள் கிடைத்தவுடன் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

புதுக்கோட்டை பற்றித் தனியாகக் கேள்வி போட்டு, திரு தொண்டமான் அவர்கள் விவரம் அறிந்து கொள்ளலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, அன்னவாசல் பேரூராட்சி மன்றம் எவ்வளவு தொகை கடனாக கேட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 30,000 ரூபாய்.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்களால் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள்.

*599 வினா—திரு. ஓ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், சிபாரிசுகள் எந்த அளவிற்கு அரசினால் நிறைவேற்றப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தீர்மானங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரால் அரசுக்கு அனுப்பப்படுகின்றன. கவனமாகப் பரிசீலித்து இயன்றவரை அரசு மாவட்ட வளர்ச்சிக் குழுக்களின் சிபாரிசுகளை ஏற்று ஆணை பிறப்பிக்கின்றது. நிதி வசதி இல்லாத காரணத்திற்கோ அல்லது தவிர்க்க முடியாத மற்ற காரணங்களுக்குத்தான் அந்த சிபாரிசுகளை ஏற்க இயலாமல் போகலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் அதிகாரிகளும் பொதுமக்களும் நீண்ட நேர ஆலோசனைக்கு பிறகுதான் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். கலெக்டர் உட்பட எல்லோரும் சேர்ந்து ஏகோபித்த முடிவெடுத்து, அது பற்றி தீர்மானம் நிறைவேற்றப் படும்போது அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, நிதிநிலை இடம் தரவில்லை என்றாலும் விசேஷ ஏற்பாடு செய்து, அத்தீர்மானத்திற்கு செயல் வடிவம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, முக்கியத்துவம் கொடுப்பதில்மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் நிதி நிலையைப் பொறுத்துதான் பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மாவட்ட அபிவிருத்திக் கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக அமுல் நடத்தப்படாதது மட்டுமல்ல ; நேர் எதிரிடையான நடவடிக்கையும் கூட சில சமயங்களில் எடுக்கப்படுகிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், ஒரு ரூபாய் செஸ் இருந்ததையே குறைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் 2½ ரூபாய் வசூல் செய்யும் நிலைமை ஏற்பட்டது. இம்மாதிரியான நிலைமைகள் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில் வரும்வரையில் அதை நிறுத்தி வைக்கவும், அபிவிருத்திக் கவுன்சில் தீர்மானத்தை அப்படியே நிறைவேற்றவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது
வும் நிதி பொறுப்புப் பற்றிய தீர்மானம். ஆகவே, இதில் சிக்கல்
இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாவட்ட அபிவிருத்தி கவுன்
சிலுக்கு கலெக்டர் தலைவராக இருக்கிறார். வருகின்ற உள்ளாட்சித்
தேர்தல் முடிந்த பிறகாவது அந்த வளர்ச்சிக் குழுவுக்கு ஒரு
'நான்-அபிசியல்' தலைவராக நியமிக்கப்படும் நிலையை உரு
வாக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கலெக்டருக்கே மாவட்ட
ஆட்சித் தலைவர் என்றுதான பெயர் ஆகவே காரியங்கள்
நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் கலெக்டர் குழுவுக்குத்
தலைவராக இருக்கிறார்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, நிதிவசதி இல்லாத
தால் மாவட்ட வளர்ச்சிக் குழுவில் நிறைவேற்றப்படும் தீர்
மானத்திற்கு செயல்வடிவம் கொடுக்க முடியவில்லை என்று அமைச்
சரவர்கள் சொன்னார்கள். நிதிவசதி இல்லாதபோது எதற்காக
குழுக் கூட்டம் நடக்க வேண்டும்? குழு அங்கத்தினர்களுக்கு
ஒரு ரூபாய், 2 ரூபாய் டி.ஏ. வேறு கொடுக்கிறார்கள் : அதுவும்
செலவுதான். ஆகவே, நிதிவசதி இல்லாதபோது டி.டி.சி கூட்
டம் நடத்துவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: செயல்படுத்த முடியவில்லை
என்பதல்ல ; நிதிவசதியை ப் பொறுத்து செயல்படுத்தப்படுகிறது
நீண்டகாலமாக அப்படித்தான் செய்யப்பட்டு வருகிறது

திரு சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, என்னுடைய
தொகுதியில் நடுவ்ரப்பட்டு சென்னப்ப நாயக்கன்பாளையம்
இடையே ஓடும் ஓடைமீது பாலம் அமைப்பதற்கு 1967-ல் மாவட்ட
வளர்ச்சிக் குழுவுக்கு நான் ஓர் தீர்மானம் கொண்டு சென்றேன்.
அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு அதற்கு 3 இலட்சம் ரூபாய்
சாங்ஷனும் செய்யப்பட்டது இதுவரை அது கட்டிமுடிக்கப்பட
வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாக மாவட்ட அபி
விருத்தி கவுன்சில் பற்றியது கேள்வி நீங்கள் குறிப்பிட்ட ஒரு
இடத்தைப்பற்றி, குறிப்பிட்ட ஒரு தீர்மானத்தைப்பற்றிக் கேட்
டால் அதுபற்றி அமைச்சரிடம் பதில் இருக்காது தயவுசெய்து
உட்காருங்கள்.

திரு. சி. கோவிந்தராசன் : ஏற்கனவே இவ்வாறு சாங்ஷன்
செய்யப்பட்டப் பிறகு இதுவரை அது நிறைவேற்றப்படாததால்
இவ்வாண்டு மீண்டும் அதுகுறித்துத் தீர்மானம் கொடுத்ததற்கு
வேறு நிதியிலிருந்து சாங்ஷன் செய்யப்போவதாக ஒரு பதில்

வந்து இருக்கிறது. கவுன்சில் கூட்டத்தில் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டு, 10 ஆண்டுகளாகியும் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாவட்ட வளர்ச்சிக் குழு தீர்மானத்தைக் கறாராக நடைமுறைக்குக் கொண்டுவர துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தீர்மானத்தைப் பொறுத்தவரையில், எங்கே தடங்கல் ஏற்பட்டது என்று விவரம் இல்லை. மீண்டும் அரசுக்கு வருமானால் பரிசீலிக்கலாம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, ஒரு கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அரசு ஏற்றுக்கொண்டதா, இல்லையா, என்ற விவரம் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுமா? அதோடு பல துறைகளைச் சேர்ந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அகவே, சில முக்கியமான பிரச்னைகளில் சிக்கல் வருமானால் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அடுத்த கூட்டத்திற்கு வந்து, விவாதித்து சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஒரு மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அரசின் பரிசிலனையில் இருக்கிறதா அல்லது அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா? பதில் வந்திருந்தால் என்ன பதில் என்பதுபற்றி அடுத்த குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது. குழுவில் அதுபற்றி விவாதித்து, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப்பற்றித் தீர்மானிக்கப்படுகிறது.

கள்ளக்குறிச்சியில் குடிசைவாழ் மக்களுக்குக் கிணற்றுநீர்

*600 வினா—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகில் உள்ள கோமுகி நதியில் பேரூராட்சியில் வெட்டப்பட்ட கிணற்றில் "எச்சரிக்கை—சேரிமக்கள் அனைவரும் தொட்டியில் தண்ணீர் எடுக்கக்கூடாது, மீறினால் அபராதம் விதிக்கப்படும்" என்று தனியார் விளம்பரப்படுத்தியது குறித்து கள்ளக்குறிச்சி போலீசில் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால், இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) ஆம்.

(ஆ) யாரோ பெயரிடப்படாத ஒருவர் "எச்சரிக்கை—சேரிமக்கள் அனைவரும் தொட்டியில் தண்ணீர் கேட்டு வாங்கவும், மீறினால் அபராதம் 'Au:hor MSKV என்ற அறிவிப்புப் பலகை வைத்திருந்தார். பேரூராட்சித் தலைவர் புகார் செய்ததின பேரில், அவ்வறிவிப்புப் பலகை உடனடியாக அகற்றப்பட்டது. அப்பலகையை வைத்தவர் யாரெனக் கண்டுபிடிக்க இயலவில்லை. அரிசனங்கள் மாமூலாக தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

அரசுப்பணிகளில் அரிசனங்கள் நியமனம் குறித்த உயர்மட்டக் குழு.

*601—வினா திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ) அரசாங்கப் பணிகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதம் இடங்களுக்கு நியமிக்கப்படுகின்றனரா என்பதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட உயர்மட்டக் கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிப்போர் விபரமும், அக்குழு செயலாற்றி அபிவிருத்தி கண்டுள்ள விபரமும் அரசுக்கு ஏதேனும் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் அவைமுன்வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) மற்றும் (ஆ) முதலமைச்சரை தலைவராகவும் அரிசன நலத்துறைஅமைச்சரை துணைத்தலைவராகவும் மற்றும் சில அரசுத்துறை உயர் அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் கொண்டு 20–12–77-ல் இந்த உயர்மட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள் விவரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது.—

குழுத்தலைவர் — முதல் அமைச்சர்.

உபதலைவர் — அரிசன நல அமைச்சர்.

மற்ற உறுப்பினர்கள்—

1. அரசுத் தலைமைச் செயலாளர்
2. அரசு இரண்டாவது செயலாளர்
3. அரசு ஆணையர், மற்றும் செயலாளர், சமூக நலத்துறை
4. செயலாளர், தமிழ்நாடு பொதுப் பணித் தேர்வுக்கழகம்
5. இயக்குநர், தொழில் வணிகத் துறை
6. இயக்குநர், கல்லூரிக்கல்வித் துறை
7. இயக்குநர், தொழிற்கல்வித் துறை
8. இயக்குநர், பள்ளிக்கல்வித் துறை
9. இயக்குநர், தொழில் மற்றும் பயிற்சித் துறை.
10. இயக்குநர், அரிசன நல மற்றும் மலைவாழ் மக்கள் நல்வாழ்வுத்துறை (உறுப்பினர்—செயலாளர்)

இக்குழு காலமுறைப்படி, அரசு பணிகளில் நியமனம் பற்றிப் பல்வேறு துறைகளில் ஆய்வு செய்து தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களின் நியமனங்களின் நிலைமையில் முன்னேற்றம் காணக் குறுகிய கால மற்றும் நீண்டகால முறையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் மற்றும் நிலைமையை எவ்வாறெல்லாம் செம்மைப்படுத்துதல் குறித்தும் ஆராய்ந்து செயல்படும்.

இந்த உயர்மட்டக் குழு விரைவில் கூட இருக்கின்றது.

[முற்பகல் 9—50]

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஹரிசனங்களுக்கு அரசுப் பணிகளில் வேலைவாய்ப்புக்கள் 18 சதவீதம் என்பதன்படி ஒழுங்காக வேலை வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றனவா? இவற்றை கண்காணிப்பதற்கென்று அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவில் அங்கம் வகிப்பார் விவரமும் குழு நடைமுறையில் என்ன அபிவிருத்தி கண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த அரசாங்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஏற்பட்ட பிறகு இந்த 18 சதவீதம் கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆங்காங்குள்ள அலுவலகங்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இப்போது இதிலே நல்ல முன்னேற்றத்தை அரசு கண்டிருக்கிறது.

திரு. க. மருதாசலம்: தலைவரவர்களே, கவர்னர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அரசு இல்லாத நேரத்தில் இந்த உயர் மட்டக் குழுவில் யார் யார் இருந்தார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாநில சட்ட மன்றம் கலைக்கப்பட்டிருந்த காரணத்தால் அரசு அதன் ஆணை 958 சமூக நலம் நாள் 12—11—1976-ல் முதலமைச்சருக்குப் பதிலாகத் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், அரிசன நல அமைச்சருக்குப் பதிலாக இரண்டாவது செயலரைத் துணைத் தலைவராகவும், கீழ்க்கண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட உயர் மட்டக் குழுவினை திருத்தி அமைத்தது.

செயல் உறுப்பினர்: அரிசன நலம் மற்றும் மலைவாழ் மக்கள் நல இயக்குநர்.

உறுப்பினர்கள்:

1. சமூக நலத்துறைச் செயலாளர்.
2. செயலர், தமிழ்நாடு தேர்வாணைக்குழு.
3. தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநர்.
4. கல்லூரிக் கல்வி இயக்குநர்.
5. தொழில் நுட்பக்கல்வி இயக்குநர்.
6. பள்ளிக் கல்வி இயக்குநர்.
7. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, இவ்வாறு அமைக்கப்பட்ட உயர் மட்டக்குழு, ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கப்படும் அந்த 18 விழுக்காடு முறையாக கொடுக்கப்படுகிறதா என்பதை ஆய்வதற்கு எந்தெந்தப் பகுதியில்—அவர்கள் பணியை மேற்கொண்டார்கள்? அப்படி மேற்கொண்டதன் பயனாக ஏதாவது தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவரவர்களே, இது வரை 22 அலுவலகங்களில் இது போன்ற சோதனையிடப்பட்டது. அரசு அவ்வப்போது கூறிவரும் அறிவுரைக்கேற்ப ''முறைப்படி பதிவேடுகள்'' முறையாக பராமரிக்கப்படவில்லையெனத் தெரிய வந்தது. முறையாக பதிவேடுகள் பராமரிக்கப்படவேண்டும் என பராமரிக்காத அலுவலகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

நேரடி பணிமுறைக்கே தற்போது ஒதுக்கீடு முறை அமலில் உள்ளது. இதுவரை ஆய்வு செய்துள்ள மிகுதியான அலுவலகங்களில் நேரடி பணிமுறைக்கு வழி இருந்தும், பதவி உயர்வு மூலமே பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் தங்கள் ஒதுக்கீட்டு நியமனங்களை அடைய முடியவில்லை. ஆகவே இவ்வலுவலகங்கள் அரசினை அணுகி நேரடி பணித் தேர்வுக்கும் பதவி உயர்வுக்கு பணித் தேர்வுக்கும் விகிதாச்சாரம் பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

சில தலைமை அலுவலகங்கள் பணித் தேர்வுக்கென அமைந்த விதி முறைகள் மற்றும் சிறப்பு விதிமுறைகளில் நேரடி பணித் தேர்வு செய்ய வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தும் அதில் பொது விதி 22-ன்படி நியமன ஒதுக்கீடு அமைக்க அரசு உத்திரவுகளைப் பெருமல் இருந்து வருகின்றுர்கள். அம்மாதிரி அலுவலகங்களில் ஆய்வுக் குறிப்பில் அவர்களை நேரடிப் பணித்தேர்வு மூலமாகக் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பொது விதி 22 கடைப் பிடிக்க அரசு அனுமதி பெறக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறுர்கள்.

Concessional tickets to Students of Institute of Engineering Technology

*602 Thiru R. E. CHANDRAN JEYAPAL: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) Whether the students of the Indian Institute of Engineering Technology, Arcot Road, Kodambakkam, Madras, have not been issued concessional travel tickets by the Pallavan Transport Corporation so far; and

(b) If so, the reasons for the delay ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) கொடுக்கப்படவில்லை.

(ஆ) பயண சலுகை கட்டணச் சீட்டுக்கள் பள்ளி கல்வி இயக்குநர், தொழில் நுட்ப கல்வி இயக்குநர், கல்லூரி இயக்குநர், தொழிற் பயிற்சித்துறை இயக்குநர் மற்றும் சென்னை பல்கலைக் கழகத்தார் இவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பெறும். இவர்களில் யாராலும் கோடம்பாக்கத்திலுள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் என்ஜினியரிங் டெக்னலஜி அங்கீகரிக்கப்படவில்லை.

THIRU R. E. CHANDRAN JEYAPAL : Hon. Mr. Speaker, Sir, will the travel concession facilities be made available to the employees of the State Legislature Department who have to attend office during Session from morning 7 o' clock to evening 7 o' clock ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. பொ. சிகாமணி : மாணவர்களுக்கு ஆல் ரூட் பஸ் பாஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் மாணவர்கள் நேரம் வீணுகிறது. குறிப்பிட்ட ரூட்டில் பாஸ் கொடுத்தால் நலமாகயிருக்கும் என்று பெற்ருேர்கள் கருதுகிருர்கள். இதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை நகரில் உள்ள மாணவர்களுக்கு ஆல் ரூட் பாஸ் என்று சொல்லப்படுகிற ரூபாய் 15 பாஸ் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் 52 இலட்சம் ரூபாய் போக்குவரத்துக் கழகத்திற்கு நஷ்டம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. அதோடு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே அவ்வப்போது சில சச்சரவுகளும் ஏற்படுகின்றன. அந்த பாஸ் கொடுக்கப்பட்டதன் நோக்கமே மாணவர்கள் நூலகங்களுக்கு அந்தப் பஸ்பாஸைபயன்படுத்த வேண்டும் என்று நல்ல நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது. நூலகத்திற்கு மட்டும் அந்தப் பாஸை பயன்படுத்துமாறு அதை திருத்தியமைப்பதுபற்றி அரசு பரிசீலித்துவருகிறது.

திரு. கே. சௌந்திரராசன் : சென்னை மாநகரில் இருக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற பஸ் பாஸ் போன்று பஸ் பாஸ்கள் கிராமப்புறங்களிலும் வழங்குவதற்கு உத்தேச முண்டா என்று அறியவிரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தமிழ்நாட்டில் பெரு நகரங்கள் பலயிடங்களில் அந்த முறை அமலில் இருந்து வருகிறது. கிராமப்புறங்களில் அதை நீட்டிப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம், இதனுல் நஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தால் வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களைப் பங்குதாரர்களாக்கல்.

*வினு—603. திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தொழிலாளர்களை எந்தெந்த போக்குவரத்துக் கழகங்களில் பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ?

(ஆ) மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும், தொழிலாளர்களை பங்குதாரர்களாக ஏற்றுக் கொள்ளும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தந்தை பெரியார், அண்ணா, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன் (நகர்ப்பிரிவு), பல்லவன் (புறநகர்ப் பிரிவு), போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களை பங்குதாரர்களாக நடைமுறைப் படுத்தும் செயற் குறிப்பு இருந்து வருகிறது.

இணைப்புச் சாலைகள்.

* 604 வினா—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு போக்குவரத் துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இணைப்புச் சாலைகளை அமைத்துத் தருவோருக்கு "Bus Route" வழங்குகின்ற புதிய. திட்டத்தின் கீழ் அமைத்த சாலைகளின் மொத்த தூரம் எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் உண்டாக்கப்பட்ட புதிய (Route) வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இத்திட்டம் அர சின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : இத்திட்டத்தை அறிவித்து மாதங் கள் பல ஆகிவிட்டன. என்றாலும் அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்போது பரிசீலனை முடியும் ? எப்போது அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராமப்புறங்களிலும் பொது மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அரசாங்கத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ மூவாயிரத்துக்கு மேற்பட்ட கிராமப்புறச் சாலைகளை செப்பனிடுவதற்கும் அந்தச் சாலைகளில் பேருந்துகள் செல்கிற வகையிலும் நல்ல முறையில் கொண்டு வருவதற்கு ஏராளமான பொருள்செலவு தேவையாக இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் சாலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்குகிற நேரத்தில் கோர் செக்டார் என்ற பிரிவில் ஒதுக்காமல் இருப்பதால் நிதித் தட்டுப்பாடு மாநில அரசுக்கு மிகுதியாகிறது.

ஆகவே, பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் சாலைகளை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்லநோக்கோடு செயல்முறைக்கு கொண்டுவர ஒரு குறிப்பினை நடைமுறைப்படுத்த இருக்கிறது. பன்றிமலைப் பகுதியில் 12 மீட்டர்க்கு சாலை அமைக்க ஒரு தனியார் முன்வந்து,

அதோடு நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம்—லாபத்தில் நடக்கிறவை—ஆகியவையும் பொதுமக்கள் நலன்கருதி இத்தகைய சாலைகள் அமைக்க முன்வந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. ப. சந்திரன் : என் தொகுதியில் சேத்துப்பட்டிலிருந்து தேசூர் வரை தனியார் பேருந்து ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. இன்னொரு தனியார் நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கிவிட்டதால் அந்த ரூட்டில் இப்போது அந்தப் பேருந்து செல்லாமல் இருக்கிறது. அப்படி பேருந்து செல்லாதிருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு மெயின்ரோடு போக வேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஐந்து மைல்கள் நடந்து செல்லவேண்டி யிருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் அரசுப் பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூறினார்கள். அந்த வழித்தடம் நிறுத்தப்பட்டிருப்பதற்கு காரணம் உயர்நீதி மன்றத்தில் தடையிருப்பதன் காரணமாகத்தான் என்பதை. இருந்தாலும் போக்குவரத்து கழகத்தின் மூலமாக டெம்பரெரி பெர்மிட் மூலமாக இந்த வழித்தடத்தில் பேருந்துகள் விட முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : இப்படி சாலை அமைத்துக்கொடுக்கிறவர் களுக்கு பஸ் ரூட் கொடுக்கப்படும் என்று முன்னால் இங்கு அறிவிக்கப்பட்டதில், அதை அமல் நடத்துவதில் அப்படிப்பட்ட திட்டத்தில் பல சிக்கல்கள் இருப்பதாக இங்கு அமைச்சர் அவர் களே தெரிவித்தார்கள். இவற்றையெல்லாம் முன்னாலேயே ஆராய்ந்து விட்டு அல்லவா அவையில் இதைச் சொல்லியிருக்க வேண்டும் ? 'வரும்பொருள் உரைத்தல்—மந்திரிக்கு அழகு' என்று சொல்வார்கள். அது போல் இத்திட்டத்தை சபையில் அறிவிப்பதற்கு முன்னாலேயே ஏன் ஆராய்ந்து பார்க்கவில்லை, ஆராய்ந்து பார்க்காமல் அறிவித்து விட்ட இந்த திட்டம், இப்போதாவது கைவிடப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் கூறிய பதிலை உன்னிப்பாக கவனித்திருப்பார்கள். என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தில் எந்தவிதமான சிக்கலும் இல்லை, நடைமுறைப்படுத்துவதில் இருக்கின்ற பொரு

ளாதாரத்தில் தான் சில சிக்கல்கள் இருப்பதாக கூறினேன். இருந்தாலும் இத்திட்டத்தை படிப்படியாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் முக்கியமான தகவல்களை கேட்டுத்தெரிந்துகொள்வதற்குத்தான் அமைச்சர்களிடம் கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்படியில்லாமல் இத்திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்களிடம் கேட்பது சரியல்ல. மேலும் தகவல்களைத் தெரிந்துகொள்வதற்குத்தான் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு துரைமுருகன் இருக்கையில் இருந்து கொண்டே பேசுகிறார்கள். நான் வேண்டுமென்றால் அமர்ந்து கொள்கிறேன். ஏதாவது பேசவேண்டுமென்றால் தயவு செய்து எழுந்து நின்று பேசுங்கள்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒழுங்குப் பிரச்னை.

பேரவைக்கு ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை அழைத்து வந்ததாக சில நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். இதை ஒழுங்குப் பிரச்னையாகவும், ஒரு உரிமைப்பிரச்னையாகவும் எழுப்ப விரும்புகிறேன். இதை நான் 184 ஆவது விதியின் கீழ் எழுப்புகிறேன். நேற்றைய தினம் நான் சட்டமன்றத்தில் காலை 11 மணி முதல் இறுதிவரையிலும் இங்கு இல்லை. அப்படியிருந்த நிலையில், இங்கு ஒரு அதிசய மனிதர் வந்ததாகவும், அவரை நான் சபைக்கு அழைத்துக்கொண்டு வந்ததாகவும் பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த பத்திரிகையில் வந்திருக்கிறது ?

திரு. எம். ஏ. லத்தீப் : 'மக்கள் குரல்' பத்திரிகையில் வந்திருக்கிறது. 'மாலை முரசு' பத்திரிகையில் வந்திருக்கிறது, சில பத்திரிகைகளில் என்னுடைய பெயரை குறிப்பிட்டு வந்திருக்கிறது, மற்றும் 'தென்னகம்' பத்திரிகையில் என்னுடைய பெயர் குறிப்பிட்டு வந்திருக்கிறது. சில பத்திரிகைகளில் என்னுடைய பெயர் குறிப்பிடாமல் இச்செய்தி வெளிவந்திருக்கிறது. அதாவது என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு தாங்கள் அத்தகைய ஒரு கருத்தை சொன்னதாகக் குறிப்பிட்டு வந்திருக்கிறது. யாரோ இங்கு வந்தார்கள் என்பதற்காக, அவரை நான் அழைத்துக்கொண்டு வந்தேன் என்று கூறியிருப்பதாவது, நான் அவ்வளவு விஷயம் தெரியாதவனா, அல்லது பொறுப்பு இல்லாதவனா அல்லது சட்டமன்றத்திற்குள் உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் வரக்கூடாது என்பது எனக்கு தெரியாத விஷயமா, இவ்வளவு காலம் சட்டமன்றத்தில் இருக்கக்கூடியவன் இதைக் கூட தெரிந்து கொள்ள முடியாத தற்குறியாக அல்லது அறிவிலியாக மக்கள் கருதுகின்ற வகையில், அல்லது பொறுப்பற்றவனாக மக்கள் நினைக்கின்ற வகையில் செய்தி வந்திருக்கிறது.

எனக்கு உடல்நிலை சரியாக இல்லாததால், நான் அறையில் இருந்த போது, என்னை பார்க்க வந்தவர்கள், 'இப்படி யாரை அழைத்துக்கொண்டு போனீர்கள், சட்டமன்றத் தலைவரே இப்படி சொல்லியிருக்கிறார்களே' என்று என்னிடத்தில் வந்து கேட்டார்கள். 'மக்கள் குரல்' பத்திரிகையில் என்ன வந்திருக்கிறது என்பதை படித்துக் காட்டுகிறேன். அதில் வந்திருப்பது—''அந்த இளைஞர் முஸ்லீம் லீக் உறுப்பினர் லத்தீப்புடன் வந்தவர் எனத் தெரிகிறது'' என்று தாங்கள் இந்த சபையில் தெரிவித்ததாக தகவல் வந்திருக்கிறது. தாங்கள் அப்படி அறிவித்தீர்களா? அப்படி அந்த இளைஞர் இங்கு சட்டசபைக்குள் வந்திருந்தால் சட்டப்படி ஏன் நடவடிக்கை எடுத்திருக்கக்கூடாது ? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர் என்னோடு வந்தவரா இல்லையா என்பதை தாங்கள் என்னிடம் விசாரித்துவிட்டு தாங்கள் சொல்லியிருக்க வேண்டும். அப்படியில்லாமல் தாங்கள் என்னைப்பற்றி சொல்லியிருந்தால், அதில் எனக்கு பொறுப்பு இல்லை என்ற முறையில் இந்த தகவல் வந்திருப்பது என்னுடைய உரிமையை பாதிக்கின்ற விஷயம். இந்த சட்டசபையினுடைய மரியாதையையும் கௌரவத்தையும் பாதிக்கக் கூடிய விஷயம்.

அது மட்டுமல்ல, இங்கு இருக்கக்கூடிய பாதுகாவலர்கள் கவனமாக இருக்கவில்லை என்பதும், தாங்கள் அவர்களை சரியாக கவனிக்கவில்லை, சரியாக நிர்வகிக்கவில்லை என்றும் வருகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்பலாம், அல்லது இங்கேயே இந்த சபையே அவை உரிமைக் குழுவாக மாற்றிக்கொண்டு இந்த உரிமை மீறல் பிரச்னையை எடுத்துக்கொண்டு, எனக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தை,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 16

இந்த சபைக்கு ஏற்பட்ட அவமானத்தை, சபைத் தலைவருக்கு ஏற்பட்ட அவமானத்தை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, நான் எனது ஒழுங்குப் பிரச்னையைச் சொல்லிவிடுகிறேன், விளக்கம் நீங்கள் சொல்வதற்கு முன்னால். பேரவைத் தலைவர் தீர்ப்பின்மீது ஏதாவது குற்றம் சொல்வதாக இருந்தால் ஒன்று No Confidence Motion against the Speaker கொண்டு வரலாம். A motion can be moved for the removal of the Speaker from the Chair. அது ஒரு முறை.

அடுத்த முறை, அவர் பாய்ன்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொண்டு வரலாம். பேரவைத் தலைவர்மீது உரிமைப் பிரச்னையை எந்த விதிமுறைகளின்கீழே இப்பொழுது இப்படி கொண்டு வரலாம்? அவர் சொல்கிற உணர்வுகளை நான் ஒத்துக்கொள்கிறேன். அது வேறு விஷயம். ஆனால், பேரவைத் தலைவர் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வரமுடியாது, இப்படி.

திரு. எம். ஏ. லத்தீப்: நானே சொல்கிறேன். இப்படி நீங்கள் சொல்லியது உண்மையாக இருக்குமானால், இந்த அவையை பாதிக்கிறது, சபாநாயகரை பாதிக்கிறது என்று தமிழிலேதான் பேசினேன். அது, அவருக்குப் புரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். நான் சபாநாயகர் அவர்கள் மீது உரிமை பிரச்னை கொண்டு வருகிறேன் என்று சொல்லவில்லை. விதி 184-ன் கீழ் நான் இந்தப் பிரச்னையை......

திரு. க. சுப்பு: நான் தமிழிலே பேசினேன். மற்றவர்களுக்குப் புரியவில்லையென்ற நிலைமையில் அவர் பேசினால், இதையே நான் உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வரலாம். The hon. Member is Casting aspersion on the character of a Member அம்மாதிரி அவர் சொல்லலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். உரிமை மீறல் பிரச்சினையை எழுத்து மூலமாகக் கொண்டு வரலாம். தாங்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையில் எது உண்மை, எது உண்மைக்கு மாறானது என்று என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, என் மேலே, உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்றால், விதிகள் இருக்கின்றன. நான் முதலிலேயே சொல்ல வேண்டு மென்றிருந்தேன். நேற்று நடந்தவைகளை அப்படியே மறுபடியும் நடவடிக்கைக் குறிப்பிலுள்ளபடி படித்துக் காட்டுகிறேன்

(பேரவைத் தலைவர் முந்தின நடவடிக்கைக் குறிப்புகளை படித்தார்.)

1978 மார்ச் 16] [மாண்புமிகு பேரவைத் தலைவர்]

* * *. ஆகவே திரு. லத்தீப் அவர்கள் அழைத்து வந்ததாகச்சொன்னதாகவோ, அல்லது அந்த * * * என்ற வார்த்தையை உபயோகப்படுத்த அனுமதித்ததாகவோ யாரும் தயவு செய்து கருத வேண்டாம். பேரவைத் தலைவர் தவறான வார்த்தைகளை உபயோகப்படுத்தவில்லை என்று உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தாங்கள் இப்பொழுது சொன்னது வேறுசில பத்திரிகைகளிலே அதுபோல் வந்திருக்கிறது. ஆனால் சில பத்திரிகைகளிலே, நானே அவர்களை அழைத்துக் கொண்டு வந்திருப்பதாகவும் வந்திருக்கிறது. அதைத் தான் நான் சொன்னேனே தவிர, சில பத்திகைகளிலே என் பெயர் இல்லை. சில பத்திகைகளில் தாங்கள் குறிப்பிட்டது போல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் குறிப்பாக, மாலைப் பத்திரிகையிலே 'லத்தீபுடன் வந்திருப்பதாகத் தான்' சொல்லப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இது அந்தப் பத்திரிகையின்மேல் உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வர வேண்டுமே தவிர, சபாநாயகர் மேல் கொண்டுவர வேண்டுமென்பதற்கு என்ன விளக்கம் தருகிறார் உறுப்பினர் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே அது, பத்திரிகையைப் பொறுத்ததே தவிர, உங்களைப் பொறுத்ததில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: சபாநாயகர்மீது நான் உரிமைப் பிரச்சினை கொண்டு வரவில்லை...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அல்ல; பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியைப் பார்க்கிற பொழுது தங்கள் பேரில் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வர வேண்டும் என்றுதான் முதலில் பேச ஆரம்பித்தீர்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: சபாநாயகருக்குக் கூட களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற முறையில், பத்திரிகைகளிலே செய்திகள் வந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரிமை மீறல் பிரச்சினையை உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பலாம் அல்லது இந்த அவையே கூட குழுவாக மாறலாம் என்று சொல்லியது, என்னைப்பற்றியது. இல்லையென்றால், உரிமை மீறல் பிரச்சினை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 10-05-ல் இருந்து 10-10 மணிக்குள் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

வராது—வந்திருக்காது. ஆகவே தாங்கள் எழுப்பிய பிரச்சினையை எழுத்தின் மூலமாகக் கொடுங்கள். தயவு செய்து உட்காருங்கள். உங்களுடைய பிரச்சினையைப் புரிந்து கொண்டேன்.

(முற்பகல் 10–10)

திரு. எம். ஏ. லத்தீப் : நான் ஒரு ஒழுங்குப்பிரச்சினையைத்தான் எழுப்பினேன். 184-வது விதியின் கீழ் அந்தப் பத்திரிகைகளின்மீது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது சபையில் நடந்த பிரச்சினையின்மீது வேண்டுமென்றால் உடனே உரிமைப் பிரச்சினையைக் கிளப்பலாம். நேற்று நடந்த விஷயத்தின்மீது உரிமைப் பிரச்சினை கிளப்ப வேண்டுமானால், எந்த விதியின்கீழ் கிளப்புகிறீர்கள் என்பதைக் குறிப்பிட்டு அறையிலே தாருங்கள். நான் அதைப் பரிசீலித்த பிறகு முடிவு சொல்கிறேன். இப்பொழுது அமருங்கள்.

(3) அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் (Tamil Nadu Land Improvement Board) தேர்தலுக்காக கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறையாக் நியமனம் செய்யப்பட்டுள்ளன:-

1. திரு. செ. இராமலிங்கம்,
2. திரு. ஆர். சி. சுப்பிரமணியம்,
3. திரு. கி. பெ. காத்தமுத்து.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சரியாக இருப்பதால், மேற்கண்ட மூவரும் தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என அறிவிக்கிறேன்.

அடுத்து, 41-வது விதியின்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து கவனத்தை ஈர்த்தல். திரு. பெ. சு. திருவேங்கடம்.

(4) தகவல் கோரல்.

அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது பற்றி.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் படித்த பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்தப் பிரச்னை என்ன ஆயிற்று என்று கேட்கலாமே தவிர, பொருளைப் படிக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் என்னிடம் இன்னும் தயாராகவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர் தயார் செய்து கொண்டுதான் பதில் சொல்ல வேண்டும். அதுகூட இல்லை. தாங்கள் இப்போது எழுப்பியதை அறையிலே கேட்டிருக்க வேண்டும். நான் பல முறை சொல்லியிருக்கிறேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, ஒத்திவைப்புப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கவனஈர்ப்பாக இருந்தாலும் சரி, அறையிலே வந்து தெளிவுபடுத்திக் கொள்ளலாம். அவையிலே வந்து கேட்டு நேரத்தை வீணாக்கக்கூடாது. நான் இதைப் பன்முறை சொல்லியிருக்கிறேன், பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : 41, 42-வது விதிகளின்கீழ் அறிவிக்கைகளைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள் என்று பேரவைத் தலைவர் டேப் ரிக்கார்டு பண்ணி வைத்துக் கொள்ளலாம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் நீங்கள் அமருங்கள். பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் எழுந்து பேசுவதை முதலில் நிறுத்துங்கள். அதுவே பெரிதாகும். மேலும் உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள்.

திரு. க. சுப்பு : (பேச எழுந்து நின்றுகொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள்,

திரு. க. சுப்பு : என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மான அறிவிக்கை என்ன ஆயிற்று ? கோவை விவசாயிகள் வரி கொடா இயக்கம் துவங்குவதாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்கள். கற்றுக் கொடுப்பதாக இருந்தால் வேறு இடத்தில் வந்து கற்றுக் கொடுங்கள், நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.10—10.15–இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

ஆனால் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்' பற்றிய
முக்கியத்துவத்தைப் பற்றியோ, அதனுடைய பொருளைப்
பற்றியோ இங்கு எழுப்பாதீர்கள். 42-வது விதியின்கீழ் கொடுக்
கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேட்ப
தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். கோவை என்றெல்லாம் ஆரம்
பித்து அதைப்பற்றிச் சொல்லி உண்மையான விவகாரத்தை
இங்கே கொண்டுவந்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். ஓரள
வுக்கு எனக்கும் அனுபவம் இருக்கிறது. அப்படிச் செய்யக்
கூடாது.

திரு. க. சுப்பு : விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையைப்
பொறுத்து நான் 14-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு
அறிவிக்கை கொடுத்திருந்தேன். இந்த அவையிலே அந்த
ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி உடனே எடுத்துக் கொள்
வதற்குப் பதிலாக, அதே பிரச்னையைப் பற்றி நேற்று மேலவை
யிலே எல்லா விளக்கங்களையும் அமைச்சர் அவர்கள் கொடுத்
திருக்கிறார்கள். நான் அதற்கு முன்னாலேயே ஒத்திவைப்புத்
தீர்மானத்தின் அறிக்கையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன்.
முதலில் இங்கேதான், இந்த அவையிலேதான் அனுமதித்து
இருக்கவேண்டும். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அப்படிப் பேசக்கூடாது.
இந்தச் சபைக்குஎவ்வளவு முக்கியத்துவம், அந்தஸ்து உண்டோ,
அதே முக்கியத்துவமும், அந்தஸ்தும் மேலவைக்கும் உண்டு. ஆகவே,
உறுப்பினர் அவர்கள் * * * பற்றிச் சொல்லிய
வைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : நான் மேலவையினுடைய அந்தஸ்தைக்
குறைத்துச் சொல்லவில்லை. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்று
உறுப்பினர் அவர்கள் சொன்னதை நீக்கிவிட வேண்டுமென்று
உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு: முதலில் கவுன்சிலில் இதைப்பற்றி அமைச்சர்
அவர்கள் விளக்கியது உரிமை மீறல் பிரச்னையாகும். இந்த
அவையின் உரிமையைப் பாதிப்பதாகும். வேண்டுமானால் நீங்கள்
சொன்னால், அமைச்சர் அவர்கள்மீது நான் உரிமை மீறல் பிரச்னை
கொண்டு வருகிறேன்.....

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல்
10.10—10.15-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. உங்களுடைய
உரிமை அது. உங்களுடைய உரிமைக்குக் குறுக்கே நான் நிற்க
விரும்பவில்லை. நீங்கள் இஷ்டப்பட்டு பேரவையின் விதியின்கீழ்
கொண்டு வரவேண்டுமானால் கொண்டு வரலாம். அதைப்பற்றி
பேச்சுக்கு இடமில்லை. நான் வேண்டாம் என்று சொன்னால்
சுப்பு அதன்படி கேட்பவரும் இல்லை. எனக்குத் தெரியும்.
திரு. சுப்பு அவர்கள், விதியின்கீழ் எதை எழுதித் தரமுடியுமோ
அதை எழுதித் தாருங்கள். விதிகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட
வேண்டுமா வேண்டாமா என்று நான் முடிவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர்
அவர்களே, 42-வது விதியின்கீழ் எந்த ஒத்தி வைப்புத் தீர்
மானமும் விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து எழவில்லை என்
றாலும் அதே நேரத்தில் சப்ளிமென்டரி கேள்விகளுக்குப் பதில்
சொல்லுகின்ற வகையில் சில பதில்கள் தரப்பட்டன. 42-வது
விதியின்கீழ் இதுவரை அந்தப் பிரச்சினை மேலவையில் வரவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொன்னது, 42-வது விதியின் கீழ்
நான் இந்தப் பேரவையில் அறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.
ஆனால் மேலவையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது
இதுபற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த
விவரங்களை இங்கே கொடுப்பதற்குப் ப்ரஃப்ரன்ஸ் கொடுத்திருக்க
வேண்டும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே சுப்பு அவர்கள்
கொடுத்தது ஒத்தி வைப்புத் தீர்மானம், அங்கே கேள்விக்குப்
பதில் என்றெல்லாம் அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பேசக்
கூடாது. அங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்
திருந்து இங்கே பதில் சொல்லாமல் அங்கே மட்டும் சொல்லி
யிருந்தால் எடுத்துக் காட்டலாம். இதற்கும் அதற்கும் சம்பந்தம்
இல்லை.

திரு. துரை முருகன் : இந்தப் பிரச்சினை குறித்து திரு.
சுப்பு அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம்
கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் மெட்டீரியல்ஸ்
இருக்கும்போது ஏன் அதை எடுத்துக் கொள்ளக்கூடாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடம்
மெட்டீரியல்ஸ் இருக்கிறது என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?

திரு. துரை முருகன் : மேலவையில் சொல்லியிருக்கிறாரே.
அங்கே சொன்னவற்றை எங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை பற்றி என்னிடம் மெட்டீரியல்ஸ் கொடுத்து பதில் வந்து நான் இந்த அவையில் வைக்கவில்லை எனற நிலை இல்லை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் கொடுத்த தீர்மானத்தின் மீது அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்திருந்தால் இந்த அவையில் வைக்க வேண்டுமென்பதை முதல் கடமையாக ஏற்றுக் கொள்கிறேன். அங்கே கேள்விக்குப் பதில் சொன்னதைப் பெரிதாகச் சொன்னால் நான் அமைச்சரை அது பற்றிக் கேட்க இயலாது. எனக்குத் தகவல் அமைச்சரிடமிருந்து வரவில்லை.

திரு. க. சுப்பு : ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரிடமிருந்து பேரவைத் தலைவருக்குத் தகவல் வராது. 41-வது விதியின் கீழ் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குத்தான் தகவல் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் பதில் சொல்வதாக இருந்தாலும் அதைத் தள்ளிவிடுகிற உரிமை, அதிகாரம் எனக்கு இருக்கிறது என்பதைத் தயவு செய்து ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். அமைச்சர் தயாராக இருந்தாலும் கூட தேவையில்லை என்று தள்ளிவிடுகிற உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே பிரச்சினைக்கே இடமில்லை.

(5) கவன ஈர்ப்பு.

(அ) வடாற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் சில கிராமங்களில் வோல்டேஜ் குறைப்பால் பம்ப்செட் மோட்டார் காயில் தீய்ந்து போவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த பெரிய கிளாம்பாடி, சிறுகிளாம்பாடி, ஊதிரம்பூண்டி, தேவனும் பட்டு, முத்திரசம்பூண்டி, மேப்பத்துறை, தென்னகரம், கீழ்ப் பத்துறை, தென் மகாதேவமங்கலம் ஆகிய கிராமங்களுக்குக் காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து அளிக்கப்படும் மின் சக்தியில் 28—2—1978 முதல் தினசரி திடீரென்று வோல்டேஜ் குறைவதால் பம்ப் செட்டுகளின் மோட்டார் காயில் தீய்ந்துபோவதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நடவடிக்கைக் குறிப்புகளை நான் படித்தேன். ஏற்கனவே நீக்கிவிட உத்தரவிட்டதை மறுபடியும் படித்ததைக் கொண்டு அவற்றை ஏற்றுக் கொண்டதாகக் கருதக்

கூடாது. அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது. நேற்றுப் பேசியதில், நேற்று நீக்க வேண்டுமென்று நான் சொன்னது, இன்று நான் நடவடிக்கைக் குறிப்புகளில் இருந்து படித்தது அனைத்தும் நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : 'நடவடிக்கைக் குறிப்பைப் படித்தார்' என்று இருக்கலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பேரவைத் தலைவர் நடவடிக்கைக் குறிப்புகளைப் படித்தார்' என்றுதான் இருக்கலாம், மற்றவை எதுவும் இருக்கக்கூடாது.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாசன கிணறுகளில் நல்ல நீர் வசதி இருப்பதால் விவசாயிகளின் மின் தேவை அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டில் 1,300 மெகா வாட்டாக இருந்த மின் தேவை இந்த ஆண்டு திடீரென்று எதிர்பாராத வகையில் 1,600 மெகா வாட்டாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு பெய்த பெரு மழையின் காரணமாக மாநில முழுவதும் நிலநீர் மட்டம் உயர்ந்திருப்பதால் இறைவை நீர்ப் பாசனம் பெருமளவு அதிகரித்து ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட எல்லா பம்பு செட்டுகளும் இயங்குகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே மின் தேவை அதிகரித்துள்ளதாலும் இந்த ஆண்டு பொதுவாக உச்ச வேளை மின் தேவை மிகவும் அதிகமாக இருப்பதாலும் கிரீட்டில் மின் அழுத்தம் குறைவாக உள்ளது.

கவன ஈர்ப்பு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள 9 (ஒன்பது) கிராமங்களுக்கு திருவண்ணாமலை 110 கே. வி. துணை மின் நிலையத்திலிருந்து காஞ்சி 33/11 கே.வி. துணை மின் நிலையம் வழியாக மின்சாரம் வழங்கப்படுகிறது மேலும் மின் வழங்கும் கம்பித் தொடர் சரியாக பொருந்தாமல் உள்ளது மேற்கூறிய காரணங்களால், காஞ்சி துணை மின் நிலையத்தில் மின் அழுத்தம் சாதாரணமாக உள்ள 11 கே.வி.யிலிருந்து 8·4 கே.வி.யாக காலையில் உச்சத் தேவை ஏற்படும் பொழுது குறைகிறது. இதனால் பெரிய கிளாம்பாடி, சிறிய கிளாம்பாடி கிராமங்களில் 8 மோட்டார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைகளை நிவர்த்திக்க மின் வாரியம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

(அ) காஞ்சி துணை மின் நிலையத்திலுள்ள மின் மாற்றிகளுக்கு 3 சதவிகிதம் அதிகமாக மின்சாரம் பாய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) இந்த கிராமங்களில் மின் வழங்கும் 11 கே.வி. கருவிகளின் திறனை வலுப்படுத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(இ) நாயுடுமங்கலத்தில் 33/11 கே.வி. திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைத்து, இப்பகுதிகளின் மின் விநியோகத்தை காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து மாற்றி பரவலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

(உ) கெப்பாசிட்டர் மற்றும் கன்டென்சர்களையும் பொருத்தி கிரீட்டின் மின் அழுத்தத்தை நிலைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

(ஊ) மின் துய்ப்பாளர்களும் கெப்பாசிட்டர்களை பொருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது அந்தக் குறையைப் போக்குவதற்கு உண்டான பல காரணங்களைச் சொன்னார்கள். இன்றைய தினம் விவசாயிகள் அதிகமான அளவில் இறைவைப் பாசனத்தின் கீழே பயிர் செய்யக்கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால் நான் அங்கே கேட்டறிந்த வரையில், 440 வோல்டேஜ் அளவிற்கு மின்சாரம் வரவேண்டியதற்குப் பதிலாக 300 வோல்டேஜ்தான் பல நேரங்களிலே வந்து கொண்டிருக்கிறது, இப்படிக் குறைந்து விடுகிற காரணத்தினாலே நான் சொன்ன கிராமங்கள் மட்டுமல்ல, பல கிராமங்களிலே நூற்றுக் கணக்கான மோட்டார் காயில்கள் தீய்ந்து போய் இருக்கின்றன, ஆகவே, இந்த வகையில் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் என்ன முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும் நாயுடுமங்கலத்தில் சப் ஸ்டேஷன் வந்தால் நிலைமை சரியாகும். பொதுவாக தமிழ்நாடு முழுவதுமே குறைந்த அளவு மின் அழுத்தம் இருக்கிறது என்ற குறை இருந்து வருகிறது. அதனாலேதான் கடந்த காலத்தில் டிரான்ஸ்மிஷன் அன்ட் டிஸ்ட்ரிபியூஷனுக்காக 10 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டது. இப்போது 34 கோடி ரூபாய் அளவிற்கு லைன்களைச் சரிப்படுத்துவதற்காக என்ற முறையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு, அதற்காகத் தனியாக தலைமைப் பொறியாளர், சீப் எஞ்சினியர் பார் டிரான்ஸ்மிஷன் அன்ட் டிஸ்ட்ரிப்யூஷன் என்ற முறையிலே ஒருவரை மின்சார வாரியம் நியமித்து இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குகின்றபோது நாம் ஒரு அக்ரிமென்ட் செய்கிறோம். விவசாயிகள் ஏதாவது தவறு செய்தால் அதற்காக அபராதத் தொகை, கட்டணம் எல்லாம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் இன்றைக்கு வோல்டேஜ் குறைவாக இருப்பதன் காரணமாக மோட்டார்கள் தீய்ந்து போய் விடுகின்றன. அதன் காரணத்தால் விவசாயிகள் இன்றைக்கு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், பயத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, தீய்ந்து போன மோட்டார்களுக்காக மின்சார வாரியம் அவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அதற்காக நட்ட ஈடு தராவிட்டாலும் மின்வசதி வழங்குவதில் நட்டம் வந்து கொண்டுதான் இருக்கிறது.

(ஆ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் தொகுதியில் உள்ள 21 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூபாய் 40 இலட்சத்திற்கும் அதிகமான துணிகள் தேங்கிக் கிடப்பது குறித்து மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிப்புத்தூரில் மட்டும் இருபதுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 50 சதவீதத்திற்கு மேல் கூட்டுறவின் கீழ் இங்கே கைத்தறி நெசவாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இப்பொழுது தேங்கிக் கிடப்பதாகச் சொல்லப்படும் அளவு இயல்பானதே. இந்தத் தேக்கம் இரண்டு மாத உற்பத்தியின் அளவாகவே இருக்கிறது.

மூன்று மாதங்களுக்கு மேல் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி துணிகள் பொதுவாகத் தேங்க ஆரம்பித்துவிடும்பொழுதுதான், ஓர் அசாதாரணமான சூழ்நிலை உருவாகிவிடும். இப்படி ஓர் அசாதாரணமான சூழ்நிலை உருவாவதைத் தடுக்கும் பொருட்டு 'கோ ஆப்டெக்ஸ்' பெரும் அளவில் கொள்முதல் செய்து, கூட்டுறவு சங்கங்களுக்குத் தக்க சமயத்தில் உதவி செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் அதிக அளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருவதை நாம் நன்கு அறிவோம்.

கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் கைத்தறி நெசவாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டு போவதால், உற்பத்தியும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் மேலும் பல புது விற்பனை நிலையங்களைத் துவக்குதல் புது டிசைன்கள் மற்றும் பாலிஸ்டர் நைலான் பிளென்ட் துணிகளைத் தயாரித்தல், பிரின்டட் சேலைகளை நவீன டிசைன்களில் தயார் செய்தல் ஆகிய முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் கைத்தறித் துணிகளை தேக்கமில்லாது விற்பனை செய்ய முடியும் என்று அரசு நம்புகிறது. '

துரிதமாக விற்பனையாகும் பாலிஸ்டர் துணிகளை நெய்யும் பணியை திருவில்லிப்புத்தூர் மற்றும் திருவில்லிப்புத்தூரைச் சுற்றியுள்ள வட்டாரங்களுக்கு கொடுக்க இருப்பதால், விற்பனைக்யில் சுணக்கமோ, உற்பத்தியான துணிகளின் தேக்கமோ இருக்காது என நம்பலாம்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே இந்தப் புதிய அரசு துவக்கப்பட்ட நாளில், ஒரு நாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இப்படி இலட்சக்கணக்கான ரூபாய்க்கான துணிகள் தேக்கம் அடைந்து, நெசவாளர் பிரதிநிதிகளை அழைத்துக் கொண்டு கைத்தறி அமைச்சரவர்களிடம் நான் சென்றபொழுது கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்ய அமைச்சரவர்கள் உத்தரவிட்டார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணித் தேக்கம் என்பது ஸ்ரீவில்லிபுத்தூரில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடந்து கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கோவாப்டெக்ஸ் முறையில்லாமல் கொள்முதல் செய்வதுதான். ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு மாதம் விட்டுத்தான் கொள்முதல் ஆகிறது. ஆகவே, மாதம் ஒருமுறை கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாதம் ஒருமுறை கோவாப்டெக்ஸிலிருந்து கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் துணி உற்பத்தியில் எந்த அளவிற்குத் தீவிரமாக ஈடுபடுகின்றனவோ அதைப் போல் விற்பனை செய்வதிலும் கவனம் செலுத்தினால் இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு இடமில்லை. கோவாப்டெக்ஸ் நிறுவனம் சிறப்புத் தள்ளுபடி வழங்கும் காலங்களில் பெரும் கொள்முதல் செய்கிறது. மற்ற இடங்களில் தேவையையொட்டி விற்பனை நிலையங்களில் எந்தெந்தத் துணி குறைவாக இருக்கிறதோ அதைக்

கொள்முதல் செய்கிறோம். மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற விதியோ, கட்டாய நிலையோ கிடையாது. தேவையையொட்டிக் கொள்முதல் செய்து வருகிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளைத் தாங்களே விற்பனை செய்வதற்கு அக்கறை செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) 1978-79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை—மற்றும்

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

*திரு. இரா. அமிர்தராஜ்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வரவர்களின் காவல் துறை, தீ அணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

நேற்றைய தினம் பேசிய உறுப்பினர்களெல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தான் காவல் துறையிலே குறுக்கீடுகள் செய்வதாக எல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி மாவட்டம் அன்பிலில் நடந்த கொலை வழக்கில் முதலாவதாகக் கொடுக்கப்பட்ட எப். ஐ. ஆர். என்று சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கையில் முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களுடைய மாமனாரின் பெயர் இடம் பெற்றிருந்தது. ஆனால் வழக்கு மன்றத்திலே வழக்கு தொடரும் நேரத்தில் அவருடைய பெயர் அங்கே எடுபட்டுப் போய் மற்றவர்கள் மீது வழக்கு தொடர்ந்த காரணத்தினால் அந்த வழக்கு நிருபிக்கப்படாமல் போனதோடு மட்டுமல்ல, அந்த வழக்கின் தீர்ப்பை வழங்கும் நேரத்தில் நீதிபதி அவர்கள் இந்த வழக்கில் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதற்குக் காரணமே முதலில் அறிக்கையில் சேர்க்கப்பட்ட பெயர்

பிறகு இல்லாமல் போனது தான் என்று அந்த வழக்கைத்
தொடர்ந்த காவல் துறை மீது அவர்கள் கண்டனம் தெரிவித்
திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்
களெல்லாம் பிரேமாபாய் கொலை வழக்கைப் பற்றி மிகவும் விஸ்
தாரமாகப் பேசினார்கள். அதில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க
வில்லை என்று இந்த அரசின் மீது குற்றம் சுமத்தினார்கள். இங்கே
நான் ஒன்றைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-30)

பூலாவரி சுகுமாரன் கொலை வழக்கில் எந்த துப்புத் துலக்கி
னார்கள்? என்ன வழக்கு தொடரப்பட்டது? இதுவரை கொலை
செய்தவர்கள் கண்டு பிடிக்கப்பட்டார்களா? என்று அந்த நண்பர்
களைப் பார்த்துக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால்,
இன்றையதினம் இந்த அரசு அந்த பூலாவரி சுகுமாரன் கொலை
வழக்கை, புரட்சித் தலைவரின் அரசுதான் துப்பு துலக்கி, வழக்கு
தொடர ஆவன செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான்
பாராட்டாமலிருக்க முடியாது.

அதே போல, இன்னும் ஒன்றை நான் குறிப்பிட வேண்டும்.
அரசியல் குறுக்கீடு என்று குறிப்பிடுகிறவர்களுக்கு திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சியிலே நியமிக்கப்பட்ட காவல் துறை அதி
காரிகள் இன்னும் அந்த இயக்கத்தின் விசுவாசிகளாக இயங்கிக்
கொண்டிருக்கிற காரணத்தால்........

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, குறுக்கிடுவதற்காக நான்
வருந்துகிறேன். இப்பொழுது வந்திருக்கிற அரசாங்கம் பூலாவரி
சுகுமாரன் வழக்கை ரீ ஓப்பன் பண்ணியிருக்கிறது என்று சொன்
னார்கள். அதை எமர்ஜன்ஸி அரசுதான் ரீ ஓப்பன் பண்ணி
யிருக்கிறது. அதை இந்த அரசு கைவிட்டிருக்க வேண்டும்,
கைவிடவில்லை. அதுதான் உங்கள் தப்பு.

திரு. இரா. அமிர்தராஜ் : இன்னும் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள்தான் பாதிக்கப்பட்டி
ருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில், ஒருசில இடங்களில் பழுதுபட்ட இடங்
களில் காவல் துறை நிலையங்கள் இயங்குவதால் அவற்றைப் புதுப்
பிக்கப்பட்ட அல்லது புதிய கட்டிடங்களுக்கு மாற்ற வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருநெல்வேலியிலுள்ள பனகுடி பகுதி
யிலே உள்ள காவல் துறை நிலையம், மிகவும் பழமையும் பெருமை
யும் வாய்ந்ததோடு மட்டுமல்ல, அதிகமான காவலர்கள் வேலை
செய்கிற அந்த நிலையம் மிகவும் பழுதுபட்ட கட்டடத்தில் சிறிய
கட்டடத்தில் இருக்கிற காரணத்தால், அதற்குப் புதிய கட்டடம்
கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன். என்னுடைய திருச்செந்தூர் தொகுதியில்
தீயணைப்பு நிலையம் இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியிலே
திடீரென தீ விபத்துக்கள் ஏற்பட்டால், தீயணைப்பு நிலையத்தை
அணுகி, அந்தத் தீயைத் தடுப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாம
லிருக்கிறது. காரணம், ஏறத்தாழ 36 மைல்களுக்கு அப்பா
லுள்ள, தூத்துக்குடி, அல்லது திருநெல்வேலி போன்ற நகரங்
களில் தான் தீயணைப்பு நிலையங்களிருக்கின்ற கார ணத்தால்
36, 35 மைல்களுக்கு அப்பாலுள்ள எங்கள் பகுதியில் தீ விபத்து
ஏற்பட்டால், காலதாமதம் அதிகமாகிற காரணத்தால் சேதம்
அதிகமாகிறது. ஆகவே, என்னுடைய திருச்செந்தூர் நகரிலே
ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியிலே, குறிப்பாகச்
சொல்லப் போனால், ஒருசில அதிகாரிகள், திராவிட முன்னேற்றக்
கழகத்தின் விசுவாசிகளாக இன்னமும் இருந்து செயல்படுகிறார்
கள் என்பதை, ஒரு குறிப்பான காரணத்தைச் சொல்லி, நான்
அமரலாம் என்று ஆசைப்படுகிறேன்.

சாத்தான்குளம் தொகுதியிலே, பொத்தக்காலன்விளை பகுதி
யைச் சேர்ந்த எங்கள் கிளைக் கழகச் செயலாளர் சாராயம் வடிப்
பவர்களைப் பற்றி, குறிப்பாக, இன்ன இடத்திலே காய்ச்சுகிறார்
கள், வடிக்கிறார்கள் என்று காவல் துறை உதவி ஆய்வாளருக்குப்
புகார் செய்திருந்தார். அந்தப் புகார்மீது நடவடிக்கை எடுக்கப்
படாமல், புகார் செய்தவரே அடித்து வீழ்த்தப்படுகிற நட
வடிக்கை இருந்தது. அவர் மேல் வழக்கும் தொடர்ந்திருக்
கிறார்கள். அப்படிப்பட்ட வழக்குகளை மாண்புமிகு முதல்வர்
அவர்கள் கண்காணித்து அந்த வழக்குகளை வாபஸ் வாங்க ஏற்பாடு
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், குலசேகரம் பட்டிணத்திலே உள்ள காவல்
துறை உதவி ஆய்வாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட ஒரு
களவு போன புகார் பற்றி, துப்பு இருந்தும் முறையாகக் கண்டு

ஆனால் கிராமங்களிலே என்ன நடக்கிறது என்றால் காவல் துறை பெரிய அதிகாரிகள் கீழே உள்ளவர்கள் வயதானவர்கள் என்றும் பார்க்காமல் அந்த எஸ்.ஐ. ஆகியவர்களை கூப்பிடுகிற போது இங்கே வா, அங்கே போ என்று சொல்கிறார்கள். எஸ்.ஐ. தனக்குக் கீழே பணி புரிகின்ற ஹெட்கான்ஸ்டபிள்களை மரியாதை இல்லாமல் பேசுகிறார்கள். அதனால் அவர்கள் பொதுமக்களை மரியாதை இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எவன் ஒருவன் கைகட்டி நிற்கிறானோ அவனிடம் மற்றவர்கள் கைக்கட்டி நிற்கவேண்டும் என்று எதிர்பார்ப்பான். எவன் ஒருவன் மற்றவனிடம் கை கட்டி நிற்காமல் இருக்கிறானோ அவன் மற்றவர்களை அப்படி எதிர்பார்ப்பது இல்லை. அது நிச்சயமாக நன்றாக இருக்கும்.

(முற்பகல் 10-40)

காவல் துறையைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு ஒரு நிலையான வாழ்வு, சரியான வாழ்க்கைப் பாதை இல்லை. கீழே இருப்பவர்கள் மேலே இருப்பவர்களுக்கு அன்புக்கரம் நீட்டினால் நிலையாக கொஞ்ச நாளைக்கு ஒரே இடத்தில் இருப்பார்கள்; அவர்கள் வாழ்வில் உயருவார்கள். மற்றவர்கள் கூனி, குறுகிப் போய்விடுகிறார்கள். அதனால் வேலையில் சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது. ஏன் இந்த வேலைக்கு வந்தோம் என்று எரிச்சல் வந்துவிடுகிறது. இது மனிதர் எல்லோருக்கும் ஏற்படுகின்ற ஒரு எண்ணம்தான். மேலதிகாரிகள் ஜாக்கிரதையாக இதைக் கவனித்தால்தான் உண்மையான காரணத்தைக் கண்டறிய முடியும்; இல்லாவிட்டால் இதைக் கண்டு பிடிக்கவே முடியாது.

நான் இதை உங்களுக்குச் சொல்லக் காரணம் அவர்களுடைய வசதி பெருக வேண்டும். அதோடு அவர்கள் பணியாற்றுகின்ற காவல் நிலையங்களின் வசதிகளும் பெருக வேண்டும். காவல் நிலையம் இருக்கிறது; பணியாற்றும் அலுவலர்கள் இருக்கிறார்கள்; ஆனால் அங்கே ஒரு தொலைபேசி கிடையாது, ஒரு மோட்டார் சைக்கிள் கிடையாது. இதுபற்றி நான் ஐ.ஜி. அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் வந்தது. தொலைபேசி வைப்பதற்கு பணம் இல்லை. மோட்டார் சைக்கிள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை; ஏனென்றால் பஸ் ரூட் இருப்பதால் பஸ்ஸிலே போக முடியும் என்று பதில் வந்தது.

நான் ஒரு உதாரணத்தின் மூலம் விளக்க விரும்புகிறேன். திடீரென்று கிராமத்தில் சாராயம் காய்ச்சுகிறார்கள் அல்லது அடிதடி நடக்கிறது என்று காவல் நிலையத்திற்கு செய்தி வருகிறது; அது எந்த வழியாக வந்தது என்று பார்க்க வேண்டியதில்லை; எப்படியோ செய்தி வருகிறது. உடனடியாகப் போனால்தான் குற்றவாளிகளைப் பிடிக்க முடியும் என்ற அவசரம் இருக்கிறது. உடனடியாகப் புறப்பட வேண்டுமென்றால், நம் ஊரில் பஸ் எப்படி ஓடுகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். பஸ் கிடைக்காது; டாக்சியில் போகிறார்கள். டாக்சிக்கு 100 ரூபாய், 200 ரூபாய் கொடுக்க வேண்டும். அந்தப் பணத்தை சப் இன்ஸ்பெக்டரும் கொடுக்க முடியாது, இன்ஸ்பெக்டரும் கொடுக்க முடியாது. சாராயம் காய்ச்சுபவர்கள் தான் கொடுக்க முடியும். சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடிக்கப்போகிறவர்களுக்கு சாராயம் காய்ச்சுபவர்களே பணம் கொடுக்கின்ற நிலை ஏற்பட்டால் காவல் துறையினர் எப்படி அவர்களைப் பிடிப்பார்கள்? பிடித்தாலும் எப்படி கேஸ் போடுவார்கள்?

குற்றவாளிகள் பிடிபடவில்லை என்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? டாக்சிக்குப் பணம் கொடுத்தாக வேண்டும். உடனே ஊரிலே உள்ள பெரிய மனிதர்களிடம், யாரிடம் போனால் உடனே அவ்வளவு பணமும் கொடுப்பார்களோ அவர்களிடம் போய் நிற்பார்கள். அவர்களும் பணத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். பின்னால் அவர்கள் என்ன அக்கிரமங்களைச் செய்தாலும் தப்பித்துக்கொள்ளலாம். ஏனென்றால் காவல் துறையினர் அங்கே போக மாட்டார்கள்; போனாலும் பிடிக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே இருந்தால் எப்படிக் குற்றவாளிகளைப் பிடிக்க முடியும்? எப்படிக் குற்றங்களைத் தடுக்க முடியும்? ஆகையால் அங்கேதான் ஊழலுக்கு வழி பிறக்கிறது. இதை அரசாங்கம் உணரவேண்டும்.

ஆகையால் எல்லா காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி இருக்க வேண்டும்; ஒரு மோட்டார் சைக்கிளாவது இருக்க வேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இங்கே இருக்கிற ஒரு மந்திரி எங்காவது போகிறார் என்றால் அவருக்குப் பின்னாலே 30 கார்கள் போகின்றன. அத்தனை கார்களுக்கும் அரசாங்கச் செலவில் பெட்ரோல் போடப்படுகிறது. பெரிய அதிகாரிகள் போகிறார்கள் என்றால் எத்தனையோ 'வேன்கள்' பின்னால் போகின்றன. இப்படியெல்லாம் ஆடம்பரச் செலவு செய்யப்படுகின்றபோது போலீஸ் ஸ்டேஷனுக்கு இந்த குறைந்த பட்ச வசதிகளையாவது செய்து கொடுக்க வேண்டும்.

மந்திரிகளுக்கு அல்லது அதிகாரிகளுக்கு ஆடம்பரச் செலவு செய்யக்கூடாது என்று சொல்வது என்னுடைய நோக்கமல்ல; உண்மையிலே தேவைப்படுகின்ற குறைந்த பட்ச வசதிகளையாவது காவல் நிலையங்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். மந்திரிகள் எந்தக் காரில் வேண்டு

மானாலும், இம்பாலா காரில் வேண்டுமானாலும் போகலாம்; காரில் போக வேண்டிய இடங்களுக்குக் காரில்தான் போக முடியும்.

திரு. இ. தமிழரசன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மந்திரிகள் போகும்போது 30 கார்கள் அவர்களுக்குப் பின்னாலே போகின்றன என்று சொன்னார்கள். அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு ர. ஜெபமணி : காரில் போவது தவறு என்று நான் சொல்லவில்லை. நமக்கு அந்தப் பாதுகாப்பு கொடுக்கும்போது, நாட்டு மக்களைப் பாதுகாக்கின்ற காவல் துறையினருக்கும் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். நான் மந்திரியாகவும் இல்லை. காரிலும் போகவில்லை; இப்போதும் காரில் போகவில்லை. என்னுடைய நோக்கம் எல்லாம் போலீஸ் இலாகாவுக்கு நல்ல வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான்.

அதோடு, 5 மைல் சுற்றளவுக்குள் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வேண்டும். எப்படி வைத்தியசாலை வைக்க வேண்டுமென்று சொல்லுகிறோமோ அதேமாதிரி இதுவும் மிக மிக அவசியமான ஒன்று. காரணம் வளரும் சமுதாயத்திலே தீய எண்ணங்களும் வளர்ந்துகொண்டே போகின்றன. அதனால் குற்றங்களும் வளருகின்றன. கத்தியால் குத்துபவனுக்கு அறிவு வளர்ந்தால் அவன் துப்பாக்கியால் சுடுவான். டீ கடையில் கொள்ளையடிப்பவனுக்கு அறிவு வளர்ந்தால் அவன் பாங்கிலே கொள்ளயடிப்பான். இப்படித்தான் இன்றைக்கு நாட்டிலே அறிவு வளருகிறது ; சமுதாயம் வளருகிறது. அந்த சமுதாயத்தைக் கண்காணிக்க அருகாமையிலேயே காவல் நிலையம் இருக்க வேண்டும். அந்த காவல் நிலையத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளும் இருக்க வேண்டும்.

அதற்கு பணம் இல்லை என்று நீங்கள் சொல்ல முடியாது. அரசாங்கம் நினைத்தால் எப்படி வேண்டுமானாலும் பணத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். எத்தனை வரி வேண்டுமானாலும் போடலாம்; எப்படி வேண்டுமானாலும் பணம் பெறலாம். ''வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம்'' என்று சொன்னீர்கள். ஆனால் வசதி எங்கே பெருகியிருக்கிறது, வரி எங்கே குறைந்திருக்கிறது ? அந்த பாடத்தையே நான் இந்த நாட்டில்தான் கற்றுக்கொண்டேன்.

இந்த அற்புதம் அதிசயம் எங்கேயாவது நடக்குமா என்று கேட்டால் நிச்சயம் நடக்காது. எதற்கெடுத்தாலும் பணம் இல்லை, பணம் இல்லையென்ற பிரச்சினைதான் நமக்கு முன்னாலே வந்து நின்று கொண்டிருக்கிறது.

என்.ஜி.ஓ. ஸ்ட்ரைக் பண்ணுகிறார்கள். அதற்காக ஆந்திரத்திலே இருந்தும் வெளி மாநிலத்திலே இருந்தும் போலீஸ்காரர்கள் வருகிறார்கள். அவர்களுக்குப் போக்குவரத்து வசதி கொடுக்கிறோம். படுப்பதற்கு வசதி செய்து கொடுக்கிறோம். படியும் கொடுக்கிறோம். இப்பொழுது மட்டும் பணம் எங்கே இருந்து வந்தது ? இந்தப் பணம் மக்களின் வரிப்பணம்தான். இப்படிக் கொடுப்பதை விட நேர்மையான முறையில் நடக்கின்ற அந்த நல்லவர்களுக்கு என்னென்ன செய்தால் அவர்கள் கடமையை நன்றாகச் செய்வார்கள் என்று பார்த்து அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். கடமையைச் செய்ய தவறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கலாம். எப்படி திருடர்கள் மீதும், கொலைக்காரர்கள் மீதும், கொள்ளைக்காரர்கள் மீதும் நடவடிக்கை எடுப்போமோ அப்படிக்காவலர்களில் யாராவது தவறு செய்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். யாரோ ஒரு சிலர் தவறு செய்து விடுவதால் எல்லோரும் தவறு செய்தவர்களாகக் கருதக் கூடாது. எந்த ஆட்சியிலும் காவலர்கள் சென்ட் பெர்சன்ட் தவறு செய்ய மாட்டார்கள். நூற்றுக்கு ஐந்து பேர் அல்லது பத்து பேர்தான் தவறு செய்யலாம். எல்லோருமே தவறு செய்ததாகக் கருதக்கூடாது.

ஆகவே ஏதாவது தவறு என்று வந்தால் முதலமைச்சருக்கு ஒரு மனுக் கொடுத்தால் அல்லது மேலதிகாரிகளுக்கு ஒரு மனுக் கொடுத்தால் வைத்தியர்கள் எப்படி விரைந்து உதவி பண்ணுவார்களோ அப்படி உதவி பண்ண நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இப்போது என்ன நடக்கிறது? நம்முடைய துரதிஷ்டம் போலீஸ் அதிகாரிகளாகட்டும் அல்லது மற்ற தீயணைப்பு படையினராகட்டும், யாராக இருந்தாலும் இன்றைக்கு ஆளும் கட்சியைப் பாலோ செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். ஆளும் கட்சியைக் கண்டாலே அவர்கள் பயப்படுகிறார்கள். நமக்கு ஏன் இந்த வம்பு. குற்றவாளிகளைப் பிடித்துக் கொடுத்தாலும் சம்பளம் வருகிறது. பிடித்துக் கொடுக்காவிட்டாலும் சம்பளம் வருகிறது. அவர் என்ன செய்தால் என்ன ? நீங்கள் தானா இந்த நாட்டைத் தாங்குகிறீர்கள் ? என்று புகார் கொடுத்தவர்களிடம் கூறுகிறார்கள். நாங்கள் பிடித்து வைக்க ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. வந்தால் நாங்கள் பயப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. "அவர் சொல்லிவிட்டு சென்று விடுவார். ஆனால் எங்களை அல்லவா உடனே வேறு இடத்திற்கு மாற்றிவிடுகிறார்கள். குழந்தை

குட்டிகளைக் கூட்டிக் கொண்டு எங்களால் வேறு இடத்திற்குப் போக முடியாது. ஆகவே யார் வந்தாலும் நாங்கள் சலாம் போடுவோம் என்று சொல்கிற அளவுக்கு கடமை உணர்வு அற்றவர்களாக இருக்கும் நிலைமை வரக்கூடாது.

மீனாட்சியம்மன் கோவிலில் திருட்டுப் போய் சங்கடம் வந்தால் பக்கத்திலே இருக்கும் சொக்கநாதரிடமா சொல்வார்கள், காவலர்களிடத்திலேதானே சொல்வார்கள். அதேமாதிரி ஜனாதிபதிக்கு சங்கடம் வந்தாலும் காவலர்களுக்குத்தானே போன் செய்யவேண்டும். ஜனாதிபதி பக்கத்திலே இருக்கும் பிரதமருக்கா போன் செய்வார்கள்? அப்படிப் போன் பண்ண மாட்டார்கள்.

ஆகவே, எல்லோருடைய பாதுகாப்பும் காவலர்களுடைய கையிலே இருக்கிறது. அப்பேர்ப்பட்ட காவலர்கள் இன்று இருக்கும் நிலைதான் நமக்கு மிகவும் வேதனையைத் தருகிறது அவர்கள் கடமை உணர்விலே இருந்து தவற நினைக்கிறார்கள்.

இங்கே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். செங்கம் தாலூக்காவில் செங்கம் தொகுதியிலே ஒரு அரிஜன் குழந்தை குட்டியோடு வீட்டில் இருந்தார். அப்படி இருக்கும்போது அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. அடியாட்களோடு சென்று குழந்தைகளை வெளியே இழுத்துப்போட்டு, 'உங்களுக்கு எதற்கு வீடு' என்று கேட்டு கூரையைப் பிரித்து எரிந்துவிட்டு அவர்களையும் நன்கு அடித்து இருக்கிறார்கள். போலீஸிலே உடனே புகார் கொடுக்கப்பட்டது. போட்டோ கூட எடுத்துக்கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு அசைவு கூட அங்கே ஏற்படவில்லை. ஏதோ மனுக் கொடுத்தால் வாங்கி வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. அதன் மீது நடவடிக்கை எடுக்கிறார்களோ? இல்லையோ? எந்தவிதமான பதிலும் கொடுப்பதில்லை. கிணற்றிலே கல்லைப் போட்ட மாதிரி இருக்கிறார்கள். புகார் கொடுத்தவர்தான் பயப்படுகிற சூழ்நிலை இருக்கிறது.

இது போன்று திருச்செந்தூர் எம்.எல்.ஏ. அவர்கள் கூட சாராயம் காய்ச்சப்படுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். இது மாதிரி எல்லாம் இருக்கக்கூடிய காரியங்களில் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் யாருடைய ஆட்சியிலே நடக்கிறது? எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய நம்முடைய முதலமைச்சரவர்களின் ஆட்சியில் இது நடந்துகொண்டிருக்கிறது. நான் முதலமைச்சர் என்றுகூறும்போது அவருக்குக் கொஞ்சம் என்னைப் பற்றித் தெரியாது என்பதையும் சொல்லிக் கொள்ள

விரும்புகிறேன். ஒரு நாள் திடீரென்று அவர் பக்கத்திலே இருப்பவரிடம் இவர் யார் என்று என்னைப்பற்றி விசாரித்துக் தெரிந்து கொள்ள நினைத்தார். அவருக்குதெரிந்து இருக்கும்அளவுக்கு நான் பெரிய மனிதன் அல்ல. ஏனென்றால் நான் சின்ன வயதிலே இருந்து அரசியலுக்கு வந்ததால்தான் தெரியாமல் இருந்திருக்கிறது. ஆனால் அவரைப்பற்றியும் எனக்குத் தெரியாது பூரணமாக. காரணம் நான் சினிமா பார்த்தது இல்லை. முதலமைச்சர் மீது எதுவும் நான் தவறாகச் சொல்லவில்லை. என்னுடைய பேரனுக்கு முதலமைச்சரைப் பற்றி எதுவும் தவறாகச் சொல்லக்கூடாது. தவறு இருந்தால் சொல்ல வேண்டும். அதைச் சொல்வதற்காகத்தானே இந்த மன்றத்தில் நாம் வந்திருக்கிறோம். அந்தக் கட்சியிலே இருக்கக்கூடிய நீங்களே சொல்கிறீர்களே.

[முற்பகல் 10-50.]

நாங்கள் எழுதினோம், முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தோம், நாங்கள் எஸ். பி.யிடம் சொன்னோம், டி.ஐ.ஜி.யிடம் சொன்னோம், ஆனால் நடவடிக்கைகளைக் காணோம், மீண்டும் எங்கள் மேல் பாய்கிறார்கள் போலீஸ் அதிகாரிகள் என்று முதல் அமைச்சர் அவர்களின் திட்டத்தைப் பாராட்டிவிட்டு அவர்களுடைய ஆட்சியில் என்ன நடக்கின்றன என்பதைப் பற்றி எங்களைவிட அதிகமாக விமர்சிக்கிறார்கள். ஏன் அப்படி நடக்கிறது என்றால் முதல் அமைச்சர் அவர்களின் உத்தரவு சரியாக இருக்கிறதா என்பதுதான். இங்கேதான் ஆரம்பம். சட்டம் யார் கையில் இருக்கிறதோ, சட்டத்தை யார் கையாள்கிறார்களோ அங்கே தான் நல்லதும் கெட்டதும் பிறக்கிறது. பாரதி சொன்னான் "பேயரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று. ஆட்சி செய்கிறவர்கள் யாரோ அவர்களின் எண்ணங்கள், சிந்தனைகள் எவையோ அவை நடந்து விடும்.

ஆகவே எந்தக் காரியத்தைச் செய்தாலும் திடச்சித்தத்தோடு போலீஸ் அதிகாரிகளை நம்பி விட்டுவிடுங்கள். சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கட்டும் என்று விட்டு விடுங்கள். அப்படிச் செய்தால் சாராயம் காய்ச்சுபவன் எங்கேயாவது இருப்பானா. இந்த நாட்டிலுள்ள போலீஸ் அதிகாரிகள் கோழைகள் அல்ல. மிகவும் அருமையான அதிகாரிகள். ஆனால் அவர்களின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நெல்லைக் கடத்துகிறார்கள். போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இரகசியமாக இந்த நம்பர் வந்தால் விட்டுவிடு, இந்த லாரியை விட்டுவிடு என்றால் அவன் என்ன பண்ணுவான்? இது அங்கிருந்து வந்த உத்தரவு என்று சொல்வார். அந்த லாரியும் போகட்டும் என்று விட்டு விடுவார்கள், அதோடு இன்னொரு லாரியும் போகட்டும் என்று

விட்டுவிடுவார்கள். ஆகவே நான் சொல்வது, யாராக இருந்தாலும் சரி, எந்த ஆளாக இருந்தாலும் சரி, நண்பனாக இருந்தாலும் சரி, உடன் பிறந்தவனாக இருந்தாலும் சரி— மனுநீதிச் சோழன் பற்றி பேசுகிறோம், பொற்கைப் பாண்டியன் பற்றி பேசுகிறோம், இதிகாசங்கள் பற்றி பேசுகிறோம்— காவல் துறையினர் தங்கள் கடமைகளை தைரியமாக நிறைவேற்ற வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

என் தொகுதி பற்றி கொஞ்சம் சொல்ல வேண்டும் அல்லவா? என் தொகுதி சாத்தான்குளம். அது மிக, மிக பின்தங்கிய தொகுதி. கிராமப்புறம், அங்கே ஒரு தீயணைப்புப் படை இருந்தால் நல்லது. எல்லாம் ஓலை வீடுகள். பட்டிணங்களை விட தீ பிடிப்பது அங்கு அதிகம். அங்கு தீ பிடித்தால் தீ பிடித்த இடங்களைக் கணக்கு எடுத்து போக வண்டி வருகிறதே தவிர தீ எரிகிறபோது வண்டி வருகிற வாய்ப்பில்லை. அங்கு போலீஸ் ஸ்டேஷன்கள் தூரத்தில் உள்ளன.

என் தொகுதியில் சேராகுளம் என்ற இடத்தில் ஒரு அவுட் போஸ்ட் இருந்தது. இப்போது அது எடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஒரு போலீஸ் ஸ்டேஷனாக ஆக்கித் தரவேண்டும்.

குரும்பூரிலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் அமைத்துத் தரவேண்டும். குமரி மாவட்டத்தில் புதுக்கரையில் ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என்று சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நல்லவை எவையோ அவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும். உங்கள் எண்ணம், சிந்தனை எல்லாம் 24 மணி நேரமும் நாட்டு மக்கள் மீது இருக்குமானால் நிச்சயமாக நாட்டு மக்களின் மானம் மரியாதை காக்கப்படும், கடமையைச் செய்யவில்லை என்றால் எல்லாம் போய்விடும். ஆகவே நான் முதல் அமைச்சர் அவர்களை மறுமுறையும் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். ஜெய்ஹிந்த்.

*திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்பு பெற்றமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டு மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்கும் இன்றைக்கு பணிபுரியும் காவல் துறையாளர்கள் மக்களைக் காக்கும் தெய்வங்களாக, பாகுபாடற்று, பழிச் சொல்லுக்கு ஆளாக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தைக் கொண்ட இன்றைய முதல் அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எதிர்கட்சியினரை அடக்குவதற்காகத்தான் போலீஸ் துறை பயன்படுத்தப்பட்டது. திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சிக்காரர்களின் காவலனாக போலீஸ்காரர்கள் கட்டாயப் படுத்தப்பட்டார்களே தவிர நாட்டில் நியாயத்திற்கும் நேர்மைக்கும் அவர்களுடைய பணிகள் பயன்படுத்தப்படவில்லை. இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எங்கு நீதி இருக்கிறதோ, எங்கே நியாயம் இருக்கிறதோ அங்கே காவல் துறையினரைக் கடமையாற்ற விட்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். ஆண்டாண்டு தோறும் கடுமையாக நடந்து பழக்கப்பட்ட காவல் துறையாளர்கள் இன்று பொது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் சில நேரங்களில் அந்தக் கொடுமை உணர்வைக் காட்டுகிற காரணத்தால் போலீஸ் துறையினரிடம் மனமாற்றம் வரவேண்டும். அந்த மனமாற்றம் போலீசுக்கு வரச் செய்ய வேண்டும் என்று நமது புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு வசதியாக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற நேரத்தில் அவர்களுடைய பயிற்சி முடிந்ததற்குப் பிறகு 'மாறல் ஸயன்ஸ்'ஸை (Moral Science) கற்று கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புகார்கள் கொடுக்கின்ற நேரத்தில் இது நியாயத்திற்கு அடிப்படையானது, அல்லது நியாயமில்லை என்பதை பார்க்காமல் புகார்கள் நிராகரிக்கப்படுகின்றன என்றும், சில ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்றும் சொல்லப்படுவதால், குற்றச்சாட்டுகள் வருகின்ற நேரத்தில், குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்யும் போது, அதற்குரிய பொறுப்பை போலீசாரிடமிருந்து பெற்று டைரக்டர் ஆப் பப்ளிக் பிராசிக்கியூஷன் என்று அப்பாயின்ட்மென்ட் பண்ண வேண்டும். அவர்கள் மூலமாக பப்ளிக் பிராசிக்யூட்டர் ஆலோசித்து சார்ஜ் ஷீட் போடலாமா போடக் கூடாதா என்று யோசிக்கின்ற நிலைமை வர வேண்டும் என்பதை—இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருக்கின்ற முறையை ஆதாரமாக வைத்து— தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்று இங்கு ஆரம்பத்தில் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள், இந்த நாட்டில் சாராயம் நதி போல் ஓடுகிறது, அதற்குக் காரணமாக இருக்கின்ற மாவீரன் யார் என்றும் கேட்டார். குருபாத சாராய டின்களுக்கு ஏகபோக முதலாளி ஆற்காட்டு வீரனாக இருந்தாலும் சரி, அந்த சாராய நதியில் சுந்தரமாக நீச்சலடித்துக் கொண்டிருக்கும் வீரன் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் ஒதுக்கியடிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.*

[திரு. மி. வின்சென்ட்] [1978 மார்ச் 16

இந்த சாராய ஒழிப்புக்கு இரண்டு யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரணமாக சாராயம் வடிக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, விற்பனை செய்கின்றவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரம் ரூபாய் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. இப்படிப் பட்டவர்களைக் கண்டுபிடித்து கோர்ட்டுகளில் வழக்கு போடும் போது கோர்ட்டுகளில் அபராதம் விதிக்கப்படுமானால் அந்த அபராதத்தை கட்டிக் கொண்டு, திரும்பியும் வந்து சாராயம் வடிக்கின்ற, அல்லது விற்பனை செய்கின்ற தொழிலில் ஈடுபட்டு விடுகிறார்கள். ஆகவே நான் கூறுவது இப்படிப்பட்டவர்களுக்கு ஜாமீன் கொடுக்கக்கூடாது. அவர்களுக்குத் தண்டனை மட்டுமே கொடுக்க வேண்டும். அபராதம் மட்டும் விதித்துக் கட்டிவிட்டு அவர்களை விட்டுவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாக்-அப்பில் இறந்தவர்களைப்பற்றி விசாரணை எங்கே என்று மிகுந்த கோபாவேசத்தோடு கேட்டார்கள். நான் கேட்க விரும்புவது, 1972-ல் 8 பேர்கள் இறந்தார்களே அவர்களைப் பற்றிய விசாரணை எங்கே? 1973-ல் லாக்-அப்பில் 15 பேர்கள் இறந்தார்கள், விசாரணை வைத்தார்களா? 1974-ல் 15 பேர்கள் லாக்-அப்பில் இறந்தார்கள். விசாரணை வைக்க மறந்தது ஏன்? 1975-ம் ஆண்டு 20 பேர்கள் இறந்தார்கள். அவர்களுக்கு நீங்கள் ஏன் முன்னால் விசாரணை வைக்கவில்லை ?

தமிழ் நாட்டுக் காவல் துறையைப்பற்றித் தரப்பட்டிருக்கும் ஆய்வுரை 'சினிமா பாட்டுப் புத்தகம்' போல் இருக்கின்றது என்று சொன்னது அதை பார்த்து நொந்து-நைந்து போன உள்ளத்தைத் தான் எடுத்துக் காட்டியது. ஆய்வுரைக்கும் சினிமா பாட்டுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை அவர் தெரிந்து கொள்ளவில்லையென்றால், உடனடியாகக் கண்ணாடி போட்டுக் கொள்வது அவசியமும் அவசரமானதும் முக்கியமானதும் கூட என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். . . .

திரு. ஏ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் வின்சென்ட் அவர்கள் திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் லாக்-அப்பில் எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற எண்ணிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் ஆதாரத்தோடு சொல்ல முடியுமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

1978 மார்ச் 16]

திரு. மி. வின்சென்ட் : நான் எப்போதும் ஆதாரத்தோடுதான் பேசுவேன். ஆதாரம் தருவதாகச் சொல்லிவிட்டு, நாளையதினம் ''என்னிடம் ஆதாரம் கேட்பதற்கு என்ன சட்ட விதிகள் இருக்கின்றன''? என்று கேட்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : ஒவ்வொரு ஆண்டும் இத்தனைபேர் லாக் அப்பில் இறந்தார்கள் என்று அருமை நண்பர் வின்சென்ட் அவர்கள் சொன்னார்கள். அதற்கான ஆதாரத்தை இப்போது சபையில் வைக்க முடியுமா என்று கேட்கிறேன். . . .

திரு. மி. வின்சென்ட் : இப்போது ஆதாரத்தை சபையில் வைக்க வேண்டும் என்று நீங்கள் கேட்க முடியாது. பேரவை துணைத் தலைவர் ஆணையிட்டால் ஆதாரத்தை வைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பேசும் போது, தலைவரோடு தொடர்புகொண்டு பேசுவது நல்லது என்றும், இவர் யார், அவர் யார் என்றெல்லாம் பேசவேண்டாம் என்றும் தாங்கள் உறுப்பினர்களுக்குக் கட்டளையிடும்படி அல்லது கேட்டுக்கொள்ளும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11·00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒருவர் பேசும் போது ஆதாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்பது விதியிலேயும் இல்லை ; மரபும் அல்ல. ஒவ்வொருவரும் பேசும்போது, அவரை ஆதாரத்தைக் கொடுத்துத்தான் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டே இருந்தால், அதற்கு முடிவே இருக்காது. அப்படி விதியிலும் இல்லை ; மரபும் அல்ல. ஆகவே, விதியைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : தாங்கள் இதைப்பற்றி தீர்ப்புந் தர வேண்டும், அவர் ஆதாரம் தருவதாகச் சொல்லியிருக்கிறார். இதை ஏற்றுக்கொண்டு, அது குறித்து அவர் சொல்கிற தகவல்களைக் கணக்கெடுத்து, எந்தெந்த லாக்கப்பிலே எத்தனை எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற விவரத்தைத் தரவேண்டும். இதிலே தாங்கள் தீர்ப்பு தரவேண்டும். ஆதாரங்களுக்கு பயந்து ஓட மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். ஆதாரம் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : அப்படியானால், தாங்கள் தீர்ப்புக் கொடுங்கள் ; ரூலிங் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதாரம் இருக்கிறது என்றால் கொடுங்கள். இதே முறையைப் பின்பற்றினால் யாரும் பேசவே முடியாது. பேச ஆரம்பித்த உடனேயே அதற்கு ஆதாரம் கொடுங்கள் என்று இன்னொருவர் கேட்பதென்றால், ஒவ்வொரு உருப்பினரும் இப்படி வரிசையாகக் கேட்டுக்கொண்டே இருந்தால், அதற்கு ஒரு முடிவில்லாமல், வரம்பு இல்லாமல் போய் விடும். யாரும், எதையும் பேச முடியாது.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் பேசுவதை, அளவுக்கு மீறி அனுமதிப்பது தலைவர் அவர்களுக்கு நியாயமல்ல. அது நியாயமல்ல என்று நான் சொல்லும்போது, தலைவர் அவர்களுடைய உரிமையில் குறுக்கிட வேண்டுமென்று நான் கருத மாட்டேன். ஆதாரம் இருந்து பேசுவது என்பது, ஒரு கட்டுப்பாட்டு அடிப்படையில், ஒரு வரையறைக்குள் உட்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவது நலமாக இருக்கும். தயவு செய்து நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் தெரிவித்திருக்கின்ற இந்தக் கணக்கைப்பெற்று, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதாரம் இல்லாமல் பேச வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆதாரத்தோடு பேசினால் உதவியாக இருக்கும். பிரச்னை இருக்காது. நான் அவரிடம் தகவல் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாணவர்கள் பற்றி நேற்று பேசப்பட்டது. ஆனால் மாணவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதற்கு இங்கே சாட்சியங்களாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் உண்டு: கொடுவாள் கொண்டு தாக்கப்பட்டு, தசைகள்

தொங்க, மண்டைக் கபாலங்கள் பிளக்கப்பட்டு, முறிக்கப்பட்ட கைகளையும், கால்களையும் கைகளிலே ஏந்தி, மாணவர் பாலசுந்தரம் போன்றவர்களை தோளிலே சுமந்து எத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

(முற்பகல் 11-10)

நாங்கள் உரிமைகள் கேட்ட நேரத்தில், மாணவர்கள் கூட்டத்தினர் எத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர் தெரியுமா ? சைக்கிள் செயினால் அடித்தார்கள் அனாவசியமாக கைது செய்யப்பட்டு மாணவர்களை எல்லாம் சென்ட்ரல் ஜெயிலிலே அடைத்தார்கள்.

அந்த நேரத்திலும் நாங்கள் திராவிட முன்னேற்றக்கழக அரசைக் கேட்டோம், எங்கள் எழுச்சி நியாயமானது, ஒரு பப்ளிக் என்கொயரி வைத்தாக வேண்டும் என்று. கமிஷன் ஆப் என்கொயரி ஆக்டின்கீழ் ஒரு பப்ளிக் என்கொயரி வைக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், நாங்கள் உதாசீனப்படுத்தப்பட்டோம். உணர்ச்சி வசப்பட்ட மாணவர்களின் எழுச்சி நியாயமானதுஎன்று எடுத்து இயம்புவதற்குத் தயாராகிவிட்ட பிறகு, சட்டமன்ற உறுப்பினர்களும் தட்டிக் கேட்பதற்கு வந்த பிறகுதான் அவர்கள் ஒரு ஜுடிஷியல் என்கொயரியை வைத்தார்கள்.

நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இதற்குப் பின்னால் ஒரு நிகழ்ச்சி நடந்தது. மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தபோது, ஒரு சம்பவம் நடந்தது. எங்கள் புரட்சித் தலைவர் இரண்டு மணி நேரத்திற்குள் கமிஷன் ஆப் என்கொயரி ஆக்டின் கீழ் பப்ளிக் என்கொயரி ஆக்டின்கீழ் சோமசுந்தரம் கமிஷனை வைத்தார்கள். சட்ட மன்றத்திலே அந்தத் தரப்பிலே உள்ளவர்களுக்கு இதெல்லாம் தெரியும். மாணவர்கள் பழிவாங்கப்பட்டார்கள். மாணவர்கள்மேல் இந்த அரசுக்கு அக்கறையில்லை, அவர்களை உதாசீனப்படுத்துகிறது என்றெல்லாம் நீங்கள் பேசக்கூடாது. அப்படிப்பேசுவது தவறு. வாயை அடக்கிப் பேச வேண்டும் இல்லையென்றால் உண்மையான சாட்சியங்கள் உங்கள் வாயை அடைப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

முன்னாள் முதல்வரைப் பற்றி ஒரு வேதனை தரக்கூடிய செய்தியை இங்கே தர விரும்புகிறேன். இரக்கம் இல்லாமல், தயக்கம் காட்டாமல், ஏழையின் வரிப்பணத்தை சூறையாடிய நிலை

யைப் பற்றி நான் சொல்கிறேன். காவல் துறையிலே ஸ்பெஷல் ரிவார்டு பண்டு என்ற பண்டு இருக்கிறது. ரகசிய விசாரணைக்கு, போலீசாருக்கு தகவல் கொடுப்பதற்காக ஒத்துழைப்பவர்களுக்கு அளிக்கப்படும் தொகைதான் அது. அந்தத் தொகைக்குக் கணக்கு எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் ***

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் ** என்ற பிரச்னை பற்றிய பேச்சிற்கான ஆதாரங்களை நான் நன்றாகப் பரிசீலனை செய்து தீர்ப்புச் சொல்லும் வரையிலும் அதனை வெளியிட வேண்டாமென்று தீர்ப்பு அளிக்கிறேன், அடுத்து அவர் வேறு பிரச்னையைப் பற்றிப் பேச ஆரம்பிக்கலாம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றுமில்லை, உட்காருங்கள். நாஞ்சில் வின்சென்ட் அவர்கள் இரண்டு நிமிடங்களில் முடிக்க வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நேற்றையதினம் பேசப்பட்டது. 1969-70-இல் மாண்புமிகு முன்னாள் முதல்வரவர்கள் பேசிய நேரத்தில், 'துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்துவதைப்பற்றிப் பேசப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்வரையில் ஏழெட்டு நிகழ்ச்சிகள் குடிகாரர்களைக் பிடிக்கப் போனபோதும், கள்வர்களைக் கைது செய்யப்போனபோதும் நெருக்கடி நிலைமையின் காரணமாக ஏற்பட்டவை. இரண்டொன்றுதான் விவசாயிகளின் கிளர்ச்சியின்போது ஏற்பட்ட தொல்லைகளினால் உண்டானவை. நான் இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. துப்பாக்கிப் பிரயோகத்தைப் பொறுத்தவரையில் 'ஷூட் டு கில்' என்ற கொள்கைதான் கடைப்பிடிக்கப்படுகிறது. சுடுவதற்கு முன் கண்ணீர்ப் புகை, தடியடிப் பிரயோகம் முதலியவைகளையெல்லாம் பயன்படுத்திய பிறகுதான் இது கையாளப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தை, கலவரத்தை அடக்க முடியவில்லையென்றால், எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்ட பின்னர்தான் கடைசிக் கட்டமாக நடத்தப்பட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். 'ஷூட் டு கில்' 'கொல்வதற்குச் சுடு' என்பதை மாற்றி, 'திறமையற்றவனாக ஆக்குவதற்குச் சுடு' என்பதையும் கடைசி முயற்சியாகத்தான் கொள்ளவேண்டும். அப்படிச் சுடும்போது, உயி

* 1978-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் நாள் அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணையிட்டதற்கிணங்க 11.04 முதல் 11.14 வரை தகுதிகள் அகற்றப்பெற்றன.

ரிழப்பு ஏற்படுமானால் போலீஸ் அதற்குப் பொறுப்பு அல்ல. இப்படிப்பட்ட நேரத்தில் சிலர் உயிர் இழந்தால் அதற்குப் போலீஸ் பொறுப்பாளி அல்ல.'' என்று மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் அப்பொழுது பேசியிருக்கிறார்கள். 1971ஆம் ஆண்டிலே துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. அதை அவர்கள் மறக்கக் கூடாது. 1972ஆம் ஆண்டிலேயும் திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம் போன்ற இடங்களில் நடந்து 14 பேர் மாண்டிருக்கிறார்கள். அதையும் அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். 1973ஆம் ஆண்டிலேயும் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. 1974ஆம் ஆண்டில் 6 முறை நடந்திருக்கிறது. 1975-இல் 7 பேர் மாண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கூறி நான் தெரிவித்துக் கொள்வது. இன்றையதினம் புரட்சித் தலைவர் அவர்கள் இவைகளையெல்லாம் உணர்ந்து கொண்டு ஒரு நல்லாட்சியைச் செய்கிறார்கள், அவர்கள் தலைமையின்கீழ் காவல்துறை நற்பணி ஆற்றி வருகிறது என்பதைத் தெரிவித்து நான் விடைபெறுகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-20)

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, மிக முக்கியமான ஒரு துறையாக விளங்கக்கூடிய இந்தக் காவல் துறையைப் பற்றி, அதனுடைய செயல்பாடுகளைப் பற்றி, அவையிலே வைத்திருக்கிற அறிக்கைகளையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

எந்தக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்தாலும் காவல் துறையைக் கண்டிப்பதும், எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும், அவர்களுடைய செயலாக்கத்தை முறைப்படுத்துவதும் ஒரு முறையாகவும் மரபாகவும் இருந்து வருவதை நாம் நன்றாக அறிவோம். அது யாருக்கும் விதி விலக்கு அல்ல. வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றைக்கிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரை இதுதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

அதிலிருந்து ஒன்று தெரிய வருகிறது. என்ன தெரிய வருகிறதென்றால், காவல் துறையினரை, இவர்கள் இப்படிப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பது இதிலேயிருந்து தெரியவருகிறது. அதற்குக் காரணம், காவல் துறையல்ல. நாம் எப்படி அந்த முறையை மாற்றாமல் இருந்து வருகிறோம் என்பதுதான் கவனிக்கத்தக்கது.

[1978 மார்ச் 16

[திரு. க. சுப்பு]

வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காலத்தில், காவல் துறையினரை, தங்கள் ஏஜெண்டுகளாக வைத்திருந்தான். நில வருவாயை வசூலிக்கின்ற ஏஜெண்டுகளாக வைத்திருந்தான்.

அதே போல், ஜமீந்தார்கள் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு வேண்டுமென்ற முறையிலேதான் தங்கள், ஏஜெண்டுகளாக காவல் துறையினரை வைத்திருந்தார்கள். இந்த நாட்டு மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவோ, நாட்டு மக்கள் உடமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவோ அமைக்கப்பட்டது அல்ல காவல் துறை.

அதிலும், அவன் இரண்டு முறையைக் கையாண்டான். இங்கிலாந்திலே இருக்கின்ற போலீஸ் முறை வேறு. இந்திய நாட்டிலே அவர்கள் வைத்திருந்த போலீஸ் முறை வேறு. அங்கே போலீஸ்காரர்கள் என்றால் மக்கள் விரும்புகிறார்கள், மக்கள் நம்புகிறார்கள். அப்படிப்பட்ட அமைப்புகளை அங்கே வைத்தார்கள். ஆனால், இந்தியாவிலே, 6,000 மைல்களுக்கப்பாலிருந்துகொண்டு ஆள வேண்டுமென்பதற்காக, இங்கே நமக்குள்ளேயே ரெக்ரூட்மென்ட் செய்து, யார் என்று பார்க்காமல், அடி என்றால், அடிக்கிற ஆளாக நியமித்தால்தான், shoot to kill. வதைப்பது, சிறையிலே போடுவது, அடிப்பது, இப்படியே சொல்லிக் கொண்டு தங்கள் கடமையை ஆற்ற வேண்டுமென்றுதான் அந்த நிலைமைதான் இருந்து வருகிறது.

அதிலே, நமக்குள்ளே வீண் சண்டை போட்டுக்கொண்டு நாம் இருக்கும்போது நடப்பதானாலும், நீங்கள் இருக்கும்போது நடப்பதானாலும், என்று சொல்லிக் கொண்டிருப்பதால், மக்களுக்கு நன்மை ஏற்படுமா என்பதைப் பார்க்கவேண்டும். எல்லோருக்கும் உகந்தவர்களாக அவர்கள் இருக்கவேண்டுமென்று சொல்லும்போது, அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேறுபாடு இருப்பதாகச் சொல்ல முடியாது. உண்மையிலே, காவலர்களை மக்களுடைய நண்பர்களாக ஆக்குவதற்கு, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்களாகச் செயலாற்றுவதற்கு என்ன செய்யவேண்டுமென்பதைச் சிந்திக்கவேண்டும்.

இன்றைக்குக் கூட 'நேஷனல் லெவலில்' போலீஸ் கமிஷன் போட்டிருக்கிறார்கள். அந்த கமிஷனுடைய பரிந்துரைகள் வர இருக்கின்றன. அதுபோல், நம்முடைய மாநிலத்திலும் போலீஸ் கமிஷன் போடலாம். இங்கே சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள் அனைத்தும் இப்பொழுது இலாகாவினால் விசாரணை செய்யப்படுவதில்லை, வழக்கு போடப்படுவதில்லை, இலஞ்சம் அதிகமாக ஆகிவிட்டது என்ற நிலை இப்பொழுது

1978 மார்ச் 16]

[திரு. க. சுப்பு]

இருக்கிறது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, முதலமைச்சர் சொன்னார், அதிகாரிகள் ஊழலுக்கு சாதகமாக இருக்கிறார்கள் என்று டெல்லியில் சொல்லிவிட்டு வந்திருக்கிறார். இதற்கு என்ன அர்த்தம்? இதைக் கொள்கையாக வைத்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

இவைகளையெல்லாம் மொத்தமாகப் பார்க்கும்போது, காவல் துறை முழுக்க, முழுக்க, பொறுப்பு வாய்ந்த துறையாக இருக்க வேண்டும். ஆனால் இலஞ்சம் வாங்குவது, இலஞ்சம் கேட்பது இரண்டும் நடைபெறுகிறதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறோம். காவல் துறையிலேதான் இதுவும் நடைபெறுகிறது. இலஞ்சம் வாங்குவது, கேட்பது காவல் துறையினர். இலஞ்சம் கொடுப்பது பொதுமக்கள்தான். இலஞ்சம் கொடுப்பதும் குற்றம். இலஞ்சம் வாங்குவதும் குற்றம் என்று சொல்கிறோம். அது சட்டப்படி குற்றம். ஆனால் யார் வந்து புகார் கொடுப்பார்கள்? சாட்சியை வைத்துக் கொண்டு யார் இலஞ்சம் கொடுப்பார்கள்? சாட்சியை வைத்துக் கொண்டா இலஞ்சம் வாங்குவார்கள்?

ஆகவே, சட்டம் இருக்கிறது, புகார் இருக்கும், வழக்குகளும் இருக்கும். ரெயில் தண்டவாளம் மாதிரி, அது எங்கும் சந்திக்காமல் போய்க் கொண்டேதானிருக்கும். இவற்றை எல்லாம் ஆராய்ந்து பார்த்து பொது மக்களுக்கு உயர்ந்த முறையில் பணியாற்றுகின்ற ஒரு துறையாக இதை மாற்றியமைக்க வேண்டும். எதிரிகளை யார், யாருக்கெல்லாம் பிடிக்கவில்லையோ, அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பது, நேற்று உயர்ந்த பதவிகளில் இருந்தவர்களை எல்லாம் பதவி இறக்கம் செய்வது என்ற நிலைமை எல்லாம் இருப்பது சரியல்ல.

போலீஸ் காவல் நிலையங்களில் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று சொன்னால், கொல்லப்படுவது சரியல்ல என்று சொல்வதற்குப் பதிலாக, கணக்கெடுத்து, 1972-லேயிருந்து கணக்கெடுத்து இத்தனை பேர் இறந்தார்கள் என்று சொல்வது சரியா? அதற்கு முன்னால் யாரும் சாகவில்லையா? எல்லாம் செத்துக் கொண்டுதானிருந்தார்கள். யார் செத்தாலும், காவல் நிலையங்களில் செத்தால் தப்புதான். அதற்காக விசாரிக்க அதிகாரி இருக்கிறார், மந்திரி இருக்கிறார் என்ற நிலையில் எப்படி சாகடிக்கப்பட்டார் என்று கவனிக்க வேண்டாமா?

சாகடிப்பது அநியாயம் என்று எல்லோரும் ஒத்துக் கொண்டோம். அப்பொழுது சாகவில்லையா, என்றால், அப்பொழுது கேட்பதுதானே? யார் வேண்டாமென்றது? அப்பொழுது சட்டமன்றம் செத்து விட்டது என்று உங்களை யார் போகச்

சொன்னார்கள்? இப்பொழுது எப்படி உயிர் வந்தது? திடீர் திடீரென்று செத்துப் பிழைக்கிறார்களே? அப்பொழுது மௌனமாக இருந்துவிட்டு, அல்லது உடந்தையாக இருந்துவிட்டு, இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது மற்ற கட்சிகள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுக்களை நீங்கள் சொல்கிறீர்கள்.

காரைக்குடி சம்பவத்தைப் பற்றி பெரியவர் சொன்னார். இதிலே எப்படி தவறுக்கு வழி வகுக்கிறார்கள் என்றால், அரிசனங்களை எப்படி நடத்துகிறார்கள்? ஒரு பெண்மணி காவல் நிலையத்திலே கற்பழிக்கப்பட்டார். இதுதான் விவகாரம். நம்முடைய அவை முன்னவர் வழக்கமான பதிலைச் சொல்கிறார். அந்த அதிகாரி மீது 354-வது செக்ஷன்படி வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று. 354-வது செக்ஷன் என்பது மானபங்கப்படுத்துவது. அதற்கு 2 ஆண்டுகள்தான் தண்டனை. கற்பழிப்புக்கு செக்ஷன் 376. அதாவது, ரேப் கேஸுக்கு செக்ஷன் 376. அதற்கு ஆயுள் தண்டனை கொடுக்க வேண்டும். இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாது என்றால், சொல்லுங்கள். அவர்கள் மோசடி பண்ணுகிறார்கள். 376-வது செக்ஷன் என்றால், ஜாமீனில் வரமுடியாது. அதற்கு ஆயுள் தண்டனை. கற்பழிப்பு வழக்கு என்று சொல்லிவிட்டு, இங்கே மந்திரி சொல்கிறார், 354-வது செக்ஷனிலே வழக்குப் போடுகிறார்கள் என்று. இதற்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு விவரம் தெரியவில்லை என்று அர்த்தம்? உங்களை மிஸ்லீட் பண்ணி இருக்க வேண்டும். சட்டசபையை தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

ஒருவரை சிறையில் அடைத்திருக்கிறார்கள் நக்சல்பாரி என்று. அவரை மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் உத்தரவு போட்டும் கூட விடுதலை செய்ய மறுக்கிறார்கள். 30 மாதம் தண்டனை அளித்திருக்கிறார்கள். காரணம் என்ன என்றால் அவர் ஒரு காவல் துறை அதிகாரியை அடித்துவிட்டார். காவல் துறை அதிகாரி கற்பழித்துவிட்டால் அவருக்கு ஒரு நீதி. மற்றவர்களுக்கு ஒரு நீதி. இதை எல்லாம் நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி எல்லாம் இல்லாமல் அந்தப் [* * *] இதற்கு என்ன வைத்தியம் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் இதற்கு வழி என்ன? சென்ற அரசாங்கம் செய்த செயல்களை எல்லாம் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. இதற்கு வழிகாண வேண்டாமா? எனவே இதைத் தீர்ப்பதற்கு நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

காவல் துறையினருக்கு இன்றைக்கு இருக்கக்கூடிய சிரமங்கள் எனக்குத்தெரியும். 47 ஆயிரம் பேர்களை வைத்துக் கொண்டு 6 கோடி மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11–25 —11.30 இல் சில சொற்கள் அகற்றப்பட்டன.

எந்தப் பேராட்டம் நடந்தாலும் கிரிமினல் மாதிரி நீங்கள் கருதுகிறீர்கள். உதாரணமாக நில மீட்சிப் போராட்டம். இது கிரிமினல் என்கிறார்கள். அகில இந்தியாவிலும் நடந்த போராட்டம். கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போராட்டம். அது கூட சர்க்காருக்கு எதிரான போராட்டம் என்று கருதப்பட்டது. ஆனால் தெளிவுபடுத்திய பின்னர் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதே போல இன்றைக்கு போராட்டம் வந்திருக்கிறது என்று சொன்னால் ஆசிரியர்கள் போராட்டம், மின்சார ஊழியர்கள் போராட்டம், தொழிலாளர் போராட்டம் போன்ற போராட்டங்கள் மீதெல்லாம் கிரிமினல் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறீர்கள். பேராசிரியர்கள் போராட்டம் நடத்தினால் அந்தப் பேராசிரியரை அழைத்துச் சென்று அவர்கள் கழுத்தில் உள்ள தாலியை அறுப்பதா? தாலியை அறுக்க வேண்டும் என்று எந்த விதி சொல்கிறது? சட்டமன்ற மேலவை உறுப்பினர் தமிழரசி கழுத்தில் இருந்த தாலியை அறுத்தார்கள். கேட்டால் கயிறு இருக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். கயிருக்கும் தாலிக்கும் வித்தியாசம் தெரியாதா, புடலங்காயும், விரியன் பாம்பும் ஒன்றா, விரியனைப் பிடித்துத் தொங்குவீர்களா.

இதைப்பற்றி கேட்டால் உடனே சில திருடன், அது இது என்று சொல்வதா, என்னய்யா இது '' டிட் பார் டேட்டா ''? எப்படி மக்களுக்குப் பணி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால், இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்.

அதே மாதிரி, விருகம்பாக்கத்திலே போலிஸ் ஸ்டேஷனிலே 2 பேர்கள் சாராயம் கடத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், இந்த 2 பேர்களும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் சிறையிலே அடைக்கப்பட்டவர்கள். அவர்கள் இரண்டு பேர்களுமே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொன்னார்கள்.

கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்கள் எல்லா கட்சிகளுக்கும் வேண்டியவர்களாக இருப்பார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டியவர்களாக இருந்தார்கள். இப்போது உங்களுக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

சமூக விரோதிகள் யார் என்றால் மிகப் பெரிய சாமர்த்தியசாலிகள் என்று அர்த்தம். அவர்களுடைய சாமர்த்தியம் எப்படி நாட்டுக்குப் பயன்படாமல் இருப்பது. அதைக் கண்டுபிடிப்பது உங்களுடைய சாமர்த்தியம்.

முதல் அமைச்சர் சொல்கிறார். லஞ்சம் கூடாது, சாராயம் கூடாது என்று. அவருடைய உணர்வை நான் பாராட்டுகிறேன். நான் சந்தேகப்படவில்லை. அவர் உண்மையான நோக்கத்தோடு

[திரு. க. சுப்பு]

தான் சொல்கிறார். கடவுள்கூட இல்லை, ஆனால் சாராயம் இருக்கிறது. அவர் சொன்னார், என்னுடைய கட்சிக்காரர்கள் குடிக்கிறார்களே சாராயம் காய்ச்சுகிறார்களே என்று சொன்னார். அவர்களுடைய கட்சிக்காரர்கள் அவருடைய உணர்வுகளை மதிக்க வேண்டாமா? முதலமைச்சர் சொல்லுகிறாரே என்ற உணர்வே அவர்களுக்குக் கிடையாது. அப்படிப்பட்டவர்கள் அந்தக் கட்சித் தொண்டராக இருக்கவே லாயக்கில்லை. யாராக இருந்தாலும், நானாக இருக்கட்டும் அல்லது நீங்களாக இருக்கட்டும், யாராக இருந்தாலும், முதலமைச்சர் சொல்லிவிட்ட பிறகு, மாவீரனாக இருந்தாலும் அல்லது மாசூரனாக இருந்தாலும், கடத்துகிறான் என்றால் என்ன பொருள்? என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும். இப்படிப்பட்ட ஆளுக்குத்தான் மாவீரன் என்று பட்டம் கொடுப்போம் என்றால், கொடுங்கள். உங்கள் சுதந்திரத்திலே நாங்கள் தலையிட முடியுமா? தலையிட முடியாது.

(முற்பகல் 11-30)

விருகம்பாக்கத்திலே ஒரு வீட்டிலே புகுந்து காலைக் கையைத் தாக்கி நொறுக்கிவிட்டார்கள். ஆஸ்பத்திரியிலே 40 நாட்கள் இருக்கிறார். ஆனால் எந்தவிதமான கேசும் இல்லை. இதுதான் கேஸ். போலீஸ் எஸ். ஐ., டி.எஸ்.பி. எல்லோரும் அதற்கு உடந்தை இன்றைக்கு சாராயம் காய்ச்சுபவர்களுக்கு இருக்கிற இன்ஃபுளுயன்ஸ் போலீஸ் ஸ்டேஷனில் வேறு யாருக்கும் இல்லை. அதுதான் இன்றைக்கு நாட்டிலே இருக்கிற நிலைமை. அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எந்த ஆட்சி வந்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறவர்கள்தான் இன்ஃபுளுயன்ஷியல் பர்சன்ஸ்.

31 ஜனவரி 1976 வரை நாங்கள் ஆட்சியில் இருந்தோம் அடுத்தநாள் என்ன ஆச்சு? அடி, உதை. எங்களுடைய ஆட்சி கிட்டத்தட்ட 9 ஆண்டு காலம் இருந்தது. அதிலே எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 7 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தார்கள். நீங்கள் வந்து 7 மாதம்தான் ஆகியிருக்கிறது. 7 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர் கதி என்ன? அவருடைய அருமை மகன் நிலைமை என்ன ஆச்சு? அவருக்கு எவ்வளவு அக்கிரமம் இழைத்தார்கள்? அவரை ஜெயிலிலே கொண்டுவைத்து, அடித்தார்கள், உதைத்தார்கள். அதைப்போல ஒவ்வொரு செல்லிலும் புகுந்து அடித்தார்கள். 7 ஆண்டுகாலம் முதலமைச்சராக இருந்த கலைஞர் மகனுக்கு இந்த நிலை என்றால் நீங்கள் வந்து 7 மாதம் தான் ஆச்சு; உங்களுக்கு எந்த நிலைமையோ; யார் கண்டார்?

இஸ்மாயில் கமிஷன் வைத்தார்கள். நல்லவேளை, அதை நீங்கள் அமைக்கவில்லை. விசாரணை நடத்தினார்; அறிக்கை கொடுத்தார். அவருடைய அறிக்கை என்ன ஆயிற்று? இது

[திரு. க. சுப்பு]

வரை நடவடிக்கை எடுத்தீர்களா? இல்லை. எடுப்பீர்கள். எப்போது? செத்து, சுடுகாடாகி, சுண்ணாம்பான பின்னால் நடவடிக்கை எடுப்பீர்கள். தவறு செய்தார்களா இல்லையா என்பதை கண்டறிய ஒரு கமிஷன் போட்டார்கள். கமிஷனில் கண்டறிந்த உண்மைகளை வைத்து அறிக்கை கொடுக்கிறார்கள். அறிக்கை கொடுத்தபின்னால் உடனடியாக அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டாமா? எடுக்கிறோம் என்று சொல்வீர்கள்; எப்படி எடுப்பீர்கள்? குற்றவாளிக்கு ப்ரமோஷன் கொடுப்பீர்கள் அவரை ஐ.ஜி. ஆக்குவீர்கள். உங்கள் நடவடிக்கை அப்படித்தான் இருக்கும்.

செங்குன்றத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். அதைப்பற்றி இங்கே கேட்டோம். விசாரணை நடக்கிறது என்று முதலமைச்சர் சொன்னார். விசாரணை நடத்தினார்கள். அது சாதாரண விசாரணை அல்ல; நீதி விசாரணை. போலீஸ் சுட்டது நியாயமா இல்லையா என்று அவர்களையே கேட்டால் அவர்கள் நியாயமில்லை என்றா சொல்வார்கள்? சுட்டது நியாயம்தான் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லச் சொன்னார்கள்; அவர்கள் சொன்னார்கள். சுட்டவருக்கு ப்ரமோஷன் கொடுத்தார்கள் அவரை ஐ.பி.எஸ். ஆக்கினார்கள். இதுதான் விசாரணையின் முடிவு. எங்களை அழைத்திருந்தால் நாங்கள் உண்மைகளைச் சொல்லியிருப்போம்.

அவர்களுக்கு வேண்டிய அதிகாரிக்கு ஐ.பி.எஸ். கொடுத்தார்கள். அதோடு விட்டிருந்தாலாவது பரவாயில்லை. ஆனால் அவருக்கு கீழே பணியாற்றிய சப் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்துவிட்டார்கள். பாவம். எஸ்.ஐ. என்ன செய்வார். அவரா சுடச் சொன்னார் எஸ்.ஐ. தான் சுட்டார் என்றால் கூட அவர் தன்னிச்சையாகவா சுட்டார். எஸ்.பி. சுடச் சொல்லி உத்தரவு போட்டார்; அவர் சுட்டார். சுடுவதற்குக் காரணம் மேலதிகாரி. அவரை விட்டுவிட்டு, அவருக்கு ப்ரமோஷன் கொடுத்துவிட்டு, எஸ்.ஐ.-க்கு சஸ்பென்ஷன் கொடுக்கிறார்கள்.

இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டிலும் அப்படித்தான் செய்யப் போகிறீர்கள். ஒருவரை குற்றவாளி என்று சொல்லியிருக்கிறார். ரிப்போர்ட் வந்து, இதுவரை அவர் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம்? நடவடிக்கை எடுப்போம் என்பீர்கள். எப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பீர்கள்? அவரை ஐ.ஜி. ஆக்குவீர்கள். அதுதான் உங்கள் நடவடிக்கையாக இருக்கும்.

இங்கே கொடுத்திருக்கிற அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? குற்றம் பெருகியிருக்கிறது என்பதற்கு உங்களுடைய காரணம் அவசர காலநிலை ரத்தாகிவிட்டது; அதனால் குற்றம்

[திரு. க. சுப்பு]

பெருகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இதைவிட இந்த ஆட்சிக்கு வெட்கக்கேடு வேறு என்ன வேண்டும்? அவசர காலநிலை ரத்தாகிவிட்டதால் குற்றம் பெருகியிருக்கிறது என்றால், நீங்கள் அவசரகால சட்டத்தை ஆதரிக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம். மீண்டும் அந்தமாதிரியான நிலை நாட்டிலே இருந்தால்தான் குற்றங்கள் நடக்காது என்பதை மறைமுகமாக ஆதரிக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு ஒதுக்கியிருந்த நேரம் முடிகிறது. 15 நிமிடம் கொடுத்திருந்தேன். இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு—எங்களுக்கு உள்ள நேரத்தைக் குறைத்துக்கொள்கிறோம், அவர் பேசட்டும்) அப்படியானால் இன்னும் 7 நிமிடம் கொடுக்கிறேன். அதற்குள் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. க. சுப்பு : மிக்க நன்றி. இப்போதுதான் நான் பிரச்சனைக்கே வந்துகொண்டிருக்கிறேன். அவர்கள் நெருக்கடி கால நிலையை ஆதரிக்கவில்லை என்றால் நெருக்கடிகால அத்து மீறல்களைப்பற்றி இன்றுவரையில் ஒரு ஸ்டேட்மென்ட் கூட விடவில்லையே, அது ஏன்? ஆகவே, நெருக்கடி கால நிலையை அமுல்படுத்தியவர்களுக்கு நீங்கள் உடந்தையாக இருந்தீர்கள், இப்போதும் இருக்கிறீர்கள் என்றுதானே அர்த்தம்.

அத்துமீறல்கள் பற்றி விசாரிக்க அனந்தநாராயணன் கமிட்டி போட்டார்கள். அவர் ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி. அவர் சாட்சியம் அளிப்பதற்காக போலீஸ்காரர்களுக்கு சம்மன்ஸ் அனுப்பினார். சம்மன்ஸ் அனுப்பியும் சாட்சியளிக்க வரவில்லை. போலீஸ்காரர்கள் அச்சமின்றி செயல்படுவார்கள் என்று கூறுகிறீர்கள். இந்த விஷயத்தில், நீதிபதி சம்மன்ஸ் அனுப்பியும் அவர்கள் அச்சமின்றி செயல்படுகின்ற காரணத்தால் சாட்சியமளிக்க வரவில்லை. போலீஸ்காரர்கள் அச்சமின்றி செயல்படுவதால்தான் இன்றைக்கு, அவசரநிலை அகற்றப்பட்டதால் குற்றங்கள் பெருகிவிட்டன என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உங்கள் ஆட்சியில் அப்படித்தான் இருக்கும்; வேறு வழியே கிடையாது.

அதேமாதிரிதான் ஒவ்வொரு துறையிலும் இருக்கிறது. அதனால் போலீசாரைக் குற்றம் சொல்லி பயனில்லை; அது சரியுமல்ல. இப்போது இருக்கிற அமைப்பு அப்படி இருக்கிறது. இன்று நீங்கள் எங்கள்மீது விசாரணை வையுங்கள். நாளை நாங்கள் உங்கள்மீது விசாரணை வைக்கிறோம். இப்போதைக்கு அதை ரிசர்வேஷனில் வைத்துக்கொள்கிறோம். அது ஒருபுறம் இருக்கட்டும்.

[திரு. க. சுப்பு]

மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இந்தத் துறையை எப்படி மாற்றுவது? எப்படிப்பட்ட மாற்றங்களை, என்னென்ன முறைகளில் கொண்டு வரலாம் என்பதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டும்.

மக்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராடுகிறவர்களை குற்றவாளிகளைப் போல கருதக்கூடாது. அப்படிப்பட்டவர்களை அடிப்பது, பிறகு அதையும் நியாயப்படுத்துவது எப்படி சரியானதாகும்? இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருப்பதால் மக்களின் பிரச்சினைக்காக பொறுப்புக்கு வரக்கூடியவர்கள் அச்சப்படுகிறார்கள்.

போலீஸில் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. காவலர்கள் 24 மணி நேரமும் வேலை செய்கிறார்கள். 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு காவலர்களுடைய பணிச்சுமை அதிகரித்திருக்கிறது. இந்த உண்மையை அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். எந்தச் சூழ்நிலையிலும் எந்தச் சுமையையும் சமாளிப்பது போலீஸ் தான். மந்திரி சபை அல்ல. எந்தப் போராட்டம் வந்தாலும் போலீஸ், ஜெயில், மாணவர்கள் போராட்டமென்றாலும் மற்ற எந்தப் போராட்டமாக இருந்தாலும் போலீஸ், ஜெயில்தான். எனவே, போலீசாருக்கு அதிக சுமை இருக்கின்றது. இவ்வளவு சுமை இருப்பதால் அவர்களால் கேஸ்களை ரெஜிஸ்டர் செய்ய முடியவில்லை. ரெஜிஸ்டர் பண்ணுகிற கேஸ்களைக் கூட இன்வெஸ்டிகேஷன் பண்ணுவதில்லை. இவ்வளவு சுமை இருப்பதால் இலாக்காக்களைப் பிரிக்க வேண்டும்.

ஸ்பெஷல் ஆக்ட் இருக்கிறது. இன்டியன் பீனல் கோடின் கீழ் களவு, திருட்டு போன்றவற்றையும் காவலர்கள் கண்காணிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் மட்டும் இருந்தால் லஞ்சம் ஒழிந்து விடுமா? ஆகவே, தனியாக ஏஜென்ஸி போட்டு இவற்றைக் கண்காணிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

பொதுமக்களுடைய இன்வால்வ்மென்ட் இருக்கக்கூடிய வகையில் பொதுமக்களை உள்ளடக்கிய கன்சல்ட்டேட்டிவ் கமிட்டிகள் அமைக்க வேண்டும். பொதுமக்களுக்கும் அட்மினிஸ்டேரஷனுக்கும் இடையே தொடர்பு இருக்கக் கூடிய வகையிலே இவற்றை அமைக்கவேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் இவ்வாறு வெளியிலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் அசெம்பிளிக்கு கொண்டு வந்து எடுத்துச் சொல்வதற்கு நேரம் இருக்காது; இப்படிக் குழு போட்டு காரிய மாற்றும்போது பல பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

[திரு. க. சுப்பு]

போலீஸ் அதிகாரிகள் ரிட்டையர் ஆவதற்கு முன்னால் அறுவடை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதாவது அவர்கள் லஞ்சம் முதலியவைகளில் ஈடுபட வாய்ப்பிருக்கிறது. ஆனால் அவர்களை கம்பல்சரி ரிட்டையர்மென்ட் கொடுத்து வீட்டிற்கு அனுப்பிவிடக்கூடாது. அவர்களை சென்ட்ரி, எஸ்கார்ட் போன்ற இடங்களிலே டூட்டி போட்டுவிட்டுஇளைஞர்களை பொறுப்பான இடத்தில் போட வேண்டும்.

அதுபோன்ற ஸ்பெஷல் ப்ரொகிபிஷன் பிரிவில் தனியாக ஏஜென்சி போட்டு அவற்றைச் செயல் படுத்த வேண்டும். இந்தத் துறையிலே பெண்களை அதிகமாகப் போட வேண்டும். அவர்கள் லஞ்சம் வாங்க மாட்டார்கள். ஆண்கள் லஞ்சம் வாங்கிப் பழகி விட்டார்கள். இனிமேல் அவர்களைத் திருத்த முடியாது. ஆகவே பெண்களைப்போட்டு இது மாதிரிபிரிவுகளை ஏற்படுத்தி லஞ்சத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதுபோன்று சென்னையில் ரஹ்மான்கான் தொகுதியாகிய சேப்பாக்கத்திலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அதாவது ஜிஞ்சர் கடத்திவிட்டார் என்று ஒருவரை கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனிலே அடித்தார்கள். பின்னர் அவரை விட்டு விட்டார்கள். இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன.

இதே மாதிரி கம்பத்திலே ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ரவுடி எலிமென்ட்ஸோடு தொடர்பு கொண்டு பணியாற்றி வருகிறார்கள். இது போன்ற புகார்களை எல்லாம் கொடுத்தால் புகார் கொடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முனைகிறார்கள்.

இதே மாதிரி கரூரிலே இன்ஸ்பெக்டர் சாமியாடி என்ற ராமசாமி இருக்கிறார். அவர் ஏன் சாமியாடிக் கொண்டிருக்கிறார் அவருடைய வீட்டுத் தோட்டத்துக்குப் பக்கத்திலே சாராயம் காய்ச்சி விற்கப்படுகிறது. இது பற்றியும் புகார் கொடுத்தால் சரியான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

அது போன்ற செங்கோட்டையன். அவர் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை எப்படி மதிப்பார். அவர் பற்றிக்கூட புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது பற்றி முதலமைச்சருக்கும் கூட புகார்கள் எல்லாம் எழுதிக் கொடுக்கப்பட்டிருககிறது. அந்த சப் இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[முற்பகல் 11–40]

அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் என்று போட்டு பெட்டிஷன் எழுதியனுப்பியிருக்கிறார்கள். காபி இருக்கிறது. அவர்கள் ஒரு சோஷலிஸ்ட் கான்ஸ்டேபிளாக இருந்து இன்ஸ்பெக்டர் ஆவதுவரை கரூர் சர்கிளிலேயே இருக்

கிறார். அவர் எல்லா அரசுகளுக்கும் வேண்டியவர். எல்லா அதிகாரிகளுக்கும் வேண்டியவர். அப்படிப்பட்ட சோஷலிஸ்ட்களை தேர்ந்தெடுக்க வேண்டியதுதான். ஒரு ஆள் புகார் கொடுத்தால் புகார் கொடுப்பவர் மீதே நடவடிக்கை எடுக்கும் நிலைதான் இருக்கிறது.

புகார் கொடுத்தால் நடவடிக்கைகள் எடுப்போம் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் . ஆனால் புகார் கொடுத்தவன் மீதே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்நிலையை மாற்றுவது எப்படி என்று சிந்திக்க வேண்டும்.

அடுத்து, வியாசர்பாடி வகுப்பு கலவரங்கள், பர்மாவிலிருந்து வந்து குடியேறி இருப்பவர்களின் காலனியில் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. அவர்கள் பல கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். கலவரம் இல்லாத நகரமே கிடையாது என்ற நிலைதான் இருக்கிறது. விவரமாகச் சொல்வதற்கு நேரம் இல்லை. அதைப் பற்றி விரிவாகச் சொன்னால், கலவரங்களைப் பற்றி விரிவாகச் சொன்னால் நீங்கள் கலவரமடைந்து விடுவீர்கள்.

சர்ராய சாம்ராஜ்யம் என்று சொல்லும்போது யாரோ இரண்டு பேர்களை சொல்லிவிட்டு மற்றவர்களை மறைக்கிறார்கள். 'இரண்டு பேர்கள்தான் காய்ச்சுகிறார்கள் என்றால் முடிந்தால் அந்த இரண்டு பேர்களையும் நாடு கடத்திவிடுங்கள். செம்பட்டியில் வேலுச்சாமி என்ற ஒரு சப் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். செம்பட்டி என்றால் அவர் மம்மட்டியால் அடித்து விடுகிறார். சமூக விரோத சக்திகளோடு சேர்ந்து கொண்டு நடக்கலாமா ?

அரசியல் தலையீடு இல்லாமல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்றால் விரும்புவதால் மட்டும் நடக்காது. இப்போது இருக்கிற அமைப்புமுறை அப்படி. அந்த அமைப்புமுறையை மாற்ற வேண்டும்.

முதல் அமைச்சர் அவர்களை நான் ஒரு காரியத்திற்காகப் பாராட்டுகிறேன். இன்று லஞ்ச ஊழல் அதிகரித்துவிட்டது என்று பிரதமர் அவர்களும், திரு. சரண்சிங் அவர்களும் டெல்லிக்குச் சென்றிருந்தபோது சொன்னதாகச் சொன்னார்கள். லஞ்சம் ஊழல், பெருகிவிட்டது என்றால் முன்னால் இருந்ததை விட பெருகிவிட்டது என்று முதல் அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு ஒத்துக் கொண்டார்கள். லஞ்சம் ஊழல், பெருகிவிட்டன என்றால் அதற்குக் காரணம் காவலாளிகள் அல்ல. அதற்குக் காரணம் சமூக விரோதிகள்தான். அதோடு போலீஸுக்கு உள்ள பளுவைக் குறைக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

எமர்ஜன்ஸி காலத்தில் கொண்டுவரப்பட்ட மிஸா சட்டத்தை மாற்றுவோம் என்று சொன்னார்கள். இப்போது பி. டி. ஆக்ட் கொண்டு வருவோம் என்று சொல்கிறார்கள்: அதற்கு விட மாட்டோம் என்று ராம் ஜெத் மலானி போன்றவர்கள் சொல்கிறார்கள். தகராறு இருக்கிறது. மக்களுக்கு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறை வேற்றத் தயங்கக் கூடாது என்று சொல்கிறார்கள். அப்படி சொல்லக் கூடிய நெஞ்சம் கொண்டவர்கள் அ. தி. மு. க. விலும் இருக்கிறார்கள்.

ஆகவே எமர்ஜென்ஸி காலத்தில் போடப்பட்ட வழக்குகள் எல்லாம் பரிசிலனை செய்யப்பட்டு ரத்து செய்யப்பட வேண்டும். கசப்புணர்ச்சி இல்லாமல் போலீஸ் துறை டோன் அப் செய்யப்பட வேண்டும். அதற்குரிய ஆலோசனை செய்து அத்துறை டோன் அப் செய்யப்பட வேண்டும், இல்லையென்றால் அந்த நிர்வாகம் சீர்திருந்தாது என்று சொல்லிக் கொண்டு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆர். மணிமாறன்: தலைவர் அவர்களே, 1978–79-ஆம் ஆண்டுக்கான காவல்துறை மானியத்தின்மீது சில நல்லுணர்வுகளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் காவல்துறை மானியம்பற்றி எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடியவர்கள், பிரதான எதிர்கட்சியாக மிளிர்ந்து கொண்டிருக்கக் கூடியவர்கள் சிலபல குறைகளை, குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காக எடுத்துச் சொல்லி அதனுடைய முன்மாதிரியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிற நேரத்தில் இந்தக் காவல்துறை மானியத்திற்கான புத்தகத்தைப் பார்த்தால் ஏதோ சினிமா பாட்டுப் புத்தகம்போல் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் அதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் அடிக்கடி சினிமா பார்க்கிறார் என்பது இதன்மூலம் தெரிகிறது. சினிமா பார்ப்பதோடு மட்டுமல்ல, சினிமா பாட்டுப் புத்தகங்களையும் வெகு அழகாக பைன்ட் செய்து வைத்துக் கொண்டு அதிலுள்ள வரிகளை எல்லாம் தவறாமல் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூடத் தோன்றுகிறது. அதுமாத்திரமல்ல, அடுத்துப் பேசி ஒரு கருத்தை அவர்கள் வெளிப்படுத்துகிற நேரத்தில் * * *

திரு. க. அன்பழகன்: ஏற்கனவே நீக்கப்பட்டது. இந்த அவைக் குறிப்பில் இடம் பெறக்கூடாது என்று அறிவிக்கப்பட்ட ஒன்றைக் குறித்து இவ்வளவு விரிவாக ஒரு உறுப்பினர் பேசலாமா என்பதை அவைத் தலைவர் உணர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-40 —11-45-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசுகிறபோது நான் அவையில் இல்லை. நீங்கள் இருந்திருந்து அதைக் கேட்டிருந்தால் மறுபடியும் அதைப்பற்றி பேசுவது நல்லது அல்ல. அதை நீக்கியிருப்பது தங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே அவர்கள் பேசிய வார்த்தைகளை நீக்கிவிடும்படி கட்டளையிடுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே காவல்துறை மான்யத்தில் பல்வேறு விஷயங்கள் எடுத்து வைக்கப்பட்டன. ஏறத்தாழ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்று இவ்வளவு நாட்களிலும், எத்தனையோ இடர்பாடுகள், கஷ்ட நஷ்டங்கள் இவற்றையெல்லாம் ஒன்பது மாத காலமாக இந்த ஆட்சி சமாளித்துக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு பக்க பலமாக இருந்து வருவது காவல்துறை என்பது இந்த நாடு அறிந்த மாபெரும் உண்மை.

இந்த 9 மாத காலத்தில் எத்தனை போராட்டங்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டம், நெசவுத் தொழிலாளர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், பஸ் தொழிலாளர்கள் போராட்டம், பொறியாளர்கள் போராட்டம், மருத்துவமனைத் தொழிலாளர்கள் போராட்டம், கடைநிலை ஊழியர்கள் போராட்டம், பாடி தொழிலாளர்கள் போராட்டம், விவசாயத் தொழிலாளர்கள் போராட்டம், என்.ஜி.ஓ-க்கள் போராட்டம் இப்படி அடுக்கு அடுக்காக போராட்டங்கள் வெகு வேகமாக எழுந்து வந்தன. இவைகளை எல்லாம் காவல்துறை மிகவும் கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுத் தன்மையுடனும் எப்படி சமாளித்தது என்பதை இந்த நேரத்தில் நாம் நினைவு கூற கடமைப் பட்டிருக்கிறோம்.

இவைகள் எல்லாம் எத்தனை ஆண்டு காலத்தில் நடைபெற்றன. ஏழாண்டு காலத்திலா அல்லது எட்டு அல்லது ஒன்பது ஆண்டு காலத்திலா, அல்ல, 9 மாத காலத்திற்கு இத்தனை இடர்பாடுகளையும் காவல்துறையினர் சமாளித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தக் கட்சியின் சார்பாக காவல்துறைக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்னால் பேசியவர்களில் சிலர், மாணவர்கள் இங்கு சட்டசபையிலே அத்துமீறி பிரவேசித்து விட்டார்கள், காவல்துறையினர் போதுமான அளவுக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அடுக்கு அடுக்காக குற்றச்சாட்டுகளை அள்ளித் தெளித்தார்கள், அதே நேரத்தில் நான் சொல்ல விரும்புவது, இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு காவல்துறை பாதுகாப்பு செய்யவில்லை என்று சிவப்பு விளக்கை காட்டிவிட்டு, என்.ஜி.ஓ.-க்கள் போராட்டம் நடத்திய

நேரத்தில், அண்ணா சதுக்கத்தின் பக்கத்தில் அவர்களை நிறுத்தி விட்டார்கள். அது போலீசாருடைய அத்துமீறிய நடவடிக்கை என்றும், போலீசின் காட்டு தர்பார் என்றும் அங்கு வேறு விதமாக பச்சைக் கொடியை காட்டுகின்ற சூழ்நிலையையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னால் காவல்துறையை பயன்படுத்தி எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் எந்த அளவுக்கு கசக்கப்பட்டார்கள், எந்த அளவுக்கு நசுக்கப்பட்டார்கள், எவ்வளவு குற்றச்சாட்டுகளை எதிர் கட்சிமீது சுமத்தினார்கள் என்பதையெல்லாம் நாடு நன்றாக அறிந்திருக்கிறது. அப்போதெல்லாம் காவல் நிலையங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக என்னென்ன விதத்தில் எல்லாம் செயல்பட்டது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இப்போது ஒரே ஒரு குற்றச்சாட்டை வேண்டுமானால் சொல்லலாம். ஒரு மாசினை வேண்டுமானால் சொல்லலாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது அமைச்சர்களுடைய சொந்தக்காரர்களாக இருந்தாலும், அமைச்சர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, யாரும் ஒரு சாதாரண சிகரெட் வாங்குவதற்காக டி.எஸ்.பி.-யினுடைய தோளைத் தட்டிக் கொடுக்கின்ற ஆட்கள் கிடையாது. பூக்கள் வாங்க எந்தக் காவல்துறையினரையும் பயன்படுத்தவில்லை. நிச்சயமாக அந்த அளவுக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இறங்க மாட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை.]

மேலும், காவல்துறையினர் இப்படியெல்லாம் நடக்கலாமா, ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று தடியடிப் பிரயோகம் செய்யலாமா, கண்ணீர் பிரயோகம் செய்யலாமா, துப்பாக்கிகளையே வாடிக்கையாக வைத்துக் கொண்டு நிற்கலாமா, இப்படியெல்லாம் இருப்பது நியாயமா என்று கேட்கிறார்கள்.

நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த அதிலும் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற கட்சியின் உறுப்பினர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். கடந்த 7 ஆண்டுகாலமாக போலீசை கையில் வைத்துக் கொண்டு தடியடிப் பிரயோகம் செய்யாமல், மலர்மாரியா பொழிந்து கொண்டிருந்தது? துப்பாக்கிகளிலிருந்து பூக்களா வந்து விழுந்து கொண்டிருந்தன? என்பதை மதிப்புமிக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களை கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் போலீசாருடைய துப்பாக்கிகள் எல்லாம் காட்சி பொருட்களாகவா வைக்கப்பட்டிருந்தன? சிறைச்சாலைகள் எல்லாம் அறச்சாலைகளாகவா

மாற்றப்பட்டிருந்தது? போலீஸ்காரர்களெல்லாம் புத்த பிட்சுக்களாக மாறியிருந்தார்களா என்ன? யாரைப் பார்த்து இந்த கீதா உபதேசம் செய்கின்றீர்கள்?

கடந்த 7 ஆண்டுகளாக எங்கள் கட்சித் தோழர்களுக்கு நீதி மன்றத்தின் படிக்கட்டுகள், வாடிக்கையான பஞ்சு மெத்தைகளாக அமைந்திருந்ததையெல்லாம் நாங்கள் நினைவு கூற கடமைப்பட்டிருக்கிறோம். பல போலீஸ் நிலையங்கள் பல காவல் துறை அலுவலகங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தோழர்களுடைய வாடகை கொடுக்காத வீடுகளாக மாற்றப்பட்டிருந்தன என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாராயம் நாட்டில் நதிபோல் பெருக்கெடுத்து ஓடுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள், இவ்விதம் பெருக்கெடுத்து ஓட அந்த மழைக்கு காரணமாக இருந்தவர்கள் யார், அவர்களுக்கு கருணை காட்டி அவர்களுக்கு கருணாமூர்த்தியாக இருந்தவர்கள் யார், அன்றைக்கு சக்ராதிபதியாக இருந்த அந்த சாம்ராஜ்யத்தை நடத்துவதற்கு கடைக்கண் காட்டியவர்கள் யார், அதற்கெல்லாம் காரணமாக இருந்தவர்கள் எல்லாம் இவர்கள்தான் என்பதை நான் பகிரங்கமாக சொல்லுகின்ற நேரத்தில், அன்றைக்கு எல்லாம் சுந்தரமாக, சர்வமும் சுந்தரமாக, சுந்தரமயமாக இருந்த சாரரய சாம்ராஜ்யத்தை உருவாக்கிய சக்கரவர்த்தியாக இருந்து இவர்களுக்கு காட்சி கொடுக்கவில்லை என்று கட்டியம் கூறுவதற்கு இவர்கள் தயாராக இருக்கிறார்களா?

(முற்பகல் 11–50.)

இன்னொன்றையும் நான் கூற விரும்புகின்றேன். இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் குறுக்கீடு அதிகமாக இருக்கிறது, போலீஸ் இலாகாவிலே அதிகம் சொல்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை யெல்லாம் எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் எடுத்து வைத்தார்கள். இது சம்பந்தமாக ஒன்றை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பூரில் 1974-ம் ஆண்டு, 1975-ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் திருப்பூரில் ஒரு பயங்கரமான கொலை நடைபெற்றது. அந்தக் கொலை, ஜெயபாரதி நிட்டிங் கம்பெனி முதலாளியின் மனைவி மாலை 7 அல்லது இரவு 8 மணியிருக்கும், பயங்கரமாக கொலை செய்யப்பட்டார்கள். அந்த பயங்கரமான கொலை திருப்பூர் நகரத்தையே அன்று உலுக்கி எடுத்தது. ஆனால், அத்தகைய பயங்கரமான கொலையைச் செய்தவர்கள் யார் என்று கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால் இது சம்பந்தமாக ஒரு சிலரை

[திரு. ஆர். மணிமாறன்] [1978 மார்ச் 16

ஈரோட்டில் கைதுசெய்து, திருப்பூர் காவல் நிலையத்தில் கொண்டு வந்து வைத்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு என்ன நடந்தது? என்ன ஆயிற்று? என்பது தெரியவில்லை. அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள். அந்தப் பைல் மூடுவிழா செய்யப்பட்டது. அந்த பைலை மூடுவிழா செய்ததற்கு காரணகர்த்தா யார்? எந்த முறையீட்டின் பேரில், யார் குறுக்கீட்டின் பேரில், எந்த திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் குறுக்கீட்டின் பேரில், அந்தக் கொலையை அவர்கள் செய்யவில்லை என்று கூறி, அவர்கள் வெளியே அனுப்பப்பட்டார்கள் என்ற விவரம் யாருக்கும் தெரியாது; புலப்படவில்லை. எப்படி சமாதானம் காட்டி, காரண காரியங்கள் காட்டி, குற்றவாளிகள் என்று சொல்லப்படுகிறவர்களை வெளியே கொண்டு போனார்கள் என்பதற்கு நான் ஆதாரத்தோடு சொல்லத் தயாராக இருக்கிறேன். பகிரங்கமாகவே சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலேதான் இத்தகைய குறுக்கீடுகள் எல்லாம் மடைதிறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். திருப்பூரிலே ஒரு வடக்கத்திக்காரர் விடியற்காலை 5 மணிக்கு கொலை செய்யப் பட்டார். அது சம்பந்தமாக 2, 3 குற்றவாளிகளைக் கொண்டு வந்தார்கள். அப்படி கொண்டு வரப்பட்டவர்கள் காலச் சக்கரம் சுழலச் சுழல, நாட்கள் நகர நகர, மாதங்கள் மாற மாற அந்தக் குற்றவாளிகள் என்ன ஆனார்கள் என்பதும் தெரியாது. அவர்கள் எங்கே போய் ஒளிந்து கொண்டார்கள் என்பதும் யாருக்கும் தெரியாது. அது ஒரு சிதம்பர ரகசியமாகவே இருக்கிறது. இதை நான் நமது முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வருவதற்கு கடமைப் பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அராஜகம், அடக்குமுறை எல்லாம் இந்த ஆட்சிக் காலத்திலே மடை திறந்து விடப்படவில்லை. அவர்கள் காலத்திலேதான் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

இப்படி எதிர்க் கட்சிக்காரர்கள் இப்படிப்பட்டக் குற்றச்சாட்டுக்களை எல்லாம் எடுத்துச் சொல்லும்போது, எனக்கு பழைய நினைவுகள் மாறி மாறி வருகிறது. இந்த நாட்டில் அராஜகம் எப்படி கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதற்கான பல்வேறு காரணங்களை இந்த மன்றத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கெல்லாம் பதில் உண்டா? இன்றைக்கு எங்களைப் பார்த்து அன்றைக்கு நீங்கள் அவசர நிலையை ஆதரித்தீர்கள் என்று புகார் சொல்கிறார்கள். மாண்புமிகு சுப்பு அவர்கள் அன்றைக்கு நீங்கள் அவசர நிலையை ஆதரிக்கவில்லையா என்று கேட்கிறார்கள். நான் கேட்கிறேன், அன்றைக்கு அவசர நிலை காலத்திலே பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் உண்டா? இந்த

1978 மார்ச் 16] [திரு. ஆர். மணிமாறன்]

அவசர நிலையை வைத்துக்கொண்டு பத்திரிகைகளின் குரல்வளையை எப்படியெல்லாம் பிடித்தீர்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் எல்லாம் அன்றைக்கு செய்யப்பட்டன.

இன்றையத் தினம் முதல் அமைச்சராக இருக்கின்றவர், அன்றையத் தினம் 'தென்னகம்' பத்திரிகையிலே ஒரு ஸ்டேட் மெண்ட் கொடுத்தார். உடனே அந்தப் பத்திரிகையை காவல் துறை மூலம் செய்தி வெளிவராமல் தடை செய்யப்பட்டது. அன்றைய முதல்வரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமாக இருக்கின்றவர் அப்படி தடை செய்தார்கள். அவர், திராவிட முன்னேற்றக் கழகம் என்பது வானத்திலே பறக்கக்கூடிய காற்றாடி; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு சருகு என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சருகு என்று சொன்னதற்காக, அதை விளக்கும் வகையிலே இன்றைய முதல்வர் அவர்கள் ஒரு விளக்கம் கொடுத்தார்கள். சருகு என்பதற்கு மூன்று அர்த்தம் உண்டு என்று சொன்னார்கள், (1) மழைச் சாரல், (2) உலர்ந்த இலை, (3) மங்களப் பொருள். இப்படிச் சொல்லி, மழைச் சாரல் மக்களுக்கு உதவுவதாகவும், உலர்ந்த இலை மக்களுக்கு உரமாகவும், மங்களப் பொருளாகவும் இருக்கின்றது என்று சொன்னார்கள். இப்படி நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அன்று கூறியதை, உடனே தடை செய் தார்கள். இப்படி அவர்கள் இதற்கு விளக்கத்தைச் சொல்லி விட்டார்கள் என்பதற்காக, அன்று இந்த அவசர நிலை பயன் படுத்தப்பட்டது. இதேபோல் மிசா பயன்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் இந்த அவசர நிலையைப் பயன்படுத்தி, ஒன்றரை ஆண்டு காலம் தடை செய்யக்கூடிய நிலைமை அன்றைக்கு இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இன வெறிப் பிரசாரம் மிகவும் வேகமாக கிளப்பப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு உறுப்பினர் மணி மாறன் அவர்கள் பேசுகின்றபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் குற்றங்கள் எல்லாம் நடந்தன என்று சில சம்பவங்களை யெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அவர்களை நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு மேற்கொண்டு அவர்கள் பேச வேண்டும். வேங்கையின். இடம், புள்ளிமான் சிக்க....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைத் தலைவரின் அனுமதி இன்றி பேசக் கூடாது. உட்காருங்கள்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பிரேமா கொலையை நடத்திய பெரிய புள்ளி யார் சரியான புள்ளி யார் என்று எடுத்துச் சொன்னால் நலம் என்று சொல்லி என் பேச்சை தொடருகிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது என்று எடுத்துச் சொல்லக் காரணம் இங்கே ஏதோ நடக்கக்கூடாதது நடந்து விட்டது என்ற போலித்தனமான வாதங்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற அந்தக் காரணத்தால்தான் சொல்லுகிறேன்.

இன்னொன்றையும் இன்றைக்குக் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு ஒன்று சொன்னார்கள்*

*   *   *   *   *

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். திரு. மணிமாறன் அவர்கள் கடைசியாகப் பேசியது, அதற்குப் பிற்கு திரு. சுப்பு அவர்கள் பேச ஆரம்பித்து இதுவரை பேசியது, நடந்த நடவடிக்கைகள் அத்தனையையும் அவை நடவடிக்கைகளில் இருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். பத்திரிகைகள் இவற்றை வெளியிடக்கூடாது. * * *

(நண்பகல் 12–00.)

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேச அனுமதியுங்கள். ஏற்பட்ட அமளியிலே கூச்சல், குழப்பத்திலே அவர் என்ன சொன்னார் என்று காதில் விழவில்லை. அப்படி ஒரு வார்த்தையைச் சொல்லியிருந்தால் உள்ளபடியே அது வேதனைக்குரிய ஒன்றாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவைத் தலைமையை யார் ஏற்றிருந்தாலும் அந்த நாற்காலிக்குரிய மரியாதையை எந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தாலும் தந்தாகவேண்டும். அப்படிப்பட்ட வார்த்தை சொல்லப்பட்டிருந்தால் அதற்காக நான் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 11–58-லிருந்து 12–03 மணிக்குள் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பார்த்துவிட்டு தான் நான் தீர்ப்புச் சொல்லவேண்டும்.

திரு. ப. சந்திரன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையினர் என்று சொல்கிறபோது அமைதியைக் காக்கவேண்டும். குற்றங்களைத் தடுக்க வேண்டும், அதோடு மக்களுக்குத் தொண்டுசெய்வதற்காகவும் அவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் வாழ்க்கையை நாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைதி காக்கவேண்டும்.

*திரு. ப. சந்திரன் : தொழிலாளர் சட்டத்திலேயும் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் ஒரு நாளைக்கு வேலை செய்ய வேண்டுமென்று நேரத்தைக் குறித்திருக்கிறார்கள். அதைப் போல அரசு அலுவலாளர்கள் ஒரு நாளில் இத்தனை மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டுமென்று குறித்திருக்கிறார்கள். ஆனால் காவலர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று குறிப்பு இருப்பதில்லை. 24 மணி நேரமும் இந்த நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்தைக் கொண்டு அவர்கள் பணி செய்து வருகிறார்கள். அவர்கள் குடும்பத்திலுள்ள இன்னல்களுக்கு அப்பாலும் நாட்டு மக்களின் நலனைக் கருதித் தொண்டு செய்து வருகிறார்கள். எனவே, அவர்களுடைய நலனில் இந்த அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய தலைவரவர்களே, நமது சென்னை பல்கலைக் கழகத்திலே 'இந்தியன் சொஸைட்டி ஆஃப் கிரிமினாலஜி' என்ற பிரிவு ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் எம். ஏ. படித்து வருகிறார்கள். அப்படிப் படிக்கும் மாணவர்கள் வேலைக்கு வரும் பொழுது அவர்களுக்குக் காவல் துறையிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1972 முதல் 1974 வரையில் அந்தத் துறை, வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டது. இந்தக் குறைகளை நீக்கி அப்படி அந்தத் துறையிலே படித்த மாணவர்களுக்குக் காவல் துறையிலே முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்தத் துறையிலே படித்துள்ள மாணவர்கள் சட்டத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும். குற்றங்கள் செய்பவர்கள் எந்த மனநிலையில் அவற்றைச் செய்கிறார்கள், எந்தச் சூழ்நிலை அவர்களைத் தூண்டுதல் செய்கிறது என்பதைப் பற்றியெல்லாம் தெள்ளத் தெளிவாகப் படித்திருக்கிறார்கள்; அப்படிப்பட்ட மாணவர்களுக்குக் காவல் துறையில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, 'இந்தியன் சொசைட்டி ஆஃப் கிரிமினல்ஜி,
என்று சொல்லப்படும் சொசைட்டி சென்னைப் பல்கலைக்
கழகத்தில் நடத்தப்பட்டு வரும் கிரிமினலஜி படிக்கின்றதை
தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே சேர்க்க வேண்டும்.
அப்படிச் சேர்த்தால் அந்தத் துறையிலே படிக்கும் மாணவர்கள்
தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் தேர்வு எழுதி வேலை
வாய்ப்பு பெறுவதற்கான வழிவகை ஏற்படும் என்று இந்தியக்
சொசைட்டி ஆப் கிரிமினலஜி பரிந்துரை செய்தும் அந்தப்
பரிந்துரை இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தப்
பரிந்துரையை ஏற்று தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் கிரிமி
னலஜி என்ற பாடத்தையும் சேர்த்து, அந்த கிரிமினலஜி
படிக்கும் மாணவர்கள் கிரிமினலஜி சப்ஜக்டை எழுதி அதன்
மூலம் வேலை வாய்ப்பு பெற வழிவகை செய்ய வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அந்தத் துறையிலே மாணவர்கள், 'ஃபோரின்
சிக் சயன்ஸ் லெபரட்டரி'. பயிற்சி பெற்று வருகிறார்கள்.
எனவே, அவர்களை இந்தக் காவல்துறையிலே எடுப்பது நலமாக
இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 'ஃபோரின்சிக்'
சயன்ஸ் லெபரட்டரியை, ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒன்று
அமைக்க வேண்டும். காரணம், குற்றங்கள் அதிகமாகப் பெருகியி
ருக்கும் நேரத்தில் 'ஃபோரின்சிக் சயன்ஸ் லெபரட்டரி' தகுந்த அள
வில் இருந்தால் குற்றங்களைக் கண்டு பிடிக்க வசதியாக இருக்கும்.
குற்றங்கள் பல கண்டு பிடிக்காத அளவிலே, குற்றங்களைக் கண்டு
பிடிக்கும் சதவிகிதம் குறைந்திருக்கிறது. அந்த சதவிகிதத்தை
அதிகரிக்க, 'ஃபோரின்சிக் சயன்ஸ் லெபரட்டரிகளின்' எண்ணிக்
கையை அதிகரிக்க வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு
ஃபோரின்சிக் சயன்ஸ் லெபரட்டரி' ஏற்படுத்துவது மிகவும்
நலமாக இருக்கும்.

ஸ்காட்லாந்த் போலீசை உலகத்திலேயே மிகச் சிறந்த
போலீஸ் என்று சொல்வார்கள். அதைப்போல இந்தியாவிலே
தமிழ்நாடு போலீஸ் மிகச் சிறந்த போலீஸ் என்று சொல்லப்படும்
போலீஸ், குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் குறைந்திருக்கிறது
என்றால், போதிய சாதனங்கள் குறைவாக இருக்கிறது என்றுதான்
பொருள்.

அதுமட்டுமல்ல எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள்
சொன்னார்கள். போலீசுக்கு வேலைப் பளு அதிகம் என்று சொன்
னார்கள். அந்த வேலைப் பளுவைக் குறைக்கும் வகையில் நவீனக்
கருவிகளைப் பயன்படுத்தி இந்தக் குற்றங்களைக் கண்டு பிடிக்க
வழிவகை செய்ய வேண்டும்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், வேலியே பயிரை
மேய்கின்ற கதைபோலத் தான் நிலவி வருகிறது. பொது
மக்கள் மது விலக்கைத் தடுப்பதிலே பங்குகொள்ளும்போது

மனு எழுதி அனுப்பினால் எந்தக் காவல் துறையினர் மீது அந்த மனுக்களை எழுதி அனுப்புகிறார்களோ அந்தக் காவல்துறையினருக்கே மனுக்கள் போய்ச் சேருகின்றன. எனவே, அந்தக் காவல் துறையினர் சரியாக நடவடிக்கை எடுப்பதில்லை. எனவே இதற்கென்று தனியாக ஒரு துறையை ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, வடார்க்காடு மாவட்டத்தில் நான்கு காவல் நிலையங்கள் அவுட் போஸ்ட் காவல் நிலையங்களாக இருக்கின்றன. குற்றங்கள் வேகமாக அதிகரித்து வந்திருக்கின்ற இந்த நேரத்தில் அவுட் போஸ்ட் காவல் நிலையங்களை பர்மனென்ட் காவல் நிலையங்களாக ஏற்படுத்தினால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பெரணமல்லூர் தொகுதியில், தேசூர் என்ற பகுதியிலே குற்றங்கள் அதிகரித்திருப்பதால் அங்குள்ள அவுட் போஸ்ட் காவல் நிலையத்தினை பர்மனென்ட் காவல் நிலையமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12–10)

திரு.எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, மிகச் சூடான விவாதத்திற்குப் பிறகு, சுவையான சில உண்மைகளை இங்கே எடுத்துச் சொல்லி நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் சில கருத்துக்களைச் சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

போலீஸ் துறை நாட்டிற்கு இன்றியமையாதது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. உடலுக்கு 'கிட்னி' எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியத்துவமானது நாட்டுக்கு போலீஸ் துறை. போலீஸ் துறை இல்லாவிட்டால், நாகரீகமான ஒரு சமுதாயத்தை நாட்டிலே நிலைநாட்டுவது சிரமமானது. ஆகவே, போலீஸ் துறையைப் பற்றி நாம் பேசும்பொழுது மிகுந்த பொறுப்புணர்வுடன் பேசக்கூடியவர்களாக இருக்கிறோம்.

போலீஸ் துறை நெருப்புக்குச் சமமானது என்று கூடச் சொல்லலாம். நெருப்பு இன்றியமையாத ஒரு பொருள். ஆகையினால், நெருப்பைப் பயன்படுத்தக் கூடிய கட்டாயத்திலே நாம் இருக்கிறோம். மிகவும் பயனுள்ள பொருள் நெருப்பாயிற்றே என்று அதை எடுத்து அணைத்துக் கொண்டும், இணைத்துக் கொண்டும் இருக்க முடியாது. அதே நேரத்தில், நெருப்பை விட்டு வெகு தூரம் நாம் அகன்று விடவும் முடியாது. சமைப்பதற்கு நெருப்பு தேவை. ஆனால், சமைப்பதற்கு நெருப்பு தேவை

என்று உடலிலே ஒட்டிக்கொள்ளலாம். கொஞ்சம் ஆலிங்கனம் செய்து கொள்ளலாம் என்று செய்வதும் தவறு. அப்படி செய்து கொண்டால், நெருப்பு நம்மைச் சுட்டுவிடும். அதே நேரத்தில் நெருப்பை நாம் கொஞ்சம் தூரத்தில் வைத்தால் எந்தக் காரியத்திற்கும் அது பயன்படாது. எனவே, போலீஸ் துறையினரை. நெருப்பைப் போல் நாம் அணுகவேண்டுமென்ற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ்காரர்கள் பல்வேறு சூழ்நிலையிலே வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒரு கருத்தை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஆளுங்கட்சிக்காரர்கள், ஆள் பவர்கள் வருவார்கள், போவார்கள். இவர்களுடைய அனுபவத்திலே அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ கட்சிகள் வருகின்றன நேற்றைய வரையில் அங்கே இருந்தவர்கள், இங்கே வருகிறார்கள். அல்லது இங்கே இருக்கிறவர்கள் நாளை அங்கே போகலாம் அல்லது, வேறு யாராவது அங்கே வரலாம். எனவே, அவர்களுக்கும் சாதகமாகவும் இவர்களுக்கும் சாதகமாகவும் நடந்து கொள்ளவேண்டும்.; அல்லது, அவர்களுக்குச் சாதகமாக, இவர்களுக்குப் பாதகமாக நடந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைப் போலீஸ்காரர்கள் விட்டுவிடவேண்டும்.

நாட்டில் அமைதியை நிலைநாட்ட, நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பைத் தரத்தான் அவர்கள் இருக்கிறார்களே தவிர, எதிர்க்கட்சிக்காரர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்று ஆளுங்கட்சிக்காரர்கள் சொல்வதைக் கேட்டு, சட்டத்திற்குப் புறம்பாக எதிர்க்கட்சிக்காரர்களை அடிக்க வேண்டுமென்று நினைப்பதோ, அல்லது எதிர்க்கட்சிக்காரர்கள் நமக்கு ஆதரவானவர்களாக இருக்கிறார்கள். ஆகையினால், ஆளுங்கட்சிக்காரர்களுக்குப பாதகம் ஏற்படுத்தி, எதிர்க்கட்சிக்காரர்களுக்குச் சாதகமாக அவர்கள் செயல்படுவதோ நாட்டுக்கு நல்லதில்லையென்பதை போலீஸ் துறையிலே உள்ளவர்கள் நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதே போல், ஆளும்கட்சியிலே உள்ளவர்கள், நேற்று வரையிலும் நாம் எதிர்க்கட்சியிலே இருந்தோம் என்ற நினைப்பை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், நேற்று வரை நாம் ஆண்டு கொண்டிருந்தோம், நாமும் போலீஸ் துறையை நிர்வகித்துக் கொண்டு வந்தோம் என்பதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே எதிர்க்கட்சியினர், ஏதோ ஆட்சியைக் குறை கூற வேண்டுமென்பதற்காக, போலீஸ் துறையே மிகவும் ஊழலான, ஒரு செம்மையற்ற துறை என்று சொல்வதனால், அவர்களுடைய உற்சாகம் குறையும், அவர்களுடைய வேகம் குறையும் என்பதை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஆகையினால், பாராட்ட வேண்டிய இடத்திலே நாம் பாராட்ட வேண்டியவர்

களாக இருக்கிறோம், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதே நேரத்தில், தவறுகள் இருந்தால், நம்மிடத்தில் ஆதாரம் இருந்தால் அதைச் சுட்டிக் காட்டவும் தயங்கக் கூடாது. ஆகவே, இந்த நேரத்திலே சமன் நிலையினைப் பயன்படுத்துவது, நமக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் போலீஸ் துறையிலே இருக்கக்கூடியவர்கள் இன்றைக்கு லஞ்சம் வாங்குகிறார்கள் என்று பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. ஏன் இப்படி சொல்லப்படுகிறது என்று நாம் சிந்திக்க வேண்டாமா? அவர்களுக்குக் கிடைக்கிற சம்பளம் என்ன, ரிட்டையர்மென்டுக்கு பிறகு அவர்களுக்கு இருக்கக்கூடிய பாதுகாப்பு என்ன, அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மற்ற சலுகைகள் என்ன, இவைகளை நினைத்துப் பார்க்க வேண்டும்.

போலீஸ் கமிஷன் ஒன்றை நியமித்து அந்தக் கமிஷன் ஒரு ரிப்போர்ட்டையும் கொடுத்தது. அந்த ரிப்போர்ட்டு என்ன ஆயிற்று, ஏன் அந்த ரிப்போர்ட்டுக்களின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை? அங்கே இருக்கிற குளிர்பதன அறைக்குள் அது அனுப்பப்பட்டுவிட்டதா என்பதைப் பார்த்து, உடனடியாக இந்தக் கமிஷன் ரிப்போர்ட்டின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று தலைவர் அவர்கள் சொல்லிவிட்ட காரணத்தாலே ஒரு சில குறைகளைச் சொல்லுவது என்னுடைய கடமை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே மைனாரிட்டி மக்கள் வாழ்கிறார்கள். எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு தர வேண்டியது போலீஸ் கடமையாகும். அதே நேரத்தில், மைனாரிட்டி மக்களுக்கும் பலவீனமாக உள்ளவர்களுக்கும் அநீதிகள், அக்கிரமங்கள் நடைபெறுமானால் அந்த இடத்தில் போலீஸ்காரர்கள், போலீஸ்காரர்களாக இருந்து பாதிக்கப்படக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்தக் கடமை உணர்ச்சி அவர்களிடத்திலே கொஞ்சம் குறைந்திருக்கிறது என்ற உண்மையை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வியாசர்பாடியில் அண்மையில் நடந்தது என்ன? 8-ந் தேதி ஒரு பதட்டநிலை இருந்தது. அதைச் சமாளிக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. 10-ம் தேதி வீடுகள் எல்லாம் கொளுத்தப்பட்டன. அப்படி கொளுத்தப்பட்ட நேரத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 16

மற்ற மைனாரிட்டி சமுதாயத்திற்குக் கொடுத்திருப்பதைப், போல் போலீஸ் துறையில் முஸ்லீம்கள் இல்லாத காரணத்தால் ஆங்காங்கே வகுப்புக் கலவரங்கள் நடைபெறுகின்றன ; அப்படிப்பட்ட கலவரங்கள் தடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு ரெக்ரூட்மென்ட் செய்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து ஐ. பி. எஸ். ஆக ஒருவர் செலக்ட் செய்யப்பட்டால் அவருக்கு 4 வருஷத்தில் ப்ரமோஷன் கிடைக்கிறது. ஆனால் ஸ்டேட் கவர்ன்மெண்டில் செலக்ட் செய்யப்பட்டால் 10, 15 வருஷம் ஆனாலும் ப்ரோமோஷன் கிடைப்பதில்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்ட் செலக்‌ஷனிலும் ஸ்டேட் கவர்ன்மெண்ட் செலக்‌ஷனிலும் ஏன் இந்த டிபரன்ஸ் இருக்கிறது என்று சிந்திக்க வேண்டும். எல்லோருக்கும் ' ஈக்வல் ப்ரோமோஷன் ' கிடைக்க வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு டி.எஸ்.பி. யினால் ஒரு பெரிய மாவட்டத்தில் எல்லா காரியங்களையும் ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. ஆகையால் அவருக்கு உதவியாக, அவருக்குக் கீழே ஒரு ஏ.டி.எஸ்.பி.யை எல்லா இடங்களிலும் போஸ்டை கிரியேட் செய்து நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினருக்கு மற்ற மாநிலங்களில் யூனிபார்ம் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இங்கும் அவர்களுக்கு உரிய முறையில் யூனிபார்ம் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது ' ஆர்டர்லி ' வைத்துக் கொள்ள உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். போலீஸ்காரர்களையே ஆர்டர்லியாக பயன்படுத்துகிறார்கள். அதனால் அவர்களுடைய சர்வீஸ் நேரம் வேஸ்டாகிறது. ஆகவே, உயர் போலீஸ் அதிகாரிகள், அவர்கள் விரும்புகிறவர்களை போலீஸ் துறை சம்பந்தப்படாதவர்கள்—ஆர்டர்லியாக வைத்துக் கொள்ள அனுமதித்தால் பலருக்கு வேலை வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லா அண்டு ஆர்டர் மெயின்டய்ன் செய்கிற இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவருக்கும் ஒரு வெகிக்கிள் கொடுக்க வேண்டும். வெகிக்கிள் இருந்தால்தான் அவர்கள் செம்மையாக செயல்பட முடியும்.

போலீஸ் துறையில், சிட்டி டெலிபோன் 83011 வைத்திருக்கிறார்கள். அந்த நம்பருக்கு எப்போது போன் செய்தாலும் கிடைப்பதில்லை. ஒரு நாள் முழுவதும் உட்கார்ந்து போன் பண்ணினாலும் கனெக்‌ஷன் கிடைப்பதில்லை. எனவே, அதை மாற்றிவிட்டு வேறு ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1978 மார்ச் 16] [திரு. எம். ஏ. லத்தீப்]

போலீஸ் டிப்பார்ட்மெண்ட் வெகிக்கிள்ஸுக்கு பெட்ரோல் சீலிங் வைத்திருப்பது தேவையில்லை. (மணியடிக்கப்பட்டது).

மதுவிலக்குபற்றி அரை நிமிடத்தில் சொல்லி முடித்துக் கொள்கிறேன். திறமைமிக்க நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்த போலீஸ் இலாகாவை நிர்வகிக்கிறார்கள். இந்தத் துறையில் மதுவிலக்கை அமுல் செய்வதில் எவ்வளவு சீர்கேடுகள் உண்டோ அத்தனையும் நடக்கிறது என்பதைச் சொல்வதற்கு நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

ஒவ்வொரு ஊரிலும் போலீஸ்காரர்களின் லிமிடெட் கம்பெனியாக சாராயக் கடைகள் இருக்கின்றன. அதற்கு போலீஸ் ஸ்டேஷன் பயன்படுகிறது. அங்கே இருக்கிற வில்லேஜ் கர்ணம், வில்லேஜ் ஆபீசர் எல்லாம் சேர்ந்து கொண்டு, எங்கள் பகுதியில் ஒரு யூனியனில்—அதன் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—ஒரு வாரத்திற்கு 27,000 ரூபாய் நேரடியாக வசூல் செய்கிறார்கள். ஐ.ஜி., டி.ஐ.ஜி., எஸ்.பி., கமிஷனர்களுக்குக்கூட அவ்வளவு வருமானம் கிடையாது. பாவம் அவர்கள். வருகின்ற சம்பளத்தை ஐ.டி. யாக கொடுத்துவிட்டு, கொஞ்சம் சம்பளம் வாங்குகிறார்கள். போலீஸ்காரனும், எஸ்.ஐ.-யும்தான் இந்த நாட்டின் இராஜாக்கள்.

இதே நிலைமை நீடிக்குமானால் நான் சொல்கிறேன், நாட்டுக்கு, நாட்டு மக்களுக்கு பாதுகாப்புத் தராத இந்த காவல்துறையை சிதறி சின்னாபின்னமாக்கி மக்கள் தூக்கி எறிந்து விடுவார்கள். அதிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளுங்கள். ஒன்றில் மதுவிலக்கை சரியாக அமுல் படுத்துங்கள். சரியாக அமுலாக்க முடியவில்லை என்றால் எங்களால் முடியவில்லை என்று சொல்லி வெளியேறுங்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, மற்ற விஷயங்களைப் பேச நேரம் இல்லாத காரணத்தால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*திரு அ. க. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குக் காவல் துறை மானியத்தின் மீதும், தீயணைப்புத் துறை மானியத்தின் மீதும் பேசுகின்ற ஒரு வாய்ப்பை எனக்குத் தந்தமைக்கு இந்த நேரத்திலே நான் தலைவரவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்களும் குறிப்பாக பிரதான எதிர் கட்சி உறுப்பினர்களும் இன்றைக்கு சூடான விவாதங்களிலே ஈடுபட்டு நெருப்புப் பறக்கின்ற அளவுக்கு விவாதங்களை நடத்தினர். அதனால்தானோ என்னவோ இன்றைக்கு போலீஸ் மானியம் என்று சொன்னாலே நெருப்புப் பொறி பறக்

[திரு. அ. க. அரங்கநாதன்] [1978 மார்ச் 16

கின்ற ஒரு மானியக் கோரிக்கை என்று கருதி புர்ட்சித் தலைவரவர்கள் நெருப்புப் பொறியை அணைக்கின்ற விதத்தில் தீயணைப்புத்துறை மானியக் கோரிக்கையையும் இணைத்தே வைத்திருக்கிறார்கள், புரட்சித் தலைவர் அவர்கள்.

ஆனால் எந்தத் தரப்பிலே இருந்தாலும் அது ஆளும் கட்சித் தரப்பிலே இருந்தாலும் சரி, எதிர்க்கட்சித் தரப்பிலே இருந்தாலும் சரி எந்த உறுப்பினராக இருந்தாலும் இந்தச் சபையினுடைய கவுரவத்தை காப்பதே அங்கத்தினர்களுடைய கடமை என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே இருக்கின்ற $4\frac{1}{2}$ கோடி மக்களுக்கு 47 ஆயிரம் காவல் துறையினரை வைத்து அவர்களுடைய உடமைகளுக்கும், அவர்களுடைய சொத்துக்களுக்கும், உயிர்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்கின்ற உணர்வு இங்கே பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருப்பது மிகப் பொருத்தமுடையதாக இருக்கும்.

இந்த மானியக் கோரிக்கையிலே பலதரப்பட்ட திட்டங்களை தீட்டி புரட்சித்தலைவரவர்கள் அவர்களது 9 மாதகால ஆட்சியிலே சாதனை புரிந்திருக்கிறார்கள். இங்கே எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள்—இன்றைக்குப் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே எப்போதும் போலீஸ், ஜெயில் என்றுதான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என். ஜி.ஓ. ஸ்ட்ரைக் என்றாலும், மாணவர்கள் போராட்டம் என்றாலும், எப்போதும் போலீஸ், ஜெயில் என்று அவர் சொன்ன நேரத்திலே என்ன கோரிக்கைக்காக அவர் அப்படிச் சொன்னார் என்பது எனக்கு புரியவில்லை.

ஆனால் 1973–74-லே அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தவர் ஆட்சிக் காலத்திலே என்ன நடந்து கொண்டிருந்தது. அந்த நேரத்திலே போலீஸும், துப்பாக்கிச் சூடும்தான் நடந்துக் கொண்டிருந்தது. ஆனால் ஜெயிலுக்கு அனுப்பவில்லை. அன்றைக்கு சிதம்பரத்திலே மாணவர்கள் கிளர்ச்சியின் போது அந்த மாணவர்களைக் கைது செய்து அவர்களை சிறைச் சாலைக்கு அனுப்பியிருந்தால் மாணவர் மத்தியில் பயபக்தி ஏற்பட்டு இருக்கும். அன்றைக்கு சிதம்பரத்தில் துப்பாக்கி சூடு. உதயகுமாரும், அதேபோல் லூர்துநாதனும் துப்பாக்கிக்கு இறையாகி இறந்திருப்பார்க்ளா ? அன்றைக்கு போலீஸ், துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்க்ள். சிதம்பரத்தில் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்தான் பார்த்தார்க்ள். அதேபோல் விவசாயிக்ள் போராட்டத்தின் போதும் போலீஸ், துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள்.

1978 மார்ச் 16] [திரு. அ. க. அரங்கநாதன்]

ஒரு வேளை அதேபோல் இன்றைக்கும், மாணவர்க்ள் போராட்டத்திலும், என். ஜி. ஓ. போராட்டத்திலும் துப்பாக்கி கொண்டு அடக்க் வில்லையே என்ற வருத்தம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்க்ளுக்கு இருக்கிறதோ அதற்குத்தான் அவ்வாறு குறிப்பிட்டாரோ என்று புரியவில்லை.

ஆகவே இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் நடைபெற்ற 9 மாத கால ஆட்சியிலே எத்தனை போராட்டங்க்ள் நடைபெற்றிருக்கின்றன. என்.ஜி.ஓ. போராட்டம், ஆசிரியர்க்ள் போராட்டம் பாடியிலே டி. வி. எஸ். தொழிலாளர்கள் போராட்டம், பல்வேறு போராட்டங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே நடந்திருக்கின்றன. அத்தனை போராட்டங்களிலும் புரட்சித் தலைவரவர்க்ள் க்காவல் துறையை நல்ல முறையிலே பயன்படுத்தி நாட்டிலே மக்கள் உயிர் பாதுகாப்பதும் தமிழகத்தில் அமைதியையும் நிலை நாட்டச் செய்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–30.)

அப்படிச் செய்துவருகிற காரணத்தால்தான் இன்றைக்கு இந்த ஒன்பது மாதத்தில் துப்பாக்கிச் சூடு என்று சொல்வதற்கே இடமில்லாமலிருக்கிறது. தடியடி என்று சொல்வதற்கு இடமில்லை. கண்ணீர் புகை என்று சொன்னால் அப்படிச் சொல்வதற்கு இடமில்லை. எவ்வளவோ போரட்டங்கள் நடந்துள்ளன. இவை திராவிடமுன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடந்திருக்குமேயானால் பல்வேறு இடங்களில் தடியடி நடந்திருக்கும், கண்ணீர்புகை உபயோகப்படுத்தப்பட்டிருக்கும், துப்பாக்கிச் சூடுகள் பல நடைபெற்றிருக்கும்.

இன்றைக்கு இங்கே பேசுகிற ஆளும்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சிறிது வேகமாகவும் சுறுசுறுப்பாகவும் பேசுகிறார்கள் என்று சொன்னால் சென்ற ஏழாண்டுக்கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த கொடுமைகள், ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள், சித்திரவதைகள், அதனால் ஏற்பட்ட கண்ணீர் பெருக்கு இவைதான் காரணம் என்பதை இன்றைய பிரதான எதிர்கட்சியில் இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் உணரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்மீது திண்டுக்கல், வேலூர் போன்றயிடங்களில் பல்வேறு வழக்குகள் தொடரப்பெற்று பல்வேறு துன்பங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு துன்பங்களையும், துயரங்களையும் ஏழாண்டுக்ள் சந்தித்தவர்கள்தான், இன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்களாக நாங்கள் வந்திருக்கிறோம். ஆகவே நாங்கள் பேசுகிறபோது, நாங்கள் அனுபவித்த துன்பங்களை

யும் துயரங்களையும் எடுத்துச்சொல்லுகின்றபோது இன்றைய தினம் பிரதான எதிர்கட்சியாக இருக்கின்ற தி.மு.க. உறுப்பினர்கள் சிறிது பொறுமையாக, அமைதியாக கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

ஏழாண்டுக் காலத்தில் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள் கொலைகள் இவற்றை எண்ணிப்பார்த்தால் இவ்வளவு துன்பத்தையும் துயரத்தையும் அனுபவித்து விட்டுத்தான் நாங்கள் ஆட்சிப்பீடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்த்து கொஞ்சம் பொறுமை காட்டி அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது திருத்திக்கொள்ளவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

இன்று புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் காவல் துறையில் நல்லபல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க பல லட்சக்கணக்கான ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்ஸ் வாங்கிக்கொடுக்க 2½ லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்படிப் பல்வேறு முன்னேற்றத் திட்டங்கள் இருந்தாலும் குறிப்பாக மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்தவேண்டும். தெருக்களில் சாராய நதி ஓடுகிறதா ஓடவில்லையா என்பதல்ல. இந்த மதுவிக்குத் திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால் இதற்கு ஒரு மாற்றுத்திட்டத்தை அமைத்தாகவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் மணியக்காரர், பஞ்சாயத்து தலைவர், ஊர் பிரமுகர்கள், காவல்துறையினர் இவர்கள் ஐந்துபேர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து கிராம எல்லைக்குள் யாரும் சாராயம் காய்ச்சினாலும், யார் விற்றாலும், யார் குடித்தாலும் அவர்களை அந்தக் கிராம எல்லைக்குள் கட்டுப்படுத்தி தண்டனை கொடுக்கிற ஒரு பொது நலக்குழு அமைக்கப்பட்டால்தான் ஓரளவு இதில் வெற்றிபெற வாய்ப்பிருக்கும். ஒவ்வொரு பஞ்சாயத்து எல்லைக்குள்ளும் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும்.

இன்று ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் க்ரிமினல்ஸ்க்கு என்று தனிப் பிரிவு இருக்கிறது. அதேபோல் மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்த ஒரு தனிப் பிரிவு இருக்க வேண்டும். அவர்கள்தான் வழக்கு பிடிக்க வேண்டும், கேஸ் போட வேண்டும். க்ரிமினல் குற்றவாளிகளைப் பிடித்து தனியாக வழக்கு தொடரப் படுகிறது. அதேபோல் மது விலக்கிற்கும் தனியாக ஒரு இன்ஸ்பெக்டர். ஒரு சப் இன்ஸ்பெக்டர் அல்லது டெப்டி இன்ஸ்பெக்டர் போட்டு தனி பிரிவு ஒன்றை, மது

விலக்குப் பிரிவு என்று உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால்தான் இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமல்படுத்துவதில் வெற்றி பெறலாம் என்று கூறிக்கொண்டு எனக்கு பேச வாய்ப்ளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காவல்துறை மானியம் அவை முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மானியத்தின்மீது நான் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

காவல் துறை கடந்த காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய காலத்தில் நாட்டு மக்களுக்கு எதிராக இருந்தது என்ற காரணத்தால் அதை நல்ல முறையில் நடத்த முடியாத நிலையில் அன்று மக்கள் எல்லாம் அவர்களை ஜரிகைக் குல்லா, தீக்குச்சி என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். தீக்குச்சி என்றால் அன்று தீக்குச்சி சிவப்பாக இருந்தது. ஆகவே தீக்குச்சி என்றார்கள். அதேநிலை தான் இன்றும் நீடித்து வருகிறது என்று சொல்லும்போது வருத்தமாக இருக்கிறது.

ஆனால் 1976-ல் குற்றங்கள் 31,377, என்றிருந்தது 1977ல் 39,698 ஆக ஒரு ஆண்டில் 8,321 குற்றங்கள் அதிகரித்துள்ளன. இது நல்லதொரு அறிகுறி அல்ல சமுதாய முன்னேற்றத்திற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யும்போது போலீஸ்காரர்கள் நிலவுடைமையைக் காப்பாற்றும் கருவியாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

24 மணி நேரத்தில் இந்த போலீஸ் இல்லாவிட்டால் நல்லதொரு மிகப் பெரிய மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று சொல்லிக்கொண்டிருந்தோம். இன்றைக்கு நில உடைமைகளை காப்பாற்றக்கூடிய நிலைமையில் இவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அவர்களுடைய நலன்களையும் நாம் காப்பாற்றியாக வேண்டும். பல வசதிகளை செய்து கொடுக்க முன் வர வேண்டும்.

போலீஸில் லஞ்ச லாவண்யம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களுடைய வசதிகளையும் பெருக்கிக்கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும் என்ற முறையில் நான் கீழ்க்கண்ட வசதிகளை அவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதியைப் பொறுத்தளவில், போலீஸார் அனைவருக்கும் வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டும். இளையாங்குடியின் போலீஸ்காரர்களுக்கு என்று 26 வீடுகள் கட்டப் பட்டன. இப்போது இந்த

26 வீடுகளும் இடிந்து சாம்பலாக தரை மட்டமாக கிடக்கிறது. அது மட்டுமல்ல, அங்கு பேய் புகுந்து கொண்டு போலீஸ்காரர்களை விரட்டுகிறது என்ற பீதியை கிளப்பிவிட்டதன் காரணமாக இன்றைக்கு யாரும் அதில் குடி போக மறுத்துவிடுகிறார்கள். இரவோடு இரவாக இந்த வீடுகள் எல்லாம் டாம் டாமென்று இடிந்துவிட்டது. மேலும் இந்த வீட்டை இடிப்பதற்குக்கூட ஏலத்தில் விட்டிருக்கிறார்கள். இப்படி வீடுகள் கட்டுவதற்கும் செலவு. வீட்டை இடிப்பதற்கும் செலவு. இந்த நிலைமை இருக்கிறது. ஆகவே வீடுகள் கட்டிக்கொடுக்கின்ற பிரச்சினையை முக்கியமாக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, போலீஸ் இல்லங்களில் எங்கே லஞ்சம் ஆரம்பிக்கிறது என்றால் போலீஸ் ஸ்டேஷன்களில்தான். எழுதுபொருள் இல்லை என்று சொல்லுகிறார்கள். எழுதுபொருள் சப்ளை செய்வதே கிடையாது. அங்கே போனவுடனேயே பேப்பர் வேண்டும் கார்பன் பேப்பர் வேண்டும், பென்சில் வேண்டும், மை வேண்டும், இவை எல்லாம் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று என்று சொல்லுகிறார்கள். வாங்கிக்கொடுத்தால் தான் நாம் சொல்லப்போவதை கேட்பார்கள், இல்லையென்றால் அப்படியே விட்டுவிடுவார்கள். இந்த நிலைமை மாறவேண்டும். அவர்களுக்கு வேண்டிய எழுது பொருட்களை சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இங்கு கொடுக்கப்படுகின்ற படி, அதாவது அசெம்பளியில் நம் பக்கத்தில் வேலை செய்கின்ற காவலர்களுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாய் படி கொடுக்கிறார்கள். அதற்கு மேல் உள்ளவர்களுக்கு 2½ ரூபாய், அதற்கு மேல் உள்ளவர்களுக்கு 3 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இது போதாது, கூடுதலாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டசபையில் நமக்கு நாள் ஒன்றுக்கு சிட்டிங் பீஸ் 35 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கேயே எட்டு மணி வேலை செய்யக்கூடியவர்களுக்கு, இங்கே உட்காருவதற்குக்கூட வசதி கிடையாது. அந்த நிலைமையில் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு குறைந்தது ஐந்து ரூபாய் என்ற அளவில் தினப்படி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்களுக்கு-போலீஸ் ஸ்டேஷன்களில் மோட்டார் சைக்கிள் கொடுப்பதின் மூலமாக நல்ல முறையில் வேலை செய்ய சந்தர்ப்பம் ஏற்படும். ஆகவே எல்லா சப்-இன்ஸ்பெக்டர்களுக்குக் மோட்டார் சைக்கிள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் போலீசார் எல்லோருக்கும் இனமாகவே சைக்கிள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையிலுள்ள அலுவலர்கள் - ஆபத்தான வேலைகளில் ஈடுபடுகிறார்கள். சில நேரங்களில் குத்தி கொலை செய்யப்படுகிறார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகின்ற இடங்களில், இறக்குகின்ற இடங்களில் போகும்போது கத்தியால் கொலை செய்யப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ரூபாய் 10,000 கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸாருடைய குடும்பத்தினர்களுக்கு இலவச வைத்திய வசதி கொடுக்கவேண்டும், அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவச படிப்பு வசதி செய்து கொடுக்கவேண்டும், என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பல போலீஸ் ஸ்டேஷன்கள் வாடகை கட்டிடங்களில் நடைபெற்று வருகின்றன. இதற்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்கின்றோம். இந்த நிலைமையை மாற்றி சொந்தக் கட்டிடங்களை கட்டி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்கள் சொந்தக் கட்டிடங்களில் இல்லையென்றாலும் கூட, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு நாட்டுப்புறத்தான் போகிறான் என்றால் அங்கே உட்காருவதற்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. நின்று கொண்டே தான் இருக்க வேண்டும். ஒரு சாதாரண பெஞ்சு கூட போடுவதில்லை. எத்தனை மணி நேரம் விசாரணை நடந்தாலும் அத்தனை நேரமும் நின்றுகொண்டேதான் இருக்க வேண்டும். இந்த நிலை இல்லாமல் ஒவ்வொரு ஸ்டேஷன்களிலும் ஒரு சிறிய பெஞ்சாவது போட ஏற்பாடு செய்ய வேண்டும்.

விசாரணைக்கு பெண்களை அழைத்துச் செல்லும்போது பல மணி நேரம் காத்து நிற்க வேண்டியிருக்கிறது. பல மணி நேரம் காக்க வைக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக பல தவறுகள் நடைபெறுகின்றன. அந்த முறையில் காரைக்குடியில் தவறு நடைபெற்றிருக்கிறது. இரவு எட்டு மணிக்கு மேல் விசாரணை செய்யக்கூடாது, இரவு எட்டு மணிக்கு மேல் பெண்களை ஸ்டேஷன்களில் வைத்திருக்கக்கூடாது, வீட்டுக்கு அனுப்பி விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

அதுமட்டுமல்ல. பல காவல் நிலையங்களிலே இன்றைக்கு டெலிபோன் வசதி கிடையாது. அதனால் சரியான தொடர்பு கொள்ள முடியாத நிலைமைகள் இருக்கின்றன. எனவே, டெலிபோன் வசதி ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, ஒருசில குறைபாடுகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. 1971-ல் திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, இப்பொழுது நடந்த எலக்ஷனில்

[திரு. செ. சிவசாமி] [1978 மார்ச் 16

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக
இருந்தாலும் சரி, நாங்கள் வந்தவுடன் முக்காட்டு கேஸை
எடுத்து விடுவோம்., முக்காட்டு கேஸ் போடுவதை எடுத்துவிடு
வோம் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று மேடையிலே
சொன்னார்கள். ஆனால் இன்று வரைக்கும் அந்த முக்காட்டு கேஸ்
போடுவது நின்றபாடில்லை.

பஸ் ஸ்டாண்டிலும், ரயில்வே ஸ்டேஷன்களிலும், மற்றும்
பொது இடங்களிலும் சர்வ சாதாரண விவசாய மக்கள், கூலி
வேலை செய்கிற மக்கள் மீது முக்காட்டு கேஸ்கள் போடப்படு
கிற நிலை மாற வேண்டும். சாதாரண மக்களுக்குச் சேவை
செய்கின்ற முறையில், பொதுமக்களுக்கு சேவை செய்கின்ற
முறையில் இருக்க வேண்டுமே தவிர, முக்காட்டு கேஸ் போடு
கிறார்கள் என்று சொல்லி பொது ஜனங்களுக்கு போலீஸ்பேரில்
ஒரு அவக்கேடு இருந்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கும்
இந்த நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

காவலர்களின் எண்ணிக்கையை ஒவ்வொரு போலீஸ் ஸடேஷ
னிலும் அதிகப்படுத்த வேண்டும். காவல் நிலையங்களுக்கு
வரக்கூடிய கேஸ் கொடுப்பதற்கு வரக்கூடிய சாதாரண விவ
சாயி மக்களிடம் காவலர்கள் மரியாதையாக நடந்துகொள்ள
வேண்டும். காவலர்கள் அப்படி பொதுமக்களிடம் நடந்து
கொள்ள சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

இளையாங்குடியில் கடந்த காலத்தில் ஒரு கேஸ் நடந்தது.
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நணபா
பேரிலும், எங்கள் கட்சிக்காரர்கள் பேரிலும் கேஸ் போடப
பட்டிருந்தது. அந்த கேசுக்கு 53 வாய்தாக்கள் கொடுக்கப்
பட்டிருக்கிறது. கடைசியில் இந்த கேஸ் ஒன்றுமில்லாமல்
போய்விட்டது. சர்வ சாதாரணமான கேஸ். என் போன்ற
வர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
நண்பர்கள் ஒட்டலுக்குள்ளே நுழைந்து, கல்லை எறிந்து, ஓட்ட
லிலே உள்ள தின்பண்டங்களை எடுத்து சாப்பிட்டோம் என்று
எங்கள் மீது கேஸ் போடப்பட்டது. இந்த கேசுக்கு 53 வாய்
தாக்கள் கொடுக்கப்பட்டது. எங்கு பார்த்தாலும் பொய்க்
கேசு போடக்கூடிய நிலைமை இன்னும் இருக்கிறது. இந்த பொய்
கேஸ் போடும் நிலைமையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

பலதடவைகள் என்மேல் பொய் கேசு போடப்பட்டிருக்
கிறது. கிட்டத்தட்ட 16 தடவைகள் அப்படி பொய் கேசு
போட்டு என்னை ஜெயிலுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நான்
16 தடவை அப்படி ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். **அது**
மட்டுமல்ல. **23 கேஸ்கள் என் மீது போடப்பட்டு, பொய் கேசு**

1978 மார்ச் 16] [திரு. செ. சிவசாமி]

என்று நிரூபிக்கப்பட்டு, தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பொய் கேஸ் போடுகிற முறை சர்வ சாதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும்.

அதே நேரத்திலே, போலீஸ் ஸ்டேஷன்களிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து வாய்க்கு வந்தபடி பேசுகின்ற நிலைமையும் இருந்துகொண்டு வருகிறது. அவர்களை அக்கிரமமாகப் பேசி வம்புக்கு இழுக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்து ஒரு நண்பர் , 'வாடா, போடா' என்று அங்கிருக்கிற சப்-இன்ஸ்பெக்டர், இன்பெக்டர்கள் ஆகியவர்களைக் கூப்பிடக்கூடிய அளவிற்கு ஆளுங்கட்சி நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்கிறேன். இந்த நிலைமை மாறவேண்டும்.

இந்த போலீஸ் இலாகா இல்லாவிட்டால், போலீஸ் ஆபீசர்கள் இல்லாவிட்டால், இந்த நாட்டிலே எதுவும் இல்லை. 24 மணி நேரத்திற்கு போலீஸ் செயலிழந்து இருந்தால், நிச்சயமாக இந்த நாட்டினுடைய அமைதி, நாட்டினுடைய தன்மை, இந்த நாட்டினுடைய சுமுகமான நிலைமை பாதுகாக்கப்பட முடியாது. அந்த முறையில் தான் நான் சொல்கிறேன். போலீஸ்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையும், மதிப்பும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாராயம் காய்ச்சுவதைப் பற்றி ஏற்கனவே நான் ஒரு முறை சொல்லியிருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன். சாராயம் காய்ச்சுவது என்பது இன்றைக்கு எந்த அளவுக்கு கண்ட்ரோல் பண்ண முடியாத அளவுக்கு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். ஆபீசர்களே முன்முயற்சி எடுத்துக்கொண்டு, இதிலே ஆதரவாக ஈடுபடுவதால், இந்தச் சிறிய பிரச்னை பெரிய பிரச்னையாக வளர்ந்திருக்கிறது.

எங்கள் பகுதியில், கிழக்கு இராமநாதபுரத்தில் ஒரு போலீஸ் ஸ்டேஷனில், எஸ்.ஐ. வீட்டிலேயே சாராயம் வைத்து விற்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இன்று வரையிலும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை உங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன். சப் இன்ஸ்பெக்டர் வீட்டிலேயே சாராயம் விற்கப்படுகின்ற நிலைமை இருந்தால், நாட்டிலே சாராயம் வியாபாரம் செய்வதை வேறு யார் கேட்பார்கள் ?

இதையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். இங்கே இருக்கக்கூடிய போலீஸ் ஆபீசர்கள், ஐ.ஜி. அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, நாட்டிலே சாராயம் காய்ச்சப்படுவதை

அறவே தடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும் ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் என்று குறிப்பிட்ட காலத்திற்குள் நிறுத்தியாக வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சபதத்தின் அடிப்படையில் நீங்கள் அதை நிறுத்தாவிட்டால் நீங்கள் எதற்காகத்தான் இருக்கிறீர்கள்? இந்த நாட்டுக்காக நீங்கள் இல்லை என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளையாங்குடியில் முஸ்லீம்கள் மிகுதியாக இருக்கக்கூடிய பகுதியில் இரவு நேரங்களில் ரெய்டு செய்யப்பட்டிருக்கிறது. என் மேல் ஒரு கேஸ் 24 மணி நேரத்தில் என்னைப் பிடித்துவிட வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். ஒரு முஸ்லீம் வீட்டில் நான் ஒளிந்திருப்பதாகக் கருதி இரவு 12 மணிக்கு மேல் 2 மணி, 3 மணிக்கு பர்தா சிஸ்டத்திலுள்ள முஸ்லீம் பெண்கள் உள்ள வீடுகளில் ரெய்டு செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி ரெய்டு செய்வது பத்தாம் பசலி பிரிட்டிஷ் சிஸ்டம். இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சைக்கிளில் டபிள்ஸ் போக அனுமதிக்க வேண்டுமென்று ஏற்கனவே உறுப்பினர்கள் சொன்னார்கள். சட்டபூர்வமாக இல்லாத ஒன்றை போலீஸ் எப்படித் தடுக்க முடியும்? சைக்கிளில் டபிள்ஸ் போனால் போலீஸ் கேஸ் போடுவது அக்கிரமம். சைக்கிள் ஏழைகளின் போக்குவரத்து வாகனம். ஆகவே, இன்று முதலமைச்சர் அவர்கள் சைக்கிளில் டபிள்ஸ் போகலாம் என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல போலீஸ்காரர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பீடி பிடிப்பதில்லை, சிகரெட் பிடிப்பதில்லை. மேலதிகாரிகளிடம் பணிவாக இருக்கிறார்கள்; ஒழுங்காக வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலையில் உயர்வு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களும், தவறு செய்பவர்களும் ஒரே நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலை உயர்வுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியில் தெ. புதுக்கோட்டை, ஆனந்தூர் ஆக இரண்டு அவுட் போஸ்டுகளைத் திறக்க வேண்டும். இன்று போராட்டங்கள் நடந்தன. விலைவாசி உயர்வு காரணமாக கொடுக்கப்படுகிற ஊதிய உயர்வு போலீஸ்காரர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்; போலீஸ்காரர்கள் சம்பளத்தையும் உயர்த்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய பட்டணத்தில் கடற்கரை ஓரத்தில் நாட்டுப் படகுக் காரர்களுக்கும் மெஷின் படகுக் காரர்களுக்கும் சண்டை கடந்த மூன்று வருஷ காலமாக இருந்து வந்தது. நானும் மதிப்பிற்குரிய

சுப்பிரமணியம் அவர்களும், கூத்தக்குடி சண்முகம் அவர்களும் இரண்டு நாட்கள் அங்கேயே தங்கி சமாதானப் படுத்தி எந்த விதமான தகராறும் இல்லாமல் முடித்து வைத்திருக்கிறோம். இது முடிந்து கிட்டத்தட்ட ஆறு மாத காலம் ஆகிறது. கேஸ் வாபஸ் செய்யப்படவில்லை. இந்த முறை மாற வேண்டும். சமாதான முறையில் தீர்க்கப்பட்ட பிறகு டெபுடி கலெக்டர், டெபுடி சூப்பரன்டென்டெண்ட் முன்னிலையில் சமாதானப் பேச்சு நடந்து முடிந்த பிறகு கேஸை வாபஸ் வாங்காமல் இருப்பது சரியல்ல. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக் கூடாது.

தீயணைப்பைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். தீயணைப்புப் பணிக்காக 'ஸ்நார்கல்' என்ற புதிய சாதனத்தை வாங்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மூன்று வருஷத்திற்கு முன்பு எல்.ஐ.சி. கட்டிடத்தில் தீப் பிடித்தது. என்ன காரணம் என்று இதுவரை சொல்லப்படவில்லை. 14 மாடிக் கட்டிடத்தைக் கட்ட யார் அனுமதி கொடுத்தது? அது தீப் பிடித்து எரியும்போது வேடிக்கைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடிப்படையிலேயே கோளாறு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 12-50.)

இப்படி முரண்பட்ட முறையை மாற்றி எங்காவது கட்டடம் கட்டக்கூடிய நேரத்திலே தீப்பிடித்து விட்டால் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் அப்போதே எடுக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கடைசியாக இளையான் குடியிலேயும், ஆர். எஸ். மங்கலத்திலேயும் தீயணைப்பு நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது நான் பேச ஆரம்பிக்கிறபோது மனவேதனை கொண்ட மனநிலையோடு துவக்க வேண்டியிருக்கிறது.

எங்களுடைய அருமைத் தோழர் வெங்கடாசலம் அவர்களைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிப்பது தமிழகப் போலீஸ் துறைக்கு ஏற்பட்ட ஒரு சவால் என்று அன்றைக்கு முதலமைச்சர் சார்பாக இங்கே படிக்கப்பட்டது. அது உண்மையுங்கூட. ஆனால் இன்று வரையிலும் ஒரு துப்பும் கிடைக்கவில்லை என்பது தான் உண்மை. இன்றைக்கு அந்த தோழர் வெங்கடாசலத்தோடு மட்டும் நிற்காமல் அவருடைய உறவினர்களையும் அவர்களுடைய ஊரிலே உள்ள எங்கள் கட்சித் தோழர்களையும் அந்த வட்டாரத்திலேயே எங்கள் கட்சியை அழிக்க போலிஸ் உதவி

[திரு. ரா. உமாநாத்] [1978 மார்ச் 16

யோடு அங்கே நிலப் பிரபுக்கள் வெற்றிகரமாக ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கடுமையான விஷயமாகச் சொல்ல விரும்புகிறேன்.

சமீபத்திலே நடைபெற்றிருக்கக்கூடிய இன்னொரு கொலை செய்யப்பட்டதை, எதிரிகளைத் பயன்படுத்தி—நான் அழுத்தந் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். கொலைக்குக் கொலை செய்வது என்பது எங்களுடைய கொள்கை அல்ல, எங்கள் தந்திரமல்ல அதனால் தான் நாங்கள் நக்சலைட்டை எங்கள் கட்சியிலிருந்து நீக்கினோம். எங்களுக்கும் அவர்களுக்கும் சண்டை, தோழர் வெங்கிடாசலம் கொலை செய்யப்பட்டார், அந்த நிலப் பிரபுக்கள் இன்னொரு கொலையைப் பயன்படுத்திக் கொண்டு, போலீஸ் துணையுடன் நான் முன்னர் குறிப்பிட்டவர்களை, சிறைப் படுத்தி இருக்கிறார்கள்.

இன்னொரு செய்தி நான் கேள்விப்பட்டேன். தோழர் வெங்கடாசலம் கொலை செய்யப்பட்ட போது தமிழ்நாடு பூராவும் ஊர்வலங்கள் நடந்தன தஞ்சையிலே பிரம்மாண்டமான ஊர்வலம் நடந்தது, நானும் எங்கள் கட்சியைச் சேர்ந்த மற்ற தோழர்களும் ஆட்சேபித்துப் பேசினோம். நான் கேள்விப்பட்டேன், மேற்குத் தஞ்சை போலீஸ் அந்த ஸ்பீச்சையெல்லாம் எடுத்து வைத்து, நாங்கள் தூண்டியதன் விளைவாக இரண்டாவது கொலை நடந்ததாக சதி வழக்கு போடுவதாக யோசித்துக் கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மையாக இருந்தால் மேற்குத் தஞ்சை போலீஸுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப் பட்ட வழக்குகளை சந்தித்த கட்சி எங்கள் கட்சி, தோழர் குமாரமங்கலம், தோழர் ராமமூர்த்தி, நான் எல்லோரின் மேலும் சதிவழக்குப் போட்டு வெள்ளைக்காரன் கொண்டு போய் விட்டான், அதைச் சந்தித்தோம் வெற்றிகரமாக.

அதற்குப் பிறகு 1950–52 இல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி இருந்தபோது வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டபோது ஒரு கிளாஷிலே ஏற்பட்ட சாவைப் பயன்படுத்திக்கொண்டு கொலை கேஸ் என் பேரிலே போட்டு, அதையும் சந்தித்தவர்கள் தான் நானும் என்னுடைய தோழர்களும்.

பிறகு அதே காங்கிரஸ் ஆட்சியில் 120 பி செக்ஷனிலே சதி வழக்குப் போட்டார்கள். இப்படி இவைகளையெல்லாம் சந்தித்த கட்சி தான் எங்கள் கட்சி. ஆகவே மேற்கு தஞ்சைப் போலீஸ் இந்த அவையிலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—அப்படி வழக்குப்போடக்கூடிய ஏற்பாடு ஏதாவது இருந்தால் போடுங்கள், அதைச் சந்திக்க நானும் எங்கள் கட்சியும் தயாராக இருக்கிறோம். We will face it bo'dly.

1978 மார்ச் 16] [திரு. ரா. உமாநாத்]

தொழில் தகராறுகளில் போலீஸ் கொள்கை சம்பந்தமாக சொல்ல வேண்டும். போலீஸ் அவைகளில் தலையிடாது என்று முதலமைச்சர் அவர்கள் பாலிஸி ஸ்டேட்மெண்ட் செய்துள்ளார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். அதை எப்படி அமல் படுத்துவது என்பதை முதலமைச்சர்அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு அமைதியான வேலை நிறுத்தம் நடைபெறுகிறபோது பெரும் போலீஸ்படையை காட்டுவது show of Police strength itself அதைக் காட்டி ஒரு பீதியை உண்டாக்குவது அந்த வேலை நிறுத்தத்தைக் கலைப்பதற்கு முதலாளிகளுடைய வேலை.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்–தலைமை)

அமைதியாக நடந்து கொண்டிருக்கும். ஆனால் முதலாளி போன் பண்ணுவார், to serve their purpose சதிநடக்கிறதுஎன்று. உடனே இரண்டு மூன்று லாரிகளிலே போலீஸ் வருகிறது. அந்த போலீஸ் வந்து ஸ்டிரைக்கை வீக்கன் பண்ணவேண்டுமென்ற நிலையில் அவர்கள் பொய் கம்ப்ளெயின்ட் கொடுத்து போலீஸ் படையை அங்கே கொண்டு வந்து இறக்குவது என்றால், அமைதியாகநடக்கும் வேலை நிறுத்தத்தில் போலீஸ் தலையிடுவது ஆகாதா ?

வேலை நிறுத்த காலத்தில் வேலைக்குச் செல்வது அவருடைய ஃபண்டமெண்டல் ரைட் என்று அரசாங்கம் கூறுகிறது, அடிப்படை உரிமை என்று கூறுகிறது. அதேமாதிரி இன்னொரு உரிமையும் உண்டு. ‘ வேலைக்குப் போகாதே ’ என்று கேட்டில் நின்று அமைதியாககோரவேலைநிறுத்தத்தில்ஈடுபட்டவர்களுக்கும் உரிமை உண்டு. ஆனால், கருங்காலிகளை வாகனங்களில் ஏற்றி முன்னும் பின்னும் போலீஸ் லாரிகள் எஸ்கார்ட் செய்வதும், பேக்டரியில் இறக்கித் தருவதும் ஸ்டிரைக்கர், தன் உரிமையைக் கொண்டாட கேட் முன் நிற்பவர்களை போலீஸ் விரட்டுவதும், கேட் பக்கத்தில் எப்பொழுதும் கூட்டம் போடும் இடத்தில், உரிமை மறுப்பதும் ஆகிய இவற்றையெல்லாம் பார்த்தால் போலீஸ் பகிரங்கமாக முதலாளிக்கு ஆதரவாக தொழில் தகராறில் தலையிடுவதுஆகாதா?
Policy declaration, I welcome, but this Practice . . .
இந்த நடைமுறை அந்த டெக்ளரேஷனுக்கு நேர்மாறாக இருக்கிறது. அதில் ஒர்ஸ்ட் திங் என்னவென்றால், புதிய தொழிலாளர்களை ஸ்டிரைக்கின்பொழுது கொண்டுவருவது. Legally it is wrong. ஏனென்றால் ஸ்டிரைக் செய்கிறார்கள் என்றால் புதுத் தொழிலாளர்களை எடுப்பதற்குச் சட்டப்படி உரிமை கிடையாது. ஏன் ? வேலை நிறுத்தம் நடைபெறும்பொழுது வேலை நீக்கம் செய்யப்படும் வரையில் ஸ்டிரைக் செய்யும் தொழிலாளி மஸ்டர் ரோலில் தொழிலாளியாக இருக்கிறான். So long as I am not dismissed அப்பொழுது புதிய தொழிலாளியைக் கொண்டு வருவது சட்ட விரோதம். புதிதாக தொழிலாளியைக் கொண்டு வருவது, Legally it is wrong அப்படிப்பட்ட சட்டவிரோதமான

காரியத்திற்கு போலீஸ் பாதுகாப்பு முன்னாலும் பின்னாலும் கிடைக்கிறது. இது முதலாளியின் சார்பாகப் போலீஸ் தலையிடுவது ஆகாதா? டெக்ளரேஷன் இருக்கிறது, அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த நடைமுறை டெக்ளரேஷனுக்கு நேர்முரணாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைநிறுத்த காலத்தில் முதலாளிகளின் ரவுடிகள் தொழிலாளிகளைத் தாக்க அனுமதிப்பதும், தொழிலாளர்களைப் போலீஸ் கைது செய்ய பொய் கேஸ் போட போலீசை முதலாளிகள் தூண்டுவதும், அது முதலாளிகளின் தேவை. இது போலீஸ் தலையீடு அல்லவா? இதற்கு நிறைய எக்சாம்பிள்ஸ் வைத்திருக்கிறேன். ஒரேயொரு எக்சாம்பிள் மாத்திரம் சொல்கிறேன்.

பாடியிலே நடந்த சம்பவத்தைப்பற்றிச் சொல்கிறேன், glaring ஆக இருக்கும். 'ஊக்காஸ் எக்ஸ் வைஸ் பிரசிடெண்ட் சிவகுமார்' எட்டே முக்கால் மணிக்கு பட்டப்பகலில் அரிவாளால் வெட்டப்படுகிறார். அவர் வெட்டப்பட்டதற்கு அவர்களுக்குத் தைத்திருக்கும் தையலோடு இருக்கும் போட்டோ இருக்கிறது. இரண்டு மாதங்கள் அவர் ஹாஸ்பிடலில் இருந்தார். அப்படிப்பட்ட வெட்டு. அதுமட்டுமல்ல. முதலில் ஒரு ஆபரேஷன் முடிந்தது. இப்பொழுது இரண்டாவது ஆபரேஷன் தேவை. He is again going to the Hospital பட்டப்பகலில் நடந்தது.

விஷயம் என்னவென்றால் இந்த வெட்டு நடக்கும் பொழுது இரண்டு டி.எஸ்.பி.-க்கள், அந்த ஸ்பாட்டில் இருந்திருக்கிறார்கள். ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர், 400 கான்ஸ்டபிள்ஸ் அந்த ஸ்பாட்டில் நிற்கிறார்கள். அவர்கள் முன்னாலே இந்த வெட்டு நடக்கிறது. நான் எக்ஸ்ரே-கூட வைத்திருக்கிறேன். இரண்டு எலும்பெல்லாம் தெரிகிறது. 2 டி.எஸ்.பி.-க்கள், 1 இன்ஸ்பெக்டர். 400காவலர்கள் இப்படி வெட்டுவதைப் பார்க்கிறார்கள். 'அக்யூஸ்ட்' நன்றாகத் தெரிகிறது. கொலைக்கான முயற்சி ரொம்ப கிளியராகத் தெரிகிறது. சும்மா இருக்கின்ற நிலைமை. வெட்டியவர்கள் முன்னாலேயே பேக்டரிக்குள் போய்விடுகிறார்கள். ஆகவே, 'அசைலன்ட்' யார் என்று தெரியும், இம்பார்டன்ட் ஐ விட்னஸாக அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். பேக்டரிக்குச் சென்றதையும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். கம்ப்ளெயின்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், துர்பாக்கியமான விஷயம் என்னவென்றால், இதுவரைக்கும் யாரும் கைது செய்யப்படவில்லை. ஆபீசர் ஐ விட்னெஸாக இருந்தும் எந்த கேசும் நடைபெறவில்லை.

இப்படி 11 சம்பவங்கள், குத்து வெட்டு சம்பவங்கள் பற்றி விவரங்கள் இருக்கின்றன. ஆனால் நேரமில்லாத காரணத்தால் விளக்கவில்லை. அவைகளுக்கெல்லாம் ரிக்கார்டு இருக்கிறது.

அப்படி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மேனேஜ்மெண்ட் சொல்லி இந்தத் தொழிலாளர்களுடைய கட்டுப்பாட்டை உடைக்க போலீசைத் தூண்டிவிட்டு மேனேஜ்மெண்ட்டுக்கு ஆதரவாகச் செய்திருக்கும் இன்னொரு சம்பவத்தை நான் சொல்கிறேன்.

[பிற்பகல் 1—00]

முதலாளிகள் தூண்டுதல் பேரிலே, தொழிலாளிகள்மேல் 15 கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. 70 தொழிலாளிகள் பேரிலே 15 கேஸ்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த 70 தொழிலாளிகள் 15 கேசிலும் அரஸ்டட். அதுதான் விஷயம். கண்ணெதிரிலே பார்த்தும் கூட அரஸ்ட் இல்லை. ஆனால், தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், Arrested in all the 15 Cases 307-வது செக்ஷன் அவர்கள் பேரிலே. இப்படி பயங்கரமான Partiality of the police in favour of the employers இது நம் சர்க்காருக்கு நல்ல பெயர் தராது. அரசாங்கம் சொன்ன கொள்கைக்கு ஒத்து வராது. திருத்துவதற்காகத்தான் அதை நான் சொல்கிறேன்.

கிளேரிங் எக்சாம்பிள் என்னவென்று சொன்னால், 2 தொழிலாளிகள் ஹாண்ட் பில் விநியோகம் செய்யும் போது, கைது செய்யப்பட்டார்கள். அவர்களை ஜாமீனில் விடக் கூடாது என்று போலீஸ் அஃபிஷியல்ஸ் அப்போஸ் பண்ணினார்கள். ஆனால், மாஜிஸ்டிரேட் அவர்களை விட்டு விட்டார். மாஜிஸ்டிரேட் அவர்களை விட்டு விட்டார் என்பதற்காக, அவர்களை மீண்டும் கைது செய்ய வேண்டுமென்பதற்காக, 1977-வது ஆண்டு ஜூலை மாதத்திலே ஏதோ ஒன்று நடத்தியதாகச் சொல்லி, 1978 ஆம் ஆண்டு அரஸ்ட் பண்ணுகிறார்கள். 307-வது செக்ஷனிலே அரஸ்ட் பண்ணுகிறார்கள் என்றால், What is it for? நம் எல்லோருக்கும் இருக்கிற கட்சி வேறுபாடு ஒருபக்கம் இருக்கட்டும். இந்த மாதிரி சம்பவங்கள் இருந்தால், யாருக்கும் பாதுகாப்பு இராது. இது ஏன் இப்படி நடக்கிறது?

ஏன் இப்படி நடந்தது என்பதற்கு அதற்கு ஒரு பொருத்தமான விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் சிறைக் கொடுமைகள் நடைபெற்றன என்று ஜஸ்டிஸ் இஸ்மாயில் சொல்லியிருக்கக்கூடியதில், பூராவுக்குள்ளும் நான் செல்லவில்லை. அதைத் தனியாக விவாதிக்கப் போகிறோம். இப்பொழுது ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். அவர் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அதில், 19.11-வது பாராவில் கூறியிருக்கிறார், "அப்பொழுது சிறைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்தவர் அன்று சென்னை மத்தியச் சிறைச்சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் தீவிரமாகப் பங்கு பெறாவிட்டாலும், அவர் அவற்றைத் தட்டிக் கேட்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்; மத்தியச் சிறை

யில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவர் எதிர்க்கவில்லை அல்லது வெறுக்கவில்லை.'' ''........ஒரு துறைத் தலைவரிடம் எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புணர்ச்சி அவரிடம் இல்லை என்பதை இந்தச் சாட்சியம் காட்டுகிறது, என்று எந்த அதிகாரியைப்பற்றி ஜஸ்டிஸ் இஸ்மாயில் அறிக்கை கொடுத்திருக்கிறாரோ அந்த அதிகாரி தான் இங்கே Commissioner of Police ஆக இருக்கிறார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆகவே, சிறையிலே அவர் பொறுப்பைத் தட்டிக் கழித்தார் என்று *''பென்டிங்'' இருக்கும்போது, இங்கேயும் Law and Order question வரும்போது The same thing happens இதுதான் காரணம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி நம்முடைய முதலமைச்சர் யாரை குண்டர்கள் என சரியாகச் சொன்னார்களோ, அவர்கள் இன்றைக்கு அந்தப் பாக்டரியில் ''டெரரைஸ்'' பண்ணுகிற சூழ்நிலையிருக்கிறது. ஆனால், எந்தத் தொழிலாளர்கள் பக்கம் நியாயம் இருக்கிறது என நம் முதலமைச்சர் சொன்னாரோ, அந்தத் தொழிலாளர்கள் அந்த கேட்டுக்குப்பக்கத்திலே சாதாரணபொதுக்கூட்டம் போட, தொழிற்சங்கஉரிமைகள்கூட இன்றைக்கு மறுக்கப்படுகிறது. இது என்ன ''கான்ட்ராஸ்ட் ?'' ரவுடிகள் என்பதை முதலமைச்சரே ஒப்புக்கொண்டார். They are there to terrorise அதே நேரத்தில், normal trade union activities அதற்கு அங்கே உரிமை மறுக்கப்படுகிறது. இதிலும் நாம் பிரகடனப் படுத்தியதற்கு மாறான விஷயம்.

அதே மாதிரி, இன்னொரு விஷயம் ஆளுங்கட்சித் தலைவர்கள் கவனிக்க வேண்டியது. இந்த மாதிரிப் போராட்டங்களில் ஆளுங் கட்சித் தொண்டர்கள் தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அடிக்கடி வருகிறது. உடனே நாங்கள் நம்பவில்லை. ஆனால், ''வெரிபை'' பண்ணினோம். ''வெரிபை'' பண்ணிய பிறகு அதிலே உண்மைகள் உண்டு என்பது எங்கள் கருத்து. யோசனைக்காகச் சொல்கின்றேன்.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் ஸ்டிரைக்கின்பொழுது, என். ஜி. ஓ-க்கள் ஸ்டிரைக்கின் பொழுது, இப்பொழுது நேற்று வந்த செய்தி, அதாவது கடலூர் ஆசிரியர் கூட்டணி— அங்கே ஆபீஸ் அலுவலகம் இருக்கிறது. அவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் என்று நடத்திய அந்த நேரத்தில் கடலூர் நகர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளர் 20 பேருடன் சேர்ந்து உள்ளே புகுந்து அட்டாக் பண்ணி, அந்த

பிரசிலே உள்ளதைக் கலைத்து, எல்லாவற்றையும் சேதப் படுத்தி வயலன்சிலே ஈடுபட்டு, அதனால் அடிபட்டவர்கள் ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

அதே மாதிரி, ஸ்டூடன்ஸ் விஷயம் இதிலும், மக்களுக்கும், அவர்களுக்கும் என்று சொன்னால் ஜனங்கள் நம்பமாட்டார்கள். இதையெல்லாம், எதற்காகச் சொல்கிறேன் என்றால், தோழமை முறையிலே நான் கூற விரும்புகின்றேன். இது தொடருமானால், தொழிலாளிகளுக்குப் பழைய கால ஞாபகம் வரும், வந்தால், நிச்சயமாக உங்கள் அந்தஸ்தைப் பாதிக்கும். ஆகவே, சொல்கிறேன், தயவு செய்து Leaders check-up பண்ணி, யாராவது செய்கிறார்கள் என்றால், போலீஸ் இருக்கிறது, போலீஸ் கைது செய்யட்டும். They will face them in the court என்ற முறை இருக்க வேண்டும். ஆனால், நமது கட்சித் தொண்டர்கள் என்ற முறையில் விட்டுவிட்டால், It would mean taking the law in your own hands. சட்டம் பராமரிக்க ஒரு இயந்திரம் இருக்கும்போது, எல்லா கட்சி ஊழியர்களும் அந்தச் சட்டப் பராமரிப்பை தானே கையில் எடுக்கக்கூடாது, அதை நிர்வகிக்கக்கூடாது, அதற்கு போலீஸ் இருக்கிறதென்று விட்டு விட வேண்டுமென்று நான் அட்வைஸ் பண்ணுகிறேன்.

அதேபோல், Mass arrest of workers 3 போராட்டங்களில் மட்டும் 12,000 தொழிலாளிகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதையும் விட்டு விட வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி விவசாயத் தோழர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் போன செஷனுக்கு முந்தைய செஷனில் இந்த அவையில் கூறினார். ஆனால் அதற்கு நேர் மாறாக நடக்கிறது லேன்ட் லார்டு வீட்டில் உட்கார்ந்து கொண்டு They are terroiising the peasents. அங்கே டி. எஸ். பி. நாகப்பட்டினத்திலே அரிசனங்களைத் துன்புறுத்துதல் பல கிராமங்களிலே நடக்கிறது. ஆளுங்கட்சிக் காரர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். இது பற்றி கவனிக்க வேண்டும் என்று. ஏன் என்றால், இது மிவும் சீரியசாக இருக்கிறது. ''பாய்காட்'' பண்ணுகிறார்கள். டீ கொடுப்பதில்லை, பொருள்கள் கொடுப்பதில்லை. ஒரு கிராமத்திலே நடப்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதிலே பேச்சுவார்த்தை நடக்கிறது சமரசம் செய்கிறார்கள். திட்டம் போடுகிறார்கள். The same thing starts. இங்கேதான் போலீஸ் வருகிறது. அரிசனங்களை நிலப் பிரபுக்கள் துன்புறுத்துகிறபோது அந்த கிராமத்திலே இருக்கிற அரிசன மக்களுக்கு ''பேர்ம்'', பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பு போலீசுக்கு இருக்கிறது.

[திரு. ரா. உமாநாத்] [1978 மார்ச் 16

அதே போல கலப்புத் திருமணம். அரிசனப் பெண்ணை ஜாதி இந்து கல்யாணம் செய்கிறார். ஆனால் அந்தத் தெருவிலே உள்ளவர்கள் தினம் தினம் அவர்களை வெளியேற்றுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். குத்துக் கூட நடந்திருக்கிறது, மேல் ஜாதியிலே இருக்கிறவர்கள் குத்துகிறார்கள். ஆனால். கேஸ் போடுவது அந்தப் பெண்ணின் கணவன் பேரிலே. கேஸ் தோற்று விட்டது. Police role is there.

இத்தகைய கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு சில கன்சஷன் கொடுத்தால் மட்டும் போதாது. கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களின் வாழ்க்கைக்கு உலை வைப்பதற்குப் பலர் இருக்கிறார்கள். ஆகவே அப்படிக்கலப்புத் திருமணம் செய்துக் கொண்ட அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு போலீசுக்கு இருக்கிறது. These are social obligations of the police. ஆனால் அவர்கள் அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறார்கள். இன்னொரு யோசனை சொல்கிறேன். இதே மாதிரி தொழில் தகராறுகள்சண்டைசச்சரவுகள் வருகிறபோது, முதலாளிகளுடையகேன்டீனில் சாப்பிடக் கூடாது. They must not eat there.

அதே மாதிரி கிராமங்களில் தகராறுகள் வரும்போது அதை தீர்ப்பதற்காக வருகின்ற போலீசார்கள் நிலப் பிரபுக்கள் வீட்டிலே போய் உட்காரக்கூடாது. அதைத் திட்டவட்டமாக அரசாங்கம் தடுக்கவேண்டும். அப்படித் தடுக்காவிட்டால் நிச்சயமாக நியாயம் வழங்க முடியாது.

அடுத்தது, பெண்கள் சம்பந்தமாக மாதர் தூது கோஷ்டிக்கு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். அதாவது மாலை 6 மணிக்கு மேல் பெண்களை லாக்கப்பில் வைக்க மாட்டோம் என்று, நல்ல எண்ணம் அவருக்கிருக்கிறது, The question is how it is impelmented again.

ஆனால், அது எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்றால், ஒரு ஸ்டேஷனிலே இல்லை என்றால் இன்னொரு ஸ்டேஷனில் இது நடந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு டாக்டர் வீட்டில் சமையல்வேலைசெய்துவந்தவர்சாந்தாபாய். அந்த வீட்டில் தங்கச் சங்கிலி காணவில்லை என்று அவர் மீது வேப்பேரி போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுக்கப்படுகிறது. வேப்பேரி போலீசார் அவரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். அந்த போலீஸ் ஸ்டேஷனில்என்ன நடந்தது என்றுஅந்தஅம்மையார்முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்த மனுவில் இருந்து அந்த போர்ஷனை மட்டும் படிக்கிறேன்.

1978 மார்ச் 16] [திரு. ரா. உமாநாத்]

" 24—2—1978-ந் தேதி காலை 11-30 மணிக்கு ஒரு காவலர் என்னை வேப்பேரி காவல் நிலையத்திற்குக் கொண்டு போனான். அங்கு ஒரு காவலர் என்னைக் கேள்வி கேட்டார். நான் குற்றச் சாட்டை மறுத்துவிட்டேன். உடனே அந்தக் காவலர் என் கன்னத்தில் பலதடவை அறைந்தான். என் கன்னங்கள் விங்கி சிவந்துவிட்டன. அதற்குப் பிறகு லத்தியால் பலதரம் இடுப்பில் அடித்தான். அந்த இடத்தில் ரத்தம் கட்டி கருத்துப் போய் பல நாட்கள் வீங்கிப் போயிருந்தது. இரவில் லாக்கப்பில் வைத்தனர் மறுநாள் நான் இரசீதுடன் அடகுக்காரரிடம் அடகு வைத்த என் தங்கச் சங்கிலியைக்கொண்டுபோய் டாக்டரிடம் காட்டினார்கள் டாக்டர் அது தனது அல்ல என்றார். 24—2—1978 காலை11.30 முதல் 25-ந்தேதி மாலை 7மணி வரை வைத்தனர். மாதர் சங்கத் தலைவி மைதிலி சிவராமன் வந்து வாதாடியபிறகு விடுதலை செய்தனர்".

(பிற்பகல் 1-10)

குற்றம் செய்யாத ஒரு பெண்ணை இரவு முழுக்க லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள். இப்படி ஏன் ஒரு பெண்ணை ரிமாண்டில் வைத்திருக்கிறீர்கள் என்று போலீஸ் கான்ஸ்டபிளைக் கேட்டால், 'ஒரு பெண்ணா இருக்கிறாள். 4 பெண்கள் இருக்கிறார்கள்". என்று சொல்கிறார்.

6 மணிக்குமேல் பெண்ணைக்காவல் நிலையத்தில் வைக்கக்கூடாது என்று சீஃப் மினிஸ்டர் சொல்கிறார். ஹௌ வில் யூ ஸ்டாப் இட்? 6 மணிக்குமேல் ஒரு பெண்ணை போலீஸ் ஸ்டேஷனில் வைக்கக்கூடாது என்று தெரிந்தும் அங்கே வைத்திருக்கிறார் என்றால் இது எவ்வளவு பெரிய இழிவான செயல் என்பதை அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் (1) பெண் குற்றவாளியாக இருந்தால் இம்மிடியட் பெயில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்; (2) இம்மிடியேட் ரிமாண்ட் செய்து, பகலிலே கைது செய்தால், பெண்கள் லாக்கப்புக்கு அனுப்பிவிட வேண்டும். அப்படி அனுப்பாமல் வைத்திருக்கக்கூடிய போலீஸ் அதிகாரியை உடனடியாக அரஸ்ட் செய்ய வேண்டும். அதற்குச் சட்டத்தில் இடமில்லை என்றால் இந்த மன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள்; நாங்கள் அனைவரும் அந்தச் சட்டத்தை வரவேற்று, நிறைவேற்றித் தருகிறோம். (3) ஒவ்வொரு மெயின் போலீஸ் ஸ்டேஷனிலும் உமன் போலீசும் ஒரு உமன் லாக்கப்பும் இருக்க வேண்டும்; தவிர்க்க முடியாத காரணங்களால் போலீஸ் ஸ்டேஷனில் ஒரு பெண்ணை வைக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அந்த உமன் லாக்கப்பில் பெண் இருக்க வேண்டும்; உமன் போலீசும் அங்கே இருக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. ரா. உமாநாத்] [1978 மார்ச் 16

அடுத்தபடியாக, கைது என்று சொல்லி, ரெக்கார்டு பண்ணாமல் நாட்கணக்கில் போலீஸ் கஸ்டடியில் வைப்பது சாதாரணமாக இருக்கிறது. அதில்தான் சித்திரவதை எல்லாம் நடக்கிறது. செய்தி தெரிந்தவுடனே போலீஸ் மேலதிகாரிக்குத்தகவல் கொடுத்தால், அவர் வருவது இவர்களுக்கு எப்படித் தெரியுமோ தெரியவில்லை, அவர் வருவதற்குள் ஸ்டேஷன் விட்டு ஸ்டேஷன் மாற்றியிருக்கிறார்கள்; சில சமயங்களில் டிஸ்டிரிக்ட் விட்டு டிஸ்டிரிக்ட் கூட மாற்றிவிடுகிறார்கள்; அவர் வந்து பார்த்துவிட்டு அப்படி ஒன்றும் இல்லையே என்று சொல்கிறார். எல்லாம் போலீஸ்காரர்கள்தானே, அவர்களுக்குள் அட்ஜஸ்ட் செய்துவிடுகிறார்கள்.

அந்த மாதிரி செய்தி வந்தால், உடனடியாக ஒரு தாசில்தார், அல்லது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அல்லது எம்.எல். ஏ., அல்லது எம்.பி. போய் செக்கப் பண்ணுவதற்கு பவர் இருக்க வேண்டும். இப்போது ஃபஸ்ட்கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுக்குத்தான் அந்த பவர் இருக்கிறது. எம்.எல்.ஏ., எம்.பி. போன்றவர்களுக்கு அந்த பவர் இருந்தால் உடனடியாகப் போய் உள்ளே செக்கப் செய்ய வசதியாக இருக்கும்; அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போலீஸ் ஸ்டேஷனில் நடைபெறும் லஞ்ச ஊழல் மிகப் பயங்கரமானது. அதுபற்றிய செய்தியும் வந்திருக்கிறது. கேஸ் ரெஜிஸ்டர் பண்ண வேண்டுமென்றால் லஞ்சம் கொடுக்க வேண்டும். மறு பார்ட்டி கூடுதல் லஞ்சம் கொடுத்தால் முதலில் கொடுத்தவரின் கேஸை ரெஜிஸ்டர் பண்ண மாட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நிலை இருக்கிறது.

சிவகிரி போலீஸ் சரகத்தில் பிள்ளையார் என்பவர் கொலை செய்யப்பட்டார். (குறுக்கீடு) அந்தப்பிள்ளையார் அல்ல; அவர் ஒரு மனிதப் பிள்ளையார். 'ஐ விட்னஸ்'— அதைப் பார்த்த ஒருவர் ஐ விட்னஸ் ஸ்டேட்மென்ட் கொடுத்தார். அவருடைய ஸ்டேட்மென்டை போலீசார் ஏற்றுக்கொள்ளவில்லை. கேஸ் ரெஜிஸ்டர் செய்யவில்லை; இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சேலத்தில் இளம் புலவர் கேசவன் மனைவியை போலீசார் கடத்திச் சென்றுவிட்டார்கள். கம்பிளைன்ட் கொடுத்து 7 வருஷம் ஆகிவிட்டது. இன்னும் கேஸ் ரெஜிடர் செய்யவில்லை. அவர் மனைவியின் நிலை என்ன ஆச்சோ, யாருக்கும் தெரியாது. இந்தமாதிரியான நிலைமைகள் எல்லாம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் காரணமானாலும் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

1978 மார்ச் 16] [திரு. ரா. உமாநாத்]

ஊழல் விஷயத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, போலீஸ் அதிகாரிகளின் சொத்துக்களைக் கண்காணிக்க வேண்டும். பெரிய போலீஸ் அதிகாரிகளின் 15 ஆண்டு சொத்துக் கணக்கைப்பற்றி ஒரு என்குயரி வைக்க வேண்டும். 15 வருஷத்திற்கு முன்னால் அவருக்கு எவ்வளவு சொத்து இருந்தது, 15 வருஷத்திற்குப் பின்னால் எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதைக கணக்குப் பார்த்து, அவருக்கு உரியதகுதிக்கு அப்போது இருக்கிற சொத்தின் மதிப்பு போதுமானதாக இருக்கிறதா அல்லது அதிகமாக இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து, அதற்கு என்குயரி வைத்து, எப்படி அந்தச் சொத்து சேர்க்கப்பட்டது என்பதைக்கண்டறிந்து, அதறகுத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அளவுக்கு மீறி சொத்து சேர்த்திருக்கிறார்கள் என்பதற்கு அண்ணா நகரில் போய்ப் பார்த்தால் 25 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட கட்டடங்கள் சாட்சி சொல்லும்.

போலீஸ் கஸ்டடியில் ஒருவர் செத்துவிட்டால், அதுபற்றி அரசாங்கம் என்குயரி கண்டக்ட் பண்ணினால், ஆர்.டி.ஓ. என்குயர் பண்ணுவதாக இருந்தாலும் அல்லது வேறு யார் என்குயர் பண்ணுவதாக இருந்தாலும் 'ஃபேர் என்குயரி' இருக்க வேண்டும். ஜஸ்டிஸ் இஸ் டன் என்று சொன்னால் போதாது. நியாயம் வழங்கப்படாவிட்டாலும் நியாயம் வழங்கின மாதிரியாவது தோன்ற வேண்டும். அந்த என்குயரி நடக்கிறபோது கன்சர்ன்ட் போலீஸ் ஆபீசர்ஸ்— எஸ்.பி. அல்லது டி.எஸ்.பி.— டெம்பரரி ட்ரான்ஸ்ஃபர் செய்யப்பட வேண்டும். இல்லை என்றால் உண்மையான சூழ்நிலை மறைக்கப்பட்டுவிடும். நம்முடைய கோவிந்தராஜனை ஹான்ட் கஃபிங் போட்டு அழைத்துச் சென்றதாக கம்பிளைன்ட் வந்தது. செக்ஷன் 307-ல் கேஸ் போட்டார்கள். என்குயரி என்றார்கள். இவர் கொடுத்த கம்பிளைன்டை தள்ளிவிட்டார்கள். அவர்கள் போட்ட கேஸ் சரி என்றார்கள். இது 'பார்ஷியல்' தானே. ஆகவே, அதிகாரிகளை டெம்பரரியாக ட்ரான்ஸ்ஃபர் பண்ண வேண்டும். என்குயரி எல்லாம் முடிந்த பின்னால் அவர்மீது குற்றம் இல்லை என்றால் அவரைப் பழைய இடத்திற்கே மீண்டும் போஸ்டிங்ஸ் கொடுக்கலாம். அவர்மீது குற்றம் இருக்கிறது என்று கண்டறிந்தால் அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுங்கள்.

அதேமாதிரி சீராளன் கொலை வழக்கு சம்பந்தமாக கேஸ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. கொலை செய்ததாகக் கூறப்படும் போலீஸ் அதிகாரியை இன்னும் கைது செய்யாமல் வைத்திருக்கிறார்கள். இதிலே ஏதோ புரொசீஜர் குறுக்கே நிற்கிறது என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே நாங்கள் திடுக்கிட்டோம். ஏன் கைது செய்யப்படவில்லை?

அப்படியானுல் இரண்டு வகையான சிட்டிஷன்ஷிப்பா? பிரஜை கொலை செய்தால் கைது செய்ய வேண்டும். ஆனுல் போலீஸ் அதிகாரி கொலை செய்தால் கைது செய்வதில்லை. இன்றைக்கும் அவர் கைது செய்யப்படவில்லை. இரண்டு க்ளாஸ் ஆஃப் சிட்டிஷன்ஷிப் இருக்கக்கூடாது. யாராக இருந்தாலும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், மற்றும் யாராக இருந்தாலும், 'ஹி இஸ் ஈக்வல் பிஃபோர் தி லா' என்ற அடிப்படையில் கைது செய்யவேண்டும். போலீஸ அதிகாரி என்ருல் அபவ் தி பார்லிமெண்ட் உறுப்பினரா, அபவ் தி அசெம்பிளி மெம்பரா? ஆகவே, யாராக இருந்தாலும் குற்றம் சாட்டப்படுமேயானுல் கைது செய்து வழக்குத்தொடர வேண்டும்.

கேரளத்திலே இதே மாதிரி ஒரு கேஸிலே சம்பந்தப்பட்டவரை கைதுசெய்து கஸ்டடியிலே வைத்து இன்றைக்கு கோயம்புத்தூரிலே வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே யாராக இருந்தாலும் கைது செய்ய வேண்டும்.

அடுத்து போலீஸ் அதிகாரிகள், கிளர்ச்சிகள் என்று வரும்போது மிகத் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டும்........ உயிர்க் கொலையைத் தவிர்க்கவேண்டும்........(குறுக்கீடு)

திரு. வே. ரா. ஜெயராமன்: தலைவரவர்களே, சட்டத்தில் எங்கேயும் கைது செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

திரு. ரா. உமாநாத்: அந்தச் சட்டம் நான் பார்த்தது இல்லை. ஏதோ புதுச் சட்டம் போல் இருக்கிறது. ஐ வில் வெரிஃபை.

அடுத்து ஃபையரிங், லத்திச் சார்ஜ்போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். போலீஸ் அதிகாரிகள் நினைத்தால் தவிர்க்க முடியும். அவர்கள் தந்திரமாகத் தவிர்க்க முடியும். அப்படித் தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் வருகிறபோது ஆளைக் கொல்லாமல் செய்யுங்கள் என்றுதான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு நாடுகளில் பீரங்கி வைத்திருக்கிறார்களாம். அது தண்ணீர் பீரங்கியாம். அந்தப் பீரங்கியிலிருந்து தண்ணீர் அடித்தால் அந்தத் தண்ணீர் முன் கூட்டம் நிற்க முடியாதாம். அது மாதிரி முறைகளைக் கையாண்டு தயவு செய்து ஆளைக் கொல்லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் என்று தான் கேட்டுக்கொள்கிறேன.

அடுத்து ஆட்டோமெட்டிக் ஜுடிஷியல் என்கொயரி முறை வரவேண்டும். எங்கே ஃபையரிங் மற்றும் எது நடந்தாலும் உடனே அரசாங்கத்தின் டிஸ்கிரிஷன் இல்லாமல் ஆட்டோமெட்டிக்காக என்கொயரிவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'ரெய்டு சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதை டைட்டன் பண்ண வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் நினைக்கிறுர்கள். போலீஸ்காரர்களால் எப்படிச் செய்ய முடியும்? அவர்கள் வருமானம் போய்விடும் என்று பார்க்கிறுர்கள். அவர்கள் ரெய்டு செய்வதற்காகப் போனுல் நேற்றுதானேகாசு வாங்கிக்கொண்டுபோனுய், இன்றைக்கு ரெய்டு பண்ண வந்துவிட்டாயா என்று கேட்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வருமானம் போய்விடும் என்ற பயத்தில் அவர்களால் ரெய்டு செய்ய முடியவில்லை. 'ஹவ் கேன் தே டூ இட்? ஆனுல் மேலே இருந்து நிர்ப்பந்திக்கப்படுகிறுர்கள். அப்படி நிர்ப்பந்திக்கப்படுகிற சமயத்திலே அங்கே துறையூரிலே ஆண்களையும் பெண்களையும் கழுத்தில் கயிறு கட்டி ப்ரொகிபிஷன் ரெய்டு என்ற பெயரில் தெருவிலே ஊர்வலமாக இழுத்து வருகிறுர்கள். எப்படிச் செய்தால் அரசாங்கத்திற்கு எதிராக ஜனங்களைத் தூண்டிவிடமுடியுமோ அந்த அளவிற்கு ஜனங்களுக்கு அரசாங்கத்தின் மீது வெறுப்பு ஏற்படுகின்ற வகையில் இந்த மாதிரி காரியங்களைச் செய்கிறுர்கள். ஆகவே அரசாங்கம் தயவுசெய்து இதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெயில் நெருக்கடி இருக்கிறது. ஜெயிலில் இன்றைக்கு நிறைய ப்ரஷர் இருக்கிறது. ஆகவே பெய்லபிள், நான் பெய்லபிள் என்று இருக்கிறது. இதில் பெய்லபிளைக் கொஞ்சம் இன்க்ரீஸ் பண்ணுங்கள். அப்போதுதான் இந்த நெருக்கடி குறையும்.

[பிற்பகல் 1-20]

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

ஆக்கபூர்வமான யோசனை சொல்கிறேன். நான்—பெய்லபிள் அஃபன்ஸை, எதை எதை பெயிலபிளாக ஆக்கலாம் என்று கருதுகிறுர்களோ அவற்றை பெயிலபிளாக ஆக்கினுல் 'ப்ரஷர் ஆன் ஜெயில்ஸ்' குறையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு ரூலிங் கொடுக்கிறேன். அதைச் சொல்லிவிடுகிறேன். கனம் உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள்

* * * *

என்று ஆரம்பித்ததிலிருந்து குழப்பம் உருவானது. அதிலிருந்து கடைசிவரை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் வேண்டுகோள்வரை சொன்ன அத்தனையையும்அத்தனை குறிப்புகளை

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கு இணங்க முற்பகல் 1-20—1-25இல் சில சொற்கள் அகற்றப் பெற்றன.

யும் நடவடிக்கை குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். திரு. சுப்பு கூறியதிலிருந்து கடைசியில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் வரை நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : எதிர்க்கட்சித் தலைவர் பேசியது நீக்கப்பட்டது என்று ஏடுகளில் வருமானால் நான் ஏதோ தவறாகப் பேசியதாக ஒரு எண்ணம் மற்றவர்களுக்கு ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவும் வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதிலிருந்து எதுவும் வரக்கூடாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ சொன்னார்கள், அதோடு நின்றுவிடும் என்று வரக்கூடாது.

திரு. துரை முத்துசாமி : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த நோக்கோடு தீர்ப்பு கொடுத்தேனோ அதற்கு மறுபடியும் உயிர் கொடுக்கிறீர்கள். தனியாக வந்து அவைத்தலைவர் அவர்களிடம் உங்கள் கட்சி முடிவை அல்லது உங்கள் வருத்தத்தைத் தெரிவிக்கலாம், அதை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்கிறேன். அவர் சொன்ன அத்தனையையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : போலீஸ் வெல்ஃபேர் சம்பந்தமாகசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். போலீஸ் ஒரு அடக்குமுறை இயந்திரம். அதிலுள்ள பெருவாரியானவர்கள் சாதாரண ஏழை மக்கள், நடுத்தர மக்கள், அவர்கள் வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை என்றாலும் கேட்டுக்கொண்டிருப்பார்கள். நான் இதுபற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்.ஜி.ஓ.க்கள் பற்றி ஒரு அறிக்கை இங்கே தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் பேச்சை நீட்டிக் கொண்டுபோனால் அந்த அறிக்கையைப் படிக்க முடியாத ஒரு நிலை ஏற்படலாம். please finish it quickly

திரு. ரா. உமாநாத் :அடுத்துவாராந்திரவிடுமுறை.விடுமுறை நாளில் வேலை செய்தால என்ன சம்பளம் தரப்படும்? சாதாரணமாக நினைப்பார்கள், இரண்டு மடங்கு சம்பளம் என்று. அது இல்லை. ஒரு நாள் சம்பளமாவது கொடுக்க வேண்டாமா? அதுவும் இல்லை. இரண்டு ரூபாய், ஜஸ்ட் டூ ருப்பீஸ். இரண்டு ரூபாய்தான் கொடுக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 1-20 1-25 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

அடுத்தபடியாக, ஸிட்டி பீடிங் அலவன்ஸ். ரூ. 1.05 கொடுக்கிறார்கள். ஜனதா மீலுக்கே ஒரு ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அடுத்த சாப்பாடுக்கு எங்கே போவது? லஞ்சம் வாங்காமல் என்ன செய்வான்? நியாயப்படுத்தவில்லை. அதற்கு வேறு இருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். பாட்டா ரூ. 4. 20 நாட்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். பந்தோபஸ்து ட்யூட்டி 10 நாட்கள். ஆக, 30 நாட்களுக்கு ரூ. 120 கிடைக்கும் என்று நினைப்பார்கள். ஆனால் ரூ. 33 தான் கிடைக்கிறது. ஏனெனில் ஸீலிங் ரூ. 33. இதை வாங்க மூன்று மாதம் காத்திருக்க வேண்டும். இப்படியிருக்கிறபோது தொழில் சச்சரவு ட்யூட்டிக்குப் போகிறபோது ரூ. 33 என்று ஸீலிங் போட்டால்—முதலாளியிடம் சாப்பிடாமல் என்ன செய்வான்? சாப்பிட்ட சாப்பாட்டுக்கு நன்றி செலுத்த வேண்டாமா? ஆகவே, உதைக்கிறான். இந்நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அதே மாதிரி பந்தோபஸ்து ட்யூட்டிக்குப் போகும்போது' அவர்கள் எந்த லாண்ட்லார்டாக இருந்தாலும் சரி, அவர்களிடம் இவர்களுக்கு உரிய படியை ஃபுல்லாக வசூல் செய்துவிட வேண்டும். ‘தினமலர்’ நிறுவனத்தில் இரண்டு மாதம் ஸ்டிரைக் நடந்தது, ஒரு நயா பைசா கூட அவர்களிடமிருந்து வாங்கவில்லை. அப்படியிருக்கக்கூடாது. யாராக இருந்தாலும் வசூல் செய்து விட வேண்டும்.

அடுத்தது, கவாத்து விஷயம். ஆர்டர் நம்பர் 455/53, தேதி 21-1-1953, 51/53 என்ற ஆர்டரில், 40 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு வீக்லி கவாத்து வாங்கக் கூடாது என்றிருக்கிறது. ஆனால் இதையும் மீறி சில இடங்களில் கவாத்து வாங்கப்படுகிறது. கவாத்துக்கு வர மறுத்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, வொர்க் லோடு. சராசரி 18 மணி நேரம் வேலை செய்கிறார்கள். இதற்குத் தனியாக ஊதியம் கிடையாது. சில சந்தர்ப்பங்களில் 20 நாட்கள் பந்தோபஸ்து ட்யூட்டியாகப் போகிறார்கள். பத்து நாட்கள் தொழிலாளர்கள் கிளர்ச்சி, விவசாயக் கிளர்ச்சி என்று அனுப்பப்படுகிறார்கள். இப்படி வேலை நேரம் இருந்தால், இவர்கள் எங்கே திருடனைப்போய் பிடிப்பார்கள்?

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் ;: ஒரு சிறு இன்ஃபர்மேஷன் கேட்க விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத் : இன்ஃபர்மேஷன், அதற்கு நான் இப்போது ஈல்ட் செய்ய முடியாது. மற்ற நேரங்கள் என்றால் உட்கார்ந்துவிடுவேன். இப்போது எனக்கு நேரமில்லை.

அடுத்து, போலீஸ்காரர்களுக்கு டிரஸ், ஷூஸ், பெல்ட் பட்டன்ஸ், தொப்பி இவைகளை வாங்குவதற்கு அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறீர்கள்? 60 ரூபாய். அதுவும் எவ்வளவு காலத்திற்கு என்று கேட்கிறீர்களா? 2 வருஷத்திற்கு 60 ரூபாய் கொடுக்கிறார்கள். இப்போது நிலைமை என்ன? ஷூஸ்-க்கு 40 ரூபாய், பெல்ட்க்கு 30 ரூபாய், தொப்பிக்கு 30 ரூபாய்; இதற்கு மட்டுமே 100 ரூபாய் ஆகிறது. இப்படி இருந்தால் அவன் லஞ்சம் வாங்காமல் என்ன செய்வான்? அதற்காக நான் அதை நியாயப் படுத்தவில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் விரைவில் முடித்துக் கொண்டால் நல்லது. இல்லையென்றால் பாதியில் மணியடித்து நிறுத்தவேண்டியிருக்கும். அப்படியில்லாமல் சீக்கிரமாக முடித்துக் கொண்டால் நல்லது. காரணம் அவை முன்னவர் அவர்கள் ஒரு ஸ்டேட்மென்ட் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதற்கும் நேரம் வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : சீக்கிரமாக முடித்துக்கொள்கிறேன். போலீஸ்காரனுக்கு இந்த நிலைமையிருக்கிறது.

அதே நேரத்தில் போலீஸ் நாயையும் அவன் பார்க்கிறான். அதற்குக் கொடுக்கப்படும் தீனியையும் பார்க்கிறான். இவன் கோவிலுக்குப் போனால் என்ன வேண்டிக்கொள்வான்? தனக்கு ப்ரமோஷன் வேண்டும் என்று கேட்கமாட்டான், அடுத்த ஜன்மத்தில் போலீஸ் நாயாகப் பிறக்க வரம் வேண்டும் என்றுதான் வேண்டிக்கொள்வான்.

அடுத்து இவர்களுடைய வீட்டுவசதியை எடுத்துக்கொண்டால், 1955–56-ல் 80 சதவிகிதம் டார்ஜெட் போட்டிருந்தார்கள், 1976-77-ல் 60 சதவிகிதம் என்றிருக்கிறது. 22 வருஷங்களுக்குப் பிறகு என்ன நிலைமை என்றால், 60 சதவிகிதம் டார்ஜெட். அதுவும் வீடுகள் எப்படியிருக்கின்றன? போலீஸ் லைன் ஹட் என்கின்ற நிலைமைதான். மறுபடியும் இவன் கோவிலுக்குப் போகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அங்கே போய் என்ன வேண்டிக்கொள்வான்? அடுத்த ஜென்மத்தில் நான் ஒரு பிச்சைக்காரனைப் பிறக்கக்கூடாதா என்றுதான் வேண்டிக்கொள்வான். ஏனென்றால் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் அவ்வளவு நல்லதாக இருக்கின்றன. மான்ஸைன் ஸைட்போலீஸ் லைனில் குடிதண்ணீர் வசதியில்லை. அங்குள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான்கு வருடங்களாகக் குடிதண்ணீர் வசதி யில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

போலீஸ் ஆர்டர்லீஸ் இருக்கிறார்கள். இவர்கள் செய்யக் கூடிய வேலை என்ன தெரியுமா? பூட் பாலிஷ் போடுவது, சமையல் செய்வது, துணி துவைப்பது, மாடுகளைக் கவனிப்பது, பால் விற்பனை செய்வது, வரட்டி விற்பது, மேலதிகாரிக்கு மஸாஜ் போடுவது—மெட்ராஸில் ஒரு டி.ஐ.ஜி.-க்கு 12 ஆர்டர்லீஸ் இருக்கிறார்களாம். இவருக்கு மஸாஜ் போடுவது ஆர்டர்லியுடைய வேலை. இப்படி வேலை வாங்கிக்கொண்டிருந்தால், இவர்களிடம் அதிகாரிகளுக்கு எப்படி மரியாதை இருக்கும்? ஆகவேதான் இப்படிப்பட்ட அவலநிலை போவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலை இருக்கும் வரை லஞ்சம் இருந்து கொண்டுதான் இருக்கும். தங்கள் வருமானம் போதவில்லை என்று வரும்போது, லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது மட்டுமல்ல, சாராய வியாபாரத்திற்குத் துணை போகின்ற நிலை, சாராய விற்பனை இவற்றுக்கெல்லாம் போக வேண்டியிருக்கிறது. இதெல்லாம் கண்ணீர் விடும்படியான அளவில் செய்திகள் இருக்கின்றன. இவர்களுடைய குடும்ப வறுமை காரணமாக ஆவடியில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள்—எங்களுடைய செலவுக்காக குடும்பத்திலுள்ளவர்கள் சமூக விரோத செயல்களில் எங்கள் குடும்பம் இறங்கவேண்டி வருகிறது என்று தெரிவிக்கிறார்கள். இது மிகவும் சீரியஸான விஷயம். இதையெல்லாம் மிகவும் ஸீரியஸாக கவனித்து இந்தத் துறையில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு மிகவும் நன்றி.

திரு. பி. கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் காவல்துறை பற்றி நிறைய விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கட்சி ஆட்சி செய்யும் மேற்கு வங்காளத்தில் நிலைமை என்ன; என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்கிற விபரம் தெரியவில்லை. அதையும் தெரிவித்தால் நல்லது.........

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், நான் கடைசியில் என் கட்சியின் சார்பில் சொன்னதையும் சேர்த்து தாங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவதற்கு உத்தரவிட்டிருக்கிறீர்கள். நான் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது? என் கட்சியின் சார்பில் கருத்தைச் சொன்னேன். அதை ஏன் நீக்கவேண்டும்? எதற்காக அதை எடுக்கவேண்டும்? அதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொன்னது மட்டும் இடம் பெறுமானால், நான் தீர்ப்பு அளிப்பது எதற்காக. என்ன விவரம் என்ற கேள்விகள் எல்லாம் வரும். பின்னால் இந்தப்

பிரச்னை எல்லாம் மீண்டும் வரக் கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே இதை இன்னும் பெரிதுபடுத்தாமல் இதன் மீது ஒழுங்கு பிரச்னை எதுவும் எழுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 1-30)

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : ஷா கமிஷன்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்பு, தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு பேரவையின் முன்னவர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை அளிப்பார்கள்............

(திரு. துரை முத்துசாமி எழுந்திருந்தார்).

(திரு. க. சுப்பு எழுந்திருந்தார்) (கூச்சல் குழப்பம்) (மற்றும் சில உறுப்பினர்களும் எழுந்து நின்றார்கள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து எல்லோரும் உட்காருங்கள். இது சபையின் மரபுக்கு உகந்ததாக இல்லை.

திரு. க. சுப்பு : 'வெளியே வா'.

(மீண்டும் கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல், எழுந்து யாரும் பேசக் கூடாது; நேருக்கு நேராக உறுப்பினர்கள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொண்டு, 'வெளியே வா' என்றெல்லாம் கூச்சல் போடுவது நல்லதல்ல; இப்படியெல்லாம் அவையிலே நடந்துகொண்டால், அவையை எப்படி நடத்திச் செல்வது? தயவுசெய்து சுப்பு அவர்கள், 'வெளியே வா' என்று சொன்னதைத் திரும்பப் பெறவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அமைச்சரின் அறிக்கை.

நடைபெற்று முடிந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர் வேலை நிறுத்தம் குறித்து அவை நிதியமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடைபெற்று முடிந்த அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி அரசின் கருத்தை இந்த அவைக்குத் தெரிவிக்கும் முறையில் இந்த அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன்.

கடந்த மூன்றாந் தேதி முதல், முறையான அறிவிப்பின்றி திடீரென மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தத்தை, சட்டப் பேரவையில் 11—3—78-ல் நான் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க (முதல் அமைச்சர் அவர்கள் சார்பாகப் படிக்கிறேன்) நிபந்தனைகள் ஏதும் விதிக்காமல் 14-ந் தேதி இரவு திரும்பப் பெற்றுக் கொண்டு 15-ந் தேதி முதல் அரசிதழ் பதிவுபெறாத அலுவலர்கள் பணிகளுக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் அரசின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வேலை நிறுத்தக் காலங்களில் தங்களின் அன்றாட வாழ்க்கையில் நடைபெற வேண்டிய பணிகள் நடைபெறாமல் குறிப்பாக, உயிரைப் பாதுகாக்கும் மருத்துவமனைகளில் நோய் தீர்க்கும் அத்தியாவசியப் பணிகள்கூட நடைபெறாமலும் சுகாதாரத்தைப் பாதுகாக்க நாள்தோறும் நடைபெற வேண்டிய துப்புரவுப் பணிகள்கூட நடைபெறாமலும் நீதிமன்றங்களுக்குச் சென்று அவசரமான பரிகாரம் பெற முடியாமல் தடுக்கப்பட்ட நிலையிலும் சங்கடங்களையும் கஷ்டங்களையும் இழப்புகளையும்கூட ஏற்றுக் கொண்டு, அனுதாபத்தோடு அரசுக்கு ஆதரவளித்த பொது மக்களுக்கு அரசின் நன்றியுணர்வை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், வேலை நிறுத்தம் நடைபெற்றபோது பொது மக்களுக்கு இயன்ற அளவாவது கடமையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வோடு பணியாற்றிய, செஞ்சிலுவைச் சங்கம்,

கில்ட் ஆப் சர்வீஸ், விவேகானந்தர் கல்லூரி மாணவர்கள், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரி மாணவிகள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், ஒய்.எம்.சி.ஏ. சிறுவர்கள் சங்கம், கோவை சிறைச்சாலைக் கைதிகள், மற்றும் மாவட்டங்களில் ஆங்காங்கு வந்து உதவிய பல நிறுவனங்களுக்கும், அவைபோன்ற அத்தனை நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கட்கும், பணியாளர்கட்கும், அதிகாரிகட்கும், ஆதி ஆந்திர சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தன்னலமறுத்து உற்றுழி உதவிய பொறுப்புள்ள கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களுக்கும் எனது நன்றியை அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகளுக்கு எல்லாம் மேலாக, நெஞ்சு நெகிழத்தக்க வகையில், சென்னை பொது மருத்துவ மனையிலும், மற்ற மருத்துவ மனையிலும் உயர்பட்டம் பெற்று பணியாற்றும் மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், அவுஸ் சர்ஜன்கள் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று எண்ணி சாதாரண, துப்புரவு—மலஜலம் எடுத்தல் போன்ற பணிகட்கு தங்களை ஆட்படுத்திக் கொண்டார்கள். தியாக உணர்வு படைத்த, தொண்டுள்ளம் கொண்ட அந்த உத்தமர்களுக்கெல்லாம், துன்பத்திற்கும் துயரத்திற்கும் உள்ளாகி, 'மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த நோயாளிகளின் சார்பிலும், பொது மக்களின் சார்பிலும் இந்த அரசின் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு தீவிரமாக வேலை நிறுத்தத்தை அடக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடாததால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் ஆவேச நடவடிக்கைகளை முடுக்கி விட்டார்கள். அதையும் இந்த அரசு அமைதியோடு தான் பார்த்தது. இப்படி எல்லாச் சூழ்நிலைகளையும் உணர்ந்து அரசு இரண்டு காரணங்களினால், இந்த அணுகு முறையைக் கையாண்டது.

ஒன்று, இப்படிப்பட்ட வேலை நிறுத்தங்களினால் பொதுமக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்—நாட்டு நலன் எவ்வாறு முடக்கப்படுகிறது என்பதைப் பொது மக்களும்—ஆத்திரம் அடங்கிய பிறகு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது.

இரண்டாவது—இதுபோன்ற கிளர்ச்சிகள்—நியாயமான கிளர்ச்சியா நியாயமற்ற கிளர்ச்சியா என்று தீர்மானிக்கு முன்பு—மனிதாபிமான அடிப்படையில் அணுக வேண்டிய கிளர்ச்சியா, அல்லவா, என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும். அதற்கும் பிறகுதான் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்ற அமரர் பேரறிஞர் அண்ணா வழிகாட்டுதலின்படி அணுக வேண்டும் என்பது.

இந்த இரண்டு அடிப்படைகள்தான், இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பொறுத்தவரை அரசின் அணுகுமுறைக்கு அடிப்படைக் காரணங்களாகும்.

எனவே, எப்படிப்பட்ட சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டிருந்தாலும் பொது மக்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுத்தப்பட்டாலும், நல்லுணர்வோடும் உறவோடும் வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்பட்டது, நாம் எல்லோரும் மன நிறைவு அடைய வேண்டிய நிகழ்ச்சியாகும்.

அரசு அலுவலர்கள் பல்வேறு வேண்டுகோள் வைத்தார்கள். அவைகளில் எந்த எந்த வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட இயலும் என்பதை இந்த அவையில் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது:

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுவிட்டதற்குப் பிறகு மனம் விட்டு விவாதிக்கலாம் என்று அரசு முடிவெடுத்து அறிவித்தது. அதையொட்டி வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு விட்டது.

கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட அனைவரையும் குறிப்பிட்ட குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட இருவரைத் தவிர, விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் எவர் எவர் பதவியில் மீண்டும் வந்து சேர்ந்தனரோ அவர்களுடைய தற்காலிகப் பணி நீக்கம் அவர்களுக்கு உரிய விடுப்புகளாகக் கருதப்படும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. தற்காலிக அரசு ஊழியர்களில் கிளர்ச்சியின் போது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் 10 (a) (1) விதியின்படி தற்காலிகப் பணி புரிபவர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டியதில்லை என்ற அரசு ஆணையும், வேலை நிறுத்தம் கைவிடப்பட்ட உடனேயே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமுதாய விரோதமான வன்முறைச் செயல்களைப் பொறுத்தவரை சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் வேலை நிறுத்தம் காரணமாக யார் மீதும் பழிவாங்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஏற்பட்டிருக்கும் நல்லுணர்வு தொடர்ந்து நீடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு மனப்பூர்வமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(8) இரங்கற் குறிப்பு.

ஈ. வே. ரா. மணியம்மையார் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பிரதான எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களே, மற்ற உறுப்பினர்களே, ஒரு துக்ககரமான செய்தி. நம்முடைய ஈ. வே. ரா. மணியம்மையார் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்கள் என்ற செய்தி வந்தது. அவர்களுக்கு மரியாதையும், அனுதாபமும் தெரிவிக்கிற வகையில் அனைவரும் ஒரு நிமிஷ நேரம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணி அளவில் ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

305. தமிழ்நாடு, 1960ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 31—12—1977ஆம் தேதியிடப்பெற்ற 3495 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*306. 31—12—1974 ஆம் தேதியோடு முடிவடைகிற ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 6-வது ஆண்டு அறிக்கையும் அதன் மீதான தமிழ்நாடு அரசின் ஆய்வுரையும் [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

† 130. கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்).

---

* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 21(5) விதியில் கண்ட வரம்பு நிபந்தனையை ஒட்டி சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பெற்றுள்ளது.

† 14—3—1978 அன்று அனுப்பப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக் கிழமை, 1978 மார்ச், 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. அரசினர் தீர்மானம்

விதி 22 —ஐத் தளர்த்தல்

THE HON. Thiru. S. RAMACHANDRAN : Sir, I move "That Rule 22 relating to question hour be suspended to-day"

THIRU K. SUPPU : I oppose the move. The provision is that the question hour is a must. There shall be a question hour. When the Hon. Members are not informed earlier it should have been taken place. Even officials are not present here.

திரு. ரா, உமாநாத் : தமிழிலே பேசுங்கள்.

திரு. க. சுப்பு : அவர் ஆங்கிலத்திலே மூவ் பண்ணிவிட்டார். என்ன பண்ணுவது? கேள்வி நேரம் என்பது இந்த அவையின் உரிமைகளிலே ஒன்று. காலை 9 மணி முதல் 10 மணி வரையில் கேள்வி இருந்தாக வேண்டும். இன்றைக்கு கேள்வி நேரம் இல்லை என்பது அதிகாரிகளுக்குத் தெரியாததால் நாங்கள் பேசக்கூடிய வைகளை குறிப்பு எடுத்துக் கொள்ள அதிகாரிகள் கூட வரவில்லை. கேள்வி நேரம் உங்களுடைய விருப்பத்திற்கு மாற்றுவது, மெஜாரிட்டி இருக்கிறது என்பதற்காக, என்பது வருந்தத்தக்கது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். எப்போதுமே சில அவசர முக்கியத்துவமான நேரங்களில் இந்த அவையிலே பல முறைகள் இம்மாதிரி முன்மொழிந்து எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்வி நேரம் தள்ளிவைக்கப்படுவது ஒரு மரபாக இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட நேரங்களில் பேரவைத் தலைவர் எல்லா எதிர்கட்சித் தலைவர்களையும் பேரவையின் முன்னவரையும் கலந்து பேசிக்கொண்டு தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதிப்பது வழக்கம், அதைப் போன்று இன்றைக்கு உள்ள நிலையிலே மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரையும்..

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

"Rule 22 : The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for questions."

ஆகவே, சட்டமன்றத்திலே தீர்மானம் மூலமாகக் கேள் நேரத்தை தள்ளிவைப்பதற்கு விதிகளிலே ஏற்கெனவே இட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்..

திரு. க. சுப்பு: ரூல்விலே என்ன போட்டிருக்கிறது என்ருல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

திரு. க. சுப்பு: தாங்கள் பேசும்போது அவரும் பேசி கொண்டிருக்கிருர். அவர் ரூல்ஸைப்பற்றிச் சொல்கிருர், நானு அதனுல் சொல்ல வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சுப்பு ஆட்சேபி தால் கேள்வி நேரத்தை நான் எடுத்துக்கொள்ள..

திரு. க. சுப்பு: என்னைப் பொறுத்தவரையில் "I ha opposed the move."

* திரு. மு. கருணநிதி: தலைவர் அவர்களே, இன்று ஏ பட்டுள்ள சில எதிர்பாராத சூழ்நிலைகளின் காரணமாகக் கேள் நேரத்தை ஒத்திவைப்பது பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்ட நேற்றைய தினமே கூட காலையிலே இதைப்பற்றித் தாங்க இந்த அவையிலே அறிவிப்பதாக இருந்தீர்கள். ஆனுல் மணியம்மை யார் மறைந்து விட்டார் என்ற காரணத்தாலே அந்தச் சோக சூழலில் தாங்கள் இதை வெளியிட முடியாமல் அவை அமை யாகக் கலைந்ததை நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. அதற்கு பிறகு நேற்று இரவு அவை முன்னவர் என்னேடு தொலைபே யிலே தொடர்பு கொண்டு, அவர்கள் தங்களைத் தொடர்புகொண்டு இதுபற்றிக் கேட்டதாகவும், தாங்களும் எதிர்க்கட்சித் தலைவ களைக் கலந்துகொண்டு முடிவுசெய்யலாம் என்று சொன்ன தாகவும் அதன்படி அவர்கள் நேற்றே என்னேடு தொடர்பு கொண்டு கேட்டபோது, இன்று இருக்கின்ற நிலைமைகளைப் புரிந்து கொண்ட காரணத்தாலே இன்று மாலையிலே அன்னை மணியம்மையார் அவர்களின் இறுதி ஊர்வலத்திலே கலந்து கொள்கின்ற கடப்பாடு இருப்பதாலும், இன்று காலையிலேயே இரண்டு மானியங்களையும் முடித்து வாக்கெடுக்கின்ற சூழ்நிலை இருப்பதாலும் கேள்வி நேரத்தை தள்ளிவைப்பதிலே எனக்கு எந்தவித மறுப்பும் இல்லை என்று நான் அவை முன்னவரிடத்திலே கூறினேன். எனவே, கலந்துபேசி எடுக்கப்பட்ட முடிவுதான் என்பதை என்னுடைய கழகத்தின் சார்பிலே நான் உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

• மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் சுப்பு இதற்குப் பிறகு அவர் சொன்னதை திரும்பப் பெற்றுக்கொண்டால் நல்லது.

திரு. க. சுப்பு: இப்போது சொன்னதைப்பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை, ரூல்ஸிலே யுனனிமஸ்ஸாக ஒரு முடிவு......

மாண்புமிகு பேரவைத் தலைவர். தாங்கள் அதைப்பற்றி யெல்லாம் விவாதிக்கத் தேவையில்லை. தாங்கள் அதை வற்புறுத்து கிறீர்களா இல்லையா?

திரு. க. சுப்பு; இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதோடு முடிந்துவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

இன்று தேதியிட்ட வினுக்கள் பட்டியலில் உள்ள வினுக்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(2) உரிமைப்பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று உரிமை மீறல் பிரச்சனைகள் வந்திருக்கின்றன. ஒன்று, திரு. துரை முத்துசாமி அவர்களும், ஏ. ஆர். மாரிமுத்து அவர்களும் கொடுத்திருக் கிருர்கள் இரண்டாவது பி, சந்துரன் அவர்கள் கொடுத்திருக் கிருர்கள். மூன்ருவது பண்ணை சேதுராம் அவர்கள் கொடுத்திருக் கிருர்கள். அவர்கள் உரிமைப் பிரச்னைகளை இந்த அவையிலே 184-வது விதியின் கீழ் கொண்டு வந்திருக்கிருர்கள். அவர்களுக்கு இப் பிரச்சினைகளை எழுப்புவதற்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து; மதிப்பிற்குறிய தலைவரவர்களே, நேற்று அவையினுடைய ப்ரொசீடிங்க்ஸ் நடந்து கொண்டிருக்கும் பொழுது எங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சபையின் நடவடிக்கை களைப்பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சனையின்பேரிலே தங்களுடைய அனுமதியைப் பெற்று ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். அதன்பேரிலே தாங்கள் அவருடைய கருத்துக்கு ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அதன் பேரிலே ஒரு விளக்கத்தைத் தங்களிடத்திலே அவர் மறுமுறையும் கேட்க ஆரம்பித்தபொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் குறுக்கிட்டு தவறுதலான வார்த்தைகளை உபயோகித்ததோடு 'வெளியே வாங்கடா பார்க்கலாம்' என்ற கருத்துப்பட கோபத்தோடு அவர்கள் கூறியிருக்கிருர்கள். இம்மாதிரி அவையிலே வேருெரு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினையின் பேரிலே தன்னுடைய கருத் தைத் தெரிவிக்க இருக்கின்ற உரிமையைத் தங்களைத் தவிர வேறு யாரும் பறிக்க முடியாது. அதைத் தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது. அதுமட்டுமல்லாமல், அவையிலே இருக்கின்ற

உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க இருக்கும் பொழுது பயமுறுத்தும் வகையில், 'வெளியே வா பார்க்கலாம் ஒரு கை' என்றால் சண்டை போடுவதற்காக நாங்கள் வரவில்லை, அடித்துக் கொள்வதற்காக நாங்கள் வரவில்லை. இந்த அவையிலே நடக்கும் நிகழ்ச்சிகளைப்பற்றி தம்முடைய கருத்தைக் கூறுவதற்கு, அமைதியான முறையிலே கூறுவதற்கு, முறைப்படி யாகக் கூறுவதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையைப் பறிக்கும் முகத்தான் மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பு அவர்கள் வித்தியாசமான வார்த்தைகளைச் சொல்லி 'வெளியே வாங்கடா பார்க்கலாம்' என்று சொல்வது எங்களுடைய உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி விசாரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த உரிமைமீறல் பிரச்னையை இந்தச் சபையிலே கொண்டு வருவதற்காக நான் என்னுடைய வருத்தத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களெல்லாம் சட்டமன்றத்திற்குப் புதிதாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள். இங்கே பொதுமக்களின் நலனைக் கருதி அவர்கள் குறைகளைப்பற்றிப் பேசுவதற்காக இங்கே வந்திருக்கிறோம். அப்படிப் பொறுப்பாக நாம் செயலாற்றுகின்ற நேரத்தில் ஆரம்பத்திலேயிருந்து பார்த்துக்கொண்டுதான் வருகிறோம், சிலர் குறிப்பாக திரு. சுப்பு போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பேரவைத் தலைவரவர்கள் பலமுறை சொல்லியும் நின்றுகொண்டு பேசுவதும், உட்கார்ந்த இடத்திலேயிருந்து பேசுவதும் முறையற்ற வகையிலேயும்—தாங்கள் பலமுறை கண்டித்தும்— அவர்கள் தொடர்ந்து அதையே செய்து கொண்டு வருகிறார்கள்.

நேற்றைய நிகழ்ச்சியிலே மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் பேசும்பொழுது குறுக்கிட்டு 'வெளியே வாங்கடா பார்க்கலாம்' என்றெல்லாம் சொன்னார்கள். பேரவைத் தலைவரவர்களே, எதிர்க் கட்சியிலே அதிக எண்ணிக்கை கொண்டவர்கள் என்ற எண்ணத்தில், சிறிய எண்ணிக்கையில் உள்ள எதிர்க்கட்சியினரை இப்படிப் பேசுவது நல்லதல்ல. பேசுவதையெல்லாம் பேசிவிட்டு பின்னர் சபைக்குறிப்பிலேயிருந்து நீக்குவது என்று சொல்வோமேயானால் இங்கே ஒரு கட்டுப்பாடு இல்லாத வகையிலே நாங்கள் கூட எல்லாம் பேச முடியும் என்ற நிலை உருவாகும். அப்படிப்பட்ட நிலையைச் சபையிலே கவனித்து வருகிறோம். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். இது தொடர்ந்து நடக்குமேயானால், எங்களையெல்லாம் நல்ல வழியிலே நடத்திச் செல்லுகின்ற சபையாக இருக்காது என்று சொல்லிக் கொண்டு, இந்த உரிமை மீறல் பிரச்னையைப்பற்றி ஆலோசிக்க குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் குறுக்கீடு செய்து, 'வெளியே வாங்கடா பார்த்துக் கொள்ளலாம்' என்ற வார்த்தைகளைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினருடைய உரிமையையும், இந்த மன்றத்தினுடைய உரிமையையும் பறித்திருக்கிறார்கள். இதையெல்லாம் இன்னும் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் மிகவும் கண்ணியமாக இருக்க வேண்டிய உறுப்பினர்கள் கண்ணியத்தைக் கடைப்பிடித்து அதைக் காப்பாற்றுவதற்குப் பதில் அதைக் காற்றிலே விட்டுவிட்டு உண்மையிலேயே மிகவும் மோசமான நிலையில் ** நடப்பதைப்போல இங்கே நடந்து கொண்டிருப்பது வேதனைக்குரிய செயலாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து ** என்றெல்லாம் பேசக் கூடாது. அதை நீக்க வேண்டுமென்று கூறி கண்ணியத்தோடு வார்த்தைகளைப் பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9–10)

திரு. கே. பண்ணை சேதுராம் : எனவே, கண்ணியத்தோடு நடைபெறவேண்டியவர்கள் எல்லாம் கண்ணியம் இல்லாமல் நடக்கிற காரணத்தாலே இந்த அவையினுடைய உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இது அவையை மீறிய செயலாகும் என்று சொல்லி, இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமை பிரச்சனை கொடுப்பதற்கு முன்பே நான் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தேன். அதை முதலிலே எடுக்காமல் இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்திருக்கிறீர்கள். ஏனென்றால் இது என்மீது இருக்கிற பிரச்சினை. இது உங்கள் பரந்த மனப்பான்மையைக் காட்டுகிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து தெரியாமல் பேசாதீர்கள். இந்த உரிமைப் பிரச்சினை நேற்றே கொடுக்கப்பட்டது. திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் நேற்றைக்கே என்னுடைய இல்லத்திற்கு வந்து கொடுத்த உரிமைப் பிரச்சினை இது: இப்படி எல்லாம் பேசக் கூடாது. விவரம் தெரிந்து பேசுங்கள்.

திரு. க. சுப்பு :நேற்றைய தினம் பல சம்பவங்கள் இங்கே நடைபெற்றிருக்கின்றன. அவை நல்ல சம்பவங்கள் என்று சொல்லவில்லை. இரண்டு தரப்பிலும் மோசமான வார்த்தைகள்

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. க. சுப்பு]

பேசப்பட்டன. அதற்கு நீங்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது முடிந்து போன விஷயம். காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து என்னுடைய பேச்சினால் அவருடைய கவுரவம் பாதிக்கிறது. இனிமேல் இந்த அவையில் இருக்க முடியாது என்று பேசினார்கள். அதற்கும் அமைதியாக இருந்தோம். நாங்கள் பேசுகின்றபோது; உங்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டேன் என்று சொன்னீர்கள். அவருடைய கவுரவத்தைப் பற்றி நாங்கள் பேசவில்லை. நீங்கள் ஒருமுறை தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நாங்கள் என்கிறபோது கழகம் என்று ஒட்டுமொத்தமாகச் சொல்கிறீர்களா அல்லது சுப்பு என்கிற நான் என்று பேசுகிறீர்களா?

<u>திரு. க. சுப்பு</u> : நீங்கள் எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். ஐ டோன்ட் பாதர்.

இரண்டாது முறை நாங்கள் பேசியது கௌரவக் குறைச்சலாக இருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து அவர்கள் அப்போது இந்த அவையில் இல்லை. ஆனால் அவர் இப்போது, வெளியே வாங்கடா பார்த்துக் கொள்கிறேன் என்று அவருடைய கட்சியில் உள்ள அனைவரையும் சேர்த்துச் சொல்வது போல இன்றைக்குச் சொல்கிறார். நடந்த சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்குத் தெரியும். முதலிலேயே அவைக் குறிப்பிலே இருந்து அந்த வார்த்தைகளை எல்லாம் நீக்கினீர்கள்; ஆனால் உரிமை மீறல் பிரச்சனையில் அதை இங்கே கிளப்ப வேண்டிய அவசியமே இல்லை.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சுப்பு, அவைத்தலைவரை பற்றி சொல்லும்போது கொஞ்சம் எச்சரிக்கையாகச் சொல்ல வேண்டும். அப்போதே சுப்பு அவ கள் திரும்பப்பெற்றாக வேண்டும் என்று சொன்னேன். நீங்கள் அமைதியாக இருந்தீர்கள். நீங்கள் திரும்பபெறவில்லை. உடனே பேரவை முன்னவர் அவர்கள் அரசிதழ் பதிவு பெறு ஊழியர்களைப் பற்றி ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். குறிப்பிலே பாருங்கள். அப்படியே இருக்கிறது. அப்படி இருக்கும் போது நீக்கி விட்டேன் என்று சொல்வது சரியல்ல.

<u>திரு. க. சுப்பு</u> : நேற்றைக்கு இன்னும் இரண்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்ன வார்த்தைகள் குறிப்பிலே இடம் பெறவில்லை. ஆவர்கள் சொல்லும்போது எனக்குக் கோபம் வராதா. வரத்தான் செய்யும், நான் ஒன்றும் சாமியார் கிடையாது. ஆனால் அதை எல்லாம் விட்டுவிட்டு என்மீது திட்டமிட்டுக் கொண்டுவருவது சரியல்ல. இந்த வார்த்தைகள் எந்தச் சூழ்நிலையில் பேசப் பட்டன என்று திரு. மாரிமுத்து அவர்கள்இருந்திருந்தால் தெரிந்து கொண்டிருப்பார்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்று நினைக்கிறீர்களா இந்தப் பிரச்சனைக்கு நீங்கள் மறுக்கிறீர்களா அல்லது வருத்தம் தெரிவிக்கிறீர்களா, அதைச் சொல்லுங்கள். நீங்கள் 15 நிமிடம் கூடப் பேசலாம், ஆனால் நான் அதை அனுமதிப்பதற்கில்லை.

<u>திரு. க. சுப்பு</u>: திரு. முத்துசாமி அவர்களிடம் வருத்தம் தெரிவிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். கோபத்திலே பேசியதே தவிர வேறல்ல, நேற்றே அவரிடம் தவறு என்று சொல்லவிருந்தேன். ஆனால்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அதற்கு மேல் வேண்டாம்.

<u>திரு. க. சுப்பு</u> : நான் நடந்ததற்கு வருத்தம் தெரிவிக்கிறேன் அதற்குள் என்ன அவசரம்? நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். நேற்று நடந்த சம்பவத்தைப் பற்றி அகில இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியினர் (குறுக்கீடு) சாரி, உழைப்பாளர் கட்சியினர் சொன்னார்கள். மிகப் பெரிய கட்சியல்லவா, நான் முறை தவறி நடக்கிறேன் என்று சபாநாயகரை வைத்துக் கொண்டு, சபாநாயகர் சொல்லிய பிறகும் அதை மறுமுறை எடுத்துக் கூறி ரெக்கார்டு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லுகிறார். அவருடைய எச்சரிக்கைக்கும் அச்சுறுத்தலுக்கும் நான் பயந்தவன் அல்ல.

(திரு. ப. சந்திரன் எழுந்தார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர் பதில் சொல்கிறார்

<u>திரு. க. சுப்பு</u> : நீங்கள் ரெக்கார்டை எடுத்துப் பாருங்கள். அவர் எந்த முறையில் பேசியிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். நான் திரு. முத்துசாமியிடம் வருத்தம் தெரிவிக்கத் தயாராக இருக்கிறேன். அது நியாயம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அவர் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம் உட்காருங்கள். அவர் சொல்லியதை நீங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தீர்கள் அதற்காக அவர் என்ன சொல்கிறார் என்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல் அவரை பேசவிடாமல் செய்தால் என்ன அர்த்தம்?

<u>திரு. ப. சந்திரன்</u> : தலைவரவர்களே, நான் இங்கே யாரையும் அச்சுறுத்துவதற்கோ அல்லது பயமுறுத்துவதற்கோ பேசியதா கருதிக்கொள்ள வேண்டாம். இந்தச் சபையில் தொடர்ந்து அந்த மாதிரியான நிலைமைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதைக் குறிப்பிட்டுத்தான் சொன்னேனே தவிர, நான் எந்த ஒரு கட்சி உறுப்பினரையும் அச்சுறுத்தவோ, பயமுறுத்தவோ சொல்லவில்லை, அந்த முறையில் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. க. சுப்பு எழுந்தார்)

ண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கருத்தம் தெரிவித்து விட்டீர்கள். அத்தோடு விடுங்கள். இந்தப் பிரச்னையைத் தீர விசாரித்து பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தங்கள் ரூலிங் என்ன?

திரு. கு. ரமணி : தங்கள் ரூலிங் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூலிங் ரிசர்வ்ட்.

(ஆ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் பொருள் குறித்து மேலவையில் முதலில் விவரம் அறிவித்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184—ன் கீழ் திரு. சுப்பு ஒரு உரிமை மீறல் பிரச்னையை பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டு இருக்கிறார். அவருக்கு அதை எழுப்ப அனுமதி வழங்குகிறேன். சுருக்கமாக அதைச் சொல்ல வேண்டும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் எழுதிக் கொடுத்ததை படித்து விடுகிறேன். அதை விடச் சுருக்கமாகச் சொல்ல முடியாது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 184—ன் கீழ் அடியிற் கண்ட அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை பேரவையில் எழுப்ப தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். அதைக் கொடுத்து விட்டீர்கள். நன்றி.

''கோவை மாவட்ட விவசாய சங்கத்தின் வரி கொடா இயக்க அறைகூவல் பற்றிய 42-ம் விதியின் கீழ், நான் கொடுத்திருந்த அறிவிப்பை ஒட்டி, நேற்று சட்டமன்றத்தில் ஓர் ஒழுங்குப் பிரச்னை எழுப்பப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். அதில் 14—3—1978ஆம் தேதியிட்டு நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை பேரவையில் எடுத்துக் கொள்ளாமல், அதே பிரச்சினை குறித்த எல்லா விவரங்களையும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் தெரிவித்திருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் அவை வெளியாகியிருக்கின்றன.

பேரவையின் விதிப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னுரிமை கொடுத்து இங்கே விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு நேர்மாறாக விவாதத்தை வேண்டுமென்றே

தவிர்த்து விட்டு, மேலவையில் விளக்கமளிக்கப்பட்டிருப்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்டதுதானா என்ற வினாவினை எழுப்பி இருந்தேன். அப்பொழுது மேலவை என்பது இரண்டாவது அவை (செகண்ட் சேம்பர்) என்றும், மேலவை இல்லாத மாநிலங்களும் இருக்க முடியும் என்றும் குறிப்பிட்டு, பேரவைக்கு உரிய மரியாதையை கொடுக்கப்படாதது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் பேரவைத் தலைவர் அவர்கள், மிகுந்த முன் எச்சரிக்கையின் (அபென்டென்ட் காஷன்) அடிப்படையில் மேலவையைப் பற்றி எல்லாக் குறிப்புகளையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்.

என்னுடைய பேச்சின் எந்த இடத்திலும் மேலவையின் கௌரவத்தையும், கண்ணியத்தையும் குறைத்து மதிப்பிடக்கூடிய உணர்வு வெளிப்படவில்லை, இருப்பினும் நேற்று மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் புலமைப் பித்தன் என்பவர் ''மேலவையின் கௌரவத்தைக் குறைத்து மதிப்பிட்டு, சட்டமன்றத்தில் தி. மு. க. உறுப்பினர் சுப்பு ஒரு வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். இந்த அவையின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் அவர் பேசியது சரிதானா?'' என்று நான் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கொண்டு உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே கேட்டிருக்கிறார். அதற்குப் பதில் அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் கி. மனோகரன் அவர்கள், ''சுப்பு அப்படி பேசியது உண்மை, அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி சபாநாயகர் கூறி அந்தப் பகுதி நீக்கப்பட்டுவிட்டது. எனவே இந்தப் பிரச்னையை இத்தோடு விட்டு விடலாம்'' என்று கூறியிருக்கிறார். இந்த விவரம் ''அண்ணா'' நாளிதழிலும், வெளியாகியிருக்கிறது. பிரச்னைக்குத் தீர்ப்பு வழங்கிய மேலவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ம. பொ. சி. அவர்கள், ''யார் என்ன சொன்னாலும், இரண்டு அவைகளும் சமமான அந்தஸ்து உடையவை, இரண்டிற்கும் ஒரே அந்தஸ்துதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

16-3-1978-ம் தேதி ''அண்ணா'' பத்திரிகையிலும் மற்ற நாளிதழ்களிலும் வெளிவந்திருக்கும் இந்தச் செய்தியை படிப்பவர்கள் நான் மேலவையின் கௌரவத்தைக் குறைக்கும் வகையில் பேசினேன் என்று தான் கருதுவார்கள். இது என்னுடைய உரிமையை பாதிப்பதாகும். உண்மைக்குப் புறம்பான செய்தியை எனக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற உள் நோக்கத்தோடு மேலவையில் வேண்டுமென்றே எழுப்பி, விடையும் அளிக்கப்பட்டு இருக்கிறது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதை உண்மை என்று ஒப்புக்கொண்டு அதைப் பேசியிருக்கிறார்கள். இவ்வாறு அவர் பேசியிருப்பது தங்களுக்குத் தெரியுமா? தவறான வார்த்தைகள் இந்த அவையில் எந்தக் கட்டத்திலும் என்னால் பயன்படுத்தப்படவில்லை. செகண்ட் சேம்பர், மேலவைக்குத்

[திரு. க. சுப்பு] [1978 மார்ச் 17

தனிப்பட்ட வரைமுறைகள் இருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே கூடத் தெளிவாக அவை வரையறுக்கப்பட்டு இருக்கின்றன. பேரவையால்தான் அந்த மேலவையே உருவாக்க படுகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, அதில் இல்லாததை எல்லாம் சொல்லிக் கொண்டே போகிறீர்கள். இப்படிச் செய்யக் கூடாது. தாங்கள் கொடுத்ததில் இல்லாததை எல்லாம் படிப்பது போன்று பேசிக்கொண்டு போகிறீர்கள் இது வரவேற்கத்தக்கது அல்ல— தாங்கள் கொடுத்ததை முடித்து விட்டீர்கள். நீங்கள் முதலிலேயே நான் கொடுத்ததைப் படிக்கிறேன் என்று சொன்னது இங்கே பதிவாகி இருக்கிறது. ஆகவே, நீங்கள் மேற்கொண்டு பேசுவது கூடாது. உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : யார் மீது உரிமை மீறல் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதைச் சொல்ல வேண்டாமா? மேலவை என்பது சட்டப் பேரவையால் உருவாக்கப்பட்டது. அதை அபாலிஷ் பண்ணலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மேலே போகாதீர்கள். முடித்து விடுங்கள்.

திரு. க. சுப்பு : முடித்து விடுகிறேன். ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வருகிறேன். அதற்கு அனுமதி அளித்து, அதை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைத் தீர விசாரித்து, பிறகு தீர்ப்பு அளிக்கிறேன்.

(முற்பகல் 9-20)

3. அறிவிப்பு

கவன ஈர்ப்புத் தீர்மானங்களை மறுநாள் எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் உள்ளன. இவை அஜன்டாவிலே இருப்பதாலே, எடுக்கவேண்டியுள்ளது. இவற்றையும் நாளை எடுத்துக்கொள்ளலாமென்றால், எடுத்துக் கொள்ளலாம்.

அவையின் அனுமதியுடன் 41-வது விதியின்கீழ் உள்ளதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

1978 மார்ச் 17]

திரு. துரைமுருகன் : ஆன் எ பாயின்ட் ஆப்-ஆர்டர், சார். நேற்றையதினம் இந்த அவையிலே மாண்புமிகு அங்கத்தினர் வின்சென்ட் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி அவதூறாகப் பேசியிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் ரிசர்வ்ட் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : தங்கள் ரூலிங் என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ரூலிங் கொடுப்பேன்.

திரு. துரைமுருகன் : இன்னொரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே சத்தம் போட்டுப் பேசுகிறீர்கள்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

வானொலியில் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் கூறாததைக் கூறியதாகக் கூறியது குறித்து

*திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் நேற்றைய செல்ல விரும்பவில்லை. ஒன்றை பிரச்னையின் ஆழத்திற்குச் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேற்றைய பிரச்சினை பத்திரிகையிலே வேறு மாதிரியாக வந்திருக்குமானால் அந்தப் பத்திரிகைகள் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்து, தங்களிடத்திலே நான், அது உரிமை மீறலா அல்லவா என்பதைக் கண்டறிகிற வாய்ப்பினை வழங்குவதற்கு எனக்கு வசதியாக இருந்திருக்கும். அதற்கு மாறாக, வானொலியிலே அந்தச் செய்தி வேறு விதமாகத் திரித்துக் கூறப்பட்டது. வானொலியின் மீது உரிமைப் பிரச்னை எழுப்ப வேண்டுமானால் நான் எந்தவிதமான ஆதாரங்களையும் கொண்டு வர முடியாது. நான் கேட்டதைத் தான் சொல்ல முடியும். ஆனால், தங்களுக்கிருக்கிற அதிகாரத் தைப் பயன்படுத்தி வானொலி நிலையத்திலிருந்து நேற்றைய 7 மணி சட்டமன்ற நடவடிக்கை என்கின்ற செய்தித் தொடரில் என்ன கூறினார்கள் என்று அந்தப் பிரதியைத் தாங்கள் பெற முடியும்.

அதில் என்ன சொன்னார்கள் என்றால், திரு வின்சென்ட் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பற்றி கூறிய ஒரு குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லையென்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டுமென்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், நடந்தது அதுவல்ல. நான் அந்தக் குற்றச்சாட்டை மறுத்தேன். நான் மறுத்தபொழுது தாங்கள் சொன்னீர்கள், அதற்குப் பிறகு தீர்ப்பளிக்கிறேன் என்று. நான் சொன்னேன், குற்றச்சாட்டை மறுத்தவுடன் அது நிருபிக்கப்பட வேண்டும், அல்லது நிருபிக்கப்படவில்லையென்ற சூழ்நிலை வந்தாக வேண்டும். இரண்டும் இல்லாமல் பத்திரிகையில் வந்தால் என் மீது தவறாகக் களங்கம் கற்பித்த நிலைக்கு நான் ஆளாவேன். அதற்கு என்ன வழி சொல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு முதலமைச்சரவர்கள் எழுந்து, அவர்தான் தங்களைக் கேட்டுக் கொண்டார். இதுபற்றி தாங்கள் முடிவெடுக்கிற வரையில், முடிவெடுத்து அறிவிக்கிற வரையில், நண்பர் வின்சென்ட் அவர்கள் ஆதாரங்கள் தருகிற வரையில்—என்று நான் கருதுகிறேன், பத்திரிகையிலே வரவேண்டாம், அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம் என்று தங்களைக் கேட்டுக்கொண்டார் முதலமைச்சர். அதன்மீது தாங்கள் அப்படி ஒரு உத்தரவு தந்தீர்கள்.

அதற்கு மாறாக இந்தக் குற்றச்சாட்டு ஏதோ வெளியிலே வந்துவிட்டால் என்ன செய்வது என்று நான் தங்களைப் பார்த்து, பத்திரிகையிலே வரவேண்டாமென்று நான் கேட்டுக் கொண்டதைப் போலவும், பிறகு தாங்கள் சம்மதித்தது போலவும் வானொலிக்குச் செய்தி எழுதிய நிருபரோ அல்லது ஒலி பரப்பாளரோ நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

இது மத்திய சர்க்காருடைய விவகாரம். இதில் உரிமைப் பிரச்சினை, உண்டோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை. ஆதாரங்களைக் கேட்டுப் பெறுகிற அதிகாரம் உள்ள இடத்தில் தாங்கள் இருக்கிறீர்கள். இவை பற்றிய அதிகாரங்கள் தங்களுக்கிருக்கின்றன. ஆவன செய்ய வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வானொலி சொல்லியிருக்குமானால், தாங்கள் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு அவர்களை விளக்கம் கேட்டு, அதற்குப் பின்னால் நான் தீர்ப்பளிக்கிறேன் என்று சொல்லி, 1978–79 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—காவல் துறை, தீயணைப்புப் பணிகள் ஆகியவற்றின் மீது திரு. ஜேம்ஸ் அவர்களைப் பேசும்படி அழைக்கிறேன்.

1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல்துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப்பணிகள்—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே காவல்துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது, எங்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இது எந்த அளவுக்கு மிக முக்கியமான துறை என்பதனைப் பற்றியெல்லாம் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். ஆக, இந்தத் துறை செயல்படுகிற முறைகளைப் பற்றியெல்லாம் கடந்த இரண்டு நாட்களாக விரிவாக நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அவையில் இந்தத்துறை வைத்திருக்கிற ஆய்வு உரையைப் பார்க்கின்றபொழுது, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பல்வேறு குற்றங்கள் குறிப்பாக, கொலை, கொள்ளை, வழிப்பறி, கன்னக் களவு, பெரிய திருட்டுகள், சிறிய திருட்டுகள், கால் நடைத்திருட்டுகள் ஆகிய மொத்தக் குற்றங்களும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன என்ற விவரங்களையெல்லாம் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் அதிகக் கவலை இல்லை.

ஆனால், குற்றங்கள் அதிகரித்திருப்பதற்கு எடுத்துக்காட்டியிருக்கிற காரணத்தைப் பார்க்கின்ற பொழுது, உண்மையிலேயே அது வேதனை தரத்தக்கதாகத் தானிருக்கிறது. என்ன கூறியிருக்கிறார்கள் என்று சொன்னால், 'தாக்கல் செய்யப்பட்ட எல்லா வழக்குகளையுமே பதிவு செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டதும் அவசர நிலைமை ரத்து செய்யப்பட்டதன் விளைவுமே நடப்பாண்டில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்ததற்கு முக்கிய காரணங்களாகும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.. ஆக, முக்கியமாக நெருக்கடி நிலை இருக்கிறபொழுது குற்றங்கள் குறைவாக இருந்ததாகவும் நெருக்கடி நிலையை அகற்றியதன் காரணமாக அதிகக் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்று கூறுவது முறையா என்று தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

ஏதோ, நாட்டில் போலீஸ் இராஜ்யம் இருந்தால்தான் குற்றங்கள் நிகழாமல் இருக்கும். ஆக, நாட்டில் ஒரு சர்வாதிகாரம் வேண்டும். போலீஸ் இராஜ்யம் வேண்டுமென்ற நிலையை உண்மையிலேயே இந்த அரசு விரும்புகிறதா என்பதை நான் அறியவிரும்புகிறேன். இந்திரா காந்தி அம்மையாருடைய சர்வாதிகார ஆட்சியில் மக்களுக்குச் சுதந்திரம் இல்லாதிருந்த போதிலும் மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டுதான் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்திருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார் முன்னொருதரம், இதே சட்டப்பேரவையிலே சபாநாயகரவர்கள் 'சர்வாதிகார ஆட்சி' என்று சொன்னதை நீக்கம் செய்ய

உத்தரவிட்டு, நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து நமது மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் அந்த வார்த்தையை உபயோகப் படுத்துகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய ரூலிங்,

* * * * *

என்று அப்படி சொல்லக் கூடாதே தவிர, 'சர்வாதிகார ஆட்சி' என்று சொல்வதிலே குற்றம் ஒன்றும் இல்லை, என்பது. கண்ணியத்திற்காக, தனிப்பட்ட முறையிலே, * *

* * * * *

என்று சொல்லக் கூடாது என்று நான் சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : கடந்த ஆண்டை விட ஏறத்தாழ 8,321 குற்றங்கள் அதிகரித்திருப்பதாக அறிக்கையிலே காணப்படுகிறது. அதேபோல், கடந்த ஆண்டு துப்பு துலக்கப்பட்ட வழக்குகள் எத்தனை சதவீதம் என்றால். 52·4%. இந்த ஆண்டு, அது 41.8% என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதோடு, திருட்டுச் சொத்து மீட்கப்பட்டது பற்றிய கணக்கு விவரங்களைப் பார்க்கின்ற பொழுதும் கடந்த ஆண்டு 60 சதவீதமாகவும் இந்த ஆண்டு 47 சதவீதமாகவும் உள்ளதாக இங்கே கணக்குகள் தரப்பட்டிருக் கின்றன. ஆக, அவற்றிற்கெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தைப் பார்க்கின்றபொழுது, உண்மையிலேயே எவ்வளவு நல்லமுறையில் செயல்பட்டாலும் கூட, நெருக்கடி நிலையை எடுத்துவிட்டதன் காரணமாகத்தான் இந்தக் குற்றங்கள் அதிகரித் திருக்கின்றன என்பதனை இந்த மன்றம் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

துப்பு துலக்க முடியவில்லை யென்று சொன்னால், இந்த இலாகா நேர்மையாக தனது கடமையிலேயிருந்து தவறி இருக்கிறது என்பதுதான் பொருளேயல்லாமல், மற்றபடி அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இலாகாவில் பொறுப்பேற்றிருக்கிற பெரிய அதிகாரி கடந்த பல ஆண்டுகளில் இப்பொழுதுதான் அரசியல் தலையீடு இல்லாமல் இந்த இலாகா செயல்படுகிறது என்று அறிக்கைகூட விட்டிருந்தார்கள்.

இந்த அளவு சுதந்திரமாகச் செயல்படுவதாக அறிக்கை விட்டாலும்கூட, என்ன நிலைமையிருக்கிறதென்றால், எங்கேயோ கோளாறு இருக்கிறது என்பதுதான் நான் எண்ணுகிற எண்ணம். ஒரு வேளை, அரசியல் தலையீடு இல்லையென்று சொன்னாலும் இந்த இலாகா அரசியலில் தலையிடுகிறது என்றுதான் நான் புரிந்து கொள்ள ஏதுவாகிறது. காரணம், பார்த்தோமானால், சில அரசியல் கட்சிகள் மேல், இந்த இலாகாவிற்கு ஒரு காழ்ப் புணர்ச்சி இருக்கிற நிலைமை எங்கே பார்த்தாலும் தோன்று கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[முற்பகல் 9.30]

குறிப்பாக, ஜனதா கட்சி என்று சொன்னால் போலீஸ் இலாகாவுக்கு ஒரு அலர்ஜியாக இருக்கிறது. அதற்குக் காரணம் இருக்கலாம். எமர்ஜன்சி காலத்தில் இவர்கள் விளையாடிய விளையாட்டுக்களை எல்லாம் கண்டித்து, ஜனதா கட்சி போர் நடத்தி இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆக, மீண்டும் அன்றையதினம் செய்த தில்லுமுல்லுகளை எல்லாம் இந்த நாடு நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இவர்கள் செய்கின்ற குற்றங்களைக் கண்டிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் தயாராக இருக்கின்றன. குறிப்பாக, ஜனதா கட்சி போலீசார் எங்கு தவறு செய்தாலும் கண்டிக்கத் தயாராக இருக்கிறது ; நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காரைக்குடி நிகழ்ச்சிக்கு என்ன காரணம் ? அங்கே பெண்மணி கற்பழிக்கப்பட்டாள். அவள் போலீஸ்காரர்களால் கற்பழிக்கப் பட்டாள். அதை எதிர்த்து இந்த நாட்டில் இருக்கிற ஒவ்வொரு கட்சியினரும் குரல் எழுப்பியிருக்கிறார்கள். வேலியே பயிரை அழிக்கும் நிலை இருக்கும்போது அவர்களுக்குப் பரிந்துபேச நாங் கள் தயாராக இல்லை. அதைக் கண்டிக்கும் வகையில், ஜனதா கட்சித் தலைவர் பழ. கருப்பையா அவர்களும் அங்கே உள்ள எம். பி. யும் கூட்டம் போட்டுக் கண்டனம் தெரிவித்தார்கள்.

அப்போது அங்கே இருந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் திட்டமிட்டு சில போலீஸ்காரர்களையும் மேடைக்கு அழைத்துவந்து, மேடையைப் புடைத்திருக்கிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இல்லை. அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதுமட்டுமல்ல. புதுக்கோட்டையில் இராமச்சந்திரன் செட்டி யார் என்று ஒருவர் இருக்கிறார். அவர் முன்னாள் பஞ்சாயத்துப் போர்டு தலைவர். இப்போது ஜனதா கட்சி பொருளாளர். அவர் அனைத்துக்கட்சித் தொண்டர்களின் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார். அங்கே இருக்கிற சப்–இன்ஸ்பெக்டர் ஜெயராமன்—அவர் ஊழல் பேர்வழி, கரப்ஷனில் தலைசிறந்தவர்-மதுவிலக்கு சம்பந்தமான வழக்குகளுக்கு மாமூல் வாங்கிக் கொண்டிருப்பவர். அந்த சப்-இன்ஸ்பெக்டரை ஜனதா கட்சி பொருளாளர் கண்டித் தார். அதற்காக அவர்மீது வழக்குப்போட்டு, அவரை பழி வாங்க வேண்டுமென்று சொல்லி, அதிகாலையில் அவரும் அவரு டைய மனைவி மக்களும் குடும்பத்தாரும் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஏறத்தாழ 20 போலீஸ்காரர்களுடன் அங்குபோய் கதவைத்தட்டி எழுப்பி, அவரைக் கைது செய்தார். அதை ஊர் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அனைத்துக் கட்சி ஊர் மக்களும் ஒன்றாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆக, இந்த நிலை நீடிக்க வேண்டுமா என்பதை இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 17

அடுத்து, குளித்துறையில் முன்னாள் முனிசிபல் தலைவராக இருந்த எம். எஸ். தாஸ் என்பவர் இப்போது ஜனதா கட்சியின் காரியக்கமிட்டி அங்கத்தினர். அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, அவர்மீது பழி சுமத்த வேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு, பக்கத்து வீட்டிலிருந்த பொருட்களை எல்லாம் மாற்றிவிட்டு, நெருப்பு வைத்து கொளுத்திவிட்டார்கள். நெருப்பு வைப்பதற்கு முன்னால் பொருள்களை எல்லாம் மாற்றி விட்டார்கள். இது வேண்டுமென்றே திட்டமிட்டு செய்யப் பட்டது. அப்படியிருந்தும், அது தெரிந்திருந்தும் எம். எஸ். தாஸ் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். போலீஸ் இலாகாவினருக்கு இது நன்றாகத் தெரியும். இது அரசியல் காழ்ப் புணர்ச்சியினால் செய்யப்பட்டது என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும்கூட அவர்மீது பழிசுமத்தி, வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆக, இந்த நிலை நிச்சயமாக மாறவேண்டு மென்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

போலீஸ் இலாகாவினர் மீது இன்னொன்றையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன், ஒருவர் எந்தவிதமான தகவலைக் கொடுத்தாலும் எஃப். ஐ. ஆர். ஸ்டேட்மென்ட் ரிக்கார்டு செய்து, ரிக்கார்டு செய்த பின்னால் அதையொட்டி வழக்குமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர் நிரபராதியாக இருந்தாலும் கூட வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கும் நிலைமை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. சம்பந்தப்பட்டவர் நீதி மன்றத்தில் வழக்காடி நீதி பெறவேண்டுமே தவிர வேறு வழியில்லை. எஃப். ஐ. ஆர். ரிக்கார்டு செய்தாலும், அவர் நிரபராதி என்று போலீசாருக்குத் தெரிந்தால் கூட, அவர் குற்றமற்றவர் என்று தெரிந்தால் கூட வழக்கைத் திருப்பிப்பெறுவதில்லை. நியாயம்பெற நீதிமன்றத்திற்குத்தான் போக வேண்டும். இந்த நிலை மாற வேண்டும்.

பொதுவாக எஃப். ஐ. ஆர். ஸ்டேட்மென்ட் யார் கொடுத்தாலும் உண்மை நிலையை உணர்ந்து அதற்குத் தக்கபடி வழக்குத் தொடரக்கூடிய நிலைமை வரவேண்டும்.

இங்கே தேர்தல் காலங்களில் ஏற்பட்ட வழக்குகளை விசாரித்து அவற்றை வாபஸ் செய்வதற்கு ஒரு ஜி. ஓ. நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதன்படி இந்த மாநிலத்தில் ஏதாவது ஒரு வழக்கு வாபஸ் வாங்கப்பட்டதா என்றால் நிச்சயமாக இல்லை. அதில் இருக்கிற ஷரத்தைப் பார்க்கின்றபோது ப்ராப்பர்ட்டி லாஸ் இல்லாமல் இருக்க வேண்டும் அல்லது ப்ளீடிங் இன்ஜூரி இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் எந்த வழக்கிலும் இந்த மாதிரி நிலைமை இல்லாமல் இருக்க முடியாது. தேர்தல் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் போது சில சமயங்களில் உணர்ச்சி வசப்பட்டு சில காரியங்கள் ஏற்பட்டுவிட்டால் அதற்காக ஏழைத் தொண்டர்கள் மீது வழக்கு தொடரப்படுகிறது, எந்தக் கட்சி சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்த ஏழைத் தொண்

1978 மார்ச் 17] [திரு. ஜே. ஜேம்ஸ்]

டர்களை பல மாதங்கள் வழக்கு மன்றத்திற்கு நடக்க வைத்து கஷ்டப்பட வைக்க வேண்டிய தேவை இல்லை. ஆக இந்த மாதிரி வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் கூறி இருக்கிறேன். இருந்தாலும் கூட வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. மேலும் ப்ராப்பர்ட்டி லாஸ், ப்ளீடிங் இன்ஜூரி இல்லாத வழக்குகள் கூட வாபஸ் வாங்கப்படவில்லை. குமரி மாவட்டத்தில் இன்னும் அத்தகைய வழக்குகள் கூட வாபஸ் வாங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து செக்ஷன் 307 என்ற ஒன்று இருக்கிறது. அதன் பொருள் தெரியுமோ தெரியாதோ? அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பதிவு செய்யப்படுகிற வழக்குகள் அத்தனையும் செக்ஷன் 307-ல் தான். இந்த செக்ஷன் படி 7 வருடங்கள் கடுங்காவல் தண்டனை கொடுக்க வேண்டும். எத்துணை முக்கியத்துவம் வாய்ந்த கடுரமான இந்த செக்ஷனை தாராளமாக போலீஸ் இலாக்கா மாணவர்கள் மீது சுமத்துகிறார்கள். அரசியல்வாதிகள் மீது சுமத்துகிறார்கள். நிச்சயமாக இந்த நிலை விரும்பத் தக்கதல்ல.

குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் மீது இந்த 307-வது செக்ஷன் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அது என்ன ஆனது? உண்மைக்கும் அதற்கும் ஏதாவது பொருத்தம் இருக்கிறதா என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்த யாராக இருந்தாலும் தனிப்பட்டவர் மீது இருக்கின்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இப்படிப்பட்ட வழக்குகள் தொடருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மார்த்தாண்டன் கல்லூரியில் 306 மாணவர்கள் மீது இந்த செக்ஷன் 307-ன்படி வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். இப்போது அந்த கேஸில் எஃப். ஐ. ஆர். போட்டவர்கள் கூட அந்தக் காரியத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லக்கூடிய நிலையும், நான் இந்த ஸ்டேட்மென்ட் கொடுக்கவில்லை என்கின்ற நிலையும் இருக்கிறது. இப்படி இருந்தாலும் கூட அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப் பல வழக்குகள் இந்த 307 செக்ஷன்படியே போடப் பட்டிருக்கின்றன. ஆகவே இந்த செக்ஷனைப் போடும்போது நன்றாக ஆராய்ந்து செய்யவேண்டும். குறிப்பாக அரசியல் வாதிகள் மீது அல்லது மாணவர்கள் மீது இம்மாதிரியான வழக்குகளை ஜோடிக்கும்போது நிச்சயமாக தீர விசாரித்துச் செய்யவேண்டும் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து என். ஜி. ஓ. பிரச்சினையின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், போலீஸ் அதிகாரிகள் கைது செய்ய மாட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நடந்தது என்ன· ஆங்காங்கே அடியாட்களை வைத்துக்கொண்டு என். ஜி. ஓ-க்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதை நான் இங்கே விரிவாக்க விரும்பவில்லை. ஏனென்றால் இன்றைக்கு என்· ஜி. ஓ. பிரச்சினை நல்ல முறையில் தீர்வு காணப்பட்டு நிலைமை சுமுகமாக இருக்கின்ற இந்த நேரத்தில் அதனை விரிவாகப் பேசுவதற்கு விரும்பவில்லை. இருந்தாலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல, விரும்பத்தக்கதல்ல என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, பல்வேறு இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளை போலீஸ்காரர்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்· காரணம் என்னவென்றால் முதலமைச்சரவர்கள், போலீஸ்காரர்கள் தலையிட மாட்டார்கள் என்று சொல்லி இருந்தார்கள். ஆக, இந்த மாதிரி நடந்திருக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்பதை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மதுரையிலே நடந்த நிகழ்ச்சியும், சென்னை இராஜா ஹாஸ்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியும் இந்த மாதிரிதான் இருந்திருக்கின்றன. மேலும் இந்தப் பிரச்சினைகளை அரசு நன்றாக ஆராய்ந்து உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இது சம்பந்தமாக நானும் ஏற்கெனவே பேசி இருக்கிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது பல உறுப்பினர்களும் பேசி இருக்கிறார்கள். இந்த போலீஸ் மது விலக்குக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் அது.

கடந்த நாட்களிலுள்ள நிகழ்ச்சியைப் பார்க்கிற போது எந்த கிராமத்தை எடுத்துக்கொண்டாலும் மது வடிக்கிறார்கள். விற்பனைசெய்கிறார்கள். இவையெல்லாம் போலீஸ்காரர்களின் உதவியுடன்தான் நடைபெறுகிறது என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

(முற்பகல் 9-40)

குறிப்பாக என்னிடம் பல மனுக்கள் வந்துள்ளன. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி நகல்கள் அனைத்தும் எதிர்க்கட்சிக்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவற்றைப் பார்க்கும்போது தென் ஆற்காடில் திருக்கோவிலூரில் டி. எஸ். பி. மேற்பார்வையில் பல சென்டர்களில் ஏலம் போட்டு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் ஆண்டொன்றுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் இந்தக் கணக்கில் டி. எஸ். பி. வழி

யாக வசூல் செய்யப்பட்டு அங்கிருக்கிற போலீஸ் இலாகாவில் பணியாற்றுகிறவர்கள் பங்கு பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டு மனு ஒன்று முதல் அமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் நகல் என்னிடமிருக்கிறது. எனக்கும் வந்திருக்கிறது. தேவைப்பட்டால் எங்களுக்கு வந்திருக்கிற அந்த நகல்களை முதல் அமைச்சர் அவர்களிடம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். இந்நிலை நிச்சயமாக விரும்பத்தக்கதல்ல.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் பூர்ண மதுவிலக்கை மக்கள் வரவேற்கிறார்கள். விரும்புகிறார்கள். ஆனால் மதுவிலக்கு நல்ல முறையில் செயல்படாததன் காரணமாக மக்கள் எந்தளவிற்கு வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள், குறிப்பாக தாய்க்குலம் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கூற வேண்டிய தேவையில்லை. இந்த அரசு அதை நன்றாக உணர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன். இந்த அரசு மதுவிலக்கில் நம்பிக்கை வைத்திருக்கிறது. ஆனால் மதுவிலக்கை அமல்நடத்த வைத்திருக்கிற மெஷினரி நிச்சயமாக

It is most unfit. This work should not be entrusted to this department

என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக ஒரு தனி இலாகா அமைத்துக்கொள்ள வேண்டும். மது விலக்கின் மீது இந்த அரசுக்கு நம்பிக்கையிருக்குமானால் இதற்காக என்று ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி பூர்ண மதுவிலக்கை அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏதோ மினி மிஸா பி. டி. ஆக்ட் மத்திய அரசால் கொண்டு வரப்பட இருக்கிறது. அதனால் நாட்டுக்கு ஆபத்து வர இருக்கிறது என்றெல்லாம் இங்கே சில நண்பர்கள் எடுத்துச்சொன்னார்கள். நான் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்திரா காந்தி அம்மையார் ஆட்சியில் நடைபெற்ற அந்த அராஜரீகம் நீதிமன்றத்திற்குமுன் கொண்டுவராமல் ஜெயிலில் தள்ளுகிற முறை ஜனதா ஆட்சியில் நடைபெறாது என்ற உறுதிமொழியை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பி. டி. ஆக்ட் இருந்தால்கூட....

<u>திரு. நா. சுந்தரராஜ்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. ஜேம்ஸ் அவர்கள் மினி மிஸா. பி. டி. ஆக்ட் பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் பத்திரிகையைப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களே எவ்வளவு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இத்தகைய முறையில் காரியங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால் பதினைந்து நாட்கள் கூட மொரார்ஜி அவர்களின் ஆட்சி இருக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியுமா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கூறியதெல்லாம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படாமல் விசாரிக்கப்படாமல் இந்திரா காந்தி அம்மையாரின் சர்வாதிகார ஆட்சியில் நடைபெற்றதுபோல் எவரும் சிறைச்சாலையில் அடைக்கப்படமாட்டார்கள் என்ற உறுதியை மத்திய அரசு இந்த நாட்டு மக்களுக்குக் கூறியிருக்கிறது. ஆக அந்த உறுதியைத்தான் நான் இங்கேயுள்ள நண்பர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, போலீஸ்காரர்களின் தேவைகள்பற்றி விரிவாகப் பல்வேறு நண்பர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள்.

(திரு. நா. சுந்தரராஜ் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : The hon. Member is not yielding நீங்கள் அடிக்கடி எழுந்து நிற்கிறீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடுத்து, அவர்களுக்கு, போலீஸ் இலாகாவில் உள்ளவர்களின் ப்ரமோஷனில் இருக்கிற அனாமலீஸ் போன்ற பிரச்னைகள் எல்லாம் தீர்க்கப்படவேண்டும். இன்று நம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல் தங்கள் கோரிக்கைகளை இலாகா மூலம் நியாயமான முறையில் நிவர்த்தி செய்யக் கூடிய நிலை இந்த இலாகாவில் தான் இருக்கிறது. ஆனால் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் கூட சிலர் ஏன் நாம் கூட வேலைநிறுத்தம் செய்து நம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடாது என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள் என்பதை அரசு நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக, பிரச்னைகளைப் பெரிதாக்காமல் அவர்கள் கோரிக்கைகளை ஓரளவிற்குப் பேசித்தீர்த்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு இசைவு கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக ஒன்றை எல்லோரும் கூறினார்கள். இவர்களுக்குப் போதுமான கட்டடவசதி குடியிருப்பு வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக சி.ஐ.டி. துறைச் சேர்ந்தவர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் குடியிருப்புகள் எல்லாம் எவ்வளவோ காலத்திற்கு முன்பு கட்டப்பட்டவை. இந்தக் குடியிருப்புகளிலுள்ள சுவர்களில் ஷாக் அடிக்கிறது என்று கூட சொல்லப்படுகிறது. இவையெல்லாம் நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த படியாக, இந்த அறிக்கையில் சொல்லியிருப்பது போல் இப்போது இருக்கின்ற காவல் நிலையங்களில் 117 நிலையங்களில் போன் வசதி இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே தொலைபேசி வசதி காவல் நிலையத்திற்கு இல்லை என்று சொன்னால் போலீஸ் இலாகா தனது கடமையைச் சரிவர நிறைவேற்ற முடியாது என்பதை அரசு உணர்ந்து இருக்கவேண்டும்.

அதோடு இப்போது போலீஸ் நிலையங்களில் போலீஸ்காரர்களின் எண்ணிக்கை போதாது என்று சொல்லப்படுகிறது, இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அண்மையில் போலீஸ் இலாகாவைப்பற்றி நீதிமன்றத்தில் கூறப்பட்ட ஒரு கருத்தினை—அது இந்து பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதை தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்காக அதை வாசிக்கின்றேன்.

The Judge, pointing out "the callous indifference with which the Head Constable had treated Mr. Radhakrishnan (when he came to gave a compiaint about the theft of jewels and his suspicion of foul play) said.

"When a person like a headmaster has been treated so callously by the police, I shudder to think about the fate of the millions of poor people in our country who might have the same problem. It is funny that the Head Constable throws the blame on the Inspector."

ஆக, இந்த நிலையெல்லாம் மாறியாக வேண்டும். அதோடு ஒரு போலீஸ் அதிகாரி தவறு செய்தால்; அது சம்பந்தமாக ஒரு மனு கொடுத்தால் அதை விசாரிப்பதற்கு நிச்சயமாக அதைப் போலீஸ் இலாகாவில் கொடுக்கக் கூடாது. இப்போது நடைபெறுகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற போது, இப்படி கொடுக்கப்படுகின்ற மனுக்களை போலீஸ் அதிகாரிகளிடமே விசாரிப்பதற்கு கொடுக்கின்ற காரணத்தால், நீதி கிடைக்காமல் போகின்ற நிலைமை இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தீயணைப்புத்துறையைப் பொறுத்தவரையில் மிகவும் அத்தியாவசியமானது இந்தத் துறை என்பதை எல்லோரும் அறிவார்கள். கடந்த ஆண்டு அடையாறில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது. அங்கு பல என்ஜின்கள் வந்தன, ஆனால் அவற்றில் இருக்கின்ற குழாய்கள் எல்லாம் பாண்டவர் காலத்தில் பயன்படுத்திய குழாய்களாக இருந்த காரணத்தால், அதில் வந்த தண்ணீர் எல்லாம் குழாய்களிலுள்ள லீக் காரணமாக வெளியே போய்விட்டதால் தீயை அணைப்பதற்குப் பயன்படவில்லை. ஆகவே இதுபோன்ற என்ஜின்கள், குழாய்கள் இவை சம்பந்தப்பட்ட

தளவாடங்கள் எல்லாம் நல்ல கண்டிஷனாக இருக்கவேண்டும். இல்லையென்றால் எந்தவிதமான பயனும் இல்லாமல் போய்விடும். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் 200 லட்ச ரூபாய் அளவுக்கு தீ விபத்தால் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தது 200 லட்சம் ரூபாய் என்றால் அரசாங்கத்தின் கவனத்திற்கு வராமல் இருந்தது பல கோடிக்கணக்கில் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே இந்த இலாகாவானது, நல்லமுறையில் செயல்படுகின்ற வகையில் நல்ல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு,—கன்னியாகுமரி மாவட்டத்தில், குலசேகரத்தில், அரசாங்கத்திற்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்கள் ஏராளமாக இருக்கின்றன என்பதை அரசுக்குத்தெரிவித் துக்கொள்கிறேன். அங்கு சம்மர் ஸீஸனில் அடிக்கடி தீவிபத்து ஏற்படுகிறது அதன் காரணமாக ஆயிரக்கணக்கான ரப்பர் தோட்டங்கள் பாழடையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு அங்கு ஒரு தீயணைப்புப் படை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். அரசுக்கு மட்டும் அல்ல தனியார்களுக்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன, இவைகளை எல்லாம் பாதுகாக்கின்ற முறையில் இங்கு ஒரு தீயணைப்பு படையை ஏற்படுத்தவேண்டுமென்று அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்கிறேன். அரசு இதுவரை அதற்கு செவி சாய்க்காமல் இருப்பதன் காரணமாக லட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டமாகிக்கொண்டிருக்கின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு நெருக்கடி காலங்களில் இந்தத்துறைக்குத்தேவையான வண்டிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இப்போது மாவட்டத்தில் ஒரு வண்டியும் அதற்கான கருவிகளும் இருக்கின்றன. அப்படியில்லாமல் இன்னும் ஏராளமான வண்டிகளும் அதற்குத் தேவைப்படும் துணைக் கருவிகளும் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த இலாகா மேலும் செம்மையாகவும், செவ்வையாகவும் பணியாற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, போலீசுக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லாமல் இருக்கவேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அந்த வகையில் இதற்குக் கண்டிப்பான உத்தரவுகள் கொடுத்தால் அது சுதந்திரமாகச் செயல்படுவதற்கு இயலும். இந்த மாநிலத்தில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு எந்தவிதமான தீங்கும் வராத வண்ணம் இந்தத்துறை செயல்பட வேண்டும். அதில் முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.50)

*திரு ஏ, ஆர். மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர் உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே மத்திய அரசின் சார்பிலே ஒரு உறுதிமொழியை அளித்திருக்கிறார்கள். அந்த உறுதிமொழியை கொடுப்பதற்கு அவருக்கு ஏதாவது அதிகாரம் மத்திய அரசிலேயிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதும் தெரியவில்லை. பிரதம மந்திரி அவர்கள் சார்பிலே இந்தச் சபையிலே அப்படி ஏதாவது உறுதிமொழி சொல்ல வேண்டுமென்று அதிகாரம் தரப்பட்டிருக்கின்றதா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த காங்கிரஸ் கட்சி சர்வாதிகார ஆட்சி என்றும், அந்த ஆட்சியிலே நடைபெற்ற தவறுகள் எல்லாம் இங்கே நடக்காது என்றும் குறிப்பிட்டார்கள். அந்தத் தவறு தொடர்ந்து நடக்கும் என்பதை அதைவிட இன்னும் உறுதியாக நடக்கும் என்பதை ஜனதா கட்சி நிரூபித்துக் கொண்டிருக்கிறது. ஒன்றை நான் உதாரணமாகச் சொல்ல முடியும்....

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இதுவரை இந்திரா காங்கிரஸ் என்று சொன்னால் கோபம் வந்து கொண்டிருந்தது இவர்களுக்கு. இந்தக் காலம் மாறி, இந்திரா காங்கிரஸ் என்று அழைப்பதை உரிமையோடு ஏற்றுக்கொண்டு விட்டார்கள், சூழ்நிலை காரணமாக, இந்த இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், இந்திரா அம்மையாருக்கும் இருக்கின்ற தொடர்புபோல் அல்ல, ஜனதா கட்சிக்கும் அதனுடைய தொண்டர்களுக்கும், ஊழியர்களுக்கும், தலைவருக்கும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

நான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி ஜனதா கட்சித் தலைவர். நண்பர் மாரிமுத்து அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்திற்கும் தொடர்பு இல்லாமல் இருக்கின்ற ஒருவர் கட்சி அது. ஆனால் ஜனதா கட்சி ஜனநாயக முறைப்படி, கொள்கை அளவில் முறைப்படி அமைக்கப்பட்ட கட்சி என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர், மாரிமுத்து: தலைவர் அவர்களே. ஜனதா கட்சித் தலைவர் அப்பட்டமாக ஒப்புக் கொண்டார். நாங்கள் ஆளுக்கு ஆள்தான் பேசுவோம். அப்படிப்பட்ட உரிமை எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள்.

நேற்றுப் பாராளுமன்றத்திலே ஜனதா கட்சியின் உறுப்பினர்கள் கூட்டம் நடந்திருக்கிறது, அதிலேயும் இப்படித்தான் ஆளுக்கு ஆள் பேசியிருக்கிறார்கள். பிரதம அமைச்சர் அவர்கள் டீ.ஐ.ஆர். என்று மிசாவிற்குப் பதிலாக ஒரு மினி மிசாவைக் கொண்டு வருவதற்காக முயற்சி எடுத்திருக்கிறார். இதைச் சட்டபூர்வமாக

ஆக்குவதற்கு மசோதா கொண்டு வரப்பட இருக்கிறது என்ற விவாதம் நடந்திருக்கிறது. இந்த டிபன்ஸ் ஆப் இண்டியா ரூல்ஸ் என்பது காங்கிரஸ் காலத்திலே இருந்தது. அது வருஷா வருஷம் வேண்டும்போது அதை நீடித்துக்கொண்டே வந்தார்கள். ஆனால். இப்போது அதை பர்மனெண்டாக, வைத்துவிட வேண்டுமென்று முடிவெடுத்திருக்கிறார்கள். அதை எதிர்த்துப்பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருக்கும் ராம் ஜெத் மலானி அவர்கள் பேசினார்கள். அதற்கு பிரதம மந்திரி அவர்கள் அவரைக் கடுமையாக எச்சரித்திருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவரை எச்சரித்திருக்கிறார்கள். ஆகவே..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஜனதா கட்சித் தலைவருக்கும் காங்கிரஸ் கட்சித் தலைவருக்கும் இங்கே சர்ச்சை வேண்டாம். இப்போது சட்டமன்றத்திலே நடப்பது காவல் துறை மானியம். இங்கே பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பற்றிப் பேசத் தேவையில்லை.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து:</u> முடித்து விடுகிறேன். ஜனதா கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் கட்சி ஜனநாயக முறையில் செயல்படுவதாகவும் காங்கிரஸ் கட்சி சர்வாதிகாரமாக நடக்கிறது என்று சொன்னதற்காகவும் பதில் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து. இந்த காவல் துறை மானியத்தின் பேரிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வந்திருக்கிறேன். காவல் துறையைப் பற்றிய மானியம் வருகின்றபோது, அவையிலே காரசாரமாக விவாதம் நடப்பது பழக்கம். கடந்த 2 நாட்களாக இந்த மானியத்தின் மீது காரசாரமாக விவாதங்கள் நடைபெற்றன. பல குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டன. அப்படிச் சாட்டப்பட்டக் காரணத்தினாலே காவல் துறையிலே அதிகம் குறைகள் இருக்கின்றன என்று சொல்லி அதை கலைத்துவிட முடியாது. அதை நாம் வைத்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். காவல் துறையை நாம் புறக்கணித்துவிட முடியாது. அதனுடைய பணி ரொம்ப முக்கியமானது. அதிலே இருக்கின்ற குறைபாடுகளை நீக்கி, இதைச் செம்மைப்படுத்தி, மக்களுடைய நலனுக்காக இதைப் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சியில் இந்த அரசு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையின் கண்ணோட்டம் கடந்த காலத்தில், பிரிட்டிஷ் காலத்தில் இருந்த பாரம்பரியத்தில்தான் அந்த முறைப்படிதான் இருக்கிறதே தவிர, புதிய நோக்கத்தோடு பிரச்சினைகளை அணுகுவதை நாம் பார்க்க முடியவில்லை. புதிய கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளை அணுகவேண்டும். ஏழைகள் யாராவது வந்து தாங்கள் வசதியான ஒருவரால் துன்புறுத்தப் படுகிறோம் என்று புகார் கொடுத்தால், காவல் துறை அதிகாரிகள்

வசதியானவர்கள் அப்படிச் செய்திருக்கமாட்டார்கள், வசதியானவர்கள் இந்தத் தவறைச் செய்வார்களா என்ற கண்ணோட்டத்தோடுதான் பார்க்கிறார்கள்.

அதே சமயத்தில் வசதியானவர்கள், செல்வாக்குள்ளவர்கள் ஏழைகளின் பேரில், தவறு செய்தான் என்று புகார் சொன்னால் உடனே நடவடிக்கை எடுத்து அரஸ்ட் செய்து அவனை உள்ளே தள்ளிவிடுகிறார்கள். அந்தக் கண்ணோட்டம் மாறவேண்டும். ஏழைகளாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும் குற்றச்சாட்டின் தன்மையில் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுப்பதற்கான முறையில் காவல் துறையினர் செயலாற்ற முன்வரவேண்டும், இன்றைக்குக் கீழ் நிலையில் இருக்கும் மக்கள். நாதியற்ற நிலையில் கேட்பார் யாரும் இல்லை என்ற நிலையில் இருக்கும் மக்கள் தங்களுக்கிருக்கிற கஷ்டங்களை, சிரமங்களைக் காவல் துறையிடம் சொல்லித்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். நேரடியாக அவர்கள் சொல்லுபவற்றின்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் ஸ்தாபனமாக, அமைப்பாக காவல்துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கேற்ற வகையில் அவர்களுக்குப் புதிய கண்ணோட்டத்தில் பிரச்சினைகளை அணுகப் பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் பிரச்சினை போன்றவற்றில் போலீஸ் தலையீடு இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டது. தொழிலாளர்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்யக்கூடாது. தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய உரிமை. அந்த உரிமையைப் பறிக்கக்கூடிய அளவுக்கு கடும் நடவடிக்கை எடுத்து, துன்புறுத்தி ஸ்ட்ரைக்கைக் குலைக்கும் காரியங்களைச் செய்யக் கூடாது. ஆனால் லா அண்டு ஆர்டர்—சட்டம் அமைதியைப் பாதுகாக்க வேண்டிய கடமைகளில் போலீசுக்குப் பொறுப்பு உண்டு.

என். ஜி. ஓ.-க்களின் போராட்டத்தின்போது மிகுந்த பொறுப்போடு சுமூகமாகப் பிரச்சினை தீர உதவியிருக்கிறார்கள் என்று என். ஜி. ஓ. சங்கத்தின் சார்பாகவே பத்திரிகையில் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். பிரச்சினைகளைச் சிக்கலாக்காமல் பிரச்சினைகளில் சுமூகமாக முடிவு எடுக்கும் நிலையைக் காவல் துறை செய்து கொடுக்கவேண்டும்.

வீக்கர் செக்ஷன்ஸ்-சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் அவர்கள் பணியாற்ற வேண்டும். குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் சித்கணங்கும்பம் என்ற கிராமத்தில் மிராசுதாரர்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே கூலித் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தகராறு காரணமாக இரு தரப்பாருக்கும் இடையே கை கலப்பு ஏற்பட்டது. அரிசனங்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். 47 பேர் கை ஒடிந்து,

அடிப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். நிலச்சுவான்தார் ஒருவர் அடிக்கப்பட்டிருக்கிறார். இதன் காரணமாக 150 அரிசன் குடும்பங்களின் வீடுகளைச் சூறையாடி இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலுள்ள பண்டங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன: ஆடுகளை எல்லாம் ஓட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். மாடுகளை எல்லாம் ஓட்டிக்கொண்டு போயிருக்கிறார்கள். இது வரை அது சம்பந்தமாக யாரும் கைது செய்யப்படவில்லை. அந்தச் சம்பவங்களை நடத்தியவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. பாதிக்கப்பட்ட அரிசன மக்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இருப்பதாகக் கருதுவார்களா?

அவர்கள் அடிக்கப்பட்டது உண்மை; அவர்கள் சொத்துக்கள் சூறையாடப்பட்டது உண்மை. ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ரெக்கார்டில் எழுதி வைத்திருக்கலாம். இந்த மாதிரி செய்தவர்களை அரெஸ்ட் செய்து நடவடிக்கை எடுத்து கேஸ் போட்டிருக்க வேண்டாமா? இப்படிச் செய்யப்பட்டிருக்குமானால் அடுத்து இந்த மாதிரிச் சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்தக் கேஸ் சம்பந்தமாக காவல் துறை கவனம் செலுத்தி அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும்; மேலும் அவர்களுக்கு எந்தவிதமான சங்கடங்களும் ஏற்படாத வண்ணம் தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் தேனி வட்டாரத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த வட்டார காங்கிரஸ் கட்சி செயலாளர் சுந்தரராஜ் என்பவர் கொலை செய்யப்பட்டார். அரசியல் ரீதியான கொலை; அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கொலை செய்யப்பட்டார். கொலை செய்தவர் யாரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர்களாகவே கோர்ட்டில் போய் சரண்டர் ஆகி உள்ளார்கள். இதிலே கடும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா?

(மு. பகல் 10-00)

இம்மாதிரிச் செல்வாக்கு மிக்கவர்களுடைய தலையீட்டாலே அந்த கேஸே வீணாகிவிடுமோ, குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் போய்விடுவார்களோ என்ற அச்சவுணர்வு ஏற்பட்டிருக்கிறது: அந்த அச்சவுணர்வின் காரணமாகக் கொலை செய்தவர்கள் தண்டிக்கப்படக் கூடிய அளவிலே நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதே நேரத்திலே, அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலே மதுரை நகரத்திலே முத்துகிருஷ்ணன் என்ற காங்கிரஸ் தொண்டர் கொலை செய்யப்பட்டார். அதுவும் மிதமான முறையிலேதான் நடவடிக்கை எடுக்கப்படுகிற நிலை இருக்கிறது. இன்னும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அதைத் தடுப்பதற்கு முயற்சி சில

பேர்கள் எடுக்கலாம். அதற்கு இடம் கொடுக்காமல் யார் குற்றம் செய்தாலும்சரி, அவர்களைத் தண்டிக்கக்கூடிய நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏ. முக்குளம் என்ற இடத்திலே வி. ஆர். இராமுத்தேவர் என்பவர் பேரிலே போலீஸ் கேஸ் போட்டிருக்கிறது. ஏதோ பக்கத்திலே இருப்பவர்களுக்கும் அவருக்கும் சச்சரவு என்று சொல்கிறார்கள், அதற்காக அவரை கைது செய்ய வேண்டுமென்று சொல்லி இராத்திரி பூராவும் அவர் வீட்டு வாசலிலே போலீஸ்காரர்கள் போய் துப்பாக்கியோடு கைவிலங்கோடு காத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். ஏதோ வாய்ச் சண்டை, அடிதடி கூட இல்லை. அதற்காக இரவு பூராவும் கைவிலங்கை வைத்துக்கொண்டு அங்கே பெரிய அமர்க்களம் செய்திருக்கிறார்கள் போலீஸ்காரர்கள் விடிகிற வரையில், அதுபற்றி 2-3-78 ஆம் தேதியன்று இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் இடத்திலே அவர் ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறார். அது சம்பந்தப்பட்ட போலீஸ்காரர்கள், தேவராஜன், ஹெட்கான்ஸ்டபிள் அய்யனார். ரைட்டர் மாரியப்பன், பி.சி., மாரியப்பன் பி.சி., பொன்னன்டோ, பி.சி, ராமன், பி.சி ஆகிய இத்தனை பேர்களும் சேர்ந்துபோய் அவருடைய வீட்டுக்குள்ளே போய் புகுந்து— அவர்கள் ஏதோ பணம் கேட்டார்கள், கொடுக்கவில்லை. அதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள் — மிரட்டியிருக்கிறார்கள், இது சம்பந்தமாக முழு விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

திருச்சி நகரத்திலே மகாத்மா காந்தியடிகள் சேவா சங்கத்தின் செயலாளராக கோதண்டம் என்பவரிடத்தில் சின்னசாமி தெருவில் 356 ஆம் எண்ணில் இருக்கிற ஒருவர் குடிபோதையிலே அங்கு உள்ளவர்களிடம் தகராறு செய்கிறார். இதைப்பற்றி சம்பந்தப்பட்டவர்கள் ஒரு பெட்டிஷன் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குடிகாரனுடைய செயல் இது. தினசரி குடிப்பது, குடித்துவிட்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். இம்மாதிரிச் செயல்களின் மேல் உடனடியாக நடவடிக்கை எடுத்துவிட்டால் இம்மாதிரிச் சிறு தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றைய தினம் கூட செய்தி வந்திருக்கிறது. மதுராந்தகத்திலே குக்கம்சந்த் என்பவர்மீதும், மதுராந்தகம் ராகவன், தாலூகா காங்கிரஸ் தலைவர் என்பவர் மீதும்; ரயில்வே ஆக்ட் 343வது செக்ஷன்படி கேஸ் போட்டிருக்கிறார்கள், அவர்களை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். பத்திரிகையிலே இந்த செய்தி ஒரு தினுசு ஆக வந்திருக்கிறது. ஆனால் வெளியிலே வந்திருக்கிற செய்தி ஏதோ இந்திரா காந்தியை அரெஸ்ட் செய்த

போது இவர்கள் ரயில்வே லைனுக்கு வந்தார்கள் என்று சொல்லிப் போட்டிருப்பதாக, அரசியல் ரீதியாக அமைதியாகப் போராட்டம் நடத்துகிறபோது இம்மாதிரி கேஸ் போட்டு அவர்களுக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப்பற்றி அரசு கவனம் செலுத்தி விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போலீஸார்கள் பேரிலோ அல்லது அதிகாரிகள் பேரிலோ குற்றச்சாட்டுகள் வரலாம். அவை உண்மையாகவும் இருக்கலாம் தவறாகவும் இருக்கலாம். ஒரு அதிகாரியின்பேரிலே குற்றம் சொல்லி ஒரு புகார் கொடுத்தால் அப்படி குற்றஞ்சாட்டப்பட்ட அந்த அதிகாரிக்கே அந்த பெட்டிஷன் அனுப்பப்பட்டால் அந்த அதிகாரி, புகார் கொடுத்தவருக்கு அவ்வளவு தைரியமா? என்று நினைத்து இன்னும் அவர்மேல் பல குற்றச்சாட்டுக்களைச் சாட்டி நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருப்பதால், எந்த அதிகாரி மீதாவது குற்றஞ்சாட்டினால், அவரிடத்திலேயே அந்த புகார் பெட்டிஷனை அனுப்பினால் அந்தப் புகார் கொடுத்தவர் கதி அதோ கதி தான். மனிதர்கள்தானே நாமெல்லாம். அந்த உணர்வு வருகிறது. நம்பேரிலே இவ்வளவு தைரியமாகப் பெட்டிஷன் போட்டு விட்டார் என்ற எண்ணத்தில் அவர் மீது வேறு குற்றச்சாட்டைச் சாட்டி உள்ளே தள்ள வேண்டுமென்ற எண்ணம் வரும். இம்மாதிரி அதிகாரிகளை விசாரிப்பதற்காகத் தனி செல் போட வேண்டுமே தவிர அவர்களுக்கே அனுப்பி விசாரிக்கின்ற முறையை மாற்ற வேண்டும்.

மதுவிலக்குப் பற்றி உறுப்பினர்களெல்லாம் பேசினார்கள். ஏழைகளெல்லாம் குடிக்காமல் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில் மதுவிலக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றைக்குத் தமிழகம் பூராவிலும் இருந்து வந்திருக்கின்ற செய்திகளைப் பார்த்தால் எங்கு பார்த்தாலும் சாய்ச்சுவதிலும், குடிப்பதிலும் எந்தவிதமான குறைவும் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

எனவே நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இதை இன்னும் தீவிரமாக அமலாக்கி இதை அறவே இல்லாமல் செய்வது எப்படி என்று பார்த்து, கடும் தண்டனை கொடுத்தாவது இந்த மதுவிலக்கைச் சரிவர அமல் நடத்த வேண்டும். இதில் தாமதம் காட்டுவது மதுவிலக்கைக்கொண்டு வந்ததற்கான அந்தப் பலன் இல்லாமல் செய்து விடும்.

காய்ச்சுபவர்கள் காய்ச்சிக்கொண்டேயிருக்கிறார்கள். குடிப்பவர்கள் குடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இதில் போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எடுத்தாலும் கீழேயுள்ள கான்ஸ்டபிள்கள் செய்தி அனுப்பி, ''ஜாக்கிரதை, அதிகாரிகள் வருகிறார்கள்'' என்று தெரிவித்து விடுகிறார்கள். இது மாமூலாக நடந்து

கொண்டிருக்கிறது, சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, மதுவை உற்பத்தி செய்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுத்து அவர்களை உள்ளே வைக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை. இதை எப்படித் தடுத்து நிறுத்துவது? காவல்துறை மேலதிகாரிகள் இதை எப்படியும் அமலாக்க வேண்டுமென்று நினைத்தாலும் கீழே தவறு நடந்துவிடுகிறது. எனவே, மக்கள் கமிட்டி என்று அமைத்துத் தீவிரமாக முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இருந்தது. அந்த முயற்சி இப்பொழுது எப்படிச் செயல்படுகிறது என்று தெரியவில்லை.

தமிழ்நாட்டிலேயே தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு திட்டம் என்று அமல்படுத்தினார்கள். அதன்மூலம் அங்கேயுள்ள கிராமங்கள் மிகவும் நல்லமுறையில் இருந்தது. காய்ச்சுவது இல்லை, குடிப்பது இல்லை என்று அந்த வட்டாரத்தில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் நடந்து கொண்டிருந்தது. இன்றைக்கு அங்கேயும் செம்மையாக அது நடைபெறவில்லை என்று கேள்விப்படுகிறேன்.

அவ்வளவு கட்டுப்பாடாக இருந்த பகுதியிலேயே குலைந்து விடுமானால் மற்றப் பகுதிகளில் எப்படியிருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, வெறும் அதிகாரிகளை மட்டும் கொண்டு அமலாக்கிவிட முடியாது, மக்களுடைய ஒத்துழைப்பையும் அதிகமாகப் பெறுவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும். மக்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் தீவிரமாக அமலாக்க முடியாது. அறவே ஒழிக்க முடியாது. ஆகவே, கிராம மட்டத்தில் தீவிரமான எண்ணம் கொண்டவர்களைக் கொண்ட கமிட்டியை அமைத்து காவல் துறையினரின் ஒத்துழைப்பையும் பெற்று இதைத் தீவிரமாக அமலாக்க வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் சென்னையிலே லாயிட்ஸ் ரோடு காலனிக்குப் பக்கத்தில் ஒரு கூட்டத்திற்குப் போயிருந்தோம். அங்கே ஏதோ யாரோ அடித்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். போலீசார் சென்று உள்ளே நுழைய முடியவில்லை என்று வந்திருக்கிறார்கள். யாரோ சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், கபாலி நகர் மாயாண்டி காலனியில் இருப்பவர்களுக்கும் இடையில் சண்டையாம். போலீசார், யார் காய்ச்சுகிறார்களோ அவர்களைப் பிடிக்காமல், அங்கே இருக்கின்ற மக்களை அடிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி விசாரிக்க வேண்டும். சென்னை நகரில் காய்ச்சுவதும், விற்பதும் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதில் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது,

அடுத்து, லாரிகளிலே ஆட்களை ஏற்றிக்கொண்டு போகக் கூடாது என்று சர்க்காரால் முடிவெடுக்கப்பட்டு; காவல்துறையால் முடிவெடுக்கப்பட்டு பத்திரிகையிலே வந்த செய்திகளைப் பார்த்தோம். அதனால் யாரும் அரசியல் கட்சிக்காரர்கள் மாநாடு

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] 1978 மார்ச் 17]

களுக்கோ, வேறு எந்தக் காரணத்திற்கோ லாரிகளில் ஆட்களை
ஏற்றிக்கொண்டு போகக்கூடாது என்ற தடை இருக்கிறது.
அப்படியிருந்தும் கோவையிலே நடந்த ஜனதா கட்சிக்காரர்கள்
மாநாட்டிற்கு பத்திரிகையிலே செய்தி வந்ததை வைத்துச்
சொல்கிறேன் — 600 லாரிகள், பஸ்கள் வந்ததாக, கிட்டத்தட்ட
400 லாரிகள் அந்த மாநாட்டிற்கு வந்ததாகக் கூறுகிறார்கள்.
போலீசார் அந்த லாரிகள் போவதை எப்படி அனுமதித்தார்கள்?
எப்படி அனுமதி கொடுக்கப்பட்டது?

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு
நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், திருச்சியிலே நடந்த
மாநாட்டிற்குக்கூட லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்லப்பட்டது.
அவர்கள்மீது வழக்குகள் ஒன்றும் போடப்படவில்லை.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து:— தலைவரவர்களே, திருச்சி
மாநாட்டிற்கு லாரிகளை யாரும் எடுத்துப் போகவும் இல்லை,
அப்படி வந்திருந்தால் கேஸ் போட்டால் அதைப்பற்றி ஆட்சேபணை
இல்லை. கிடையாது என்று உறுதியாகக் கூற முடியும். லாரியை
யாரும் கொண்டு போகவில்லை. ஆனால் ஜனதா கட்சிக்காரர்
களுக்கு ஒரு தைரியம், மத்தியிலே நாம் ஆட்சியிலே இருக்கிறோம்,
எனவே மாநில ஆட்சி ஒன்றும் செய்யமாட்டார்கள்; லாரிகளில்
செல்பவர்களை இவர்கள் பிடித்தால் அவர்களிடம் சொல்லி
பயமுறுத்தலாம் என்று எண்ணிக்கொண்டு செய்திருக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், மத்திய
ஆட்சி மாநில ஆட்சியை மிரட்டியது அந்தக் காலம். இப்பொழுது
மாநில ஆட்சிக்கு சுதந்திரம் கொடுத்திருப்பது இந்தக் காலம்

(முற்பகல் 10-10)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மாநில ஆட்சிக்குச் சுதந்திரம்
கொடுத்துவிட்டோம் என்று மாநில ஜனதா கட்சிக்காரர்கள்
சுதந்திரத்தை கையில் எடுத்துக்கொள்ள ஆரம்பித்துச் சட்டத்
திற்குக்கூட கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை என்று கருது
கிறார்கள்.

திரு. மு. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் தலைவர் அவர்கள்
கூறும்போது மத்தியிலே ஜனதா தலைவர்கள் ஆட்சிப்பொறுப்பில்
இருப்பதால் மாநில ஆட்சி என்ன செய்துவிட முடியும்
என்று மாநில சர்க்காரை அலட்சியப்படுத்துகின்ற வகையில்
பேசுவது இந்த மாநில சர்க்காரையும், இந்த அவையையும்
அவமதிப்பதாகாதா, அது குறிப்பேட்டில் இருக்கலாமா என்
பதைப் பற்றித் தாங்கள் தீர்ப்பளிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

1978 மார்ச் 17]

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்: அதனால் பரவாயில்லை:
பேசட்டும்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அவர் ஏதோ ஒரு கருத்தை மனதிலே வைத்துக் கொண்டு சொல்கிறார். அது தவறான கருத்து. ஆகவே இந்த மாநாட்டில் லாரிகளைக் கொண்டு வந்ததற்காக என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை......

திரு. ர. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஐ ஆம் நாட் ஈல்டிங்:

திரு. ர. ஜெபமணி : மாநாட்டிற்கு லாரிகள் வந்ததாகவும் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதைப் பற்றியும், ஏதோ ஜனதா கட்சி திமிரோடு சுதந்திரமாக நடப்பதாகவும் .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கெனவே இதைப் பற்றி 2 பேர்கள் பேசி விட்டார்கள். நீங்களும் பேச வேண்டாம். இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. ர. ஜெபமணி : ஜனதா கட்சி ஒன்றும் அரசாங்க லாரிகளை ஓசியில் பயன் படுத்தவில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசு லாரிகளை மாண்புமிகு சரண்சிங் அவர்கள் பிறந்த நாளைக்கு ஏற்பாடு செய்தவர்கள் பயன்படுத்தவில்லையா .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப் பற்றி பேசவேண்டாம். டிமான்டிலே பேசுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பிறந்த நாள் விழாவிற்கு லாரிகள் கொண்டு வந்தது பற்றி ஜெபமணி அவர்களுக்குத் தெரிந்திருக்காது. இப்படி லாரிகளைக் கொண்டு வந்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முதுகுளத்தூரிலே தீ அணைப்பு படை இல்லை என்று ஒரு பெரிய குறை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு அந்தப் பகுதி மக்களுக்கு வசதி இல்லை. எனவே அரசாங்கம் அந்தப் பகுதியில் ஒரு தீ அணைப்பு படை ஒன்றை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 17

என்னுடைய தொகுதியான பட்டுக்கோட்டையிலே தீ அணைப்புப் படை இருக்கிறது. அதற்கு கட்டடம் இல்லை. அதை வைப்பதற்கு ஒரு கொட்டகைப் போட்டிருந்தார்கள். ஆனால் அந்தக் கொட்டகையும் சமீபத்திலே வீசிய புயலில் சரிந்து விட்டது. எனவே அவர்கள் வெய்யிலிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு மாரிமுத்து அவர்கள் பேசுகிற போது, மத்திய உள்துறை அமைச்சர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சபையில் இல்லாதவர்களைப் பற்றி ஒரு குற்றச்சாட்டு சொல்வது சரியாக இருக்காது. ஆகையினால் அவருடைய பிறந்த நாள் விழாவில் ஏதோ வாகனங்கள் எடுத்துச் சென்றார்கள் என்று சொன்னார்கள். அது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : உள்துறை அமைச்சரைப் பற்றி குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. அந்த விழாவை நடத்தியவர்கள் அரசாங்க லாரிகளைப் பயன் படுத்தினார்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு விளக்கம். மாண்புமிகு காங்கிரஸ் தலைவர் அவர்கள் பேசும்போது ஜனதா கட்சி பார்லிமெண்டரி பார்ட்டியில், வேறுபட்ட கருத்துக்கள் கூறியதாக வருத்தப்பட்டு கொண்டார்கள். உண்மையிலேயே நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஜனதா பார்லிமெண்டரி பார்ட்டியிலே வேறுபட்ட கருத்துக்களை சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் வேறுபட்ட கருத்துக்களை ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்ன சொல்லப் போகிறீர்கள் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் மாறுபட்ட கருத்துக்களைச் சொன்னால் உடனே ஜெயிலில் தள்ளி விடுவார்கள். அந்த நிலைமை இப்போது இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசும்போது அவர் பதில் சொல்கிறார். அவர் பேசும்போது உடனே நீங்கள் பதில் சொல்கிறீர்கள். அவர் முடித்த உடனே நீங்கள் சொன்னால் நன்றாக இருக்கும்.

1978 மார்ச் 17]

திரு. து. இராமசாமி : விசாரணை இல்லாமல் உள்ளே தள்ளியதாக ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அது அவர்கள் செய்கின்ற காரியங்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

*திரு. மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மன்றத்தில் வைக்கப்பட்டு, மன்ற உறுப்பினர்களுடைய ஒப்புதலைப் பெறுகின்ற வகையில் சற்றேறப்ப ரூ. 33 கோடி அளவிற்கு மானியம் பெறுகின்ற நிலையில் விவாதங்களுக்குட்பட்டு வருகின்ற காவல் துறை மானியத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, என்னுடைய கருத்துக்களைக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

நீண்ட நேரம் இந்த மானியத்தின் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு இன்று ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் காரணமாக, நேரம் அதிகம் இல்லையென்ற காரணத்தினால் மிகச் சுருக்கமாகச் சிலவற்றை மாத்திரம் காவல் துறை பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய நீங்காக் கடமையாகும்.

நேற்று இங்கு உரையாற்றிய நண்பர் திரு. லத்தீப் அவர்கள், போலிஸ் கமிஷன் என்ற ஒன்று அமைக்கப்பட்டது, அது என்னவாயிற்று ? அது ஐஸ் பெட்டியிலே போடப்பட்டதா என்ற கேள்வியை எழுப்பினார். கழக - ஆட்சியில் போலிஸ் கமிஷன் ஒன்று அமைக்கப் பெற்று அதிலே பங்கு பெற்றிருந்தவர்கள் பல பரிந்துரைகளைச் செய்து, கழக ஆட்சிக் காலத்திலேயே 133 பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 40-க்கு மேற்பட்ட பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டன, நடைமுறைக்கு வந்தன என்பதை இந்த மன்றத்திலே ஆட்சி பொறுப்பிலேயிருந்த நேரத்திலும் சரி எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து சென்ற கூட்டத்தொடரில் காவல் துறை மானியத்திலே விவாதம் நடைபெற்ற காலத்திலும் சரி நான் விளக்கமாக எடுத்துக் கூறி இருக்கிறேன்.

இன்றைக்கு ரூ. 33 கோடி அளவுக்கு மானியம், எழுப்பப்படுகிறது. இந்தத் துறை 1970 ஆம் ஆண்டில் ரூ. 13 கோடி அளவுக்குத் தான் மானியம் எழுப்பப்படுகின்ற ஒரு துறையாக இருந்தது. இந்த ரூ. 13 கோடி 1974–75ஆம் ஆண்டிலேயே ரூ. 26 கோடி அளவிற்கு இரண்டு மடங்கு அதிகமாக உயர்ந்ததற்குக் காரணம் போலிஸ் கமிஷனுடைய பரிந்துரைகளை அன்றைக்கிருந்த அரசு நிறைவேற்றத் தொடங்கியது தான்.

அது மாத்திரமல்ல, இரண்டாம் நிலைக் காவலர்கள், ரூ. 70-லிருந்து ரூ. 95 வரையில் அடிப்படைச் சம்பளம் பெற்றவர்களுக்கு ரூ. 150-லிருந்து, ரூ. 225 என்ற அளவிற்கு அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தியது அந்தப் போலிஸ் கமிஷனு

[திரு. மு. கருணாநிதி] [1978 மார்ச் 17

5-ம் பக்கத்தில் ஆய்வு அறிக்கையில் ஒன்றுகூறப்பட்டிருக்கிறது. 1976ஆம் ஆண்டு இருந்ததைவிட 1977-ல் குற்றங்களின் எண்ணிக்கை 8,321 உயர்ந்துள்ளன. அதாவது 26.5 சதவீதம் உயர்ந்துள்ளது. 1972 ஆம் ஆண்டில் 3.1 சதவீதம்தான் குற்றங்கள் எண்ணிக்கை அதிகரித்தது. இதையும் கவனத்தில் கொண்டிட வேண்டும்.

1972 என்று குறிப்பிடுவதற்குக் காரணம் அதற்கு முன்பு நடந்த ஆட்சி நல்ல ஆட்சி என்றும் 1972-க்குப் பிறகு நடந்த ஆட்சிதான் விசாரிக்கப்பட வேண்டிய ஆட்சி என்றும் நம்முடைய இன்றைய அரசு கருதுகின்ற காரணத்தினால்தான். அதனால்தான் நான் 1972-ம் ஆண்டு புள்ளவிவரத்தைச் சொன்னேன். 1972 ஆம் ஆண்டிலே குற்றங்களின் அதிகரிப்பு 3.1 சதவீதமாக இருந்தது. 1977 ஆம் ஆண்டிலே குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு 26.5 சதவீதமாகி இருக்கிறது. இதற்குக் காரணங்கள் கொடுத்திருக்கிறார்கள். பெருமளவில் புலன் விசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலம்தான் இந்தச் சவாலை ஏற்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே அளவு எண்ணிக்கை உள்ள அதிகாரிகள் தான் 1972-லும் இருந்தார்கள். 1975-லும் இருந்தார்கள், 1976லும் இருந்தார்கள். 1977-லும் இருந்திருக்கிறார்கள். ஆகவே, புலன் விசாரணை அதிகாரிகளைப் பெருமளவில் நியமிப்பதன் மூலமாகத்தான் இந்தச் சவாலை ஏற்க முடியும் என்று கூறுவதை என்னால் ஏற்க இயலவில்லை. இது அதிகாரிகளினுடைய திறமைக் குறைவா? அல்லது அந்த அதிகாரிகளின் நல்ல திறமையைப் பயன்படுத்த அரசு தவறிவிட்டதா என்கின்ற வினாவோடு இந்தப் பிரச்சினையை நான் நிறுத்த விரும்புகிறேன்.

அடுத்து காவல்துறையினரின் மொத்த எண்ணிக்கை பற்றி ஆய்வறிக்கையின் 23ஆம் பக்கத்தில் தரப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள—அதாவது கிட்டத்தட்ட 1978-ஐ ஒட்டி என்று எடுத்து கொள்ளலாம்—மொத்த எண்ணிக்கை 46,716 ஆகும். இது 1977ல் இப்போது தரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையின் ஆய்வு அறிக்கையிலே 46,716 பேர் காவல்துறையினரின் மொத்த எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக்கிறது. 1975ஆம் ஆண்டிலே எவ்வளவு பேர்கள் இருந்தார்கள்? 46,516 பேர் இந்தக் காவல் துறையினுடைய எண்ணிக்கையில் இருந்திருக்கிறார்கள்.

ஆக 1975-க்குப் பிறகு 1976 உருண்டு 1978-லே 200 பேர் தான் அதிகமாகி இருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பத்தாயிரம் பேரை போலீஸ் வேலைக்குச் சேர்க்கப்போகிறேன் என்று கடந்த கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். அந்தப் பத்தாயிரம் பேரில் 5 ஆயிரம் பேர், இன்னும் சொல்லப்போனால் ஆயிரம் பேர் கூடச் சேர்க்கப்படவில்லை. 200 பேர் தான் இந்தத் தொகையில் அதிகமாகி இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இரண்டாம் நிலைக்

1978 மார்ச் 17] [திரு. மு. கருணாநிதி]

காவலர்களில் 32,621 பேர் என்று இருந்தற்கு மாறாக 32,689 என்று – ஆக 68 பேர் தான் இரண்டாம நிலைக்காவலர்களின் எண்ணிக்கையில் அதிகமாகி இருக்கிறார்கள்.

இதே நேரத்தில் இன்னொரு ஒப்பீட்டையும் நான் காட்ட விரும்புகிறேன். 1972-லே 38 541ஆக இருந்ததை 10 ஆயிரம் பேரை வேலைக்கு எடுக்கப்போகிறேன் என்று அறிவிக்காமலேயே கடந்த நான்கைந்து ஆண்டு காலத்தில் ஏறத்தாழ 8 ஆயிரம்பேர் காவல்துறையிலே அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் பத்தாயிரம் பேரை காவலர் வேலைக்கு எடுக்கப் போகிறேன் என்று அறிவித்த பிறகும் இன்றைக்கு இருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்தால் 200 பேர் கூட சரிவர எடுக்கப்படவில்லை என்கிற சோகமான புள்ளிவிவரத்தைத்தான் இந்த ஆய்வறிக்கையின் மூலமாக நாம் பெற முடிகிறது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

இந்த ஆய்வறிக்கை அப்பயடிக்கும்போது நம்முடைய முதமைச்சரவர்களுக்கு அதிகாரிகள் கடந்த கூட்டத்தொடரில் எந்த ஆய்வு அறிக்கையைத் தந்தார்களோ அதே அறிக்கையை அப்படியே எழுத்துபிசகாமல் இப்போதும் தந்துவிட்டார்களோ என்று எண்ணதான்தோன்றுகிறது.

1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-லே தரப்பட்ட அறிக்கையிலே இம் மாநிலத்தில் 873 காவல்நிலையங்களில் 756 காவல்நிலையங்களுக்கு தொலைபேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு 7 மாதத்திற்குப் பிறகு 1978ஆம் ஆண்டு மார்ச்சிலே அதாவது இப்போது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயும் 873 காவல்நிலையங்களுக்கு 756 காவல் நிலையங்களில் தொலைபேசி வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

873 காவல்நிலையங்களின் டெலிபோன் வசதி 756 காவல் நிலையங்களுக்கு செய்து தரப்பட்டுள்ளது என்று 1977லும் சொல்லப்பட்டது, 1978ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடைக்காலத்தில் ஒன்றிரண்டு காவல்நிலையங்களிலாவது டெலிபோன் வசதி செய்து தருவதற்கான அந்த முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான்இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியுமா என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

'1977 ஆகஸ்டு 23ம் தேதி தரப்பட்ட அறிக்கையில் 873 காவல் நிலையங்களில் 708 காவல்நிலையங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது தரப்பட்டுள்ள அறிக்கையிலும்எழுத்து பிசகாமல் 873 காவல்நிலையங்களில் 708 காவல் நிலையங்கள், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன என்றுதான் இப்போதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

28 குற்றச்சாட்டுகளைப் பற்றி விரைவில் அறிக்கை வர இருக்கிறது. அவைகளைப் பற்றி மாநில அரசோ, மத்திய சர்க்காரோ நடவடிக்கை எடுக்க இருக்கிறது. அவைகளை எப்படித் தாங்குவது, சந்திப்பது என்பதைத் பற்றி நாங்கள், தொடர்புடையவர்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவைகளைச் சமாளிக்க இருக்கிறோம். அது வேறு விவகாரம்.

ஆனால் 54 குற்றச்சாட்டுகளில் 28 குற்றச்சாட்டுகள் மாத்திரம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 26 குற்றச்சாட்டுகள் விடப்பட்டிருக்கின்றன. நாம் தொடர்ந்து வலியுறுத்திச் சொல்லி வருவது—முதலமைச்சர் அவர்கள் விடப்பட்ட 26 குற்றச்சாட்டுகளின் பேரிலும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்னொரு கமிஷன்கூடப் போடப்பட்டிருக்கிறது-கிருஷ்ணசாமி நாயுடு கமிஷன் என்று போடப்பட்டிருக்கிறது. முன்பே அறிவித்தார்கள்—அதற்கேற்ப போடப்பட்டிருக்கிறது. அறிவித்த நேரத்திலேயே நான் அறிக்கைகள் மூலமாகச் சொன்னேன்: 1972-ல் இருந்து கணக்கெடுத்திருக்கிறீர்கள். 1969-ல் இருந்து நான் முதலமைச்சராக வந்த அந்த 1969—ல் இருந்து கணக்கெடுங்கள் என்றேன். எனக்குள்ள நிலை எல்லாம் 19/2-ல் இருந்து நீங்கள் போட்ட பிறகு அதற்குப் பிறகு நீங்களே ஆட்சிக்கு வந்து அல்லது வேறு கட்சி ஆட்சிக்கு வந்து மீண்டும் 1969-ல் இருந்து 1972 வரை விசாரணை என்று சொல்லி என்னைச் சித்திரவதை செய்து கொண்டிருப்பதை நான் விரும்பவில்லை. 1972 முதல் 1975 வரை விசாரணை முடிந்த பிறகு—காங்கிரஸ் கட்சியோ, ஜனதா கட்சியோ, கம்யூனிஸ்டு கட்சியோ ஆட்சிக்கு வந்து அப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர், 'மாண்புமிகு எம். ஜி. ஆர்' அவர்கள் மூன்று வருஷத்தை விட்டு விட்டார்கள்; ஆகவே, 1969-ல் இருந்து 1972-ம் ஆண்டு வரை விசாரணை செய்ய கமிஷன் போடுகிறோம். என்று போட ஆரம்பித்தால் விசாரணைக் கமிஷன் வேலையே சரியாக இருக்கும். அடிக்கிற அடியை ஒரே தடவையாக அடித்து முடித்துவிடுங்கள்; பல தடவையாக அடித்துக் கொண்டிருக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1972-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது சில குறைபாடுகளைச் சொல்லிவிட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டது. 1972-ல் வெளியேற வேண்டிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்பட்டபோது '1969 முதல் 1972 வரை தவறுகள் நடந்தன; எனவே வெளியேறினேன்' என்றுதான் காரணம் சொன்னீர்கள். தவறுகள் நடந்தன என்று சொல்லப்பட்ட காலத்தை ஏன் விட்டு விட்டீர்கள் என்பதுதான் என்னுடைய வாதம். எனவே, இந்த நாயுடு கமிஷனுக்கு-காலத்தை விரிவாக்கி 1969-ல் இருந்து, என்றைக்கு இந்தப் பாவி முதலமைச்சராக வந்து உட்கார்ந்தானோ அதிலிருந்து, நீங்கள் நிர்ணயித்திருக்கிற 1975 ஆம் ஆண்டு வரை

அந்தக் கமிஷன் ஆராய வேண்டுமென்று நியமிப்பதுதான் முறையானதாகவும், பொருத்தமானதாகவும், பாரபட்சமற்றதாகவும் இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் நம்முடைய எதிர்க்கட்சியில் பல நண்பர்களும், தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளைக் காப்பாற்ற காவல் துறையினர் இருக்கிறார்கள். நண்பர் சுப்பு அவர்கள் எடுத்துக் காட்டியது போல் ஆளும் கட்சி போலீசாருடைய நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்வதும், எதிர்க்கட்சி குறைகளைச் சொல்வதும் மாறி மாறி வருகிற இயல்புகள்; நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில் அப்படிப்பட்ட அதிகாரிகளுடைய கூற்றுக்களைக் கேட்டு அவர்களுக்காக நியாயங்களைக் கற்பிக்க முயன்றிருக்கலாம். அது தவறாக இருக்குமானால் இதே அவையில் பல நேரங்களில் அந்தத் தவறுகள் எங்களுடைய ஆட்சியில் திருத்திக் கொள்ளப்பட்டு, பிறகு விசாரணைக் கமிஷன்கள் போடப்பட்டிருக்கின்றன.

எதற்கெடுத்தாலும் கிளைவ் ஹாஸ்டல், உதயகுமார் என்று திருப்பித் திருப்பிப் பேசிக் கொண்டிருப்பதும், மதுரையில் மாணவர்களைப் போய் கருணாநிதி பார்த்தார் மாணவர்களைத் தூண்டிவிடச் சென்றார் என்று சொல்வதும் எவ்வளவு பொருத்தமுடையது? அன்றைக்கு கிளைவ் ஹாஸ்டலில் போய் இன்றைய முதலமைச்சர் அவர்களோ, நிதியமைச்சர் அவர்களோ சென்று பார்த்திருந்தால் தூண்டிவிடச் சென்றார்கள் என்று சொல்வது பொருந்துமா? அதுவும் பொருந்தாது, இதுவும் பொருந்தாது. இது பொருந்தாது என்றால் அதுவும் பொருந்தாது.

ஏற்படுகிற குறைபாடுகளை எதிர்க்கட்சியிடத்தில்தான் சொல்வார்கள். நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்—தமிழ் நாட்டில் எந்த மூலை முடுக்கிலும், இண்டு இடுக்கிலும் எது நடந்தாலும் எதிர்க்கட்சித் தலைவருக்குத்தான் முதல் தகவல் கிடைக்கிறது. இது எப்படி? என்றார். நல்லவேளை அந்தத் தவறை இந்தத் தடவை செய்யாமல் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

நெல்லை ஜெபமணி அவர்கள் செங்கத்தில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி சொன்னார்கள். ஒரு அரிசன் வீடு செங்கம் சட்டமன்ற உறுப்பினர் துணையோடு, அவரே நேரடியாக நின்று இடிக்கப்பட்டது என்பதைப் பற்றிப் பேசினார். அது குற்றமா குற்றம் அல்லவா என்பது எனக்குத் தெரியாது. மாண்டமிகு முதல்வர் அவர்களுக்கும் அதைப் பற்றி புகார்களை அனுப்பியிருப்பதாகத் தகவல். ஒரு அரிசன வீடு இந்த அளவுக்குப் படுமோசமாக இடிக்கப்பட்டிருக்கிறது.

அவர் எழுதிய கடிதத்தில் செங்கம் தாலூகா கரிமலப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 65 ல் மூன்று ஏக்கர் பஞ்சம தரிசு நிலம் பட்டா கொடுக்கப்பட்டது. அந்த நிலத்தில் ஒரு பகுதியில் வீடு கட்டிக் கொண்டு பயிர் செய்து வருகிறேன். எனக்கு எட்டு குழந்தைகள் இருக்கின்றன. 26—2—78 அன்று செங்கம் சட்டமன்ற உறுப்பினர் சில அடியாட்களோடு வந்து வீட்டை இடித்து விட்டார் என்று சொல்லியிருக்கிறார்.

(முற்பகல் 10–50)

இடிபட்ட வீட்டினுடைய போட்டோவை அனுப்பியிருக்கிறார், அதைப்பற்றிய குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். இது எப்படி நடந்தது என்று விசாரித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கக்கூடியவர் நம்முடைய முதலமைச்சர் என்பதால் நான் அந்தப் படத்தையும் அரிசனத் தோழர் எழுதியிருக்கிற கடிதத்தையும் அவரிடத்திலே தருகிறேன்.

நண்பர் திரு. மாரிமுத்து ஆனாலும் சரி, திரு உமாநாத் ஆனாலும் சரி, திரு ஜேம்ஸ் ஆனாலும் சரி, மற்றும் பேசிய தலைவர்கள் ஆனாலும் சரி அத்தனை பேர்களும் சட்டம் ஒழுங்கு அமைதியை காப்பாற்ற வேண்டும் என்ற பெயரால் ஆளுங் கட்சிக்காரர்கள் சட்டத்தை கையில் எடுத்துக் கொள்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

என். ஜி. ஓ.வினர் போராட்டமானாலும், பல்லவன் போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டமானாலும், அவைகளெல்லாம் நடைபெற்றபோது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகுந்த முனைப்போடு ஈடுபட்டு வேலை நிறுத்தம் செய்தவர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்டார்கள். அதை போலீசார் தடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலை இருப்பதால் என். ஜி. ஓ.க்களால் பிடிக்கப்பட்ட ஒரு கார் போலி நம்பரோடு இருந்திருக்கிறது. அதிலே பயங்கரமான ஆயுதங்களும் சோடா பாட்டில்களும் இருந்தன என்று பத்திரிகைகளிலே செய்தி வந்தது. ஆனால் மறுநாள் அந்தக் கார் சொந்தக்காரரிடம் தரப்பட்டது என்று கமிஷனர் அறிக்கைவிடுகிறார். அந்தக் காரின் சொந்தக்காரர் யார் என்று சொல்லப்படவில்லை.

இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் 9 ஆம் தேதி என். ஜி. ஓ. வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. ஆனால் திட்டமிட்டு எப்படிக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்காகச் சொல்கிறேன். அன்று காலை சென்னை கோபாலபுரத்தில் உள்ள கார்ப்பரேஷன் திடலிலே ஆளுங்கட்சி சார்புடைய தொண்டர்களின் அணிவகுப்பு நடைபெறுகிறது. கிட்டத்தட்ட ஆயிரம் பேர் ஆடவரும், பெண்டிருமாக அணிவகுப்பில் கலந்து கொண்டார்கள். அமைச்சர்கள் கூட அடிக்கடி இதுபோன்ற அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

8 ஆம் தேதி ஆளுங்கட்சிப் பத்திரிகையில் அமைப்பாளர் அறிக்கை விடுகிறார், '9 ஆம் தேதி காலையில் அனைவரும் அணி வகுப்புக்கு வாருங்கள்' என்று. வந்தவர்களைத் திரட்டிக் கொண்டு 'வேலை கொடு, வேலை கொடு' என்று ஊர்வலம் நடத்தப்படுகிறது. தேனாம்பேட்டையில் மோதல் ஏற்படுகிறது. ஸ்டான்லி மருத்துவ மனையிலும் பொது மருத்துவ மனையிலும் மோதல் ஏற்படுகிறது. போலீசார் தர்ம சங்கடமான சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

இன்னும் இதற்கு ஆதாரம் சொல்ல வேண்டுமானால் கருப்பசாமி, பொதுச் செயலாளர், அகில இந்திய அண்ணா தி.மு.க., பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோவை மாவட்டம் என்கிற முகவரியிலிருந்து அந்த கருப்பசாமி யாருக்குக் கடிதம் எழுதுகிறார் என்றால் செயலாளர் எம். ஜி. ஆர். மன்றக் கிளை (அகில இந்திய அண்ணா தி. மு. க. கிளை) கோவை, என்பவருக்கு என்ன எழுதுகிறார் என்றால் 'அன்புடையீர், வணக்கம். 9-3-78 வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் டவுன்ஹால் மைதானத்திலே வந்து அகில இந்திய அண்ணா தி.மு,க. தொழிற்சங்கம். எம். ஜி. ஆர். மன்றம், துணை மன்றம் மற்றும் வேலையில்லாமல் இருக்கும் வேலையில்லாத பட்டதாரிகள், படித்த இளைஞர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் ஊர்வலத்திற்கு கடல் அலையென, கொடியில்லாமல் வந்துசிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அன்பன், நா. கருப்பசாமி.' இப்படிக் கடிதம் எழுதுகிறார்.

நான் கேட்கிறேன். இது திட்டமிட்டு என்,ஜி.ஓ.க்களை அடக்குவதற்காக செய்யப்பட்ட காரியமா அல்லவா? இதை மறுத்தால் இந்த வேலையில்லாப்பிரச்னை என்.ஜி.ஓ.க்கள் வேலைக்கு போனதுமே முடிவடைந்துவிட்டதா? என்.ஜி.ஓ.க்கள் வேலைக்குப் போகாமல் இருந்திருந்தால் அந்தப் பிரச்னை முடிவடைந்திருக்கும், என்.ஜி.ஓ.க்கள் வேலைக்குப் போய்விட்டார்கள். வேலையில்லாதவர்கள் பிரச்னை உடனடியாக அடங்கிவிட்டதா? அதற்குப் பிறகும் நாங்கள் வேலையில்லாமல் தவிக்கிறோம். எங்களுக்கு வேலை கொடு என்று கோரி ஊர்வலத்தை நடத்தியிருப்பார்களானால் உள்ளபடியே வேலையில்லாத பட்டதாரிகள் தான் ஊர்வலத்தை நடத்தினார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியும். ஆனால் வேலையில்லாதவர்கள் என்ற பெயரால், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்கி வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு எதிராக கொடி உயர்த்துவதும் தடி தூக்குவதும் நல்லதல்ல.

நடந்தது நடந்துவிட்டது. இனிமேலாவது நடக்காமல் இருப்பதற்காகத்தான் நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் சொல்லி அவருடைய கட்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர் என்ற காரணத்தால் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை எல்லா மக்களும் எடுத்துக்கொள்கிற சூழ்நிலையை நாம் உருவாக்கிவிடக் கூடாது. சட்டம், ஒழுங்கு

அமைதியைப் பாதுகாக்கின்ற அந்தக் கடமையை காவல் துறையினர் தான் ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்படிச் சொல்லுகிற நேரத்தில் காவல் துறையினர் தங்கள் இஷ்டத்திற்கு அதை எடுத்துக் கொள்ளலாமா என்றால் வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதைப்போல கையை வேகமாக ஓங்கினாலும் கூட அடிக்கும் பொழுது மெதுவாகத் தட்ட வேண்டும். கொஞ்சம் வேகமாகக் காவல் துறையினர் தங்களுடைய சீற்றத்தைக் காட்டினாலும்கூட அதே காவல்துறையினர்—ஏற்கனவே ஒரு படமே வெளியிட்டார்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 'உங்கள் நண்பன்' என்ற படமே எடுத்து வெளியிட்டார்கள்,—அப்படிப்பட்ட உங்கள் நண்பனாக இருக்க விரும்புகிறார்கள், அவர்கள் எப்பொழுதும் மக்களுடைய நண்பனாக இருக்க வேண்டும்.

ஆளுங்கட்சியாக இருக்கும் நேரத்திலேயும் சரி, எதிர்க்கட்சியாக இருக்கும் நேரத்திலேயும் சரி, காவல் துறையினரின் கடமை உணர்வை நான் மறந்துவிடக் கூடியவன் அல்ல, அவர்களுக்கு இருக்கின்ற இன்னல்களை மறந்துவிடக் கூடியவன் அல்ல. அப்படிப்பட்ட பெரும் காவல் துறையைப் பெரும் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், இங்கே எடுத்துச் சொன்ன குறைபாடுகளைக் களைவதற்கேற்ற வகையிலே காவல்துறையிலே திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டமன்றப் பேரவைத்தலைவரவர்களே, காவல்துறை, தீயணைப்புப் பணிகள் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது இந்த மாமன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அக்கறையோடும், மிகுந்த கவனத்தோடும் தங்களுடைய கருத்தினைத் தெளிவாக வெளியிட்டதற்காக முதலில் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு ஆட்சி நல்ல ஆட்சியாக அமைய வேண்டுமென்றால் மாமன்றத்திலே இருக்கின்ற அனைவரும் எவ்வளவுதான் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும், உண்மை என்று தாங்கள் நம்புவதை மனம்விட்டு எடுத்துச் சொல்லி, அரசு எந்தெந்த வகையில் தங்களுடைய தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியுமோ அல்லது உண்மையான செய்தி அல்ல என்று மறுப்பு கூறி எது உண்மை என்று வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புத் தரக்கூடுமோ அந்த வகையில் எல்லோரும் ஒத்துழைத்தால்தான் அதுவொரு நல்லாட்சியாக அமைய முடியும் என்பதை நான் நன்கு உணர்கிறேன்.

அப்படி உணர்ந்த நிலையில் மாமன்றத்திலே இருக்கின்ற அனைத்து எதிர்த் தரப்பிலேயிருக்கின்ற கட்சிகளுடைய தலைவர்களுக்கும், அவர்களுடைய உறுப்பினர்களுக்கும், ஆட்சிக் கட்சியிலே இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி தங்களுடைய

அனுபவத்தை வெளிப்படுத்தி, யாருக்கு அதனால் தொல்லை ஏற்படுகிறது என்பதைக் கொஞ்சம்கூட எண்ணிப் பார்க்காமல் நாங்கள் அனுபவித்ததைச் சொல்லித்தான் தீருவோம் என்ற வகையில் அரசு அலுவலாளர்கள் மேல் குறையிருந்தாலும், நடத்துபவர்களின்மேல் குறையிருந்தாலும் எடுத்துக்காட்டுகின்ற வகையில் இங்கே குறிப்பிட்டவர்களையும் நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு கட்சியானாலும், ஆட்சியானாலும், கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டாக வேண்டும், அந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள யாரும் முன்வராத நிலையிருக்குமானால் நாட்டிலே பல பிரச்னைகள் எழுவதற்கே வாய்ப்பிருக்காது, சந்தர்ப்பம் இருக்காது என்பதை நான் கொஞ்சம் உறுதியாக, அழுத்தமாகச் சொல்லிக் கொள்ளவும், என் எண்ணத்தை வெளிப்படுத்தவும் விரும்புகிறேன்.

ஒருவரையொருவர் தாக்கினால்தான் அல்லது யாரையாவது ஒரு அமைச்சரையோ அல்லது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களையோ குறை கூறினால் தான் அன்றைய தினம் பத்திரிகைகளில் அது தலைப்பாக வரும் என்கிற நோக்கத்தோடு கருத்துக்களை எடுத்துச் சொல்லாமல் உண்மையை எடுத்துச் சொல்லுகின்ற வகையில், எடுத்துக் காட்டுகின்ற மனப்பான்மை கொண்டவர்களைக் கொண்டு முற்றிலுமாக அமைக்கப்பட்டிருக்கின்ற அமைப்பு இந்த மாமன்றம் என்ற நம்பிக்கையில் நான் என்னுடைய பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலில் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். மாண்புமிகு அருமை நண்பர் என்று குறிப்பிடத்தக்க அளவிற்கு அவ்வப்பொழுது ஏதாவது ஒரு காரியத்திற்காக, நலனுக்காக, மனம்விட்டு பேசுகின்ற உறுப்பினர் திரு சுப்பு அவர்கள் மிகத் தெளிவாக, அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், விவரம் புரியாதவர்கள் ஆட்சியிலே இருக்கிறோம் என்று.

[முற்பகல் 11-00]

ஒத்துக்கொள்கிறேன், நாங்கள் விவரம் புரியாதவர்கள்தான். விவரம் புரியாதவன் என்கிற நிலையில்தான் என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன் என்று சொல்வதால், அதிலே முழு நம்பிக்கை வைத்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு போன்றவர்கள், குறிப்பாக திரு சுப்பு அவர்கள், என்னுடைய பேச்சை விவரம் புரியாதவன் பேச்சாக எடுத்துக்கொள்வார் என்பதிலே எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. அவர் சட்டம் படித்தவர். ஆகவே, விவரம் புரியாதவர் பேச்சிலே இருக்கிற குறைபாடுகளை அவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு. எம். ஜி.இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

ஒன்றை நான் நினைவுபடுத்த வேண்டியவனாக இருக்கிறேன். காவல் துறையின்மீது, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற நேரம், தீயணைப்பு பற்றிய மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற நேரம். ஆனால், இந்த நேரத்தில் பழைய நினைவுகளைக் கூறுவது, அவற்றைப்பற்றி நினைத்துக்கொள்வது சரிதானா என்ற கேள்வி எழுமானால், தடுக்க முடியாத நிலைமைகளில் எப்படி பிரதான எதிர்க்கட்சித் தலைவராய் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் கலைஞர் அவர்கள் நான் வெளியேறினேன் என்ற வார்த்தையைத் தவறாகப் பயன்படுத்தி -நான் வெளியேற்றப்பட்டேன்—அவர் வேண்டுமென்று சொல்லியிருக்க மாட்டார்; நான் வெளியேற்றப்பட்டேன் என்பதை நான் வெளியேறினேன் என்று சொல்லியது எந்தப் பழைய நினைவுகளை நினைவுறுத்தியதோ, அதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு அவர்களைப் பற்றி சில நினைவுகள் என்முன் நிழலாடுகின்றன.

முதன்முதல், அவர் இராஜபாளையத்தில் தேர்தலில் நின்ற பொழுது என்று கருதுகிறேன்—அதற்கு முன்னால் நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம், எனக்குத் தெரியாது. நான் அவருக்காக, மக்களிடம் வாக்கு பெறவேண்டுமென்பதற்காக, பகல், இரவெல்லாம் சுற்றிவிட்டு, கடைசியாக—அவர் அப்பொழுது கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்தார்—நான் மக்களை அணுகி—சுப்பு அவர்களுக்கு மன்னிக்கவேண்டும். மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு—வாக்களிக்க வேண்டுமென்று நான் மக்களை வாக்கு கேட்கச் சென்றபொழுது ஏறத்தாழ விடியற்காலை 3 மணி இருக்கும் அல்லது 4 மணி இருக்கும் என்று நினைவு—அப்பொழுதும் நான் இலட்சக்கணக்கான மக்களை 'வேனிலே' சந்தித்து மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு வாக்களிக்க வேண்டுமென்று—மாண்புமிகு என்று நான் அப்பொழுது சொல்லாவிட்டாலும்—தோழர், தொண்டர், பொதுவுடைமைக் கொள்கைக்குச் சொந்தக்காரர், எந்த நேரத்திலும் கட்டுப்பாட்டை மீறாதவர் என்றெல்லாம் மக்களிடம் பேசிக்கொண்டே சென்று எவ்வளவு விவரம் புரியாத நிலையில் நான் வாக்குக்கேட்டேன் என்பதை இப்பொழுது புரிந்துகொள்கிறேன். (ஆளுங்கட்சித் தரப்பில் ஆரவாரம்). தலைவர் அவர்களே, தயவு செய்து இந்த மாமன்றத்தில் எதிர்தரப்பிலே இருக்கின்றவர்கள் கையைத் தட்டினாலும் இந்தப் பக்கத்திலே இருக்கின்றவர்கள் எதற்கும் தங்களுடைய உணர்வுகளை வெளிக்காட்டி மற்றவர்கள் தெரிந்து கொள்கிற அளவுக்கு, நான் விரும்பாததற்கு வழி காட்ட வேண்டாமென்று நீங்கள் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன்.

இந்த விவரம் புரியாதவன் அன்றுதொட்டு, இன்றுவரை விவரம் புரியாமல்தான் எல்லோரையும் சந்தித்தும், ஒரு கட்சியை விட்டு இன்னொரு கட்சியைத் தொடங்கியும், இப்பொழுது இன்று முதலமைச்சராக உட்கார வைக்கப்பட்டிருக்கிறேன் என்று எண்ணிப்பார்க்கும்போது என்னை விவரம் புரியாதவன் என்று சொன்னவர் எந்த ஆதாரத்தோடு சொன்னார் என்பதை நான் நன்கு புரிந்து கொள்கிறேன்.

1978 மார்ச் 17] [திரு.எம்.ஜி. இராமச்சந்திரன்]

அதைப் போலவே, அவர் என்னை விவரம் புரியாதவன், இந்த அமைச்சரவையில் உள்ளவர்கள் விவரம் புரியாத தன்மை உள்ளவர்கள் என்றெல்லாம் குறிப்பிடுகிறபொழுது இன்னமும் கூட எனது அருமை தம்பி என்று நான் எண்ணுகிற மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் மகிழ்ச்சியோடு அதை தலையாட்டி ரசித்ததை நான் எண்ணிப் பார்க்கிறேன். அவர் படித்துப் பட்டம் பெற்றதை விரும்பாதவர்கள், அவர்கள் பக்கத்திலே அண்ணனாகவும், தம்பியாகவும், மற்ற இப்படி, இப்படி இருக்கிறார்கள் என்பதை அவர் உள்ளம் நினைத்துப் பார்க்கும் என்று நான் கருதுகிறேன்.

இந்த விவரம் புரியாதவன், அவர் ஒரு பி.ஏ., பி.எல்., ஆக வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அது மட்டுமா செய்தேன். இந்த விவரம் புரியாதவன் ஒரு அண்ணனாக இருக்கவும் ஆசைப்பட்டேன். அதோடு அல்ல, அவர் சட்டத்தைப் படித்து பட்டம் பெற்றது என் கண் முன்னால் நிற்கின்றது. அவர் பட்டம் பெற்று வந்தபோது, அவரை அணைத்துக் கொண்ட நிகழ்ச்சி இன்னமும் நெஞ்சிலே பசுமையாயிருக்கிறது.

இந்த விவரம் புரியாதவனுக்கு அவ்வளவு பெரிய தவறான காரியத்தைச் செய்யக்கூடிய அறிவை என் தாய் தந்து விட்டாள் என்பதை எண்ணி உண்மையிலேயே நான் வேதனைப்படுகிறேன். விவரம் புரியாதவன் சொல்லும்போது, உண்மையிலேயே என்னை போல் விவரம் தெரியாதவர்கள், தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்.

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பல குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காகச் சொன்னார்கள். ஒவ்வொன்றையும் சொல்லிக்காட்டி, இதைக் கொடுக்கிறேன், விவரம் புரியாதவர்கள், அவர்களுக்குத் தெரியாது என்று சுட்டிக்காட்டினார்கள். இப்படிச்சொல்வதன் மூலம் விவரம் தெரிந்த ஒருவன் தன்னுடைய திறமையை வெளிபடுத்த முன்வரும்போது, விவரம் புரியாத என்னைப் போன்றவர்கள் வரவேற்பதிலே நிச்சயமாக பொருத்தம் உண்டு, நியாயம் உண்டு என்று நான் நம்புகிறேன்.

நான் முதலமைச்சராக இருந்து அவ்வளவு அனுபவப்பட்டவன் அல்ல, என்பது எனக்கு நன்றாகத் தெரியும். எவ்வளவு பெரிய பொறுப்புள்ள இலாகாக்களை என் கையிலே வைத்திருக்கிறேன் என்பதை விவரம் புரியாமல் நான் வைத்துக் கொண்டிருந்தாலும் அதை ஓரளவுக்கு நான் தெரிந்து வைத்திருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஒன்றை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு சில நாட்களுக்கு முன்பு திருச்சியிலே நடந்த பஸ் விபத்தைப்பற்றி சொல்ல வந்தபொழுது, அவர் முன் அனுமதி பெறவில்லை. இதற்கு முன்னால் ஒரு பிரச்னை இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டது நினைவிருக்கும். ஆனால், முன் அனுமதி பெறாமல் அவர் உள்ளே நுழைந்ததும்

அன்றை எப்படி நான் வரவேற்கிறேன் என்பதும் அவர் உடனடியாக அதற்கு ஒரு விடிவுகாலம் ஏற்படுகிற வகையில் ஒரு முடிவை உருவாக்க, உடனடியாக, மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களோடு தொலைபேசியிலே பேசி நான் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். விவரம் புரியாத நான் மிகப் பெரிய தவறு செய்துவிட்டேன். உடனடியாக மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசை தொலைபேசியிலே, அவரையும் முன்னால் வைத்துக் கொண்டு, நான் பேசி நிலைமைகளைச் சரிப்படுத்துவதாக அவர் தந்த உறுதிமொழியையும் கூறி, இரண்டு மணி நேரத்திற்குள் அவர் என்ன விரும்பினாரோ அது நிறைவேற்றபபட்டது என்பதையும் அவர் உணர்ந்திருக்கிறார். நான் உண்மையிலே என்னைப் பற்றி நினைத்துக் கொள்கிறேன், எவ்வளவு விவரம் புரியாமல் நான் காரியம் ஆற்றிக் கொண்டிருக்கிறேன் என்று.

<u>திரு. க. சுப்பு :</u> முதலமைச்சர் பேசுவதிலேயிருந்து ரொம்ப வேதனை அடைந்திருக்கிறார் என்று நான் கருதுகிறேன். உண்மையிலே, அவருக்கு விவரம் புரியவில்லையென்ற அடிப்படையிலே நான் பேசவில்லை. முன் அனுமதி பெறாமல் பார்க்க வந்ததாக சொன்னார். நானும் முருகேசனும் அனுமதி பெற்றுத் தான் சென்றோம். அவருடைய உதவியாளர்தான் அனுமதி கொடுத்தார். அந்தக் காரியத்தில் முதலமைச்சர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையை பகிரங்கமாக நான் பாராட்டிப் பேசியிருக்கிறேன். முதலமைச்சருக்கும் அது தெரியும்.

ஆனால், நேற்று நான் கூறியது, 376-வது செக்ஷன் போடுவதற்குப் பதிலாக, 354-வது செக்ஷன் போட்டிருக்கிறார்கள். உங்களை மிஸ்லீட் பண்ணக்கூடிய வகையில் அதிகாரிகள் பணி புரிகிறார்கள். ஆகவே, நான் அவ்வாறு சொல்லியதாக எடுத்துக் கொண்டு, விவரம் புரியாதவன் என்று சொன்னதாகப் பேச்சைத் தொடங்க வேண்டாம். அப்படி அல்ல. அப்படி நான் சொல்லக்கூடியவன் அல்ல. ஆகவே, பிரச்னைக்குப் பதில் சொல்ல வேண்டும். புண்படக்கூடிய வகையில் பேசியிருந்தால், அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதை அப்படி எடுத்துக் கொள்ளவேண்டாம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> பிரச்னையை விட்டு நான் எங்கோ போய்விட்டேன் என்று அவர் எப்படி சந்தேகப்படுகிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில், ஒரு முதலமைச்சர், காவல் துறையை தன் கையில் வைத்திருக்கிற நான், மாண்புமிகு உறுப்பினர் ஒரு காரியத்தைச் செய்யுங்கள் என்று சொன்னால் அதை நான் செய்தேன்—இரண்டு மணி நேரத்தில் அதை நிறைவேற்றிவிட்டேன். மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசிடம் பேசி, என்று சொன்னால், அது பிரச்னைக்கு அப்பாற்பட்ட விஷயம் என்று விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் எப்படிக் கருதுகிறார் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மனம் புண்படும்படி நீங்கள் பேசவில்லை. உண்மையை ஏற்றுக் கொண்டுதான் நான் பேசுகிறேன். எனக்கு மனம் புண்படுமோ என்று அவர் வருத்தப்படவும் வேண்டியதில்லை. அவர் சொல்வதை ஏற்றுக்கொண்டுதான் பேசுகிறேன். எதை யார் சொன்னாலும், நெஞ்சத்துணிச்சலோடும், அந்த நெஞ்சுதிடத்தோடும் அந்த அமைதியைக் காப்பேன் என்ற உறுதியிலே இந்தப் பதவியை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்று நான் தொடக்கத்திலேயே சொன்னேன். எனக்கு யாரும் ஆத்திரமூட்ட முடியாது. எனக்குக் கோபம் வரவழைக்க முடியாது என்று முதலிலேயே நான் சொன்னேன். எனக்குக் கோபம் ஏற்படுத்த முடியாது.

இன்னமும் சொல்கிறேன், நான் பதவியை விட்டு இறங்குகிற வரையில், நான் பழைய எம்.ஜி.ஆர்—ஆக இருப்பேன் என்று தயவு செய்து யாரும் கருத வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) பழைய எம்.ஜி.ஆர். யார் என்பது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகனுக்குத் தெரிந்ததுதான்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> பழைய எம்.ஜி.ஆர். யார்?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> என்னுடைய தம்பி என்ற முறையில், நான் உள்ளத்திலே பட்டதைத் துணிந்து சொல்கிறவன் என்பது அவருக்குத் தெரியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

<u>திரு. துரைமுருகன் :</u> தலைவர் அவர்களே, இன்னும் என்மீது அந்தப் பழைய பாசத்தை வைத்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் எதிர்த்தரப்பிலே இருந்து ஆற்ற வேண்டிய பணிகளை மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் ஆற்றுகிறேன் என்பதை அவர் பாராட்டுவார் என்றும் திடமாக நம்புகிறேன். ஏனென்றால் மனதிலே பட்டதை ஒளிவு மறைவில்லாமல் சொல்பவன் தான் என் தம்பி என்று அண்ணா அவர்கள் சொன்னதை முதல்வர் சொன்னார். எனவே என் மனதிலே பட்டதைச் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நான் எவ்வளவு கொடுத்து வைத்தவன் என்பதை எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறேன். எதிர்க்கட்சியிலே இருந்தாலும் அண்ணனாக இருந்தாலும், தம்பியாக இருந்தாலும், அண்ணா அவர்கள் சொல்லிக் கொடுத்தப்படி, யார் மக்களுக்கு விரோதமாக இருக்கிறார்களோ அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லியே தீரவேண்டும் என்ற உணர்வை எனது அருமைத் தம்பியாக நான் கருதுகிற மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இன்னமும் மனதிலே கொண்டு இருக்கிறார் என்பதை எண்ணி எண்ணிப் பெருமைப்படுகிறேன். மனதிலே பட்டதை மட்டும் அல்லாமல், உள்ளத்திலே தொட்டதையும் சொல்ல வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்டார்கள், பழைய இராமச்சந்திரன் யார் என்று. அதைச் சொல்லிக் கொள்வதிலே எனக்கே கொஞ்சம் நாணமாக இருக்கிறது. அவ்வளவு பொறுமை இல்லாதவனாக இருந்தவன். எதைச் சொல்லவேண்டும் என்றாலும், பட்டதைச் சொல்வதைப்போல இருந்தவன். அந்த நிலைமையிலே இருந்ததன் விளைவாகத்தான் நாங்கள் இருவரும் இப்படி இருக்க வேண்டிய அளவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. மனத்திலே பட்டதை, உள்ளத்தைத் தொட்டதைச்சொல்லி அதைப்போல மக்கள் சொல்வதைச் சொல்லிப் பழக்கப்பட்டுவிட்டதன் காரணமாகத்தான், பல விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று—இப்போதும் எனக்கு நண்பர்களாக எதிர்வரிசையிலே இருந்தாலும்—என்னை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தாலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் அன்றையதினம் நேர் விரோதியாக மாறவேண்டிய அளவுக்கு, போலீசார் சுடுவதை தவிர, வேறு வழி என்ன அவர்களுக்கு, என்று கேட்ட அந்த இராமச்சந்திரன்தான் இந்த இராமச்சந்திரன், என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு சுப்பு அவர்கள் பல உறுப்பினர் குற்றச்சாட்டுக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வரிசையாக சொல்லிக்கொண்டே போனார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல், நாம் எல்லோரும் வெவ்வேறு வேதனையோடு இருக்கிற காரணத்தால் வெவ்வேறு விதமாகப் பேச முடியாவிட்டாலும், பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலே என்னை நான் தவிர்க்க முடியாத நிலையில் ஆட்படுத்திக் கொண்டிருப்பதால் இந்தப் பதில்களை நான் சொல்லியாக வேண்டி இருக்கிறது.

அவர் செக்ஷன்களைப் பற்றி இங்கே சொன்னார்கள், அவர் வழக்குரைஞர். நல்ல தொண்டர். தியாகம் செய்யாமல் கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்க முடியாது என்று உலகம் அறிந்திருக்கிறது. தியாகம் செய்யத் தெரிந்தவர். அதே சமயத்தில் மக்களோடு எப்படி இணைந்து வாழ்வது, மக்களுக்கு எப்படித் தொண்டு செய்வது என்பதை எல்லாம் நல்ல பாடமாகத் தெரிந்து அந்தப் பழக்க வழக்கங்களைக் கையாள்பவர். அவர் சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்களை விவரம் புரியாதவனாக இருந்தாலும் கூட, நிச்சயமாகப் புரிந்து கொள்ள முயல்வது என்னுடைய நீங்காத கடமை என்பதை உணர்ந்து சொல்லுகிறேன்.

கற்பழிப்பது என்பது வேறு, கற்பழிக்க முயல்வது என்பது வேறு என்பதை அவர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இதைப் போன்ற செக்ஷன்கள் எனக்குத் தெரியாத காரணத்தால் அதாவது. எனக்கு விவரம் புரியாத காரணத்தால், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சிலர் பயன்படுத்திக்கொள்கிறார்கள் அல்லது ஏமாற்றி விடுகிறார்கள் அல்லது உண்மையைச் சொல்லாமல் அவர்கள் இஷ்டப்படி காரியத்தைச் செய்து விடுகிறார்கள் என்ற கோணத்தில் அவர்கள் கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, அட்டம்ட்டு மர்டர் என்பது போல் அட்டம்டு ரேப் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அட்டம்டு ரேப் என்று ஒரு செக்ஷன் கிடையாது. ரேப் என்பது கற்பழிக்கப்படுவது மட்டுமல்ல, மியர் பெனிட்டிரேஷன் ஈஸ் எனஃப் ஃபார் ரேப், மியர் டச்சிங் ஈஸ் எனஃப், தொட்டாலே போதும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தம்பி ரொம்ப.. (சிரிப்பு) தலைவரவர்களே, நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். இதைப்போன்ற உறவு எப்போதும் நீடித்து இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பமாகும்.

இங்கே இன்னொன்றைச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு என்னுடைய மாண்புமிகு உறுப்பினர் தம்பி துரைமுருகன் ஆளாக்கிவிட்டார். 1967-ல் நான் சுடப்பட்டேன். செத்து இருந்தால் வழக்கு வேறு. கொலை முயற்சிக்கப்பட்டபோது போடப்பட்ட செக்ஷன்கள் ஏற்படுத்திக் கொண்ட சூழ்நிலைகள், நடந்த முறைகள் வேறு, வழக்கு வேறு, ஆகவே, கொலை செய்ய முயற்சிப்பது, கொலை செய்து விடுவது, ஆகிய இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று கருதுகிறேன். நீதிபதிகளும் அப்படித்தான் தீர்ப்பு வழங்குகிறார்கள் என்பதை எனக்குத் தெரிந்த வரையில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

ஆகவே, என்னுடைய கருத்து எல்லாம், அந்த செக்ஷன்களை வழக்கறிஞர்களின் யோசனைகளின் பேரில், அரசு வக்கீல்கள் என்று அழைக்கப்படுகின்ற அந்த பப்ளிக் பிராசிகியூட்டர் போன்றவர்கள் சொல்லிக் கொடுத்தாலும் அல்லது காவல் துறையினரே போட்டுக் கொண்டு போய் அவர்களிடத்தில் கொடுத்து. இப்படி சார்ஜ் ஷீட் போட வேண்டும் என்று நிலைமை இருந்தாலும், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்திலே இப்படி ஒரு சட்டமன்றம் இருக்கிறது. அதிலே சுயேச்சை என்ற பெயரிலே இங்கே யாரும் இல்லாது, எல்லோரும் ஏதாவது ஒரு கட்சியின் கொள்கைகளுக்கு உட்பட்டவர்கள்; அந்தக் கட்சியின் கொள்கையைச் சொல்லி

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

மக்களிடம் வாக்குகள் வாங்கிக் கொண்டு இங்கே வந்து இருப்பவர்கள் என்பதை காவல் துறையில் யாரும் தெரியாதவர்களாக இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் ஒரு வேளை விவரம் புரியாத என்னை ஏமாற்றி விட்டாலும் இங்கே இருக்கும் அத்தனை பேரையும் ஏமாற்றிவிட முடியும். கேள்வியே கேட்கமாட்டார்கள் என்று எண்ணி அவர்கள் காரியம் ஆற்றுகிறார்கள் என்று நான் நம்புவதற்கு இடம் இருக்கிறது என்பதில் எனக்கு ஐயம் இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இங்கே சொன்னார்கள். [* *] ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்றார்கள் என்று. இன்னொருவர் சொன்னார், அந்த அம்மையார் [* * *] என்று. எனக்கு வந்து இருக்கும் செய்தி, ஹிஸ்டீரியா என்ற நோய் அந்த அம்மையாருக்கு இருப்பதாக மருத்துவர்கள் சொல்வதாக. எது எப்படி இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு ஏற்படுகின்ற அவமானம் அல்லது அவருக்கு ஏற்படுத்தப்படுகிற துன்பம் அல்லது சட்டத்திற்கு விரோதமாகக் காவல் நிலையத்தில் வைக்கின்ற செயல்முறைகள் இவைகளைப் பற்றி அரசு ஒரு போதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுதாபம், விருப்பு, அல்லது சிபார்சு இதைப்போன்ற காரியங்களுக்கு அடிமையாகி விட்டுக் கொடுத்து விடும், சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் என்று மாமன்றத்தில் இருக்கும் யாரும் நம்பக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இங்கே கோப்புகள், குறிப்புகள் இருக்கின்றன. அவைகளைப் படித்துக் காட்டுவதற்கு நேரம் ஆகும் என்ற காரணத்தால் தான், அவைகளைப் பற்றி அதிகமாகப் படிக்காமல் இருக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன். இல்லாவிட்டால் அவைகளைப் படித்துக் காண்பிப்பேன். எந்த செக்‌ஷனில் கைது செய்யப்பட்டு இருக்கிறது, எந்தெந்த வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன, யாரை எல்லாம் பதவியில் இருந்து நீக்கி வைத்து இருக்கிறார்கள் என்பதை எல்லாம் என்னால் இங்கே இருந்து குறிப்பெடுத்துக் காட்டிக் கூற முடியும்.

[முற்பகல் 11-20]

இன்னொன்றையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் ஒரு குற்றத்தை இதைப் போன்ற காவல் நிலையத்திற்கு பெண்கள் அழைத்துச் செல்லப்படுகின்ற குற்றச்சாட்டு குறித்து இங்கே பேசினார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் எப்போதுமே

*** பேரவைத்தலைவர் 15-3-1978-ந் தேதி ஆணையிட்டுள்ளதற்கிணங்க நீக்கப்பெற்றது.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆதாரத்தோடு பேசுகிறவர்கள் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. பல ஆதாரங்களை அவர்கள் கொடுக்க இருக்கிறார்கள் அல்லது கொடுத்திருக்கிறார்கள். அதை எல்லாம் வைத்து விசாரிப்பதற்கும், காவல்துறையினர் ஒழுங்காக செயல்பட்டிருக்கிறார்களா அல்லது செயல்படவில்லை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லி, பல குற்றச்சாட்டுகளை இங்கே சொல்வதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி உண்டு என்பதையும் உண்மையிலே இப்படிப்பட்ட குற்றச்சாட்டு சொல்கிறவர்மீது எனக்கு கோபதாபம் இல்லை என்பதையும் அறுதியிட்டுக்கூற விரும்புகிறேன்.

கோடம்பாக்கத்தில் ஒரு நடிகையை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதாகவும், அந்தக் காவல் நிலையத்திலே உள்ள சிலரை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாகவும் அதுமட்டுமல்லாமல் மேலதிகாரிகள் சொன்னபடிசெய்ததற்காக சாதாரண நிலைமையிலே உள்ள காவல் துறையினர் தண்டிக்கப் படுகின்றார்கள்; கட்டளையிடுகின்றவர்கள் தப்பித்துத் கொள்ளுகின்றார்கள் என்று குற்றஞ்சாட்டினார்கள். இதிலே ஒரு நல்ல கருத்து அமைந்திருக்கிறது. நான் எங்கே இருந்தாலும்இந்தக்காவல் துறையைப்பற்றி ஏதாவது பிரச்சனை எங்காவது எழுந்தால், 'அவன்தானே இருந்தான், நான் அங்கே இல்லையே, என்னை யாரும் கேட்க முடியாது' என்ற நிலையில் காவல்துறையினர் பதில் சொல்வதாக இருந்தால் அது நிச்சயமாக அனுமதிக்கப்பட மாட்டாது. அதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்பதைப்போல, பொறுப்பில் இருக்கிற ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல், யாரோ செய்துவிட்டால் நாம் எப்படி பொறுப்பாக முடியும் என்று பொறுப்பில்லாமல் இருப்பது பொருத்தமாக இருக்காது என்ற முறையில் நல்ல கருத்தை குற்றச்சாட்டுகள் மூலம் அளித்ததற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். யாருடைய தலையீட்டில் இது நடந்தது! இது எப்படி நிர்வாகத்தில் தனிப்பட்டவர்கள் என்ற நிலையிலோ அல்லது செல்வாக்குள்ளவர் என்ற நிலையிலோ தலையிடவில்லை என்று சொல்ல முடியும் என்ற கேள்வியை வைத்துக் கேட்டார்கள். இரண்டு கேள்விக்கும் உண்மையிலே நான் பதில் சொல்லாமல் ஒதுங்கிப் போய்விடுவேனானால் நான் பெரியகுற்றத்தை இழைத்தவன் ஆவேன். என் மனசாட்சி என்னைத் துன்புறுத்தும்.

ஒரு பெண் தவறான நடத்தை உள்ளவள் என்று குற்றச்சாட்டு அல்லது செயல்முறையில் இருக்கிறாள் என்று வைத்துக்கொள்வோம். குற்றச்சாட்டு யாராலோ எழுப்பப்படுகிறது. அல்லது சொல்லப்படுகிறது. இந்தப் பெண் இப்படிப்பட்ட தவறான முறையிலே ஈடுபடுகிறாள்; அங்கே சமூகத்தார் ஏற்றுக் கொள்ள முடியாத தவறு நடைபெறுகின்றது; அந்தப் பெண் அந்தக்

காரியத்தைச் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். இதை நம்பி காவல் துறையினர் விசாரணையில் இறங்கவேண்டிய கட்டாயம் சிலசமயங்களில் இருக்கிறது. சில சமயங்களில் ஒன்றும் செய்யாமல் இருக்கும் நிலைமைக்கும் ஆளாகிறார்கள்.

உதாரணமாக, நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பின் ஒருசில மாதங்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் அல்லது ஒரு வருடம் அல்லது ஒன்றரை வருடம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; சரியாக நினைவில்லை. என்னைக் கொலை செய்ய முயற்சிகள் நடக்கின்றன என்று குறிப்பிட்டு எழுதி அது எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. நான் அதை அப்படியே பத்திரிகை நண்பர்களுக்குப் படித்துக் காட்டினேன். அந்தக் கடிதத்திலே நான் எப்போது சாட்சி சொல்ல வேண்டுமென்று நிலைமை ஏற்படுகிறதோ அப்போது விளம்பரம் செய்யுங்கள். நான் வந்து சாட்சி சொல்கிறேன் என்றும் இருந்தது. ஆனால் அதில் பெயர் இல்லை. நிலைமையை எடுத்துச் சொன்னேன். சொன்ன பிறகு யார் யார் சம்பந்தப்பட்டு அந்தக் கடிதத்தில் இருப்பதாக வெளியிட்டேனோ அதற்கெல்லாம் அப்போது இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, இப்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கிற கலைஞர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்மீது வழக்குப் போட வேண்டிய கட்டாயத்திற்கு அவர் வருவதாக இருந்தது. நான் கடிதத்தை அங்கே இருந்த பத்திரிகை நண்பர்களுக்குப் படித்துக் காட்டிய போது அதை அவர்களும் குறித்துக்கொண்டார்கள். இதுபோன்ற பல சம்பவங்கள் இன்று இருக்கின்றன.

இப்படிப்பட்ட புகார்கள் பொய் என்று சந்தேகப்படுகிற அளவுக்கு ஆதாரம் இல்லாமல் இருக்கின்றன என்று கருதப்படுமானால் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு வழக்கு மன்றத்தில் வழக்கு தொடருவதற்கு நியாயம் இருக்கிறது என்பதற்கு அடையாளமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்மீது 9 வழக்குகளும் மற்றும் என்னுடைய நண்பர்கள் மீதும் வழக்கு போடப்பட்டது என்பதை நான் மறந்துவிட வில்லை. அதை நான் இங்கே குறிப்பிடும்போது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் காவல் துறைக்கு எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறார் என்கின்ற நன்றியோடு அவருக்குப் பதில் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன், பதில் கூற விரும்புகிறேன்.

ஒரு நடிகை வீட்டில் அவர் தவறான வழியில் செயல்பட்டுக் கொண்டிருந்தார் என்கின்ற குற்றச்சாட்டு காவல்துறையினருக்குச் செய்தியாக வந்தது. நேரிலேயும் சொல்லப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நம்பி இவர்கள் இரவிலே திடீரென்று அந்த வீட்டிற்குள் நுழைந்து இருக்கிறார்கள். பெரிய அதிகாரி அளவுக்குத்தான் நுழைந்து இருக்கிறார்கள். அங்கே உள்ளே நுழைந்தபோது எந்தவிதமான தவறுகளுமின்றி அந்தப்

பெண் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் தாயார் தகப்பனார் இருந்திருக்கிறார்கள். அவருடைய தமையனும் வாழ்க்கைத் துணைவரும் கூட அங்கே இருந்திருக்கிறார்கள். இதற்குப் பிறகு அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வரவேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட ஆண்கள் இருந்திருந்தால் அவர்களையும் அந்தப் பெண்ணையும் சேர்த்து கைது செய்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆண்கள் யாருமே இல்லை. யாருமே கைது செய்யப்படவில்லை. வழக்கறிஞர்களையும், அதிகாரிகளையும் அழைத்து வந்து விசாரிப்பதற்கு ஆரம்பித்த போது அவ்வாறு விசாரிப்பதற்கு விரும்பியபோது கூட்டம் கூடியது என்றும் ஆகவே அந்த நேரத்தில் அந்த இடத்தில் விசாரிப்பதற்கு உசிதமாக இருக்காது என்ற காரணத்தால் அவர்களை அழைத்து வந்ததாக எனக்குச் செய்தி தரப்பட்டிருக்கிறது.

காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்ட அந்தப் பெண் எந்த விதமான முகாந்திரமுமின்றி ஏன் அழைத்து வரப்பட்டிருக்கிறார் என்கிற நிலையில்...... குறுக்கீடு

திரு. ஏ. ரகுமான்கான்: தலைவரவர்களே நான் குறுக்கிட்டு பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். காவல் துறைக்கு அந்தப் பெண் அழைத்து வரப்பட்டார் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், இதுவே சட்ட விரோதமாகும்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்காகத்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். அவருக்கு விரோதமாக நான் சொல்லவில்லை. கொஞ்சம் பொறுத்துக்கொள்ளக்கூடாதா? அந்தக் காவல் நிலையத்திலிருந்து சில அதிகாரிகள் ஏன் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி அந்த நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் அவர்கள் அந்த வீட்டிலே யாருமே இல்லை என்று தெரிந்த பிறகு கூட்டம் கூடியிருந்தால் விட்டுவிட்டு வந்து இருக்க வேண்டுமே தவிர அழைத்து வந்திருக்கக்கூடாது என்பதுதான். ஆக அந்த நிலையில் அவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து மீண்டும் 7 ஆம் தேதியிலிருந்து வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் முதல் பக்கத்தை மட்டும் படித்துவிட்டு பின்னால் இருப்பவைகளை படிக்காமல் இருப்பதனால்தான் என்பதாகும். அல்லது அப்படி உங்களுக்குச் செய்தி தருபவர்கள் பின்னால் இருந்தவர்களை மறைத்து உங்களைத் திசை திருப்புகின்ற முறையில் உங்களை மக்கள் பார்த்து ஏன்

இப்படி எல்லாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கின்ற அளவுக்கு உங்களுடைய தகுதியைக் குறைப்பதற்கு முயலுகிறார்கள். நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே இதை நான் பதிலாக வைத்துச் சொல்வதற்குக் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

யாராக இருந்தாலும், பெண்கள் ஆறு மணிக்கு மேல் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக் கூடாது என்ற கட்டளை, ஆணை, உத்தரவு இருந்து கொண்டிருக்கிறது. அதை மீறி செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அந்தக் காவல் நிலையத்தில் அப்போது யார் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களோ அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும், எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படி எங்கேயாவது உடனடியாக நடவடிக்கைக்ள் எடுக்கவில்லை என்றால் அவர்கள் தப்பி விட்டதாக அந்தக் காவல் துறையினர், அங்கிருந்த, பொறுப்புக் குக்காரணமாக இருந்தவர்கள் நினைத்துவிடுவது அவர்களை ஏமாற்றிக் கொள்வதாகும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் பல பிரச்னைகள் பற்றி இங்கே பேசினார்கள். எம். ஜி. ஆர். என்று ஆரம்பித்து---அதைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை, அது ஏட்டில் இல்லை, எடுத்து விட்டார்கள். ஏதோ ஒரு நண்பர் சாராயம் காய்ச்சுகிறார் என்று ரகுமான்கான் அவர்கள் நகைச்சுவையோடு பேச முயன்றார்கள். ஆனால் அவர் பேசும்போது சொல்கிற வார்த்தைகள், பேசுகிற முறை ஏதோ மற்றவர்களை இழிவுபடுத்திப் பேசுவதைபோல் இருக்கக் கூடியதாக இருந்தாலும் அதைக் குறிப்பேட்டில் ஏற்ற வேண்டாமென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள் என்பதற்கிணங்க அல்லது யாரோ சொல்லி மாற்றினார்கள் அல்லது சபாநாயகர் அவர்களே மாற்றினார்களே தவிர அவையெல்லாம் இருந்தால் பெரிய தவறு வந்துவிடப் போவதில்லை என்பதுதான் என்னுடைய விருப்பம்.

ஏனெனில் பத்திரிகைகளில் வெளிவருகிற செய்திகள், ஏடுகளில் வெளியிடப்படுகிற கருத்துக்கள், அல்லது விளக்கங்கள், வால் போஸ்டர்களில் எழுதப்படுகிற செய்திகள் அல்லது தலைப்புகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது இது மிகமிகச் சாதாரணமானது, ஒன்றுமேயில்லை என்று சொல்கிற அளவிற்கு எவ்வளவோ பேர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எதைப் பேச வேண்டும், எதைப் பேசக் கூடாது என்பதற்கு ஒரு வரையறை வைத்துக்கொள்கிற அளவிற்கு அனைத்துக்கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் உட்கார்ந்து இதற்கென்று ஒரு விதி ஏற்படுத்திக் கொள்வதுகூட நியாயமான முறையாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன்.

பெண்கள் காவல்நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படும்போது சில நேரங்களில் அங்கிருக்கிற காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய பக்குவமற்ற தன்மை, பண்பற்ற தன்மை, சட்டத்தை அலட்சியப்படுத்துகிற மனோபாவம் அல்லது இங்கே நடப்பது யாருக்கும் வெளியே தெரியப் போவதில்லை, நாம் பதவியில் இருக்கிறோம்—சிறிய பதவியாக இருந்தாலும்—என்ற துணிச்சல் அல்லது அங்குள்ள சூழ்நிலை, தங்களை யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள் என்ற நினைப்பு, தாங்கள் எதைச் செய்தாலும் தங்களுக்கு சிபார்சாக இங்கே சட்ட மன்றத்தில் பேசுவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை போன்றவை காரணமாக அவர்கள் தவறுகள் செய்யலாம். அதற்காக ஒரு முடிவு எடுக்கப்பட இருக்கிறது தாற்காலிகமாக. அது பயன் தருமானால், அதை நல்லமுறையில் பயன்படுத்தலாம் என்ற வகையில் பெண் போலீஸ்காரர்கள் இல்லாமல், அவர்கள் பாதுகாப்பு இருந்தாலன்றி, அவர்களுக்கு முன்புதான் எந்தப் பெண்ணையும் காவல்நிலையத்தில் விசாரிக்க வேண்டும் என்கிற வகையில் நாங்கள் முடிவு எடுத்து அதை செயலாக்க இருக்கிறோம்' என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இதேபோல் சாராயம்பற்றிச் சொல்கிறார்கள். சிலர் கேட்கலாம். அந்தப் பெண்களுக்கு யார் பாதுகாப்பு என்று கேட்கலாம். அந்த பெண்களுக்குப் பாதுகாப்பு தருவதற்குரிய வகையில் அவர்கள் அரசாங்கப் பணிமனைகளில் கற்றுக்கொள்ள வேண்டும், அவற்றையெல்லாம் அவர்கள் கற்றுக் கொள்வார்கள், அப்படிக் கற்றுக்கொள்பவர்கள், படித்த பெண்கள் அந் நிலையில் நிச்சயமாக தங்கள் கடமையைச் செய்யக்கூடிய வகையில் செயலாற்ற முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இப்போதும் பணியில் இருக்கிறார்கள். அதேபோல் நடக்கும். பல புகார்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றி தெளிவாகச் சொல்ல விருப்புகிறேன் என்றாலும்....

<u>திரு. மு. கருணாநிதி:</u> முதல் அமைச்சர் அவர்கள் பேசுவதில் ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பெண் போலீஸார் ஒவ்வொரு இடத்திலும் பெண் குற்றவாளிகளைக் கைதுசெய்கிற நேரத்தில், போலீஸ் ஸ்டேஷனில் விசாரிக்கப்படும் போதுகூட கூட இருப்பார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பெண் போலீஸ் படை சென்னையில் தான் அமைக்கப்பட்டது. அது உருவாக்கப்பட்டபோது அப்போது 20 பேர்கள்தான் அதில் சேர்க்கப்பட்டார்கள் அல்லது சேர்ந்தார்கள். கோவை, திருச்சி, மதுரை போன்ற நகரங்களுக்கு அது விஸ்தரிக்கப் படயிருக்கிறது அல்லது ஓரளவு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மொத்தம் 873 போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அப்படியானால் ஒரு ஸ்டேஷனுக்கு இரண்டு பெண் போலீஸார் வீதம் கிட்டத்தட்ட 1,600க்கு மேல் பெண் போலீஸார் நியமிக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பிரச்னை உருவாகும்போதுதான், புதிய புதிய பதில்களும் வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. திறமையுள்ள கேள்விகள் எழும்போது தான் தகுதியுள்ள பதில்களும் தரப்படுகின்றன. இப்படிப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டு அதற்குப் பதில் தருகின்ற நிலையில், நாங்கள் குறைந்தது நான்கைந்து நாட்கள் அல்ல ஒரு வாரமாக இதைப்பற்றிய விவாதம் வந்த பிறகு, நாங்கள் இதைப்பற்றி தீர விசாரித்து செயல்பட வேண்டும் என்று விசாரித்து ஒரு முடிவு எடுக்கவேண்டும் என்ற என் எண்ணத்தைச் சொல்லியிருக்கிறேன். அதற்கான புள்ளிவிவரங்களை விரைவில் தருவதாக செயலகலத்தில் கூறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்னொரு யோசனையையும் சொன்னேன். அது மிகவும் கடினமாக இருக்கும் என்ற காரணத்தால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. செயல்படுத்த முடியாது என்ற நிலைக்கு வந்தோம். அதாவது எங்காவது இப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்படுமானால், இந்தக் கொடுமைக்கு யார் காரணம் என்று கருதப்படுகின்ற நபர் மட்டுமல்லாமல், அந்த நேரத்தில் அங்கு இருக்கக்கூடிய அனைவரையும் பதவியிலிருந்து நீக்குவதற்குத் தகுந்த முறையில் புதிய விதிமுறைகள், அல்லது சட்டம், விதிகள், திருத்தம் இப்படி ஏதாவது கொண்டு வரலாமா என்று விரும்பினேன்.

இதற்கு காரணம், பெண்கள் பாதுகாக்கப் படவேண்டும், பெண்களின் மானம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, இங்கு பேசிய சில நண்பர்களும் சொன்னதைப்போல், இங்கு பேசிய அனைவருமே சாராயத்தைப்பற்றிப் பேசியபோது சாராயத்துக்கும் காவல்துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கும் தொடர்பு என்கிற முறையில் பொதுப்படையாக ஒரு சிலர் கூறினார்கள் என்று இல்லாமல், இங்கு பேசிய பெரும்பாலானவர்களும், சாராயத்துக்கும் காவல்துறைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மாமூல் வாங்குகிறார்கள் என்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள். இந்தக் குற்றச்சாட்டு இப்போது மட்டும் சொல்லப்படுவதில்லை. தொன்று தொட்டு சொல்லப்பட்டு வருவது தான். ஆனால் இப்போது அண்மையில் இதுபற்றி தெளிவாகச் சொல்லப்படுகிறது. அதை நான் இங்கு சொல்வது அதை சிரித்துக் கொண்டே சொல்ல விரும்புகிறேன். இந்த சாராய விஷயத்தில் மட்டும், எதிர்க்கட்சி, ஆட்சி கட்சி என்றில்லாமல் எல்லோருமே இதில் பங்குதாரர்களாக ஆகிவிடுகிறார்கள் என்ற கருத்தில் சொல்லப்பட்டது. நல்லவற்றுக்கு ஒன்று பட முடியாவிட்டாலும், தீயவற்றுக்கு ஒன்றுபடுகிறார்கள், தீமைக்கு அப்படிப்பட்ட சக்தி இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது....

திரு. ரா. உமாநாத்: அந்த ஒற்றுமைக்கு எங்கள் கட்சி சேரவில்லை என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உமாநாத் அவர்கள் அவர்களுடைய கட்சி சேரவில்லை என்ற தன்னம்பிக்கையை தெரிவித்துக் கொண்டார்கள், அதற்காக உண்மையில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உமாநாத் அவர்கள் கூறியதுபோல் ஒவ்வொரு கட்சிக்கும் அந்த உரிமையை அளிக்க வேண்டும். அவரவர்கள் தங்கள் கட்சியைப் பற்றிய நிலைமையை தெளிவாக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சாராய விற்பனையில் ஈடுபடுகிறார்கள் என்ற கருத்தில் முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு தொனித்துவிடக்கூடாது. அது இந்த அவையினுடைய மரபுக்கு ஏற்றதாக இருக்காது. சில பேர்கள் என்று சொல்லலாமே தவிர, எல்லோருமே இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் பேசியதை திருத்திக் சொல்வார்களேயானால் உமாநாத் அவர்களுக்கு ஏற்பட்ட சங்கடம் எங்களுக்கு ஏற்படாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள், தன்னுடைய தகுதிக்கு ஏற்ப திறமைக்கு ஏற்ப தன்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்புவதை நான் தடை செய்யத் தயாராக இல்லை. அவர்கள் அப்போதே சொல்லி விட்டார்கள். சுந்தரம் என்பவரை நான் பார்த்ததேயில்லை என்றும் தனக்கு இதில் எந்தத் தோடர்பும் இல்லை என்றும் சொல்லிவிட்டார்கள். இங்கு சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தான் நான் சொன்னேன்.

முக்கியமாக இப்படிப்பட்ட கருத்துக்களைச் சொன்னவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினரும் ஒருவர் என்பதையும் நான் கருத்தில் கொண்டுதான், இதில் ல்லோரும் ஒன்று என்ற மகிழ்ச்சியில் சிலர் என்று குறிப்பிடாமல் ந்த வகையில் எல்லோரும் ஒன்றாக இருக்கிறார்கள் என்று றிப்பிட்டேன்......

திரு. துரை முருகன்: அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளவர்கள் யாரும் சொல்லவில்லை. கிருஷ்ணகிரி எம். எல். ஏ. தான் அப்படிச் சொன்னார் என்று நினைக்கிறேன்.

(முற்பகல் 11·40)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது எல்லா உறுப்பினர் களும் இதிலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தொனிப்பதுபோல் இருந்தது. அப்படி தொனிப்பது சரியல்ல. அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மாதிரி குறிப்பேட்டில் இருந்தால், அதை விலக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களால் பேசப்பட்டவைகளுக் குத்தான் நான் பதில் சொல்கிறேன். கற்பனை அல்ல. ஒவ்வொரு தலைவரும் தங்களைப்பற்றி விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், அப்படிப் பேசி குறிப்பேட்டிலே ஏற்றிக் கொள்ளலாம். இப்படி மாரிமுத்து அவர்கள் சொன்னது, மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொன்னது, சங்கரய்யா அவர்கள் சொன்னது, அதுபோல் லத்தீப் அவர்கள் என்று எல்லோரும் சொல்லிக் கொள்ளலாம். அதிலே ஆட்சேபணை இல்லை. குறிப்பேட்டிலே ஏற்றிக் கொள்ளலாம்

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (குறுக்கிட்டு) ஜேம்ஸ்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஜேம்ஸ். இப்படி இதுபோல் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

பைபிள், குர்ரான் படித்தால், சிலர் சொல்லுவார்கள். இதிலிருந்துதான் அது வந்தது என்று அதுபோல் இது மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் வெகு அக்கறையோடு ஜேம்ஸ்க்குப் பரிந்து பேசினார்கள். நன்றி.

எனவேதான் இந்த ஒற்றுமையில், சாராயத்தை யார் யார் கள்ளத்தனமாக விற்பனை செய்கிறார்களோ, உருவாக்கிக் கொண் டிருக்கிறார்களோ, இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலை ஞர் அவர்கள் குறிப்பிட்டது போல், வார்னிஷ் குடித்து செத்துப் போவதைத் தடுக்க வேண்டுமென்று சொல்வதிலே எவ்வளவு ஆத்திரமும், அக்கறையும் இருப்பதாக எடுத்துக் காட்டினார்களோ, அதைப்போல் இந்த மாமன்றத்திலே இருக்கின்ற நாம் அனைவரும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை எண்ணிப் பார்க்காமல் இங்கே பெரியவர் கரியமாணிக்கம் அம்பலனார் அவர்கள் சொன் னதைப்போல், பல கிராமங்களிலே அவர்கள் எவ்வளவோ முயற்சி செய்து ஒருசில கிராமங்களிலே மக்களே அதை எதிர்க்கக் கூடிய அளவிற்கு முன்வந்து அதை ஒழித்தார்கள், அந்த முயற்சி யிலே வெற்றி கண்டார்கள், அப்படி இருந்தும் கூட இப்போது நுழையப் பார்க்கிறது என்ற அவர்கள் சொன்னதை நான்

ஆதரிப்பதோடு அப்படித் தவறு நடப்பது பற்றி குறிப்பிட்டுத் தந்தால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று சொல்லிக் கொள்வதோடு நாம் அனைவரும் இந்தப் பெரியவர் சொன்னதைப் போல், நமது கடமையிலே அக்கறை கொண்டு இந்தச் சாராயத்தை மதுவை ஒழிப்பதற்கு எந்தெந்த வகையில் நாம் ஒன்றுபட்டு செயல்பட முடியுமோ, அவைகளைச் செய்ய முன்வருவோமானால் அதற்காக நாம் திட்டம் தீட்டி செயல்பட முன்வருவோமானால். நாட்டின் நன்மைதான் நமக்கு முக்கியம், கட்சிப் பிரச்னைக்கு அப்பால் இதிலே இருக்க வேண்டும் என்ற விதத்தில் நாம் முடிவு எடுப்போமானால், நாம் தோல்வியடைய முடியாது என்பதில் எனக்கு திட நம்பிக்கை இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றங்களைப் பற்றிச் சொல்லும்போது. முன்பிருந்த கணக்குகளைப் படித்துக் காட்டி. இப்போது இருக்கின்ற கணக்குகளையும் படித்துக்காட்டி, அப்போது இருந்த கணக்கை விட இப்போது அதிகமாக இருக்கிறது என்ற புள்ளிவிவரக் கணக்கை எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப் பிட்டார்கள். நான் வரவேற்கிறேன். உண்மையிலேயே இதற்கு என்ன காரணம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்பாமலேயோ அல்லது இது எப்படி ஏற்படுகிறது என்பதை நான் சிந்திக்காமலேயோ இருந்திருந்தால், நாங்கள் பதவிக்கு வருவதற்கு முன்பாக நடந்திருந்தாலும்கூட இவைகளை இங்கே குறிப்பிட்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதைப்போலவே, 7, 8 மாத ஆட்சிக் காலத்திலே ஒரு தொலைபேசிகூட வைக்கப்படவில்லை என்று சொல்கிற நேரத்தில், நாங்கள் அதைத் தெரிந்து சொல்கிறோம். நாங்கள் எதை எதையோ செய்துவிட்டோம் என்றோ, எல்லா விஷயத்திலும் இல்லாததைச் சொல்லி நாங்கள் புகழ் பாடிக் கொள்ளத் தயாராக இல்லை என்பதால், இப்போது வெளிப்படையாக வெளியிட்டுள்ள குறிப்புகளிலே இருந்து உண்மையை எடுத்துக்காட்டுகிறது என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர் கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

புள்ளி விவரங்களைப் பார்த்து நாம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் சில சட்டங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்கள் இருக்கிறார்கள். சில நேரங்களில் சட்டத்தினுடைய நோக்கத்தை உண்மையாகப் பயன்படுத்தி நிரூபிக்க வேண்டுமென்பதற்காக உழைப்பவர்கள் இருக்கிறார்கள். காவல் துறையிலும் அப்படிப்பட்ட மிகப் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள் என்பதிலே இந்த அரசுக்கு ஒரு சிறிதும் ஐயமில்லை என்பதை இங்கே நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

காவல் துறையில் இருக்கிறவர்கள் அனைவரும் தவறு செய்கிறார்களா என்று கேட்டால்—நான் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படி இருந்தால் எவ்வளவோ போராட்டங்கள், பிரச்சினைகள் வந்தபோதும் தங்களுக்கு இவ்வளவு விபத்துக்கள், ஆபத்துக்கள் சூழ்ந்திருக்கிற நிலை இருந்தும், போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பது தெரிந்த பிறகும், இங்கே அமைதியை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள் என்பதை அறிந்த பிறகும் அவர்களைத் திறமை இல்லாதவர்கள், கடமையுணர்ச்சி இல்லாதவர்கள் என்று யாரும் சொல்லிவிட முடியாது.

யாரோ ஒரு சிலர் செய்கிற தவறுக்கு அந்த இலாகா அனைத்தும் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் காரணத்தால், காவல் துறையைப் பற்றிப் பேசும்போது ஒட்டுமொத்தமாக தவறு செய்கிறார்கள் என்று பேசினால் அப்படித் தவறு செய்கிற காவலர்களுக்குக் கொஞ்சம் கோபம் வந்து நிறுத்திவிடுவார்கள் அல்லது பெரும்பாலனவர்கள் அப்படிச் செய்யவில்லை என்றாலும் தவறு செய்தவர்களை விட்டு வைக்காமல் நடவடிக்கை எடுக்க முன் வருவார்கள் என்ற வகையில் அது பயன்படும்.

இங்கே சொன்னார்கள்—அவர்களே ஒப்புக் கொள்கிறார்கள். அவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள், புள்ளி விவரத்தைச் சொல்லுகிறார்கள் என்று சொன்னார்கள். அதை ஏன் மறைக்க வேண்டும்? இது எப்படி நடைபெறுகிறது? காவல் துறையில் இருப்பவர்கள், நான் முன்பே சொன்னது போல், இந்த மன்றத்தில் சொன்னது போல், நாங்கள் பதவிக்கு வந்தவுடன் எங்களோடு அழைத்து வரப்பட்டவர்கள் அல்ல, அவர்கள்.

'பத்தாயிரம் பேரை நீங்கள் சேர்ப்பதாகச் சொன்னீர்களே, 200 பேருக்கு மேல் சேர்த்ததாகத் தெரியவில்லையே' என்று கேட்டார்கள். திட்டம் இருந்தது; இல்லையென்று சொல்லத் தயாராக இல்லை. சேர்க்க முயற்சிக்கப்பட்டது, இல்லையென்று சொல்ல வரவில்லை. ஆனால் என்ன காரணம் என்று கேட்டால், நிதிநிலைமை நாங்கள் நினைத்ததைவிட மோசமான அளவுக்குப் போய்விட்ட காரணத்தால், புயலாலும், வெள்ளத்தாலும் சோதனைக்கு ஆட்பட்டு விட்ட காரணத்தால் நிதிநிலைமை காரணமாக நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அந்த எண்ணத்தை நிறைவேற்ற வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம்.

நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய புதியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும், சேர்க்க வேண்டுமென்று ஏதோ விளம்பரத்தைச் செய்துவிட்டு அதிலிருந்து நாங்கள் ஓடி ஒளிந்துவிட விரும்பவில்லை. வந்த உடனே விளம்பரத்திற்காக வெளியிடப்பட்ட தகவல் என்று யாரும் நினைக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அந்த வகையில் எடுத்துக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுகள், குறைகள் நியாயமான அளவு நாகரிகமான முறையில் இருந்தன, அந்தப் பேச்சுக்கு இந்த அரசு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறது. புண்படுத்த வேண்டுமென்று இல்லாமல் புனிதப் படுத்த வேண்டுமென்ற நிலையிலோ அல்லது திறமையை ஏற்படுத்த வேண்டுமென்ற விருப்பத்திலோ, 'ஏன் இவைகளைச் செய்யவில்லை? யார் குறுக்கிட்டார்கள்' என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற வகையில் அப்படிப்பட்ட கேள்விகள், குறைகள், குற்றங்கள் சொல்லப்படுமானால், வெளிப்படுத்தப் படுமானால், உண்மையிலேயே அதை வரவேற்பதைப் பெரும் பாக்கியமாக, நல்ல வாய்ப்பாக இந்த அரசு கருதும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்-தலைமை]

ஒரு விஷயத்தில், நான் முன்பு வெளிநாடுகளுக்குச் சென்று வந்தபிறகு எனக்கு ஒரு ஆசை இருந்தது. இதெல்லாம் ஆசைதான், பேராசை என்று கூடச் சொல்லலாம். பத்தாயிரம் பேருக்கு காவல்துறையில் வேலை கொடுப்போம் என்று சொல்லி 200 பேர்களைத்தான் சேர்த்தார்கள்; இதுவரை ஒரு தொலைபேசி கூட வைக்கவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். என்னுடைய பேராசை—டாக்சியில் செல்லுகிறவர்கள்—வாடகை வண்டியில் செல்லுகிறவர்கள் எங்கு செல்லுகிறார்கள் என்பதையும், செல்லுகிறவர்கள் எப்போது புறப்பட்டார்கள் என்பதையும் எந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் டாக்சி சொந்தக்காரர்கள் அலுவலகத்திற்கு அவ்வப்போது தொலை பேசியின் மூலமாக கார் ஓட்டுநர்கள் தெரிவித்துக் கொண்டிருப் பதை நான் நேரில் கண்டு வியந்தபோது, இவைகள் நம் நாட்டிலே கொண்டுவரப்படுமானால் திருட்டு பயம் அல்லது கற்பழிப்பு அல்லது பெண்களைக் கடத்தல், ஆட்களைக் கடத்தல் இவைகள் எல்லாம் எந்த அளவுக்குக் குறைந்துவிடும், இல்லாமல் போய்விடும் என்று நினைத்துப் பேராசைப் பட்டதுண்டு.

(முற்பகல் 11.50)

நீ தான் பதவிக்கு வந்து இருக்கிறாயே, செய்யக் கூடாதா என்று கேட்கலாம். செய்யும்படி யாராவது விட்டால் செய்யலாம்.

இங்கே என்.ஜி.ஓ. பற்றிப் பேசினார்கள். என்.ஜி.ஓ. என்பவர்கள் தங்கள் கடமையைச் செய்யாதவர்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அவர்கள் குறையே இல்லாதவர்கள் என்று யாரும் சொல்லமாட்டார்கள். லஞ்சம், ஊழல் எங்கே இருந்து தொடங்குகிறது தெரியுமா என்று அதே நண்பர்களைச் சந்தித்துக் கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், எனக்கு நினைவு-அப்பன் என்று கருதுகிறேன்- அவர்கள் சொன்னார்கள். தலைமையிலிருந்து கடைசி வரையில் இருக்கிறது என்று சொன்னார்கள். நான்

திரும்பச் சொன்னேன், கடைசி வரையில் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா இல்லையா என்று கேட்டேன். ஆம் என்று ஒப்புக் கொண்டார்கள், அப்போது சம்பளமும் வாங்குகிறீர்கள், இதையும் வாங்குகிறீர்கள், மேற்கொண்டு வேண்டும் என்று கேட்கிறீர்களே, இல்லாத நிலையிலே, அது நியாயமா என்று கேட்டேன், அவர்கள் சொன்னார்கள், யாரோ தவறு செய்கிறார்கள் என்பதற்காக எல்லோருக்கும் வாழ்க்கை வேண்டாமா என்று கேட்டார்கள், நியாயமான கேள்வி. நான் ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன் என்று மறுபடியும் கணக்கிட்டுச் சொன்னேன். அவர்களைப் பற்றி மட்டும் பேசுகிறேன், வேறு எங்கேயும் போகவில்லை. ஒரு நாளைக்கு 6½ மணி நேரம் என்று ஒதுக்கிவைக்கிறார்கள், அரை மணி உணவு நேரம் போய்விடுகிறது. 6 மணி நேரம் அவர்கள் சம்பளத்தைக் கணக்குப் போட்டால் ஒரு மணிக்கு எத்தனை ரூபாய் சம்பளம் என்று பார்த்தால், ஒரு வருடத்திலே 52 ஞாயிற்றுக் கிழமைகள் வேலையில்லை, அதுபோக இரண்டாவது சனிக்கிழமை வேறு. அது போக எர்ன்டு லீவ், சம்பளத்தோடு அந்த விடுமுறை, அதற்குப் பிறகு அரசால் விடுக்கப்படுகிற விடுமுறை நாட்கள், இவைகளை எல்லாம் கணக்கிட்டு எத்தனை நாட்கள் வேலை செய்கிறார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தால் இந்த 6 மணி நேரத்திலே எவ்வளவு வேலை செய்கிறார்கள், எத்தனை கடிதங்களுக்கு எந்த அளவிலே பதில் எழுதுகிறார்கள். எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்பதையெல்லாம் இங்கே இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் தயவுசெய்து கொஞ்சம் கணக்கிட்டுப் பாாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நினைக்கும்பொழுது ஒரு மணி நேரத்திற்கு 2, 3 ரூபாயாவது அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. ஆனால் கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு ஒட்டுமொத்தமாக, வறுமைக்கோட்டிற்குக் கீழே என்று சொல்லப்படுகிறதே, அதிலே இருக்கிறவர்களுக்கு, 10 ரூபாய் சம்பாதிக்கிறவர்களும் இருக்கிறார்கள், 15 ரூபாய் சம்பாதிக்கிறவர்களும் இருக்கிறார்கள், இவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு நபருக்கு 25 காசுகள்தான் கிடைக்கின்றன ஒரு நாளைக்கு என்பதை நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கிராம மக்களுக்கு 25 காசுகள்தான் கிடைக்கின்றன என்பதால் அடித் தட்டிலே இருக்கின்ற அந்த விவசாயத் தொழிலாளர்களுடைய கூலியை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு நிலம் உடனுக்குடன் கொடுப்பதற்கும் அவர்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் யாரும் குறுக்கே நிற்கவில்லையே, என்.ஜி.ஓ.க்களோ இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸோ யாரும் குறுக்கே நிற்கவில்லையே, அதைச் செய்கிறீர்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்குச் சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். யாரும் குறுக்கே நிற்கவில்லை. குறுக்கே இருப்பவர்களை இப்போது விலக்க முடியவில்லை. அது உங்களுக்குத் தெரியும். யாருக்கெல்லாம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. பினாமி நிலங்கள் யார் பேரிலே இருக்கின்றன என்பதையும், ஆனால் அவைகள் எல்லாம் எடுக்கப்படவில்லை என்பதையும் சட்டம் இருந்தும், நிறைவேற்றப்பட முடியாமல் அவர்கள் தந்திரம் வென்றிருக்கிறது என்பதையும் அதை மாற்றுவதற்கு நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். அதில்தான் வெங்கடாசலம் இறந்துவிட்டார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அவர் எங்களோடு ஒத்துழைத்ததால்தான் ஒரு நண்பர் இறந்து விட்டார் என்று சொல்கிறார். அவரை என்னுடைய உறவினராகக் ருதிக் கண்ணீர் விடத் தயார். அதில் நான் பின்வாங்கவில்லை. அது அவருக்கே தெரியும். ஆனால் இன்னொருவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரை யார் கொலை செய்தார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஒரு கொலைக்கு இன்னொரு கொலை நிச்சயமாகப் பரிகாரம் ஆகாது என்பது அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தாகும்.

திரு. ரா. உமாநாத்: மன்னிக்க வேண்டும். ஒரு கொலைக்கு இன்னொரு கொலை நிவாரணம் ஆகாது என்று முதலமைச்சரவர்கள் சொல்கிறபொழுது வெங்கடாசலம் கொலை செய்யபட்டதற்காக மறு கொலை வெங்கடாசலத்தைச் சேர்ந்தவர்கள் செய்ததாக அதிலே 'இன்ஃப்ரன்ஸ்' வருகிறது. நேற்றே நான் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டேன். கொலைக்குக் கொலை என்பது மார்க்சிஸ்ட் கட்சியின் கொள்கை அல்ல, அது நக்சலைட்டுகளின் கொள்கை என்பதால் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, ஒரு கொலைக்குப் பரிகாரம் இன்னொரு கொலை அல்ல என்று நேற்றைய தினம் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். ஒரு கொலைக்குப் பதில் இன்னொரு கொலை என்றால் அது இப்பொழுது இல்லை என்று ஆகாது. அதற்காக நக்சலைட் என்று சொல்ல வேண்டியதில்லை. நாம் என்ன செய்கிறோம்? ஒரு கொலையைச் செய்தவனைத் தூக்கில் போடுவது என்றால், அது சர்க்கார் பார்த்துச் செய்வது என்று வைத்திருக்கிறோம். அதுவும் அதுதானே.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நான் மறுபடியும் முதல் நிலைமைக்கே செல்ல வேண்டியிருக்கிறது. விவரம் புரியாத நான் அப்படிச் சொன்னதற்காக விளக்கம் தர முன்வந்ததற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். உமாநாத் அவர்களுக்குப் பிறகு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சட்டம் படித்தவர்கள், நாம் என்ன செய்கிறோம் என்று அவர் கேட்டுக் கொள்வதிலிருந்து அவர் தன்னை நீதிபதியாக எப்பொழுது நியமித்துக் கொண்டார் என்பது தெரியவில்லை. நீதிபதியிடம் இருதரப்பார்கள் தங்கள் வழக்குகளுக்கு உள்ள ஆதாரங்களை எடுத்து வைக்கிறார்கள். அந்த ஆதாரங்களைப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் படித்திருக்கின்ற சட்டத்திலே என்ன சொல்கிறதோ அதற்கேற்ப பரிசீலனை செய்து இது நியாயம், இது தவறு என்று அவருடைய அறிவிற்கேற்ப, இந்தச் சட்டம் எப்படித் துணை செய்கிறதோ அதற்கேற்பவும், மனச்சாட்சிக்கேற்பவும் வழக்கிற்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அதையும், ஆதாரமில்லாமல் ஒருவர் இன்னொருவரைக் கொல்வதும், இன்னொரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவருடைய உறவினர்களைக் கொல்வது என்பதும், கொலைக்குக் கொலை பரிகாரம் ஆகாது என்ற தத்துவத்தைச் சொல்லுகின்ற நேரத்தில் நாலரைக் கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற நாம் கொலைகாரர்கள் என்று சொல்வதற்குரிய அளவில் நாமும் அப்படித்தான் செய்கிறோம் என்று சொல்லுகின்ற அவருக்கு விவரம் தெரியாத நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். 'வெளியே வா, பார்த்துக் கொள்ளலாம்' என்று சொல்லுகின்ற அளவிலே இருக்கின்ற விவரம் தெரிந்த மாண்புமிகு சுப்பு அவர்களிடமிருந்து இதைத்தவிர வேறு எதிர்பார்க்கக் கூடாதுதான். இருந்தாலும் என்ன செய்வது? அவர் சொல்வதையும் நான் கேட்டுத் தீர வேண்டும், பதில் சொல்ல வேண்டும். பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்து, திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், கொலைக்குக் கொலை பரிகாரம் ஆகாது என்று சொன்னதாலேயே இந்தக் கொலையைச் செய்தவர்கள் அந்தக் கொலைக்கு ஆளாக்கப்பட்டவரின் சொந்தக்காரர்கள்தான் அல்லது அந்தக் கொலைக்கு ஆளாக்கப்பட்டவரின் நண்பர்கள் தான் அல்லது உறவினர்கள்தான் என்று நான் குறிப்பிட்டால் அது என்னுடைய தகுதிக்கோ, பொறுப்புக்கோ பொருத்தமாகாது என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

திரு. உமாநாத் அவர்கள், நாங்கள் அப்படி அல்ல, ஆகவேதான் நக்சலைட்டுகளை வெளியேற்றி விட்டோம் என்று சொன்னார்கள். நக்சலைட்டுகள் அப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், நான்

இன்னும் அப்படிக் குறிப்பிடவில்லை. அவர்கள் இப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், இல்லையென்றாலும், யாராலும், எங்கள் கட்சிக்காரர்களானாலும், மாண்புமிகு உறுப்பினர்களின் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும், அவர்களிலே யாரும்கூட இப்படிப்பட்ட எண்ணத்திற்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளக் கூடாது என்பது தான் என்னுடைய கருத்து. இந்த அரசு அந்த வழிமுறைகளைத் தான் பின்பற்றி வருகிறது என்று சொல்லத்தான் இந்த நேரத்தைப் பயன்படுத்தினேன்.

எனக்கு விவரம் தெரியாது. உங்களுக்குப் புரியும். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இங்கேயுள்ள எதிர்க்கட்சிக்காரர்கள் அல்லது அவர்களுடைய நண்பர்கள் அல்லது கட்சிக்காரர்கள் இதுபோன்ற செயல்களிலே ஈடுபடுகிறார்கள் என்று ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டை நான் சொல்லத் தயாராக இல்லை. அது வழக்கிலே இருக்கிறது. ஆனால் ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்டார்கள்.

(நன்பகல் 12.00)

அவர் கொலை செய்யப்பட்டார் என்பதற்கு ஏதாவது ஒரு குறிப்பு நமக்குக் கிடைத்திருந்தால் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கத் தொடங்கியிருக்கலாம். அவர் காணாமல் போய்விட்டார் என்ற நிலை இருக்கிறதே தவிர, அவர் எங்கு இருக்கிறார், உண்மையிலேயே அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது யாராவது கடத்திச் சென்றுவிட்டார்களா என்று தெரியவில்லை. காவல் துறையினர் முயற்சி செய்து பார்க்கின்றார்கள், முடியவில்லை என்று சொல்லவில்லை. அவர்களுடைய முயற்சியிலே தங்களுடைய நம்பிக்கையை இழக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல வழக்குகள் பற்றி இங்கே சொன்னார்கள். அந்த வழக்குகள் எல்லாம் ஒவ்வொரு குற்றச்சாட்டும், ஒவ்வொரு விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் ஒரு வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு அம்மையார், சாந்தாபாய் அவர்கள் செயின் காணாமல் போய்விட்டது என்ற காரணத்தால், அந்தத் தங்கச்சங்கிலியை இந்த அம்மையார் எடுத்திருப்பார்களோ என்ற சந்தேகத்தோடு காவலர் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். குறிப்பிட்ட ஒருவர் அந்த அம்மையாரைக் கன்னத்தில் அறைந்தார், அதற்குப் பிறகு அவர் அடிக்கப்பட்டார், என்பதைச் சொன்னார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் சொல்கிறேன். எதுவும் இந்த அரசுக்குத் தெரிவிக்கப்படுமானால், அறிவிக்கப்படுமானால்,

தெரிந்து கொள்ள முடிந்திருக்குமானால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுப்பதில் இருந்து பின்வாங்கியதில்லை, பின் வாங்காது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சாராயத்தை, மதுவை ஒழிப்பதிலே நான் போட்ட கட்டளை என்ன என்று சந்தேகத்தோடு கேட்டார்கள். நான் அந்தக் கோப்புகளை அவரிடத்திலே கொடுத்துவிடுகிறேன். என் கையெழுத்து இருக்கிறது, அவர் படித்துப் பார்க்கட்டும். (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கோப்பினை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இடத்தில் கொடுத்தார்) என் எழுத்துக்கள் புரியாத காரணத்தால் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஒரு வரி, 4, 5 வார்த்தைகள் விடப்பட்டிருக்கிறது. அது குறிப்பிலே இருக்கிறது என்பதைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். எந்த இடத்திலே விடப்பட்டிருக்கிறது என்பதை குறிப்புகளில் இருந்து அவராலே புரிந்து கொள்ள முடியும். நான் சிறிய எழுத்துக்களாக எழுதி இருப்பதால் புரிந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவரால் புரிந்து கொள்ள முடியும், அவர் முதலமைச்சராக இருந்தவர்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூட 7 ஆண்டுகள் எங்கள் தலைவர் முதலமைச்சராக இருந்தார்கள். நீங்கள் வந்து 7 மாதம்தான் ஆகிறது, இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று கேட்டார். எத்தனை நாட்கள் என்று கணக்குப் போட்டுக் கொண்டா நாம் எல்லோரும் வருகிறோம்? அப்படிக் கணக்குப் போட்டால் மிகுந்த ஆபத்தில்தான் வந்து முடியும். இத்தனை இத்தனை நாட்கள்தான் இருப்போம் என்று முடிவு செய்து வந்திருந்தால் உங்களை எதிர்க் கட்சியாகவே ஆக்கிக்கொள்ளமாட்டேன். நீங்கள் குற்றம் கூற இடம் தரமாட்டேன். நீங்கள் சொல்வதற்கெல்லாம் சரி என்று சொல்லிவிடலாம். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத், சங்கரய்யா போன்றவர்கள் சொல்லுகின்ற குறைகளை எல்லாம் தீர்த்துவிடலாம். எல்லோருக்கும் சாதகமான காரியத்தை ஆற்றி எத்தனை நாள் பதவியில் இருப்பது என்ற முடிவை எடுத்து அதுவரையில் நாங்கள் செயல்பட்டுக் கொண்டு வரலாம். ஆனால் விவரம் புரியாத காரணத்தால் எனக்கு அந்த எண்ணம் வரவில்லை. எனக்குத் தெரிந்தவரையில் எப்படிக் காரியம் ஆற்றுவது என்பதிலே தான் கணக்குப் பார்க்க வேண்டுமே தவிர எத்தனை நாட்களுக்கு இந்தப் பதவியில் இருப்பது என்று யாரும் கணக்குப் பார்ப்பது இல்லை.

ஆகவேதான் சொல்லிக் கொள்கிறேன், நாணயத்தோடும் நல்ல உள்ளத்தோடும் கடமையைச் செய்ய முயலுகின்றோம். அதிலே நம்பிக்கை இருக்கிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். முதல்வர் அவர்களுடைய நல்ல எண்ணத்திலே எனக்குச் சந்தேகம் கிடையாது. அவர் இங்கே இல்லாவிட்டாலும் என்னுடைய பேச்சினைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்று சொன்னார்கள். உண்மைதான், கேட்டுக்

கொண்டுதான் இருந்தேன். ஒரு வரிகூடத் தவறவிடவில்லை. இன்றைக்குக் கொஞ்சம் ஏமாந்துவிட்டேன். கேள்வி நேரம் இருக்கிறதே என்று, மற்ற அவசர வேலைகளை முடித்துக்கொண்டு வந்துவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது கேள்வி நேரம் இல்லாமல் போய், திரு. ஜேம்ஸ் அவர்களின் முழுப்பேச்சையும் கேட்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் கேள்விகளுக்கும் குறைகளுக்கும் பதில் சொல்லாமல் விட்டுவிட்டால் அவர் தவறாக எண்ணமாட்டார் என்று சொல்லும் போது, ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12.10)

என்னைப் பொறுத்தவரையில், அந்தக் காவல் துறையை நான் வைத்து இருக்கிற நோக்கம் பல உண்டு. தொழிலாளர் நலன் ஆனாலும் சரி, மாணவர்கள் நலன் ஆனாலும் சரி,, மது விலக்குப் பிரச்சனையானாலும் சரி, இவைகளை முதன்மையாகவும், மற்றவைகளை அடுத்தபடியாகவும் வைத்துக் கொண்டு நான் தொடர்ந்து செயலாற்றி வருகிறேன்.

ஆனால் கொலைக் குற்றவாளிகளை, களவாடுபவர்களை, கள்ளக் கடத்தல் செய்பவர்களை நீங்கள் கவனிக்க மாட்டீர்களா என்றால் நேரத்திற்கு ஏற்ப, அந்த செயலுக்குள்ள கடுமையான நிலைமைக்கு ஏற்ப, எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவேன்.

ஆனால் நோக்கத்தில், மதுவை ஒழித்தாக வேண்டும் என்பதிலே எனக்குப் பேராசை உண்டு. அதற்கு எல்லோரும் ஒத்துழைத்தால் மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்த மாமூல் என்பது எங்கேயிருந்து தொடர்ந்து கொண்டு இருக்கிறது என்பதைப் பொறுத்த வரையில், அந்த அதிகாரிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்படுகிற வகையில் ஒரு செல் அமைக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கு ஒருவர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்—நியமித்து இருக்கிறோம்—அதற்கு மேல், அதற்கென தனியாக அமைப்புகள் எங்கெங்கே எப்படி அவர்கள் வெளியே இருப்பவர்களுக்குத் தெரியாமல், அந்த அதிகாரிகளுக்கே தெரியாமல் செயல்படுவது என்று நாங்கள் திட்டமிட்டுக் கொண்டு இருக்கிறோம் என்பதை மட்டும் என்னுடைய கருத்தாக வெளியிடுவதற்கு அனுமதித்து, விவரங்கள் கேட்க வேண்டாம் என்று மட்டும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுவிலக்குக் குற்றங்கள் முன்பைவிட அதிகமாக இருக்கின்றன, கணக்குச் சொல்கிறது. நான் மறுக்கவும் இல்லை. என்ன காரணம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு

கிறேன். மதுவிலக்கு என்பது ஒரு கொள்கை. அது ஒரு லட்சியம். ஒரு நம்பிக்கை. அந்த வகையில் அவைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. மக்களுடைய மனதிலே இருந்து அந்த ஆசை விலக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் திருந்த வேண்டும், என்கிற நிலைமைக்கு மக்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். நடைபோடத் தெரிந்த குழந்தை ஓட ஆசைப் பட்டால் அதைத் தடுத்து நிறுத்தி இழுத்து நிறுத்துவது போல, தீயைப் பிடிக்கப்போகும் போக்கிரித்தனமாக இருக்கும் குழந்தையிடம் அது சுடும் என்று சொல்லி தடுத்து நிறுத்துவது போல, அந்தச் சட்டத்தை எந்த வகையில் நிறைவேற்றுவது அல்லது திருத்தம் கொண்டுவருவது என்பதற்கு இந்த அரசு முயன்று கொண்டு இருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும், நேற்றையதினம் திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். இதற்கு ஒரு சட்டம் கொண்டு வாருங்கள் அல்லது திருத்தம் கொண்டு வாருங்கள், ஏகமனதாக நிறைவேற்றித் தருகிறோம் என்று இந்தச் சபையில் அத்தனை அங்கத்தினர்களையும் வைத்துக்கொண்டு சொன்னார்கள். இந்த அவையில் இருந்த யாரும் மறுத்துச் சொல்லாத காரணத்தால் எல்லோரும் அதற்கு உடன்பட்டு இருக்கிறீர்கள். என்று எனக்கு முன்னால் இருந்த நம்பிக்கை மீண்டும் ஊர்ஜிதமாயிருக்கிறது என்பதில் எனக்கு மனநிறைவு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபசார தடைச் சட்டம் என்னைப் பொறுத்தவரையில் ஒரு திருப்தி இல்லாத சட்டம். இதற்கு மாற்றுத் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று விரும்பியிருக்கிறோம். இப்போது பெண்களுக்கு தண்டனை கிடைக்கிறது. ஆண்கள் யாராவது சொல்வார்கள். நான் போய் பணம் கொடுத்தேன் என்று சாட்சியம் சொல்லி விட்டால், உடனே அவள் குற்றவாளி என்ற நிலைமையில் தண்டிக்கப்பட்டு, ஆண் சாட்சி சொன்னான் என்பதற்காக அப்ரூவர் என்ற நிலைமையில் தப்பித்துக் கொள்ளும் நிலை இருக்கிறது. என்னுடைய ஆசை, பெண் தவறு செய்ததற்கு என்ன காரணம் என்று எண்ணிப் பார்க்கிறபோது ஏழ்மை என்று இருந்தால், வேறு வழி இல்லை என்று இருந்தால், எப்படியிருந்தாலும், அவளுக்குக் குறிப்பாக அபராதம் மட்டும் விதித்து, அந்தக் குற்றத்திற்குக் காரணமாக இருந்தவருக்கு இத்தனை மாதங்கள் கடுங்காவல் தண்டனை என்ற விதத்தில் ஆண்களுக்குத் தண்டனை அதிகமாக்க வேண்டும் என்பதிலே நான் கொஞ்சம் அக்கறையோடு சொல்ல விரும்புகிறேன்.

ஏனெனில், ஏழ்மையின் காரணமாக தவறு செய்யவேண்டிய நிலைமையில் ஒரு குடும்பம் இருந்து, அந்தக் குடும்பத்தில் வேறு ஆண்பிள்ளைகள் இல்லை, பெண்களால் தான் தங்களுடைய

வயிற்றுப் பசியைத் தீர்த்துக்கொள்ள வேண்டும், தாய் சுகப்பனைக் காப்பாற்ற வேண்டும் என்று மானத்தின் உயர்வைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, ஏழ்மையின் காரணமாக சூழ்நிலை காரணமாக, நெருக்கடி காரணமாக, கற்பின் மதிப்பைத், தெரிந்து கொள்ள முடியாத நிலையில் தவறு செய்து விட்டார்களானால் அவர்களுக்கு ஒரு பாதுகாப்புத் தரப்பட வேண்டும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ஆண் தவறு செய்து பெண் சாட்சி சொல்லியிருக்கிறாளா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அநேகமாக அப்படி வழக்கு இல்லை என்று நினைக்கிறேன். வேறு எங்காவது இருக்கிறதோ இல்லையோ தெரியாது. ஒரு பெண் ஒரு ஆணுக்கு ரூ. 10 கொடுத்தேன், ரூ. 15 கொடுத்தேன் என்று சொன்னதாக வழக்கு இல்லை. ஆனால் ஆண்கள் சாட்சி சொல்லியிருக்கிறார்கள்.

கேரளத்தில் முன்பு ஒரு காலத்தில்—30–40 ஆண்டு காலத்திற்கு முன்போ, அல்லது எப்போதோ நடந்தது. அது கதை என்று சொல்லப்பட்டது. கதை என்றே வைத்துக் கொள்வோம்—ஒரு பெண்—எந்தக் குலம், எந்த ஜாதி என்று கேட்க வேண்டாம்—அவளுக்கு 4-5 குழந்தைகள். அந்தக் கணவன் நினைத்தான் எப்படியாவது இவளைத் தள்ளிவிட்டு, வேறு திருமணம் புரிந்து கொள்ளவேண்டும் என்று, காரணம் தேவைப் பட்டது. எப்படியோ ஒரு வழக்கு வந்தது நீதிமன்றத்திலே. அந்த வழக்கிலே சாட்சியம் கூற வருகிறார்கள். அந்த சாட்சி கூறுபவரும், அந்த விசாரிக்கும் நீதிபதியும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர் விசாரித்தார். அந்தப் பெண் சொல்லி அழுதாள். "நான் எந்தத் தவறும் செய்யவில்லை. எந்தத் தீமையும் செய்யவில்லை, நான் நிரபராதி. இப்படி என்மீது அநியாயமாகப் பழி போடுகிறார்கள்" என்று அந்தப் பெண் கதறி அழுதாள். சாட்சி சொல்ல வந்தவனை நீதிபதி அழைத்தார், "நீ அந்தப் பெண்ணிடம் போய் பணம் கொடுத்தாயா, எவ்வளவு கொடுத்தாய்" என்றார். அவன் "ஆமாம், ரூ. 25 கொடுத்தேன்" என்று சொன்னான். உடனே நீதிபதி கணவனை அழைத்துக் கேட்டார், "நீ மாதம் எவ்வளவு சம்பாதிக்கிறாய்?" அவன் சொன்னான் "ரூ. 250 சம்பாதிக்கிறேன்" "எவ்வளவு வீட்டிற்குக் கொடுக்கிறாய்?" "நான் ஒன்றும் கொடுப்பது இல்லை". நீதிபதி உடனே சொன்னார் "பின் எப்படி அவள் குடும்பம் நடத்த முடியும்". இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தீர்ப்பு அளிக்கையில், சாட்சியம் சொன்னவர் "ரூ. 25 கொடுத்தேன்" என்று சொன்னதால், "மாதம் ரூ. 25 அந்தப் பெண்ணிற்கும், கணவன், பணம் கொடுப்பதில்லை, என்று சொன்னதால், மாதம் ரூ. 25 அந்தப் பெண்ணுக்குத் தர வேண்டும்" என்று தீர்ப்பு சொன்னதாகக் கதை.

எப்படிப்பட்ட அநியாயங்கள் நடக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். தீர்ப்பு நியாயமா இல்லையா என்று நான் சொல்ல வில்லை. தீர்ப்பு எதுவுமே நியாயம் என்றுதான் நான் கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு சண்முகனார் அப்படிச் சொல்லக் கூடாது. எதற்காகச் சொல்கிறேன் என்றால் யாராவது ஒருவருக்கு ஒரு பெண்ணிடம் விரோதம் வந்தாலும், அல்லது ஒரு பெண்ணைப் பழிவாங்க வேண்டுமென்று எண்ணினாலும், இப்படிச் சுற்றி வளைப்பது சுலபம் என்பது மிக எளிதாக இருக்கும் நிலைமை இந்த நாட்டில் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற விருப்பம் இருப்பதால் இதைச் சொல்கிறேன்.

இதைப்போல்தான் மதுவை அருந்துகிறவர்கள் மீது எனக்கு அனுதாபம் உண்டு. வருத்தம் உண்டு. தன்னுடைய உடலையும் கெடுத்துக் கொண்டு, தன்னுடைய வாழ்க்கையையும் கெடுத்துக் கொண்டு, பணத்தை வீணாக்குகிறார்களே என்று சாதாரண மக்கள் மத்தியிலே எனக்கு அனுதாபம் உண்டு. வசதி மிகுந்தவர்கள் மீது கோபம் உண்டு. நான் மேலவையில் முதியவர் பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பேசியதைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்போது நான் சொன்னேன். அப்போது சொன்னதை இப்போது நான் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டாம். அன்று சொன்னதைச் சொல்கிறேன். நான் பேசியது குறிப்பில் இருக்கிறது. ஒருவர் சொன்னார், "இந்த மது அருந்தாவிட்டால் அவர் உயிரோடு இருக்க முடியாது" என்று சொல்லி, பர்மிட் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று பேசினார். அன்று இருந்த நிலையில்—அன்றைக்கு இருந்த ராமச்சந்திரன்—நான் பேசினேன், அதைச் சாப்பிட்டால்தான் ஒருவர் உயிரோடு இருப்பார் என்றால் அப்படிச் சில உயிர்கள் போனால் பரவாயில்லை என்று நான் மேலவையில் பேசினேன். இப்போது அப்படிப் பேசுவீர்களா என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்லக் கூடாது. ஆனால் அதை வைத்துக்கொண்டு நாளையதினம் நண்பர்கள் கேட்பார்கள். இப்போதே கேட்பார் போல் இருக்கிறது, நண்பர் சாதிக் பாட்சா....

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ளமாட்டார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு நன்றி சொல்வது என்பதற்கு வார்த்தைகளே கிடையாது. அதைப் போற்றுகிறேன்; வாழ்த்துகிறேன். இப்படி நாம் எல்லோரும் விரும்பினாலும் நாம் ஒன்றாகச் செயலாற்றினாலன்றி மதுவை ஒழிக்க முடியாது.

ஒரு வியாதி இருக்கிறது. இங்கே ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காங்கிரசோடு இணைந்துவிடுகிறார்கள்; தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்தால் அங்கே இணைந்துவிடுகிறார்கள்; இன்னொரு கட்சி ஆட்சிக்கு வந்தால் இங்கே வந்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிச் சாராயம், கள்ளக்கடத்தல் இது போன்ற தவறுகளைச் செய்கிறவர்கள் எந்தக் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அங்கே போய் பாதுகாப்புத் தேடிக்கொள்கிறார்கள், அங்கே போய் ஒளிந்து கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் அதை முழுவதுமாக மறுக்கவில்லை.

ஆனால் ஒரு போலீஸ் அதிகாரி என்று வைத்துக் கொண்டாலும் அல்லது சாதாரண போலீஸ்காரர் என்று வைத்துக்கொண்டாலும் ஏழ்மையிலே இருக்கிறவர் லஞ்சம் வாங்காமல் என்ன செய்வார் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அதனால் அவர்கள் லஞ்சம் வாங்குவதை ஆதரிக்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. லஞ்சம் வாங்குவதை அவர்கள் என்றுமே ஆதரிக்க மாட்டார்கள். அவர்கள் பணத்தை விரும் பினால் இப்போது எப்படியெல்லாமோ இருந்திருப்பார்கள். அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஒரு லட்சியவாதி; அந்த லட்சியத்திற்காக வாழ்ந்துகொண்டிருப்பவர்கள். போலீஸ்காரர் களுக்குத் தேவையான ஊதியம் கொடுக்கவில்லை என்றும், காலத்திற் கேற்ற வசதி செய்து கொடுக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்பதை நான் உணருகிறேன்.

இங்கு எல்லோரும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். போலீஸ்காரர் களுக்கு இப்படியெல்லாம் முன்பு இருந்த அரசு வசதிகள் செய்திருக்கிறது. என்று சொன்னார்கள். அப்போது செய்திருந் தாலும் ஓரளவு அந்தக் காலத்தில் வேறு வருவாய் இருந்தது என்பதால் செய்வதற்கு அந்த வாய்ப்பு இருந்தது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இப்போது 140 கோடி ரூபாய் வருமானத்தையும் இழந்து, மதுவிலக்கையும் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்ற கஷ்டத்தை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக உணர்ந்திருப்பார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

காவல் துறையினருக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்பதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஏனென்றால் என்னுடைய அவர்கள் கஷ்டத்தை நான் பார்த்திருக்கிறேன். என்னுடைய மைத்துனர் ஒரு சாதாரண காவல்துறை ஊழியராக இருந்தவர்; அவருக்கு 4, 5 குழந்தைகள் உண்டு; அவர் எப்படிக் குறைந்த

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

வருமானத்தில் கஷ்டப்பட்டார் என்பதை நான் அனுபவத்தில் கண்டிருக்கிறேன். இப்போது அவர் ரிட்டயர் ஆகிவிட்டார். அதையால் காவல் துறையிலே இருக்கிறவர்கள் எவ்வளவு கஷ்டத்தோடு குடும்பம் நடத்த வேண்டியிருக்கிறது என்பதை வேறு வகையிலே கவனித்துப் பார்க்கவில்லை என்றாலும் அனுபவம் காரணமாகத் தெரிந்திருக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்; அதை நீங்களும் மறுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

இவைகளைச் செய்வதற்கு பண வசதி, நிதி வசதி வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அதிலும் குறிப்பாக எதிர்க் கட்சித் தலைவராக இருப்பவர்கள் முன்னாள் முதலமைச்சராக 7 ஆண்டுக் காலம் இருந்தவர்கள்; அண்ணா அவர்களோடு இரண்டாண்டுக் காலம் பதவியில் இருந்தவர்கள்; அதற்குமேல் இங்கே அரசாங்கப் பதவி இல்லாமல் 10 ஆண்டுக்கு மேல் இருந்தவர்கள்; அவர்கள் பதவியிலே கூட ஏறத்தாழ 10 ஆண்டுகள் இருந்தவர்கள்; அந்த அளவுக்கு இந்த மன்றத்திலே அறிவார்ந்த அனுபவம் பெற்றவர்கள்; இன்னும் சொல்லப் போனால் உலக அனுபவம் மிக்கவர்கள்; அரசியல் ஈடுபாட்டு அனுபவத்தில் என் வயது என்றுகூடச் சொல்லலாம்; அவ்வளவு அறிவு முதிர்ச்சி, அனுபவ முதிர்ச்சி பெற்றவர்களுக்கு இது தெரியாமல் இருக்க முடியாது. எவ்வளவு நிதி நெருக்கடி இருக்கிறது என்பதை அவர்கள் உணராமல் இருக்க முடியாது. அப்பேர்ப் பட்டவர்கள் இந்த நிலைமைகளைச் சொல்லி, விஞ்ஞான வசதிகளைக் காவல் துறையினருக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்ற ஆசையைச் சொல்லும்போது நான் அதை மதிக்காமல் இருக்க முடியாது. என்னுடைய ஆசைகூட அதுதான்.

ஒன்பது லட்சம் பேர் இருந்த ஒரு இடத்தில்—எக்ஸ்போ 70 படம் எடுத்திருக்கிறேன்—அங்கே 9 லட்சம் பேர் இருந்தார்கள். அத்தனை பேர்களில் ஒருவருக்குக்கூட எந்தவிதமான விபத்தும் ஏற்படாமல் ஏதாவது வயிற்று வலி என்றால் கூட 3, 4 நிமிடங்களில் அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச்செல்ல முடிந்தது என்பதை நினைத்துப் பெருமைப்பட்டேன். அந்த அளவுக்கு விஞ்ஞான வசதி இருந்தது. அவைகளை எல்லாம் நாம் எப்போது கொண்டுவரப் போகிறோம் என்று தெரியாவிட்டாலும் அதைக் கொண்டுவர என்னென்ன திட்டங்களைத் தீட்டி இருக்கிறோம் என்பதை இந்தப் புத்தகத்திலே தந்திருக்கிறோம். இப்போதே அப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் செய்துவிட முடியுமா என்றால், நிதிநிலைமையைப் பொறுத்துதான் முடியும் என்பதை நீண்டகால அனுபவம் பெற்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்வார்கள்.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[பிற்பகல் 12–20]

ஆகவே, எங்கேயாவது பிரச்சினைகள் வரும்போது அதற்குத் தகுந்த நிதி ஒதுக்கி காரியங்களை அவற்றின் தேவையை அறிந்து செய்ய வேண்டிய நிலையில் நாம் அந்தப் பணியை மேற்கொள்வோம் என்பதை இந்த அவை நம்பும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

சம்பள உயர்வு, சம்பள உயர்வு என்கிற போராட்டம் அவரவர்களுடைய நிலைமைக்குத் தேவைதான். ஆனால் மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் புள்ளிவிவரம் தெரிந்தவர்கள். கிராமத்திலே இருக்கின்ற ஏழை எளியவரைப் பற்றியும் விவசாயிகளைப் பற்றியும் நன்றாக அறிந்தவர்கள். அந்த ஏழை மக்களுக்கு ஒரு நாளைக்கு 25 காசுதான் ஒட்டு மொத்தமாகப் பகிர்ந்து பார்க்கும்போது கிடைக்கிறது. ஆனால் அதே நேரத்தில் ஓரளவு வசதியோடு இல்லாவிட்டாலும் மூன்று வேளை உணவு கிடைக்கிறது என்று வாழ்பவர்கள், உணவே இல்லாமல் இருப்பவர்கள் ஒருவேளைக் கஞ்சியாவது குடிக்க வேண்டும் என்கிற மனோபக்குவமும் கொஞ்சம் தியாக உணர்வும் கொண்டவர்களாக இருந்தால் தவறு இல்லை என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கூடச் சொன்னார்கள். ''அப்படி என். ஜி. ஓ. க்கள் எல்லோரும் சம்பளம் வேண்டாமென்று சொல்லிவிட்டால் இந்த நாட்டிலே பஞ்சம் இல்லாமல் போய்விடுமா? அதைச் செய்யத் தயாரா? அப்படியானால் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்'' என்று சொன்னார்கள். ஆனால் சட்டம் படித்த, கம்யூனிஸ்ட் கட்சி போன்ற கட்சியிலே இருந்த, அண்ணா அவர்களின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் பல ஆண்டுகள் இருந்த, சட்டமன்றத்தில் பல ஆண்டுகள் பணியாற்றி இருக்கின்ற எந்தப் பிரச்சினையிலும் முனைப்போடு இருந்து, குழப்பம் விளைவிக்க வேண்டுமென்றால் அதற்குத்தகுந்தவாறும், குழப்பத்தை அடக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்தவாறும், சிரிக்க வைக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்தவாறும், சிந்திக்க வைக்க வேண்டுமென்றால் அதற்குத் தகுந்தவாறும், இவைகளுக்கெல்லாம் ஏற்றபடி வார்த்தைகளைப் போட்டு பேசுகின்ற திறமையுடைய, தரமுடைய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கேள்வியை உண்மையாகத்தான் கேட்டார்களா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனக்கு விவரம் தெரியாது என்று ஒத்துக்கொள்கிறேன்.

முன்னூற்றுப் பத்து கோடி கோடி ரூபாயில் இவ்வளவு பெரிய பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும் என்று விவரம் தெரிந்த அவர் சொல்ல மாட்டார் என்று நான் எதிர்பார்ப்பது தவறு இல்லை என்று கருதுகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

எத்தனை ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டாலும் பிரச்சினைகள் தீராமல் இருக்கும்போது, 6 ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு நிறைவேற்றிவிட்டோம் என்று சொன்ன பிறகும் நாம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கவில்லை, உருவாகவில்லை என்று சொன்னதற்குப் பிறகும் மீண்டும் இன்னொரு புதிய வகையில் புதிய வழியில் திட்டங்களை உருவாக்குவோமே என்று சொல்ல வேண்டிய நிலையில் நாடு இருக்கிறதென்றால் அன்றாட பிரச்சினைகள் அவ்வப்போது புதிய புதிய கோணத்தில் எழுகின்றன என்பதுதான் உண்மையே தவிர திட்டமிட்டவர்கள் சில திட்டங்களிலே தங்களுடைய........

திரு. க. சுப்பு: தலைவரவர்களே நான் சொன்ன கருத்து என். ஜி. ஓ.க்கள் அரசாங்க நிர்வாகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். ஆகவே என். ஜி. ஓ. வின் சம்பள உயர்வுப் பிரச்சினைக்கும் நாட்டிலே இன்றைக்கு இருக்கக் கூடிய வறுமை வாட்டத்தை ஒழிப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதைத்தான் நான் சொன்னேன். என். ஜி. ஓக்கள் சம்பளம் வேண்டாமென்று சொன்னால் உடனே வறுமையை ஒழித்துவிட முடியாது. அதற்கு வேறு பல திட்டங்களைப் போட்டாக வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நான் அந்தக் கருத்தைச் சொன்னேன். அவர்கள் சம்பளம் வேண்டாமென்று சொல்லி விட்டால் வறுமை ஒழிந்துவிடும் என்றால் அவர்களை ஒரு மாதம் பட்டினி இருக்கச் சொல்கிறேன், உண்ணாவிரதம் இருக்கச் சொல்கிறேன்.

ஆக 310 கோடி ரூபாயில் அவர்களுக்குக் கொடுப்பது கஷ்டம்தான். ஆனால் அவர்களும் உயிர்வாழத்தான் வேண்டும். மத்திய அரசிலே அதிகமாகப் பஞ்சப்படி கொடுக்கப்படுகிறதே அது மாதிரி மாநிலத்திலேயும் பஞ்சப்படி கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்பதிலே என்ன தவறு? கேரள அரசே கொடுக்கும்போது நாம் ஏன் கொடுக்க முடியாது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மீண்டும் அதை வற்புறுத்தியிருக்கிறார்கள். நான் ஒன்றை இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ரூ 310 கோடி வாங்குகிற அவர்கள் பட்டினி கிடந்தால், ஒரு மாதம் பட்டினி கிடந்தால்....

திரு. துரைமுருகன்: நீங்கள் ரூ. 310 கோடி என்று சொல்கிறீர்கள். என். ஜி. ஓ.க்கள் ரூ. 210 கோடி என்று சொல்கிறார்கள். இதைத் தெளிவுபடுத்திவிட்டால் எங்களுக்கு சௌகரியமாக இருக்கும்.

1978 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களுக்கு இந்தப் புள்ளி விவரத்தைத் தெரிந்துகொள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த புள்ளி விவரங்களை எப்போது வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளலாம். தரத் தயாராயிருக்கிறேன். அந்த வகையில் அவர்களுக்குக் குழப்பமே வேண்டாம். குறிப்பாக சில இடங்களில் அரசுக்கு வர வேண்டிய வருவாய் முழுதும் வந்துவிடுகிறதா என்ற கேள்வியை இங்கே வைத்தால் எவ்வளவு இடங்களில் வரி ஏய்ப்பு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். யார் யார் இதற்குக் காரணம் என்பதை இங்கே விளக்கிக்கொண்டு நேரத்தை போக்கிக்கொள்ள நான் விரும்பவில்லை என்றாலும் மீண்டும் சொல்கிறேன்.

25 காசு ஒரு நாளைக்குக் கிடைப்பதை வைத்துக் கொண்டு, அந்தப் பணத்தைக் கொண்டு எப்படிச் செயல்படுத்த முடியும் என்பதைப்பற்றி சிந்திக்கக்கூடிய திறமையுள்ளவர்கள் மாண்புமிகு திரு. சுப்பு அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் என்பதில் சந்தேகம் இல்லை. வாதத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தால் பதில் வந்துகொண்டே இருக்கும், அதனால் ப இருக்காது. உண்மையாகவே, உண்மைநிலையை உணர்ந்து அ எப்படிச் சீர்திருத்த வேண்டுமோ அதற்காக நாம் முயல வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் ஒன்றுபடுவோமேயானால் விளைவுகள் சரியாக இருக்குமே தவிர யார் பேசுவது பத்திரிகையில் எப்படி வருகிறது, யாருடைய பதிலை மக்கள் ரசித்துப் படிக்கப் போகிறார்கள், யாருக்கு அந்த வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்கிற எண்ணத்தில் இறங்கிவிடுவது பொருத்தமல்ல என்பது என் கருத்து. அந்த விவாதத்தில் நான் இறங்கமாட்டேன்.

திரு. துரைமுருகன்: அவர்கள் கேட்பது தப்பு, நான் சொல்வதுதான் உண்மை, இன்னின்ன வகையில் ரூ. 310 கோடியாகிறது என்று விளக்கிச் சொல்லிவிட்டால் பல பிரச்னைகள் முடிந்துவிடும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மீண்டும் சொல்கிறேன். இது என். ஜி. ஓ. க்கள் பிரச்னை அல்ல. அதை எழுப்பியதால் பேச வேண்டியிருக்கிறது. இந்த மானி கோரிக்கையில் அதுபற்றிய விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருப்பது கூடாது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பி ஒரு எண்ணத்தை வெளியே சொல்லும்போது, நான் முதல் என்ற நிலையில் இருக்கும்போது ஒன்றிரண்டு உண்மைகளையா சொல்லித் தீரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். மீண் கிறேன்.

பஞ்சப்படி கேட்கிருர்கள், மத்திய அரசு கொடுக்கிருர்கள், நீங்கள் கொடுக்கக் கூடாதா என்று கேட்கிருர்கள். நீங்கள் என்ருல் நீங்கள் நாங்கள் என்று வேருவேருக ஏன் பிரித்துக் கொள்ள வேண்டும் என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இந்த அரசு என்ருல், தமிழக அரசு என்ருல் இங்கே அமைச்சர்களாக இருக்கக்கூடிய நாங்கள் மட்டும் அமைச்சர்களாக இருந்து நடைபெறுகிற ஒரு அரசு அல்ல. நாலரைக் கோடி மக்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கிருர்கள். நாம் எல்லோரும் சேர்ந்து முடிவு எடுக்கிருேம்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதவியேற்க இங்கே வந்தபோது குறிப்பிட்டார்கள். நாங்கள் வருமானத்தில் இவ்வளவு எடுத்துக் கொண்டு மீதியைத் தருகிருேம், அதைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்று கூறி......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்ருல் அவ்வப் போது கேட்கலாமே தவிர இன்பர்மேஷன் அல்லது கேள்வி—பதில்கள் என்ருல் தீரவே தீராது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சப்படி மத்திய அரசாங்கம் கொடுக்கிறது, கேரளா கொடுக்கிறது நீங்கள் கொடுத்தால் என்ன என்ற கேள்வியை எழுப்புகிருர்கள். அது மிகப் பெரிய பிரச்னை என்பதையும், மாநாட்டில் அங்கே பேசப்போகிற விஷயமாகவும் அது அமைந்திருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் அந்தந்த மாநிலங்களிலிருந்து வரிகளை வாங்கி ஒரு விகிதாச்சாரத்தில் அந்தந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கிக் கொடுத்து மீதியை அங்கே கொடுக்கத்தான் முடிகிறது.

(பிற்பகல் 12-30)

ஆனுல் அந்த மாநிலங்கள் தங்கள் வருமானத்தைப் பெற்று தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிருர்கள். அப்படிப்பட்ட வருவாயைப் பெற்றுக்கொள்ள இயலாமல் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல், இப்படிப் பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற இயலாமல், இதற்கெல்லாம் மக்களிடம் நாம் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது, இந்த நிலைமைக்கு ஒரு விடிவுகாலம் வேண்டும் என்பதில் முடிவு வேண்டும் என்பதில், நியாயமான ஒரு முடிவைக் காணவேண்டும் என்பதில், தமிழக அரசு நிச்சயமாக அக்கறை கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கேரளாவில் கொடுக்கிருர்கள் என்ருல் அங்கு மதுவிலக்கு இல்லை என்பதை தயவு செய்து உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு எங்கெங்கு இருந்து எப்படியெல்லாம் வருவாய் வருகிறது என்பதையும்—வெளிநாட்டிலிருந்து, வெளி நாடுகளில் பணியாற்றுகின்றவர்களுடைய சில தொழில்கள் மூலம் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதையும் இதுபோன்ற விஷயங்களில் எல்லாம் நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன என்பதையும் அதே நேரத்தில் நமக்கு இருக்கின்ற தண்ணீர் பிரச்னை அவர்களுக்கு இல்லை. மது அங்கே தண்ணீராக இருக்கிறது என்பதையும் நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

நமக்குள்ள கஷ்டத்தில், நஷ்டத்தில், நமக்குப் பற்ருக்குறை பட்ஜெட்டாக இருக்கின்ற நேரத்தில், நமக்கு எவ்வளவோ தேவைகள் இருந்தாலும் அவைகளை எல்லாம் ஓராண்டுக் காலம், இரண்டு ஆண்டுக் காலம் விட்டுக்கொடுத்து நமது நிதிநிலையைச் சரி செய்த பிறகு, நமது உரிமைகளைக் கேட்போம் என்கின்ற நிலையில், நம்முடைய தகுதிக்கு ஏற்ப உத்திரவாதம் கொடுக்க முன்வந்தாலும் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு அலட்சியப்படுத்திவிடாது, ஒதுக்கிவைத்து விடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் தனிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அரசைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, ஒருவருக்குக் கொடுக்க வேண்டும். ஒருவருக்குக் கொடுக்க வேண்டாம் என்பது கிடையாது, நமக்குக் கிடைக்க வேண்டிய உதவி கிடைக்கவேண்டும் அதிலிருந்து இவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று பேசியிருந்தால் அது நலமாக இருந்திருக்கும். அப்படிப் பணம் கொடுக்க வேண்டியவர்களைக் கேட்காமல் இங்கு காவல் துறை மான்யக் கோரிக்கைமீது பேசியவர்கள் என். ஜி. ஓ. களுடைய பிரச்னையையும் சேர்த்துக் கொண்டு வந்து பேசியதால் தான் இந்த அளவுக்குப் பேச வேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பஞ்சப்படி யார் யாரோ கொடுக்கிருர்கள். நாம் ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லுகின்ற பொழுது, அதற்கேற்ற வகையில் நமக்கு வேண்டிய நிதிவசதியை மத்திய அரசு தரவேண்டுமென்று இந்த அவையிலுள்ளவர்கள் பேசியிருப்பார்களேயானுல், அது அவர்களுடைய உள்ளத்திலிருந்து வருகின்ற உணர்ச்சி வார்த்தைகளாக வந்திருக்கிறது என்று எடுத்துக் கொண்டிருப்பேன். அதற்கு நன்றியும் கூறியிருப்பேன்.

[மாண்புமிகு பேரவைத்தலைவர்-தலைமை]

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் மாநிலப் பிரச்னைகளில் எந்த அளவுக்கு இருக்கிருர்கள் என்பதில் ... ஐயமில்லை.. இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் எண்ணிப் ...ற பொழுது, "சட்டியில் இருந்தால்தானே அகப்பை

யில் வரும் '' என்று பெரியவர்கள் சொல்வது போல், இருந்தால் தானே கொடுக்க முடியும், இல்லாததை எங்கிருந்து கொடுக்க முடியும் ? ஒரு தொலைபேசி கூட வைக்க முடியவில்லையா என்று கூட கேட்டார்கள் இதற்கெல்லாம்....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தொலைபேசி விஷயத்தைப் பற்றி இரண்டு மூன்று தடவை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதால் அவர்களுக்கு ஒரு விளக்கத்தை கூற விரும்புகிறேன். ஒரு தொலைபேசி கூட வைக்கவில்லையே என்ற கருத்தை நான் தெரிவிக்கவில்லை. 75-லிருந்து தொலைபேசிகளின் எண்ணிக்கை தான் இப்போதும் இருக்கிறது. இதில் முன்னேற்றம் காணவில்லையே என்றுதான் நான் கூறினேன். அவர்கள் சொன்னார்கள், அதிக அளவு பண வசதியில்லாததால் தான் வைக்க முடியவில்லை என்று சொன்னார்கள். 75-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில் 26 கோடியாக இருந்த மானியம் இப்போது 33 கோடியாகக் கோரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதிலிருந்தே எந்த அளவுக்கு செலவு உயர்ந்திருக்கிறது என்பதை முன்னாள் முதல்வர் அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நமக்கு போகப் போக சூழ்நிலைகள் மாற, மாற செலவுகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும், குறிப்பாக காவல்துறையில் பணியாற்றுகின்றவர்கள் ஒரு நாளைக்கு $2\frac{1}{4}$ ரூபாய் மட்டுமே பெறுகிறார்கள் என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் பேசினார்கள் என்று நினைக்கிறேன்....

திரு. ரா. உமாநாத் : வாராந்திர விடுமுறை நாட்களில் வேலை செய்தால் வேலை செய்கின்ற அந்த முழு நாளுக்கும் 2 ரூபாய் தான் ''பேட்டா'' கொடுக்கப்படுகிறது, இதற்கு மேலாக ஸீலிங் 3 ரூபாய்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நன்றி, அதைப்பற்றி நிச்சயமாக கவனிப்போம் என்பதையும், காவல் துறையிலுள்ளவர்கள் மகிழும் வண்ணம் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து எந்த அளவுக்கு ஈடுசெய்ய முடியுமோ அந்த அளவுக்கு கொடுப்பதற்கு முயலுகின்ற வகையில்—நாங்கள் நிச்சயமாக கடமையாற்றி எங்கள் எண்ணத்தைப் பிரதிபலிக்கச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, காவல்துறையை எப்படி ஒழுங்குபடுத்துவது என்பதிலும் நாம் அக்கறை காட்ட வேண்டியிருக்கிறது. சில புதிய உத்தியோகங்களை, வேலைக்குத் தகுதியிருந்த பதவிகளை ஏற்படுத்தக் கூடாதா என்ற எண்ணத்தை இங்கே வெளியிட்டார்கள். அதைப்பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், இதைச் சொல்வதற்குக் காரணம்

தேவையும் அதிகமாகி இருக்கின்றது என்பதையும், தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லப்படுகிறதென்றாலும், குறைகள் இருக்கிறது என்பதையும், அந்தக் குறைகளை மாற்றுவதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் இந்த அளவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், ஒரு அரசு ஆட்சி செய்யும்போது, சட்டத்தின் அடிப்படையில் சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ள விளக்கப்படி, அந்தந்த இலாகாக்கள் என்று வைத்துக் கொண்டாலும், இந்த இந்தப் பிரிவுகள் என்று வைத்துக்கொண்டாலும் சட்டத்தின் அடிப்படையில் மக்கள் வாழ்வதற்குத் தகுந்த பாதுகாப்பும், தகுந்த உத்திரவாதமும் தரவேண்டியது ஒரு அரசினுடைய கடமையாகும்.

சட்டத்தை இங்கே இருக்கின்ற நாம் அனைவரும் நிறைவேற்றுகிறோம். அந்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, அதைச் செயல்படுத்துவதற்கு காவல்துறையிடம் நாம் ஒப்படைக்கிறோம். அந்தக் காவல்துறை கண்டுபிடிக்கின்ற குற்றங்கள், அப்படி அவர்கள் கண்டுபிடித்த பிறகு, அவர்களைக் கொண்டுபோய் வழக்கு மன்றத்திலே நிறுத்தி வைத்து, அங்கே அவர்கள் விளக்கம் தர வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தனைபேருக்கும் இங்கே இயற்றப்பட்ட சட்டத்தின்படி தான் தீர்ப்பு வழங்கப்படுகிறது. நீதிபதியின் கருத்துப்படி என்பதை நாம் உணர்கிறோம்.

அந்த வகையில் காவல்துறையிலே இருக்கின்றவர்கள் சட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்துவதற்குப் பணியாற்றுவதற்காக அவர்களுக்கு இத்தனை மணி நேரம் வேலை இருக்க வேண்டுமென்று கோரிக்கை இங்கே எடுத்து வைக்கப்பட்டது. 8 மணி நேர வேலை என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை சப்-இன்ஸ்பெக்டர் வரையில், இந்த 8 மணி நேர வேலை செய்வது என்கின்ற நிலைமையைக் கொண்டு வருவதென்பதிலே இந்த அரசு முன் உதாரணமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த அளவில் செயல்பட்டு வருகின்றபோது, இதனால் என்னென்ன தொல்லைகள் அல்லது நல்லவைகள் ஏற்படுகின்றன என்பதைப் பரிசீலித்து......

திரு. ரா. உமாநாத் : கீழே இருந்து சப்-இன்ஸ்பெக்டர் வரையிலா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆம். மேலேயிருந்து நாங்கள் வேறு காரணத்திற்காகத்தான் வருவோம். இந்தக் காரணங்களில் நாங்கள் கீழே இருந்துதான் ஆரம்பிக்கப்

படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வகையில் நாங்கள் இதை அமுலாக்க இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களிடம்தான் மறுபடியும் நான் வரவேண்டியிருக்கிறது. அவர்கள் சொன்னார்கள் சட்ட சபை செத்துவிட்டது என்று சொன்னவர்கள், இங்கே இன்று உட்கார்ந்திருக்கிறார்கள். எப்படி என்ற சந்தேகத்தைக் கிளப்பவது போல் அவர்கள் கேட்டார்கள். அதோடு அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நான் கிளற வேண்டாம் என்றுதான் எண்ணினேன். இதைப் பற்றிப் பேச வேண்டாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பழைய நினைவுகளை மீண்டும் அவர்கள் கிளறிவிட்டு விட்டார்கள். நாம் இப்போது சுமுகமான சூழ்நிலையிலே, எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்திலே பழைய நினைவுகளை நினைவுபடுத்தி, பதில் சொல்ல வேண்டிய கட்டத்திற்கு என்னை ஆளாக்கி விட்டதற்கு, அந்தப் பொறுப்பை மாண்புமிகு சுப்பு அவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், அவர்கள் சொன்னது குறிப்பேட்டிலே இருக்கிறது. அப்படி அது குறிப்பேட்டிலே இருக்கின்ற காரணத்தினால், அதைப்பற்றி விளக்குவது என்னுடைய கடமை. அப்போதே அவர்களில் யாராவது எழுந்து இந்தக் குறிப்பு இருக்கக் கூடாது என்று சொல்லியிருந்தால், இப்போது அதைப்பற்றி நான் பேசப் போவதில்லை. ஆனால் நடந்தது என்ன? ஏன் அப்படிச் சொன்னோம். நாங்கள் அப்போது இந்த எதிர் வரிசையிலே உட்கார்ந்திருந்தோம். நான் மீண்டும் நினைவு படுத்துகிறேன் திரு. சுப்பு அவர்களுக்கு, இங்கே நடந்த நிலை என்ன என்பதைப்பற்றி. ஒரு பேரவைத் தலைவர் இருந்தார். இங்கே நாற்காலி போடப்பட்டு, இன்னொரு தலைவர் உட்கார வைக்கப்பட்டார்.

(பிற்பகல் 12-40)

அவை முன்னவர் ஒரு தீர்மானத்தைப் படித்தார்: தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றெல்லாம் சொல்லி—சபாநாயகர் இருப்பிடத்தில் இருக்கும்போதே இதே சட்ட மன்றத்தில் ஒரு நாற்காலியைப் போட்டு இன்னொரு சபாநாயகரை உட்கார வைத்து, பலவந்தமாக ஒருவர் வந்து மணியை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் வைத்தது, இரு சபாநாயகர்கள் இருந்தது—இதையெல்லாம் மறந்து விடுவதற்கில்லை. இவைகளை எல்லாம் பார்த்த பிறகு நான் வெளியிலே பேசியது 'சட்ட மன்றம் செத்து விட்டது' என்று.

இன்று உயிரோடு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் எது பேசினாலும் அது இடம் பெறுகிறது: நீங்கள் ஆத்திரப்பட்டு எது பேசினாலும் யார் பேசினாலும் கூடுமானவரையில் ஒரு நல்ல முடிவு விவாதித்து எடுக்க வேண்டுமென்று வந்திருக்கிற காரணத்தால் ஆத்திரப்பட்டு பேசுகிற வார்த்தைகளை, தவறான வார்த்தைகளை நீக்கி விடுகிறோம். பலரும் தவறான வார்த்தைகள் வந்து விடக் கூடாது என்று யோசித்துப் பேசுகிறார்கள். நான் சென்ற முறையே பார்த்தேன். இப்படிப் பேசத் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் ஏன் அப்படிப் பேசினார் என்று வேதனையாக இருந்தது. இந்த முறை பேசினார்—ஆத்திரம் வருவதற்கில்லை என்று சொன்னாலும் சில குழப்பங்களை ஏற்படுத்தினார்கள். அது என்ன என்று அதைக் கிளறத் தயாராக இல்லை.

குழப்பம் ஏற்பட்டது, அது எந்த உச்ச கட்டத்திற்குச் சென்றது என்பதையும் எத்தனை முறை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து தன் வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதையும், தேவையில்லாமல் அவர் மீது ,அது சுமத்தப்பட்டது என்பதையும் எண்ணிப் பார்க்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் குறிப்பேட்டில் இல்லாமல் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசையே தவிர இவையெல்லாம் இருக்க வேண்டுமென்பதல்ல. இந்த மாமன்றத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றி மற்றவர்கள் விமர்சனம் செய்யக்கூடிய அளவுக்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய ஆசை. பழி சொல்லி, குற்றம் சொல்லி, ஒருவரையொருவர் நிந்தித்து அவை பத்திரிகையில் வந்து, அவர் அதைப் பேசினார். இவர் இதைப் பேசினார் என்று சொல்லிச் சிரிப்பதற்கு, கேலி செய்வதற்கு நம்மை நாமே ஆளாக்கிக் கொள்வதில் பயன் இல்லை என்பதுதான் என்னுடைய உண்மையான நோக்கமாகும்.

நான் குறிப்பிட விரும்புகிறேன். எவ்வளவு கேவலமாகப் பேசுகிறார்கள் என்பதை முன்னாள் முதலமைச்சர் இன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடம் காண்பிக்கிறேன். எத்தனை பேர்களுடைய பேச்சுக்கள்—வெளியே எவ்வளவு கேவலமாக அமைச்சர்களைப் பற்றியும், அதேபோல் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் பற்றியும்—எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்—மேடையில் பேசப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. பேசப்படுவது—அண்ணா அவர்கள் சொன்னதுபோல் கொள்கை பற்றிய விளக்கமாக இருந்தால் பிரச்சினை இல்லை. தனிப்பட்டவர்கள் பற்றி, அவர்களுடைய குடும்பத்தைப் பற்றிப் பேசப்படுகின்றன, பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன. அதைப்

பார்த்து நாங்களும் மகிழ்கிறோம். நீங்களும் மகிழ்கிறீர்கள் என்றால் நிச்சயமாக நாட்டில் நல்லெண்ணத்தை வளர்க்க இடம் அளிக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, வேறு கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, தமிழகத்தில் அதற்கு இடம் இல்லை என்ற சூழ்நிலை உருவானால்தான் நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பொறுப்புக்கு நம்மைத் தகுதி படைத்தவர்களாக மக்கள் மதிப்பார்கள். அந்தஸ்தும் தகுதியும் உள்ளவர்களாக முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முன்பே குறிப்பிட்டேன்—அனைத்துக் கட்சித் தலைவர்களும் உட்கார்ந்து இதைப்பற்றிப் பேசி முடிவு எடுத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று சொல்லியிருக்கிறேன்

<u>திரு. ப. உ. சண்முகம் :</u> முதல்வர் சொன்ன அந்தக் கருத்துக்கு முழு உடன்பாடு என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையிலேயே நாம் ஒரு முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும். இதுபோல் ஒருவரையொருவர் தரக் குறைவாகப் பேசிக் கொள்வதையோ, எழுதுவதையோ அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆதரிக்கக் கூடாது. அப்படி எழுதாது அந்தந்தக் கட்சித் தலைவர்கள் தடுத்து நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு முடிவை எடுப்போம் என்று சபதமாகவே கொண்டு நாம் முடிவு எடுப்போம். அதற்கு முதல்வர் அவர்கள் துணைபுரிய வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு வேண்டுகோள். அதேபோல் மன்றத்தலைவருக்கும்—உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா:</u> அதைச் செய்ய வேண்டியது தலைவர். அந்தக் காரியத்தைச் செய்ய மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நாங்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தருகிறோம்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர்களே, இங்கு எதிர்க் கட்சித் தலைவர்கள் சில 'பிரச்சினைகளைக் குறிப்பிட்டாலும் நான் மாண்புமிகு ப. உ. சண்முகனுக்குச் சொன்னதுபோல் இதை முன் உதாரணமாக்கி, அவர் சொன்ன சில கருத்துக்களுக்கு இங்கே விளக்கம் சொல்லாமல் நான் வேறு பிரச்னைகளுக்குச் செல்ல விரும்புகிறேன்.

மாணவர்களையும் தொழிலாளர்களையும் எப்படிக் காவல் துறை அணுக வேண்டும் என்பதைப்பற்றி இங்கே எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கின்ற பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தலைவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் அவரைச்

சேர்ந்தவர்களும் சி.பி.ஐ. யைச் சேர்ந்தவர்களும் குறிப்பிட்டபோது பாடியை ஒரு முன்னுதாரணமாக்கிக் கொள்ள மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் முன் வந்தார்கள்.

இந்த முதல்வர், அதாவது இந்த அமைச்சரவை, இந்த அரசு தொழிலாளர்களைப் பற்றிய கொள்கையை வெளியே சொல்லியிருக்கிறது, அது வரவேற்கக்கூடியது. ஆனால் சில இடங்களில் அதற்கு நேர்மாறாகச் செயல்படுகிறது என்று குற்றஞ்சாட்டினார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மனிதன் தனது பசிக்கு உணவு வேண்டுமென்று கேட்கிற நிலையில் இருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை, பசியை தீர்த்துக் கொள்வதற்காக, உணவிற்காக அவன் அலையும்பொழுது அவன் வேறு வழியின்றி பிச்சை எடுக்கக்கூடிய நிலைக்கே வந்துவிடும் மன நிலைக்கு ஆளாகி விடுகிறான் என்றால் அவனைப் பார்த்து அனுதாபப்பட வேண்டுமே தவிர ஆத்திரப்படக் கூடாது என்றுதான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால், பிச்சை எடுக்கக்கூடிய நிலைமை இந்த நாட்டிலே இருக்கக் கூடாது என்பதில் யாருக்கும் மாறான கருத்து இருக்க முடியாது. பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு இல்லம் வேண்டுமென்று முன்னால் இருந்த அரசு அக்கறை காட்டியது என்றும் பிச்சை எடுக்கிறவர்கள் ஒத்துழைக்க முன்வரத் தயாராக இல்லை என்பதையும் கண்டோம்.

அது மட்டுமல்ல, அதிலே என்னென்ன இடையூறுகள், தொல்லைகள், குற்றச் சாட்டுகள் எல்லாம் எழுப்பப்பட்டன என்பது நமக்குத் தெரியும். ஆனால் நோக்கம் என்ன என்பதை நினைத்துப் பார்க்கும் போது பாடியைப் பொறுத்த வரையில் நான் சில கருத்துக்களை மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன், அந்த நிலையில் அவரே இந்த முதலமைச்சர் பதவியிலே இருந்திருந்தாலும் நான் செய்ததைத் தவிர வேறு வகையிலே அவர் அதைச் சந்தித்து இருக்க முடியாது என்பதை அவர் உணர முடியும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

ஆனால் அதையே ஒரு உதாரணமாகவும் அடித்தளமாகவும் அமைத்துக் கொண்டு அந்த வழியிலே செயல்படும் என்ற நிலையில் அரசு செயல்படுமானால், நீங்கள் சொல்கிறீர்களே, தொழிலாளர்களுடைய நல்ல எண்ணத்தை நீங்கள் இழக்க வேண்டிவரும் என்று, அதை நாங்கள் உணருகிறோம்.

அது மட்டுமல்ல, தொழிலாளர்களை பயமுறுத்துவதாலும் அவர்களைச் சூழ்நிலைக் கைதிகளாக ஆக்குவதாலும் அவர்களை அடக்கிவிட முடியாது என்பதை இந்த மாமன்றம் பல்வேறு நேரங்களிலே சந்தித்து இருக்கிறது. அது தமிழகத்திலே முழுமையாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பாடி முழுவதையும் நான் உதாரணமாகக் கூறவில்லை. முதல் கட்டத்தில் வேறு முறை இருந்தது. எனக்கே தெரியும், 144 உத்தரவு போடக் கூடாது என்று. இரவு 12 மணிக்கு மேலே நீங்கள் உத்தரவு போட்டீர்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இரண்டாவது கட்டத்தில் போலீஸ் ஒருதலைப் பட்சமாகத் தலையிட்டு பகிரங்கமாக இரண்டு டி.எஸ்.பி.க்கள் வெட்டினதை அவர்கள் பார்த்தும், கைது செய்யவில்லையே என்று சொன்னேனே தவிர, முழுமையாக பாடி டிஸ்ப்யூட்டைப் பற்றி நான் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தொடக்கத்தில், தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ளதுபோல் என்ன கொள்கையை வெளியிட்டேனோ அதைப்போல் செயல்பட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

(பிற்பகல் 12-50)

பிறகு, காவல்துறையினர் தலையிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி மிகப் பெரிய விளக்கத்தைச் சொல்லி நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டு போவதற்கு வாய்ப்பு இல்லை என்பதால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

அங்கே உருவாக்கப்படுகின்ற பொருள்கள் நிறுத்தப்படுமானால் இந்தியா முழுமையும் எத்தனை தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலையிழக்க நேரிட்டிருக்கும், மூடப்பட நேரிட்டிருக்கும் என்பதை தயவு செய்து நாம் மறந்து விடக் கூடாது. அந்த நிலையில் ஒரு சிலருக்கு நியாயம் இல்லை என்கிற உண்மையான காரணத்தைச் சொல்ல ஆதாரம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு பிரச்னைகளை எண்ணிப் பார்த்து அங்கே பல இடங்களில், டெல்லியில், அதுபோன்று மற்ற மாநிலங்களில் பல தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டிய அவசியமும், அதனால் பல்லாயிரக் கணக்கானவர் வேலையிழக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கும் என்ற நிலைமையை எண்ணிப் பார்த்தால் எப்படியாவது அந்தப் பொருட்கள் உற்பத்தியாக வேண்டுமென்ற அவசியத்தில் சில கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குக் காவல்துறை தள்ளப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் உணர்வார்கள்.

ஆகவே, அதை இன்னும் விளக்கிக் கொண்டு செல்ல நான் விரும்பவில்லை. அந்த வகையில் அரசு ஒட்டுமொத்தமான நன்மையை எண்ணி அந்தக் காரியத்தில் காவல்துறையைப் பயன்படுத்தியதே தவிர, வேண்டுமென்றே பழி வாங்க வேண்டும், தொழிற்சங்க அமைப்பு முறையே இல்லாமல் செய்து விட வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாளிகள் அடங்கிய ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது காவல் துறையினர் நாளைக்கு அங்கே இருக்க மாட்டார்கள், வாபஸ் பெறப்படுவார்கள் என்ற எச்சரிக்கையைத் தெரிவித்ததையும், டெல்லியிலிருந்து எப்படிப்பட்ட நிலைமைகள் தெரிவிக்கப்பட்டன என்பதையும், இத்தகைய தொழிற்சாலைகளில் இராணுவத்திற்குத் தேவையான அவசியப் பண்டங்கள் உற்பத்தியாவது எப்படித் தடுக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது, பெரிய நன்மைக்காக சிறிய கெடுதலைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது என்ற நிலை. அதனால் அதைப் பிரச்னையாக்கி இதுதான் இந்த அரசின் தொழிலாளர் கொள்கை என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரே சொன்னார், பிச்சைக்காரர்களாகப் பிறப்பது எவ்வளவோ நல்லது, அவர்களுக்கு இருக்கின்ற நல்ல வீடுகளைவிட மோசமாகக் காவலர்கள் இருக்கும் இடங்கள் உள்ளன என்று சொன்னார்கள். அவை கட்டப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதையும், அதற்காக மீண்டும் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது தொடர்ந்து நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கட்டிடங்களைத் திறந்து வைக்க தொழிலாளர்களை ஏற்பாடு செய்துவிட்டு நான் போனேன் என்பதைப் பத்திரிகை வாயிலாகவாவது இங்கேயிருப்பவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்த வகையில் அந்தப் பணி தொடர்ந்து நடைபெறும்.

தண்ணீர் இல்லை, விளக்குகள் இல்லை, மீட்டர் தனியாக வைக்க வேண்டுமென்ற பிரச்னைகளிலெல்லாம் நிதி வசதிக்கேற்ப தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் கண்டிப்பாக, உடனடியாகக் கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

முன்பு சொன்னதைப்போல வசதிகள், வாய்ப்புகள், நம்முடைய தேவைகள் அதிகப்படும்பொழுது பிரச்னைகள் உருவாகின்றன. அதற்கேற்ப நாம் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

மாணவர்களைப் பொறுத்த வரையில் நான் முழுக்க முழுக்க என்னுடைய கருத்துக்களைத் தொடக்க காலத்திலிருந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். எப்படியானாலும் அவர்கள் கல்வி கற்பதற்கான வாய்ப்பை அவர்களுக்குத் தந்தாக வேண்டும் என்பது எங்கள் கொள்கை. அதற்காக, ஒரு கல்லூரியில் இருக்கும் மாணவர்கள் தவறு செய்து விட்டார்கள் என்று வழக்கு போடப்பட்ட போதுகூட நான் விதிவிலக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டு அவர்கள் பரீட்சை எழுதவும், கற்றுக் கொள்ளவும் வாய்ப்பு இருக்க வேண்டும், வழக்கு நடந்து கொண்டிருக்கட்டும்,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

அதைப்பற்றிக் கவலையில்லை. எப்பொழுதாவது முடியட்டும், எப்பொழுது முடிகிறது, முடிவுக்குப் பிறகு என்ன ஆகப் போகிறது என்று இப்பொழுது கவலையில்லை. அவர்கள் படிக்கட்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறேன், அதன்படி செயல்பட்டிருக்கிறோம்.

ஆகவே, மாணவர்களை சட்டத்தைக் கொண்டு, காவல் துறையைக் கொண்டு அடக்கி விடவேண்டுமென்ற ஆசை கொஞ்சமும் இந்த அரசுக்குக் கிடையாது. மாணவர்கள் கல்வி பயில வேண்டும். சமீபத்தில்கூட மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களைச் சந்தித்துவிட்டு வந்த பிறகு நான் பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். மாணவர்களைக் கல்விக் கூடத்திற்குப் போக வேண்டாமென்று சொல்வதை, அதைச் சொல்பவர்கள் எவ்வளவு பெரியவர்களானாலும் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. கல்வி கற்றுக் கொள்வதற்கு வசதியும் வாய்ப்பும் தருவதால் இந்த நாட்டிற்கு எவ்வளவு நன்மைகள் என்பதில் எனக்கிருக்கின்ற அக்கறை மற்றவர்களைவிட அதிகம் என்று கூடச் சொல்லவில்லை—மற்றவர்களைவிடக் குறைந்தது அல்ல என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த வகையில் நான் அதைத் திட்டவட்டமாக சொல்கிறேன். எந்தப் பிரச்னையானாலும், மாணவர்கள் அவர்களுக்கு என்று யாராவது ஒருவரை நியமித்துப் பேசலாம். விரிவாகப் பிரச்னையைப்பற்றி விவாதிக்கலாம், அதற்காக யாரும் கல்லூரிக்குப் போகாமல், படிக்காமல் வெளியே வந்து தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏற்படுகின்ற போராட்டமாக, அமைதியைக் குலைக்கின்ற சூழ்நிலையை யார் செய்தாலும் இந்த மாமன்றம் அதை ஒத்துக் கொள்ளாது என்று தெரிந்தாலும், சட்டமன்றம் நடைபெறாத காலத்தில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்று நிரந்தரமான ஏற்பாட்டினைப் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

பஸ்களிலே பயணம் செய்கிற பொதுமக்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டியது ஒவ்வொரு அரசினுடைய கடமையாகும் என்பதை மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் எதிர்க் கட்சித் தலைவரும், இப்படிப்பட்ட பிரச்னை வந்தபோது என்ன பேசினார்கள் என்ற குறிப்பை நான் வைத்திருக்கிறேன். இந்த மன்றத்திலே அவர் 1969 முதல் 1975 வரையில் என்ன பேசினார்கள், எந்தெந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டது என்பதை எல்லாம் பிரதாபசந்திரன் கொலையை - நான் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைப் பற்றிய குறிப்புக்களை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதைக் காட்டி இதிலே குற்றம் கூற விரும்பவில்லை. அதைத்தானே நீங்களும் செய்கிறீர்கள் என்று ஒருவர் கேட்டார். அதற்குப் பின்னாலே வருகிறேன்.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையில் மாணவர்கள் எந்தப் பிரச்னையானாலும், அவர்கள் வன்முறையிலே ஈடுபடுவதற்கு யாரும் அனுமதி வழங்கக் கூடாது, அல்லது அவர்களுக்கு அந்த எண்ணம் தோன்றுவதற்கு உரிய பேச்சைக்கூட பேசாமல் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், அது தொழிலாளர் நலன் கருதி கட்சி அமைத்திருப்பவர்களானாலும், உழைக்கும் வர்க்கத்திற்குப் பாதுகாப்பு என்று சொல்பவர்களானாலும், மாணவர்களுக்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று சொல்பவர்களானாலும், அத்தனை பேர்களும் இதற்கு அவர்கள் நிச்சயமாக முன்வந்து உதவி செய்ய வேண்டும் என்று கைகூப்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனெனில், எதிர்காலத்திலே நாம் இளைஞர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்கிற பணிக்குச் சொந்தக்காரர்களாக இந்த மன்றத்திலே இருக்கிற நம்முடைய குழந்தைகள் இல்லை என்றாலும், யாருடைய குழந்தைகளானாலும், குழந்தைகள் படிப்பிலே ஊக்கம் காட்டி, கல்வி முறையிலே தேர்ச்சி பெற்று, அறிவியலில் முன்னோடியாக இருந்து, வெளிநாட்டு விஞ்ஞானிகளுடன் போட்டியிடுகின்ற அளவுக்கு அறிவியலில் தகுதி பெற வேண்டுமென்பதிலே அனைவருக்கும் கருத்துண்டு. அதைச் சொல்லி, இந்த மாணவர்கள் கல்லூரிகளுக்கு, பள்ளிக் கூடங்களுக்கு, பல்கலைக் கழகங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு எந்தவித குறுக்கீடும் இல்லாமல் சென்று வர வேண்டிய சூழ்நிலை உருவாக வேண்டும்.

அதை அவர்களுக்குச் சொல்லிக்காட்ட வேண்டும். மாணவர்களே நீங்கள் கல்லூரிகளுக்குச் செல்லுங்கள், உங்கள் போராட்டத்தை எங்களிடம் விட்டு விடுங்கள், நாங்கள் கவனித்துக் கொள்கிறோம் என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்போல, மாணவர்களே, நீங்கள் கல்லூரிக்குச் செல்லுங்கள், உங்கள் பிரச்னைகள் எவ்வளவு இருந்தாலும் உங்கள் தலைவர்களிடம் விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக் கொள்வேன். ஏனெனில், மாணவர்களை நம்பித்தான், அவர்கள் வளருகின்ற விதத்தைப் பொறுத்துத்தான், அவர்கள் ஆற்றுகின்ற தொழில்களைப் பொறுத்துத்தான் எதிர்காலம் இருக்கிறது.

இங்கே பேசினார்கள், எத்தனையோ கஷ்டங்களைப்பற்றி பேசினார்கள். எதை எதையோ சொல்லுகின்றோம், அப்படி இருந்தாலும் அத்தனையையும் நிறைவேற்ற வேண்டியவர்கள் இன்றிருக்கிற நாம் இல்லை, நாளைக்கு வரவிருக்கின்ற மாணவர்கள், இளைஞர்கள்தான் என்பதை நினைவிலே வைத்து இருக்கிறோம்.

அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், எங்களுக்குப் பிறகு இந்த நாட்டை ஆள வேண்டியவர்கள் இளைஞர்கள்தான், ஆகவே, நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். இந்தக் கல்விக்கு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

இணைப்பூறு ஏற்பட்டால், நாம் பெறுகிற திராவிட நாட்டை யாரிடம் கொடுப்பது என்று கேட்டார்கள். திராவிட நாட்டுப் பிரிவினை கைவிடப்பட்டு விட்டது. இப்போது இல்லை என்றாலும், இந்த நாட்டை தமிழ்நாட்டை—இளைஞர்கள் கையிலே ஒப்படைக்க இருப்பதால் அந்த இளைஞர்கள் நல்ல கல்வி அறிவு உடையவர்களாக இருந்தாக வேண்டும் என்பதில் எனக்கு நிறைய ஆசை இருக்கிறது. அந்த ஆசை இருப்பவர்கள் மாணவர்களைப் போராட்டத்திலே ஈடுபடுத்துவது பொருத்தம் அல்ல, நியாயமும் அல்ல.

(பிற்பகல் 1-00)

பொதுமக்கள் பஸ்ஸில் செல்வதற்குப் பயப்படுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டால் அங்கே ஒழுங்கு இல்லை, சட்டம் இல்லை. அந்த சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக காவல் துறை பாது காவல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோது, மாணவர்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். எல்லா மாணவர்களையும் நான் சொல்லவில்லை. மாணவர்கள் என்ற பெயரால் சிலர் அதிலே வந்து விடுகிறார்கள். அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்து விடுகிறார்கள். அதேபோல்தான் தொழிலாளர்களும். தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் அத்தனை பேரும் கொலைகாரர்கள் என்று நான் சொல்லவில்லை. அப்படி யாராவது சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

பிரதாப்சந்திரன் உருவம் இன்னும் என் மனதில் இருக்கிறது. அவர் எப்படிக் கொலை செய்யப்பட்டார், யார் செய்தார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் அறிந்து இருப்பார்கள். யாராக இருந்தாலும் நாட்டின் சட்டத்தை மதிக்காமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது நிச்சயமாக நாட்டுக்குச் செய்யும் உதவியாக முடியாது. பஸ்களைக் கொளுத்துவதும், பஸ்களின் மீது கல்லெறிவதும் என்று சொல்கிறபோது காவல் துறையினர் அதைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. இங்கே பேசுகிற நேரத்தில் காவல் துறையினருக்கு 8 மணி நேரம் வேலை வேண்டும், பதவி உயர்வு வேண்டும், இன்னும் பிற வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்கிற நேரத்தில் மாணவர்கள் பெயரால், தொழிலாளர்கள் பெயரால் தொல்லைகள் செய்ய முற்படும்போது அதைக் காவல் துறை கட்டாயம் தடுக்க வேண்டும். ஒரு பெரிய கூட்டத்தில் கல் எறிந்தால் அது யார்மீது விழுகிறது என்று தெரியாது. சில கூட்டங்களில் என்னைப் பார்க்க வருகிற மக்கள் மேலே வந்து விழுகிறார்கள். அப்போது பின்னால் இருக்கிற மக்கள் தள்ளுவதால் தான் முன்னாலே இருப்பவர்கள் வந்து விழுகிறார்கள் என்று தெரிந்தாலும், முன்னாலே இருப்பவர்களைத்தான் தள்ளுகிறார்கள். ஆகவே, இதனால் தவறு செய்யாதவர்கள்கூடப்

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்த நிலைமை தவிர்க்கப்பட குற்றம் செய்பவர்கள் தடுக்கப்படும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இங்கே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர் அணி வைத்துக் கொண்டு இருக்கிறது, அங்கே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார்கள். நான் ஒரு வேளை கட்சியின் சார்பாகச் சொல்லக் கூடாது. இருந்தாலும், சொல்கிறேன், கட்டுப்பாடு வேண்டும் என்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு இருக்கிறதே தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல என்பதையும், இப்போது நடந்த வேலை நிறுத்தத்தில் அந்தத் தொண்டர் அணியைச் சேர்ந்த பலர் வேலை செய்து இருக்கிறார்கள் என்பதையும் புள்ளி விவரங்களோடு, அவர்கள் பெயரை எழுதி வாங்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அதை விசாரித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அதை யார் செய்தார்கள், ஏன் செய்தார்கள் அங்கே என்ன நடந்தது என்பதும் விசாரிக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது, அப்படிப்பட்டவர்கள் மீது நிச்சயமாக யாராக இருந்தாலும் இந்த அரசு வழக்குத் தொடரும், நீதிமன்றத்தில் தகுந்த தண்டனை கொடுக்கும்வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், ஒரு வேளை எதிர்க்கட்சித் தலைவருக்கு அதைக்காண சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கலாம். விடியற்காலை 4 மணி முதல் ஒரு அணி வகுப்பு, ஒரு கட்சியின் தொண்டர் படை அணி வகுப்பு, கடற்கரையில் நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடை செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி நான் சொல்வதால் அவர்கள் குற்றம் செய்தார்கள் என்று சொல்ல ஆதாரம் இல்லை.

ஏதாவது ஒரு வகையில் எதிர்க் கட்சிகளும் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன, தொண்டர் அணி நடத்திக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எப்படியெல்லாம் நடைபெறுகிறது என்று பார்க்கிறபோது ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தொண்டர் படை இருக்கிறது. ஏதாவது தவறு நடக்குமானால் அதை யாரும் கண்டிக்கலாம், யாரும் குற்றம் என்று எடுத்துச் சொல்லலாம். இந்த அரசு அந்த வகையில் யாராக இருந்தாலும், கொஞ்சம் கூட தயவுத் தாட்சண்யம் காட்டாது நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

லாரிகளைப் பற்றிப் பேசினார்கள். எங்களுக்கு லாரி கோட்டா கிடைக்கவில்லை. ஜனதாக் கட்சிக்குக் கொடுத்தார்கள் என்று சொன்னவுடனே, ஜனதா கட்சி மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் காங்கிரஸ்காரர்கள் பயன்படுத்தினார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குள்ளே பேசி முடிவு செய்து கொள்கிறார்களே தவிர என்ன நடந்தது என்று ஒரு வார்த்தை என்னைக்கேட்டு இருக்கலாம், கேட்கவில்லை. ஆனால் நானே பதில் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் குறை சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நாங்கள் அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் டி.ஐ.ஜி-க்கும் கடிதம் எழுதியிருக்கிறோம், என்ன நடந்தது என்று கேட்டிருக்கிறோம். தகவல் வந்த பிறகு எந்தெந்த மாநாட்டுக்கு யார் யார் ஊர்வலம் வந்தார்கள் என்று பார்த்து அவர்கள் செய்த குற்றத்திற்கேற்ப எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள்பற்றி ஆலோசித்து, தக்க நடவடிக்கை எடுப்போம். என்ன முடிவு எடுப்போம் என்றும், என்ன செய்திருக்கிறோம் என்றும் இந்த மன்றத்திலே வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்னொன்றையும் என்றவுடனே நேரமாகிவிட்டதே என்று எல்லோரும் கவலையோடு பார்க்கிறார்கள். அதை நான் உணர்கிறேன். அவர்கள் எல்லோரும் குறைவாகப் பேசியிருந்தால் நான் அந்த அளவுக்கு பதில் சொன்னால் போதும். நீங்கள் எல்லாம் நிறைய பேசியிருக்கிறீர்கள். அதற்கெல்லாம் முடிந்த அளவுக்கு. நூற்றுக் கணக்கானவர்கள் பேசிய பேச்சுக்களுக்கு பதில் சொல்வதாக இருந்தாலும் மக்களுக்குக் கிடைக்கின்ற தகவலாகவும் அது அமையும் என்பதால் முடிந்த அளவுக்கு என்னுடைய பதிலைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

பத்திரிகை பற்றி இங்கே சொன்னார்கள். இப்படிப்பட்ட செய்திகள் வருகின்ற பத்திரிகைகளைத் தடை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரர் ப.உ.ச. அவர்கள் சொன்னார்கள். அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வர விரும்புகிறோம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த சட்டத்தைக்கொண்டு வந்தால் வேறு வகையிலே பத்திரிகைகளைத் தடை செய்வதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சந்தேகிக்காமல் அந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால், இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல், தனிப்பட்டவர்களைத் தாக்கிப்பேசாமல் தரக்குறைவாக எழுதாமல் இருப்பதற்கு அது பயன்படும் என்ற கருத்தினை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதாகச் சொன்னார்கள். அது நல்ல சட்டமாக இருந்தால் ஆதரிக்கிறோம், அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் சட்டம் கொண்டு வருகின்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு பத்திரிகை தரக் குறைவாக செய்தி வெளியிட்டு வருகிறது ; அது இந்தச் சட்டமன்ற நூலகத்திலேகூட வைக்கப்படுகிறது; அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அது எந்தப் பத்திரிகை என்று குறிப்பிட்டால் அதைப்பற்றி நான் விசாரிக்கத் தவற மாட்டேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எல்லோருக்கும் இருக்கிற குறை என்னிடமும் இருக்கிறது. என் முதுகை நான் திரும்பிப் பார்க்க முடியவில்லை ; கண்ணாடியில் தான் பார்க்க முடிகிறது. குறைகள் எல்லோரிடமும் இருக்கின்றன. பல பத்திரிகைகள் இருக்கின்றன. அனைத்தையும் அவர்கள் விருப்பம்போல் எழுதலாம் என்றாலும் அது எங்கோ போய் முடிந்து விடக்கூடாது; வன்முறையில் போய்விடக் கூடாது என்ற முறையிலே பேசியிருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் அதே நேரத்தில் இந்த அவசரக்காலச் சட்டம் இருந்தபோது குற்றங்கள் அதிகப்படவில்லை என்பது போலவும் அதற்கும் பின்னாலே குற்றங்கள் கூடிவிட்டன என்பது போலவும், அதற்கு முன்னாலே குற்றங்கள் குறைந்திருந்தன போலவும் ஒரு புள்ளி விவரத்தை இங்கே குறிப்பிடுவதற்கு முன்வந்தார்கள். அதில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள் அத்தனை பேர்களும் அமர்ந்து, அவரவர் எண்ணத்திலே கருத்துக்களைச்சொல்லி அதன் பலன் எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கும் நிலை இருந்தும், குற்றங்களை எடுத்துச் சொல்லும் உரிமை இருந்தும் எவ்வளவு தவறுகள் நடக்கின்றன என்பது தெரியும்.

பழி வாங்குகிற மனதோடு வழக்குகள் தொடரப்படுகின்றன என்பது வேறு. அது மட்டுமல்ல. வழக்குகளை நடத்தும்போது, நடத்துகின்ற அந்த நபர்கள் யாராக இருந்தாலும் ஆதாரங்களைத் தயாரித்துக் கொள்வது என்பதும், அதற்குரிய வாய்ப்பு இருக்கும், அதைச் செய்ய முனைவர் என்பதும், பல நேரங்களில் நாம் பார்த்திருக்கிறோம் என்றாலும் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் நாங்கள் கணக்குப்போட்டுச் சொல்லத் தயாராக இல்லை —ஒரு வாரத்திற்கு இங்கே மக்களைப் பிடித்து இத்தனை வழக்குகள் போட்டாக வேண்டும் ; கண்டிப்பாக உங்கள் காவல்

நிலையத்தில் இத்தனை வழக்குகள் பதிவாகி இருக்க வேண்டும் என்று சொல்லி நான் காவல் துறையினரை வற்புறுத்தத் தயாராக இல்லை. உண்மையாக இருந்தால், ஆதாரம் இருந்தால் அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டதுபோல, வழக்குகளை ஜோடிக்க, வேண்டுமென்றே வழக்குகளைத் தயாரிக்க நிச்சயம் இந்த அரசு அனுமதிக்காது என்பதையும், ஆதாரம் இல்லாமல் தண்டிக்கும் நோக்கத்தோடு யார் மீதும் வழக்குப் போட காவல் துறையினரை அனுமதிக்க மாட்டோம் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பல சந்தர்ப்பங்களில் நாங்கள் அவ்வாறு செய்திருப்பது உண்மை என்று அவர்கள் உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

(பிற்பகல் 1-10)

இங்கே நமது முன்னவர் அவர்கள் சொன்னதற்கும் நான் சொன்னதற்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். நான் குடந்தையிலே இருந்தேன். குடந்தையிலே ஆசிரியர்கள் மாநாட்டிலே பேசிக் கொண்டிருந்த போது இப்படித் துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது என்று செய்தி வந்தது. எத்தனை பேர் இறந்தார்கள் என்பதுகூட எனக்கு அப்போது தெரியாது. நான் மாநாட்டிலே இருந்தபோது அப்போதே என்னுடைய பி. ஏ. மூலமாக உடனே சென்று சொல்லுங்கள் அதற்கான விசாரணைக் கமிஷன் அமைக்கும்படி முன்னவர் அவர்களிடம் சொல்லிச் செய்யுங்கள் என்று நான் சொன்னேன். அவரும் வந்து சொன்னார். அங்கே அந்தச் சூழ்நிலையில் அவர் காதில் எப்படி விழுந்ததோ தெரியாது. அதற்கு நீங்கள் பொறுப்பு ஏற்க வேண்டாமா என்று கேட்டால் ஒரு சிறு தவறுக்கு எல்லோரையும் எப்போதும் வெவ்வேறு வகையில் சிந்தித்து பிறகு ஒன்றாக்குவது பொருத்தமுடையதாக இருக்காது.

துப்பாக்கிச் சூடு எதனால் நடந்தது? ஏன் நடந்தது என்பதைப்பற்றி வெளியிட வேண்டும். அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்னேன்.

இன்னொன்று சொல்வேன். குறிப்பேட்டிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதனால் சொல்ல வேண்டி இருக்கிறது என்று சொன்னார்கள். நான் மறைக்க விரும்பவில்லை. அதைச் சொல்வதில் எனக்கு எப்போதும் ஆட்சேபணை இல்லை. அது தொடர்பாக விவரங்களை அதிகாரிகள் தருகிறார்கள். அந்தக் குறிப்புகளை வைத்துச் சொல்கிறோம். அது தவறு என்று உங்களிடம் ஆதாரம் இருந்தால் எடுத்துச் சொல்வதில் ஆட்சேபணை இல்லை. அந்த உரிமை உங்களுக்கு முழுக்க முழுக்க வழங்கப்பட்டிருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1969-லே ஏன் வைக்கப்படவில்லை, 1972–லே ஏன் வைக்கப்பட்டது என்ற கேள்வி எழுப்பப்பட்டது. நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1969-லே நானும் இருந்தவன். 1969-லேயிருந்து 1971 வரையில் நான் மக்களிடத்திலே இந்த அரசு தவறு செய்திருந்தால் நீங்கள் வாக்களிக்க வேண்டியதில்லை, தவறு செய்யவில்லை என்று கருதினால் நீங்கள் வாக்குகளை அளியுங்கள், இல்லையானால் வாக்களிக்காதீர்கள் என்று நான் அப்போதே சொல்லி இருக்கிறேன். இந்தச் சந்தேகத்தைக் கிளப்பிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும். நான் அப்போது பேசிய கருத்துக்கள் இதுதான் என்பது என்னுடைய நினைவு. அவரிடம் டேப் இருக்கலாம். வேண்டுமென்றால் போட்டுப் பார்க்கட்டும்.

காமராஜர் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்கள் சொன்னார்கள். நான் மறுத்துப் பேசி இருக்கிறேன். மாநாட்டிலேகூட கூறியிருக்கிறேன். மக்களிடம். இங்கே இருக்கின்ற அமைச்சர்கள் லஞ்சம் வாங்கி வாழ்கிறார்கள். அதற்காகத்தான் இந்தப் பதவியிலே இருக்கிறார்கள்" என்று நீங்கள் நம்புகிறீர்களா என்று கேட்டவன் நான். ஆனால் நான் இன்று இந்த நிலைமைக்கு ஆளாக்கப்பட்டதற்கு வருந்துகிறேன் என்றாலும் கட்சியிலே இருந்த சிலருடைய பெயரைத் தனியாகச்சொல்ல நான் விரும்பவில்லை. பொதுக்குழுவில் பேசினேன். ஆங்காங்கே தோதல் பிரச்சாரத்திற்காக மக்களிடம் சென்றபோதும் பேசினேன். இது உண்மையா, பொய்யா என்று உலகுக்கு அறிவிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே பேசினேன். இதற்காகப் பொதுக்குழுவிலே தீர்மானம் கொண்டு வந்து திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள் அப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்களா என்பதைப் பரிசீலனை செய்து குற்றம் செய்தவர்கள் இருந்தால் மக்கள் முன் கொண்டுவந்து நிறுத்தி நடவடிக்கை எடுங்கள். இல்லையென்றால் குற்றமற்றவர்கள் என்று தீர்மானித்து மாலை போட்டு வரவேற்போம் என்று சொன்னது எல்லாம் நினைவில் இருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன். அப்போது என்னிடம் எந்த ஆதாரமும் தரப்படவில்லை. மற்றவர்கள் சொன்னதை வைத்துக் கொண்டுதான் சொன்னேன். இன்றைக்கு என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

திரு. மு. கருணாநிதி: கழகத்தினுடைய பொருளாளராக இருந்த தாங்கள் கழகத்தினுடைய பொதுக்குழுவில் அந்தக் கருத்தை வெளியிடவில்லை. பொதுக்கூட்டங்களில் அந்தக் கருத்துக்களை வெளியிட்டீர்கள் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி வரும்போது பதில் வருகிறது. 1971 ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு இங்கே முன்னால்

உட்கார்ந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்களிடம் ஒன்றரை மணி நேரம் விமான கூடத்தில் வைத்து இதைச் சொல்லியிருக்கிறேன். சொல்லி, சொல்லுங்கள் என்று சொன்னேன். தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னேன். டி. வி. நாராயணசுவாமி அவர்களிடமும் சொன்னேன். அதற்குப் பிறகு திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்கள் கேட்டபோது சொன்னேன். இப்போது திருச்சியில் இருக்கிற மிஸ்டர் வெங்கடாசலம் அவர்களிடமும் சொன்னேன். அவர்கள் என்னிடம் பேசினார்கள். இதற்கெல்லாம் பிறகு கலைஞர் அவர்களிடமும் சொன்னேன். மன்னிக்க வேண்டும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வராமல் இருக்க நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்று சொன்னேன். இதுபோன்று பிரச்சினை கிளப்பப்பட்டது. அதைப்பற்றியெல்லாம் இப்போது பேச வேண்டாம். இது குடும்பத் தகராறு, இதை விட்டுவிடுவோம். கேள்வி கேட்டதால் விடையளித்தேனே....

திரு. மு. கருணாநிதி : மீண்டும் லஞ்சம், ஊழல், புனிதம் இவைகள் மறைமுகமாகப் பேசப்படுகிற காரணத்தால் நான் விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். ஏனென்றால், நான் கேட்டது, 72-ல் இருந்து 75 வரை நாயுடு கமிஷன் போட்டிருக்கிறீர்களே, 69-ல் இருந்து போட்டால் என்ன என்றுதான் கேட்டேன். 69-ல் இருந்து போடாததற்குக் காரணம் என்ன என்பதை அவர்கள் சொல்ல வேண்டுமேயல்லாமல் தன் தேர்தல் பிரசாரத்தில் மக்களிடம் இந்த அரசு லஞ்ச ஊழல் அரசா என்று கேட்டதை, மாநாட்டில் கேட்டு அவர்கள் இல்லை என்று சொன்னார்கள், அதற்குப் பிறகு 72-ல் இந்தப் பிரச்சினையை பொதுக்கூட்டங்களில் கொண்டுபோனேன் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் கூறுவது 72-ல் ஜனாதிபதியிடம் கொடுத்த பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு 69-ல் இருந்தே குற்றச்சாட்டுகள் ஆரம்பமாகிறது. இன்னும் சொல்லப் போனால் அப்போதிருந்த காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சத்யா ஸ்டுடியோவிற்கு நிலம் கொடுத்ததுகூட பெரிய ஊழல் என்றளவிற்கு இங்கே எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். ஆகவே 69-ல் இருந்து வைத்துவிட்டால் எது சரி எது தவறு என்று ஊருக்கு வெளிச்சமாகிவிடும். ஆகவே 69-ல் இருந்து போட்டால் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சொன்னார்கள் என்றால் அது தவறு என்பதைச் சுட்டிக்காட்டியதற்காக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எந்த சிபார்சும் தாட்சண்யமும் எந்த நிலையிலும் தரப்படவில்லை என்பதையும் அது நிர்வாகத்திற்காகத் தரப்பட்டது என்பதையும் அப்படித் தரப்பட்ட நிலைமையில் அதனால் ஒரு சல்லிக்காசுகூட அந்த ஸ்டுடியோவிற்கு லாபம் இல்லை என்பதையும், ரூ. 9,000—க்கு மேல் வருட வாடகைக் குத்தகைக்கு எடுத்திருந்த போதிலும் திடீரென்று ரூ. 1,20,000 என்று கருதுகிறேன், நினைவில்லை, அந்தளவிற்கு வரி கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு முடியாது என்று சொல்லி இப்போது வழக்கில் இருக்கிறது, வழக்குமன்றத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1971-க்குப் பிறகு, தேர்தல் முடிந்த பிறகு, மக்களிடம் மீண்டும் மீண்டும் எதிர்கட்சிக்காரர்கள் சொன்னதின் விளைவாக அப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லை என்பதை நிருபிக்க வேண்டும் என்பதற்காக எடுத்துக் கொண்ட அந்த முயற்சியில் நான் இறங்கினேன் என்றாலும் பொதுகுழுவிலும் பேசியிருக்கிறேன். இன்னும் ஒரு கருத்தைச் சொல்லவேண்டும். அங்கே பேசிய மதியழகன் அவர்கள் நீங்கள் அரசியலுக்கு 60 பங்கு ஒதுக்கிக்கொள்ள வேண்டும் 40 பங்கு என் தொழிலுக்கு ஒதுக்கவேண்டும் என்று சொன்னதற்கு பதிலளிக்கும்போது, இந்த நிலையில் நான் இருக்கிறேன். இதைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னதைக் குறிப்பிட விரும்புகிறேன்,

1969-ல் இருந்தல்ல, 1957-ல் இருந்து வைக்க வேண்டும் என்றாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல வேண்டும். 72-ல் இருந்து சொல்வதற்குக் காரணம் 72-ல் நான் வெளியேற்றப்பட்ட பிறகு நாட்டில் நடந்த நிலைமைகள், என்னென்ன நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதைப்பற்றிய விசாரணை என்று எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர லஞ்ச ஊழல் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காக ஒரு கமிஷன் என்று அதை எடுத்துக்கொள்வதற்கு இல்லை என்பதோடு ஒட்டுமொத்தமாக இந்த நாட்டில் நடந்த நிலைமைகள் என்ன, இருந்த நிலைமைகள் என்ன என்பதை வெளிப்படுத்துவதற்காக....

திரு. மு. கருணாநிதி : அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் 72-ல் இருந்து 75 வரை நாட்டில் நடந்த நிலைமைகள் என்ன, எனவே அதற்கு ஒரு கமிஷன்—இப்போது கமிஷன் போட்டிருக்கிறீர்களே நீங்கள் அறிந்துகொள்வதற்காக—இப்போது கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உமாநாத் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாரிமுத்து அவர்களும், அழகர்சாமி அவர்களும், மற்ற கட்சிக்காரர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் 69 முதல் என்னென்ன நடந்தது என்று அறிந்துகொள்ள ஆவலாக இருப்பார்கள் அல்லவா. ஆகவே அவர்களது ஆவலைப் பூர்த்தி செய்ய 69-ல் இருந்து அந்தக் கமிஷன் போட்டால் என்ன?

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் அதற்கு முதலிலேயே பதில் சொல்லிவிட்டேன். ஆகவே இப்போது பதில் சொல்ல வேண்டியதில்லை. என்ன பதில் சொன்னேன் என்பது குறிப்பேட்டில் இருக்கிறது. அப்படிப் போடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை என்று தெரிவித்தாகிவிட்டது.

நான் வற்புறுத்த விரும்புவது, இப்படிச் சில நேரங்களில் ஆட்சியில் இருக்கிறவர்கள், அமைச்சர்கள் குற்றவாளிகளாக இல்லாமல் இருக்கலாம். அதிகாரிகள் தவறு செய்து விட்டு அமைச்சர்கள் மீது பழி சுமத்தப்படலாம். அல்லது அதிகாரிகள் நிரபராதிகளாக இருக்கலாம். அமைச்சர்கள் செய்கின்ற தவறுகளுக்கு அதிகாரிகள்மீது பழி சுமத்தப்படக்கூடும். அல்லது அதிகாரிகள் தவறு செய்து விட்டு அமைச்சர்கள் மீது பழி சுமத்தப்படக்கூடும். இப்படிப்பட்ட பழி வாங்கும் நோக்கத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இப்படிப்பட்டவைகளுக்கு விசாரணை வேண்டும் என்பதுதானே தவிர, எந்த பிரச்சினையைப்பற்றி சொல்லவேண்டும் என்று விரும்பியிருந்தாலும், அவைகள் எல்லாம் நான் கொடுத்த குற்றச்சாட்டில் இருக்கிறது. அவற்றில் பிரைமா பேஸிகேஸ் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி தீர்ப்பு வழங்கி விட்டு, அதைப்பற்றி விசாரிக்க வேண்டிய அளவுக்கு, நாங்கள் கேள்விப்பட்டதை யெல்லாம், சொன்னவைகள் எல்லாம், எந்த அளவுக்கு வளர்ந்து படிப்படியாக வந்திருக்கிறது என்பதை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

லஞ்சம், ஊழல் என்பது பற்றி பேசப்பட்டதால் இதைப்பற்றி நான் பேச ஆரம்பிக்கவில்லை. இதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நான் சொன்னதெல்லாம், ஏன் போட்டிருக்கிறோம் என்றால், எந்தெந்த குற்றச்சாட்டுகள் வெளியிலிருந்து வந்தன. சில நண்பர்கள் சொன்னார்கள், ஒருசில நண்பர்கள், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ஆர். போன்றவர்கள் என்று குறிப்பிட்டால் அவர்கள் இன்றைக்கு உங்கள் பக்கம் இருப்பவர்கள் என்று சொல்லக்கூடும், அதற்காகத்தான் ஒருவரைக் குறிப்பிட்டேன், முன்னால் இருக்கிறவர்களை வைத்துக்கொண்டே சொல்லியிருக்கிறேன். ஆகவே என்னுடைய நல்லெண்ணத்தின் காரணமாகச் சொல்லப்பட்டவைதான் இவைகளே தவிர, பழி சுமத்தும் நோக்கத்தோடு இது நடைபெறவில்லை என்பதைச்சொல்கின்ற நேரத்தில், யார் மீதும் பழி சுமத்த நான் விரும்பவில்லை, பழி வாங்கவும் விரும்பவில்லை.

இங்கே சொன்னார்கள் சுப்பு அவர்கள், வேடிக்கையாகவும், விநயமாகவும் சொன்னார்கள். நான் உள்ளுணர்வோடு சொல்லிக் கொள்ள விரும்புவது, எத்தனை நாட்கள் இந்தப் பதவியில் நாங்கள் இருப்போம் என்று நாங்கள் கணக்கிட்டுப் பார்க்கவில்லை.

இருக்கின்ற நாட்களில் மக்களுக்கு எதையாவது செய்ய முடியுமா, அப்படி ஏதாவது செய்கின்ற வகையில், எங்களுடைய ஆசையை திட்டமிட்டு, அதற்கு அதிகாரிகள் தருகின்ற துணையோடும், கிடைக்கின்ற யோசனைகளை வைத்து அதற்கேற்ற வழிமுறைகளை உங்களுடைய ஒத்துழைப்போடு செய்ய முடியும் என்கிற ஆசையின் காரணமாக, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை பார்க்கின்றோமே தவிர, இதை சாசுவதமான தொழிலாக நினைத்துக்கொண்டு, இதை எப்போதும் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம் என்ற நோக்கத்தில் நாங்கள் இல்லை என்பதை நாங்கள் அனைவரும் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

முன்பு பேசியவர்களில், சிலர், குறிப்பாக கேள்வி நேரத்தில், என்னிடத்தில் இலாக்காக்கள் அதிகமாகக் குவிந்திருப்பதால் வேலை சரியாக நடைபெறவில்லை என்று தெரிவித்தார்கள். வேலை அதிகமாக இருப்பதால் சுமையை குறைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன். காவல்துறையைப் பொறுத்தவரையில், என்னுடைய நீண்ட நாளைய ஆசை, எப்படியாவது அதைப் பூர்த்தி செய்து, அந்த இலாகாவை இதிலுள்ள பிரிவுகளை ஒழுங்குபடுத்தி, அதனால் இந்த நாட்டுக்கும், தொழிலாளர்களுக்கும், அவர்கள் யாராக இருந்தாலும் சரி, தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, மாணவர்களாக இருந்தாலும் சரி, பொதுமக்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பாக இருந்து செயல்படுகின்ற—நான் முன்பு எப்போதும் சொல்வதைப் போல்—தந்தையைப் போன்ற கண்டிப்பையும், தாயைப் போன்ற அன்பையும் காட்டுகின்ற முறையில் அவர்கள் இருக்கவேண்டும், அதற்கேற்ற முறையில் அவர்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற ஆசையைக் கொண்டிருக்கிறேன்.

நான் அமெரிக்காவுக்குச் சென்று வந்தபோது போலீஸில் ஊழல் என்கின்ற புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தேன். அவைகளைப் படித்து பார்த்த பிறகு எனக்கு இங்கே நடைபெறுகின்றவைகளை எண்ணிப் பார்க்கின்றபோது, இவைகளை எல்லாம் மாற்றி செயல்படுத்தி, திருத்துவது அவ்வளவு கஷ்டமான காரியமாக இருக்கிறதா என்றால், உங்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் நிச்சயமாக இவைகளைத் தீர்க்கமுடியும் என்றுநான் எண்ணுகிறேன்.

இன்னும் ஒன்று, குடிப்பவர்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்தவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்த முறையில் தண்டனையை அதிகப்படுத்துவதற்கு சட்டம் கொண்டு வருவதற்கும், அதற்கேற்ற திருத்தங்கள் கொண்டு வருவதற்கும் யோசனை இருக்கிறது. அது வரும்போது, அவைகளுக்கு நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பு தருவீர்கள் என்று கருதுகிறேன். தண்டனை அதிகமாக இருக்கும் என்று சொல்கின்ற நேரத்தில், விதிவிலக்கு இருக்கும் என்று முன்பு சொல்லப்பட்டவை அனுதாபத்தோடு சொன்ன வார்த்தைகள் என்பதற்காக, அதைப் பயன்படுத்திக் கொண்டு, குடித்துவிட்டு வீதிகளில் அலையலாம் என்பதை நீண்ட

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

காலத்திற்கு யாரும் அனுமதிக்கமாட்டார்கள், நீங்களும் அதற்கு ஒத்துழைப்புத் தரமாட்டீர்கள், நாங்களும் செய்ய மாட்டோம். செய்ய விரும்பவும் மாட்டோம்.

திரு. மு. கருணாநிதி : மதுவிலக்கு வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்ற ஒரு தவறான அறிக்கை வெளியிடப்பட்டது, இப்போது முதல் அமைச்சர் அவர்கள் சொல்கின்ற உறுதிப்படி. அந்தத் தவறான அறிக்கை திரும்பப் பெறப்பட்டதா? அல்லது திரும்பப் பெறப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஐ.ஜி. அவர்களிடம் கலந்து பேசியிருக்கிறேன். அதிலே எப்படிச் செயல்பட வேண்டுமென்று பரிசீலித்து, அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இன்னும் நிறைய பேச வேண்டுமென்று விரும்புகிறேன். ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(1) சென்னை மாநகராட்சி, மற்றும் முதல் கிரேடு முனிசிபாலிடி ஆகியவைகளில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தமிழ் டைப்ரைட்டர் வழங்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

(2) இரண்டு பேர்கள் சைக்கிள் பிரயாணம் செய்வதை அனுமதிப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம். (ஆரவாரம்)

ஒன்றை மறந்து விட்டேன். இப்போது நினைவிற்கு வருகிறது. அந்த ஓட்டலில் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஏதோ அங்கே இருந்ததாகவும். பிராதல் கேஸ் பற்றிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், யாரோ தலையிட்டு அவர்கள் காப்பாற்றப் பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது. ராமசாமி என்ற ஒருவர் அந்தப் பெண்களைப் பற்றி கொடுத்த புகார் மீது இந்த போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அங்கே யார் குற்றம் சாட்டப் பட்டார்களோ, யார் மீது வழக்கு நடைபெற இருக்கிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் யாருடைய தலையீட்டின் மீதும் யாரையும் காப்பாற்ற முன்வர வில்லை என்பதையும் இங்கே எனக்குத் தந்த தகவல்களைக் கொண்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) நடப்பு ஆண்டில், 1978-79-ல் 7 ஜீப்புகள், 59 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட உள்ளன, அதில் 40-க்கு மேல் மத்திய அரசிடமிருந்து கிடைக்க இருக்கின்றது.

(4) 45 வயதிற்குட்பட்ட உதவி ஆய்வாளர்கள், அதற்கு மேற்பட்ட அதிகாரிகள், 5 வருஷங்களுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(5) 45 வயதிற்கு மேற்பட்ட உதவி ஆய்வாளர்கள், அதற்கு மேற்பட்ட அதிகாரிகள், 3 வருஷங்களுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படும்.

(6) இந்த 8 மணி நேர வேலையைப் பற்றி நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

இதுபோல் பல ஆசைகளை உள்ளடக்கி, காவல் துறையிலே இருக்கின்ற குறைகள் என்று உங்களால் கூறப்பட்டவைகள் பற்றி விசாரிக்கப்படவும், ஆனால் காவல் துறை என்று பெயரிட்டு, அவர்களுக்கு நாம் நன்றி கூறுகின்ற நேரத்தில், மற்றவர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் என்ற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், அவர்களைப் பற்றி குறை கூறும்போதே, நல்லவை களையும் சொல்ல வேண்டுமென்பதை நாம் சொல்கின்ற நேரத்தில், நீங்கள் அவர்களுக்காக இரங்கி, அவர்கள் வாழ்க்கை வசதிகள் உயர்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறிய உங்கள் நல்ல உள்ளங்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

அதே நேரத்தில், நேரமில்லாத காரணத்தால் தீ அணைப்புத் துறையைப் பற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்ல இப்போது இடம் தரவில்லை. பல உறுப்பினர்கள் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

(முற்பகல் 1-30.)

நெருப்பெல்லாம் அணைந்த பிறகு வாரிக் கொண்டு போக வருகிறார்கள் என்று நல்ல நகைச்சுவையோடு பேசினாலும், உள்ளத்தில் இருக்கிற வேதனையை வெளியிட்டிருக்கிறார்கள். சிரிக்கச் சிரிக்கப் பேசுவதில் உண்மையில் யார் வல்லவர்களோ அவர்கள் எதையும் சொல்ல முடியும் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று. ஆகவே, அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதோடு எந்த அளவுக்கு நிதிநிலை இடம் தருகிறதோ அந்த அளவுக்குத் தீயணைப்பு நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்த முயலுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டில் புதிதாக நான்கு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், நிதிநிலை வசதி கிடைக்கும்போது மேலும் சில இடங்களில் அந்த நிலையங்கள் அமைக்க நிச்சயமாக இந்த அரசு ஆவல் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் மேலும் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பரிசீலித்துப் பார்த்திருக்கிறார்கள். தங்கள் எண்ணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருக்கும் பதில் சொல்ல நேரம் இடம் தரவில்லை. எல்லா விவரங்களையும் படித்துக் காண்பிக்கவும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 17

காலத்திற்கு யாரும் அனுமதிக்கமாட்டார்கள், நீங்களும் அதற்கு ஒத்துழைப்புத் தரமாட்டீர்கள், நாங்களும் செய்ய மாட்டோம். செய்ய விரும்பவும் மாட்டோம்.

திரு. மு. கருணாநிதி : மதுவிலக்கு வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்ற ஒரு தவறான அறிக்கை வெளியிடப்பட்டது, இப்போது முதல் அமைச்சர் அவர்கள் சொல்கின்ற உறுதிப்படி. அந்தத் தவறான அறிக்கை திரும்பப் பெறப்பட்டதா? அல்லது திரும்பப் பெறப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஐ.ஜி. அவர்களிடம் கலந்து பேசியிருக்கிறேன். அதிலே எப்படிச் செயல்பட வேண்டுமென்று பரிசீலித்து, அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இன்னும் நிறைய பேச வேண்டுமென்று விரும்புகிறேன். ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(1) சென்னை மாநகராட்சி, மற்றும் முதல் கிரேடு முனிசிபாலிடி ஆகியவைகளில் உள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தமிழ் டைப்ரைட்டர் வழங்க நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

(2) இரண்டு பேர்கள் சைக்கிள் பிரயாணம் செய்வதை அனுமதிப்பது என்று முடிவெடுத்திருக்கிறோம். (ஆரவாரம்)

ஒன்றை மறந்து விட்டேன். இப்போது நினைவிற்கு வருகிறது. அந்த ஓட்டலில் எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஏதோ அங்கே இருந்ததாகவும். பிராதல் கேஸ் பற்றிய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், யாரோ தலையிட்டு அவர்கள் காப்பாற்றப் பட்டதாகவும் குறிப்பிடப்பட்டது. ராமசாமி என்ற ஒருவர் அந்தப் பெண்களைப் பற்றி கொடுத்த புகார் மீது இந்த போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அங்கே யார் குற்றம் சாட்டப் பட்டார்களோ, யார் மீது வழக்கு நடைபெற இருக்கிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் யாருடைய தலையீட்டின் மீதும் யாரையும் காப்பாற்ற முன்வர வில்லை என்பதையும் இங்கே எனக்குத் தந்த தகவல்களைக் கொண்டு தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) நடப்பு ஆண்டில், 1978-79-ல் 7 ஜீப்புகள், 59 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட உள்ளன, அதில் 40-க்கு மேல் மத்திய அரசிடமிருந்து கிடைக்க இருக்கின்றது.

(4) 45 வயதிற்குட்பட்ட உதவி ஆய்வாளர்கள், அதற்கு மேற்பட்ட அதிகாரிகள், 5 வருஷங்களுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

1978 மார்ச் 17] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(5) 45 வயதிற்கு மேற்பட்ட உதவி ஆய்வாளர்கள், அதற்கு மேற்பட்ட அதிகாரிகள், 3 வருஷங்களுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படும்.

(6) இந்த 8 மணி நேர வேலையைப் பற்றி நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

இதுபோல் பல ஆசைகளை உள்ளடக்கி, காவல் துறையிலே இருக்கின்ற குறைகள் என்று உங்களால் கூறப்பட்டவைகள் பற்றி விசாரிக்கப்படவும், ஆனால் காவல் துறை என்று பெயரிட்டு, அவர்களுக்கு நாம் நன்றி கூறுகின்ற நேரத்தில், மற்றவர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் என்ற பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால், அவர்களைப் பற்றி குறை கூறும்போதே, நல்லவைகளையும் சொல்ல வேண்டுமென்பதை நாம் சொல்கின்ற நேரத்தில், நீங்கள் அவர்களுக்காக இரங்கி, அவர்கள் வாழ்க்கை வசதிகள் உயர்வதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கூறிய உங்கள் நல்ல உள்ளங்களுக்கு நான் நன்றி கூறுகிறேன்.

அதே நேரத்தில், நேரமில்லாத காரணத்தால் தீ அணைப்புத் துறையைப் பற்றிய புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்ல இப்போது இடம் தரவில்லை. பல உறுப்பினர்கள் இதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள்.

(முற்பகல் 1-30.)

நெருப்பெல்லாம் அணைந்த பிறகு வாரிக் கொண்டு போக வருகிறார்கள் என்று நல்ல நகைச்சுவையோடு பேசினாலும், உள்ளத்தில் இருக்கிற வேதனையை வெளியிட்டிருக்கிறார்கள். சிரிக்கச் சிரிக்கப் பேசுவதில் உண்மையில் யார் வல்லவர்களோ அவர்கள் எதையும் சொல்ல முடியும் என்பது நமக்குத் தெரிந்த ஒன்று. ஆகவே, அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்வதோடு எந்த அளவுக்கு நிதிநிலை இடம் தருகிறதோ அந்த அளவுக்குத் தீயணைப்பு நிலையங்களை ஆங்காங்கு ஏற்படுத்த முயலுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டில் புதிதாக நான்கு இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், நிதிநிலை வசதி கிடைக்கும்போது மேலும் சில இடங்களில் அந்த நிலையங்கள் அமைக்க நிச்சயமாக இந்த அரசு ஆவல் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் மேலும் நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பரிசீலித்துப் பார்த்திருக்கிறார்கள். தங்கள் எண்ணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எல்லோருக்கும் பதில் சொல்ல நேரம் இடம் தரவில்லை. எல்லா விவரங்களையும் படித்துக் காண்பிக்கவும்

நேரம் இடம் தரவில்லை. இதிலிருந்து ஒரு புதிய அனுபவம். இப்படிப் பதில் சொல்வதைவிட ஒட்டு மொத்தமாகப் பேச வழி முறை இருக்கிறதா என்பது பற்றிப் புதிதாக விவரம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் முடிக்கும்போதும் நண்பர் சுப்பு அவர்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன். அந்த முறையில் அவர்கள் பேசினார்கள். அவர்கள் கருத்தை மற்றவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசினார்கள். அதையே அவர்கள் பணியாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (திரு. லத்தீப் எழுந்தார்)

மாண்புமிகு லத்தீப் அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை என்ற குறை இருக்கும். நேரம் இல்லையென்றுதான் விட்டேன். சொல்லி விடுகிறேன். இதைச் சொல்லுவதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோபித்துக் கொள்ளமாட்டார்கள் என்று கருதுகிறேன். முஸ்லீம்களைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் ஒருவர்தான் இருக்கிறார் என்று நினைத்து விடக் கூடாது. எதிர்க்கட்சியிலும் இருக்கிறார்கள், எங்கள் கட்சியிலும் இருக்கிறார்கள், மற்றக் கட்சியிலும் இருக்கிறார்கள்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதைக் கொள்கையாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும். மைனாரிடி என்ற பெயரில் மெஜாரிடியை அடக்கி, அச்சுறுத்த நாம் தயாராக இருக்கக் கூடாது. அதே சமயத்தில் மெஜாரிடியாக இருக்கிறோம் என்ற காரணத்தால் மைனாரிடியைப் பழி வாங்கவும் கூடாது. ஒதுக்கி விடவும் கூடாது. இதுதான் எங்கள் கொள்கை. அந்த வகையில் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பர்சன்டேஜ் என்று பார்த்தால் 4.1 சதவிகிதம் அளவில் இப்போது முஸ்லீம்களுக்குக் காவல் துறையில் பணி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது 5 சதவிகிதந்தான் வருகிறது. ஆகவே, பெரிய அநியாயமோ, அக்கிரமமோ, பிரதிநிதித்துவம் கொடுக்காத முறையோ இந்த அரசோ, முன்னால் இருந்த அரசோ செய்து விட்டார்கள் என்று கருதிவிடக் கூடாது. யாருக்கு விகிதாசாரம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு அந்த இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கக் கூடாது, அவைகளைச் செய்து தீர வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். 18 சதவிகிதம், 31 சதவிகிதம் என்று இருக்கிற நிலைமைகளில் கூட அவர்கள் எல்லாம் பேசாமல் இருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிச் சொல்லுவதன் மூலம் முஸ்லீமாக இருந்தால் பாது காப்புக் கிடையாது என்று சொல்லவில்லை. இந்த ஜாதிக்காரர்கள் இந்தப் பதவியில் இருந்தால்தான் இந்த ஜாதிக்காரர்களுக்குப் பாதுகாப்பு, இந்த மதத்தில் இருக்கிறவர்கள் இந்தப் பதவியில் இருந்தால்தான் இந்த மதத்தில் இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு என்றால் அது ஜனநாயகம் ஆகிவிடாது. ஆகவே, பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர் நம்ப வேண்டும்; சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினர் காப்பாற்றியாக வேண்டும். இந்த அடிப்படையில் செயல்பட எந்தெந்த முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

நேற்று இரவு இரண்டு மணிக்கு எனக்கு ஒரு செய்தி வந்தது. அங்கே முஸ்லீம்களுக்கிடையிலேயே தகராறு. ஒருசில முஸ்லீம்கள் வசதி படைத்தவர்கள் உதவியுடன் மசூதிக்குள் புகுந்து உள்ளே இருக்கிற முஸ்லீம்களை அடித்துவிட்டார்கள்; காவல் துறையினர் மசூதிக்குள் புகுந்து சிலரைக் கைது செய்தார்கள். டி.ஐ.ஜி. இரவில் என்னுடன் தொடர்பு கொண்டு சொன்னார். எந்த ஜாதியாக இருந்தாலும், ஒரே மதத்தினராக இருந்தாலும் பாதுகாப்புத் தரவேண்டும், எந்த ஆபத்தும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மசூதிக்குள் வன்முறையை அனுமதிக்கக் கூடாது. நிரபராதிகளைக் கைது செய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். நாங்கள் எந்த நேரத்திலும் எப்போதும் எப்படியும் எங்கள் கடமையைச் செய்யத் தவறுவதில்லை என்பதற்கு உதாரணமாகத் தான் இதைச் சொல்லுகிறேன்.

வன்னியர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் உரிமையைக் கேட்க நியாயம் உண்டு. நான் தூண்டிவிடவில்லை. இன்று அவர்களுடைய விகிதாச்சாரப்படி நிச்சயமாக பிரதிநிதித்துவம் இல்லை. அதைப் போல் கவுண்டர்கள் நிலை என்று சொல்வார்கள். அடுத்து தேவர்களைச் சொல்லலாம். இப்படி ஒவ்வொரு ஜாதியைப் பற்றி ஒவ்வொரு மதத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டே போனால் மதச் சார்பற்ற அரசு என்று சொல்லிக்கொள்ள கொஞ்சம்கூட தொடர்பில்லாதவர்கள் ஆகிவிடுவோம்.

ஆகவே மதச்சார்பற்ற அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்க வேண்டும் என்பது விதி என்ற முறையிலே நம்முடைய எண்ணம் அதுதான் என்பதையும் அந்த முறையிலே அமரர் அண்ணா அவர்களுடைய ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்ட கொள்கை, அதுதான் எங்கள் கொள்கை என்று சொல்லி இந்த மானியக் கோரிக்கைகளை ஏற்று, கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கு என்னுடைய பதில் ஓரளவுக்குத் திருப்தியளிக்கும் என்ற முறையிலே அவைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மையோர் பற்றிப் பேசுவதற்கு தான் மட்டும்தான் இருக்கிறார் என்று லத்தீப் அப்படிப்பட்ட எண்ணத்தை வளர்த்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். நான் பேசினேன் அவ்வளவுதானே தவிர, மற்றவர்கள் பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. இங்கே இருக்கிற எல்லா உறுப்பினர்களும் எல்லோரையும் பற்றியும் பேசக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; இங்கே பேசப்படுகின்ற 99 சதவிகிதப் பேச்சுக்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் நீங்கள் விளக்கம் கேட்கலாமே தவிர உரையாற்றக் கூடாது....

திரு. எம். ஏ. லத்தீப் : விளக்கம்தான் கேட்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்திப், தாங்களே என்னிடம் வந்து, எங்கள் சமுதாயத்திற்கு நான் ஒருவன்தான் இருக்கிறேன்; எனக்குச் சந்தர்ப்பம் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள் ஆகவே அதைப்பற்றிப் பேசாமல் மற்றவைகளைப் பேசுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படிச் சொன்னாலும், மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லையே....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு திரு. லத்தீப் அவர்கள் அதைப் பெரிய குற்றமாக எண்ணியிருந்தால் நான் பதில் வேறு விதமாகச் சொல்லியிருப்பேன். இதே சட்டமன்றத்திலே முன்னாலே அது வந்து நான் பதில் சொல்லியிருக்கிறேன். இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்ற இடத்திலே இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகாரிகளாக இருந்தால்தான் அவர்களுக்கு உதவி கிடைக்கும் என்ற நிலைமை, இந்தியத் துணைக் கண்டத்தில் மட்டுமல்ல, வேறு எங்குமே ஏற்படக் கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். ஒரு சாதியை மதத்தை நம்பி வாழக்கூடியவர்களுக்கு இன்னொரு சாதியை மதத்தைச் சேர்ந்தவர்கள் உதவ வேண்டும் என்பது எங்கு நிலை நிறுத்தப்படுகிறதோ அங்குதான் ஜனநாயகம் காக்கப்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை முழுமையாக நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், நேரமில்லை, திரு. கோதண்டராமன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்கள் சொல்வதைப் போல நாட்டிலே நிலைமை இருக்குமானால் அதுதான் எங்களுக்குச் சிறந்த பாதுகாப்பு. சட்டத்திலே எழுதி வைத்திருந்தாலும், துறையிலே இடம் இருந்தாலும்கூட, ஜனநாயக முறைப்படி, தார்மீக முறைப்படி சிறுபான்மையோருக்கு அவர்கள் சொல்கிறபடி நிலைமை இருக்குமானால் நல்லது. ஆனால் நாட்டிலே நிலைமை அப்படி இல்லை. வியாசர்பாடியிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பிரச்சனைகளுக்குப் போகக் கூடாது. நேரம் ஆகிறது....

திரு. எம். ஏ. லத்தீப் : வியாசர்பாடியிலே ஒரு முக்கியமான பிரச்சினை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். திரு. கோதண்டராமன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சிறந்த ஒரு வழக்கறிஞரைவிடத் திறமையாக வாதிட்டுப் பதில் சொன்னார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் இன்றைய தினம் பொதுமக்களிலே சிலபலர் தாக்கப்படுவார்களேயானால், கொலை செய்யப்படுவார்களானால் அவர்களுக்குப் பாதுகாப்பாக நடவடிக்கை எடுக்கக்கூடியவர்கள் இந்த காவல் துறையைச் சேர்ந்தவர்கள்.

(முற்பகல் 1-40.)

அந்தப் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களே கொலை செய்யப்படுகிறார்கள் என்றால் அந்த விஷயத்திலே சரியான முறையிலே நடவடிக்கை எடுக்க முடியாத அளவிற்கு இருப்பதால் அந்தப் பாதுகாவல் துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கும் ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அந்த விஷயத்திலே நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற அளவிற்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வடார்க்காடு மாவட்டத்தில் ஆற்காட்டுக்குப் பக்கத்திலே இரத்தினகிரி கோயில் என்று இருக்கிறது. அங்கே நாணயமான, நேர்மையான....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, எனது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் நெல்லை ஜெபமணி அவர்கள் (குறுக்கீடு) கோதண்டராமன் அவர்கள் பேசியிருக்கின்றார்கள். நான் அந்தப் பிரச்சினைக்கு பதில் சொல்கிறேன். முதலில் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பு தரப்பட வேண்டியது, அவர்களுக்கு நம்பிக்கை வர வேண்டிய அளவில் உத்தரவாதம் தரவேண்டியது உண்மை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு முன்வரும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பெரியவர் நெல்லை ஜெபமணி அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். நேற்றையதினம் அவர் பேசியது என்று நினைக்கிறேன். அவரை எனக்குத் தெரியாது என்று சொன்னார்கள்.

அவர் படங்கள் பார்ப்பது இல்லை என்று சொன்னதாக நினைவு. என்னவோ தெரியவில்லை. என்னைத் தெரியும் அவருக்கு என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். நான் கற்பனை செய்து கொண்டிருந்த ஜெபமணி வேறு. நெல்லை ஜெபமணி பேசுகிறார் என்று பத்திரிகையில் பார்க்கின்றபொழுது 28 வயது இளைஞர் போலக் கற்பனை செய்து கொண்டிருந்தேன். ஆகையால்தான் கேட்டேன். நான் அவரை முன்பு பார்க்க முடியவில்லை. வெளியே நான் உங்கள் கூட்டத்திற்கு வந்தால் என்ன சொல்வார்களோ, எப்படிப் பழி சுமத்துவார்களோ தெரியாது. வண்டியிலே உட்கார்ந்திருந்தாலும் ஏதாவது சொல்லலாம். (குறுக்கீடு) இப்பொழுது அல்ல, முன்பு சொல்கிறேன். ஆகவே, அப்படிப் பட்ட வாய்ப்பைப் பெறாவிட்டாலும் இங்கே பேசிய கருத்து நியாயமானதாக இருந்தாலும் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசு யார் யாருக்கோ வெவ்வேறு விதமாகத் தலையாட்டிக் கொண்டிருக்கின்ற அரசு என்று யாரும் கருதிவிட வேண்டாம். எதற்காகவோ விட்டுக்கொடுத்து ஏதோ சலுகைகள் காண்பித்து எப்படியாவது எந்த அளவிற்கு எங்களுடைய பதவிக் காலத்தை நீடித்துக் கொண்டு போவதற்காக விட்டுக்கொடுத்து விடுவோம் என்று கவலைப்பட வேண்டியதில்லை.

இரத்தினகிரி பற்றிச் சொன்னார்கள். அந்தப் பிரச்சினை பெரிய பிரச்சினை. அதைப்பற்றி நான் இங்கே சொன்னால் அது போன்ற பல வழக்குகளில் (குறுக்கீடு) ஸ்டிரிக்சர்ஸ் பாஸ் செய்திருக்கிறார்கள். அதில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சரியாக அந்த வழக்கை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் விசாரிக்க முயலலாம். இப்படிச் சில நிலைமைகளைப் பற்றி விசாரணை செய்வது தேவையாகவும் இருக்கிறது. ஆனால் நாங்கள் என்ன முடிவு எடுப்பது என்பதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இது தேவை, இது உண்மையான கொலை, மறைக்கப்பட்டு விட்டது, சந்தேகத்திற்கு இடமளிக்கிறது, திரும்ப எடுக்கப்பட வேண்டுமென்று ஆதாரமிருந்தால் இந்த அரசு அதில் அக்கறை எடுக்கும், நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே....

திரு. வி. கே. கோதண்டராமன் : சார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நேரமாகி விட்டது. இப்பொழுது விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 15-க்கு திருவாளர்கள் அ. செல்லப்பா, ஓ. சுப்பிரமணியம், மு. அண்ணாமலை, பொ. விஜயராகவன், எஸ். சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 33,54,42,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 16-க்கு திருவாளர்கள் என். கிட்டப்பா, த. புஷ்பராஜ், ஆர். கிருஷ்ணன், மு. ஆறுமுகம், செ. சிவசாமி, எம். ஏ. லத்தீப் ஆகியோர் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,38,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-46 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

% 131. கோரிக்கை எண். 32—பிற்பட்டோர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% 132. கோரிக்கை எண். 32—பிற்பட்டோர் நலத் துறைக்கான அட்டவணைகள், 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% 133. பிற்பட்டோர் நலத் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்)

V211,81 N78
N79.15
122117

% 15-3-1978 அன்று அனுப்பப்பெற்றுள்ளன.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
Limited, Madras-1.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli)
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street. Egmore, Madras 8
Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot. Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company. Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers. 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20. Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M Jegannatham Book House, 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D. Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons. Dindigul, Madurai District.
18 Jayakumari Stores. Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1. Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company. No A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya. 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90. Amman Sannathi Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon. Haryana.
7 K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

303
R C
8723
8/82

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.